வெளியீடு—23—9—1968]
Issued—23—9—1968]

# தமிழக சட்டப் பேரவை நடவடிக்கைகள்
# MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு
## OFFICIAL REPORT

*வியாழக்கிழமை, 1968 மார்ச் 7*

**Thursday, 7th March 1968**

தொகுதி X—எண். 1

**Volume X—No. 1**

©
தமிழக அரசு
1968
©
GOVERNMENT OF MADRAS
1968

*சட்டப் பேரவைத் துறை*
*சென்னை-9*
Legislative Assembly Department
Fort St. George, Madras-9

விலை, 50 காசுகள்]
**Price, 50 Paise]**

V2:11,31 N68
N69.10
No. 61433

# TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

THIRD SESSION OF THE FOURTH LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

**7th to 9th, 12th and 13th March 1968.**

**Volume X (Nos. 1 to 5.)**

## TABLE OF CONTENTS

*Thursday, 7th March 1968.*


| | PAGES |
|---|---|
| Tamil Nadu Governor and Council of Ministers | i-ii |
| Personnel of the Government of Tamil Nadu | iii-iv |
| Principal Officers of the Tamil Nadu Legislative Assembly | v |
| List of Members of Tamil Nadu Legislative Assembly with their constituencies (in alphabetical order) | vi-xi |
| 1. Questions and Answers ... ... ... | 1-26 |
| 2. Voting on Demands for Grants for 1968-69—Demand No. 13—Education ... ... ... | 27-94 |
| 3. Papers laid on the table of the House ... ... | 95 |


*Friday, 8th March 1968.*


| | |
|---|---|
| 1. Questions and Answers ... ... ... | 99-118 |
| 2. Statement by Minister— Corrections to the answer to a supplementary question ... ... ... ... ... ... | 118 |
| 3. Calling attention to the failure of monsoon in Kanyakumari district and remission of land revenue and water cess ... ... ... ... | 118-119 |
| 4. Voting on Demands for Grants for 1968-69—*cont.* | |

PAGES.

*Friday, 8th March 1968—cont.*

Demand No. 46—Capital Outlay on Schemes of Government Trading ... ... ... 119–198

5. Papers laid on the table of the House ... ... 198

*Saturday, 9th March 1968.*

1. Installation of colour light device for regulation of time-limit for speeches ... ... ... ... 201
2. Questions and Answers ... ... ... 201–219
3. Adojurnment Motion—
   Attack on Thiru K. Anbazhagan, M.P. and his associates ... ... ... ... ... 219–223
4. Calling attention to failure of crops and postponement of recovery of loans in Palladam and Avinasi taluks ... ... ... ... 224–225
5. Government Bill—
   Tamil Nadu Inams (Supplementary) Amendment Bill, 1968 ... ... ... ... 225
6. Voting on Demands for Grants for 1968-69—*cont.*
   Demand No. 17—Fisheries, Demand No. 18—Animal Husbandry, Demand No. 35—Forest Department and Demand No. 44—Capital Outlay on Forests ... ... ... ... 225–287
7. Papers laid on the table of the House ... 287

*Tuesday, 12th March 1968.*

1. Questions and Answers ... ... ... 327–347
2. Calling attention to failure of monsoon and protection to agriculturists in Palayam panchayat union area ... ... ... ... ... 347
3. Government Resolution—
   Election to House Committee ... ... ... 348
4. Announcement—
   Election to House Committee ... ... ... 348



*Tuesday, 12th March 1968—cont.*

PAGES.

5. Voting on Demands for Grants for 1968-69—*cont.*
   Demand No. 14—Medical, Demand No. 15—Public Health and Demand No. 38—Capital Outlay on Public Health ... ... ... 348–459
6. Papers laid on the table of the House ... 459

*Wednesday, 13th March 1968.*

1. Questions and Answers ... ... ... 461–480
2. Announcement—
   Calling Attention Notice ... ... ... 480
3. Voting on Demands for Grants for 1968-69—cont.
   Demand No. 23—Community Development Projects, etc. and Demand No. 29—Public Works—Grants-in-Aid ... ... ... 481–555
4. Papers laid on the table of the House ... 556

*How to use the index.*

The Index is arranged alphabetically. The main headings are printed from the margin and the sub-headings are indented from the main headings.

Under every main heading including various names, entries pertaining to proceedings other than Questions are indicated by printing immediately after the subject-matter within brackets, e.g., (M) for Motion, (C.A.) for Calling Attention, (R) for Resolution, (St.) for Statement, etc. An entry without any such indication will mean that it pertains to a question, except in the case of Bills and Financial Business, the entry in which cases will be self-explanatory.

All the Bills are alphabetically arranged under the main heading 'Bill (s)'.

Various bodies like Committees, Councils, Boards, Corporations, etc., are consolidated under the said main headings, i.e., 'Committee(s)', 'Council(s)', 'Corporation(s)', etc.

Various schools, colleges, conferences, ports, temples and similar other broad subjects are shown in alphabetical order under these very main headings.

All the papers laid on the table of the House are indexed only under the main heading "Papers laid on the Table".

Rulings and Observations from the Chair are indexed under the main heading "Chair".

A list of abbreviations used in the index is given below :—

| | |
|---|---|
| A.M./Ad. Motion ... ... | Adjournment Motion |
| Ann. ... ... ... | Announcement |
| B.O.H. ... ... ... | Business of the House |
| C.A. ... ... ... | Calling Attention to a Matter of Urgent Public Importance |
| C.A.St. ... ... ... | Calling Attention Statement |
| Consid. ... ... ... | Consideration stage of a Bill. This stage includes :<br>(i) Motion to refer to Select/Joint Select Committee.<br>(ii) Amendment to refer to Select/Joint Select Committee.<br>(iii) Amendment to circulate.<br>(iv) Motion to consider as reported by Select/Joint Select Committee.<br>(v) Amendment to recommit to Select/Joint Select Committee, etc. |
| Consid. Cl. ... ... ... | Consideration of clauses of a Bill |
| D.E.E. ... ... ... | Demands for Excess Expenditure |
| Dis. S.D. ... ... ... | Discussion for Short Duration on an urgent matter of Administration |
| D.S.G. ... ... ... | Demands for Supplementary Grants. |
| G.A. ... ... ... | Governor's Address |
| G.D. ... ... ... | General Discussion |
| H.A.H. Dis./H.H.D. ... | Half-hour Discussion |
| Int. ... ... ... | Introduction stage of a Bill |
| L.A. ... ... ... | Legislative Assembly |
| L.C. ... ... ... | Legislative Council |
| M. ... ... ... | Motion |
| P.M. ... ... ... | Privilege Motion |
| R/Res. ... ... ... | Resolution |
| St. ... ... ... | Statement |

## தமிழக அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்.

### தமிழக ஆளுநர்.

**சர்தார் உஜ்ஜல் சிங்.**

1. மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை (முதல் அமைச்சர்) பொறுப்பு வகிக்கும் துறைகள் : பொது, பொது நிர்வாகம், இந்திய சிவில் பணியாளர் தொகுதி (ஐ.சி.எஸ்), இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (ஐ.ஏ.எஸ்.) அதிகாரிகள், மாவட்ட ரெவின்யூ அதிகாரிகள், துணைக் கலெக்டர்கள் ஆகியோர் குறித்த அலுவல்கள், நிதி, திட்டமிடுதல், போலீஸ், தேர்தல்கள், மதுவிலக்கு, வெளி நாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள், உணவு உற்பத்தி.

2. மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் (கல்வி, தொழில் அமைச்சர்) பொறுப்பு வகிக்கும் துறைகள் : கல்வி (தொழிற் கல்வி உட்பட), ஆட்சிமொழி, தொழில்கள், ஆலைத் துணிகள், நூல், கைத்தறி, சுரங்கங்கள், கனிப் பொருள்கள், இரும்பு-உருக்குக் கட்டுப்பாடு, மின்சாரம், வேலை வாய்ப்பும், பயிற்சி அளித்தலும், கம்பெனிகள், சமய அறக் கட்டளைகளும், சட்டப் பேரவையும்.

3. மாண்புமிகு திரு. மு. கருணாநிதி (பொதுப்பணி அமைச்சர்) பொறுப்பு வகிக்கும் துறைகள்: பொதுப்பணிகள், சிறப்புச் சிறு பாசன திட்ட வேலைகள் உட்பட சிறு பாசனம், நெடுஞ்சாலைகள், போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, துறைமுகங்கள்.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் (உணவு வருவாய்த் துறை அமைச்சர்) பொறுப்பு வகிக்கும் துறைகள் : உணவு, வரி வருவாய், வருவாய்த்துறைக் கழகம், மாவட்ட ரெவின்யூ நிறுவனங்கள், வாணிக வரிகள்.

5. மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி (விவசாய அமைச்சர்) பொறுப்பு வகிக்கும் துறைகள்: வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, மீன்வளம், காடுகள், சிங்கோனா.

6. மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து (அரிசன நல, செய்தி அமைச்சர்) பொறுப்பு வகிக்கும் துறைகள்: அரிசன நலன், செய்தி-விளம்பரத் துறை, எழுது-பொருள் அச்சுத் துறை, அரசாங்க அச்சகம், சினிமாப் படங்கள் சட்டம், மகளிர்-சிறுவர் நலன்.

7. மாண்புமிகு திரு. செ. மாதவன் (சட்டம், கூட்டுறவு அமைச்சர்) பொறுப்பு வகிக்கும் துறைகள் : சட்டம், கூட்டுறவு, நீதி மன்றங்கள், சிறைச்சாலைகள், பத்திரப் பதிவு, சீர்திருத்தப் பள்ளிகள், கண்காணிப்புப் பணிகள், பயண அனுமதிச் சீட்டுகள், சீட்டு நிதிகள் சட்டம், கடன் கொடுத்தல் (கிராமவாசிகள் கடன் பட்டிருத்தல்) குறித்த சட்டம், எடைகள்-அளவைகள் குறித்த சட்டம், தொழிலாளர், வீட்டுவசதி.

8. மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா (சுகாதார அமைச்சர்) பொறுப்பு வகிக்கும் துறைகள் : பொதுச் சுகாதாரம், மருந்துகள், இடவசதிக் கட்டுப்பாடு, அனாதை இல்லங்கள், இரவலர்கள், பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு, முகம்மதியர் அறக் கட்டளைகள், சரக்குகளின் விலைகள், வழங்கல் குறித்த சட்டம்.

9. மாண்புமிகு திரு. மா. முத்துசாமி (உள்ளாட்சி அமைச்சர்) பொறுப்பு வகிக்கும் துறைகள் : நகராட்சி நிர்வாகம், சமுதாய வளர்ச்சி, பஞ்சாயத்துகள், பூதான, கிராமதான இயக்கம், கதர் கிராமத் தொழில்கள், கிராமத் தொழில்கள் திட்டம், முன்னாள் இராணுவ வீரர்கள்.

# PERSONNEL OF THE GOVERNMENT OF MADRAS

## Governor of Madras

SARDAR UJJAL SINGH

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. THE HON. THIRU C. N. ANNADURAI (*Chief Minister*): *Minister in-charge of Public, General Administration, Matters relating to Indian Civil Service and Indian Administrative Service Officers, District Revenue Officers and Deputy Collectors, Finance, Planning, Police, Elections, Prohibition, Indian Overseas, Refugees and Evacuees and Food production.*

2. THE HON. THIRU V. R. NEDUNCHEZHIYAN (*Minister for Education and Industries*): *Minister in-charge of Education (including Technical Education), Official Language, Industries, Textiles, Yarn, Handlooms, Mines and Minerals, Iron and Steel Control, Electricity, Employment and Training, Companies, Religious Endowment and Legislature.*

3. THE HON. THIRU M. KARUNANIDHI (*Minister for Public Works*) : *Minister in-charge of Public Works, Minor Irrigation including S.M.I.P. Works, Highways, Transport, Nationalised Transport and Ports.*

4. THE HON. THIRU K. A. MATHIALAGAN (*Minister for Food and Revenue*) : *Minister in-charge of Food, Revenue, Board of Revenue, District Revenue Establishments and Commercial Taxes.*

5. THE HON. THIRU A. GOVINDASAMY (*Minister for Agriculture*) : *Minister in-charge of Agriculture, Animal Husbandry, Fisheries, Forests and Cinchona.*

6. THE HON. DR. (THIRUMATHI) SATYAVANIMUTHU (*Minister for Harijan Welfare and Information*) : *Minister in-charge of Harijan Welfare, Information and Publicity, Stationery and Printing, Government Press, Cinematograph Act, Women's and Children's Welfare.*

7. THE HON. THIRU S. MADHAVAN (*Minister for Law and Co-operation*) : *Minister in-charge of Law, Co-operation, Courts, Prisons, Registration, Approved Schools and Vigilance Services, Passports, Legislation on Chits, Legislation on Money Lending (Rural Indebtedness), Legislation on Weights and Measures, Labour and Housing.*

8. **The Hon. Thiru S. J. SADIQ PASHA** (*Minister for Public Health*) : *Minister in-charge of Public Health, Medicine, Accommodation Control, Orphanages, Beggars, Newsprint Control, wakf, Prices and Supplies of Goods Act.*

9. **The Hon. Thiru M. MUTHUSWAMY** (*Minister for Local Administration*) : *Minister in-charge of Municipal Administration, Community Development, Panchayats, Bhoodan and Gramdan, Khadi and Village Industries, Rural Industries Project and Ex-servicemen.*

## தமிழக சட்டப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்

---

### பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்

### பேரவைத் துணைத் தலைவர்

புலவர் கா. கோவிந்தன்

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

திரு. வி. எஸ். கோவிந்தராசன்

திரு. பெ. மலைச்சாமி

திரு. ந. தருமலிங்கம்

திரு. எஸ். முருகையன்

திரு. வை. சுவாமிநாதன்

திரு. வி. கே. கோதண்டராமன்

### சட்டப் பேரவைச் செயலாளர்

திரு. கா. து. நடராசன், எம்.ஏ., பி.எல்.

### உதவிச் செயலாளர்கள்

திரு. கே. எம். நாகராஜன், பி.ஏ., எல்எல்.பி.

திரு. கு. புஜங்க ராவ், பி.ஏ., எல்எல்.பி.

திரு. த. இராதாகிருஷ்ணன் (எஸ்டேட் அதிகாரி.)

திரு. ஜி. இராகவன்.

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழக சட்டப் பேரவை

### உறுப்பினர்களின் (ஆங்கில அகரவரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

| தொடர் எண். | உறுப்பினர் பெயர். | தொகுதி. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | அப்துல் கபூர் சாகிப், எம். | இராணிப்பேட்டை. |
| 2 | ஆதித்தனர், சி.பா. (பேரவைத் தலைவர்). | ஸ்ரீவைகுண்டம். |
| 3 | அக்னிராஜு, எஸ். | திருப்பரங்குன்றம். |
| 4 | அழகமுத்து, து. ப. (அரசாங்க தலைமை ஆளுங்கட்சி இணைப்பாளர்). | உப்பிலியாபுரம். |
| 5 | அழகர்சாமி, சோ. | கோயில்பட்டி. |
| 6 | அழகுத்தேவர், எஸ். | சிவகாசி. |
| 7 | அலங்காரம், மு. | கடலாடி (செ. வ.). |
| 8 | ஆனந்தன், மு. | ரிஷிவந்தியம் (செ.வ.). |
| 9 | ஆண்டி என்ற குருசாமி, கு. | ஸ்ரீவில்லிப்புத்தூர் (செ.வ.) |
| 10 | அண்ணாமலை, சி. வி. எம். | கடம்பத்தூர். |
| 11 | அண்ணாமலை, வி.டி. | பெரணமல்லூர். |
| 12 | அரங்கநாதன், ஆர். என். | சோளிங்கபுரம். |
| 13 | அரங்கண்ணல், இராம. | மயிலாப்பூர் (சென்னை மாநகரம்). |
| 14 | அரசு, அ. பொ. | திருவொற்றியூர். |
| 15 | ஆறுமுகம், அ. | எடப்பாடி. |
| 16 | ஆறுமுகம், எஸ். | வீரபாண்டி. |
| 17 | ஆலடி அருணா | ஆலங்குளம். |
| 18 | ஆசைத்தம்பி, எ.வி.பி. | எழும்பூர் (சென்னை மாநகரம்). |
| 19 | ஆதிமூலம், டி.எஸ். | சேரன்மகாதேவி. |
| 20 | பாலன், எம்.சி. | நாகர்கோவில். |
| 21 | பாலகிருஷ்ணன், எ.கோ. | வானூர் (செ.வ.). |
| 22 | பலராமன், இல. | கணியம்பாடி. |
| 23 | பாலசுப்பிரமணியன், செ. | பெருந்துறை. |
| 24 | பாலசுப்பிரமணியன், எ. | திண்டுக்கல். |
| 25 | பெள்ளி கௌடர், ஜெ. | கூனூர். |
| 26 | பாரதி மோகன், கோ. | குத்தாலம். |
| 27 | பூபதி, எம். | கோயம்புத்தூர்-கிழக்கு. |
| 28 | பூவராகன், கோ. | விருத்தாசலம். |
| 29 | போஜன், கே. | உதகமண்டலம். |
| 30 | சீமைச்சாமி, கரு. | மானாமதுரை. |
| 31 | சிதம்பரநாத நாடார், எ. | கொளச்சல். |
| 32 | சின்னராஜி, சி. கே. | திருப்பத்தூர். |
| 33 | சின்னச்சாமி, மு. | ஈரோடு. |
| 34 | சின்னசாமி, வி. | ஏர்க்காடு (ஆ.வா.). |
| 35 | சித்தன், என். எஸ்.வி. | திருமங்கலம். |
| 36 | தனுஷ்கோடி, பி.எஸ். | திருவாரூர் (செ.வ.). |



| தொடர் எண். | உறுப்பினர் பெயர். | தொகுதி. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 37 | தருமலிங்கம், ந. | திருத்துறைப்பூண்டி. |
| 38 | துரைராஜ், சு.ம. | திருவள்ளூர் (செ.வ.) |
| 39 | துரைபாண்டியன், என். | நாங்குனேரி. |
| 40 | துரைராஜ், பி. | சங்கரன்கோவில் (செ.வ.). |
| 41 | துரைசாமி, சு. | திருப்பூர். |
| 42 | துரையரசன், ஆ. | அறந்தாங்கி. |
| 43 | எட்மண்ட் பெர்னாண்டோ, ஜி. ஆர். | திருச்செந்தூர். |
| 44 | இளம்வழுதி, இரெ. | கடலூர். |
| 45 | எல்லப்பன், பி. எஸ். | அச்சரப்பாக்கம் (செ. வ.). |
| 46 | கணேசன், எல். | ஒரத்தநாடு. |
| 47 | கணேசன், எஸ். | செம்பனார்கோவில். |
| 48 | ஜார்ஜ், வ. | பத்மநாபபுரம். |
| 49 | ஞானசம்பந்தன், கொ. இர. | நாகப்பட்டினம். |
| 50 | கோமதிசங்கர தீட்சிதர், க. | அம்பாசமுத்திரம். |
| 51 | கோபால், எம். | குன்றத்தூர் (செ. வ.). |
| 52 | கோவிந்தன், கே. ஆர். | தாரமங்கலம். |
| 53 | கோவிந்தன், புலவர் கா. (பேரவைத் துணைத் தலைவர்). | செய்யாறு. |
| 54 | கோவிந்தராசன், சொ. | மதுரை சென்ட்ரல். |
| 55 | கோவிந்தராசன், சி. | நெல்லிக்குப்பம். |
| 56 | கோவிந்தராகன், வி. எஸ். | புரசவாக்கம் (சென்னை மாநகரம்). |
| 57 | கோவிந்தராசுலு, கே. | கோயம்புத்தூர்—மேற்கு. |
| 58 | கோவிந்தராசன், ஆ. | புவனகிரி. |
| 59 | கோவிந்தசாமி, எ. (அமைச்சர்). | முகையூர். |
| 60 | ஹபிபுல்லா பேக், டாக்டர் | ஹார்பர் (சென்னை மாநகரம்). |
| 61 | ஹாண்டே, டாக்டர் எச். வி. | பார்க் டவுன் (சென்னை மாநகரம்). |
| 62 | இராசரத்தினம், டி. | ஸ்ரீபெரும்புதூர். |
| 63 | ஜேம்ஸ், ஜே. | திருவட்டார். |
| 64 | ஜானகியம்மாள், திருமதி கே. பி. | மதுரை-கிழக்கு. |
| 65 | ஜயராஜ், பி. | நன்னிலம் (செ. வ.). |
| 66 | ஜயராமன், கி. | சேலம்-1. |
| 67 | ஜெயராமன், பி. | பேர்ணாம்பட்டு (செ. வ.) |
| 68 | கலியமூர்த்தி என்ற மூர்த்தி, ஆ. கு. | ஜெயங்கொண்டம் (செ.வ.). |
| 69 | கனகசபை, ரா. | சிதம்பரம். |
| 70 | கந்தசாமி கவுண்டர், செ. | அரவக்குறிச்சி. |
| 71 | கந்தசாமி, எம். | குளித்தலை. |
| 72 | கந்தசாமி படையாச்சி, மு. | உளுந்தூர்பேட்டை. |
| 73 | கண்ணன், எம். ஆர். | பேசின் பிரிட்ஜ் (சென்னை மாநகரம்). |
| 74 | கண்ணப்பன், எம். | கிணத்துக்கடவு. |

| தொடர் எண். | உறுப்பினர் பெயர். | தொகுதி. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 75 | கரியமாணிக்கம் அம்பலம், கரு. ராம. | திருவாடானை. |
| 76 | கருணாநிதி, மு. (அமைச்சர்) .. .. | சைதாப்பேட்டை (சென்னை மாநகரம்). |
| 77 | கருப்பையா, ஆ. .. .. .. | கங்கைகொண்டான் (செ. வ.). |
| 78 | கருப்பையா, ஆர். .. .. .. | அரியலூர். |
| 79 | கருத்திருமன், பி. ஜி. (எதிர்க் கட்சித் தலைவர்). | சத்தியமங்கலம். |
| 80 | காசிராமன், நா. .. .. .. | கும்பகோணம். |
| 81 | கேசவலு, தே. .. .. .. | கள்ளக்குறிச்சி. |
| 82 | கிட்டப்பா, என். .. .. .. | மாயூரம். |
| 83 | கொளத்தூர் கோதண்டம் .. .. | மதுராந்தகம். |
| 84 | கோதண்டராமன், வி. கே. .. .. | குடியாத்தம். |
| 85 | கோதண்டராமையா, கே. எஸ். .. | உத்தனப்பள்ளி. |
| 86 | கிருஷ்ணமூர்த்தி, கு. .. .. .. | பழனி (செ.வ.). |
| 87 | கிருஷ்ணமூர்த்தி, சி. .. .. .. | கொடவாசல். |
| 88 | கிருஷ்ணமூர்த்தி, மு. .. .. .. | பேராவூரணி. |
| 89 | கிருஷ்ணன், அ. .. .. .. .. | மங்களூர் (செ.வ.). |
| 90 | கிருஷ்ணன், ஈ. ஆர். .. .. .. | சேலம்-2. |
| 91 | கிருட்டிணன், நா. .. .. .. | காஞ்சீபுரம். |
| 92 | கிருஷ்ணசாமி கவுண்டர், ரா. .. .. | அவினாசி. |
| 93 | குமாரசாமி, கே. என். .. .. .. | பல்லடம். |
| 94 | குப்பம்மாள், திருமதி சு. .. .. | போளூர். |
| 95 | மாதவன், செ. (அமைச்சர்) .. .. | திருப்பத்தூர். |
| 96 | மகாதேவன், ப. .. .. .. | கன்யாகுமரி. |
| 97 | மலைச்சாமி, பெ. .. .. .. .. | மேலூர். |
| 98 | மலைக்கண்ணன், வீ. .. .. .. | இளையாங்குடி. |
| 99 | மணி, கே.பி.எஸ். .. .. .. | சீர்காழி (செ.வ.). |
| 100 | மணி, எம். எஸ். .. .. .. | திருச்சிராப்பள்ளி–1. |
| 101 | மணி, வி. எஸ்.எஸ். .. .. .. | ஆத்தூர். |
| 102 | மாணிக்கவாசகம், இரா. .. .. | தொண்டாமுத்தூர். |
| 103 | மணியன், பி.எஸ். .. .. .. | சோழவந்தான். |
| 104 | மாரிமுத்து, அ. .. .. .. .. | ஆடுதுறை. |
| 105 | மாரிமுத்து, ஏ.ஆர். .. .. .. | பட்டுக்கோட்டை. |
| 106 | மாரிமுத்து, மூ. .. .. .. .. | தலைவாசல் (செ.வ.). |
| 107 | மார்டின், டி. .. .. .. .. | சாத்தான்குளம். |
| 108 | மருதாசலம், என். .. .. .. | பேரூர் (செ.வ.). |
| 109 | மதியழகன், கே. ஏ. (அமைச்சர்) .. | ஆயிரம்விளக்கு (சென்னை மாநகரம்). |
| 110 | மெய்யப்பன், சா. .. .. .. | காரைக்குடி. |
| 111 | மேத்தா, எம். .. .. .. .. | பெரியகுளம். |
| 112 | மூக்கையா தேவர், பி.கே. .. .. | உசிலம்பட்டி. |
| 113 | முனுசாமி கௌண்டர், பி.எம். .. | கிருஷ்ணகிரி. |



| தொடர் எண். | உறுப்பினர் பெயர். | தொகுதி. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 114 | முனுசாமி, ரா.ரா. .. .. .. | மேல்மலையனூர். |
| 115 | முனியாண்டி, ஏ. .. .. .. | நிலக்கோட்டை (செ.வ.). |
| 116 | முனு. ஆதி .. .. .. .. | திருப்போரூர். |
| 117 | முருகையன், புலவர் க. .. .. | திருவையாறு. |
| 118 | முருகேசன், க. .. .. .. .. | பாலக்கோடு. |
| 119 | முருகையன், எஸ். .. .. .. | கலசபாக்கம். |
| 120 | முனுசாமி, செஞ்சி, வெ. .. .. | செஞ்சி. |
| 121 | முத்தையா, கே. கே. .. .. .. | கடலூர். |
| 122 | முத்தையா, மு. .. .. .. .. | ஒட்டப்பிடாரம் (செ.வ.). |
| 123 | முத்துலிங்கம், எஸ். .. .. .. | வந்தவாசி (செ.வ.). |
| 124 | முத்துசாமி, பா. க.சி. .. .. .. | பெண்ணாகரம். |
| 125 | முத்துசாமி, மா. (அமைச்சர்) .. .. | நாமக்கல். |
| 126 | முத்துச்செல்வன், பு.செ. .. .. | முசிறி. |
| 127 | நாச்சிமுத்து, நா. .. .. .. | ஒட்டன்சத்திரம். |
| 128 | நாகலிங்கம், பா. .. .. .. | பொன்னேரி (செ.வ.) |
| 129 | நாகசுந்தரம், ஆர். .. .. .. | திருச்சிராப்பள்ளி-2. |
| 130 | நல்லசிவன், க. ர. .. .. .. | மொடக்குறிச்சி. |
| 131 | நல்லசாமி, தோ. மு. .. .. .. | கரூர். |
| 132 | நஞ்சன், சி. .. .. .. .. | கூடலூர் (செ.வ.) |
| 133 | நரசிம்மன், ஏ. சி. .. .. .. | ஆரணி. |
| 134 | நாராயணன், இரா. .. .. .. | வரகூர். |
| 135 | நடராசன், மு. க. து. .. .. .. | லால்குடி. |
| 136 | நடராஜன், ஜி. .. .. .. .. | காட்பாடி. |
| 137 | நடராசன், ஈ. எம். .. .. .. | அந்தியூர். |
| 138 | நெடுஞ்செழியன், இரா. (அமைச்சர்-அவை முன்னவர்.) | திருவல்லிக்கேணி (சென்னை மாநகரம்). |
| 139 | பச்சையப்பன், எஸ். பி. .. .. | சங்கராபுரம். |
| 140 | பழனி, சி. .. .. .. .. | ஓமலூர் (செ.வ.) |
| 141 | பழனியம்மாள், திருமதி வி. ப. .. | தாராபுரம் (செ.வ.) |
| 142 | பழனிவேல் ராஜன் .. .. .. | தேனி. |
| 143 | பன்னீர்செல்வம், எம். .. .. .. | ஆம்பூர் (செ.வ.) |
| 144 | பரமசிவ கவுண்டர், பி. என். .. .. | பொங்களூர். |
| 145 | பரமசிவம், எஸ். .. .. .. | ஆண்டிப்பட்டி. |
| 146 | பரிசுத்த நாடார், ஏ. ஓய். எஸ். .. .. | தஞ்சாவூர். |
| 147 | பட்டாபி நாயுடு, எ. .. .. .. | காவேரிப்பட்டணம். |
| 148 | பீர் முஹமது, ஹாஜி. ம. மு. .. .. | மேலப்பாளையம். |
| 149 | பெரியசாமி, பெ. .. .. .. | ராசிபுரம். |
| 150 | பெருமாள், ஏ. ஆர். .. .. .. | கரியாப்பட்டி. |
| 151 | பொன்னம்பலம், புலவர் பொ. .. | திருமயம். |
| 152 | பொன்னப்ப நாடார், ஆர். .. .. | விளவங்கோடு. |
| 153 | பொன்னுமலை, தி. .. .. .. | பனமரத்துப்பட்டி. |
| 154 | ராஜா, ஏ. எம். .. .. .. .. | பவானி. |

| தொடர் எண். (1) | உறுப்பினர் பெயர். (2) | தொகுதி. (3) |
|---|---|---|
| 155 | ராசகோபால், க. மு. | உத்திரமேரூர். |
| 156 | ராஜமன்னார், எஸ். ஏ. | வாணியம்பாடி. |
| 157 | இராசாங்கம், மா. | கம்பம். |
| 158 | ராஜாங்கம், என். | குறிஞ்சிப்பாடி (செ.வ.) |
| 159 | ராஜவேலு, டி. ஏ. | திருச்செங்கோடு. |
| 160 | ராமச்சந்திர துரை, ரா. | கந்தர்வக்கோட்டை. |
| 161 | இராமச்சந்திரன், க. ந. | ஆண்டிமடம். |
| 162 | ராமச்சந்திரன், எம். ஜி. | பரங்கிமலை. |
| 163 | இராமச்சந்திரன், எஸ். | பண்ருட்டி. |
| 164 | ராமலிங்கம், எஸ். | ஸ்ரீரங்கம் (செ.வ.) |
| 165 | இராமமூர்த்தி, க. | திண்டிவனம். |
| 166 | இராமன், மு. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 167 | ராமன், ஓ. பி. | மேலூர்-தெற்கு (செ.வ.) |
| 168 | இராமராசன், வ.க. | பவானிசாகர் (செ.வ.) |
| 169 | இராமசாமி, இ. | வால்பாறை (செ.வ.) |
| 170 | ராமசாமி கவுண்டர், கே.எம். | கோபிசெட்டிப்பாளையம். |
| 171 | ராமசாமி நாயுடு, எஸ். | சாத்தூர். |
| 172 | ராமசாமி, எஸ்.ஜே. | அரக்கோணம். |
| 173 | இராசு, ஜே.எஸ். | பெரம்பலூர் (செ.வ.) |
| 174 | இரத்தினசபாபதி, மு. | விளாத்திகுளம். |
| 175 | ரெத்தினதேவர், ரா. | முதுகுளத்தூர். |
| 176 | சாதிக் பாட்சா, எஸ்.ஜே. (அமைச்சர்). | உடுமலைப்பேட்டை. |
| 177 | சகாதேவக் கண்டர், கே. | தண்டராம்பட்டு. |
| 178 | சாமிநாதன், கே.என். | வெள்ளக்கோயில். |
| 179 | சங்கரய்யா, என். | மதுரை—மேற்கு. |
| 180 | சந்தானம், பி.எஸ். | செங்கம் (செ.வ.) |
| 181 | சாரதி, மா.பா. | வேலூர். |
| 182 | சத்தியவாணிமுத்து, டாக்டர் (திருமதி) (அமைச்சர்). | பெரம்பூர் (செ.வ.) (சென்னை மாநகரம்) |
| 183 | சீனிவாசன், பெ. | விருதுநகர். |
| 184 | செல்லக் கவுண்டர், அ. | சேந்தமங்கலம் (ஆ.வா.) |
| 185 | சேனுபதி, அ. | காங்கேயம். |
| 186 | சேதுராமன், சி. | சிவகங்கை. |
| 187 | சண்முகம், எம் | விழுப்புரம். |
| 188 | சண்முகசுந்தரம், அ.ப. | பொள்ளாச்சி. |
| 189 | சண்முகம், வி.எஸ் | விராலிமலை. |
| 190 | சிறைமீட்டான், தொ.க. | பரமக்குடி (செ.வ.) |
| 191 | சிவஞானம், ம. பொ. | தியாகராயநகர் (சென்னை மாநகரம்.) |
| 192 | சிவபெருமாள், க.ந. | ஆத்தூர். |
| 193 | சிவசாமி, மு.ச. | தூத்துக்குடி. |
| 194 | சிவசுப்பிரமணியன், எஸ். | காட்டுமன்னார் கோயில் (செ.வ.) |
| 195 | சோமசுந்தரம், ந. | வலங்கைமான் (செ.வ.) |
| 196 | சௌந்தரபாண்டியன், நா. | ராதாபுரம். |



| தொடர் எண். (1) | உறுப்பினர் பெயர். (2) | தொகுதி. (3) |
|---|---|---|
| 197 | சௌந்தரபாண்டியன், பெ. | திருவண்ணராயபுரம் (செ.வ.) |
| 198 | சௌந்தரராஜ மூப்பனார், இரா. | பாபநாசம். |
| 199 | சுந்தர பாரதி, சௌடி எஸ். | அருப்புக்கோட்டை. |
| 200 | சீனிவாசன், சு. | போடிநாயக்கனூர். |
| 201 | சுவாரெஸ், திருமதி ஏ. | நியமன உறுப்பினர். |
| 202 | சுப்பராஜா, ஏ.அ. | இராஜபாளையம். |
| 203 | சுப்பையா, ஆ.கு. | கோட்டூர் (செ.வ.) |
| 204 | சுப்பையா, கே.வி. | ஆலங்குடி. |
| 205 | சுப்பையா முதலியார், ஏ.ஆர். | கடையநல்லூர். |
| 206 | சுப்பிரமணியம், அ.வெ. | திருநெல்வேலி. |
| 207 | சுப்பிரமணிய கவுண்டர், எம். | தர்மபுரி. |
| 208 | சுப்பிரமணியம், இ.எம். | திருக்கோவிலூர். |
| 209 | சுரேந்திரன், எம். | மேட்டூர். |
| 210 | சுவாமிநாத ஒடையார், ந.சி. | மன்னார்குடி. |
| 211 | சுவாமிநாதன், வை. | திருவெறும்பூர். |
| 212 | தம்பி நாயக்கர், பா. | வடமதுரை. |
| 213 | தங்கப்பன், டி. | இராமநாதபுரம். |
| 214 | தவமணி தேவர், வி. | சேடப்பட்டி. |
| 215 | தீர்த்தகிரி, ந. | ஹரூர் (செ.வ.) |
| 216 | தீர்த்தகிரி கவுண்டர், தி. | ஊத்தங்கரை. |
| 217 | திம்மராய கவுண்டர், தி. சி. | நாட்ராம்பள்ளி. |
| 218 | திப்பையா, டி.டி.எஸ். | மேட்டுப்பாளையம். |
| 219 | வடிவேலு, எஸ்.கே. | தொட்டியம். |
| 220 | வரதராஜன், என். | வேடசந்தூர். |
| 221 | வேதாசலம், மு. | வண்ணாரப்பேட்டை (சென்னை மாநகரம்). |
| 222 | வீரமணி, சி. | சங்கரி (செ.வ.) |
| 223 | வீராசாமி, ந. | ஆர்க்காடு. |
| 224 | வேலப்பன், சி. வே. | கபிலமலை. |
| 225 | வெள்ளைத்துரை, ஏ. | வாசுதேவநல்லூர். |
| 226 | வேலுசாமி, பி. | சிங்காநல்லூர். |
| 227 | வெங்கடாசல தேவர், பெ. | வேதாரண்யம். |
| 228 | வெங்கடசாமி, பி. | ஹோசூர். |
| 229 | வேழவேந்தன், கா. | கும்மிடிப்பூண்டி. |
| 230 | விஜய ரகுநாத தொண்டமான், ஆர். | புதுக்கோட்டை. |
| 231 | விஜயராஜ், நா. | திருவண்ணாமலை. |
| 232 | விநயகம், கே. | திருத்தணி. |
| 233 | விசுவநாதன், செ. கோ. | செங்கற்பட்டு. |
| 234 | வில்லியம், எம். | கிள்ளியூர். |
| 235 | வெற்றிடம் | தென்காசி |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.**

| தொடர் எண். (1) | பெயர். (2) |
|---|---|
| 1 | அண்ணாதுரை, சி. என். (முதலமைச்சர்). |
| 2 | நாராயணசாமி முதலியார், கே. (தலைமை வழக்கறிஞர்). |

# தமிழக சட்டப் பேரவை

வியாழக்கிழமை, 1968 மார்ச் 7.

சென்னை செயிண்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. சி. பா. ஆதித்தனார் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள்-விடைகள்

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

### திருமங்கலத்துக்குக் குடி தண்ணீர்த் திட்டம்

* 158 வினா.—**திரு. என். எஸ். வி. சித்தன்** : மாண்புமிகு மருத்துவத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமங்கலத்துக்குக் குடி தண்ணீர் வழங்கும் திட்டம் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் ஆண்டில் அமல் நடத்தப்படும் என முன்பிருந்த அரசு அறிவித்திருந்ததா ?

(இ) ஆம் எனில், இத்திட்டம் எப்போது செயல்படுத்தப்படும்?

(உ) அதற்கான மொத்தத் தொகை எவ்வளவு?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா** : (அ) இல்லை.

(இ) and (உ) இக் கேள்விக்கு இடமில்லை.

**திரு. என். எஸ். வி. சித்தன்** : சென்ற அரசு நகராட்சி குடிநீர் வழங்கும் திட்டத்தோடு பெரிய ஊராட்சிகளுக்கு குடிநீர் வழங்கும் நினைப்புடன் திருமங்கலத்தைச் சேர்ந்த 50 ஊர்களுக்கும் குடிநீர் வழங்கவேண்டுமென்று திட்டம் வகுத்திருந்தது, இந்த அரசு பொறுப்பு ஏற்றதற்குப் பிறகு திருமங்கலத்திற்குப் பதிலாக அங்குள்ள சிறிய ஊர்கள் அந்தத் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றன என்று தெரிகிறது. இதற்கு அரசியல் காரணம் இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். விடப்பட்டவைகளை அடுத்த ஆண்டாகிலும் சேர்ப்பதற்கு உத்தேசம் உண்டா? 50 ஊர்களில் தற்போது சேர்க்கப்பட்டவை எவை எவை என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா** : இதில் அரசியல் நோக்கம் எதுவும் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் கேட்டதற்கு இந்தக் குறிப்பை படித்துக்காட்ட விரும்புகிறேன.

The Chief Engineer, Public Health Engineering, Municipal Works and Buildings, proposed that a provision of Rs. 10 crores might be made for new Water supply Schemes in the Fourth Five-Year Plan. At the meeting of the Working Group for the Fourth Five-Year Plan held on 9th July 1964, it was decided to reduce the provision to Rs. 3 crores. It was then decided to provide new water supply schemes to 50 Panchayats with a population of over 10,000 besides Municipalities. Thirumangalam was one of the 50 panchayats for which it was proposed to provide water-supply schemes during the Fourth Five-Year Plan. When the Plan Outlay for all Urban Water supply and Drainage Schemes was reduced to Rs. 1,250 lakhs, only a provision of Rs. 100 lakhs was allocated for new Water supply Schemes. So, due to paucity of funds, the

number of local bodies for which new water supply scheme had to be taken up during the Fourth Plan period had to be reduced to 31 (13 Municipalities, 1 Township and 17 Panchayats). In the list of 31 local bodies, only water supply schemes for which investigation has been completed or sanctioned have been included. So... ..

நிதி குறைவு காரணமாக அதிகாரிகளைக் கலந்தாலோசித்து பிறகுதான் இந்த முடிவு எடுக்கப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் கூறியவைகளையும் பரிசீலனை செய்து தேவையான முடிவை அடுத்த ஆண்டு எடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

*Temples*

* 160 *Q.*—Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Education and Industries be ' pleased to stat—

(*a*) the progress made with regard to the renovation of Sri Andal temple at Srivilliputtur;

(*b*) the details thereof; and

(*c*) the details of the UNESCO aid so far secured for the renovation of this temple.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) and (இ) ஸ்ரீவில்லிப்புத்தூர் நகரத்திலுள்ள ஸ்ரீவடபத்ரசயனர் கோயிலில் முன்புறக் கோபுரத்தினைச் செப்பனிடும் பணியை, அப்பணிக்கான வரைப்படங்களையும், மதிப்பீடுகளையும் தயாரிக்கும் நிலையிலிருந்து செப்பனிடும் திருப்பணியை நிறைவேற்றும் நிலை வரையில் பொதுப்பணித்துறையிடம் ஒப்படைக்கலாம் என்று வருவாய்த்துறையில் 16—5—1964 தேதியிட்ட 1426-ம் எண் அரசாங்க ஆணையில் அரசாங்கம் ஆணையிட்டது. இத்திருப்பணிக்கான மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்குத் தேவையான பொறியியல் பணியாளர்களை நியமிப்பதற்கு வருவாய்த்துறையில் 12—7—1966 தேதியிட்ட 2334-ம் எண் அரசாங்க ஆணையில் ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. மேற்கூறிய கோயில் திருப்பணி வேலை குறித்த ஆய்வுநிலையில் சாரம் முதலியவற்றைக் கட்டுவதற்கான செலவுக்காக கட்டிடத் தலைமைப் பொறியாளருக்கு ரூ. 50,000 வழங்க அரசாங்கம் ஒப்புதல் அளித்தது. ராமநாதபுரம் பொதுப்பணித்துறையில் முன்னாள் பொறியாளர் ரூ. 18.50 லட்சம் செலவில் மதிப்பீடு ஒன்றினைத் தயாரித்துள்ளதாக இந்து சமய அறக்கட்டளைத் துறையின் ஆணையர் தெரிவித்துள்ளார். மேற்கூறிய மதிப்பீடு பொதுப்பணித்துறையில் ஆய்வில் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இறுதியான மதிப்பீடு அரசாங்கத்திற்குப் பரிந்தனுப்பப்பட்ட பிறகு, மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

(உ) இக்கோயிலைப் புதுப்பிப்பதற்காக, ஐக்கிய நாடுகள் கல்வி, விஞ்ஞானம் பண்பாட்டு நிறுவனத்திடமிருந்து உதவி பெறும் செயற்குறிப்பு எதுவும் இல்லை.

**திரு. க. கோமதி சங்கர தீட்சிதர் :** இந்தக்கோவில் வேலை முடிவதற்கு இன்னும் எவ்வளவு காலம் ஆகும் ? இதற்கு அதிகத்தொகை தேவைப்படுமானால் என்டோவ்மெண்ட் நிதியிலிருந்து கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** முன்பே தெரிவித்தபடி பொறியாளர் 18½ லட்சம ரூபாய் மதிப்பீட்டில் திட்டம் தீட்டப்பட்டு பொதுப்பணித்துறைக்கு அனுப்பியிருக்கிறார்கள். பொதுப்பணித்துறை அளவிலே இருக்கிறது. அறநிலைய பாதுகாப்புத்துறை பரிந்துரை அனுப்பிய பிறகு முடிவு செய்யமுடியும். எவ்வளவுசெலவு செய்யவேண்டும் என்பதும்



பொதுமக்கள் நன்கொடை எந்த அளவிற்கு என்பதை அறநிலையப் பாதுகாப்புத்துறை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்பதும் பரிசீலிக்கப்பட்ட பிறகுதான் முடிவு எடுக்கப்படும்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, I learnt and also read in the newspapers that the temple car in Srivilliputtur is in dilapidated condition. It is stated that it is of historic and artistic value. So, will the Hon. Minister for Industries and Education appoint a suitable Committee to study the condition of the car and arrange for its reconstruction ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிப்புத்தூர் தேரைப்பற்றிய விவரங்கள் எதுவும் இப்போது கிடைக்கவில்லை. மாண்புமிகு உறுப்பினர் கூறியதிலிருந்து இது ஆராயப்படவேண்டிய ஒன்றாக இருக்கிறது. எந்த நிலையில் இருக்கிறது என்பதைப் பற்றியும், என்ன முடிவு செய்யவேண்டும் என்பதைப்பற்றியும் விவரங்கள் கிடைத்த பிறகு பரிசீலித்து ஆவன செய்யப்படும்.

**திரு. கே. விநாயகம் :** ஸ்ரீவில்லிப்புத்தூர் கோவில் கோபுரத் திருப்பணிக்கு வேண்டிய பணம் அந்தக் கோவில் நிதியில் இருக்கிறதா ? இதற்குப் பல லட்சக்கணக்கான ரூபாய்கள் வேண்டியிருப்பதாலே போதிய அளவிற்குப் பணம் இல்லையென்றால், அதைத் தள்ளிவிடுவதை விட்டு பணவசதியுள்ள கோவில்கள் தமிழகத்தில் இருக்கின்றனவே, அப்படிப்பட்டவைகளிலிருந்து பணத்தை ஒதுக்குவதற்கு ஏற்பாடு செய்வார்களா ? அல்லது பணம் இல்லையென்று சொல்லி தள்ளிவிடுவார்களா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அந்தக் கோபுரம் புதுப்பிக்கப்படவேண்டிய நிலையிலிருப்பதால் அதற்கு எவ்வளவு செலவாகும் என்று திட்டமிட்டதற்குப் பிறகு அந்தக் கோவிலிலிருந்து எவ்வளவு நிதி கிடைக்கும் என்று கண்டறிந்த பிறகு, திருப்பணிக்குழுவினர் எவ்வளவு திரட்டினார்கள் என்று பார்த்த பிறகு அதற்குமேல் அறநிலையப் பாதுகாப்புத் துறையிலிருந்து எவ்வளவு நிதி ஒதுக்கலாம் என்று முடிவு எடுக்கப்பட்டு, அதையெல்லாம் மதிப்பிட்டு தெரிந்த பிறகுதான் தக்க முடிவு எடுக்கப்படும்.

**திரு. அ. லெ. சுப்பிரமணியம் :** அப்படிக் கோவில்களைப் புதுப்பிக்கின்ற நேரத்திலே நல்ல பழைமையான சிலைகள் எல்லாம் களவாடப்படுகின்றனவே அதுபோன்று நேரிடாமல் இருக்க அரசு கவனம் செலுத்துமா

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு உறுப்பினர். பொதுப்படையாகக் குறிப்பிடுகிறார்கள். இன்ன இடத்தில் ஏற்பட்டது என்று சொன்னால் தக்க நடவடிக்கை எடுக்கலாம்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** பஞ்சாயத்தில் சர்ப்ளசாக நிதி இருந்தால் அதை சர்க்கார் எடுத்துக்கொள்ளுகிறார்கள். கோவிலில் சர்ப்ளசாக இருந்தால் இதை இன்னொரு கோவிலுக்கு மாற்றுவதற்குப்பதில் பக்தர்கள் போட்டும் என்று சொல்லுகிறார்கள். ஆகவே கோவில்களில் சர்ப்ளசாக இருக்கும் நிதியை அரசாங்கமே எடுத்துக்கொள்ள உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இப்போது காமன் பண்ட் என்று ஒன்று இருக்கிறது. அண்மையில் சட்டமன்றத்தில் ஒரு திருத்தம் நிறைவேற்றப்பட்டது. உபரித் தொகைகளையெல்லாம் பொதுமக்களுக்காக மருத்துவ வசதிகள்செய்யவும், பள்ளிகள் கட்டுவதற்கும் இதுபோன்ற அறச்செயல்கள் செய்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. கூடுமானவரை பொதுமக்கள் செய்யக்கூடிய வகையில் கோவிலுக்கு வேண்டியதை திருப்பணிக்குழுவினர் நன்கொடை மூலம் செய்வது நல்லது. மதுரைக் கோவிலில் அப்படித்தான் செய்யப்பட்டது. மற்ற கோவில்களிலுள்ள அத்தனையும் மாற்றி இந்தக் கோவிலுக்குச் செய்யவேண்டுமென்ற நிலை ஏற்படாது.

திருப்பணிக்குழுவினர் திரட்டித்தருகின்ற தொகையைப் பார்த்து பொது நிதியிலிருந்து சிறு அளவில் எடுக்கப்படுகின்ற முயற்சிகள் எல்லாம் திட்ட மதிப்பீடு வந்ததற்குப் பிறகுதான் ஆராய்ந்து செய்யப்படும்.

* 161 வினா—**திரு. கொ. இர. ஞானசம்பந்தம் :** மாண்புமிகு கல்வி தொழில் அமைச்சா தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) மாயூரம் தாலுக்கா, தரங்கம்பாடி மாசில்நாதஸ்வாமி ஆலயத்தில் கடந்த 2 வருடங்களாக உப்பு தயாரிக்கும் வேலைக்கென செலவழிக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

(இ) அதன் மூலம் பெறப்பட்ட வருமானம் எவ்வளவு ?

(உ) இந்த கணக்குகள் தணிக்கை செய்யப்பட்டுள்ளனவா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) 32,563·45 ரூபாய்.

(இ) 24,476·29 ரூபாய்.

(உ) இந்து சமய அறநிலையத்துறை கணக்குகளின் துணை ஆய்வாளரால் இக்கணக்குகள் தணிக்கை செய்யப்பட்டு வருகின்றன.

**திரு. கொ. இர. ஞானசம்பந்தம் :** அந்தத் தொழில் தொடர்ந்து நடைபெறுவதற்கான முறையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அந்தத் தொழில் தொடர்ந்து நடைபெறுவதற்கான முறையில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. 1962-ம் ஆண்டு முதல் அந்த நிலம் தரிசாகத்தான் கிடந்தது. 1966-இல் தான் 16 ஏக்கர் நிலம் உப்பளமாக மாற்றப்பட்டது. அதற்கு மூலதனச் செலவாக ரூ. 10,419.68 ஆயிற்று. வேறு பலவகைச் செலவினத்தின் கீழ் ரூ. 5,036.62 செலவாயிற்று. 1966–67 இல் தொழிலாளர்களுக்கு முன்பணமாக—இரண்டாண்டுத் தவணையில் வசூலித்துக் கொள்கிற வகையில் கொடுக்கப்பட்டது ரூ. 10,107·15. ஆக மொத்தம் ரூ. 32,561.45 ஆகும்.

1—1—1967 முதல் 31—5—1967 வரை மொத்தம் 8,077 மூட்டைகள் உப்பு உற்பத்தி செய்யப்பட்டன. அதில் 5,234 மூட்டைகள் ரூ. 15,862க்கு விற்கப்பட்டிருக்கிறது. பாக்கி மூட்டைகள் 2,893க்கு ஒரு மூட்டை ரூ. 3.03 வீதம் ரூ. 8,611.29 இருக்கிறது. ஆக மூலதனச் செலவை நீக்கிவிட்டால் இதனால் நிகர மிச்சம் ரூபாய் 12,412.67 இருக்கிறது. இதைத் தொடர்ந்து நடத்துகிற முறைதான் லாபகரமாக இருக்கும். ஆனால் எஸ்டேட் அபாலிஷன் ஆக்ட் பிரகாரம் இதற்கு பட்டா வழங்குவதை எதிர்த்து உயர்நீதிமன்றத்திற்கு ரிட் போய் இருக்கிறது. இந்த லிட்டிகேஷன் முடிவு தெரிந்த பிறகு தான்—அந்த வழக்கில் தீர்ப்பு ஏற்பட்ட பிறகு தான் ஏலம்விடுவது பற்றியோ, குத்தகைக்கு விடுவது பற்றியோ யோசிக்க வேண்டும்.

### *Mechanical Engineering Department*

* 162 *Q.*—**Thiru S. RAMACHANDRAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there is any proposal to start a separate Mechanical Engineering Department ?**

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இல்லை.

**திரு. எஸ். ராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, இப்போது இயந்திரப் பொறியியல் இலாக்கா என்று இல்லாமல் அந்தப் பொறியியலைச் சேர்ந்த வல்லுநர்கள் இண்டஸ்ட்ரிஸ் டிபார்ட்மெண்டில் இருக்கிறார்கள். ஸ்டேட் டிரான்ஸ்போர்ட்டில் இருக்கிறார்கள். அக்ரிகல்சரல் டிபார்ட்மெண்டில்





இருக்கிறார்கள். இதுபோல பல இலாக்காக்களில் இருப்பவர்களை தொழில் நுட்பக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருவதற்கு ஒரு சீஃப் இன்ஜினியர் (மெக்கானிகல்) என்று போட்டு தொழில் வொர்க்ஷாப்புகள், பாக்டரிகள் ஆரம்பிக்கவேண்டியதாக இருப்பதால் தனி இலாக்காவாகவே நிறுவ சர்க்கார் யோசிக்குமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** பி.டபிள்யூ.டி. டிவிஷன், டி.வி.ஆர்.டிவிஷன், பி.எ.பி. வொர்க்ஷாப் டெம்பரரி டிவிஷன் போன்றவைகளைத் தவிர மாநில பொதுப் பணித்துறையின் இயந்திரப் பொறியியல் கிளைகள் இல்லை. இப்போது தனியாக இயந்திரப் பொறியியல் இலாக்காவை அமைக்கும் உத்தேசம் இல்லை. ஆயினும் பி.டபிள்யூ.டி.யில் இதற்கென இப்போது இ.இ. இருக்கிறார். அதற்குப் பதிலாக எஸ்.இ. போடுவது என்ற செயற்குறிப்பு அரசாங்கப் பரிசீலனையில் உள்ளது.

### பஸ் ரூட்டுகளின் வருமானம்.

*163 வினா.—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1957-வது ஆண்டிலிருந்த பஸ் ரூட்டுகளைவிட 1966-வது ஆண்டில் எத்தனை ரூட்டுகள் அதிகரிக்கப்பட்டுள்ளன ?

(இ) அதனால் 1957-வது ஆண்டைவிட 1966-வது ஆண்டுவரை சர்க்காருக்கு வருமானம் அதிகரித்துள்ளதா ? எவ்வளவு ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** (அ) 1,535.

(இ) ஆம். ரூ. 5.62 கோடி.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** பஸ் ரூட்டுகளை அதிகப்படுத்துவதன் காரணமாக சர்க்காருக்கும் வருவாயும் அதிகமாகக் கிடைக்கிறது. ஆகவே, இதை உத்தேசித்தும், மேலும் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்காக வேண்டியும், பொதுமக்களின் நன்மையை வேண்டியும் உடனடியாக போதுமான பஸ் ரூட்டுகளை ஆரம்பிக்கும் உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** ஆண்டுதோறும் பஸ் ரூட்டுகள் அதிகமாகிக்கொண்டுதான் வருகின்றன. 1966-ல் 2,962 ரூட்டுகள் இருந்தன என்றால் இப்போது 3,100 ரூட்டுகள் இருக்கின்றன. இப்படி பஸ் ரூட் தடங்களை அதிகப்படுத்த வேணடும் என்கிற எண்ணம் இருக்கிறபோதே—புதிதாக பஸ் ரூட்டுகளைத் துவங்கக்கூடாது என்பதற்கும் ஆங்காங்கே எதிர்ப்புகள் இருக்கின்றன. கோர்ட்டுக்குப் போகிற நேரத்தில் பல இடைஞ்சல்கள் ஏற்படுகின்றன.

**திரு. என். கிட்டப்பா :** அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற நேரத்தில் பஸ் ரூட்டுகளை தேசியமயமாக்குகிறபோது கோர்ட்டுக்குப் போய் குறுக்கிடுகிறார்கள் என்றார்கள். அதுபற்றி அரசு என்ன முடிவு செய்ய இருக்கிறது?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** பஸ் ரூட்டுகளை தேசியமயமாக்கும்போது கோர்ட்டுக்குப் போய்விடுகிறார்கள் என்று சொல்லவில்லை. அது வேறு விஷயம். புதிதாக ரூட்டுகளைக் கொடுக்கிறபோது போய்விடுகிறார்கள் என்றுதான் குறிப்பிட்டேன்.

**திரு. கே. விநாயகம் :** நம்முடைய அரசாங்கத்தினுடைய கொள்கை பஸ்களை தேசியமயமாக்குவது. அதில் மாறுபட்ட கருத்து எவருக்கும் இல்லை. ஆனால் இன்றைக்குத் தனிப்பட்டவர்களுக்கு ரூட் தருகிறபோது Sector qualification oeperation qualification என்று இருப்பதால் அதற்கு முரண்பாடாக இருக்கிறது என்று கோர்ட்டுக்குப் போய்விடுகிறார்கள். ஆகவே the rules under which these permits are granted-ஐ திருத்தி அமைத்தால் வழக்கு மன்றத்திற்குப் போக இடமிருக்காது. பயணிகளின் வசதியை

முன்னிட்டு அந்த விதிகளைத் திருத்தி அமைத்து சுமுகமாக அனைவருக்கும் புது ரூட்டுகள் தரக்கூடிய healthy competition வகையில் அமைக்க முடியுமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** விதிகளைத் திருத்தி அமைப்பதற்கான செயற்குறிப்பு சர்க்கார் பரிசீலனையில் இருக்கிறது.

**திரு. ஈ. ஆர். கிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, 1966-67 இல் இருந்து மோட்டார் வாகன வரியின் மூலமாக அரசுக்கு எவ்வளவு வருமானம் வந்திருக்கிறது, 1967-68 இல் அரசுக்கு எவ்வளவு வருமானம் கிடைத்திருக்கிறது என்று சொல்ல முடியுமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** 1966-67 இல் ரூபாய் 14 கோடியே 50 லட்சம் 1967-68இல் ரூபாய் 16 கோடியே 75 லட்சம்.

**திரு. கே. என். குமாரசாமி :** பஸ் ரூட்டுகளுக்குப் புதிதாகக் கொடுக்கப்படுகிற லைசென்சு அதிகப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். பழைய ரூட்டுகள் வைத்திருக்கிறவர்களுக்கு எவ்வளவு கொடுக்கப்பட்டிருக்கிறது ? புதியவர்களுக்கு எவ்வளவு கொடுக்கப்பட்டிருக்கிறது ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அதுபற்றிய விவரங்கள் என்னிடத்தில் இல்லை. மாவட்ட ஆட்சியாளர்கள் கொடுக்கிறார்கள். பேருந்து கணக்கு விவரம் என்னிடம் இருக்கிறது. பேருந்து வண்டி 1 உள்ளவர்கள் 314 பேர்கள், பேருந்து வண்டி 2 உள்ளவர்கள் 177 பேர்கள். பேருந்து வண்டி 3 உள்ளவர்கள் 130 பேர்கள். பேருந்து வண்டி 4 உள்ளவர்கள் 89 பேர்கள். பேருந்து வண்டி ஐந்தும், அதற்கு மேலும் உள்ளவர்கள் 292 பேர்கள் தமிழ்நாட்டில் இருக்கிறார்கள்.

**ஹாஜி ம. மு. பீர் முஹம்மது :** அரசு பேருந்து வழித்தடங்களின் மூலமாக அதிகப்படியான வருமானம் வருகிற காரணத்தினால், பொதுப்பணித் துறை அமைச்சரின் சிறந்த நிர்வாகத்தில் அத்துறை வருவாய் பெருகியிருக்கின்ற காரணத்தினால் சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு அரசு பஸ்களில் நிரந்தரமான இலவசப் பாஸ் தர ஏற்பாடு செய்ய முடியுமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அப்படிப்பட்ட விபரீதமான யோசனை எதையும் இந்தச் சர்க்கார் இப்போது மேற்கொள்வதாக இல்லை.

**திரு. எ. பாலசுப்பிரமணியன் :** ஏற்கனவே அமைச்சர் அவர்கள் பதில் கொடுத்ததைத் தொடர்ந்து, 100 பஸ்களுக்கு மேல் உள்ள உடைமையாளர்கள் எத்தனை பேர் என்று சொல்ல முடியுமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** என்னிடம் உள்ள விவரம், ஐந்து அதற்கு மேல் பஸ் உள்ள உடைமையாளர்களின் எண்ணிக்கை 292 பேர்கள் என்பது. நூறுக்கு மேல் ஐந்தாறு பேர்கள் இருக்கலாம். அந்தக் கணக்கு என்னிடத்தில் இல்லை.

**திரு. தா. விஜயராஜ் :** பஸ் எண்ணிக்கையைக் காட்டும் நேரத்திலே அரசாங்கம் ஜனத்தொகை அடிப்படையில் எவ்வளவு பஸ்கள் விடவேண்டுமென்று அறிவித்திருக்கிறதா ? அப்படியிருந்தால் அதன்படி நடைபெறுகிறதா ? பஸ் தொழிலிலே அதிக வரி விதிக்கப்படுகிற நேரத்திலே சில முதலாளிகள் செல்வாக்குப் படைத்தவர்கள் அதிலிருந்து தப்பித்துக் கொள்கிறார்கள். செல்வாக்குக் குறைந்தவர்கள் .. .. .. ..

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தாங்கள் வினாவை மட்டும் போடுங்கள். வினாவைப்போட்டு, என் கேட்கிறேன் என்ற விளக்கம் தாங்கள் சொல்லத் தேவையில்லை. காரணம் சொல்லாமலே உங்களுக்கு வினாக் கேட்பதற்கு உரிமையிருக்கிறது.





**திரு. தா. விஜயராஜ் :** அந்த அளவுக்கு ஏற்கனவே டெவலெப்மெண்ட் விங் என்று இருந்தது. எத்தனை சதவீதம் தேவையிருந்தது? இப்பொழுது உள்ள நிலையில் அது நடக்கிறதா ? பெர்மிட் வழங்குவதிலே கலெக்டர் அளவிலே.. .. .. ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தங்களுடைய துணைத்தலைவர் அவர்களே சொல்கிறார்கள், ஒரு வினாவை மட்டும் கேளுங்கள் என்று.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** ஜனத்தொகை அடிப்படையில் ரூட்கள் போடப்படவில்லை. தேவையின் அடிப்படையிலேதான் ரூட்கள் போடப்படுகின்றன.

**THIRU K. S. KOTHANDARAMIAH :** Sir, two or three buses of our Transport Service go to Bangalore. In the Bangalore Bus Stand, the conductors issue tickets only to long-distance passengers and not to short-distance passengers. Therefore, there is heavy traffic. Privates buses also are not plying. So will the Hon. Minister for Public Works be pleased to introduce some more buses or ask the conductors to issue tickets for short distance passengers also ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இந்தப் புகார்பற்றி விசாரித்துத் தகவல் அறிவிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்: :** திரு விஜயராஜ் அவர்கள் இன்னொரு வினா கேட்க விரும்பினார்கள், அதைக் கேட்பார்கள்.

**திரு. தா. விஜயராஜ் :** தலைவர் அவர்களே, நான் கேட்க விரும்புவது எல்லாம் எல்லா இடங்களிலும் டிரான்ஸ்போர்ட்டை போடுகிறார்கள். எந்த முறையிலே எந்த அடிப்படையிலே அதிக பஸ்கள் விட சர்க்கார் திட்டமிட்டிருக்கிறது ? அதிக வரி விதிக்கக்கூடிய சமயத்திலே ஒதுக்கும்படியான சந்தர்ப்பம் உள்ள நிலையில் அமையுமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** எந்த அடிப்படையில் வழித் தடங்கள், பஸ் ரூட்ஸ், போடப்படுகின்றன என்று கேட்டார்கள். சாலை வசதிகள் எப்படி இருக்கின்றன. என்ற அடிப்படையிலேயும் பொதுமக்களின் தேவையின் கணக்கை எடுத்துக்கொண்டும் அந்த அடிப்படையிலே தான் உரிமங்கள் வழங்கப்படுகின்றன. வரிகள் அதிகமாகப்போட்டிருக்கிற காரணத்தினாலே அதிகமாக எடுப்பார்களா என்று கேட்டார்கள். வரி அதிகமாக இருக்கிறதே ஒழிய, ஒவ்வொரு ரூட்டுக்கும் வரியைக் கொடுத்துக் கொண்டு பஸ்கள் விடுகிறோம் என்று சொல்லி விண்ணப்பிப்பவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். வரியினால் பாதிக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** Increase in the number of bus routes என்பதிலே சென்னை மாநிலத்திற்கும் மைசூர் மாநிலத்திற்கும் இருக்கும் படியான பஸ் ரூட்டில், சென்னைக்கும் மைசூருக்கும் இடையில் இருக்கும் படியான சத்தியமங்கலத்திலிருந்து சாம்ராஜ் பவனுக்கு நேரடியாக பஸ் விடுவதற்கு மைசூர் அரசாங்கத்தோடு பேச்சுவார்த்தை நடத்த அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய யோசனை பரிசீலிக்கப்படும்.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** தலைவர் அவர்களே, ஒரு பஸ் ரூட் ஓப்பன் செய்துகொடுத்துவிட்டால் இன்னொரு முதலாளி கோர்ட்டுக்குச் சென்று ஸ்டே வாங்கக்கூடிய நிலைமை இருக்கிறது. அப்படிப்பட்ட ஸ்டேக்கள் எத்தனை இருக்கின்றன. அப்படிப்பட்ட ஸ்டேக்களை எல்லாம் வெக்கேட் செய்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அப்படிப்பட்ட ஸ்டேக்களை நூற்றுக் கணக்காக, ஏன் ஆயிரம் இருக்கின்றன என்றுகூடச் சொல்லலாம். இது நீதி மன்ற விவகாரமாக இருக்கிற காரணத்தினால் சர்க்கார சட்டம் போட்டுத் தீர்த்துவிட முடியாது. நீதி மன்றம்தான் தீர்ப்பு வழங்க வேண்டும். நம்முடைய சார்பிலேயிருந்து அதைத் துரிதப்படுத்துவதற்கு ஏற்பாடு செய்யலாமே தவிர, அது முற்றிலும் நீதிமன்றத்தினுடைய விவகாரம்.

**Dr. H. V. HANDE :** Sir, in the reply of the Hon. Minister he has stated that the extra revenue is about Rs. 5 crores. I want to know, what is the extra expenditure incurred by the Government ? Also, what is the net profit or total gross receipt ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அந்த விவரம் இல்லை என்னிடத்தில்.

**திரு. நா. சௌந்தரபண்டியன் :** 1957 முதல் 1967 வரை அதிகப் பேருந்து வழித்தடங்கள் விரிவுப்படுத்தப்பட்டதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படியானால் அவை தனிப்பட்ட முதலாளிகள் கோரிக்கைகள்மீது விரிவுபடுத்தப்பட்டதா அல்லது பொது மககள் கோரிக்கைகள் மீது விரிவுபடுத்தப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** ஒவ்வொரு வழித்தடமும் அங்கு இருக்கிற மாவட்ட ஆட்சித் தலைவரால் அறிவிக்கப்படுகிறது. பொதுமக்கள் தேவையைப் பொறுத்துத்தான் அப்படி அறிவிக்கப்படுகிறது. அப்படி அறிவிக்கப்பட்டவுடன தனிப்பட்ட முதலாளிகள் ரூட்கள் வேண்டுமென்று விண்ணப்பங்கள் போடுகிறார்கள். இதுதான் இப்போதைய நிலை.

**Thiru T. MARTIN :** Sir, arising out of the answer given by the Hon. Minister, I understand that new routes could not be opened on account of the objections raised by the existing operators by taking the matter to courts. But there are certain routes in the Tirunelveli district especially in Sathankulam constituency, where there are no existing operators. In such cases at least, will this Government issue directions to the Regional Transport Authority in Tirunelveli to give permits to open new routes in those areas ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அப்படிக் குறிப்பிட்ட இடங்கள் இருந்தால் உறுப்பினர் தெரிவிப்பாரானால் அல்லது அவர் தெரிவித்த கருத்தை அடிப்படையாக வைத்துக்கொண்டு அதனுடைய நிலையை அறிந்து ஏற்ற முடிவை எடுக்கலாம்.

**திரு. எம். அப்துல் கபூர் சாகிப் :** தலைவர் அவர்களே, விஷாரம், ஆற்காடு, இராணிப்பேட்டை, வாலாஜா இவை நான்கும் பெரிய நகர சபைகள், பெரிய நகரங்களாக இவை இருக்கின்றன. நான்கு நகரங்களிலிருந்தும் ஒரே ஒரு தனியார் பஸ்தான் சென்னைக்குப் போகிறது என்பது அரசுக்குத் தெரியுமா ? மேற்கொண்டு அரசாங்க பஸ் உடனடியாக விட அரசாங்கம் ஆலோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தொடக்கக் கேள்வி ரூட்களை அதிகப்படுத்தியது எவ்வளவு, வருமானம் எவ்வளவு என்பதைப்பற்றியது. ஒவ்வொருவரும் எங்களுடைய பகுதியிலிருந்து பஸ் விடவேண்டுமென்று கேட்க ஆரம்பித்தால் கேட்டுக்கொண்டே இருக்கலாம். மூலக்கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை.

**திரு. என். வரதராஜன் :** பஸ் போக்குவரத்து ஆலோசனைக் குழுவை அரசு நியமித்துள்ளார்களா ? யார் யார் அதில் இருக்கிறார்கள் ? அதனுடைய நோக்கம் என்ன ? கடந்த ஆண்டு எத்தனை தடவைகள் கூடியிருக்கிறது ? பஸ்களுக்கு சீலிங் வைக்கும்படியான எண்ணம் சர்க்காருக்கு உண்டா ?



**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அந்தக் குழு நியமிக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் இந்தக் குழு கூட வேண்டுமென்று அறிவிக்கப்பட்ட தேதியில் அமைச்சர் விபத்துக்குள்ளானதால் நடத்தப்படவில்லை. இரண்டாவதாக, குழு கூடவேண்டுமென்று அறிவிக்கப்பட்ட தேதியில் இங்கே மொழித் தீர்மானம் வந்ததால் நடத்தப்படவில்லை. விரைவிலே அடுத்த திங்களிலே அந்தக் குழு கூட இருக்கிறது.

**திரு. அ. ஆறுமுகம் :** அரசாங்க பஸ்களிலே திருக்குறள் எழுதப்படுவதைப்போன்று தனியார் பஸ்களிலும் திருக்குறள் எழுதப்பட வேண்டுமென்று அரசாங்கம் ஆணையிடுமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** உறுப்பினர் அவர்கள் தனியார்களிடம் இதை வேண்டுகோளாக விடுக்கலாம்.

**திரு. சோ. அழகர்சாமி :** புதிதாகக் கொடுக்கக் கூடிய பஸ் ரூட்டுகளை சிறிய முதலாளிகளுக்குக் கொடுக்க வேண்டுமென்ற கொள்கையை அரசாங்கம் யோசிக்குமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நான் திரு விநாயகம் அவர்கள் கேட்டபொழுதே சொன்னேன், அதற்காக விதிமுறைகள் மாற்றப்பட வேண்டுமென்பது சர்க்காரின் பரிசீலனையில் இருப்பதாக.

**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** ஸ்டே கொடுத்துவிட்டால் அவை பைசல் ஆவதற்கு நீண்டகாலமாகிறது. ஸ்டே கொடுக்கப்பட்ட ரூட்டிலே உள்ள பொதுமக்களுக்கு அது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ஆகவே ஸ்டே இருக்கும் வரையில் பொதுமக்களின் சௌகரியத்தை முன்னிட்டு டெம்பரரி பெர்மிட் கொடுத்து பஸ்களை ஓட்ட அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** சில மாவட்டங்களில் அப்படிக் கொடுக்கப்பட்டிருப்பதாக அறிகிறேன்.

**திரு. ஜி. நடராசன் :** தலைவர் அவர்களே, காட்பாடியிலிருந்து சென்னைக்கு வருகின்ற பஸ்கள் குறைவாக இருப்பதால் ஜனங்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே அந்தப் பகுதியில் அரசாங்க பஸ்கள் விடும் உத்தேசம் உண்டா ?

(விடை இல்லை.)

**திரு. ஜி. ஆர். எட்மண்ட் பெர்னாண்டோ :** தலைவர் அவர்களே, திருவள்ளுவர் படங்களும் திருக்குறளும் சென்னையில் ஓடுகின்ற அரசாங்க பஸ்களில்தான் இருககின்றன. வெளியூர்களில் ஓடும் பஸ்களிலும் துரித பஸ்களிலும் அவை இல்லை. இனிமேல் அதற்கான முயற்சி எடுக்கப்படுமா ?

முற்பகல் 9-30.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இரண்டு நாட்களுக்கு முன்பு அதற்கான உத்திரவுகள் இடப்பட்டுவிட்டன.

**திரு. ந. வீராசாமி :** தலைவர் அவர்களே, நிலங்களுக்கு உச்ச வரம்புச் சட்டம் இருப்பது போல தனிப்பட்ட பஸ் முதலாளிகளும் இவ்வளவு பஸ்கள் தான் வைத்துக்கொள்ளலாம் என்று ஏதாவது சட்டம் இயற்ற இந்த அரசுக்கு உத்தேசமிருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அதுபற்றிய செயற்குறிப்பு எதுவும் இப்போது இல்லை.

**திரு. கே. பி. எஸ். மணி :** சார், நீண்டதூர பஸ்களை அரசாங்கம் மேற்கொள்ளுவது ஏற்ற உத்தேசம் இருக்கிறதா ? 75 மைல்களுக்கு மேற்பட்ட எல்லா பஸ் ரூட்டுகளையும் அரசாங்கம் எடுத்துக் கொண்டு விட்டதா ? இன்னும் பாக்கி இருக்கிறதா ? அவை எவ்வளவு நாட்களுக்குள் எடுத்துக் கொள்ளப்படும் ?

மாதிரி திடீர் சோதனை போடுவதற்கு பலவகைப்பட்ட அதிகாரங் களும் உரிமைகளும் பெறுகிறார்கள். இந்தக் காரியத்தில் புதிய அரசு தீவிரமான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது.

**திரு. பி. எஸ். மணியன் :** சினிமா என்பது பொழுதுபோக்காக இருக்கிறது. அதேபோல் சினிமாக்கொட்டகைகளை சோதனை நடத்துவதும் கடந்த இருபது ஆண்டுகளாக ஒரு பொழுதுபோக்காக இருக்கிறது. விற்பனை வரி அதிகாரிகளும் மொபைல் பார்ட்டிகளும் மாலையில் சோதனைக்காக செல்கிறார்கள் என்றால் சம்பந்தப்பட்ட சினிமா கொட்டகைகளுக்கு காலையிலேயே தகவல் தெரியக் கூடிய முறையில் இருப்பதால் தனிப்பட்ட முறையில் உயர்தர அதிகாரி ஐ.ஏ. எஸ். அதிகாரி அல்லது ஓய்வு பெற்ற நீதிபதி இவர்களை மாவட்டந்தோறும் போட்டு தனியாக வசூல் செய்யக்கூடிய முறையை அமல்படுத்தும் யோசனை புதிய அரசுக்கு உண்டா 7

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** ஒவ்வொரு சினிமாக் கொட்டகைக்கும் ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியைப் போடுவது என்பது நடைமுறை சாத்தியமல்ல. ஆனால் எங்கேயாவது முறைகேடான காரியங்கள் நடைபெறுமானால் அவைகளைத் தவிர்ப்பதற்காகத்தான் பெரும்பாலும் திடீர் சோதனைகள் செய்யப்படுகின்றன. சேலம் மாவட்டத்தில் இவ்வளவு தியேட்டர்களை இந்த நேரத்தில் சோதனை போடவேண்டுமென்றால் அந்த ஊர் அதிகாரிகூட இல்லாமல் மேல் மட்டத்தில் உள்ள அதிகாரிகளை அனுப்புகிறார்கள். அவர்கள் கீழேயுள்ள தாலுக்கா மட்டத்தில் அல்லது வேறு மட்டத்திலுள்ள அதிகாரிகளிடம் இந்த கொட்டகையில் 9 மணி காட்சிக்கு நுழைந்து பார்க்க வேண்டுமென்றுள்ள தாக்கீது அரை மணிக்கு முன்னர்தான் கொடுக்கப்படுகிறது. அவை ரகசியமான பாதுகாப்பில் வைக்கப்படுகின்றன.

**DR. H. V. HANDE** : Sir, will the Minister be pleased to tell us roughly the number of theatres and touring talkies in the Madras State? The Minister has said that there is a ten-crore increase in revenue. Will he be pleased to tell us the total amount of revenue that we are likely to get this year on account of the special steps taken by the Minister?

**THE HON. THIRU K. A. MATHIALAGAN** : A separate question may be put.

**திரு. க. மு. ராசகோபால் :** வருவாய்த் துறை அதிகாரிகள் இப்படி திடீர் சோதனைகள் போட்டதன் காரணமாக வரி ஏய்ப்பவர்கள் 1965–66-ல் எவ்வளவு பேர்கள் பிடிபட்டார்கள்? 1966-67-ல் எவ்வளவு பேர்கள் பிடிபட்டார்கள் ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** விற்பனை வரி மானியத்தின்போது அதைப் பற்றி விவரமாக விவாதித்து, இன்னும் வருவாயைப் பெருக்க என்னென்ன செய்யலாம் என்பது பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் யோசனைகள் கூறி விவாதத்தை நடத்தலாம்.

**திருமதி. கே. பி. ஜானகியம்மாள் :** தனியார் சினிமாக் கொட்ட கைகள் அதிகமாக நகரப் பஞ்சாயத்துகளில்தான் நடந்து வருகின் றன. அங்கு இம்மாதிரி போலி டிக்கட்டுகள் போடுவதும் ஒரே டிக்கட்டை இரண்டு ஆட்டங்களுக்குப் பயன்படுத்துவதும் நடந்து வருகிறது. இதைக் கண்காணிக்க அதிகாரிகள் சென்றால் அவர்கள் சினிமாக் கொட்டகை முதலாளிகள் செல்வாக்கிற்கு உட்பட்டு அதைப் பற்றி சரியாக விசாரிக்காமல் வந்து விடுகிறார்கள். இதைத் தடுக்க கண்டிப்பான நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ?





**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அதற்காகத்தான் இன்று இந்தக் காரியங்கள் எல்லாம் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. கடுமையான தண்டனை இத்துறையினர் தீவிரப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். பலவேறு வகையான அளிக்கப்படும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. நடவடிக்கைகளைச் செய்துவருகிறார்கள். ஒன்று, போலிக் கணக்குகளை வைக்கிறார்கள். இன்னொன்று, பணம் வாங்கிக்கொண்டு டிக்கட் கொடுக்காமல் உள்ளே அனுமதித்துவிடுகிறார்கள். சிலவேளைகளில் கள்ள நோட் அடிப்பதுபோல், கள்ள முத்திரை போட்டு டிக்கட்டுகளைக் கொடுத்து அனுப்புகிறார்கள். சில வேளைகளில் முத்திரை இல்லாமலேயே அனுப்பி விடுகிறார்கள். சிலவேளைகளில் ஏற்கனவே விற்ற டிக்கட்டுகளைக் கொடுத்து அனுப்புகிறார்கள். டிக்கட்டுகளைக் கிழிக்காமலேயே உள்ளே விட்டு விடுகிறார்கள். கிழித்ததை, கேட்டில் ஒரு பையனை வைத்து, மற்றவர்களுக்கு, கொடுக்கிறார்கள். சினிமாக் கலை அற்புதங்களைவிட மிகப் பெரிய அற்புதமாக— நுண்ணிய ஃபைன் ஆர்ட் போல் இதை ஆக்கி விட்டிருக்கிறார்கள். அந்தக் கலைக்கும் நிர்வாக இயந்திரத்திற்கும் இடையே இடையறாத போராட்டம் நடைபெற்றுவருகிறது. உங்கள் எல்லோருடையவும் ஒத்துழைப்பால் இந்தப் போராட்டத்தில் நம் பக்கம் வெற்றி கிடைக்கும் என்ற நம்பிக்கை அரசுக்கு இருக்கிறது.

**திரு. கொளத்தூர் கோதண்டம் :** மாண்புமிகு அமைச்சர் அவர்களு டைய பதிலில், செங்கற்பட்டு மாவட்டத்தில் நுழைவுச் சீட்டுகளில் முத்திரையிடுவதற்காக தனி மையும், உலோக மையொற்றியும் பயன்படுத்தப்படுவதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்தத் திட்டத்தை உடனடியாக மற்ற மாவட்டங்களிலும் செயல்படுத்த முன் வரு வார்களா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அந்த விஷயம் சர்க்காரு டைய ஆராய்ச்சியில் இருக்கிறது.

**திரு. ஆ. கருப்பையா :** சினிமா கொட்டகைக்காரர்கள் செய்கின்ற வரி ஏய்ப்பை விட, சினிமா நடிகர்கள் அதிக அளவுக்கு வரி ஏய்ப்பு செய்கிறார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இது மொரார்ஜி தேசாய் கவனிக்க வேண்டிய விவகாரம், கவனித்துக் கொண்டு வருகிற விவகாரம்.

**திரு. ரா. ரா. முனுசாமி :** திரைப்படக் கொட்டகைகளில் போலி டிக்கட்டுகளை விற்கக்கூடிய திரைப்பட முதலாளிகளுக்கு நிரந்தரமாக லைசென்ஸ் வழங்காமல் நிறுத்தப்படுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இப்போதுள்ள விதிப்படி இரண்டு ஆண்டுகள் உரிமங்கள் வழங்கக்கூடாது என்ற முறையில் சஸ்பெண்ட் பண்ண அதிகாரம் இருக்கிறது. இந்தக் காரியங்களிலே வெற்றி கிடைக்கவில்லையென்றால் மேலும் கடுமையான தண்டனைகள் வழங்குவதற்கு விதிகளை உருவாக்குவதற்கு இந்த மன்றத்திற்கு அதிகாரம் இருக்கிறது.

**திரு. வை. சுவாமிநாதன் :** பொன்மலை ரயில்வே காலனியிலுள்ள சினிமாக் கொட்டகையிலிருந்து ஷோ டாக்ஸோ, என்டர்டெயின் மென்ட் டாக்ஸோ பஞ்சாயத்துக்கும், பஞ்சாயத்து யூனியனுக்கும் கொடுக்கப்படாமல் இருக்கிறது. இது பற்றி அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இது பற்றி விவரம் இல்லை.

**திரு. ஏ. எம். ராஜா :** தமிழகத்தில் கேளிக்கை வரி மூலம் கிடைத்த வருமானம் 1966–67ல் எவ்வளவு ? 1967–68ல் எவ்வளவு ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மூலக் கேள்விக்குச் சம்பந்தம் இல்லாததால் இந்த விவரங்களைக் கொடுக்க இயலவில்லை.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** கனம் அமைச்சர் அவர்கள் இதற்கு அங்கத்தினர்கள், பொதுமக்கள் ஒத்துழைப்பைக் கேட்டார்கள். தாராளமாகக் கொடுக்கிறோம். சேலத்திலும், பொள்ளாச்சியிலும் அதிகாரிகள் சோதனை செய்து பொய் முத்திரை பயன்படுத்தப்பட்டிருப்பதைக் கண்டு பிடித்து வழக்குத் தொடரப்பட்டு அது நிரூபிக்கப்பட்டு கீழ்க்கோர்ட்டில் ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது. மேல் கோர்ட்டில், போதுமான அளவுக்கு வாதம் செய்வதற்கு அவகாசம் தரப்படவில்லை என்று கூறி வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.- இந்த லட்சணத்தில் இருக்கும்போது யார் ஒத்துழைப்புக் கொடுத்தும் பயன் இல்லை. ஆகவே, சினிமா கொட்டகைகளை உடனடியாகத் தேசிய மயமாக்க உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** ஒரு வழக்கின் தீர்ப்பை அடிப்படையாக வைத்துக்கொண்டு கொள்கையை நிர்ணயிப்பது சரியானது அல்ல. இவற்றைத் தேசிய மயமாக்க வேண்டுமென்ற கொள்கைக்கு இந்த அரசு விரோதமானது அல்ல. மேலும் பல முக்கியமான துறைகளில் காரியங்கள் செய்ய வேண்டிய காரணத்தால் இதையும் இப்போதே ஏற்றுக் கொள்வதா என்பதுதான் அரசாங்கத்தின் கவலை. இதைத் தடுப்பதற்கு இப்போதே கடுமையான விதிகள் இருக்கின்றன. சினிமாக் கொட்டகைக்காரர்களுக்கு மட்டுமல்ல. சினிமாக் கொட்டகைக்குள்ளே ஒருவர் டிக்கட் இல்லாமல் உட்கார்ந்து கொண்டிருந்தால், கௌண்டர்ஃபாயில் இல்லாமல் இருந்தால் அவர்கள் மீதும் வழக்குத்தொடர்ந்து 500 ரூபாய் வரை அபராதம் விதிக்கக்கூடிய நிலையும் இருக்கிறது. இதைப் பற்றி பொதுமக்களுக்கு விவரங்கள் தெரிவிக்கப்படுகின்றன.

**திரு. ஆர். நாகசுந்தரம் :** ஒரு சினிமாக் கொட்டகைக்கும் இன்னொரு சினிமாக் கொட்டகைக்கும் இடையே ஒரு மைல் தூரம் இருக்க வேண்டுமென்று சட்டம் உள்ளது. அதிகமான கொட்டகைகள் இருந்தால் அதிகமானப் படங்கள் வெளியிடப்பட்டு அதிகமான வரியும் வரும். இப்போது சினிமா பார்க்க பொதுமக்கள் வெளியூர்களுக்குச் செல்ல வேண்டி யிருக்கிறது. ஆகவே, ஒரு மைல் தூரத்திற்குள் ஒரு சினிமா கொட்டகைதான் இருக்க வேண்டுமென்ற விதியை இந்த அரசு ரத்து செய்யுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இது ஆராய்ச்சிக்குரிய விஷயம்.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** கீற்றுக் கொட்டகைகளில் இருந்து வரி மூலம் நிறைய வருமானம் வருகிறது. அதிலே எவ்வளவு பஞ்சாயத்துக்கும் பஞ்சாயத்து யூனியனுக்கும் தரப்படுகிறது? இவ்வளவு அதிகமாக வரி மூலம் கொடுக்கிற அவர்களுக்குச் சலுகை கொடுக்கக் கூடிய வகையில் சில படங்களுக்கு, அவ்வையார் போன்ற படங்களைத் திரையிடும்போது வரியிலே சலுகைகொடுக்க முன் வருவார்களா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** கனம் உறுப்பினர் அவர்கள் இரண்டு கேள்விகளைக் குழப்புகிறார்கள். முதல் கேள்வி வருகின்ற வருமானத்திலே எவ்வளவு பஞ்சாயத்துக்கும் பஞ்சாயத்து யூனியனுக்கும் தரப்படுகிறது என்பது. அதிலே, வசூல் செய்வதற்கான செலவு போக மீதி இருப்பது பூராவும் 90 சதவிகிதத்திற்கு



மேல் அந்தந்த முனிசிபாலிடிகளுக்கும், ஊராட்சி மன்றங்களுக்குத் தான் தரப்படுகிறது. ஆகவேதான் அந்தந்த ஊரில் இருப்பவர்கள் போலி டிக்கட்டுகள் விற்கப்படாமல் தடுக்கப்படுவதிலே பொறுப் பேற்றுக் கொள்ள வேண்டுமென்று நான் சொன்னேன். அதிலிருந்து கிடைக்கும் வருவாய் அந்தந்த ஊர்களுக்குத்தான் தரப்படுகிறது.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நல்ல படங்கள் வரும்போது அதிகமான பேர் பார்ப்பதன் காரணமாக அரசாங்கத்திற்கு வரவேண்டிய வருவாய் அதிகமாக வரும். ஆகவே, நல்ல படங்கள் வரும்போது வரி வசூல் செய்யக்கூடாது என்று உறுப்பினர் அவர்கள் சொல்வார்களேயானால் அதனால் அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏற்பட்டுவிடும் என்பதை உணர வேண்டும்.

**திரு. அ. லெ. சுப்பிரமணியம் :** வரி ஏய்ப்பு பற்றிப் பல பேர் புகார் சொன்னார்கள். நகரசபைகள் ஷோ டாக்ஸ் மூலம் வருமானத்தை ஏற்படுத்திக் கொள்ளலாம் என்று விதி இருக்கிறது சில நகரசபைகள் தானாகவே திரைப்பட அரங்குகளை ஏற்று நடத்த முன் வருமானால் அதற்கு அனுமதி கொடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அதனைக் கொள்கையளவில் அரசாங்கம் ஒத்துக் கொண்டிருக்கிறது. எந்த வகையில் எந்த மட்டத்தில் நடைமுறைக்குக் கொண்டு வருவது என்பதுதான் தீர்மானிக்கப்பட வேண்டிய முடிவெடுக்கப்பட வேண்டிய விவகாரம்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** வணிக வரித் துறை அதிகாரிகள் வருவாய்த்துறை அதிகாரிகள், போலீஸ்துறை அதிகாரிகள் உள்ளாட்சித் துறை அதிகாரிகள் ஆகியோருக்கு வேறு வேலைகள் அதிகமாக இருப்பதால் இதற்காகத் தனி அதிகாரிகள் நியமிக்கப் படுவார்களா ? இவ்வாறு வரி ஏய்ப்பு செய்பவர்களின் பெயர்களைப் பத்திரிகைகளில் வெளியிட முன் வருவார்களா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** உறுப்பினர் அவர்கள் சொன்னது போல் நேரடியாகவே அந்த அதிகாரிகள் சென்று சோதனை செய்கிறார்கள் என்பது அல்ல. அதற்கு ஒரு அட்டவணை இருக்கிறது. வணிகத் துறையில் அசிஸ்டன்ட் கமர்ஷியல் டாக்ஸ் ஆபீசருக்குக் குறையாத பதவி வகிப்பவர்கள் சோதனை செய்யலாம். போலீஸ் துறையில் இருப்பவர்களில் ஹெட் கான்ஸ்டபிள் பதவிக்குக் குறையாத நிலையில் இருப்பவர்கள் சோதனை செய்யலாம். ரெவின்யூ இலாகாவிலே ரெவின்யூ இன்ஸ்பெக்டரிலிருந்து எந்த நேரத்தில் வேண்டுமென்றாலும் சென்று தவறு நடக்கிறதா என்று சோதனை செய்யலாம். முனிசிபாலிடிகளில் உள்ள ரெவின்யூ ஆபீசர், அசிஸ்டன்ட் ரெவின்யூ ஆபீசர், வட்டாரத்தில் உள்ள கமிஷனர் ஆப் முனிசிபாலிடி, பஞ்சாயத்து யூனியன் கமிஷனர், எக்சிக்யூடிவ் ஆபீசர், ஆப் டவுன்ஷிப் ஆகியோரும் இந்த மாதிரியான சோதனைகளை நடத்தலாம்.

**திரு. நா. காசிராமன் :** நகரசபைகள் சினிமாக்கொட்டகைகள் நடத்துவதற்கு கொள்கை அளவில் இந்த அரசாங்கம் ஒப்பு கொண்டிருக்கிறது. கும்பகோணம் நகர சபை ஒரு சினிமாக் கொட்டகை நடத்த விண்ணப்பித்திருக்கிறது. அதற்கு அனுமதி அளிக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தனிக் கேள்வி வேண்டும்.

Dr. H. V. HANDE : Sir, this is an important source of revenue next to Sales Tax. In view of this and in view of the regulation made that commercial tax officers and other officers can ask for the counterfoil of the tickets which many of us do not know, will the

Minister give wide publicity to the fact that whoever does not hold the counterfoil is liable for prosecution ? If this is given wide publicity, I think seventy-five per cent of the abuse can be controlled. Wil the Minister come forward to give wide publicity ? Some slides also could be exhibited.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** உறுப்பினர் அவர்கள் கூறியுள்ள மேலான யோசனையின் அடிப்படையில் வருமான வாரியத்திற்கு தாக்கீது அனுப்பப்பட்டிருக்கிறது. இந்தமாதிரி ஸ்லேடுகள், விளம்பரங்கள் மூலம் பொதுமக்களுக்குப் பெருமளவில் தெரியும்படிச் செய்ய வேண்டுமென்று கேட்கப்பட்டிருக்கிறது. இப்போதுகூட இம்மன்ற நடவடிக்கைகளுக்கு பத்திரிகைகள் கூட பெருமளவிற்கு இதைப் பிரதானப்படுத்திச் செய்வதன் மூலம் அவர்களும் கூட இதற்கு உதவி புரியலாம்.

**திரு. கே. விநயகம் :** கேளிக்கை வரியை ஏமாற்றுகிறார்கள் என்று சொல்லி இவர்கள் எல்லாம் சென்று தணிக்கை செய்யலாம் என்று உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. அதையும் விட, நமது அமைச்சரவையில் யாராவது ஒரு அமைச்சர் எந்தக் கொட்டகைக்காவது போய்ப் பார்த்து ஏதாவது கண்டுபிடித்தார்களா ? அன்று சோதனை போட்டதன் விளைவாக எவ்வளவு வருமானம் வந்தது ?

**மாண்புமிகு திரு மா. முத்துசாமி :** சுற்றுப்பயணம் மேற்கொண்ட நேரத்தில் திரைப்படங்கள் சிலவற்றை எதிர்பாராத வகையில் பார்வையிட நேர்ந்தது. அப்படிப் பார்வையிட்டதில் பெரும்பாலான கொட்டகை முதலாளிகள் எந்தவிதமான தவறுக்கும் இடம் கொடுக்காத வகையில் நடந்து கொண்டிருக்கிறார்கள். சுத்தமற்ற தன்மை போன்ற சில குறைகள் தவிர வேறு குறைகள் இல்லை. ஒரே ஒரு கொட்டகையில் மட்டும் ஐந்து பேர்களை டிக்கட் இல்லாமல் விட்டிருந்தார்கள். அதுவும் அவர்கள் திரைப்பட உரிமையாளரின் உறவினர்கள் என்ற சமாதானம் சொல்லப்பட்டது. அதன் மீது அதிகாரிகள் நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அமைச்சர்கள் சென்று பார்ப்பதில் நல்ல பலன் ஏற்படாது என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களின் அனுபவத்திலிருந்து தெரிகிறது. விரிவான, ரகசியமான முறையில் வலை போட்டுப் பிடிக்கவேண்டும்.

**திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் :** போலி டிக்கட்டுகள் விற்பதன் மூலம் சர்க்காருக்குக் கிடைக்க வேண்டிய வரியை ஏமாற்றுகிறவர்கள் அப்படி ஏமாற்றுகிற சினிமாக் கொட்டகை அதிபர்கள் இவர்களில் எவ்வளவு பேர்களின் மீது அதைக் கண்காணிக்கிற பொறுப்புள்ள அதிகாரிகளால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு தண்டனை கொடுக்கப் பட்டது ? அதிகமான தண்டனை கொடுப்பதன் மூலம் இம்மாதிரி போலி டிக்கட்டுகள் விற்பனை செய்யமுடியாதபடி தடுக்க அதிகமான தண்டனை கொடுக்க இந்த சர்க்கார் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** 1964-ல் என்று கருதுகிறேன். கடுமையான தண்டனை கொடுக்கவேண்டும் என்று— அப்போது நாங்கள் எதிர்தரப்பில் உட்கார்ந்திருந்தோம். எங்கள் நிலை அப்போது அப்படி— அது பற்றிய சட்டம் பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்பப்பட்டு அப்போதிருந்த அரசாங்கத்தினால் அந்த தண்டனையை குறைப்பதற்கும் சில விதிகளை தளர்த்துவதற்கும் வழிவகை செய்யப் பட்டது. இப்போது நல்லதொரு விழிப்புணர்ச்சி ஏற்பட்டு, நமது அனுபவத்தின் பேரிலும் எவ்வளவு பெரிய தண்டனை கொடுக்கவும் இந்த மன்றத்திற்கு உரிமையிருக்கிறது. அதைப்பற்றி யோசிக்கலாம்.



கடன் முறையில் டிராக்டர்கள்.

*165 வின.—திரு. கரு. சீமைச்சாமி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவிற்கு விடையளிப்பாரா—

கடந்த ஆண்டில் கடன் முறையில் எத்தனை டிராக்டர்கள் விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டன, மாவட்டவாரியாக ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** சபையின் முன்பு ஓர் அறிக்கை a வைக்கப்பட்டுள்ளது.

**திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் :** அரசாங்கம் குடியானவர்களுக்கு இந்த ட்ராக்டர்கள் வழங்க பெரிய அக்கரை எடுத்துக் கொண்டிருக்கிறது. ஆனால் வழங்கிய ட்ராக்டர்களுக்கு டயர்கள் இல்லாமல் இப்போது அந்த ட்ராக்டர்கள் நின்றுகொண்டிருக்கின்றன. குறிப்பாக எட்டு மாத காலமாக எனக்கு ட்ராக்டருக்கு டயரே கிடைக்கவில்லை. அப்படி கிடைக்க வழிவகை செய்யப்படுமா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உறுப்பினர்கள் தங்கள் சொந்த குறைகளைச் சொல்லக்கூடாது என்று விதியிருக்கிறது. விதி 31 (8)-ன்படி வின நேரத்தில் அப்படிக் குறிப்பிடக் கூடாது.

**திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் :** உதாரணத்திற்காகத் தான் சொன்னேன். பொதுவாக யாருக்கும் கிடைக்கவில்லை என்றுதான் சொல்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** தனிக் கேள்வி போட்டால் விவரங்கள் சேகரித்துத் தரப்படும்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** உணவு உற்பத்தியை அதிகமாகப் பெருக்கவேண்டுமென்பது இந்த அரசாங்கத்தின் பிரதான குறிக்கோளாக இருக்கிறது. அப்படியிருக்கும்போது, இந்த அறிக்கையைப் பார்க்கும்போது செங்கல்பட்டு மாவட்டத்திற்கு மட்டும் 45 ட்ராக்டர்கள் அதிகப்படியாக உணவு உற்பத்தியைப் பெருக்கக் வழங்கப்பட்டுள்ளன. கூடிய மாவட்டங்கள் நாலைந்து உள்ளன. செங்கல்பட்டு மாவட்டத்தை விடக் குறைவாக மற்ற மாவட்டங்களுக்குக் கொடுக்கப்பட்ட காரணம் என்ன ? பல பேர்கள் மனுக்கள் போட்டுப் கொடுக்கப் படாமல் இருக்கின்றன.

**

**

ஆகவே மற்ற மாவட்டங்களுக்கும் அதிகப்படியாகக் கொடுக்க ஏற்பாடு செய்ய உத்தேசமுண்டா ?

**THIRU K. VINAYAKAM :** On a point of order, Sir, The rules are very clear that while putting questions no member should cast aspersions on the previous Government or the Members of this House. That is not to the good taste of the debate in question time. I want to know whether our Friend's question is in order and, if it is not please delete that portion of the question which is irrelevant.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** குற்றச்சாட்டுக்களை நீக்கிவிட்டு வினவை மட்டும் கேட்கலாம்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** குற்றச்சாட்டாக நான் அதைச் சொல்லவில்லை. அதைக் குற்றச்சாட்டு என்று சொல்வதாயிருந்தால் அதை நான் ஏற்றுக்கொள்ளத் தயார். அதைப் பற்றி விசாரணை செய்ய ஒரு கமிட்டி அமைக்கத் தயாரா ? அதை நான் ஏற்றுக் கொள்ளத் தயார்.

---

a 98-ம் பக்கத்தில் இரண்டாவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.
** பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க நீக்கப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வி நேரத்தில் சவால்விடவும் முடியாது.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சவால் விடவில்லை. உண்மையை எடுத்துச்சொல்லும்போது அதைக் குற்றச்சாட்டு என்று சொன்னால் அதைத் திரித்துச் சொல்லக்கூடிய அளவிற்கு அது வருகிறது என்பதால்தான் சொல்கிறேன். என் அங்கு மட்டும் அதிகமாகக் கொடுக்கப்பட்டது ? மற்ற மாவட்டங்களில் இருந்து நூற்றுக்கணக்கான மனுக்கள் போட்டும் கூட அங்கு அப்படிக் கொடுக்காததற்குக் காரணம் என்ன ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** ஒரு விளக்கம் பெற விரும்புகிறேன்.

THIRU K. VINAYAKAM : I have raised a point of order and I expect the Chair to give a ruling.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** ஒரு விளக்கம் பெற விரும்புகிறேன்.

THIRU K. VINAYAKAM : A ruling has been given. Is t.he Minister in order in questioning your ru ing ?

THE HON THIRU. K. A. MATHIALAGAN : I bow to your ruling ; I do not question it. I want a clarification.

முற்பகல் 10-00

THIRU K. VINAYAKAM : No clarification, no explanation nothing can be discussed after the Speaker has given a ruling over anything.

**மாண்புமிகு திரு. கே.ஏ. மதியழகன்:** நான் முடித்துவிட்டபிறகு அவர்கள் கூறலாம். சபாநாயகரவர்கள் ஆட்சேபனை செய்தால் நான் உட்கார்ந்து கொள்கிறேன். இந்த மன்றத்தின் மரபுகளையும், சபாநாயகரவர்களின் பெருமையையும் காப்பாற்றவேண்டுமென்பதில் எங்களுக்கு நிறைய நம்பிக்கையிருக்கிறது. கனம் கோதண்டராமன் அவர்கள் முன்னாலேயிருந்த முதலமைச்சர் அந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்று சொன்னார்கள். அவர் நிர்வாகத் துறையை "காண்டாக்ட்" செய்து கேட்டார். அவ்வாறு கேட்பதற்கு கனம் உறுப்பினருக்கு மட்டுமல்ல, எல்லா உறுப்பினர்களுக்கும் உரிமை உண்டு என்று கருதுகிறேன். தனிப்பட்ட முறையில் யாரையும் சொல்லக்கூடாது என்பதுதானே தவிர, நிர்வாகப் பொறுப்பைப் பற்றிக் கூறும்பொழுது இந்த முதல் அமைச்சர், இந்த விவசாய அமைச்சர் என்று சொல்வதற்கு மன்றத்திற்கு உரிமையிருக்கிறது என்றுதான் கருதுகிறேன். இது ஒருநாளும் "அஸ்பர்ஷன்" ஆகாது. இதற்கும் தீர்ப்பு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவர்கள் கேட்ட வினா செங்கல்பட்டு மாவட்டத்தைத் தவிர மற்ற மாவட்டங்களுக்கு என் குறைவாக இருக்கிறது என்பது. அவர்கள் கேட்ட அந்த வினாவிற்கு அருள்கூர்ந்து பதில் சொல்லும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** இந்தக் கேள்வி 1966–67-ஆம் ஆண்டைப்பொறுத்த கேள்வி. அப்பொழுது இந்தப் புதிய அரசு பொறுப்பில் இல்லாத நேரம். எந்த அடிப்படையில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒதுக்கினார்கள் என்று விசாரித்த நேரத்தில் நான் அறிந்த அளவிலே, விண்ணப்பங்கள் கூடுதலாக வந்த இடத்திற்கும், தேவையை ஆராய்ந்தும் முடிவெடுக்கப்பட்டதாகத் தெரிகிறது. செங்கல்பட்டு மாவட்டத்திற்கு அதிக சலுகையும், அடுத்து கோயம்புத்தூர் மாவட்டத்திற்கு இரண்டாவது சலுகையும் கொடுக்கப்பட்டிருக்கிறது என்றால் அதற்கு பதில் நான் சொல்லித்தான் அங்கத்தினர் தெரிந்துகொள்ள வேண்மென்பதில்லை. அதற்கு நாங்கள் பொறுப்பு அல்ல.



**திரு. கே. சகாதேவ கவுண்டர் :** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே வடார்க்காடு மாவட்டத்திலிருந்து ட்ராக்டர்கள் வேண்டுமென்று வந்த மனுக்களின் எண்ணிக்கை யாவை ? அதில் கொடுத்ததுபோக மீதியுள்ள மனுக்களின் எண்ணிக்கை யாவை ? இந்த மனுக்களுக்கு 1968–69-ஆம் ஆண்டுக்குள் கொடுக்க அரசாங்கம் ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** 1966–67-ம் ஆண்டில் எவ்வளவு பேருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று விவரம் இருக்கிறது. எவ்வளவு மனுக்கள் வந்தது என்ற விவரம் இல்லை. 1968–69-ஆம் ஆண்டுக்கு ட்ராக்டர்கள் ஒதுக்க இன்னும் சில தினங்களில் உத்தரவு பிறப்பிக்க இருக்கிறது.

**திரு. ந. தர்மலிங்கம் :** பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாட்டில் மிக அதிகமாக விளைச்சல் ஆகக்கூடிய எங்கள் மாவட்டமான தஞ்சை மாவட்டத்திற்குக் குறைவான அளவில் 35 ட்ராக்டர்களை வழங்கியிருக்கக் காரணத்தைச் சொல்ல முடியுமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** கனம் கோதண்டராமன் அவர்களுடைய கேள்விக்குக் கூறிய பதிலை அங்கத்தினர் அவர்கள் கவனித்து இருந்தால் இந்தக் கேள்விக்கு இடமிராது. ஏற்கெனவே வந்த விண்ணப்பங்களின் அடிப்படையில் அந்த மாவட்டத்தின் தேவையின் அடிப்படையில் கொடுத்ததாக எனக்குத் தகவல்கள் கிடைத்திருக்கின்றன. சென்ற 1966–67-இல் நாம் பொறுப்பில் இல்லாத நேரம். அப்பொழுது ஒதுக்கீடு செய்ததற்கான பொறுப்பை நான் ஏற்று விடை அளிக்க முடியாது. இருக்கின்ற விவரத்தைத்தான் கூற முடியும்.

DR. H. V. HANDE : Sir, from the paper laid on he table of the House, it is obvious that there is some disparity between district to district and that, no one can dispute. I do not know on what basis this was given by the previcus Government and this we cannot discuss in this House because we do not know the details. . . .

MR. SPEAKER : I would tell the Hon. Member that the can discuss it in this House, but at the proper time. That is all.

DR. H. V. HANDE : Now, I want to know from this Government whether there has been any re-thinking and re-planning with regard to the distribution of these tractors on a more equitable basis and whether special consideration would be given to those agriculturists who really want and deserve these tractors because of the large areas of field that they are going to bring under cultivation. Also, I want to know, on what basis the tractors are going to be given hereafter ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** ட்ராக்டர்கள் வழங்குவதில் ஒரு சில பணம் படைத்தவர்களுக்கும், விவரம் தெரிந்தவர்களுக்கும் மட்டும் ட்ராக்டர்கள் வாங்கிக்கொண்டிருக்கக்கூடிய நிலையிருக்கிறது. சில மாவட்டத்திற்குத் கூடுதலாகவும், சில மாவட்டத்திற்குக் குறைவாகவும் இருப்பதனால், அதை அறிந்து புதிதாக மாற்றத்தை அறிவித்து பத்திரிகைகளிலே அறிவித்து இருக்கிறோம். புதிதாக ட்ராக்டர்களுக்கு விண்ணப்பிப்பவர்கள் விண்ணப்பிக்கலாம். ஐந்து ஏக்கர் நஞ்சை அல்லது 10 ஏக்கர் புஞ்சை உடையவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள். 37,500 ரூபாய்க்கு "செக்யூரிட்டி" கட்டக்கூடியவர்களும், "ஷூரிட்டி" காட்டக் கூடியவர்களும் விண்ணப்பிக்கலாம். கூடுதலாக நிலமுள்ளவர்களுக்கும், "மிடில் கிளாஸில்" உள்ளவர்களுக்கும் உதவி செய்யும் அளவில் ஐந்து ஏக்கர் நஞ்சை அல்லது 10 ஏக்கர் புஞ்சை உள்ளவர்களும் விண்ணப்பிக்க உரிமையிருக்கிறது. அந்த அடிப்படையிலே இப்பொழுது

பொறுப்பேற்றிருக்கும் புதிய அரசு ட்ராக்டர்களை வழங்கவிருக்கிறது. ஆனால் கடந்த சில ஆண்டுகளாக, ட்ராக்டர்கள் வழங்க உத்தரவு போட்டு அந்த ட்ராக்டர்கள் வழங்கப்படாத நிலையிலிருக்கிறது. ஆதலால், புதிய அரசு ஏற்கெனவே இருந்த அரசாங்கம் போட்டுவிட்டுப்போன உத்தரவுகளுக்கும் வழங்க வேண்டிய நிலையிருக்கிறது. இந்த ஆண்டு நாம் 260 டிராக்டர்கள் வழங்க இருக்கிறோம். அதில் 168 ட்ராக்டர்கள் சென்ற அரசு போட்ட உத்தரவுகளுக்குக் கொடுத்தது போக 92 ட்ராக்டர்கள் தான் புதிதாக நாம் வழங்கவிருக்கிறோம். அதில் அதிக நிலமுள்ளவர்களுக்கும் வாய்ப்பிருக்கும், மத்திய நிலையிலுள்ளவர்களுக்கும் வாய்ப்பிருக்கும். இன்னும் சொந்தத்திலே ட்ராக்டர்கள் வாங்க முடியாதவர்கள் "ஷூரிட்டி" காட்டி வாங்கக்கூடிய வாய்ப்பையும் உருவாக்கியிருக்கிறோம்.

**திரு. டி. ஏ. ராஜவேலு :** தலைவரவர்களே, சேலம் மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டம். அப்படியிருந்தும் கடந்த ஆண்டில் சேலம் மாவட்டத்திற்கு 5 ட்ராக்டர்களும், தர்மபுரி மாவட்டத்திற்கு 1 ட்ராக்டரும் கொடுத்திருக்கிறார்கள். சேலம், தர்மபுரி இந்த மாவட்டங்களில் அமைச்சர்கள் இல்லாத காரணத்தால் தான் இந்த மாதிரி கொடுக்கப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** ஒரு வேளை விண்ணப்பங்கள் குறைவாக இருந்திருக்கலாம். அல்லது ட்ராக்டர்கள் வாங்கவேண்டுமென்று சொல்லக்கூடியவர்கள் முன்கூட்டியே காலாகாலத்தில் விண்ணப்பம் போட்டு, அந்த விண்ணத்தைத் தொடர்ந்து பின்சென்று பார்க்க முடியாத நிலையிலே இருந்திருக்கலாம். அதனால் அங்கு குறைந்த பலன் கிடைத்திருக்கலாம். அதற்கு நான் பொறுப்பல்ல.

**திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் :** தலைவரவர்களே, ட்ராக்டர்கள் கொடுப்பது முந்திய காலத்தில் "அக்ரிகல்சர் டிபார்ட்மெண்டின்" பொறுப்பில் இருந்தது. இப்பொழுது அது ரெவின்யூ இலாக்காவிலும் சேர்ந்திருக்கிறது. அதனால் மிகுந்த காலதாமதம் ஏற்படுகிறது. விவசாயம் சம்பந்தமாக விவசாய இலாகாவில் மட்டுமல்லாமல் வேறு இலாகாவில் சேரும்பொழுது அதனால் மிகுந்த கஷ்டம் ஏற்படுகிறது என்பது சர்க்காருக்குத் தெரியுமா ? எனவே பழைய முறையையே அமலுக்குக் கொண்டுவர வழி வகை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** கலெக்டர் இதுபற்றிப் பரிசீலனை செய்யவேண்டுமென்று சொல்வதன் காரணம், நில நுட்ப அளவைக் கொடுக்கவும், "செக்யூரிட்டிக்கு" "ஷூரிட்டி" கொடுக்கும்பொழுது பரிசீலனை செய்து செம்மையாகக் கொடுக்கவும் ரெவின்யூ இலாக்காவால் முடியுமென்பதால்தான். அவர்கள் செக்யூரிட்டிக் கொடுத்திருக்கக்கூடிய "ஷூரிட்டி"கள் சரியானதுதானா என்பதைப் பரிசீலனை செய்த பிறகு அவர்கள் கொடுத்திருக்கும் நிலம் சொந்த நிலமா அல்லது கூட்டுப் பட்டாவா என்று பரிசீலித்துப் பார்க்க வேண்டிய காரணத்தால்தான் ரெவின்யூ இலாக்கா சேர்க்கப்பட்டிருக்கிறதே தவிர வேறு எந்தவிதமான தொந்தரவும் அதனால் வராது, பாதுகாப்புத்தான் ஏற்படும்.

**திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் :** பாயிண்ட் ஆப் கிளாரிபிகேஷன் சார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நேரம் ஒரு மணி நேரத்திற்கு மேலும் ஆகிவிட்டது. கேள்வி நேரத்தில் "கிளாரிபிகேஷன்" கேட்க முடியாது.

**திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் :** ஒரு உப கேள்வி சார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இன்னொரு கேள்வி கேட்க வேண்டுமென்றால், நான் அழைக்கும்போது கேட்கலாம்.





**திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் :** தலைவரவர்களே, இந்த ட்ராக்டர்கள் வழங்கும் முறையில் வாங்க முடியாத நிலையிலுள்ளவர்களுக்கு வழங்கப்படுகிறதா ? நேரடியாக விவசாயம் செய்பவர்களுக்கு வழங்கப்படுகிறதா என்பதை மட்டும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** நேரிடையாக விவசாயம் செய்கின்றவர்களுக்குத்தான் வழங்கப்படுகிறது. கனம் அங்கத்தினரின் கேள்வி வசதியானவர்களுக்கு மட்டும் தான் வழங்கப்படுகிறதா என்ற அடிப்படையை வைத்துக்கொண்டு கேட்கப்பட்டிருக்கிறது என்று கருதுகிறேன். சொந்தத்திலே நிலமுள்ளவர்களுக்கும், கூடுதலாக நிலமுள்ளவர்களுக்கும் ட்ராக்டர்கள் தேவை. சிலர் சொந்தத்தில் வாங்கமுடியாத சூழ்நிலை இருக்கிறது. சொந்தப் பொறுப்பிலே வாங்க முடியாதவர்கள் அரசாங்கத்தினிடமிருந்து கடனைப் பெற்று 10 தவணைகளில் இந்தக் கடனைத் திருப்பித் தருவதன் மூலமாக அவர்களும் ஆதாயம் அடையும்படியான பயன் ஏற்படுகிறது. மேலும் அதைப் பக்கத்திலுள்ள நிலங்களுக்கும் வாடகைக்கு விடும் நிலையில் உபயோகிப்பதற்கு லாயக்காக இருக்கிறது. இந்த அடிப்படையில் இரு சாராருக்கும், அதிகமான நிலமுள்ளவர்களுக்கும் குறைந்த நிலமுள்ளவர்களுக்கும் உபயோகப்படும் வகையில் வழங்கப்படுகிறது.

**திரு. செ. பாலசுப்பிரமணியம் :** சார், அமைச்சர் அவர்களுடைய பதிலிலே சிறு நில விவசாயிகளுக்கும் 5 ஏக்கர் நஞ்சை, 10 ஏக்கர் புஞ்சை இருப்பவர்களுக்கும் ட்ராக்டர் கொடுக்கலாம் என்று சொன்னார்கள். ஆனால் இப்பொழுது கொடுக்கப்படுகிற 40 ஹார்ஸ் பவர், 30 ஹார்ஸ் பவர் ட்ராக்டர்கள் சிறு நில விவசாயிகளால் வாங்கிப் பயன்படுத்த முடியவில்லை. ஆகவே, 10 ஹார்ஸ் பவர், 15 ஹார்ஸ் பவர் உள்ள ட்ராக்டர்கள் வாங்கிக் கொடுப்பதற்கு அரசாங்கம் முன் வருமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** இப்பொழுதுதான் கனம் அங்கத்தினர் பாலகிருஷ்ணன் அவர்களுடைய கேள்விக்குப் பதில் சொன்னேன். சொந்த நிலத்திற்காக வைத்துக்கொண்டு, அவர்கள் நிலத்திற்குப் பயன்படாத நேரத்தில், அடுத்த நிலக்காரருக்கும் ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் நிலம் உள்ளவர்களுக்கும் பயன்படக்கூடிய வகையில் வாடகைக்குக் கொடுக்கிற நிலை இப்பொழுது இருக்கிறது. அல்லது அதிகமாக நிலம் உள்ளவர்கள், அவர்கள் ட்ராக்டர் வாங்காத நிலையிலேயே மற்றவர்களிடமிருந்து வாடகைக்கு வாங்குகிற அந்த முறையும் இருக்கிறது. கனம் அங்கத்தினர் பாலகிருஷ்ணன அவர்கள் சொன்ன மலிவான விலையில் ட்ராக்டர்கள் வாங்கிக் கொடுக்கின்ற அதே யோசனையைத் தான் கனம் அங்கத்தினர் பாலசுப்பிரமணியம் அவர்களும் சொல்லுகிறார்கள். இப்பொழுது அரசாங்கம் ட்ராக்டர்கள் வாங்குவதற்கு ரூ. 25,000-க்குக் குறையாமல் கடன் கொடுப்பது என்ற முடிவில் தான் இருக்கிறது.

**திரு. முனு ஆதி :** தலைவர் அவர்களே, 8 ஹார்ஸ் பவர் உள்ள ட்ராக்டர்களை 9,000 ரூபாய்க்குத் தருவதற்கான நிலை உலகக் தொழில் கண்காட்சியிலே இருக்கிறது. அதை 5 ஏக்கர் நிலம் உள்ளவர்களுக்குத் தரலாம் என்ற விதியும் கூட இருப்பதைப் பார்த்தேன். அந்த ட்ராக்டர்களை அரசாங்கமே வரவழைத்து, 5 ஏக்கர் நிலம் உள்ள சிறு நில விவசாயிகளுக்குத் தவணை முறையில் வாங்கிக் கொடுக்கிற எண்ணம் அரசாங்கத்திற்கு இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** இன்றைய நிலையில் இல்லை. இனி பரிசீலிக்கலாம்.

**திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் :** இதற்கு முன் இருந்த திட்டம் தாசில்தார் மூலம் ரெவின்யூ இலாகா பரிசீலித்து, விவசாய இலாகா ட்ராக்டர்கள் வழங்கவேண்டும் என்பது. ஆகவே, ரெவின்யூ இலாக தொடர்பில்லாமல் ட்ராக்டர்கள் கொடுக்கப்படவில்லை. ஆனால் இப்பொழுது ரெவின்யூ இலாகாவே முழுப் பொறுப்பையும் ஏற்றுக்

[1968 மார்ச் 7

கொண்டிருக்கிறது. அதனால் பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. ஆகவே, சொத்து விவரத்தைப் பற்றி ரெவின்யூ இலாகா சர்டிபிகேட் வழங்கி, அதன்பின் விவசாய இலாகா பொறுப்பிலே வினியோகத்தைச் செய்வது வரவேற்கப்படுகிறது. அதைப் பரிசீலிக்க முடியுமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** ஏற்கெனவே, வாங்கப் பட்டிருக்கின்ற சர்டிபிகேட் சரியாக இருக்கிறதா, விண்ணப்பத்திலே கொடுக் கப்பட்ட விவரங்கள் சரியாக இருக்கிறதா என்று பரிசீலிக்கின்ற சூழ்நிலை இப்பொழுது இருக்கிறது. விவசாய அதிகாரிகளும், விவசாய இன்ஜினீயர் களும் பல மட்டத்திலே பரிசீலனை செய்து அந்த விண்ணப்பங்களை மாவட்டக் கலெக்டருக்கு அனுப்புகிறார்கள். மாவட்ட கலெக்டர் அவருடைய சிபார்சு களுடன் விவசாய இயக்குநருக்கு அனுப்புகிறார்கள். விவசாய இயக்குநர் அவர்கள் தன்னுடைய சிபார்சுடன் சர்க்காருக்கு அனுப்புகிறார்கள். கடைசியாக முடிவு எடுப்பது சர்க்காரிடம் தான் இருக்கிறது. இடையிலே எங்காவது விண்ணப்பங்கள் அனுப்பப்படாமல் தடைபடக்கூடிய சூழ்நிலை இருக்குமானால் அத்தகைய விண்ணப்பங்களையும் வாங்கி, அதைப் பரிசீலனை செய்து, எதற்காக அதை விட்டு விட்டார்களென்று கேட்டு, மீண்டும் பரி சீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறோம்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், கனம் அமைச்சர் அவர்கள், குறைவாக மனுக்கள் வந்தபடியால் குறைவாக கொடுத்ததாகவும், அதிகப் படியாக மனுக்கள வந்ததால் அதிகப்படியாகக் கொடுக்கப்பட்டதாகவும், தகவல் கிடைத்ததாகக் கூறினார்கள் அப்படியானால் குறைவாக கொடுத் திருக்கும்படியான அந்த மாவட்டங்களில் ஒன்றுகூட தள்ளுபடி செய்யப் படவில்லை என்பது தான் அதனுடைய பொருளா ? அதிகப்படியாக வந்ததற்கு அதிகப்படியாகக் கொடுக்கப்பட்டது என்பதுதான் பொருளா ? அதை விளக்க முடியுமா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு தாங்கள் பொருள் கேட்க முடியுமா ? அமைச்சர் அவர்களுக்கு பொருள் விளங்காத முறையில் பதில் சொல்வதற்குக் கூட உரிமை இருக்கிறது.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** அவர் கேட்ட கேள்வியினுடைய பொருள் விளங்கித்தான் நான் பதில் சொன்னேன். குறைந்த விண் ணப்பங்களில் ஒன்றுகூட தள்ளுபடி செய்யப்படவில்லையா என்று கேட்கிறார்கள். எனக்குக் கிடைத்த தகவல் என்றுதான் சொன்னேன். ஆனால் அந்தத் தகவல் எழுத்து மூலமாகக் கிடையாது. இந்தக் கேள்வித் தாள் வந்த பிறகு நான் அவர்களைக் கேட்ட நேரத்தில், இந்த அடிப்படை யிலே கொடுத்திருக்கிறோம் என்றும் விண்ணப்பங்கள் வருகின்ற பொழுது அவ்வப்பொழுது பரிசீலிக்கின்றோம் ; அதைத் தொகுத்து அர சாங்கத்திற்கு அனுப்புகின்றோம் என்று சொன்னார்கள். அந்த அடிப் படையிலே விண்ணப்பங்கள் வர வர கொடுத்துக்கொண்டிருந்தோம். ஆனால் இப்பொழுது அந்த முறையைத் தவிர்த்து, பொதுவாக மொத்த மாக பரிசீலனை செய்து கொடுக்கக்கூடிய நிலையில் அதிக நேரம் எடுத்துக் கொள்வதைத் தவிர்த்து விரைவாக கொடுக்கக்கூடிய சூழ்நிலையை உரு வாக்கி இருக்கிறோம். ஏற்கெனவே எவ்வளவு விண்ணப்பங்கள் வந்தன, எவ்வளவு தள்ளுபடி செய்யப்பட்டன, தள்ளுபடி செய்யாமலேயே மொத் தமும் கொடுக்கப்பட்டதா என்ற தகவல் என்னிடத்திலே இல்லை.

**திரு. டி. டி. எஸ். திப்பையா :** விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட ட்ராக்டர்களின் தொகை தவணை முறையில் வசூலிக்கப்படுகிறது. இந்த ஆண்டு மழை இல்லாமல் விவசாய வருமானம் இல்லாத பகுதிகளிலே நிர்ப்பந்தம் செய்யாமல் அடுத்த ஆண்டு அந்தத் தவணைத் தொகையை வசூலிக்க முடியுமா என்பதை அரசாங்கம் ஒத்துக்கொள்ளுகிறதா என்று கேட்கிறேன்.



1968 மார்ச் 7]

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** இது வருவாய்த் துறை அமைச் சரைக் கேட்க வேண்டிய கேள்வி.

THIRU K. VINAYAKAM : Whereas motives are being attributed to the Government, whether it is the Congress Government or the D.M.K. Government, will the Government be pleased to reconsider their position and entrust this work of allotment of tractors to the Agro-Industries Corporation whose constitution is being contemplated ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** கனம் அங்கத்தினர் கோதண்ட ராமன் அவர்கள் கேள்வி கேட்ட நேரத்தில் ஆத்திரப்பட்டுச் சொன்னார்கள். ஆனால் இப்பொழுது அவருடைய கேள்வியிலிருந்து இந்த அக்ரோ-இண் டஸ்ட்ரீஸ் மூலம் கொடுப்பதைத்தான் சொல்லுகிறார்கள். அக்ரோ-இண் டஸ்ட்ரீஸ் மூலமாகவும் லேண்ட் மார்ட்கேஜ் பாங்க் மூலமாகவும்தான் இப்பொழுது ட்ராக்டர்கள் வழங்கப்படுகின்றன. ஆனால் அதை அரசாங்கம் பரிசீலனை செய்கிறது. வழங்கப்படுவதுதான் இந்த அக்ரோ-இண்டஸ்ட்ரீஸ் மூலமாகவும் லேண்ட் மார்ட்கேஜ் பாங்க் மூலமாகவும். ஆகவே, பரிசீலனை செய்கின்றதை அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. வழங்குகின்ற உரி மையை அக்ரோ-இண்டஸ்ட்ரீஸ்ஸும், லேண்ட் மார்ட்கேஜ் பாங்கும் பெற் றிருக்கிறது. அதில் ஏதாவது தவறு இருந்தால் அதை அரசாங்கம் பரி சீலிக்கும்.

முன்பு, அப்பொழுது நாங்கள் பொறுப்பில் இல்லை என்ற தகவலைத் தான் கொடுத்தேனே தவிர, ஏற்கெனவே இருந்த அமைச்சர் அவர் களுடைய பொறுப்பில்தான் இது நடந்தது என்று நான் குறிப்பிட்ட மாதிரி நினைத்துக்கொண்டு கனம் அங்கத்தினர் இந்தக் கேள்வியைக் கேட்டு இருக்கிறார்கள்.

## படிப்பு உதவித் தொகை

* 166 வினா.—**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு தாழ்த்தப் பட்டோர் நல, செய்தித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டத்தில் 1966-67-ம் ஆண்டில் பின் தங்கிய வகுப்பு மாணவ, மாணவிகளுக்கு கொடுக்கப்பட்ட உதவித் தொகை எவ்வளவு ?

(இ) பயன்பெற்ற உயர்நிலைப்பள்ளி மாணவர்கள், கல்லூரி மாணவ கள் முறையே எத்தனை பேர்கள் ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** (அ) மதுரை மாவட்டத்தில் 1966-67-ம் ஆண்டில் பின் தங்கிய மாணவர்களுக்கு அளிக்கப்பட்ட உதவித் தொகை விவரம் :—

| | ரூ. பை. |
|---|---|
| உயர்நிலைப்பள்ளி .. .. .. | 50,877·00 |
| கல்லூரி .. .. .. .. .. | 10,77,471·70 |
| மொத்தம் .. | 11,28,348·70 |

(இ) உதவித் தொகை அளிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை:—

| | |
|---|---|
| உயர்நிலைப் பள்ளி .. .. .. | 1,631 |
| கல்லூரி .. .. .. .. .. | 2,736 |
| ஆக மொத்தம் .. | 4,367 |

**திரு. என். எஸ். வி. சித்தன்** : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கும், கல்லூரி மாணவர்களுக்கும் கொடுக்கப்படுகிற உதவித் தொகைக்கு மிகக் குறைந்த மார்க்குகள்— எவ்வளவு வாங்கவேண்டுமென்று கேட்கப்பட்டிருக்கிறது. முறையாக இல்லை என்ற காரணத்தால் யாரிடமாவது திரும்பப் பெறவேண்டுமென்று அரசாங்கம் உத்திரவு அனுப்பியதா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து** : அதற்கு தனிக் கேள்வி போடவும்.

**Thiru T. MARTIN** : Sir, will the Hon. Minister be pleased to state whether residential scholarships are being given to Christian converts from Backward Classes by this Government now ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து** : மதுரை மாவட் டத்திலே அப்படிக் கொடுத்தார்கள் என்பதைப் பற்றி மட்டும் சொல்லாமல், பொதுவாக அப்படிக் கொடுக்கப்பட்டு வருகிறது. மதுரை மாவட்டத்தில் எத்தனை பேருக்கு என்ற விவரம் தற்போது என்னிடத்தில் இல்லை.

*One Union for one Industry*

*167 *Q.*—Thiru S. RAMACHANDRAN : Will the Hon. the Minister for Law and Co-operation be pleased to state —

(*a*) whether the Government have any proposal to implement the scheme of "one Union for one Industry" ; and

(*b*) if so, the details thereof ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : (அ) & (இ) இது சம்பந்தப் பட்ட பிரச்சினைகளையெல்லாம் National Commission on Labour விசாரணை நடத்தி வருகின்றது. அதன் முடிவு தெரிந்த பின்பு தான் இது பற்றி பரிசீலிக்கப்படும்.

**திரு. எஸ். இராமச்சந்திரன்** : தலைவர் அவர்களே, ஏற்கெனவே தொழி லாளர் அமைச்சராகவும் இப்பொழுது திட்டக் கமிஷன் உறுப்பினராகவும் உள்ள மதிப்பிற்குரிய வெங்கட்ராமன் அவர்கள் கூட ஒரு தொழிற்சாலைக்கு ஒரு சங்கத்தைக் கொண்டு வருவதற்கான சட்டத்தை இயற்றலாம் என்றும், அது அடிப்படை உரிமைகளில் இருக்கிற "ரீசனபில் ரெஸ்டிரிக்ஷன்" (Reasonable restriction) தான் ஆகும் என்று கருத்தறிவித் திருக்கிறார்கள். ஆகவே, எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்படுகின்ற இந்த பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஏதேனும் சட்டம் கொண்டுவருவதற்கு சர்க்கார் முயற்சிக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : அப்படிப்பட்ட ஒரு கருத்து நிலவு கின்றது. அரசாங்கமும் அந்தக் கருத்தை ஆதரிக்கிறது. அதை சட்டப்படி செய்யலாமா என்று "நேஷனல் கமிஷன் ஆன் லேபர்" முடிவு செய் ததற்குப் பின்னுலேதான் நாம் முடிவு செய்யலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : ஏற்கெனவே நேரம் அதிகமாகி விட்டபடியால் நிதிக் கோரிக்கையின் மீது விவாதத்திற்கு ½ மணி நேரம் அதிகமாக எடுத்துக்கொள்வதற்கு உறுப்பினர்கள் சம்மதிப்பார் கள் என்று கருதுகிறேன்.

**Dr. H. V. HANDE** : Sir, the main problem with regard to "One Union for one Industry" seems to be the competitive spirit with which several political parties try to take charge of these Unions. So, will the Hon. Minister who is a very objective person, come forward to call a conference of all the leaders of political



parties and try to arrive at a consensus so that the political parties can keep themselves out of the trade unions and the responsibility of running the trade unions can be taken up only by persons working in the industry itself ? Will the Hon. Minister come forward with such a noble idea ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : எல்லாத் தொழிலாளர் தலைவ களும் ஒரு தொழிற்சாலைக்கு ஒரு சங்கம் தான் இருக்கவேண்டுமென்ற கருத்தை ஆதரிக்கிறார்கள். அடுத்த கட்டத்திற்குச் செல்லும்போது அரசியல் கட்சிகள் இதில் ஈடுபடக்கூடாது என்பதில் ஏகோபித்த கருத்து இருக்கவில்லை, பலதரப்பட்ட கருத்துக்கள் இருக்கின்றன. ஆகவே தான் ஒரு தொழிற்சாலைக்கு ஒரு சங்கம் என்று ஏற்பட்டால் ஒரு கட்சி நடத்தக் கூடிய சங்கம் மட்டும் இருக்கவேண்டும், அடுத்த கட்சி வரக்கூடாது என்றால், அதை அடுத்த கட்சி ஒத்துக் கொள்ளாது. அரசியல் கட்சிகள் இதில் ஈடுபடுவது உண்டா, இல்லையா என்பது பெரிய பிரச்னை, விவாதத்திற் குரிய பிரச்னை.

**திரு. சி. கோவிந்தராசன்** : "ஒரு தொழிலுக்கு ஒரு தொழிற் சங்கம்" என்பதை அனைவரும் ஏற்றுக் கொள்வதாக அமைச்சர் அவர்கள் கூறினார் கள். இன்றைக்கு இருக்கக்கூடிய நிலைமையில்பல்வேறு தொழிற்சங்கங் கள் ஆங்காங்கு இருந்து கொண்டிருக்கின்றன. ஒரு தொழிற் சங்கத்தை நிர்ணயிப்பதற்கு இன்றைக்கு இருக்கக் கூடிய வழி முறைப்படி அவர்களுடைய ரிஜிஸ்டரைப் பார்த்து, பரிசீலித்து, முடிவு செய்யப்படு கிறது, எந்த சங்கத்திற்கு அங்கீகாரம் அளிப்பது என்பது. பல முதலாளிகள் தங்களுக்கு வேண்டிய சங்கத்தை ஆதரிக்கக்கூடிய முறையில் இருப்பதால், எந்த சங்கத்தைப் பெருவாரியான தொழிலாளர் கள் ஆதரிக்கிறார்கள் என்பதை ரகசிய வாக்கெடுப்பு மூலம் நிர்ணயிப்பதற் கான முயற்சியை அரசு செய்ய முன்வருமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : "ஒரு தொழிற்சாலைக்கு ஒரு சங்கமா, பல சங்கங்களா" என்பது கொள்கைப் பிரச்னை. பல சங்கங்கள் இருக்கலாம் என்று சொல்லிவிட்டால், 'வெரிபிகேஷன் மெதேடை' கடைப் பிடிக்கலாம் என்ற கருத்து ஒரு சிலரிடையே இருந்து வருகிறது. 'ஸீக்ரெட் பாலெட் மெதேட்' வைக்கலாம் என்ற கருத்தும் வேறுசிலரிடையே இருந்து வருகிறது. ஒரு சங்கத்திற்கு மேல் வைத்துக்கொண்டால், ஒரு சங்கத்திற்கு ரெகக்னிஷன் கொடுத்தால், மறு நாளே இன்னொரு தொழிற்சங்கம் தங்களுக்குத் தான் மெஜாரிட்டி இருக்கிறது என்று சொல்லிவிடுகிறார்கள். தொழிலாளர்கள் நன்மையைக் கருதினால் ஒரு தொழிற்சாலைக்கு ஒரு தொழிற் சங்கம் தான் இருக்க முடியும், கட்சி வேறுபாடற்ற முறையில் அதை நடத்தினால் தான் "ஒரு தொழிற் சாலைக்கு ஒரு தொழிற் சங்கம்" என்பது வெற்றி அடைய முடியும்.

*Compulsory Sterilisation*

* 168 *Q.*—Thiru K. VINAYAKAM :
" K. CHEEMAICHAMY :
" V. K. KOTHANDARAMAN :
" N. KITTAPPA :
" G. GOMATHISANKARA DIKSHIDAR :
" N. S. V. CHITHAN :

Will the Hon. the Minister for Public Health be pleased to state whether the Government of India have consulted our Government on the desirability of introducing compulsory sterilisation with a view to check the growing population ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா** : இல்லை.

**Thiru K. VINAYAKAM**: Sir, this question is a very important one, Conrcering the growing papulation of our country. So, may I request the Chair to postpone it to-morrow and let it be the first question to be taken up tomorrow.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : மாண்புமிகு எதிர்க்கட்சி கொறடா அவர்கள் கேட்டுக் கொள்வதற்கு இணங்க, இப்பொழுது நேரம் ஆகி விட்டதால், நாளைக்கு இதை முதல் வினாவாக எடுத்துக் கொண்டு, துணை வினாக்களை அனுமதிக்கலாமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா** : இந்தக் கேள்விக்கு இன்றே பதில் சொல்லுகிறேன்.

**Thiru. K. VINAYAKAM** : Sir, this problem concerns the entire country and the growing population is a dangerous affair. That is why we will take it up tomorrow. What is the harm in taking it up tomorrow ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : இங்கு வந்துவிடும் என்பதில்லை. அவை முன்னவர் ஒத்துக் கொள்ளவேண்டும் ஒரு தடவை அஜெண்டாவில் போட்ட பிறபாடு பேரவைத் தலைவருக்கு அதை மாற்றுவதற்கு அதிகாரம் கிடையாது. ஆனால், பேரவைக்கு அப்படிச் செய்ய உரிமை உண்டு. மாண்புமிகு லீடர் ஆப்ஃ தி ஹவுஸ் விருப்பப்பட்டால் இந்த வினாவை நாளைவரைஒற்றி வைக்கலாம். அதற்கு விதி இருக்கிறது.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : அவைத் தலைவர் அவர்களே, 168-வது எண்ணுள்ள கேள்வியை நாளைக்கு மாற்றிக்கொள்ளும் படி கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : 168-வது எண்ணுள்ள வினாவுக்குரிய துணை வினாக்கள் நாளைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்று மாண்புமிகு லீடர் ஆப்ஃ தி ஹவுஸ் கோருகிறார்கள்.

**திரு கொ. இர. ஞானசம்பந்தன்** : ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர், ஸார். அமைச்சர் அவர்கள் ஒரு கேள்விக்கு பதில் சொன்ன பிற்பாடு, மறுபடியும் அதை ஒற்றிவைப்பது சரிதானா என்று கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த** வினாவுக்குச் சொன்ன **விடையை** நாளைக்கு மாற்றிக் கொள்ள முடியாது. துணை வினாக்கள் கேட்கலாம்.

**திரு. வி. கே. கோதண்டராமன்** : 169-வது எண்ணுள்ள வினாவையும் நாளைக்கு மாற்றிக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: நீங்கள் சொன்ன கோரிக்கை எனக்கு விளங்குகிறது. 169-வது எண்ணுள்ள கேள்வியையும் நாளைக்கு மாற்ற வேண்டும் என்பதை லீடர் ஆப்ஃ தி ஹவுஸ் சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : 168, 169 ஆகிய இரு கேள்விகளையும் நாளைக்கு எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவை இதை ஏற்றுக்கொள்கிறது என்று கருதுகிறேன். 168, 169 ஆகிய இரண்டு வினாக்களும் நாளைக்கு முதலில் எடுத்துக் கொள்ளப்படும்.

வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.



[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இட்டிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. ராமசாமி அவர்கள் இடத்தில் இல்லை. ஆகையால் அவர்கள் கொடுத்துள்ள கவன ஈர்ப்பு முன்னறிவிக்கை பேரவையின் அனுமதியுடன் திரும்ப பெற்றுக் கொண்டதாகக் கருதப்படும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : அடுத்து, மான்யக் கோரிக்கைகள், மாண்புமிகு தொழில், கல்வி அமைச்சர் அவர்கள்.

## 2. 1968–69-ம் ஆண்டிற்கான நிதிக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு.

### கோரிக்கை எண் 13—கல்வி.

**The Hon. Thiru. V. R. NEDUNCHEZHIYAN** : Mr. Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 56,92,90,200 under Demand No. 13—Education".

**Thiru R. PONNAPPA NADAR** : Sir, "The necessity of constructing High School buildings for Karinkal, Martandam, Kollengode in Kanyakumari district" என்பதை விவாதிக்க

கோரிக்கை எண் 13—கல்வி என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் படுகின்ற ரூ. 56,92,90,200-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**Dr. H. V. HANDE** : Sir to discuss Policy, I move—

"That the allotment of Rs. 56,92,90,200 under Demand No. 13—Education be reduced by Rs. 100."

**திரு. என். வரதராஜன்** : தனியார்த் துறையிலுள்ள எல்லாப் பள்ளிகளையும், சர்க்காரே எடுத்து நடத்தவேண்டுமென்ற அவசியத்தைப் பற்றி எடுத்துக்கூற

"கோரிக்கை எண் 13—கல்வி என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் படுகின்ற ரூ. 56,92,90,200-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. சோ. அழகர்சாமி** : "நெல்லை மாவட்டம், சரித்திரப் பிரசித்திப் பெற்ற எட்டையபுரத்தில் உமர் புலவர் பெயரால் ஒரு பெண்கள் கல்லூரி ஆரம்பிக்க ஏற்பாடு செய்யவேண்டும்" என்பதை விவாதிக்க

"கோரிக்கை எண் 13—கல்வி என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 56,92,90,200-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கோரிக்கையும், வெட்டுத் தீர்மானங்களும் அவையினுடைய விவாதத்திற்கு வருகின்றன.

முற்பகல் 10-30 ***திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** துணைத்தலைவர் அவர்களே, அவைமுன் இருக்கும் கல்வி மானியக் கோரிக்கை பற்றி ஒரிரு கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். முதலிலே, இந்த பாடமொழித் திட்டத்தைப் பற்றி என்னுடைய கருத்தைக் கூற முற்படுகிறேன். இன்றைய அரசு மொழிக் கொள்கையிலே திட்டவட்டமான ஒரு முடிவுக்கு வந்திருக்கிறது. குறிப்பாக, பாடமொழி தமிழிலேயே அமையவேண்டும் என்று திட்டமிட்டிருப்பதை நான் முழு மனதுடன் ஆமோதிக்கிறேன். அதோடு, பாடமொழியாகிய தமிழுக்கு முக்கியத்துவம் அளித்திருந்தாலும் கூட, ஆங்கிலத்தை அகற்ற திடீரென முயற்சி எடுக்கக் கூடாது என்பதையும் இந்த சந்தர்ப்பத்திலே எடுத்துக்கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆங்கிலத்தைப் பொறுத்த வரையில் போதிய ஊக்கம் இந்த அரசு கொடுத்திருந்தாலும், ஆங்கிலத்தின் தரம் சரியானதாக இருக்கிறதா என்பதை ஆய்வு செய்ய வேண்டும். அப்படி ஒரு ஆய்வை மேற்கொள்ளக் கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம். எப்படி தமிழுக்கு முக்கியத்துவம் அளிக்கிறோமோ, அதே போல் ஆங்கிலத்திற்கும் முக்கியத்துவம் அளிக்க வேண்டும். ஏனென்றால், பட்டப்படிப்பாக இருந்தாலும் சரி, மேற்படிப்பானாலும், ஆங்கிலம் இன்றியமையாததாக இருக்கிறது. உலகத்திலே உள்ள விஞ்ஞானத் துறையானாலும், பொறியியல் துறையானாலும், நல்ல தேர்ச்சியும் பயிற்சியும் பெற, ஆங்கிலத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தால்தான் சாத்தியமாக இருக்கமுடியும். அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை நாம் மேற்கொள்வதற்குக் கடமைப் பட்டவர்களாக இருக்கிறோம். எங்கே பார்த்தாலும், தமிழுக்கு முக்கியத்துவம் அளித்திருப்பதை எல்லோரும் பாராட்டுகிறார்கள். அதே காலத்தில் ஆங்கிலத்திற்கும் போதிய ஆக்கமும் ஊக்கமும் கவனமும் அளிக்கப்படவேண்டும் என்பதைச் சொல்லக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். அதை மறுமுறையும் கூற விரும்புகிறேன். இந்த அரசும், மன்றமும் பாடமொழித் திட்டத்திலே உறுதியான கொள்கை கொண்டிருக்கிறது. நாம் அதை நிறைவேற்றத் தக்க முறையில் வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளக் கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம்.

புகுமுக வகுப்பில் இருக்கும் வேறு முக்கியமான பிரச்சினை பற்றி கூறக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். புகுமுக வகுப்பிற்கு முன்பு இருந்த அரசாங்கம் ஃபீஸ் வசூல் செய்யக் கூடாது என்று ஒரு திட்டத்தைப் புகுத்தத் திட்டமிட்டிருந்தது. ஆனால் இன்றைக்கு அது 1,500 ரூபாய்க்குக் குறைந்த சம்பளம் உள்ளவர்களுக்கு மட்டும் என்று இருக்கிறது. அதை முழுமையாக எல்லோருக்கும் அந்தச் சலுகையை வழங்க சர்க்கார் முன்வரவேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்திலே கூற விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, டெக்னிகல் எஜுகேஷனைப் பற்றி ஒரு வார்த்தை கூற விரும்புகிறேன். இன்றையதினம் தொழில் மந்தம் ஏற்பட்டிருக்கின்ற காரணத்தால், இந்த டெக்னிகல் எஜுகேஷனுக்கு போதிய அளவு ஊக்கம் ஏற்படவில்லை என்று பரவலாகப் பேசப்படுகிறது. தொழில் மந்தம் என்பது சாதாரணமாக ஏற்படுவதுதான். "ட்ரேட் ஸைகிள்" காரணமாக தொழில் மந்தம் ஏற்படுவது சகஜம். முன்பு 1935-ல் இந்த மாதிரி "ஸ்லம்ப்" ஏற்பட்டது. எகனமிக் ஸ்லம்ப் ஏற்பட்டது என்பதை இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இப்பொழுது அந்த ஸ்லம்ப் முடிந்து சுமார் 30 வருஷங்களுக்கு மேல் ஆகிறது. இப்பொழுது மறுபடியும், "ட்ரேட் ஸைகிள்" காரணமாக ஸ்லம்ப் ஏற்பட்டிருக்கிற காரணத்தால், இந்த மாதிரி தொழில் மந்தம் ஏற்பட்டிருக்கிறது. ஆதலால், பல்கலைக் கழகங்களிலே, நாம் பொறியியல் கல்லூரிகளுக்கும், மற்றவைகளுக்கும் மாணவர்களை எடுக்கும் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டும் என்று மத்திய சர்க்கார் கேட்டுக் கொண்டிருப்பதாக அறிகிறேன். ஆள் குறைப்பு செய்ய வேண்டிய வேலையில்லை என்பதை இந்த சந்தர்ப்பத்திலே குறிப்பிட விரும்புகிறேன். (வளர்ந்து கொண்டிருக்கும் பொருளாதாரத்தில், திட்டமிட்ட பொருளாதாரத்தில், இன்றும் அதிகமாக நமக்கு விஞ்ஞானிகளும், பொறியியல் வல்லுநர்களும்



தேவை. ஆதலால், இந்த மாதிரி ஆள் குறைக்க வேண்டுமென்பதை உடனடியாக அமுல் படுத்தக் கூடாது என்பதைப் பணிவோடு தெரிவிக்க விரும்புகிறேன்.) இந்தத் தொழில் மந்தம் நீங்குவதற்கான சாத்தியக் கூறுகள் அதிவிரைவில் உருவாகிக் கொண்டிருக்கின்றன. இந்த வருஷத்திலேயே அபிவிருத்தி ஏற்படலாம் என்கிற நம்பிக்கை இருப்பதால், ஆள் குறைப்புச் செய்ய கூடாது என்பதையும் இந்த சந்தர்ப்பத்திலே எடுத்துக் கூற விரும்புகிறேன்.

அடுத்து, பல்கலைக்கழக அளவில் கல்வியைக் குறித்து ஒரிரு வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இன்றையதினம் தனியார் துறையில் பல கல்லூரிகள் இருக்கின்றன. அவர்களெல்லாம் ஃபீஸ் வசூல் செய்வதில் முறையான ஏற்பாடு எதுவும் இருக்கவில்லை. ஸ்பெஷல் ஃபீஸ் என்றும், ட்யூஷன் ஃபீஸ் என்றும் வெவ்வேறு கல்லூரிகளிலும் வேறு வேறு முறையில் கட்டணங்கள் வசூல் செய்துக் கொண்டிருக்கிறார்கள். இவற்றையெல்லாம் ஒருமுகப்படுத்த வேண்டும் என்பதை இந்த சந்தர்ப்பத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஸ்பெஷல் ஃபீஸ் வசூலிப்பதில் கல்லூரி மட்டத்தில் மட்டுமின்றி, மற்ற மட்டங்களிலும், தனியார் துறையில் இருக்கும் பள்ளிக்கூடங்களிலும் பல்வேறு விதமான நிகழ்ச்சிகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆதலால் இப்படிப்பட்ட ஸ்பெஷல் ஃபீஸ் போன்றவை எவ்வளவு வசூலிக்க வேண்டும் என்பதையெல்லாம் முறைப்படுத்தி ஒரு ஆணையை பிறப்பிக்க வேண்டும் என்று கூற விரும்புகிறேன். ஸ்பெஷல் ஃபீஸ் கொடுப்பதில் பல கஷ்டங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு பள்ளிக்கூடமும் ஒவ்வொரு முறையைக் கையாள்வதால், மாணவர்களுக்கு பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன. அவர்கள் பல சந்தர்ப்பங்களிலே சங்கடங்களுக்கு ஆளாகப் படுகிறார்கள் என்பதையும் இந்த சந்தர்ப்பத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மதுரைப் பல்கலைக்கழகம் பற்றி இன்னொரு வார்த்தை கூற விரும்புகிறேன். மதுரைப் பல்கலைக்கழகம் புதிதாக ஆரம்பித்து வளர்ச்சி பெற்று வருகிறது. அந்தப் பல்கலைக் கழகத்திற்கு அதிகமான ஊக்கமும் ஆக்கமும் கொடுக்க வேண்டுமென்று இந்த அரசாங்கம் முன்வந்திருக்கிறது. (ஆனால் அந்த பல்கலைக் கழகத்தில் குறிப்பாக சட்டக் கல்லூரியும் ஒரு விவசாயக் கல்லூரியும் நிறுவுவதற்கான வேண்டிய ஆணைகளை பிறப்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.) அந்தப் பல்கலைக் கழகத்திற்கு கட்டடங்கள் கட்டுவதற்கு வேண்டிய உதவிகள் அளிக்க, வேண்டிய மானியங்களை ஒதுக்க வேண்டும் என்றும் இந்த சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும் ஒன்று. தேசீய மாணவர் படையில் மாணவர்களுக்கு போதிய ஊக்கம் அளிக்கவில்லை என்று மாணவர்களிடையே ஒரு கருத்து நிலவுகிறது. தேசீய மாணவர் படையானது, நம்முடைய தேசத்தில் இன்றைக்கு இருக்கும் மொழிக்கொள்கைக் காரணமாக பல இன்னல்களுக்கும், சிக்கல்களுக்கும் ஆளாகியிருக்கிறது என்பதை பரிபூரணமாக உணர்ந்தும், அந்தக் காரணத்தால் இந்த நல்ல காரியத்திற்கு ஊக்கத்தைக் குறைக்கக் கூடாது என்பதை மட்டும் இந்த சந்தர்ப்பத்திலே குறிப்பிடக் கடமைப் பட்டவனாக இருக்கிறேன். வேண்டிய ஆதரவு கொடுக்க வேண்டும். அதில் ஆணை மொழிகள் இந்தியில் இருக்க வேண்டுமா அல்லது ஆங்கிலத்தில் இருக்க வேண்டுமா என்பது விவாதத்திற்குரிய பிரச்சினையாக இருந்தாலும், நம் தேசத்தில் மாணவர்களுக்கு நல்ல வாய்ப்பாக இருக்கிறது. அவர்கள் நல்ல பிரஜைகளாக உருவாக அது சாலச் சிறந்ததாக இருப்பதால், போதிய அளவில் அதற்கு ஊக்கமளிக்க வேண்டும் என்பதைக் கூறக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

இன்னொரு முக்கியமான விஷயம், நமது மத்திய உணவுத் திட்டத்தைப் பற்றியது. "கேர்" ஸ்தாபனத்திலிருந்து நல்ல முறையில் அதற்கு ஆதரவு அளித்திருப்பதாக இந்த அறிக்கையில் பார்த்தேன். முனிசிபல் நகரங்கள் மட்டத்தில் மதிய உணவுக்கு செண்ட்ரலைஸ்ட் ஸ்கீமாகச் செய்ய

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1968 மார்ச் 7

நடவடிக்கைகள் எடுக்கப் போவதாகவும், ஏதோ வடாற்காட்டில் சென்டரலேஸ்ட் கிச்சன் உருவாக்கி யிருக்கிறார்கள் என்றும் அறிகிறேன். அதை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். அதே மாதிரி திட்டங்கள் முதற்படி முனிசிப்பாலிட்டிகளுக்கு உடனடியாக உருவாக்கத்தக்க ஏற்பாடு கள் செய்வது சாலச்சிறந்ததாக இருக்கும். "கேர்" ஸ்தாபனத்திலிருந்து தரப்படுகின்ற உணவுப் பண்டங்களில் சிலவற்றால் ஏதோ விபரீதம் சமீபத்தில் ஏற்பட்டதாக இருந்தாலும், அதை நல்ல முறையில் காண்காணிக் கவும் அதை நல்ல முறையில் பயன் படுத்தக்கூடிய முறையில் காரியங்களைச் செய்யவும் முயலவேண்டும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பொதுவாக, இந்த அறிக்கையைப் பார்க்கும்போது, ஆறு கல்லூரிகள் புதிதாக ஆரம்பிக்கப் படப்போவதாகவும் பார்த்தேன். இந்தக் கல்லூரி களை அமைக்கும் வேளையில் எல்லா மாவட்டங்களுக்கும் போதிய பிரதிநிதித் துவம் இருக்கும் வகையில் செய்வதுதான் சிறந்தது. ரூ. 5 லட்சம் வசூல் செய்து கொடுக்கும் இடங்களுக்கு, அந்த மாவட்டங்களுக்குத்தான் உரிமை என்பதை மாற்றி அமைக்க முடியுமா என்பதையும் ஆராய வேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்திலே கூற விரும்புகிறேன்.

ஆரம்பக் கல்வியைப் பொறுத்த வரையில், அரசாங்கம் ஊக்கம் அளிக்கிறது என்றாலும், கட்டாயக் கல்வியை ஒரு பகுதியில் கட்டாயப் படுத்தி, அமுல்படுத்தி, அதற்கு வேண்டிய திட்டங்களை ஒரு ஜில்லாவில் தேர்ந்தெடுத்துச் செய்வது சிறப்பாக இருக்கும். 1946-ல் என்று கருது கிறேன், கன்யாகுமரி ஜில்லாவில் கட்டாயக் கல்வித் திட்டமானது உரு வாக்கப்பட்டு, வெற்றிகரமாக நடந்து கொண்டிருக்கிறது. 1946-ல் உருவான பள்ளிக்கூடங்களில் முன்னேற்றம் ஏற்படவில்லை, ஆரம்பிக்கப் பட்ட பள்ளிக்கூடங்கள் விஸ்தரிக்கப்படவில்லை என்கிற கருத்து மக்களி டையே இருக்கிறது. ஆகவே அவற்றை விஸ்தரிப்பதற்கான திட்டமிட்டு முறையாகக் காரியங்களைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகி றேன்.

ஆசிரியர்களுக்கு நல்ல ஊக்கம் அளிக்க நல்ல பல காரியங்களைச் செய்துவருகிறது அரசாங்கம். அவர்கள் நல்ல முறையில் கல்வியைக் கற்றுக் கொடுக்க, நல்ல ஆசிரியர்களை உருவாக்குவதற்கு அரசாங்கம் வழிவகைகளைச் செய்திருக்கிறது என்றாலும், ஆசிரியர்களிடையே சில குறை பாடுகள் இருக்கின்றன. அதற்கு அரசாங்கம் இன்னும் நல்ல காரியங் களைச் செய்ய வேண்டும். முக்கியமாக டீச்சர்-ப்யூபில் ரேஷியோ என்ன முறையில் இருக்க வேண்டும் என்கிற முறையிருக்கிறது. ஆனால் அதை இன்றைய நிலையில் பரிசீலப்பது சாலச் சிறந்ததாக இருக்கும். இந்த விகிதம் பற்றி சிந்திக்கும்போது அதிகமான சிக்கல்கள் இருப்பதாகக் கருதுகிறேன். பரிசீலனை செய்ய வேண்டும். இன்னும் அதிகமான ஆசிரியர்களை நிய மனம் செய்தால் இந்த ரேஷியோ நல்ல முறையில் அமைவதற்கு உகந்ததாக இருக்க முடியும் என்பதை மட்டும் இந்த சந்தர்ப்பத்திலே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

நான்காவது திட்டக் காலத்திலே நமக்கு மத்திய அரசாங்கத்திலிருந்து கல்விக்காக அதிகமாகச் சலுகை பெறுவதற்குக் கஷ்டங்கள் இருக்கின்றன, சங்கடங்கள் இருக்கின்றன என்று இந்த அறிக்கையில் சில பகுதிகளில் எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. ஆனால், இந்த மாநில அளவிலே நமக்கு அதிகமான கஷ்டங்கள் இருக்கும் காரணத்தால், கல்விக்காக அதிகமாகப் பணம் செலவழித்தபோதிலும், இன்னும் இலக்கை (டார்ஜெட்) எட்டிப் பிடிக்கவில்லை என்பதை நாம் ஒத்துக்கொள்ள வேண்டிய நிலைதான் இருக்கிறது. ஆரம்பக் கல்வியானாலும் சரி, நடுத்தரக் கல்வியானாலும் சரி, இன்னும் பள்ளிக்கூடங்கள் அதிகமாகத் தேவை இருக்கிறது. இந்த அரசாங்கம் புதிதாக ஓரிரு இடங்களில் பள்ளிக்கூடங்களைத் திறந்திருக் கிறது. அப்படித் திறக்கும்போது, கட்டாய ஆரம்பக் கல்வித் திட்டத்தின் கீழ் ஆரம்பப் பள்ளிகள் அதிகம் இருக்கும் பகுதிகளில், இன்னும் உயர் நிலைப்பள்ளிகள் அதிகமாகத் தேவைப்படுகின்றன என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இன்று கல்வி கற்கவேண்டும் என்ற ஆர்வத்துடன் மாணவர்கள் அதிகமாகப் பள்ளிக்குச் செல்லும் காரணத்தால், இரண்டா



1968 மார்ச் 7] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

யிரத்திற்கு மேலும் மாணவர்கள் படிக்கும் பல பள்ளிகள் எங்கள் ஜில்லாவில் இருக்கின்றன. இம்மாதிரி இடங்களில் முக்கியமாக பெண் களுக்கு என்று தனியாகப் பிரித்து உயர்நிலைப்பள்ளிகள் அமைப்பது சிறப்பாக இருக்கும். சம பகுதியாக பெண்கள் அந்தப் பள்ளிகள் படித்துக் கொண்டிருக்கும் காரணத்தால், இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர் கள் படிக்கின்ற அந்தப் பள்ளிகளில் பெண்களுக்கென்று ஒருதனி பிரிவு வைக்க முடியுமா என்று அரசாங்கம் ஆலோசித்து அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

இன்னொரு முக்கியமான விஷயம் பற்றி நான் குறிப்பிட வேண்டி யிருக்கிறது. பள்ளிக்கூடங்கள் இன்று பல ஜில்லாக்களில் மோசமான நிலையில் இருந்துகொண்டு இருக்கின்றன. கட்டடங்களைக் கட்டுவதற்கு பல தடஸ்தங்கள் முன்னால் ஏற்பட்டிருந்தன. எமர்ஜன்சி இருந்த காரணத் தால், கட்டடங்கள் கட்ட பல சங்கடங்கள் இருந்தன. எமர்ஜன்சி இப் பொழுது முற்றுப் பெற்று இருக்கிறது. பள்ளிக்கூடங்கள் நல்ல முறை யில் இருந்தால்தான், இளைஞர்களுடைய உள்ளத்தில் இந்தப் பள்ளிகளைப் பற்றி நல்ல மதிப்பு இருக்கும். நல்ல முறையில் அவர்களுக்குக் கல்வி கற்க வசதி இருக்கும். ஆகையால், பழுது அடைந்திருக்கும் பள்ளிக் கூடங்களைச் சீர்திருத்துவதற்கும் கட்டடங்கள் இல்லாத இடங்களில் பள்ளிக் கூடங்களைக் கட்டுவதற்கும் வேண்டிய எண்ணத்தை இந்த அரசாங்கம் செலுத்தவேண்டும். குறிப்பாக, என்னுடைய மாவட்டத்தில் உள்ள பல உயர்நிலைப்பள்ளிகளில் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் இருந்தபோதிலும், அங்கு நிரந்தரமான கட்டடம் இல்லாத சங்கடம் இருக்கிறது. கரிங்கல், மார்த்தாண்டம் கொல்லங்கோடு ஆகிய இடங்களில் உயர்நிலைப்பள்ளிகளுக்கான கட்டடங்கள் கட்டித்தரவேண்டும் என்பதைக் குறித்து என்னுடைய வெட்டுப் பிரேரணையில் சுட்டிக்காட்டியிருக்கிறேன். அம்மாதிரியான இடங்களில் பள்ளிக்கூடங்களை அமைப்பதற்கு வேண்டிய வழிமுறைகளைச் செய்யவேண்டும் என்பதையும் நான் கேட்டுக்கொள் கிறேன்.

ஸ்காலர்ஷிப் வழங்குவதில் பல கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. காலா காலங்களில் மாணவர்களுக்கு ஸ்காலர்ஷிப் கிடைக்கவில்லை என்று பரவ லான புகார் பல இடங்களில் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றது. தனியார்த் துறையில் இருக்கும் ஸ்தாபனங்களில் இந்த ஸ்காலர்ஷிப் வருவதில்லை என்ற புகாரும் நிரந்தரமாக இருந்து கொண்டிருக்கிறது. குறிப்பாக, பின்தங்கிய வகுப்பினருக்கு வழங்கக்கூடிய ஸ்காலர்ஷிப்கள், தாழ்த்தப் பட்டோருக்கு வழங்கப்படுகிற ஸ்காலர்ஷிப்கள் எல்லாம் உரிய நேரத்தில் வழங்க இந்த ஸ்தாபனங்கள் வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டுகள் பல இடங்களிலிருந்து வந்துகொண்டே இருக்கின்றன. அதற்கான நடவடிக்கைகளை உடனடியாக அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

கல்விக் கொள்கை ஒரு நிரந்தரமான கொள்கையாக இருக்கவேண்டும். 5—2—1968-ல் பிறப்பித்த உத்தரவினால் பல கஷ்டங்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக சிறுபான்மையினருக்குப் போதிய பாது காப்பு அளிக்கப்படும் என்று அரசாங்கத்திலிருந்து கூறப்படுகிறது. மலை யாளத்தைத் தங்களுடைய தாய்மொழியாகக் கொண்டிருக்கும் சிறுபான்மை யினர் எங்களுடைய ஜில்லாவில் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேண்டிய பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்பதை நான் கேட்டுக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். அதே நேரத்தில், இந்தி வேண்டும் என்று விரும்பிக் கேட்கின்றவர்களுக்கு அதைப் படிக்க வசதி அளிக்க அரசாங்கம் வேண்டிய உத்தரவைப் பிறப்பிக்கவேண்டும் என்பதையும் நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இந்தியா ? ஆங்கிலமா ? என்ற விவாதத்திற்குரிய பிரச்சினையிலே நான் வரவில்லை. யாருக்காவது இந்தியைப் படிக்கவேண்டும் என்று மனம் இருந்தால் அதை ஒரு இஷ்டபாடமாக, ஆப்ஷனல் ஸப்ஜெக்ட், எலெக்டிவ் ஸப்ஜெக்ட் என்ற முறையில் கற்றுக்கொள்வதற்கு வசதி அளிப்பதிலே எந்தவிதமான கஷ்டமும் இருக்காது.

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1968 மார்ச் 7

பொதுவாக இந்த மானியக் கோரிக்கையில் அதிகமாகப் பணத்தைச் செலவழிக்கிருர்கள். அதற்காக அரசாங்கம் எடுத்திருக்கும் எல்லாக் காரியங்களிலும் நாங்கள் ஒத்துழைக்கத் தயாராயிருக்கிறோம். ஆனல், மொழிக் கொள்கையில் இன்னும் பல கஷ்டங்கள் இருப்பதையெல்லாம் தவிர்ப்பதற்கு அரசாங்கம் வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். ஆங்கிலமா ? இந்தியா ? என்ற பிரச்சினையைச் சற்று நிதானமாக ஆராயவேண்டும். ஆங்கிலத்திற்கு அதிகமாக முக்கியத்துவம் அளிக்கவேண்டும் என்றுதான் தென்னக மக்கள் விரும்புகிருர்கள்' அதிலும் மாணவ சமுதாயம் விரும்புகிறது என்பதை மட்டும் நான் இந்த சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்டக் கடமைப் பட்டவனுக இருக்கிறேன். கல்லூரிகளில் ஆங்கிலத்தை உடனடியாக ஒழித்துவிடக்கூடாது, படிப்படி யாகப் பிரதேச மொழிக்கு முக்கியத்துவத்தை அளிக்கவேண்டும் என்ற முறையில், தமிழுக்கும் முக்கியத்துவம் அளிக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை இத்துடன் முடிக்கின்றேன். வணக்கம்.

* **திரு. ஆலடி அருணு :** மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கோரி யிருக்கும் கல்வி மானியக் கோரிக்கையை ஆதரிக்கின்ற வகையில் என்னு டைய கருத்துக்களை இந்த மேலான அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

கல்வித் துறையில் பெரிய மாற்றத்தையும் மறுமலர்ச்சியையும் காண வேண்டும் என்பதில் அழுத்தமான நம்பிக்கையும் உறுதியான கொள் கையும் கொண்டிருக்கிற இன்றைய தமிழக அரசு, கணிசமான அளவு தங்களுடைய வருவாயிலிருந்து இந்தத் துறைக்கு ஒதுக்கியிருப்பதற்காகத் தமிழக மக்கள் என்றைக்கும் நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிருர் கள். புதிதாகப் பொறுப்பேற்றிருக்கும் அரசு, இந்தப் பொறுப்பேற்பதற்கு முன்னல், இந்தக் கட்சியினிடத்தில் ஆட்சி ஒப்படைக்கப்பட்டால் கல்வித் துறையில் என்னென்ன நிலை ஏற்படும் என்பதைக் குறித்து எதிர் வரிசையில் இருக்கும் அருமை காங்கிரஸ் நண்பர்கள் என்னென்ன குற்றம் சாட்டினுர்களோ அவர்கள் எல்லாரும் இன்றைக்கு வெட்கித் தலை குனியும் வகையில், திரை மறைவில் நின்று பெருமூச்சு விடும் அளவில், கல்வித் துறையில் ஆர்வம் காட்டும் வகையில் இன்றையதினம் தமிழக அரசு தன்னுடைய ஆக்க வேலைகளில் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறது.

(கடந்த ஆண்டு, அரசாங்கத்தின் பொறுப்பிலும், அரசாங்கத்தின் உதவி யிலும் சுமார் 11 கல்லூரிகளைத் திறந்திருக்கிறது.) இந்த ஆண்டு அரசாங்கத்தின் பொறுப்பிலேயே ஆறு கல்லூரிகளைத்திறப்பதற்குஅரசாங்கம் முடிவு செய்திருக்கிறது. புதிதாக 7,200 ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கின்ற வகையில், மாணவர்களுடைய எண்ணிக்கையைக் கூட்டு வதற்கு இந்த அரசு திட்டமிட்டிருக்கிறது. அதே போன்று, கடை நிலைப் பதவியில் வேலை செய்கின்ற இடைநிலை ஆசிரியர்களுக்கு, மேலும் 3,000 பேர்களுக்கு வாய்ப்பு அளிக்கும் வகையில் இந்த நிதிநிலை அறிக்கையில் அரசு ஏற்பாடு செய்திருக்கிறது. புகு முகத் தொழில் நுட்பக் கல்வி கற்கும் மாணவர்களுக்கு கட்டணச் சலுகை அளிப்பதற்கும் இந்த அரசு வழிவகை செய்திருக்கிறது. சென்னை மாநகரத்தில் வாழ் கின்ற ஆசிரியர்களும், சென்னை மாநகரத்தையொட்டிய சுற்றுப் புறங் களில் வாழ்கின்ற ஆசிரியர்களும் தமிழ் வளர்த்த மதுரை மாநகரில் வாழ்கின்ற ஆசிரியர்களும் பாராட்டி இந்த அரசைப் புகழும் வகையில் அந்த ஆசிரியர்களுக்கெல்லாம் நகரயீட்டுப் படி கொடுக்க இந்த அரசு முன்வந்திருக்கிறது. ஓராண்டு காலத்திற்குள், தன் பணிகளைச் செவ்வையாக முடித்திருக்கிறது மாற்ருரும் புகழும் வகையில்தான் காரியங்களைச் செயலாற்றி வருகிறது. இவற்றுக்காக மட்டும் இந்த மானியக் கோரிக்கையை நான் ஆதரிப்பதாகச் சொல்லவில்லை.



1968 மார்ச் 7] [திரு. ஆலடி அருணு]

இத்தனைக்கும் மேலாக, இந்தியத் துணைக் கண்டத்திலேயே, இன்
றைய தினம் மொழிக்கொள்கையிலே ஒரு தெளிவு இல்லாமலும்
மொழிக் கொள்கையிலே தீர்மானமான முடிவு காணமுடியாத வகை
யிலும் பிற மாநிலங்கள் எல்லாம் குழம்பிக் கொண்டிருக்கும் நேரத்தில்,
முடிவை எடுப்பதற்குத் தைரியம் அற்ற கோழைகளைப் போல் குந்திக்
கிடக்கும் நேரத்தில், தமிழக அரசு தன்னந்தனியாக, மிக்க ஆண்மை
யோடு, இருமொழித் திட்டத்தை ஏற்றதைக் குறித்து தமிழர் சமு
தாயம் என்றும் நன்றிசெலுத்தக் கடமைப்பட்டிருக்கிறது. மும்மொழிக்
கொள்கையை இந்த மாநில அரசு ஒத்துக்கொண்டிருக்கிறது, இன்றைக்கு
ஆளும் பொறுப்பில் இருக்கும் கட்சியைச் சார்ந்தவர்கள் மும்மொழிக்
கொள்கையை ஒத்துக்கொண்டார்கள் என்றெல்லாம் எதிர் வரிசையில்
இருக்கும் அருமை காங்கிரஸ் நண்பர்கள், தங்களுக்குத் தேவையான
சில அற்ப வாதங்களை இந்த மன்றத்திற்கு கொண்டு வந்திருக்கிருர்கள்,
நம்மைப் பார்த்து. இன்றையதினம், தமிழக அரசு மும்மொழிக்
கொள்கைக்கு முடிவு கட்டி, இருமொழிக் கொள்கையை ஏற்றபின்பு
நம்மீது கணைகளைத் தொடுப்பவர்கள், நம்மீது குற்றம் சாட்டுபவர்கள்,
நம்மீது குறை சொல்லுபவர்கள், இந்த மும்மொழிக் கொள்கையை
இதுகாறும் அமல் நடத்தாத இந்தி மாநிலத்தை நோக்கி, "என்ன ?"
என்று கேட்டதுண்டா ? "எதற்காக மும்மொழித் திட்டத்தை நீங்கள்
அமல்படுத்த முடியவில்லை ?" என்று மத்திய சர்க்காரையோ, அல்லது
எந்த இந்தி மாநிலத்தையோ கேட்டது உண்டா ? ஆகவே, இன்றைய
தினம் தமிழக அரசு மும்மொழித் திட்டத்தைக் கைவிட்டுவிட்டது
என்று பகிரங்கமாக அறிவித்துவிட்டது. நம்மைப் பார்த்துப் பாய்கிற
வர்கள், நம்மைப் பார்த்துக் காய்கிறவர்கள், இதுகாறும் இந்தி மாநிலம்
அந்தத் திட்டத்தை அமல் படுத்தாததைப் பார்த்துக் கொண்டு, கை
கட்டி நின்ருர்கள், வாய் பொத்தி நின்ருர்கள். எனவேதான்,
இன்றையதினம் நமக்கு எது நியாயம் என்று படுகிறதோ, தமிழ் சமு
தாயத்தை வாழ வைப்பதற்கு, இங்கேயுள்ள கல்வியின் தரத்தை
உயர்த்துவதற்கு எது தேவை என்று கருதுகிறோமோ, அதை இந்தத்
தமிழக அரசு துணிவோடு செய்திருக்கிறது. இந்தியை இந்த மாநிலத்தி
லிருந்து, நம் அதிகாரத்திற்குட்பட்ட முறையில், நாம் விரட்டியடித்து
இருக்கிறோம். அதைச் சொல்லும் நேரத்தில், இந்த மாநிலத்திலே
இந்தியைப் புகுத்தியாக வேண்டும் என்பதற்காக, இந்தி வெறியர்கள்
படையையும் அனுப்ப வேண்டும் என்று சொல்லியிருக்கிருர்கள்.
வெறியர்கள் மட்டுமே சொல்லுகிருர்கள் என்று நாம் கருதி விடக்
கூடாது.

சுமார் நான்கைந்து தினங்களுக்கு முன் நடந்த காங்கிரஸ் காரியக்
கமிட்டி கூட்டத்தில் பெருமதிப்பிற்குரிய காமராஜ் அவர்களுக்கும், இந்தியா
வின் துணைப் பிரதமருக்கும் காரசாரமான வாதம் நடைபெற்றதாகப் பத்திரி
களில் செய்தி வந்திருக்கின்றது. திரு. மொரார்ஜி தேசாய் அவர்கள்,
" தமிழக அரசு இந்தியை ஏற்றுக்கொள்ளாவிட்டால், ராணுவத்தைத்
தமிழகத்திற்கு அனுப்பி ஏற்றுக்கொள்ளச் செய்வோம், அடுத்த மூன்று
ஆண்டுக் காலம் வரையிலும் தமிழகத்தை குடியரசுத் தலைவரின் ஆட்சியின்
கீழ் கொண்டுவருவோம்" என்ற முறையில் கடிந்து பேசியதாகப் பத்திரிகை
களில் செய்தி வந்திருக்கிறது. இது உண்மையாக இருக்குமோ, தவருக
இருக்குமோ—எனக்கு தெரியாது. இந்த மாநில மக்களின் சார்பாகவும்
தமிழக மக்களின் சார்பாகவும், மானமுள்ள தமிழ்ச் சமுதாயத்தின்
சார்பாகவும் இந்தியாவை ஆண்டுவரும் காங்கிரஸ் கட்சிக்கும், இந்திய
சர்க்காருக்கும் நான் ஒன்றைமட்டும் நிலைத்த உறுதியாகச் சொல்லிக்
கொள்ள முற்படுகிறேன். தன் கையிலே மத்திய சர்க்கார் இருக்கிறது
என்ற ஆணவத்தில், தன் கையிலே ராணுவம் இருக்கிறது என்ற இறு
மாப்பில் தமிழகத்திலே இந்தியைப் புகுத்திவிட முடியும் என்று
எந்தச் சக்தியாவது இறுமாப்போடு கருதிக்கொண்டிருக்குமானல், அந்தச்
சக்தியை தமிழக அரசும், தமிழக மக்களும், முறியடிப்பார்கள்; தமிழ்ச்
சமுதாயமும் ஓட ஓட விரட்டியடிக்கும்; இந்தி மொழி புகுவதைத்
தடுத்து நிறுத்தும் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

நாம் இன்றையதினம் மும்மொழிக் கொள்கையைக் கைவிட்டுவிட்டோம் என்று சொல்லும்போது, இங்கே இவ்வளவு ஆத்திரப்படுபவர்கள், இவ்வளவு வேகமாகப் பேசுபவர்கள், இவ்வளவு கோபப்படுபவர்கள், மற்ற மாநிலங்களில் இந்தக் கொள்கை நீண்ட நாட்களாகவே அமல்படுத்தப் படவில்லையென்பதை அறவே மறந்து விடுகிறார்கள் என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். மொழிக் கொள்கையிலே அறிவாளிகள் என்ன சொல்லியிருக்கிறார்கள், கல்வி நிபுணர்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்பதை நாம் கொஞ்சம் எண்ணிப் பார்க்க வேண்டும். கல்வி நிபுணர்களைக் கொண்டு அமைக்கப்பட்ட "கோத்தாரி கமிஷன்" இதைப்பற்றி என்ன கருத்து சொல்லியிருக்கிறது என்பதைக் காங்கிரஸ் நண்பர்கள் கொஞ்சம் படித்துப் பார்த்தால், இந்த ஆத்திரத்தை நம் மீது காட்ட மாட்டார்கள் என்று கருதுகிறேன். கோத்தாரி கமிஷன் தன் கருத்தைத் தெள்ளத் தெளிவாகக் கூறியிருக்கிறது.

"The impelling considerations were more political and social than educational......

In practice, the implementation of the three-language formula has led to several difficulties and it has not been very successful....

The situation was made by defective planning and by the half-hearted way in which the formula was implemented. As a result of the developments, considerable resources have been wasted over what may be regarded as an unproductive programme of implementation. As far as the third language is concerned, the students in many areas havegained very little because of the realsituation in which most of them studied it and the inadequate facilities that were provided for the purpose. The time has now come for a review of the entire situation"

என்று மிகத் தெளிவாகக் கூறியிருக்கிறது. இத்தனைக்குப் பிறகும் மும்மொழிக் கொள்கையைப்பற்றிக் காங்கிரஸ் காரர்கள் மீண்டும் மீண்டும் வலியுறுத்திக்கொண்டு வந்தால் அவர்களுடைய போக்கைப் பார்த்து நாடுதான் நகைப்பர், நல்லோர்கள் பாராட்ட மாட்டார்கள் என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். "மும்மொழித் திட்டம் என்று சொல்லி, மூன்றாவது மொழியின் பெயரால், ஒவ்வொரு மாநிலத்திலும் இந்தி மொழியை மூன்றாவது மொழியாகக் கற்றுக் கொடுக்க வேண்டுமென்று கூறி, கடைசியில் எல்லா மாநிலங்களிலும் இந்தி படித்து வருகிறார்கள், ஆகவே எல்லோரும் இந்தி மொழியைக் கற்றுக்கொள்ளுங்கள், இனிமேல் இந்திதான் இந்தியாவில் ஆட்சிமொழி" என்று கூறும் தைரியம் ஒரு காங்கிரசாருக்குக்கூட இல்லை. இந்தப் பேரவையில் மொழி பற்றிய தீர்மானம் வந்தபோது அதைப்பற்றி ஒன்றும் பேசாதவர்கள், வாய்பொத்தி பேசாமலிருந்தவர்கள் வெளியிலே போய் திட்டத்தைக் குறை சொல்வதை மக்கள் மன்றம் கவனத்தில் வைத்துக்கொண்டு எதிர்காலத்தில் அவர்களுக்கு நல்ல தீர்ப்பு வழங்க விருக்கிறது என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

போதனா மொழிப் பிரச்சினையைப் பற்றி எனக்குத் தெரிந்த ஒரு தெளிவான கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். எந்த மொழி கல்லூரியிலே போதனா மொழியாக இருந்துவருகிறதோ, அந்த மொழிதான் நிர்வாகத்தில் நிர்வாக மொழியாக இருக்க வேண்டும், ஆட்சியிலே இருக்க வேண்டும். ஆட்சியிலே ஒரு மொழி, பயிற்சியிலே பிறிதொரு மொழி என்ற நிலைமை இருக்குமானால் மொழிக் குழப்பம் தீராது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மாணவன் எந்த மொழியின்மூலம் அறிவைப் பெற்றானோ, எந்த மொழியின்மூலம் தன் சிந்தனா சக்தியைப் பெற்றானோ அந்த மொழியே ஆட்சியில், நிர்வாகத்தில்





இருக்குமானால், தன் சிந்தனாசக்தியை, தன் ஆற்றலைப் பயன்படுத்த முடியும். ஆட்சியிலே வேறொரு மொழி என்றிருந்தால், தன் ஆற்றலை நிர்வாகத்திற்குப் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுவிடும். மாணவன் தமிழிலே படித்து, நிர்வாகத்தை ஆங்கிலத்திலே நடத்தினால்—அல்லது மாணவன் ஆங்கிலத்திலே படித்து, நிர்வாகத்தை தமிழிலே நடத்தினால்—அல்லது மாணவன் ஆங்கிலத்திலே படித்து, இந்தியில் நிர்வாகம் நடந்தால் அந்த நிலைமையில், கற்ற சமுதாயத்தினால், படித்த சமுதாயத்தினால் நாம் எதிர்பார்க்கக்கூடிய பலனைப்பெற முடியாத நிலைமை ஏற்பட்டு விடும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். போதனா மொழியாக கல்லூரிகளிலே தமிழ் மணம் கமழ்ந்தால் மட்டும் போதாது, விஞ்ஞானப் பாடங்களையெல்லாம் தமிழ் மொழியில் கற்றால் மட்டும் போதாது. ஆட்சி, தமிழ் மொழியிலே நடந்தால்தான், நிர்வாகம் தமிழ் மொழியிலே நடந்தால்தான் நல்லது. மத்திய சர்க்காரில் இந்திக்கு எந்த அந்தஸ்து, எந்த உரிமை, எந்த நியாயம் வழங்கப்பட்டிருக்கிறதோ அவைகள் அனைத்தும் நம் தமிழ் மொழி பெற்றாக வேண்டும். அந்த நிலைமையில் ஆட்சிமொழி தமிழ் என்று சொல்லும்பொது, தமிழை உயிராக மதித்திருப்பவர்கள், தமிழ் வாழ வேண்டுமென்று விரும்புபவர்கள் சர்க்கார் பதவிகளிலும், நிர்வாகத்திலும் இடம் பெற்று அவர்களுடைய அறிவு சமுதாயத்திற்குப் பயன்பட வாய்ப்புகள் ஏற்படும் என்பதை மிகவும் வற்புறுத்தி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

போதனாமொழிப் பிரச்சினையில் நாம் வேகமாகச் செல்ல வேண்டும் என்றும், கொஞ்சம் தயங்கித் தயங்கிச் செல்ல வேண்டும் என்றும் இருவித கருத்துகள் கூறப்படுகின்றன. தமிழ் நாட்டில் போதனா மொழியாக தமிழ், ஆந்திரத்திலே தெலுங்கு, மைசூரிலே கன்னடம், கேரளாவிலே மலையாளம் என்று நான்கு மாநிலங்களும் வட்டார மொழியே போதனா மொழி என்று நான்கு விதமாகப் போய்க்கொண்டிருந்தால், இந்தி ஏகாதிபத்தியவாதிகள் இந்திய ஒருமைப்பாட்டின் பெயரால் அரசியல் வியாபாரம் நடத்திக் கொண்டிருப்பார்கள், தேசியக் கல்வியின் பெயரால் மாநிலங்களின் உரிமைகளைப் பறிக்க சூழ்ச்சி செய்வார்கள். தமிழகத்தில் தமிழ், ஆந்திராவிலே தெலுங்கு, மைசூரிலே கன்னடம், கேரளத்திலே மலையாளம், அங்கே குஜராத்தி, இன்னொரு இடத்திலே மராட்டி மொழி படித்தவர்கள் என்றால், மத்தியில் எப்படி ஒற்றுமை வளர முடியும்? தேசிய ஒற்றுமை எந்தவிதமாக இருக்க முடியும்? "இப்படி நீங்கள் பல மொழி பேசுபவர்களாக இருக்கிறீர்களே, தேசிய ஒற்றுமை உண்டாக வேண்டாமா? ஒருமைப்பாட்டைக் கட்டிக்காக்க வேண்டாமா? எனவே, இந்தி மொழியை மூன்றாவது மொழியாக ஏற்றுக்கொள்ளுங்கள், இந்தியை போதனா மொழியாக ஏற்றுக்கொள்ளுங்கள், இந்திதான் போதனா மொழியாக இருக்க வேண்டும்" என்பதை இன்றைக்குச் சொல்லா விட்டாலும், நாம் இப்போது ஏமாந்தால் எதிர்காலத்தில் இந்த நிலைமை வர இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

1956-ல் அமைக்கப்பட்ட "கேர்" கமிஷன் இதைப்பற்றித் தெளிவாகச் சொல்லியிருக்கிறது. அது தன் கருத்துக்களை, பரிந்துரைகளில் சற்று மாற்றிச் சொன்னாலும் இறுதியான உண்மையுணர்வைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறது.

The next point for consideration is whether the University medium should be Hindi or the Regional languages; and as a part of the larger question in particular, whether it is imperative that for certain courses or for particular stages of such courses, there ought to be an identical medium of instruction in all Universities in the country, which obviously can only be the Hindi Language.

இந்த விபத்து வராத வகையில் நாம் பார்க்க வேண்டுமானால், இந்த விபத்தைத் தடுத்து நிறுத்த வேண்டுமானால், மத்திய ஆட்சியிலும் தமிழுக்கு உரிமை வேண்டுமென்பதை இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

நேற்றையதினம் பேசிய பெருமதிப்பிற்குரிய நண்பர் திரு. பூவராகன் அவர்கள், "பி.யூ.சி. கல்வியை இலவசமாக்கினால் என்ன? (நாங்கள் ஆட்சிப் பீடத்தில் இருந்திருந்தால் கல்லூரிப் படிப்பையும் இலவசமாக்கியிருப்போம். பி.யூ.சி. கல்வியை இலவசமாக்கியிருப்போம்" என்றெல்லாம் பேசினார்கள். (மணியடிக்கப்பட்டது) இன்றையதினம் வருட வருமானம் 1,500 ரூபாய்க்குக் குறைவாகவுள்ளவர்களின் பிள்ளைகள் தாழ்த்தப்பட்ட மக்களாக இருந்தால் 2,000 ரூபாய்க்குக் குறைவான, வருவாயுள்ள மக்களின் குழந்தைகள், மலைஜாதியினர் மற்றவர்கள் எல்லாம் இலவசக் கல்வியை புகுமுக வகுப்பு வரையிலும் பெற்றிருக்கிறார்கள் என்பதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.) ஆசிரியர்களின் குழந்தைகள் இனி கட்டணம் செலுத்திப் படிக்க வேண்டாம் என்ற நிலை இருந்து வருகிறது. மேலும் மாத வருமானம் 400 ரூபாயுள்ள அரசினர் பதிவிலா ஊழியர்களின் குழந்தைகளுக்கும் இந்தக் கல்விச் சலுகை அளிக்கப்பட்டிருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். மிட்டா-மிராசுதார்கள், பஸ் முதலாளிகள், செல்வச் சீமான்கள், செல்வந்தர்கள், பணக்காரர்கள் இவர்களின் குழந்தைகள் மட்டும் கட்டணம் செலுத்துகின்றனர். இவர்களிடம் கட்டணம் பெறுவது தவறு? காங்கிரசின் சோஷலிசம் பணக்காரர்களுக்கு இலவசக் கல்வி அளிக்க வேண்டும் என்பதா? ஒரு சர்க்கார், அடிப்படைக் கல்வியை எல்லோருக்கும் வழங்க கடமைப்பட்டிருக்கிறது. இலவசக் கல்வியைப் பொறுத்தமட்டில் ஒரு புள்ளி விவரத்தைக் கொடுப்பதற்கு விரும்புகிறேன். பள்ளி இறுதி வகுப்பு வரை இலவசக் கல்வி இருந்தும் நமது மாநிலத்தில் இன்றையதினம் ஆரம்பப் பள்ளிகளில் 90 சதவீதமும், இடைநிலைப் பள்ளிகளில் 52 சதவீதமும், பள்ளி இறுதி வகுப்புள்ள பள்ளிகளில் 33 சதவீதமும் மாணவர்கள் படிக்கிறார்கள். இலவசக் கல்வியைப் பயன்படுத்திக்கொள்ளக்கூடிய அளவுக்கு சமுதாயத்தில் சரியான சூழ்நிலை இல்லையென்றே கூற வேண்டும். எல்லா மக்களும் கல்விச் சலுகை பெறும்படியான நிலையில் சமுதாயச் சூழ்நிலை மாறவேண்டும். பட்டப் படிப்புகளையும், தொழில் வசதிகளையும், வேலை வாய்ப்புக்களையும் மிட்டா-மிராசுதார், சீமான்கள், பணக்காரர்கள் வீட்டுப் பிள்ளை இலவசமாகப் பெற்று ஏழை வீட்டுப் பிள்ளைகளை சமுதாயத்தின் தாழ்வாரத்தில் தன்னந்தனியாக நின்றுவிடாதபடி காக்க வேண்டும் என்று கூறி எனக்குப் பேச வாய்ப்பளித்த தலைவருக்கு என் நன்றியைக்கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஓர் அறிவிப்பு. மாண்புமிகு அமைச்சரவர்களுக்கு ஒரு மணி நேரம் ஒதுக்கிவிட்டால், பாக்கி 2 மணி நேரம் உள்ளது. விவாதத்தில் கலந்துகொண்டு பேசுவதற்கு 17 உறுப்பினர்கள் பெயர் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, இனி வரும் உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் பேசுவதற்கு 7 நிமிடங்கள் கொடுக்கப்படுகிறது. அடுத்து, திரு. கோதண்டராமய்யா அவர்கள் பேசுவார்கள்

*Thiru K. S. KOTHANDARAMIAH: Hon. Deputy Speaker, Sir, I rise to support and welcome the Education Demand. From the Note on the Demand, we understand that the Hon. Minister for Education in particular and the other Members of the Cabinet in general have given special consideration for the development of education and they have sanctioned a considerable and good amount for this Demand. Now a thing that is already understood by all is that education has got universal value. The aims of education in a modern society are being multiplied and that the aim of education should be to draw out the inherent capacity of the child so that there may be opportunities to build an all-round pattern as could and also make him a fit citizen in the world. Even in countries which





are highly developed, they are lacking in facilities for educational development. Now, I will read one sentence from a Journal called 'Education'. It is stated—

> 'The most advanced countries still have educational problems unsolved and educational aims unachieved'.

So, when the advanced countries are in that condition, our Government have come forward with greater amount for the development of education for the current year. One thing I have to state with regard to the development of education. It should be considered as a continuous process from the elementary school course to the University course. They should not become watertight compartments. A child who enters a pre-primary school, i.e.' the nursery school, gradually goes through the primary school, middle school, high school and college. So, there should be a continuous arrangement made to help the child to understand the environment and also developmental faculties from beginning to end. Then only the child will be able to understand the complex problem of modern life and become a useful citizen. In this connection, I wish to state that hitherto for 15 to 20 years—the educationists have paid greater attention only to the quantitative side of education and the qualitative side of education has been completely neglected. As a result of it, both in elementary schools and high schools and even in colleges the standard of education has been going down. Unless the quality of education is improved, there is no use in increasing the number of schools and also spending a lot of amount on them. If this aspect is neglected, I think all our efforts and the amounts spent in other fields will not be fruitful. Therefore, I request the Government of Madras to pay their attention for the quality of education. In the note supplied to us, it is stated that they want to improve the quality of education and that they have provided a lot of amount for scientific articles and libraries, etc. I thank them. They have also provided some facilities for teachers and scholarship and freeships to students. In addition to that, they have to appoint a Committee to find out how the quality of education has gone down and since how many years it has gone down and what steps should be taken to improve the quality of education from the elementary school level to the college level. Unless this is done, I think, education will not be sound and useful.

Coming to the factors to improve the quality of education, there are a number of factors like teachers, audio-visual aids, school buildings, libraries, etc. Among them the most important factor is the teacher. A better equipped and better paid teacher will be of great help in improving education both in quality and quantity. Therefore, special attention should be paid to the salaries of teachers and also good treatment and the equipment which they need.

Coming to the teaching of English in elementary schools, I have to say that at present English is taught from the Third Standard. I am not able to understand how the students in the elementary schools who have not learnt even the elementary ideas of their mother

tongue should be forced to learn a foreign language. Some years ago it was taught from the Fifth Standard and that is something better. Taking the mental development and the health of the students, I do not think that it is good to teach English from the Third Standard. In this connection I wish to quote some excerpts from the Education Quarterly Report published by the Ministry of Education, Government of India. In it, it is stated as follows :—

> 'The Commission has very strongly expressed the view that English should not be taught at this stage. It is interesting to recall that the Government of India in its Resolution on Indian Educational Policy in 1904 stated : "English has no place, and should have no place, in the scheme of primary education. As a general rule a child should not be allowed to learn English as a language until he has made some progress in the primary stages of instruction and has received a thorough grounding in his mother-tongue.'

Therefore, what I feel is that instead of teaching English from the Third Standard, it should be taught from the Fifth standard when the child would have gained knowledge in the mother tongue.

Next I come to the question of linguistic minorities. The Government of Madras have now introduced the two-language scheme. I welcome it. But in our State there are lakhs and lakhs of people whose mother-tongue is different from the regional language. For them a third language should be provided and the third language may be any language. It should be left to the choice of the parents and students. I request the Government of Madras to issue orders as early as possible providing for the study of a third language for the sake of linguistic minorities . . .

(At this stage Mr. Deputy Speaker sounded the gong twice and called upon the hon. Member, Thiru M. P. Sivagnanam to speak.)

* **திரு. மா. பொ. சிவஞானம் :** பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பிரேரித்துள்ள கல்வி மானியத்
முற்பகல் 11-00 தில் பல நல்ல அம்சங்கள் இருப்பதைக் கண்டு மகிழ்ச்சி அடைகிறேன். அதற்காக, கல்வி அமைச்சரைப் பாராட்டுகிறேன். இதற்கு முன்பு இரண்டொரு சந்தர்ப்பங்களில் போதனாமொழி உட்பட கல்விப் பிரச்சினை முழுவதையும் ஆராய்ந்து ஆலோசனை கூற ஒரு குழு அமைக்கப் போவதாக அமைச்சர் அவர்கள் இந்த மாமன்றத்திலும், வெளியிலும் அறிவித்திருக்கிறார்கள். ஆனால் இது வரையில் அந்த வித குழு அமைக்கப்படவில்லை. விரைவில் அதனை அமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழில் வித்வான் தேர்வுக்கு 30 வயதிற்கு மேல் தான் தனிப்பட்டவர்கள் அனுமதிக்கப்படுவார்கள் என்கிற விதியைப் பல்கலைக் கழகத்தார் வகுத்துக்கொண்டிருக்கிறார்கள். இது தனிப்பட்ட முறையில் யாரும் தேர்வு எழுத முன்வரக் கூடாது என்று தடுப்பதைப் போலத்தான் இருக்கிறது. ஒருவர் முப்பது வயதிற்கு மேல்தான் வித்வான் தேர்வுக்கு பரீட்சை எழுத முடியும் என்றால், அதற்குள் அவருக்குத் திருமணமாகி, ஒன்றிரண்டு குழந்தைகளையும் பெற்ற பிறகு தமிழை விரும்புகிற நிலையிலேயே இருக்கமாட்டார்கள். ஆகவே, 30 வயது என்கிற வரம்பை





தயவு செய்து எடுத்துவிடுவதற்கு இன்னும் குறைந்த வயதிலேயே பரீட்சை
எழுத அனுமதிப்பதற்குப் பல்கலைக் கழகத்திற்கு இந்த அரசு ஆலோசனை
கூறவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நூல் நிலைய இயக்கம் துவக்கப்பட்டபோது எதிர்பார்த்த
அளவுக்கு நல்ல முறையில் வளர்க்கப்படவில்லை என்பதைப் பார்க்கிறோம்.
சென்னை மாவட்ட நூல்நிலையக் குழுவின் தலைவன் என்கிற முறையில்
நான் சிறிது அனுபவம் பெற்றிருக்கிற காரணத்தினால், இந்த அரசுக்கு
ஒரு ஆலோசனை கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். நூல் நிலைய இயக்
கத்திற்கென்றே ஒரு தனி இயக்குநர் நியமிக்கப்படவேண்டும். அப்படி
நியமிக்கப்பட்டு, அவரது முழு கவனத்தில் இந்த ஒரு துறை இயங்குமானால்
தான் அது பொதுமக்களுக்குப் பயன்பட முடியும் என்று நான் நம்பு
கிறேன். ஆகவே அதையும் கல்வி அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக்
கொண்டுவருகிறேன்.

அடுத்து, கல்லூரிகளில் இந்த ஆண்டு முதல் தமிழை போதனாமொழி
யாகக் கொண்டு வருவது என்று தீர்மானித்திருக்கிறோம். விஞ்ஞானத்
துறைப் பாடங்களுக்கும் தமிழைக் கொண்டுவருவது என்று திட்டமும்
வகுத்திருக்கிறோம். இதே நேரத்தில் உயர்நிலைப் பள்ளிகளில் ஆங்கில
போதனா மொழி வகுப்புகள் ஆண்டுதோறும் அதிகப்படுத்தப்பட்டு வரு
கின்றன. கல்லூரிகளில் தமிழையே படிப்படியாகக் கொண்டுவந்து விடுவது
என்று தீர்மானித்துவிட்டு, இப்படி உயர்நிலைப் பள்ளிகளில்
ஆங்கில போதனா வகுப்புகளை அதிகப்படுத்திக்கொண்டே போவது
நம்முடைய கொள்கையை ஒரு குழப்பமாக அமைத்துவிடக்கூடும். முன்னால்
இருந்த ஆட்சியாளர்கள் தான் அதைச் செய்தார்கள் என்றாலும் கூட,
நாம் எல்லா கல்லூரிகளிலும் பயிற்சி மொழியாகத் தமிழைக் கொண்டு
வந்துவிடுவது என்று முடிவு எடுத்த பிறகு உயர்நிலைப் பள்ளிகளில்
அந்தச் சலுகை அளிக்கப்படுவது நிறுத்தப்படவேண்டும் என்று தெரிவித்
துக்கொள்கிறேன். அப்போது நான்கு மொழி மாகாணமாக இருந்தது.
அதனால், உயர்நிலைப் பள்ளியில் ஆங்கில போதனாமொழிப் பிரிவுகள்
ஏற்படுத்தப்பட்டன. மொழிவழி சிறுபான்மையோரின் நலனை முன்னிட்டு
அப்போது ஆங்கிலத்தில் பயிலுவதற்கு அந்தச் சலுகை அளிக்கப்பட்டிருக்
கிறது.

அதிலும் ஆங்கிலேயர்கள் இருந்த காலத்திலே அப்படிப்பட்ட சலுகை
தரப்பட்டது. இப்பொழுது நிலைமை அப்படியல்ல. சென்னை மாநிலம்
மொழிவாரி பிரிக்கப்பட்டு விட்டது. ஆகவே, உயர்நிலைப்பள்ளிகளில்
இன்னும் ஆங்கிலப் பயிற்சிமொழித் திட்டத்தை அனுமதிக்கக்கூடாது
என்று கேட்டுக்கொள்கிறேன். கல்லூரியில் பயிற்சிமொழி தமிழ்தான் என்
பது பற்றி இம்மன்றம் முடிவு எடுத்திருக்கிறது. இன்னும் ஐந்தாண்டுக்
காலத்திற்குள் இந்த அரசாங்கம் தமிழைப் பயிற்சி மொழியாக ஆக்க
விரைவிலே ஆவனசெய்யத் தீர்மானித்திருக்கிறது—என்ற முடிவு எடுத்
ததற்குப்பின்னால் 'பயிற்சி மொழிப் பிரச்சினை' என்பது இல்லை. அது,
'பயிற்சிமொழித் திட்டமாக' மாறிவிட்டது. ஒன்றில் முடிவு எடுக்கப்
படாமல் இருந்தால்தான் அது பிரச்சினையாக நிற்கும். முடிவு ஜன
நாயக ரீதியிலே எடுக்கப்பட்டதற்குப் பிறகு அது திட்டமாக மாறிவிடு
கிறது. ஆகவே, இன்னும் அதைத் திரும்பத் திரும்பப் 'பிரச்சினை' என்று
சொல்லிக்கொண்டிருப்பதில் பயன் இல்லை. எதிர்க்கட்சித் துணைத் தலைவர்
அவர்கள் இந்தக் கொள்கையை ஏற்றுக்கொண்டார்கள், அதற்கு
என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள் பேசும்
பொழுது "படிப்படியாக இதை எடுத்துக்கொள்ளவேண்டும்" என்று சொன்
னார்கள். நாம் சுதந்திரம் பெற்று இருபது ஆண்டுகள் ஆகிவிட்டன.
உயர்நிலைப்பள்ளிகளில் தமிழைப் பயிற்சிமொழியாக்கி ஏறத்தாழ முப்பது
ஆண்டுகள் முடிந்துவிட்டன. 1939-ஆம் ஆண்டில் தமிழ் உயர்நிலைப்
பள்ளிகளில் பயிற்சி மொழியாக்கப்பட்டு 29 ஆண்டுகள் கடந்து போய்
விட்டன. முன்பு இங்கு கல்வியமைச்சராக இருந்த திரு. சி. சுப்ர
மணியம் அவர்கள் 1963-ம் ஆண்டிலே எல்லாக் கல்லூரிகளிலும் தமிழ்

பயிற்சிமொழியாக்கப்படும் என்று சொன்னார்கள். அந்தக் கெடுவும் முடிந்துவிட்டது. இன்னும் இது நிறைவேறவில்லை. ஆகவே, இன்னும் "படிப்படியாக" என்று சொல்லிக்கொண்டிருக்கக் கூடாது. திட்டம் நிறைவேற்றப்படுவது படிப்படியாக என்றாலும், எப்படி அதனுடைய நடைமுறை இருக்குமென்பதைத் தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆலடி அருணா அவர்கள் பேசும்பொழுது அந்தந்த மாநிலத்தில் அந்தந்த மாநில மொழி பயிற்சி மொழி என்று வந்து விட்டால், பொது மொழி இல்லையென்ற காரணத்தைக் காட்டி, இந்தி வந்து புகுந்து கொள்ளும் என்று சொன்னார்கள். நான் இன்னொரு கோணத்தில் இருந்து பார்க்கிறேன்; இங்கே பயிற்சி மொழி தமிழ் என்று இல்லாமல் இருந்தால், ஆங்கிலத்திற்குப் பதிலாக இந்தி வந்துவிடும் எனபதையும் நாம் கவனத்தில் வைததுக்கொள்ளவேண்டும். இந்திக்குப் பதிலாக ஆங்கிலம் வேண்டும் மத்திய அரசில் என்று நாம் வற்புறுத்துவது நியாயம். ஆனால், பிரதேச ரீதியில் தமிழுக்குப் பதிலாக ஆங்கிலம் என்று ஒரு சாரார் சொல்லி வருவார்களானால், அவர்கள், ஜனநாயக ரீதியில் அல்லாமல், தமிழ் மொழிப் பற்று இல்லாமல், ஆங்கில மோகத்தால்தான் அப்படி விரும்புகிறார்கள் என்று கருத நேரிடுகிறது. தமிழ் தான் இம்மாநிலத்தின் பயிற்சிமொழி, ஆட்சிமொழி என்று எல்லா நிலைகளிலும் வருவதற்கு முயற்சிகள் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். திரு. கோதண்டராமய்யா அவர்கள் சொல்லியதுபோல் மூன்றும் வகுப்பிலிருந்தே ஆங்கிலத்தைத் துவக்க வேண்டுமென்று சொல்வதற்குக்காரணம் என்ன? ஆரம்பத்திலிருந்தே தாய்மொழி எது, வேற்றுமொழி எது என்று புரிந்துகொள்ள இயலாத பருவத்திலே, வேற்றுமொழியைப் பயிற்றுவிப்பதால் பலனில்லை. அப்படியில்லாமல் இருந்தால்தான் தாய்மொழிடபற்றை வேற்றுமொழிப் பற்று அழிக்காமல் இருக்கும். அரசாங்கக் கல்லூரிகளில் எல்லாம் புகுமுக வகுப்புகளில் கலையியல் பாடங்கள் கற்றுக்கொடுக்கத் தமிழ் பயிற்சி மொழியாகவும், புகுமுக வகுப்புகளில் விஞ்ஞானப் பாடங்களையும் கற்றுக்கொடுக்க தமிழ் பயிற்சிமொழியாகவும் ஆக்கப்படும் என்று இந்த மன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்காக நான் கல்வியமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன். ஆனால் அரசாங்கக் கல்லூரிகளில் புகுமுக வகுப்புகளில் கலையியல் பாடங்களுக்கு தமிழ் பயிற்சிமொழியாகும், விஞ்ஞானத்திற்கும் தமிழ் பயிற்சி மொழியாகும் என்று சொல்லிய பின்னர், தனியார் கல்லூரிகளிலும் அப்படிச் செய்வதற்கு முயலவேண்டும். அப்படிச் செய்யாவிட்டால், தனியார் கல்லூரிகளை ஆங்கிலத்தை வைத்துக்கொள்வதற்கு அனுமதித்தால், அரசாங்கக் கல்லூரிகளுக்கு வருகின்ற மாணவர்கள் எண்ணிக்கை குறைந்துவிடுவதற்கான அபாயம் ஏற்படும். அந்த அபாயத்தைத் தடுக்கக்கூடிய வகையில் தனியார் கல்லூரிகளிலும் தமிழைக் கொண்டுவரத் திட்டமிட வேண்டும். அரசாங்கம் தன்னுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி பல்கலைக் கழகத்தின் ஒத்துழைப்புடன் எல்லாக் கல்லூரிகளிலும் தமிழைப் பயிற்றுமொழியாகவும்—புகுமுக வகுப்புகளில் விஞ்ஞானப் பாடங்களுக்குத் தமிழைப் பயிற்று மொழியாகவும்—ஆக்குவதற்கு முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். கல்வியமைச்சர் அவர்கள் தமிழ் ஆர்வமும், கல்வியில் ஆர்வமும் உள்ளவர்கள்; அவர்கள் செல்வாக்கை உபயோகப்படுத்தி, தமிழ் மொழியைப் பயிற்று மொழியாக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. பி. துரைராஜ்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் கல்வியமைச்சர் அவர்களால் வைக்கப்பட்டு இருக்கிற கல்வி மானியக் கோரிக்கையை வரவேற்று என்னுடைய கருத்துக்களைக் கூறுவதற்கு வாய்ப்புக் கொடுத்தமைக்காக நான் உள்ளபடியே பெருமகிழ்ச்சியடைகிறேன். கல்வி மானியக் கோரிக்கையில் உள்ள புள்ளிவிவரங்களைப்





பார்க்கும்பொழுது, கடந்த இருபது ஆண்டுகளிலும் வழக்கமாகக் கூடுதலாக ஒதுக்கப்பட்டிருப்பதைபோல் இந்த ஆண்டு அதைவிடக் கூடுதலாக நிதி ஒதுக்கியிருப்பது கண்டு நான் பெருமகிழ்ச்சி கொள்கிறேன். இப்பொழுது ஆட்சிப் பொறுப்பிலுள்ள தமிழக அரசானது தமிழ்நாட்டு மக்கள் எவ்வளவு நல்ல முறையில் கல்வியைப் பெறவேண்டுமென்ற அளவில் பார்த்து அதற்கு முக்கியத்துவம் கொடுத்து நிதி ஒதுக்கியிருப்பது கண்டு பெருமகிழ்ச்சியடைகிறேன். மொத்தச் செலவில் 29·1 சதவீதம் கல்விக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த மானியத்தின்மேல் ஒருசில கருத்துக்களை நான் சொல்வதற்கு ஆசைப்படுகிறேன். தொடக்கத்தில் கல்வியின் தரம் குறைந்துவிட்டது. அதை அபிவிருத்தி செய்யவேண்டுமென்று பேசப்பட்டது. கல்வியின் தரத்திற்கு அடிப்படையான காரணமாக இருப்பது ஆரம்பக் கல்விதான். ஆகவே ஆரம்பக் கல்விக்கு நாம் நல்லமுறையில் வாய்ப்பும் வசதியும் செய்துகொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆரம்பப் பள்ளிகளிலே வேலை செய்யக்கூடிய ஆசிரியர்களுக்குக் கூடுதலாக சம்பளம் கொடுக்கப்பட்டிருப்பதைக் கண்டு பெருமகிழ்ச்சியடைகிறேன். ஏழை எளிய மாணவர்களுக்கு அதிக உதவித் தொகையைக் கொடுக்கக் கூடிய வாய்ப்பையும் ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மதிய உணவைப் பொறுத்தவரையில், அதை ஏற்று நடத்துகின்ற ஆசிரியர்கள் குறைந்தது மாதத்திற்கு நான்கு அல்லது ஐந்து தடவைகளாவது பள்ளித் தணிக்கை அதிகாரிகளின் அலுவலகங்களுக்குச் செல்லக் கூடிய அவசியம் ஏற்படுகிறது. அப்படி ஆசிரியர்கள் சென்று திரும்பக் கூடிய அளவுக்காவது செலவுக்குரிய பயணப் படியை அதிகமாகத் தருவதற்கு இந்த அரசாங்கம் 5 ரூபாய் என்ற அளவிற்கு மதிய உணவு அலவன்ஸைக் கொடுப்பதற்கு முன்வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நான் ஏன் அலவன்ஸ் கொடுக்கவேண்டுமென்று சொல்கிறேன் என்றால் அப்படிக் கொடுத்தால் அவர்கள் அதிக அக்கறையுடன் நிர்வாகத்தைக் கவனித்து தமிழக அரசுக்கே ஒரு நல்ல பெயரை ஏற்படுத்திக் கொடுப்பார்கள் என்பதால்தான். ஏறத்தாழ 31,200 ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் இருக்கின்றனர். ஒவ்வொருவருக்கும் மாதம் 5 ரூபாய் வீதம் அதற்கு 1 லட்சத்து 56 ஆயிரம் ரூபாய் வரை கொடுக்க வேண்டியிருக்கும். அதைக் கொடுத்து உதவினால் அந்த ஆசிரியர்கள் நல்ல எண்ணத்திலே மகிழ்ச்சி அடைந்து இந்த திட்டத்தை இன்னும் நல்ல முறையில் நிறைவேற்றுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆதாரக் கல்வி முறையை மறுபரிசீலனை செய்யவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆதாரக் கல்வியின் சார்பாக பயனற்றுக் கிடக்கக் கூடிய நூற்றுக்கணக்கான ராட்டைகளும், நூற்புக் கருவிகளும் பயனற்று முடங்கிக் கிடக்கின்ற நிலைமையைப் பார்க்கிறபோது இந்தக் கல்வியை மாற்றி நல்ல முறையில் அந்தத் தொகையைச் செலவுசெய்ய ஆராய்ச்சி செய்து ஆதாரக் கல்வியை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தனியார் பள்ளிகளை தேசியமாக்கவேண்டுமென்று கோரிக்கை கடந்த சில ஆண்டுகளாகவே இருந்து வருகிறது. தனியார் பள்ளிகள் அனைத்தையும் அரசாங்கமே ஏற்றுக்கொள்வதாய் இருந்தால் அதற்கு இருக்கிற பொருளாதார நெருக்கடியை நான் உணருகிறேன். ஆனால் காலக் கிரமத்தில் அவற்றைத் தேசியமயமாக்குவதற்கு முன்னேற்பாடுகளாக சில காரியங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தனியார் பள்ளிகளில் பணி புரியக் கூடிய ஆசிரியர்களுக்கு வேலை உறுதிப்பாடு, அதாவது அவர்களுடைய வேலை பாதுகாக்கப்பட ஏற்பாடு செய்வதற்கு அதிகாரிகள் அக்கறையுடன் நடவடிக்கை எடுத்துக்கொள்கின்ற முறையிலே வழி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆசிரியர்களுடைய குறைகளை அவர்கள் கவனத்தில் வைத்துக்கொண்டு ஆறு மாதங்களுக்குள்ளே அவற்றை நிவர்த்தி செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இருக்கக் கூடிய வருமான வரம்பை இரண்டாயிரமாக நம்முடைய அரசு கடந்த ஆண்டில் உயர்த்தியது. அந்த அளவைக் கூட்டி இந்த ஆண்டு முதல் 2,500 ஆக உயர்த்துவதற்கு ஏற்பாடு செய்து சலுகைகள் தருவதற்கு முயற்சி செய்யவேண்டுமென்று தாழ்த்தப்பட்ட மக்களின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

செகண்டரி கிரேட் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் ஹையர் கிரேடு ஆசிரியர்கள் சம்பளம் வாங்கிக்கொண்டிருந்தார்கள். அவர்களில் 5 ஆயிரம் பேருக்கு அரசாங்கம் பதவி உயர்வு கொடுத்தது. அதேபோல் இந்த ஆண்டு 3 ஆயிரம் பேருக்கு பதவி உயர்வு கொடுத்ததற்காக நான் இந்த அரசாங்கத்தைப் பாராட்டுகிறேன். தனியார் பள்ளிகளில் வேலை செய்கின்ற ஆசிரியர்களுக்கும், தனியார்களுக்கும் ஏற்படுகின்ற தகராறுகளைப்பற்றிய அப்பீல்கள் வந்தால் அதிகாரிகள் அவற்றை அனுப்புவதில் சுணக்கம் காட்டாமல் எவ்வளவு விரைவிலே முடியுமோ அவ்வளவு விரைவிலே அனுப்பினுல்தான் அவர்களுக்குள்ள குறைகள் நீங்கி அவர்கள் நல்ல உண்மையான அக்கறையுடன் தங்களுடைய மனத்தை பணியில் செலுத்தி உற்சாகத்துடன் வேலை செய்வார்கள் என்று கூறிக்கொண்டு எனக்குப் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்ததற்காக தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** உங்களுடைய கட்சி உறுப்பினர் திரு. ஞானசம்பந்தம் அவர்கள் பேசவில்லையென்றும் அந்தக் காலத்தை அவர்களுடைய கட்சி உறுப்பினர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டதால் திரு. வரதராசன் அவர்கள் 14 நிமிடங்கள் பேசலாம்.

* **திரு. என். வரதராசன் :** தலைவர் அவர்களே, இன்று கல்விக்காக 56 கோடி ரூபாயை, தமிழக அரசுக்குக் கிடைக்கும்படியான வருவாயில் நான்கில் ஒரு பகுதியை, ஒதுக்குகிறோம். இந்தப் பணம் நம்முடைய மாணவர்களுக்காகவும், ஆசிரியர்களுக்காகவும் கல்விக்காகப் பூரணமாகப் பயன்படும் முறையில் நம்முடைய திட்டங்கள் இருக்க வேண்டுமென்று நான் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். இதிலே இன்று தனியார் துறைக்கு சுமார் 25 கோடி ரூபாய் வரையிலே செலவழிகிறது. ஆரம்பப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி, கல்லூரி என்ற மட்டத்திலே இந்த 25 கோடி ரூபாயும் பூரணமாகச் செலவழிக்கப்படுகிறது. இதைப் பற்றி மறு பரிசீலனை செய்யவேண்டும். தனியார் துறையில் இருக்கும்படியான பள்ளிகள் சுரண்டல் கூடமாக நடக்கின்றன. ஆயிரம் ரூபாய் கொடுத்தால் தான் ஆசிரியர்களை வேலைக்கு எடுத்துக் கொள்ளும் நிலை இருக்கிறது. நினைத்தால் ஆசிரியர்களை வேலையிலிருந்து டிஸ்மிஸ் செய்வது, சஸ்பெண்ட் செய்வது, வேலையை விட்டு வெளியேற்றுவது என்ற நிலைமைகள் தொடருகின்றன. இதற்கு நான் பல உதாரணங்களைக் கொடுக்க முடியும். ஒன்றிரண்டைக்கொடுக்கிறேன். திண்டுக்கல்லில் ராணி உதவி ஆதார ஆரம்பப் பள்ளி என்ற ஒரு பள்ளி இருக்கிறது. அதிலே ஏழு ஆண்டுகளுக்கு முன்பாக ஸ்டெல்லா ஆக்னீஸ் மேரி என்ற பெண் ஆசிரியரை வேலையிலிருந்து நீக்கி விட்டார்கள். அவ்வாறு வேலையிலிருந்து நீக்கியது தவறு என்று கல்வி இலாகா அதிகாரிகளால் தீர்ப்புக் கூறப்பட்டும் இன்னும் வேலைக்கு எடுத்துக் கொள்ளவில்லை. ஏழு ஆண்டுகளாக வேலை இல்லாமல் இருக்கிறார்கள். அமைச்சர்களே, சபாநாயகர் அவர்களே, இந்த செய்கையால் கல்வியைப் அபிவிருத்தி செய்ய முடியுமா ? இவர்களாலே கல்வியிலே அபிவிருத்தி காண முடியுமா ? இதே போல் திண்டுக்கல் தேவாரப்பன்பட்டி என்ற இடத்தில் இ. வி. வி. சாலா முத்தோர் தனியார் ஆரம்பப் பள்ளியில் திரு. பழனிசாமி என்ற ஆசிரியரை வேலையிலிருந்து நீக்கி விட்டார்கள். அவ்வாறு வேலையிலிருந்து நீக்கியது தவறு என்று கல்வி அதிகாரிகள் தீர்ப்புக் கூறியும் மறுபடியும் அவர் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை. கம்பம் புதுப்பட்டி (ஒக்கலிக கவுண்டர்) தனியார் பள்ளியில் ஆசிரியர்களைப் பழி வாங்குதல் நடந்து





வருகிறது. இப்படி நூற்றுக்கணக்கான உதாரணங்களை வைத்திருக்கிறேன். இப்படிப்பட்ட தனியார் துறைப் பள்ளிகள் இருப்பதன் காரணமாக நாம் செலவழிக்கக்கூடிய பணம் மாணவர்களுக்குப் போய்ச் சேராமல், கல்வி அபிவிருத்திக்குப் பயன்படாமல், சுரண்டல் கூட்டத்திற்குப் பயன்படும் நிலைமைதான் இருக்கிறது. இவர்கள் தங்களுடைய செல்வாக்கை கல்வி இலாகாவிலே அதிகமாக உபயோகப்படுத்தி குறிப்பாக அதிகாரிகளைக்கூடத் தங்களுக்குப் பின்னுலே வைத்துக் கொள்கிருர்கள் என்று நிச்சயமாகச் சொல்ல முடியும்.

மதுரை நகரில் பிரசித்தி பெற்ற பள்ளிக் கட்டடம் இடிந்து 40 மாணவர்கள் கொல்லப்பட்டதற்குக் காரணமாக இருந்த சரஸ்வதி பள்ளி மானேஜருக்கு மீண்டும் பள்ளியை நடத்துவதற்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னுல் அது ஆச்சரியமாக இருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு மானேஜருக்கு எப்படி அனுமதி கிடைத்தது என்று பார்க்க வேண்டும். தனியார் துறை பள்ளிகளை அரசின் பக்கம் கொண்டு வருவதற்கான ஏற்பாடுகளை உறுதியாகச் செய்ய வேண்டும். நான் ஒரு காலத்தில் கேள்விப்பட்டிருக்கிறேன். அடிமையை ஆண்டான் சவுக்கால் அடிப்பான் என்று. அந்த நிலையில் இன்று ஆசிரியர்களை தனியார்கள் நடத்தி வருகிருர்கள். கல்வி கற்றுக் கொடுப்பவன் இறைவன் என்று சொல்லுகிறோம். அந்த இறைவன் நிலையிலே இருக்கிறவர்கள் இன்று சோற்றுக்குத் திண்டாடிக் கொண்டிருக்கிருர்கள். வேலையில்லாமல் திண்டாடிக் கொண்டிருக்கிருர்கள். நூறு ரூபாய், இருநூறு ரூபாய், ஆயிரம் ரூபாய் கொடுத்தால்தான் வேலை கிடைக்குமென்ற நிலையில் இருக்கிருர்கள். அவர்கள் மூன்று மாதங்களிலே வெளியேற்றப்படுகிருர்கள். இந்த நிலைமை கடந்த 20 ஆண்டு காலமாக வளர்ந்து வந்திருக்கிறது. புதிய தமிழக அரசு இது சம்பந்தமாக முறையான நடவடிக்கைகளை எடுத்து தனியார் பள்ளிகளை நேரடியாக அரசே ஏற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அதற்கிடையிலே ஆசிரியர்கள் சம்பந்தமாக சில அபிவிருத்தி வேலைகளைச் செய்வதிலே கவனம் செலுத்த வேண்டும்.

ஆசிரியர்கள் "காமன் சர்வீஸ் ரிஜிஸ்டர்" வேண்டுமென்று கேட்கிருர்கள். ஒரு ஆசிரியர் ஒரு பள்ளியிலே இரண்டு ஆண்டுகள் வேலை செய்த பிறகு வெளியே வருகிருர். அவருடைய அந்த சர்வீஸ் தொலைந்தது. நகரசபைப் பள்ளியில் பிறகு 2 ஆண்டு வேலை செய்து வெளியே வருகிருர். அந்த சர்வீஸ் அதோடு தொலைந்தது. ஆகவே, அவர்களுடைய சர்வீஸ் கணக்கைக் காட்டக்கூடிய வகையில் காமன் சர்வீஸ் ரெஜிஸ்டர் வைப்பதைப்பற்றி ஆலோசிக்க வேண்டும். தனியார் பள்ளிகளில் வேலை செய்யும் ஆசிரியர்களுக்கு நாமே நேரடியாக சம்பளத்தை மணியார்டரில் அனுப்ப வேண்டும். மானேஜ்மெண்ட் நேரடியாக பணம் கொடுக்கும்போது அவர்கள் செய்கிற அநியாயமும், அக்கிரமமும் சொல்லி முடியாது. எப்படி சர்வீஸ் கமிஷன் மூலம் அரசாங்க வேலைக்கு எடுக்கிறோமோ அதை போன்று எல்லாப் பள்ளிகளுக்கும் சேர்த்து மொத்தமாக எத்தனை செகண்டரி கிரேடு, ஹையர் கிரேடு ஆசிரியர்கள் தேவை, எத்தனை பி. டி. ஆசிரியர்கள் தேவை என்றெல்லாம் பார்த்து சர்வீஸ் கமிஷன் போன்ற முறையில் தேர்ந்தெடுத்து எல்லாப் பள்ளிகளுக்கும் அனுப்ப வேண்டும். இந்த முறையைக் கடைப் பிடித்தால் தனியாருடைய லஞ்ச லாவண்யத்தை ஒழிக்க முடியும். கல்விக் கமிஷன் —கோத்தாரி கமிஷன்—தீர்ப்புக்களை கொடுத்திருக்கிருர்கள். அதன்படி தமிழகத்திலே எந்த அளவுக்கு அபிவிருத்தி செய்ய முடியும் என்று பரிசீலித்து ஏழை ஆசிரியர்களுக்கு நல்ல வாழ்க்கை வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்று ஒரு ஆசிரியருக்கு 40 மாணவர்கள் என்ற விகிதாசாரம் இருக்கிறது. நாற்பது மாணவர்களை கண்காணித்துப் பார்த்துக் கொண்டிருக்கலாமே தவிர கல்வி கற்றுக் கொடுக்க முடியாது. ஆகவே, அந்த எண்ணிக்கையைக் குறைக்க வேண்டும்.

[திரு. என். வரதராசன்] [1968 மார்ச் 7

ஜில்லா போர்டு உயர்நிலைப் பள்ளிகளைச் சர்க்கார் எடுத்துக் கொண்டிருக்கிறது. அதே போன்று நகரசபை உயர்நிலைப் பள்ளிகளையும் எடுத்துக் கொள்ளவேண்டும். ஜில்லா போர்டு உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் இரண்டாவது கிரேடு தலைமையாசிரியர் என்று கருதப்படுகிறார்கள். அவர்கள் நீண்ட கால சர்வீசில் இருந்தவர்கள் என்பதாலே அவர்கள் முதல் கிரேடு தலைமையாசிரியர்கள் என்று கருதப்படும் நிலைமையை ஏற்று உத்தரவிட வேண்டும்.

கல்லூரிகளிலே இன்று அட்மிஷன் முறைகளிலே சில சிக்கல்கள் இருக்கின்றன. ஒவ்வொரு கல்லூரியும் தான் அட்மிஷன் செய்யவேண்டுமென்று நிலை இருப்பதை மாற்றி, மொத்தமாக தமிழ் நாட்டில் உள்ள கல்லூரிகள் அனைத்திலும் எத்தனை இடங்களில் பி. எஸ்.ஸிக்கு மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும், பி. ஏ. வில் எத்தனை மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும், பி. யு சி.யில் எத்தனை மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று பார்த்து மொத்தமாகத் தேர்ந்தெடுத்து அந்தந்த கல்லூரிகளுக்கு மாணவர்களை அனுப்புவது என்றால் அட்மிஷன் முறையிலே ஏற்படும் தவறுகளைத் தவிர்க்க முடியும். வைத்தியக் கல்லூரி அட்மிஷன் சம்பந்தமாக உயர் நீதி மன்றம் வரை தாவாக்கள் போவதைப் பார்க்கிறோம். நிச்சயமாக அந்த நிலைமை தவிர்க்கப்பட வேண்டியது அவசியமாகும். விண்ணப்பிக்கிறவர்கள் அத்தனை பேருக்கும் நிச்சயமாக இடம் கொடுப்பது என்பது முடியாத காரியம். ஒவ்வொரு பகுதிக்கும், பிரிவினருக்கும் அரிசன பகுதி, மற்றும் பின் தங்கிய பகுதி என ஸ்தானங்கள் ஒதுக்கி வைத்திருக்கிறோம். அந்தந்த பகுதியினரின் விண்ணப்பங்களை எடுத்துக் கொண்டு அதிலே திறமையுள்ளவர்களை, மார்க்குகள் அதிகமாக வாங்கியுள்ளவர்களை மட்டும் தேர்ந்தெடுக்கக்கூடிய நிலை ஏற்பட வேண்டும். இவ்வளவு மார்க்குகளுக்கு மேல் வாங்கியவர்கள்தான் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்ற நிலைமை மேற்கொண்டால் புகார்களுக்கு இடம் இருக்காது.

மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றிய பிறகும், நமது நாட்டின் தொழில் வளர்ச்சி பின் தங்கிய நிலையில் இருப்பதை அறிவோம். இந்நிலையில் தொழில் வளர்ச்சி ஏற்பட வேண்டிய காலத்தில் இஞ்சினியர்களுக்கு வேலையில்லை என்ற நிலை ஏற்பட்டுள்ளது. இது பற்றி நேற்று பேசிய எதிர்க் கட்சித் தலைவர் இஞ்சினியர்களுக்கு வேலை யில்லை என்று சொன்னாரே தவிர, காரணத்தைச் சொல்ல வில்லை. அடுத்த ஆண்டு எஞ்சினியர் படிப்பில் 30 சத விகிதம் மாணவர்களைக் குறைக்க வேண்டுமென மத்திய சர்க்கார் சொல்ல ஆரம்பித்திருக்கிறது. இவ்வாறு 30 சத விகிதத்தை வெட்டுவதால் ஆபத்தான நிலைமை உருவாகும். தமிழகத்தில் ஆசிரியர் பயிற்சி பெறுகிறவர்கள் அனைவருக்கும் வேலை கிடைக்காத நிலை இருப்பதால் அந்த எண்ணிக்கையைக் குறைக்கலாமா என்பது பற்றி நமது மாநில அரசு ஆலோசிப்பதாகத் தெரிகிறது. இந்த மாதிரி மாணவர்களின் எண்ணிக்கையைக் குறைக்கக்கூடாது. அவ்வாறு எஞ்சினியரிங் மாணவர்களின் எண்ணிக்கையைக் குறைக்காமல் இருப்பதற்கு மத்திய அரசில் இருந்து அனுமதியைப் பெற்றுத்தீர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மதிய உணவு அளிப்பதிலே விஷ உணவுக் காரணமாக பிள்ளைகள் ஆஸ்பத்திரியிலே சேர்க்கப்பட்டிருப்பதாகப் பத்திரிகையிலே பார்க்கிறோம். சுகாதாரக் கேடற்ற முறையில் மதிய உணவைப் போட ஏற்பாடு செய்ய வேண்டும்.

முற்பகல் 11-30 மாணவர்கள் இன்று பள்ளிகளுக்குச் செல்வதற்கு சாதாரணமாக 4 மைல், 5 மைல், 10 மைல் தூரம் செல்ல வேண்டியிருக்கிறது. அவர்கள் பஸ்ஸில் செல்லுவதற்கு பாதிக் கட்டணம் வசூலிக்கும் முறையில் ஒரு திட்டத்தைக் கொண்டு வந்து அமல் நடத்த சர்க்கார் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று வற்புறுத்துகிறேன். 15 வருஷங்களில் த்தனையோ உயர்நிலைப் பள்ளிகளைத் திறந்துவைத்தோம் என்று இன்



1968 மார்ச் 7] [திரு. என். வரதராசன்]

றைக்கு டாம்பிகமாக ஏதாவது கணக்குக் சொல்லிகொண்டிருப்பதற்குத்தான் காங்கிரஸ் கட்சி உதவியிருக்கிறது என்பது நமக்குத் தெரியும். என்னுடைய தொகுதியில் குஜிலியம்பாறை, ராமநாதபுரம், காசிப் பாளையம் ஆகிய இப்படிப்பட்ட இடங்களில் உயர் நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தில் தமிழர்கள் இருந்தார்கள் என்று சொல்கிற அந்தக் காலத்தில் எப்படி இருந்திருக்குமோ அவ்வாறு இருக்கிறது. உயர்நிலைப் பள்ளியில் படிக்கும் மாணவர்கள் ஆல மரத்தின் அடியில் உட்கார்ந்து படிக்கவேண்டிய இந்த அவல நிலை போகவேண்டும். கல்விக் கூடங்களுக்கு கட்டிடங்கள் கட்டித் தரப் பட வேண்டும். பயிற்சிக்கு வேண்டிய லாபரடரிகள் போன்ற வசதிகள் செய்து தராமல், லாபரடரிக்கு வேண்டிய கட்டிட வசதிகள் செய்து தராமல் உயர்நிலைப் பள்ளிகளை மேலும் மேலும் திறந்து கொண்டே போவதனால் எதிர் பார்க்கிற பலனை அடைய முடியாது. மாணவர்கள் கல்வியில் திறமை பெறவேண்டும் என்றால் அதற்குரிய முறையில் கல்விக் கூடங்களை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திறமையான மாணவர்கள் தமிழ்நாட்டில் இருக்கிறார்கள் என்று சொல்கிறோம். தமிழ்நாட்டிலுள்ள மாணவர்கள் எந்த மொழியிலே படிக்கவேண்டுமென்று விரும்புகிறார்களோ அந்த மொழியில் படிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்து தரப்படவேண்டும். இந்தியையோ, அல்லது தெலுங்கையோ அல்லது கன்னடத்தையோ இஷ்ட பாடமாக எடுத்துப் படிக்க விரும்பினாலும், அதைப் படிப்பதற்கான உரிமை தமிழ்நாட்டில் வழங்கப்படவேண்டும். இன்று அப்படிப்பட்ட நிலை இல்லாதது ஓரளவு கஷ்டத்தை உண்டாக்கும் என்பதை இந்த நேரத்தில் ஞாபகப்படுத்திக் கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

*திரு. ஆர். கருப்பையா: துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கல்வி மானியத்தின்மீது எங்கள் சார்பில் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானத்தை ஆதரிக்கும் முகத்தான் சில வார்த்தைகள் பேச விரும்புகின்றேன்.

ஊர் தோறும் பள்ளிக்கூடங்கள் திறக்கப்பட்டு இருக்கின்றன. பெரிய அளவுக்குக் கல்வி வளர்ச்சி செய்யப்பட்டிருக்கிறது என்று சொல்லக்கூடிய நிலையை ஏற்படுத்தியவர்கள் காங்கிரஸ்காரர்கள்தான் என்ற உண்மையை எந்தக் கட்சிக்காரர்களும் மறுக்க முடியாது. அப்படியிருக்க ஆளும் கட்சியில் இருக்கும் நண்பர்கள் சிலர் காங்கிரஸ் ஒன்றுமே செய்யவில்லை என்று கூறுகிறார்கள். காங்கிரஸ்காரர்கள் கல்வி வளர்ச்சிக்காக செய்த இதையாவது அவர்கள் மனப்பூர்வமாக ஒத்துக்கொண்டால் நல்லது.

கட்டாயக் கல்வியை நாட்டில் பல இடங்களில் பரப்பியிருக்கிறார்கள். பெற்றோர்களின் வருவாய் பற்றாக்குறை காரணமாக குழந்தைகளைப பள்ளிகளுக்கு அனுப்ப முடியாத நிலை இருந்ததை எண்ணிப் பார்த்து, குழந்தைகளுக்கு உணவு கொடுத்து ஊக்குவிக்க வேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடு மதிப்பிற்குரிய திரு காமராஜ் அவர்கள் மதிய உணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தார். இந்த மதிய உணவுத் திட்டத்தைக் கொண்டுவந்து கல்வியில் அவர்களுக்கு ஊக்கம் கொடுக்க முற்பட்டார்கள். மதிய உணவு கொடுத்தும் கூட பல குழந்தைகள் பள்ளிகளுக்குப் போக முடியாத ஏழ்மை நிலையில் பலர் இருக்கிறார்கள். ஏழைகளின் வறுமையைப் போக்குவதற்காக பல நன்மைகளைச் செய்து, அல்லது மானியமாகக் கொடுத்து, ஏழைக் குழந்தைகள் அத்தனைபேரும் படிக்கவேண்டும் என்ற எண்ணத்தை இந்த அரசு மக்களுக்கு உணர்த்தி அதை நடைமுறையில் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

" ஏழ்மையினால் ஒரு தமிழன் படிப்பில்லை என்றால்
இங்குள்ள எல்லோரும் நாணிடவும் வேண்டும் "

என்று பாரதிதாசன் கூறியதற்கிணங்க , ஏழ்மை என்ற காரணத்தால் படிக்க வசதி இல்லை என்ற நிலை ஏற்படக் கூடாது. தொடக்கக் கல்வியைப் பெறாத யாரும் தமிழ்நாட்டில் இல்லை என்ற நிலையை ஏற்படுத்த

வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கட்டாயக் கல்வியை நாட்டில் நல்ல முறையில் அமல்படுத்தினால்தான் கிராமப் பகுதிகளில் உள்ள ஏழை மக்கள் எல்லோரும் நல்ல நிலைக்கு வரமுடியும். உயர்நிலைப் பள்ளிகளை பல ஊர்களில் திறந்து இருக்கிறோம். ஆனால் அந்தப் பள்ளிக்கூடங்கள் சரியாக நடைபெறுவதற்கு ஏற்ற வகையில் கட்டிட வசதி இல்லை. ஆசிரியர்களைக்கூட காலாகாலத்தில் போடாமல் ஆறு மாதம், ஒன்பது மாதம் கழித்து வேலைக்கு அனுப்புகிறார்கள். அந்த நிலை இல்லாமல் ஆண்டு தொடக்கத்திலேயே, பள்ளிக்கூடம் திறந்து 15 நாட்களுக்குள்ளாகவே ஆசிரியர்கள் எல்லோரும் அமர்த்தப்பட வேண்டும். அப்போதுதான் ஆசிரியர்கள் செம்மையாகப் பணி புரிய ஏதுவாக இருக்கும். விஞ்ஞான கருவிகள் அனைத்தும் கொடுக்கப்பட்டாலும் கட்டிட வசதி இல்லாததால் அங்குள்ள விஞ்ஞானக் கருவிகளை மாணவர்கள் பயன்படுத்த முடியாத நிலை இருக்கிறது. எனவே, விஞ்ஞானக் கருவிகளைக் கொடுப்பதோடு அந்தப் பள்ளிக்கூடத்திற்கு வேண்டிய கட்டிட வசதி முதலில் ஆக்கித் தர வேண்டும்.

இப்போது புதிதாக எலக்டிவ்ஸ் என்ற வகுப்புகள் ஏற்படுத்தியிருக்கிறோம். அதனால் ஆசிரியர்களுக்கு வேலை பளு அதிகமாகிறது. அதனால் உடனடியாக ஆசிரியர்களை நியமிக்க வேண்டும். ஆண்டுத் தொடக்கத்திலேயே எல்லா ஆசிரியர்களையும் ஒருசேர நியமித்துவிட வேண்டும். ஆசிரியர்கள் சில கிராமங்களுக்கு வரத் தயங்குகிறார்கள். தயக்கத்திற்குக் காரணம் அங்கு வீட்டு வசதி இல்லாததுதான். ஆசிரியர்களுக்கு வீட்டு வசதிக்கான தொகை ஒதுக்கப்பட்டிருக்குமென்று நினைக்கிறேன். கிராமப்புறங்களில் உள்ள ஆசிரியர்கள் வீட்டு வசதிக்காக இந்த அரசு ஒரு உயர்நிலைப்பள்ளி இருக்கும் இடத்தில் 5, 6 வீடுகளைக் கட்டி அங்குள்ள ஆசிரியர்களுக்கு பயன்படச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆசிரியர்களுக்கு எமர்ஜன்ஸி பிராவிடண்ட் பண்ட் என்று சென்ற ஆண்டு பணம் கொடுத்தார்கள். அந்தப் பணம் எவ்வளவு பிடிக்கப்பட்டு எவ்வளவு சேர்ந்திருக்கிறது என்று அந்த ஆசிரியர்களுக்கு இதுவரை அறிவிக்கப்படவில்லை. அந்தப் பணம் திரும்புமா, திரும்பாதா என்று பல ஆசிரியர்கள் சந்தேகப்படுகிறார்கள். அந்த எண்ணம் ஆசிரியர்களுடைய மனத்திலே இருப்பதால் ஒவ்வொருவருடைய கணக்கிலும் எவ்வளவு தொகை சேர்ந்திருக்கிறது என்ற விவரத்தை அவர்களுக்கு இந்த அரசு அளிக்கச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உயர்நிலைப் பள்ளிகளை முடித்து கல்லூரி செல்லும் பின்தங்கிய மாணவர்களைப் பொறுத்த வரையில் எந்தக் காரணத்தைக் கொண்டும் அவர்கள் பாதிக்கப்பட மாட்டார்கள் என்ற நிலை இருக்கவேண்டும்.

(திரு. வை. சுவாமிநாதன் தலைமை.)

2,000 ரூபாய்க்கு மேற்பட்ட வருமானம் உள்ள குடும்பங்களுக்கு அத்தகைய பணம் இல்லையென்ற விதி இருக்கிறது. அது மாற்றப்பட வேண்டும். சாதாரண ஆசிரியர்களுக்கே 2,000 ரூபாய் வருமானம் கிடைப்பதால் அவர்களுடைய பிள்ளைகளைக் கல்லூரிகளுக்கு அனுப்ப முடியாமல் தவிக்கிறார்கள். ஆகவே, 2,000 ரூபாய் என்றிருக்கும் வருமான வரம்பை 3,000 ரூபாய்க்கு உயர்த்த வேண்டும். 3,000 ரூபாய் வருமானம் வரும் விவசாயியோ மற்றவர்களோ பெரும் பணக்காரர்கள் அல்ல. நடுத்தர மக்கள்தான். ஏழ்மையானவர்கள்தான். ஆகவே, இந்த வரம்பை 3,000 ரூபாய் அளவுக்கு உயர்த்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்ற ஆண்டுக்கு முந்தைய ஆண்டில் அரியலூரில் தொடங்கிய கல்லூரிக் கட்டிடத்திற்காக 58 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அது உண்மையிலேயே போதாது. இன்னும் அதிகமாக ஒதுக்க வேண்டும். வேறு பல கல்லூரிகளுக்கு அதிகமான தொகை ஒதுக்கியிருக்கும்போது அரியலூருக்கு மட்டும் இவ்வளவு குறைவாக ஒதுக்கியிருப்பதன் காரணம் ஏன் என்று தெரியவில்லை.





அரியலூர் வட்டாரத்தில் 72 உயர்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. அங்கு ஒரு மகளிர் கல்லூரியும், ஆசிரியர் பயிற்சிப் பள்ளியும் அவசியம் ஏற்படுத்த வேண்டும் என்று இந்த அரசைக் கேட்டுக்கொண்டு இத்துடன் முடிக்கிறேன். வணக்கம்.

***திரு. மு. ச. சிவசாமி :** தலைவர் அவர்களே, கல்வி மானியத்தின்மீது ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

தமிழக அரசு இரு மொழித் திட்டத்தை அமலுக்குக் கொண்டுவந்திருக்கிற இன்றைய சூழ்நிலையில், சென்னை நகரில் இருக்கின்ற கிண்டி பொறியியல் கல்லூரியில், அங்குள்ள பொறியியல் பேராசிரியர்களுக்கு, செத்துப்போன, பழக்க வழக்கம் இல்லாத, நடைமுறையில் இல்லாத, சம்ஸ்கிருதத்தை அங்கே இன்னும் கட்டாயமாகப் படிக்க வேண்டும் என்று சொல்லும் முறை இருக்கிறது. சந்திர மண்டலத்தில் மனிதன் இறங்க முயற்சித்துக்கொண்டிருக்கும் நேரத்தில், சந்திரனைப் பாம்பு விழுங்கியதாகச் சொல்லும் அந்த சம்ஸ்கிருத மொழியை இன்னும் படிக்க வேண்டும் என்ற நிலை இருப்பது மிகக் கேவலமான முறை என்பதை நான் இந்த சமயத்தில் ஞாபகப்படுத்த வேண்டியிருக்கிறது. பொறியியல் கல்லூரியில் சம்ஸ்கிருதத்தை கட்டாயமாகப் படிக்க வேண்டும் என்று இருக்கின்ற முறையை, விதியை தமிழக அரசு உடனடியாக ரத்து செய்வதற்கு முன்வர வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, நம்முடைய தமிழக அரசின் இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தைப் பார்த்தோமானால், மொத்த வருமானத்தில் ஏறக்குறைய $21\frac{1}{2}$ சத விகிதம் கல்விக்காக நாம் ஒதுக்கியிருக்கிறோம். ஒதுக்கி இருக்கிற கல்வி மானியத்தில் ஏறக்குறைய 93 சத விகிதம் ஆரம்பக் கல்விக்கும் இடைநிலைக் கல்விக்கும் செலவிடுகின்றோம். இன்று தமிழகத்தில் இருக்கின்ற ஆரம்பப் பள்ளிகளையும் இடைநிலைப் பள்ளிகளையும் எடுத்துக் கொண்டால், பெரும்பான்மையான பள்ளிகள் தனியார் கையில் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கின்றன. தனியார் நடத்துகின்ற பள்ளிகளுக்கு நாம் ஆசிரியர்களுக்காகக் கொடுக்கின்ற சம்பளம், சேமிப்பு நிதி, கட்டிட மராமத்து, வெள்ளை அடித்தல், கூரை வேய்தல், தளவாட சாமான்கள், நூல் நிலையம், விஞ்ஞானக் கருவிகள், வாட்ச்மேன் போன்ற அத்தனைக்கும் தமிழக அரசுதான் கொடுக்கிறது.

தனியார் துறையினர் தங்கள் கையிலிருந்து ஏதாவது பணம் செலவு செய்கிறார்களா என்றால் இல்லை. கூர்ந்து பார்த்தால், ஒரு வியாபாரி ஒரு வியாபார ஸ்தாபனத்தை வைத்து ஆண்டுதோறும் ஐயாயிரம், பத்தாயிரம் ரூபாய் லாபம் சம்பாதிப்பது போல் தனியார் நடத்தும் பள்ளிகளில் உள்ள நிர்வாகிகள் ஆண்டு ஒன்றுக்கு ஐயாயிரம், பத்தாயிரம் ரூபாய் சம்பாதிக்கிற ஒரு வியாபார ஸ்தலமாக அது மாறியிருக்கிறது என்று இந்த சந்தர்ப்பத்தில் எடுத்துக்கூற நான் விரும்புகிறேன். வெள்ளை அடிப்பதில் இருந்து ப்யூனுக்கு கொடுக்கிற சம்பளம் வரை , கூரை வேய்வது வரையில் அவ்வளவையும் தமிழக அரசு கொடுத்துவிட்டுத் தனியார் துறையினரிடம் ஏன் அந்த நிர்வாகத்தைக் கொடுக்க வேண்டும் என்பதில் தீவிர கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தனியார் நடத்தக் கூடிய பள்ளிகளில் பல அக்கிரமங்கள் நடக்கின்றன. ஒரு ஆசிரியரை வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்றால், ரூ. 300 முதல் ரூ. 500, ரூ. 1,000 வரை கொடுத்தால்தான் வேலைக்கு அவர்களைச் சேர்த்துக் கொள்கிறார்கள். அப்படிச் சேர்ந்ததற்குப் பின்னால் தனியார் துறை நிர்வாகிகள் செய்கிற கொடுமைகள் காரணமாக, அக்கொடுமைகளைத் தாக்குப் பிடிக்க முடியாமல் அந்தப் பள்ளியிலிருந்து விலக வேண்டுமென்றாலும், அதற்கும் ரூ. 500, ரூ. 1,000 கொடுத்தால்தான் அவர்களுக்கு ரிலீவிங் ஆர்டர் கொடுக்கிறார்களே தவிர, தன்னிச்சையாக விலகி வர முடியாத நிலை இருக்கிறது. சேர வேண்டுமென்றாலும் பணம் கொடுக்க வேண்டும், விலக

வேண்டும் என்றாலும் பணம் கொடுக்க வேண்டும் என்ற நிலை அங்கு இருக்கிறது. எனவே இப்படிப்பட்ட கொடுமைகளைச் செய்கிற தனியார் துறைப் பள்ளிகளுக்கு அவர்களுக்கான செலவுகளைக் கொடுப்பதைவிட தமிழக அரசே அவற்றை ஏற்று நடத்துவது சாலச் சிறந்தது என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். செகண்டரி கிரேட் ட்ரெயினிங் படித்து விட்டு வேலைக்கு வருகிறார்கள். அப்போது தனியார் துறைநிர்வாகிகள் என்ன சொல்கிறார்கள் என்றால், ஹையர் கிரேட் ஆசிரியருக்குள்ள சம்பளம்தான் கொடுப்போம், சம்மதமா என்று ஒரு நிபந்தனைக்கு சம்மதம் பெற்றுக்கொண்டு, ப்ரோ நோட்டில் கையெழுத்து வாங்கிக்கொண்டு, முன் கூட்டியே ராஜிநாமாக் கடிதத்தையும் வாங்கி வைத்துக்கொண்டு ஹையர் கிரேட் ஆசிரியருக்குள்ள சம்பளத்தைக் கொடுத்து விட்டு செகண்டரி கிரேட் ஆசிரியர் சம்பளம் வாங்கிக்கொண்டதாக கையெழுத்து வாங்குகிறார்கள். பல தனியார் பள்ளிகளில், 53 கோடி ரூபாய்—95 சத விகிதம்—இந்த இடைநிலைப் பள்ளிகளுக்கும், ஆரம்பப் பள்ளிகளுக்கும் செலவு செய்தும் கூட தனியார் அடிக்கிற கொள்ளையை தடுத்து நிறுத்த வேண்டுமென்றால், நான் கருதுகிறேன், நிச்சயமாக தனியார் பள்ளிகளை அரசே ஏற்று நடத்துவதைத் தவிர வேறு வழியில்லை என்று இந்த சந்தர்ப்பத்தில் ஞாபக மூட்ட விரும்புகிறேன். தூப்பதில் இருந்து ப்யூன் சம்பளம் வரையில் அரசாங்கம் கொடுத்தும் கல்வி இலாகா இயக்குநரிடமிருந்து செல்கிற உத்தரவுகளுக்கு அவர்கள் கீழ்படிகிறார்களா என்றால் அவர்கள் அப்படி கீழ்படிவதில்லை.

உதாரணமாக சொல்கிறேன், தூத்துக்குடியில் இல்லத்தார் ஆரம்பப் பள்ளி என்று ஒன்றிருக்கிறது. இல்லத்தார் உயர்நிலைப்பள்ளி என்று ஒன்றும் இருக்கிறது. அந்த உயர்நிலைப்பள்ளிக்குள்ள அங்கீகாரத்தை சர்க்கார் திரும்பப் பெற்றுவிட்டது. ஆனாலும்கூட இன்னும் சர்க்காரிடமிருந்து அனுமதி வாங்கி விடலாம் என்று தப்பான கணக்கை வைத்துக் கொண்டு ஆசிரியர்கள் இல்லாமல் இருக்கும்போது ஆசிரியர்கள் இருப்பதாகவும், அவர்களுக்குச சம்பளம் கொடுப்பதாகவும் இன்றும் ரிக்கார்ட்களில் பதிவு செய்துகொண்டு மாணவர்களை அங்கு சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள். சர்க்கார் அங்கீகாரம் இல்லாது அந்தப்பள்ளியில் சட்ட விரோதமாக மாணவர்களைச் சேர்ப்பதால் ஆண்டு இறுதியில் என் போன்று பொதுத்தொண்டு செய்கிறவர்களிடம் வந்து பரீட்சை எழுத அங்கீகாரம் வாங்கிக்கொடுங்கள், சர்டிபிகேட் வாங்கிக் கொடுங்கள் என்று தொல்லை கொடுக்கக்கூடியநிலை இருக்கிறது. இல்லாதார் ஆரம்பப் பள்ளி என்று ஒன்றிருக்கிறது. கல்வி இலாகாவில இருந்து ஆறு ஆசிரியர்களை வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று உத்தரவு இட்டிருக்கிறார்கள். ஆனால் இன்றைய தினம் வரையில் அந்த சர்க்கார் உத்தரவிற்கு அந்த நிர்வாகிகள் கீழ்படிந்திருக்கிறார்களா என்றால் இல்லவே இல்லை. நம்மிடத்திலிருந்து அவ்வளவு ஊதியத்தையும் பெற்றுக்கொண்டு நமது உத்தரவுகளுக்குக் கீழ்படியவில்லை என்றால் ஒன்று அந்த பள்ளியின் அங்கீகாரத்தைத் திரும்பப்பெறவேண்டும், இல்லாவிடின் அரசு அதை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

நான் அங்கம் வகிக்கக்கூடிய தூத்துக்குடியில் இன்னொரு பள்ளி, தாயம்மாள் உயர்நிலைப்பள்ளி என்பதில் அவர்கள் ப்ராவிடண்ட் பண்டு நிதியை மோசடி செய்து விட்டதாக அதன் அங்கீகாரத்தை அரசு திரும்பப்பெற்றிருக்கிறது. ஆசிரியர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். அதற்கிடையில் எட்டு ஆசிரியர்களிடமிருந்து ஆசிரியர் ஒருவருக்கு ரூ. 500 வீதம் பெற்றுக்கொண்டு அங்கீகாரம் இல்லாத அந்தப் பள்ளியை இன்னும் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அந்த பள்ளியில் இருந்த ஆசியர்களின் நிலை என்னவது? இப்படிச் சட்டத்திற்கு புறம்பாக, நீதிக்குப் புறம்பாக, ஆசிரியர்களைக் கொடுமைப்படுத்தி அவர்களிடமிருந்து லஞ்சம் வாங்கிக் கொண்டிருக்கும் ஒரு வியாபார ஸ்தலமாகத்தான் பெரும் பகுதி ஆரம்பப்பள்ளிகள் இருக்கின்றன.



அதேபோல், லாபெரட்டரிக்காக 155 பள்ளிகளுக்கு பள்ளி ஒன்றுக்கு 40,000 ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆலங்குலம் தொகுதியில் வெங்கடேசபுரம் கிராமப்பள்ளி என்று ஒன்றிருக்கிறது. அதற்கு 40,000 ரூபாயில் ரூ. 20,000 சாங்க்ஷன் செய்யப்பட்டிருக்கிறது. இந்த 20,000 ரூபாயை யும் மோசடி செய்து விட்டார்கள். இதுவரை அதன் பேரில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்றால் இல்லை, இப்படிப்பட்ட மோசடிக் காரர்கள், பள்ளிகள் என்ற பெயரால், கல்வி என்ற பெயரால் தனியார் அங்கு உட்கார்ந்துகொண்டு சர்க்கார் கொடுக்கிற மானியத்தை, 20,000 ரூபாயை, கொள்ளை அடிக்கிற அளவிற்கு இருக்கிறவர்களை ப்ராசிக்யூட் செய்து அவர்கள் மீது நடவடிக்கைகள் எடுத்து அவர்களை ஜெயிலில் தள்ளினால் ஒழிய இந்தத் தனியார் துறை பள்ளி நிர்வாகிகள் திருந்துவார்களா என்றால் நிச்சயமாக அவர்கள் திருந்த மாட்டார்கள்.

அடுத்து, ஆசிரியர் பயிற்சிப் பள்ளி. 40 இடங்களுக்கு 4000 பேர்கள் மனு செய்கிறார்கள். அவர்கள் எல்லோருக்கும் இன்டர்வ்யூ அனுப்பப்படுகிறது. ஏறக்குறைய இருபது ரூபாய் ஒருவர் செலவு செய்தால் ரூ. 80,000 பணம் செலவாகிறது. ஆகவே வரக்கூடிய மனுக்களைப் பரிசீலனை செய்து தகுதியுடையவர்களைப் பொறுக்கியெடுத்து அவர்களுக்கு மட்டும் இன்டர்வ்யூ அனுப்பினால் மக்களின் பணம் விரயமாகாமல் தடுத்து நிறுத்த முடியும். கடைசியாக நான் ஒன்று கூறி முடித்துக்கொள்கிறேன். கல்வி இயக்குநர் அவர்களின் அலுவலகம் இருக்கிறது. அங்கு போவதற்கே வழியில்லை. எம்.எல்.ஏக்கள் போனாலும் சரி, அல்லது ஆசிரியர்கள் தங்கள் குறைபாடுகளை நீக்கிக்கொள்வதற்காக அங்கு போனாலும் சரி, அங்குள்ள அட்டெண்டர்கள் பிய்த்துப் பிடுங்கி வருகிறார்கள். இதைப் பற்றி நான் அமைச்சர் அவர்களிடமும் சொல்லியிருக்கிறேன். ஒரு நாள் நான் கல்வி இலாகா இயக்குநர் அவர்களைப் பார்க்கப் போய் விட்டு கீழேயிறங்கும்போது அங்குள்ள அட்டெண்டர்கள் ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக்கொள்வதைப் பார்த்தேன். என் அதிகாரியிடம் வந்திருப்பவரிடமிருந்து நீ எப்படிக் கேட்கலாம் என்று மூன்று நான்கு அட்டெண்டர்கள் சண்டை போட்டுக்கொண்டார்கள். என் அதிகாரியைப் பார்க்க வந்திருப்பவரிடம் சென்று நீ எப்படிக் கேட்கலாம் என்று சண்டை போட்டுக்கொள்ளக்கூடிய மிகக் கேவலமான முறையிலுள்ள நிலை இருக்கிறது. இதைக் கல்வி இலாகா இயக்குநர் அவர்கள் கவனித்து அட்டெண்டர்கள் செய்யக்கூடிய இம்மாதிரி சம்பவங்கள் இயக்குநர் அலுவலகத்தில் நடக்கக்கூடாத முறையில் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. அ. ப. சண்முகசுந்தரம்:** பெருமதிப்பிற்குரிய பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இந்தக் கல்வி மானியக் கோரிக்கையை ஆதரித்து நான் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். கல்விக்காக சென்ற ஆண்டு செலவழித்ததை விட இந்த ஆண்டு ஆறு கோடி ரூபாய் அதிகமாகக் செலவழிக்க இருக்கிறார்கள். நம் தமிழக சர்க்கார் வருமானத்தில் நாலில் ஒரு பங்குத் தொகையைக் கல்விக்காக செலவழித்து வருகிறார்கள். அப்பேர்ப்பட்ட கல்வித் துறையைப் பொறுத்த வரையில் பல புரட்சிகரமான மாறுதல்களை திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பேற்ற பிறகு இப்போது செய்திருக்கிறது. இதற்கு முன்னால் எல்லாம் எல்லோருக்கும் தமிழ் பற்று இருக்கவேண்டுமென்று சொல்லிக் கொண்டிருந்தார்களே தவிர, தமிழைப் பயிற்சி மொழியாக நல்ல முறையில் செய்திருப்பது இந்த அரசுதான் என்று நான் பெருமைப்படுகிறேன். சென்ற ஆண்டு இருந்ததை விட தமிழைப் பயிற்சி மொழியாக எடுத்துப் படிக்கும் மாணவர்கள் இந்த ஆண்டு 2,000 பேர்கள் அதிகமாக கல்லூரிகளில் சேர்ந்திருக்கிறார்கள். அப்படி 2,000 பேர்கள் அதிகமாக தமிழ் பயிற்சி மொழியாக உள்ள வகுப்புகளுக்குச் சென்று படித்து வருகிறார்கள். அதே போன்று வருகிற ஆண்டு முதல் அரசினர் கல்லூரிகளில் புகுமுக வகுப்பில் கலையியல் பிரிவுகளில் தமிழைப் பயிற்சி மொழியாகச் செய்திருக்கிறார்கள். அது ஒரு புரட்சிகரமான திட்டம். ஆலடி

அருணா அவர்கள் கூறியது போல் மற்ற மாநிலங்களில் எல்லாம் எந்த மொழியைப் பயிற்சி மொழியாகக் கொண்டு வருவது என்று குழம்பிக் கொண்டிருக்கும்போது நாம் திட்டவட்டமாக ஆங்கிலம், தமிழ் இந்த இரண்டு மொழிகள்தான் என்று சொல்லி அரசினர் கல்லூரிகளில் கலையியல் பிரிவுகளில் தமிழ்தான் பயிற்சி மொழி என்று கொண்டு வந்திருக்கிறோம். கலையியல் பிரிவுகள் தவிர, அறிவியல் பிரிவுகளிலும் தமிழை பயிற்சி மொழியாகப் புகுத்த ஏற்பாடுகளைச் செய்து வருகிறார்கள். அதற்கான பாடப் புத்தகங்களை வரைய கல்வி இலாகா ஏற்பாடு செய்து வருகிறது. தமிழ் பயிற்சிமொழியானால், மாணவர்கள் தொழிற் கல்லூரி, மருத்துவக் கல்லூரி, போன்றவைகளில் சேருவதற்குப் வசதிப்படுமா, அவர்கள் அனுமதிக்கப்படுவார்களா என்ற சந்தேகங்களைச் சில பகுதிகளிலிருந்து கிளப்பிக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட சந்தேகங்களுக்கு இடம் இல்லாமல் மருத்துவக் கல்லூரியாக இருந்தாலும் சரி, விவசாயக் கல்லூரியாக இருந்தாலும சரி, பொறியியல் கல்லூரியாக இருந்தாலும் சரி, தமிழைப் பயிற்சி மொழியாக எடுத்துப் படித்த மாணவர்கள் மற்ற மாணவர்களைப் போல் இவர்களும் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள் என்பது மட்டுமல்லாமல் தமிழைப் பயிற்சி மொழியாக எடுத்துப் படிக்கிற மாணவர்களுக்கு தனிச் சலுகைகள் இருக்க வேண்டும். அப்போதுதான் தமிழைப் பயிற்சி மொழியாக எடுத்துக்கொண்டு படிக்கும் மாணவர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் தருவதாகும். அப்படிப்பட்ட மாணவர்களுக்கு இன்டர்வ்யூவில் அதிக சதவிகித மார்க்குகள் கொடுத்து, அவர்களை ஊக்குவித்தால் நிச்சயமாக அடுத்த ஆண்டு பார்க்கும்போது தமிழைப் பயிற்சி மொழியாக எடுக்க வரும் மாணவர்கள் அதிகப்படுவார்கள் என்பதில் ஐயப்பாடு எதுவும் இருக்க முடியாது. இன்னொரு புரட்சிகரமான திட்டம், நம் உயர்நிலைப் பள்ளிகளில் இனிமேல் இந்தி அறவே ஒழிக்கப்பட்டுவிட்டது. அப்படி இந்தி ஒழித்துவிடப்பட்ட நேரத்தில் அதற்காக ஒதுக்கப்பட்ட நேரத்தை வேறு பகுதிக்கு நல்ல முறையில் செலவிடப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நாம் நம்முடைய உயர்நிலைப் பள்ளிகளிலே இசைக் கல்விக்காக என்று தனியாக ஒரு நேரத்தை ஒதுக்கவில்லை. மாணவர்கள் இசையில் தேர்ச்சி பெற வேண்டும். இசைக் கலையில் தேர்ச்சி பெற்றால்தான் நம்முடைய திராவிடக் கலை, கலாச்சாரம், பண்பாடு ஆகியவற்றில் அடிப்படையான நிலைமைகளைத் தெரிந்திருக்க முடியும். அப்படித் தெரிந்திருந்தால்தான் அவர்கள் மற்ற நாட்டுக்காரர்களுடன் பழகும் பொழுதும், வெளி நாடுகளுக்குச் செல்லும்பொழுதும் அவர்களுக்கு நம்முடைய பண்பாட்டையும், கலாச்சாரத்தையும் எடுததுச் சொல்வதற்கு முடியும். எனவே இசைக் கல்விக்கு வாய்ப்பளிக்கும் வகையில், இந்திக்காக ஒதுக்கப்பட்டிருந்த அந்தப் பகுதி நேரங்களில் இசைக் கல்வியைச் சொல்லிக்கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு மட்டுமல்ல. இசைக் கல்வியில் ஓரளவு அடிப்படை அறிவை அவர்கள் பெற்றுக்கொண்ட பிறகு, கல்வி நிறுவனங்களிலே பாடப்படுகின்ற நாட்டு வாழ்த்துப் பாடலோடு தமிழ்த்தாய் வாழ்த்து, தமிழ் நாட்டு வாழ்த்து, ஆகியவற்றிற்குப் பாடல்களைத் தயார் செய்ய வேண்டும். அவ்வாறு ஒரு பாடலை கவிஞர்களுடைய ஆதரவைப் பெற்றுக்கொண்டு தயார் செய்ய வேண்டும். அப்படி நாம் பாடலைத் தேர்ந்தெடுத்த பிறகு, அதற்கு இசையை அமைத்து, நம் தேசீயப் பாடல் பாடும் நிலையங்களில் தமிழ்த்தாய் வாழ்த்து,, தமிழ் நாட்டு வாழ்த்துப் பாடலையும் பாட ஏற்பாடு செய்ய வேண்டும். நம்முடைய பள்ளிகளிலே, உயர்நிலைப் பள்ளியாக இருந்தாலும் சரி, கல்லூரிகளாக இருந்தாலும் சரி, எல்லாப் பள்ளி நிறுவனங்களிலும் நாட்டு வாழ்த்துப் பாடலோடு தமிழ்த்தாய் வாழ்த்து, தமிழ்நாட்டு வாழ்த்துப் பாடலையும் சேர்த்துப் பாட வேண்டும் என்ற விதி முறையை வகுத்துக் கொடுக்க வேண்டுமென்று கல்வி அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

கோவை மாவட்டத்தில் பல கல்லூரிகள் இப்பொழுது நடைபெற்று வருகின்றன. திருப்பூர் கல்லூரி நடத்துவோர் அந்தக் கல்லூரிக்கு குழு அமைத்து அதற்குரிய பணத்தை வசூல் செய்து, வருகிறார்கள்.



அந்தத் தொகை வசூல் செய்யப்படும் நேரத்தில், அங்கு இரண்டாண்டுகளாக புகுமுக வகுப்புச் சொல்லித் தருகிறார்கள். அடுத்த ஆண்டிலேயிருந்தாலாவது பட்டப் படிப்புச் சொல்லித் தர அரசாங்கம் வழிவகை செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொள்ளாச்சித் திருநகரில் ஆண்கள் கல்லூரி என்று சொல்லப்படும் நாசிமுத்து பாலிடெக்னிக் உள்ளது. மகளிர்க்கென கல்லூரிகள் அங்கு இல்லை. பொள்ளாச்சியில் கல்லூரியில் படிக்கக்கூடிய பெண்கள் அதிகமாக இருக்கிறார்கள். எனவே அவர்களுக்கு என்று பொள்ளாச்சி நகரிலே ஒரு மகளிர் கல்லூரி ஏற்படுத்தித் தர வேண்டும். அதற்கு அரசாங்கத் துறையிலே ஆரம்பிக்க வேண்டும். ஆரம்பிடுவதற்குத் தொகை வேண்டுமானாலும் நாங்கள் வசூலித்துத் தரத்தயாராக இருக்கிறோம்.

கோவை மாவட்டத்தில் உள்ள விவசாயக் கல்லூரியில் பல ஆராய்ச்சிப் பிரிவுகளும் பல துறைகளிலும் நல்ல முறையில் நடைபெறுகிறது. இதைப் பொறுத்து அங்கு விவசாயப் பல்கலைக் கழகம் ஆரம்பிக்க நல்ல சூழ்நிலையிருக்கிறது. அவ்வாறு அங்கு பல்கலைக் கழகம் ஏற்படுத்தவேண்டு [illegible] ஆராய்ந்து அதனை ஏற்படுத்த நம்முடைய அரசாங்கம் முன் வர வேண்டும். கோவை மாவட்டத்தைப் பொறுத்த அளவில் பொறியியல் கல்லூரி, விவசாயக் கல்லூரி, மருத்துவக் கல்லூரி போன்ற பல கல்லூரிகளும் இருக்கின்ற காரணததால் அங்கு பல்கலைக் கழகம் ஏற்படுத்துவதற்கு நல்ல சூழ்நிலையிருக்கிறது அடுத்த பல்கலைக் கழகம் ஏற்படுத்தக்கூடிய நிலை வரும்போது அதை கோவையிலே நிறுவவேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய ஆசிரியர்களுக்கு இந்த மானியக் கோரிக்கையிலே நல்ல முறையிலே பல திட்டங்கள் வகுக்கப்பட்டு இருக்கின்றன. ஆயிரக்கணக்கான ஹையர் கிரேடு ஆசிரியர்களை செகன்டரி கிரேடு ஆசிரியர்களாக உயர்த்த வழி வகையை மேற்கொள்ளவிருக்கிறது. பஞ்சாயத்து யூனியன்களிலே வேலை பார்க்கக்கூடிய ஆசிரியர்களில் பலர், செகன்டரி கிரேடாக இருந்தும், ஹையர் கிரேடாக வேலை பார்க்கும் முறையிருப்பதால் குறைந்த சம்பளம் வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் வருகிற ஆண்டிலே நல்லவிதமான உயர்ந்த பதவி கிடைக்கப்போகிறது என்ற நல்ல சூழ்நிலையைப் பார்த்து, நானே ஆசிரியனாகப் பணியாற்றியவன் என்ற காரணத்தினால், தமிழக அரசாங்கத்திற்கு நன்றி தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

பலப்பல நல்ல திட்டங்களைக் கொண்ட இந்தக் கல்வி மானியக் கோரிக்கையை ஆதரித்துப் பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்தமைக்காகத் தற்காலிகத் தலைவரவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன், வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. சுவாமிநாதன்) :** அடுத்து திரு எம். சுரேந்திரன் அவர்கள்.

**திரு. எம். சுரேந்திரன் :** எங்கள் பார்ட்டி சார்பிலே திரு குமாரசாமி அவர்களின் பெயரைக் கொடுத்திருக்கிறோம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. சுவாமிநாதன்) :** திரு. சுரேந்திரன் என்றுதான் இருக்கிறது.

**திரு. எம். சுரேந்திரன் :** தலைவரவர்களே, இன்றைக்குக் கல்வி மானியக் கோரிக்கையின் மீது பேசுவதற்குச் சந்தர்ப்பம் கிடைத்தது பற்றி மகிழ்ச்சியடைகிறேன். என்னுடைய வெட்டுப் பிரேரணையிலே தனிப்பட்ட பள்ளி நிறுவனங்களை அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறேன். அப்படி அரசாங்கம் எடுத்துக் கொள்ள வேண்டியதற்கான அவசியத்தைப் பற்றி எனக்கு முன்னால்

பேசிய கனம் உறுப்பினர்கள் சொன்னார்கள். இப்பொழுதிருக்கின்ற தனிப்பட்ட பள்ளிகளிலேயுள்ள மாணவர்களுடைய கல்வித் திறன் அவ்வளவு தரமாக இருப்பதில்லை என்று ஒவ்வொரு இடத்திலிருந்தும் புகார்கள் வருகின்றன. அதோடு மட்டுமின்றி, மாணவர்களிடத்திலே விசேஷக் கட்டணங்கள் வாங்கப்படுகிறது. அதோடு, ஜாதியின் பெயரால், மதத்தின் பெயரால் பள்ளிகளை நடத்துவதால் அரசின் ஜாதி, மதமில்லாத கொள்கை, உருப்பெற வழியில்லாமல் இருக்கிறது. அதுஅறவே நீங்குவதற்கு வழியில்லாமல் தேங்கி நிலைப்பதற்கு வழியுண்டாகிறது. அதோடு அந்தப் பள்ளிகளில் சேர்க்கப்படும் உபாத்தியாயர்களுக்குப் போதுமான வசதிசெயது கொடுப்பது இல்லை. சம்பளங்கள் கொடுக்கப்படுவதிலே உபாத்தியாயர்களிடம் சம்பளத்திற்காகக் கையெழுத்து வாங்கிக்கொண்டு பணத்தைக் குறைத்துத் தருகிறார்கள் என்ற புகாரும் இருக்கிறது. உபாத்தியாயர்களைச் சேர்த்துக்கொள்வதற்காக லஞ்சம் வாங்கப்படுகிறது என்ற புகாரும் இருக்கிறது. அது மட்டுமல்ல, அந்த உபாத்தியாயர்களுக்கு வேண்டிய சௌகரியங்கள் அதாவது வீட்டு வசதி போன்ற இதர வசதிகளை உண்டாக்கிக் கொடுப்பதற்கான வழி வகைகள் அங்கே செய்யப்படுவதில்லை. மேலும் அந்தப் பள்ளிகளிலே படிக்கும் மாணவர்களுக்கு வேண்டிய வசதிகள் இல்லாமல் இருக்கின்றது போன்ற பல்வேறு விதமான காரணங்கள் இருக்கின்றன.

இன்றைக்கு இந்த மானியத்திலே பேசுவதற்கு திரு குமாரசாமி அவர்களை ஏற்பாடு செய்திருந்ததால் என்னுடைய வார்த்தைகளை இத்துடன் முடித்துக்கொள்கிறேன்.

* **திரு எஸ். ராமசாமி நாயுடு :** தலைவரவர்களே, நல்ல அடிப்படையிலே திட்டமிடப்பட்டு இங்கே மன்றத்தில் வைக்கப்பட்டிருக்கும் கல்வி மானியத்தை நான் மிகவும் வரவேற்கிறேன். இயக்குநரும், காரியஸ்தர்களும், மனநிறைவளிக்கும் முறையில் நல்லபணியாற்றியிருக்கிறார்கள் என்பதையறிந்து அவர்களுக்கு என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். கல்வியைப் பற்றிப் பேச மிகச் சொற்ப நேரமேயிருந்தாலும்கூட, பல பள்ளிகளை நிர்வகித்து வந்தவன் என்ற முறையில் எனக்குத் தோன்றும் சில விஷயங்களைச் சொல்ல விரும்புகிறேன்.

ஆரம்பக் கல்வியிலே 100-க்கு 90 பேரைச் சேர்த்துவிட்டோம் என்ற பெருமிதத்தை எடுத்துக்கொள்கிறோம. நம் நாட்டில் கல்வி படித்தவர்கள் என்றால், குறைந்த பட்சம் ஐந்தாண்டு படித்திருக்க வேண்டுமென்று தீர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில் 100-க்கு 90 பேரைச் சேர்த்துவிட்டோம் என்று சந்தோஷப்படுகிறோம். அந்த 100-க்கு 90-பேரில் எத்தனை பேர் ஐந்தாவது வகுப்பு முடிய பயிற்சி பெற்றிருக்கிறார்கள் என்பதை நாம் கணக்கிட்டுப் பார்க்கவில்லை. அந்தக் கணக்குப்படிப் பார்த்தால் தான் ஒரு நாட்டினுடைய படித்தவர்களின் தொகையை லிட்டரேட்ஸ் தொகையை நிர்ணயிக்க முடியும். அவ்வாறு நிர்ணயிப்பதற்கு இல்லாத நிலை இருக்கிறது. அவ்வாறு 100-க்கு 90 பிள்ளைகள் என்று சேர்க்கும்பொழுது அத்தனைபேரும் 5-வது வகுப்பு முடிய பள்ளிக்கு வருகிறார்களா என்பதைக் கவனித்து அத்தனை பேருக்கும் கல்வி புகட்ட ஏற்பாடு செய்தால் நன்றாகயிருக்கும். குழந்தைகள் தொடர்ந்து வராமலிருப்பதற்கு இன்றையதினம் ஏழ்மை காரணம் என்று சொல்வதற்கில்லை. ஏனென்றால் ஏழை மக்களுக்கு மதியத்தில் அன்னம் போடப்படுகிறது. சில பள்ளிகளில் கரும் பலகைகள், புத்தகங்கள் கூட வழங்கப்படுகின்றன. அப்படியிருந்தும் அவர்கள் வருவதில்லை என்ற நீண்டதொரு குறை இருக்கிறது. இன்று நாம் அதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். இந்தக் குறைகளுக்குக் காரணம் எங்கேயிருக்கிறது ? ஊரிலே இருக்கும் பள்ளிக்கூடங்களின் நிர்வாகத் தன்மையைப் பொறுத்திருக்கிறது. ஆசிரியர்களைப் பொறுத்திருக்கிறது. சர்க்காரையும் கொஞ்சம் பொறுத்திருக்கிறது.



கட்டாயக் கல்வியை நாம் அமுலாக்க வேண்டுமென்று முடிவு எடுத்துவிட்டு, அதை ஊர் ஊராக வைத்துவிட்டு, கட்டாயக் கல்வியை அமுலாக்காமலே இருந்து கொண்டிருக்கிறோம். தம்முடைய பிள்ளைகளைப் பெற்றோர்கள் ஆரம்பப் பள்ளிகளில் சேர்க்காதவர்கள் மீதும் 100-க்கு 60 நாள் பள்ளிகளில் வராமலிருப்பவர்கள் மீதும் ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா? அப்படி எடுக்கப்பட்டிருக்கிறது என்று கூறுவது மிக அபூர்வம் தான். ஏன் எடுக்கப்படவில்லை என்பதற்கு நான் காரணம் சொல்லவேண்டுமானால், தாட்சண்யம் பார்க்கிறோம் என்பதுதான். கட்டாயக் கல்வியை அமுலாக்குவதிலே நாம் தாட்சண்யம் பார்க்கிறோம் என்றுதான் சொல்வேன். நண் பகல் 12-00

இன்னொன்று, இன்றைக்கு பள்ளிக்கூடத்திலே ஆரம்பப்பள்ளிக்கூடம் தான் கல்விகொடுக்கும் நிலையமாக இருக்கிறது. அங்கு கற்றுக் கொடுக்கும் கல்வியைப்பற்றி நாம் ஆராயவேண்டும். இன்றைக்குப் பள்ளிக்கூடத்திலே ஒரு நாளைக்கு 5 மணி நேரம் படிப்பு என்று வைத்திருக்கிறோம். அந்த 5 மணி நேரத்திலே ஒரு மணி நேரம் விளையாட்டு மற்றும் சில்லறைக்காகப் போய் விடும். மீதி 4 மணி நேரம்தான் இருக்கிறது. ஆக, வாரத்தில் 20 மணி நேரம் தான் பிள்ளைகள் படிக்கிறார்கள். அப்படிப் படித்தால் என்ன படிப்பு படிக்கக்கூடும் என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

முன்பு இருந்ததைவிட இப்பொழுது நம்முடைய பிள்ளைகளின் மூளை குறைந்துவிட்டது என்றுதான் நான் நினைக்கிறேன். முன்பெல்லாம் ஒரு ஆசிரியர் சொல்லிக்கொடுத்தால், மூன்று வருஷத்திலே அவர்கள் விவேகசிந்தாமணி போன்ற பல மாபெரும் நூல்களையும் மனப்பாடம் செய்யக்கூடிய நிலை இருந்தது. ஐந்து வருஷத்திலே நிகண்டுகளைப் படிக்கக்கூடிய நிலை இருந்தது. ஆனால் இப்பொழுது எங்கே அந்தமாதிரி நிலை இருக்கிறது. இன்றைக்கு அந்த மூளைகள் ஏன் இல்லாமல் போய்விட்டது என்று நாம் சிந்தித்து பார்க்கவேண்டும். ஐயோ, பிள்ளைகளுக்கு பாரத்தை நாம் கொடுக்கக்கூடாது என்று சொல்லி, கல்வியின் தரத்தை குறைத்துக்கொண்டே வருகிறோம். இன்றைக்கு 5-வது வகுப்பு படித்து வரும் பிள்ளைக்குச் சாதாரண இலக்கணம் கூட தெரியவில்லை. உயிர்களிலே என்ன என்ன வகைகள்—வேறுபாடுகள் இருக்கின்றன என்று கேட்டால், அது புரியாத நிலை இருக்கிறது. உயிர், மெய், உயிர்மெய் இவற்றின் புணர்ச்சி விகாரம் பாலர் வகுப்புப் பஸ்தகத்திலே தெளிவாக சிவப்பு மையினாலே கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். ஆனால், ஆசிரியர்களும் அதை இதுவரையில் மனதிலே வாங்குவது இல்லை. று, ழு, ணு, என்ற எழுத்துக்களையெல்லாம் எப்படி எப்படி எழுதவேண்டுமென்று கூட தெரியாமல் இருக்கிறார்கள் நம்முடைய பிள்ளைகள் என்பதை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஒரு ஆசிரியர் இருக்கும்படியான பள்ளிக்கூடத்திலே ஐந்து வகுப்புகள் இருக்கும்போது நல்லபடியாக சொல்லிக்கொடுக்க முடியவில்லை என்று ஒரு புகார் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆசிரியர்களும் நாங்கள் என்ன செய்வது என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இந்த ஒரு ஆசிரியர், இரண்டு ஆசிரியர் இருக்கும் பள்ளிக்கூடங்களில் 5 வகுப்பு இருக்கும்படியாக இருக்கிறது. அவர்கள் போடுகின்ற அந்த " டைம் டேபிள் " இருக்கிறதே, கால அட்டவணை அதை மாற்றி விட்டு, எல்லா பாடங்களிலும் 5 வருஷத்திலே தேர்ச்சி பெறும் படியான ஒரு முறையை கையாள்வோமானால் நல்லபடியாக இருக்கும் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ஆசிரியர்களுக்கு நாம் நல்ல ஊதியம் கொடுக்கிறோம். இந்த நாட்டு மக்களில் மற்றவர்களுக்கு எவ்வளவு அடிப்படை ஊதியம் கொடுக்கிறோமோ, அந்த அளவுக்கு ஆசிரியர்களுக்கு நாம் ஊதியம்

கொடுத்துக் கொண்டு வருகிறோம். இன்னும் அதிகப்படியாகக்
கொடுக்கத் தயாராக இருக்கிறோம். சாதாரண மக்களுக்கு நியாயமாக
இருக்கும் " நேஷனல் இன்கம்" என்ற அந்த வருமானத்தை
அடிப்படையாக வைத்து, உத்தியோகஸ்தர்களுக்கு எவ்வளவு சம்பளம்
கொடுக்கிறோமோ அந்த அளவு சம்பளம் கொடுத்துக் கொண்டு
வருகிறோம். அதிலே குறைபட்டுக்கொள்வதற்கு ஒன்றும்
இல்லை. ஆனால் இதை நான் சொல்லவேண்டுமென்று நினைக்கிறேன்.
பல ஆசிரியர்கள் என்மேல் கோபித்துக்கொண்டாலும் பரவாயில்லை.
இன்றைக்கு இருக்கும்படியான ஆசிரியர்களுடைய தன்மை எப்படி
இருக்கிறது என்றால் சென்னையிலே " ஒன் வே ட்ராஃபிக் "
இருக்கிறதே அந்தமாதிரி ஒரு வழிப் பயணமாகவே இருக்கிறது.
ஆசிரியர்கள் பள்ளிக்கூடத்தில் உட்கார்ந்து கொண்டு பிள்ளைகளுக்குச்
சொல்லிக் கொடுத்தாலும், சொல்லிக் கொடுத்ததாகச் சொன்
னாலும் அல்லது சொல்லிக் கொடுக்காவிட்டாலும் அவர்களைக்
கேட்பதற்கு யாருமே இல்லை. அந்தப் பள்ளிக்கூடத்தை நிர்வகிப்
பவர்கள், மானேஜ்மெண்டு-பஞ்சாயத்து யூனியனாக இருந்
தாலும், அல்லது தனியாராக இருந்தாலும், அல்லது சர்க்காராக
இருந்தாலும் அவர்களின் மேல் நடவடிக்கை எடுப்பதில்லை.
சொல்லிக் கொடுக்கவேண்டிய அளவுக்கு சொல்லி கொடுக்கவில்லை. சொல்
லிக் கொடுக்கவேண்டிய முறையிலே சொல்லிக் கொடுக்கவில்லை.
பிள்ளைகள் புரிந்து கொள்கிற முறையில் சொல்லிக் கொடுக்க
வில்லை என்று ஆசிரியர்கள் மேல் நடவடிக்கை எடுப்பதில்லை.
அவர்கள் விரும்பினால் 3 மாத நோட்டீஸ் கொடுத்துவிட்டு போய்
விடலாம். அவர்கள் பள்ளிக்கூடத்தில் எவ்வளவு ஒத்துழையாமை
செய்தாலும் கூட அவர்களை வெளியேற்ற முடியாத நிலை இருக்கிறது.
அவர்கள் இந்த இடம் இல்லாவிட்டால் வேறு இடம் போய்
விடுகிறோம் என்று சொல்லி போகும்படியான நிலைதான்
இப்பொழுது இருக்கிறது. அவர்கள் முறையாக ஆற்ற வேண்டிய
பணிகள் இன்றைக்கு ஆரம்பப் பள்ளிகளிலே மிகமிக அதிகமாக
இருக்கின்றன. ஆனால் அவர்கள் ஆற்றுகிற பணிகள் மிக மிகக்
குறைவாக இருக்கின்றன.

என்ன சொல்லிக் கொடுக்க வேண்டுமென்று புத்தகத்தில்
கொடுத்திருக்கும் குறிப்புகளிலே தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறது.
ஆனால் அந்த அளவுக்கு தெளிவாக சொல்லிக் கொடுக்கப்படுவதில்லை.
ஆகவே நாம் கல்வி முறையை மாற்றி, கல்லூரிப் படிப்பும், இடை
நிலைக் கல்வியும் நல்லபடியாக இருக்க, அடிப்படைக் கல்வியை
நல்ல முறையில் காக்க வேண்டும். ஏனென்றால் சிறு பிள்ளை
களுக்கு இளம் வயதில் என்ன கற்றுக் கொடுக்கிறோமோ அதைத்தான்
தங்கள் வாழ்நாள் பூராவுக்கும் வழிகாட்டியாக வைத்துக்கொள்வார்கள்.
குழந்தைகளை பச்சை மண் என்று சொல்வார்கள். அந்த பச்சை
மண்ணை நாம் மிக அருமையாக காப்பாற்ற வேண்டும். அந்த
பச்சை மண்ணை காத்து 5 வயதிலே நாம் ஆசிரியர்கள் கையிலே
ஒப்புவிக்கிறோம். அந்த மண்ணை ஒழுங்காக பிசைந்து, பாகமாக
எடுத்து, வேகமாக சக்கரத்தைச் சுற்றி, லாவகமாக பிடித்தால்தான்
அந்த மண்ணானது நல்ல பாண்டமாக அமையும். ஆகவே,
ஆரம்ப ஆசிரியர்கள் பொறுப்பு அதிகமாக இருக்கிறது. அவர்கள்
அதிகமாக பிள்ளைகளைக் காக்க வேண்டியவர்களாகயிருக்கிறார்கள்.
அவர்கள் நல்ல முறையிலே பணியாற்றி, நம்முடைய சமுதாயத்தை
முன்னுக்குக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.
இன்றைக்கு இந்த ஆரம்பக் கல்வியிலும் மற்ற கல்வியிலும்
ஏற்பட்டிருக்கும் விதிகள் எல்லாம் ஆங்கிலேயர் காலத்தில் ஏற்பட்ட
விதிகள். அவைகள் எல்லாம் காலத்திற்கு புறம்பான
விதிகள். ஆகவே, அந்த விதிகளை எல்லாம் திருத்தி, அந்த
" ஆண்டிக்வேடட் ரூல்ஸை ' மாற்ற ஒரு குழு அமைக்க வேண்
மென்று நம்முடைய கல்வி அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்
கொள்கிறேன். மேலும், நேரம் அதிகம் இல்லாததால் மற்ற
கல்வியைப் பற்றி பேச முடியாததற்கு வருந்துகிறேன். கல்வியானது





இந்த நாடறிந்த அடிப்படையான விஷயம். அப்படிப்பட்ட ஒன்றுக்கு ஒரு இரண்டு மணி நேரம் ஒதுக்கிக் கொடுத்து, என் போன்ற 200 பேர் இங்கே வந்திருந்து அவர்கள் சொல்லவேண்டியதை சொல்ல முடியாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பதற்கு என்னுடைய வருத்தத்தை தெரிவித்துக் கொண்டு இதை வரவேற்கிறேன்.

***திரு. மு. ராமன்** : மாண்புமிகு சட்டப் பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த கல்வி மானிய கோரிக்கையின் மீது பேச வாய்ப்பு தந்தமைக்கு என் மனமுவந்த வணக்கத்தை தெரிவித்துக்கொண்டு என்னுடைய பேச்சை ஆரம்பிக்கின்றேன். கல்வித் துறைக்காக நமது தமிழக அரசு வரவு-செலவு திட்டத்தில் ஐந்தில் ஒரு பங்கு பாகத்தை முழுக்க முழுக்க ஒதுக்கியிருப்பதை கண்டு தமிழக மக்களும் பள்ளிக்கூட மாணவர் சமுதாயமும், ஆசிரியர் சமுதாயமும் உள்ளபடியே பாராட்டுரை செய்திகளைப் பத்திரிக்கைகளிலே வழங்குவதைக் கொண்டு மனமார இதை வரவேற்கிறார்கள் என்பதை இந்த சந்தர்ப்பத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். ஆசிரியர் சமுதாயத்திற்கு நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் அனேக நல்ல காரியங்களைச் செய்திருக்கிறார்கள். அநேக ஆசிரியர்கள் செகண்டரி கிரேட் பயிற்சி பெற்றிருந்தும் தற்போது ஹையர் கிரேட் ஆசிரியர்களாக பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அந்த நிலையை நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் மாற்றி, ஆரம்ப, இடை நிலைக் கல்வி ஆசிரியர்கள் செகண்டரி கிரேட் ஆசிரியர்களாக மாறக்கூடிய புதிய உத்தியோக வாய்ப்பு கொடுக்கக்கூடிய நிலையில் 5,000 ஆசிரியர்களுக்கு வாய்ப்பு தந்திருக்கிறார்கள் என்பதற்காக ஆசிரியர் சமுதாயம் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்கு நன்றியறிதலையும் வணக்கத்தையும் தெரிவிக்கிறது. அதே போன்று அநேக ஆசிரியர்களுடைய இன்னலைத் தீர்ப்பதுதான் நம்முடைய கல்வி அமைச்சர் அவர்களுடைய நோக்கமாக இருக்கிறது. 20 ஆண்டு கால ஆட்சியில் செய்யாத காரியங்களை. எல்லாம் இப்பொழுது பெருமிதம் அடையும் அளவுக்கு நல்லமுறையிலே இந்த ஆட்சியிலே இந்த திட்டத்திலே செய்திருக்கிறார்கள். ஆசிரியர் சமுதாயம் நல்லமுறையில் வேலை செய்வதற்கும், அவர்களுடைய குடும்ப வாழ்க்கை நல்லபடி உயர்வதற்கும் புதிய நிலையை நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் இந்த திட்டத்திலே சேர்த்திருக்கிறார்கள்.

மேலும், ஆரம்ப ஆசிரியர்களுடைய குடும்பம் நல்ல முறையில் செயல்படுவதற்கும், அவர்களுடைய குடும்பத்தில் உள்ள பிள்ளைகள் அரசாங்க ஊழியர்களுடைய பிள்ளைகள் நல்ல முறையில் படிப்பதற்கும் 2,000 ரூபாய்க்குள் வருவாய் வருகிற எல்லா ஊழியர்களின் பிள்ளைகளுக்கும் பி.யூ.சி.யில் இலவசக் கல்வியைப் புகுத்தியிருக்கிறார்கள். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்கு அரசாங்க பணியாளர்கள் அனைவரும், ஆசிரியர்கள் அனைவரும் நன்றியறிதலையும் வணக்கத்தையும் தெரிவிக்கிறார்கள் என்பதை அவர்கள் சார்பாக தெரிவித்துக் கொள்கிறேன். அதே சமயத்தில் ஆசிரியர்களுடைய நிலைமை இன்னும் சற்று உயர்த்தப்பட வேண்டும் என்று இந்த மாமன்றத்திலே பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு அநேக கிராமங்களில் வீட்டு வசதி கொடுக்கப்படவில்லை. வீட்டு வசதி இல்லாமல் பல பேர் 10 மைல் 15 மைல் சைக்கிளில் பயணம் செய்து காலாகாலத்தில் வீட்டுக்குப் போகாமல் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, வீட்டு வசதி செய்து கொடுக்கக்கூடிய சூழ்நிலை இல்லாவிட்டாலும், அவர்களுக்கு குறைந்தது 5 ரூபாயாவது வீட்டு வாடகைக் கொடுக்கும்படி மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களை இந்த சந்தர்ப்பத்தில் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், மாவட்டக் கழகப் பணியாளர்கள் அனைவரையும் 1968-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 1-ம் தேதியிலிருந்து எல்லா ஊழியர்களையும் ஒரே தரப்பில் கொண்டு வர வேண்டுமென்று திட்டமிட்டிருக்கிறது—நமது அரசு பொறுப்பேற்ற பிறகு. அந்த திட்டமிட்டிருக்கிற இந்த நேரத்தில் அவர்களுடைய ஊழிய காலங்களை கணக்கிட்டு, அவர்களுடைய தகுதியைக் கணக்கிட்டு, அவர்களுடைய வாய்ப்புக்கு தகுந்தபடி உத்தியோக உயர்வு கொடுக்கவேண்டுமென்று இந்த மன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் என்னுடைய தொகுதியில் பல உயர்நிலை பள்ளிகள் இருக்கின்றன. ஆனால், விஞ்ஞான பிரிவுக்கு ரூ. 40,000 தான் நமது அரசு ஒதுக்கியிருக்கிறது. வளவனூர் உயர்நிலைப் பள்ளி, கண்டமங்கலம் உயர் நிலைப் பள்ளி, வழுதாவூர் உயர்நிலைப் பள்ளி, ஆகியவைகளுக்கு விஞ்ஞான பகுதிக்கு இந்த ஆண்டுத் திட்டத்தில் ரூ. 40,000 ஒதுக்க வேண்டும் என்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களையும், கல்வி இலாகா இயக்குநர் அவர்களையும் பணிவுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

பயிற்சிக் கூடங்களில் பயிற்சிப் பெறுவதற்கு தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்றால் வயது 25 ஆக இருக்கவேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், வேலை வாய்ப்பு அலுவலகங்களில் தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களுக்கு 30 வயது வரையில் இருக்கலாம் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஆசிரியர்கள் பயிற்சியைப் பொறுத்தவரையில் எல்லா வகுப்பினர்களுக்கும் 25 வயது என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. வேலை வாய்ப்பு அலுவலகங்களில் இருப்பதுபோல, ஆசிரியர் பயிற்சிக் கூடங்களுக்கான வயதை தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களைப் பொறுத்தவரையில் 30 ஆக உயர்த்த வேண்டும் என்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மேலும் ஆசிரியர்கள் பிள்ளைகள் அனைவருக்கும், வருமானம் ரூ. 2,000-க்கு மேற்பட்டிருந்தாலும், புதுமுக வகுப்பில் இலவசக் கல்வி அளிக்கப்பட வேண்டும், மற்றபடி உதவித் தொகையும் கொடுக்க வேண்டும் என்று தெரிவித்துக் கொண்டு, எனக்கு பேசுவதற்கு வாய்ப்பு தந்த தலைவர் அவர்களுக்கு வணக்கத்தை தெரிவித்துக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

***திரு. சோ. அழகர்சாமி :** தலைவர் அவர்களே, கல்வி மான்யத்தின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். அரசாங்கக் கல்லூரிகளில் பூராவும் தமிழை பயிற்சி மொழியாகக் கொண்டுவருவதை நாம் அனைவரும் வரவேற்கவேண்டும். அதே நேரத்தில், அரசாங்கக் கல்லூரிகளில் பயிற்சிமொழியைத் தமிழாக ஆக்கிவிட்டு, தனியார் கல்லூரிகளில் ஆங்கிலத்தை வைத்துக் கொள்வதற்கு அனுமதித்தால், கல்வியைப் பொறுத்தவரையில் மாணவர்கள் இரண்டு தரமாகப் பிரிக்கப்பட்டு, தமிழ்க் கல்லூரியில் சேர்ந்து படித்தவர்களுக்கு, ஆங்கிலக் கல்லூரிகளில் சேர்ந்து படித்த மாணவர்களுக்கு உள்ள மதிப்பு தங்களுக்கு இல்லாமல் போய் விடும், வேலைகள் மற்ற வாய்ப்புகளுக்கு தங்களுக்குப் பாதகம் ஏற்பட்டு விடும் என்ற பயம் ஏற்பட்டு, அவர்கள் தமிழை பயிற்சி மொழியாகக் கொண்ட கல்லூரிகளில் படிக்க விரும்பாத நிலை ஏற்பட்டுவிடும். அமைச்சர் அவர்கள், சென்ற ஆண்டு ஒதுக்கிய இடங்களில் பல இடங்களில் தமிழிலே மாணவர்கள் சேருவதற்கு முன்வரவில்லை, 1,300 இடங்கள் காலியாக இருந்தன என்று சொன்னார்கள். ஆகவே, அரசாங்கக் கல்லூரிகளில் மட்டும் தமிழைப் பயிற்சி மொழியாக்கிவிட்டு நின்றுவிடாமல், தனியார் கல்லூரிகள் உள்பட எல்லா கல்லூரிகளிலும் தமிழைப் பயிற்சி மொழியாக்குவதோடு மட்டுமல்லாமல், அவர்களுக்கு உத்தியோகத்தில் முதல்



இடம் கொடுப்பது, அவர்களுக்கு மேலும் பல சலுகைகள் கொடுப்பது, ஸ்காலர்ஷிப் முதலியவைகளுக்கு முதல் இடம் கொடுப்பது போன்ற சலுகைகளையும் அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தனியார் பள்ளிகளை அரசாங்கமே ஏற்று நடத்துவது. ஆரம்பப் பள்ளிகளையும் மற்ற பள்ளிகளையும் தனியார் நடத்துவதை அனுமதிக்காமல், அவைகளைச் சர்க்காரே ஏற்று நடத்தவேண்டும். அப்பொழுதுதான் சிறு குழந்தைகள் நல்லதோர் பண்புள்ளவர்களாக, திறமைசாலிகளாக வளர்க்கப்படுவார்கள். கல்வி பயிலும்பொழுது, பல தரப்பட்ட கல்வி இல்லாமல், ஒரே சீரான கல்வியாக அமைவதற்கு, எல்லா கல்வியும், பள்ளிகளும், அரசாங்கத்தின் பொறுப்பில் இருக்க வேண்டும். தனியார் பள்ளிகளை அரசாங்கமே ஏற்று நடத்தினால் தான் சரியாக இருக்க முடியும், அப்படிச் செய்யவேண்டும் என்பதைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஆசிரியர் நியமனத்தைப் பற்றிச் சொன்னார்கள். ஆசிரியர் பயிற்சி பெற்று வந்தவர்கள் வேலை தேடித்தரக்கூடிய ஸ்தாபனத்தில் பதிவு செய்து கொள்கிறார்கள். ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்படவேண்டுமென்று சொன்னால், அந்த லிஸ்டைப் பெற்று, அதிலிருந்து தேர்ந்தெடுக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. அதிலே பல விதமான லஞ்ச ஊழல்களுக்கு இடம் ஏற்படுகிறது. ரூ. 1,000, 2,000 என்று லஞ்ச ஊழல் நடந்து கொண்டிருக்கிறது. அதனால் சாதாரணமாக ஏழை எளியவர்களுக்கு வேலை கிடைக்க முடியாத ஒரு நிலை இருக்கிறது. தனியார் பள்ளி நிர்வாகிகள் தங்களுக்கு வேண்டியவர்களுக்கு, தங்கள் சொந்தக்காரர்களுக்கு இப்படி ஆட்களைத் தேடி வேலை கொடுப்பது தான் நடக்கிறதே தவிர, வேறு ஒன்றுமில்லை. அதிகமாக லஞ்சமும் பெறுகிறார்கள் அதனால் மற்ற ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்காமல் போய் விடுகிறது. ஆசிரியர் பயிற்சி பெற்றவர்களை அந்த வரிசைப்படி ஒரு லிஸ்டு எடுத்து, மாவட்ட வாரியாக, எந்தெந்த பள்ளியில் எத்தனை எத்தனை ஆசிரியர்கள் வேண்டுமென்று நிர்வாகிகள் கேட்டாலும், யார் கேட்டாலும், அந்த லிஸ்டில் உள்ள வரிசைப்படி ஆட்களை மேலே இருந்து நியமிக்க வேண்டும். அப்படிப்பட்ட ஏற்பாட்டை செய்தால்தான் முதலில் படித்து பயிற்சி பெற்றவர்கள் நீண்ட நாட்களுக்கு வேலை இல்லாமல் இருக்கக்கூடிய நிலைமையை தவிர்க்க முடியும். அப்படியில்லை என்று சொன்னால், வேலை தேடித்தரும் ஸ்தாபனங்களில் பதிவு செய்து கொண்டு பல வருடங்கள் ஆகியும், அவர்களுக்கு எந்தவிதமான வேலையும் கிடைக்காமல், நேற்று பதிவு செய்து கொண்டவர்களுக்கு மறு நாளே வேலை கிடைக்கக்கூடிய ஒரு நிலைமை ஏற்படுகிறது. வேலை தேடித்தரும் ஸ்தாபனத்தில் பதிவு செய்துகொண்ட வரிசைப்படி அவர்களுக்கு வேலை கொடுக்கப்படவேண்டும். எந்த ஸ்தாபனத்தில் ஆசிரியர் வேலைக்கு ஆசிரியர்கள் வேண்டுமென்று சொன்னாலும், பஞ்சாயத்து யூனியன் பள்ளியாக இருந்தாலும் சரி, தனியார் பள்ளியாக இருந்தாலும் சரி, அந்த வரிசைப்படி நியமனம் செய்யவேண்டும் என்ற ஏற்பாட்டைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஆரம்பப்பள்ளிகளில் அதிகமாக பெண் ஆசிரியர்களை நியமிக்கவேண்டும். அவர்களுக்கு முதல் இடம் தரவேண்டும். அவர்கள் தான் ஆண்களை விட சிறு குழந்தைகளுக்கு திறமையாகச் சொல்லிக் கொடுக்கக்கூடிய ஆற்றல் பெற்றவர்கள். ஆகவே, ஆரம்பப் பள்ளிகளில் ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படும்பொழுது பெண் ஆசிரியர்களுக்கு முதல் இடம் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சர்க்கார் உயர்நிலைப் பள்ளிகளில் இப்பொழுது 3 வகுப்புகளில், அதாவது 9, 10, 11 ஆகிய வகுப்புகளில் தான் விசேஷ பயிற்சி கொடுக்கப்படுகிறது மாணவர்களுக்கு. தொழில் ஆசிரியர், டிரில் மாஸ்டர் இப்படி ஒவ்வொன்றுக்கும் தனியாக ஆசிரியர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு வாரத்தில் ஒன்றிரண்டு பீரியட்கள் தான் வேலை இருக்கிறது.

சர்க்கார் உயர்நிலைப் பள்ளிகள் 6-வது வகுப்பிலிருந்து 11-வது வகுப்பு வரை இருக்க வேண்டும். இவைகளைச் சொல்லிக்கொடுக்கவேண்டும். 6-வது வகுப்பிலிருந்து இவைகளைப் பயிற்றுவிப்பதற்கு ஏற்பாடு செய்தால் தான் அதிகமான குழந்தைகள் இவற்றைக் கற்றுக்கொள்வதற்கு வசதியாக இருக்கும். இப்பொழுது ஒவ்வொரு இடத்தில் மூன்று வகுப்புகளிலும் 100 பிள்ளைகள் தான் இருக்கிறார்கள். ஆனால், ஒவ்வொரு பாடத்திற்கும் தனியாக ஆசிரியர் நியமிக்க வேண்டியிருக்கிறது. வாரத்திற்கு ஒன்றிரண்டு பீரியட் தான் அவர்கள் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுக்கக்கூடிய சந்தர்ப்பம் கிடைக்கிறது. ஆகவே, சர்க்கார் உயர்நிலைப் பள்ளிகளில் இப்படிப்பட்ட பயிற்சியை 6-வது வகுப்பிலேயே ஆரம்பிக்க வேண்டும். அப்பொழுது தான் அரசாங்கத்திற்கு பணமும் மிச்சமாகும். கல்வியின தரமும் உயரும். தனியார் சில இடங்களில் ஆரம்ப உயர்நிலைப் பள்ளிகளை வைத்துக்கொண்டு, சர்க்கார உயர் நிலைப்பள்ளிகளில் 6-வது வகுப்பு ஆரம்பிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள். இதுமாதிரி நெல்லை மாவட்டத்தில் 13 சர்க்கார் உயர்நிலைப்பள்ளிகளில் சென்ற ஆண்டு 6-வது வகுப்பு ஆரம்பிக்கப்பட்டு, ஒரு மாதம் நடந்து, மறுபடியும் அந்த ஏற்பாட்டைத் திரும்பப்பெற்றுக்கொள்ளக்கூடிய நிலைமை ஏற்பட்டது. ஆகவே, சர்க்கார் உயர் நிலைப் பள்ளிகளில் 6-வது வகுப்பிலிருந்து 8-வது வகுப்பு வரையில் உள்ள பிள்ளைகளையும் சேர்த்து, இந்தப் பாடங்களை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த பள்ளிகள் பற்றி சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். என்னுடைய நெல்லை மாவட்டத்தில் கோவில்பட்டி தாலுகாவில், அந்த வட்டாரத்தில் 3, 4 பஞ்சாயத்து யூனியன் ஆரம்பப் பள்ளிகள் இருக்கின்றன. அங்கே ஆரம்பப் பள்ளிகள் 2, 3 வருடங்களாக நடந்தும் கூட, அந்த வட்டாரத்து மக்கள் நிதி உதவி செய்து, கட்டடம் கட்டி பள்ளி நடத்தப்பட்டு வந்தாலும்கூட, ஒரு மைலுக்குப் பக்கத்தில் பள்ளி இருக்கிறது என்று சொல்லி, அந்தக் காரணத்தைக் காட்டி, அங்கீகாரம் மறுக்கப்பட்டு, அந்தப் பள்ளிகளை மூடவேண்டுமென்ற நிலை இருக்கிறது. சிறு குழந்தைகள் வெகு தூரம் போக முடியாது. பள்ளிக்கு வேண்டிய மாணவர்கள் அந்த இடத்தில் இருந்தும் கூட அங்கீகாரம் மறுக்கப்படுகிறது. சிறு குழந்தைகள் ஒரு மைல், ½ மைல் நடந்து போவது என்பது முடியாத காரியம். ஒரு ஆசிரியருக்குத் தேவையான பிள்ளைகள் இருந்தால், பள்ளிகளுககு அங்கீகாரம் கொடுக்கவேண்டும். ஒரு மைல், ½ மைல் என்று தூரத்தை வைத்துக்கொண்டு பக்கத்தில் பள்ளியிருப்பதால் அங்கீகாரம் மறுக்கப்படுவது என்ற நிலை மாற வேண்டும். அப்பொழுதுதான் சிறு குழந்தைகள் பள்ளிகளுக்குச் செல்வதற்கு உதவியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆரம்ப பள்ளிகளுக்கு ஆசிரியர்கள் கோட்டா. வருஷத்திற்கு ஒரு பள்ளியில் 10 பிள்ளைகள் அதிகரித்துக்கொண்டே வந்தாலும்கூட 100 குழந்தைகள் உள்ள பள்ளிகளுக்கு 4, 5 வருஷங்களுக்கு ஆரம்ப ஆசிரியர்கள் கோட்டா கிடைப்பதில்லை. 10, 10 பிள்ளைகளாகச் சேர்ந்தால், கோட்டா கிடைப்பதில்லை. இப்பொழுதிருக்கிற நிலைமையில் ஒரு பள்ளியில் ஒரு வருஷத்தில் 20 பிள்ளைகள் அதிகரித்தால்தான், ஆசிரியர் நியமனக் கோட்டா கிடைக்கிறது. வருஷத்திற்கு 10 பிள்ளைகள் சேர்ந்தாலும், கிராமப்புறத்திலுள்ள பள்ளிகளுக்கு அதிக ஆசிரியர்கள் நியமிக்கப்படவேண்டும். இந்த நியமனக் கோட்டாவில் உள்ள சிக்கல் நீக்கப்படவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆசிரியர்கள் பயிற்சி பெற்றவர்கள் 6 வருஷத்திற்குள்ளாக இரண்டு வருஷம் ஆசிரியராக வேலை செய்யாவிட்டால் அவர்கள் பெற்ற உதவிப் பணத்தைத் திருப்பிக் கொடுத்துவிடவேண்டும் என்ற நிலைமை இருக்கிறது. ஆசிரியர்கள் பல ஆண்டுகளுக்கு வேலை இல்லாமல் இருந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை கிடைக்காமல் இருப்பதால், அவர்கள் உதவிப் பணத்தைத் திருப்பிக்கொடுக்கவேண்டும் என்ற உத்தரவை திரும்பப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.





***திரு. கே. பி. எஸ். மணி :** மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, கல்வி மானியத்தின் மீது ஒருசில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். கல்வியைப் பற்றி எனக்கு முன்னால் பேசிய அங்கத்தினர்களெல்லாம் விரிவாகச் சொல்லிவிட்டார்கள். குறிப்பாக ஆதாரக் கல்வி தான் முக்கியமானது. அடித்தளம் சரியாக இருந்தால்தான், மேலே நன்றாக இருக்க முடியும். கிராமாந்தரங்களிலே மக்கள் சிறு சிறு ஆரம்பப் பாடசாலைகளில் நர்சரிகளோடு சேர்ந்து படிக்கக் கூடிய வகையில் இந்தப் புதிய அரசு ஒரு திட்டத்தை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

பாடப் புத்தகங்கள் நல்ல முறையில் அமைய வேண்டும். பாடங்கள் தற்கால வாழ்க்கைக்குத் தேவையானபடி அமையவேண்டும். தேவையற்ற மற்றவர்களால் வெறுக்கப்படுகின்ற, சிலரை இழித்தும், பழித்தும் கூறும் வகையான பாடங்கள் இருக்கும் புத்தகங்கள் அனுமதிக்கப்படக் கூடாது. தேசீய உணர்வை ஊட்டும் வகையில் பாடங்கள் இருப்பது நல்லது. சமூக நலம் என்பது பற்றியும், சுகாதாரம், சகோதரத்துவம் போன்றவற்றைப் பற்றிய பாடங்கள் இருக்கலாம். கீழ் மட்டத்திலிருந்தே, அவசியமற்ற, தற்காலக் கருத்துக்களுக்கு ஒவ்வாத சரித்திரம் போன்ற பாடங்களை புகுத்த வேண்டிய அவசியமே இல்லை.

கல்வி நான்கு மட்டத்திலே இருக்கிறது, எலிமெண்டரி, ஹையர் எலிமெண்டரி, ஹைஸ்கூல், காலேஜ் என்று. காலேஜ் என்று வரும்போது, தனிப்பட்ட ஒரு சப்ஜட்டைப் படித்துப் பட்டம் பெறும் வசதியைச் செய்ய வேண்டும். எஞ்ஜினியரிங் படிக்க வேண்டிய மாணவர்கள் எதற்காக சரித்திரம் படிக்கக் கட்டாயப்படுத்தப்பட வேண்டும்? அந்தத் துறையில், மேனாட்டு முறைகளை அனுசரித்து செயல்பட வழிவகை செய்யப்படவேண்டும்.

பாடப் புத்தகங்களிலே இடைக்காலத்தில் செருகப்பட்ட இலக்கியங்களை சமூகத்தின் பெயரால், ஜாதியின் பெயரால், ஒரு வகுப்பினரை பழித்தும், இழித்தும் கூறும் பாடங்களை இன்னமும் வைத்துக் கொண்டால், நான் முன்பு ஒருமுறை குறிப்பிட்டேனே, அந்தமாதிரி மருத்துவக் கல்லூரியில் நடந்த விஷயம் தான் திரும்பவும் ஏற்படும். அதேபோல, இந்த எஸ்.எஸ்.எல்.ஸி. பாடப்புத்தகத்திற்கு என்ன விஷயம் வந்திருக்கிறது என்று பார்த்தால், திருநாளைப்போவார் புராணம் பாடமாக வந்திருக்கிறது. இது அவசியமா என்பதை இந்த அரசு சிந்திக்க வேண்டும். என்னுடைய கருத்து என்னவென்றால், ஒரு தனிப்பட்ட சமூகத்தினரை பழித்தும், இழித்தும் கூறும் நிலையில் இருக்கும் திருநாளைப்போவார் கதை வேண்டாம் என்பதுதான். கேள்வித்தாளில் என்ன கேட்டிருக்கிறார்கள். "புலைப்பாடியின் இயல்பைத் தொகுத்து எழுதுக" என்று கேட்கிறார்கள். இது இலக்கியமாக இருக்கலாம். அதில் இலக்கணம் இருக்கிறது என்றும் சொல்லலாம். ஆனால் உண்மையிலேயே ஒரு சமூகத்தைத் தாக்கி எழுதியிருப்பதைப் படிக்க வேண்டுமா? இன்னும்,

விள்ளும் பைங்குழல் கதிர் நெல் மிலைச்சிங் புல் புலைச்சியர்கள்
கள் உண்டு களிதூங்கு கறங்கு பறையும் ஒலிக்கும்.

என்று வருகிறது. அதன் பொருள், "கறுத்த கூந்தலில் நெற்கதிர்களை அணிந்த இழிவான புலைச்சியர்கள் கள்ளினை உண்டு, அக்களிப்பினாலே அசைந்தாட, அதற்கிசைய முழக்கப்படும் பறைகளும் ஒலிக்கும்". அதை வகுப்பில் ஒரு தாழ்த்தப்பட்ட மாணவன் கேட்டால் எப்படியிருக்கும்? ஆசிரியர்தான் என்ன விளக்கம் கொடுப்பார்? இம்மாதிரி விளக்கத்தைக் கொடுக்கும் வேளையில், ஒரு அரிசன மாணவன் பக்கத்தில் இருக்கின்ற மற்ற மாணவர்கள் அவனைப் பற்றி என்ன நினைப்பார்கள்? இந்த விதமான பாடங்கள் பத்தாவது வகுப்பில் படிக்கும் மாணவர்களுக்குத் தேவைதானா? இதெல்லாம் இருப்பதால் என்ன விளையும்? முன்பு மருத்துவக் கல்லூரியில் நடந்தது போலத்தான் நடக்கும்.

இன்னும் கடவுள்கள் பெயரால் இருக்கும் பாட்டுகளைப் பார்த்தால் அதுவும் அப்படியேதான், திருவாசகத்திலே,

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே............
.........................
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்கும்
செம்மையே ஆய சிவபதம் அளித்த..........

என்று இருக்கிறது. அந்தப் புலவர் தன்னைத்தானே குறைத்துக் கொண்டு இருக்கலாம். ஆனால், அதற்கு நாங்கள் தானா அகப் பட்டோம் ? புழுத்தலைப் புலையன் என்றால், அவருக்கு புழு நோய் வந்திருக்கலாம். அதைச் சொல்லக்கூட நாங்கள் தானா அகப்பட்டோம்.

அதேமாதிரி, இன்னொரு பெரிய விஷயம், "பள்ளுப் பாட்டு" என்று இருக்கிறது. அது பி.எ. பாடம். பி.எ. ஸ்டுடென்சுக்கு அந்தப்பாடம் அவசியம் தானா ? ஒரு புலையன் இரண்டு புலைச்சிகளைக் கட்டிக் கொண்டான். ஒருத்தி விஷ்ணு மதம், இன்னொருத்தி சிவ மதம். இரண்டு பேருக்கும் சண்டை. பி.எ. படிக்கின்ற பையனுக்கு இந்தப் பாடமெல்லாம் தேவைதானா ? தனிப்பட்ட பெயர்களை இழித்துப் பழித்துக் கூறும் பாட்டுக்களும் பி.எ. வகுப்பில் தேவையா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

கம்ப ராமாயணத்திலே சொல்கிறார்கள் :

அஞ்சிலே ஒன்று பெற்றான் அஞ்சிலே ஒன்றைத்தாவி
அஞ்சிலே ஒன்று ஆறாக ஆரியற்கு ஆக ஏகி,
அஞ்சிலே ஒன்று பெற்று அணங்கு கண்டு அயலார் ஊரில்
அஞ்சிலே ஒன்றைவைத்தான் அவன் நம்மை அளித்துக்காப்பான்

என்று இருப்பதை மாற்றி, "ஆசிரியற்கு" என்பதற்குப் பதிலாக, "அந்தணர்க்கு" என்று திருத்தப்பட்டது கனம் கல்வி அமைச்சருக்குத் தெரியும். அது நடந்தது அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே. அந்த முறையில் கம்பராமாயணத்தையே மாற்றியிருக்கிறார்கள். ஆகவே, தயவு செய்து அம்மாதிரி இந்த ஆட்சி வந்த பிறகாவது, மேற்படி பாட்டுக்களை, தேவையல்லாத பாடங்களை அகற்ற வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். தயவு செய்து இந்த அரசு வருகின்ற ஆண்டி லிருந்தாவது ஒரு சமூகத்தை இழித்தும், பழித்தும் கூறப்படும் பாட்டு, பாடங்களை அகற்றவும், தாயுமானவர், ராமலிங்க சுவாமிகள் பாட்டுப் போன்றவற்றை வைக்கவும் முயற்சி செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(மணியடிக்கப்பட்டு அடுத்த உறுப்பினர் அழைக்கப்பட்டார்.)

***திரு. வை. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, எங்கள் கட்சி சார்பாகக் கொடுக்கப்பட்டிருக்கிற வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து, ஒரு சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். முக்கியமாக வருங்காலம் நல்ல முறையில் அமையவேண்டும் என்றால், சிறுவர்களாகியவர்கள், நன்னடத்தையோடும், அறிவோடும், திறமையோடும் பிரகாசிக்க வேண்டும் என்பது இன்றியமையாதது. கல்வி என்று சொல்லும் போது, ஆரம்பத்தி லிருந்து இருக்கும் குறைபாடுகளை நீக்க வேண்டும். ஒரு கட்டடம் கட்டுகிறோம் என்றால், அதன் அஸ்திவாரம் பலமாக இருந்தால் தான் மேலே எழும்பும் கட்டடம் சிறப்பாக அமையமுடியும். ஆகவே, ஆரம்ப காலத்திலிருந்து குறைகளை நீக்கி சீர்திருத்தம் செய்தால்தான், மாணவர் கள் வருங்காலத்தில் நல்ல முறையில் இயங்கி நாட்டுக்கு பயன்படுவார்கள்.



கல்வி சீர்திருத்தம் என்று சொல்லும்போது, ஆரம்ப ஆசிரியர் களுடைய நிலையைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். ஒரு கலைஞன் ராக சுத்தத்தோடு பாடவேண்டும் என்றால், மனக்குறை, கோளாறுகள் இன்றி, நிம்மதியோடு சந்தோஷமான சூழ்நிலையில் இருந்தால் தான் பாட்டுக் களைப் பாடமுடியும். அதேபோலத்தான் ஆசிரியர்கள் நிலைமையும். அவர்களுடைய மனத்தில் குறைவு இல்லாமல் இருந்தால்தான் நல்ல முறையில் அவர்கள் பணியாற்ற முடியும். கல்வியைப் போதிக்க முடியும். இன்றைக்குப் பார்த்தால் ஆரம்ப ஆசிரியர்களுடைய நிலை மிக மிகப் பரிதாபகரமாக இருக்கிறது. அவர்களுடைய வாழ்க்கைத்தரம் உயர வழிவகை செய்யப்படவேண்டும். ஒரு எழுத்தருக்கு வரும் சம்பளம் கூட ஒரு ஹையர் கிரேட் ஆசிரியருக்கு வருவதில்லை. சம்பளம் பொறுத்த வரையில், லோயர் டிவிஷன் கிளார்க்குக்குக் கொடுக்கும் அளவிலாவது ஆசிரியருக்குக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அதேபோல, அப்பர் டிவிஷன் கிளார்க்குக் கொடுக்கும் சம்பளம் செகண்டரி கிரேட் ஆசிரியருக்குக் கொடுக்க வேண்டும். அந்த அளவில் அமைக்கப்பட்டால் தான், அவர்களுடைய வாழ்க்கைத்தரம் உயரும்.

அதேபோல பள்ளிக்கூடங்களை எடுத்துக் கொண்டால், பல விதங்கள் இருக்கின்றன. சில இடங்களில் பார்க்கிறோம். செகண்டரி கிரேட் ஆசிரியர்கள் ஹையர் கிரேட் சம்பளம் வாங்கிக் கொண்டு வேலை செய்யும் பரிதாபமான நிலையையும் பார்க்கிறோம். அப்படிப்பட்ட இடங்களில் செகண்டரி கிரேட் ஆசிரியர்களை செகண்டரி கிரேட் சம்பளம் வாங்கும் நிலையில் வைக்க வேண்டும். அந்தச் சம்பளம் கொடுக்க ஆவன செய்ய வேண்டும். மானியம் பெறும் பள்ளி ஆசிரியர்கள், யூனியன் பள்ளி ஆசிரியர்கள் இவர்களிடையே பல வேறுபாடுகள் இருக்கின்றன. யூனியன் ஆசிரியர்களுக்கு ஃபெஸ்டிவல் அட்வான்ஸ் போன்றவைகள் கிடைக்கின்றன. அதே சமயத்தில் மானியம் பெறும் பள்ளி ஆசிரியர்களுக்கு அந்தச் சலுகைகள் கிடைப்பதில்லை. மானியம் பெறும் பள்ளி ஆசிரியர்கள ஓய்வு பெறும் வயது 60 என்றும், யூனியன் பள்ளி ஆசிரியர்கள் ஓய்வு பெறும் வயது 58 என்றும் இருக்கிறது. இம்மாதிரி வித்தியாசங்களைப் போக்க எல்லோருக்கும் ஒரேமாதிரியான சட்டங்கள் இருந்தால், நலமாக இருக்கும்.

பள்ளிக்கூடங்களுக்குரிய பாடப் புத்தகங்களை நிர்ணயிப்பது மே–ஜூன் மாதங்களுக்குச் சென்று விடுகிறது. அதன் காரணமாக, பள்ளிகளில் பாடம் ஆரம்பிக்க ஜூலை–ஆகஸ்ட் மாதம் ஆகிவிடுகிறது. ஆகையால், பள்ளிக்கூடங்களில் பாடத் திட்டங்களை நிர்ணயிப்பதை எப்ரல் மாதத்திற்குள் முடிவு செய்து, பள்ளிக்கூடங்களைத் திறந்தவுடன் ஒவ்வொரு பள்ளிக் பி.ப.
கூடத்திற்கும், அதற்கு வேண்டிய பாடப் புத்தகங்கள் கிடைப்பதற்கான 12–30
வாய்ப்புகளை அரசாங்கம் உடனடியாகச் செய்ய வேண்டும்.

மாணவர்களைக் கல்லூரிகளில் சேர்க்கப் போகும்போது பலவிதமான கஷ்டங்களை மாணவர்கள் அனுபவிக்கவேண்டியிருக்கிறது. சில கல்லூரி களில் அப்ளிகேஷன் பாரத்திற்கு நான்கு ரூபாய் என்று நிர்ணயித் திருக்கிறார்கள். திருச்சி போன்ற நகரத்தில் பத்து கல்லூரிகளுக்கு மேலாக இருக்கின்றன. ஒவ்வொரு கல்லூரிக்கும் நான்கு ரூபாய் வீதம் கட்டி, அப்ளிகேஷன் பாரங்கள் வாங்குவதென்றால், பத்து கல்லூரிகளுக்கும் 40 ரூபாய் வரை அப்ளிகேஷன் வாங்குவதற்கே செலவிட வேண்டியிருக்கிறது. இம்மாதிரி இல்லாமல், பத்து பைசாவுக்குமேல் அப்ளிகேஷனுக்காகக் கட்டணம் வாங்கக்கூடாது என்ற முறையை, பல்கலைக்கழகம் மூலமாக, அமைச்சரவை ஏற்பாடு செய்து, கல்லூரி களுக்கெல்லாம் தெரிவிக்கவேண்டும்.

மாணவர்களைச் சேர்க்கும்போது, எஸ்.எஸ்.எல்.சி.-யில் 300 மார்க்குகள் வாங்கினால்தான், கல்லூரியில் இடம் பெற முடியும் என்ற திட்டத்தை வகுத்துக்கொண்டால் கல்லூரியில் இடம் பெறுவதற்கு வாய்ப்பு இருக்கும். சில கல்லூரிகளைப் பார்க்கிறோம். 400 மார்க்கு வாங்கியிருந்தால்தான் இடம் கொடுக்கிறார்கள். அதற்குக் குறைந்து மார்க் வாங்கியிருந்தால்,

சேர்ப்பது கிடையாது. இன்னும் சில கல்லூரிகளில், 200, 250 மார்க்குகள் வாங்கினவர்களையும் சேர்த்துக்கொண்டு நல்ல முறையில் அவர்களைத் தேர்ச்சி பெற வைக்கிறார்கள். 400 மார்க் வாங்கின மாணவர்களைச் சேர்த்துக்கொண்ட கல்லூரிதான் கெட்டிக்காரப்பிள்ளைகள் உள்ள இடம், அந்தக் கல்லூரியில்தான் சேரவேண்டும் என்ற எண்ணம் மற்றவர் களுக்கும் எழுகிறது. அப்படியெல்லாம் இல்லாமல், ஒரு குறிப்பிட்ட மார்க் வாங்கியிருப்பவர்களைத்தான் சேர்த்துக்கொள்வோம் என்று சில கல்லூரிகளில் கூறுவது தவறாகும். எல்லாக் கல்லூரிகளுக்கும் ஒரேமாதிரியான நிலையை ஏற்படுத்தவேண்டும். நல்ல மார்க் வாங்கியவர் களை எல்லாக் கல்லூரிகளுக்கும் பிரித்துக்கொடுப்பதற்கு ஆவன செய்ய வேண்டும். இதற்காக ஒரு கமிட்டியை அமைத்து, அதன் மூலமாகப் பிரித்துக் கொடுக்கலாம்.

ஆசிரியர்களுக்கு நகரயீட்டுப்படி கொடுக்கப்பட்டிருக்கிறது. மானியம் பெறும் ஆசிரியர்களுக்கும் வீட்டு வரி மானியம் கொடுக்கவும் அரசாங்கம் வழிவகை செய்யவேண்டும்.

கிராமப்புறங்களில் இருக்கும் ஆசிரியர்களுக்கு வீட்டு வசதி கிடையாது. அவர்களுக்கான வீட்டு வசதிகளைச் செய்துகொடுக்க ஆவன செய்யவேண்டும். ஆசிரியர்களுக்கு விடுதிகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. ஆனால், ஓர் ஊரில் ஒரு விடுதி என்று கட்டிக் கொடுப்பதால், அத்தகைய வீடுகள் தனியாக இருப்பதால், அங்கு வசிப்பதற்குப் பயந்துகொண்டு ஆசிரியர்கள் போவது கிடையாது. ஆகையால், ஆசிரியர்களுக்குப் கிராமப்புறங்களில் விடுதிகள் கட்டிக்கொடுக்கும்போது, இரண்டு ஆசிரியர்களுக்கு ஒரு விடுதி கட்டிக் கொடுத்தால் இரண்டு பேர்கள் சேர்ந்து குடியிருப்பதற்கான வாய்ப்பும் வசதியும் ஏற்படும்.

திருச்சியில் பத்து கல்லூரிகளுக்கு மேலாக இருக்கின்றன. திருச்சி யில் பல்கலைக்கழகம் ஒன்றை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புக்கூறு இருக் கிறது. ஆகவே, திருச்சியில் ஒரு பல்கலைக்கழகம் ஆரம்பிக்க முயற்சி செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வேலை பார்க்கும் இந்த நேரத்தில் திருச்சியில் பல நிறுவனங்கள் இருப்பதால், பல பெண்கள் அதிகமாக வேலை செய்கிறார்கள். திருச்சியில் ஆண்களுக்குத் தான் மாலைநேரக் கல்லூரி இருக்கிறது. பெண்களுக்கான மாலை நேரக் கல்லூரியும் ஏற்படுத்தவேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்த ஆண்டு ஆறு கல்லூரிகளை ஏற்படுத்தப்போவதாக மதிப்பிற்குரிய தொழில் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அதில் எங்கள் திருவெறும் பூரிலும் ஒரு கலைக் கல்லூரியை ஏற்படுத்துவதற்கு நாங்கள் கோரிக்கை அனுப்பியிருக்கிறோம். அதையும் பரிவுடன் கவனிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கல்வி அமைச்சர் அவர்கள் அம்பிகாபுரத்தில் ஒரு பள்ளியை ஆரம்பித்து வைத்தார். அந்த இடத்தில் பள்ளிக்கூடம் கட்டுவதற்கு இடம் பார்த்துக்கொண்டிருக்கிறோம், கிடைக்கவில்லை. இம்மாதிரி உயர்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தெல்லாம் அரசாங்கமே முன்வந்து, கம்பல்ஸரி அக்விசிஷன் செய்து இடவசதிக்கு ஏற்பாடு செய்தால்தான் பள்ளிக்கூடங் களை நல்ல முறையில் ஏற்படுத்தமுடியும் என்று கூறி, இந்த வாய்ப்பினை எனக்குக் கொடுத்ததற்கு நன்றி தெரிவித்து என்னுடைய உரையை முடிக்கிறேன்.

Dr. H. V. HANDE: Sir, on behalf of our party and with regard to the cut motion we have moved, I wish to say a few things. At the very outset I would like to express my disappointment at the time allotted for this Demand. We should have allotted at least





two days. With the permission of the Deputy Speaker, I wish to quote what my distinguished Friend the Hon. Thiru K. A. Mathialagan said in the Assembly on 7th March 1966 :—

"இந்தக் கல்வி மானியக் கோரிக்கை மீது இரண்டு நாட்கள் விவாதம் நடைபெற வேண்டுமென்று இந்த மன்றத்தில் கடந்த நான்கு ஆண்டு களாக வற்புறுத்தப்பட்டு வந்தும், அந்த ஆசை நிறைவேறாத ஆசையாகத் தான் இன்றும் இருந்து வருகிறது."

This is just to point out that unless we allot two days, we will not have time to discuss the different apects, especially after one hour is allotted to the Leader of the Opposition and the Leader of the House. I shall briefly touch on a few points within the limited time allotted to me.

Political parties tinkering with educational policies must be put an end. I do not mind whichever party it is ; I do not mind at all about the party. Let me trace briefly what happens to education. We had a distinguished Education Minister Mr. T.S. Avanashilingam Chettiar. He projected a few ideas of his on the educational policy and we know the excellent result. Subsequently we had another distinguished Education Minister in Mr. C. Subramaniam. He projected a few ideas and we know what happened. After that we had another distinguished Education Minister in Mr. Bhakthavatsalam. He projected a few ideas and we know what happened. Now we are having our present distinguished Education Minister. This problem can be solved, if we have a permanent Education Board of the highest calibre consisting of a few persons like the Vice-Chancellor of the University. They should take decisions on the merits of each case and not based on political or other ideologies. Because of politicians the cause of children is affected. Children have a future. There is no sense of security at all among the parents as well as the students. This is a point which I would like to establish very firmly. There is a lurking fear that anything may happen to Education. Parents are under a tremendous sense of insecurity. Ministers may come and Ministers may go, ministries may come and ministries may go, but education must go on in a steady manner.

A high standard in English language is absolutely essential. I have met quite a few students from different parts of the country. I have met some students of the Indian Institute of Technology. I have met some boys from Bombay. Boys from all over the country compete for the I.I.T. entrance examination. The greatest disease called influence does not operate in that field. Boys are taken on merit. One of my classmates in the Intermediate Class was transferred to Calcutta. He had two boys, one in the sixth standard and the other in the seventh standard. When I met him recently, he told me that his children could not cope up with the Trignometry and Mathematics that was thrust upon them, and that the subjects were so heavy that he was seeking a re-transfer to the southern area. In the competition for All-India Services like the Indian Administrative Service the position a few years ago was that

the competitors from Madras secured 22 or 23 per cent of the seats. The position to-day is that those competing from Madras secure only four or five per cent of the seats. Whatever language be the medium of instruction—let me not go into that controversy and consume the precious time of this House ; on that subject we have already expressed our views—a high standard of knowledge in English is absolutely essential.

I come to the next point. We have three Dravidian languages, Kannada, Telugu and Malayalam. We have got quite a number of people in our State speaking those languages. Madras State has been a beacon light and a source of inspiration to all the Southern States of Mysore, Andhra and Kerala. I am telling you frankly that the people of those States are still saying that we in the Madras State have a fine administration. That feeling of kinship is there. Because this State was harbouring all these three languages, I request the Hon. Leader of the House to make provision for at least a few token seats for the teaching of these languages in at least Government colleges, so that it will be a pointer to the other States and they also may act in a reciprocal manner.

Teachers are unfortunately most ill-paid. Do we attract the cream of the educated classes to the teaching profession ? I am happy that the non-gazetted officers have been given a few concessions and in fact I have been supporting their demand. Whatever concessions are given to the non-gazetted officers should be given to the teachers also without their agitating for them. Teachers are the most ill-paid and frustrated among the fixed income groups in our State and also in our country. But I will confine myself to our State. That sense of frustration must be removed. The feeling that 'I am only a teacher' must be removed. He is doing a sacred job. After spending so much money, if we are not able to earn the gratitude of the teacher, it is unfortunate.

Then I come to another point which relates to a few small though intense areas of frustration, viz., the plight of non-technical staff in professional colleges. For instance, we have lecturers in Government Arts Colleges. Similarly we have lecturers in Engineering and Medical Colleges but they are on the non-technical side and they do not teach Engineering or Medicine. Some of the lecturers from the Government Arts College have been deputed to these colleges but they do not get the U.G.C., scales of pay and there is a feeling of frustration among them.

(Mr. Deputy Speaker sounded the gong).

Sir, I will briefly touch one or two points more.

Next I come to the U.G.C. scales of pay. The Central Government have allotted funds. so also the State Government have allotted funds but still there are many private colleges which have not yet implemented the U.G.C. scales of pay. I have received a number of letters from the teaching personnel that they have not



got the U.G.C. scales of pay. I would request the Hon. Minister for Education to instruct his departmental head to see that every college staff get the U.G.C. scales of pay.

Now I come to the point raised by my Hon. Friend, Thiru Sivagnana Gramaniar, viz., Local Library Authority. A lot of funds are collected by the Local Library Authority but a large number of their employees are terribly frustrated. They have put in a number of petitions for the amelioration of their service conditions but nothing has so far been done. I request the Hon. Minister to personally go into the problems of these employees of the Local Library Authority.

Then I come to the last point. viz., the plight of the Physical Directors. They must be treated on a par with the lecturers.

Sir, for good or bad we are witnessing the steady destruction of private incentives in the field of education. Dependence on the Government for each and everything has increased in the course of the last few years. This sort of removing the incentive from the private people will be a terrible drain on the Government. So, I would request the Hon. Minister to consult some competent persons in the educational field and see how they can revive the private incentive in the educational field so that more number of colleges may be started through private incentives.

Thank you, Sir.

*திரு. மா. பா. சாரதி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். சென்ற அரசை விட நமது அரசு பல கோடிக்கணக்கான ரூபாயை அதிக அளவில் கல்விக்காகச் செலவு செய்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அரசு கல்வியின் தரத்தை உயர்த்தியிருப்பதை, யாருமே பாராட்டாமல் இருக்கமுடியாது என்பதை இந்த மாமன்றத்தில் கூறிக்கொள்கிறேன்.

குறிப்பாக எனது தொகுதியான வேலூர் வட்டாரத்தில் இருக்கின்ற சில குறைபாடுகளை நீக்க வேண்டுமென்று மாண்புமிகு கல்வியமைச்சரை இந்த நேரத்திலே வேண்டிக்கேட்டுக்கொள்கிறேன். வேலூரிலே பெண்கள் கல்லூரி ஒன்றை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று பல இடங்களில் கல்வி அமைச்சர் அவர்களை மகஜர் மூலமாகவும், நேரிடையாகவும் கேட்டு வந்திருக்கிறோம். வேலூர் நகரத்திலே பத்து உயர்நிலைப் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. குறிப்பாக அவைகளில் நான்கு பெண்கள் உயர்நிலைப் பள்ளிகள். இந்த பெண்கள் உயர்நிலைப் பள்ளிகளில் படித்து வெளி வரும் மாணவிகள் தொடர்ந்து மேற்படிப்பு படிக்க வசதியில்லாமல், வேறு இடங்களுக்குப் போய்ப் படிக்க வசதியில்லாமல் உயர்நிலைப்பள்ளியோடு படிப்பை நிறுத்திவிடுகிறார்கள். பெற்றோர்களும் பொது மக்களும் பெண்கள் கல்லூரி ஏற்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி அரசுக்கு விண்ணப்பம் செய்துகொண்டு வருகிறார்கள். ஆகவே எப்படியும் வேலூர் தொகுதியில் ஒரு பெண்கள் கல்லூரியை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பெண்கள் கல்லூரியை இந்த ஆண்டிலேயே ஏற்படுத்த முடியாவிட்டாலும், உடனடியாக வேலூரிலுள்ள "ஊரிஸ் கல்லூரியிலும், அரசினர் கலைக் கல்லூரியிலும் ஒரு 25 சத விகித இடங்களையாவது பெண்களுக்கு ஒதுக்கிக் கொடுத்தால் அங்குள்ள பெண்கள் கல்லூரிப் படிப்பு படிக்க

வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பெண்குலத்திற்கு கல்லூரிப் படிப்பு படிக்க வசதி செய்து கொடுத்த பெருமை இந்தச் சர்க்காரைச் சாரும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

வேலூரிலே பல சர்க்கார் அலுவலகங்கள் இருக்கின்றன. அந்த அலுவலகங்களில் வேலை பார்க்கக்கூடிய எழுத்தர்கள், குமாஸ்தாக்கள், மற்ற அலுவலர்கள் ஓய்வு நேரத்தில் கல்லூரிப் படிப்பு படித்து முன்னுக்கு வர வழியில்லாமல் இருந்து வருகிறார்கள். வேலூரில் மாலை நேரக் கல்லூரி ஒன்றை ஏற்படுத்தும்படி மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களிடம் நேரடியாகவும் அஞ்சல் மூலமாகவும் விண்ணப்பித்துக்கொண்டிருக்கிறோம். இது பற்றி கல்வி அதிகாரி அவர்களுக்கும் விண்ணப்பம் செய்துகொள்ளப்பட்டிருக்கிறது. மாலை நேரக் கல்லூரி ஏற்படுவதன் மூலமாக அரசினர் அலுவலர்கள் வேலை செய்துகொண்டே கல்லூரிப் படிப்பு பெற்று தங்கள் வாழ்க்கை வசதிகளை உயர்த்திக்கொள்ள வாய்ப்பும் வசதியும் ஏற்படும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தவிர, வேலூரிலே நடைபெற்றுவரும் அரசினர் கலைக் கல்லூரி ஒரு வாடகைக் கட்டிடத்திலே இருந்து வருவது கல்வி அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். வாடகைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கும் கட்டிடம் மிகவும் சிறியது. கல்லூரி ஏற்பட்டு மூன்று நான்கு ஆண்டுகள் ஆகியும் அதில் அதிக மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கு, இட வசதியைப் பெருக்கிக் கொள்வதற்கு வழியில்லாமல் இருந்து வருகிறது. மேலும் அந்தக் கட்டிடத்தின் சொந்தக்காரர் காலி செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார். இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பே இந்தக் கல்லூரிக்குக் கட்டிடம் கட்டப்படவேண்டுமென்று 25 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த ஆண்டாவது இந்தக் கல்லூரிக்கு கட்டிடத்தைக் கட்டுவதற்கான முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வேலூரில் பயிற்சிக் கல்லூரி ஒன்று நடைபெற்று வருகிறது. பயிற்சிக் கல்லூரியிலும் இட நெருக்கடி இருந்து வருகிறது. இதற்கும் 32 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டிருக்கிறது. கட்டிடம் கட்டித் தர வேண்டுமென்று இரண்டு மூன்று ஆண்டுகளாகக் கோரிக்கை எழுப்பி வந்தும் இன்னும் இது கவனிக்கப்படவில்லை. இந்த ஆண்டாவது கட்டிடத்தைக் கட்டி, பயிற்சிக் கல்லூரியை விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இட நெருக்கடியால் அதிக மாணவர்களைச் சேர்த்துக்கொள்ள முடியவில்லை. இதையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

குறிப்பாக வேலூர் நகர சபை ஐந்து உயர்நிலைப் பள்ளிகளை நடத்தி வருகின்றது. நகர வளர்ச்சிக்கும், பல வேலைத் திட்டங்களை மேற்கொள்வதற்கும், நகர சுகாதார வசதிகளைப் பெருக்குவதற்கும் போதுமான நிதி வசதி இல்லாத காரணத்தால் இந்த உயர்நிலைப் பள்ளிகளை நகரசபை தொடர்ந்து நடத்தி வருவது இயலாத காரியம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, இந்த ஐந்து உயர்நிலைப் பள்ளிகளையும் சர்க்காரே ஏற்று நடத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வேலூரிலே, திருப்பதி தேவஸ்தானத்தின் சார்பாக "வெங்கடேஸ்வரா உயர்நிலைப் பள்ளி" ஒன்று நடத்தப்பட்டு வருகிறது. இந்தப் பள்ளி பெரிய கட்டிடத்தில் அமைந்திருக்கிறது. போதுமான இட வசதியும் இருந்து வருகிறது. நமது சர்க்கார் திருப்பதி தேவஸ்தானத்துடன் தொடர்பு கொண்டு தனியார் துறையில், தேவஸ்தானத்தின் சார்பாக ஒரு கல்லூரியை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டால், தேவஸ்தானத்தார் கல்லூரியை அமைக்கத் தயாராக இருப்பதாகக் கேள்விப்படுகிறோம். நமது கல்வி அமைச்சர் அவர்கள் இந்தக் கோரிக்கையை ஏற்று திருப்பதி தேவஸ்தானத்துடன் பேச்சு வார்த்தை நடத்தினால் சுலபமாகவே வேலூரிலே மேலும் ஒரு கல்லூரியைத் துவக்க உதவியதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது.)





ஆரம்பப் பள்ளிகளுக்கே கட்டடம் கட்டிக்கொடுக்க முடியாத நிலையில் நகராட்சிகள் இருக்கின்றன. இதனால் பல ஆரம்பப் பள்ளிகள் ஓலைக் கொட்டகைகளில் நடைபெற்று வருகின்றன. நமது அரசு கல்விக்காக மானியங்களைப் பெருவாரியாக வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கடந்த இரண்டு ஆண்டுகளாக கட்டிடங்களுக்கு மானியம் கோரக் கூடாது என்று போடப்பட்ட உத்தரவு காரணமாக பல பள்ளிகளை மரத்தடியில் நடத்த வேண்டியிருக்கிறது. ஆகவே, நகராட்சிப் பள்ளிகளுக்குத் தேவையான அளவில் மானியம் வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இத்துடன் என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. கே. என். குமாரசாமி :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கல்வி மானியக் கோரிக்கையின் பேரில் சில கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினையிலே, கல்விச் சலுகை அவர்களுக்குத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 1,500 ரூபாய் வரை வருமானம் உள்ளவர்களுக்குக் கல்விச் சலுகை அளிக்கப்பட்டிருப்பதாகச் சர்க்கார் சொல்கிறது. தொழிலாளர் குடும்பங்களுக்கு அந்தச் சலுகை கிடைக்கவில்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பிற்பட்ட வகுப்பினருக்கு டி. ஏ. அலவன்ஸை சேர்த்துக் கணக்கிட்டுப் பார்த்தால் 2 ஆயிரம் ரூபாய் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. டி. ஏ. சில சமயங்களில் அதிகமாகும், குறையும். ஆகவே இதைக் கணக்கில் எடுத்துக்கொள்ளக்கூடாது. டி.ஏ. தவிர மீதி சம்பளத்தையே கணக்கில் எடுத்துப் பார்க்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு தொழிலாளி வருடத்தில் 200 நாள் தான் வேலை செய்கிறார் என்றாலும் வருமானம் ரூ 1,400க்கு வந்து விடுகிறது என்று சொல்லி அவர்களுக்குக் கூட இந்தச் சலுகை கொடுப்பதில்லை. மஸ்டரில் பதிவு செய்யப்பட்டு விடுகிறது, சம்பளம். ஆகவே அவர்களுக்கும் இந்தச் சலுகை கிடைக்கிற மார்க்கத்தை உருவாக்க வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு தொழிற்சாலைகளில் வேலை செய்கிற தொழிலாளர்களுக்கு அந்தத் தொழிலை நடத்துகின்ற ஒரு பயிற்சிக்கூடம் ஒன்றை ஆரம்பித்து அதில் அவர்களுக்கு நல்ல பயிற்சி அளிக்கவேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். அந்தத் தொழில் துறையில் பயிற்சி ஏற்பட்டால் தான் வருங்காலத்தில் அந்தத் தொழிலை அவர்களே ஏற்றுத் திறமையுடன் நடத்துவதற்கு வாய்ப்பு ஏற்படும். இன்றைக்கு ஒரு தொழில் ஆரம்பிக்கப்பட்டுவிடுகிறதே தவிர, எதிர்காலத்தில் அது சிறந்த முறையில் நடைபெறுவதற்கு வழியில்லாது போகிறது. அப்படியின்றி எதிர்காலத்தில் நல்ல தொழில் திறனும், தொழிலை சொந்தமாகவே நடத்தும் சக்தியும் தொழிலாளர்களுக்கு ஏற்படுவதற்கு ஆங்காங்கே தொழில் பயிற்சிக் கூடங்களை நிறுவித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஏழை உழைப்பாளி மக்கள் தங்கள் குழந்தைகளைப் படிக்க வைக்க வசதியில்லாமல் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுடைய பொருளாதார நிலையும் அதற்கு இடம் கொடுக்கவில்லை. ஆகவே, அவர்களுடைய குழந்தைகளின் கல்விக்கு சர்க்காரே பொறுப்பேற்றுக்கொள்ளவேண்டும். நல்ல முன்னேற்றம் அடைந்துள்ள நாடுகளில் இது போலத்தான் இருக்கின்றன. மிகவும் பொருளாதார நெருக்கடி நமக்கு இருக்கிறது என்றாலும், நம்முடைய சக்திக்கு ஏற்ற முறையில் இது போன்ற திட்டத்தை ஆரம்பிக்கவேண்டுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஆரம்ப ஆசிரியர்கள் நல்ல தரமான கல்வியை குழந்தைகளுக்குப் போதிக்கவேண்டுமென்றால் அவர்களுக்குப் போதிய சலுகையைக் கொடுத்தாகவேண்டும். அவர்கள் எப்போது பார்த்தாலும் குடும்பக் கஷ்டத்தில் அவதிப்பட்டுக்கொண்டிருப்பார்களானால் கல்வி போதிப்பதன் தரம் குறைந்து போய்விடுகிறது. இன்றைக்கு பலயிடங்களில் அவர்களுக்கு வீடுகள் கிடையாது. அவர்களுக்கு உடனடியாக வீடுகள் கட்டித்தரவேண்டும். போக்குவரத்துக்கான வசதிகள் செய்துகொடுக்க முடியாவிட்டாலும் போக்கு

வரத்து அலவன்சு கொடுக்கவேண்டும். இப்படி அவர்களுடைய சில அடிப்படைக் குறைகளையாவது நீக்குவதற்கு இந்த அரசு முன் வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது சர்க்கார் ஹைஸ்கூல்களிலேயே நல்ல தரமான கல்வி போதிப்பது கிடையாது. அதிலே படிக்கின்ற மாணவர்கள் அதிகமாகப் பெயில் ஆகிக்கொண்டிருக்கிறார்கள். அந்தப் பள்ளிகளில் நல்ல தரமான கல்வி போதிக்கப்படவேண்டுமென்றால் மேற்பார்வையிடுகின்ற உரிமையைப் பஞ்சாயத்துகளுக்கோ மற்றவர்களுக்கோ கொடுக்கின்ற சூழ்நிலையை உருவாக்கி தரவேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு பள்ளிகள் அதிகமாகத் திறக்கப்படவேண்டும். இப்போது ஒரு ஆரம்பப்பள்ளி என்றால் ஐந்தாறு வகுப்புகள் சிறிய இடத்தில் இருக்கின்றன. தட்டியைத் கட்டிவைத்து மறைக்கிறார்கள். இந்த இடத்தில் சொல்லிக்கொடுக்கிற பாடம் அடுத்த பகுதியில் உள்ளவர்கள் காதிலும், அங்கே சொல்லிக்கொடுப்பது இங்குள்ளவர்களின் காதில் விழுவதாகவும் இருப்பதனால் கவனம் மாணவர்களுக்கு இருப்பதில்லை. ஆகவே, ஒவ்வொரு பள்ளியிலும் இட விஸ்தாரம் செய்துகொடுக்கப்படவேண்டும். இட நெருக்கடியையும் போக்குவதற்கு அதிகப் பள்ளிகள் திறக்கப்படவேண்டும்.

பி. யூ. சி. யைப் பொறுத்தவரையில் எல்லோருக்கும் இலவசக் கல்வி அளிக்கின்ற திட்டத்தைப் படிப்படியாக மேற்கொண்டாகவேண்டும். அதன் மூலமாகத் தான் தொழிலாளர்களுடைய குழந்தைகள் எல்லாம் படிப்பதற்கு வசதியேற்படும்.

மதிய உணவு வழங்குவதில் ஒரு வேளை தான் சாப்பாடு கொடுக்கிறார்கள். சாப்பிடுகிற வரைக்கும் குழந்தைகள் இருக்கின்றன. சாப்பாடு போடப்பட்டவுடன் போய்விடுகிறார்கள். ஆகவே இரண்டு வேளை மதிய உணவு அளிப்பதற்கு நம்முடைய பொருளாதார நிலைக்கேற்ப முயற்சிகள் மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கடைசியாக ஆரம்ப ஆசிரியர்களுடைய குறைகளைப் போக்கவேண்டும், அவர்களுக்கு டி.எ. அலவன்சை உயர்த்தவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, கல்வி மானியத்தில் பேசுவதற்கு சந்தர்ப்பம் அளித்த தலைவருக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இப்போது கொண்டு வந்திருக்கும்படியான கல்வி மானியத்திற்கு எங்கள் கட்சியின் சார்பில் கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். கல்வியும், சுகாதாரமும் நாட்டுக்கு மிகவும் இன்றியமையாதவை. ஆகவே, இந்த இரண்டு துறையிலும் சர்க்கார் அதிகமான அளவுக்குச் செலவு செய்துதான் ஆக வேண்டும். கல்வியைப் பொறுத்தவரையில் நம் மாநிலத்தில் ரூ. 56 கோடி செலவாகிறது. பாரத தேசத்தை எடுத்துக்கொண்டால் எஞ்சியிருக்கும்படியான மற்ற ராஜ்ய சர்க்கார்களைவிட நம்முடைய சென்னை சர்க்கார் இத் துறையில் அதிகமாகத் தான் செலவழித்துக் கொண்டிருக்கிறது என்பதைச் சொல்லாமல் இருக்க முடியாது. கல்வித் துறையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. இவ்விலாகா நல்ல பணியை இத் துறையில் செய்து கொண்டு தான் வருகிறது. இவ்விலாகாவில் உள்ளவர்களும் முடிந்த வரையில் நாம் கொடுக்கும்படியான லட்சியத்தை நிறைவேற்றிக் கொண்டு தான் வருகிறார்கள் என்பதை மறுக்க முடியாது, இருந்தாலும் கூட ஒரு விஷயத்தில் நாம் எல்லோரும் கவனம் செலுத்தியாக வேண்டும். கல்வியின் தரம் இப்போது எப்படி இருக்கிறது? கல்வி பயிலும் படியான நிலையில் உள்ள மாணவர்களின் நிலைமை எப்படி இருக்கிறது? கல்வி போதிக்கும்படியான ஆசிரியர்கள் எப்படி இருக்கிறார்கள்? இவற்றை மிகுந்த கவலையோடு தான் நாம் பார்க்க வேண்டிய நிலையில் இருக்கிறோம் என்பதற்காக வருந்துகிறேன்.



கல்வியை நல்ல முறையில் பயின்று வீட்டுக்கும், நாட்டுக்கும் நல்ல பலனை அளிக்கக்கூடிய சிறந்த வருங்கால சந்ததியாக வளரவேண்டிய மாணவர்கள் இன்றைய தினம் தவறான பாதையில் போய்க் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்வதைக் கூட மிக வருத்தத்துடன் தான் தெரிவிக்க வேண்டியதாக இருக்கிறது. மாணவர்கள் அரசியலே தெரிந்து இருக்கக் கூடாது என்பதல்ல. படிக்கும்போது நேரடியாக அரசியலில் கலந்து கொள்வது அவர்களுக்கும் நல்லது அல்ல. நாட்டின் எதிர்காலத்திற்கும் நல்லதல்ல. இன்றைய தினம் மாணவர்கள் கல்வியில் மனத்தை ஈடுபடுத்துவதற்குப் பதிலாக நேரடி அரசியல் நடவடிக்கைகளில்—அதுவும் வன்முறைப் பாதையில் ஈடுபடுத்துவது மிகமிக மோசமான நிலை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் நேரடியாக அரசியலில் ஈடுபடாதிருக்கச் செய்ய வேண்டுமென்றால் அதற்கு நாம் எல்லோரும் தான் ஒற்றுமையாகச் செயல்பட்டாக வேண்டும். பள்ளிகளில் உள்ள குழந்தைகளின் மனம் கெட்டுப் போகாத நிலையில் அவர்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு நம் எல்லோருக்கும் இருக்கிறது என்பதை ஞாபகப் படுத்துகிறேன்.

இன்றைய தினம் மாணவர்கள் அரசியலில் ஈடுபடுத்தப்படுகிறார்கள் என்றால் அதற்குக் காரணமே ஆசிரியர்கள் அரசியலில் அதிகமாக இருக்கிறார்கள் என்பதைச் சொல்ல வேண்டியதாக இருக்கிறது. ஆசிரியர்கள் அரசியலில் கலந்து கொள்ளாவிட்டால் மாணவர்கள் இந்த நிலைக்குப் போய் இருக்க மாட்டார்கள். அவர்களுக்கு இன்றைய தினம் கொடுக்கப்படுகிற சம்பளம் பொது மக்களுடைய வரிப் பணத்தில் இருந்து தான் பொது மக்களுடைய குழந்தைகளுக்கு கல்வி கற்பிப்பதற்காகவே கொடுக்கப்படுகிறது. இதை உணர்ந்து மன சாட்சியுடன் அவர்கள் பணி புரிவார்களேயானால் மாணவர்கள் இந்த நிலைக்கே வந்திருக்க மாட்டார்கள்.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய பேச்சில் குறுக்கிடுவதற்காக மன்னிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நான் ஆசிரியர் சமுதாயத்தைச் சார்ந்தவன் என்ற முறையில் குறுக்கிடாமல் இருக்க முடியவில்லை. ஒரு மாணவன் காலை 10 மணிக்குப் பள்ளிக்கூடம் சென்றால் மாலை 5 மணி வரை ஆசிரியர் பொறுப்பில் இருக்கிறான். பாக்கி பெரும் பகுதி நேரம் அவனுடைய பெற்றோர்களுடனும், அரசியல் சூழ்நிலை மிகுந்த சமுதாயத்திற்கு மத்தியிலும் இருக்கிறான். இன்றைய தினம் அந்த மாணவன் நேரடி அரசியலில் ஈடுபடுகிறான் என்றால் அதற்குக் காரணம் அவனுடைய பெற்றோர்களும், அரசியல் கொந்தளிப்பு மிகுந்த சமுதாயமுமே ஆகும். ஆசிரியர்கள் பொறுப்பு இல்லை. ஆசிரியர்கள் அரசியலுக்கு அப்பாற்பட்டவர்கள். தமிழகத்தைப் பொறுத்த வரையில் ஆசிரியர்கள் மாணவர்களைத் தூண்டி விட்டார்கள் என்கிற குறையே இல்லை. அப்படி இருக்கும்போது அவர்களது பேரில் ஒரு களங்கத்தை ஏற்படுத்தி, எதிர்காலச் சூழ்நிலையைச் சீரழிப்பதான முயற்சியில் ஈடுபடத் தேவையில்லை என்பதை நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. அதற்கு உதாரணமாக அமைச்சர் அவர்களே இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் அரசியலிலிருந்து வரவில்லை என்று நிரூபிக்க முடியுமா? பி.ப. 1–00

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** ஒவ்வொருவருக்கும் அரசியலில் உரிமை உண்டு. ஆனால் ஆசிரியராக இருந்து கொண்டு அரசியலிலே ஈடுபடக்கூடாது. என்னைப் பொறுத்த வரையில் விலகித் தான் அரசியலிலே ஈடுபட்டேனே தவிர ஆசிரியராக இருந்து கொண்டு அரசியலில் ஈடுபடவில்லை. நாட்டின் விடுதலைப் போராட்டத்திலே கூட பேராசிரியர்களும் மற்றவர்களும் தங்கள் தொழிலை விட்டுவிட்டுக் காங்கிரஸ் கட்சியிலே சேர்ந்து

நாட்டின் விடுதலைக்காகப் போராடினார்கள். அவர்களும் அப்படிப்பட்டவர்கள்தான் என்றால் அது ஆசிரியர்கள் பாரம்பரியத்திற்கே இழுக்குத் தேடுவதாக உள்ளது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அரசியலில் நல்ல அரசியலும் இருக்கிறது, கெட்ட அரசியலும் இருக்கிறது. தேச சுதந்திரத்திற்குப் போராடியதைக் கெட்ட அரசியல் என்று சொல்ல முடியாது. ஆசிரியர்களும் மாணவர்களும் நல்ல முறையில் நடந்து கொள்ள வேண்டும். பெற்றோர்களும் நல்ல முறையில் இருக்க வேண்டு மென்று சொன்னார்கள். பெற்றோர்கள் கெடுக்கிறார்கள் என்பதற்கு நானும் என்னுடைய வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்ளலாம். அவர்கள் திடீரென்று அரசியலில் வந்து குதித்து விட்டு தேர்தலில் நின்று ஜெயித்திருக்கிறார்களா ? தேர்தலில் நிற்க வேண்டுமென்றால் விலகினால் தான் போட்டி போட முடியும் என்பதால் விலகிப் பிறகு போட்டி போட்டிருக்கிறார்களே தவிர வேறு ஒன்றுமில்லை. மாணவர்களுடைய எதிர்காலம் நல்ல முறையில் அமைய வேண்டும். ஆசிரியர்கள் மாணவர்களுக்கு நல்ல வழிகாட்டியாக அமைய வேண்டும். நல்ல வழிகாட்டியாக இருக்க வேண்டுமென்பது தான் முக்கியம். மூன்று நாட்களுக்கு முன்னால் முதலமைச்சர் அவர்களுடைய ஊராகிய காஞ்சிபுரத்தில் உள்ள கல்லூரியின் பிரின்ஸ்பால் மாணவர்களைத் தூண்டிவிட்டு டி. டி. தேவராஜ் என்பவருடைய வீட்டில் புகுந்து இந்தப் பூமியை ஆக்கிரமித்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள், இந்த நிலைமையை என்னவென்று சொல்வது ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** எங்காவது ஒரு இடத்தில் ஒரு பள்ளிக்கூடத்தின் முதல்வர் அப்படி இருக்கிறார் என்பதற்காக தமிழகத்தின் எல்லா ஆசிரியர்களையும் சுட்டிக் காட்டத் தேவையில்லை என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். ஆசிரியர்களுக்கு அரசியல் அறிவு இருக்கக் கூடாது என்று சொல்லத் தேவையில்லை. உள்ளபடியே அவர்கள் ஆசிரியராக இருந்து கொண்டு அரசியலைத் திணித்தால் தான் குற்றம் சாட்டப்படும். 10, 15 ஆண்டுகள் நான் அரசியல் கொள்கையினை உள்ளத்திலே வைத்திருந்தேன், அப்பொழுது நான் யாரையும் தூண்டவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** வன்முறைச் செயல் நடைபெற்றதாக எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அவர்கள் சொல்வது உண்மையாக இருந்து அதைப்பற்றி அவர்கள் முறையீடு செய்தால் அதைப்பற்றி தக்க நடவடிக்கை எடுக்க முயற்சி எடுக்கலாம். எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை முறையீடு தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நேற்றைய தினம் சொன்னார்கள், நான் அப்படிக் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறேன். நான் குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை, அதைத் தடுப்பதற்கு முயற்சி எடுக்க வேண்டும், அவ்வப்பொழுது கிள்ளியெறிய வேண்டுமென்பதற்காகத்தான் சொன்னேன். அமைச்சர் அவர்கள் ஆசிரியர் ஆக இருந்தவர், என்ன செய்தார் என்பதற்கு என்னிடத்தில் ரிக்கார்டுகள் கிடையாது.

மொழிப் பிரச்னை இருக்கிறது. அதிலே பல சிக்கல்கள் இருக்கின்றன. நாம் இரு மொழி போதும் என்று இரு மொழிக் கொள்கையை வைத்துக் கொண்டோம். இந்தியைக் கட்டாயமாக விட்டுவிட வேண்டுமென்ற நிலை இருக்கிறது. அதே சமயத்திலே பதினான்கு மொழிகளும் ஆட்சி மொழிகளாக வரவேண்டுமென்று சொல்கிறோம். ஒரு மொழி வேண்டும், வேண்டாம் என்று சொல்கிற நிலை இருக்கக் கூடாது. எதையும் கட்டாயமாகத் திணிப்பதற்கு யாரும் விரும்பமாட்டார்கள். எனக்கு ஒரு கல்லூரி மாணவி கடிதம் எழுதியிருக்கிறார். நான் இந்தியில் 70, 80 மார்க் வாங்கியிருக்கிறேன் இப்பொழுது இந்தியை எடுத்து விட்டால் என்னுடைய சுதந்திரம் போய்விட்டது, எப்படி தடுக்க முடியும் என்று எழுதியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட கஷ்டங்கள் இருப்பதால் படிப்பவர்களுக்கு என்ன என்ன சௌகரியங்கள் செய்ய வேண்டு மென்பதைப் பார்க்க வேண்டும். ஒரு பக்கம் இந்தியை எடுத்து விட்டோம் என்று சொல்கிறார்கள், இன்னொரு பக்கம் இரண்டாயிரம் ஆசிரியர்களுக்கு வேலை கொடுக்கப் போகிறோம் என்று சொல்கிறார்கள். இந்தியை ஒழித்தாகி விட்டது, இரண்டாயிரம் ஆசிரியர்களுக்கு எந்த முறையிலே வேலை கொடுக்கப் போகிறார்கள் எனபது தெரியவில்லை. தமிழ் தான் வரவேண்டும், மீடியம் ஆப் இன்ஸ்ட்ரக்ஷன் தமிழைத் தான் கொண்டு வர வேண்டு மென்று சொல்கிறார்கள் அதிலே ஆட்சேபணை கிடையாது. இருக்கக்கூடிய சூழ்நிலையை நாம் பார்க்க வேண்டும். காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் தமிழுக்கு முக்கியத்துவம் கொடுத்தாலும் கூட அகில இந்தியாவின் ரீதியிலே, அகில உலகத்தின் ரீதியிலே வந்து சேரும்படியான நிலையில் இருக்குமானால் ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்பது தான். பக்கத்து மாநிலங்கள் எல்லாம் ஆங்கிலத்தை வைத்துக் கொண்டு முன்னேறிக் கொண்டு வருகிற நேரத்திலே நாம் தமிழிலே வைத்துக் கொண்டால், சயன்ஸ், டெக்னிக்கல் சப்ஜக்ட்ஸ் எல்லாவற்றையும் தமிழிலே படிக்க வேண்டு மென்றால் புத்தகங்கள் வேண்டும், புத்தகங்கள் எழுதுவதற்கு நன்றாகப் படித்தவர்கள், சிறந்தவர்கள் நிறையப் பேர்கள் வந்து செய்தால் தான் ஏற்றுக்கொள்ள முடியும். மீடியம் ஆப் இன்ஸ்ட்ரக்ஷன் ஆக வரவேண்டுமென்றால் 15, 20, 25 ஆண்டுகளாவது காலம் கொடுத்தால் தான் பூரணமாக நிறைவேற்ற முடியும். திடீரென்று அடுத்த வருஷத்திலேயோ அல்லது அதற்கு அடுத்த வருஷத்திலேயோ கொண்டு வருவது என்பது பகல் கனவாகத் தான் முடியும் என்று நினைக்கிறேன். மாணவர்களுடைய எதிர்காலத்திற்கு அப்படிச் செய்தால் அது ஒரு சோதனையாகத் தான் அவர்களுடைய வாழ்க்கைக்கு இருக்குமே தவிர, வெற்றிகரமாக இருக்க முடியாது. ஆங்கிலம் 150, 200 ஆண்டுகள் வரையில் படிக்கப்பட்டது. இந்தியும் வரவேண்டுமென்றால் நூற்றுக்கணக்கான ஆண்டுகள் ஆகுமே தவிர, அவர்கள் நினைப்பது போல் 10 வருடங்கள், 15 வருடங்களில் வர முடியாது. இதிலே பல சிக்கல்கள் இருக்கின்றன. இரு மொழிக் கொள்கை என்று சொல்லி விட்டோம். கன்னடம், தெலுங்கு படிக்க வேண்டிய மாணவர்களுக்கு என்ன வசதியிருக்கிறது ? கன்னடம் எனக்குத் தாய் மொழி, இருந்தாலும் எனக்கு எழுதப் படிக்கத் தெரியாது. என் தொகுதியிலே உள்ளவர்கள் நான் என் கன்னடம் படிக்கக் கூடாது என்று சொல்கிறார்கள். என்னுடைய தொகுதியிலே தாளவாடியிலே பாடங்கள் எல்லாம் கனனடத்திலே தான் நடந்துகொண்டிருக்கின்றன. உதவி சபாநாயகர் அவர்கள் அன்றைக்கு ஒருவரைத் தெலுங்கிலே பேசுவதற்கு அனுமதி கொடுத்தார்கள். எனக்குக் கன்னடம் பேசுவதற்கு உரிமை கொடுப்பார்களானால், தாய் மொழியில் பேசக்கூடிய வாய்ப்புக் கொடுக்கப்படுவதால் எல்லோருக்கும் சம அந்தஸ்து கொடுக்கக் கூடிய நிலைக்கு வசதியாக இருக்கும். இரு மொழிக் கொள்கை என்பது எதிர்கால வாழ்வுக்கு ஆபத்தாகத் தான் முடியும் என்பதிலே ஐயமில்லை. பின்னரே வரும்படியான சந்ததியார்கள் என்னுடைய வாழ்க்கை கெட்டு விட்டதே என்ற நிலை இருக்கக்கூடாது. இரு மொழிக் கொள்கையைச் சட்டசபையிலே நிறைவேற்றினார்கள் அப்போதே சொன்னோம். தமிழிலேயே எல்லாவற்றையும் படித்துவிட்டால் தமிழ் நாட்டிலே எல்லோருக்கும் வேலை வாய்ப்பு இருக்கிறதா ? அவ்வளவு பேர்களையும் எடுத்துக் கொள்ள முடியுமா ? இப்பொழுதே வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கும்பொழுது அகண்ட பாரத தேசத்திலே வேலை வாய்ப்புப் பெறக்கூடிய சூழ்நிலை அப்பொழுது ஏற்படுமா ? வாழ்க்கைக்கு இடையூறாக இருக்கக்கூடிய காரியங்களைச் செய்தால் அவர்களுடைய எதிர்காலம் பாதிக்கப்படும். ஆகவே மாணவர்களுக்கு பயனுள்ள, செவ்விய கொள்கையாக கல்வியைப் பொறுத்த அளவில் கொள்கை அமைய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





ஆசிரியர்கள் கௌரவமாக வைக்கப்பட வேண்டும் ; மாணவர்களுக்கு நல்ல முறையில் அறிவூட்டக்கூடிய தகுதியுள்ளவர்களாக அப்பொழுது தான் அவர்கள் இருப்பார்கள். ஹையர் கிரேட் ஆசிரியர்களாக 12 ஆயிரம்

ஆசிரியர்கள் இருப்பதாகவும் அவர்கள் செகன்டரி கிரேட் தகுதியுள்ளவர்களாக இருந்தும் ஹையர் கிரேட் ஆசிரியர்களாக இருக்கிறார்கள், அவர்களுக்கு செகண்டரி கிரேட் சம்பளம் கொடுப்பதாக முன்பு சொல்லியிருப்பதாக எனக்கு ஞாபகம் இருக்கிறது. அவர்களில் மூவாயிரம் பேர்களுக்குத் தான் இப்பொழுது கொடுத்திருக்கிறார்கள். மீதிப் பேர்களுக்கும் கொடுத்தாக வேண்டும். . . .

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி**: சென்ற ஆண்டு ஐயாயிரம் பேர்களுக்குப் பதவி உயர்வு கொடுக்கப்பட்டது. இந்த ஆண்டிலே மூவாயிரம் பேர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. பி. ஜி. கருத்திருமன்** : பாக்கி இருப்பவர்களுக்கும் கொடுக்க வேண்டுமென்பது தான். எல்லோருக்கும் குறைவு இல்லாமல் கொடுத்து விடுவார்களானால் வரவேற்கத் தக்கதாக இருக்கும். (மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : கொடுத்த வரை பாராட்டலாமே !) பாராட்டித்தான் இருக்கிறேன். நீங்கள் கருப்புக் கண்ணாடி போட்டுக் கொண்டு பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : பாராட்டு அடக்கமாக இருக்கிறது. கொஞ்சம் பெரிதாகப் பாராட்ட வேண்டும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்** : எங்களுக்குப் பெரிதாகச் சொல்லத் தெரியாது, பணிவாகச் சொல்லியே பழக்கம், சத்தம் போட்டுச் சொல்லுகின்ற பழக்கம் இல்லை.

பல இடங்களிலே புதிய கல்லூரிகள் திறக்கப்படுகின்றன என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதிலே அரசியல் புகுந்து கொள்ளக் கூடாது, கல்வி என்றால் எல்லோருக்கும் பொதுவானது. க்ஷேமநல சர்க்கார் என்றால் பொதுவான முறையிலே தான் நடந்து கொள்ள வேண்டும். எங்கள் கட்சி நண்பர் திரு. பூவராகன் அவர்கள் பேசும்போது "விருத்தாசலத்தில் உள்ள கல்லூரியில் எல்லா ஏற்பாடுகளும் முடிந்தும் டிகிரி கோர்ஸஸ் ஆரம்பிக்கப்படவில்லை ; அதற்குப் பின்னால் வந்த கல்லூரிகளில் எல்லாம் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன" என்று சொன்னார்கள். அதிலே அரசியல் இருக்குமோ என்று சந்தேகப்பட்டார்கள். அந்தப் பகுதி பின் தங்கிய பகுதி. ஆகவே, அரசியலுக்கு அப்பாற்பட்ட எல்லா இடத்திலும் இருக்கும்படியான மாணவர்கள், குழந்தைகள் படிக்க வசதி செய்து கொடுக்க வேண்டும். உயர்நிலைப் பள்ளிகளுக்காக மத்திய அரசாங்கத்தில் இருந்து கிராண்ட் வருகிறது. அதைக் கொடுக்கும்போது வசதி இல்லாத பள்ளிகளுக்குக் கொடுக்க வேண்டுமென்று சில சமயமும்., வசதியுள்ள பள்ளிக்கூடங்களுக்குத் தான் கொடுக்க வேண்டுமென்று சில சமயமும் கல்வி இலாகாவினர் கூறுகிறார்கள். கல்வி இலாகாவிலே பணியாற்றக் கூடியவர்கள் எந்த விதமான பாரபட்சமுமின்றி, அரசியலுக்கு இடம் கொடாமல் எல்லா விதமான ஏற்பாடுகளையும் செய்யவேண்டும்.

நண்பர் ஒருவர் பேசும்போது "செத்துப் போன சமஸ்கிருத மொழி எதற்கு ?" என்று கேட்டார்கள். சமஸ்கிருதம் 14 தேசிய மொழிகளில் ஒன்று, சமஸ்கிருத மொழியின் வளம் நமக்குத் தெரியவில்லை என்பதற்காக அதை மோசமான மொழி என்று தயவு செய்து தீர்மானம் செய்து கொள்ள வேண்டாம். ஐரோப்பாவில் உள்ள அத்தனை விஞ்ஞானிகளும் சமஸ்கிருதத்தை ஆராய்ச்சி செய்ததன் பயனாகத்தான் அத்தனை விஞ்ஞானமும் வந்திருக்கிறது என்று சொன்னால் மிகையாகாது. மேற்கு ஜெர்மனிக்குச் சென்றிருந்தபோது நான் இதைப்பற்றி நேரிலேயே கேட்டறிந்தேன். அவர்கள் அற்புதமான முறையில் சமஸ்கிருதத்தில் உள்ள விஷயங்களைப் பற்றி ஆராய்ந்து விஞ்ஞானத்தில் முன்னேறியிருக்கிறார்கள். நமக்குச் சக்தி இல்லை, உணர முடியவில்லை என்பதற்காக ஒரு சமூக நிலையை வைத்துக் கொண்டு தவறாகச் சொல்வது சரியாகாது. உலகத்திலேயே மிகச்சிறப்பான, வளமான, உயர்வான, விஞ்ஞான மொழி என்று கூறும் அளவுக்குச் சமஸ்கிருத மொழி வளர்ந்திருக்கிறது. அதற்காகத்





தமிழகத்தில் 14 ஓரியண்டல் பள்ளிகள் இருக்கின்றன. அதற்காக மத்திய சர்க்காரிலிருந்து 12,000 ரூபாய் ஒவ்வொரு பள்ளிக்கும் கொடுப்பதாகத் தெரிகிறது. அந்தத் தொகை சரியாக விநியோகிக்கப்படவில்லை என்ற புகார் வந்திருக்கிறது. அமைச்சர் அவர்கள் மத்திய சர்க்காரிலிருந்து வரக்கூடிய அந்த நிதியை அவர்களுக்குக் கொடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வார்கள் என நம்புகிறேன்.

உயர்நிலைப் பள்ளிகளில் ஸ்பெஷல் ஃபீஸ் என்று வசூலிக்கும்படியான நிலைமையிலே சில புகார்கள் வந்திருக்கின்றன. மூன்று ரூபாய், நான்கு ரூபாய் என்று இருந்த ஸ்பெஷல் ஃபீஸ் ரூ. 8, 10, 14 என்ற அளவுக்கு உயர்த்தப்பட்டு அதைக் கட்டாத காரணத்தால் 73 பேரைப் பள்ளியிலிருந்து நீக்கியிருப்பதாகக் கடிதங்கள் வந்திருக்கின்றன. வட ஆற்காடில் 3 ரூபாயாக இருந்த ஸ்பெஷல் ஃபீஸ் 7 ரூபாயாகவும், ஆறுவது, எட்டாவது வகுப்புக்கு 7 ரூபாயாக இருந்தது 11 ரூபாயாகவும் உயர்த்தப்பட வேண்டுமென்று அங்குள்ள டெபுடி இன்ஸ்பெக்டர் உத்தரவு போட்டிருக்கிறார். அதை ஆட்சேபித்து ஊர்வலம் நடத்தி இருக்கிறார்கள். அமைச்சர் வந்தால் கறுப்புக் கொடி காட்ட வேண்டு மென்று பேசிக் கொண்டிருக்கிறார்கள். அவ்வாறு அதிகமாகக் கட்டிய பணத்தை திருப்பித் தந்து விடுகிறோம் என்று சொன்னதன் பேரில் கொஞ்சம் அடங்கியிருக்கிறது. முன்பு இருந்த ஸ்பெஷல் ஃபீஸ் அளவுக்கு மேல் உயர்த்தக் கூடாது, வசூல் செய்யக் கூடாது. பொறுப்புள்ள டெபுடி இன்ஸ்பெக்டர் உத்தரவு போட்டுவிட்டு அதை வாபஸ் வாங்காமல் "குறைத்துக் கட்டுங்கள்" என்று சொல்லுகிறார். அந்த முறையிலே பொறுப்பில்லாத தன்மையிலே நடந்து கொண்டிருக்கிறார். ஒன்று போட்ட உத்தரவை தைரியமாக அமல்படுத்த வேண்டும், இல்லையென்றால் வாபஸ் பெற்றுக் கொள்ள வேண்டும். ஆனால் உத்தரவை வாபஸ் வாங்காமலே குறைத்துக் கட்டுங்கள் என்று சொல்லுவது எப்படி பொறுத்தமுடையதாக இருக்கும் ?

தனியார் துறையில் உள்ள பள்ளிகளில் இன்று பலவிதமாக பணத்தை வசூல் செய்கிறார்கள். தனியார் கல்லூரிகளிலும் அதே போன்று நான் வசூல் செய்கிறார்கள். இதிலே சர்க்கார் தலையிட்டு ஒரு வரையறை செய்யவேண்டும்.

இன்று சர்க்கார் கல்லூரிகளில் தமிழில் பாடம் சொல்லிக் கொடுக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். தனியார் பள்ளிகளில் ஆங்கிலமே தொடர்ந்து இருக்கும் நிலைமை இருக்கிறது. இந்த நிலைமையால் சர்க்கார் பள்ளியில் படிக்கக்கூடிய ஏழை மாணவர்கள் தான் எதிர் காலத்திலே பாதிக்கப்படுவார்கள். பணக்காரர்களுடைய பிள்ளைகள் தனியார் கல்லூரிகளிலே சேர்ந்து ஆங்கிலத்திலே படித்து வேலை வாய்ப்புகளையும், அறிவுச் செல்வத்தையும் பெறக்கூடிய நிலைமையில் சர்க்கார் கல்லூரியில் படிக்கின்ற ஏழை மாணவர்கள் தரமான கல்வியைப் பெற்று அறிவைப் பெருக்கிக்கொள்ள முடியாத நிலையிலும், வேலை வாய்ப்புக்கு வழி இல்லாத நிலையிலும் கஷ்டப்பட இருக்கிறார்கள். இந்த நிலைமையை நான் அரசுக்கு சுட்டிக் காட்ட விரும்புகிறேன். சர்க்கார் இதையெல்லாம் கவனித்து எல்லா இடத்திலும் ஒரே மாதிரியான கல்வி, தரமான கல்வி கொடுக்க வழி செய்ய வேணடும். மாணவர்கள் இப்போது ஈடுபட்டிருக்கும் கிளர்ச்சிகளில் இருந்து விடுபட்டு, தேசம் முக்கியம், அறிவு வளர்ச்சி முக்கியம் என்ற எண்ணத்தில் தங்களுடைய பணியைச் செய்ய வேண்டும்.

"தம்மின் மெலியாரை நோக்க தமதுடைமை அம்மா என்று அகமகிழ்க
தம்மின்கற் றாரை நோக்கி கருத்தழிய கற்றவர்தம் எற்றே.. ... ...

என்று சொல்லியிருக்கிறார். தம்மை விட உடைமையில் குறைவாக இருப்பதைப் பார்த்து நம்முடைய நிலை பரவாயில்லை என்று எண்ணி மகிழ வேண்டும் ; நம்மைவிடப் படித்தவர்களைப் பார்த்துப் பொறாமை கொள்ள வேண்டும். அவர் 100 குறள் படித்தார் என்றால் நாம் 200 குறள் படிக்க வேண்டும், சொல்ல முடியும் என்ற நிலையைப் பெற

வேண்டும். அவர் கம்பராமாயணத்தில் ஒரு பகுதியைப் படித்தவர் என்ருல் நாம் பல பகுதியைப் படிக்க வேண்டும். அவருக்குச் சிலப்பதிகாரத்திலே ஒரு பகுதி தெரியும் என்ருல் நாம் அதிகமாகப் படித்து அதிலே ஆராய்ச்சி செய்ய வேணடும் என்ற எண்ணம் எழ வேண்டும். அந்த எண்ணம் ஏற்பட்டால்தான் எதிர்காலம் சிறப்புடையதாக இருக்கும், செழுமையானதாக இருக்கும் என்று கூறி வெட்டுப் பிரேரணையை ஆதரித்து முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, நம்முடைய நண்பர், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது, ஆசிரியர்கள் அரசியலில் ஈடுபடக் கூடாது என்பதை மிகத் திட்டவட்டமாக எடுத்துச் சொன்ஞர்கள். மாண்புமிகு முத்துசாமி அவர்கள் தான் வேலையி லிருந்து விலகிய பிறகு தான் தேர்தலில் போட்டியிட்டதாகக் கூறிஞர்கள். கடந்த பொதுத் தேர்தல் நடந்தபோது திருநெல்வேலியில் நம்முடைய நண்பர் ஏ. எல். சுப்பிரமணியம் அவர்களை எதிர்த்து காங்கிரஸ் கட்சியின் சார்பில் மகாராஜா பிள்ளை என்பவர் போட்டியிட்டார். அவரை நான்கு பேர் (ப்ரபோஸ்) முன் மொழிந்தார்கள். அவ்வாறு முன் மொழிந்து கையெழுத்திட்டவர்களிலே ஒருவர் செயின்ட் ஜான்ஸ் கல்லூரியின் பிரின்சிபால் என்பதை அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** தனியார் கல்லூரியில் இருப்பவர்கள் அவ்வாறு முன் மொழிந்து கையெழுத்திடலாம், தேர்தலில் நிற்கலாம், அரசாங்கக் கல்லூரியில் இருப்பவர்கள் தான் நிற்கக் கூடாது. அது தவறு என்ருல் அந்த மனுவை ரிஜக்ட் செய்திருப்பார்களே.

**திரு. கே. விஞயகம் :** ஆசிரியர்கள் இந்த மாதிரி எந்த மனுவையும் செகண்ட் செய்து கையெழுத்திட்டால் அதில் தவறு இல்லை, நியாயம் தான் என்று சுப்ரீம் கோர்ட் ஜட்ஜ்மெண்ட் இருப்பது தெரியுமா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** அதைச் சட்டப்படி புறக்கணிப் பதற்கில்லை. ஆசிரியர்கள் அரசியலில் ஈடுபடக் கூடாது என்ற முறையிலே வாதிடுகிற நிலையில் ஒரு கல்லூரி பிரின்சிபால் ஒரு கட்சி அபேட்சகருக்காகக் கையெழுத்திடுவது பொருத்த முடையது தாஞ என்பதைத் தான் கவனத் தில் கொள்ள வேண்டும்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கைகளில் முதல் கோரிக்கையாக கல்வி மானியக் கோரிக்கை எடுக்கப்பட்டிருப்பது பல வகைகளிலும் சிறப்புற்று விளங்குகிற ஒன்ருகும். "கல்வியின் ஊங்கில்லை சிற்றுயிர் உற்ற துணை" என்பதற்கிணங்க கல்வியின் பல்வேறு முக்கியத்துவத்தை உணர்ந்து முதல் கோரிக்கையாக இந்த ஆண்டு இக்கோரிக்கை அமைந்திருப்பது பல்வேறு வகைகளில் சிறப்புடையது என்று கருதுகிறேன். அது மட்டுமல்லாமல், இருக்கிற மானியக் கோரிக்கைகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகைகள் அத்தனையையும் பார்த்தால் கல்வி மானியத்திற்காக வேண்டப்பட்டிருக்கிற தொகைதான் மிக மிக அதிகமாகவும் இருக்கிறது. அதுமட்டுமல்ல, எல்லோரும் வாழ்க் கையில் ஏதாவது ஒரு தடவையாவது ஈடுபட்டிருக்க வேண்டிய ஒரு துறை கல்வித் துறை. இப்படி பல்வேறு வகைகளில் சிறப்பு கொண்ட கல்வி மானியக் கோரிக்கையை முதன் முதலாக எடுத்துக் கொண்டிருப்பதும் இதற்கு பெரும்பாலான வகையில் ஆதரவு தந்து உறுப்பினர்கள் தங்கள் தங்கள் கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருப்பதும் மிக மகிழ்ச்சிக்குரிய ஒன்ருகும்.

கல்வி மானியத்தின் மீதான விவாதம் இரண்டு நாட்களுக்கு இருக்க வேண்டும் என்று மாண்புமிகு டாக்டர் ஹாண்டே அவர்கள் கருத்து தெரிவித்தார்கள். ஆனல் இருக்கிற நாட்களை எந்தெந்த நடவடிக்கைகளுக் காக ஒதுக்குவது என்று எல்லாக் கட்சித் தலைவர்களும் கூடி ஆலோசித்த காலத்தில் முக்கியமான கோரிக்கைகளை எடுத்துக் கொண்டு அவற்றிற்கு நாட்கள் ஒதுக்கப்பட்டு, விவாதத்திற்கு உரியனவல்ல என்று கருதப்படுகிற கோரிக்கைகளை தள்ளி விட்டு விட்ட நிலையில் ஒரு நாள் தான் விழுகிறது. மார்ச் 31-ம் தேதிக்குள்ளாக இதை நிறைவேற்ற வேண்டும் என்ற கட்டுப் பாட்டின் அடிப்படையில்தான் இந்த முறை மேற்கொள்ளப்பட்டது. காலை நேரத்தில் இடமில்லாவிட்டால் மாலை நேரத்தில் வைத்துக் கொள்ளலாம் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டபோது அந்தந்த கட்சியினர் தங்கள் தங்கள் பேச்சுக்களின் அளவைக் குறைத்துக் கொள்ளலாம், ஆகவே காலை நேரத் திலேயே முடித்து விடலாம் என்ற கருத்து அங்கு தெரிவிக்கப்பட்டதால் இந்த குறைந்த நேரம் என்ற நிலை உள்ளது. ஆனல் பல உறுப்பினர் கள் பலவிதக் கருத்துக்களைச் சொல்ல வேண்டியிருக்கிறது என்பதும் அப்படி சொல்வதற்கு முடியாத நிலையிருப்பதையும் உணர்கிறேன். ஆனல் இருக்கிற நேரத்தில் உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிருர்கள்.





கல்வித் துறையைப் பொறுத்தவரையில் பலவகைகளில் ஆதரவு தருகிற வகையில் மன்றத்திலுள்ள எல்லாத் தரப்பினரும் தங்கள் கருத்துக்களை எடுத்துச் சொல்லி மேலும் ஊக்கம் அளிக்கிற அளவிற்கு விவாதம் அமைந் திருப்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்ருகும். கல்வியைப் பொறுத்த வரையில் தமிழ்நாடு முன்னேறி வருகிற தன்மையைக் காண்கிரேம். எழுதப் படிக்கத் தெரிந்த அறிவு பெற்றவர்களின் எண்ணிக்கையில் கேரளாவிற்கு அடுத்தபடியாக தமிழ்நாடு அமைந்திருக்கிற பாங்கினை நாம் நன்கு காண் கிரேம். தமிழ்நாட்டில் கல்வி நிலையங்கள் ஆண்டுக்காண்டு வளர்ந்து வருகிற நிலையையும் காண்கிரேம். துவக்கப்பள்ளிகளைப் பொறுத்தவரையில் இன்று 31,200 பள்ளிகள் இருக்கின்றன. உயர்நிலைப் பள்ளிகள் 2,435 இருக்கின்றன கல்லூரிகள் 116 இருக்கின்றன. ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி கள் 20 இருக்கின்றன. ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் 135 இருக்கின்றன. 6-வது வயதிலிருந்து 11-வது வயதுக்கு உட்பட்டவர்கள் இப்போது 90 பர்செண்ட் பள்ளிகளில் சேர்க்கப்படுகிற சூழ்நிலை இருக்கிறது. இந்த சத விகிதத்தை மேலும் ஊக்குவிக்க வேண்டிய முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டிருக்கின்றன. அந்த வகையில் அடுத்த ஆண்டு 7,200 ஆசிரியர்களை நியமிப்பதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன. எவ் வளவு முயன்றும் நம் கண்ணுக்கும் கைக்கும் அகப்படாமல் 10 பர்செண்ட் அங்கும் இங்கும் இருந்து கொண்டிருக்கிருர்கள். அவர்களையும் இழுத்துக் கொண்டு வந்து பள்ளிகளில் சேர்ப்பதற்கு வேண்டிய பொறுப்பில் திட்ட மிட்டு முயல வேண்டியவர்களாக இருக்கிரேம் என்பதை இந்தப் புள்ளி விவரங்கள் தெளிவாகக் காட்டும். 11 வயதிலிருந்து 14 வயதுக்கு உட் பட்டவர்கள் 52 பர்செண்ட் இன்று பள்ளிகளில் சேர்ந்திருக்கிருர்கள். 14 முதல் 17 வயது வரையில் 33 பர்செண்ட் என்று எல்லாம் சேர்த்து இப்படிக் கணக்கிடும்போது கிட்டத்தட்ட 40 பர்செண்ட் தான் நம் மாநிலத் தில் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களாக இருக்கிருர்கள். 60 பர் செண்ட் எழுதப் படிக்கத் தெரியாதவர்களாக இருக்கிருர்கள். கல்வித் துறைக் காக ரூ. 56,92,90,200 ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது தவிர தனியார்களும் மற்றவர்களும் தங்கள் தங்கள் உதவிகளை செய்து இத்துறையை வளர்க்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிருர்கள். ஒவ்வொரு ஊரிலும் துவக்கப் பள்ளியி லிருந்து கல்லூரிகள் வரை அமைப்பதற்காக வேண்டுகோள் விடுக்கிற நிலையில் ஆங்காங்கு இருப்பவர்கள் தங்களால் இயன்ற உதவிகளைச் செய்து வருகிருர்கள். இவ்வளவு இருந்தும் 40 பர்செண்ட் அளவிற்குத்தான் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் இருக்கிருர்கள்.

இதை நான் குறிப்பிடக் காரணம், நாம் வந்திருக்கிற இடத்திற்கும் செல்ல வேண்டிய இடத்திற்கும் இடையில் எவ்வளவு தொலைவு இருக் கிறது என்பதையும் இடையில் எவ்வளவு முயற்சிகளை மேற்கொள்ளவேண் டியவர்களாக இருக்கிரேம் என்பதையும், அந்த முயற்சிகளை எவ்வளவு குறைந்த வசதிகளுக்கிடையில் மேற்கொள்ள வேண்டியவர்களாக இருக்கி ரேம் என்பதையும், குறைந்த வருமானமுள்ள நம் ஏழ்மை நாட்டில் எந்தளவிற்கு வசதிகளைப் பெருக்க வேண்டியிருக்கிறது என்பதையும்

சுட்டிக்காட்டத்தான் இனியும் பல துவக்கப் பள்ளிகளுக்கு கட்டடங்கள் இல்லாத நிலையில் 'ஆலமரத்தின் அடியிலோ அல்லது அரச மரத்தடியிலோ அவற்றை நடத்துகிற அளவிற்குத் தான் நிலைமைகள் இருக்கின்றன. சில ஊர்களில் எப்படியாவது ஒரு உயர்நிலைப் பள்ளி வேண்டுமென்று விரும்பிப் பெற்று அதற்கான கட்டடத்தைக் காட்டுகிற வகையில் ஆரம்பப் பள்ளியை அரச மரத்தடிக்கு அனுப்பிவிட்டு அந்தக் கட்டடத்தை காட்டி இதுதான் உயர்நிலைப் பள்ளிக்கான கட்டடம் என்று சொல்லி ஒன்றிரண்டு ஆண்டுகளில் உயர்நிலைப் பள்ளிக்கான கட்டடத்தைக் கட்டிவிடலாம் என்று உறுதி தந்து பல்வேறு காரணங்களினால் அது இயலாததொரு நிலை ஏற்பட்டு, சென்ற ஆரம்பப் பள்ளி மீண்டும் திரும்ப அதன் இடத்திற்கு வரமுடியாத நிலையில், உயர்நிலைப் பள்ளிக்கான கட்டடம் பெறமுடியாத நிலையிலும் தவிக்கிற சமயத்தில் பொது மக்களுடையவும் மற்றவர்களுடையவும் ஒத்துழைப்பு தேவை என்று கூறுகிறோம்.

கல்வித்துறை, மருத்துவத்துறை இவற்றிற்கு மட்டுமே அரசு எடுக்கும் முயற்சியோடு கூட அற உள்ளம் கொண்டவர்கள் அறநிலையங்கள் ஏற்படுத்தி உதவி செய்கிற முறையிலும், பொது மக்கள் ஒத்துழைப்பு கொடுப்பதின் மூலமும் நம் தேவைகளை நிறைவேற்ற முடியும் என்று பல வேண்டுகோள்களை பல சமயங்களில் வெளியிட வேண்டியவர்களாக இருக்கிறோம். வேறு எந்தத் துறைக்கும் பொது மக்களிடம் தொகை கேட்பதில்லை. போலீஸ் ஸ்டேஷன்ஸ் கட்டவோ அல்லது ரெஜிஸ்ட்ரார் ஆபீஸ்கள் கட்டவோ, அல்லது தாலுகா ஆபீஸ்கள் கட்டவோ நாம் தொகைகள் கேட்பதில்லை. இந்த இரண்டு துறைகளுக்கும் எவ்வளவு செலவு செய்தாலும் போதுமான அளவிற்கு அமையாத காரணத்தால் பொது மக்களைக் கேட்க வேண்டிய நிலை இருக்கிறது. அந்த வகையில் ஆங்காங்கிருந்து கிடைக்கிற வசதிகளை வைத்துக் கொண்டு இத்துறைகளைப் பெருக்குகிற முயற்சியில் ஈடுபட்டிருக்கிறோம்.

கல்வித் துறையில் கட்டடங்கள், டீ.எ. என்று எல்லாவற்றையும் சேர்த்து அரசு செலவழித்துள்ள தொகையைப் பார்த்தால் (1966-67-ல் ஒதுக்கப்பட்டது, 1967-68-ல் ஒதுக்கப்பட்டது, 1968-69-க்கு ஒதுக்கப்படுவதைப் பார்த்தால் ஆறு கோடி ரூபாய் அதிகமாகச் செலவழிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.) இருந்தும் நம் தேவைகள் நிறைவேற்றப்பட முடியாத அளவில் இருக்கின்றன. திட்டங்களில் நிதி ஒதுக்கீடு குறைந்திருப்பதால் வேண்டிய அளவிற்கு நிதி ஒதுக்க முடியாமல் கட்டட வசதி, மற்றவைகளைக் குறைத்துக் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். (பள்ளிக்கூடங்கள் கட்டுவதில் நெருக்கடி நிலைமையில் கூட வருகிற ஆண்டு 32 லட்சம் ரூபாய் ஒதுக்குகிற அளவிற்கும், அறிவியலில் செயல்முறைப் பயிற்சி அளிப்பதற்கு கருவிகள் வாங்குவதற்காக 45 லட்சம் என்று இப்படி பல வசதிகள் செய்து கொடுக்கப்பட்டு வருகின்றன.')

பொதுவாக இந்த விவாதத்தில் எடுத்துச் சொல்லப்பட்ட கருத்துக்களில் முக்கியமான ஒரு கருத்து மொழிக் கொள்கையாக இருப்பதைப் பார்க்கிறோம். இரு மொழிக் கொள்கையா, மும்மொழிக் கொள்கையா என்பது பற்றி இங்கு விவாதிக்கப்பட்டது. 23—1—1968 அன்று நடைபெற்ற, பயிற்சி மொழி பற்றிய தீர்மானத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்ட காலத்தில் விரிவாகப் பலர் பேசியிருக்கிறார்கள். மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் அரசின் கருத்துக்களை தெளிவாக விளக்கிக் காட்டியிருக்கிறார்கள். ஆகவே, மும்மொழிக் கொள்கை என்ற அளவில் வைத்துப் பார்க்கிறபோது நடைமுறையில் இல்லாத வகையிலும், கேடு பயக்கக் கூடியதாகவும், மறைமுகமாக கட்டாயப்படுத்த வழிவகை செய்யும் என்ற காரணங்களினால் திட்ட வட்டமாக, தெளிவாக, இருமொழிக் கொள்கையை புகுத்த வேண்டிய கட்டத்திற்கு ஆளானோம். மும்மொழி
பிற பகல் 1-00
கொள்கை என்று வைத்திருந்த காலத்தில் தமிழை முதல் வகுப்பிலிருந்தும், இரண்டாவது மொழியான ஆங்கிலத்தையோ அல்லது அன்னிய நாட்டு மொழியையோ மூன்றாவது வகுப்பிலிருந்தும், 9, 10, 11-வது





வகுப்பிலேயிருந்து இந்தி அல்லது வேறு ஏதேனும் ஒரு இந்திய மொழி படிக்க வேண்டுமென்றும் இருந்தது. இந்திப் பரிட்சைகளில் போதிய மார்க்குகள் வாங்க வேண்டிய அவசியமில்லாமலிருந்தது. அந்தப் பரீட்சைக்கு ஆஜரானால் போதும் என்ற நிலையிலே வைத்திருந்தோம். அவ்வாறு மும்மொழிக் கொள்கை என்பது ஏட்டிலே இருந்ததே தவிர நடை முறையிலே வரவில்லை. இருமொழிக் கொள்கைதான் நடைமுறையில் இருந்திருக்கின்றது. மாணவர்களின் பள்ளியிறுதியாண்டுச் சான்றிதழ்களை வாங்கிப் பார்த்தால் பெருமளவில் இந்திக்கு எதிராக 0 மார்க் வாங்கியிருப்பதைக் காண முடியும். மும்மொழி என்று வைத்திருந்தோமே தவிர நடைமுறைக்கு அது சரியாகக் கொண்டு வரப்பட்டதா? அந்தப் பரீட்சைகளில் போதிய மார்க்குகள் வாங்கியிருந்தார்களா? இல்லை. மும்மொழிக்கொள்கை என்று இருந்ததேயொழிய நடைமுறையில் இரு மொழிகள்தான் இருந்தன. இப்படியொரு நிலையிருப்பதை மாற்ற இந்தி அல்லது வேறு ஏதேனும் ஒரு இந்திய மொழியைப் படிக்கலாம் என்ற நிலை வந்தது, சிலர் "அட்வான்ஸ்ட் தமிழ்" எடுத்துப் படித்தார்கள். எனவே மும்மொழிக் கொள்கை அகில இந்திய அளவில் மத்திய அரசின் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்ததால் அந்த அடிப்படையில் இப்படிப்பட்ட சூழ்நிலைகள் உருவாயின. எனவே இந்த மாநிலத்தின் கருத்துக்களையும், எதிர்காலத்தில் ஏற்படும் நிலைமைகளையும், போக்குகளையும் இந்திய அரசுக்கு உணர்த்த வேண்டிய கட்டம் வந்த காரணத்தினால், மும்மொழிக்கொள்கை என்பது நடைமுறைக்கு ஒவ்வாதது என்ற நிலைமையைத் திட்டவட்டமாக மத்திய அரசிடம் கூறும்படி ஏற்பட்டது. மும்மொழித் திட்டம் என்று உத்தரப்பிரதேசத்திலும், இராஜஸ்தானிலும் மற்றைய பகுதிகளிலும் வைக்கப்பட்டிருந்ததே தவிர, மூன்று மொழிகள், என்று ஏட்டில் இருந்ததே தவிர அவைகள் அங்கு நடைமுறைக்குக் கொண்டு வரப்படவில்லை. அங்கு நடைமுறையில் இந்தி, ஆங்கிலம் என்ற அளவிலே இருமொழித் திட்டம்தான் காணப்படுகிறது. அதுவும்கூட சில யிடங்களில் ஒருமொழித் திட்டம் என்று சொல்லக்கூடிய முறையிலே ஆகிவிட்டது. உத்தரப் பிரதேசத்திலே ஆங்கிலத்தைக் கட்டாயமாகப் படிக்க வேண்டுமென்ற அவசியம் கூட இல்லை. விரும்பியவர்கள் அதைப் படிக்கலாம் என்ற அளவுக்குத் தான், ஒரேமொழிக் கொள்கை என்ற அளவுக்குத்தான் அது இருக்கிறது. ஆகவே, தமிழ் நாட்டு மக்களின் மனப்பாங்கைத் திட்டவட்டமாக எடுத்துக்கூறி, இரு மொழி என்ற அளவில், அதாவது தாய்மொழி தமிழையும், ஆங்கிலத்தையும் கற்றால் போதுமென்ற அளவுக்கு வைக்கப்பட்டிருக்கிறது. மும்மொழிக் கொள்கை இருக்க வேண்டுமென்றால் வடக்கேயுள்ளவர்கள் தென்னாட்டைச் சேர்ந்த ஏதேனும் ஒரு மொழியைப் படிக்க வேண்டுமென்று கல்வியமைச்சர் மாநாடுகளிலும், பல பட்டமளிப்பு விழா மண்டபங்களிலும் சொற்பொழிவாற்றும்போது பல பெரியவர்கள் கூறியிருக்கிறார்கள். மறைந்த பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் கூட எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். அவர்கள் சொல்லியபடி தென்னாட்டு மொழியைக் கற்க வேண்டுமென்று வடக்கேயிருந்து ஒரு பள்ளியிலாவது 'இங்கு 30 பேர், அல்லது 10 பேர் தமிழ் படிக்க விரும்புகிறார்கள்' என்று தமிழக அரசைப் பார்த்துக் கூறி 'ஒரு தமிழாசிரியரைக்' கொடுங்கள் என்று கேட்கவில்லை. உத்திரப்பிரதேசத்திலிருந்தோ அல்லது இராஜஸ்தானிலிருந்தோ இந்த மாதிரியான தகவல் இங்கு இதற்கு முன்னிருந்த அரசுக்கோ அல்லது இந்த அரசுக்கோ வரவில்லை. கல்வியமைச்சர் மாநாட்டிலே நான் மற்றைய அமைச்சர்களோடு உரையாடிக் கொண்டிருந்தபொழுதுகூட கன்னடம், தெலுங்கு, மலையாளம் ஆசிரியர்களை அந்தந்த மாநிலங்களிலிருந்து வடக்கேயிருந்தவர்கள் கேட்டுப் பெற்றார்கள் என்ற நிலை கிடையாது. இங்கிருக்கின்ற தமிழாசிரியர்களில் சிலர் டெல்லியிலும், கல்கத்தாவிலும், பம்பாயிலும் இருப்பவர்களுக்குத் தமிழ் சொல்லிக்கொடுக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்களே தவிர அங்குள்ள ஒரு பல்கலைக் கழகத்திலிருந்தோ அல்லது ஒரு பள்ளியிலிருந்தோ மூன்றாவது மொழியான தமிழுக்கு ஒரு ஆசிரியரை அனுப்புங்கள் என்று கேட்கவில்லை. எனவே மும்மொழித் திட்டமென்பது அங்கே சிலயிடங்களில் ஒருமொழித் திட்டமாகத்தான் நடை

முறையில் இருக்கிறது. ஆனால் இங்கு திட்டவட்டமாக இருமொழி என்று அறிவித்திருக்கிறோம். இருமொழித் திட்டம் கூடாது என்று எதிர்க்கட்சித் தலைவரவர்கள் கூறினார்கள். அவர்களின் கொள்கை மும்மொழிக்கொள்கையா, மும்மொழிக்கொள்கையை வற்புறுத்துகிறார்களா என்பதைத் திட்டவட்டமாகச் சொல்லவில்லை. இப்பொழுது சொல்வார்கள் என்று எதிர்பார்த்தேன். இப்பொழுதும் தெரிவிக்கவில்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** யாரும் எந்த மொழியையும் படிப்பதற்கு வசதி செய்து தர வேண்டும். இந்தி இஷ்டபாடமாக இருக்க வேண்டுமென்று கூறுபவர்களுக்கு அதைக்கற்க வாய்ப்பிருக்க வேண்டும். மாநிலத்தைப் பொறுத்தவரையில் மும்மொழி இருக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அப்படியென்றால் இருமொழிக்கொள்கை தேவையென்று நாங்கள் சொன்னபோது மும்மொழிக் கொள்கையை வற்புறுத்தி இருமொழிக் கொள்கையை எதிர்த்துச் சொல்லியிருப்பார்களானால் எல்லோருக்கும் புரிந்திருக்கும். அவ்வாறில்லாததால் ஐயப்பாடு ஏற்பட்டிருக்கிறது. அவர்கள் விளக்கிக் கூறியிருந்தார்களென்றால் இப்படிப்பட்ட ஐயப்பாட்டுக்கு அவசியம் ஏற்பட்டிருக்காது.

மொழிப் பயிற்சியைப் பொறுத்த வரையிலும் பொதுவாக எல்லா நாட்டிலேயுமே சரி, அல்லது இங்கு நடைபெறும் கல்வி மாநாடுகளிலேயும், துணைவேந்தர்கள் மாநாடுகளிலும், ஆசிரியர் மாநாடுகளிலும் சரி எல்லோருமே எடுத்துச் சொல்லும் கொள்கை ஒருவன் தன்னுடைய அறிவைப் பெருக்கிக்கொள்ள வேண்டுமென்றால் தாய்மொழியிலே அதிக வாய்ப்பிருக்கும் அல்லது வட்டார மொழியிலே அத்தகைய வாய்ப்பிருக்கும் என்பதுதான். மிக மிக நல்ல முறையில் கற்க வேண்டுமென்றால் தாய் மொழியில்தான் அந்த வாய்ப்பு கிடைக்கும். பிறமொழிகள் மூலம் பெற்றுக்கொண்ட அறிவைவிட தாய்மொழி மூலம் அதிக அளவில் அறிந்துகொள்ள முடியும் என்று எல்லா இடங்களிலும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். எல்லோரும் வற்புறுத்திச் சொல்லியிருக்கிறார்கள். இது பற்றித் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள். அண்ணல் காந்தியார் கூட பலதடவைகள் வற்புறுத்தி வந்திருக்கிறார்கள். துணைவேந்தர்கள் மாநாட்டிலும் அது வற்புறுத்தப்பட்டது. "கோத்தாரி கமிஷன்" அறிக்கையிலும் வற்புறுத்தப் பட்டிருக்கிறது. ஆனால் அந்த அளவிற்கு ஆற்றல், தகுதி, திறமையுடைய மொழி எது என்ற அளவில்தான் பிரச்சினை இருக்கிறதே தவிர, எந்த அளவிற்கு அவ்வாறு ஆக்கலாம் என்ற பிரச்சினை இருக்கிறதே தவிர இது பற்றிய கொள்கையில் வேறுபாடு இல்லை. ஆகவே, தாய்மொழி மூலம் கல்வியறிவு என்பது ஒரு நாட்டுக்கு உகந்ததாகத்தான் இருக்க முடியும். ஜப்பான் நாட்டிலே முன் காலத்தில் அறிவியல் துறையில் எல்லாச் சொற்களும் அந்த மொழியில் இருந்ததா என்றால் அவ்வாறில்லை. அவர்கள் முயன்று, முயன்று வேலை செய்தார்கள். "இண்டர்நேஷனல் டெர்மினாலஜி"-யிலிருந்து அந்தச் சொற்களையெடுத்து அப்படியே ஜப்பான் எழுதிக்கொண்டு பொறியியல், மருத்துவம் போன்ற எல்லாத் துறைகளிலும் ஜப்பான் மொழியில் சொல்லிக் கொடுக்கும் அளவில் வந்திருக்கிறார்கள். அப்படி முயன்றால் நாமும் அவ்வாறு வர முடியும் என்ற அடிப்படையிலேதான் நாம் புகுத்த வேண்டியவர்களாகயிருக்கிறோம். கொள்கையை ஏற்றுக்கொண்டு விட்டோம். எனவே, உடனடியாக, நாளைக்கே, காலை 6 மணி முதல் 116 கல்லூரிகளிலும் எல்லா வகுப்புகளிலும், பி.ஏ., பி.எஸ்ஸி., எம்.ஏ., எம்.எஸ்ஸி., போன்ற அத்தனையையும் தமிழில் ஆக்க முடியும் என்று சொல்லவில்லை. ஆகவே, முயற்சி எடுக்கும்பொழுது தீவிரமாக எடுக்க வேண்டும். 12 அடி தாண்ட வேண்டுமென்று நினைத்தால்தான் 7 அடி அல்லது 9 அடி தாண்டி விழலாமே தவிர, 7 அடியோ 9 அடியோ நம்மால் தாண்ட முடியாத காரியம், அது தாண்டவராயனால்தான் முடியும் என்று எண்ணுகிறவர்கள் 3 அடி கூட தாண்ட முடியாது. எனவே "உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்" என்றபடி நினைப்பவற்றை உயர்வாக நினைத்தால் அதில் ஓரளவு வெற்றிபெற முடியும். அந்த முறையில் இதை ஐந்தாண்டு



காலத்திற்குள் என்று முயன்றால்தான் அதற்குள் சில பல முயற்சிகள் வெற்றிகரமாக இருக்குமே தவிர ஐந்தாண்டு காலத்திற்குள் முடியுமா, முடியாவிட்டால் இதை விட்டு விடுவதா என்பது அல்ல. ஐந்தாண்டுகளுக்கு பொதுவாகத் திட்டங்களை மேற்கொண்டிருக்கிறோம். அதில் பல நிலைமைகள் வர முடியாமலிருக்கும். படிப்படியாகத் தான் அவைகளை எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கும். (குறுக்கீடு) ஆம், எல்லாவற்றிலும் படிப்படியாகத்தான் வரக்கூடிய நிலைமையிருக்கும். நாம் பிறந்தவுடன் குழந்தையாக இருப்பது முதல் பெரியவர்களாகும் வரை பல காரியங்கள் படிப்படியாகத்தான் நடைபெற வேண்டியிருக்கிறது. நீந்தத் தெரிந்து கொண்டு தண்ணீரில் குதிப்பதா அல்லது தண்ணீரில் குதித்து நீந்தக்கற்றுக் கொள்வதா என்பதில் அடிப்படையிலேயே தவறு இருக்கிறது. நீந்துவது என்று சொன்னாலே அது தண்ணீரில் நடைபெறக்கூடிய ஒன்று. தண்ணீர் இல்லாத நிலையில் நீந்துதல் என்பது நடைபெறவில்லை. நீந்தத் தெரிந்துகொண்டு தண்ணீரில் இறங்குவது என்ற சொற்றொடருக்குப் பொருளே இல்லை. அந்தச் சொற்றொடரைத் தூக்கி வைத்துவிட வேண்டியதுதான். தண்ணீரில் இறங்கிக் கற்றுக்கொள்ள ஆரம்பித்தால் முதன் முதலிலே கை, கால்களை அடித்துக்கொள்ளத்தான் செய்யும். மூழ்குகின்ற பொழுது பக்கத்திலுள்ளவர்கள் தூக்கிவிடத்தான் வேண்டும். பிறகு சுரக்காயை பிடித்துக்கொண்டு துணையில்லாமல் நீந்தி வெற்றிபெறும் சூழ்நிலை உருவாகும். எடுத்த எடுப்பிலேயே அதில் வெற்றிபெற முடியாது. அதுபோன்றே கலைச்சொற்களை ஆங்கிலத்திலே தெளிவாக்குவதற்கு 400, 500, 600 ஆண்டுகளுக்கு முன் முயன்று ஆக்ஸ்போர்டு, கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் உருவாக்கியது. அவ்வாறு உருவாக்கிய பிறகு அறிவியல் சொல்லுக்காகத் தங்கள் நேரம், தங்கள் நினைப்பு ஆகியவற்றைச் செலவழிக்கும் தேவை அங்கேயில்லை. அதுபோல் இங்கு இந்தத் தலைமுறையிலுள்ள பேராசிரியர்கள் நிறைவேற்ற வேண்டிய கடமைகள் இரண்டுண்டு. அதாவது பணியாற்றுகின்ற கடமையோடு, தமிழை ஆற்றலுடைய, அறிவுடைய, தகுதியுடைய, திறமையுடையதாக ஆக்குகிற முயற்சியில் தங்கள் பங்கைச் செலுத்த வேண்டிய கடப்பாடுடையவர்களாகவும் அவர்கள் இருக்கிறார்கள். "முயற்சி" இருந்தால் தான் "திருவினை ஆக்கும்". "முயற்சி திருவினை ஆக்கும்" என்று அதோடு முற்றுப்புள்ளி வைத்துவிட்டால், நாம் முயலாமல் விட்டு விடுவோம். ஆகவே தான் "முயற்றின்மை இன்மை புகுத்தி விடும்" என்கிறார் வள்ளுவர். நாம் முயலவும் வேண்டாம். எங்களுக்குத் திருவினையும் வேண்டாம் என்று எங்கேச் சொல்லி விடுவோமோ என்று கருதி, "முயற்சித் திருவினை ஆக்கும்" என்று சொல்லி முற்றுப் புள்ளி வைக்கவில்லை. நமக்குத் திருவினை வேண்டாம், ஆகவே இந்த இடத்திலேயே இருக்கிறேன் என்று யாராவது சொல்லி விடுவார்களோ என்று கருதி தான் "முயற்சித் திருவினை ஆக்கும்" என்று சொல்லி, அதோடு "முயற்றின்மை இன்மை புகுத்தி விடும்" என்று கூறி, முயலாமல் இருப்பவர்கள் மீது துன்பம் வந்து விடும் என்று வள்ளுவர் கூறினார். ஆக அந்த வகையிலே முயற்சிகளை மெல்ல மெல்ல எடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அந்த வகையிலே தான் பகுதி பகுதியாக இதிலே ஓரளவுக்கு வெற்றி கண்டு கொண்டும் வருகிறோம் என்பதை நாம் உணருகிறோம்.

தமிழ் வகுப்புகளில் எவ்வளவு மாணவர்கள் சேர்ந்தார்கள் என்பதைக் கணக்கிட்டால், 1966–67-ல் தமிழ் கலை இயல் பகுதியிலே, தமிழில் படிப்பதற்காக 7,600 இடங்கள் ஒதுக்கப்பட்டன. அதிலே, 1,236 இடங்கள் காலியாக இருந்ததைத் தவிர, 6,364 இடங்களிலே மாணவர்கள் சேர்ந்து படிக்கிற அளவுக்குச் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இதற்கு முன்னால், நூற்றுக்கணக்கான மாணவர்கள் தமிழ் வகுப்புகளில் சேருகிற நிலை மாறி, ஆயிரக்கணக்கானவர்கள் சேருகிற நிலை மாறி, 6,364 மாணவர்கள் தமிழ் வகுப்புகளில் சேருகின்ற அளவுக்கு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. மொத்த கல்லூரிகளில் 83 கல்லூரிகளில் தமிழ் வகுப்புகள் புகுத்தப்பட்டன. 26 அரசாங்கக் கல்லூரிகளிலும் 17 தனியார் கல்லூரிகளிலும் அதை புகுத்தியிருக்கிறார்கள். மொத்தப் பிரிவுகளிலே தமிழுக்காக ஒரு

சில பிரிவுகள் ஒதுக்கப்பட்டன. அரசினர் மானியம் பெறும் கல்லூரிகளில் 4,273 மாணவர்களும், இதர கல்லூரிகளில் 2,091 மாணவர்களும் பயிலுகிற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆக, மொத்தம் 6,364 மாணவர்கள் தமிழ் வகுப்புகளில் படிக்கிறார்கள்.

சென்ற ஆண்டு பி.ஏ. இடைநிலை வகுப்புகளிலும் கூட, கலைப் பகுதியிலே பொருளாதாரம், வரலாறு, போன்றவைகளில் ஒரு சில வகுப்புகள் துவக்கப்பட்ட நிலையில் அரசினர் கலைக்கல்லூரிகளில் 16 கல்லூரிகளிலே வகுப்புகள்—தமிழ்ப் பிரிவுகள்—ஏற்படுத்தப்பட்டன. அரசினர் மானியம் பெறும் 32 கல்லூரிகளில் அந்தப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டன. ஆக, மொத்தம் 48 கல்லூரிகளில் பி.ஏ. வகுப்புகள் தமிழில் புகுத்தப்பட்டன. அரசினர் கல்லூரிகளில் இந்த பி.ஏ. வகுப்பில் 529 மாணவர்களும், தனியார் கல்லூரிகளில் 1,268 மாணவர்களும், ஆக மொத்தம் 1,797 மாணவர்கள் பயில்கிறார்கள். ஆகவே, இது மெல்ல மெல்ல வளரும் என்கின்ற முயற்சியின் அடிப்படையிலே தான் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

ஆங்கிலத்திற்கும் இடம் வைத்து, தமிழுக்கும் இடம் வைத்திருக்கிற காரணத்தால்தான் மாணவர்கள் தமிழுக்கு வரமாட்டேன் என்கிறார்கள் என்ற கருத்தும் சொல்லப்பட்டது. அந்த காரணத்தினாலே அடுத்த ஆண்டிலே கலைக் கல்லூரியைப் பொறுத்த வரை, கலையியல், முழுவதையும் தமிழிலேயே நடத்த வேண்டுமென்றும், "ஹியுமானிட்டீஸ்" போன்ற விஞ்ஞானப் பிரிவுகளையும் தமிழிலேயே நடத்த வேண்டுமென்றும் எண்ணி அதற்கான சூழ்நிலைகளையும் உருவாக்கிக் கொண்டிருக்கிறோம்.

தமிழ்ப் படிப்படியாக வரும் என்று நான் சொன்னதற்குக் காரணம் 100-க்கு 95, 98 பேர் படிப்பு அறிவை வைத்துக் கொண்டு தம்முடைய எதிர்கால வாழ்க்கையை கட்டி அமைக்க முடியுமா என்ற நோக்கத்தோடு தான் வந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஏற்கத் தகுந்த சூழ்நிலைகளையும் நாம் ஒரு பக்கத்திலே அமைக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆக, சூழ்நிலைகள் அமைந்திருக்கின்ற நிலையில் யாரும் தாய் மொழியிலே கல்வி அறிவைப் பெறுவதை விட்டுவிட்டு, இன்னொரு மொழியிலே கல்வியைப் பெற வேண்டுமென்ற நிலைக்குப் போக மாட்டார்கள். அந்த அடிப்படைத் திட்டத்தைப் புகுத்துவதற்குச் சூழ்நிலைகளைப் பெற வேண்டுமென்ற முறையிலே படித்து வந்த பிறகு, மனுச் செய்கின்ற அத்தகையோருக்கு பி.ஏ.-யிலே தமிழ் எடுத்துப் படித்து வந்தவர்களுக்கு, தமிழிலே வேலை வாய்ப்புக் கொடுக்கின்ற முறையில் அவர்களுக்கு முதல் சலுகை தருவதன் மூலமாக, அநேகர் அந்த வகுப்புகளில் சேருவார்கள் என்ற அடிப்படையில், அரசாங்கத் துறைகளிலே வேலை வாய்ப்புத்தர முடியுமா என்பதை ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். அதிலே, எந்தெந்தத் துறைகளிலே தமிழை உடனடியாகக் கொண்டு வரலாம் என்பதைப் பற்றியும் முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. செய்தி-விளம்பரத் துறை, இந்து அறநிலையத் துறை, கல்வித் துறை, வேளாண்மைத் துறை, பத்திரப் பதிவுத் துறை, கூட்டுறவுத் துறை, புள்ளி விவரத் துறை, நில அளவைத் துறை, வணிக வரித் துறை, தமிழ் வளர்ச்சித் துறை, மகளிர் நலத் துறை, சிறைத் துறை, காவல் துறை, நியமனப்புத் துறை போன்றவைகளில் தமிழைக் கொண்டு வரலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதில், உடனடியாக, எந்தெந்தத் துறைகளிலே பி.ஏ., பி.எஸ்ஸி. வகுப்பிலே தமிழ் எடுத்துப் படித்த மாணவர்களுக்கு முதல் சலுகை தரக் கூடிய அத்தகைய சூழ்நிலை ஏற்படுமானால் இந்தப் பாடங்களைத் தமிழில் படிக்கின்றவர்களுடைய எண்ணிக்கை அதிகம் ஆகக்கூடும் என்ற எண்ணத்தின் அடிப்படையில்தான் இந்தச் சூழ்நிலையை உடனடியாக ஏற்படுத்துவதற்குரிய முயற்சிகளை அரசு மேற்கொண்டு வருகிறது.

அடுத்த ஆண்டு முதல் அறிவியல் துறையிலே தமிழைப் பயிற்சிமொழியாக்க வேண்டுமென்ற முயற்சியினுடைய அடிப்படையில் தான் பல்வேறு துறைகளைச் சேர்ந்த, கணக்கியல் துறை, விலங்கியல் துறை, இளங்கலை பொருளியல் துறை, ஆகிய துறைகளைச் சேர்ந்த, பேராசிரியர்களையும்





சென்னையிலே இருக்கிற சுற்றியிருக்கிற கல்லூரிகளினுடைய முதல்வர்களையும், மூன்று துணை வேந்தர்களையும் அண்மையில் அழைத்து, இதற்கான முயற்சி எடுக்க வேண்டும், அடுத்த ஆண்டிலேயிருந்து புகுமுக வகுப்புக்களிலே தமிழிலே படிப்பதற்கான வாய்ப்புகளை செய்ய வேண்டுமென்று அவர்களிடத்திலே விண்ணப்பமிட்டோம். அவர்களும் ஆராய்ந்து அதற்கான முயற்சிகளை எடுக்கிற நேரத்தில் அதற்கான தமிழ்ப் புத்தகங்களை தயார் செய்து கொள்ள வேண்டும், தற்பொழுது அந்த மாதிரி புத்தகங்கள் இல்லை. ஆசிரியர்கள் சொல்லுவதை மாணவர்கள் படித்துத் தெரிந்துகொள்ளுகின்ற அளவுக்குத் தமிழில் புத்தகங்கள் இல்லையென்ற கருத்து அங்கு தெரிவிக்கப்பட்டது. ஆகவே, முதலிலே தமிழில் புத்தகங்களைக் கொண்டு வர வேண்டுமென்ற முறையில்தான் ஒவ்வொரு துறையிலும் மூன்று புத்தகங்களை எழுதுவதற்கு மூன்று பேரினைத் தேர்ந்தெடுத்தோம். அவர்கள் விரைவில் எழுதிக் கொடுக்கிறோம் என்று ஒத்துக் கொண்டதன் பேரில், அடுத்த திங்கள் 30-ம் தேதிக்குள் எழுதச் சொல்லி இருக்கிறோம். எழுதிக் கொடுத்ததற்குப் பிறகு, தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் மூலமாக வெளியிட்டு, அதை அடுத்த ஆண்டு அறிவியல் துறையிலே புகுத்துவதற்கான முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறோம்.

அரசினர் கலைக் கல்லூரிகளில், 8, 10 பிரிவுகள் இருக்கின்றன. அதாவது, 8, 10 செக்ஷன்கள் இருக்கின்றன. அந்த 10 செக்ஷன்களையும் உடனடியாக அறிவியல் துறையாக ஆக்க முடியுமா என்றும் கேட்கப்பட்டது. அங்கு இருக்கிற முதல்வர்களும் பேராசிரியர்களும் தமிழிலேயே எல்லா கலை இயல் பாடங்களையும் சொல்லிக் கொடுக்கிற அளவுக்குப் பேராசிரியர்கள் தேர்ச்சி பெறவில்லை; ஒரு கல்லூரியிலே தற்பொழுது இருக்கிற 15 கெமிஸ்டரி லெக்சரர்ஸ்; ஃபிஸிக்ஸ் ஃப்ரஃபொஸர்ஸ்—அவர்கள் தமிழில் சொல்லித் தருகிற ஆற்றலைப் பெற்றுவிட்டார்களா என்பதைப் பார்த்துக் கொண்டு செய்தால் ஆங்காங்கு முடிந்த அளவுக்கு சிலபல பிரிவுகளை ஏற்படுத்தலாம் என்ற கருத்தை தெரிவித்து இருக்கிறார்கள். ஆகவே, எல்லாவற்றையும் யோசிக்கும்படியாகச் சொல்லி இருக்கிறேன்.

அதை "கன்ஸல்டேட்டிவ் கமிட்டி" யில் வைத்து, அதற்குத் தக்க முடிவு எடுப்பதன் மூலமாக, செய்யலாம் என்கின்ற கருத்து இருக்கிறது. இந்த நேரத்திலே கல்வி ஆலோசனைக் குழுவைப் பற்றி ஒன்று சொல்ல விரும்புகிறேன். கல்வி ஆலோசனைக் குழு ஒன்றும், கல்வி கலந்தாயும் குழு ஒன்றும் ஏற்படுத்த வேண்டுமென்று முன்பே நான் குறிப்பிட்டேன். அதை இது வரை ஏற்படுத்துவதற்கான பிரச்சினை எழவில்லை. எனக்கும் ஓராண்டு காலம் அனுபவம் ஏற்பட்டால் தான், இதிலே இருக்கிற நடைமுறைகள், சிக்கல்கள் என்ன என்பதையெல்லாம் தெரிந்து கொள்ள வாய்ப்பு இருக்கும் என்ற முறையில் ஓராண்டு காலமாக அது ஏற்படுத்தப்படவில்லை. அதில் உள்ள அம்சங்களையெல்லாம் அறிந்து கொண்டு அமைக்க வேண்டுமென்ற முறையில்தான் இது வரையில் அந்த "கன்ஸல்டேட்டிவ் கமிட்டி" யை அமைக்கவில்லை. இதைப் பற்றி முடிவு செய்கின்ற நேரத்தில், இந்தத் துறையைச் சேர்ந்தவர்கள் எல்லோருடைய கருத்தையும் அறிந்து கல்வி முறையில் சிலபல மாற்றங்களையும் செய்வதற்கும் இது பயன்படும் என்ற வகையில்தான் இந்த கமிட்டியை அமைக்க எண்ணியுள்ளோம்.

டாக்டர் ஹாண்டே அவர்கள் சொல்லியதைப் போல, கனம் எதிர்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லியதைப் போல, பல உறுப்பினர்கள் சொல்லியதைப்போல, அரசியல்வாதிகள் கல்வித்துறையில் ஈடுபட்டு, மாணவர்கள் இதை இதைத்தான் படிக்கவேண்டுமென்று சொல்வதை யாரும் ஒப்புக் கொள்ளமாட்டார்கள். ஆனால், மக்களுடைய கருத்தை அறிந்து இது மக்களுடைய கருத்து என்று வேண்டுகோள் கொடுக்க, விண்ணப்பம் கொடுக்க, அவர்களுக்கு உரிமை இருக்கிறது. இதை ஆராய்ந்து பார்த்து, இன்னின்னது இப்படியிப்படி என்று மக்களுடைய கருத்தை அரசியல் தலைவர்கள் சொல்ல வேண்டும். வாரத்தில் இத்தனை பீரியடுகள் சொல்லிக்

கொடு, இதனை, "சிலபஸ்" என்று வை என்று சொல்ல அரசியல் வாதிகளுக்கு, அரசியல் தலைவர்களுக்கு உரிமை கிடையாது. அவர்கள் அவ்வாறு சொல்வதும் நன்றாக இருக்காது.

அடுத்து, ஆங்கிலத்தைப் பற்றி சொல்லுகின்றபொழுது, நான் கூட அண்மையில் கூடிய மகாநாட்டிலும் மற்ற இடங்களிலும் சொல்லி இருக்கிறேன். மூன்றாவது வகுப்பிலே நாம் ஆங்கிலத்தைத தொடங்கி, 11-வது வகுப்பு வரை சொல்லிக் கொடுக்கிறோம். 11-வது வகுப்பை முடித்து விட்டு வெளி வருகிற மாணவர்கள், ஆங்கிலத்திலே பேசவும், எழுதவும், படிக்கவும் அறிவு பெற்றவர்களாக இருக்க வேண்டும். அந்த முறையில் அவர்களுக்குக் கற்றுத் தர வேண்டுமென்பதுதான் எங்களுடைய அவா; எங்களுடைய விருப்பம் என்று சொன்னேன். எவ்வளவு பீரியடுகள் ஒதுக்க வேண்டும்; எப்படிப்பட்ட திட்டங்களை வகுக்க வேண்டும்; முன்பு சொல்லிக் கொடுத்த அந்த இலக்கண முறையே இருக்க வேண்டுமா; அல்லது இப்பொழுது சொல்லிக் கொடுக்கின்ற அந்த இலக்கணத்தைப் படித்துக் கொண்டால் போதுமா; புரிந்து கொண்டால் போதுமா, இப்பொழுது சொல்லிக்கொடுக்கிற இலக்கணத்தின் காரணமாகத்தான் குறைபாடா என்றெல்லாம் அவர்களைக்கேட்டு எவ்வளவு பீரியடுகள் இருக்க வேண்டும்; என்னென்ன கட்டுதிட்டங்கள் இருக்க வேண்டும்; என்னென்ன சொல்லிக் கொடுக்க வேண்டுமென்று அவர்கள் சொல்ல வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். ஆக, திட்டங்களை வகுக்க வேண்டியவர்களாக அவர்கள் இருந்தாலும் என்ன வேண்டுமென்று கேட்க, இந்த மன்றத்திலே இருக்கின்ற அரசியல்வாதிகளுக்கும், மன்றத்தினருக்கும் உரிமை உண்டு. அதைச் சொல்ல வேண்டியவர்களாக நாம் இருக்கின்றோம். அந்த வகையிலேதான் தமிழிலே பாடங்களைச் சொல்லி கொடுக்க வேண்டுமென்று முதல்வர்கள் மகாநாட்டிலேயும் சொல்லிக் யிருக்கிறேன். அதற்கான முயற்சியை செய்து வருவதாக அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

அதிலேயும் கூட, கலைச் சொற்களை உருவாக்குவது எப்படி என்று நான் அங்கே கேட்டேன். அதற்கான வழியையும் சொன்னேன். ஆங்கிலத்தில் இருப்பதை அப்படியே வேண்டுமானால், தமிழிலும் போட்டுக் கொள்ளலாம். ஆக்ஸிஜன், ஹைட்ரஜன், நைட்ரஜன் இதை அப்படியே வேண்டுமானாலும் தமிழிலே ஒரு சில ஆண்டுகள் பயன்படுத்தலாம். ஆக்ஸிஜன் என்று போட்டு, "உயிர்க்காற்று" என்று அடைப்புக் குறியிலே போட்டு அப்படியே ஆக்ஸிஜன் என்ற சொல்லையே புதுமுக வகுப்பிலே சொல்லிக் கொடுத்தால், பிறகு அவர்கள் மருத்துவக் கல்லூரிக்கும், இன்ஜினீயரிங் கல்லூரிக்கும் சென்று ஆங்கிலத்திலே படிக்கத் தொடங்குகிற நேரத்திலே, ஆக்ஸிஜன் என்றால் என்ன என்று அவர்கள் புரிந்து கொள்ளுவதோடு, ஆக்ஸிஜன் என்பதற்குப் பதிலாக உயிர்க்காற்று என்று சொல்லிக்கொடுத்தால் இடர்பாடு இல்லாத ஒரு சூழ்நிலை ஏற்படுகின்ற வகையிலே அகில உலகக் கலைச் சொற்களைப் பயன்படுத்தி, "இண்டர் நேஷனல் டெர்மினாலஜி" தமிழ்ச் சொற்களை அடைப்புக் குறியிலே போட்டு நாளாவட்டத்திலே தமிழ் வளர்ந்து செம்மை பெற்றதன்பிறகு, அடைப்புக் குறியிலே போட்ட உயிர் காற்று வெளியிலே வந்த பிறகு வேண்டுமானால் உயிர்காற்று, உயிர்காற்று என்று நேராகப் போடலாம். இந்த இடர்பாட்டைப் பற்றி கவலைப்படாமல் அகில உலகக் கலைச் சொற்களைப் பயன்படுத்தலாம் என்று நான் அறிவியல் ஆசிரியர்களுக்கு எடுத்துச் சொல்லியிருக்கிறேன். மாணவர்களுக்கு எடுத்துரைக்கும் பொழுது ஒரு வாய்ப்பும் அளிக்கப்பட்டிருக்கிறது. மாணவர்களுக்கு சொல்லிக் கொடுக்கும்பொழுது, ஆங்கிலம், தமிழ் இரண்டையும் கலந்தே சொல்லிக் கொடுக்கலாம் என்றும் கூறியிருக்கிறோம். மேலும் மாணவர்கள் தேர்வுகளை தமிழிலேயும் எழுதலாம். "நான் தமிழிலேயே எழுதுகிறேன்" என்று ஒரு மாணவன் சொன்னால், தமிழிலே எழுதுவதற்கு அனுமதிக்கலாம். அதே முறையில் ஒரு மாணவன் ஆங்கிலத்தில் எழுதுவதற்கு விரும்பினால், ஆங்கிலத்தில் எழுதுவதற்கும் அனுமதிக்கலாம். இரண்டிற்கும் இடம் அளிக்கப்பட்டிருக்கிறது. மற்றொன்று. "சென்டர் ஆஃப் கிராவிடி" என்று ஒரு ஆங்கிலச் சொல்லுக்கு தமிழ் கண்டு பிடித்துத் தான் ஆக வேண்டும் என்பதல்ல. தமிழ் கண்டு பிடிக்க





முடியாமல் போனால், எழுதிக் கொண்டே வருகிற பொழுது தமிழ் தெரியாவிட்டால், "சென்டர் ஆஃப் கிராவிடி பார்த்து" என்றாவது எழுதிக் கொண்டு போகட்டும், பின்னால் வருகிறவர்கள் "சென்டர் ஆஃப் கிராவிடி" என்பதற்கு "ஈர்க்கும் ஆற்றல்" என்ற சொல்லை கண்டு பிடித்துக் கொள்ளலாம். அப்படி எழுதியதற்காக மார்க்கு குறைக்க வேண்டிய அவசியமில்லை. அவர்கள் அந்த அறிவை தெளிவாகப் புரிந்து கொண்டால் போதும் என்று தான் நான் சொல்லியிருக்கிறேன். அதை துணை வேந்தர்களும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

பல்வேறு பொது வசதிகளைப் பற்றியும், மதிய உணவு பற்றியும் பல்வேறு உறுப்பினர்கள் இங்கே எடுத்துத் தெரிவித்தார்கள். மதிய உணவு அளிப்பதை செம்மைப்படுத்தும் சூழ்நிலையிலே, அதிலே ஆசிரியர்களை ஈடுபடுத்தக்கூடாது என்பது பற்றி கூறினார்கள். அது பற்றி, கேர் நிறுவனத்தினரோடு சேர்ந்து உடன்படிக்கை செய்து கொண்டு, பூவிருந்தவல்லி வட்டாரத்தில் ஊராட்சி ஒன்றியத்தின் எல்லையில் மதிய உணவுச் சாலை ஒன்று அமைககப்பட்டு, அவர்களுடைய முயற்சி மூலமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு, ஆங்காங்கு உணவு வழங்குவதற்கான முயற்சி மிக வெற்றிகரமாக அமைந்திருக்கிறது. வேறு பல இடங்களுக்கு அத்தகைய முயற்சியை விரிவுபடுத்துவதற்கும் அவர்களிடம் கேட்டுக் கொண்டிருக்கிறோம். 375 ஊராட்சி ஒன்றிய இடங்களில் வைப்பதற்கான அளவுக்கு அவர்கள் விருப்பம் தெரிவித்திருக்கிறார்கள். இடம் கொடுக்க வேண்டியது, கூலி ஆட்கள் கொடுக்க வேண்டியது, உணவுப் பண்டங்கள் கொடுக்க வேண்டியது, கட்டடம் கட்ட வேண்டியது ஆகிய பொறுப்புக்களை நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். பயிரிடுவதற்கு வேண்டிய கருவிகள் தருவதற்கான பொறுப்பு, சமையல் செய்வதற்கு பாத்திரங்கள் வழங்குவதற்கான பொறுப்பு, உணவை வழங்குவதற்கு எடுத்துச் செல்வதற்குவேண்டிய லாரிகள் தருவதற்கான பொறுப்பு ஆகிய பொறுப்புக்களை கேர் நிறுவனத்தினர் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். நமக்கும் ஓரளவுக்கு அதிகமாகத்தான் செலவு ஏற்படுகிறது என்றாலும் கூட, வருகிற வருவாயை கணக்கிட்டுப் பார்த்தால், இன்னும் அதிகமாக இருக்கிற காரணத்தினாலும், இதிலே தொல்லைகள் ஏற்படாமல் இருக்கிற காரணத்தினாலும், இதை விரிவுபடுத்தும் முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறோம். மதிய உணவுத் திட்டம் மேற்கொண்டு துவக்கப்படுகின்ற நிலையிலே ஒவ்வொரு ஜில்லாவிலும் கணக்கிட்டு, ஒரு ஜில்லாவுக்கென்று குறிப்பிட்ட சில பல ஊராட்சி மன்றங்களைத் தேர்ந்தெடுக்கப்படுகின்ற திட்டம் கொடுக்கப்பட்டிருக்கிறது. கேர் நிறுவனத்தினர் அதை ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். அது ஆராயப்பட்டு, நடை முறைக்கு வருகிற பொழுது, ஆசிரியர்களை அதிகமாக ஈடுபடுத்துகிற நிலைமை வராது என்பதைக் குறிப்பிட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன். இப்பொழுதும் கூட ஆசிரியர்களை கட்டாயப்படுத்துகிற சூழ்நிலை எங்கும் இல்லை. ஆசிரியர்கள் தாங்களாக விரும்பி வந்து, ஒரு தொண்டு உள்ளத்தோடு ஏற்று, ஏழை நாட்டில், வேறு வசதிகள் அற்ற நாட்டில், வேலை நேரம் போக மற்ற நேரத்தில், ஒரு சில மணித்துளிகளாவது பொதுத் தொண்டில் செலவழிக்கலாம் என்ற உணர்வோடு வருகிறவர்கள்தான் இதில் ஈடுபடக்கூடியவர்கள். ஆனால், யாரும் கட்டாயப்படுத்தப்படமாட்டார்கள். ஆங்காங்கு இதற்காக ஒரு வேலை ஆளைக் கூட வைத்துக் கொள்ளலாம் என்று குறிப்பும் தரப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த அடிப்படையில் தான் மதிய உணவு வழங்கும் நிலைமைகளும், தன்மைகளும் இருக்கின்றன.

தனியார் பள்ளிகளை, தனியார் கல்லூரிகளை அரசாங்கமே ஏற்று நடத்த வேண்டுமென்று சொன்னார்கள். நான் முதலிலேயே எடுத்துச் சொல்லியிருக்கிறேன். போதுமான அளவுக்கு வசதிகள், மற்றவைகள் இருக்குமானால், அவற்றை யெல்லாம் கூட எடுத்து அரசாங்கமே ஏற்று நடத்துவதில் எந்த ஆட்சேபணையும் இருக்க முடியாது. ஆனால், வசதி குறைவான இடங்களில் யாரேனும் கல்வி நிலையங்களுக்கு, மற்றவைகளுக்கு பணம் கொடுக்க முன் வந்து, நிதி கொடுக்க முன் வந்து, ரூ. 2 லட்சம், $2\frac{1}{2}$ லட்சம் என்று கொடுக்க முன்வந்து, அதன சார்பாக இருக்கிற பெரிய செலவுகளை ஏற்றுக்கொண்டு தனியார் கல்லூரி ஆரம்பிக்க முன் வந்தால், ஆசிரியர்

களுக்கு ஊதியம், சம்பளம் தருகின்ற பொறுப்பு, அதுவும் முக்கியமாக இருக்க வேண்டிய பொறுப்பு, அந்தப் பொறுப்பை குறிப்பிட்ட அளவுக்கு மட்டும் நாம் தருகின்ற அளவுக்கு நிலைமைகள் இருக்கும் காரணத்தினால், பல கல்லூரிகள் தனியார் துறையில் வரமுடிகின்றன. இப்பொழுது இருக்கும் 116 கல்லூரிகளில் 29 கல்லூரிகள் அரசினர் துறையில் வைத்திருக்கிறோம். மற்ற கல்லூரிகள் தனியார் துறையில் இருக்கின்றன. அவைகளை அரசாங்கமே எற்றுக் கொள்ள வேண்டுமென்றால், அந்த சொத்துக்களையும் அரசாங்கமே எற்றுக் கொள்வதற்கு இப்பொழுது இருக்கிற சட்டம் இடம் தராது. வேண்டுமானால் நீங்கள் கல்லூரிகளை வைத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டு, தனியார்கள் அவர்களுடைய கட்டடங்கள், மற்ற நிலையங்கள் அத்தனையும் வேறு வகைகளிலே செலவழிக்க போய்விடுவார்கள். அத்தனையையும் எற்று நடத்துகின்ற சூழ்நிலையில் நாம் இருக்க முடியாது. எல்லா கல்லூரிகளும் முறைகேடாக நடக்கின்றன. எல்லாக் கல்லூரிகளிலும் ஆசிரியர்கள் கொடுமைப்படுத்தப்படுகிறார்கள். அவர்கள் சம்பளத்தை அங்கே இருக்கிற நிர்வாகத்தினர் எடுத்துக் கொள்கிறார்கள் என்று கூறுவதற்கில்லை. ஆனால், எங்காவது அப்படிப்பட்ட தகராறு எற்பட்டால், அங்கே கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டிய நிலையில் இருக்கிறோம். இதைப்பற்றி இப்பொழுது அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது. இப்பொழுது இருக்குகிற சட்டப்படி தனியார் கல்லூரிகளை, பள்ளிகளை நடத்த அனுமதி இருக்கிறது. அப்படி இருக்கிற சிலவற்றில் சில பல நிலைமைகள் வருமானால், முறைகேடான நிலைமைகளில் அவை நடைபெறுமானால், அதைக்கட்டுப்படுத்த, அந்த நிலையங்களை மேற்கொண்டு தனியார் நடத்தாமல் அரசாங்கமே முழுவதும் எற்றுக்கொள்வதென்றால்அதற்கு ஒரு தனிச்சட்டம் இயற்றினால்தான் அதை நடைமுறைக்குக் கொண்டு வரமுடியும். எதாவது ஒரு தனியார் பள்ளியில் அல்லது கல்லூரியில் ஒரு ஆசிரியரை விலக்கி, அந்த ஆசிரியரை சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று கல்வி அதிகாரிகள் சொல்லியும் நிர்வாகத்தினர் சேர்த்துக் கொள்ளாமல் இருப்பார்களேயானால், இந்த அரசு செய்யக்கூடிய செயலெல்லாம் அந்த பள்ளிக்கு தருகிற மான்யத்தை நிறுத்தி விடலாம். அனுமதியை நிறுத்திவிடலாம். ஆனால், ஒரு ஆசிரியருக்காக என்ன ஆகிறது நிலைமை என்றால், 27 ஆசிரியர்கள் இருந்தால், மற்ற 26 ஆசிரியர்களையும் வீட்டிற்கு போகச் சொல்லி, 500 பிள்ளைகளுக்கும் படிப்பதற்கு வாய்ப்பு இல்லாமல் செய்கின்ற ஒரு நிலைமையைத் தான் எற்படுத்தலாம் என்ற அத்தகைய ஒரு நிலைமை இன்றைக்கு இருக்கிற சட்டத்தில் இருக்கிறது. அத்தகைய நிலை இருக்கிற காரணத்தினால், நிர்வாகத்தினர்கள் பல இடங்களில் மிரட்டலாம். அரசாங்கம் போடுகின்ற உத்தரவுகளை நிறைவேற்ற முடியாத நிலைகள் இருக்கின்றன. அது பற்றி அரசு தீவிரமாக ஆலோசித்துக்கொண்டு இருக்கிறது. இதற்காக சட்டம் இயற்றுகின்ற முறைகளை ஆராயுமாறு நான் கல்வித்துறையினரைக் கேட்டுக் கொண்டிருக்கிறேன். கல்வித்துறை செயலாளரும், மற்றவர்களும் இது பற்றி ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். சுமுகமான சூழ்நிலையில், சுமுகமான அடிப்படையில், நிலைமைகளில், எந்த கட்டுப்பாட்டுக்கும் ஆளாகாமல் தனியார் பள்ளிகளை. கல்லூரிகளை நடத்தவும், அந்த முறையில் நடத்துவதற்கு நாம் முழுவாய்ப்பு அளிக்கின்ற வகையிலும், முறைகேடாக நடந்து, சட்டத்திற்கு புறம்பாக, வேறு வகையில் நடத்தப்படும் அத்தகைய நிறுவனங்களை தடுத்து நிறுத்தவும், அவைகளை அப்படியே முழுவதும் அரசாங்கமே எற்று நடத்துவதற்கான முறைகளை எற்படுத்தக்கூடிய சட்டத்தை உருவாக்க வேண்டிய முயற்சியில் இப்பொழுது கல்வித் துறையினர் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். அது மாதிரி நிலைமைகள் வந்ததற்குப் பிறகு இது பற்றி முடிவு செய்யலாம் என்று நான் கருதுகிறேன்.

மேலும் பல்வேறு உறுப்பினர்கள் சிலபல குறிப்புகளை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பி. எஸ். மணி அவர்கள் பாட புத்தகங்களிலே வருகிற ஜாதி சமயக் குறிப்புகள், இனக் குறிப்புகள் இவற்றையெல்லாம் அகற்றிவிட வேண்டும் என்று சொன்னார்கள். ஜாதி சமயக் குறிப்புகளை அகற்ற வேண்டுமென்றால், அத்தகைய பெயர்கள் பல்வேறு இடங்களில் வருகின்றன. அவைக எல்லாதி



வற்றையும் அகற்றுவது என்றால், சங்க இலக்கியங்கள், அகப்பொருள் இலக்கியங்கள் முக்கால் வாசியை நாம் நீக்கிவிட வேண்டியதாக இருக்கும். வேடுவன், வேட்டுவச்சி, புலையன், புலைச்சி, குறிஞ்சி. முல்லை, மருதம். நெய்தல், பாலை ஆகிய ஐவகை நிலங்களில் வசிப்பவர்களைப் பற்றி கூறும்' பொழுது குறிஞ்சி நிலத்தில் வசிப்போர்கள் குறவன், குறத்தி என்றெல்லாம் பல்வேறு பெயர்கள் இலக்கியங்களில் வருகின்றன.

" அங்கமெலாம் தொழுநோயராகி
ஆவுரித்துத் தின்றுழலும் புலையரனும்....... "

என்றெல்லாம் பாடப்பட்டிருக்கிறது. இந்த சொற்களையெல்லாம் நீக்குவது என்றால் சாத்தியமில்லை. இந்த சொற்கள் எந்த நோக்கத்தின் அடிப்படையில், எந்த இன்டென்ஷனில் போடப்பட்டிருக்கின்றன. ஜாதியை வளர்ப்பதற்குக் காரணமாயிருந்தால், ஜபதி வேறுபாட்டைக் குறிப்பதற்கு காரணமாக இருந்தால் அந்த வகையில் அப்படி புகுத்தப்பட்டிருக்கிறது என்பதை உடனடியாக கவனத்திற்குக் கொண்டு வந்தால், அந்த சொற்களை நீக்கிவிடலாம். ஜாதி உணர்வைத் தூண்டுகிற, கீழ் நிலைமையை உணர்த்துகிற கீழ் நிலைமையை அறிவிக்கிற நோக்கத்தோடு புகுத்தப்பட்டிருந்தால், உடனே நடவடிக்கை எடுத்து, அவற்றை நீக்கலாம். பல பெயர்கள் வருகின்றன. பல இடங்களில் அத்தகைய பேர்கள் வருகின்றன என்ற ஒரே காரணத்தினால், பெயர் வருகின்ற இடங்களில் எல்லாம், அவற்றை நீக்க ஆரம்பித்தால், ஊர் பெயர், தெருப் பெயர், இடத்தின் பெயர், கல்வி நிலையங்களின் பெயர், அற நிலையங்களின் பெயர், ஹிந்து ஹைஸ்கூல், கிரிஸ்டியன் ஹைஸ்கூல், இஸ்லாமிய கல்லூரி, போன்றவைகள் நீக்கப்பட வேண்டியிருக்கும். அப்படிச் செய்வதில் பல்வேறு இடர்ப்பாடுகள் கூட வரலாம். சில பெயர்களை அப்படித்தான் சொல்ல வேண்டிவரும். ஜி.டி. நாயுடு என்பதை வேறு வகையிலே சொல்ல முடியாது. துரைசாமி என்று சொன்னால் யாருக்கும் தெரியாது. அது போன்ற பல பேர்கள் இருக்கிறார்கள். எதற்குச் சொல்கிறேன் என்றால், அதனுடைய நோக்கம் மாண்புமிகு உறுப்பினர் கூறியதைப் போன்று அமைந்திருக்குமானால், அந்த வகையில் தக்க நடவடிக்கை எடுத்து நீக்குவதற்கு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

மாலை நேரக் கல்லூரிகள் எற்படுத்துவதுபற்றி எடுத்துத் தெரிவித்தார்கள். எங்கெங்கெல்லாம் வாய்ப்பு, வசதி இருக்கிறதோ. அங்கு எற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் தான் அரசு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. கல்லூரிகளைப் பி.
பொறுத்தவரையிலும், எடுத்துச் சொன்னார்கள், எங்கள் ஊருக்கு 2-0
வேண்டும். எங்கள் ஊருக்கு வேண்டும் என்று அப்படி ஒவ்வொரு ஊருக்கும் ஒரு கல்லூரியை அமைக்கவேண்டுமென்றால் . . .

**மாண்புமிகு திரு. பேரவைத் துணைத் தலைவர்:** இரண்டு மணிக்குமேல் அவை நடவடிக்கைகள் நடை பெற அவை அனுமதிருக்கிறது. என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** ஒவ்வொரு ஊரிலேயும் ஒரு கல்லூரி வேண்டுமானால் அதற்கு வேண்டிய கட்டிட வசதியோடும் மற்ற வசதி வாய்ப்போடும் நிம்மதியாகச் சொல்லிக் கொடுக்கும் நிலைமைகள் இருக்க வேண்டும். அப்படியிருந்தால், அதற்காக சர்க்காரிலே ரூ. 25 லட்சம் செலவழிக்கிறது. ஆகவேதான், அந்தப் பகுதியிலிருப்பவர்கள் ஐந்து லட்ச ரூபாயாவது வசூலித்துக் கொடுக்க வேண்டும் என்கிறோம். எங்கே கல்லூரி எற்படுத்துவதாக இருந்தாலும், அதற்கு பல்கலைக் கழகம் ஒப்புதல் அளிக்க வேண்டும். அப்படி ஒப்புதல் அளிக்கும் இடங்களில்தான், வாய்ப்பு வசதிகள் இருக்கும் இடங்களில் தான் ஆரம்பிக்க முடியும்.. அந்த இடங்களில் குறைந்தது ஐந்து லட்ச ரூபாயாவது வசூலித்துக் கொடுங்கள் என்று கேட்கிறோம். அந்த வகையில் தான் முன்னால் இருந்த அரசும் திட்டங்களை மேற்கொண்டது. அதே முறையைத்தான்

இந்த அரசும் அந்த முறையை வற்புறுத்தும் முறையில் செய்து வருகிறது. ஆனாலும் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். ஐந்து லட்சம் கொடுக்க வேண்டும் என்று சொல்லும் போது, அவர்கள் அப்படிக் கொடுப்பார்கள் என்று நம்பி, ஆரம்பிக்கப்பட்ட பல ஊர்களிலிருந்து பணம் முழுதும் செலுத்தாமல் இருக்கிறார்கள். அதைக் குறிப்பிட்டு ஆண்டாண்டு தோறும் மன்ற உறுப்பினர்களும் மற்றவர்களும் அதிகமான அக்கறை எடுத்து அந்தத் தொகைகளை வசூல் செய்து கொடுக்க, இந்த அரசுக்கு உதவியளிக்க வேண்டும் என்றுதான், உறுப்பினர்கள் தங்கள் ஒத்துழைப்பைக் கொடுக்க வேண்டுமென்றுதான் அதைப் பற்றி இந்த மன்றத்திலே குறிப்பிட்டுச் சொல்லுகிறேன். உதாரணத்திற்குச் சொல்லப்போனால், கிருஷ்ணகிரி கலைக் கல்லூரிக்கு ஐந்து லட்சம் கொடுக்கிறோம் என்று சொல்லி, இது வரையில் ஒரு லட்சம் தான் வந்திருக்கிறது. ஆனாலும் மேலும் கட்டடம் வேண்டும், வசதிகள் வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதே போல, கடலூர் கலைக் கல்லூரியிலும், நான்கு லட்சம் தான் வந்திருக்கிறது. இன்னும் ஒரு லட்சம் வர வேண்டும். அதே போல பிற்பட்ட பகுதிகளான இராமநாதபுரம் கல்லூரிக்கு 4,37,000 தான் வந்திருக்கிறது. பாக்கி வரவேண்டும். மதுரை பெண்கள் கல்லூரிக்கு 3,57,000 தான் வந்திருக்கிறது. அரியலூர் கல்லூரிக்கு 3,00,000 தான் வந்திருக்கிறது. வெல்லூர் கல்லூரிக்கு ரூ. 2,71,000 தான் வந்திருக்கிறது. பாக்கியெல்லாம் இனிமேல் வரவேண்டியதாக இருக்கிறது. வாக்களித்த தொகைகளைக் கொடுத்துவிட்டால் மேற்கொண்டு முயற்சிகள் செய்யலாம். கட்டடங்கள் கட்டுவது, மற்றவைகள் செய்வது போன்றவற்றிற்கு ஏற்பாடு செய்யலாம். அந்த அளவிற்கு மன்ற உறுப்பினர்கள் அக்கறை எடுத்துக்கொள்ளவேண்டும் என்றுதான் இதைச் சுட்டிக்காட்ட முற்பட்டேன். விருத்தாசலம் கல்லூரி சம்பந்தப்பட்ட வரையில் ரூ. 2,53,000 தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. அங்கேயும் கூட முழு அளவில் ஐந்து லட்சமும் வசூல் செய்யப்பட்டால் தான் மேற்கொண்டு முயற்சிகள் செய்ய வசதியாக இருக்கும். அங்கே, மாவட்ட ஆட்சித் தலைவரும் முயற்சிகள் மேற்கொண்டிருக்கிறார்கள். அதோடுகூட, அங்கேயுள்ள கொளஞ்சியப்பர் தேவஸ்தானத்திலிருந்து, அறநிலையப் பாதுகாப்புத் துறைக்கும் அமைச்சர் என்ற முறையில், அந்த நிதியிலிருந்தும் எடுத்துச் செய்யலாமா என்பதும் என் பரிசீலனையில் இருந்து வருகிறது. கொடுத்திருக்கும் தொகைகள் குறைவாக இருந்தாலும், பெற வேண்டிய வசதிகள் அதிகமாக இருக்கின்றன என்பதை உறுப்பினர்கள் மனதில் கொண்டு, சற்று அக்கறை எடுக்க வேண்டும். கல்லூரி என்றால், ஆய்வுக் கூடங்கள், மற்ற கட்டடங்கள் இவைகளெல்லாம் வேண்டும் என்று சொல்லுகிறார்கள். வாக்களிக்கப்பட்ட தொகைகள் வராததால் மேற்கொண்டு காரியங்கள் செய்வதில் தயக்கம் இருக்கிறது. விருத்தாசலம் கல்லூரிக்கு ரூ. 2,53,000 தான் வந்திருக்கிறது. அதே மாதிரிதான், திருவண்ணாமலையிலிருந்து ஒரு லட்சம் தான் வந்திருக்கிறது ஆனாலும் கூட பி. ஏ. வகுப்புக்கு முயற்சி செய்ய வேண்டும் என்றால், உறுப்பினர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நியாயம், நேர்மை வேண்டாமா, சமத்துவமான சூழ்நிலை எல்லாக் கல்லூரிகளிலும் இருக்க வேண்டாமா ? ஏற்கனவே ஐந்து லட்சம் கொடுத்தவர்கள் ஏமாந்தவர்கள் என்ற பெயருக்கு ஆளாகாமல் இருக்க வேண்டாமா ? ஆகவேதான் இதைக் குறிப்பிடுகிறேன். தர்மபுரியிலிருந்து ஒரு லட்சம் வந்திருக்கிறது. அதே போல, ஐந்து லட்சம் தருகிறோம் என்று சொன்ன மாயவரத்திலிருந்தும் இரண்டு லட்சம் இருக்கிறது என்று சொல்லிய போதிலும் 60,000 ரூபாய் தான் தந்திருக்கிறார்கள். மேற்கொண்டு கொடுக்க வேண்டும் என்று வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம். அப்படி கொடுக்கவில்லை என்றால் பி. யு. ஸி. யோடு நிற்கும். மேலே போகாது என்றும் தெரிவித்திருக்கிறோம். திண்டுக்கல்லிலிருந்து 47,000 தான் வந்திருக்கிறது. திருப்பூரிலிருந்து ரூ. 1,10,000 தந்திருக்கிறார்கள். அங்குள்ள அதிபர்களைச் சந்தித்த போது "உங்களால் கொடுக்க முடியும்" கொடுங்கள், என்று சொல்லியிருக்கிறேன். "கல்லூரி வருவது உங்களுக்குச் சிறப்பு" . என்றும் சொல்லியிருக்கிறேன். செய்யாற்றில், நமது தலைவர் (துணைப் பேரவைத்





தலைவர்) முயன்றதன் பேரில், மாவட்ட தலைமை அதிகாரி முயற்சியின் பேரிலும், ஐந்து லட்சம் சேர்த்துக் கொடுத்த பிறகு கட்டடம் கட்டித் தந்திருக்கிறார்கள், கல்லூரி அமைக்கப்பட்டு, பி. ஏ. வகுப்பிற்கும் வசதி செய்யப்பட்டிருக்கிறது. அப்படி முயன்று செய்து தரும் சூழ்நிலையை உருவாக்கவேதான், இனிமேல் வரும் கல்லூரிகளுக்கு திட்டவட்டமாக ஐந்து லட்சம் ரூபாய் சேர்த்துக் கொடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். அப்படிக் கொடுத்தால், மேலும் 20 லட்சம் சர்க்கார் செலவழிக்கிறது. அப்படிப்பட்ட இடங்களுக்கு முதல் சலுகை கொடுப்பது வசதியாக இருக்கிறது. அப்படிப்பட்ட இடங்களில் கல்லூரிகளை செம்மையுடையனவாகச் செய்ய வசதியாக இருக்கும்.

இன்னும் ஒரே ஒரு கருத்தை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். கல்வி நிலையங்களைப் பொறுத்த வரையில், 1965–66-ஆம் ஆண்டு 132 பள்ளிகள் துவங்கப்பட்டன. சென்ற ஆண்டு, அதாவது 1967–68-ம் ஆண்டு 68 பள்ளிகள் தான் துவங்கப்பட்டன. இதை எதற்காகச் சொல்லுகிறேன் என்றால், எண்ணிக்கையை மட்டும் கணக்கிட்டால் முடியாது. ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்ட பள்ளிகள் சிலவற்றில், மூன்று வகுப்புகளில் 40 மாணவர்கள் இருக்க வேண்டும் என்றாலும், 8, 7, அல்லது 10 மாணவர்களை வைத்துக் கொண்டு சில பல உயர்நிலைப் பள்ளிகளை நடத்தவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. ஆகவே, மாணவர்களுடைய எண்ணிக்கையை உயர்த்தினோம், பக்கத்திலே வேறொரு பள்ளியிருந்தால், ஆறு கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறது என்றால், 68 பள்ளிகள்தானே துவக்கப்பட்டன என்றால், 1965–66-ல் துவக்கப்பட்ட 132 பள்ளிகளில் 9-வது படிவத்திற்கு மேல் 11-வது வகுப்பு வரை கொடுக்க வேண்டிய கடப்பாடு இந்த அரசுக்கு இருக்கிறது. இந்த ஆண்டு 10-வது வகுப்புவரை உள்ள பள்ளிகளுக்கும், அடுத்த ஆண்டில் 11-வது வகுப்புக் கொடுக்க வேண்டிய கடப்பாடும் இருக்கிறது. அப்படிக் கொடுக்கின்ற நேரத்தில், 6 கோடி செலவழிப்பதில் எவ்வளவு செய்ய முடியும் ? ஆகவே, அதிகப்பணம் கிடைத்தால் அதிகமான பள்ளிகளைத் துவக்க வசதியாக இருக்கும்.

தனிக்கட்டணம் வாங்குவது பற்றி, எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், மற்றைய உறுப்பினர்களும் குறிப்பிட்டார்கள். அகில இந்திய காங்கிரஸ் தலைவராக இருந்த உயர்திரு காமராஜர் அவர்களும் குறிப்பிட்டிருப்பதாகப் பத்திரிக்கையில் வந்தது. இருக்கின்ற நிலைமைகளைப் பற்றி இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். இதிலே ஒரு தவறான கருத்து மக்களிடத்தில் பரவியிருக்கிறது. ஸ்பெஷல் ஃபீஸ், தனிக்கட்டணம் பற்றி விதி 1950-வது ஆண்டில் விதிக்கப்பட்டிருக்கிறது. அதே முறைதான் இன்றளவும் கடைப்பிடிக்கப்படுகிறது. எந்த மாறுதலும் இந்த அரசு புதிதாக ஏற்படுத்திவிட வில்லை. 1950-வது ஆண்டில் விதிக்கப்பட்ட முறைதான் இன்றைக்கும் இருக்கிறது. பள்ளிகளிலே ஸ்பெஷல் ஃபீஸ் வழங்கலாம் என்று 1950-ல் விதி போடப்பட்டிருக்கிறது. எந்தெந்த வகைகளுக்கு தனிக்கட்டணம் என்று விரிவாக்கப்பட்டிருக்கிறது : சேர்வு கட்டணம், அட்மிஷன் ஃபீஸ், நான்காவது படிவம் முதல், ஆறாவது படிவம் வரை இவ்வளவு என்று, அன்றைக்கு இருந்த முறையில், கொடுக்கப்பட்டிருக்கிறது. இது இடை நிலைப் பள்ளிக்கும் , உயர் நிலைப்பள்ளிக்கும் தனித்தனியாக வகுக்கப்பட்டிருக்கிறது : சேர்வுகட்டணம் இடைநிலைப் பள்ளிக்கும் எட்டு அணா, உயர் நிலைப் பள்ளிக்கும் எட்டு அணா நூல் நிலையத்திற்கு, லைப்ரரி ஃபீஸ், $1\frac{1}{2}$ ரூபாயும், 2, ரூபாயும் மாணவர் மன்றக் கட்டணம், இடைநிலைப் பள்ளிக்கு $1\frac{1}{2}$ ரூபாய் உயர் நிலைப் பள்ளிக்கு ரூ. 2. அதே போன்று, விளையாட்டுக் கட்டணம் இடைநிலைப் பள்ளிக்கு ரூ. 2. உயர் நிலைப் பள்ளிக்கு ரூ. 3 ; சயன்ஸ் ஃபீஸ், அறிவியல் என்று இடைநிலைப் பள்ளிக்கு ஒன்றுமில்லை, உயர் நிலைப் பள்ளிக்கு ரூ. 1 ; மெடிகல் இன்ஸ்பெக்ஷன் ஃபீஸ், இடைநிலைப் பள்ளிக்கு 12 அணா, உயர் நிலைப் பள்ளிக்கும் 12 அணா ; ஆடியோ விஷுவல் எஜுகேஷன், திரைப்படக் கட்டணம் என்றவகையில்

இடைநிலைப் பள்ளிக்கு ரூ. 1, உயர் நிலைப் பள்ளிக்கு ரூபாய் 2 பொழுது போக்கு கைவினை தொழில் கட்டணம், இடைநிலைப் பள்ளிக்கு ரூ. 1, உயர் நிலைப் பள்ளிக்கு ரூ. 1 இன்னும் சுற்றுலா, சாரணர் கட்டணம் இடைநிலைப் பள்ளிக்கு ரூ. 1-ம், உயர் நிலைப்பள்ளிக்கு ரூ. 2-ம், தேர்வுக் கட்டணம் இடைநிலைப்பள்ளிக்கு ரூ. 1½, உயர் நிலைப் பள்ளிக்கு ரூ. 2. ஆகிய இத்தனைக் கட்டணங்களையும் சேர்த்து, இடைநிலைப்பள்ளியில் மொத்தம் ரூ. 10–12–0 என்றும். உயர் நிலைப் பள்ளியில் ரூ. 16–4–0 என்றும் வசூலிக்கலாம் என்று அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. இதிலே, சிலபல பள்ளிக் கூடங்களில், சிலவற்றை வசூலிப்பதில்லை; ஆகவே தான் சில பள்ளிகளில் 3, 4 ரூபாய் என்றும், மற்றவைகளில் கூடவும் குறைந்தும் வசூலிக்கின்ற நிலைமைகள் இருக்கின்றன. ஒரு பள்ளியில் லைப்ரெரி பீஸ் வசூலிக்காமல் இருக்கலாம். இன்னொரு பள்ளியில் மற்றைய பீஸ்கள் வசூலிக்காமல் இருக்கலாம். அப்படி சிலபல கட்டணங்களை வசூலிக்காமல் இருப்பதால், சிலபல பள்ளிகளில் 7, 8 ரூபாயும், இன்னும் சில வற்றில் ரூ. 15 அளவிற்கும் வருகிறது. எந்த இடத்தில் நாம் நடவடிக்கை எடுக்கலாம் என்றால், 16¼ ரூபாய்க்கு மேல் எதாவது தனிக் கட்டணம், எந்த உயர் நிலைப் பள்ளியிலாவது விதித்தால், அப்படி விதிப்பவர்கள் மீது நாம் நடவடிக்கை எடுத்துத் தடுக்க உரிமை உண்டு. அப்படிப்பட்ட நிலைமைகள் இல்லை. அதே போன்று, தனிக் கட்டணமாக பத்தே முக்கால் ரூபாய்க்கு மேல் எந்த இடை நிலைப் பள்ளியிலாவது வசூலித்தால் நாம் அதைத்தடுக்கலாம். நடவடிக்கையும் எடுக்கலாம். ஒரு குறிப்பிட்ட வகைக்காக என்று சொல்லி வசூலித்துவிட்டு, அந்தக் குறிப்பிட்ட வகைக்குச் செலவழிக்காமல், இருந்திருப்பர்களானால், உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் "விளையாட்டுக் கட்டணம்" என்று வசூலித்துவிட்டு, விளையாட்டுக்காகச் செலவிடாமல், நிறுத்தி வைத்துக் கொண்டு வேறு வகையில் செலவழிக்கக் கூடிய சூழ்நிலை இருக்குமானால், அதைச் சுட்டிக்காட்டி அவர்களமீது நடவடிக்கை எடுப்பதற்கான வகைகளை ஏற்படுத்தமுடியும். அது தான் நிலை. கட்டணத்தை எந்த வகையிலும் உயர்த்தலாம், சில இடங்களில் மூன்று ரூபாய், நான்கு ரூபாய், ஐந்து ரூபாய் என்று அவரவர்கள் விருப்பப்படி ஏற்படுத்தியிருக்கிறார்கள், என்ற எண்ணம் இருக்கிறது. அந்தத் தவறான எண்ணத்தைப் போக்குவதற்காகத் தான் குறிப்பிட்ட அளவுக்கு மேல் யாராவது வசூலித்தால் தடுக்க வேண்டும், நன்கொடை வசூலித்தால் என்ன செய்ய வேண்டும் என்பதற்கான சில முறைகளை வகுத்திருக்கிறோம். டைரக்டர் அனுமதி இல்லாமல் வசூலிக்கக் கூடாது, மாணவர்கள் மூலமாக வசூலிக்கக் கூடாது, ஆசிரியர்கள் யாரையும் ஈடுபடுத்தக் கூடாது, தனியார்க் குழுதான் வசூலிக்க வேண்டும், மூன்று தடவை தான் வசூலிக்க வேண்டும், பள்ளி துவங்கி இரண்டு மாதங்களுக் குள்ளாக வசூலிக்கக் கூடாது, பரீட்சைக்கு முன் ஒரு மாதத்திற்கு வசூலிக்கக் கூடாது என்ற அளவுக் கெல்லாம் முறைகள் வகுத்திருக்கிறோம். அந்த அளவுக்கு நிறைவேற்றப்படுகிறதா என்பது தான் முக்கியம் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் கூறக்கூடும். அந்த முறைகளை மீறி நடந்தால் அதைத் தடுத்து நிறுத்துவதில் கவனம் செலுத்துவதோடு, ஆங்காங்கே நாம் சட்டப்படி நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம். அதற்காகத் தான் விதிமுறைகளெல்லாம் வகுக்கப்பட்டிருக்கின்றன.

அந்த முறையில் எடுத்துச் சொல்லும்போது, தனிக் கட்டணம் விதிப்பது பற்றி அகில இந்தியக் காங்கிரஸ் தலைவராக இருந்த உயர்திரு காமராஜ் அவர்கள் கூட குறிப்பிட்டிருக்கிறார்கள். "எதாவது –ஸ்பெஷலாகப் பள்ளிக்கூட வளர்ச்சிக்குக் கட்டணம் வேண்டுமென்றால், அதாரிடேடிவ்வாக சட்ட முறைப்படி, மற்றவர்களையும் கலந்து கொண்டு ஒரு முறை வகுப்பது நல்லது. அப்படி முறை ஏற்படுத்திக் கொண்டு வசூலிப்பதில் தவறு இல்லை. ஙங்கள் இஷ்டப்படி வசூலிக்கக்கூடிய முறை தவறு" என்று குறிப்பிட் டிருக்கிறார்கள். இஷ்டப்படி யாராவது வசூலித்தால், உயர்நிலைப் பள்ளியில் 16¼ ரூபாய்க்கு மேல் யாராவது வசூலித்தால் அதைத் தடுப்பதற்கும், குறிப்பிட்ட வகைகளுக்காக வசூலித்து, அதை





அந்த வகைகளுக்குச் செலவழிக்காமல் இருந்து, வேறு வகைகளில் செலவழித்தால், அதைத் தடுக்க வகை உண்டு. ஆனால், தனியார்ப் பள்ளிகளில், பள்ளி வசதிக்குத் தனிக் கட்டணம் விதிக்க வேண்டும், ஐந்து ரூபாய், பத்து ரூபாய் என்ற கட்டணம் விதிக்க வேண்டும் என்று சிலர் சொல்கிறார்கள். மேலவை உறுப்பினர் ஒருவர், "குரு தட்சிணை ஒரு ரூபாய் போட வேண்டும்" என்று தொடர்ந்து சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், இதை யெல்லாம் கன்ஸல்டேடிவ் கமிட்டியைக் கலந்து, ஆய்வுக் குழுவில் வைத்து எதாவது செய்யலாம், பலன் ஏற்படுமானால் ஆராய்ந்து இவைகளில் முடிவு எடுக்கலாம் என்று கருதிக்கொண்டிருக்கிறேன். கல்வி நிபுணர்கள் அடங்கிய, பல்வேறு வகைகளில் ஆலோசனை சொல்லக் கூடியவர்களைக் கொண்ட அட்வைசரி கமிட்டி என்ற அளவில், ஆலோசனைக் குழுவும், சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள், மேலவை உறுப்பினர்கள் ஆகியவர்களில் சிலரைக் கொண்ட ஆய்வுக் குழு ஒன்றும் இந்தக் கல்வித் துறையைப் பொறுத்த வரை அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது. விரைவில் , அடுத்த கல்வி ஆண்டிற்குள்ளாகப், போடப்பட்டு, பல்வேறு பிரச்சினைகளைப்பற்றி ஆராய்ந்து முடிவு எடுக்கலாம் என்று கருதிக் கொண்டிருக்கிறேன்.

மேலும் பல்வேறு பிரச்சினைகள் பற்றிச் சொல்லப்பட்டிருக்கின்றன. அடிக்கடி உப கேள்விகள் கேட்கும்போது கூட அதற்கு விடை இறுக்க முடியும். மன்ற உறுப்பினர்கள் பலரும் எடுத்துச் சொன்ன கருத்துக்களுக்கேற்றபடி அந்த இலாகாவினர் தக்க நடவடிக்கைகளை எடுத்து, குற்றங்களை நீக்கவும், குறைபாடுகளைப் போக்கவும், நிறைபாடுகளை நிறைவு செய்யவும், கல்வித் துறை மேலும் மேலும் வளருவதற்கு எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ளுவார்கள். அந்த வகையில் மன்ற உறுப்பினர்களின் முழு ஒத்துழைப்பும் ஆதரவும் என்றென்றும் இருக்கும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. நமக்கு இருக்கும் பிரச்சினை, ஒதுக்கப்பட்ட பணமே போதாது என்பது தான். ஆகவே, ஒதுக்கப்பட்ட பணத்தையும வெட்டுங்கள் என்று சொல்லுவது அவ்வளவு பொருத்தமாக இருக்காது. வெட்ட வேண்டும் என்று கேட்காமல், மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தரும்படியாக, வெட்டுப் பிரேரணைகளைக் கொண்டு வந்த உறுப்பினர்கள் அத்தனை பேரையும் நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

"உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே."

என்று அந்தக் காலத்து நெடுஞ்செழியன் பாடி வைத்தான்.

"உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே"

என்று தான், கற்பவர்களுக்குச் சொன்னான். இப்பொழுது நம்முடைய நினைக்கேற்றபடி,

"உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்பித்தல் நன்றே."

என்று மாறவேண்டிய கட்டம் இருக்கிறது. ஆகவே, உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுக்க வேண்டிய நிலை இருக்கும் காரணத்தால், இந்த 56,92,90,200 ரூபாயை நீங்கள் ஒதுக்கித் தந்து, இந்தத் துறை மேலும் வளர்ச்சி யுறுவதற்கு உறுதுணை புரிவீர்கள் என்ற நம்பிக்கையோடு, அந்த நம்பிக்கையை பலரும் தெரிவித்து இருக்கும் காரணத்தால், இந்தத் துறை மேலும் வளர்ந்து, சிறப்புற விரிவான முயற்சிகள் மேற்கொள்ள முடியும்.

ஒரே ஒரு கருத்தை மட்டும் கூறி, உரையை முடிக்க விரும்புகிறேன். அது பொறியியற் கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்த்துக்கொள்வது பற்றியது 30 சதவீதம் எண்ணிக்கையை குறைக்க வேண்டும் என்று இந்தியக் கல்வி அமைச்சர் கூறியிருக்கிறார் என்ற கருத்தை எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் தெரிவித்தார்கள். ஆனால்

30 சத வீதம் குறைத்துக்கொள்வது என்பது ஐந்தாண்டுகளுக்குப் பிறகு வருகிற சூழ்நிலையைப் பொருத்துத்தான். இன்றைக்கிருக்கும் நிலைமையில், இன்ஜினீயர்கள் அதிகம் தேவை என்ற சூழ்நிலை ஏற்படுமா என்பதையும் ஓரளவு அவர்கள் பார்க்கவேண்டும். இருக்கும் நிலையை உடனடியாகக் கவனிக்கும்போது, 260 இடங்களை மட்டும் நாம் குறைத்துக்கொள்ளக் கூடும். பி.எஸ். ஸி. படித்தவர்கள் இன்ஜினீயரிங் கல்லூரியில் சேர்ந்து மூன்று வருடங்கள் படிக்கக்கூடிய முறை இருக்கிறது. அந்த வகையில் உள்ள 260 இடங்களை வேண்டுமானுல் நிறுத்திவிடலாம் என்ற முடிவுக்கு வந்து, 2,400 சில்லரை இடங்களில், மேற்கண்ட வகையில் 200 சில்லரை இடங்களை எடுத்துவிட்டால், மீதம் 2,200 சில்லரை இடங்கள் இருக்கக்கூடும் ஆகவே, மூன்று ஆண்டுப் பயிற்சி என்ற வகையில் இருப்பதை நிறுத்திவிட்டு, அந்த 260 இடங்களை வேண்டுமானுல் குறைத்துக்கொள்ளலாம். மேலும் சில இடங்களில் நெருக்கடி இருந்தால், அதையும் குறைக்கலாம். ஆனுல், ஒரேயடியாக 30 சத வீதம் குறைத்தால், பின்னுல் என்ன ஏற்படும் என்று நமக்குத் தெரியாத காரணத்தால், திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் எடுத்துச் சொல்லியதைப் போல், அந்த நிலைக்கு இந்த அரசு செல்லவில்லை. ஆனுல், ஓரளவுக்கு இப்படிப்பட்ட இன்றியமையாத நிலையில், 260 இடங்களைக் குறைப்பதற்கு இந்த அரசு ஒப்புக்கொண்டிருக்கிறது என்பதைக் கூறி இந்த மானியக் கோரிக்கையை இந்த அவை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

**திரு. கே. பி. எஸ். மணி :** பாயிண்ட் ஆஃப் பர்ஸனல் எக்ஸ்ப்ளனேஷன் சார், அமைச்சர் அவர்கள் பேசும்போது, சங்க இலக்கியங்களில் வருகின்ற, பள்ளன், பள்ளச்சி, பறையன், பறைச்சி, குறவன், குறத்தி, புலையன், புலைச்சி ஆகிய இந்தச் சொற்களை எடுத்துவிட்டால், சங்க இலக்கியங்கள் அழிந்துவிடும் என்று சொன்னுர்கள். இராமாயணத்தில், "ஆரியற்கு" என்ற பதத்தை "அந்தணர்க்கு" என்று மாற்றக்கூடிய முயற்சி அமைச்சருக்குத் தெரியும். அதற்கு ஆதாரமாக, மதிப்பிற்குரிய, காலஞ்சென்ற பாரதிதாசன் அவர்கள்,

"தெருவில் நின்று கத்துகின்ருன் தெ.பொ.மீ."

என்று கவிதை வைத்துப் பாடினுர்கள். இப்படி அவர்கள் மாற்றும்போது, அப்படி இருக்கத்தான் வேண்டும் என்ற நிலைமை வந்தால், இன்னென்றையும் அரசு செய்வார்களா ? அதாவது, புராணங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு சக்கிலியனுக்கும் ஒரு பிராம்மணப் பெண்ணுக்கும் பிறந்த ஆபுத்திரன் கதை சரித்திரச் சான்றுக்கு ஆதாரமாக வருகிறது. அந்தச் சம்பவத்தைக் குறிப்பிடும்போது, பிராம்மணர்களைப் பற்றியும், பிராம்மணர் தெருக்கள் எப்படி இருந்தன என்பதைப் பற்றியும், பிராம்மணர்கள் எப்படி வாழ்ந்தார்கள் என்பதைப் பற்றியும் எழுதியிருக்கிருர்களே, அதை இந்தப் பாடப் புத்தகங்களில் வைப்பதற்கு இந்த அரசாங்கம் யோசிக்குமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, நான் முதலில் குறிப்பிட்டபடி, ஒரு நோக்கத்தோடு அதைப் புகுத்தி, மாறுபாட்டையோ வேறுபாட்டையோ உணர்த்தக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டால், அதைத் தடுத்து நிறுத்தலாம். இலக்கியங்களில் வருகிறது என்ருல், ஏற்கெனவே இருந்த வரலாறுகளை இப்பொழுது மாற்றமுடியாது. வேண்டுமானுல், அவற்றைப் பயன்படுத்தாமல் இருக்கலாம். இப்பொழுதுகூட, யாரும் பயன்படுத்துவது இல்லை. அதன் காரணமாக ஒரு நிலைமை ஏற்பட்டு, எல்லோரையும் பாதிக்கும் நிலை இருந்தால், அப்போது கூட நாம் தடுத்து நிறுத்தலாம்.

அஞ்சிலே யொன்று பெற்ரு னஞ்சிலே யொன்றைத் தாவி
அஞ்சிலே யொன்ரு ருக வாரியற் காக வேகி
அஞ்சிலே யொன்று பெற்ற வணங்குகண் டயலா ரூரில்
அஞ்சிலே யொன்றைவைத்தா னவனெம்மை யளித்துக்காப்பான.





என்பதை உறுப்பினர் அவர்கள் தான் நினைவுபடுத்தினுரே தவிர, அவர் நினைவுபடுத்தியிராவிட்டால், மற்றவர் யாருக்கும் அந்த நினைவு வந்திருக்காது. ஆகவே, ஒரு நிலைமையை உண்டாக்கி, நாட்டிலே குழப்பத்தை ஏற்படுத்தும், வேறுபாட்டை ஏற்படுத்தும் என்று சூழ்நிலை இருந்தால், அப்பொழுது வேண்டுமானுல், "அந்தப் பாடலைக் கொஞ்சம் பயன்படுத்தாமல் இருங்கள்" என்று கேட்டுக்கொள்ளலாம். அப்படிப்பட்ட நிலைமை இப்பொழுது இல்லை. யாரும் அந்த அளவில் இருப்பதாக ஏற்றுக்கொள்ளவும் இல்லை. அந்த அளவில் பயன்படுத்துவதாகவும் இல்லை. ஆகவே, நோக்கம் தான் முக்கியம். தவருன நோக்கத்தோடு எங்காவது கூறப்பட்டிருந்தால், அதைத் தடுக்கலாம். ஆபுத்திரன் பற்றிச் சொன்னுர்கள். ஆபுத்திரன் போன்ற கதை உண்மை என்று சொல்லுகிருர்கள்; இல்லை என்றும் சொல்லுகிருர்கள். சர்ச்சைக்குரியதாக இருக்கிறது. ஆதலால், விளைவு என்ன என்பதைத் தான் பார்க்கவேண்டும்.

கணைகொடிது யாழ்கோடு செவ்விதாங் கன்ன
வினைபடு பாலாற் கொளல்.

என்ருர் வள்ளுவர். கணை பார்ப்பதற்கு அழகாக இருக்குமென்ருலும், பார்த்தவுடனே அதை அப்படியே ஏற்றுக்கொள்ள முடியாது. யாழ், கறுப்பாக பார்ப்பதற்கு அசிங்கமாக இருக்கும். அதிலிருந்து வருகிற பலன், நல்ல இசை, வள்ளுவர் கூறிய, வினைபடு செயலைப் பொறுத்து எந்த ஆபத்தும் ஏற்படுத்தாத காரணத்தால் அது பற்றிக் கவலைப்படவேண்டியதில்லை.

DR. H. V. HANDE : With regard to special fees, I want a clarification. According to the Minister, the special fees allowed to be collected is Rs. 16·25 and 10·12. There is a feeling outside that formerly the full amount was not collected, only about one-fourth or so was collected, but that now the full amount is collected. Is it a fact ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, நான் அதை முன்பே குறிப்பிட்டுச் சொன்னேன். சில வகை தனிக் கட்டணத்தைச் சில பள்ளிக்கூடங்களில் வசூலிப்பதில்லை. எந்த எந்த வகைக்குச் செலவிடவேண்டுமோ, அந்தந்த வகைக்கு வசூலிப்பதன் காரணமாக, மூன்று ரூபாய், நான்கு ரூபாய் என்று சில இடங்களில் வசூலிக்கிருர்கள். ஆனுல், $16\frac{1}{4}$ ரூபாய்க்கு மேலாக வசூலித்திருப்பார்களானுல், அதுபற்றிக் கவனத்திற்குக் கொண்டுவரப்படுமானுல், அந்த இடத்தில் நடவடிக்கை எடுத்து செலவழிக்கப்படாத தொகையைத் திருப்பித் தரக்கூட நாம் முயற்சி செய்யலாம். குறிப்பாக, எதற்காக வசூலித்தார்களோ, அதை அதற்குச் செலவிடாமல் வைத்திருந்தால், அதைத் திரும்பப் பெறலாம். குறிப்பிட்ட வகைக்குச் செலவழிப்பது நியாயமாக இருக்கும்.

**திரு கே. விநயகம் :** தலைவர் அவர்களே, கல்லூரியிலே தமிழ் போதன மொழியாக இருக்கவேண்டும் என்று சொல்லப்படுகிறது. ஆர்ட்ஸிலே, சயின்ஸ்ஸிலே, மெடிகல் துறையிலே உள்ள ஆங்கிலச் சொற்களை எல்லாம் எடுத்துவிட்டு, நாம் கண்டுபிடித்த தமிழ்ச் சொற்களைப் போட்டு படித்து வந்து, சுமார் 200 ஆண்டுகளுக்குப் பின்னுல் இந்தத் துறைகளிலே எல்லாம் சேர்ந்து படித்து தேர்வு அடைகிறவர்கள் எல்லாம் ஏதாவது ஒரு இண்டர் நேஷனல் கான்ஃபிரன்ஸிலே சேருகிருர்கள் என்று வைத்துக்கொள்வோம். இப்பொழுது தமிழ்நாட்டில் படித்த மாணவர்கள், ஆந்திர நாட்டில் படித்தவர்கள், கன்னட நாட்டில் படித்தவர்கள், கேரளாவில் படித்தவர்கள், அதே போல குஜராத்தில் படித்தவர்கள் இவர்கள் எல்லாம் இந்தியாவிலே ஒரு மாநாட்டில் கூடி தங்கள் தங்கள் மாநில மொழியிலே பேசினுல் ஒருவரும் ஒன்றையும் புரிந்து கொள்ளமுடியாது. அது போல தமிழ்நாட்டு மாணவர்களும்சான்பிரான்சிஸ்

[திரு. கே. விநாயகம்] [1968 மார்ச் 7

கோவிலே, லாஸ் என்ஜெல்ஸிலே நடக்கும் இண்டர் நேஷனல் கான்ஃபிரன்ஸிலே கலந்து கொண்டால் அந்த இண்டர்நேஷனல் கான்சியில் உள்ள—வழக்கிலுள்ள சொற்களை உபயோகப்படுத்தமுடியாத தொல்லை ஏற்படும் அல்லவா ? அதற்கு இந்த அரசாங்கம் என்ன செய்யப்போகிறது ? அகில உலகத் தொடர்புக்கு என்ன செய்யப்போகிறது?

அடுத்து, அண்மையிலே கண்ணகிக்குச் சிலை வைப்பதற்காக மாணவர்களிடம் எல்லாம் நன்கொடை வசூலிக்கப்பட்டது. நன்கொடை வசூலிக்க கல்வித்துறை டைரக்டர் பர்மிஷன் கொடுத்தாரா ? இது சரியாகச் செலவு செய்யப்பட்டதா ? அல்லது "ஸலோவோ மோட்டோ" முறையில் மாணவர்களும் ஆசிரியர்களும் சேர்ந்து செய்தார்களா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு உறுப்பினர் அகில உலகத்தோடு தொடர்பு கொள்ள, அகில உலகத்தோடு வாணிபம் செய்ய ஒரு பொதுமொழி தேவை என்று குறிப்பிடுகிறார். இந்த நோக்கத்தைக் கருத்தில் கொண்டே இந்த அரசு மூன்றாவது வகுப்பிலிருந்தே ஆங்கிலத்தைக் கற்றுத் தருகிறது. (ஆரவாரம்). ஆங்கில மொழியிலே உள்ள பாடங்கள் தமிழிலே வரவேண்டும், "ஆங்கில மொழி அறிவு அகில உலகத் தொடர்புக்காக இருக்கவேண்டும்" என்று நமது முதலமைச்சர் அவர்களும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு எந்த அளவிற்குப் பாடங்களைக் கற்றுத் தரவேண்டும் என்பதை நாம் உணர வேண்டும். இப்போது கூட வெளிநாட்டிலிருந்து வருகின்றவர்கள் ஆங்கில மொழியின் உதவி கொண்டு தான் தொடர்பு கொள்கிறார்கள். இந்தியாவிலே கூட பயிலுகின்றவர்களிடையே, பதினான்கு மொழிகளை தேசிய மொழிகளாகக் கொண்டிருக்கக்கூடியவர்களிடையே கலந்து உரையாட "லிங்க் லாங்குவேஜ்" ஒரு பொது மொழி வேண்டுமென்றால் அது ஆங்கிலமாகத்தான் இருக்க முடியும். இருக்கவேண்டும். அந்த வகையில்தான் இந்த மாநிலத்தில் ஆங்கிலத்திற்கு ஆக்கம் தரப்படுகிறது. தமிழ்நாட்டில் உள்ளவர்களோடு பழகுவதற்கு ஒரு மொழி, தமிழறியாத மற்ற பகுதியினரோடு தொடர்பு கொள்ள வேறொரு மொழி என்ற அளவில்தான் தமிழ், ஆங்கிலம் என்ற இரண்டு மொழிகளைத் தேர்ந்தெடுத்திருக்கிறோம். உலகத்தோடு தொடர்பு கொள்கின்ற ஆங்கில மொழியறிவு பெற்றுவிட்டால், அந்த மொழியின் உதவியாலேயே இந்தியாவின் எந்தப் பகுதிகளோடும் தொடர்பு கொள்ளலாம். "பெரிய பூனை போகும் துளையில் குட்டிப் பூனையும் போகுமே" பெரிய பூனைக்கென்று ஒரு துளையும், குட்டிப் பூனைக்கென்று மற்றொரு துளையும் இருக்கவேண்டிய அவசியம் இல்லையே ? ஆகவே, நமக்கு இரண்டு மொழிகள் போதும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். இப்பொழுது ஜப்பானிலிருந்து, ரஷ்யாவிலிருந்து இன்னும் பல நாடுகளிலிருந்து கலைஞர்களும் மற்றவர்களும் "டிரேட் ஃபேரில்" கலந்து கொண்டார்கள். அவர்களோடு எந்த முறையில் தொடர்பு கொள்வது என்றால், இரு மொழித் திட்டத்தில் ஒன்றான ஆங்கில அறிவு இருந்தால் போதும், ஆங்கிலம் உலகத் தொடர்பு மொழியாக விளங்குவதால் எந்த நாட்டினரோடும் தொடர்பு கொள்ள வசதியாக இருக்கிறது என்பதை மீண்டும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, கண்ணகிக்கு சிலை வைத்ததைப் பற்றிக் குறிப்பட்டார்கள். கண்ணகி சிலை அமைக்க கல்வித் துறை டைரக்டரின் அனுமதியின் பேரில் தான் மாணவர்களிடம் நன்கொடை வசூலிக்கப்பட்டது. நானே அமைச்சர் என்ற முறையில் என்னுடைய கையெழுத்தை கொட்டை எழுத்துக்களில் போட்டு வேண்டுகோள் விடுத்திருக்கிறேன். நன்கொடை வசூலிப்பதில் கட்டாயம் இல்லை என்பதை நானே எழுதியிருக்கிறேன். மேலும் நன்கொடை வசூலிப்பு பற்றிய கணக்குகள் எல்லாம் என்னிடத்தில் கொண்டுவரப்படவேண்டுமென்று டைரக்டரிடம் கூறியிருக்கிறேன். அதுவும் முறைப்படுத்தப்பட்டு தான் வருகிறது. கல்வித் துறை இயக்குநர் கொடுத்த வரவு செலவு லிஸ்ட் என்னிடத்தில் இருக்கிறது. விவரம் எல்லாம் என்னிடத்தில் இருக்கின்றன.



1968 மார்ச் 7]

**திரு. எ. பாலசுப்பிரமணியன்:** தலைவர் அவர்களே, பள்ளிகளில் வசூலிக்கும் தனிக் கட்டணத்தைப் பற்றி அமைச்சர் அவர்கள் விளக்கினார்கள். பல்வேறு வகைகளில் நன்கொடை வசூல்கள் நடைபெறுகின்றன. "ஃபூவர் ரிலீஃப் பண்ட்" என்று கட்டணம் வசூலிக்கிறார்கள். பணம் கொண்டுவரவில்லையென்றால் பிள்ளைகளை வெளியே நிறுத்தித் தண்டிக்கும் அக்கிரமம் நடைபெறுகிறது. இம்மாதிரியான பழக்கங்கள் இன்னும் இருக்கின்றன என்பதை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** முன்பே நான் குறிப்பிட்டபடி, இம்மாதிரியான பழக்கங்களைத் தடுத்து நிறுத்த பல்வேறு முறைகளை மேற்கொள்ளவேண்டும். ஆங்காங்கு இருக்கின்ற "பெற்றோர்கள் சங்கம்", "பொது நல சேவா சங்கம்" போன்றவைகள் அவ்வப்பொழுது தகவல் கொடுத்தால் அதுபற்றி தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும்—என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன.

**திரு. கோ. பூவராகன் :** கல்வியமைச்சர் அவர்கள் விருத்தாசலம் கல்லூரியைப் பற்றிக் குறிப்பிட்டதால் இரண்டொரு வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இதற்கு $2\frac{1}{2}$ லட்சம் ரூபாய் அங்குள்ள பொதுமக்கள் வசூல் செய்து அளித்திருக்கிறார்கள். பாக்கித் தொகையை தங்கள்—பொறுப்பிலே கொடுப்பதாக கொளஞ்சியப்பர் கல்லூரி ஏற்பட, பழமலை நாதர் தேவஸ்தானம் சொல்லியிருக்கிறது. அது சம்பந்தமாக தேவஸ்தான காரியதரிசி அவர்களும் கல்வி அமைச்சர் அவர்களைக் கலந்து பேசியிருக்கிறார். இந்த ஆண்டு காலம் குறுகிவிட்டதால் அடுத்த கல்வி ஆண்டிலாவது பட்டப்படிப்புக்கு வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, 6 புதுக் கல்லூரிகள் ஏற்படுத்தப்பட இருக்கின்றன என்று அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. பல்கலைக் கழகம் எந்தெந்த இடங்களில் கல்லூரிகளை ஆரம்பிக்க அனுமதி கொடுத்திருக்கிறது ? அரசாங்கம் எந்தெந்த இடங்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மூன்றாவதாக, சிறுபான்மை மொழி பேசுகின்றவர்களின் குழந்தைகள் தங்களுடைய தாய்மொழியிலேயே கல்வி பயில வழி செய்யப்பட்டிருக்கிறதா ? அவர்களுக்கு இருமொழித் திட்டமா? அல்லது மூன்று மொழி உண்டா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** விருத்தாசலத்தைப் பற்றி நானே குறிப்பிட்டேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் குறிப்பிட்டார்கள். ஆறு புது கல்லூரிகளை பொறுத்தவரையில் பல்கலைகழகத்திற்கு அக்டோபர் மாதத்திற்கு முன்னமேயே விண்ணப்பித்திருக்க வேண்டும். நாம் விண்ணப்பிக்கின்ற அளவுக்கு நிதி வசதிகளைச் செய்வதற்கும், மற்ற வசதிகளைச் செய்வதற்கும் அறிக்கை தயாரிக்கப்படுகிறது. இன்னின்ன இடத்தில் கல்லூரிகள் அமையலாம் என்பதை பல்கலை கழகம், ஆங்காங்கு இருக்கின்ற நிபந்தனைகள், வேண்டுகோள்கள் இவற்றைப் பொறுத்து நிர்ணயம் செய்யவேண்டும். தென் ஆர்க்காடு மாவட்டத்திலும், சேலம் மாவட்டத்திலும் மற்றும் சில மாவட்டங்களிலும் சேர்த்து 6 பிற்பட்ட மாவட்டங்களில் கல்லூரிகள் அமைக்க வேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது. மாவட்டங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றனவே தவிர இன்னின்ன இடம் என்று குறிப்பிடப்படவில்லை. இந்த 6 கல்லூரிகளையும் துவக்க யார் முன் வந்தாலும், யார் உதவி செய்தாலும் ஏற்றுக்கொள்ளப்படும் என்ற அளவில் சொல்லப்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டில் 2 கல்லூரிகளைத் திறக்கும்படியான சூழ்நிலை இருந்தது. வசதியும் வாய்ப்பும் உள்ள இடமாக அமைந்து, பல்கலைக் கழகம் அனுமதி வழங்கினால், கல்லூரிகள் திறக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து சிறுபான்மையினரின் கல்வி வசதி பற்றி குறிப்பிடப்பட்டது. இப்போதுகூட சிறுபான்மையினருக்குக் கல்வி அளிக்கும் பள்ளிக்கூடங்கள் எல்லாம் அப்படியே தான் இருக்கின்றன. அப்படியே தான் காப்பாற்றப்படுகின்றன. இந்தியைத் தாய்மொழியாகக் கொண்ட இரண்டு பள்ளிகளில்

இந்தியைச் சொல்லிக்கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இந்தியை தாய்மொழியாகக் கொண்டவர்களுக்குப் படிக்க வாய்ப்பளிக்கப்பட்டிருக்கிறது. 6 முதல் 11-வது வகுப்பு வரையில் தாங்களே விரும்பிப் படிக்கும் மாணவர்களுக்கு சம்ஸ்கிருதம், உருது, கன்னடம் முதலிய மொழிகளை ஆங்கிலத்தோடு கற்றுத் தர வசதிகள் ஆராயப்பட்டு வருகின்றன. அதற்கான சலுகைகளைச் செய்யவும், வழிவகைகளைக் காணவும் வேண்டிய முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு வருகின்றன.

**திரு. என். வரதரானன் :** தலைவர் அவர்களே, வைத்தியக் கல்லூரிகளின் அட்மிஷனில் இருக்கிற குறைபாடுகளை நிவர்த்திக்க அரசாங்கம் என்ன நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** பொதுப்படையான கேள்வி தான். எந்தெந்தக் கல்லூரிகளில் என்ன என்ன குறைகள் இருக்கின்றன என்று சொன்னால், அவற்றைக் களைய முயற்சி செய்யலாம் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இத்துடன் விவாதம் முடிவுற்றது. மாண்புமிகு உறுப்பினர்கள் கொண்டுவந்த வெட்டுத் தீர்மானங்களை வாக்கெடுப்புக்கு விடவேண்டும். வெட்டுத் தீர்மானங்களைக் கொண்டு வந்து முன் மொழிந்த உறுப்பினர்கள் தீர்மானங்களை வற்புறுத்துகிறார்களா, அல்லது திரும்பப் பெற்றுக்கொள்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**Dr. H. V. HANDE :** Sir, I withdraw my cut motion.

**திரு என். வரதராஜன் :** வற்புறுத்தவில்லை.

**திரு. சோ. அழகர்சாமி :** வற்புறுத்தவில்லை.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** வற்புறுத்தவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இந்த நான்கு வெட்டுத் தீர்மானங்களும் வற்புறுத்தப்படவில்லை.

**Thiru K. VINAYAKAM:** Sir, now all the cut motions which have been given notice of, should be disposed of , . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** முன்மொழியப்பட்ட வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டன.

அடுத்து பேரவை முன்னுள்ள கேள்வி—

"கோரிக்கை எண் 13—கல்வி என்ற தலைப்பின்கீழ் ரூ. 56,92,90,200-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்.

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுறுகின்றன. மீண்டும் பேரவை நாளை காலை 9 மணியளவில் கூடும்.

பிற்பகல் 2–30 பின்னர் பேரவை ஒத்தி வைக்கப்பட்டது.



3. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

## A. Statutory Rules and Orders.

†89. Notification issued with G.O. Ms. No. 2305, Local Administration, dated the 13th December 1967 appointing the fourteenth day of December 1967, as the date on which the Madras District Municipalities (Second Amendment) Act, 1967 shall come into force. [*Laid on the Table of the House under section* 304 (*d*) *of the Madras District Municipalities Act,* 1920 (*Madras Act V of* 1920)].

90. Notification issued with G.O. Ms. No. 2857, Home, dated the 16th October 1967, exempting from payment of motor vehicles tax, in respect of Ambulance van gifted to the Society for the Prevention of Cruelty to Animals, Madras. [*Laid on the Table of the House under section* 11 (2) *of the Madras Motor Vehicles Taxation Act,* 1931 (*Madras Act III of* 1931).]

91. Notification issued with G.O. Ms. No. 4344, Home, dated the 22nd December 1966, exempting from payment of tax to certain vehicles belonging to the UNICEF and assigned to the Directorate of Rural Development, Madras. [*Laid on the Table of the House under section* 11 (2) *of the Madras Motor Vehicles Taxation Act,* 1931 (*Madras Act III of* 1931).]

92. Notification issued with G.O. Ms. No. 2369, Home, dated the 25th August 1967, exempting from payment of tax, to certain vehicles belonging to the United Nations Development Programme, Ground Water Investigation Project, Madras. [*Laid on the Table of the House under section* 11 (2) *of the Madras Motor Vehicles Taxation Act,* 1931 (*Madras Act III of* 1931).]

93. Notification issued with G. O. R. No. 5114, Home, dated the 26th October 1967 exempting from payment of tax, to jeep truck used by CARE, Madras, for purpose of testing its durability. [*Laid on the Table of the House under section* 11 (2) *of the Madras Motor Vehicles Taxation Act,* 1931 (*Madras Act III of* 1931).]

94. Notification issued with G.O.Ms. No. 2165, Home, dated the 5th August 1967, exempting from payment of tax, in Goods Vehicle KLT 8427, gifted to the Archdiocese of Trivandrum. [*Laid on the Table of the House under section* 11 (2) *of the Madras Motor Vehicles Taxation Act,* 1931 (*Madras Act III of* 1931).]

## B. Reports, Notifications and Other Papers.

@ 30. Note on Demand XIII—Education (English and Tamil).

† Laid on the table of the House on the 6th March 1968.

@ Despatched to Members on 6th March 1968.

[1968 மார்ச் 7

## இணைப்பு I

[10-ம் பக்கத்திலுள்ள 164-ம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவின் விடையைக் காண்க.]

திரைப்பட மாளிகை உரிமையாளர்கள் போலி நுழைவுச் சீட்டுகளை விற்பதன் மூலம் கேளிக்கை வரி செலுத்தாமல் ஏய்ப்பதைத் தடுப்பதற்காக அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் :—

(1) வாணிக வரித்துறை அதிகாரிகள், வருவாய்த்துறை, போலீஸ் துறைகளைச் சேர்ந்த அதிகாரிகள், குறிப்பிட்ட உள்ளாட்சி மன்றங்களில் இதற்கெனத் தனி அதிகாரம் பெற்றுள்ள நிர்வாகச் சிறப்பு அதிகாரிகள் சிலர்—ஆகியோர் திரைப்பட மாளிகைகளுக்கு இயன்ற வரையில் அடிக்கடியும் முன்னறிவிப்பு இன்றியும் சென்று பார்வையிடுதல்.

(2) 1939-ம் ஆண்டு தமிழகக் கேளிக்கை வரிச் சட்டத்தின்கீழ் வரி செலுத்தாமல் ஏய்ப்பதைக் கண்டுபிடிக்க உதவியாகத் தகவல் அளிக்கிற தனிப்பட்டோருக்கும், வாணிக வரித்துறை ஏவலர்களுக்கும் பரிசுகள் வழங்குதல்.

(3) தனிப்பட்டவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படுவது குறித்து திரைப்பட மாளிகைத் திரையில் அறிவிப்புகள் காட்டுதல்.

(4) தமிழக அரசுச் சின்னத்தை மையத்தில் கொண்ட முக்கோண வடிவுள்ள, ஒரு புதிய உலோக முத்திரையைக் கேளிக்கை வரி அதிகாரிகள் பயன்படுத்தல்.

(5) நுழைவுச் சீட்டுகளில் முத்திரையிடுவதற்காக, அஞ்சல்-தந்தித் துறையினர் பயன்படுத்துவதைப் போன்று முத்திரையிடுவதற்கான தனிமையையும் உலோக மையொற்றியையும் செங்கற்பட்டு மாவட்டத்தில் முதற்கண் முன்னோடி முறையில் பயன்படுத்தல்.

(6) 1939-ம் ஆண்டு தமிழகக் கேளிக்கை வரிகள் சட்டத்தில் கீழ்க் கண்டவற்றிற்கு வகை செய்யப்பட்டுள்ளது :—

(அ) கேளிக்கைகளுக்கு அனுமதிக்கப்படுவதற்காகக் கொடுக்கப்படுகிற கட்டணங்கள் மீது மேற்படி சட்டத்தின் 4, 4-ஏ பிரிவுகளின்கீழ்ச் செலுத்த வேண்டிய கேளிக்கை வரி செலுத்தப்படாமல் ஏய்க்கப்படும் நேர்வுகளில் எவ்வளவு கேளிக்கை வரித்தொகை செலுத்தப்பட வேண்டும் என்பதை வரி விதிப்பு அதிகாரி தனக்குத் தகுதியெனத் தோன்றும் வகையில் மதிப்பிடுதல்.

(ஆ) அபராதத் தொகையை மேற்படி சட்டத்தின்கீழ்ச் சேரவேண்டிய தொகையாக வசூலித்தல்.

(இ) மேற்படி சட்டத்தின்கீழ் ஒரு குற்றம் புரிபவருக்கு விதிக்கப்படும் தண்டனையே அக் குற்றம் புரிவதற்கு உடந்தையாக இருந்தவருக்கும் விதிக்கப்படுதல்.

(7) கீழ்க்கண்டவற்றிற்காக 1955-ம் ஆண்டு தமிழகத் திரைப்படக் காட்சிகள் (விதிமுறைகள்) சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது :—

(அ) 1939-ம் ஆண்டு தமிழகக் கேளிக்கை வரிச்சட்டத்தின் கீழ் ஒரு குற்றத்திற்காக ஒருவர் தண்டிக்கப்பட்டிருந்து, அவர் தண்டிக்கப்பட்டதிலிருந்து இரண்டாண்டுகள் முடிந்திருந்தாலன்றி மற்றபடி, அவருக்கு உரிமம் வழங்காதிருப்பது ;

(ஆ) 1939-ம் ஆண்டு தமிழகக் கேளிக்கை வரிச் சட்டத்தின் 14-வது பிரிவின்கீழ் ஒரு குற்றத்திற்காகத் தண்டிக்கப்பட்டுள்ள ஓர் உரிமைதாரரது உரிமத்தின் செல்திறனை நீக்கிவிடுதல் அல்லது நிறுத்தி வைத்தல்.



1968 மார்ச் 7]

Steps taken by the Government to prevent evasion of entertainment tax by cinema theatre owners by sale of bogus tickets :—

(1) Inspection of the cinema theatres as frequently as possible and by surprise, by officers of Commercial Taxes department as well as Revenue and Police departments and certain special executive authorities of the local authorities concerned who have been authorised in this behalf.

(2) Grant of rewards to the peons of the Commercial Taxes department and to private persons whose information leads to detection of evasion of tax under the Madras Entertainments Tax Act, 1939

(3) Exhibition of slides in the cinema theatres regarding the grant of rewards to private individuals.

(4) Use of a new triangular metal seal with the Madras State emblem in the centre of the triangle by Entertainments Tax Officers.

(5) Use of special stamping ink and metal pad as used in Posts and Telegraphs department for sealing the tickets, as an experimental measure in the Chingleput district in the first instance.

(6) Provision has been made in the Madras Entertainments Tax Act, 1939, for—

(a) assessment of escaped payments for admission to entertainment, under sections 4 and 4-A of the Act, by best of judgment method:

(b) recovery of penalty as tax due under the Act; and

(c) punishment of abettor of any offence under the Act with the punishment provided for the offence.

(7) Provision has been made in the Madras Cinema (Regulations) Act, 1955—

(a) for non-issue of licence to a person, who has been convicted of an offence under the Madras Entertainments Tax Act, 1939, unless a period of two years has elapsed since his conviction; and

(b) for revocation or suspension of licence where the holder of a licence has been convicted of an offence under section 14 of the Madras Entertainments Tax Act, 1939.

## இணைப்பு II.

[17-ம் பக்கத்திலுள்ள 165-ம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவின் விடையைக் காண்க.]

கடந்த ஆண்டு 1966-67 ஆண்டில் விவசாயிகளுக்கு தவணை முறையில டிராக்டர்கள் கீழே கண்டுள்ளபடி மாவட்ட வாரியாக வழங்கபபட்டுள்ளது:—

| | மாவட்டம். | எண். |
|---|---|---|
| 1 | செங்கல்பட்டு | 45 |
| 2 | தென் ஆர்க்காடு | 25 |
| 3 | வட ஆர்க்காடு | 17 |
| 4 | தஞ்சாவூர் | 35 |
| 5 | திருச்சிராப்பள்ளி | 8 |
| 6 | மதுரை | 9 |
| 7 | இராமநாதபுரம் | 13 |
| 8 | திருநெல்வேலி | 9 |
| 9 | சேலம் | 5 |
| 10 | தருமபுரி | 1 |
| 11 | கோயம்புத்தூர் | 41 |
| 12 | நீலகிரி | .. |
| 13 | கன்னியாகுமரி | 1 |
| | மொத்தம் | 209 |

# தமிழக சட்டப் பேரவை

---

### வெள்ளிக்கிழமை, 1968 மார்ச் 8.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. சி. பா. ஆதித்தனார் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : வினா எண் 168. இதற்கான விடையை நேற்றே மாண்புமிகு அமைச்சரவர்கள் அளித்துவிட்டார்கள். அதன்மேல் இப்பொழுது துணை வினாக்கள் கேட்கலாம்.

THIRU K. VINAYAKAM: The Union Minister-in-charge of Public Health has been propagating that growth of population can be checked by many methods and that sterilisation is one of them. He has also stated that such of those who undergo sterilisation will be presented with a transistor set. Even if the Madras Government had not put it into operation, are the Central Government doing sterilisation and have they presented any transistor set as they have been promising?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா** : கட்டாய அறுவை சிகிச்சை செய்யவேண்டுமென்று யாதொரு கோரிக்கையும் வரவில்லை. இந்த அரசாங்கம் யாதொரு முடிவு செய்யவேண்டுமென்ற அவசியமும் இல்லை. மத்திய சர்க்கார் ட்ரான்சிஸ்டர் கொடுக்கப்போவதாக பத்திரிக்கையில்தான் செய்தி வந்ததே தவிர வேறொன்றும் வரவில்லை.

**திரு. க. கோமதி சங்கர தீட்சிதர்** : இப்போது கையாளப்பட்டு வரும் குடும்பக்கட்டுப்பாடு முறை நன்கு பயன்பட்டுவருகின்றதா? கட்டாயக் குடும்பக்கட்டுப்பாடு முறையைவிட எளிதில் நல்லமுறையில் பயன் அளிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா** : இப்போதுள்ளதே பயன்தருகிற முறையாக இருப்பதால் கட்டாயக் கருத்தடை வேண்டுமென்று அரசாங்கம் கருதவில்லை.

**திரு. என். எஸ். வி. சித்தன்** : பேரவைத் தலைவர் அவர்களே, கருத்தடை செய்துகொள்பவர்களை அழைத்து வருகின்றவர்களுக்கு கமிஷன் கொடுக்கப்படுகின்றது. அந்தக் கமிஷனுக்கு ஆசைப்பட்டு திருமணமாகாதவர்களையும், வயதானவர்களையும், அழைத்து வந்து கருத்தடை செய்வதாக சொல்லப்படுகிறது. ஆகையால், அப்படிப் பட்ட இடைத் தரகர் முறையை எடுத்துவிட வேண்டுமென்று மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா** : இந்த இடைத தரகர் முறை பயன் அளித்திருப்பதாக அரசாங்கம் கருதுகிறது மற்ற மாநிலங்களிலெல்லாம் இந்த முறை பயன்படுத்தப்பட்டு வருகிறது. அப்படிப்பட்ட புகார்களுக்கெல்லாம் இடமில்லாமல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே, கருத்தடை செய்கின்ற நேரத்தில் கணவன் கருத்தடை செய்துகொள்ள வேண்டுமானுல் மனைவியினுடைய கையொப்பம் பெற்ருல்தான் அனுமதிக்கப்படுகிறது. அப்படியில்லாமல் கணவன் தாளுகக் கருத்தடைச் செய்துகொள்வதற்கு விதிவிலக்கு உருவாக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அதுபோன்ற யோசனை ஆலோசிக்கப்படலாம்.

THIRU R. PONNAPPA NADAR : Is there any proposal for legalising abortion ?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : There is no proposal at present.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** தலைவர் அவர்களே, கருத்தடை மிகவும் அவசியமானதுதான் கட்டாயம் இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னுர்கள். கட்டாயமாக இருக்க வேண்டும் என்பதை அரசாங்கம் உணருகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அரசாங்கம் கட்டாயக் கருத்தடை வேண்டுமென்று சொல்லவில்லை. அவர்களாக விரும்பினுல் கருத்தடை செய்துகொள்ளலாம் என்று சொல்லுகிறது.

**ஹாஜி ம. மு. பீர் முஹம்மது :** இந்த நாட்டிலே ஆழ்ந்த சமயப்பற்றுள்ள இஸ்லாமியர்களும், கிறிஸ்தவர்களும், பௌத்தர்களும், ஜெயினர்களும் கருத்தடையைக் கொண்டுவருவது மனுஷ்ய தர்மத்திற்கு விரோதமானது என்று சொல்லுகிருர்கள். அந்த அடிப்படையில் மத்திய அரசு உத்தரவு பிறப்பிக்குமானுல் அதை இந்த அரசு மறுதளிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** கட்டாயக் கருத்தடை பிரச்சினைக்கு இடம் இல்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, may I know what exactly is the meaning of 'family planning'? Is it only stopping production of children or is it regulating the economic position of families ?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : Both, Sir.

**திரு. ந. தருமலிங்கம் :** மக்கள் மெய் தீண்டல் உடற்கின்பம் மற்று அவர் சொற்கேட்டல் இன்பம் செவிக்கு என்ற வள்ளுவர் குறளுக்கு விரோதமாக கருத்தடைத் திட்டம் இருப்பதால் அதைக் கண்டிக்கிருேம் என்ற வகையில் தமிழ்ப்புலவர் ஒருவர் ஒரு பத்திரிகையில் கட்டுரை எழுதியிருக்கிருரே, அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அது தமிழ்ப் புலவருடைய கருத்து, அதுவே கனம் உறுப்பினர் அவர்களுடைய கருத்து போலும்.

**திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :** குஷ்டரோக நோயால் கஷ்டப்படுகிறவர்கள் கட்டாயமாக கருத்தடை செய்துகொள்ளவேண்டுமென்று அரசாங்கம் உத்தரவு பிறப்பிக்குமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** குஷ்டரோகிகளுககும் கருத்தடைக்கும் சம்பந்தம் இல்லை. குஷ்டரோகிகளுக்கும் பிறக்கும் குழந்தைகள் குஷ்டரோகிகளாக இருப்பார்கள் என்பது கிடையாது.





**திரு. அ. லெ. சுப்பிரமணியம் :** கருத்தடை முறையில் வாசக்டமி ஆபரேஷன் செய்தால் அது பர்மனென்டாக வருகிறது. ஆண்கள் ஆண்மையை இழந்து அவர்களுக்கு இன்பீரியாரிடி காம்ப்லக்ஸ் ஏற்பட்டுவிடுகிறது. ஆகையால் தேவைப்படுகிற நேரத்தில் டெம்பரரியாக வாசக்டமி ஆபரேஷன் செய்து கொள்வதற்கு ஏற்பாடு செய்ய முடியுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** கனம் உறுப்பினர் அவர்கள் வழக்கறிஞர், டெம்பரரி மேரேஜ் என்பது அவர்களுக்குத் தெரியும். அதுபோல் டெம்பரரி வாசக்டமி வேண்டுமென்று கேட்கிருர்கள். அதுமாதிரி இப்போது ஒன்றும் இல்லை.

**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** ஒன்றுக்கு மேற்பட்ட மனைவிமார் உள்ளவர்களுக்காவது கட்டாயக் கருத்தடை செய்துகொள்ளவேண்டுமென்று உத்தரவு பிறப்பிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** ஒருவருக்கு ஒரு மனைவிக்குமேல் இருப்பது சட்டப்படி குற்றம். ஆகையால் அந்தக் கேள்விக்கே இடமில்லை.

61433

**திரு. மு. சின்னசாமி :** தமிழகத்திலே குடும்பக்கட்டுப்பாடு திட்டம் பெருகியதால் மக்கள் எண்ணிக்கை குறைந்து அதன் காரணமாக நாடாளு மன்றத்தில் உறுப்பினர்களின் எண்ணிக்கை உரண்டு குறைந்துவிட்டது தமிழக அரசு இஸ்ந்ஸ் இடத்தை மீண்டும் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** கனம் உறுப்பினர் சொல்லுகின்ற கருத்து நிலவி வருகின்றது. மத்திய அரசாங்கத்திடமும் அதை எடுத்துச் சொல்லியிருக்கிருேம்.

**திரு. எம். சுரேந்திரன் :** சில தேசங்களில் குடும்பக்கட்டுப்பாடு செய்வதும் உண்டு, சில தேசங்களில் குடும்பத்தை அபிவிருத்தி செய்வதும் உண்டு. நம்முடைய தேசத்தில் இருக்கக்கூடிய செல்வ நிலையைப்பொறுத்து குடும்பக்கட்டுப்பாட்டை அதிகப்படுத்துவதற்கு கருச்சிதைவு செய்வதற்கு உத்தரவு வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இப்போதுள்ள கருத்தடைதான் சிறந்தது என்று இந்த அரசாங்கம் கருதுகிறது. கருச்சிதைவை சிறந்தது என்று அரசாங்கம் கருதவில்லை.

**திரு. மு. ச. சிவசாமி :** சென்னை நகரில் கட்டாயப்படுத்தி கருத்தடை வளையத்தைப் பொருத்தியதாக தமிழக அரசுக்குக் குற்றச்சாட்டு வந்ததா ? அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** கருத்தடை வளையங்கள் பற்றி கனம் உறுப்பினர் எடுத்துக்கொண்ட அக்கறைக்கு மகிழ்ச்சி. ஆயிரக்கணக்கானவர்களுக்கு மேல் கருத்தடை வளையங்கள் பொருத்தப்பட்டிருக்கிறது. யாரோ ஒருவருக்குத்தான் குறை ஏற்பட்டது என்ற தகவல் வந்து அது பரிசீலனைசெய்து நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. வை. சுவாமிநாதன் :** தமிழ்நாட்டில் எத்தனைபேர்கள் வாசக்டமி ஆபரேஷன் செய்துகொண்டிருக்கிருர்கள்? எத்தனை பேர்கள் லூப் முறையை அனுசரித்து வருக்கிருர்கள் என்று சொல்ல முடியுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** விவரக் குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போடவேண்டும்.

**திரு. ஹாஜி ம. மு. பீர். முஹம்மது :** பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் கர்ப்பத்தடை ஆப்ப ரேஷன்கள் விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருக்கிற ஹரிஜன மக்களுக்கு அதிகமாகச் செய்திருக்கிறார்கள். இதனால் வருங்கால விவசாயத் தொழில் என்ன ஆவது ? விவசாயத் தொழிலாளர்கள் அருகி வரக்கூடிய பேராபத்தைத் தடுக்க அரசு உடனடியாக இதைத் தடைசெய்யுமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இந்த அரசு யாரையும் கருத்தடை செய்துகொள்ள வேண்டுமென்று கட்டுப்படுத்தவில்லை. மாண்புமிகு உறுப்பினர் கூட அவரது தந்தைக்கு 33-வது பிள்ளை என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளுகிறேன். (சிரிப்பு).

**திரு. கு. கிருஷ்ணமூர்த்தி :** குடும்பம இல்லாத பிச்சைக்காரர்களும் சந்நியாசிகளும் கருததடை செய்யப்படுவது தெரியுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** பழனியில் வேண்டு மானால் சந்நியாசிகள் அதிகம இருக்கலாம்.

**திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் :** இந்தக் கருத்தடை ஆப்பரேஷன் மூலம் பலர் இறந்துபோகும் நிலைமை ஏற்படுகிறது. ஆகவே இனி ஒழுங்காக ஆபத்து இல்லாமல் இருப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை இந்த அரசாங்கம் எடுத்துக்கொள்ளுமா என்று கேட்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே . சாதிக் பாட்சா :** கனம் உறுப்பினர் குறிப்பிடுவதுபோல இறந்ததாகச் சொல்வது சரியல்ல. பரவாகச் செய்யப்படுகிறபோது நூற்றுக்கு ஒன்றிரண்டு தவறிவிடக்கூடும்.

**திரு. பெ. மலேச்சாமி :** கருத்தடை இயக்கத்திற்கு அமர்த்தப் படுகிற தரகர்கள் எந்த எந்தத் தகுதிகளை அடிப்படையாக வைத்து அமர்த்தப்படுகிறார்கள் ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அவர்கள் கருத்தடை செய்து கொண்டிருக்க வேண்டும். அவர்கள் மக்களை அணுகுவதில், இத்திட்டத்திற்கு அவர்களை இணங்க வைப்பதில் திறமை படைத்தவர்களாக இருக்க வேண்டும். யார் வேண்டுமானாலும் இருக்கலாம்.

**திரு. இல. பலராமன் :** கருச்சிதைவை சட்டப்பூர்வமாக தடுக்க வேண்டியதில்லை என்ற எண்ணம் இருப்பதனால் அதை நீக்க இந்த அரசு முயற்சிக்குமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** கருச்சிதைவை ஏற்படுத்த இந்த அரசாங்கம் ஒப்புக்கொள்ளவில்லை.

**திரு. ஜெ. பெள்ளி கௌடர் :** கருத்தடை செய்துகொள்வதற்கு மக்கள் தாங்களாகவே முன்வந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் கிரமப்பகுதிகளில் இதுபற்றிய நன்மைகள் சரியான முறையில் எடுத்துச் சொல்லப்படாத காரணத்தினால், பெரிய குடும்பமாக இல்லாது ஒன்றிரண்டு குழந்தைகளை உடைய குடும்பம் எவ்வளவு வசதியாக வாழ்கிறது என்பதை எடுத்து விளக்கும் வகையில் படம் ஒன்றை தயாரித்து, எடுத்து வெளியிட இந்த அரசு முயற்சி செய்யுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இந்த நல்ல பிரசாரத்தை கனம் உறுப்பினர் அவர்களும் செய்யலாம்.



**திரு. எஸ். அக்னிராஜு :** குடும்பக்கட்டுப்பாட்டுத் திட்டத்தை நடத்து வதில் நம் மாநிலம் இந்தியாவில் உள்ள மாநிலங்களிலேயே எத்தனையாவது வரிசையில் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** 1966–67-ல் நம் மாநிலம் பரிசு பெற்றிருக்கிறது. 1967–68 இலும் இந்தத் திட்டத்தில் நல்ல வெற்றியைக் கண்டிருக்கிறது. 1968–69 இல் நாம் முதலா வதாக இருக்கக்கூடும். ஆயினும் முதலிடத்தைப் பெறுவதில் மகாராஷ்டிரம் முந்திக் கொண்டிருக்கிறது.

**திரு. ப. மகாதேவன் :** இப்போது கருத்தடை செய்வதற்கு பெண்களுக்கு லூப் பொருத்தப்படுகிறது. ஆண்களுக்கு வாசக்டமி ஆப்பரேஷன் செய்கிறார்கள். லூப் பொருத்தப்பட்ட பெண்கள் சிலருக்கு குழந்தைகள் பிறந்திருக்கின்றன. ஆகவே இப்படி லூப் பொருத்தப்பட்ட பெண்களுக்குக் குழந்தை பிறந்தால் அந்தக் குழந்தையை அரசாங்கமே எடுத்துக் கொள்வதோடு, அந்த டாக்டர் அந்தப் பெண்ணுக்கு 100 ரூபாய் கொடுக்க வேண்டும் என்கிற முறையில் ஏற்பாடு செய்வார்களா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அதுபற்றிய தகவல் இப்போது என்னிடத்தில் இல்லை.

**திரு. சு. துரைசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, தொத்து நோய் உடையவர்களுக்கு குழந்தைகள் பிறக்காமல் இருக்க கண்டிப்பாக அவர்கள் கருத்தடை செய்யப்படுவார்களா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** யாரையும் கட்டாயப்படுத்துகிற நிலை இப்போது இல்லை.

**திரு. கே. என். குமாரசாமி :** கருத்தடை செய்வது பாவச் செயல் என்கிறார்களே, ஆஸ்திகர்கள், அதுபற்றி இந்த அரசாங்கத்தின் அபிப்பிராயம் என்ன ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** பாவச் செயலை எப்போதும் செய்யாது அரசாங்கம்.

**திரு. மு. இரத்தினசபாபதி :** இப்போது கருத்தடை நிலையங்களை ஊராட்சி ப்ரைமரி ஹெல்த் சென்டர்களில் ஏற்படுத்தி வருகிறார்கள். இருந்தும் சில இடங்களில் ஏற்படுத்தப்படாத காரணத்தினால் ஐம்பது அறுபது மைல்கள் ஜீப்புகளில் ஏற்றிக்கொண்டு போய் அந்த நிலையத்தில் ஆப்பரேஷன் செய்து திரும்பக் கொண்டு வந்து அன்றைக்கே விடுவதனால் அவர்களுடைய உடல் நலம் பாதிக்கப்படுகிறது. ஆகவே இனி அங்கங்கே உள்ள ஊராட்சி ப்ரைமரி ஹெல்த் சென்டர் களிலேயே ஏற்படுத்த முன் வருவார்களா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** ஏற்கனவே மாவட்ட மருத்துவ மனைகளில்தான் செய்யப்பட்டு வந்தது. அதற்குப் பிறகு தாலூக்கா தலைமை ஆஸ்பத்திரிகளில் செய்யப்பட்டு வந்தது. இப்போது ஒவ்வொரு ப்ரைமரி ஹெல்த் சென்டர்களிலும் ஏற்படுத்தப் பட்டு வருகிறது.

**திரு. கே. விநாயகம் :** மக்கள் தொகை பெருகக் கூடாது. அதற்கு வேண்டிய உபாயங்களைச் செய்தாக வேண்டும். இதில் எந்த எந்த முறைகள் வெற்றிகரமாக இருக்கின்றன ? எந்த எந்த முறை நம்முடைய குறிக்கோளுக்கு விரோதமாக தவறி விடுகிறது ? கருத்தடை செய்வதனால் இன்றைக்கு ஒவ்வொரு குடும்பத்திலும் தகராறு வருகிறதே? அப்படித் தகராறு வருகிற போது அதற்குக் காரணமே இந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு தான் என்று பெண்கள் செல்வதை இந்த அரசு அறியுமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** திரு. விநாயகம் அவர்கள் இப்படிச் சொந்த அனுபவங்களை எல்லாம் சட்டமன்றத்தில் வந்து கூறுவது முறை அல்ல. (சிரிப்பு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வி 169 தள்ளி வைக்கப் படுகிறது. கேள்வி 170-க்கு மாண்புமிகு கல்வி தொழில் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுவார்கள்.

### மோட்டார் பொறியியல் படிப்பு

*170 வினா.—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு கல்வி தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

பாலிடெக்னிக்குகளில் 1961-ம் ஆண்டு வரை போதிக்கப்பட்டு வந்த Automobile Engineering Course-ஐ மீண்டும் போதிக்க ஆரம்பிக்கும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இல்லை.

**திரு. சு. துரைசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே ஆட்டோமோபைல் என்ஜினீயரிங் கோர்ஸ் டிப்ளமா படிப்பு சொல்லிக் கொடுக்கப்பட்டு வந்தது. அப்புறம் எடுத்து விட்டார்கள். எடுத்ததற் கான காரணம் என்ன என்று சொல்ல முடியுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** 1960–61 இல் பல் தொழில் நுட்பப் பள்ளி கோவையிலும், தமிழ் நாடு பல்தொழில் நுட்பப் பள்ளி மதுரையிலும், ராமகிருஷ்ணா காலேஜ் தொழில் நுட்ப பள்ளியிலும் ஆட்டோமோபைல் என்ஜினியரிங் டிப்ளமா கோர்ஸ் நடத்தப்பட்டு வந்தது. அதற்குப் பிறகு அதில் நல்ல திறமை பெற ஓராண்டுக் காலம் எம்.எம்.இ. படித்த பிறகே ஓராண்டுக் காலம் ஆட்டோமோபைல் போஸ்ட் என்ஜினியரிங் கோர்ஸ் படித்து 6 மாத காலம் ஒரு தொழிற்சாலையில் பயிற்சி பெற வேண்டும் என்கிற நிலை ஏற்படுத்தப்பட்டது . இந்த நிலை தொடர்ந்து பல ஆண்டுகளாக இருந்து வருகிறது. இதுவே போதுமானதாக இருப்பதால் தனியாக ஆட்டோ மோபைல் என்ஜினியரிங் டிப்ளமா கோர்ஸ் ஏற்படுத்த தேவையில்லை என்றுதொழிற் நுட்ப கல்வி இயக்குனரும் தெரிவித்திருக்கிறார்.

**திரு. நா. காசிராமன்:** மோட்டார், லாரி, டாக்ஸி போன்று விரைந்து வருகிற வாகனங்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதால் இந்த பயிற்சியை இனிமேலாவது கொடுக்க இந்த அரசு புனராலோசனை செய் யுமா ? அதனால் பலருக்கு தொழில் வாய்ப்பு ஏற்படாதா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இப்போதுள்ள முறைப் படியே அத்துறையில் நம்முடைய தேவை நிறைவேறக்கூடியதாக அமையும்.

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** இப்போது ஏராளமான கார்களும், பஸ்களும் ஓடுவதனாலும், அதனால் அடிக்கடி விபத்துகள் ஏற்படுவத னாலும் ஆட்டோமொபைல் என்ஜினியரிங் கோர்சில்—ஷார்ட் டேர்ம் கோர்ஸ் என்று வைத்து எல்லா டிரைவர்களுக்கும் பயிற்சி அளிக்க சர்க்கார் யோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, கார், லாரி ஓட்டுகிற டிரைவர்களுக்கு இப்போதே பயிற்சி அளிக்கிற திட்டம் இருக்கிறது. அது போதுமானதாக இல்லை என்று கருதப் பட்டால் அதுபற்றி யோசிக்கப்படும்.





### இளநிலை தொழில் நுட்ப பள்ளிகள்.

*171 வினா : **திரு. வை. சுவாமிநாதன் :** மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) தமிழக அரசால் நடத்தப்பட்டு வரும் Junior Technical Sohools எத்தனை ?

(இ) நடப்பு ஆண்டில் அவற்றில் விரிவுரையாளர் Lecturer பதவிகள் குறைக்கப்பட்டுள்ளனவா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) 11.

(இ) இல்லை.

**திரு. வை. சுவாமிநாதன் :** அந்தப் பள்ளிகளில் படிக்கக்கூடிய மாணவர்கள் எத்தனை பேர் ? இந்த ஆண்டு குறைந்த சம்பளம் என்ற சலுகை அளிப்பதனால் அதிக மாணவர்கள் அந்தப் பள்ளிகளில் சேருவதற்கு வாய்ப்பு இருப்பதன் காரணமாக அந்தப் பள்ளிகளில் ஷிப்டு முறையை ஏற்படுத்த அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே அரசாங்கத்தின் சார்பாக 11 பள்ளிகளும் தனியார் துறையில் 4 பள்ளிகளும் இருக்கின்றன. எவ்வளவு பேர்கள் படிக்கிறார்கள் என்ற விவரக் குறிப்பு இல்லை. நெருக்கடி இருந்து இடம் அதிகப்படுத்த வேண்டிய வாய்ப்பு இருக்குமானால் அதுபற்றி யோசிக்கப்படும்.

### சிமிட்டி உற்பத்தி

*172 வினா : **திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) நமது ராஜ்யத்தில் வருடாந்திர சிமெண்ட் தேவை எவ்வளவு ?

(இ) நமது ராஜ்யத்திலுள்ள சிமெண்ட் தொழிற்சாலைகளின் வருட உற்பத்தி எவ்வளவு ?

(உ) அதில் வெளி ராஜ்யம் அல்லது வெளி நாடுகளுக்கு. ஏற்றுமதி செய்யப்படுவது எவ்வளவு ?

**மாண்புமிகு திரு.மு. கருணாநிதி :** (அ) இம் மாநிலத்திற்கு ஆண்டு தோறும் தோராயமாய் சுமார் 10,00,000 டன் சிமிண்ட் தேவைப் படுகிறது.

(இ) இம்மாநிலத்தில் உள்ள சிமிட்டித் தொழிற்சாலைகளில் ஆண்டு தோறும் தோராயமாய் சுமார் 19·5இலட்சம் மெட்ரிக் டன் சிமிண்ட் உற்பத்தி செய்யப்படுகிறது.

(உ) 1967-ம் ஆண்டு ஜூன் மாதம் 30-ம் நாளுடன் முடியும் ஆண்டில், 9,74,600 டன் சிமிண்ட் இந்நாட்டின் பிற மாநிலங்களுக்கு அனுப்பப்பட்டது. இக்கால அளவில் இந்தியாவிற்கு வெளியில் உள்ள நாடுகளுக்கு சிமிண்ட் ஏற்றுமதி எதுவும் செய்யப்படவில்லை.

**திரு. கே. விநாயகம் :** சார், இந்த சிமிண்ட் விஷயத்தில் கண்ட் ரோல் இருந்த நேரத்தில் பொதுமக்களுக்கு அதிகத் தொல்லை கள் ஏற்பட்டன. இப்பொழுது அதை நீக்கிவிட்டதனாலே சுலபமாக கிடைக்கிறது. மறுபடியும் கண்ட்ரோல் கொண்டுவரப் படுவதாகச் சொல்லப் படுகிறது. அந்தத் துறையிலே இந்தஅரசாங்கம் என்ன நினைக்கிறது ? இப்படியே கண்ட்ரோல் இல்லாமல் விடுவதற்கு அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : இப்பொழுதுள்ள நிலையில் கனம் உறுப்புனர் திரு விநாயகம் அவர்களுடைய கேள்விக்கு இடம் இருப்பதாகத் தெரியவில்லை.

**Dr. H. V. HANDE** : In the main question the word 'exported' is used. 'Export' is a term applied to sending from one country to another country. Even for sending between States, the word 'export' is used.

What is the basis on which we have allotted to ourselves 10,00,000 M. Tons, what is the basis of allotment from the Central pool and is there any understanding between the Central Government and the State Government ? Even if the Minister cannot say about the basis of allotment to other States, will he say at least the basis of allotment to this State, are we having sufficient cement to meet our requirements and the requirements of private parties, what is the basis of distribution ? Will the Hon. Minister be pleased to give us these details ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : இதைப் பங்கிடுவதில் முதலில் 1966-ம் வருஷம் ஜனவரி மாதம் 1-ம் தேதியில் இயங்கி வந்த நிறுவனத்தினுடைய செயல்முறைகளில் சில குறைபாடுகள் இருந்தன. காரணமாக அந்தக் குறைபாடுகளை நீக்குவதற்காக அந்த நிறுவனத்தை இந்திய அரசு நீக்கிவிட்டது. தொழில் வாணிபத்துறை அரசாங்கத் துறையைக் கலந்து தேவைப்படுகின்ற பட்டியலும் இணைக்கப்பட்டுத்தான் சிமிண்ட் வழங்கப்படுகிறது. வெளிநாடுகளுக்கு சிமிண்ட் அனுப்பப்படுவதில்லை. வெளிமாநிலங்களுககுத்தான் அனுப்பப்பட்டு வருகிறது. அப்படி அனுப்புவதால் பற்றுக்குறை எதுவும் நமக்கு வந்துவிடவில்லை.

**திரு. ஈ. ஆர். கிருஷ்ணன்** : ஐயா, தமிழ் நாட்டினுடைய தேவைக்கு அதிகமாக உற்பத்தியாகிற சிமிண்ட் வட மாநிலங்களில் வாங்கப்படுவது இல்லை என்ற செய்தி பரவலாக இருக்கிறதே, அப்படிப்பட்ட செய்திக்கு ஏதாவது ஆதாரம் உண்டா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : இப்பொழுது நான் முதலிலே குறிப்பிட்டபடி நாம் வைத்துக்கொள்கின்ற 10 லட்சம் டன் போக பாக்கியுள்ள 9 லட்சத்து 74 ஆயிரம் டன் வெளி மாநிலங்களுக்குத் தான் அனுப்பிக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்றபடி ஆதாரபூர்வமான தகவல் எதுவும் அரசாங்கத்தின் கைவசம் இல்லை.

**திரு. ஜே. ஜேம்ஸ்** : சிமிண்ட் ஆலையைத் தொடங்குவதற்கு தேவைப்படுகின்ற லைம் ஸ்டோன் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள வள்ளியூரில் ஏராளமாக இருப்பதால் அங்கே ஒரு சிமிண்ட் ஆலையை அரசாங்கம் தொடங்குவதற்கு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : இப்பொழுது அதுபற்றிய செயற் குறிப்பு எதுவும் இல்லை.

**திரு. எஸ். முருகையன்** : தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்தில் எத்தனை சிமிண்ட் தொழிற்சாலைகள் இருக்கின்றன ? தனியார் துறையில் இருக்கின்றவை எத்தனை ? அரசுத் துறையில் எத்தனை இருக்கின்றன ? அண்மையிலே அரசுத் துறையிலே ஏதாவது தொழிற்சாலை நிறுவப்பட்டிருக்கிறதா ?





**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : தனியார் துறையில் அசோஷியேட்டட் சிமிண்ட் கம்பெனி, மதுக்கரை, மெட்ராஸ் சிமிண்ட் லிமிடெட், துலுக்கப்பட்டி, டால்மியா சிமிண்ட் (பாரத்) லிமிடெட், திருச்சி, இந்தியா சிமிண்ட் லிமிடெட், சங்கர் நகர், இந்தியா சிமிண்ட் லிமிடெட் சங்ககிரி ஆகிய ஐந்து தொழிற்சாலைகள் இருக்கின்றன. புதிதாக கரூரில் செட்டிநாடு சிமிண்ட் தொழிற்சாலை கட்டப்பட்டு உற்பத்தி துவங்குகின்ற நிலை இருக்கிறது. மெட்ராஸ் கவர்ன்மெண்ட் பேக்டரி ஸ்ரீ வில்லிபுத்தூருக்கு அருகில் இப்பொழுது அமைக்கப்படுகின்ற பணி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

**Thiru K. S. KOTHANDARAMIAH** : What is the amount required for starting a medium-sized cement factory and, if private people come forward to start such factories, will the Government finance them to some extent ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : இது எனக்குத் தொடர்புடைய கேள்வியல்ல.

**திரு. எஸ். இராமச்சந்திரன்** : தலைவர் அவர்களே, இந்த சிமிண்டை வினியோகிக்கின்ற அதிகாரம் இந்திய அரசிடம் ஒப்படைக்கப்பட்டு இருக்கிறதா ? வினியோகிக்கின்ற விலையை நிர்ணயம் செய்கின்றதும் அவர்கள்தானா ? இந்த மாநிலத்திற்குக் குறைந்த விலை நிர்ணயம் செய்யப் பட்டிருக்கிறது என்பது உண்மையா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : இதுபற்றிய விவரங்கள் எதுவும் இந்தக் கேள்வியில் இடம் பெறவில்லை.

### சிறிய நீர்த்தேக்கங்கள்

*173. **வினா :—திரு. பெ. மலைச்சாமி:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் புதிய சிறிய நீர்த்தேக்கங்கள் கட்டுவதற்கான செயற் குறிப்பு உண்டா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : ஆம்.

**திரு. பெ. மலைச்சாமி** : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின்கீழ் புதிய குளங்கள் எத்தனை அமைக்கப்பட்டிருக்கின்றன ? மேலும் எத்தனை குளங்கள் அமைப்பதற்கான செயற்குறிப்புகள் இருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : இப்பொழுது புதிய குளங்கள் 37 அமைப்பதற்கான வேலைகள் துரிதமாக நடைபெற்றுக்கொண்டு வருகின்றன. அரசாங்கத்தினுடைய பரிசீலனையில் அதாவது பொறியாளருடைய ஆய்வு முடிந்து அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ள குளங்களின் எண்ணிக்கை 31. தலைமைப் பொறியாளரின் பரிசீலனையில் உள்ளவை 169.

**திரு. ராஜகுமார் விஜய ரகுநாத தொண்டமான்** : மதிப்பிற்குரிய சபா நாயகர் அவர்களே, இந்தத் திட்டத்திலே புதுக்கோட்டை, ராமநாதபுரம் பகுதியில் இம்மாதிரி வறண்ட பிரதேசங்களில் உள்ள காட்டாறுகளை மறித்து சிறிய நீர்த்தேக்கங்கள் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யும் உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : இந்தத் திட்டத்தில் எல்லாப் பற்றுக்குறைத் திட்டங்களுமே இடம் பெறும்.

**திரு. ஏ. முனியாண்டி** : தலைவர் அவர்களே, பீலிக்கனில் கட்டப்படுகிற அணைக்கட்டானது இருபது வருடங்களாகப் பேசப்பட்டு வந்தது, இப்பொழுது எந்த அளவில் இருக்கிறது ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தொடக்கக் கேள்வியோடு இந்தக்
கேள்வி தொடர்பு கொண்டதல்லை.

**திரு. ஆர். கருப்பையா :** புதிய ஏரிகளை அமைக்கும்பொழுது, நந்தை
யார் பாசனத்தில் கண்டிராதித்தம் ஏரி தூர் எடுக்கப்படாமல், தண்ணீர்
தேங்க வசதி இல்லாமல் இருக்கிறது. ஆகவே அந்த ஏரியில் சில்ட் எடுக்
கிற வேலையை அடுத்த ஆண்டாவது செய்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு
செய்யுமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** புதிய குளங்கள் ஏற்படுத்துகிற
வேலையும் அதே நேரத்தில் பழைய ஏரி, குளங்களையும் மராமத்து செய்
கிற வேலை ஒன்றோடொன்று இணைக்கப்பட்டு இந்த அரசாங்கத்தால்
கவனிக்கப்பட்டு வருகிறது.

**திரு. பி. எஸ். மணியன் :** கடந்த ஆட்சியின்போது சில முக்கிய
நீர்த்தேக்கத் திட்டங்கள் சர்வே செய்து திட்டமிட்டு செயல்
படுத்துகிற நேரத்தில் அவற்றில் தனிப்பட்டவர்களுக்கு வேண்டிய நிலங்கள்
பறிபோகிற காரணத்தாலே அவர்கள் இவற்றைத் தடுத்துவிட்டார்கள்.
இப்பொழுது அவற்றையெல்லாம் மறு பரிசீலனை செய்யும் உத்தேசம்
இந்த அரசாங்கத்திற்கு உண்டா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** பொதுவாகக் குறிப்பிட்டால் அரசு
புரிந்துகொள்வதற்கு வழியில்லை. கனம் உறுப்பினர் அவர்கள் குறிப்
பிட்டு விஷயத்தைச் சுட்டிக்காட்டினால் அரசு அதைப் பரிசீலிக்கும்.

**திரு. கே. விநாயகம் :** சார், தமிழகம் பூராவும் இந்த விஷயத்திலே
முன்னேற்றம் காணும்பொழுது ஆந்திராவிலேயிருந்து பிரிக்கப்பட்டு இந்த
மாநிலத்தோடு சேர்க்கப்பட்ட பிற்பட்ட பகுதியாக இருக்கக்கூடிய
திருத்தணி தாலுகாவிலே எத்தனைத் திட்டங்கள் வந்திருக்கின்றன ?
அப்படிப்பட்ட கோரிக்கைகளைப்பற்றி நடவடிக்கை எடுத்துக்கொள்ள
முயற்சிகள் நடைபெறுகிறதா ? நடைபெறுகிறது என்றால் எத்தனை ஏரிகள் ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** கோரிக்கையின் எண்ணிக்கைக்
கணக்கு இல்லை. நம் உறுப்பினர் அவர்கள் வலியுறுத்திக்கொண்டே
இருந்தால் அவர்கள் வலியுறுத்தலும் அரசாங்கத்தினுடைய முயற்சியும்
சேர்ந்த ஓர் ஒத்துழைப்புடன் திட்டம் உருவாவதற்கு வசதி இருக்கும்.

முற்பகல் **திரு. ந. வீராசாமி :** தலைவர் அவர்களே, புதிய சிறிய நீர்த்தேக்கங்
களைக் கட்டுகின்ற திட்டத்தை முந்தைய அரசு தீட்டியதா அல்லது இந்த
அரசு தீட்டியதா ? அப்படியென்றால் திட்டத்திற்காகச் செலவாகும்
தொகை எவ்வளவு ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இது எந்த அரசு தீட்டியது என்
பது அல்ல. சென்ற ஆண்டு 37 புதிய குளங்கள் கட்டுவதற்கான வேலைகள்
தொடங்கப்பட்டு நடந்துகொண்டிருக்கின்றன என்று குறிப்பிட்டேன்.
இதற்காக ஒதுக்கப்பட்டது ஒரு கோடி நாற்பத்தியோரு லட்சம் ரூபாய்.
ஆனால் ஒரு கோடி ஐம்பத்தைந்து லட்சம் ரூபாய் ஒதுக்கப்படக்கூடிய அள
வுக்கு இந்தக் குளங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. கொஞ்சம் கூடுத
லாகவே இச்செலவை செய்து 37 குளங்கள் இப்போது அமைக்கப்பட்டிருக்
கின்றன.

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவர் அவர்களே, களக்காடு பக்கத்தில்
சிதம்பரபுரம் பக்கத்தில் இரண்டு மலைகளில் இருந்து இரண்டு அருவிகளின்
தண்ணீர் வீணாகப் போய்க்கொண்டிருக்கிறது. அப்பக்கத்தில் நஞ்சைகள்
நன்கு இரண்டு போகம் விளையக்கூடிய நிலை இருந்தும் ஒரு போகத்திற்குத்
தான் தண்ணீர் என்று சொல்லி இரண்டாவது போகத்தைத் தடுத்துத்
தண்டத் தீர்வை போடுகிறார்கள். அங்கு இரண்டு கண்மாய்கள் வெட்ட
வாய்ப்பு இருக்கிறது. அவைகளை வெட்டி இரண்டு போகம் விளையக்கூடிய
நிலையை ஏற்படுத்த அரசாங்கம் முன்வருமா ?





**மாண்புமிகு திரு மு. கருணாநிதி :** இவைகள் பற்றி மானிய கோரிக்கைக்
விவாதத்தின்போது சொல்வார்களானால் அதைக் குறிப்பெடுத்து கவனிக்க
எதுவாக இருக்கும்.

**திரு. வி. டி. அண்ணாமலை :** 37 குளங்கள் ஏற்பாடு செய்யப்
பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். வட ஆர்க்காடு
மாவட்டத்தில் அவற்றில் எவ்வளவு இடம் பெறுகின்றன ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** ஒவ்வொரு மாவட்டத்திலும் எவ்
வளவு என்று கேட்பார்கள். ஆகவே இருப்பதைச் சொல்லிவிடுகிறேன்.

தென்னார்க்காடு 1 ; திருச்சி 4 ; இராமநாதபுரம் 6 ; தர்மபுரி 8 ;
மதுரை 6 ; திருநெல்வேலி 5 ; கோவை 5 ; சேலம் 2 ; ஆக மொத்தம் 37.
வட ஆர்க்காட்டில் அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளவை 2.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** வட ஆற்காடு மாவட்டத்தில், ஏரிகள்
குளங்கள் இரண்டு பரிசீலனையில் இருப்பதாகச் சொன்னார்கள். நீர்த்
தேக்கங்களைப் பற்றிய குறிப்பு ஏதாவது இருக்கிறதா ? வட ஆற்காடு
மாவட்டத்தைப் பற்றி ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** வட ஆற்காடு மாவட்டத்தில்
உள்ள நீர்த் தேக்கங்களைப் பற்றிய குறிப்புக்கள் அரசாங்கத்திடம் ஏராளமாக
இருக்கின்றன. அவைகளைச் செயல்படுத்தும் முயற்சியும் இப்போது பரி
சீலிக்கப்பட்டு வருகிறது.

**திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் :** மைனர் ரிசர்வாயர் என்று
சொல்லப்படுவதற்கு எவ்வளவு உச்சவரம்பு செலவழிப்பதாக திட்டம் வகுக்
கப்பட்டிருக்கிறது ? அதற்கு ஏதாவது ஒரு பாலிஸி இருக்கிறதா ? அப்
படி இருந்தால் ஒவ்வொரு மாவட்டத்திலும் குளங்கள் இருக்கிறது என்று
சொல்லுவதை என்னென்ன குளங்கள் என்பதுபற்றி ஓர் அறிக்கையை
இந்தச் சபையில் வைக்க முடியுமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இதுபற்றி வேண்டுமானால்
யோசித்து ஓர் அறிக்கையை சட்டசபையில் வைக்க முயற்சிக்கலாம்.

**திரு. அ. ஆறுமுகம் :** அமைச்சரவர்கள் சேலம் மாவட்டத்தில்
இரண்டு நீர்த் தேக்கங்கள் என்று குறிப்பிட்டார்கள். அவை எது எது
என்று அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** சேலம் என்பது தர்மபுரி மாவட்டத்
தையும் சேர்ந்தது—

(1) New tank across Kanar near Thandanurpudur village.

(2) New tank near Bairamaickenpatti village.

இந்த இரண்டும்தான்.

### உயரமான தடை அணைக்கட்டுகள்

*174 வினா—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு
வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு
விடையளிப்பாரா—

1962 முதல் 1966 வரை "High Check dams" எங்கெங்கே கட்டப்
பட்டுள்ளன, ஜில்லா வாரியாக ?

* 118-ம் பக்கத்தில் உள்ள அமைச்சரின் விளக்கத்தைக் காண்க.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** வேளாண்மைத் துறையின் நில வள—நீர்வளப் பாதுகாப்பு வேலைத் திட்டத்தின் கீழ், உயரமான தடை அணைக்கட்டுகள் எதுவும் கட்டப்படுவதில்லை. நடுத்தர உயரமுள்ள குறைந்த உயரமுள்ள, தடை அணைக்கட்டுகளே கட்டப்படுகின்றன. பெருந்தடை அணைக்கட்டுகள் என வழங்கப்படுகிற இடைத்தர உயரமுள்ள தடை அணைக் கட்டுகள் எட்டு, 1962 முதல் 1966 வரை மண்வளப் பாதுகாப்பு வேலைத் திட்டத்தின் பகுதியாக வட ஆர்க்காடு மாவட்டத்தில் கட்டப்பட்டுள்ளன.

தேவையானபோது, இத்தகைய அணைக்கட்டுகள் இம்மாநிலத்தின் ஏனைய பகுதிகளில் கட்ட எண்ணியுள்ளது.

## *Colachel–Neerodi Coastal Road*

* 175 *Q.*—Thiru A. CHIDAMBARANATHA NADAR : Will the Hon. the Minister for Agriculture be pleased to state —

(*a*) whether there is any proposal under the consideration of the Government to construct a coastal road from Simon colony at Colachel to Neerodi ; and

(*b*) if so, the width of the proposed road ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** (அ) & (இ) கொளச்சலி லிருந்து நீரோடை வரை கடலோரச் சாலை அமைப்பதற்கு 1960-ல் ஒப்பளிப்பு வழங்கப்பட்டு, பின்னர் ஒத்திவைக்கப்பட்டது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** சார், இது ஒரு முக்கியமான வழித் தடமாக இருக்கிற காரணத்தால் மறுபடியும் புனர்பரிசீலனை செய்து, இதைச் செய்ய ஏற்பாடு செய்வார்களா ?

**மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி :** 1960-ல் இதற்கு முதல் எஸ்டி மேட் போடும்போது 5 லட்சம் 91 ஆயிரம் செலவில் திட்டமிட்டது. அதன் பிறகு இரண்டாவது ரிவைஸ்ட் எஸ்டிமேட்டில் 17 லட்சமாக உயர்ந்த காரணத்தால் அன்றிருந்த நிதி நிலையில் அது சாத்தியம் இல்லையென்று தள்ளிவிட்டார்கள். அங்கத்தினர் கூறுகின்ற நிலையில் மீண்டும் அதைப் புனர் பரிசீலனை செய்வதற்கு யோசிக்கலாம்.

**திரு. வ. ஜார்ஜ் :** இந்தத் திட்டம் நேஷனல் ஹைவேஸ் திட்டத்தின் கீழ் ஐந்தாண்டுத் திட்டத்தில் மத்திய அரசு ஒப்புதலுக்கு உட்பட்டுத் தொடங்கிய ஒன்று என்று நினைக்கிறேன். பிறகு இதை விட்ட காரணம் என்ன ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** உணவு உற்பத்தித் திட்டத் தின் கீழ் இந்த ஏற்பாடு எடுக்கப்பட்டது என்று குறிப்பிட்டேன். ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் இருக்கும் என்று ஊகித்துச் சொல்வது சரி அல்ல.

## *Kotagiri as Tourist Centre*

* 176 *Q.*—Thiru K. VINAYAKAM,
Thiru J. BELLIE GOWDER } Will the Hon. the Minister for Harijan Welfare and Information be pleased to state—

(*a*) whether there is a proposal to promote and develop Kotagiri in the Nilgiris district as a tourist centre ; and

(*b*) if so, the steps taken by the Government to develop the area ?



**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** (அ) ஆம்.

(இ) முதற்கண் சுற்றுலாப் பயணிகள் தங்குதவற்கு அங்கு ஒரு சுற்றுலா மாளிகை அமைக்கவும், பின் கோட்டகிரியிலுள்ள எழிற் காட்சி இடங்களுக்கு இட்டுச் செல்லும் பாதைகளைச் சீரமைக்கவும் அரசு எண்ணியுள்ளது.

**திரு. ஜெ. பெள்ளி கௌடர் :** தலைவர் அவர்களே, கோத்தகிரியை ஒரு சுற்றுலா மையமாக உயர்த்த நல்ல வசதி இருக்கிறது. இந்தத் திட்டத்தை உடனடியாகச் செயல்படுத்த அரசு முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** திட்டங்களை மேற் கொள்வதற்குத்தான் கோத்தகிரியில் 3·65 ஏக்கர் பரப்புள்ள ஒரு நிலத் தில் அமைந்துள்ள ஒரு கட்டடத்தை (இங்கிலீஷ் கிளப்) விலைக்கு வாங்கி சீரமைத்து சுற்றுலா பயணிகளுக்கு தங்கும் மாளிகையாக மாற்ற எண்ணி யுள்ளது. இம்மாளிகை ஏறத்தாழ ஒரு லட்சம் எழுபத்தி ஐயாயிரம் ரூபாய் பெறும் என்றும் அதற்குமேல் சீரமைப்புக்கு 30 ஆயிரம் ரூபாய் செலவாகலாமென்றும் மாவட்டக் கலெக்டர் தெரிவித்துள்ளார். இம் மாளிகையில் அது அமைந்துள்ள இடத்தையும் லாண்ட் அக்விஸிஷன் ஆக்ட் நடவடிக்கை எடுத்து அரசு மேற்கொள்ள கலெக்டர் அனுப்பியுள்ள நில கையகப்படுத்தும் சட்டத்தின் 4 (1) பிரிவு அறிக்கை அரசிதழில் வெளி யிடப்பட்டிருக்கிறது.

**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** நீலகிரி ஏற்கெனவே பிரசித்தி பெற்ற சுற்றுலா மையமாக இருக்கிறது. அது முன்னர் இருந்தது மாதிரி இல்லை. அங்குள்ள பொடானிகல் கார்டன் கூட சரிவர வைக்கப்படவில்லை. அதன் அட்ராக்ஷன் குறைந்து இருக்கிறது. ஆகவே, அந்த மாதிரி நிலை இல்லாமல் அதை மேலும் நன்கு அபிவிருத்தி செய்ய அரசு முன் வருமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** பயணிகளுக்கு மாளிகைகள் கட்டுவதுதான் இந்த இலாகாவின் பொறுப்பில் இருக்கிறது. பொடானிகல் கார்டனை கவர்ச்சிகரமாக்குவது இந்த இலாகாவின் பொறுப் பல்ல.

**திரு. கே. விநாயகம் :** கோத்தகிரியில் பயணிகள் தங்க ஒரு மாளிகை கட்டுவதற்காக அதிகம் செலவாவதால் அங்கு தங்குபவர்களுக்குக் கொஞ் சம் அதிகம் ரேட்கள் போடுவதால் வசதி உள்ளவர்கள்தான் அங்கே தங்க முடிகிறதே தவிர, மிடில் க்ளாஸ் பீபிள் போய் தங்குவதற்கும் முடியாமல் இருக்கிறது. ஆகவே, அரசாங்கம், சீப் அகாமடேஷன், குறைந்த ரேட்டில் சாப்பாட்டு வசதி கிடைப்பது போன்றவைகளுக்காக ஒரு கட்டடம் கட்டித்தர யோசனை இருக்கிறதா ? அப்போது சாதாரண மக்கள் போய் அனுபவிக்க ஏதுவாக இருக்கும். ஆகவே இது பற்றி அரசாங்கம் யோசிக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** கோத்தகிரியில் அதுபோல ஒரு செயற்குறிப்பு இல்லை. இருந்தாலும் உதகையில் மாண வர்கள் விடுதி ஒன்று கட்டி மாணவர்கள் விடுமுறைக்குச் செல்லும்போது அப்படி காலியாகிற இடங்களை பயணிகளுக்குக் குறைந்த கட்டணத்திற்கு கொடுக்க ஒரு பெரிய மாளிகை கட்ட உத்தேசம் தற்போது உள்ளது.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** கோத்தகிரியில் ரூ. 1,76,000 செலவில் நிலம் வாங்கி இருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அது யாரிடத்திலிருந்து வாங்கப்பட்டிருக்கிறது ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** இங்கிலீஷ் கிளப் என்ற அந்தக் கட்டடத்தை வாங்க எண்ணியுள்ளது. இவ்வளவு செல வாகும் என்று கலெக்டர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். நிலத்தைக் கையகப்படுத்தும் சட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்வது பற்றி அறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது.

*Conference of Labour Leaders*

* 177 *Q.*—Thiru G. GOMATHY SANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Law and Co-operation be pleased to state—

(*a*) whether any Conference of Labour Leaders was convened in Madras in November 1967; and

(*b*) if so, the purpose thereof?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) ஆம்.

(இ) சென்னை நகரில் அப்பொழுதிருந்த தொழிலாளர்களின் சூழ்நிலையை விவாதிக்க இக்கூட்டம் கூட்டப்பட்டது.

**திரு. க. கோமதி சங்கர தீட்சிதர் :** தொழிற்சங்கத் தலைவர்களுடன் பேசிய பேச்சின் பயனாக தகராறு ஏற்பட்ட தொழில் ஸ்தாபனங்களில் எத்தனை ஸ்தாபனங்களில் சமரசம் ஏற்பட்டிருக்கிறது? இன்னும் எத்தனை அடைக்கப்பட்டிருக்கிறது?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இந்தக் கூட்டத்தில் குறிப்பாக தொழிற்சாலையை மூடுவதைப்பற்றியோ, திறப்பதைப்பற்றியோ பேச்சு வார்த்தை நடத்தவில்லை. தொழிலாளர்கள் போராட்டம் நடத்தும்போது எப்படி அவர்கள் சட்டப்படி நடந்துகொள்ள வேண்டுமென்பதுபற்றிப் பரிசீலிக்கப்பட்டது.

**திரு. ந. தருமலிங்கம் :** தொழிலாளர் தலைவர்கள் என்பதற்குள்ள பொதுவான இலக்கணம் என்ன? தொழிற்சங்கம் வைத்து நடத்துபவர்கள் எல்லாம் தொழிலாளர் தலைவர்களா அல்லது அரசியல் கட்சியில் இருப்பவர்களும் தொழிலாளர் தலைவர்களா? கூட்டப்பட்ட மாநாட்டிற்கு அழைக்கப்பட்ட தொழிலாளர் தலைவர்கள் யார்?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தொழிற்சங்கங்களை நடத்தக்கூடியவர்கள் பலர் அரசியல் கட்சிகளில் இருக்கிறார்கள். எல்லாப் பகுதியினரும் அழைக்கப்பட்டார்கள்.

**திரு. டி. மார்டின் :** எல்லாத் தொழில்களிலும் உள்ள தொழிலாளர்களுக்கும் நியாயமான சம்பளங்களை நிர்ணயிக்க வேண்டுமென்பதற்காக நிரந்தரமாக ஒரு சம்பளக் குழுவை உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவர் தலைமையில் நியமிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் தமிழக அரசிடம் உண்டா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** வேஜ் போர்டு—சம்பளக் குழு அமைப்பது என்பது ஒவ்வொரு தொழிலையும் பற்றியதே தவிர, எல்லாத் தொழில்களுக்கும் சேர்ந்து ஒரு வேஜ் போர்டு என்று அமைக்க முடியாது. டெக்ஸ்டைல் இண்டஸ்ட்ரி வேஜ் போர்டு, எஞ்சினியரிங் இண்டஸ்ட்ரி வேஜ் போர்டு என்று பல மாதிரியாக அப்போதைக்கப்போது அமைக்கப்படுகிறது. அது மாநில அரசாங்கத்தின் ஆலோசனையுடன் மத்திய அரசாங்கம் எடுக்கிற முடிவாகும்.

**திரு. கா. வேழவேந்தன் :** அந்த மாநாட்டுக்கு அழைக்கப்பட்ட தொழிற்சங்கத் தலைவர்கள் எடுத்த முடிவுகளை நடைமுறைக்கு கொண்டு வந்தார்களா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இப்படித் தொழிலாளர் தலைவர்களைச் சந்தித்துப் பேசியது முடிவு எடுத்துச் செயல்படுத்துவதற்காக மட்டுமல்ல; அரசாங்கம் எப்படி நடக்க வேண்டுமென்று ஆலோசனைகளைக் கேட்கிறோம். ஆலோசனைகளைக் கேட்ட பிறகு அரசாங்கம் முடிவு எடுக்கிறது. குறிப்பிட்டுக் கேட்டால் அதைப் பற்றிச் சொல்லுகிறேன்.



Dr. H. V. HANDE: Arising out of the answer given by the Law Minister with regard to wage boards, what specific steps this Government are going to take to see that whatever is recommended by the wage boards is thoroughly and fully implemented? For instance, we have had the Press Wage Board. But its recommendations have not at all been implemented. Does not this Government think that the State Government have some responsibility in the matter?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** மாநில அரசுக்கு வருகின்ற தொல்லைகளிலே பெரும் பகுதி வேஜ் போர்டு சிபார்சுகளை நிறைவேற்றாத காரணந்தான். வேஜ் போர்டுக்கும் மாநில அரசுக்கும் எந்த விதமான சம்பந்தமும் கிடையாது. மத்திய அரசுதான் இதை நிர்ணயிக்கிறது. இதிலே இரண்டு வகை இருக்கிறது. சட்டப்படி செல்லக்கூடிய சிபார்சுகள் இருக்கின்றன. ரெகமண்டேட்டரி என்ற முறையில் உள்ள சிபார்சுகள் இருக்கின்றன. சட்டப்படி செல்லக்கூடிய சிபார்சுகளை மீறினால் நடவடிக்கை எடுக்க மாநில அரசாங்கத்திற்கு மத்திய அரசு சட்டத்தின் கீழ் அதிகாரம் இருக்கிறது. 'நான்-ஜர்னலிஸ்ட்' ஜர்னலிஸ்ட்ஸ் என்பதிலே சட்டப்படி நடவடிக்கை எடுக்க முடியும். நான்-ஒர்க்கிங் ஜர்னலிஸ்ட்ஸ என்ற முறையில் ரெகமண்டேட்டரி என்ற முறை இருக்கிற காரணத்தால் சட்டப்படி நிறைவேற்ற வேண்டுமென்று வற்புறுத்த அதிகாரம் கிடையாது. இருந்தாலும் மத்திய அரசு மாநில அரசுடன் தொடர்பு கொண்டு எப்படியாவது நிறைவேற்றி வையுங்கள் என்று சொல்லுகிறார்கள். நாங்கள் அவர்களை அழைத்து வாயினால் சொல்வதற்குத்தான் அதிகாரம் இருக்கிறதே தவிர, அதை அவர்கள் மீறினால், ஏற்றுக்கொள்ளாவிட்டால் அதற்கு மேல் நடவடிக்கை எடுத்துக்கொள்ள இந்த அரசாங்கத்திற்கு அதிகாரம் கிடையாது.

**திரு. கே. என். குமாரசாமி :** அமைச்சர் அவர்கள் கூட்டிய கூட்டத்தில் தொழில் அமைதியைக் குலைக்கின்ற சில காரியங்கள் தமிழகத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன, அதற்கு ஒரு முறையான வழியைக் காண வேண்டும் என்று சொன்னார்கள். அதன்பேரில் எந்த அளவுக்கு ஒழுங்குபடுத்தப்பட்டு முறையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அப்போது ஏற்பட்ட முக்கியமான பிரச்சினை இதுவரை தொழிலாளர்கள் பின்பற்றி வந்த வேலை நிறுத்த முறையைப் பற்றி உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பைப் பற்றியதாகும். அந்தத் தீர்ப்பை எல்லாத் தொழிலாளர்களின் தரப்பிலும் மதித்து நடந்து அரசாங்கத்தோடு ஒத்துழைப்பதாக வாக்குறுதி தந்தார்கள்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** ஜர்னலிஸ்டுகளுக்காக வந்திருக்கக் கூடிய தீர்ப்பை எந்தெந்தப் பத்திரிகைகள் அமல்படுத்தியிருக்கிறது? எந்தெந்தப் பத்திரிகைகள் அமல்படுத்தவில்லை?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** என்னிடத்தில் விவரம் இல்லை.

Thiru K. VINAYAKAM: Sir, what problems were discussed in this labour conference, what decisions were arrived at and did the labour leaders give effect to those decisions? In spite of the conference and the acceptance of the proposals made in it, what is the reason for the continued labour unrest in our State?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** லேபர் அன்ரெஸ்ட் என்பது வீகடர்ம். கனம் அங்கத்தினர் அவர்கள் வழக்கறிஞர், இதைப் பற்றித் தெரிந்திருப்பார்கள். தொழிலாளர்களைப் பிடிக்காதவர்கள் அவர்கள்மீது குற்றம் சாட்டுவார்கள், முதலாளிகளைப் பிடிக்காதவர்கள் அவர்கள்மீது குற்றம் சாட்டுவார்கள். இந்தக் கூட்டத்தைப் பொறுத்தவரை உயர்நீதி

மன்றத்தில் ஸ்டேஇன்ஸ்ட்ரைக்கைப் பற்றிக்கொடுக்கப்பட்ட தீர்ப்பைப்பற்றிய வகையில்தான் முடிவுகள் எடுக்கப்பட்டன. ஏற்கனவே சுப்ரீம் கோர்ட்டில் அது பற்றித் தீர்ப்பு இருக்கிறது. புதிதாக உயர்நீதிமன்றத் திலே இப்போது ஒரு தீர்ப்புக் கொடுத்திருக்கிருர்கள். ஸ்டே இன் ஸ்டிரைக் செய்வது முறைதான், சட்டப்படி நியாயந்தான் என்று கூறியிருக்கிருர்கள். ஆனுல் வேலே நேரத்திற்கு அப்பாற்பட்டு ஸ்டே இன் ஸ்டிரைக் செய்வது இல்லீகல் என்று சொல்லியிருக்கிருர்கள். இது புதிய கொள்கையாக இருக்கிற காரணத்தால் இது பற்றி அரசாங்கத்தின் சார்பில் பிரச்ஜனயை எடுத்துக் காட்டி, அரசாங்கத்தைப் பொறுத்த வரை அந்தத் தீர்ப்பை மதித்து அமல் நடத்த வேண்டும், அதற்கு எல்லாத் தொழிலாளர் தலேவர் களும் ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டது. சில தொழிற்சாங்கத் தலேவர்கள் அந்தத் தீர்ப்பைத் தவறு என்றும், அதை எதிர்த்து அரசாங்கம் வாதிட வேண்டுமென்றும் சொன்ஞர்கள். சில தொழிற் சங்கத் தலேவர்கள், இது சரியான தீர்ப்புத்தான், ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியதுதான் என்று சொன்ஞர்கள். அரசாங்கத்தைப் பொறுத்தவரை, ' நீங்கள் என்ன வேண்டுமாஞலும் செய்யுங்கள், அப்பீல் செய்ய வேண்டுமென்ருல் செய்யுங்கள். அரசாங்கத்தைப் பொறுத்தவரை சட்டம், ஒழுங்குப் பிரச்ஜனயாக வருகிற காரணத்தால் இந்தத் தீர்ப்பை அமல் நடத்த எல்லாத் தரப்பினரும் ஒத்துழைப்புத்தர வேண்டும்' என்று வேண்டுகோள் விடப்பட்டது. அந்த வேண்டுகோள் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

*Drinking Water Scheme for Lakkampatti Panchayat*

* 178 Q.—Thiru K. M. RAMASWAMI GOUNDER : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether the work connected with the Protected Water Supply Scheme for Lakkampatti Panchayat in Gobichettipalayam taluk, Coimbatore district has been taken up for execution ; and

(*b*) if so, when it will be completed ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** (அ) ஆம்.

(இ) குடிநீர்த் திட்ட வேலேகள் 1968-ம் ஆண்டு மார்ச் மாத முடிவில் நிறைவேற்றப்படும்.

Dr. H. V. HANDE : Sir, what is the amount allotted for this and what is the stage in which the matter rests now ? Is the progress of work satisfactory and will the Government be able to complete the work by 1968 as per the target ?

The Hon. Thiru S. J. SADIQ PASHA : The estimated cost is Rs. 1·55 lakhs to instal and Rs. 3,500 to maintain. As I have already replied in my answer to the main question, the work will be completed by March 1968 and before the hon. Member returns to his constituency, he will get good water.

*Tirunelveli Municipal Council*

* 179 Q.—Thiru K. VINAYAKAM : Will the Hon. the Minister for Local Administration be pleased to state —

(*a*) whether the necessary notification in accordance with the amended legislation has been published calling for objections, with a view to revive the defunct Tirunelveli Municipal Council ; and

(*b*) if so, when would the Council start functioning ?



**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** (அ) ஆம். 5—8—1967 தேதி யுள்ள தமிழ்நாடு அரசாங்க இதழின் சிறப்பு வெளியீட்டில் அது வெளி யிடப்பட்டது.

(இ) திருநெல்வேலி நகராட்சி மன்றம் 15—9—1967 முதல் மீண்டும் அமைக்கப்பட்டிருப்பதாகக் கருதப்பட வேண்டும்.

**திரு. கே. விஞயகம்:** இந்த விஷயத்தில் வந்த அப்ஜக்ஷன்ஸ் என்ன ? அவை ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றனவா ? அல்லது அவற்றைப் பரிசீலித்து சரியல்ல என்று தள்ளி விட்டார்களா ? அதன் விவரங்களேக் கூற முடியுமா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** ஒரே ஒரு மறுப்புரைதான் வந்தது பாதிரியார் நவமணி என்பவரிடமிருந்து வந்தது.

புதுத் தேர்தல் நடத்தி நகராட்சி மன்றத்தை மீண்டும் அமைக்கலாம் என்று கருத்து தெரிவித்தார்கள், அரசியல் கட்சிகள் இடையில் மனக் கசப்பு ஏற்படும் என்று அவர்கள் மறுப்புரையில் கூறியிருந்தார்கள். அது நியாயம் அல்ல என்று அரசாங்கம் கருதி அக்கருத்தைத் தள்ளி விட்டு திருநெல்வேலி நகராட்சி மன்றத்தைக் கலேத்து வெளியிட்ட அறி விப்பை ரத்து செய்வதாக அறிவித்தது. அதன்படி அது 15—9—1967 முதல் செயல்படுகிறது.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** இந்தக் கேள்வியின் அடிப்படையே தவறு என்பது என் கருத்து.

**மாண்புமிகு பேரவைத் தலேவர் :** தவருயிருக்கலாம் ஆனுல் நான் அனுமதி கொடுத்து விடை சொல்லியாகிவிட்டது.

Thiru K. VINAYAKAM : Sir, on a point of order. I have put the main question and it is within the jurisdiction of the Hon. Speaker to say whether it is in order or not. When the Hon. Speaker has allowed the question to be answered, it is not right on the part of any hon. Member to question it. Will the Hon. Speaker give a ruling on the matter ?

**மாண்புமிகு பேரவைத் தலேவர் :** மேஸ் பார்லிமெண்டரி ப்ராக்டீஸி லிருந்து 350-வது பக்கத்தை நான் அடிக்கடி படித்துக்காட்டியிருக் கிறேன். பேரவைத் தலேவரின் ஆட்சி அதிகாரத்திற்கு உட்பட்ட காரியங் களே இந்தப் பேரவையில் எழுப்பக் கூடாது. கேள்விகளே அனுமதிப்பது, முன் அறிவிக்கைகளே அனுமதிப்பது, அவையுரிமைக் கேள்விகளே அனுமதிப் பது, ஒற்றிவைப்புத் தீர்மானங்களே அறையில் தள்ளிவிடுவதுபோன்ற காரியங்கள் பேரவைத் தலேவரின் அதிகாரத்திற்கு உட்பட்டவை. அவை பற்றி இங்கு கேள்விகள் எழுப்பக் கூடாது.

In May's Parliamentary Practice page 350 it is stated—

' Questions dealing with matters within the jurisdiction of the Speaker should be addressed to the Speaker by Private Notice.'

இந்தக் காரியங்களேப்பற்றி கடிதங்கள் எழுதலாம், தனியாக வந்து என்னேக் கேட்கலாம், ஆனுல் கேள்வியை அனுமதித்தது சரியா

அல்லது தவரு என்று இங்கு பேரவையில் கேட்கக் கூடாது. தனியாக என் அறைக்கு வந்து கேட்கலாம் அல்லது கடிதம் எழுதலாம்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** "செயலற்றுப்போன திருநெல்வேலி நகராட்சி மன்றம்" என்பதை "செயல்படாமல் செய்யப்பட்ட திருநெல்வேலி நகராட்சி மன்றம்" என்று மாற்றவேண்டும் என்பதுதான் என் வேண்டுகோள். இப்போது இருப்பதைப் பார்த்தால் தாஞகவே செயல்படாமல் ஸ்தம்பித்து விட்டது என்ருகிவிடும் என்றுதான் சொன்னேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதற்காக என்ன கேள்வி போடு கிறீர்கள் ?

**திரு. வி. கே. கோதண்டராமன் :** அதைத் திருத்த வேண்டும், அதை மாற்றவேண்டுமென்று தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அனுமதிக்கப்பட்ட வினவை மாற்ற முடியாது.

**திரு. அ. லெ. சுப்பிரமணியம் :** மக்களிடமிருந்து வந்த அப்ஜெக்ஷன்ஸ் பற்றி திரு. விஞயகம் அவர்கள் கேட்டார்கள். சென்ற முறை திருநெல் வேலி தொகுதியில் நடந்த தேர்தலில் தி. மு. க. விற்கு 41,000 சில்லறை வோட்டுகளும், காங்கிரஸ் கட்சி அங்கத்தினர்களுக்கு 16,000 வோட்டுகளும் கிடைத்தன. மக்கள் அந்த நகரசபையைக் கலைப்பதை விரும்பவில்லை என்பதையும், நகரசபை மீண்டும் இயங்குவதற்கு விருப்பம் தெரிவிக்கிருர்கள் என்பதையும் அரசு உணருமா ? அதை அங்கத்தினர் அவர்களுக்கு கனம் அமைச்சரவர்கள் உணர்த்துவார்களா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** அங்கத்தினர் அவர்களே, திருநெல்வேலி நகராட்சி மனறம் மீண்டும் நிலைத்திருக்கவேண்டும் என்று உறுதி அளிப்பதற்காக இக் கேள்வியைக் கேட்டிருக்கிருர்கள் என்று நினைக்கிறேன்.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** ஒரு பாதிரியாரிடமிருந்து மட்டும் குறிப்பு வந்தது என்று சொன்ஞர்கள். அந்தப் பாதிரியார் உள்நாட்டுப் பாதிரி யாரா அல்லது வெளிநாட்டுப் பாதிரியாரா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** உள்நாட்டுப் பாதிரியாரா அல்லது வெளிநாட்டுப் பாதிரியாரா என்ற ஆராய்ச்சி நமக்குத் தேவையில்லை. அவர் உள்நாட்டுப் பாதிரியார் என்றுதான் நான் கருதுகிறேன்.

**திரு. மு. ச. சிவசாமி :** நெல்லை நகராட்சி மன்றம் தாஞகவே செயலற் றுப் போனதா அல்லது செயலற்றதாக போக ஆக்கப்பட்டதா ? அப்படி ஆக்கப்பட்டதென்ருல் அது யாரால் ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** தாஞகவே செயலற்றுப் போக வில்லை. செயலற்றதாக ஆக்கப்பட்டது. கடந்த காலத்தில் இருந்த அரசாங்கம் அப்படி அந்த நகராட்சி மன்றத்தை ஆக்கிவிட்டது.

**ஹாஜி ம. மு. பீர் முஹம்மது :** நெல்லை நகராட்சி மன்றம் செயல் படாமல் ஆக்கப்பட்டு வழக்குமன்றத்தில் வழக்கு தொடர்ந்து அதன் பேரில் நீதிமன்றம் தந்த தீர்ப்பு என்ன ? அதைப் பற்றி விளக்கம் தருவார்களா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** அதுபற்றிய முழு விவரங்கள் இல்லை. அதுபற்றி அளிக்கப்பட்ட தீர்ப்பின் விவரங்கள் அத்தனையும் பத்திரிகைகளில் வந்திருந்தன. கீழ்மன்றத்தில் நகராட்சி மன்றத்திற்கு சாதகமாகவும் மேல் முறையீட்டில் நகராட்சி மன்றத்திற்குப் பாதகமாகவும் அமைந்தது. அதற்கு மேல் முறையீடு செய்வதாக இருந்த நிலையில் புது அரசு இந்த முடிவு எடுத்ததை எல்லோரும் அறிவர்.





### கும்பகோணம் நகராட்சி மன்றம்

*376 விஞ.—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு உள் ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கும்பகோணம் நகரசபையில் சென்ற 10 வருட காலத்தில் அட்வான்சாக தனியாருக்குக் கொடுக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

(இ) அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** (அ) கும்பகோணம் நகராட்சி மன்றம் கடந்த பத்தாண்டுகளில் தனியார்களுக்கு ரூ. 4,42,458·42 (நாலு இலட்சத்து நாற்பத்திரண்டாயிரத்து நானூற்று ஐம்பத்தெட்டு ரூபாய் நாற்பத்திரண்டு காசு மட்டும்) முன் பணமாக வழங்கியுள்ளது.

(இ) ரூ. 3,56,289·58 (மூன்று இலட்சத்து ஐம்பத்தாருயிரத்து இருநூற்று எண்பத்தொன்பது ரூபாய் ஐம்பத்தெட்டு காசு மட்டும்) இது வரை சரிக்கட்டப்பட்டுள்ளது. ரூ. 12,771·31 (பன்னிரண்டாயிரத்து எழுநூற்று எழுபத்தொரு ரூபாய் முப்பத்தொரு காசு மட்டும்) தனியார் களிடமிருந்து வசூலிக்கப்பட்டுள்ளது. நிலுவையாக உள்ள முன் பணங் களைச் சரிக்கட்டுவதற்கு அவசியமான முயற்சிகளை மேற்கொண்டு வருவ தாகக் கும்பகோணம் நகராட்சி ஆணையாளர் அறிவித்துள்ளார்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** இது எந்த ஆண்டு முதற்கொண்டு எப்படிக் கொடுக்கப்பட்டிருக்கிறது ? அப்படி கொடுக்கக் கூடிய அள விற்கு விதியிருக்கிறதா ? அதுபோன்று எதஞல் கொடுக்கப்பட்டது ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** 1958-59-ல் இருந்து இதுவரை யில் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒப்பந்தக்காரர்களிடம் வேலைகளை முடிக்க முன்பணம் வழங்குவதற்கு நகராட்சி மன்றங்களுக்கு அதிகார மிருக்கிறது. அந்த அடிப்படையில் பல்வேறு வேலைகளுக்கு முன்பணம் வழங்கி வேலை செய்யச்செய்ய கழித்திருக்கிருர்கள். கணக்குகள் சரிக் கட்டப்பட்டிருக்கிறது.

**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** இதஞல் கும்பகோணம் நகரசபைக்கு நஷ்டம் ஏற்பட்டது என்று அரசு கருதுகிறதா ? அப்படி ஏற்பட்டிருந்தால் அதைத் திரும்பப்பெற என்ன முயற்சிகள் எடுக்கப்பட்டன ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** அப்படி எந்த நஷ்டமும் ஏற் பட்டதாக இதுவரை தெரியவில்லை. ரூ. 401·39 காசுதான் வசூலிக்கப்படாமல் இருக்கிறது என்று கணக்கு கொடுத்திருக்கிருர்கள். வேண்டிய நட வடிக்கைகள் எடுக்கப்பட்டு இருக்கிறது. வசூலாகும் என்று ஆணை யாளர் தெரிவித்திருக்கிருர்கள்.

**திரு. நா. காசிராமன் :** இது கும்பகோணம் நகரசபையைப் பற்றியதாக இருப்பதால் நான் ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன். முன் பணம் கொடுக்கப்பட்டிருப்பதாகச் சொல்கிருர்கள். கும்பகோணம் எலக்ட்ரிஸிட்டி கார்ப்பரேஷன், சிமெண்ட் கம்பனி இவைகளுக்கு அவ்வப்போது கொடுக் கவேண்டிய அடிப்படையில் இலாகாவின் அனுமதி பெற்றுத்தான் சிமெண்ட் டுக்காக, எலெக்ட்ரிஸிட்டி கார்ப்பரேஷன், ஹவுஸ் சர்வீஸ் கனெக்ஷ னுக்காக, டெப்பாஸிட்டுக்காக இவை போன்றவற்றிற்கு கொடுக்கப்பட்ட முன் பணங்கள்தான் இதில் சேர்ந்திருக்கிறது என்பதுபற்றி அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** எலெக்ட்ரிசிட்டி சார்ஜஸ், சிமெண்ட் இவைகளுக்காக கொடுக்கப்பட்டிருப்பதாக குறிக்கப்பட்டிருக்கிறது. தொடர்பான கேள்வி புள்ளிவிவரங்கள் தெரிந்து கொள்ள வேண்டுமென் பதற்காக கேட்கப்பட்டது. நகராட்சி மன்றத் தலைவர் அவர்கள் சில குறிப்பிட்ட இனங்களைச் சொல்வது மற்ற உறுப்பினர்களுக்கு அதன் பேரில் ஐயப்பாடு கூட ஏற்படும்.

**திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் :** தலைவரவர்களே, தென்னூர்க்காடு மாவட்டத்தில் ஓர் ஏரி என்று தெரிவித்தார்கள். அது எந்த ஏரி என்று அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்தத் துணை வினா, மூல வினாவை ஒட்டியதாக இல்லாமலிருப்பதால் இதை அனுமதிக்க முடியவில்லை. வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

**2. அமைச்சரின் விளக்கம்.**

**துணை வினாவின்-விடைக்குத் திருத்தம்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 173-வது வினாவிற்கு விடை அளித்த மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் ஒரு துணை வினாவிற்கு அளித்த விடையில் ஒரு திருத்தம் செய்ய விரும்புகிறார்கள். அதை அனுமதிக்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** சேலம் மாவட்டத்தைப் பற்றி ஒரு விவரம் கேட்டார்கள். முதலில் இந்தக் குறிப்பு என்னிடம் இல்லாத காரணத்தினால் அந்தக் குறிப்பை இப்போது கூற விரும்புகிறேன்.[a] சேலம் மாவட்டத்தில் உள்ள குளங்கள், இப்போது புதிதாக அமைக்கப்பட்ட குளங்கள் இரண்டு. ஒன்று, செம்மலை சிவிலிக்கரடு, ஓமலூர் தாலுகாவில். இன்னொன்று, கன்னூரப்பனை கிராமத்தில் உள்ளது.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

**3. கவன ஈர்ப்பு.**

**குமரி மாவட்டத்தில் பருவமழையின்மையும், வரிகள் தள்ளுபடியும்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ஆர். பொன்னப்ப நாடார் அவர்கள் 41-வது விதியின்கீழ், உணவுத்துறை அமைச்சரவர்களின் கவனத்தை ஈர்க்க ஒரு தீர்மானத்தைக் கொண்டு வருவார்கள்.

THIRU R. PONNAPPA NADAR : Sir, I call the attention of Hon. the Minister for Food to a matter of urgent public importance, namely withering of crops in Kanyakumari district due to the failure of monsoon and the need for remission of land revenue and water-cess and also adequate supply of foodgrains to tide over the crisis in the ensuing lean months of this year.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** பேரவைத் தலைவரவர்களே, பருவமழை பொய்த்ததன் காரணமாக கன்னியாகுமரி மாவட்டத்தில் பயிர்கள் கருகிக் கொண்டிருப்பதாகவும், அதனால் நிலவரியையும், தண்ணீர் வரியையும் தள்ளுபடி செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதென்றும், உணவு தானியங்கள் போதுமான அளவு வழங்கப்பட வேண்டுமென்றும் நாட்ட ஈர்ப்பு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

பயிர் விளைந்து கொண்டிருந்த 65,000 ஏக்கரில், 20,000 ஏக்கர் நெற்பயிர்கள் வடகிழக்குப் பருவமழை பொய்த்ததன் காரணமாகக் கருகிவிட்டன. கிட்டும் நீரைக் கொண்டு முறைமாற்று வழிகளில் தண்ணீர் பாய்ச்சி, பயிர்கள் மேலும் கருகாமலிருக்க நடவடிக்கைகள்

[a] 109-ம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் கா ண் க.





மேற்கொள்ளப்படுகின்றன. பேச்சிப்பாறை, பெருஞ்சாணி அணைக்கட்டுகளிலுள்ள தண்ணீர் முடிந்தவரை சிறந்த முறையில் பயன்படுத்தப்பட்டது. பாதிக்கப்பட்ட பரப்பில் சிறப்பு பயிர் மதிப்பீட்டிற்கு ஏற்பாடு செய்யுமாறு வருவாய்க் கோட்ட அதிகாரிக்குக் கலெக்டர் கட்டளைகள் பிறப்பித்துள்ளார். வரியைத் தள்ளுபடி செய்வதற்கான செயற்குறிப்புகளை அவர் வருவாய்த் துறை வாரியத்திற்குப் பணிந்தனுப்பியுள்ளார்.

4,000 டன்கள் அரிசி கையிருப்பில் உள்ளது. கொள்முதல் செய்வதற்கான குறிக்கோள் அளவு 4,000 டன் அரிசி கிடைக்கக் கூடிய அளவு நெல் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. தஞ்சாவூர் சம்பா அறுவடையிலிருந்து அனுப்ப வேண்டிய அளவு 10,000 டன் அரிசி கிடைக்கக் கூடிய அளவு நெல்லாகும். எனவே, 18,000 டன் அரிசி கிடைக்கக்கூடிய அளவில் நெல் நம்மிடம் இருக்கும். இது மேலும் 5 திங்களுக்குப் போதுமானது.

**4. 1968-69-ம் ஆண்டிற்கான நிதிக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு—(தொடர்ச்சி).**

**கோரிக்கை எண் 46—அரசாங்க வாணிகத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, நிதிக்கோரிக்கை. இந்த கோரிக்கை எண் 46, அரசாங்க வாணிகத் திட்டங்களுக்கான மூலதனச் செலவுபற்றியது. மாண்புமிகு உணவுத்துறை அமைச்சரவர்கள் இதைக் கோருவார்கள்.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 1,07,86,78,300 under Demand No. 46—Capital Outlay on Schemes of Government Trading."

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, இதற்கான வெட்டுத் தீர்மானங்கள்.

THIRU K. VINAYAKAM : Sir, to discuss the general policy and the desirability of extending the scheme of "one measure one rupee" to the entire State instead of confining to the areas of statutory rationing, I move the cut motion standing in my name—

"That the allotment of Rs. 1,07,86,78,300 under Demand No. 46—Capital Outlay on Schemes of Government Trading — Be reduced by Rs. 100."

THIRU. R. PONNAPPA NADAR: I second the cut motion.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானங்களை வழிமொழியத் தேவையில்லை.

**திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் :** ஐயா, "கொள்கை பற்றி விவாதிக்க"—

"கோரிக்கை எண் 46— அரசாங்க வாணிகத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 1,07,86,78,300-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகின்றேன்.

**திரு. செ. பாலசுப்பிரமணியன்** : ஐயா, " கொள்முதலிலிருந்து
ஐந்து எக்கர் நில உடமைக்கு விலக்களிக்க வேண்டியதுபற்றி விவா
திக்க "—

" கோரிக்கை எண் 46—அரசாங்க வாணிகத் திட்டங்களுக்கான மூலதனச்
செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 1,07,86,78,300-ல்
ரூ. 100 குறைக்க வேண்டும் "
என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகின்றேன்.

**திரு. சோ. அழகர்சாமி** : ஐயா, " விவசாய விளைபொருள்களுக்கு
நியாயவிலை, உற்பத்தியாளர்களுக்குக் கிடைக்கும் வகையில் அரசாங்கமே
விவசாயிகளிடமிருந்து பருத்தி, மிளகாய் வத்தல், மல்லி, உளுந்து
போன்ற பொருள்களையும் கொள்முதல் செய்ய வேண்டுமென்று கோர "
" கோரிக்கை எண் 46—அரசாங்க வாணிகத் திட்டங்களுக்கான மூல
தனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 1,07,86,78,300-ல்
ரூ. 100 குறைக்க வேண்டும் "
என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. ஏ. அ. சுப்பராஜா** : ஐயா, " சர்க்கார் கணக்கில் நெல் கொள்
முதல் செய்து அதைத் தனிப்பட்ட அரிசி ஆலை அதிபர்களிடம் அரிசியாக்க
அளிக்கும் தருணத்தில், அரிசியின் தரத்தை கவனிக்கத் தனி அதி
காரிகள் நியமிக்கும் பொருள்பற்றி விவாதிக்க ".

" கோரிக்கை எண் 46—அரசாங்க வாணிகத் திட்டங்களுக்கான மூல
தனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 1,07,86,78,300-ல்
ரூ. 100 குறைக்க வேண்டும் "
என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திருமதி கே. பி. ஜானகி அம்மாள்** : ஐயா, "முனிசிபல் நகரங்களுக்கும்,
நகரப் பஞ்சாயத்துகளுக்கும் அரிசி ரேஷன் அளவை 12 அவுன்ஸாக
கொடுப்பதன் மூலம் வெளி மார்க்கெட் விலை ஏற்றத்தைத் தடுத்து
நிறுத்த முடியும் என்பதைச் சுட்டிக்காட்ட "
" கோரிக்கை எண் 46—அரசாங்க வாணிகத் திட்டங்களுக்கான மூலதனச்
செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 1,07,86,78,300-ல்
ரூ. 100 குறைக்க வேண்டும் "
என்ற வெட்டுத்தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : இப்பொழுது நிதிக் கோரிக்கையும்,
வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளன. மாண்பு
மிகு உணவுத்துறை அமைச்சரவர்கள் உரையாற்றுவார்கள்.

* **மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன்** : பேரவைத் தலைவரவர்
களே, இந்த மானியக் கோரிக்கையினுடைய உரையைத் துவங்கு
வதற்கு முன்பு என்னுடைய பெயராலே உணவுத்துறை பற்றிய கொள்
கைக் குறிப்பு ஒன்று விளக்கப்பட்டுள்ளது. அதனைப் படிப்பதற்காக
இந்த மன்றத்தின் விலைமதிக்க முடியாத நேரத்தை எடுத்துக்கொள்ள
வேண்டாமென்று கருதுகிறேன். அந்த நேரத்தில் உறுப்பினர் தங்
களுடைய நல்ல கருத்துக்களை, ஆக்க பூர்வமான கருத்துக்களைக் கூறு
வதற்குப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்ற முறையில் நான் இதனைப்
படித்ததாக நடவடிக்கைக் குறிப்பில் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்
கொண்டு அதற்கு மேல் சில கருத்துக்களை விளக்கும் வகையில் என்னு
டைய உரையை அமைத்துக்கொள்ளலாம் என்ற கருத்தைத் தெரிவித்துக்
கொள்ளுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : கொள்கைக் குறிப்பை நீங்கள்
படித்ததாக நடவடிக்கைக் குறிப்பில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று
கட்டளையிடுகிறேன்.

**மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன்** : பேரவைத் தலைவரவர்களே,
அதற்குமேல் சில முக்கியமான கருத்துக்களைச் சொல்லலாம் என்று கருதி
என்னுடைய உரையைத் துவங்குகிறேன்.





உண்மையிலேயே இந்த மானியம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த
தாகும். இது மிகவும் முக்கியமான பிரச்சினையாகும். இந்தக் கொள்
கைக் குறிப்பில் மன்ற உறுப்பினர்களுக்கும், அதேமாதிரி வெளியிலே
இருக்கிற எல்லோருக்கும் இந்த அரசாங்கம் இதிலே மேற்கொண்
டிருக்கிற கொள்கையின் உண்மை நிலையை, தன்மையை உணர்த்துவதற்
காகத் தெளிவாக விளக்கப்பட்டிருக்கின்றது.

[a] உணவு உற்பத்தியைப் பெருக்க இந்த அரசாங்கம் உறுதியுடன்
எடுத்துக் கொண்டபல நடவடிக்கைகள் 1967–68-ம் ஆண்டில் கணிசமான
பலன் தரத் தொடங்கின. இயற்கை நம்மை சோதித்துச் சென்ற சில
மாதங்களாக நம் மாநிலத்தில் பல பகுதிகளில் மழை பொய்த்திராவிடில்
இன்னும் அதிக அளவில் விளைச்சல் பெருகியிருக்கும்.

உணவு உற்பத்தியைப் பெருக்கத் தீவிர முயற்சிகள் எடுத்துக்கொண்ட
தற்கு ஏற்ப, உணவு விநியோகத்தைச் செம்மையாகவும், சிறப்பான
முறையிலும், செய்வதற்கு அரசாங்கம் பல துணிவான, தீவிரமான முடிவு
களை மேற்கொண்டது. கொள்முதல் தீவிரப்படுத்தப்பட்டது. அதே சமயத்
தில் விவசாயிகளை ஒரு சிறிதும் துன்புறுத்தக் கூடாது என்று மிகத்
தெளிவாகவும், திட்டவட்டமாகவும் ஆணையிடப்பட்டது. ஒரு ஏக்கராவுக்
கும் குறைவாக நிலமுள்ள விவசாயிகளுக்குக் கொள்முதலிலிருந்து அடி
யோடு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. 10 ஏக்கரும், அதற்கு மேற்பட்டும்
நிலவுடைமை கொண்ட விவசாயிகளிடமிருந்து விற்பனைக்குரிய உபரி நெல்
அனைத்தும் கொள்முதல் செய்யப்படுகிறது. இந்த வரம்புகளுக்கிடையே
உள்ள விவசாயிகளின் நிலங்களிலிருந்து, அவர்கள் உடமைக்கு ஏற்ப,
உள்ளூர் நிலைமைகளை அனுசரித்து மாவட்ட ஆட்சித் தலைவர்களால்
நிர்ணயிக்கப்பட்டுள்ள லெவி விகிதங்களையொட்டி, நெல் கொள்முதல்
செய்யப்படுகிறது. இந்தத் தீவிர நடவடிக்கைகளின் காரணமாக, 1967
ஜனவரி முதற்கொண்டு டிசம்பர் 31 தேதி முடிய சுமார் 8·5 இலட்சம்
அரிசி டன்கள் கொள்முதல் செய்யப்பட்டன. 1966-ம் ஆண்டில் இதே
காலத்தில் கொள்முதல் செய்யப்பட்ட அளவு சுமார் 7·2 லட்சம் டன்கள்
தான்.

இந்த அரசாங்கம் பொறுப்பு ஏற்றபின் போதிய அளவு தானி
யங்களைச் சேமித்து வைக்கப் பல்வேறு நடவடிக்கைகள் எடுத்துக்கொண்ட
தன் பயனாகத்தான் கொள்முதலில் இவ்வளவு வெற்றி காண முடிந்தது.
இம்மாநிலத்திலிருந்து மற்ற மாநிலங்களுக்கு அரிசி கடத்தப்படுவதைத்
தடுக்க மாநில எல்லைகளில் கடுமையான தணிக்கை நடவடிக்கைகள்
மேற்கொள்ளப்பட்டன. இதன் பயனாக நெல்லும் அரிசியும் நம் மாநிலத்
திற்குள்ளாகவே அதிகமாகப் புழங்கவும் கொள்முதல் கணிசமாக உயரவும்
வழி பிறந்தது. உணவுப் பண்ட வழங்குதுறை அலுவலர்களும், காவல்
துறை கண்காணிப்பு அதிகாரிகளும் நெருங்கி ஒத்துழைத்ததன் பயனாக,
பதுக்கல், கள்ளக்கடத்தல் போன்றவற்றை தடுக்கவும் தீவிர நடவடிக்
கைகள் எடுக்கப்பட்டன. அதே சமயத்தில் மாவட்டங்களுக்குள்ளாகவே
தானிய போக்குவரத்தின் மீது விதிக்கப்பட்டிருந்த தடைகளும், சொந்த
உபயோகத்திற்காக அரிசியை எடுத்துச் செல்வதின்மீது விதிக்கப்பட்டிருந்த
தடைகளும் நீக்கப்பட்டன. சொந்த உபயோகம் என்று சொல்லி கடத்
தல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதும் தடுக்கப்பட்டது. மாநிலத்திற்குள்ளாக
அரிசி, நெல் போக்குவரத்தை கட்டுப்படுத்துவதற்காக நிறுவப்பட்ட தணிக்கை
நிலையங்களின் எண்ணிக்கை, 1966-ம் ஆண்டில் 366-ஆக இருந்தது,
1967-ம் ஆண்டில் 1,041 ஆக உயர்ந்தது. நம் மாநிலத்திலிருந்து
வெளியேஅரிசி கடத்தப்படுவதை தடுக்க எல்லையில் முக்கியமான இடங்
களில் 93 தணிக்கை நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டன. இத் தணிக்கை
நிலையங்களுக்குக் காவல்துறை அதிகாரிகள் பொறுப்பு ஏற்றனர். தானிய
கையிருப்பை உயர்த்துவதற்கு உரிய நடவடிக்கைகளும், கள்ளக் கடத்தலைத்
தடுக்க கடுமையான நடவடிக்கைகளும் எடுக்கும் அதேசமயத்தில்,
பொது மக்களுக்கு எரிச்சல் தரக்கூடிய சிறுசிறு இடைஞ்சல்களையும் தடை
களையும் நீக்குவது என்ற கொள்கையை அரசாங்கம் உறுதியாகக் கடைபிடித்து
வந்துள்ளது.

---

[a] அமைச்சரின் அச்சிட்ட உரை.

[திரு. கே. எ. மதியழகன்] [1968 மார்ச் 8

குடும்பக் கார்டுகளையும், ரேஷன் அட்டைகளையும் பொறுத்த அளவிலே பொய்யான அட்டைகளும், போலிக்கார்டுகளும் பெருவாரியயக பரவியிருந்தன என்ற புகாரும் உணவுத்துறையின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. உணவுத்துறை சோதனைப் பிரிவு இதைத் தடுப்பதற்கு தீவிர நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டுள்ளது. இதன் பயனாக பதுக்கல்காரர்களிடமும் கள்ளச்சந்தைக்காரர்களிடமும் அரிசி சிக்கிவிடாமல் பொதுமக்களுக்குக் கிடைக்க வழி பிறந்தது. உணவுப் பண்டங்கள் வழங்குதுறையின் சோதனைப் பிரிவு மேற்கொண்ட முயற்சிகளின் பலனாக பல போலி கார்டுகள் ரத்து செய்யப்பட்டன.

நெருக்கடியான நிலைமைகளைச் சமாளிக்க முந்தைய ஆண்டுகளில் மத்திய அரசிடமிருந்து கடனாகப் பெற்றிருந்த அரிசி அனைத்தையும் இந்த ஆண்டில் மத்திய அரசுக்கு நாம் திருப்பித் தந்து விட்டோம். நம் அண்டை மாநிலமான கேரளாவிடம் நாம் எப்பொழுதுமே அதிக மதிப்பும், பரிவும் காட்டி வருகின்றோம். கேரளத்திற்கு 1967 மார்ச்சுக்குப் பின் இதுவரை தமிழ் நாட்டிலிருந்து 50,000 டன்கள் அரிசி அனுப்பப்பட்டன. இதில் மத்திய அரசிடமிருந்து முந்திய அரசு கடனாக வாங்கியிருந்த 18,000 டன்கள் அரிசியும் அடங்கியிருக்கிறது.

கொள்முதல் ஏற்பாடுகளைத் தீவிரப்படுத்திய பின்பு, வினியோக முறைகளை செம்மைப்படுத்தவும், சட்ட பூர்வ பங்கீடு முறை அமலில் உள்ள பகுதிகளில் தானியக் கையிருப்பை கணிசமான அளவு சேர்த்து வைக்கவும், அரசாங்கம் நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டது. தானியக் கையிருப்பை பெருக்கிக்கொண்ட பிறகு, “ரூபாய்க்கு படி அரிசி திட்டம்” சட்ட பூர்வ பங்கீடு முறை அமலிலுள்ள சென்னை நகரத்திலும், கோவையிலும், 1967-ம் ஆண்டு மே மாதம் 15-ம் தேதி முதற்கொண்டும், சென்னைச் சார்புப் பகுதிகளில் 1967-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15-ம் தேதி முதற்கொண்டும் கொண்டு வரப்பட்டது. சென்னை நகரத்தில் 29·13 இலட்சம் பேர்களும், கோவையில் 8·37 இலட்சம் பேர்களும், சென்னைச் சார்புப் பகுதிகளில் 5·30 இலட்சம் பேர்களும், ஆக மொத்தம் 42·80 இலட்சம் பேர் இந்த ரூபாய்க்குப் படி அரிசி திட்டத்தின் பலனைப் பெறுகிறார்கள். கல்வி நிலையங்களுக்கும், மாணவர் விடுதிகளுக்கும், அனாதைக் குழந்தைகள் இல்லங்களுக்கும் இத் திட்டம் விரிவுபடுத்தப்பட்டு, அவற்றிற்கும் குறைந்த விலையில் அரிசி வழங்கப்படுகிறது. சட்டபூர்வமற்ற பங்கீடு உள்ள பகுதிகளில் குடும்பக் கார்டுகள் வழங்கப்பட்டுள்ளதன் காரணமாக, 126 இலட்சம் பேர் பலன் அடைந்துள்ளனர்.

1967-ம் ஆண்டில் அதிதிகள் கட்டுப்பாடு உத்தரவின் கீழ் தான்ய உணவு 25 பேருக்கு மேல் பரிமாறக்கூடாது என்று விதிக்கப்பட்டிருந்த நிபந்தனைகள் தளர்த்தப்பட்டன. அரிசியாலும், அரிசிப்பண்டங்களினாலும் செய்யப்பட்ட உணவு வகைகள் குறிப்பிட்ட ஒரு எண்ணிக்கையினருக்கே பரிமாறப்பட வேண்டுமென்ற நிபந்தனையைத் தளர்த்தி அந்த எண்ணிக்கை இரு மடங்காக ஆக்கப்பட்டது. திங்கள் அன்றும், வியாழன் அன்றும் மாலை 5 மணிக்குப் பிறகு உணவு விடுதிகளில் அரிசி பரிமாறக்கூடாது என்றிருந்த நிபந்தனை நீக்கப்பட்டது. உணவு தானியக் கையிருப்பு நிலைமை சீராகுமென்று எதிர்ப்பார்த்து, முன்கூட்டியே அரசாங்கம் இந்த நிபந்தனைகளைத் தளர்த்தியதற்குக் காரணம், அவசியமற்ற நிபந்தனைகளால் பொது மக்களுக்கு இடைஞ்சல் ஏற்படக்கூடாது என்பதுதான்.

பச்சை அரிசி கொள்வினை செய்வோருக்குப் போதுமான அளவில் அரிசி ஒழுங்காக கிடைப்பதற்கு வசதி செய்யும் பொருட்டு, 1967 மார்ச் மாதம் நான் ஹைதராபாத் சென்று ஆந்திர மாநில முதலமைச்சருடன் பேச்சு வார்த்தைகள் நடத்தினேன். அதன் பயனாக நல்ல ரக பச்சை அரிசியை நம் மாநிலத்திற்குத் தருவதற்கு அவர் ஒப்புக்கொண்டார். அதற்குப் பதிலாக அதே அளவு புழுங்கல் அரிசியை நாம் கேரளத்திற்கு அனுப்ப வேண்டுமென்ற அடிப்படையில் இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த உடன்பாட்டை ஒட்டி 1967-ம் ஆண்டில் சுமார் 15,000 டன் பச்சை அரிசி நமக்கு ஆந்திராவிலிருந்து கிடைத்தது.



1968 மார்ச் 8] [திரு. கே. எ. மதியழகன்]

1967-ம் ஆண்டில் நாம் மேற்சொன்ன நடவடிக்கைகளை மேற்கொண்டதன் பயனாக, உணவு வினியோக நிலைமையைத் திருப்திகரமாக இந்த அரசாங்கம் தன்னால் இயன்றது அனைத்தையும் செய்துள்ளது என்பதை இப் பேரவை அறிய முடியும். 1968–69-ம் ஆண்டில் நம்முடைய தேவைகளையும், நமக்குக் கிடைக்கக்கூடிய வசதிகளையும் ஆய்ந்து, மதிப்பீட்டை இப்பொழுது அவை முன்பு வைக்க விரும்புகிறேன்.

சட்ட பூர்வ பங்கீடுப் பகுதிகளிலும் சட்டபூர்வமற்ற பங்கீடுப் பகுதி
களிலும் சேர்த்து, சில மாதங்களுக்கு முன்பு வரை மாதம் 52,000
டன்கள் அளவில் அரிசி பங்கீடுக் கடைகள் மூலமாக வழங்கப்பட்டு வந்தது.
இத் தொகை இப்பொழுது 58,000 டன்கள் அரிசி அளவுக்கு உயர்ந்துள்ளது.
தானியப் புழக்கம் குறையும் மாதங்களில் நாம் மேலும் அதிகமாக
உணவு பங்கீட்டுக் கடைகளின் மூலம் தானியம் வழங்கவேண்டியிருக்கும்.
குடும்பக் கார்டு முறையை மேலும் பல புதிய பகுதிகளுக்கு விரிவுபடுத்த
வேண்டுமென்று தற்போது பல கோரிக்கைகள் வந்த வண்ணம் இருக்
கின்றன. இந்த கோரிக்கைமீது எங்களுக்கு மிகுந்த அனுதாபம் உண்டு.
உணவுக் கையிருப்பு நிலைமையை உத்தேசித்து குடும்பக் கார்டு முறையை
புதிய பல பகுதிகளில் விரிவுபடுத்துவதற்கு நாம் ஒத்துக்கொள்ளக்கூடிய
நிலைமையில் இல்லை. ஆனால், விளைச்சல் பெரிதும் பாதிக்கப்பட்டு நிலைமை
மோசமாக உள்ள சில பகுதிகளில் மட்டும் இதை விரிவுபடுத்துவது
தவிர்க்க முடியாத தேவையாகிவிட்டது. இதன் பயனாக இந்த ஆண்டில்
நாம் உணவு பங்கீட்டுக் கடைகள் மூலமாக வினியோகிக்க இருக்கும்
தானியங்கள் மாதம் ஒன்றுக்குச் சராசரி 65,000 டன்கள் அளவில்
வருமென்று மதிப்பிட்டுள்ளோம். இந்த அளவில் வினியோகம் செய்வ
தற்கே நமக்கு 7·8 இலட்சம் அல்லது சுமார் 8 இலட்சம் அரிசி டனகள்
இந்த ஆண்டில் தேவைப்படும். வெவ்வேறு மாவட்டங்களிலிருந்து
தானியங்களைத் திரட்டிப் பல பகுதிகளில் பரவலாக உள்ள பல இலட்சக்
கணக்கான மக்களுக்கு உணவு தானியங்கள் வினியோகிக்கும் முறை
ஒழுங்காக நடைபெற வேண்டுமானால், கூடுதலாக 1 இலட்சம் டன்
புழக்கத்திற்கு வைத்துக்கொண்டால்தான் இந்த எட்டு இலட்ச டன் வினி
யோகம் ஒழுங்காக நடக்கும். மேலும் இயற்கையின் சோதனைகளுக்கு
ஈடு கொடுக்கவும், எதிர்பாராத விதமாக ஏற்படும் இன்னல்களைச் சமாளிக்
கவும் நாம் ஒரு இலட்சம் டன் அரிசி சேமிப்பில் எப்போதும் வைத்துக்
கொள்ள வேண்டும். தானிய சேமிப்பு எந்த அளவுக்கு அதிகமாக
இருக்கிறதோ, அந்த அளவுக்கு நம்முடைய நிலைமையும் திருப்திகரமாக
இருக்கும். இவை போக, நம் நிலைமைக்குப் பாதகம் இல்லாமல் எவ்வளவு
அதிகமாக கேரளத்திற்கு அனுப்ப முடியுமோ அவ்வளவு அனுப்ப
அரசாங்கம் விரும்புகிறது. ஆகவே இப்பொழுதுள்ள வினியோக
முறைப்படி நம் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கே 1968-ம் ஆண்டில்
நாம் சுமார் 10 இலட்ச அரிசி டன்கள் கொள்முதல் செய்ய
வேண்டியிருக்கும்.

சம்பா பயிரில், 1968-ம் ஆண்டு மே மாதம் 31-ம் தேதி முடிய, நாம்
5 இலட்சம் டன்கள் அரிசி கொள்முதல் செய்ய வேண்டுமென்ற இலக்கு
நிர்ணயித்துள்ளோம். இதற்கு எதிராக, பிப்ரவரி இறுதி வரை 2·6
இலட்சம் டன்கள் ஏற்கனவே கொள்முதல் செய்யப்பட்டுள்ளன. வேளா
ளப் பெருமக்கள் விரும்பி அளித்துள்ள ஒத்துழைப்புடன் நாம் சம்பாப்
பயிரில் 5 இலட்சம் டன்கள் கொள்முதல் இலக்கை நிறைவேற்ற முடியு
மென்ற உறுதியான நம்பிக்கை எனக்கு உண்டு. இந்த ஆண்டில்
மொத்தம் 10 இலட்சம் டன்கள் அரிசி கொள்முதல் செய்வதற்கு, ஆண்
டின் பிந்திய பகுதியில் இரண்டாம் பயிரிலிருந்தும் குறுவைப் பயிரிலி
ருந்தும் நாம் தீவிரமாகக் கொள்முதல் செய்ய வேண்டும். இதில் நமக்கு
இயற்கை ஆதரவாக இருக்குமென்றும் உழவர் பெருமக்கள் இப்பொழுதை
போலவே உற்சாகத்துடன் ஒத்துழைப்பார்கள் என்றும் நான் நம்பு
கிறேன்.

1967–68-ம் ஆண்டில் பொது விநியோக முறையின்கீழ் சட்டபூர்வ பங்கீடு, சட்டபூர்வமற்ற பங்கீடு, இரண்டும் அமலில் உள்ள பகுதிகளில் மொத்தம் 6·43 லட்சம் அரிசி டனகள் விநியோகிக்கப்படும். அரிசி விநியோக விலையில் அரசாங்கம் அளித்து வரும் பல்வேறு சலுகைகளின் காரணமாக 1967–68-ம் ஆண்டில் மானியமாக அரசாங்கத்திற்கு ஏற்படும் செலவை ஒட்டி, 5·1 கோடி ரூபாய் வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த மான்யச் செலவு, ரூபாய்க்கு படி அரிசி திட்டத்தினால் மட்டும் ஏற்பட்டதல்ல. சட்டபூர்வமற்ற பங்கீடு பகுதிகளில் உள்ள 126 லட்சம் பேர்களுக்கு வழங்கப்படும் அரிசியிலும் மானியம் அளிக்கப்படுகிறது. இரண்டாவது ரக அரிசிக்கு அரசாங்கத்திற்கு ஆகும் சாரசரி செலவு ஒரு டன்னுக்கு ரூபாய் 795. ஆனால் இந்த அரிசி, டன்னுக்கு ரூபாய் 750 விலையில்தான் கொள்வினை செய்வோருக்கு விற்கப்படுகிறது. ஆகவே ஒவ்வொரு டன்னுக்கும் 45 ரூபாய் மானியமாக அளிக்கப்படுகின்றது. முந்தைய அரசு விவசாயிகளுக்குத் தந்து வந்த குவிண்டால் நெல்லுக்கு மூன்று ரூபாய் போனசினால் ஏற்படுவதுதான இந்தச் செலவு. இந்த போனஸ் இப்பொழுது விலையுடன் சேர்க்கப்பட்டுள்ளது. ஒரு குவிண்டால் நெல்லுக்கு மூன்று ரூபாய் போனஸ் என்றால், ஒரு குவிண்டால் அரிசிக்கு 4½ ரூபாய் ஆகவும், ஒரு டன் அரிசிக்கு 45 ரூபாய் ஆகவும் செலவாகிறது. இப்பொழுது போனசினால் ஏற்படும் செலவை அரசாங்கமே ஏற்றுக்கொள்கிறது. இதன் காரணமாக கொள்வினை செய்வோருக்கு விலையை உயர்த்தவில்லை. இயன்ற அளவு குறைந்த விலைக்குப் பொது மக்களுக்கு அரிசியை விற்கவேண்டுமென்ற கவலையில்தான் அரசாங்கம் இந்த போனஸ் செலவையும் ஏற்றுக்கொண்டுள்ளது. மாதம் ஒன்றுக்கு சராசரி 22,000 டன்கள், அதாவது ஆண்டுக்கு 2·64 இலட்சம் டன்கள் அளவில், இரண்டாம் ரக அரிசி சட்டபூர்வமற்ற பங்கீட்டுப் பகுதிகளில் விநியோகிக்கப்படுகின்றது. இந்த 2·64 இலட்சம் டன்கள் இரண்டாம் ரக அரிசியைச் சட்டபூர்வமற்ற பங்கீட்டுப் பகுதிகளில் விநியோகிப்பதற்கு அரசாங்கத்திற்கு ஏற்படும் மானிய செலவு 118·80 இலட்சம் ரூபாய்.

இது தவிர 1·83 இலட்சம் டன முதல் ரக அரிசி 1967–68-ம் ஆண்டில் விநியோகிக்கப்படும். இதில் பெரும் பகுதி சட்டபூர்வமற்ற பங்கீட்டு முறைகளில்தான் விநியோகம் செய்யப்படுகிறது. இதிலும் விவசாயிகளுக்குத் தரப்படும் 3 ரூபாய் போனஸ் செலவை அரசாங்கமே ஏற்றுக்கொள்கிறது. 1·83 இலட்சம் டன்கள் முதல் ரக அரிசியை கொள்வினை செய்வோருக்கு விநியோகிப்பதன் காரணமாக மான்யத்தை முன்னிட்டு அரசாங்கத்துக் ஏற்படும் நிகர செலவு ரூபாய் 55·08 இலட்சமாக இருக்கும்.

இரண்டாம் ரக அரிசியை சட்டபூர்வமற்ற பங்கீட்டுப் பகுதிகளில் விநியோகிப்பதில் ஏற்படும் மானியச் செலவான 118·80 இலட்சம் ரூபாய் முழுவதும், முதல் ரக அரிசியைக் குறைந்த விலைக்கு விற்பதில் ஏற்படும் மானியமான 55·08 இலட்ச ரூபாயில் மூன்றில் இரு பகுதியும், சட்டபூர்வமற்ற பங்கீட்டுப் பகுதியில் உள்ள 126 இலட்சம் பேருக்குத்தான் போய் சேருகின்றன. ரூபாய்க்கு படி அரிசி திட்டத்தின்கீழ் அளிக்கப்படும் மானியத்திற்கும் இதற்கும் சம்பந்தமில்லை.

## ரூபாய்க்குப் படி அரிசித் திட்டம்.

ரூபாய்க்குப் படி அரிசித் திட்டத்தின்கீழ், சட்ட பூர்வமான பங்கீட்டுப் பகுதிகளான சென்னை நகர், சென்னை சார்புப் பகுதி, கோவை ஆகிய இடங்களில் 9,700 டன்கள் புழுங்கல் அரிசியும், 11,000 டன்கள் பச்சை அரிசியும் ஆக மொத்தம் 90,700 டன்கள் 1967–68-ம் ஆண்டில் விநியோகிக்கப்படும். இரண்டாம் ரகப் புழுங்கல் அரிசிக்கு அரசாங்கத்திற்கு ஆகும் சராசரி செலவு ஒரு டன்னுக்கு ரூபாய் 827. ரூபாய்க்கு படி அரிசி திட்டத்தின்கீழ் அரசாங்கம் விநியோகத்திற்கு நிர்ணயித்துள்ள விலை டன்னுக்கு ரூபாய் 620. ஆகவே இந்த இனத்தின்கீழ் ஒரு டன்னுக்கு ரூபாய் 207 மானியமாக அளிக்கப்படுகிறது.





இரண்டாம் ரகப் பச்சை அரிசிக்கு அரசாங்கத்திற்கு ஆகும் சராசரி செலவு ஒரு டன்னுக்கு ரூபாய் 895. இதற்கு எதிராக அரசாங்கம் நிர்ணயித்துள்ள விநியோக விலை ரூபாய் 620. ஆகவே இதிலும் ஒரு டன்னுக்கு ரூபாய் 275 மானியமாக அளிக்கப்படுகின்றது.

படி அரிசித் திட்டத்தின்கீழும், அத்திட்டத்திற்கு முன்பும் விநியோகிக்கப்பட்டதையும், மொத்தக் கொள்வினை செய்வோருக்கு விநியோகிக்கப் பட்டதையும் சேர்த்து, 1967–68-ம் ஆண்டில் இரண்டாம் ரக அரிசி விநியோகத்தில் அரசாங்கத்துக்கு ஏற்படும் மான்யச் செலவு, 233·10 இலட்ச ரூபாயாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் போனசுக்காக ஆகும் செலவும் அடங்கியுள்ளது. போனசுக்காக மட்டும் செலவு, 62·95 இலட்ச ரூபாய் ஆகும். ரூபாய்க்குப் படியரிசித் திட்டத்தின்கீழ் விநியோகிக்கப்படும் பச்சை அரிசி புழுங்கல் அரிசி இரண்டையும் சேர்த்து, 1967–68-ம் ஆண்டில் மானியமாக அளிக்கப்படுவதை முன்னிட்டு அரசாங்கத்திற்கு ஏற்படும் செலவு 195·22 இலட்சம் ரூபாய். விவசாயிகளுக்குத் தரப்பட்டு வந்து, இப்பொழுது விலையில் சேர்க்கப்பட்டுள்ள போனஸ் தொகையான மூன்று ரூபாய் செலவும் இதில் சேர்ந்துள்ளது. படி அரிசி திட்டம் அமல் செய்யாவிட்டால்கூட இந்த செலவை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவேண்டியிருக்கும். 90,700 டன்கள் அரிசிக்கு இந்த இனத்தில் போனசாக செலவு செய்ய வேண்டிய தொகை 40·81 இலட்ச ரூபாய். ஆகவே ரூபாய்கரு படி அரிசித் திட்டத்தின்கீழ் இரண்டாவது ரக அரிசியை விற்பதால் மட்டும் அரசாங்கத்திற்கு ஏற்படும் மான்யச் செலவு 154·41 இலட்ச ரூபாய் தான்.

ரூபாய்க்கு படி அரிசி திட்டத்தின்கீழ் இரண்டாவது ரக அரிசிதான் சாதாரணமாக விற்கப்படும். ஆனால் இரண்டாம் ரக அரிசி போதிய அளவு கிடைக்காத காரணத்தினால் முதல் ரக அரிசியும் படி அரிசி திட்டத்தின்கீழ் விற்கவேண்டிய அவசியம் இந்த ஆண்டு ஏற்பட்டது. தஞ்சை மாவட்டத்திலே இரு போக விளைச்சல் திட்டத்தின்கீழ் ஆடுதுறை 27 அதிகமாக விளைந்துள்ளது. இது முதல் தரமாக பாகுபாடு செய்யப் பட்டுள்ளது. ஆகவே முதல் தர நெல் நம் தேவைக்கு அதிகமாகவே கிடைத்தது. சட்டபூர்வ பங்கீட்டுப் பகுதிகளில் 1967–68-ம் ஆண்டில் ரூபாய்க்குப் படி அரிசித் திட்டத்தின்கீழ் இரண்டாவது ரக விலையில் முதல் தர அரிசியை 55,000 டன் அளவில் விற்க வேண்டியிருக்கும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. முதல தர நெல்லுக்கு அரசாங்கத்திற்கு ஆகும் சராசரிக் கிரயம் டன்னுக்கு ரூ. 850. அரசாங்கம் இதற்கு நிர்ணயித்துள்ள விநியோக விலை டனனுக்கு ரூபாய் 620. ஆகவே சட்டபூர்வமான பங்கீட்டுப் பகுதிகளில் முதல் தர அரிசி விநியோகிக்கப்படுவதில் ஒரு டன்னுக்கு 230 ரூபாய் அரசாங்கத்திற்கு மானியமாக செலவாகிறது. இதன்படி விநியோகிக்கப்பட்ட 55,000 டன் முதல் தர அரிசிக்காக 1967–68-ம் ஆண்டில் அரசாங்கம் 126·50 இலட்சம் ரூபாய் மானியமாக செலவு செய்ய வேண்டியிருக்கும். இதிலும் 3 ரூபாய் போனசு அடங்கியுள்ளது. ரூபாய்க்கு படி அரிசித் திட்டம் செயல்படாவிட்டால்கூட இந்த போனசைத் தர வேண்டியிருக்கும்.இந்த போனசுக்காக மட்டும் அரசாங்கத்திற்கு ஆகும் செலவு இந்த இனத்தில் 24·75 இலட்சம் ரூபாய். போனஸ் செலவைக் கழித்துவிட்டுப் பார்த்தால், முதல் தர அரிசியைப் படியரிசித் திட்டத்தின் கீழ் சட்டபூர்வ பங்கீட்டுப் பகுதிகளில் விற்பதற்கு அரசாங்கத்திற்கு ஆகும் மானியச் செலவு 101·75 இலட்சம் ரூபாய்.

மேற்சொன்ன விவரங்களிலிருந்து ரூபாய்க்கு படி அரிசி திட்டத்தின் கீழ் மட்டும் 1967–68-ல் ஆகும் மானியச் செலவு 154·41 இலட்சம் ரூபாயும், 101·75 இலட்சம் ரூபாயும் சேர்ந்து, ஆக மொத்தம் 256·16 இலட்சம் ரூபாய் ஆகும். அரசாங்கம் மானியத்திற்கு செலவு செய்யும் தொகை முழுவதும் ரூபாய்க்கு படி அரிசி திட்டத்தினால் மட்டும் ஏற்படும் செலவு என்ற ஒரு தவறான கருத்து அங்கத்தினர்களிடையே இருக்கக் கூடாது என்பதால்தான் இந்த புள்ளி விவரங்களை நான் இந்த அவை முன்பு வைக்கிறேன். ரூபாய்க்கு படி அரிசித் திட்டத்தினால் மட்டும் அரசாங்கத்திற்கு ஏற்படும் மானியச் செலவு 1967–68-ம் ஆண்டில் 2·56 கோடி ஆகும். இத் திட்டத்தினால், 42·80 இலட்சம் பேர் பலனடைகின்றனர். எஞ்சிய 2·5 கோடி ரூபாய் சட்டபூர்வ பங்கீடும், சட்டபூர்வமல்லாத பங்கீடும்

அமலில் உள்ள பகுதிகளில் கொள்வினை செய்வோர் அனைவருக்கும்
அளிக்கப்படும் சலுகைகளாலும், உற்பத்தியாளருக்குத் தரப்படும் போன
ஸாலும் ஏற்படும் செலவாகும். இந்த 2·5 கோடி ரூபாய் மானிய
செலவினால் சட்டபூர்வமல்லாத பங்கீட்டு முறை அமலில் உள்ள பகுதி
களில் 126 இலட்சம் பேருக்கு நன்மை அடைகின்றனர். ஆகவே அர
சாங்கம் மானியமாக செலவு செய்யும் தொகைகளால் நன்மை பெறுபவர்
கள், ரூபாய்க்கு படி அரிசி திட்டத்தின்கீழ் சட்டபூர்வ பங்கீட்டுப் பகுதி
களில் உள்ளவர்கள் மட்டுமல்ல. இந்த நன்மை பரவலாக சட்டபூர்வமற்ற
பங்கீட்டு முறை அமலில் உள்ள பகுதிகளில் உள்ள 126 இலட்சம்
பேருக்கும் ஓரளவு கிடைக்கின்றது என்ற உண்மை தெளிவாகும்.

ரூபாய்க்குப் படி அரிசி திட்டத்தை மற்ற பகுதிகளிலும் விரிவுபடுத்த
வேண்டும் என்ற கோரிக்கையை பல அங்கத்தினர்களும் எழுப்பியுள்ளார்கள்.
சென்னையிலும், கோவையிலும் சட்ட பூர்வ பங்கீட்டு முறை 1965
முதற்கொண்டு அமலில் இருந்தது. ஆகவேதான் ரூபாய்க்குப் படி அரிசி
திட்டத்தை முதலில் அமல் செய்ய இவ்விரு பகுதிகள் தேர்ந்தெடுக்கப்
பட்டன. சென்னையிலும், கோவையிலும் சட்டபூர்வ பங்கீட்டு முறை அமல்
செய்வது என்பது மத்திய அரசின் பரிந்துரையின் பேரிலே முந்திய அர
சாங்கம் எடுத்த முடிவு. இவ்விரு பகுதிகளிலும் பாட்டாளி மக்கள் பல
இலட்சக்கணக்கான பேர் இருப்பதாலும் அவர்களுக்கு நயமான விலையில்
போதிய அரிசி கிடைக்கச் செய்வது அரசின் கடமை என்று கருதப்பட்டதா
லும், இப் பகுதிகளில் சட்டபூர்வ பங்கீட்டு முறை முதலில் அமல் செய்யப்
பட்டது. ஆகவே ரூபாய்க்கு படி அரிசி திட்டத்தை சென்னையிலும், கோவை
யிலும் முதலில் அமல் செய்ததில் இப் பகுதிகளுக்கு அரசாங்கம் விசேஷ
சலுகை காட்டி, பாரபட்சமாக நடந்துகொண்டது என்ற புகாருக்கு இட
மில்லை. ரூபாய்க்கு படி அரிசித் திட்டத்தை மற்ற பகுதிகளுக்கு விரிவு
படுத்துவதால் அரசாங்கத்திற்கு அதிக செலவாகும் என்பதை உணர்ந்
திருந்தபோதிலும், எத்தனை புதிய பகுதிகளுக்கு இதை விரிவுபடுத்த
முடியுமோ அத்தனை பகுதிகளுக்கு விரிவுபடுத்த அரசாங்கம் உண்மையில்
ஆர்வத்துடன் இருக்கிறது. நாம் விரும்புவதைப்போல் மற்றபகுதிகளி
லும் இத் திட்டத்தை இப்பொழுதே விரிவுபடுத்த முடியவில்லையென்றால்,
அதற்கு முக்கிய காரணம் நம் கைவசம் போதிய அளவு தானிய சேமிப்பு
இல்லை என்பதுதான். நான், முன்பு கூறியதைப்போல் இப்போதுள்ள
தேவைகளை நிறைவு செய்வதற்கே 1968-ம் ஆண்டில் நாம் 10 இலட்சம்
டன்கள் கொள்முதல் செய்யவேண்டியிருக்கும். இந்த 10 இலட்சம்
டன்களுக்கும் அதிகமாக நாம் எவ்வளவு கொள்முதல் செய்கிறோமோ
அந்த அளவுக்கும், விளைச்சல் கணிசமாகப் பெருகி தானிய சேமிப்பு
நிலைமை திருப்திகரமாகும் அளவுக்கும்தான்,  இத்திட்டத்தை
மற்ற பகுதிகளுக்கு விரிவுபடுத்துவது பற்றி நாம் ஆலோசிக்க முடியும்.
ரூபாய்க்கு படி அரிசித் திட்டத்தை எவ்வளவு விரைவில் மற்ற பகுதி
களுக்கு விரிவுபடுத்த முடியுமோ அவ்வளவு விரைவில் நடவடிக்கை எடுக்க
அரசாங்கம் உறுதிகொண்டுள்ளது. தானியச் சேமிப்பு நிலையை உறுதி
படுத்திக்கொண்டு வெகு விரைவிலேயே மற்ற பகுதிகளுக்கு இத் திட்டத்தை
விரிவுபடுத்த வேண்டும் என்பது அரசாங்கத்தின் உறுதியான கொள்கை
என்பதை இந்த அவைக்கு நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

## கொள்முதல் விலை.

கொள்முதல் விலையை உயர்த்த வேண்டுமென்ற கோரிக்கை பல
முறை எழுப்பப்பட்டுள்ளது. கொள்முதல் விலை எவ்வாறு நிர்ணயிக்கப்
பட்டது என்பதைப் பற்றிய முழு விவரங்களை உறுப்பினர்களுக்குத் தெரியப்
படுத்த விரும்புகின்றேன். 1964-ம் ஆண்டு செப்டம்பர் மாத இறுதி
யில் மத்திய உணவு அமைச்சர், தெற்கு மாநில முதல் அமைச்சர்களின்
மாநாடு ஒன்றைக் கூட்டினார். அதில் 1964–65-ம் ஆண்டுக்கு தெற்கு
உணவு மண்டலத்தில் உள்ள மாநிலங்களில், நெல்லுக்கும் அரிசிக்கும்
நிர்ணயிக்கப்பட வேண்டிய விலைகளைப்பற்றி "ஜா குழுவினர்" செய்த
பரிந்துரை ஆலோசிக்கப்பட்டது. இந்தப் பேச்சு வார்த்தைகளின் பலனாக



ஒவ்வொரு மாநிலத்திலும் முக்கியமாக வினியோகிக்கப்படும் அரிசி ரகத்
திற்கு உச்ச விலையை மத்திய அரசு நிர்ணயித்தது. மற்ற அரிசி ரகங்
களுக்கு இதையொட்டி விலையை நிர்ணயிக்கும் உரிமை மாநில அரசுக்கு
வழங்கப்பட்டது. தமிழகத்தில் முக்கிய ரகமான கட்டை சம்பா நெல்லுக்கு
இதன்படி 1964–65-ம் ஆண்டுக்கு குவிண்டலுக்கு 39·50 ரூபாய் மத்திய
அரசினால் நிர்ணயிக்கப்பட்டது. இந்த விலையையொட்டி மற்ற நெல் ரகங்
களுக்கும் விலைகள் நிர்ணயிக்கப்பட்டன. இந்த விலைகள் 1965 டிசம்பர்
வரை அமலில் இருந்தன. விலைகளை உயர்த்த வேண்டுமென்ற கோரிக்கை
க்கு இணங்க, இம் மாநில அரசு 1966-ம் ஆண்டுக்குரிய நெல் கொள்
முதல் விலைகளை உயர்த்தியது. அதன்படி மோட்டா ரக நெல்லுக்கு
குவிண்டலுக்கு 40 ரூபாயாகவும், நடுத்தர ரகத்திற்கு ரூபாய் 42 ஆகவும்,
உயர்தர ரகத்திற்கு ரூபாய் 45 ஆகவும் விலைகள் நிர்ணயிக்கப்பட்டன.
விவசாய விலைவாசிகள் கமிஷனின் பரிந்துரையை ஏற்று 1967-ம் ஆண்டு
மே மாதத்தில் மோட்டா ரக நெல்லுக்கு நம் மாநிலத்தில் குவிண்டலுக்கு
43 ரூபாய் விலை அளிக்கலாம் என்று மத்திய அரசு பரிந்துரை
செய்தது. இம் மாநிலத்தில் உற்பத்தியாளருக்கு கொள்முதல் விலையாக
குவிண்டா லுக்கு ரூபாய் 40 தரப்பட்டு வந்தது. இதைத் தவிர ஒரு
குவிண்டலுக்கு 3 ரூபாய் போனசும் தரப்பட்டு வந்தது. மத்திய அரசின்
ஆலோசனையை ஏற்று, தற்காலிகமாகத் தனியாகத் தரப்பட்டு வந்த இந்த
போனஸ் 3 ரூபாயை விலையுடன் சேர்த்து, மோட்டா ரக நெல்லுக்கு
குவிண்டலுக்கு 43 ரூபாயாக விலை நிர்ணயிக்க இம்மாநில அரசு முடிவு
செய்தது. இதன்படி மோட்டா ரக நெல்லுக்கு குவிண்டாலுக்கு 43 ரூபாய்
ஆகவும், நடுத்தர நெல்லுக்கு ரூபாய் 45 ஆகவும், உயர்தர நெல்லுக்கு
48 ரூபாய் ஆகவும் விலைகள் நிர்ணயிக்கப்பட்டன. 1967-ம் ஆண்டு
ஆகஸ்ட் 15-ம் நாள் முதற்கொண்டு நிர்ணயிக்கப்பட்ட இவ் விலைகள்தான்
இப்போதும் அமலில் உள்ளன.

தானியங்களைக் கொள்முதல் செய்து அதன் பின்பு, போக்குவரத்து,
சேமிப்பு, அரைவைக் கூலி, மொத்த வியாபாரியின் லாபம், சில்லரை
வியாபாரியின் லாபம் போன்றவற்றிக்கான பற்பல செலவுகளை அரசாங்கம்
ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது. இந்த செலவுகளை எல்லாம் மேற்
கொண்ட பிறகு அரசாங்கத்திற்கு ஆகும் கிரயம் இரண்டாம் ரக நெல்லுக்கு
குவிண்டாலுக்கு ரூபாய் 82 முதல் ரூபாய் 90 வரை ஆகின்றது. அர
சாங்கத்திற்கு இவ்வளவு செலவு ஆகின்ற போதிலும், பொது மக்களுக்கு
வினியோகத்திற்கு அரசாங்கம் நிர்ணயித்துள்ள விலை குவிண்டாலுக்கு 77
ரூபாய் முதற்கொண்டு ரூபாய் 81 வரை ஆகும். இவ்விரண்டு விலை
களுக்கும் இடையே விழும் துண்டை அரசாங்கமே ஏற்றுக்கொள்கிறது.
ஆகவே இப்போதுள்ள முறையின்படியே, குறைவான விலையில் பொது
மக்களுக்கு அரிசி கிடைக்க வேண்டுமென்ற ஆர்வத்தினால், அரசாங்கம்
கணிசமான மான்யச் செலவு செய்யவேண்டியிருக்கிறது என்பது தெளி
வாகும். இதற்கு மேலும் கொள்முதல் விலைகளை உயர்த்தினால், ஒன்று
நெல்லை அதிக விலைக்கு விற்க வேண்டும்; அல்லது அரசாங்கத்திற்கு
இழப்பு இன்னும் அதிகமாகும். இவை இரண்டும் விரும்பத்தக்கதல்ல.
உற்பத்தியாளர் நலனுக்கு உகந்த முறையிலும், அதே சமயத்தில்
கொள்வினை செய்வோருக்குப் பாதகம் இல்லாத முறையிலும், நியாயமான
ஒரு விலை நிர்ணயிக்கப்பட வேண்டுமென்ற அடிப்படையில்தான்
இப்பொழுதுள்ள கொள்முதல் விலைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. மேலும்
உயர் ரக விளைச்சல் நெல்லை பயிர் செய்வதற்கு அரசாங்கம் விவசாயி
களுக்குப் பல உதவிகள் அளித்து வருவதால், ஒரு ஏக்கராவிலிருந்து
கிடைக்கும் விளைச்சல் கணிசமாக உயர்ந்துள்ளது என்பதும் குறிப்பிடத்
தக்கது. ஆகவே இப்போதுள்ள கொள்முதல் விலையிலேயே, அதிக விளைச்
சல் கிடைப்பதால் விவசாயிக்குக் கணிசமான லாபம் கிடைக்கும் என்பதும்,
இந்த லாபம் உற்பத்தியைப் பெருக்குவதற்குப் போதிய அளவு உற்சாகம்
அளிக்கும் என்பதும் தெளிவு ஆகும்.

விவசாயிகள் உற்பத்தியைப் பெருக்குவதற்குப் பலவித உதவிகளையும் சலுகைகளையும் அளிக்க வேண்டுமென்று அரசாங்கம் ஆர்வம் கொண்டுள்ளது. இந்த அடிப்படையில் திருந்திய விவசாயம் செய்வதற்குத் தேவையான சாதனங்கள் அனைத்தும் விவசாயிக்கு கிடைக்க செய்வதற்கு அரசாங்கம் பகீரதப் பிரயத்னங்கள் செய்துள்ளது. உரங்கள் விநியோக நிலைமை முந்தைய ஆண்டைவிட இந்த ஆண்டு மிகவும் திருப்திகரமாக உள்ளது. உரங்களைத் தவிர, உயர் ரக விளைச்சலுக்காக திருந்திய விதைகளையும், லாபமோ நட்டமோ இல்லாத அடிப்படையில் அரசாங்கம் விலை நிர்ணயித்து, விவசாயிகளுக்கு வழங்கி வருகிறது. விவசாயத்திற்குத் தேவையான மற்ற சாதனங்களும், துணைப் பொருள்களும், குறைவான விலைக்கு விவசாயிகளுக்கு கிடைக்கச் செய்ய அரசாங்கம் முயற்சி செய்து வருகிறது. இவை போன்ற சாதனங்களைத் தந்துதவ அரசாங்கம் முயற்சி செய்வதன் மூலம், விவசாயிகளுக்குக் கிடைக்கும் நன்மை, கொள்முதல் விலை உயர்வதனால் கிடைக்கக்கூடிய நன்மையை விட மிகக் கணிசமானது. விளைச்சலைப் பெருக்குவதற்கு விவசாயிக்கு எல்லா வித உதவிகளும் உற்சாகமும் அளிக்க, அரசாங்கம் மிகுந்த ஈடுபாட்டுடனும் அக்கறையுடனும் தொடர்ந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளும். அதே சமயத்தில் குறைந்த விலைக்கு அரிசி கொள்வினை செய்வோருக்கு கிடைக்கும்படி செய்வதிலும் அரசாங்கத்திற்கு அக்கறை உண்டு. நாம் இப்போது பின்பற்றி வரும் முறை உற்பத்தியாளர்களுக்கு மட்டும் சாதகமான முறையாகவோ, கொள்வினை செய்வோருக்கு மட்டும் சாதகமான முறையாகவோ இல்லாமல், இரு சாரருக்கும் சாதகமான முறையாகவும் மொத்தத்தில் பொது மக்கள் நலனுக்கு உகந்த முறையாகவும் அமைந்துள்ளது. இந்த முறையைத் தீவிரமாக அரசாங்கம் தொடர்ந்து பின்பற்றும்.

### அரிசியின் தரம்.

பொது விநியோக முறையின் கீழ் உணவு பங்கீட்டுக் கடைகளில் விநியோகிக்கப்படும் அரிசியின் தரம் உயர்ந்ததாக இருக்க வேண்டும் என்பதில் அரசாங்கத்திற்கு மிகுந்த கவலை உண்டு. இதற்காக தரக் கண்காணிப்பு நிறுவனம் சீரமைக்கப்பட்டுத் திறமையுடன் இயங்கி உள்ளது. தேர்ச்சி பெற்ற சோதனை நிபுணர்கள் 82 பேர் பல்வேறு இடங்களில் பணியாற்றுகிறார்கள். கிடங்குகளில் பணியாற்றும் சோதனை நிபுணர்கள், அங்கு சேமித்து வைத்துள்ள தான்யங்களின் தரத்தை சோதனை செய்வதோடு, மருந்தடித்து அவற்றைப் பாதுகாக்கும் பொறுப்பை ஏற்றுள்ளனர். கொள்முதல் செய்த தானியங்களின் தரத்தை சோதனை செய்யும் நிறுவனம், கொள்முதல் செய்யும் நிறுவனத்திடமிருந்து தனித்திருந்து சுதந்திரமாகப் பணியாற்றுவதுதான் உசிதமானது. அரிசியின் தரத்தை காப்பதற்கும் உயர்த்துவதற்கும் அரசாங்கம் சாத்தியமான நடவடிக்கைகள் அனைத்தையும் ஆர்வத்துடன் மேற்கொள்ளும். அதே சமயத்தில் கொள்முதல் ஏஜெண்டுகள், அரைவையாளர், மொத்த வியாபாரிகள், சில்லரை வியாபாரிகள் உட்பட பொது விநியோக முறையுடன் தொடர்பு கொண்ட அனைவரும் எல்லாக் கட்டங்களிலும் பொறுப்புடன் பணியாற்றி, தரத்தை காக்கப் பாடுபடுவது தங்களுக்கும், சமூகத்திற்கும், அரசாங்கத்திற்கும் ஆற்ற வேண்டிய கடமை என்பதை உணர்ந்து, சமூக விரோத செயல்களில் ஈடுபடாமல் இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். தரத்தைப் பாதுகாக்கவும் நிலைநாட்டவும் தகுந்த நடவடிக்கை எடுப்பதில், அரசாங்கத்திற்கு இந்த அவை உறுப்பினர்களின் உறுதியான உதவியும், மேலான ஒத்துழைப்பும் கிடைக்கும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

### கோதுமை.

அரிசித் தேவையைக் குறைக்கும் பொருட்டும், அரிசி உணவையே உட்கொள்ளும் மக்கள் கோதுமையையும் சேர்த்து சத்துள்ள சீருணவை உட்கொள்ள உந்தும்பொருட்டும், இப்பொழுது கோதுமை வழங்கப்பட்டு வருகிறது. சட்டபூர்வ பங்கீடு முறை அமலிலுள்ள பகுதிகளில் கோதுமை ரேஷன் அட்டை வைத்திருப்பவர்களுக்குக் கொடுக்கப்பட்டு வருகிறது. மற்ற மாவட்டங்களில் கோதுமை கிடைப்பதைப் பொறுத்து பொதுமக்களுக்கு வழங்கப்படுகிறது. ரேஷனில் கொடுக்க வேண்டிய கோதுமை கொடுப்பதற்



கும், குடும்ப கார்டுகள் வைத்திருப்போரின் தேவையை நிறைவு செய்வதற்கும், மொத்தமாகக் கொள்வினை செய்யும் நிறுவனங்களின் தேவையை நிறைவு செய்வதற்கும் நம்முடைய மாநிலத்திற்கு ஒரு மாதத்திற்கு 15,000 டன்கள் கோதுமை தேவைப்படுமென்று நாம் சென்ற சில ஆண்டுகளின் அனுபவத்திலிருந்து அறிந்துள்ளோம். கோதுமையை அதிகமாக உட்கொள்ளுவதற்குத் தூண்டுதலாக பொது மக்களிடையே அரசாங்கம் செய்துவந்த பிரசாரம் நல்ல பலனளிக்கும் கட்டத்திலுள்ளன. ஆனால் இந்த பிரச்சாரத்தின் பலனாக நல்ல பலன் ஏற்பட்டு, பெரு வாரியான மக்கள் கோதுமையை விரும்பிக் கேட்கும் நேரத்திலே, மத்திய அரசு நம் மாநிலத்திற்கு ஒதுக்கும் கோதுமையின் அளவை மிகவும் குறைத்துவிட்டது வருந்தத்தக்கது. 1965-ம் ஆண்டில் 81,700 டன்கள் கோதுமையை மத்திய அரசு நம் மாநிலத்திற்கு ஒதுக்கியிருந்தது. தேவை அதிகமாக இருந்ததை முன்னிட்டு 1966-ம் ஆண்டில் 1·46 லட்சம் டன்கள் கோதுமை வழங்கப்பட்டது. ஆனால் 1967-ம் ஆண்டில் 51,500 டன்கள் கோதுமைதான் இந்த மாநிலத்திற்கு மத்திய அரசினால் ஒதுக்கப்பட்டது. 1967-ம் ஆண்டில் நமக்கு ஒதுக்கப்பட்ட கோதுமையின் அளவு 1966-ம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட அளவில் ஏறக்குறைய மூன்றில் ஒரு பாகம்தான் 1965-ல் நமக்கு வழங்கப்பட்டதைவிடக் கூட குறைவாகும்.

மைதா, ரவை, ஆட்டா, கோதுமைத் தவிடு போன்ற கோதுமைப் பொருள்களைப் பொருத்தவரை தமிழகத்திற்குத் தேவைப்படும் அளவு மாதத்திற்கு 15,500 டன்கள் ஆகும். இப் பொருள்களின் ஒதுக்கீடுகூட மத்திய அரசினால் மிகக் கணிசமாகக் குறைக்கப்பட்டுள்ளது. 1965-ம் ஆண்டில் கோதுமைப் பொருள்கள் 1·1 லட்சம் டன்கள் நம் மாநிலத்திற்கு ஒதுக்கப்பட்டன. 1966-ல் 1·72 லட்சம் டன்கள் ஒதுக்கப்பட்டன. ஆனால் 1967-ம் ஆண்டில் நமக்கு ஒதுக்கப்பட்டது. 1·1 லட்சம் டன்களுக்கும் குறைவாகும். இவ்வாறு தமிழகத்திற்கு ஒதுக்கப்படும் கோதுமைப் பண்டங்களின் அளவு மிகவும் குறைக்கப்பட்டு விட்டதால், ரொட்டி, பிஸ்கட் உற்பத்தியாளர்களின் மைதா தேவைகளையும், தனிப்பட்டவர்களின் ரவை தேவையையும் நம்மால் போதிய அளவு நிறைவு செய்ய முடியவில்லை.

தமிழகத்திற்கு ஒதுக்கப்படும் கோதுமை, கோதுமைப் பொருள்கள், ஆகியவற்றின் அளவை உயர்த்தவேண்டுமென்று முதலமைச்சரும் நானும் பல முறை மத்திய உணவு அமைச்சரிடத்தில் வற்புறுத்தி எடுத்துச்சொல்லியுள்ளோம். பல முறை எடுத்துச்சொல்லியும் பலன் ஒன்றும் ஏற்படவில்லை என்பது மிகவும் வருந்தத்தக்கது. 1968-ம் ஆண்டில் முதல் மூன்று மாதங்களுக்கு ஒதுக்கீட்டைப் பார்த்தால், இந்த ஆண்டிலும் இப் பொருள்களின் ஒதுக்கீடு கணிசமாக உயராதென்று தெரிகிறது. இதனால் நமக்கு மிகவும் சிக்கலான நிலைமை ஏற்பட்டுள்ளது. தமிழகத்திற்கு வேண்டிய கோதுமையையும் கோதுமைப் பொருள்களையும் தருவதில் மத்திய அரசு இன்னும் தாராளமாக இருக்க வேண்டுமென்று வற்புறுத்துவதில் இந்த அவையின் ஆதரவு எனக்குக் கிட்டுமென்று நம்புகிறேன்.

### சர்க்கரை.

1966 எப்ரல் மாதம் முதற்கொண்டு 1967 மார்ச் வரை மத்திய அரசு தமிழகத்திற்கு மாதம் 16,100 டன்கள் சர்க்கரை ஒதுக்கி வந்தது. 1967 மார்ச், எப்ரல் மாதங்களில் இந்த ஒதுக்கீடு 11,500 டன்களாகக் குறைக்கப்பட்டது. 1967 மே மாதம் முதற்கொண்டு நவம்பர் வரையில் இந்த அளவு மேலும் குறைக்கப்பட்டு 9,600 டன்கள் ஒதுக்கப்பட்டன.

சர்க்கரை விநியோகத்தில் முன்பிருந்த கட்டுப்பாடுகளை ஒரு பகுதியளவில் நீக்கி, புதிய கொள்கை ஒன்றை மத்திய அரசு 1967 நவம்பர் மாதம் 23-ம் தேதி முதற்கொண்டு அமலில் கொண்டு வந்தது. இப் புதிய முறையின்படி 1967–68 பருவ காலத்தில் சர்க்கரை ஆலைகள் உற்பத்தி செய்யும் சர்க்கரையில் 60 சத விகிதம் லெவி முறையின்கீழ் கொள்முதல் செய்யப்பட்டு, நிர்ணயிக்கப்பட்ட லெவி விலைக்குத் தனிப்பட்டவர்

களுக்கு விற்கப்படும். எஞ்சிய 40 சத விகிதம் சர்க்கரையை, சர்க்கரை ஆலைகள் இந்தியாவில் எங்கு வேண்டுமென்றாலும், எந்த விலைக்கும் விற்றுக்கொள்ளலாம். இவ்வாறு ஒரு பகுதியளவில் மட்டும் கட்டுப்பாடுகளை நீக்கும் மத்திய அரசின் கொள்கை "இரண்டும் கெட்டான்" கொள்கை என்று மத்திய அரசுக்கு நாம் எடுத்துச் சொன்னோம். ஆயினும் மத்திய அரசு தங்களுடைய கொள்கையை முடிவு செய்துவிட்டதால் அந்த முடிவை நாமும் அனுசரித்துச் செல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்தப் புதிய முறையின்படி லெவி திட்டத்தின்கீழ் மாதம் சுமார் 6,000 டன்கள் சர்க்கரை தமிழகத்திற்கு ஒதுக்கப்படுகிறது. தமிழகத்தில் சர்க்கரை ஆலைகள் மாதம் சுமார் 2,750 டன்கள் அளவில் சர்க்கரையை வெளிச் சந்தையில் விற்பனை செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளன. லெவி சர்க்கரை, வெளிச் சந்தை சர்க்கரை, இரண்டும் சேர்த்தால்கூட நமக்குக் கிடைக்கும் சர்க்கரை 1967 மார்ச் வரையில் தமிழகத்திற்கு ஒதுக்கப்பட்டு வந்த 16,000 டன்கள் சர்க்கரையைவிட மிகமிகக் குறைவாயுள்ளது.

லெவி சர்க்கரை தனிப்பட்டவர்களுக்கு கிலோ கிராம் 1·75 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. மத்திய அரசின் திட்டத்தின்படி வெளிச் சந்தை சர்க்கரையை ஆலைகள் எங்கு வேண்டுமென்றாலும்—தமிழகத்திற்கு வெளியில் கூட—எந்த விலைக்கும் விற்றுக்கொள்ளலாம். ஆனால் வெளிச் சந்தை சர்க்கரை முழுவதும் தமிழகத்திற்குள்ளேயே புழங்கவேண்டுமென்றும் நியாயமான விலைக்குக் கிடைக்க வேண்டுமென்றும் நம் மாநில அரசு கருதியதால், இம் மாநிலத்திலுள்ள சர்க்கரை ஆலைகளின் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி அவர்களுடன் ஒரு ஏற்பாட்டிற்கு வந்தது. இந்த ஏற்பாட்டின்படி, சர்க்கரை ஆலைகள் வெளிச் சந்தை சர்க்கரை முழுவதையும், அரசாங்கத்திற்கோ, அரசாங்கம் குறிப்பிடும் நபர்களுக்கோ, குவிண்டாலுக்கு ரூபாய் 350-க்கு விற்கும். மொத்தமாகக் கொள்வினை செய்வோருக்குக் குவிண்டால் 350 ரூபாய் அளவில், அதாவது கிலோ கிராம் 3·65 விலையில் இது வினியோகிக்கப்படுகிறது. மொத்த விற்பனை செய்வோரின் தேவைகள் இந்த வெளிச் சந்தை சர்க்கரையிலிருந்து கிடைப்பதால், லெவி முறையின்கீழ் கிடைக்கும் சர்க்கரை தனிப்பட்டவர்களின் தேவையைப் பூர்த்தி செய்யப் பயன்படுகிறது. தமிழகத்தில், தமிழக அரசு எடுத்துக்கொண்ட முயற்சிகளின் பலனாக வெளிச் சந்தை சர்க்கரையும், நியாயமான, நிலையான, விலைக்குக் கிடைக்க வழி பிறந்துள்ளது. வெளிச் சந்தை சர்க்கரை முழுவதும் வேறு இடங்களுக்குச் சென்றுவிடாமல் நம் மாநிலத்திலேயே கிடைப்பதற்கும், நியாயமான விலைக்கு விற்கப்படுவதற்கும், தமிழக அரசு துணிவுடனும், தீவிர முயற்சியுடனும், செய்த ஏற்பாட்டின் பலனாக வழி பிறந்துள்ளது. இந்த ஏற்பாடு முதலில் மூன்று மாத காலத்திற்குச் செய்யப்பட்டது. 1968 பிப்ரவரி மாதம் இந்த ஏற்பாடு முடிய இருந்தது. ஆலை உரிமையாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியதன் பலனாக மேலும் மூன்று மாதக் காலத்திற்கு நீடிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

மத்திய அரசினால் நம் மாநிலத்திற்கு மிகக் குறைவான அளவு சர்க்கரை ஒதுக்கப்படும் சூழ்நிலையிலேயே, இருப்பதை வைத்துக்கொண்டு ஓரளவு நிலைமையைச் சரிக்கட்ட மாநில அரசு தன்னால் இயன்றதனைத்தும் செய்து வருகின்றதை இந்த அவை பாராட்டுமென்று நம்புகிறேன்.

**பயறு, பருப்பு வகைகள்.**

உளுந்து, துவரை, கடலைப் பருப்பு ஆகியவற்றில் தமிழகம் பற்றாக்குறை மாநிலமாகவுள்ளது. இப் பல்வேறு பயறு வகைகளுக்கும் நாம் மற்ற உபரி மாநிலங்களைப் பெரிதும் நம்ப வேண்டியுள்ளது. 1967 மார்ச் மாதத்தில் இந்த அரசு பொறுப்பு ஏற்றபோது, துவரையும், துவரம் பருப்பும் மிகப் பெரும் அளவில் நம் கைவசம் இருந்தன. இவை அரசாங்கக் கணக்கிலே 1965–66-ம் ஆண்டில் வாங்கப்பட்டிருந்தன. நம்மிடமிருந்த பயறு வகைகளுக்கு வியாபாரிகளிடையே போதிய கிராக்கி இல்லாத காரணத்தால் 20 அல்லது 22 இலட்ச ரூபாய் நட்டம் நமக்கு ஏற்படுமென்று அஞ்சினோம். ஆயினும், வர்த்தக நிலவரத்தை உன்னிப்



பாகக் கவனித்து உரிய நடவடிக்கைகள் எடுத்ததன் பயனாகவும், கைவசமிருந்த பயறுகளைச் சரியான நேரத்திலே வினியோகிக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டதன் பயனாகவும், பயறுகளை நியாயமான விலைக்கு விற்று, அதே சமயத்தில் மொத்த நட்டத்தைக் கணிசமாகக் குறைக்க முடிந்தது. வெளிச் சந்தை விலைக்குக் குறைவாகவே நம் கைவசம் இருந்த பயறுகளை விற்றதால், வெளிச் சந்தையிலே மேலும் விலை ஏறுவதைத் தடுக்கவும் முடிந்தது.

பருப்பு வகைகளைப் பொறுத்த வரையில் சென்ற ஆண்டு நம் நிலைமை மிகவும் நெருக்கடியாக இருந்தது. சென்ற ஆண்டில், பருப்பு உற்பத்தி செய்யும் உபரி மாநிலங்கள், மற்ற மாநிலங்களுக்குப் பருப்பை எடுத்துச் செல்வதன் மீது கட்டுப்பாடுகள் விதித்தன. உபரி மாநிலங்களிடமிருந்து வாங்கி மற்ற மாநிலங்களுக்கு அரசாங்கப் பொறுப்பிலேயே பருப்பு வகைகளை வழங்கும் பொறுப்பை மத்திய அரசு ஏற்றுக் கொண்டது. நம் மாநிலத்திற்கு அதிகமான அளவு பருப்பு வகைகள் வழங்கவேண்டுமென்று நாம் மத்திய அரசிடம் வற்புறுத்தி வந்துள்ளோம். இல்லாவிடில் உபரி மா நிலங்களிலிருந்து மற்ற மாநிலங்களுக்கு இப்பருப்பு வகைகள் ஏற்றுமதியாவதைத் தடுத்து விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகளை நீக்க வேண்டுமென்று வற்புறுத்தி வந்தோம். இவ்விரண்டு கோரிக்கைகளும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. ஆயினும், இந்த ஆண்டு பருப்பு வகைகளின் விளைச்சல் கணிசமாகப் பெருகியுள்ளதால் தமிழகச் சந்தைகளிலே இவற்றின் விலை இறங்குமுகமாயுள்ளது. இப்பருப்பு வகைகளுக்காக மற்ற மாநிலங்களையே நம்பியிருக்கும் நிலையை மாற்றி, நாமே தன்னிறைவு நிலையை எய்தும் பொருட்டு, நம் மாநிலத்தில் பயறு, பருப்பு வகைகளின் உற்பத்தியைப் பெருக்க அரசாங்கம் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

விலைவாசிகளின் உயர்வைக் கட்டுப்படுத்தவும், உணவுப் பண்டங்கள் போதிய அளவில் தடையின்றி கிடைக்கச் செய்யவும் தமிழக அரசு மேற்கொண்டுள்ள பல்வேறு நடவடிக்கைகளின் பயனாக நிலைமையில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. 1968-ம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் சென்னை நகரில் பாட்டாளி மக்கள் வாழ்க்கைச் செலவின் குறியீட்டு எண் 10 புள்ளிகள் குறைந்து, 705 ஆக வந்துள்ள செய்தி இப்பேரவையின் உறுப்பினருக்குப் பெருமகிழ்ச்சி தரும். உணவுப்பொருள்களைப் பொறுத்த குறியீடு 20 புள்ளிகள் குறைந்து 771-ஆக வந்தது. பருப்பு, காய்கறிகள், மிளகாய், புளி, தேங்காய் எண்ணெய், நல்லெண்ணெய், ஆகியவற்றின் விலை இறங்கியதே இந்தக் குறியீடு குறைந்ததற்குக் காரணம். உணவு முனையில் அரசாங்கம் பின்பற்றி வரும் துணிவான, தெளிவான, கொள்கை பலனளிக்கத் தொடங்கியுள்ளது. இதன் பயனாகச் சமீப காலத்தில் முதன் முறையாக, வாழ்க்கைச் செலவு ஒரு கட்டுப்பாட்டிற்கு உள்ளாகியுள்ளது. விலைவாசிகள் பிரச்சினைக்கு நிலையான, நீண்டகாலத் தீர்வு காண்பது, மத்திய அரசின் பொருளாதாரக்கொள்கைகளைப் பெரிதும் பொறுத்தாகும். ஆயினும் இப்பேரவையின் ஒத்துழைப்புடனும், பொதுமக்களின் பண்பு கலந்த ஆதரவுடனும், விலைவாசிகள் ஏற்றம் என்ற சிக்கலான சோதனைமிக்க பிரச்சினையில், நம் நடவடிக்கைக்கு உட்பட்ட குறுகிய அளவில், வெற்றிகாண முடியும் என்ற நம்பிக்கை எனக்குண்டு. அரசாங்கத்தின் ஆக்க நடவடிக்கைகளின் பயனாகப் பொருளாதார நிலைமை சீராகி வளமும் செழிப்பும் கொழித்து, இந்த வளர்ச்சியிலும், வாழ்விலும், சமூகத்திலே பல்வேறு பிரிவினரும் பல மட்டங்களில் உள்ளவரும் பங்கு பெற்றுப் பலனடையும் சமதர்ம நிலை சடுதியிலே உருவாகும் என்ற இலட்சிய நம்பிக்கை எனக்கு உண்டு.

இந்தக் கொள்கைக் குறிப்பில் கண்டுள்ள அம்சங்களுக்கு மேல், சில முக்கியமான அம்சங்களை மட்டும் கூற விரும்புகிறேன். இது சம்பந்தமாக உள்ள சாதனைகளின் அளவுகளோடு தொடர்புகொண்ட வார்த்தைகளைச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த மாநிலத்திலே புதிய அரசாங்கம் இந்தப் பொறுப்பை மேற்கொண்ட நேரத்தில் இருந்த இந்த மாநிலத்தினுடைய

உணவு நிலையை இந்த மன்றமும், நாடும், மிக நன்றாக அறியும், அது சாதாரண நிலை அல்ல. இன்றைய தினம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கையின் காரணமாக இன்று இந்த அவையின் முன்னால் மிகுந்த உற்சாகத்துடன், பெருமை நிரம்பிய சாதனையைக் கூறுவதற்கு வந்திருக்கிறோம் என்றால் நாம் எத்தகைய இடர்ப்பாடான நிலையிலிருந்து இந்த அளவிற்கு வந்திருக்கிறோம் என்பதைக் கடந்தகாலப் பின்னணியைக் கொண்டு பார்த்தால் சரியாக இருக்க முடியும். நாங்கள் பொறுப்பைக் கடந்த மார்ச் மாதம் 6-ம் தேதி ஏற்றுக்கொண்டோம். அந்த நிலையில் முன்பிருந்த அரசாங்கம் என்ன விட்டுப்போயிருந்தது என்று சொன்னால் 18,000 டன்கள் அரிசியைக் கடனாக வாங்கி வைத்துப் போனதைத்தான் காண முடிந்தது. பணத்திலே மாத்திரம் கடன் வாங்கியது என்ற நிலையில்லாமல் இப்படி 18,000 டன்கள் அரிசியையும் கடன் வாங்கிய நிலையிலே வைத்திருந்தது. அவ்வாறு கடன்கார நிலையிலே ஆட்சிப்பொறுப்பை மேற்கொண்டு இன்று பெருமையுடனும், உற்சாகத்துடனும் கூறக்கூடிய அளவில் நிலைமைகளை மாற்றியது. அதோடு மட்டுமல்லாமல் கடன்கார சர்க்காராக இல்லாமல், கடன் வாங்கிய 18,000 டன்களையும் கொடுக்கும் வகையில் அதையும் சேர்த்து 50,000 டன்கள் என்ற அளவில் நாம் கொடுத்திருக்கிறோம். நான் இதை எடுத்துக்காட்டிச் சொல்லுவது யாரையும் குறைகூறுவதற்காகவோ அல்லது எங்களுக்கோ, எங்கள் கட்சிக்கோ லாபம் தேடிக் கொள்ள வேண்டுமென்பதற்காகவோ அல்ல. இந்த அரசாங்கம் பொறுப்பை மேற்கொண்ட அந்தச் சூழ்நிலையிலேயிருந்து எந்த நிலைமைக்கு வந்திருக்கிறோம் என்பதை நாம் விரைவில் மறந்து விடுவதால்தான் நான் இதை விளக்க வேண்டுமென்று சொல்லுகின்றேனே தவிர எங்களுக்குப் பெருமை வந்துவிடும் என்பதால் அல்ல. அப்படிச் சொல்லித்தான் நாங்கள் பெருமையைச் சம்பாதித்துக் கொள்ள வேண்டுமென்று ஒரு கட்டத்திலே நாங்கள் இல்லை. தமிழ் நாட்டிலே நாங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட நேரத்தில், 18,000 டன் அரிசியை கேரள மாநிலத்திற்குக் கடனாகக் கொடுக்க வேண்டிய நிலையில் இருந்தோம். இந்த மாநிலத்தினுடைய மிக அத்தியாவசியமான, தேவையான உணவுப்பொருள்களை விநியோகிக்க வேண்டிய ஒரு பொறுப்பை ஏற்றபொழுது, பஞ்ச மாநிலமானக் கேரள மாநிலத்திற்கு 18,000 டன் அரிசி கொடுக்க வேண்டிய சூழ்நிலையிலிருந்தோம். அவர்களுக்குக் கொடுக்கும்படியாக ஆந்திர மாநிலத்திலிருந்து வாங்கிய அரிசியைத் தேர்தலுக்கு 10 நாட்கள், 20 நாட்களுக்கு முன்னால் கொடுக்கக்கூடிய சூழ்நிலையை இப்பொழுது மாற்றி நல்ல முறையிலே வளர்ந்திருக்கிறோம் என்று நான் இன்றைக்கு மிகுந்த பெருமையோடு சொல்லிக்கொள்கிறேன்.

இக்கட்டான நிலையிலிருந்தபொழுது, கேரளக் மாநிலத்திற்கு கள்ளக் கடத்தல் வேறுபல காரியங்கள் எல்லாம் நடந்து நல்ல வகையிலே தெளிவில்லாத முறையிலே நம் மாநிலம் இருந்தது. இந்த அரசாங்கம் பொறுப்பை ஏற்றுக்கொண்ட 24 மணி நேரத்திற்குள்ளாகவே கேரள மாநிலத்திற்குக் கள்ளக் கடத்தல் மூலமாக அரிசி போவதைத் தடுத்து, கட்டுக்கோப்பை, கண்காணிப்பை அதிகப்படுத்தியது.

அடுத்து, கொள்முதலைப்பற்றி பலவாறாகச் சொல்லப்பட்ட போதிலும், தெளிவாகவும், திட்டவட்டமாகவும், கொள்முதலை விவசாயிகள் ஆதரிக்கிறார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டுத்தான் அந்த திட்டத்தை நாங்கள் நல்ல முறையிலே நிறைவேற்றியதன் விளைவாக $8\frac{1}{2}$ லட்சம் டன்களைக் கடந்த ஆண்டு கொள்முதல் செய்திருக்கிறோம் என்பதை இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இது சாதாரண ஒரு காரியம் அல்ல. ஜனவரி மாதம், பிப்ரவரி மாதங்களில் கொள்முதல் நிகழ்ந்தாலும், அரசியல் காரணங்களுக்காக விவசாய மக்களுக்குக் கஷ்டம்



இருந்ததைப்போலவும் அவர்கள் பல இன்னல்களை அனுபவிக்கிறார்கள் என்றும் சொல்லப்பட்ட ஒரு இக்கட்டான நேரத்திலே, நெருக்கடியான நேரத்திலே இந்த மாநிலத்திலே சென்னையிலும் கோவையிலும் சட்டபூர்வமான ரேஷன் இருந்த நேரத்திலே, அவர்களுக்கு ரேஷன் கொடுப்பதற்குமட்டும் குடும்பக் கார்டு முறையிலே ஏறத்தாழ ஒரு கோடியே 26 இலட்சம் பேர்களுக்கு உணவுப் பங்கீடு வழங்கவேண்டிய முக்கியமான பொறுப்பை ஏற்றுக்கொண்ட நேரத்தில், இந்த காரியங்களுக்காகக் கொள்முதல் திட்டத்தில் ஒரு புரட்சிகரமான மாறுதலை இந்த அரசாங்கம் புகுத்தி $8\frac{1}{2}$ இலட்சம் டன்களை டிசம்பர் மாதத்திற்குள்ளாகக் கொள்முதல் செய்திருக்கிறது என்பதை இந்த மா மன்றத்திலே அறிவிக்கையிலே அதை இம்மன்றம் வரவேற்கும் என்பதிலே கொஞ்சம் கூட எனக்குச் சந்தேகம் கிடையாது. இதை கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் மன்ற உறுப்பினர்களும் பாராட்டக் கூடும். ஆனால், முன்னாலே இருந்த கொள்முதலுக்கும் இன்றைய திறமையான அரசாங்கத் திட்டத்தின் கொள்முதலுக்கும் பெரிய வேறுபாடு இருக்கிறது என்பதை இந்த மாமன்றம் ஏற்கனவே நன்றாக உணர்ந்திருக்கிறது. ஒரு ஏக்கரும் ஒரு ஏக்கருக்கும் குறைவாக இருக்கிற நில உரிமையாளர்களுக்கு இந்தக் கொள்முதல் திட்டத்திலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இது திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய திட்டத்திலே மிக முக்கியமான அம்சமாகும். ஒரு ஏக்கருக்கு மேலே 10 ஏக்கருக்குள்ளாக நிலம் வைத்திருப்பவர்களிடமிருந்து " ஸ்லாப் " முறையிலே, அதாவது " கிரேடட் லெவி " முறையிலே கொள்முதல் செய்யப்படுகிறது. ஆக இந்த முறையில் ஒரு ஏக்கருக்கு மேலே பத்து ஏக்கருக்கு உள்ளாக இருப்பவர்களுக்கு " கிரேடட் லெவி " முறை இருக்கிறது —ஸ்லாப் விஸ்டம். 10 ஏக்கருக்கு மேலே இருக்கிறவர்களுக்கு " மார்க்கெடபிள் சர்ப்ளஸ் " என்ற விதிமுறையை ஏற்றுக்கொண்டு நாம் கொள்முதல் செய்கின்ற அளவில் $8\frac{1}{2}$ லட்சம் டன்னைக் கொள்முதல் செய்தோம் என்பதை நான் பெருமிதத்தோடுச் சொல்ல முடியாது என்று நான் சொல்வதை ஏற்கனவே இந்த மன்றம் ஒத்துக்கொண்டிருக்கிறது.

அது மட்டும் அல்ல. இந்தக் கொள்முதலின் காரணமாக விவசாயிகள் அவதிப்படுகிறார்கள். அவர்களுக்குப் பல கஷ்டங்கள் நேரிடுகின்றன, என்றெல்லாம் தவறான, என்னென்ன மாதிரியான பிரசாரங்கள் செய்யப்பட்டபோதிலும் தமிழ்நாட்டினுடைய விவசாய மக்கள், கழகத்தினுடைய கொள்கையைப் பார்த்து, அது நல்ல கொள்கை என்ற அளவில் $8\frac{1}{2}$ இலட்சம் டன் அரிசி அளவு கொடுத்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவிக்கின்ற நேரத்தில் உற்பத்தியையும் பெருக்கியிருக்கிறார்கள். 1966 அக்டோபர் 1-ஆம் தேதியிலிருந்து டிசம்பர் 31-ஆம் தேதிவரை முந்திய அரசு 6 இலட்சம் டன்தான் கொள்முதல் செய்தது. ஆனால் இந்த அரசு ஒரு போக நிலங்களை இருபோக நிலங்களாக மாற்றியதன் விளைவாகவும் தஞ்சை மாவட்டத்திலே ஒரு விவசாயப் புரட்சி ஏற்பட்டதன் விளைவாகவும் தஞ்சை மாவட்டத்திலே 2 இலட்சம் டன் கொள்முதல் செய்தோம். குறுவையைமட்டும் $2\frac{3}{4}$ இலட்சம் டன் கொள்முதல் செய்தோம். அந்த முறையிலே பெருமைப்படக்கூடிய வகையிலே நல்ல நிலையை அடைந்திருக்கிறோம்.

இந்த சம்பா கொள்முதலைப் பொறுத்தவரை, கடந்த பிப்ரவரி மாதம் 2-ஆம் தேதியன்று திருச்சிராப்பள்ளியில் முதலமைச்சர் அவர்கள் தலைமை தாங்கிய கலெக்டர்கள் மகாநாட்டில், ஜனவரி 1-ஆம் தேதியிலிருந்து மே 31-ஆம் தேதி முடிய, 5 இலட்சம் டன் கொள்முதல் செய்யவேண்டுமென்ற ஒரு இலக்கை நிர்ணயித்தோம். இன்றைக்குத் தேதி 8 தான் ஆகிறது. இன்றைக்குச் சொல்கிறார்களே, கொள்முதல் விலையைக் கூட்டவில்லை, ஆகவே விவசாயிகள் ரொம்பக் கஷ்டப்படுகிறார்கள், அவர்

களுக்குக் கொடுக்கிற விலை அநியாயமாக இருக்கிறது, எல்லாப் பொருள்களின் விலையும் ஏறி விட்டது, ஆனால் கொள்முதல் விலையைமட்டும் கூட்டிக் கொடுக்க வில்லை என்று சொல்வதற்கு நேர்மாறாக இந்த 5-ம் தேதிவரை மொத்தமாக நிர்ணயித்த 5 இலட்சம் டன்களிலே 2,73,011 டன் கொள்முதல் செய்யப் பட்டிருக்கிறது என்று நான் மிகுந்த மகிழ்ச்சியோடு இந்த மன்றத் திற்குக் தெரிவித்துக்கொள்கிறேன். அதுகூட இப்பொழுது அறுவடை 15 நாட்கள் பிந்தி வருகிறது. இன்னும் 15 நாட்களுக்குக் கணக்கு சேர்த்து எடுக்கவேண்டும், அப்பொழுதுதான் சரியான நிலைமை தெரியும். ஆனால் இதேபோல் கடந்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் பிப்ரவரி மாதம்வரை கடந்த அரசாங்கம் 1,76,000 டன்கள்தான் கொள்முதல் செய்தது. இந்த 2 மாதங் களிலே பலவிதமான சிரமங்கள் இருந்தும்கூட அறுவடை நேரத்தில் பலவிதமான சிக்கல்கள் இருந்தும் கூட, மிகவும் கஷ்டமான நிலை இருந்தும்கூட, பெரும் எதிர்ப்பு இருந்தும்கூட இந்த வருஷம் ஒரு இலட்சம் டன்களை அதிகமாகக் கொள்முதல் செய்திருக்கிறது. மே மாதம் 30-ஆம் தேதிக்குள் 2,75,000 டன்களைக் கொள்முதல் செய்துவிடும் என்பதை நல்ல முறையிலே இந்த மாமன்றம் வரவேற்கும் என்பதிலே கொஞ்சம்கூடச் சந்தேகம் இல்லை. இந்தக் காரியத்தைத் தமிழ் நாட்டு விவசாயிகள், குறிப்பாகப் பெரு வாரியானவர்கள் எவ்வளவு மகிழ்ச்சியோடு இதை வரவேற்கிறார்கள் என்பதற்கு 4, 5 மாவட்டங்களில் ஜனவரி, பிப்ரவரி மாதங்களிலே எவ்வளவு கொள்முதல் ஆனது என்பதையும், முந்தைய சர்க்கார் இருந்தபொழுது எவ்வளவு கொள்முதல் ஆனது என்பதையும் சொல்ல விரும்புகிறேன். இந்தக் கொள்முதலின் காரணமாக யாருக்கும் இடைஞ்சல் இல்லாத வகையில் இதைச் செய்திருக்கி றோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். நாங்கள் வேண்டுமென்றே குறை சொல்லவேண்டுமென்று சொல்லவில்லை— முந்திய சர்க்காரின் பேரில், " கொள்முதலிலே சில பேருக்கு இணக்கமாக இருந்துவிட்டார்கள், சில மிராசுதாரர்களுக்கு அனுசரணை யாக இருந்து விட்டார்கள் " என்ற குற்றச்சாட்டை நாங்கள் எதிர்க் கட்சியிலே இருந்தபொழுது சொன்னோம். அது தவறான நோக்கத்தோடு அல்ல என்பதை இந்த கீழ்க்கண்ட புள்ளி விவரம் காட்டும். கடந்த ஆண்டு செங்கற்பட்டு மாவட்டத் தில் ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் கொள்முதல் செய்தது 2,127 டன். இந்த ஆண்டு இந்த அரசு ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் கொள்முதல் செய்தது 23,007 டன். கடந்த ஆண்டு வடாற்காடு மாவட்டத்திலே இந்த இரண்டு மாதங்களிலே கொள்முதல் செய்தது 15,000 டன். இந்த ஆண்டு இந்த இரண்டு மாதங் களிலே கொள்முதல் செய்தது 51,000 டன். தஞ்சை மாவட்டத் திலே, கடந்த ஆண்டு இந்த இரண்டு மாதங்களிலே கொள்முதல் செய்தது 1,19,000 டன். இந்த ஆண்டு இந்த இரண்டு மாதங் களிலே கொள்முதல் செய்தது 1,50,000 டன். கோவை மாவட்டத் திலே கடந்த ஆண்டு இந்த இரண்டு மாதங்களிலே கொள்முதல் செய்தது 2,251 டன். இந்த ஆண்டு இந்த இரண்டு மாதங்களிலே கொள்முதல் செய்தது 7,476 டன். தென்னாற்காடு மாவட்டத்திலே கடந்த ஆண்டு இந்த இரண்டு மாதங்களில் கொள்முதல் செய்தது 9,356 டன். இந்த ஆண்டு இந்த இரண்டு மாதங்களிலே கொள்முதல் செய்தது 18,185 டன். இதனை நான் படித்துக் காண்பிப்பதற்குக் காரணம் விவசாய மக்களிடத்திலே அவ்வளவு உற்சாகம் இருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டுவதற்காகத்தான்.

**திரு. க. இராமமூர்த்தி** : சென்ற ஆண்டு குறைந்த கொள் முதலுக்குக் காரணம் கொள்முதல் காலத்திலே தென்னாற்காடு, செங்கல்பட்டு மாவட்டத்திலே புயல் ஏற்பட்டதும், மழை இல்லாதத லும் சரியான விளைச்சல் இல்லை என்பதை அமைச்சர் அவர்கள் அறிவாரா ?





**மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன்** : கனம் உறுப்பினர் அவர்கள் சொன்னது சரியானதல்ல. அதற்குப் பிறகு தென்னாற் காடு மாவட்டத்தில் கொள்முதல் செய்யப்பட்டதற்கான கணக்கு விவரங்கள் என்னிடத்திலே இருக்கின்றன. புயல் ஏற்பட்டது திண்டி வனத்தில், ஆனால் கொள்முதல் செய்தது சிதம்பரத்தில்.

ப்ரொகயூர்மெண்டு சம்பந்தமாக ஒன்றிரண்டு கருத்துக்களைமட்டும் இங்கே விளக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். டாக்டர் ஹாண்டே அவர்களுடைய சுதந்திரா கட்சி கண்டிரோலே கூடாது, ப்ரோக்யூர் மெண்டே செய்யக்கூடாது என்று சொல்லுகிறது. நம்முடைய மாண்புமிகு பாலசுப்பிரமணியன், மாண்புமிகு சங்கரய்யா அவர்களு டைய கட்சி இதுகூட போதாது, இன்னும்கூட ப்ரொக்யூர்மெண்டு பண்ணவேண்டும், அது மட்டுமல்ல, 3 ஏகராவுக்குக் குறைவாக வைத்திருப்பவர்களுக்கு எல்லாம் விதி விலக்கு கொடுக்கவேண்டும் என்று சொல்கிறது. அது அவர்களுடைய கட்சி. அதிலே ஒன்றை மட்டும் நான் விளக்கிச் சொல்லவேண்டும். கண்டிரோல்கள் இருக்கவேண்டும் என்பது இந்தக் கட்சியினுடைய, இந்த அரசாங்கத்தி னுடைய ஆசை அல்ல. கண்டிரோல்கள் இருக்கக்கூடாது, எல்லோருக்கும் நியாயமான விலையில் நியாயமான தருணத்தில் நல்ல வகையில் உணவு தானியங்கள் கொடுக்கப்படவேண்டும், எந்த மாதிரியான கட்டுப்பாடும் கூடவே கூடாது என்பதுதான் இந்த அரசாங்கத்தினுடைய கொள்கை. அந்த நீண்ட, நெடிய லட்சியத்தை, கொள்கையை எவ்வளவு விரைவாக அமலுக்குக் கொண்டு வர முடியுமோ, எவ்வளவு சீக்கிரமாக கொண்டு வரமுடியுமோ, அதில் இந்த அரசுக்கு உள்ள அக்கறை, ஆசை கனம் உறுப்பினர்கள் யாருக்கும் இருக்கிற ஆசையைவிடக் கொஞ்சம் கூட குறைவானது அல்ல. ஆனால், இன்னும் ரொம்ப நாட்களுக்கு நம்முடைய தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் இந்த நிலைமைகள் உருவாகி விட்டனவா என்பது நிலைமைகளைப் பரிசீலிக்கின்ற நேரத்தில், சந்தேகத் திற்குரியதாக இருக்கிறது.

(திரு. பெ. மலைச்சாமி தலைமை.)

திரும்பத் திரும்பத் சொல்கிறார்கள். இந்த மாநிலத்தைப் பொறுத்த வரையில் உபரி மாநிலமும் அல்ல, பற்றாக்குறை மாநிலமும் அல்ல. ஒழுங்காக மழை பெய்தால் உபரி மாதிரி இருக்கும், தூரத்துப் பச்சை கண்ணிற்குக் குளிர்ச்சி என்பதுபோல இருக்கும். எங்காவது தகராறு ஏற்பட்டால், கனம் உறுப்பினர்களுக்குத் தெரியும், வரிவஜா நிலைமைகளுக்குக் கொண்டு வந்து விட்டுவிடும். இப்படிப்பட்ட இடர்ப்பாடுகள் உள்ள ஒரு மாநிலம் என்பது மட்டுமல்லாமல், இந்த மாநிலத்தில் சில பிரத்தியேகமான கடமைகள் இருக்கின்றன. இந்த மாநிலத்தைப் பொறுத்தவரையிலே நான் ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல், இந்த மாநிலத்திலுள்ள அரிசிப் பங்கீட்டுமுறை ஏறக்குறைய இந்த மாநிலத்து மக்கள் தொகையில் பாதி மக்கள்வரை தொடுகிறது. கோவை நகரம், அதற்குப் பக்கத்தி லுள்ள புறநகரம், சென்னை நகரம் இந்த இடங்களில் இருக்கிற, ஸ்டாச்சுடரி ரேஷன் ஏரியாவில் இருக்கிற மக்கள் தொகையைப் பார்த்தால், இங்கே 25 லட்சம் மக்கள், கோவையில் 7 லட்சம் மக்கள், மற்றும் புறநகர்ப்பகுதி யிலே இருக்கிற மக்களையெல்லாம் சேர்த்தால், 42 லட்சம் மக்கள் இருக்கிறார்கள். இதுமட்டுமல்லாமல், குடும்பக் கார்டு மூலம் உணவு விநியோகம் செய்யும் மக்கள் தொகை ஒரு கோடி 26 லட்சம். நாம் உணவு தானியம் கொடுப்பது கொஞ்ச அளவாகக் கூட இருக்கலாம். இந்தக் குடும்பக் கார்டுமூலம் விநியோகிப்பதை பெரிய பேராசை பிடித்த வணிகர்கள், வர்த்தக சூதாடிகள், பதுக்கல் காரர்கள் ஆகியோர்களிடம் இந்த அடிப்படை அவசியமான உணவை வழங்குகிற துறையை இந்த அரசாங்கம் ஒப்படைத்துவிட முடியாது. அரசாங்கத்திற்குத் தார்மீகக் கடமைஇருக்கிற காரணத்தினால் இந்தப் பொறுப்பை இந்த அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. 1½ கோடி

மக்களுக்கு உணவு விநியோகிக்கக்கூடிய பொறுப்பை கள்ளச் சந்தைக் காரர்களிடம் ஒப்படைத்துவிட முடியாது. இது மக்களின் அடிப்படை பிரச்சினையாக இருப்பதால் அரசாங்கம் இதை மிகப்புனிதமானதேவையாகக் கருதி ஏற்றுக்கொண்டிருக்கிறது. அந்தக் கடமையிலிருந்து அரசாங்கம் நழுவிவிட முடியாது என்னுடைய நண்பர் டாக்டர் ஹாண்டே அவர்களின் சந்தோஷத்திற்காகவோ அல்லது நம்முடைய மாபெரும் தலைவர் பெருமதிப்பிற்குரிய ராஜாஜி அவர்களை சந்தோஷப்படுத்தவேண்டும் என்பதற்காகவோ, இப்போதுஇங்கே இருந்தால் அவர் கூட அப்படிச் செய்ய யோசிப்பார் என்று நான் பல முறை கூறியிருக்கிறேன். இப்பொழுதிருக்கிற நிலை இதுதான். இந்த மாநிலத்திலுள்ள 3¾ கோடிப் பேர்களுக்கு அடிப்படை தேவையான உணவை அளிப்பதற்கு ஏற்பாடு செய்யாவிட்டால், அரசாங்கம் செய்யவேண்டிய மிக அடிப்படைக் கடமையிலிருந்து நழுவி விடுவதாகும். ஆனால், இந்தக் கட்டுப்பாடுகள், கண்ட்ரோல் முறைகள் நீடிக்கப்படவேண்டியதில்லை, தேவையில்லை என்று இந்த அரசாங்கம் கருதினால், மேலும் ஒரு வினாடிகூட இந்த அரசாங்கம் அவற்றை நீடிக்காது. இன்னும் அப்படிப்பட்ட நிலைமை வராத காரணத்தினால் தான் அவை நீடிக்கப்படுகின்றன. அது மட்டுமல்ல. இன்றைக்கு வசதியுள்ளவர்கள், வாய்ப்புள்ளவர்கள் வணிகச் சந்தையில் உணவுப் பொருள்களை வாங்குகிறார்கள். அவர்களுக்கு அதற்கு வாய்ப்பு இருக் கிறது, வசதி இருக்கிறது. ஆனால், ஏழை மக்கள், சாதாரண மக்கள் அந்த அடிப்படைத் தேவையைக்கூட பெறமுடியாமல் இருக்கிற காரணத்தி னால்தான் இன்றைக்கு இந்தக் காரியங்களெல்லாம் செய்யப்படவேண்டி யிருக்கிறது.

அதே மாதிரித்தான் இன்னொரு கருத்தும் சொல்லப்பட்டது. நம்முடைய சங்கரய்யா அவர்கள் அன்றைக்கு வற்புறுத்தினார்கள், பல விவாதங்களில் வற்புறுத்துகிறார்கள். 3 ஏக்கருக்கும் குறைவாக நிலம் உள்ளவர்களுக்கு விதிவிலக்குக் கொடுக்க வேண்டுமென்று அவர்கள் வற்புறுத்திவருகிறார்கள். அதைப்பற்றி நான் பல முறை இந்த மன்றத்தில் விளக்கியிருக்கிறேன். இப்பொழுதும் விளக்க விரும்புகிறேன். மூன்று ஏக்கர் வரையிலும் நாம் விதிவிலக்குக் கொடுக்கவேண்டுமென்றால், இந்த மாநிலத்தில் நெல் பயிராகிற மொத்தப் பரப்பளவிலே மூன்றில் ஒரு பகுதி நிலத்திற்கு நாம் விதி விலக்குக் கொடுத்தவர்கள் ஆகிவிடுவோம். ஒரு ஏக்கராவுக்குக்கீழே இருக்கும் மொத்த லாண்டு ஹோல்டிங்ஸ் 13,61,413. ஒரு ஏக்கரும், ஒரு ஏக்கருக்குக் குறைவாகவும் உள்ளவை களின் நிலப்பரப்பு 8,59,317. அதே மாதிரி ஒரு ஏக்கரிலிருந்து இரண்டு ஏக்கர் வரை 5,44,760 லாண்டு ஹோல்டிங்ஸ். அதனுடைய ஏக்கரா 7,46,660. அது மாதிரி இரண்டு ஏக்கராவுக்கும் மூன்று ஏக்கராவுக்கும் இடையிலே உள்ள லாண்டு ஹோல்டிங்ஸ் 2,94,208. அதிலே வருகிற நிலப்பரப்பு 6,59,927 ஏக்கர். மொத்தமாகக் கணக்குப் போட்டால் 22,55,494 ஏக்கரா மூன்று ஏக்கராவுக்கு உள்ளே வந்து விடுகிறது. மொத்தம் நிலம், பயிராகிற நிலம் 63,00,476 ஏக்கர். இப்பொழுதே நாம் விலக்குக் கொடுத்திருக்கிறோம். இன்னும் கூட்டிக் கொடுப்பது என்றால், மூன்றில் ஒரு பகுதி நெல் பயிர் இடத்தை விலக்கிவிட்டு, ப்ரொக்யூர்மெண்டு செய்ய முடியுமா என்பதைப் பார்க்கவேண்டும். (குறுக்கீடு) 10 ஏக்கரா என்கிறார்கள். இங்கு ரொம்பவும் குறைவாக இருக்கிறது. அதுதான் பிரத்தியட்ச நிலை. என் சொந்தக் கருத்து, இன்றைக்குக் கேரளத்தில் செய்கிறார்கள் என்றால், அங்கு செய்கிறார்கள். அதை நான் மேல் சபையிலேகூடச் சொன்னேன். ஸ்லோகன் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். 5 ஏக்கராவை விட்டுவிட்டிருக்கிறார்கள். (குறுக்கீடு). நம்முடைய மாநிலத்திலுள்ள நில அமைப்பு வேறு. நம்முடைய மாநிலத்தில் இவ்வளவு கொள்முதல் செய்யவேண்டி யிருக்கிறது. இவ்வளவு கொள்முதல் செய்யாமல் எப்படி 1¾ கோடி மக்களுக்குச் சாப்பாடு போடமுடியும்? அப்படியானால் கம்யூனிஸ்டு நண்டர்கள் 1¾ கோடி மக்களுக்கு உணவு விநியோகம் செய்யவேண்டாம் என்கிறார்களா, அது சரியான கொள்கை என்று கருதுகிறார்களா? ரூ. 66 கொடுக்கிறார்கள். கேரளத்தில் எவ்வளவு பேர்களுக்குக் கொடுக்கிறார்கள்?





நமக்குத் தெரியாதா கொடுப்பது? அது ரொம்ப தவறான ஒன்றாகும். அதை இந்த அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை. அது முற்போக்கானது கூட அல்ல. 5 ஏக்கராவுக்கும் குறைவாக வைத்துக் கொண்டிருப்பவர்கள் என்றால், எல்லோரும் மிராசுதாரர்கள், நிலப் பிரபுக்கள், ஏழை, எளியவர்கள் என்ற நிலை இல்லை. வேறு ஒரு மாநிலத்தினுடைய நிலைமையை இங்கே இழுப்பதற்கு வருத்தப்படுகிறேன். நான் திரு. நம்பூதிரிபாட் அவர்களிடத்திலேயே சொல்லியிருக்கிறேன் அவர்கள் கொடுக்கிறார்கள், கேட்பதில்லை. 50,000 டன் கொள்முதல் செய்வதற்கு, 5 ஏக்கராவை விட்டுவிட்டு, அந்த ஊரில் முதலாளிகளை நிலப்பிரபுக்களை விட்டுவிட்டு, ரூ. 66, 67 என்று அக்ரிகல்சரல் பிரைஸ் கமிஷன் சிபார்சுக்கு விரோதமாக, இந்திய அரசின் சிபார்சுக்கு விரோத மாகச் செய்கிறார்கள். இவர்களுக்கு நான் பதில் சொல்லவில்லை. நம்முடைய பிரதான எதிர்க்கட்சிக்குப் பதில் சொல்கிறேன். அது இந்த அரசாங்கத்திற்கு ஏற்புடையதல்ல. இவ்வளவு பேர்களுக்கு நாம் உணவு விநியோகம் செய்வதற்காக இந்தக் காரியங்களைச் செய்யவேண்டியிருக்கிறது. நாங்களும் ஆழ்ந்து கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறோம். எங்களுக்கு ஆசை இல்லையா இரண்டு ஏக்கரா, மூன்று ஏக்கரா நிலம் வைத்திருக்கிறவர் களுக்கு விலக்கு அளிக்கவேண்டுமென்று? அப்படி விலக்குச் செய் வதிலே மட்டும் அவர்களுக்கு அனுகூலம் இல்லை. அதற்காக நாம் வேறு காரியங்களை மேற்கொண்டிருக்கிறோம். கொள்முதலிலிருந்து விலக்குக் கொடுப்பது, கொள்முதல் விலையைக் கூட்டிக் கொடுப்பதால் மட்டும், விவசாயிகளுக்கு அனுகூலம் கிடைத்துவிடும் என்று இந்த அரசாங்கம் ஒரு நாளும் கருதவில்லை. ஆனால் அந்த நிலையை விளக்கவே புள்ளிவிவரங்கள் சொன்னேன். மாண்புமிகு கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தினரும், எதிர்க் கட்சித் தலைவரும்கூட மு. ப. 10·30
சொன்னார்கள், ஐந்து ஏக்கருக்குக் கீழே கொடுக்கலாம் என்று. நாங்களும் கொடுக்கலாம் என்றுதான் எதிர் கட்சியிலிருந்த போது சொல்லிக் கொண்டுஇருந்தோம். (ஆரவாரம்) இப்பொழுது கொடுத்திருக்கும் ஒரு ஏக்கருக்கு விதிவிலக்குக்கூட அன்றைக்கு அவர் களால் செய்ய முடியவில்லை. அரசாங்க நிர்வாகத்தை நடத்தும்போது, எல்லோருக்கும்தான் கொடுக்கவேண்டும் என்று இருக்கிறது. ஒரு கோடியே இருபத்தாறு லட்சம் பேர்களுக்குக் கொடுக்க வேண்டும். 42 லட்சம் பேர்களுக்கு ஸ்டாசுடரி ரேஷன் கொடுக்க வேண்டும். அதையும் ஒரு பக்கத்தில் பார்க்க வேண்டும். ஊரிலே இருக்கிற காரியங்கள் அவ்வளவையும் செய்ய வேண்டும் என்றால் எப்படி? எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் பொறுப்பாகச் சொல்ல வேண்டும். பேச்சுக்கு ருசிகரமாக இருக்குமேதவிர, ஆட்சி பீடத்தில் இருப்பவர்கள் யோசித்துத்தான் பார்க்கக் கடமைப்பட்டவர்களாக இருக்கிறார்கள். கம்யூனிஸ்ட் கட்சி நண்பர் களுக்குச் சொல்லுவேன். நானும் இதைப்பற்றி அவர்கள் தலைவர் திரு. ராமமூர்த்தியிடம் விவாதித்து இருக்கிறேன். சொல்வது தப்பு, செய்ய முடியாது என்று எடுத்துக்காட்டியிருக்கிறேன், பேசுவதற்கு உற்சாகமாக இருக்கிறது, ருசியாக இருக்கிறது.

இன்னொரு அம்சம் விலையைப் பொறுத்தது. அதைப்பற்றிப் பேசுவதை மிக முக்கியமான, ஒரு ஸ்பெஷல், தனிச் சிறப்பாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள். ப்ரொக்யூர் மெண்ட் ப்ரைஸ்பற்றிச் சொல்லுகிறார்கள். அதை அவர்கள் ஒரு முக்கியமான, 'தீம்'' என்று ஆங்கிலத்தில் சொல்லுவார்களே, அப்படிச் சொல்லுகிறார்கள். அதைப்பற்றி எனக்கொன்றும் பாதகமில்லை, பங்காளிச் சண்டை இல்லை. ஆனால், இந்த மாநிலத்தில் இன்றைக்கு நாம் ரூ. 43, 45, 48 என்று கொடுக்கிறோம். இந்த விலை "அக்ரிகல்சரல் ப்ரைஸ் கமிஷன்" திரு. ஜகஜீவன் ராம், இந்திய சர்க்கார் எல்லோரும் ஒப்புக் கொண்ட விலை. நாங்களே செய்தோம் என்று கர்வமாகச் சொல்லிக்கொண்டு இருக்கவில்லை. ஒன்றைத் தெளிவாக்க விரும்புகிறேன். திட்ட வட்டமாகச் சொல்ல விரும்புகிறேன், இந்த அரசின் சார்பில். இந்த அரசு நியாயமான விலையை நிர்ணயித்திருக்கிறது.
(திரு. கருத்திருமன்: அக்கிரமமான விலை. அரசியலுக்காக அப்படிச்

சொல்லலாம். இதன் அடிப்படையை விளக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இது நியாயமான விலை என்பதை எல்லோரும் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். நாங்கள் மட்டும் சொல்லவில்லை. முன்னால் ரூ. 39 லிருந்து, கொஞ்சம் கொஞ்சமாக ஏறி, இப்பொழுது 45 வரை வந்திருக்கிறது. அப்பொழுது, காங்கிரஸ் அரசாங்கம் போனஸ் என்று ரூ. 3 அதிகமாகக் கொடுத்துக் கொண்டிருந்தது. இப்பொழுது அதையும் சேர்த்து, கொஞ்சம் அதிகமாகக் கொடுக்கிறது. இது நியாயமான விலை என்று நிபுணர்கள் சேர்ந்து முடிவு செய்தார்கள். இதையே இந்திய அரசாங்கமும் கொடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். ஆந்திராவிலே அதிகமாகக் கொடுக்கிறார்கள் என்று சொன்னார்கள். நான் ஆந்திராவிற்குப் போனேன், செலவழித்துக் கொண்டு—அரசாங்கச் செலவுதான். கனம் பிரம்மானந்த ரெட்டி அவர்களையும், உணவு அமைச்சர் திரு. ராஜு அவர்களையும் கேட்டேன், “ஐயா, இம்மாதிரி பண்ணுகிறீர்களாமே” என்று; ஆம் என்றால் நாம் அதைக் கொடுப்பதற்காக இல்லை. அது உண்மையா என்று பார்க்க. அப்படி நான் கேட்ட நேரத்தில், அவர்கள் சொன்னார்கள், அது தவறானது. அக்ரிகல்சுரல் ப்ரைஸ் கமிஷனும், இந்திய அரசாங்கமும் என்ன கொடுக்க வேண்டும் என்கிறார்களோ அதைக் கொடுக்கிறோம் என்கிறார்கள். ஆந்திராவிற்கு எது நியாய விலை என்று அவர்கள் நிர்ணயித்திருக்கிறார்களோ அதைக் கொடுக்கிறோம் என்றார்கள். அதை நான் நிரூபிக்க முடியும். இந்த மாமன்றத்திலே பொறுப்புணர்ச்சியோடு சொல்லுகிறேன். ஆந்திராவில் திரு. பிரும்மானந்த ரெட்டியைக் கேட்டேன். திரு. ராஜு அவர்களும்கூட இருந்தார்கள். உணவுத்துறை செயலாளர் திரு. திரவியமும் இருந்தார்கள். கட்டைச்சம்பாவிற்கு ரூ. 45 இம்மாதிரி ரகம் வாரியாக நிர்ணயித்திருக்கிறார்கள். அந்த ரக நெல்லுக்கு அதே விலைதான். (திரு. கருத்திருமன் குறுக்கீடு) ஆமாம், அவர்களுக்கு அவசியம் ஏற்படவில்லை. ஆந்திரா நெல்லை வாங்கவேண்டிய நிலை இல்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** திரு. வி. பி. ராஜு அவர்கள் சொல்லியிருக்கிறார்கள், பத்திரிகையில் வந்திருக்கிறது. நானும் பொறுப்புடன் தான் சொல்லுகிறேன். எனக்கும் ராஜுவும் பிரம்மானந்த ரெட்டியும் நெருங்கிய தொடர்பு உள்ளவர்கள்தான், எனக்கும் பேசுவதற்குச் சந்தர்ப்பம் இருக்கிறது என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அவர்களுக்கு நேரம் இருக்கிறது. பேசலாம். ஆனால் நாங்கள் செய்வது மக்களுடைய நலனைக் கருதிச் செய்கிறோம். மக்கள் நலனுக்கு உகந்ததாக இருக்க வேண்டும் என்று செய்கிறோம், விருப்பு வெறுப்புபற்றி கொஞ்சங்கூடக் கவலை இல்லை. கொஞ்சம் பொருமையோடு இருந்தால் சொல்லுவேன். அங்கே சூபர் ஃபைன் என்று ஒரு அரிசியிருக்கிறது. . . . .

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அது எனக்கும் தெரியும். சூபர் ஃபைன் அரிசிக்கு ரூ. 70, மீடியம் ஃபைன் அரிசிக்கு ரூ. 68 இன்னும் மீடியம் கோர்ஸ் என்கிற அரிசிக்கு ரூ. 56. அதைத்தான் நான் குறிப்பிட்டேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அந்தமாதிரி ஃபைன் அரிசி இந்தச் சர்க்காருக்குக் கிடையவே கிடையாது.

**திரு. பி. ஜி. கருதிருமன் :** அம்மாதிரி விவசாயிகளை ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தலைவர் அவர்களே, அவர்கள் அந்த வார்த்தையை வித்ட்ரா பண்ணவேண்டும். (மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : பரவாயில்லை.) இந்த விவகாரத்தில் பேச அவருக்குச் சுதந்தரம் என்றைக்கும் உண்டு. இந்த அரசாங்கம் பதவியில் இருக்கிற வரையில் உண்டு. சொல்லட்டும். என்னுடைய அடிப்படைக் கருத்தை மன்றத்திற்கு விளக்கினேன். ஆகவே, கட்டைச்சம்பாவிற்கு ரூ. 45 கொடுக்கிறோம். இப்பொழுதும்கூட, உயர்ந்த ரக நெல்லுக்கு ரூ. 48 கொடுக்கிறோம். ஆனால் ரூ. 56 கொடுக்கிறார்கள் என்பது சரியானதல்ல.



எனக்குத் தகவல் தெரிந்த வரையில், நான் திரு. பிரம்மானந்த ரெட்டியிடம் அறிந்தவரையில் அப்படியில்லை. அவர்களுக்கு பிரம்மானந்த ரெட்டியும், ஜகஜ்ஜீவன்ராமும் சொந்தக்காரர்கள், அவர்களுடைய கட்சிக்காரர்கள், தெரிந்துகொள்ளலாம். ஆனால் நான் சொல்வதெல்லாம் இந்த விலை கட்டுப்படியாகும் விலை. விவசாயிகளுக்கு வேறு சிரமங்கள் இருக்கலாம். உற்பத்திச் செலவுகள் அதிகரித்துத்தான் இருக்கின்றன. அதை நாங்கள் மறுக்க மாட்டோம். விவசாயக் கூலி அதிகரித்திருக்கிறது. அதுவும் உண்மைதான். ஆனால் வேறு வகையில் ஈடுகட்டுவதற்கு திட்டம் வைத்திருக்கிறதா என்று பார்க்க வேண்டும். மொத்த கொள்முதலா செய்கிறோம் ? அப்படி ஒரு தவறான எண்ணம் மக்களிடையே பரப்பப்பட்டிருக்கிறது. எவ்வளவு கொள்முதல் செய்கிறோம் ? மொத்தம் 40 லட்சம் டன் இருக்கிறது என்றால், அதில் 8 லட்சம் டன் தான் அதாவது 20 சத வீதம் தான், கொள்முதல் செய்கிறோம். மிச்ச நெல் எல்லாம் அவர்களே வைத்துக் கொள்கிறார்கள். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பெரிய விவசாயி ; அவர்கள் அந்த மிச்ச நெல்லை அதே விலைக்கா கொடுக்கிறார்கள் ? நாங்கள் எவ்வளவு கேட்கிறோமோ அவ்வளவு தான் கொடுக்கிறார்கள். ரூ. 48 என்ற விலைக்கு. விளையக்கூடிய நெல் அத்தனையையுமா எங்களுக்குக் கொடுக்கிறார்கள் ? வெளிச்சந்தையில் தானே ஐந்தில் நான்கு பாகத்தை விற்கிறார்கள் ? அது ஒன்று. ஆனால் அதற்காக அந்தக் காரியத்தை இந்த அரசாங்கம் செய்தது என்பதல்ல. இப்பொழுதெல்லாம், கம்யூனிஸ்ட் நண்பர்கள் அவர்களோடு சேர்ந்து கொள்ளலாம். இரண்டு பேருமே எனக்கு ஒன்று தான். வலதும், இடதுமாக, இரண்டும் ஒன்று ஆக வேண்டும் என்பது தான் என்னுடைய ஆசை. இரண்டு காரியந்தான் செய்யலாம். விலை ஏற்றுகிறோம் என்றால் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவருடைய திருப்திக்காக வேண்டுமானால் செய்யலாம். (திரு. கருத்திருமன் : விவசாயிகளுடைய திருப்தி). அப்படிக் கொடுக்கிறோம் என்றால், அதை வாங்குகிறவன் தலையில் கட்டவேண்டும். அல்லது அரசாங்கமே ஏற்றுக் கொள்ளவேண்டும். இதிலே எதைச் செய்யச் சொல்லுகிறார்கள் (குறுக்கீடு) அரசாங்கமே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றால், அதற்கு எத்தனை கோடி ரூபாய்கள் ஆகும் ? இப்பொழுது கூட்டிக் கொடுத்திருக்கும் 2, 3 ரூபாய்க்கே இரண்டு கோடியாகிறது. அரசாங்கம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றால், அபிவிருத்தித் திட்டங்களுக்கு பணம் இல்லையே என்பார்கள். இன்றைக்கு படி அரிசித் திட்டத்திலே போல வாதம் வரும். அந்த நச்சுவட்டம் எங்கே போய்முடியும் என்பதுதான் கேள்வி. திட்டக் கமிஷனின் துணைத் தலைவர் திரு காட்கில் அவர்களோடு பேசிக் கொண்டிருந்தபோது, அவர்களும் சொன்னார்கள். இந்த அரசாங்கம் தெளிவாகத் திட்டவட்டமாகச் சொல்லுகிறது. உணவுப் பொருள்களின் விலைவாசிகளை கட்டுப்படுத்துவது அதை ஒரு சீராக வைத்திருப்பது அதை ஸ்டெபிலைஸ் செய்வது என்பது மற்றப் பொருள்களின் விலைவாசிகளையும் குறைப்பதற்கான மிக அடிப்படையான, ப்ரி—ரெக்விஸிட்டான அம்சம் ஆகும் அந்த அடிப்படை அம்சம் இருக்கவேண்டு என்றால் விவசாயிகளுக்கும் கட்டுபடியாகாத குறைந்த விலையில் உணவுப் பொருள்களின் விலை இருக்கக் கூடாது. அவர்களுக்குக் கட்டுபடியான விலையைச் ஸ்திரப்படுத்தினால்தான் மற்ற விலைவாசிகளும் குறைய முடியும். எல்லா விவசாயிகளும் ஒத்துக்கொண்டுவிட்டார்கள். இதிலே ஒரு கட்டுப்பாடு இல்லாவிட்டால், இந்த நச்சுவட்டம்பிற உணவுப் பொருள்களைப் பொறுத்தும் ஏறுமுகமாகச் சென்றுவிடும். ஆகவே, விலை வாசியைக் கட்டுப்படுத்துகிற ஒரு அடிப்படை அம்சமாக இந்த வேலைகளை இந்த அரசு கருதுகிறது. அதில் தெளிவாக இருக்கிறது. விவசாயிகள் உற்பத்தி செய்கிற உணவுத் தானியங்களுக்கு ஒரு குறிப்பிட்ட அளவு விலை கொடுக்கிறோம் என்றாலும், அவர்கள் விவசாயத்தில் மேலும் ஈடுபடுவதற்காக, விவசாய உற்பத்தியை மேலும் பெருக்குவதற்காக, உற்பத்திச் செலவைக் குறைக்கும் வகையில், விவசாயிகளுக்குப் பல ரூபங்களில் உதவிகளைச் செய்கிறோம். விவசாயத்திற்கு வேண்டிய இரசாயன உரங்களையும் கருவிகளையும் கொடுக்கிறோம். கடன் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கிறோம். ஒரு போகத்தை இரு போகமாக ஆக்குவதற்காக, கிணறுகள் வெட்டுவதற்காக உதவிகள

செய்கிறோம். பம்பிசெட் வைப்பதற்கு உதவிகள் செய்கிறோம். விளைச்சலை பெருக்குவதற்காக வேண்டிய உயர் ரக விதைகளை, பொறுக்கு விதை கடனைக் கொடுக்கிறோம். அரசாங்கத்தின் இத்தகைய உதவிகளின் மூலமும் இன்னும் பல உதவிகளின் மூலமும், இருபது மூட்டை விளைந்த இடத்தில் இப்பொழுது முப்பது மூட்டை விளையக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிற தென்று சொல்ல முடியும். நான் எதற்கெடுத்தாலும் எதிர்க் கட்சித் தலைவரைக் குறிப்பிடுகிறேன் என்று கருதிக்கொள்ள வேண்டாம் அவ அவருக்குத் தெரிந்த பகுதியாக இருப்பதால், குறிப்பிடுகிறேன் இவருக்கு கோபம் வந்துவிடாது என்று கருதுகிறேன். இருபது மூட்டை விளைந்த இடத்தில் முப்பது மூட்டை நெல் விளைந்திருக்கிறது என்று சொல்லலாம எப்படியும் 25 மூட்டைக்குக் குறைவு இல்லை என்பதுதான் இப்போதுள்ள நிலை. இப்படியெல்லாம் விவசாயிகளுக்குப் பல வகைகளில் இந்த அர சாங்கம் உற்சாகம் அளிக்கிறது என்றுதான் குறிப்பிடுகிறேன்.

நெல்லின் விலை இந்த அளவுக்கு இருக்க வேண்டும் என்பது விலை வாசிக் கட்டுப்பாட்டுத் திட்டத்தினுடைய ப்ரீ ரெக்விஸிட்டாகும். டெல்லியில் இருக்கும் திட்டக் கமிஷனே இதைப் பாராட்டுகிறார்கள். வெளி நாடுகளி லிருந்து இறக்குமதி செய்கிற மானம் கெட்ட நிலையை நாம் என்றைக்குத் தான் மாற்றியமைப்பது ? என்றென்றைக்கும் அமெரிக்காவிற்கோ மற்ற வெளி நாடுகளுக்கோ போய் உணவு தானியங்கள் வேண்டும் என்று நாம் கேட்டுக்கொண்டிருக்கப் போகிறோமா ? அப்படியானால், நம் சுய மரி யாதை என்ன ஆவது ? தன்னம்பிக்கையுடன் நாமே நமக்கு வேண்டிய உணவுத் தேவையைப் பூர்த்தி செய்துகொள்வதுதான் எப்போது ? சுதந்திரத்திற்காக யார் யாரோ தியாகம் செய்து, போராடி, இந்த நாட் டுக்கு விடுதலை தேடித் தந்தார்கள். உணவுத் தேவையைப் பொறுத்த வரையில், அதிகமாக உற்பத்தி செய்து உணவுப பொருள் உற்பத்தியில் தன்னிறைவு எய்துவதில் நாம் என்ன செய்யப்போகிறோம் என்று நாடு நம்மை எதிர்நோக்கிக்கொண்டிருக்கிறது. ஆகவே, உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெறத் தக்க அளவிற்கு வேண்டிய திட்டத்தை இப்பொழுது அமல்படுத்தாமல் நாம் எப்பொழுதுதான் அமல்படுத்தப் போகிறோம் ? இப்படிப்பட்ட பொருளாதாரமான ரீதியில்தான் விலைகளை நிர்ணயித்திருக் கிறோம். விவசாயப் பெருங்குடி மக்கள் இதை இன்று ஏற்றுக்கொண்டி ருக்கிறார்கள். அதற்கு உதாரணம் சொல்ல விரும்புகிறேன். கொள் முதல் இரண்டே முக்கால் லட்சம் டன் அளவுக்கு அமோகமாக ஆகியிருக்கிறது. அதுவும் தஞ்சை மாவட்டத்தில் மட்டும் ஒன்றரை லட்சம் டன் கொள்முதல் ஆகியிருக்கிறது.

இன்னொன்றும் சொல்ல விரும்புகிறேன். இப்பொழுதுதான் ஞாபகம் வருகிறது. இரண்டு மாதங்களுக்கு முன்னால் நான் இத்தாலி நாட்டுக்குப் போயிருந்தபோது, டெல்லியில் இருக்கிறவரும், என்னுடைய பெருமதிப் பிற்குரிய நண்பரும், முன்னால் தொழில் அமைச்சராக இருந்தவருமான திரு. வெங்கட்டராமன் அவர்களையும் என்னையும் சாப்பிடுவதற்காக ஒரு வீட்டுக்குக் கூப்பிட்டிருந்தார்கள். அப்பொழுது நாங்கள் பேசிக்கொண் டிருந்தபொழுது, அவரை நான் ஒன்று கேட்டேன். "இம்மாதிரி இவர் களெல்லாம் சொல்லுகிறார்களே, இதெல்லாம் நீங்கள் அவர்களுக்குச் சொல்லக் கூடாதா ? இதுதான் அரசியல் கோட்பாடா ?" என்று நான் கேட்டேன். அவர்கள் சொன்னார்கள் : ' என்னுடைய சகோதரர் பட்டுக் கோட்டையில் இருக்கிறார். எங்களுக்கு அங்கே கொஞ்சம் நிலம் இருக் கிறது. ' எல்லா நெல்லையும் கொள்முதலுக்குக் கொடுத்துவிட்டேன், இந்த விலை எந்த ஆட்சியிலும் கிடைக்கவில்லை, முன்னேற்றக் கழக ஆட்சியில் தான் கிடைத்தது, எல்லாவற்றையும் அளந்துவிட்டேன், எனக்கு, ரொம்ப சந்தோஷம், பெருமையாக இருக்கிறது. என்று தமையனார் கடிதம் எழுதி யிருக்கிறார். அதுதான் சரியானது" என்று சொன்னார்கள். அவர்களும் உங்கள் கட்சியைச் சார்ந்தவர்கள்தான். திட்டக் கமிஷன் மெம்பராக இருப்பவர். ரொம்பப் பெரிய இடத்திற்குப் போயிருக்கிறவர் (எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் குறுக்கீடு) காங்கிரஸ்காரர்கள் கொடுத்தார்கள் என்று அவர்கள் எதை எதையோ சொல்லிப் பெருமைபட்டுக்கொள்ளுவதை





போல், இதிலும் பெருமைப்பட்டுக்கொள்ளட்டும். முன்னேற்றக் கழகம்தான் கொடுத்தது என்கிற பாத்தியதை எங்களுக்கும் வேண்டாம். அந்தப் பெருமை உங்களுக்கே இருக்கட்டும். மகுடாபிஷேகம் செய்கிறோம். உண் மையிலேயே நீங்கள் கொடுத்த விலைதானா.

ஃபெர்ட்டிலைசர்ஸ் விலை ஏறியிருக்கிறது. அதற்கு வாருங்களேன். ப்ரீ-டீ-வால்யுவேஷன் தேதியில் பெர்ட்டிலைசருக்கு என்ன விலை இருந்ததோ அந்த விலையிலேயே கொடுக்க வேண்டும், முன்னால் கொடுத்த போனஸ் கொடுக்க வேண்டும் என்று, நானும், விவசாயத்துறை அமைச்சர் அவர் களும் டெல்லி சென்றிருந்தபோது, அங்கு நடந்த விவசாய மாநாட்டில் மிகவும் வலியுறுத்தி வாதாடினோம். ப்ரி-டீ-வால்யுவேஷன் ப்ரைஸஸ் ரெஸ்டோர் செய்ய வேண்டும் என்று வற்புறுத்தினோம். போனஸ் கொடுங்கள் என்று சொன்னோம். யாரால் விவசாயச் சாகுபடி செலவு ஏறியிருக்கிறது ? அதற்குக் காரணம், டெல்லி. டெல்லி என்றுகூடச் சொல்ல மாட்டேன். அதற்குக் காரணம் காங்கிரஸ் கட்சி. காங்கிரஸ் கட்சி தானே அங்கே அரசாங்கப் பொறுப்பில் இருக்கிறது ? மற்றக் காரியங் களுக்கெல்லாம் சொந்தம் பாராட்டிக்கொள்ளுகிறீர்களே, விவசாய உற் பத்திச் செலவை உயர்த்துவதற்குக் காரணமாக இருக்கும்போது மட்டும் ஏன் சும்மா இருக்கிறீர்கள் ? விவசாய உற்பத்திக்குத் தேவையான ரசா யன உரங்களைக் கொடுப்பதற்கும். விலையைக் குறைப்பதற்கும், அவர் களைக் கேளுங்களேன். நீங்கள் ஏன் கூறவில்லை ? அதையெல்லாம் செய்யாமல், வெளியில் இருப்பவர்களுக்குக் கொஞ்ச நேரம் திருப்தியாக இருக்கட்டும் என்று, விவசாயிகளுக்குப்போனஸ் கொடுங்கள், மூட்டைக்கு நான்கு ரூபாய் விலை ஏற்றுங்கள் என்றால், இப்படி 12 ரூபாய் வழங்கு வதனால் விமோசனம் வந்துவிடுமா ? இந்த 12 ரூபாய் எங்கேபோய் முடிகிறது என்ற விவகாரத்தில் செல்லும்போது, அதன் அபாயகரத்தை நீங்கள் புரிந்துகொள்ளப் போகிறீர்கள். ஆகையால், விலை நியாயமான விலை என்று விவசாயிகள் ஏற்றுக்கொண்டதற்காக அவர்களுக்கு நன்றி செலுத்துகிறோம். நம்முடைய மன்ற உறுப்பினர்கள் நல்ல வகையில் அதற்கு ஆதரவு அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நானும் மிகவும் வேகமாகத்தான் பேசிக்கொண்டிருக்கிறேன். இருந் தாலும் ஒன்றிரண்டு விஷயங்களைச் சொல்ல வேண்டியிருப்பதால்தான் சொல்லுகிறேன். கடைசியில், பேசாமல் கூட விட்டுவிட முடியுமானால், விட்டுவிடுகிறேன். இந்த விவாதம் நல்ல வகையில் துவங்க வேண்டும் என்பதற்காகவும், குழப்பங்களைத் தெளிவுபடுத்துவதற்காகவும்தான் இப் பொழுது சில வார்த்தைகள் சொல்கிறேன். கடுமையாக யாரையும் விமர் சனம் செய்வதற்காக அல்ல. உறுப்பினர்களுடைய ஆக்கபூர்வமான யோசனைகளைப் பெறுவதற்காகத்தான் முன்னுரையாகச் சில வார்த்தைகள் கூறிக்கொண்டிருக்கிறேன்.

என்னுடைய பெருமதிப்பிற்குரிய நண்பர் திரு பூவராகன் அவர்கள் கூட, பொது விவாதத்தில் பேசும்போது, படியரிசித் திட்டத்தைப் பற்றி யெல்லாம் சொன்னார்கள். விவாதம் எல்லாம், மிக முக்கியமாக அதைச் சுற்றிச் சுற்றித்தான் வளைகிறது. படியரிசித் திட்டத்திலே கொஞ்சங் கூட மாறுதல் கிடையாது. மாறுதல் என்ற நிலை கிடையாது. படியரிசி திட்டம், படியரிசித் திட்டம் இன்றைக்கு எங்கே இருக்கிறது ? சென்னை நகரத்தில் போடுகிறீர்கள். கோயம்புத்தூர் நகரத்தில் போடுகிறீர்கள். மற்ற நகரங்களில் போடுகிறீர்கள். இப்படியெல்லாம் சொல்லுகிறார்கள். இதைக் குறித்து நான் தெளிவாகச் சொல்லுகிறேன். இன்றைக்குப் படி யரிசித் திட்டத்தின்கீழ் 12·80 லட்சம் மக்களுக்குப் போடப்படுகிறது. அப் படிச் சொல்லுங்கள். கதையை தமிழ்நாட்டில் இன்றைக்கு மொத்தம் ஒரு கோடி 26 லட்சம் பேர் குடும்பக் கார்டு முறையிலும், 42·80 லட்சம் பேர் இந்த ரேஷன் முறையிலும் இருக்கிறார்கள் என்றால், தமிழகத்தில் ரேஷன முறையின் கீழ்—அது இன்பார்மல் ரேஷன் பகுதியாக இருந்தா லும், ஸ்டாச்சுடரி ரேஷன் பகுதியாக இருந்தாலும்—வருபவர்களில் நான் கில் ஒரு பகுதியினருக்குப் படியரிசித் திட்டம் இன்றைக்கு அமல்படுத்தப் பட்டிருக்கிறது என்று பொருள். சென்னை நகரம், கோயம்புத்தூர் நகரம்

என்று என் சொல்லுகிறீர்கள் ? இன்னும் கொஞ்சம் பெரிய கணக்கை வேண்டுமானால், சொல்லுகிறேன்,. மூன்றே முக்கால் கோடி பேர் இருக் கிறார்கள். இந்த மூன்றே முக்கால் கோடி பேரில் 42·80 லட்சம் பேர் களுக்குப் படி அரிசித் திட்டத்தின்கீழ் இந்த அரிசி கிடைக்கிறதென்றால், நிநீங்கள் அதைப் பாராட்டக்கூட வேண்டாம். அந்தப் பாராட்டுதலை உங்க ளிடமிருந்து நானும் எதிர்பார்க்கவில்லை. எந்த வகையில் அதைக் கொடுக்க வேண்டும் என்பதற்கு ஒரு விமர்சனமாவது வேண்டாமா ? மூன்றே முக்கால் கோடி மக்களில் 42·80 லட்சம் பேர் இந்தப் படியரிசித் திட்டத்தின் பலனை இன்றைக்கு அனுபவிக்கிறார்கள். இதையும் நீங்கள் சொல்லவில்லை. சென்னையிலும், கோயம்புத்தூரிலும், போட்டால் போதுமா ? என்று கேட்கிறீர்கள். சென்னை கோயம்புத்தூரில் இருக்கிற வர்கள் எங்களுக்கு ஏதாவது படி அளக்கிறார்களா ? மதுரையில் இருக்கிற வர்களிடம் எங்களுக்கு ஏதாவது பங்காளிச் சண்டையா ? சென்னை, கோவை ஆகிய இரு நகரங்களையும் ஸ்டாசுடரி ரேஷனிங் பகுதிகளாக நம் முடைய திரு சுபபிரமணியம் அவர்கள்தான் செய்தார்கள். முன்னால் முதலமைச்சர் அவர்களிடம் பத்து நாட்களுக்கு முன்னால் பேசிக்கொண்டி ருந்தேன். திரு லால் பகதூர் சாஸ்திரி அவர்களின் சிபார்சின்பேரில் தான் அந்த இரு நகரங்களையும் ஸ்டாச்சுடரி ரேஷனிங் பகுதிகளாகச் செய்தார்கள். திரு சுப்பிரமணியம் செய்தது தப்பு என்று நான் வாதாட மாட்டேன். ' வல்னரபிள் செக்ஷன் ' என்று சொல்லக்கூடிய , தொழில் நிலையங்கள் அதிகமாக இருந்து, தொழிலாளர்கள் அதிகமாக வசிக்கக் கூடிய, அல்லது வாங்கும் சக்தி அதிகமாக உள்ளவர்கள் வசிக்கும் பெரு நகரங்களில் ஸ்டாச்சுடரி ரேஷனில் கொண்டுவரவேண்டுமென்று சேட்ட போது, முன்னாள் முதலமைச்சர் திரு பக்தவச்த்சலம் அவர்கள் முதலில், வேண்டாம் என்று சொன்னார்களாம். அதற்குப் பிறகு திரு லால் பகதூர் சாஸ்திரி அவர்களைக் கூட்டிக்கொண்டுவந்து திரு பக்தவத்சலத்திடம் சிபார்சு செய்யச் சொல்லி, அந்த இரு நகரங்களையும் ஸ்டாச்சுடரி ரேஷனிங் பகுதிகளாக திரு சுப்பிரமணியம் அவர்கள் செய்தார்கள் என்று பத்து நாட்களுக்கு முன்னால் பேசிக்கொண்டிருந்த நேரத்தில் சொன்னார்கள், திரு சுப்பிரமணியம் அவர்களைக் குறை சொல்லுகிறேன் என்று யாரும் கருதிவிட வேண்டாம். அவர் செய்தது சரி. அந்த ஊர்களில்தானே துவங்க வேண்டும் ? மூன்றே முக்கால் கோடி பேரில் 42·80 லட்சம் பேர் களுக்கு நாங்கள் படியரிசி கொடுத்துக்கொண்டிருக்கிறோம். இவர்களுக்கு மட்டும்தான் என்பதல்ல. இன்னும் எப்படி. எந்த வகையில என்பது தான் கேள்வியே தவிர, சென்னை நகரத்திற்கும், கோயம்புத்தூர் நகரத்தி திற்கும் மட்டும்தான் என்பதல்ல. சென்னை நகர் யாருக்குச் சொந்தம் ? விநாயகம் அவர்களுக்குச் சொந்தமா ? எனக்குச் சொந்தமா ? எல்லா மாவட்டக்காரர்களும் சென்னை நகரில் இருக்கிறார்கள். எல்லா மாவட்டங் களுக்கும் சென்னை நகரம்தான் தலைநகரம். அதில் எல்லோருக்கும் உரிமை உண்டு. எதற்காக ஸ்டாச்சுடரி ரேஷனிங் கொண்டுவந்தார்கள் என்றால், இங்கு வாங்கும் சக்தி அதிகமாக இருக்கிறது. விளைச்சல் கிடையாது. வெளி ஊர்களில் இருக்கிறதையெல்லாம் வாங்கிவிட்டால் என்ன ஆவது ? கட்டுப்பாடு, காவல் இதெல்லாம் இல்லையென்றால் மதுராந்தகம் போன்ற இடங்களிலிருந்து சென்னை நகரத்திற்கு நேராக, வந்துவிடும். எந்த விவசாயி களத்து மேட்டில் பாடுபட்டானோ, எந்த விவ சாயி சேற்றிலும் மண்ணிலும் சிரமப்பட்டானோ, அவன் கடைத் தெருவுக்குச் சென்று படி நான்கு ரூபாய் கொடுத்து வாங்க வேண்டிய நிலை ஏற்படக் கூடாது என்பதற்காகத்தான் இந்த முள் வேலியே தவிர, வேறு எதற்காக இந்த முள் வேலி இருக்கிறது ?

இன்றைய தினம் படி அரிசித் திட்டத்தைப்பற்றித் தான் எங்கு பார்த் தாலும் பேசப்பட்டு வருகிறது. இதைக் கண்டு நான் உண்மையிலேயே பெருமகிழ்ச்சியடைகிறேன். படி அரிசித் திட்டம் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஓராண்டு சாதனையின் மகுடமாக, சிகரமாகவே அமைந் திருக்கிறது என்று நான் கருதுகிறேன். படி அரிசி திட்டத்தை இந்த மாமன்றத்திலே நாங்கள் அறிமுகப்படுத்திய நேரத்திலே, நீங்கள் என்ன சொன்னீர்கள் ? " என்ன படி அரிசித் திட்டம், எப்படி அமல்படுத்துவீர் கள் ". என்றெல்லாம் கூறி எங்கள் உள்நோக்கத்தையே சந்தேகித்தீர்கள்.



அன்றையதினம் படி அரிசித் திட்டத்தைச் சந்தேகித்தவர்கள் இன்றைய தினம் "எங்கே படி அரிசி, எங்கே படி அரிசி" என்று கேட்டு வரு வதைக் கண்டு, உள்ளபடியே உங்களுடைய மனமாற்றத்தை வரவேற் கிறேன். உங்களுடைய மனமாற்றத்திற்கு என் சிரம் தாழ்த்தி நன்றி செலுத்திக் கொள்கிறேன். எனது பெருமதிப்பிற்குரிய திரு. பூவராகன், திரு. விநாயகம், திரு. பொன்னப்ப நாடார் மற்றும் பலர் இதைப்பற்றிக் குறிப்பிட்டுப் பேசினார்கள். எல்லோருக்கும் படி அரிசி தர வேண்டுமென் பதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய குறிக்கோள் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கன்னியாகுமரிக்கு இந்த படி அரிசித் திட்டம் இல்லையா என்று நண்பர் திரு. மார்ட்டின் அவர்கள்கூட கேட்டார் கள். இன்றைய தினம் மதுரைக்கு எங்கே படி அரிசித் திட்டம், குற்றாலத் திற்கு எங்கே படி அரிசித் திட்டம், கன்னியாகுமரிக்கு எங்கே படி அரிசித் திட்டம், எப்போது முதல் படி அரிசி வழங்கப் போகிறீர்கள் என்று கேட்டுக் கொண்டிருப்பது, திராவிட முன்னேற்றக் கழகம் துவக்கிய படி அரிசித் திட்டத்தின் உணவுக் கொள்கைக்குக் கிடைத்த தலைசிறந்த பாராட்டு என்று கருதி, நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். நீங்கள் திட்டத்தைப் பற்றிச் சொல்லும் கண்டனங்களையெல்லாம் பாராட்டாமல், உணவு அளிக் கும் புனிதமான கடமையில் நாங்கள் ஈடுபட்டிருக்கிறோம். உங்களுக்கு ஏற்பட்டிருந்த கல்நெஞ்சம்கொஞ்சம் கரைந்து, மக்களின் நலனில் அக்கறை செலுத்தும் வழிக்கு வந்திருப்பதற்கு நான்நன்றி செலுத்தக் கடமைபட்டிருக் கிறேன். படி அரிசித் திட்டத்தைப்பற்றி மிக விளக்கமாகச் சொல்ல வேண்டுமென்று கருதுகிறேன். படி அரிசித் திட்டத்தை எந்த முறையில், எப்போது எல்லா மக்களுக்கும் வழங்க முடியும் என்பதைப்பற்றி யோசித் துக் கொண்டிருக்கிறோம். படி அரிசித் திட்டத்தைப் பற்றி இன்னொரு குற்றச்சாட்டை சொல்லுகிறார்கள் படி அரிசித் திட்டத்தை சென்னை, கோயம்புத்தூர் நகர மக்களுக்கும் அமல்படுத்திவிட்டு, மற்ற நகரங்கள், கிராமங்களிலுள்ள மக்களுக்கு அதை விரிவு படுத்தாமல் பாரபட்சம் காட்டப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. முன்பிருந்த அரசாங்கம் ஏற் படுத்திய ரேஷன் பகுதிகளுக்கு முதலில் படி அரிசித் திட்டத்தை அமல் செய்து, பின்னர் எல்லா இடங்களுக்கும் விரிவ படுத்த வேண்டும் என்பது தான் எங்கள் திட்டம்.

இன்னொரு முக்கியமான விஷயத்தை இந்த மன்றத்திற்கு எடுத்துக் கூற விரும்புகிறேன். படி அரிசித் திட்டத்திற்கு 5 கோடி ரூபாய் செலவு செய்யப்படுவதாக ஒரு தவறான எண்ணம் இந்த மாமன்றத்தில் பரவி யிருக்கிறது. உணவுத் திட்டத்திற்காக இந்த வருஷம் 5 கோடி ரூபாய் செலவாகிறது அடுத்த வருஷம் இது சுமார் 7 கோடி ரூபாய் அளவில் உயரும் என்று கருதுகிறேன். ஆனால் இந்த 5 கோடி ரூபாய் சென்னை, கோயம்புத்தூர் ஆகிய இரண்டு நகரங்களுக்கு மட்டுமே செலவாகிறதா என்றால் இல்லை. இதை என்னுடைய குறிப்பிலே சுட்டிக் காட்டியிருக் கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பை இன்னும் படிக்க ஆரம் பிக்கவில்லையென்று கருதுகிறேன். அந்தக் குறிப்பிலே, கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

" I want to correct the impression which some Members may have that the entire expenditure incurred by Government on subsidy is only as a result of this ' rupee-a-measure scheme '. The ' rupee-a-measure scheme ' in and by itself has involved only an additional expenditure of Rs. 2·56 crores during 1967–68. This scheme benefits about 42·80 lakhs of people. The other expenditure of about Rs. 2·5 crores is incurred by Government on the concessions made available to consumers both in the informally rationed areas and statutory rationing areas, and also as a result of the bonus payable to the producers. All the 126 lakhs consumers in the informally rationed areas are also the beneficiaries as a result of this expenditure of Rs. 2·5 crores "

[ திரு. கே. ஏ. மதியழகன் ] [ 1968 மார்ச் 8

உணவுக் காரியத்திற்கு 5 கோடி ரூபாய் என்று நாங்கள் கணக்கெடுத்திருக்கிற நேரத்தில் இந்தத் தொகை பூராவும் சென்னை நகரத்திற்கும் கோவை நகரத்திற்கும் படி அரிசிக்காக மட்டும் செலவிடப்படவில்லை. இந்த இரு நகரங்களிலும் உள்ள 40 லட்சம் மக்களுக்கு செலவிடப்படுவது 2½ கோடி ரூபாய்தான் என்பதை இந்த மன்றத்திற்கும், தமிழகத்திற்கும் தெளிவுபடுத்த விரும்புகிறேன். மீதி 2½ கோடி ரூபாய் சட்டபூர்வ பங்கீடு உள்ள, சட்டபூர்வ பங்கீடும் இல்லாத பகுதிகளில் கொள்முதல் செய்வோர் அனைவருக்கும் தரப்படுகின்றது. முன்பு குவிண்டால் 40 ரூபாய் என்ற அளவில் இருந்தது. இப்போதுள்ள அரசாங்கம் கொள்முதல் விலையை ஏற்றி, 43, 45, 48 ரூபாய் என்று வழங்கி வருகிறது. முன்பு தனியாகத் தரப்பட்டு வந்த போனஸ் தொகையை கொள்முதல் விலையுடன் சேர்த்துத் தரப்பட்டு வருகிறது. ஆகவே, உணவு உற்பத்தியைப் பெருக்கும் விவசாயிகளுக்கு 40 ரூபாய் கொடுத்தால் போதும் என்று இருந்த நிலையை மாற்றி, விவசாயத்தில் ஏற்படுகின்ற செலவுகளையெல்லாம் ஈடுகட்டும் முறையில்தான் இப்போது கொள்முதல் விலையைக் கூட்டிக் கொடுத்து வருகிறது. அந்த முறையில்தான் மீதி 2½ கோடி ரூபாயும் உணவுத் திட்டத்தின்கீழ் செலவிடப்பட்டு வருகிறது.

இந்த மாமன்றம் 5 கோடி ரூபாய் மானியம் அளிப்பதன் மூலம் படி அரிசித் திட்டம் வழங்கும் பகுதிகளிலுள்ள 40 லட்சம் மக்கள் மட்டுமல்ல மற்ற பகுதிகளில் வாழும் 126 லட்சம் மக்களும் பயன் பெறுகின்றனர், என்பதை இந்த மாமன்றத்தின் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். படி அரிசித் திட்டம் இல்லாத மற்ற பகுதிகளுக்கும் படி அரிசி வழங்க வேண்டுமென்ற கொள்கையை திராவிட முன்னேற்றக் கழக அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது. ஆக ஐந்து கோடி ரூபாய் உணவு விநியோகத் துறையில் செலவாகிறது என்றால் அதில் 2½ கோடி ஒரு படி அரிசி வழங்குவதிலும், மற்றும் ஒரு 2½ கோடி உணவு கொள்முதல் துறையில் விவசாயிகளுக்குக் கொடுக்கப்படுகிற ஊக்க போனஸ் போன்ற இனங்களுக்குமே போகிறது. ஆக, இந்தத் திட்டத்தின் மூலம் ஒவ்வொரு வீட்டிலும் உள்ள குழந்தை குட்டிகள், தாய்மார்கள், கிழவர்கள் ஆகிய எல்லோருடைய உணவுக் கலயத்திலும் பகிர்ந்து அளிக்கப்படுகிறது என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

மு. ப. 11-00 அடுத்தபடியாக, ஒரே ஒரு முக்கியமான விஷயத்தைச் சொல்லி முடித்துக் கொள்கிறேன். அதுதான் உணவு மண்டல முறையைப் பற்றி. வடக்கே உள்ள சிலர் தனி உணவு மண்டல அமைப்பு முறையே இருக்கக் கூடாது, எடுத்துவிட வேண்டும் என்ற கருத்துக்கொண்டவர்களாக இருக்கிறார்கள். உணவுப் பொருள் நடமாட்டத்திற்கு கதவுகள் திறந்துவிடப்பட வேண்டும் என்ற கருத்துத்தெரிவிக்கப்படுகிறது. பத்திரிகைக்காரர்கள் கூட தனி உணவு மண்டல முறையை எடுத்துவிடப் போகிறார்கள் என்று போட்டு விட்டார்கள். பக்கத்தில் பசி நிறைந்த கேரள மாநிலம், கைக்கும் வாய்க்கும் ஆக இருக்கிற நம்முடைய மாநில நிலை—இந்த நிலையில் தனி உணவு மண்டல அமைப்பு முறையை எடுத்து விடுவதைப்போன்ற அபாயம் வேறு எதுவுமே வேண்டாம். நாமும் மத்திய அரசினிடத்தில் திரு. நம்பூத்ரிபாட்டைப்போல எங்களுக்கு இவ்வளவு அரிசி கொடுங்கள் என்று கேட்கிற அவல நிலை வந்துவிடும். இதை முதல் அமைச்சர்களின் மகாநாட்டில் எங்களால் நன்கு உணர முடிந்தது. தமிழக அரசின் சார்பில் தனி உணவு மண்டல முறையை எடுப்பதுபற்றி நமது முதல் அமைச்சர் அவர்கள் மிகத் தெளிவாக—எடுக்கவே கூடாது என்று வற்புறுத்தினார்கள். நானும் கூடக்கேட்டேன். இந்த அத்தியாவசியமான அமைப்பை எடுத்து விடுவதா? சகல கோடி மக்களுக்கும் உணவு அளிக்கவேண்டிய தார்மீகப் பொறுப்பைத் தட்டிக் கழிப்பதா? கள்ளச் சந்தைக்காரர்களிடத்திலும், வாணிப சூதாட்டக்காரர்களிடத்திலும் இந்த மக்களைக் காட்டிக் கொடுத்து விடுவதா என்று அழுத்தம் திருத்தமாகக் கேட்டேன். அங்குள்ள சிலரும்—அவர்கள் இப்போது மந்திரியாகக் கூட இல்லை தனி உணவு மண்டல முறையை இப்போது ரத்து செய்வதை எதிர்த்தார்கள். ஆக இந்த அமைப்பு முறை மேலும் ஓராண்டுக்கு நீட்டிக்கப்பட்டிருக்கிறது: தனி உணவு மண்டல முறையை எடுத்துவிடக்கூடாது என்பதில் இங்குள்ள



1968 மார்ச் 8] [ திரு. கே. ஏ. மதியழகன் ]

எல்லாக் கட்சிகளும் ஒருமித்த கருத்து கொண்டிருப்பதை நான் வரவேற்கிறேன். அதில் நமக்குள் எந்தவிதமான வித்தியாசமும் இல்லை. தனி உணவு மண்டல முறையை எடுக்கக்கூடாது என்று நான் டெல்லியில் கருத்துத் தெரிவித்ததை—அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் முன்னாள் தலைவர் திரு. காமராஜர் அவர்களே—நான் அந்தக் கருத்துத் தெரிவித்த நான்கு மணிக்குள்ளாக—தமிழக அரசின் முடிவைப் பாராட்டுகிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். தனி உணவு மண்டல முறையை ரத்து செய்துவிட வேண்டும் என்ற கோரிக்கை திரும்பத் திரும்ப வரலாம். இங்குள்ள எல்லாக் கட்சிகளையும் சேர்ந்த நாம் இதில் ஒரு திடமான முடிவை உடையவர்களாக இருக்கவேண்டும். அதை எடுத்துவிடுவதனால் ஏற்படக்கூடிய பேரபாயத்தை நன்கு உணர்ந்துகொண்டவர்களாக இருக்க வேண்டும். ஆகவே, இதுபற்றியும் விவாதத்தில் கனம் உறுப்பினர்களுடைய கவனம் இருக்கவேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

உணவுத்துறை சிறப்பான முறையில் இயங்கவேண்டும் என்பதற்காக அதிகாரிகள் கொண்டு வரப்பட்டார்கள். உணவு வழங்கும் துறை விறுவிறுப்பாகவும், துரிதமாகவும், புரட்சிகரமான முறையில் இயங்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் யாவும் எடுக்கப்பட்டன. அதன் காரணமாக இப்போது அதில் ஏற்பட்டுள்ள பொலிவையும், வலிவையும் கனம் உறுப்பினர்கள் உணர்வார்கள். தம்முடைய இன்னுயிரையும் மதிக்காது—கேரளா போன்ற எல்லைகளில், மதுரை மாவட்ட எல்லையோரப் பகுதிகளில் கள்ளக்கடத்தல்காரர்களை—ரெவின்யூ அதிகாரிகளும், சிவில் சப்ளை அதிகாரிகளும், போலீஸ் கண்காணிப்புப் பிரிவினரும் கண்டு பிடிப்பதில்—மரணத்தைத் திரணமாக மதித்துச் செயல்பட்டு வருகிறார்கள். அதன் காரணமாக விலைகள் குறைந்திருக்கின்றன. இறங்குமுகமான நிலை ஏற்பட்டிருக்கிறது. எங்கே படி அரிசித் திட்டம் என்பதற்கு இப்போது படி அரிசித் திட்டம் என்கிற நிலையும் ஏற்பட முடியும். இந்த நிலைகளை எல்லாம் உணர்ந்து மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் மேலான யோசனைகளை வழங்கவேண்டும் என்று கோரி, இந்த விவாதத்தை நான் துவக்கி வைக்கிறேன்.

**திரு. செ. பாலசுப்பிரமணியன்** : இப்பொழுதே நேரம் அதிகமாகிவிட்டது. தொடர்ந்து பல அங்கத்தினர்களும் பேச வேண்டியிருப்பதால் மாலையிலும் தொடர்ந்து இந்தப் பேரவையை நடத்தி—இந்த விவாதம் தொடர்ந்து நடைபெறுமாறு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**DR. H. V. HANDE**: The Minister has practically covered a vast area. My suggestion is that he can limit his reply to fifteen or twenty minutes and the time when the Leader of the Opposition starts his speech can be postponed by half-an-hour.

**THE HON. THIRU K. A. MATHIALAGAN**: I will require only fifteen minutes.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பெ. மூலச்சாமி)** : மாண்புமிகு அமைச்சர் அவர்களும், திரு. ஹாண்டே அவர்களும் கூறியது போலக் காலக் குறைவாக இருப்பதனால் ஓரளவு ஒவ்வொரு உறுப்பினரும் தங்கள் உரையை ஐந்து மணித் துளிக்குள் முடித்துக்கொள்ளவேண்டும். இப்போது காங்கிரஸ் கட்சி கொறடா அவர்கள் பேசுவார்கள்.

**THIRU K. VINAYAKAM**: Sir, I am very happy to initiate this discussion on food policy. This brochure, which contains the proposals and the policy of the Government, was placed on the table this morning just before we came to this chamber. We consumed one hour for questions and answers, and after that there was the moving of the Demand and the cut motions. The Minister will realise that we have to read, assimilate, retain and then re-deliver

if pertinent criticism has to be made on the food policy. The Congress Party is not against the food policy as a whole. It is we who introduced procurement, it is we who introduced controls and it is we who introduced statutory rationing in the City as well as in the other areas. All our quarrel with the present Government is whether you are adopting the principles enunciated by us in right earnest without causing hardship either to the farmer who gives his produce or to the consumer who depends upon the produce. All our quarrel with the present Government is that the procurement will have to be procurement without tears, without much harassment to the farmers who produce food for our consumption. What happens in our State ? The harassment caused is unimaginable. Farmers are put to great terror and even politicians interfere. During the time of the Congress Ministry, we left it to the officers to go, cajole and explain things. I know and some of my colleagues also know of instances where the procurement officers go with a posse of constables threatening the farmers with dire consequences. They go with a fleet of jeeps, terrorise and say: 'This is our Government, you must give for procurement or else you will be hanged in the nearest lamp post.' That is not the way it should be done. Our Chief Minister was pleased to say on the floor of this House that, while in the past it was procurement without tears, it would be procurement with a pat on the back. That means the officers will go, cajole, talk nice words and then ask for the produce. That has not been in practice. That is my quarrel. We procure from an acre where we produce and distribute to an area where food is not available. I understand it because we are the authors of such a policy. After having been kind enough to give exalted promises before the Ellection that the D.M.K. Government stands for three-measures-a-rupee—that is old history, we will forget about it—what happened? Afterwards you gave one meassure of rice per rupee. That is their policy. (Interruption.) Do you want me to explain ? I shall tear you to pieces.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : If it already torn.

THIRU K. VINAYAKAM : So, let us confine ourselves to the policy of this Government as adumbrated and practised now. Let us forget about their electioneering promises. One-rupee-a-measure rice scheme is a good scheme. We are not against it. That you should understand. But what exactly is in practice ? That is our quarrel with you. You are giving one-rupee-a-measure-rice only to certain areas like the Madras City and the Coimbatore town. When we ask you to extend the scheme to other areas of the State according to the electoral promises, you take cover under the commitment made by the former Congress Government. What did the Congress Government do in the past ? They procured whatever it was possible and then distributed it not only to the statutory rationed areas but also the non-stautory rationed areas. You take cover under the policy of the former Congress Government. At the same time you want to take credit for your food policy. But whenever it is inconvenient and whenever it is very difficult to get out of the mess you quote us. I will quote one saying from the Bible—I do



not mean any disrespect to the Hon. Minister for Food or other Hon. Ministers, most of whom are my good friends. It is like devil quoting Scripture to suit its purpose. This is not my saying but it is the saying of Jesus Christ or somebody else. So, whenever it suits your purpose you quote us and the Congress Party. That is my quarrel with you. So, be honest to your electoral promises. That is what I say. What difficulty is there for this Government to extend the scheme to the entire State ? After all, you incurred only Rs. 2·75 crores on this scheme and according to the Hon. Minister also, only 42 lakhs of the people, that is about one-eighth of the population, have been covered by it. I say that this amounts to political discrimination against the majority of the people. Of course, you can say that you do not have money and you do not have enough stock of rice or wheat. I understand your difficulty but you should not have made that commitment. Having made that commitment, why do you want to show political discrimination against the people.

Now, I come to another aspect of the matter. The Hon. Minister has stated that the people in the statutory rationed areas are not growing rice and so they have introduced the scheme there. But who grows the paddy ? Do the Government believe that the entire population grow paddy ? It is not the land-owner who gets the entire produce. It is only the middlemen or the tenants who are enjoying most of the produce. The agricultural labourers who form about 80 per cent of the population in a village would have to go to the open market to purchase rice. But what is the price ruling in the village ? It is not one rupee but it is still higher than that. You are pampering the people in the two cities only ? You are not doing justice to the agricultural labourers or the people in the lowest rung of the ladder who have not got the possibility of buying cheaper rice. This amounts to political discrimination. What was your slogan before you came to power. Your slogan was that if you came to power you would extend the one-rupee-a-measure scheme to the entire State ranging from the Kanyakumari district to my place, Tirutani. I may tell you, my people are hungry (The Hon. Thiru A. Govindaswamy : They are not angry like you) But they are hungry. Some people may use a mild language but I use a fiery language. So, procurement will have to be done without causing much harassment to the farmers, and at the same time the one-rupee-a-measure scheme should be extended to other areas whether you have incurred loss or not and whether you are in a position to balance the Budget or not and whether you get contributions from the Centre or not. 'Contributions from the Centre' has become a very distressing slogan of the party in power Whenever you are not able to solve your problem, you look to the Delhi Government. That is not how things are to be carried out. That is not the way to tackle the problems faced by you. You stated before the elections that if you came to power, you would deliver the goods. Instead of throwing the blame on the bigger brother sitting at Delhi, you should act according to what I have stated in my cut motion, viz., the extention of the 'one-measure-a-rupee' scheme to the entire State. You

must be uniformly kind to the entire people. You should not be kind to one section of the people only. You cannot escape from this dirty mire which you have yourself created. Sir, with these words, I resume my seat.

**திரு. எஸ். இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, இந்த உணவுப்
பிரச்சினையானது இன்றையதினம் இந்த நாட்டிற்கு மட்டுமல்ல, இந்தியத்
துணைக் கண்டத்திற்கு மட்டுமல்ல, உலக மக்களையே ஆட்டிப் படைக்கின்ற
ஒரு பெரும் பிரச்னையாகும். வளர்ந்து வருகின்ற நாடுகளுக்கு மட்டும்
அல்லாமல் ஏற்கனவே வளர்ந்துவிட்ட நாடுகளையும் இந்தப் பிரச்னை
ஆட்டிப்படைக்கின்றது. கடந்த ஓராண்டுக காலத்தில் திராவிட முன்னேற்
றக் கழக அரசு, பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் பொறுப்
பேற்றுக்கொண்டு சிறந்த முறையில் நடத்தி வந்திருக்கிறார்கள் என்பதை
நான் பாராட்டுகிறேன். உணவுப் பங்கீடு முறையின் மூலம் 46 இலட்சம்
மக்களுக்கும், இன்ஃபார்மல் ரேஷனிங் மூலம் ஒரு கோடியே 26 இலட்சம்
மக்களுக்கும், தமிழ்நாட்டிலே மூன்றிலே ஒரு பகுதி மக்களுக்கு உணவை
வினியோகிப்பது என்பது சாதாரணக் காரியமல்ல. அன்றாடம் உணவுப்
பண்டத்தை அன்றாடம் தங்கு தடையின்றி வினியோகிக்கின்ற பொறுப்பை
தமிழக அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. நெல்லைக் கொள்முதல் செய்வ
தும், ஆலைகளுக்கு எடுத்துச் செல்வதும், ஆலைகளில் அரிசியாக்கப்பட்ட
வற்றை பல்வேறு நகரங்களுக்குக் கொண்டு செல்லுவதும் அதைக் கிட்டத்
தட்ட ஒரு கோடி இதயங்களுக்கு அன்றாடம் தேவைகளைப் பூர்த்தி செய்கிற
ஒரு இலாகா பெரிய பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறது என்பதை
நினைத்துப் பார்த்தால் இந்தப் பிரச்னையின் தன்மையைப் புரிந்து
கொள்ள முடியும். பிரச்னையின் அளவைப் புரிந்துகொள்ள முடியும்.
அதற்கேற்ப நல்ல யோசனைகளை எதிர்க்கட்சியிலிருந்து தர முடியும்;
அதை விட்டுவிட்டு எங்காவது மூலையிலே கிடைத்த அரிசியை இந்த மாமன்
றத்திலே கொண்டுவந்து காட்டி, அரிசி வினியோகத்தைப் பாருங்கள் என்று
ஏதோ மலையின்மீது கல்லையெறிந்துவிட்டு மலையை அடித்துவிட்டேன்
என்று மகிழ்கிற சிறு பிள்ளையைப் போல் நடந்துகொள்ள வேண்டா
மென்று எதிர்க்கட்சியினரை நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.
சுதந்திராக் கட்சியை எடுத்துக்கொண்டால் அவர்களுக்கு என ஒரு தனிக்
கொள்கையை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அரசாங்கம் இதில் தலை
யிடக் கூடாது; தனிப்பட்ட வியாபாரிகளிடத்தில் இதை விட்டுவிடுங்கள்;
விலைவாசிகள் தானே குறையும்; கட்டுப்பாட்டை நீக்குங்கள் என்று பழைய
பல நூற்றாண்டுகளுக்கு முன் கடைப்பிடிக்கப்பட்ட பொருளாதாரத்
தத்துவத்தை இந்த மாமன்றத்திலே சொல்லி படி அரிசியைப் பற்றியும்
சொல்லிக்கொண்டு வருகிற நிலைமை தொடர்ந்து இருக்கிறது. அவர்கள்
சொல்கிற பொருளாதாரத் தத்துவம் வளம் மிக்க நாட்டுக்கு, வாய்ப்பு
மிக்க நாட்டுக்குப் பொருந்தி வளர்ச்சியடைந்திருக்கலாமே தவிர, இந்த
நாட்டுக்கு அது உகந்ததல்ல.

ஃப்ரீ ட்ரேட் என்ற இந்த புரையோடிப்போன பொருளாதாரத் தத்து
வத்தை, வளர நினைக்கின்ற ஒரு கட்சி வைத்துக்கொண்டிருக்கக் கூடாது
என்று நான் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

1965-ம் ஆண்டிலே சர்க்கார் ஏன் ரேஷனைக் கொண்டுவந்தார்கள்?
ராஜாஜி அவர்களால் எடுக்கப்பட்ட உணவுப் பங்கீட்டு முறை ஏன் மறுபடி
யும் கொண்டுவரப்பட்டது? 1965-ம் ஆண்டிலே நடைபெற்ற சம்பவங்களை
நினைத்துப் பார்ப்போமானால் இந்தப் பிரச்னையை நாம் நன்றாகப் புரிந்து
கொள்ள முடியும். அன்று அரிசியை ஏற்றிச் சென்ற லாரிகள் சூறை
யாடப்பட்டன. அரிசியை வைத்துக்கொண்டிருந்த கடைகள் கொள்ளை
யடிக்கப்பட்டன. கோவையிலும், சென்னை மாநகரிலும் நடைபெற்ற சம்ப
வங்கள் எதைக் காட்டுகின்றன? சுதந்திரக் கட்சி நம்பிக்கை வைக்க
நினைக்கும் வியாபாரிகள்தான் அன்று அரிசியை மக்கள் கண்ணிலேகூட
காட்டவில்லை. அதனால் ஏராளமான தொழிலாளர்கள் புரட்சியை உண்டு
பண்ணக்கூடிய நிலைமை ஏற்பட்டது. ஆகவேதான், வணிகர்களை நம்பிப்



பயன் இல்லை; அவர்களிடம் இந்தப் பிரச்னையை விட்டுவைத்தால் நாடு
சுகத்திற்கு வந்துவிடும் என்று சொல்லுவது சரியல்ல; ஆகவேதான்
அன்று உணவுப் பங்கீட்டு முறை கொண்டுவரப்பட்டதே தவிர, வேறல்ல.

**திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர்:** சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர்கள்,
தானியத்தைப் பதுக்கி வைத்திருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்களே
இது முறைதானா? மெய்ப்பிக்க முடியுமா?

**திரு. எஸ். ராமச்சந்திரன்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நான்
பேசுவதைக் கொஞ்சம் கூர்ந்து கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன். வியாபாரிகளிடத்தில் உணவு விநியோகப் பொறுப்பை ஒப்படைப்
பது இந்த நாட்டு மக்களை அவர்களுடைய லாப நோக்கு என்ற பசிக்கு
இரையாகத் தூக்கி எறிவது என்றுதான் பொருள். ஆகவே தான்
அத்தகைய பிரச்சினையை அரசாங்கம் சமாளிக்கவேண்டுமென்று குறிப்
பிட்டேன்.

அது மட்டுமல்லாமல் இன்றையதினம் இந்தச் சர்க்காரைப் பொறுத்த
வரை கோவை, சென்னை ஆகிய இரண்டு நகரங்களில் இருக்கிற ஏழை
எளிய மக்களுக்கு, பாட்டாளி மக்களுக்கு நியாயமான விலையில் உணவுப்
பண்டங்களைத் தர வேண்டுமென்ற அடிப்படையில், குறைவான விலையில்
தரவேண்டுமென்ற அடிப்படையில், திட்டவட்டமான கொள்கையின் அடிப்
படையில் படி அரிசித் திட்டத்தை அமல்படுத்தியிருக்கிறோம். இந்த
இரண்டு மாநகரங்களிலும் இருக்கிற முக்கியமான பிரச்சினை என்ன
வென்றால், தொழிலாளர்கள் தங்களுக்கு டியர்னஸ் அலவன்ஸை உயர்த்த
வேண்டுமென்று போராட்டம் நடத்துவார்கள், உடனே பஞ்சப்படி உயர்வு
கிடைக்கும்போது விலைவாசிகள் இரண்டு மடங்கு, மூன்று மடங்கு உயர்ந்து
விடும். மறுபடியும் தொழிலாளர்கள் ஏமாற்றப்படுவார்கள். இந்த
வகையாகப் பஞ்சப்படி உயர்வினால் தொழிலாளர்கள் பயன் பெற முடியா
மல் பரிதவித்துக் கொண்டிருந்தார்களே தவிர, அவர்களுக்கு நிரந்தரமான
பரிகாரம் ஏற்படவில்லை. ஆகையினாலே தான் அவர்களுக்கு நன்மை
பயக்கும் வகையில் படி அரிசித் திட்டம் இந்த இரண்டு மாநகரங்களிலும்
கொண்டுவரப்பட்டது. படியரிசித் திட்டத்தைப் போற்றாத பொருளாதார
மேதைகள் இல்லை; படியரிசித் திட்டத்தைப் பாராட்டாதவர்கள் இல்லை.
பண வீக்கத்தைத் தடுப்பதற்கு இருக்கிற ஒரே வழி படியரிசித் திட்டந்தான்.
இந்தப் படியரிசித் திட்டத்தைப் பற்றி காங்கிரஸ் கட்சியின் தெளிவான
கொள்கை இன்னும் தெரிவிக்கப்படவில்லை. அவர்கள் கட்சியின் தரப்பில்
தரப்பட்டுள்ள வெட்டுத் தீர்மானங்களில் ஜார்ஜ் அவர்களால் தரப்பட்ட
வெட்டுத் தீர்மானம் இந்தப் படியரிசித் திட்டத்தை விட்டுவிட வேண்டு
மென்ற வகையில் அமைந்திருக்கிறது. மாண்புமிகு திரு. விநாயகம்
அவர்கள் "படியரிசித் திட்டத்தை எல்லாப் பகுதிகளிலும் போடுங்கள்
என்று வெட்டுத்தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். எப்போதுமே அவர்
களுக்கு இரட்டை நாக்கு இருப்பது இயல்பு. ஆகவே, அத்தகைய தீர்
மானங்கள் வந்திருக்கின்றன. (திரு. பி. ஜி. கருத்திருமன் எழுந்தார்)
I am not yielding.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், சார்.
இரட்டை நாக்கு என்று சொல்லுகிறார்கள். இவர்களுக்கு எத்தனை நாக்கு
என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பெ. மலைச்சாமி):** இரட்டை
நாக்கு என்று சொல்லும்போது இரண்டு பொருள் அர்த்தத்திற்காகச்
சொல்லப்படுவது. இது ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர் ஆகாது.

**திரு. எஸ். இராமச்சந்திரன்:** அவர்கள் படியரிசித் திட்டத்தை ஆதரிக்
கிறார்களா இல்லையா என்பதைப் பற்றித் திட்டவட்டமாக இந்த மாமன்றத்
திற்கும், தமிழ்நாட்டு மக்களுக்கும் தெரிவித்துவிடவேண்டுமென்று கேட்டு
கொள்கிறேன். மதிப்பிற்குரிய திரு. பூவராகன் அவர்கள் கூட கடந்த
ஆண்டில் அடிக்கடி பேசி வந்தார்கள். கரும்பு பயிரிட வேண்டும். . . .
(மணி அடிக்கப்பட்டது).

*திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் : தலைவர் அவர்களே, இது மிக சர்ச்சைக்குரிய காரியம். உணவு அமைச்சர் அவர்கள் பேசியதற்கு விளக்கமான பதில் சொல்ல வேண்டியிருப்பதால் தயவுசெய்து கொஞ்சம் அதிக நேரம் கொடுக்கவேண்டுமென்று பணிவோடு மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பெ. மலைச்சாமி) : உறுப்பினர் அவர்களுக்கு 10 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன.

திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் : உணவு அமைச்சர் அவர்கள் பேசிய பேச்சில் இரண்டு கருதுக்களை மிக வலியுறுத்திக் கூறினார்கள். படியரிசித் திட்டதின் அவசியத்தைப் பற்றியும், நெல்லுக்கு இப்போது கொடுக்கப்படுகிற விலை நியாயந்தான் என்பதைப் பற்றியும் மிக அழுத்தந் திருத்தமாகக் கூறினார்கள். இந்த இரண்டுமே நேர்மைக்குப் புறம்பானது என்ற எங்களுடைய கருத்தை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். இப்போது நிர்ணயிக்கப்பட்ட விலை எந்த அடிப்படையில் என்று அறிக்கையில் கூறியிருக்கிறார்கள். "1964-ம் ஆண்டில் செப்டம்பர் மாத இறுதியில் மத்திய உணவு அமைச்சர், தெற்கு மாநில முதல் அமைச்சர்களின் மாநாடு ஒன்றை கூட்டினார். அதில் 1964–65-ம் ஆண்டுக்கு தெற்கு உணவு மண்டலத்தில் உள்ள மாநிலங்களில், நெல்லுக்கும் அரிசிக்கும் நிர்ணயிக்கப்பட வேண்டிய விலைகளைப் பற்றி "ஜா குழுவினர்" செய்த பரிந்துரை ஆலோசிக்கப்பட்டது. இந்தப் பேச்சு வார்த்தைகளின் பலனாக ஒவ்வொரு மாநிலத்திலும் முக்கியமாக விநியோகிக்கப்படும் அரிசி ரகத்திற்கு உச்ச விலையை மத்திய அரசு நிர்ணயித்தது...இதைத் தவிர குவிண்டாலுக்கு 3 ரூபாய் போனசும் தரப்பட்டது" என்று கூறியிருக்கிறார்கள். இந்த விலையை இவர்கள் என்ன ஆதாரத்தோடு நிர்ணயித்தார்கள்?, என்ன ஆதாரத்தின் பேரில் விலை நிர்ணயிக்கப்பட்டது என்று யாரும் கூறவில்லை. மூலப் பொருள் என்ன விலை, உற்பத்திச் செலவு எவ்வளவு, என்ன லாபம் என்ற கணக்கைப் பார்த்து அந்த விலையை நிர்ணயிக்கவில்லை. எந்த அடிப்படையில் விலை நிர்ணயிக்கப்பட்டது என்று கேள்வி மேல் கேள்வியாகப் போட்டுக் கொண்டு தான் வருகிறேன். இதுவரை பதில் இல்லை. அதிகமாக நெல் விளைகிற தஞ்சை, திருச்சி, தென்னாற்காடு, வட ஆற்காடு மாவட்டங்களிலேயே ஏக்கருக்கு 15 மூட்டைகளிலிருந்து 20 மூட்டைகள் வரை தான் விளைகிறது. அதை விற்றால் 350 ரூபாய் முதல் 450 ரூபாய் வரை தான் வருகிறது. அதிலே, விதை, உழவு, கொத்து உரம், நடவு ஆகியவற்றுக்குச் செலவு செய்து, பராமரிப்பு, நிலம் நீர்த்தீர்வை, இன்னும் விவசாய வருமான வரி செலுத்தக்கூடியதாக இருந்தால் அதையும் செலுத்திய பிறகு பார்த்தால் ஏக்கருக்கு 300 ரூபாய்க்கு மேல் செலவாகும். இதிலே ஒரு ஏக்கருக்கு பத்தாயிரம் ரூபாய் மூலதனம் செலவு செய்தால் அரை சத விகிதமாவது கட்ட வேண்டாமா ? அவர்கள் கடன் வாங்கச் சென்றால் 100-க்கு 2 ரூபாயிலிருந்து 5 ரூபாய்வரை மாதம் கொடுக்கவேண்டியிருக்கிறது. அது 24 முதல் 60 சதவிகிதம் வரை எட்டுகிறது. இவன் போடுகின்ற பத்தாயிரம் ரூபாய்க்கு அரை சத விகிதம் என்று வைத்துக் கணக்குப் பார்த்தாலே ஆண்டுக்கு ரூ. 600 ஆகிவிடுகிறது. அதிலும் ஒரு போகம் விளைகிறது. அடுத்த போகம் விளையாமல் போகிறது. அந்த நஷ்டத்தை யார் கொடுப்பது ? ஆகவே, இந்தக் கொள்முதல் விலை எந்தக் கணக்கில், எந்த அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது என்று விளங்கவில்லை. விசித்திரமாக இருக்கிறது. பிற துறைகளில் மூலதனம் போடுகின்றவர்கள் இந்தக் கணக்கிலே லாபம் கிடைத்தால் போதுமென்று இருப்பார்களா ? முன் ஜென்மத்தில் என்ன பாவம் செய்தோ குடியானவனாகப் பிறந்து விட்டான்.

நெல் கொள்முதல் விலை ரூ. 45 என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், ஒரு குவிண்டால் அரிசி விலை ரூ. 90 வரை அசல் ஆகிறது. எந்தக் கணக்கில் இந்த விலை ஆகிறது ? எப்படி வந்தது ? 45 ரூபாய்க்கு கொள்முதல் செய்தால் குவிண்டால் அரிசி விலை 60 ரூபாய் அல்லது 65 ரூபாய்க்கு மேல் விற்பது நியாயமாக இல்லை. இவர்கள் வேண்டாத பெரும் பட்டாளங்களுக்கு ஊதியத்தைக் கொடுத்து, வேண்டாத செலவினங்களைச் செய்து வருவதன் காரணமாகத் தான் 90 ரூபாய் வரை விற்கவேண்டிய





நிலைமை ஏற்படுகிறது. 65 ரூபாய்க்கு மேல் விற்க வேண்டிய அவசியம் இல்லை என்பதற்கு நான் புள்ளி விவரங்களோடு கணக்குக் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். 90 ரூபாய் என்று வைத்தும் நஷ்டப்படுவதாகச் சொன்னார்கள். நீங்கள் நஷ்டப்பட்டால் அது உங்களுடைய சொந்த நஷ்டம் அல்ல. மக்களிடமிருந்து வரியாக வாங்கித்தான் செலவழிக்கப்படுகிறது. ஆகவே, கண்டிப்பாக நஷ்டப்படக்கூடாது. லாபகரமான முறையிலே தொழில்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்த மாதம் 2-ம் தேதி பாராளு மன்றத்தில் மத்திய அமைச்சர் ஷிண்டே அவர்கள், கேரளாவுக்கு ஒரு குவிண்டாலுக்கு 96 ரூபாய் வீதம் அரிசி கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இன்று இதற்கு உலக மார்க்கட்டிலே 135 ரூபாய் விலை இருக்கிறது. உலக மார்க்கட்டில் 135 மு. ப. 11-30
ரூபாய் விற்கும்போது இங்கு 60 ரூபாய் கொடுக்கக் கூடாதா ? உலக மார்க்கட்டில் சர்க்கரை விற்கப்படும் விலையைப் பார்க்கும் போது இங்கே அங்கு இருப்பதைவிட மூன்று மடங்கு, நான்கு மடங்கு அதிகமாக இருப்பதைப் பார்க்கிறோம்.

ஆனால் அங்கிருக்கும் விலையில் கால்பங்குதான் நாம் உணவுப் பொருள்களுக்கு கொடுக்கிறோமென்றால் உணவு உற்பத்தியை எப்படி பெருக்க முடியும் ? உற்பத்திச் செலவுகளைக் கணக்கில் எடுத்துக் கொண்டு பார்க்கின்ற வகையில் விலை கொடுக்காமல், விவசாயிக்கு கட்டுப்படியாகாத விலையில் கொள் முதல் செய்யும் காரணத்தினால்தான் உணவு உற்பத்தி மிகமிகக் குறைகிறது. உற்பத்தி செய்பவர்களுக்கு ஊக்கம் ஏற்படுவதற்கு பதிலாக மிகமிகத் தளர்ச்சி ஏற்படுகிறது. உற்பத்தி செய்கிறவர்களுக்கு தளர்ச்சி ஏற்படாத வகையில் காரியங்கள் செய்ய வேண்டும். உற்பத்திக் குறைவுக்கான நிலையில் தான விலையை நிர்ணயித்து கொள்முதல் செய்கிறார்களே தவிர உண்மையிலேயே விவசாயிகளை ஊக்குவிக்கக்கூடிய வகையில் காரியங்கள் நடைபெறவில்லை. எங்களைப் பொறுத்த வரையில் முன்பும் சொல்லி யிருக்கிறேன், இப்போதும் சொல்லுகிறேன், சென்ற ஆண்டு கிணற்றில் இருந்து தண்ணீர் இறைத்து ஏக்கருக்கு 800 மூட்டை விளைவித்தேன். ஆனால் இன்று அப்படியே கொள்முதலுக்குக் கொடுக்க வேண்டும் என்று சொல்லி, அதுவும் குறிப்பிட்ட விலைக்குத் தான் கொள்முதலுக்கு கொடுக்க வேண்டும் என்ற நிர்ப்பந்தம் வரும் என்று கருதி என்னுடைய பண்ணை ஆட்களுக்கும் என்னுடைய குடும்பத்திற்கும் வேண்டியதற்கு மேல் உற்பத்தி செய்ய முடியாத நிர்ப்பந்த நிலைக்கு வந்து விட்டது. மின்சார செலவைக் கணக்கிட்டால் அதைச் சரிக்கட்ட முடியாத சகிக்க முடியாத நிலை இருக்கிறது. ஒரு மோட்டாருக்குப் பதில் இரண்டு மோட்டார்களை வைத்து இறைக்கக்கூடிய நிலை எங்கள் மாவட்டத்தில் இருப்பதை விவசாய அமைச்சர் அவர்களே நேரில் வந்து பார்த்திருக்கிறார்கள். மின்சார கரண்ட் செலவு அதிகமாக இருக்கிறது. மின்சாரத்துக்கு 35 சதவிகிதம் விற்பனை வரியையும் மற்ற வரிகளையும் போட்டிருக்கிறார்கள். இப்படியெல்லாம் மின்சாரச் செலவு உயர்ந்து கொண்டு போவதனால் உற்பத்திச் செலவு உயர்ந்து கொண்டு போகிறது. இது நியாயமா என்று எல்லோரும் கேட்கிறார்களே என்றால் கேட்காமல் என்ன செய்வார்கள் ?

விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய தானியத்தை வெளியிலே கொண்டு போய் இஷ்டம் போல அதிக விலைக்கு விற்பதற்கில்லை. நிர்ணயித்த விலைக்குத் தான் விற்க வேண்டியிருக்கிறது. திருட்டுத்தனமாக திருடன் மாதிரி தான் கொண்டு போக வேண்டும். அப்படிக் கொண்டுபோக வேண்டுமானாலும் லாரிகளில் தான் கொண்டுபோக வேண்டும், சந்தைகளில் தான் விற்க வேண்டும். ஆனால் அதற்கும் கட்டுப்பாடு இருக்கிறது. லாரியில் கொண்டு போனாலும் பிடித்து விடுவார்கள். திரும்பக் கொண்டு வந்தாலும் பிடித்து விடுவார்கள். உணவு உற்பத்தி செய்யக் கூடியவர்கள் திருடன் மாதிரி நடந்து கொள்ள வேண்டிய நிலையிலே, அவர்களை மிகக் கேவலமாக பாவிக்கும் நிலையில் தான் அவர்கள் வைக்கப்படுகிறார்கள். முன்பும் கூட இப்படி இருந்தது. இப்போது இன்னும் கடுமையாகவே இருக்கிறதென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இன்னொரு கணக்கும் சொல்லப்பட்டிருக்கிறது. முன்பு எல்லாம் 7·2 லட்சம் டன் தான் கொள்முதல் செய்தார்கள். இப்போது 8½ லட்சம் டன் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. இந்தக் கணக்கு உண்மையானால், நான் முன்பும் கேட்டேன், இப்போதும் கேட்கிறேன். கிராமங்களுக்கு அரிசி கொடுக்கப்படுகிறதா? இன்ஃபார்மல் ரேஷனில் என்ற முறையில் கிராமங்களில் முன்பெல்லாம் கொடுக்கப்பட்டு வந்தது. முன்பு கொடுக்கப்பட்ட இடங்களில் இப்போது கொடுக்கப்படவில்லை. நிச்சயமாக கொடுக்கப்பட இல்லையென்று நான் உறுதியாகக் கூற முடியும். என்னுடைய அவனாசி தொகுதியில் பல கிராமங்களில் தீபாவளிக்குத் தான் கொடுத்தார்கள். அதற்குப் பிறகு கொடுக்கவில்லை. அதை நோண்புக்கு சில இடங்களில் கொடுத்தார்கள். எங்கள் ஜில்லாவில் அதற்குப் பிறகு கொடுக்கவில்லை. இப்படி எங்கள் ஜில்லாவிலுள்ள கிராமப் புறங்களில் இன்ஃபார்மல் ரேஷன் கொடுக்கவே இல்லை. பல இடங்களில் அப்படிப்பட்ட நிலைமை தான் இருக்கிறது. அப்படி இருக்க, 1½ லட்சம் டன் அதிகமாக கொள்முதல் செய்கிறோம் என்று சொல்லி 310 செக்போஸ்ட்களை போட்டு இருந்த இடத்தில் ஆயிரம் செக் போஸ்ட்களைப் போட்டு தானியங்கள் வெளியே போகாமல் தடுத்து கொள் முதலுக்குக் கொடுக்கச் செய்கிறார்கள். முன்பெல்லாம் நகரங்களில் உள்ள போகஸ் கார்டுகளையெல்லாம் தடுத்து விட்டோம் என்கிறார்கள். இப்படி யெல்லாம் தடுத்து மிச்சம் செய்த தானியங்கள் இப்போது எங்கே கொண்டு போய் கொட்டப்படுகிறது. கணக்குக் காட்ட முடியுமா? தயவு செய்து இதிலே உண்மை என்ன என்பதை சிந்தித்துப் பார்க்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

படி அரிசித் திட்டத்தைப் பொறுத்த வரையில், சென்னை, கோவை போன்ற பெரிய நகரங்களுக்கு மட்டும் போட்டது தவறு என்று நாங்கள் ஏன் சொல்கிறோம் என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். முன்பு ஆட்சிப் பொறுப்பில் இருந்தவர்கள் ஸ்டெச்சுடரி ரேஷனிங் வைத்திருந்தார்கள். ஆகையால் அங்கு முதல் படியாக ஆரம்பித்தோம் என்று இப்போது ஆட்சியில் உள்ளவர்கள் கூறுகிறார்கள். ஸ்டெச்சுடரி ரேஷனிங் என்று வைப்பதில் தவறு இல்லை. பெரிய தொழிற்சாலைகள் அமைந்திருக்கின்ற, தொழிற் சாலைகளில் வேலை செய்கின்ற மக்கள் நிறைந்திருக்கின்ற, உணவு உற்பத்தி ஆகாத பகுதிகள் ஆகிய நகரங்களில் உணவுப் பொருள்களைக் கொண்டு போய்க் கொடுப்பது அவசியம் தான். ஆனால் குறைந்த விலைக்குக் கொடுக்க வேண்டிய அவசியம் என்ன வந்தது? அதிக வருமானம் பெறக்கூடிய மக்கள் வசிக்கும் பெரிய நகரங்களில் உள்ளவர்களுக்கு குறைந்த விலையில் கொடுக்க வேண்டியது அவசியம் என்ன? மிகமிகக் குறைந்த வருவாயுள்ள, சகிக்க முடியாத ஏழைகள் இருக்கும் இடங்களில் மலிவு விலையில் அரிசி கொடுக்க வேண்டிய அவசியம் அல்லவா? மிகக் குறைந்த வருவாய் உள்ளவர்கள் உயர்ந்த விலை கொடுத்து வாங்க வேண்டிய நிலை இருந்து கொண்டிருக்கிறது. ஆக, அதிக வருவாய் உள்ளவர்களுக்கு குறைந்த விலையிலும் குறைந்த வருவாய் உள்ளவர்களுக்கு அதிக விலையிலும் அரிசிக்காக கொடுக்கக்கூடிய முறை சரிதானா என்று தான் நான் கேட்கிறேன்.

குடியானவர்களுக்கு பல உபகாரங்கள் செய்வதாகச் சொல்லப்படுகிறது. சமீபத்தில் வெல்லம், கரும்பு இவைகளுக்கெல்லாம் போட்ட வரிகளை தயவு செய்து நிச்சயமாகக் குறைக்க வேண்டும், உபகாரம் செய்வதாகச் சொல்லிக் கொண்டு உபத்திரவம் செய்யாமல் இருக்க வேண்டும். எங்கள் பகுதியிலே எல்லோரும் பம்பு செட்டுகள் வைத்து தண்ணீர் எடுத்து விவசாயம் செய்கிறோம். அந்தத் தண்ணீரை கொஞ்சம் குடிப்பதற்காக வென்று எடுத்துக் கொண்டால் பெரிய தண்டத் தீர்வை போடப்படுகிறது. 12 மணி நேரம் விவசாயத்துக்கு தண்ணீரை உபயோகித்துக் கொண்டு அதிலே ஒன்றிரண்டு நிமிஷங்கள் குடிப்பதற்கு என்று வீட்டுக்கு பைப் மூலம் கொண்டு சென்றால் அதற்காக தண்டத் தீர்வை விதிக்கிறார்கள். 8 காசு என்பதை 12 காசாக கட்டணத்தை உயர்த்தி விடுகிறார்கள். 200 ரூபாய் கட்டிக் கொண்டிருந்த இடத்தில் 300 ரூபாய் கொடுக்க





வேண்டுமென்று தண்டத் தீர்வை விதிக்கிறார்கள். உபகாரம் செய்யா விட்டாலும் உபத்திரவம் செய்யாமலாவது இருக்கலாம் அல்லவா? இம்மாதிரி உபத்திரவங்களைக் கொடுக்காமல் கூடுமான வரை விவசாயிகள் ஆகிய எங்களைக் காக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுடைய தொகுதியைப் பொறுத்த வரையில் ஒரே ஒரு கருத்தைக் கூற விரும்புகிறேன். அவனாசி தாலுக்காவைச் சுற்றிச் சுற்றி 25 மைல் தூரம் பவானி ஆறு ஓடுகிறது. அதைப் பார்க்கும் போது நாக்கிலே தண்ணீர் வருகிறது. காய்ந்து கொண்டிருக்கும் நேரத்தில் தண்ணீர் கிடைக்கவில்லை. காங்கிரஸ் ஆட்சியாளர் காலத்திலிருந்தே வரும் வரும் என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். குந்தா திட்டம் வரும், மேல் பவானித் திட்டம் வரும், கழிவுத் தண்ணீரை எடுத்துக் கொள்ளலாம் என்றெல்லாம் சொல்லிச் சொல்லி வாக்கு வாங்கினார்கள். தயவுசெய்து அதை மெய்ப்பித்து எங்கள் பகுதிக்கு பவானி ஆற்றிலிருந்து தண்ணீர் கொடுக்கக் கூடிய வழிவகைகளைச் செய்ய வேண்டும். அந்த மக்களையும் வாழவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தயவு செய்து மனமுவந்து பக்கத்தில் போகும் தண்ணீரை அங்குள்ளவர்களுக்குக் கிடைக்கச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு அமர்கிறேன். வணக்கம்.

* **திரு. ஏ. சி. நரசிம்மன்:** தலைவர் அவர்களே, இந்த அரசு பொறுப்பேற்று ஓர் ஆண்டு காலத்திற்கு உள்ளாக உணவுப் பிரச்னையில் கவனத்தைச் செலுத்தி அதன் காரணமாக சீரும் சிறப்புமான அளவில் மக்களுக்கு உணவை வழங்கக் கூடிய ஒரு தன்னிறைவை பெற்றிருப்பதற்கு நாம் உணவுத் துறை அமைச்சர் அவர்களை பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

மாற்றுக் கட்சியில் உள்ள பலரும் இன்னும் ஒரு சில நண்பர்களும், ஏதோ சப்ஸ்டாண்டர்ட் ரைஸ் வழங்கப்படுவதாக குறை சொன்னார்கள். ஆனால் இந்தக் குறைக்கு என்ன காரணம் என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்று அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இந்தத் தரத்தை முந்தைய காங்கிரஸ் அரசாங்கம் நிர்ணயித்தது. முந்தைய காங்கிரஸ் அரசாங்கம் கொள்முதல் செய்வதற்கு முன்னர் கொள்முதல் எப்போது வாங்குவது என்று நிர்ணயித்தார்களோ அன்றையத் தினமே அரிசியின் தரத்தையும் நிர்ணயித்திருக்கிறார்கள். அரிசியின் தரத்தை எப்படி நிர்ணயித்தார்கள் என்று பார்க்கும்போது மிகமிகத் தவறான முறையில் நிர்ணயித்திருக்கிறார்கள். அதைத் தான் நாம் கண்கூடாகப் பார்க்கிறோம். அரிசியில் உள்ள ஈர சதது 15 சதவிகிதம் இருக்கலாமென்று நிர்ணயம் செய்திருக்கிறார்கள். அதே போல் ப்ரோக்கன் ரைஸ் 15 சத விகிதத்திலிருந்து 25 சத விகிதம் இருக்கலாமென்று நிர்ணயம் செய்திருக்கிறார்கள். நெல் 10 சதத்திலிருந்து 12 சதம் வரை அரிசியில் இருக்கலாமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இப்படி எல்லாம் நிர்ணயிக்கப்பட்ட பிறகு அந்த அரிசிக்குப் பெயர் ஃபேர் ஆவரேஜ் க்வாலிடி ரைஸ் என்பது. என்றாலும் அது தரம் உயர்ந்த அரிசி தான் என்பதை நாம் ஏற்றுக்கொள்கிறோம். அதே முறையில் இன்றையத் தினம் அரிசி வாங்கப்படுகிறது. ஆனால் இம்மாதிரி அரிசி வாங்கினால் இத்தகைய குறைபாடு உள்ள அரிசியை நாம் வாங்கி வைத்தால் ஒரு மாதத்துக்குக் கூட இந்த அரிசி தாங்காது என்பதை இந்த மன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, அதிகாரிகளை வைத்து தரத்தை மீண்டும் நிர்ணயிக்க வேண்டும். முன்பு நிர்ணயித்த தரம் சரியானது அல்லவென்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மத்திய சர்க்கார் அரிசியின் விலையை மிக தவறான முறையில் நிர்ணயித்திருக்கிறார்கள். ஜீரகசம்பா, கிச்சலிசம்பா ஆகிய இரண்டு வகை அரிசியையும் ஃபைன் வரையிடி என்று நிர்ணயித்து விடுகிறார்கள். ஜீரகசம்பா தரம் உயர்ந்தது, கிச்சலிச்சம்பா தரம் தாழ்ந்தது. இரண்டையும் ஃபைன் வரையிடி நம்பர் 1 என்று சொல்லுகிறார்கள். இன்னும்

ஒன்றிரண்டு ரகங்களையும் அத்துடன் சேர்த்து விடுகிறார்கள். ஆனால் கிச்சலிச் சம்பாவுக்கு வழங்கக்கூடிய விலையைவிட அதிகமாக ஏ.டி.டி. 27 போன்ற தரம் குறைந்த அரிசிக்கும், நல்ல தரம் இல்லாத அரிசிகளுக்கும் தருகிறார்கள். கிச்சலிச்சம்பா அரிசிக்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூபாய் 73·57 என்றும் ஏ.டி.டி. 27 ரக அரிசிக்கு ரூபாய் 74·43 என்றும் நிர்ணயம் செய்திருப்பது எந்த விதத்திலே நியாயம் என்று எனக்குத் தெரியவில்லை. ஏ.டி.டி. 27 ரகம் 100 நாட்களில் விளையக்கூடியது. கிச்சலிச்சம்பா போன்ற உயர்ந்த ரகங்கள் 6 மாதங்களில் விளையக்கூடியது. இதையெல்லாம் கருத்தில் கொண்டு அரிசியின் விலையை சரியான முறையில் நிர்ணயிப்பதில் சற்று கவனம் செலுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். விலை நிர்ணயம் ஒரு பக்கம் இருக்கிறது. தரத்தில் நிர்ணயம் தவறாக இருக்கிறது.

செக்போஸ்ட்களில் கைப்பற்றுகிற அரிசிக்கு ரசீது கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

*திரு. என். சங்கரய்யா: ஐயா, இந்த மானியக் கோரிக்கைமீது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்ஸிஸ்ட் கட்சி சார்பாக இந்த மன்றத்தில் சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். அமைச்சர் அவர்கள் கூறியது போல், இன்று நிரந்தரக் கண்ட்ரோல் வேண்டுமென்றோ அல்லது கண்ட்ரோலுக்காக கண்ட்ரோல் வேண்டுமென்றோ எங்கள் கட்சி கோரவில்லை, விரும்பவும் இல்லை. மாறாக இந்த நாட்டில், இந்த மாநிலத்தில் உணவு தானியங்கள் வழங்குவதில் உள்ள நிலைமை காரணமாகத் தான் இந்தக் கட்டுப்பாடு தேவை என்று நாங்கள் வலியுறுத்த விரும்புகிறோம். இந்த ஆண்டு தஞ்சையில் அல்லது இதர பாசனப் பகுதிகளில் அறுவடை சரியான முறையில் இல்லாததால், தண்ணீர் பற்றாக்குறை காரணமாக விளைச்சல் குறைவாக இருக்கும் என்ற காரணத்தினால் சற்று அதிகமாகவே இந்த ஆண்டு கொள்முதல் செய்யவேண்டியிருக்கும் என்பது என் அபிப்பிராயம். அரசாங்க வாணிகக் கொள்கையில், இன்று கொள்முதல் செய்யப்படக் கூடியதற்கு கொடுக்கப்படக் கூடிய விலை மாற்றப்படவேண்டுமென்று எங்கள் கட்சி கோரவில்லை. இன்று கொடுக்கக்கூடிய விலை ஏறத்தாழ சரியாக இருக்கிறது என்பது தான் எங்கள் கட்சியின் அபிப்பிராயம். இந்த மாநிலத்தில் ஒரு கோடி அறுபத்தெட்டு லட்சம் பேர்களுக்கு ஏதாவது ஒரு வகையில் உணவு தானியம் வழங்கப்படுகிறதென்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். 3-3/4 கோடி மக்கள் வாழும் இடத்தில் இரண்டு கோடி ஆறு லட்சம் பேர்களுக்கு உணவு தானியம் சம்பந்தமாக அவர்கள் சொந்தப் பொறுப்பில் விடப்பட்டிருக்கிறது என்று தெளிவாகக் கூற முடியுமென்றும், இன்னொரு பக்கத்தில் மலிவு தானியக் கடைகள் மூலம் குடும்பக் கார்டு மூலம் கொடுக்கப்படும் அரிசி மேலும் பல பகுதிகளுக்கு விஸ்தரிக்கப்படவேண்டு மென்றும் கேட்டிருக்கிறோம். அது அனுதாபத்தோடு கவனிக்கப்பட வேண்டும். ஆனால் கையிருப்பு பற்றாக் குறையாக இருப்பதால் செய்ய முடியவில்லை என்று கூறலாம்.

மதுரையை எடுத்துக் கொண்டால் அங்கு குடும்பக் கார்ட் முறை அமலிலிருக்கிறது. ஆனால் ஜெய்ஹிந்த்புரம் என்ற மேஜர் பஞ்சாயத்து பிரதேசம் பக்கத்தில் இருக்கிறது. விஸ்தரிப்புத் திட்டத்தில் அது மதுரையோடு சேர்க்கப்படயிருக்கிறது. அங்கு இந்த குடும்பக் கார்ட் முறை அமுலில் இல்லை. அங்கிருப்பவர்கள் பெரும்பாலும் தொழிலாளிகள், நடுத்தர மக்கள். அங்கு விவசாய நிலம் கிடையாது. நகரத்திற்கு அப்பால் அவர்கள் வசிப்பதால் இந்த நன்மை அவர்களுக்குக் கிடைப்பதில்லை. ஆகவே எங்கள் கட்சி கோருவது என்னவென்றால், குடும்பக் கார்ட் முறையில் அரிசி வேண்டுமென்று கேட்கிற பகுதிகளுக்கு இத் திட்டத்தை விஸ்தரிப்பது நம் கடமை. அப்படி விஸ்தரிப்பதால் நாம் சற்று அதிகம் கொள்முதல் செய்யவேண்டி வரும்.



குடும்பக் கார்ட் முறையுள்ள இடங்களில் நியாய விலைக் கடைகள் மூலம் கொடுக்கப்பட்டு வருகிற படிக்கு 1–44 காசு எனக் கொடுக்கும் முறையை முனிசிபல் நகரங்களுக்கும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கும், இன்னும் பாதிக்கப்பட்டிருக்கும் கிராமப் பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்பட வேண்டும். அப்படி விஸ்தரிப்பதால், இன்னும் 50 லட்சம் அல்லது 75 லட்சம் பேர்களுக்கு விஸ்தரிப்பதால் அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏற்பட்டாலும் பரவாயில்லை. ஆகவே, அதை முதலாவதாகச் செய்ய வேண்டும். அடுத்தபடியாக, நகரப்புறங்களில் குடும்பக் கார்ட் முறையுள்ள இடங்களில் இன்று கொடுக்கப்படும் அளவை விட அதிகமாகக் கொடுக்க முயற்சி செய்தால் தான் அரிசிக்கு அதிக விலை கிடைக்கும் என்று கிராமங்களில் இருந்து அரிசி வருவதைத் தடுக்க முடியும். ஆகவே கொடுக்கப்படுகிற அரிசியின் அளவையும் உயர்த்த வேண்டும். இதனால் அதிகப்படியான அளவிற்கு கொள்முதல் செய்ய வேண்டுமென்று அரசாங்கம் விரும்பினால் அதற்கு நாங்கள் ஆதரவு அளிப்போம். நம் மாநிலத்தில் 63 லட்சம் ஏக்கர்களில், மூன்று ஏக்கருக்குக் கீழே விதிவிலக்கு கொடுத்துவிட்டால் 22 லட்சம் ஏக்கர் போய்விட்டது என்று சொன்னார்கள். மாநிலத்தில் பத்து ஏக்கரும் அதற்கு மேல் நிலம் உள்ளவர்களிடமிருந்து, பகிரங்கமாக அறிவிக்கப்பட்ட அரசாங்கக் கொள்கைப்படி, அவர்கள் குடும்பத் தேவை, விவசாயச் செலவுகள் இவை போக மார்க்கெட்டபிள் சர்ப்ளஸ், உபரியாக உள்ள நெல்லை அரசாங்கம் கொள்முதல் செய்த பிறகு, மூன்று ஏக்கர் முதல் பத்து ஏக்கர் வரை உள்ளவர்களிடமிருந்து லெவி ஸிஸ்டம் அடிப்படையில் கொள்முதல் செய்த பிறகு, பின்னரும் துண்டு விழுந்தால் அரசாங்கமும், எல்லா அரசியல் கட்சிகளும் சேர்ந்து மூன்று ஏக்கருக்குக் குறைவாக உள்ளவர்களிடமிருந்தும் கேட்பது பொருத்தமாக, இயற்கையாகவே இருக்கும். பத்து ஏக்கர்களுக்கு மேல் உள்ளவர்களிடமிருந்து அரசாங்கக் கொள்கைப்படி மார்க்கெட்டபிள் சர்ப்ளஸ் பூராவையும் வாங்க வேண்டுமென்ற கொள்கை நடைமுறையில் நிறைவேற்றப்படவில்லை.

பலர் நெல்லுக்கு அதிக விலை வேண்டுமென்று கேட்கிறார்கள் என்று சொன்னார்கள். உழக் கூடிய விவசாயிகளுக்கு அந்தப் பலன் போய் சேருவதில்லை. ஐந்து மூடை விளைந்தால் ஒரு மூடை என்று 20 சதவிகிதம் அளவிற்குத் தான் கொள்முதல் செய்யப்படுகிறதே தவிர பாக்கியுள்ளதை அவர்கள் இஷ்டம் போல் அதிக விலைக்கு விற்கிறார்கள். ஆகவே குடும்பக் கார்ட் முறையை இன்னும் பல பகுதிகளுக்கு விஸ்தரிப்பதோடு கூட கொடுக்கப்படக் கூடிய அரிசியின் அளவையும் அதிகப்படுத்த வேண்டும். அதற்கு பத்து ஏக்கர், அதற்குமேல் உள்ளவர்களிடமிருந்து மார்க்கெட்டபிள் சர்ப்ளஸ் பூராவையும் அரசாங்கம் எடுக்க வேண்டும். அப்படிச் செய்கிறார்களா என்றால் அப்படிச் செய்யவில்லை. ஆகவே பத்து ஏக்கர், அதற்கு மேல் உள்ளவர்களிடமிருந்து மார்க்கெட்டபிள் சர்ப்ளஸ் பூராவையும் கட்டாயக் கொள்முதல் செய்ய வேண்டும். கொள்முதல் விஷயத்தில் இந்த அரசின் கொள்கைக்கும் எங்கள் கொள்கைக்கும் உள்ள அடிப்படை ஒன்றாக இருக்கிறது. ஆனால் நாங்கள் சொல்வது, பத்தும் அதற்கும் மேல் உள்ளவர்களிடமிருந்து கறாராக மார்க்கெட்டபிள் சர்ப்ளஸை கொள்முதல் செய்து, மூன்று முதல் பத்து ஏக்கர் வரை உள்ளவர்களிடமிருந்து லெவி ஸிஸ்டம் முறையிலும் கொள்முதல் செய்தால் நிச்சயமாக மூன்று ஏக்கர்களும் அதற்குக் கீழே உள்ளவர்களுக்கும் விதிவிலக்கு கொடுக்க முடியும். புள்ளிவிவரங்களை வைத்துக் கொண்டு இது சாத்தியமில்லை, துண்டு விழும் என்று சொன்னால் அது சரியல்ல. அப்படிச் செய்தும் துண்டு விழுகிறது என்றால் ஒன்று முதல் மூன்று ஏக்கர் வரை வைத்திருப்பவர்களிடமிருந்தும் அரிசி கொடுங்கள் என்று கேட்கலாம். அதற்கும் குறைவாக வைத்திருப்பவர்களிடமிருந்தும் ஒரு ஏக்கருக்கு குறைவாக வைத்திருப்பவர்களிடமிருந்துகூட கேட்க அவர்களிடம் ஒரு வேண்டுகோள் விடுக்கலாம்.

அடுத்து, இந்த 1–44 காசுக்கு கொடுக்கப்படுகிற அரிசி இருக்கிறதே, இதன் க்வாலிட்டியை, தரத்தை உயர்த்த வேண்டும். கூட்டுறவு இலாகா மூலம் கொடுக்கப்படக் கூடிய மில்களில் அல்லது அரசாங்கமே சொந்த ஏற்பாட்டில் ஏதாவது செய்து தரத்தை உயர்த்த வேண்டும். கேரளா,

கேரளா என்கிறார்கள். அங்கு ஆண்டு ஒன்றுக்கு இரண்டு மாதங்களுக்குத் தேவையான தானியம் தான் உற்பத்தியாகிறது. பத்து மாதங்களுக்கு வெளியிலிருந்து தான் வரவேண்டியிருக்கிறது. ஆகவே கேரளாவோடு ஒப்பிட்டு இங்கு கூறுவதில் அர்த்தமில்லை. நிலப் பிரபுக்கள் தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்தி மார்க்கெட்டபிள் சர்ப்ளஸ் பூராவையும் கொடுப்பதில்லை. அப்படி அவர்கள் ஏமாற்றுவதினால்தான் மூன்று ஏக்கருக்குக் கீழேயுள்ளவர்களிடமிருந்துகூட கொள்முதல் செய்யும் நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. ஆகவே பெரிய நிலப் பிரபுக்களிடம் நம் கொள்கையை கடைப்பிடித்து கறாராக கொள்முதல் செய்தால் சிறிய விவசாயிகள் பாதிக்கப்படமாட்டார்கள். நகரப்புறங்களுக்கும் அதைச் சுற்றியுள்ள பகுதி மக்களுக்கும் மலிவு தானியம் கிடைக்கும்படிச் செய்தால், ரூபாய்க்கு படி அரிசி என்பதை நாங்கள் வற்புறுத்தவில்லை. பானை எங்கே, படி அரிசி எங்கே என்று நாங்கள் கேட்கவில்லை. குடும்பக் கார்ட் முறையில் 1–44-க்கு கொடுக்கப்படுவதை மேலும் பல பகுதிகளுக்கு விஸ்தரிக்க வேண்டும். அதனால் நஷ்டம் ஏற்பட்டாலும் பரவாயில்லை. அது பூர்த்தியான பிறகு குறைந்த விலைக்கு கொடுக்கலாம். ஒரு படி அரிசித் திட்டம் எங்கே என்று நாங்கள் வற்புறுத்த விரும்பவில்லை என்று எங்கள் கட்சி முடிவு செய்திருக்கிறது.

அடுத்து; மிளகாய், பருத்தி போன்றவைகளுக்கு திடீரென்று விலை உயர்ந்துவிடுகிறது ; திடீரென்று குறைந்துவிடுகிறது. இதை உற்பத்தி செய்கிற விவசாயிகளுக்கு குறைந்த அளவுக்காவது நியாய விலை கிடைக்க அரசாங்க வர்த்தகம் மூலம் ஏதாவது ஏற்பாட்டை அரசு செய்வது பொருத்தமாக இருக்கும். அதைப்பற்றியும் யோசிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

*திரு. ஈ. எம். நடராசன் : தலைவரவர்களே, உணவுப் பிரச்சினையில் ஒரு திருப்திகரமான ஆண்டைக் கடந்து ஒரு முன்னேற்றமான சூழ்நிலையில் தமிழக அரசு அடியெடுத்து வைக்கின்ற இந்த நிலையில் என் கருத்தைக் கூற விரும்புகின்றேன்.

கடந்த ஆண்டு எந்தவகைத் தட்டுப்பாடுமின்றி உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டுவிட்டன என்று மேலெழுந்தவாரியாகத் தோன்றினாலும் உணவுத் துறையில் கடந்த ஆண்டு இருந்த சங்கடமான சூழ்நிலையை இந்த மாமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

உணவுப் பிரச்சினையென்பது இந்த நாட்டு மக்களின் உயிர்ப் பிரச்சினை. இதைத் தீர்த்து வைக்கும் பெரும் பொறுப்பு தமிழக அரசுக்கு மட்டுமல்ல, இந்தியப் பேரரசுக்கும் சேர்ந்தே உள்ளது. இந்தியப் பேரரசு தனது பொறுப்பை உணராததுமட்டுமல்ல, தனது கடமையை நிறைவேற்றத் தவறிவிட்டது என்பதை உணரும்போது நான் வேதனைப்படுகின்றேன்.

அரிசி சாப்பிடுவோரே, கோதுமை சாப்பிட்டுப் பழகுங்கள், உணவு நெருக்கடியைத் தீர்க்க ஒரே வழி அதுதான் என்ற பிரச்சாரத்தைத் துவங்கியது இந்திய அரசு. இந்திய அரசு எதைச் சொன்னாலும் கீழ்ப்படிந்து நடந்த, இதற்கு முன்னாலிருந்த காங்கிரசு அரசு செல்லுமிடமெல்லாம், பார்க்கும்போதெல்லாம் பொதுமக்களை கோதுமை சாப்பிடுங்கள் என்று தூண்டி, சாப்பிடாத மக்களைக் குறைகூறியும் வந்தது. இந்த அபூர்வ யோசனையை ஏற்று ஏதுமறியாத பாமர மக்கள் கோதுமை உணவை சாப்பிடத் தொடங்கினர். ஆனால் இன்றைய நிலைமை என்ன? கோதுமையே கிடைக்கவில்லை. கோதுமை சாப்பிடச் சொன்ன இந்திய சர்க்காரை கோதுமை கொடு என்று கேட்டால் இல்லை என்கின்றது இந்திய அரசு. உண்மையிலேயே பாரத புத்திரர்கள் தன்னுடைய நாட்டிற்கென ஒரு தேசிய மொழி தேவை, தேசியக் கொடி தேவை என்று பேசி தங்களைத் தீவிர தேசியவாதிகள் என நினைத்து தேசிய உணவாகக் கோதுமையைச் சாப்பிட சொன்னார்கள். ஆனால் நடந்தது என்ன? 1966–67-ஆம் ஆண்டிலே பக்தவத்சலம் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது இந்திரா காந்தி அம்மையார் சர்க்கார் தமிழகத்திற்குக் கொடுத்தது 1,46,000 டன் ஆகும்.



இந்திரா காந்தி சர்க்கார் இன்னுமிருக்கிறது. பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சி ஏற்பட்ட காரணத்தினாலோ என்னவோ கோதுமையினளவு 51,500 டன்னாகக் குறைக்கப்பட்டுவிட்டது. கிட்டத்தட்ட 1,00,000 டன் கோதுமையைக் கொடுக்க மறுத்துவிட்டது. 1967-ம் ஆண்டு இருந்ததைவிட மூன்றிலொரு பங்குதான் கொடுக்கப்பட்டிருக்கிறது. இது தமிழகத்தின் மீது காட்டப்படும் அரசியல் வெறுப்புணர்ச்சியே தவிர வேறொன்றுமல்ல. தமிழக மக்களும் இந்திய குடிமக்கள்தான் என்பதை இந்திய அரசு மறுக்கின்றதா என்பதையும் அவர்கள் தெளிவுபடுத்திவிட வேண்டும்.

இதேபோல்தான் கடந்த ஆண்டு எங்கு பார்த்தாலும் சர்க்கரைத் தட்டுப்பாடு இந்திய சர்க்காரால் கட்டவிழ்த்து விடப்பட்டது. இந்திய அரசு தமிழக அரசுக்கு 1966–67-இல் மாதம் ஒன்றுக்கு அனுப்பிய சர்க்கரை அளவு 16,100 டன். ஆனால் 1967–68-இல் தந்தது 9,600 டன்தான். பாதியாகக் குறைத்திருக்கின்றார்கள். அது மட்டுமல்லாமல் மத்திய அரசாகிய ஜனநாயக சோஷலிச சர்க்கார் ஆலை அரசர்களுக்கு லாபம் தேடித் தரும் வகையில் கட்டுப்பாட்டை ரத்துச் செய்து சர்க்கரையை வெளி மார்க்கெட்டிலே எங்கு வேண்டுமானாலும் எந்த விலைக்கும் விற்கலாம் என்று உத்தரவு போட்டார்கள். ஆலை அரசர்களின் இலாப வேட்டைக் காடாக இந்த நாட்டை மாற்றியது மட்டுமல்லாமல் மாநிலத்திற்குக் கொடுக்க வேண்டிய அளவையும் பாதியாகக் குறைத்துத் தமிழகத்திலே குழப்பத்தையும், கலவரத்தையும் தூண்டிவிட முயற்சித்தார்கள் என்று நான் குற்றம் சாட்டுகின்றேன்.

பருப்பு விலையைப்பற்றிப் பல்லவி பாடிக் கொண்டிருப்பவர்களுக்கு நான் ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன். வடநாடாவது, தென்னாடாவது எல்லோரும் பாரதமாதாவின் புத்திரர்கள் தானே என்று பேசும் நவீன தேசபக்தர்களைக் கேட்கின்றேன். பருப்பின்மீது தடை விதித்தார்களே, வடநாட்டு மாநிலங்கள் ; இந்திய அரசு அதைத் தட்டிக் கேட்டதா ? ஏன் கேட்கவில்லை ? அதே வடநாட்டு மாநிலங்களின் ஆதிக்கத்திலேதான் இந்திய அரசு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. பருப்பு வகைகளை வாங்கித் தருவதற்கு இந்திய சர்க்காருக்குத் துணிவில்லை, தைரியமில்லை, விருப்பமுமில்லை. இந்திய அரசு வடநாட்டு ஏகாதிபத்தியத்தின் அரசு என்று நினைக்கத் தோன்றுகிறதா ?

தமிழ்நாட்டிலே இருக்கின்ற உணவுப்பிரச்சினையைக் கடந்த ஆண்டு நாம் நல்ல முறையில் சமாளித்திருக்கின்றோமென்றால் அது சாமான்யமான காரியமல்ல. உதவி செய்வதற்குப் பதிலாக உபத்திரவம் செய்தது இந்திய அரசு. இந்திய அரசினுடைய முதலாளித்துவ உணவுக் கொள்கை, இந்திய அரசு தமிழகத்திலே உருவாக்கிய நெருக்கடி ஆகிய இந்தச் சுழலில் நீந்தி வந்திருக்கின்றோம் என்று நினைக்கின்ற போதுதான் பேரறிஞர் அண்ணா அவர்களையும், மாண்புமிகு உணவு அமைச்சரவர்களையும் எதிர்க் கட்சியினர் புரிந்து கொள்ள முடியும். (மணியடிக்கப் பட்டது.)

இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னால் காங்கிரஸ் உறுப்பினர் விநாயகம் அவர்கள் சென்னை, கோவைக்குக் கொடுக்கின்ற சலுகை இதர இடங்களுக்கும் தரப்பட வேண்டுமென்று சொன்னார்கள். காங்கிரஸில் உள்ளவர்கள் முன்னுக்குப்பின் முரணாகப் பேசுவது வாடிக்கையாகப் போய்விட்டது. இந்திய அரசு கோதுமைக்கு உதவித் தொகை கொடுக்கின்றதே, அரிசிக்கு ஏன் தரக்கூடாது என்று கேட்டோம். கோதுமை சாப்பிடுபவர்களுக்கு அதாவது வடநாட்டுக்காரர்களுக்கு அளிக்கப்படுகின்ற சலுகை, காட்டப்படுகின்ற ஆதரவு, அரிசி உண்ணும் தென்னவர்களுக்கு ஏன் தரப்படவில்லை என்று நாம் கேட்டால் அப்போது காங்கிரஸ்காரர்கள் எங்குபோய் பதுங்கிக் கொள்கிறார்கள் என்று தெரியவில்லை. (மணியடிக்கப்பட்டது.)

***திரு. எம். சுரேந்திரன் :** தலைவரவர்களே, இன்றைக்கு இந்த மானியக் கோரிக்கையின் மீது பிரஜா-சோஷலிஸ்டு கட்சியின் கருத்துக்களைச் சொல்ல நான் முன்வந்து நிற்கும்பொழுது அளிக்கப்பட்ட நேரம் மிகவும் குறைவாக இருக்கின்றது என்பதால் என்னுடைய கட்சியின் கருத்துக்களைச் சொல்வதற்குச் சாத்தியமில்லாமல் போய்விடுகிறது என்பதை முதலிலே கூறிக்கொள்கிறேன்.

இன்றைக்கு இருக்கக்கூடிய உணவுப் பிரச்சினை சம்பந்தமான விஷயம் மிகவும் ஜீவாதாரமானதாகும். இந்த அரசு பொறுப்பை ஏற்றுக்கொண்டவுடனே மிகவும் ஜீவாதாரமான உணவு உற்பத்தியைப் பெருக்குவது, கொள்முதலை அதிகப்படுத்துவது, அதைக் குறைந்த விலையில் விற்பது என்ற மூன்று அம்சங்களிலே ஈடுபட்டார்கள். அம்மாதிரி ஈடுபட்டதால் அதில் பெரும் முன்னேற்றங்களைக் கண்டிருக்கிறோம். இருந்தாலும்கூட அவைகளைச் செம்மையாக ஆக்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் இன்னும் நடைபெறவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். கொள்முதல் விலை சம்பந்தமாக எல்லா இடங்களிலிருந்தும் புகார்கள் வருகின்றனவே, அந்தப் புகார்கள் சரியானதுதானா, இல்லையா என்பதை ஆராய வேண்டியது அவசியம் என்றே எனக்குத் தோன்றுகிறது. அப்படி ஆராய்ந்து அதிலே இருக்கக்கூடிய நிலைமைகளைச் சரியாக விளக்கிக்கூறுவது அவசியம். அதை அவர்களுக்குக் கூறுவதால் அவர்கள் மனத்தில் நிம்மதி ஏற்பட்டு அதிக உற்பத்திக்கு ஊக்குவிக்க அது வழியாக இருக்கும். மாநாடுகள் நடத்தி அதிலே திட்டமிட்டோம் என்று சொல்லுவதைவிட உற்பத்தியிலே ஆகும் செலவு என்ன, வகை என்ன என்பதைப் பார்த்து, ஒரு ஏக்கரில் விவசாயம் செய்பவன் அப்படிச் செய்தால் அதற்காக ஆகும் செலவு என்ன, வருமானம் எவ்வளவு, மீதம் எவ்வளவு என்ற விவரங்களை அவர்களுக்குச் சொல்லி அவர்களைத் திருப்திப்படுத்த ஒரு முயற்சி எடுத்துக் கொள்வது நல்லது என்று தோன்றுகிறது.

கொள்முதல் செய்யும் நிலை சரியான முறையில் இல்லை என்று பலவிடங்களிலிருந்து புகார்கள் வருகின்றன. இங்கே சொல்லப்படுகிறது ஒரு ஏக்கருக்குக் குறைவாகயிருப்பவர்களிடம் கொள்முதல் இல்லை என்று. ஆனால் பலயிடங்களில், வாயில்லாத அப்பாவிகள் இடத்தில் அங்கேயிருக்கின்ற கிராம அதிகாரிகளும், மற்றவர்களும் நிர்ப்பந்தப்படுத்தி, இவர்கள் சொன்னால் கேட்காமல் என்ன செய்வது என்ற நிலையில் இருக்கின்ற பலரிடம், ஒரு ஏக்கருக்குக் குறைவாக வைத்திருப்பவர்களிடம் கொள்முதல் செய்யப்படுகிறது என்ற புகாரும் இல்லாமல் இல்லை.

அதேபோல் வினியோகம் என்ற முறையில் வெளி இராஜ்யங்களுக்குப் போகாமல் தடுப்பதற்காக காவல் நிலையங்களை அதிகப்படுத்தி இருக்கிறோம். காவல் நிலையங்களை அதிகப்படுத்தியிருந்தாலும் வெளி இராஜ்யங்களுக்கு உணவு போகாமல் இருக்கிறதா என்று கேட்டால் நிச்சயம் போகிறது. அது மட்டுமல்ல. பற்றாக் குறை இராஜ்யங்களாக இருக்கிற அரசாங்கங்கள் அங்கே நடைமுறைகளை எப்படி வைத்திருக்கிறார்கள் என்று சொன்னால் அதிகமாக உள்ள மற்ற இராஜ்யங்களிலிருந்து அந்தப் பற்றாக்குறை பகுதிகளுக்குத் தாராளமாக வருவதற்காகக் கவர்ச்சிகரமான பல ஏற்பாடுகளை அந்தந்த இராஜ்யங்கள் அங்கங்கே செய்திருக்கிறார்கள். அதை இங்கேயிருக்கும் வியாபாரிகள் நினைக்கும்பொழுது எந்த முறையிலாயினும் சரி, யார் எப்படிக் கஷ்டப்பட்டாலும் சரி தங்களுக்குக் கிடைக்ககூடிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நல்ல லாபத்தை உண்டாக்கிக்கொள்ள வேண்டுமென்பதற்காக லாரிகளை வாடகைக்கு அமர்த்திக் கொண்டு இங்கேயிருந்து கொண்டுபோக ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆங்காங்கே இவ்வாறு செய்யப்பட்டுத்தான் வருகின்றது. அதை இந்தக் காவல் நிலையங்கள் தடுக்க முடியவில்லை, கட்டுப்படுத்த முடியவில்லை என்பது உண்மை. இதை சாதாரணமாக மற்றவர்கள் குற்றஞ் சொல்லுகிறார்கள் என்பதற்காக விட்டுவிடாமல் சரியாக ஆராய்ந்து பார்க்கவேண்டும். இதில் என்ன கோளாறு என்பதற்கான காரணத்தைப் பார்க்க வேண்டும்.



முன்பு இதே பிரச்சினையின் மீது பேசும்பொழுது ஒன்றை ஞாபகப் படுத்தினேன். இன்றைக்கு உணவுக் கொள்முதல் அதிகமாக இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. அப்படியிருந்தால் அந்த உணவுப் பொருள்கள் மற்ற ஜனங்களுக்குப் போயிருக்கிறதா என்று பார்க்க வேண்டும். ரேஷன் பகுதிகள், குடும்பக்கார்டு உள்ள பகுதிகள் ஆகிய இடங்களில் அளவில் முன்னேற்றம் இல்லை. கொள்முதல் செய்யப்படும் உணவுப் பொருள்கள் சரியான முறையில் வினியோகிக்கப்படவில்லை என்றுதான் தெரிகிறது. குறைந்த விலையில் இரண்டு இடங்களுக்கு அரிசி வினியோகம் செய்கிறோம். அது அந்த இரண்டு இடங்களின் தேவைக்கும் போதுமானதுதானா என்பதை ஆராய வேண்டாமா என்று கேட்க விரும்புகிறேன். எனவே வினியோகம் செய்வதில் புதிய வழியைச் செய்ய வேண்டும். இப்பொழுது வினியோகிக்கப்படும் பொருள்களால் உடல் ஆரோக்கியத்தைக் காக்கவும், நன்றாக உழைக்கவும், அதிகமான செல்வத்தை உண்டாக்கிக் கொள்ள வேண்டுமென்ற அடிப்படையிலும் தருகிறோமா என்று ஆராய வேண்டியிருக்கிறது. சென்னையிலே கூட கொத்தவால்சாவடி ரோட்டிலே அரிசி விற்றுக் கொண்டிருக்கிறார்கள். அப்படி விற்பதற்கு அந்த அரிசி எங்கேயிருந்து கிடைத்தது. அவ்வாறு விற்பதை வாங்கக்கூடிய ஜனங்கள் இருக்கிறார்கள். இதிலிருந்து ரேஷன் அளவு போதவில்லை என்றுதானே தெரிகிறது. குறைந்த விலை என்று சொன்னால், அதனுடைய பலன் கிடைக்க வேண்டுமென்று சொன்னால் தேவையான அளவுக்கு கொடுத்தால் தான் அதன் பலன் கிடைக்கும். இங்கே குறைந்த அளவில் கொடுப்பதால் தங்களுடைய அதிகப்படியான தேவையைப் பூர்த்திசெய்து கொள்வதற்கு அதிக விலை கொடுத்து வாங்குவதால் நாம் கொடுக்கின்ற குறைந்த விலையின் பலன் அவர்களுக்குப் பிரதிபலிக்காமல் இருக்கிறது. குறைந்த விலையிலே கொடுத்தும் சரியான திருப்தி இல்லை. இந்த நண்பகல் 12.00 அரசு இப்படி நல்ல காரியத்தைச் செய்து இருக்கிறதே என்று ஒரு பாராட்டு, ஒரு சந்தோஷம் அவர்களுக்கு உண்டாவதற்கு சந்தர்ப்பம் இல்லாமல் போய்விடுகிறது. ஆகவே, உடற்கூறு நிபுணர்கள் இன்றைக்கு நன்றாக ஆராய்ந்து, பரிசோதித்துக் கூறி இருக்கிறார்கள், ஒரு மனிதன் வாழ்வதற்கு, ஆரோக்கியமாக வாழ்வதற்கு, இந்த அளவு அவுன்ஸ் உணவாவது கொடுக்க வேண்டுமென்று. அந்த அளவு அவுன்ஸ் உணவை யாவது விநியோகம் செய்ய வேண்டாமா ? இந்த அரசு செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்ல, ஒருவனுக்கு இவ்வளவு அளவு கட்டாயமாகக் கொடுக்க வேண்டும் என்று நிச்சயித்துவிட்டால் நன்றாக இருக்கும். ஜெயிலிலே இருக்கிறவர்களுக்கும் நிர்ணயம் இருக்கிறது. இவ்வளவு உணவுப் பொருள்கள் இங்கே கிடைக்கும், இவ்வளவு அவுன்ஸ் இங்கே கிடைக்கும் என்ற நிர்ணயம் இருக்கிறது. இந்த அளவைக் கூட வெளியிலே இருக்கின்றவர்களுக்கு கிடைக்கவில்லை என்றால் அது நல்லதல்ல. ஆகவே வினியோக இடங்களில் அளவை அதிகமாக்கி பலன் எப்படி இருக்கும் என்பதை பற்றி இந்த அரசு யோசிக்க வேண்டும்.

உணவுப் பொருள்களை நாம் விநியோகிக்கும்போது, அந்தப் பொருள் தரமானதுதானா, சரியானதுதானா, ஆரோக்கியமானதுதானா என்பதைப் பற்றியும் நாம் சிந்திக்க வேண்டும். உதாரணத்திற்கு ஒன்று சொல்ல வேண்டுமானால், மேட்டூரிலே ஒரு உணவுக் கோவாப்பரேடிவ் ஸ்டோரிலே விநியோகிக்கப்படுகின்ற அரிசி முழுவதும் பல நிறங்களிலே இருந்தது என்பதை சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அதுமட்டுமல்லாமல், சத்தில்லாமலும் இருந்தது. அந்த மாதிரி வழங்கப்படுவதை மக்கள் என்னிடத்திலே சொன்னார்கள். நான் உடனே, ஜில்லா கலெக்டர் அவர்களிடத்தில் சொல்லி இந்த நிலைமையை உடனே கவனிக்க வேண்டுமென்றேன். "நாங்கள் என்ன செய்யட்டும், இந்த ரைஸ் மில்லிலே என்ன அரிசி கொடுக்கிறார்களோ, அதை எடுத்துக் கொண்டு வந்து விநியோகம் செய்ய

வேண்டுமென்று எங்களுக்குச் சொல்கிறார்கள்," என்று அவர் சொன்னார். யாரிடத்தில் இதைப் போய் சொல்வது, இம்மாதிரி தவறான காரியம் நடக்கிறது என்று யாரிடத்தில்போய் சொல்வது என்று தெரிந்தால் அதை உடனே சொல்லி விசாரித்து, மீண்டும் அந்த மாதிரி காரியங்கள் நடைபெறாமல் தடுக்க முடியும். ஆகவே, தற்பொழுது யாரிடத்திலும் போய் சொல்ல முடியவில்லை. அதைப் பற்றி கவனித்துத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நெல் ஒழுங்காகக் கொள்முதல் செய்யப்படுகின்றதா என்றால் இல்லை ; ஒழுங்காக விநியோகிக்கப்படுவதும் இல்லை. கடந்த வருஷத்திலே கொள்முதல் செய்ததைப் பற்றி ஒவ்வொருவரும் ஒவ்வொரு கருத்தைச் சொன்னார்கள். எவ்வளவு இலட்சம் ஏக்கர் நிலம் விவசாயத்திற்காக ஈடுபடுத்தப்பட்டிருக்கிறது. எவ்வளவு கொள்முதல் செய்யமுடியும் என்பதற்கெல்லாம் அமைச்சர்கள் அறிக்கை விட்டுக் கொண்டிருந்தார்கள். அதிகாரிகளும் அறிக்கைவிட்டுக் கொண்டிருந்தார்கள். ஆனால் கடைசியாக, கொள்முதல் செய்த பொழுது முதலிலே சொன்ன அறிக்கைகள் எல்லாம் உண்மையில்லாமல் போய் விட்டன. அமைச்சர்கள் அறிக்கை விடுகிறார்கள், திட்டங்கள் போடுகிறார்கள். அதிகாரிகளும் திட்டங்கள் போடுகிறார்கள். ஆனால் விவரங்களை யார் தருகிறார்கள். கீழே இருக்கிறவர்கள் தருகிறார்கள். கீழே இருக்கின்றவர்கள் நேற்று வரை எப்படி இருந்தார்களோ அதிலிருந்து மாறவில்லை என்பதைத்தான் இது காட்டுகிறது. மேலே உள்ளவர்கள் என்ன திட்டங்கள் போட்டாலும் கீழே உள்ளவர்கள் ஒழுங்காகக் கடைப்பிடிப்பதில்லை. இந்த நிலையை மாற்ற சர்க்கார் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். கீழே இருக்கின்ற அம்சங்களிலே மாற்றம் செய்ய வேண்டும். எங்காவது ஒரு இடத்திலே மட்டும் மாற்றம் செய்துவிட்டு நாங்கள் நல்ல கொள்கையை கடைபிடிக்கிறோம் என்று சொன்னால் மட்டும் போதாது. ஒரு மரத்திற்குப் பல கிளைகள் இருப்பது போல் பல இடங்களில் பல தவறுகள் நடைபெறுகின்றன. பல தவறான காரியங்கள் நடக்கின்றன. ஆகவே, இந்த அம்சங்களை எல்லாம் சரியான கணக்கிட்டுப் பார்த்தால் மேலே மட்டும் நல்ல திட்டத்தை வகுத்தால் போதாது, அதை நிறைவேற்றுவதற்காக நேற்று வரை இருந்தவர்கள் இன்னும் அதே போல் இருந்தால், அதை மாற்றி அமைப்பதற்கு யோசனை செய்ய வேண்டுமென்று சொல்ல ஆசைப்படுகிறேன்.

கடந்த அரசு சென்னையிலும் கோவையிலும் ரேஷன் கொண்டு வந்தார்கள். ஆகவே, நாங்கள் அங்கெல்லாம் படி அரிசி கொண்டு வந்தோம் என்ற வாதம் நல்ல வாதமாக இல்லை. படி அரிசி போடுவது என்ற வாதத்தை ஒப்புக் கொள்ளுகிறேன். விலைகளைக் குறைப்பதற்கு அடிப்படையான ஒரு அம்சமாகும் படி அரிசி திட்டம். அதை மற்ற இடங்களுக்குப் போடாததற்குப் பல காரணங்கள் இருக்கலாம். ஆனால் கடந்த அரசு இதர பகுதிகளில் ரேஷன் முறை விஸ்தரிக்காததால் நாங்களும் படி அரிசி மற்ற இடங்களுக்கு விஸ்தரிக்கவில்லை என்று கூறுவது பொருந்தாது என்று சொல்ல விரும்புகிறேன்.

நாம் தற்பொழுது விநியோகிக்கின்ற இடங்களிலே ரூபாய்க்கு ஒரு படி அரிசி கொடுப்பதால் அந்த பொறுப்பு நமக்கு இருக்கிறது என்பது உண்மை. அந்த உண்மைக்காக நாம் இதைப் போடுவதை நிறுத்தினால் அது சரியாக இல்லை. கொள்முதலை அதிகமாகச் செய்ய வேண்டும், உற்பத்தியை அதிகரிக்க வேண்டும், என்று சொல்லுகின்ற அதே நேரத்தில் நாம் கொடுக்கின்ற அளவைக் குறைத்து கொடுப்பதன் மூலம் நம்முடைய பிரச்சினை தீராமலே இருந்து கொண்டிருக்கிறது. (மணி அடிக்கப்பட்டது).

*** திரு. எஸ். முருகையன் :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய வார்த்தைகளை சொல்ல விரும்புகிறேன். ரூபாய்க்கு படி அரிசியை என் மாநிலம் முழுவதும் போடவில்லை என்று இன்றைய தினம் கேட்கிறார்கள். அவர்கள் படி அரிசி கொடுக்காதது மட்டும் அல்ல, விவசாயிகளுக்கு இந்த சர்க்கார் துரோகம் செய்கிறது என்று வேறு சொல்கிறார்கள். இவர்கள் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தைப் போட்டார்கள். ஏராளமான



பணத்தை செலவழித்தார்கள். அப்படியும் உற்பத்தியினுடைய இலக்கை அவர்களால் அடைய முடியவில்லை. மீண்டும் இரண்டாவது ஐந்தாண்டு திட்டம் போட்டார்கள், ஏராளமான பணத்தை செலவழித்தார்கள். இலக்கை அடைய முடியவில்லை ; மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் போட்டார்கள். 70 இலட்சம் டன் உணவு உற்பத்தி செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். அது 57 இலட்சம் டன்னிலேயே நின்றுவிட்டது. இவ்வளவு பணத்தை செலவழித்த இவர்களால் படி அரிசியை மூன்று ரூபாய்க்குத்தான் போட முடிந்தது. இவர்கள் கேட்கிறார்கள், ஆட்சிப் பொறுப்பை ஏற்ற ஓராண்டிற்குள் ஏன் மாநிலம் பூராவும் படி அரிசி போடவில்லை, என்று. இதில் எந்த அளவுக்கு நியாயம் இருக்கிறது என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. (குறுக்கீடு.) நாங்கள் சொன்னோம். படிப்படியாக அதைப் போடுவதற்கு முயற்சி செய்து கொண்டு வருகிறோம். அதற்குள்ளாக மாநிலம் பூராவுக்கும் போடவில்லை என்று சொல்வது எந்தவிதத்தில் நியாயம். (குறுக்கீடு.) தான் செய்த தவறை மறைப்பதற்காகவும், தங்களால் முடியாததை இவர்கள் செய்கிறார்களே என்ற வயிற்றெரிச்சல் காரணமாகத்தான் இதைச் சொல்கிறார்களே தவிர, இதை நியாயமான வாதம் என்று உண்மையிலேயே ஒத்துக்கொள்ள முடியாத ஒரு சூழ்நிலை இருந்து கொண்டு வருகிறது.

அது மட்டுமல்ல, கொள்முதலிலே இன்றைய தினம் பல குறைபாடுகள் இருக்கின்றன என்று சொல்கிறார்கள். அந்தத் திட்டம் நல்லபடியாகத்தான் இருக்கிறது. எவ்வளவு இலட்சம் டன் சர்க்காருக்குத் தேவைப்படுகிறது. எவ்வளவு இலட்சம் டன் உற்பத்தியாகிறது, அதிலே எவ்வளவு கொள்முதல் செய்கிறார்கள் என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய தானியங்களிலே 20 சதவீதம்தான் இந்த அரசாங்கத்தால் கொள் முதல் செய்யப்படுகிறது. ஏன் கொள்முதல் செய்கிறது என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். அரசு தானாகவே, இந்த வர்த்தகத்தைச் செய்ய வேண்டுமென்ற எண்ணத்தில்—இதைச் செய்யவில்லை. தமிழகத்திலே உள்ள எல்லா மக்களுக்கும் நியாயமான விலையிலே உணவு தானியம் கிடைக்கவும் அத்தகைய சூழ்நிலைகளை உருவாக்கவும் என்ற அந்த காரணத்திற்காகத்தான் இதை ஏற்றுக் கொண்டிருக்கிறது. தொடர்ந்து நடத்த வேண்டும் என்பதல்ல அரசினுடைய எண்ணம். அந்த திட்டத்திற்காகத்தான் கொள்முதல் திட்டத்தை அரசுக் கையாண்டு கொண்டு வருகிறது. அது மட்டுமல்ல. இந்த படி அரிசி திட்டத்தைச் சில பகுதிகளுக்கு கொண்டு வந்ததற்கு பிறகு, படி அரிசி மாநிலம் பூராவுக்கும் போட வேண்டுமென்ற கருத்தைச் சொல்கிறார்கள். படி அரிசி எல்லோருக்கும் படிப்படியாக போடப்படும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு.) எங்கே போட்டீர்கள் காட்டுங்கள் என்று சொல்கிறார்கள். அவர்கள் ஒன்றை சிந்தித்துப் பார்க்க வேண்டும். அவர்கள் ஏற்கெனவே ஆட்சியிலே இருந்தவர்கள். கணக்கு வழக்கு தெரிந்தவர்கள். எல்லாவற்றையும் நினைத்து அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும், வெளியில் போய், நாங்கள் தான் எல்லோருக்கும் ரூபாய்க்குப் படி அரிசி போடவேண்டுமென்று கேட்டோமே என்று சொல்வதற்குப் பயன்படுமே தவிர, நாங்கள் போடுகிறோம் என்று சொல்லிவிட்ட பிறகு, அதைப் பேச்சோடு பேச்சாக சொல்லிக் கொண்டிருப்பது ஏன் என்று எனக்குப் புரியவில்லை. அவர்கள் ஒரு ரூபாய்க்குப் போட்டார்கள், நாங்கள் ஏதோ ரூபாய்க்கு $1\frac{1}{2}$ படி போடுகிறோம் என்று சொன்னால் அதை ஏற்றுக்கொள்ளமுடியும். அதை விட்டுவிட்டு ஏற்றுக் கொள்ள முடியாத ஒரு வாதத்தைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். படி அரிசி மாநிலம் முழுவதற்கும் போடுவதற்கு நல்ல யோசனைகளைச் சொல்ல வேண்டுமென்று அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். இவர்கள் பொறுப்பேற்ற பிறகு, மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களைப் போட்டார்கள். அந்த திட்டங்களின் பலன் விவசாயிகளுக்குக் கிடைக்கவில்லை. அவை கிடைப்பதற்கு நம்முடைய அரசாங்கம் தீவிர முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. சிறு பாசன திட்டங்களுக்கெல்லாம் நல்ல முறையிலே பாசன வசதிகள் செய்து கொடுத்திருக்கிறது. ஏராளமான பம்ப் செட்டுகளுக்காக பணம் ஒதுக்கியிருக்கிறது. அவர்களுக்கு வேண்டிய உரத்தை மிகச் சுலபமாகக் கிடைக்கச் செய்திருக்கிறது.

அவர்கள் காலத்திலே, உரம் என்ன விலைக்கு வாங்கினார்கள் விவசாயிகள்? எங்கே கிடைத்தது? எந்த விவசாயிகளுக்குக் கிடைத்தது? எந்த கிராமத்திலேயும் கிடைக்கவில்லை. தற்பொழுது, எங்கே சென்றாலும், எந்த கிராமத்திற்குச் சென்றாலும் உரம் ஏராளமாகக் கிடைக்கிறது.

அது மட்டுமல்ல, வடஆற்காடு மாவட்டத்திலே இன்றையதினம் ஏராளமாக உற்பத்தியாகிறது என்றால அது இந்த அரசு வந்ததற்குப்பிறகு தான் என்று தெரிவித்துக் கொள்கிறேன. விவசாயிகளுக்கு கடன வேறு கொடுத்திருக்கிறார்கள். நல்ல பயிர் பாதுகாப்புக்கு வேண்டிய திட்டங்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்திருக்கிறார்கள். இன்றைக்கு இரண்டு மடங்கு கொள் முதல் ஆனது மட்டுமல்ல. விளைச்சலும் 1½ மடங்காகப் பெருகியிருக்கிறது. இவைகள் எல்லாவற்றையும் வைத்துத்தான் நாங்கள் சில பகுதிகளுக்காவது படி அரிசி (குறைக்கிடு) போடுகிறோம். நீங்கள் 20 ஆண்டுகாலம் ஆண்டவர்கள். படி அரிசி 3 ரூபாய்க்கு போட்டவர்கள் எங்கள் அரசு படி அரிசியை மாநிலம் பூராவுக்கும் போடத்தான் போகிறது; நீங்கள் பார்க்கத்தான் போகிறீர்கள். ஏனென்றால், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சாதாரணமாக எதையும் சொல்ல மாட்டார்கள். நன்றாக சிந்திக்காமல் எந்த முடிவிற்கும் வந்துவிடமாட்டார்கள். இதைப் படிப்படியாகச் செய்வதிலே சற்று காலதாமதமாகலாமே தவிர போடத்தான் போகிறோம். நீங்கள் என்ன பிரச்சாரம் செய்வதாக இருந்தாலும் மக்கள் நம்புவதாக இல்லை. அதை நீங்கள் நன்றாக தெரிந்துக் கொள்ளப் போகிறீர்கள் என்று சொல்லிக்கொள்கிறேன்.

வடாற்காடு மாவட்டத்தைப் பற்றி ஒன்று சொல்ல விரும்புகிறேன். அங்கே உற்பத்தி ஆகக்கூடிய தானியங்கள் கோவைக்கு கொண்டு செல்லப்படுகிறது. தஞ்சாவூரில் உற்பத்தி செய்யக்கூடிய நெல்லை சென்னைக்குக் கொண்டு வருகிறார்கள். சென்னைக்கு வடஆற்காடு அண்மையில் இருக்கிறது. அங்கே உற்பத்தியாகக்கூடிய தானியங்களை சென்னைக்கும், தஞ்சாவூரில் உற்பத்தியாகக்கூடிய தானியங்களை கோவைக்கும் கொண்டு வருவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்தால் நலமாக இருக்கும். இரண்டு இடங்களிலும் போக்குவரத்து செலவு அதிகமாகும். அதைக் குறைக்கவேண்டும்.

ரைஸ் மில்லை செனஸ் கொடுப்பதற்கு மத்திய சர்க்கார் ஒரு கொள்கை வைத்திருக்கிறார்கள். அதாவது 7-ம் நம்பர் ஹல்லர் கொடுத்து விடுகிறார்கள். ஏன் 7-ம் நம்பர் ஹல்லர் கொடுக்கிறார்கள் என்றால், அங்குள்ள கிராமங்களைப் பொறுத்தவரையில் சற்று குறைவாக இருக்கிறது. அதற்காக கொடுக்கிறோம் என்று சொல்கிறார்கள். அந்த முறையில் அரிசி அதிகமாக விரயமாகிறது. ஏராளமாக சேதம் ஏற்படுகிறது. ஆகவே, எல்லோருக்கும் 1-ம் நம்பர் ஹல்லர் கொடுக்க வேண்டும் . . . (மணி அடிக்கப்பட்டது).

திரு. க. கோமதி சங்கர தீட்சிதர்: தலைவர் அவர்களே, இந்த மானியத்தின் பேரில் எங்கள் கட்சித் தலைவர் கொண்டு வந்துள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரித்து, இரண்டொரு கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்த மானியத்தைப் பற்றி நாம் சிந்திக்கும் போது, இந்த நாட்டிலே பஞ்சநிலைமை ஏற்படாமல், பஞ்சத்தினால் மக்கள் இறந்துவிடாமல் ஒரு அரும் தொண்டை நமது இந்திய அரசின் உணவு மந்திரியாக இருந்து திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் ஆற்றியிருக்கிறார் என்பதைச் சொல்லாமல் இருக்க முடியாது. நமது தமிழ் நாட்டில் மட்டுமல்ல, இந்திய நாட்டு மக்கள் எல்லோரும் நல்ல முறையிலே உணவு பெறுவதற்கு அரும்பாடுபட்ட நமது ஒப்பற்ற உணவு மந்திரியாக இருந்த அவர் இந்த தேசத்தில் உணவு பற்றாக்குறையாக இருந்த காலத்தில் மக்களுக்கு உணவு அளித்த ஒரு முறையை நாம் அறிவோம். இந்த நாட்டு மக்கள் உணவு பெற்று, நல்ல முறையில் வாழ வேண்டும். உணவு உற்பத்தி அதிமாக ஆக வேண்டும். உணவு பற்றாக்குறை இல்லாமல், விவசாயிகளுக்கு ஊக்கம் அளித்து உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்பதுதான் காங்கிரஸ் கட்சியினுடைய கொள்கை, லட்சியம். அந்தக் கொள்கையை அனுசரித்து இந்த அரசாங்கம் கொள்முதல் செய்து வருகிறது. விவசாயிகளிடத்தில் கொள்முதல் செய்யும் பொழுது, ஒரு





ஏக்கராவுக்கும் குறைந்த அளவிலே நிலம் வைத்திருப்பவர்களிடம் கொள் முதல் செய்யாமல் இருப்பது மிகவும் நல்லதுதான். ஆனால், கொள் முதல் செய்யக்கூடிய அந்த முறை விவசாயிகள் மிகவும் பயப்படக் கூடியதாகவும், அவர்களைக் கஷ்டப் படுத்தக்கூடியதாகவும் அமைந்திருக்கிறது என்பதை இந்த சந்தர்ப்பத்தில் அரசாங்கத்திற்குத் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். என்னுடைய தொகுதியிலே இனும் ஒழிப்புச் சட்டம் வெளியிடப்பட்டதற்குப் பிறகு கோடாரங்குளம் என்ற கிராமத்தில் விவசாயிகள் இனும்தார்களினால் மிகவும் கஷ்டம் அடைந்து வருகிறார்கள். அதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தெரிவித்திருக்கிறேன். கொள் முதல் செய்யும்பொழுது சில்லறை அதிகாரிகள் விவசாயிகளை மிகவும் கஷ்டப்படுத்துகிறார்கள் என்பதை நான் அறிந்து தான் இந்த அரசாங்கத்திற்குத் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். கொள் முதல் செய்யும் பொழுது விவசாயிகள் மனம் கோணாமல், அவர்கள் உற்சாகத்தோடும், ஊக்கத்தோடும் அரசாங்கத்திற்கு நெல்லை அளிக்க வேண்டும். அப்படி அவர்களுக்கு ஊக்கம் அளிக்கும் விதத்தில், அந்த முறையில் கொள்முதல் செய்யப்பட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், விவசாயிகளுக்கு இந்த விலை கட்டாது என்றால், வேண்டும் என்றே நான் இதைக் கூறவில்லை. விவசாயிகள் எவ்வளவு பணத்தை செலவழித்து உணவு உற்பத்தி செய்கிறார்கள். அவர்களுக்கு அரசாங்கம் கொடுக்கிற விலை கட்டுப்படியாகுமா என்பதை நன்றாக சிந்தித்துப்பார்க்க வேண்டும். எனக்கு முன்பு பேசிய சுதந்திராக் கட்சி மெம்பர் அவர்கள் சொன்னபடி, விவசாயிகளுடைய செலவை நன்றாக அறிந்து, கொள் முதல் செய்யும்பொழுது அதற்கு என்ன விலை நிர்ணயிக்கலாம் என்பதை யோசிக்க வேண்டும். அப்படிச் செய்வது அரசாங்கத்தின் முக்கியமான கடமையாகும். இப்பொழுது அவர்கள் கொடுத்துவருகிற விலை ரூ. 40, 42, 45 குவிண்டாலுக்கு, அது காணாது, நிச்சயம் கட்டுப்படியாகாது. குறைந்த விலைக்கு நெல் கொள்முதல் செய்யப்படும்பொழுது விவசாயிகள் என்ன செய்கிறார்கள் என்றால் தங்களிடத்தில் மீதியுள்ள நெல்லை மக்கள் வாங்க முடியாதபடி அதிகமான விலைக்கு விற்க ஆசைப்படுகிறார்கள். அதன் மூலம் கள்ள மார்க்கெட் ஏற்படுகிறது. கண்ட்ரோலையும் மீறி, மக்கள் அதிக விலை கொடுத்து வாங்க வேண்டிய நிர்பந்தத்திற்கு ஆளாகிறார்கள். அதையும் இந்த அரசாங்கம் கவனிக்க வேண்டும். ஆகையினால், கட்டுப்படியான விலையை விவசாயிகளுக்கு அளிக்க வேண்டும் என்று நல்ல எண்ணத்தோடு அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன். அவர்களிடமிருந்து கொள்முதல் செய்யும் பொழுது அவர்கள் மனம் கோணாமல், நோகாமல், எவ்வளவோ தடபுடல் இல்லாமல், சில்லரை அதிகாரிகள், கிராம அதிகாரிகள், ரெவின்யூ அதிகாரிகள் இவர்கள் மூலம் கஷ்டம் ஏற்படாமல், நெல் கொள்முதல் செய்தால், இப்பொழுது 5 லட்சம் டன் கொள்முதல் செய்யப்படுவதாக அறிக்கையில் வெளியிட்டிருக்கிறார்கள். அதை விட அதிகமான நெல்லை அரசாங்கம் கொள்முதல் செய்யலாம் என்று நான் இந்த சந்தர்ப்பத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், அரிசியினுடைய தரம் நல்ல முறையில் இருக்க வேண்டும். மக்கள் நன்றாக உணவு செய்யக் கூடிய வகையில் அரிசி அளிக்கப்பட வேண்டும். இது அரசாங்கத்தின் முக்கியமான கடமை. மில்களில் அறைக்கக்கொடுக்கும்பொழுது அங்கே இதையெல்லாம் கவனியாமல், சுகாதாரத்திற்கு விரோதமான முறையில் அரிசி உற்பத்தி செய்யப்படுகிறது. அப்படிப்பட்ட அரிசி விநியோகிப்பதால் மக்களுடைய உடல் நலம், தேக சுகம் கெட்டுவிடும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். நல்ல தரமான அரிசியே உற்பத்தி செய்து தருவதற்கு தீவிரமான முயற்சிகளை அரசாங்கம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த படி அரிசித் திட்டம் நல்ல அருமையான திட்டம். அதைப்பற்றி யாரும் குறை கூற முடியாது. மக்களுக்கு படி அரிசி போடுவது மிகவும் பெருந்தன்மையான திட்டம். அதைப்பற்றி குறை கூற நான் முன்வரவில்லை. அந்தத் திட்டம் தமிழ் நாடு முழுவதிலும் நிறைவேற்றப்பட

வேண்டும். அதற்கு நாங்கள் உங்களோடு ஒத்துழைக்கிறோம். ஆனால் ஒரு படி அரிசித் திட்டம் கூட நிறைவேற்ற வேண்டாம், மழை இல்லாமல் உள்ள என்னுடைய தொகுதியில் பல கிராமங்களில் குடும்பக் கார்டுக்கு அரிசி கிடைக்காமல் மக்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். அதை முதலில் கவனிக்க வேண்டும். படி அரிசி ரூ. 1½, 2, 2½ என்று கொடுத்து வாங்கக் கூடிய நிலைமை இருக்கிறது. ஒரு தடவை நான் மாண்புமிகு ரெவின்யூ மந்திரி அவர்களிடம் சொல்லியிருக்கிறேன். (மணி அடிக்கப்பட்டது) "ஒன் மினிட் ப்ளீஸ்".

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு பெ. மலைச்சாமி) :** உறுப்பினர் அவர்கள் 6, 7 நிமிடங்கள் உரையாற்றி விட்டார்கள். அடுத்து பேசுகிறவர் ஒரு நிமிஷம் குறைத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

*** திரு. கே. கோமதி சங்கர தீட்சிதர் :** அந்தக் கிராமங்களில் நெசவுத் தொழிலாளர்கள், மற்றத் தொழிலாளர்கள் அதிகமாக இருக்கிறார்கள். அங்கெல்லாம் உணவுக் கார்டுக்கு அரிசி கிடைக்கவில்லை என்று மந்திரி அவர்களிடம் சொன்னேன், பெட்டிஷன் கொடுத்தேன். சில இடங்களில் கவனிக்கப்பட்டிருக்கிறது. என்னுடைய தொகுதியில் மழையே இல்லை. நெசவாளி மக்கள், கிராமத் தொழிலாளர்கள் வாழக்கூடிய கிராமங்கள். எல்லா கிராமங்களிலும் குடும்பக் கார்டுகளுக்கு அரிசி அளிப்பதற்கு இந்த அரசு முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். "ஜெய் ஹிந்த்".

***திரு. செ. பாலசுப்பிரமணியன் :** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, உணவு மானியத்தின்மீது நான் கொண்டுவந்திருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரித்து சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். உணவு அமைச்சர் இந்த விஷயத்தில் காட்டுகிற உற்சாகத்தை நான் பாராட்டுகிறேன். ஆனால், ஒரு பக்கம் இந்த அரசாங்கத்தினுடைய உணவுக் கொள்கையில், ஒரு படி அரிசித் திட்டம் என்ற கொள்கையைத் தவிர, பாக்கி நெல் கொள்முதலில் விவசாயிகளுக்குக் கொடுக்கிற விலை, மற்ற எல்லா விவகாரங்களிலும் இந்திய அரசின் கொள்கையை அனுசரித்த கொள்கையாகத்தான் இருக்கிறது. இந்திய அரசின் உணவுக் கொள்கை, அதிலும் குறிப்பாக விவசாயக் கொள்முதல் விலை இருக்கிறதே, அதைப் பொறுத்த வரையில் இந்திய சர்க்காரின் உணவுக் கொள்கை ஒரு தெளிவற்ற கொள்கை. ஆகவே, அதையே பின்பற்றுகிற இந்த அரசினுடைய உணவுக் கொள்முதல் விலையைப் பொறுத்த அளவிலே, தெளிவற்ற கொள்கையாகத்தான் இருக்க முடியும். ஒரே ஒரு உதாரணம் சொல்ல விரும்புகிறேன். எனக்கு முன்பு பேசிய நண்பர் கிருஷ்ணசாமி கவுண்டர் அவர்கள் நெல்லுக்கு விலை நிர்ணயம் செய்கிறார்களே, அது எந்த அடிப்படையில் செய்கிறார்கள். அட்ஹாக் பேஸிலா அல்லது விவசாயிகளுக்கு ஆகின்ற செலவு அடிப்படையிலா கூலி மற்ற செலவுகள், லாபம் இவைகளையெல்லாம் கணக்கிட்டு அந்த அடிப்படையிலா என்று கேட்டார்கள். ஒன்றை நாம் நுணுக்கமாக கவனிக்கவேண்டும். மதிப்பிற்குரிய நமது உணவு அமைச்சர் அவர்கள் கூட சில மாவட்டங்களைப் பொறுத்த வரையில் விவரங்களைக் குறிப்பிட்டார்கள். நாங்கள் நிர்ணயிக்கிற விலைக்கு வங்குகிற நெல்லின் அளவு முழு அளவு அல்ல, முழுவதையும் வாங்கவில்லை, கொஞ்சம்தான் வாங்குகிறோம், ஐந்தில் ஒரு பாகம்தான் வாங்குகிறோம், பாக்கியை அவர்கள் இஷ்டம் போல விற்றுக்கொள்ளலாம் என்கிறார்கள். அதனால்தான் சொல்லுகிறேன், கொள்கையில் ஒரு நிலை இல்லை என்று. விவசாயி உற்பத்தி செய்கிறான். அரசாங்கம் ஒரு குறிப்பிட்ட அளவை ஒரு குறிப்பிட்ட விலைக்கு வாங்குகிறது. மற்றொரு அளவை மற்றொரு விலைக்கு விற்கமுடியும் என்று நிலைமை இருக்கிறது. அந்த அளவிற்கு அரசாங்கம் அனுமதித்திருக்கிறது. உற்பத்தி செய்யப்பட்ட பொருளுக்கு உற்பத்தியாளர்களுக்கு அரசாங்கத்திற்கு ஒன்று, மற்றவர்களுக்கு ஒன்று என்று விலைகள் இரண்டு இருக்கும் சம்பவம் எந்த நாட்டிலாவது இருக்கிறதா? ஒன்றைக் கு கார் என்று எடுத்துக்கொண்டால், ஃபியட் கார் வாங்கு



கிறோம் என்று வைத்துக்கொண்டால், ரூ. 20,000 என்று வாங்குகிறோம். ஆனால், அதையே ஒருவருக்கு ரூ. 10,000-க்கும் மற்றவருக்கு ரூ. 20,000-க்கும் கொடுக்க வேண்டும் என்றால் எந்த தொழில் முதலாளியாவது கொடுப்பாரா? ஆனாலும்கூட விவசாயப் பொருளை எடுத்துக் கொண்டால் உலகம் முழுவதிலும் விவசாயிகள் உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு மட்டும் விலை நிர்ணயிக்கும் பொறுப்பு விவசாயிக்கு இருக்கவில்லை. எந்த தேசத்திலும், அமெரிக்கா போன்ற தேசத்திலும் கூட என்ன செய்கிறார்கள்? விவசாயப் பொருள்களின் விலை இறங்காமல் பார்த்துக் கொள்ளும் பொறுப்பை ஏற்றுக்கொண்டு அந்த வகையில் பார்த்துக் கொள்ளுகிறது. அரசாங்கமே மார்க்கெட்டில் புகுந்து, மற்றவர்களோடு போட்டி போட்டு வாங்கி விற்பதன் மூலம் சரியான விலை, சரியான நிலை இருக்கும் வகையில் பார்த்துக்கொள்கிறது. ஆனால், இந்திய அரசாங்கமும், இந்த அரசாங்கமும் குறைந்த விலையில் விற்குமாறு பார்த்துக்கொள்ளுகிறது.

படியரிசித் திட்டம்பற்றிச் சொன்னால், படி அரிசி போடுகிறோம் என்கிறார்கள். விஸ்தரிக்கப்படுமா என்றால் இல்லை. படி அரிசி சென்னைக்கும் கோவைக்கும் வந்ததால், சென்னை மக்கள், கோவை மக்கள் பயனடைகிறார்கள் என்றாலும், அதிலே விவசாயி எவ்வளவு தியாகம் செய்கிறான் என்பதையும் கவனிக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அமெரிக்கா போன்ற நாடுகளில், அதைப் பற்றிச் சொல்லக் கூடாது என்றாலும், விளக்க வேண்டும் என்பதற்காகச் சொல்லுகிறேன். இப்பொழுது ரொம்பக் குறைவான விலை இருக்கிறது என்றார்கள். சென்ற குறுவைப் பயிர் காலத்தில் டெல்லியில் இருக்கும் அதிகாரிகளும், மற்ற கீழ் மட்டத்தில் இருக்கிறவர்களும் விலை வாங்கமுடியாமல் இருக்கும் என்று பயந்தார்கள். ஆனால், மாநில அரசு தஞ்சாவூர் மாவட்டத்தில் இரண்டு லட்சம் டன் கொள்முதல் செய்திருக்கிறது. ஆகவே, காலாகாலத்தில், அடைமழை என்கிற காலத்தில் கூட, எடுத்து, வேறு மாவட்டங்களுக்கு அனுப்பியதால் தான் நல்ல விலைக்குக் கொடுக்க முடிந்தது. அப்படி எடுக்காமல் இருந்திருந்தால், "ஸப்போர்ட்டிங்" ப்ரைஸ் என்று சொல்லக் கூடிய அளவிற்குத்தான் நிலைமைகள் வந்திருக்கும். அதையெல்லாம் அனுசரித்துத்தான் அரசாங்கத்தினுடைய விலை நிர்ணயிக்கப்படுகிறது.

**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** என்னுடைய வாதமெல்லாம் விவசாயிகளுடைய நெல்லுக்கு இரண்டுவித விலை இருக்கிறது. அதை அரசாங்கம் ஒத்துக்கொண்டிருக்கிறது, அது முறையா, சரியா என்பதுதான்.

**மாண்புமிகு திரு. கே. ஏ மதியழகன் :** அப்பொழுது அங்கத்தினர் சொல்லுவது என்ன, இந்த விலைக்கே எல்லாவற்றையும் வாங்கவேண்டும் என்கிறார்களா அல்லது அந்த விலைக்கு அப்படி வாங்கக் கூடாது என்கிறார்களா?

**திரு. செ. பாலசுப்பிரமணியன்** இந்தியா பூராவிற்கும் ஒரே விலைக் கொள்கை அனுஷ்டிக்கப் பட வேண்டும், திட்டமிட்ட பொருளாதாரத்தின் அடிப்படையில், பொருள் விற்பனையாளர்கள் மத்தியில், அதாவது, 'Parity of prices between agricultural produce and industrial produce—அதாவது தொழிற்சாலைப் பொருள்களுக்கும், விவசாயப் விலை பொருள்களுக்கும், சமனப்படுத்தப் பட்ட முறையை அனுஷ்டிக்க விலை வேண்டும், என்பதுதான் என்னுடைய வாதம். இப்படித்தான் செய்ய வேண்டும் என்கிற அடிப்படையில் தேசம் பூராவிலும் செய்தால்தான், விலைவாசிகளைக் கட்டுப்படுத்த முடியும். நகரத்தில் இருப்பவர்கள் மட்டும் விலைக் குறைவாக வாங்கவேண்டும், விவசாய மக்கள், கிராமாந்தர மக்கள் இவர்களுக்கு, உற்பத்தியாளர்களுக்கு விலையைக் கூட்டிக் கொடுக்க மாட்டோம் என்பது பொருளாதார சாஸ்திரத்தில் சரியானது அல்ல. ஆகவே, விலைவாசிகளைப் பொறுத்தவரையில், அகில இந்தியக் கண்ணோட்டம் வேண்டும். மற்றப்படி, விவசாயப் பொருள்களுக்கும், தொழில் துறைப் பொருள்களுக்கும் ஒரு இணைப்பு வேண்டும்.

அப்பொழுதுதான் விவசாயிகளுக்கு நியாயம் கிடைக்கும். இல்லாத வரையில், நிச்சயமாக நியாயம் கிடைக்காது இப்பொழுது கொடுக்கப்படும் விலை கொள்கை அடிப்படையில் சரியானது அல்ல.

கொள்முதலைப் பற்றியெல்லாம் சொன்னார்கள். நன்றாக தஞ்சாவூரில் செய்தோம் என்றார்கள். அதே சமயத்திலே, முன்பு பற்றாக்குறைப் பிரதேசங்களில் கிளாஸ் 1, கிளாஸ் 2, பஞ்சாயத்து இவைகளிடையே வித்தியாசம் இல்லாமல், நியாயவிலைக் கடைகளை வைத்து, பற்றாக்குறை, வறண்ட பிரதேசங்களில் விநியோகம் செய்தார்கள். ஆனால், இப்பொழுது என்ன செய்கிறார்கள்? கிளாஸ் 1 பஞ்சாயத்துக்களுக்கு மட்டும் கொடுத்தும், மற்றவைகளுக்கு கொடுக்காமல் இருப்பதன் விளைவு, ஒரே ஊரில், இரண்டு விதப் பஞ்சாயத்துக்களும் இருக்கும் இடங்களில் ஒரு தெரு கிளாஸ் 1 பஞ்சாயத்திலும் மற்றொரு தெரு கிளாஸ் 2 பஞ்சாயத்திலும் வரும்போது, கஷ்டங்கள் அதிகமாக இருக்கின்றன. முக்கியமாக நெசவாளர்கள் அதிகமாக இருக்கும் பகுதியில் பற்றாக்குறை, பஞ்சப் பிரதேசங்களில் கஷ்டம் அதிகமாக இருப்பதன் காரணத்தினால், அங்கேயெல்லாமும் விஸ்தரிக்க வேண்டும், என்று அங்குள்ள அதிகாரிகளிடம் சொன்னால் அவர்கள் என்ன சொல்லுகிறார்கள்? டிஸ்ட்ரிக்ட் கலெக்டர், அரசாங்க அளவில் இந்தமாதிரி ஏற்பாடு செய்ய வேண்டும் என்று ஏற்பாடு, செய்து கொண்டு வாருங்கள்—இதை உணவு அமைச்சருடைய கவனத்திற்கு கொண்டு வருகிறேன், அமைச்சர் கவனிக்க வேண்டும்—என்று சொல்லுகிறார்கள் என்பதை அமைச்சருடைய கவனத்திற்கு மட்டும் கொண்டுவருகிறேன். இந்தப் பிரச்சினை எங்கள் பகுதியில், நெசவாளர்கள், அதிகம் வாழக் கூடிய பகுதியில் தலை தூக்கியிருக்கிறது. ஆகவே, பற்றாக்குறை பிரதேசம், பஞ்சப்பிரதேசம் போன்ற இடங்களுக்கு, தேவைக்கு ஏற்ப ஏற்பாடுகளைச் செய்ய மாவட்டக் கலெக்டருக்கு யுக்தானுசார அதிகாரத்தைக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

படியரிசித் திட்டத்தைப் பற்றிச் சொல்லுகிறார்கள். அது வரவேற்கத் தக்க ஒரு திட்டம்தான். அதில் எந்தவிதமான அபிப்பிராய பேதமும் கிடையாது. காங்கிரஸ் நண்பர்கள் வேண்டுமானால் எதிர்க்கலாம். அல்லது ஒப்புக் கொள்ளலாம். படியரிசித் திட்டம் யாருக்குக் கொடுக்க வேண்டும்? எல்லோருக்கும் போடவேண்டும் என்றாலும்கூட, முதலிலே வாங்கும் சக்தி குறைவாக எங்கு இருக்கிறதோ அந்த இடங்களில் போடவேண்டும். ஆனால் இன்றைக்கு எங்கே வாங்கும் சக்தி அதிகமாக இருக்கிறதோ அங்கே போடுகிறோம். இன்றைக்குக் கேட்டால், இந்த வருஷம் விளைச்சல் குறைவாக இருக்கிறது, ஆகவே, படியரிசித் திட்டத்தை விஸ்தரிக்க முடியவில்லை என்று சொல்லுகிறார்கள். அந்தக் காரணத்தை வேண்டுமானால், குடும்பக் கார்டுகள் விஸ்தரிக்க வசதி யில்லை, விளைச்சல் இல்லாத காரணத்தால் என்று சொல்வது பொருத்தமாக இருக்கும். ஆனால் படியரிசித் திட்டத்தை விஸ்தரிக்க முடியவில்லை என்கிற வாதத்தில் நியாயம் இல்லை. காரணம், படி அரிசித் திட்டத்தில் செலவுப் பிரச்சினைதான் இருக்கிறதே தவிர விநியோகப் பிரச்சினை கிடையாது. அடுத்த வருஷம் அல்லது இன்னும் ஐந்து வருஷத்தில் அது விஸ்தரிக்கப்படும் என்கின்ற வாக்குறுதியைக் கொடுத்தாலாவது நலமாக இருக்கும். (மணியடிக்கப்பட்டது) விவசாயிகளுக்கு, அவர்களுடைய உற்பத்திப் பொருள்களுக்கு விலை எந்த அடிப்படையில் நிர்ணயிக்கவேண்டும் என்பதில் கவனம் செலுத்த வேண்டும். இன்றைக்கு இருக்கும் முறையை மாற்ற இந்த அரசாங்கம் முயலவேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடிக்கிறேன்.

*திரு. அ. லெ. சுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, இந்த உணவுக் கோரிக்கையை வரவேற்று ஒரு சில கருத்துக்களைக் கூற முன் வருகிறேன். இந்தக் கோரிக்கையை மாண்புமிகு அமைச்சர் சமர்ப்பித்து, 1967-ல் 8·5 லட்சம் டன் நெல் கொள்முதல் செய்



திருப்பதாகவும், குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்குப் பாராட்டுதலை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளுகிறேன். வருகின்ற 1968-ம் ஆண்டில் 10 லட்சம் டன் கொள்முதல் செய்ய வேண்டும் என்கிற திட்டத்தையும் கூறியிருக்கிறார்கள். அதற்காகவும் என்னுடைய பாராட்டுதலைத் தெரிவிக்கிறேன். இன்னும் குறிப்பிடும் போது, சென்ற ஆண்டு 50,000 டன் கடன்பட்டிருந்தோம்; இப்பொழுது அதை வெளி மாநிலங்களுக்குத் தந்திருக்கிறோம். அதற்காகவும் அவர்களுக்கு முதலிலே என்னுடைய பாராட்டுதலைத் தெரிவிக்கிறேன். சென்ற முறையை விட, இந்த அரசாங்கம் பதவிக்கு வந்தபிறகு, ஒரு ஏக்கருக்கு குறைவாக நிலம் இருக்கிறவர்களிடமிருந்து கொள்முதல் செய்வதில்லை என்று திட்டவட்டமாகச் செய்ததற்காகவும் விவசாயப் பெருங்குடி மக்கள் சார்பில் இந்தத் தமிழக அரசுக்குப் பாராட்டு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். பத்து ஏக்கர்களுக்கு மேலே உள்ளவர்களிடம் இருக்கும், மார்கெடபிள் சர்ப்ளஸ் என்று சொல்லப்படுகின்ற நெல்லை வாங்க விதி யிருக்கிறது. ஆனாலும் அந்த மார்கெடபிள் சர்ப்ளஸ் என்ன என்பதை, எவ்வளவு என்பதை விதியின் கீழ் "டெஃபனெஷன்" செய்யாமல் இருப்பதால், அந்த அளவு என்ன என்பதைச் சரியாகக் குறிப்பிட முடியவில்லை. பெரிய பெரிய விவசாயிகள் இருக்கிறார்கள் என்றால், அவர்களுடைய பண்ணையில் ஏராளமான கூலிகள் வேலைசெய்கிறார்கள். அவர்களுடைய கூலியை, சம்பளத்தை ரூபாயாக தருவதை விட்டு, நெல்லாகவே சம்பளத்தை தரவேண்டும் என்று கேட்கிறார்கள். அந்த விவசாயிகளுக்குக் கொடுக்கும் நெல்லை விதிவிலக்கு செய்ய இந்தச் சட்டத்திலே ஷரத்து இல்லை. பெரிய விவசாயிகளுடைய பண்ணையில் வேலை செய்யும் கூலிகளுக்கு, அவர்கள் விரும்பினால், நெல்லாகவே கொடுக்கப்படும் கூலியைக் கழித்துவிட்டு, மார்க்கெட்டபிள் சர்ப்ளஸை நிர்ணயிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இன்னொன்று, ஒரு மாவட்டத்தை எடுத்துக் கொண்டால், ஒரு தாலுகாவிலிருந்து, இன்னொரு தாலுகாவிற்கு நெல் எடுத்துச் செல்லக் கூடாது என்று சட்டம் இருக்கிறது. ஒரு மாவட்டத்திற்குள்ளேயே, இண்டர்-டாலுக் மூவ்மெண்டுக்கு பாரியர் இருப்பதால், ஒரு தாலுகாவில் விலையைவிட மறு தாலுகாவில் அதிகமாக இருக்கிறது. ஆகவே, இந்த மாதிரியான மாறுதல்களைத் தவிர்க்க வேண்டும். அப்படி வித்தியாசமான விலைகள் நிலவுவதைப் பார்க்கிறோம்.

திருநெல்வேலி மாவட்டத்தை எடுத்துக்கொண்டால், திருநெல்வேலி பகுதியும், அம்பாசமுத்திரம் பகுதியும் நல்ல வளமான பகுதிகளாகும். பி. ப. 12-30
ஆனால், நாங்குனேரி, திருச்செந்தூர் பகுதிகள் சற்று வளம் குறைந்த பகுதிகளாகும். அம்பாசமுத்திரத்தில் நெல் விலை ஒன்றாகவும், அதே மாவட்டத்தில் நாங்குனேரி, சாத்தான்குளம் பகுதிகளில் நெல் விலை இன்னும் அதிகமாகவும் இருப்பதைப் பார்க்கிறோம். இதைத் தடுப்பதற்காக ஒரு மாவட்டத்திற்குள்ளேயே, இந்த இண்டர்-தாலுக் பாரியர்ஸ் இருப்பதை எடுத்துவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். கூலிக்கு அறுவடை செய்வதற்காக மற்ற இடங்களிலிருந்து விளைச்சல் உள்ள இடங்களுக்கு வருகிறார்கள். அந்தக் கூலி நெல்லை அவர்கள் தங்களுடைய சொந்த இடத்திற்குக் கொண்டுபோகத் தடை இருக்கிறது. அதையும் நீக்கித்தர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

படியரிசித் திட்டத்தைப்பற்றிக் காங்கிரஸ்காரர்கள் எல்லோரும் மிகப் பலமாகப் பேசினார்கள். சென்னையில் 29·13 லட்சம் மக்களுக்கு கோவையில் 8·3 லட்சம் மக்களுக்கும் இந்தப் படியரிசித் திட்டத்தைப் பயன்படுத்துகிற முறையில் வகுத்திருக்கிறார்கள். அதற்காக இந்த அரசை நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆனால், காங்கிரஸ்காரர்கள், கேட்கிறார்கள், படியரிசித் திட்டத்தைத் தமிழ்நாடு முழுவதும் போடவில்லையே என்று. ஆனால், ஒன்றை அவர்கள் உணர வேண்டும். இருபதாண்டுக் காலமாகப் பதவியில் அவர்கள் இருந்தார்கள். இந்தப் படியரிசித் திட்டம் இதுவரை அவர்கள் மூளையில் உதயம் ஆகாமல்,

பேரறிஞர் அண்ணா அவர்கள் திட்டமாகத்தான் உரு எடுத்திருக்கிறது என்பதை உணர்ந்து கொள்ளவேண்டும்.

படியரிசித் திட்டத்தை விஸ்தரிக்கவேண்டும் என்று காங்கிரஸ்காரர்கள் கேட்கின்றார்கள். ஆனால், அதை விஸ்தரிப்பதற்கு இந்தியப் பேரரசு எந்த வகையில் நமக்கு உதவுகிறது என்பதை அவர்கள் மனத்திலேயே கேட்டுக்கொள்ளவேண்டும். உணவு அமைச்சர் என்றால், மதியழகன் அவர்களைத்தான் காங்கிரஸ்காரர்கள் எண்ணுகிறார்கள் தவிர, மத்திய அரசிலே ஜகஜீவன்ராம் என்று ஒருவர் இருக்கிறார் என்ற எண்ணத்தையே அவர்கள் மறந்துவிடுகிறார்கள். நண்பர் திரு. விநாயகம் மறந்து விட்டால்கூடக் கவலைப்படமாட்டேன். ஆனால், ஐந்தாண்டுக் காலம் பாராளுமன்றத்தில் இருந்த எதிர்க்கட்சித் தலைவர் அவர்களேகூட, சென்ட்ரல் கவர்ன்மென்ட்டிலேயும் ஒருவர் உணவு மந்திரியாக இருக்கிறார் என்பதை அடிக்கடி மறந்துவிடுகிறார்கள். உணவுப் பிரச்சினையைத் தீர்ப்பதில் தமிழக அரசுக்கு மட்டுமல்லாமல், இந்தியப் பேரரசுக்கும் பெரும் பங்கு இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், கோதுமைக்காக ஏராளமான ரூபாய்களை சப்ஸிடியாகக் கொடுத்துக்கொண்டிருக்கும்போது, அதே வகையில் அரிசிக்கும் சப்ஸிடி தரவேண்டும். கோதுமை சாப்பிடுகிறவர்களுக்கு மட்டும் ஸப்ஸிடி தந்து சலுகை அளிக்கிறீர்களே அதே மாதிரி, அரிசி சாப்பிடுகிறவர்களுக்கும் ஸப்ஸிடி தரவேண்டும் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் கேட்ட நேரத்தில், இந்தியப் பேரரசு கைவிரித்து விட்டார்கள். வட்டித் தொகைக்குத் தவணை கொடுக்கும்படி மத்திய அரசைக் கேட்டார்கள். அதற்கும் அவர்கள் கையை விரிக்கிறார்கள். சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்காக பத்து கோடி ரூபாய் தரும்படி கேட்டோம். அதையும் அவர்கள் தர மறுக்கிறார்கள். விலைவாசியைக் குறைக்க வேண்டும் என்று நாம் முயற்சி செய்யும்போது, இந்திய அரசைச் சேர்ந்தவர்கள் உரத்தின் விலையை ஏற்றுகிறார்கள். எண்பது கோடி ரூபாய்க்கு நோட் அடித்து "இன்ஃப்ளேஷனை" உண்டாக்குகிறார்கள். தமிழக அரசு உணவு விலையைக் குறைக்கும்போது, இந்தியப் பேரரசு அதை அதிகமாக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்து கொள்ளுகிறேன்.

1965-ம் ஆண்டில் 81, 700 டன் கொடுத்து வந்த கோதுமையை, இந்த ஆண்டு 51,500 டன்னாக மத்திய பேரரசு குறைத்துவிட்டார்கள். கழகம் ஆட்சிப் பொறுப்பில் வந்திருக்கும் இந்த நேரத்தில், 1965-ல் கொடுத்ததைவிட குறைவாகத்தான் கொடுக்கிறார்கள். இது ஒன்றே, மத்திய பேரரசு தமிழக அரசை மாற்றாந்தாய் மனப்பான்மையோடு கருதிச் செயலாற்றுகிறது என்பதைத் தெளிவாகக் காட்டும்.

கொள்முதல் விலையைப் பற்றி ஒன்று குறிப்பிட விரும்புகிறேன். இன்றைக்கு இருக்கும் முறைப்படி குவிண்டாலுக்கு 43 ரூபாய், 45 ரூபாய், 48 ரூபாய் என்று மூன்று தரமாக விலையை நிர்ணயித்திருக்கிறார்கள். (மணி அடிக்கப்பட்டது.)

திரு ஆ. கு. சுப்பையா : தலைவர் அவர்களே, அரசாங்கப் பொறுப்பில் நடக்கும் விற்பனைக்கான மூலதனச் செலவு மானியக் கோரிக்கை குறித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு நான் முன்வந்திருக்கிறேன்.

உணவு உற்பத்தியைப் பெரிய அளவுக்குப் பெருக்குவதன் மூலமாக நாட்டிலே ஏற்பட்டிருக்கக் கூடிய உணவுப் பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்ற வகையில் ஐந்தாண்டுத் திட்டங்கள் போடப்பட்டு மூன்று ஐந்தாண்டு திட்டங்கள் முடிந்து நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தைத் தயாரிப்பதிலே மத்திய அரசினர் யோசனை செய்துகொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் நமது உணவு பிரச்சினையைத் தாராளமாகத் தீர்க்க



வேண்டுமென்றால், நாட்டிலுள்ள நிலங்களையெல்லாம் வளப்படுத்தி, நில உறவு முறைகளில் மாற்றம் ஏற்படுத்தி, அதன் மூலமாக உணவு உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் என்ற கொள்கையை மத்திய அரசாங்கம் மேற்கொண்டு பல சட்டங்களை இயற்றினார்கள். அந்தச் சட்டங்களை இன்றையதினம் நடைமுறையில் பார்த்தால், உண்மையிலேயே, விவசாயத்தில் ஈடுபட்டிருக்கக் கூடியவர்களுக்கு எந்தவிதமான நன்மையும் பயக்காமல், பெரிய நிலப் பிரபுக்களுக்கும், மொத்த உணவுத் தானிய வியாபாரிகளுக்கும் லாபம் வரக்கூடிய அளவுக்கு இயற்றப்பட்டிருக்கின்றன. இன்னும் வெளிநாடுகளையே நம்பிக் கொண்டிருக்கிறார்கள். பி.எல்.480 ஒப்பந்தப் பிரகாரம் வாங்கக்கூடிய கோதுமையும் கூட, நமது அரசுக்கு 1965-ஆம் வருஷம் கொடுத்துவந்த மொத்த அளவைவிடக் குறைத்து, இந்த ஆண்டு 51,600 டன்கள் கொடுக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறி இருக்கிறார்கள். அதிலே பெரிய அளவுக்கு வெட்டு விழுந்திருக்கிறது.

நமது ராஜ்யத்தில் சுமார் 65 லட்சம் ஏக்கர் நிலங்கள் விவசாயத்தில் இருந்துகொண்டிருக்கின்றன. வறத்தாழ, இந்த ராஜ்யத்தில் உற்பத்தியாகக்கூடிய தானியம் இந்த ராஜ்ய மக்களுக்குப் போதுமானது. அவ்வாறு இருக்கின்றபோது, இன்றைய தினம் ஒரு படி அரிசித் திட்டத்தின் கீழ் நியாய விலைக் கடைகளும் ஆரம்பித்து நடத்த வேண்டிய ஒரு அவசியம் ஏன் ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால், நமது நாட்டில் கள்ளக் கடத்தல்காரர்களும், உணவைப் பதுக்கி வைக்கக்கூடிய சமூக விரோதிகளும் இந்த நிலையை உருவாக்கியதன் காரணமாகத்தான் இன்றைய தினம் உணவுப் பங்கீடு விஷயத்தில் அரசாங்கம் தலையிட வேண்டிய ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இன்றைய தினம் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கக்கூடிய அரசு அதைக் கட்டுப்படுத்துவதற்காக தீவிரமான நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கிறது என்பதை மிகவும் பாராட்டுகிறேன். அவ்வாறு பாராட்டுகின்றபோது, இன்றைய தினம் கொள்முதல் விஷயமாக பார்க்கும்போது, எங்களுடைய கட்சியினுடைய அபிப்பிராயம், கொள்முதலை அரசாங்கம்தான் செய்தாகவேண்டும் என்பது. எவ்வாறு கொள்முதல் செய்கின்றார்களோ, அதே முறையில் அரசாங்கமே மக்களிடத்தில் விநியோகம் செய்தாக வேண்டும். அரசாங்கத்திற்கும், மக்களுக்கும் இடையிலே தரகர்கள் இருக்கிறார்கள். நாட்டுக்குத் தேவையான உணவுத் தானியத்தைக் கொள்முதல் செய்கின்றபோது, 20 சத வீதத்தை மாத்திரம் கொள்முதல் செய்து கொண்டு, மீதமுள்ள 80 சத வீதத்தை வெளி மார்க்கெட்டில் விற்றுக்கொள்வதற்குப் பரிபூரணமாகச் சுதந்திரம் அளிக்கப்பட்டிருப்பதை நாங்கள் ஆட்சேபிக்கிறோம். தேவையான முழுவதையும் அரசாங்கமே கொள்முதல் செய்யுமானால், அதில் வரக்கூடிய ஆதாயங்கள் அனைத்தும் நமது அரசாங்கத்திற்கு மாத்திரமல்லாமல், நமது நாட்டுக்கும் கிடைக்க வழி ஏற்படும் என்ற முறையிலேதான் இந்த உணவுத் தானிய வர்த்தகத்தை அரசாங்கமே மேற்கொள்ள வேண்டும் என்று நாங்கள் சொல்லுகிறோம்.

அவ்வாறு சொல்லுகின்றபோது, இன்றைய தினம் விவசாயத்திலே ஈடுபட்டிருக்கக்கூடிய விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய எல்லாத் தானியங்களுக்குமே ஒரு நியாய விலையை நிர்ணயம் செய்யவேண்டும் என்று சொல்லுகிறோம். இந்த அரசாங்கத்தின் மீது விரோதமாகச் சொல்லுவதாகக் கருதுகிறார்கள். அவ்வாறு இல்லை. இன்றைய தினம் விவசாயம் செய்வதற்கு விவசாயிகளுக்குத் தேவையான கருவிகள், உபகரணங்கள் வாங்கவேண்டுமென்றால், அதிகமான விலை கொடுத்து வாங்கவேண்டிய நிலை ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. உதாரணமாக, தஞ்சை போன்ற மாவட்டங்களில் ஏக்கரொன்றுக்கு 300 ரூபாய் செலவழித்தாலொழிய விவசாயம் செய்ய முடியாது. ஆகவே, வருவாய்க்கும் செலவுக்கும் ஈடு கட்டிப்பார்த்தால், விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகாத நிலை இருப்பதன் காரணமாகத்தான் விலையைச் சற்று உயர்த்துவது நியாயமாக இருக்க முடியும் என்ற முறையில் ஆலோசனை சொன்னேனே தவிர, அரசாங்கத்திற்கு விரோதமாகச் சொல்லுவதாகத் தயவு செய்து அரசாங்கத் தரப்பிலிருந்து கருதக்கூடாது என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இன்றைய தினம் நமக்குத் தேவையான உணவுத் தானியம் பத்து லட்சம் டன் கொள்முதல் செய்ய வேண்டும் என்று சொல்லுகிறார்கள். அவ்வாறு செய்யும்போது ஒரு எக்கர் நிலம் உள்ளவர்களுக்கு மாத்திரம் விதி விலக்கு அளித்துவிட்டு, ஒரு எக்கரிலிருந்து பத்து எக்கர் வரையில் லெவி நிர்ணயம் செய்துவிட்டு, பத்து எக்கருக்குமேல், செலவு போக உபரியாக இருக்கக்கூடியதையெல்லாம் அந்தந்த மாவட்டக் கலெக்டர் அவர்கள் என்ன நிர்ணயம் செய்கிருரோ அதைத்தான் அவர்களிடமிருந்து கொள்முதல் செய்யவேண்டும் என்று இருக்கிறது. இதை நான் ஏற்றுக் கொள்ளுவதற்கில்லை. நாங்கள் சொல்வது—மூன்று எக்கர் வரையில் விதிவிலக்கு கொடுக்க வேண்டும் என்று சொல்லுகிறோம். அதை அரசாங்கத் தரப்பில் மறுக்கிறார்கள். மூன்று எக்கர் வரையில் நிலம் வைத்திருக்கின்றவர்கள் சிறு குடியானவர்கள்தான். இவர்களுடைய தானியத்தைக் கடத்தல் செய்யவோ அல்லது பதுக்கி வைத்து, அதிக லாபத்தில் விற்பனை செய்யவோ முடியாது. தேவைக்குப் போக மீதம் இருப்பதை இவர்கள் வெளி மார்க்கெட்டில் விற்றுத்தான் தீரவேண்டும். ஆனால், பெரிய ஆசாமிகள்தான், அரசாங்கத்தையும் அரசாங்க அதிகாரி களையும் ஏமாற்றிப் பதுக்கி வைத்துக் கொள்ளுகிறார்கள். கொள் முதலுக்குக் கொடுக்காமல் ஏமாற்றி விடுகிறார்கள். அதற்காகத்தான மூன்று எக்கருக்கு மேல் பத்து எக்கர் வரையில் லெவி நிர்ணயம் செய்துகொள்ளுங்கள் என்று சொல்லுகிறோம். பத்து எக்கருக்குமேல் நிலமுடைய பெரிய நிலப்பிரபுக்கள் எண்ணிக்கையில் குறைவாக இருக்க லாம். ஆனால், விஸ்தீரணத்தில் அவர்களிடம் தான் அதிகமாக இருந்து கொண்டிருக்கிறது. கோவில்கள், மடங்கள் அதிகமாக நிலங்களை வைத்திருக்கிறார்கள். கோவில்களுக்கும் மடங்களுக்கும் எவ்வளவு தேவை என்பதைக் கணக்கிடுவதற்கு யாருக்கு அதிகாரம் இருக்கிறது ? நம்முடைய அரசாங்கத்திற்கு இவ்வாறு அதிகாரம் இருக்கிறதா என்பது எனக்குச் சந்தேகமாக இருக்கின்றது. அவர்களுக்குத் தேவையானதுபோக, அதிகமாக இருப்பதை எடுத்துக்கொண்டால் 10 லட்சம் டன் மட்டுமல்ல, இன்னும் ஒரு 10 லட்சம் டன் கூடுதலாகவே கிடைக்கும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன், இதனால் உணவுத் துறையிலே இருக்கக்கூடிய நெருக்கடியையும் போக்க முடியும். ஆகையால் வேண்டு மென்றே எசர்க்காருக்கு விரோதமாக, " 3 எக்கர் வரையில் வைத்திருப்பவர் களிடமிருந்து கொள்முதல் செய்யக்கூடாது" என்று சிலர் கேட்டு வருவதை நாங்கள் ஏற்றுக்கொள்ளுவதற்கில்லை. மேலும் பெரிய ஆசாமிகளைப் பிடியுங்கள். களத்துமேட்டிற்கே சென்று உபரித் தானியங்களை அப்படியே கைப்பற்றுங்கள், அந்தந்தக் கிராமத்தில் இருக்கக்கூடிய அதிகாரிகள், பிரமுகர்கள் கொண்ட ஒரு கமிட்டியை போட்டு, களத்துமேட்டிலே உபரித் தானியத்தைக் கொள்முதல் செய்யுங்கள் என்று அரசாங்கத்திற்கு யோசனை கூற விரும்புகிறேன். அப்போதுதான் பதுக்கலைத் தடுத்து நிறுத்த முடியும், கள்ளக் கடத்தலைத் தடுக்க முடியும். இல்லையென்றால் அதிகாரி களையெல்லாம் கணக்குக் காட்டி ஏமாற்றிவிடுவார்கள். அதிகாரிகள் உண்மையிலே ஏமாந்தவர்கள். இன்றைய தினம் நமக்கு 10 லட்சம் டன் உணவுத் தானியம் தேவை என்று மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். களத்து மேட்டிலே போய் கொள்முதல் செய்தால் இந்த அளவை நாம் சுலபத்தில் எட்டிவிடலாம் என்று தெரியப்படுத்துகிறேன். கொள்முதலுக்கான சகல பொறுப்புகளையும் அரசாங்கமே ஏற்கவேண்டும். கொள்முதலில் இடைத்தரகர்களுக்கு இட மளிக்கக்கூடாது. இடைத்தரகர்கள் தங்கள் லாபத்தையே குறிக் கோளாக வைத்துச் செயல்படுகிறார்கள். கொள்முதல் செய்து, தரகு கொடுத்து, அரிசி மில்காரர்களிடம் இருந்து வெளிவரும்போது 82 ரூபாயி லிருந்து 90 ரூபாய் வரையில் ஒரு குவிண்டாலுக்கு செலவாகிறது. விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்வதற்கும், அதை அரிசியாக தயாரித்து அரசாங்கத்திற்குக் கொடுக்கும் அளவிற்கும் ஒரு குவிண்டாலுக்கு 10 ரூபாய், 12 ரூபாய் என்ற அளவில் வித்தியாசம் இருக்கிறது. இந்த 10, 12 ரூபாயும் அரசாங்கத்திற்கு வந்தால் ஆதாயமாக இருக்கும் என்பதைக் கூறிக்கொண்டு, எனக்கு வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி, என் உரையை இத்துடன் முடித்துக்கொள்கிறேன்.



*திரு பு. செ. முத்துச்செல்வன் : மதிப்பிற்குரிய மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த உணவு மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன். முதலாவதாக சென்ற ஆட்சியை நடத்தியவர்கள் பதவியை விட்டு இறங்கியபோது சென்னை மாநிலக் கிடங்கியிலே 500 டன் அரிசியை மட்டுமே வைத்துவிட்டு சென்றார்கள் என்பதை மறுப்பதற்கில்லை. அதுமட்டுமல்ல, தேர்தல் நேரத்தில் கொள் முதல் செய்தால் அப்பகுதி மக்களுடைய வாக்குகள் எல்லாம் தங்கள் கட்சிக்கு கிடைக்காமல் போய்விடுமோ! என்ற அச்சத்தினால் கொள் முதலை நிறுத்தி வைத்திருந்தார்கள். தேர்தல் முடிந்தபிறகு கொள்முதல் செய்து கொள்ள லாம் என்ற நிலையை உருவாக்கினார்கள். அந்த இக்கட்டான நேரத்தில் நமது புதிய அரசு பதவியேற்ற பிறகு, மிக விவேகத்துடனும், விரைவுட னும் செயல்பட்டு 8 லட்சம் டன்களுக்கு மேலாக உணவு தானியத்தைக் கொள்முதல் செய்தது. அதோடு, படி அரிசித் திட்டத்தையும் அமல்படுத்தி மக்களின் மத்தியில் நல்ல பெயரைத் தேடிக் கொண்டிருக்கிறது. படி அரிசித் திட்டத்திற்காக இந்த அரசை மனமாரப் பாராட்ட வேண்டும்.

புதிய அரசு பதவியேற்றவுடன் படி அரிசித் திட்டத்தை அமல்படுத்தி யது. இம்மாதிரி ஒரு புதுத் திட்டத்தை, ஒரு புது முயற்சியை மக்களுக்கு பயன் அளிக்கும் முயற்சியை வேறு எந்த மாநிலமாவது, அல்லது காங்கிரஸ் கட்சி ஆட்சி செலுத்திக்கொண்டிருக்கிற எந்த மாநிலமாவது அமல்படுத்தியிருக்கிறதா என்று பார்த்தால் இல்லையென்ற பதிலே கிடைக் கிறது. நமக்கு அண்டையிலுள்ள ஆந்திர மாநிலத்தில் நெல் நிறைய விளைகிறது. தன் தேவைக்குப் போக பாக்கியை மற்ற மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்கிறது ஆந்திரா. அப்படி உபரி மாநிலமாக இருந்தபோதி லும், தன் மாநிலத்தில் படி அரிசித் திட்டத்தை அமல்படுத்தி வருகிறதா, அல்லது அமல்படுத்த முற்படுகிறதா என்று பர்த்தால் இல்லையென்றே கூறவேண்டும். "தங்களுடைய ஆட்சிக்காலத்தில் படி அரிசித் திட்டத்தை நாம் போடவில்லையே, இப்படியெல்லாம் திட்டம் வகுக்கவில்லையே, திரா விட முன்னேற்றக் கழக அரசு படி அரிசித் திட்டத்தைக் கொண்டு வந்து மக்கள் மத்தியில் நல்ல பெயரைச் சம்பாதித்துக்கொள்கிறேதே" என்று காங்கிரஸ்காரர்கள் வயிற்றெரிச்சல்படுகிறார்கள். திராவிட முன்னேற்றக்கழக அரசு படி அரிசித் திட்டத்தை நல்ல முறையில் அமல்படுத்தி வருகிறதே என்று அங்கலாய்த்துகொள்ளுகிறார்கள். அதற்காக நாம் அவர்களைக் குறை சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. மற்றும் குடும்பக் கார்டு முறை வைத்திருக்கும் பகுதிகளுக்கும் படி அரிசித் திட்டத்தை விரிவுபடுத்த நமது அரசு முயற்சி செய்துவருகிறது என்பதை அறிந்து மகிழ்ச்சியடைகிறேன். படி அரிசி திட்டம் விரிவுபடுத்தும் முயற்சியிலிருந்து பின்வாங்கப் போவதில்லை யென்று மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இத் திட்டத்தை அமல்படுத்துவதற்கு முன்பாக அதிகமான அளவு உணவுத் தானியத்தை நம்முடைய கிட்டங்கிகளிலே சேமித்து வைத்துக்கொள்ள வேண் டும். அதற்கான எல்லா நடவடிக்கைகளையும் முன்கூட்டியே செய்தாக வேண்டும்.

கொள்முதல் என்று சொன்னால் கிராமப்புறங்களில் ஒருவித அச்சம் இருந்து வந்தது. இந்த சர்க்கார் ஒரு எக்கருக்குக் குறைவாக நிலம் வைத்திருப்பவர்கள் கொள்முதலிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறார் கள் என்று அறிவித்திருக்கிறது. இந்த விதிவிலக்கினால் சுமார் 13 லட்சம் பட்டா உரிமையுள்ளவர்கள் பலன் அடைகிறார்கள் என்றால் அது சாதாரண காரியம் அல்ல. அவர்கள் இன்று கொள்முதல் என்ற அச்ச உணர்வு நீங்கியவர்களாக இருந்துவருகிறார்கள்.

இரண்டாவதாக அரிசி போடுகின்ற வகையில் மக்களுக்குத் தரமான அரிசி கிடைக்க வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. முன்பெல்லாம் ரேஷன் கடைகளில் ஊறல் மிகுந்த, கருமை நிறமுள்ள, கெட்ட வாசனையுள்ள அரிசியாக இருந்து வந்தது. ரேஷன் அரிசி பார்ப்பதற்கே விகாரமாக இருந்தது. இன்றைய தினம் ரேஷன் கடைகளிலும், மற்ற இடங்களிலும் தரமான நல்ல அரிசி கிடைத்து வருவது கண்டு மக்கள் மகிழ்ச்சியடை கிறார்கள். அரசாங்க அதிகாரிகளும் அவ்வப்போது தக்க நடவடிக்கைகள்

எடுத்து; ரேஷன் கடைகளில் தரமான அரிசி கிடைக்க வழி செய்திருக்கிறார்கள்.

பருப்பு தானியங்கள் விஷயத்திலே மத்திய அரசு பாரபட்சம் காட்டுகிறார்கள் என்று சொல்லாமல் இருக்க முடியவில்லை. பருப்பு, பயறு போன்ற தானியங்கள் குறைந்த அளவிலேதான் இந்த மாநிலத்தில் விளைகின்றன. வெளிமாநிலத்திலிருந்து தான் வந்துகொண்டிருந்தன. மத்திய சர்க்கார் தக்க நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளாத காரணத்தினால் பருப்பு போன்ற தானியங்கள் வருவது தடைப்பட்டு பற்றுக்குறை நிலைமை இருந்து வருகிறது.

அடுத்தபடியாக சர்க்கரை விலையை நாம் குறைக்க வேண்டுமென்று சொல்லும்போது மத்திய ஆட்சியிலே இருக்கின்ற திரு. ஜெகஜீவன்ராம் அவர்கள் சர்க்கரை விலையைக் கூட்டியது, ஒரு பித்தலாட்டத் தனத்தையே எடுத்துக்காட்டுகிறது. (மணியடிக்கப்பட்டது.)

**திரு. டி. டி. எஸ். திப்பையா :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த 46-வது மானியக் கோரிக்கையின் மீது ஒருசில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன். இதுவரையிலே பல உறுப்பினர்கள் கலந்து கொண்டு அவர வர்களுடைய கருத்துக்களைத் தெரிவித்தார்கள். காலம் குறைவாக இருப்பதன் காரணமாக என்னுடைய தொகுதியைப்பற்றி சுருக்கமாகவே என்னுடைய கருத்துக்களைக் கூறி உரையை முடித்துக்கொள்கிறேன்.

கனம் அமைச்சர் அவர்கள், "ஒரு ஏக்கருக்கு கீழே நிலம் வைத்திருக்கும் விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்யப்படுவதில்லை. ஒரு ஏக்கருக்கு மேலே நிலம் வைத்திருக்கும் விவசாயிகளிடம் தங்களுடைய தேவைபோக பாக்கி நெல்லை கொள்முதல் செய்யும்" என்று குறிப்பிட்டுள்ளதற்கு நன்றி செலுத்திக்கொள்கிறேன்.

எனது தொகுதியான மேட்டுப்பாளையம் தொகுதியிலுள்ள விவசாயிகள் இந்த ஆண்டிலே அனுபவித்த கஷ்டத்தை இங்கே சொல்லாமல் இருக்க முடியவில்லை. மேட்டுப்பாளையம் மிகவும் மலையையொட்டிய பகுதி. அந்தப் பகுதியில் துஷ்ட மிருகங்கள் அதிகம் இருக்கின்றன. அவை அடிக்கடி வந்து விவசாயத்தைப் பாழ்செய்து விடுகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். விவசாயி பாடுபட்டு, கஷ்டப்பட்டு விவசாயம் செய்து, பயிர் செய்து, பயிர்கள் வளர்ந்துவரும்போது, துஷ்ட மிருகங்கள் வந்து அழித்து விடுகின்றன. இதன் காரணமாக அங்குள்ள விவசாயிகள் பல கஷ்டங்களை அனுபவித்து வருகிறார்கள்.

குறிப்பாக சொல்லப்போனால் யானைகள் நிறைந்த காடு, பத்திரிகையில் அடிக்கடி பார்த்து இருக்கக்கூடும். அடுத்து அடுத்து அந்தப் பகுதியில் யானைகள் மக்களுக்குத் தொல்லை கொடுத்து வருகின்றன. உயிர்ச்சேதங்களும் ஏற்பட்டு வருகின்றன. அந்தப் பகுதியில் உள்ள விவசாயிகள் அண்மையில் நெல் விவசாயம் செய்திருக்கிறார்கள். என்றாலும் சிலருக்கு விதைக்கக் கூட நெல் இல்லாத அளவில் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. சாகுபடிக்குப் போதுமான தண்ணீர் இல்லை. அதோடு செளக்கிபோஸ்டில் உள்ள அதிகாரிகள் ஏக்கருக்கு 3 மூட்டை, 4 மூட்டை நெல்லைக் கொடுத்து விட்டுத்தான் வீட்டுக்கு தானியம் எடுத்துப்போக அனுமதிக்கிறார்கள். விவசாயிகள் இவ்வாண்டு மிகவும் நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள் என்கிற புகார் வந்துகொண்டே இருக்கிறது. ஊட்டியில் இருக்கக் கூடிய நண்பர்களுக்குத் தெரியும். அங்கே தண்ணீரே இல்லை. அங்கே தண்ணீர் இல்லை என்றால் இங்கே மழையே இல்லை என்று அர்த்தம். எங்கள் பகுதியில் குடிப்பதற்குக் கூடத் தண்ணீர் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே தயவு செய்து இவ்வருடம் கொள்முதலுக்கு நிர்ப்பந்தப்படுத்தி விட்டார்கள் இன்னும் சில பகுதிகள் வாங்கவில்லை. அந்தப் பகுதி எல்லாவற்றுக்கும் விதிவிலக்கு அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதே சமயத்தில் ஒரு ஏக்கர் வரை என்று இருப்பதை மாற்றி 3 ஏக்கர் வரை நிலம் உள்ளவர்களிடத்தில் வசூலிக்காமல், அதற்கு மேல் நிலம் உள்ளவர்களிடத்தில் வசூலிப்பது நலமாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இரண்டு மாதங்களுக்கு முன்பு கூட அந்தப் பகுதி மக்கள்



உடனடியாகத் தங்களுக்குக் குடிதண்ணீருக்காவது கிணறுகள் வெட்டித்தர வேண்டுமென்று கலெக்டரிடம் சென்று கேட்டிருக்கிறார்கள். அவர்களும்கூட அரசாங்கத்திற்குத் தெரிவிப்பதாகச் சொன்னார்கள். ஆகவே தயவுசெய்து குடிதண்ணீருக்காகவாவது உடனடியாக அந்தப் பகுதியில் கிணறுகள் வெட்டித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து அந்தப் பகுதியில்—மேட்டுப்பாளையம் போன்ற இடங்களில் உள்ள தொழிலாளர்களுக்கு 1,000 கிராம்தான் தானியம் கொடுக்கப்படுகிறது. அதை 1,400 கிராமாக உயர்த்திக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அந்தப் பகுதியில் உள்ள பஞ்சாயத்துகள், டவுன்கள் முதலியவற்றில் அரிசி கொடுக்காவிட்டாலும் ராகி, சோளம், கம்பு போன்ற மற்ற தானியங்களையாவது கண்டிப்பாகக் கொடுக்க வேண்டும். கொடுக்காவிட்டால் நிலைமை மிக மோசமாகிவிடும். அந்தப் பகுதியில் எந்த தானியங்களுமே இல்லாத பஞ்ச நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இந்தப் பகுதியையும் பல்லடம் தொகுதியைப் போல பஞ்சப் பிரதேசமாகக் கருதி ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்:** தலைவர் அவர்களே, உணவு இலாக்கா மானியக் கோரிக்கையின் மீது நான் என்னுடைய சில அபிப்பிராயங்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். இதில் இரண்டுவிதமான எண்ணங்கள் இருக்கின்றன. ஒரு பக்கம் விலை அதிகமாக்கப்படவேண்டும் என்று சொல்லப்படுகிறது. சர்க்கார் தாப்பில் விலையைக் கூட்டினால் பொதுமக்கள் மிகவும் பாதிக்கப்படுவார்கள், ஆகவே விலையைக் கூட்டுவது சரியல்ல என்று சொல்லப்படுகிறது. இதற்கிடையில் நாம் இன்றைக்குப் பரிசீலிக்க வேண்டியது ஒன்று தான். வாங்கிச் சாப்பிடுகிறவர்களுக்கு இப்போதுள்ள விலையைக் கூட்டுவதற்கு முயற்சிக்கக் கூடாது. அதே சமயம் உற்பத்தி செய்கிறவர்களுக்கு இப்போதுள்ள விலையை எப்படிச் சற்று அதிகப்படுத்த முடியும் என்பது தான். நான் நிச்சயமாகச் சொல்வேன். இன்றைக்குச் நிர்வாகச் செலவு மிக அதிகமாக இருக்கிறது. ஒரு குவிண்டாலுக்கு ஒரு ரூபாய் என்று கொடுக்கப்படுகிறது. குறிப்பாக

*Government and wholesale issue prices of fine varieties of rice.—*

| | | RS. | P |
|---|---|---|---|
| 1 | Government issue price .. .. | 85 | 08 |
| 2 | Transit loss .. .. .. .. | 0 | 21 |
| 3 | Profit to wholesalers .. .. | 1 | 00 |
| 4 | Transport and Handling .. .. | 0 | 70 |
| 5 | Transit loss .. .. .. .. | 0 | 43 |
| 6 | Profit to retailer at 3 per cent .. | 2 | 58 |

Government issue price includes Re. 1 per quintal as administrative surcharge என்ற விதத்தில் இருக்கிறது. ஆக 13 ரூபாயில் இருந்து 18 ரூபாய் வரை வித்தியாசம் இருக்கிறது. இவ்வளவு அதிகமான நிர்வாகச் செலவு அனாவசியம் என்று சொல்கிறேன். இந்தச் செலவு குறைவதற்கான முறையை மேற்கொண்டாலேயே உற்பத்தி யாளர்களுக்கு இன்னும் கொஞ்சம் கூட்டிக்கொடுத்து அவர்களுக்கு ஊக்கத்தை அளிக்கலாம். உதாரணமாக ஆந்திராவில் என்று நினைக்கிறேன் சாதாரண ஹல்லர்களை வைத்து, விவசாயிகளே காட்டேஜ் இண்டஸ்ட்ரி போல நெல்லை அரிசியாகக் கொடுத்து விடுவதற்கு வகை செய்தால் இன்றைக்கு மில்டிமென்களுக்கு நாம் கொடுக்கக் கூடிய பணத்தை உற்பத்தி யாளர்களுக்கே கொடுக்க வாய்ப்பு ஏற்படும். தன் களத்திலேயே வைத்து, தன் நிலத்திலேயே வைத்து—ஐந்து ஹார்ஸ் பவர், மூன்று ஹார்ஸ் பவர் ஹல்லர்களை வைத்து—அவர்கள் அரிசியாகவே கொடுப்பதற்கு நாம் ஊக்கம் அளிக்க வேண்டும். நான் பலமுறை இந்தச் சட்டசபையில் சொல்லியிருக்கிறேன். இதை ஏன் காட்டேஜ் இண்டஸ்ரிட் போல நடத்தக்கூடாது ? இன்றைக்கு 2 மூட்டைக்கு $2\frac{1}{2}$ ரூபாய் நடுவில் உள்ளவர்களுக்கு போகிறது.

இது விவசாயிகளுக்கே கிடைக்கும்படியாகச் செய்தாலேயே ஓரளவு விவசாயிகளுக்கு ஊக்கம் அளித்ததாக ஆகும். ஆக இப்படி எதாவதொரு வகையில் நிர்வாகச் செலவைக் குறைத்து, உற்பத்தியாளர்களுக்கு இன்னும் கொஞ்சம் விலையைக் கூட்டி அவர்களுக்கு ஊக்கத்தை அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். டி. ஐ. ஆர். படி 'Madras Paddy and Rice (Declaration and Requisitioning of Stock) Order, 1967, என்று ஒரு ஆர்டர் வைத்திருக்கிறார்கள். அதில் வருந்தக் கூடிய விஷயம் என்னவென்றால் ஒரு ஷெட்யூல் போட்டிருக்கிறார்கள். In clause (2) of rule 4 in regard to the determination of reasonable requirements like personal requirement seed and agricultural wages no guide lines have been laid down. சட்டத்தில் உள்ள 2-வது ஷரத்தை ஒட்டி ஷெட்யூலும் போட்டிருக்க வேண்டாமா? நானும் கிட்டத்தட்ட 3 மாதங்களுக்கு முன்பு ஒரு யோசனையாக எழுதி அனுப்பினேன். இது வரை கவனிக்கப்படவில்லை. 'As regards reasonable requirements', no guide lines have been laid down as to the quantum of allowance which varies according to the local conditions என்பதற்கு ஷெட்யூலில் வழியில்லை. எந்த வாசகமும் கிடையாது. இப்போது என்ன செய்கிறார்கள் என்றால் ஆங்காங்கு இருக்கிற தாசில்தார்கள் தயவு, கணக்குப்பிள்ளை தயவு இருந்தால் மனம்போல மாற்றுகிறார்கள். இது வருந்த வேண்டிய விஷயம். அதில் ஒரு கோட் லைனாவது கொடுக்கவேண்டும். உற்பத்தி செய்கிறவர்களுக்கு அப்போது ஒருவிதமான வருத்தமும் இருக்காது.

இன்னும் ஒன்று. மிகவும் வருந்த வேண்டிய விஷயம். உற்பத்தியாளர்கள் கணக்குப் பிள்ளையிடம் அறுவடைச் சீட்டு வாங்கித் தான் அறுக்க வேண்டும் என்று வைத்திருப்பது. தன் சொந்த நிலத்தை அறுவடை செய்யவேண்டுமென்றால் கணக்குப் பிள்ளையிடம் போய் சீட்டு வாங்கவேண்டும். அதில் கூடப் பாருங்கள். தாசில்தார் பர்மிட் இல்லாமல் சர்க்காருக்கு நெல் அளக்காமல், களத்தில் இருந்து நெல்லை அப்புறப் படுத்தக்கூடாது, சர்க்காருக்கு நெல்லை அளந்தவுடன் இந்தச் சீட்டை கிராமாதிகாரியிடம் ஒப்படைக்கவேண்டும் இப்படி எழுதப்பட்டிருக்கிறது. அறுவடைச் சீட்டு வாங்கித் தான் உற்பத்தியாளர்கள் அறுக்கவேண்டும் என்று கட்டுப்படுத்தப்பட்டால் உற்பத்தி பெருகுமா? விவசாயம் செய்வதில் அவர்களுக்கு ஊக்கம் வருமா? இது உண்மையான சீட்டாக இருந்தால் எதற்காகத் திரும்பவும் இந்தச் சீட்டை அவர்களிடமே ஒப்படைக்க வேண்டும்?

பி. ப. 1·00. போகஸ் ஃபேமலி கார்டுகளைக் கண்டுபிடிப்பதற்காக இன்ஸ்பெக்டர்கள் போட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். அதற்கு தாசில்தாரிடம் வேலைசெய்யக் கூடிய லோயர் டிவிஷன் கிளார்க்குகளைத்தான் போட்டிருக்கிறார்கள். அவர்களைப் போட்டிருப்பதால் பல இடங்களில் தப்பிதம் ஏற்படுகிறது. நினைத்தால் போகஸ் கார்டு வாங்கலாம், தாசில்தார் தயவு இருந்தால் வாங்கலாம் என்ற நிலைமை இருக்கிறது. முனிசிபாலிடியை எடுத்துக்கொண்டால் ரிவிஷன் ஆபீசர் என்று தனியாக இருக்கிறார்கள். அப்படி இருப்பதால் தான் அவர்கள் ரிவைஸ் பண்ணமுடிகிறது. அதேமாதிரி இந்த இன்ஸ்பெக்ஷன் செய்யக் கூடியவர்களை அடுத்த இலாகாவிலிருந்து போட்டால் போகஸ் கார்டுகள் வருவதற்கு வழியிராது என்று சொல்லிக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

*திரு. ஜெ. பெள்ளி கௌடர்: மாண்புமிகு உணவு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து வரவேற்று இரண்டொரு வார்த்தைகள் பேச ஆசைப்படுகிறேன். புதிய ஆட்சி பொறுப்பேற்றபொழுது இருந்த நிலை, வெளியில் எங்கே பார்த்தாலும் மக்கள் கூட்டம் கூட்டமாகவும், சாரை சாரையாகவும் நின்றுகொண்டு உணவு பெறுவதற்காக, அரிசி வாங்குவதற்காக வெயிலிலே பட்ட அவஸ்தைகளையும், தாய்மார்கள் எல்லாம் க்யூவிலே நின்று



கொண்டு அதன்காரணமாக எத்தனையோ பேர் மாண்டு மடிந்த முடிவுகளையும், இந்த அரசு பொறுப்பேற்ற நிலையில் இருந்த நிலையையும், எண்ணிப் பார்த்தால் ஆட்சிக்கு வந்தபிறகு எவ்வளவு திறமையாக நல்ல முறையில் குறுகிய காலத்தில் அந்த நிலைமைகளையெல்லாம் சமாளித்தார்கள் என்பதை நினைக்கும்பொழுது உண்மையிலேயே நான் அதற்காகப் பாராட்டுகிறேன், பூரிப்படைகிறேன்.

முன்பு பேசிய நண்பர்கள் எல்லாம் இந்த அரசைப்பற்றி இந்தக் கோரிக்கையைப்பற்றிப் பேசுகின்றபொழுது, இந்த அரசு எவ்வளவு திறமையாகப் பணியாற்றி யிருந்தாலும்கூட, இந்த அரசைப்பற்றிக் குறை சொல்ல வேண்டுமென்ற ஒரே நோக்கத்தோடுதான் பேசினார்கள். அவர்கள் குறைகளைச் சொல்லும்பொழுது கடந்த இருபது ஆண்டுக்காலமாக ஆட்சியின் நிலைமையைச் சீராக்க முடியாமல் ஏற்பட்டுவிட்ட நிலைமையைப் பார்க்கும் பொழுது, குறுகிய ஒரு ஆண்டுக் காலத்திற்குள் முன்னேற்றக் கழக அரசானது என்ன என்ன சாதனைகளைப் புரிந்திருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். அவர்கள் இருபது ஆண்டுக் காலத்தில் சாதித்த சாதனைகளையும் முன்னேற்றக் கழகம் குறுகிய ஒரு ஆண்டுக் காலத்திற்குள் சாதித்த நன்மைகளையும் ஒப்பிட்டுப் பார்த்தால், அவற்றை வகுத்துப் பார்த்தால் தான் விடை தெரியும். அப்படிப்பட்ட கணக்குகளை அவர்கள் சரியாகப் போட்டுப் பார்க்காமல் எடுத்ததற்கு எல்லாம் குறை கூறவேண்டுமென்று நினைத்துக் குறை கூறுகிறார்கள். இந்த அரசிலே குறைகள் இல்லாமல் இல்லை. உலக நாடுகளை எடுத்துக் கொண்டாலும், அண்டை மாநிலங்களை எடுத்துக் கொண்டாலும் குறைகள் இல்லை என்று சொல்லிவிடமுடியாது. அப்படிப்பட்ட குறைகளைக் களைவதற்கு தமிழக அமைச்சர்கள் பெரும் முயற்சியெடுத்துக் கொண்டிருக்கிற நேரத்தில் குறுகிய காலத்தில் ஒரு ஆண்டுக்குள்ளாக அவற்றையெல்லாம் முடித்துவிட முடியுமா? எந்த ஆட்சியாக இருந்தாலும் அதற்கு ஒரு குறிப்பிட்ட கால அளவு தேவைப் படுகிறது. இங்கிருந்து கோவைக்குப் செல்ல வேண்டுமென்றால் அதற்கு ஒரு கால அளவு தேவைப்படுகிறது. அந்தக் காலத்தில்தான் கோவையை அடையமுடியும். அப்படியில்லாமல் இங்கிருந்து செண்ட்ரல் ஸ்டேஷன் போவதற்குள்ளாக கோவைக்குப் போனாயா? கோவைக்குப் போனாயா? என்று கேட்டால் அதில் பொருள் இல்லை.

இந்த அரசு நாட்டு மக்களின் கண்ணீரைத் துடைக்கக்கூடிய வகையில் அதற்கு ஒரு கால அளவு தேவை என்பதைப் பொதுமக்கள் உணர்ந்து இருக்கிறார்கள். உணவுப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் நாம் மத்திய அரசை நம்பிக்கொண்டிருப்பதில் பயனில்லை. அது காங்கிரஸ் அரசாக இருக்கிற காரணத்தினால் இந்த அரசுக்கு என்ன இக்கட்டு வரும் என்று எதிர்ப்பார்த்துக்கொண்டிருக்கிறது. ஆகவே மத்திய அரசு புறக்கணித்தாலும் புறக்கணிக்கலாம். சொந்தக் கால்களில் நிற்கக் கூடிய நிலை உள்ளவர்களாக நாம் இருக்கிறோம். இந்த மாநிலத்தில் விவசாயத்திற்குப் பயன்படுகிற நிலங்கள் எவ்வளவு இருக்கின்றன என்பதைப் பார்த்து அவற்றை உடனே சர்வே செய்து அவற்றையெல்லாம் விவசாயத்திற்குவிட்டு நல்ல முறையில் உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு, இந்த மன்றத்திலே சமீபத்திலே என்னுடைய தொகுதியிலே நடைபெற்ற அரவங்காட்டில் நடைபெற்ற துப்பாக்கிச் சூடு சம்பந்தமாக நீதி விசாரணைக்கு ஏற்பாடு செய்வதற்காக தமிழக அரசிற்கு நன்றியைக் கூறிக்கொண்டு, அந்த சம்பவத்தில் உயிரிழந்தவர்களுக்கும் அன்னார் குடும்பத்தினருக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் நான் எனக்கு ஒதுக்கப்பட்ட நேரத்தில் மௌனமாக இருக்க ஒரு நிமிடத்தை எடுத்துக் கொண்டு அமர்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி: இப்பொழுது இந்த உணவு மானியக் கோரிக்கையின்மீது விவாதம் நடந்துகொண்டிருக்கிறது. இந்தச் சமயத்திலே அந்த துறையைச் சேர்ந்த அமைச்சர் அவர்கள் இந்த அவையிலே இல்லை. எங்களுடைய கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு வசதியாக அமைச்சர் அவர்கள் இல்லை. இருக்கிற அமைச்சர் அவற்றை சொல்வார் என்றாலும்

[திரு. க. இராமமூர்த்தி] [1968 மார்ச் 8

சம்பந்தப்பட்ட துறையின் அமைச்சர் அருகிலே இருந்து கவனித்தால்தான் நன்றாக இருக்கும். இதை தலைவர் அவர்கள் கவனித்தால் நன்றாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** அமைச்சர் அவர்கள் இருக்க வேண்டுமென்ற முறையிலேதான் இவ்வளவு நேரம் அமைதியாக கேட்டுக் கொண்டிருந்தார்கள் என்பதை உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். இடையிலே வெளியே போகவேண்டிய தவிர்க்க முடியாத சில காரியங்கள் இருக்கின்றன என்பதை அவர்கள் உணர வேண்டும். விளக்கம் தேவையானால் விளக்கம் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறோம். அவர்கள் சொல்கின்ற குறிப்புக்களைக் குறித்து வைத்துக்கொண்டு அமைச்சர் அவர்
பி. ப. 1·00. களிடம் கொடுத்து தக்க சமாதானம் சொல்வதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பெ. மலைச்சாமி) :** அந்தத் துறை சம்பந்தப்பட்ட அமைச்சர் இல்லாவிட்டாலும், ஒரு அமைச்சர் இருந்தாலும் போதும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**DR. H, V. HANDE :** Sir, at the very outset, Iwish to thank my distinguished friend represting Panruti, Thiru Ramachandran, for raising one or two points with regard to our Party's food policy. I wish to clearly state what our Party's attitude is towards the merchants. Just like there are good and bad human beings, there are good merchants as well as bad merchants. Now the question that we have to address ourselves is how best can we prevent the bad merchants from exploiting the public. Is it to be done by pursuing the Congress policy which is now pursued by the D.M.K. or by pursuing a different policy The permit-licence quota system as has been stated by my leader, instead of giving protection to the people and preventing the merchants from exploiting them, actually goads them to exploit the people and does not give any protection to the people. Insted, this gives protection to these bad merchants. Our view is that these bad merchants can be put in proper order not by this antiquated permit licence quota system which is not followed in any part of the Globe except perhaps in India, but by introducing a modern method namely the providing of a permanent spirit of competition. By this method, we can cut at the very root of corruption and that is our policy.

Now, within the brief time that has been allotted to me, I have to cover many points. There is an old adage in Tamil கல்யாணம் பண்ணிப் பார்; வீட்டைக் கட்டிப்பார்! After listening to the brilliant analysis of the food policy by my distinguished erstwhile friend who continues to be my friend, I mean the Hon. Minister for Food, Thiru Mathialagan, I have to ad·lone more thing to it. 'ஆட்சியை நடத்திப்பார்' This is meant for my Congress brothers and others. Therefore, when we actually take over the reins of the administration there are a number of pitfalls to be encountered and we as Opposition Members might not havehad an opportunity to know it now.

Now I shall come to the next point. The Government have to give subsidy at the rate of Rs. 250 per tonne. If 10 lakhs of tonnes have to be subsidised, it would work out to Rs. 25 crores at the rate



1968 மார்ச் 8] [Dr. H. V. Hande]

of Rs. 250 per tonne. So, the root of the problem is not the availability of foodgrains but it is the problem of the availability of funds. Therefore the argument of the Hon. Minister that it is due to the lack of enough stock of foodgrains that they are not able to extend the one-rupee-a-measure rice scheme is untenable. (At this stage the Hon. Thiru K. A. Mathialagan entered the House.) I am happy that the Hon. Minister for Food has now come to reply to the points raised by me . It is not because we do not have enough rice that we are not able to extend, but it is mainly because we do not have enough funds.

I come to the next point. The rupee-a-measure scheme is in force in the statutory ration areas. The next step is to extend it to the informal ration areas. Then our Congress brothers will ask why don't you extend it to the villages and allow a little more to the farmers ? Intense propaganda will be carried on. I wish that the Ministry does not succumb to such a propaganda.

I wish to point out the case of a distinguished person Mr. T.A. Pai, former Chairman of the Food Corporation of India. As long as he was in the Food Corporation, he spoke in a particular manner except for a sudden outburst of feeling in the Loyola College for which he was taken to task by the Ministers and M.Ps. After he resigned he came out with a statement that the whole country should be treated as one zone. This shows how we speak in one way when we are in one position and how we thoroughly change when we are out of that position.

The Government have procured 8·5 lakhs tonnes. They have not procured very much higher than last year. In spite of all the noise that it made, the increase is only 1·3 lakhs tonnes. If we distribute all these 8·5 lakhs tonnes, what will happen ? Why are we not able to do it?

The argument of the Leader of the Opposition is that the procurement price should be raised. That is the slogan shouted by many of the Members. There should be some method in madness. They cannot ask for both extension of rupee-a-measure scheme to all places and increase in the procurement price. There is a cut motion by an Hon. Member belonging to the Congress Party to urge the extension of the scheme to all places and there is another cut motion by an Hon. Member belonging to the same party to urge an increase in the procurement price. Both are incompatible. Our Hon. Minister for Food Mr. Mathialagan is a better student of Mr. Jagjivan Ram. The Union Food Minister completely endorses the policy laid down by the Food Minister of Madras. When Mr. Jagjivanram was in Madras recently, he was interviewed by the Press. He made a very interesting statement, a statement which annoyed me much more than it would have annoyed Mr. P. G. Karuthiruman. When told by Pressman that Mr. P. G. Karuthiruman wanted the procurement price to be increased, Mr. Jagjivan Ram said 'No '. The Pressmen then said that even the Leader of the All-India Congress Party felt that way. I have got a copy of the

cutting from the 'The Hindu' relating to that interview. If I were to read it, my friend the Leader of the Opposition will say that I am a cutting master. The reply given by Mr. Jagjivan Ram was "Perhaps Mr. Kamaraj does not know the mechanism by which the prices are fixed". That statement annoyed me. The opinion of Mr. Kamaraj, who is one of the greatest Congressman, was so callously and carelessly flouted by Mr. Jagjivan Ram. My submission is that Mr. Jagjivan Ram and our State Food Minister must review the procurement policy.

We have got three types of areas—statutory ration areas, informal ration areas and non-ration areas. Excluding the total quantity required for distribution in the statutory ration areas and in the informal ration areas, how are we going to distribute the balance of stock? This is a very important point and I want every Member to carefully consider it. How are the people who are outside the statutory and informal ration areas going to get food with a number of obstructions to movement from village to village and taluk to taluk? We are preventing free movement of rice. How do we allow food to move from one non-ration area to another non-ration area? By what agency can we transfer the limited quantity of rice from one non-ration area to another non-ration area? It is here that my revered leader Rajaji says - 'Don't prevent a poor man parting with his rice to another poor man. Don't divide the country into thousands of bits and don't make each bit a zone'. The Government procure a certain quantity and distribute it. But what is the point in the Government preventing the movement of rice not procured by them? What right has the Government to prevent the rice which the Government is not prepared to procure to go from village to village?

Lastly I must say how irksome it is for us to see the behaviour of a few States with regard to Bengalgram. The other day the Food Minister informed the House about the behaviour of a few States in not parting with Bengalgram in which this State is really in deficit. I would like the Minister for Food and the Chief Minister to address the other Chief Ministers and see that Bengalgram is allowed to be imported without any restriction.

I make this very impassioned plea. Let this State at least be a model State. Let this whole State be one zone. Let us plug the loopholes in the border areas where there is scope for smuggling. Let us make this State one zone. I can definitely assure this House that if this is done, there will be much more free movement of rice. This may not get any support from the officers, because officers will be crippled with the terrible loss of power. I request the Food Minister to be bold and give a lead to the entire South India. Thank you, Sir.

**திரு. சி. கே. சின்னராஜி :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள மானியக் கோரிக்கையை ஆதரித்து சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். குறிப்பாக, நெல், அரிசி கொள் முதலில் தஞ்சாவூருக்கு அடுத்தபடியாக வட ஆற்காடு மாவட்டத்தில் இருந்துதான் அதிகமான அளவுக்குக் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது



என்பது புள்ளிவிவரத்தோடு தெரிவிக்கப்பட்டிருக்கிறது. வட ஆற்காடு ஜில்லாவில் திருப்பத்தூர் தாலூகா, வாணியம்பாடி, ஆம்பூர், குடியாத்தம், போன்ற பகுதிகள் பற்றுக்குறைப் பகுதிகளாக இருக்கிறபடியால் அந்தப் பகுதிகளிலுள்ள மக்களுக்குக் குடும்பக் கார்டு கொடுப்பதோடு, நெல் கொள்முதல் செய்வதையும் நிறுத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக, செங்கம், திருவண்ணாமலை, போளூர், ஆரணி போன்ற இடங்களில் இருந்துதான் திருப்பத்தூர், வாணியம்பாடி, ஆம்பூர், குடியாத்தம் போன்ற பகுதிகளுக்கு நெல், அரிசி வர வேண்டியிருக்கிறது. இந்த நிலையை உணவு அமைச்சர் அவர்கள் சீராகக் கவனித்து அந்தப் பகுதிகளுக்குக் குடும்பக் கார்டுகளைக் கொண்டு வருவதோடு அந்தப் பகுதி களில் ப்ரொக்யூர்மெண்டையும் நிறுத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நெல், அரிசி கொண்டுவர ஜில்லா சப்ளை ஆபீசரின் பெர்மிட் மூலம் தான் கொண்டு வர வேண்டியிருக்கிறது. இதனால் விலையும் சிறிது உயரும் படி இருக்கிறது. ஆகவே ஜில்லாவிற்குள் நெல், அரிசி போக்குவரத்தை தடை செய்வதை உடனடியாக ரத்து செய்து ஜில்லாவிற்குள் எங்கு வேண்டுமானாலும் லைசென்ஸ் உள்ள வியாபாரிகள் எடுத்துச் செல்லலாம் என்ற உத்தரவையிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக செங்கம், திருவண்ணாமலையிலிருந்து நெல், அரிசி இவைகளைக் கொண்டுவர வேலூரைச் சுற்றவேண்டியிருக்கிறது. செங்கத்திலிருந்து திருப்பத்தூர் முப்பது மைல் தொலைவில் இருக்கிறது. மத்தியில் சிங்காரம் பேட்டை, தள்ளம்பாடி என்று சேலத்தில் இருப்பதால் அந்த வழி வரக்கூடாது என்று உத்தரவிட்டு வேலூரை சுற்ற வேண்டியிருக்கிறது. ஆகவே நூறு மைல்கள் அதிகமாக ஆகிறது. அமைச்சர் அவர்கள் இதைக் கவனித்து வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். உணவு அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு உணவுப் பண்டங்கள் கிடைக்கிற நிலை சீராகியிருக்கிறது என்பதற்காக அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறேன். இந்த ஆண்டு பருவ மழை தவறியிருந்தும் கூட அதிகமாக எட்டு லட்சம் டன் அளவிற்கு கொள் முதல் செய்திருக்கிறார்கள். காரணம், கடந்த வருடங்களில், கேரளா, கர்நாடகம் போன்ற இடங்களுக்கு கள்ளத்தனமாக அரிசி, நெல் கொண்டு போகப்பட்டதை இப்போது தடுத்து நிறுத்தி மக்களுக்கு சீராக உணவுப் பண்டங்கள் கிடைத்து வருவதற்காக அமைச்சர் அவர்களுக்கு மீண்டும் நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறேன். நான் கூறிய குறைகளை அமைச்சர் அவர்கள் நீக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

***திரு. ஏ. அ. சுப்பராஜா:** தலைவர் அவர்களே, முன்பு பேசிய சக அங்கத் தினர்கள் எல்லாம் கொள்கை பற்றிப் பேசினார்கள். கொள் முதல் செய்வதிலிருந்து அதை விநியோகம் செய்து வருவது வரையில் உள்ள ஒரு சில நடைமுறைச் சிக்கல்களையும், குறைகளையும் பற்றி நான் ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். பொதுவாக உணவு தானியத் தட்டுப்பாடு இருக்கக்கூடிய நிலையிலும், நம் உற்பத்தி நம் மாநிலத்திற்குப் போதுமான அளவில் இல்லாததாலும் இப்படிப்பட்ட நிலையில் தனியார்களை நம்பி வியாபாரம் செய்வதா என்பது பற்றி சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். ப்ரொக்யூர்மெண்ட் ஏஜெண்ட்கள், ஹோல்சேலர்கள், மில்லேர்ஸ், ரீட்டேலர்ஸ் என்று நான்கு விதமாக இருக்கின்றனர். யார் ஹோல்சேல் லைசென்ஸ் வைத்திருக்கிறார்களோ, யார் ரைஸ் மில் வைத்திருக்கிறார்களோ அவர்களைப் ப்ரொக்யூர்மெண்ட் ஏஜெண்டுகளாகப் போடுகிறார்கள். அதனால் தனியார்கள் அதில் அதிக மாக அங்கம் வகிக்கிறார்கள். அவர்கள் ப்ரொக்யூர் செய்கிற இடங்களில் போட்டி போட்டுக்கொண்டு அதிகப் பணம் கொடுத்து கூட்டுறவுத் துறையில் உள்ளவர்கள் வாங்கமுடியாத விதத்தில் செய்துவிடுகிறார்கள். அதனால் விவசாயிகளுக்கு விலை சற்று அதிகமாகக் கிடைத்தாலும் நான் சொல்வது என்னவென்றால் விவசாயிகளுக்கு அதற்குப் பதில் இன்ஸென்டிவ் போனஸாகக் கொடுப்பது நல்லது. நெல்லை தனியார்கள் டிரான்ஸ்போர்ட்டில்

எடுத்துச் செல்கிறார்கள். அப்படி எடுத்துச் செல்லும்போது ஒரு பெர்மிட்டை வைத்துக் கொண்டே எவ்வளவோ எடுத்துச் செல்கிறார்கள். அவர்கள் ஹல்லிங் செய்கிறார்கள். அவுட்டேர்னில் அவர்களுக்குக் கிடைக்கும் லாபம் சர்க்காருக்குக் கூட கிடைக்காது. கட்டைச் சம்பாவை எடுத்துக் கொண்டால் 70 சதவீதம் கிடைக்கிறது. நம் சர்க்கார் அவர்களுக்கு கொடுத்திருப்பது 67 சதவீதம். இதில் இரண்டு மூட்டை அரிசி அவர்களுக்குத் தாராளமாகக் கிடைக்கிறது. நெல்லைக் கொடுத்து அரைத்துக் கொடுக்கச் சொன்னால் தண்ணீரில் ஊறவைத்து தடிப்பாகக் கொடுக்கிறார்கள். ராஜபாளையத்தில் விநியோகம் செய்பவர்கள் எல்லாம், டி.எஸ்.ஓ. இண்டெண்ட் போட்டுக் கொடுத்து அதை எடுத்துக் கொண்டு அவர்களிடம் சென்றால் அவர்கள் அரிசி இல்லை என்று சொல்லுகிறார்கள். இண்டெண்டை எடுத்துச் செல்லும் போது கடைசி நேரத்தில் அவர்கள் கெட்ட அரிசியைக் காட்டி ஊறியுள்ள அரிசியைக் காட்டி இதுதான் இருக்கிறது, இல்லாவிட்டால் கிடையாது என்று சொல்லுகிறார்கள். கூட்டுறவு சங்கக் கடைகளில் எல்லோரும் காத்து நிற்கிறார்கள். இல்லை என்றால் பாவிகள் அவர்கள் ஊறவைத்த அரிசியையாவது போட்டார்கள், அது கூட இப்போது இல்லையா என்று கேட்கிறார்கள். அதிகாரியிடம் சென்று சொன்னால் இருக்கிற அரிசியைத்தான் எடுத்துத் தீரவேண்டும் வேறு வழியில்லை என்று சொல்லிவிடுகிறார்கள். ஆகவே, நான் சர்க்காரைக் கேட்டுக்கொள்வது என்னவென்றால் சர்க்கார் ஒரு உத்தரவு போடவேண்டும். நெல்லை புழுங்கலாக வைத்து ஒரு வாரத்திற்கு முன்னால் புழுங்க வைத்து ஸ்டாக் செய்து வைத்திருக்கவேண்டுமென்று அப்போது மோசமான அரிசியைக் கொடுக்கக்கூடிய நிலை ஏற்படாது. தனியார் துறையில் உள்ளவர்களை நம்பாமல் ஆங்காங்கு ஜில்லாவிற்கு ஒரு மாடர்ன் ரைஸ் மில் வைக்க வேண்டும். கட்டைச் சம்பாவிற்கு 67 சதவீதம் கொடுக்கிறார்கள். தஞ்சை மாடர்ன் ரைஸ் மில் 71 சதவீதம் கிடைக்கிறது. இது அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். மாடேர்ன் ரைஸ் மில் இல்லாவிட்டாலும் கன்வென்ஷனல் ரைஸ் மில்லை எடுத்துக் கொண்டால் கூட 70 சதவீதம் கிடைக்கும். ஆகவே இதை விட்டு விட்டு நாம் ஏன் தனியார்களுக்குக் கொடுக்க வேண்டும்? கூட்டுறவுத் துறையில் அல்லது அரசாங்கத் துறையில் ரைஸ் மில்கள் கட்டி அதிலிருந்து கிடைக்கக் கூடிய லாபத்தை தனிப்பட்டவர்கள் அடைவதைவிட விவசாயிகளுக்கு இன்சென்டிவ் போனஸாக கொடுக்கலாம். கண்டிப்பாக நம் சர்க்கார் ஸ்டேட் டிரேடிங்கை எடுத்து நடத்தித்தான் வேண்டும். இவர்கள் கொடுக்கக் கூடிய அரிசியை விட நல்ல அரிசியாகக் கொடுக்க முடியாதா என்ன? ஆகவே ஸ்டேட் டிரேடிங்கை வைத்து மார்க்கெட்டிங் சொஸைட்டிகள் அல்லது கூட்டுறவுத் துறையில் இருப்பவர்களை ஏஜெண்டுகளாக நியமித்து, நெல் கொள்முதல் செய்வது, விநியோகம் போன்ற எல்லாவற்றையும் தனியாரிடம் விடாமல், யார் விற்றாலும் ஸ்டேட் டிரேடிங் ஏஜெண்டுகள்தான் கொடுக்க வேண்டுமென்ற நிலையை நாம் ஏற்படுத்தினால் கள்ளக்கடத்தலுக்கு வழி இல்லாமல் போய்விடும். தனிப்பட்டவர்கள் ஒரு பெர்மிட்டை வைத்துக் கொண்டு ஏழு கோட்டாக்களைக் காட்டி விடுகிறார்கள். ஆகவே, ஸ்டேட் டிரேடிங்கை ஏற்படுத்தி, மாடேர்ன் ரைஸ் மில்களை ஏற்படுத்தி, அதிலிருந்து கிடைக்கக் கூடிய அபரிமிதமான லாபத்தை, உற்பத்தி செய்யக் கூடிய விவசாயிகளும், அதை வாங்கி உண்ணக் கூடிய பொது மக்களும் அடையும்படி செய்ய வேண்டும். இந்த முறையை ஏற்படுத்த அரசாங்கம் கண்டிப்பாக கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, அந்தந்தத் தொகுதிகளில் உள்ள குறைகளை எடுத்துச் சொல்ல ஒரு கமிட்டி அவசியம் தேவை. கலெக்டர் அல்லது தாசில்தார் அல்லது எம். எல். ஏ. அல்லது பஞ்சாயத்து யூனியன் சேர்மன் அல்லது முனிசிபல் சேர்மன் இவர்களைக் கொண்ட ஒரு கமிட்டியை வைத்து விநியோகத்தில் உள்ள குறைகளை எடுத்துச் சொல்லும்போது அதன் மீது உடனடியாக நடவடிக்கை எடுத்து மக்களின் குறைகளைப் போக்க வேண்டும். எவ்வளவுதான் அதிகாரிகள் இருந்தாலும், தனிப்பட்டவர்களிடம் மோதும்போது நாங்கள் கொள்முதல் செய்யப்போக மாட்டோம்.



அறைத்துக் கொடுக்க மாட்டோம் என்று சொல்லும் வகையில் ஏதோ அவர்களை இழுத்துப்பிடித்து வைத்திருக்கும் வகையில் அவர்கள் செய்வதுதான் சட்டம் என்றிருக்கும் நிலை மாறி நல்லதொரு வழியை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சில இடங்களில், பஞ்சப் பிரதேசங்களில் அரிசி கிடைக்காத நிலை இருக்கிறது. அங்கு கொடுக்கப்படும் அரிசி இரண்டு நாட்களுக்குத்தான் காணும். அந்நிலையில் அங்குள்ளவர்களுக்கு கோதுமை அல்லது மைதா போன்றவைகளைக் கொடுக்கலாம். முந்தியிருந்ததை இப்போது ரொம்பவும் குறைத்து விட்டார்கள். ஆகவே, மத்திய அரசாங்கத்தினிடம் தொடர்பு கொண்டு அரிசியில்லாவிட்டாலும் கோதுமை, மைதா போன்றவைகளை மக்களுக்குக் கொடுக்க வழி வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

*திரு. எஸ். ஜே. ராமசாமி: தலைவரவர்களே, நமது உணவமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் மானியக் கோரிக்கையை ஆதரித்து எனது கருத்துக்களைச் சொல்லுகின்றேன். பல அங்கத்தினர்கள் எடுத்துக்காட்டியபடி சில விளக்கங்களை மட்டும் அரசாங்கத்திற்குத் தெரிவித்து ஆலோசனை கூற விரும்புகிறேன். விவசாயிகளுக்கு நெல் விலையைக் கூட்டிக் கொடுக்க வேண்டுமா, வேண்டாமா என்ற பிரச்சினையை இங்குள்ள மதிப்பிற்குரிய எதிர்க்கட்சிக்காரர்கள் பலயிடங்களில் மாநாடுகள் போட்டு பல இடங்களில் ஓரளவு செய்துகொண்டு வருகிறார்கள். அது கட்சி நலனுக்காக விவசாயிகளுக்குச் செய்ய வேண்டியதைப் பற்றி என்னுடைய கருத்தைச் சொல்லுகிறேன். பி. ப. 1-30

. நெல் கொள்முதல் செய்யும் வியாபாரிகள் ரூ. 36.75-க்கு வாங்குகிறார்கள். அதை அரிசியாக்கி சர்க்காருக்குக் கொடுக்கிறார்கள். சர்க்காரிடம் கொடுக்கும்பொழுது அந்த ரேட் ஒரு படிக்கு ஏறக்குறைய ரூ. 1·30 என்ற அளவிற்கு சர்க்காருக்கு அடக்கமாகிறது. பல சிரமங்களை முன்னிட்டு இந்தச் சர்க்கார் திருப்பி விநியோகிக்கும் பொழுது ஒரு படி ஒரு ரூபாய் என்ற அளவில் விநியோகம் செய்கிறது. இதனால் சர்க்காருக்கு 30 காசு நஷ்டம் ஏற்படுகிறது. இருந்தாலும் அதை ஏற்றுக்கொண்டு பொது ஜனங்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்ற நோக்கத்தில் அரசாங்கம் அவ்வாறு செய்கிறது. இதில் என்னுடைய கோரிக்கை என்னவென்றால் அந்த 30 காசை விவசாயிகளுக்குக் கொடுத்து விடலாமென்பது. விவசாயிகள் நல்ல அரிசியாக சர்க்காருக்குக் கொடுக்க முன் வந்தால் இவ்வாறு செய்து அதை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்பதுதான் என் முக்கிய கருத்தாகும்.

இன்னொன்று. வியாபாரிகள் அரிசியை எடுத்துக் கொண்டு போனால் அதில் ஈர அரிசியைத் தள்ளிவிடுகிறார்கள். அதன் தரத்தைப் பார்க்கிறார்கள். எவ்வளவு காய்ந்திருக்கிறது, நன்றாக இருக்கிறதா என்றெல்லாம் பார்க்கிறார்கள். அவ்வாறு பார்த்து ஈரமாக இருக்கிறது என்றால் திருப்பி விடுகிறார்கள். ஈரமாக இருந்தால் அவைகளை வைத்துக் கொள்ளாமல் திருப்பிவிட வேண்டியதுதான். ஆனால் அங்கே சில விவரங்கள் நடக்கின்றன. அதை கவனித்துப் பார்க்க வேண்டும். ஈர அரிசியைத் திருப்பியதும் அதை அங்கேயே காய வைக்கிறார்கள். பிறகு அரிசி காயாமலே கொடுத்து ஏமாற்றும் நிலையும் இருக்கிறது என்பதைச் சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, சிவில் சப்ளை இலாக்கா இருக்கிறது. அதிகாரிகளை மட்டும் கூட்டி வைத்துப் பேசுவதால் பயன் இல்லை. உற்பத்தி செய்பவர்களையும் கலந்து பேச வேண்டும். இவ்வாறு இரண்டு பேரையும் கலந்து கொண்டு இவ்வளவுதான் என்று ஒரு வரன்முறையை நிர்ணயித்துக் கொடுத்து இவ்வளவு கொள் முதல் செய்ய வேண்டும், இவ்வளவு கொடுக்க வேண்டும் என்று சொல்லிவிட வேண்டியது. கட்டாயக் கொள்

முதல் செய்ய வேண்டியதுதான். கொள் முதல் செய்யாமல் எந்த அரசாங்கமும் நடத்த முடியாது. அதில் இரு தரப்பினரையும் கலந்து பேசி அதிகாரிகள் சொல்வதையும், உற்பத்திச் சாகுபடியாளர்கள் சொல்வதையும் கேட்டு முடிவெடுக்க வேண்டுமென்று கருதுகிறேன்.

அடுத்து, விவசாய இலாக்காவும், உணவு இலாக்காவும் ஏறக்குறைய ஒன்ருக இருக்க வேண்டுமென்பதுதான் என் அபிப்பிராயம். விவசாய இலாக்கா காரியதரிசி அவர்கள் இதற்கு வந்துவிட்டார்கள். இந்த இரண்டு இலாக்காக்களும் கலந்திருந்தால் மாறுதல் ஏற்படும். விவசாயத்திற்கு நன்மை ஏற்படும். ஆகவே வேளாண்மைத் துறையையும், உணவுத் துறையையும் ஒன்ருக இணைக்க வேண்டுமென்பதுதான் என்னுடைய கோரிக்கை. இப்படி இரண்டுபட்டு இருக்கவே கூடாது. இரட்டை ஆட்சியைப் போல இப்படி இரண்டு போட்டிருக்கிருர்கள். இந்த இரண்டும் இரண்டறக் கலந்தால் இவ்வளவு விலை என்று நிர்ணயிக்கக் கூட சௌகரியமாக இருக்கும் என்று கூறுகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

சர்க்கரை விநியோகம் பற்றி ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். சர்க்கரை நகரங்களிலும், முனிசிபாலிட்டியிலும் குடும்பக்கார்டு உள்ள இடங்களில் கிலோ இரண்டு ரூபாய்க்குக் கிடைக்கிறது. வெளியிலே ரூ. 3·86-க்குத் தருகிருர்கள். இதில் என்ன செய்ய வேண்டுமென்ருல் இரண்டு ரூபாய் என்று போடுவதை விட இதை ஒரு சமமாக்க வேண்டும். ரூ. 3·86 என்பதும் அதிகம்தான். இதைக் குறைத்து ரூ. 3 என்ற அளவில் வைக்க வேண்டும், அல்லது ரூ. 2·75 என்ற அளவில் வைத்து கண்ட்ரோலில் இரண்டு ரூபாய் என்று வைத்துக் கொள்ளலாம் என்ற என்னுடைய கருத்தைத் தாழ்மையோடு தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

அடுத்தபடியாக விவசாயிகளுக்குப் போனஸ் கொடுப்பது அந்த விலையோடு சேர்க்கப்பட்டிருக்கிறது என்று தெரிவிக்கப்பட்டது. தனியாகப் போனஸ் கொடுப்பதற்கு மத்திய சர்க்காரோடு போராடியாவது அதைக் கொடுக்க முயற்சி எடுக்க வேண்டும். விவசாயிகளுக்கு போனஸ் கொடுக்காவிட்டால் உற்சாகமாக உணவு உற்பத்தியைச் செய்ய முடியாத அளவில் போகிருர்கள் என்று இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக சில நெல் ரகத்தை மாற்றியாக வேண்டும். முதல் சார்ட், இரண்டாவது சார்ட், மூன்ருவது சார்ட் என்று இருக்கின்றன. வெள்ளைக்கார் நெல்லுக்கு இருக்கும் ரகத்தை மாற்றியாக வேண்டும். இவ்வாறு மாறுதல் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றிகூறி விடைபெறுகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சபாநாயகர் அவர்களே, இப்பொழுது இருக்கும்படியான இந்த மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய கட்சி அங்கத்தினர் திரு. விநயகம் அவர்கள் கொண்டு வந்த வெட்டுப் பிரேரணையை ஆதரித்துச் சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன்.

நம்முடைய மானியங்களில் மிக அதிகமான ரூபாய் செலவழிக்கக்கூடிய மானியம் இந்த மானியம். சுமார் 107 கோடி ரூபாய் இதன் கீழ் செலவழித்தாலும் கூட விவசாயிகளுக்கோ, உண்பவர்களுக்கோ அல்லது உற்பத்தி செய்பவர்களுக்கோ மற்ற மக்களுக்கோ பூரணமான திருப்தியான வகையில் இல்லாத மானியம் என்று சொல்ல வேண்டுமென்ருல் அந்த மானியம் இதுதான். ஏனென்ருல் இந்த உணவுப் பிரச்சினை சிக்கலான பிரச்சினை. அரிசியை வைத்துத்தான் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் அரசியலை நடத்தினுர்கள். அப்பொழுது வாக்குறுதிகளையெல்லாம் வாரிவிட்டார்கள். இப்பொழுது அதையெல்லாம் தயவுசெய்து சொல்ல வேண்டாமென்று சொல்லுகிருர்கள். மதிப்பிற்குரிய உணவு அமைச்சர் அவர்கள் கூட்டங்களில் பேசியவற்றையும் நான் கேட்டிருக்கிறேன். என்ன சொன்னுர்கள் என்ருல், நாங்கள் ஆட்சிக்கு வந்தால் ஒரு படி என்ருர்கள். முதலில் மூன்றுபடி என்று சொல்லிக் கொண்டு வந்தார்கள். தேர்தல் வரவர தங்களுக்கு அனுகூலம் ஆகலாம் என்று எண்ணி, "எங்கள் இலட்சியம் மூன்றுபடி, நிச்சயம் ஒரு படி" என்று



சொன்னுர்கள். அதையும்கூட ஆட்சிக்கு வந்தவுடனேயே போட வில்லை, கவர்னர் உரையிலும் இதைப் பற்றிய குறிப்பு இல்லை. காங்கிரஸ்காரர்கள், "படியரிசி எங்கே, படியரிசி எங்கே" என்று கேட்டோம். மே மாதம் 1-ம் தேதியன்று சிதம்பரம் பூங்காவிலே பேசியதைக் கேட்டேன். ஜூன் மாதத்திலிருந்து போடுகிறோம் என்று சொன்னுர்கள்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** மே மாதம் 15-ஆம் தேதி நானே ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி போட்டிருக்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** மே மாதம் 1-ம் தேதி சொல்லி 15-ஆம் தேதி போட்டார்கள். அதைத்தான் சொல்லவருகிறேன். அவ்வாறு போட்டது மட்டும் அல்ல. சென்னைப் பட்டினத்திலும், கோவையிலும் போட்டது போல் செப்டம்பர் மாதத்திலிருந்து இந்த இந்த இடங்களுக்கும் வரும் என்று சொன்னுர்கள். பிறகு டிசம்பரிலிருந்து வரும் என்று சொன்னுர்கள். பிறகு தைப்பொங்கலுக்கு வரும் என்று சொன்னுர்கள். அவ்வாறு நீங்கள் சொன்னதை வைத்துதான் நாங்கள் கேட்கிறோமே தவிர, இப்பொழுது அதைக் கேட்பதற்கு நீங்கள் யார் என்று கேட்டால் அவ்வாறு கேட்பதற்கு எங்களுக்கு உரிமை இருக்கிறது என்பதைத்தான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். தேர்தல் காலத்தில் வாக்குறுதி கொடுத்தீர்கள். அவ்வாறு கொடுத்ததால் அதைக் கேட்பதற்கு எங்களுக்கு உரிமை இருக்கிறது. நாங்கள் ஆட்சியிலிருந்த போது நீங்கள் சொல்லவில்லையா ? அப்பொழுது சர்க்கார் வாங்கிய விலை இன்னது, விற்கும் விலை இன்னது, இவ்வளவு தூரம் திருடுகிருர்கள் என்று புள்ளிவிவரங்கள் கொடுத்து ஒரு படி அரிசி கொடுக்க முடியுமென்று கணக்கு கொடுத்தீர்கள் நீங்கள். அந்தக் கணக்கு இப்பொழுது எங்கே போய்விட்டது ? அவர்கள் கொடுத்த கணக்குகளும் புள்ளிவிவரங்களும் பத்திரிகைகளிலே வந்தன. இந்தந்த முறையிலே இப்படியிப்படிச் செய்தால் லாபம் வரும் என்று சொன்னீர்கள். அந்த முறை இப்பொழுது எங்கே போய்விட்டது ? இதிலே நாங்கள் கேலி செய்வதாகவோ அல்லது கிண்டல் செய்வதாகவோ நினைக்க வேண்டாம். சுமார் 42 இலட்சம் பேர் படியரிசித் திட்டத்தினுல் பலனடைவதாகச் சொல்கிருர்கள். இவர்கள் நகரப்பகுதிகளிலே வசிக்கின்றவர்கள். இங்கே வசிக்கும்படியானவர்களுக்கு வாங்கும்படியான சக்தி அதிகம். ஆனுல் கிராமாந்தரங்களிலே வசிக்கக்கூடிய மக்களுக்குக் கிடைக்காத சலுகையை இவர்களுக்கு ஏன் கொடுக்க வேண்டும் ?

கொள்முதலைப் பற்றிச் சொல்லும்பொழுது 1966-ஆம் வருஷத்தில் சுமார் 7·2 இலட்சம் டன்கள் தான் செய்யப்பட்டது. இப்பொழுது 8·5 இலட்சம் டன்கள் கொள் முதல் செய்யப்பட்டது என்று சொல்கிருர்கள். 1966-க்கு முந்திய ஆண்டுகளில் எத்தனை டன்கள் கொள் முதல் செய்தார்கள் என்று சொல்லவில்லை. 1965-ஆம் ஆண்டு எப்பொழுதும் இல்லாத பஞ்ச நிலையிருந்த சமயம். மேட்டூர் அணையில் தண்ணீர் இல்லை. அப்படியிருந்தும் 7·2 இலட்சம் டன்கள் கொள்முதல் செய்திருக்கிறோம். ஆனுல் இப்பொழுது இவர்கள் இரண்டு போகம் செய்தார்கள். அப்படி ஒன்றுக்கு இரண்டு போகமாகச் செய்தும் கூட $8\frac{1}{2}$ லட்சம் டன் தான் கொள் முதல் செய்திருக்கிருர்கள். 15 லட்சம் டன்கள் செய்திருந்தால் பாராட்டியிருக்கலாம். 1965-ஆம் ஆண்டு ஜனவரி 1-ம் தேதி முதல் டிசம்பர் 31-ம் தேதி வரை காங்கிரஸ் காலத்தில் 8,24,000 டன்கள் வசூல் செய்யப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இப்பொழுது ஒரு ஏக்கரும் அதற்குக் கீழேயும் இருக்கிறவர்களுக்கு விதிவிலக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த மாதிரி கொடுக்கிறவர்கள் தாங்கள் வைத்திருப்பது தங்களுக்குப் போதாது என்றும் சொன்னதில்லை. திராவிட முன்னேற்றக் கழகம் நல்ல முற்போக்கான கொள்கை உடையது என்று இந்த மன்றத்திலே ஏகோபித்த ஆதரவும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

—

[1968 மார்ச் 8

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இப்பொழுது அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள் ஒரு எக்கராவுக்கு இல்லையென்று. அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்களே தவிர, ஒரு எக்கராவுக்கு நிச்சயமாக வசூல் செய்கிறார்கள். இதை திட்டவட்டமாகச் சொல்லிக் கொள்கிறேன். ஒவ்வொரு ஜில்லாவிலும் வசூலிக்கப்படுகிறது. ஒவ்வொரு ஜில்லாவிலும் யார் யார் எவ்வளவு கொடுத்திருக்கிறார்கள் என்ற செயற்குறிப்பை மேசை மேல் வைக்கட்டும். நான் காட்டுகிறேன் எங்கெங்கு ஒரு எக்கரா உள்ளவர்களிடமிருந்து வசூலிக்கப்பட்டது என்று. ஒவ்வொரு ஜில்லாவிலும் இத்தனை டன் இத்தனை டன் என்ற கணக்கை வைக்கட்டும். கோயம்புத்தூர் ஜில்லாவிலே 7,000 டன் வசூலிக்கப்பட்டதாக இருக்கிறதே, அது யார் யாரிடத்திலே, எந்த, எந்த இடத்திலே வசூலிக்கப்பட்டது என்பதற்கு அந்த " டீட்டெயில்டு நோட்டை " இங்கே வையுங்கள். ஒரு எக்கரா உள்ளவர்களிடமிருந்து வசூலிக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் நிரூபிக்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே வையுங்கள் என்று சொல்லவேண்டியதில்லை இந்த மாதிரியான நிலைமைகளை விவாதிப்பதற்கு உரிமை இருக்கிறது. மேசை மேல் தகவல் வைத்தால் நிரூபித்துக் காட்டட்டுமா என்று கேட்கிறார்கள். தாசில்தாரைக் கேட்டால் ஒரு எக்கராவுக்குக் கீழே வசூலிக்கவில்லை என்று சொல்லுவார்கள். உடனே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இல்லை இல்லையென்று மறுத்து விடுவார்கள். இது விவாதத்திற்கு வேண்டுமானால் சுவராசியமாக இருக்குமே தவிர, திட்டவட்டமாக, தெளிவாக எல்லா கலெக்டர்களுக்கும் தாக்கீது அனுப்பப் பட்டிருக்கிறது. யாரும் ஒரு எக்கராவுக்கு கீழே நிலம் உள்ளவர்களிடமிருந்து கொள்முதல் செய்யக்கூடாது என்று இப்பொழுது கூட இந்த மன்றத்தின் மூலமாகவும் சொல்லிக்கொள்கிறேன். 1·1 எக்கரா உள்ளவர்களிடமிருந்து கொள்முதல் செய்ய வேண்டாமென்ற முறை இருக்கிறது. அது தெளிவாக இருக்கிறது எங்காவது விரும்பத்தகாத காரியங்கள் நடந்து இருந்தாலும் அதைக் கவனத்திற்கு கொண்டு வரலாம். குறிப்பாக, நடந்ததைக் குறிப்பிட்டால் நடவடிக்கை எடுக்கலாம். அதற்குப் பதிலாக, எல்லாவற்றிற்கும் அட்டவணை கொண்டு வாருங்கள் என்று சொன்னால் அதற்கு நாங்கள் லாரியில் தான் ஏற்றிக்கொண்டு வரவேண்டும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** தயவு செய்து எதிர்க் கட்சியிலே இருப்பவர்களுக்கு உரிமை இருக்கிறது என்று சொல்லிக் கொள்கிறேன். 7,000 டன், 10,000 டன் என்ற விவரத்தை இந்த மாமன்றத்திலே வைக்கிற செலவை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். நீங்கள் கொண்டு வந்து வைத்துவிட்டுப் பேச வேண்டுமே தவிர, இப்படிப் பேசக் கூடாது. இதைப்பற்றி எனக்கு ஏராளமான புகார்கள் வருகின்றன. ஒரு எக்கரா நிலத்திற்குள்ளே இருப்பவர்களிடமிருந்து வசூல் செய்வதாக எனக்கு ஏராளமான புகார்கள் வருகின்றன. இப்போழுது $8\frac{1}{2}$ இலட்சம் டன் வசூலிக்கப்பட்டது என்ற கணக்கை சொன்னீர்கள். அதைப் பற்றிய விவரம் வைத்தால் அது எந்த எந்த இடத்திலே வசூலிக்கப்பட்டது என்று என்னால் காட்ட முடியும். எந்த இடத்திலேயிருந்து இதைப் பெற்றிருக்கிறார்கள் என்று சொல்ல முடியும். ஆகவே, நீங்கள் கொண்டு வாருங்கள், நாங்கள் கவனிக்கிறோம் என்று சொல்வது அவ்வளவு பொறுப்புள்ளதாக என்னால் உணர முடியவில்லை. (குறுக்கீடு) எங்கள் ஊரிலே இந்த மாதிரி நடக்கிறது. ஒரு எக்கர் தான் இருக்கிறது என்று சொன்னால் கேட்டுக் கொள்ளாத நிலைமை தான் இருக்கிறது. இந்த $8\frac{1}{2}$ இலட்சம் டனுக்கு விவரம் வையுங்கள். நான் நிரூபிக்க முடியும்.



1968 மார்ச் 8]

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒன்றை எனக்கு உணர்த்த வேண்டும். ஒருவேளை எங்களுக்கு புரியாமலே கூட இருக்கலாம் ஒரு எக்கர் நிலம் வைத்திருந்தவர்களுக்கு டிமாண்டு நோட்டீஸ் கொடுத்தார்களா ? அப்படி யாராவது ஒரு எக்கருக்கு டிமாண்டு நோட்டீஸ் கொடுத்திருந்தால் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் காட்ட முடியுமா ?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** கொடுத்திருக்கிறார்கள். களத்திலே ஒரு எக்கர் வைத்திருக்கிறவன் 2 மூட்டை கொண்டு வருகிறான் ஒரு எக்கர் என்று நிரூபி என்று அவனைக் கேட்கிறார்கள். ஒரு மூட்டை இரண்டு மூட்டை நெல் வைத்திருப்பவர்களிடம் பலவந்தமாக வசூலிக்கப்படுகிறது. ஒரு எக்கர் என்று நிரூபி என்று சொன்னால் அவன் உடனே, " தொலைந்து போ " என்று சொல்லி அந்த நெல்லை கொடுத்து விடுகிறான். இதை நான் பல இடங்களிலே சொன்னேன். ஒரு ஜில்லாவிலே வசூலிக்கப்பட்ட கணக்கை எல்லாம் எடுத்துப் பார்த்தால் தெரியும். ஒரு சில இடத்திலே டிமாண்ட் நோட்டீஸ் கொடுக்கப்படவில்லை. ஒரு சில இடத்திலே டிமாண்ட் நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த " நோட்டீஸ்களை " கொண்டு வந்து வையுங்கள். நிரூபிக்க முடியும். இல்லையென்று சொன்னால்................

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கெல்லாம் ஒரு எக்கரும் அதற்குக் கீழேயும் இருப்பவர்களிடத்திலே கொள்முதல் செய்யக் கூடாது என்று உத்தரவு போடப்பட்டிருக்கிறது. அது சரியாக நடக்கவில்லையென்று, அது சரியாக நடத்தப்படவில்லை யென்று குறை கூறுகின்ற பொழுது, ஒரு சில இடங்களிலாவது ஒரு எக்கர் நிலத்திற்குக் கொள்முதல் செய்திருக்கிறார்கள் என்று அவர்கள் சுட்டிக்காட்டுகிற நிலைமை ஏற்படுமானால் அதன்மீது நடவடிக்கை எடுக்கவும், அம்மாதிரி எதிர்க்காலத்தில் நடக்காமல் தடுக்கவும் வழி ஏற்படும். ரசீதுகளைக் கொண்டு வந்து காட்டினால், அதற்குப் பிறகு அம்மாதிரி கொள்முதல் செய்தவர்கள் பேரில் நடவடிக்கை எடுக்க வழி ஏற்படும். யாரிடத்திலே கொள்முதல் செய்தார்கள் என்ற ரசீதைக் கொண்டு வந்து காண்பித்துப் பிறகு பேசவேண்டும். அம்மாதிரி ஒரு சில வழக்குகளையாவது கொண்டு வந்து காண்பித்தால், அதன் மீது நடவடிக்கை எடுக்க வசதியாக இருக்கும். இனிமேல் அம்மாதிரி கொள்முதல் செய்யாமல் தடுக்க நடவடிக்கை எடுக்கக் கூடிய சூழ்நிலையும் ஏற்படும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அந்தமாதிரி எத்தனையோ சொல்லுவேன். என்னிடத்தில் அம்மாதிரி பல புகார்கள் இருக்கின்றன. இன்னும் வந்துகொண்டே இருக்கின்றன. (திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி: யாரிடத்திலேயிருந்து வந்தது ?) மக்களிடத்திலேயிருந்து வருகிறது. மக்களிடத்திலேயிருந்து வருகிறது. எல்லாரிடத்திலேயிருந்தும் வருகிறது. பல இடங்களிலேயிருந்தும் வருகிறது.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** கனம் சபாநாயகர் அவர்களே, கோபப்பட்டால் பலவீனம் இருக்கிறது என்றுதான் பொருள். கோபம் வேண்டியதில்லை.

இப்பொழுதும் தவறு நேராது என்று கூட அல்ல. தவறு நடக்கிறது என்று சொல்கிறபொழுது பொறுப்புமிக்க எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு கடுதாசி—ஆதாரம்—காண்பிப்பார்களானால் இன்னும் நல்ல அரிய கருத்துக்களைச் சொல்லியிருக்கலாம். அதற்கு இதைக் கொடுங்கள், நான் நிரூபிக்கிறேன் என்று சொல்வது

முறையல்ல. அவருடைய வக்காலத்தை நாங்கள் நிரூபிக்கவேண்டுமென்று எங்களிடமே சொல்லுவது முறையல்ல. அவர்கள் இந்த ஆதாரத்தையே அடுத்த முறை கொண்டு வந்து கொடுக்கலாம். ஆனால் ஒரு ஏக்கராவுக்குக் கீழே உள்ளவர்களிடமிருந்து கொள்முதல் செய்யக்கூடாது என்று உத்தரவு போடப்பட்டிருக்கிறது. அது அமுல் செய்யப்படுவதில் எங்கும் தவறு நேர்ந்திருக்காது என்பது கூட அல்ல என்னுடைய வாதம். ஆனால், இதனாலேதான் எல்லா ஊர்களிலும் வாங்கினார்கள், அதனாலே தான் 8½ இலட்சம் டன் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது என்று சொல்வது நல்லதல்ல. 8½ லட்சம் டன் கொள்முதல் செய்ததை நாங்கள் பெரும் பெருமையாகக் கருதவில்லை. அதை நீங்கள் பாராட்டவேண்டுமென்று கூட நாங்கள் நினைக்கவில்லை. இங்கு இருப்பது பெருமை தேடிக் கொள்ள அல்ல; எங்களுடைய கடமையைச் செய்யத் தான். ரசீது இருந்து, அதை காண்பித்து விட்டால் சரியாக இருக்கும் என்பதுதான் என்னுடைய வாதம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அதை உங்களுக்கு அனுப்புவதில் தெளிவாக இருக்கிறேன். நிச்சயமாகக் காட்ட நான் தயாராக இருக்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த விலையைப் பற்றிச் சொன்னார்கள் திரு. ஜெகஜீவன்ராம் அவர்கள், நீங்கள் கொடுக்கிற விலை சரியானதுதான் என்று சொல்லி மாலை போட்டார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். அவர்களைவிட எனக்கு ஜெகஜீவன்ராமிடம் அதிகப் பழக்கம் உண்டு. அவரோடு பேசுகிற, சந்திக்கிற சந்தர்ப்பங்கள் எனக்கு அதிகம் உண்டு. அண்மையிலேகூட டெல்லியிலே அவரைச் சந்தித்தேன். ஜெகஜீவன்ராம் அவர்கள் சொன்னது என்ன ? குறைந்த விலைக்குக் கொடுக்கிறார்கள் என்றால் எல்லோரும் சரி என்றுதான் சொல்வார்கள். டெல்லியிலிருந்து ஜெகஜீவன்ராம் அவர்கள் திட்டவட்டமாக இன்ன விலைக்குத் தான் கொடுக்க வேண்டுமென்று உத்தரவு போட்டார்களா ? அதை இங்கே வைப்பார்களா ? அப்படி வைத்தால் நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். மத்திய சர்க்காரா இதைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள்? இது ஏதோ, " பிரஸ் ஸ்டேட்மெண்ட் " கொடுத்தார், " கருத்திருமனுக்கு என்ன தெரியும் ? " என்று கொடுத்தார் என்று சொல்லப்பட்டது. அதை ஏதோ சர்ச்சையில் அவர் சொல்லியிருக்கிறார். மாநில சர்க்கார் எந்த விலை வைத்தாலும் கூட எங்களுக்கு ஆட்சேபணை இல்லையென்று ஜெகஜீவன்ராம் அவர்கள் என்னிடத்தில் சொல்லியிருக்கிறார். (குறுக்கீடு). இரகசியமாக இல்லை. " ஒப்பனுகத்தான் " சொன்னார்கள். ஆக, என்னிடத்திலே இப்படி சொல்லியிருக்கிறார்கள். ஜெகஜீவன்ராமுக்கு வாரிசுகள் மாதிரி இவர்கள் ..............(குறுக்கீடு). வாரிசு நாங்கள் தான் இருக்கிறோம்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** திரு ஜெகஜீவன்ராம் அவர்கள் என்னைச் சந்தித்தபொழுது திரு கருத்திருமன் இப்படி சொல்லுவார், அதை நம்பவேண்டாமென்று என்னிடத்திலே சொன்னார்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இதை எந்த அளவிலே நம்புவது என்று எனக்கு ஒன்றும் தெரியவில்லை. என்னைப்பற்றி இவர்களிடமா போய் சொல்லியிருப்பார் ? இவரிடம் போய் என்னைப்பற்றி சொன்னாராம். என்னிடம் என்ன சொன்னார் தெரியுமா ? யாரை வேண்டுமானாலும் நம்புங்கள் ; திராவிட முன்னேற்றக் கழகத்தை மட்டும் நம்பாதீர்கள், இங்கே தலையைக் காட்டுவார்கள், அங்கே போய் எல்லாவற்றையும் காட்டுவார்கள் என்று சொன்னார்.

(திரு இராம. அரங்கண்ணல் எழுந்தார்)





**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேசிக் கொண்டிருப்பவர் உட்காரவில்லை என்றால் நீங்கள் குறுக்கிட்டுக் கேட்கமுடியாது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** ஜெகஜீவன்ராம் அவர்கள் சொல்லி விட்டார்களென்று விலை குறைந்தது ? 1966-ம் வருடம் மத்திய சர்க்கார் இந்த ஃபெர்டிலைசர்ஸ் விலைகளை எல்லாம் ஏற்றியபொழுது 46·5 ரூபாய் குறைந்தது என்றும், 56 ரூபாய் என்றும் நிர்ணயம் செய்து இருக்கிறார்கள். ஏற்கனவே இருந்த காங்கிரஸ் கொடுக்கும்படியான விலை, போனஸைச் சேர்க்காமல். இவர்கள் போனஸையும் சேர்த்துக் கொடுப்பது இவ்வளவுதான். குறைந்தது 46 ரூபாய், 56 ரூபாய் வரைக்கும் கொடுக்க வேண்டும் என்று ஜெகஜீவன்ராம் அவர்களிடமிருந்து—ஃபுட் டிபார்ட்மெண்டிலிருந்து—வந்திருக்கிறதா ?

ஆந்திர சர்க்கார் " பிக்ஸ்டு அண்டு ஸப்போர்ட்டெட் பிரைஸ் " கோர்ஸ் வெரைட்டிக்கு குறைந்த விலை ரூ. 46, அதற்கு அடுத்த விலை ரூ. 56 Procurement in Andhra Government's new prices என்று அவர்கள் கொடுத்த விலையிலிருந்துதான் நான் சொல்லுகிறேன், ஆந்திராவில் ரூ. 46 குறைந்த விலை. அதற்கு அடுத்த விலை ரூ. 56 என்று நிர்ணயிக்கப்பட்டிருப்பது விவசாயிகளுக்கு நன்மை அளிக்கும் வகையிலே. ஃபைன் வெரைடி சூப்பர் ஃபைன் வெரைடி என்று சொல்லி ஒரு குவிண்டாலுக்கு முறையே ரூ. 55, ரூ. 70 என்று வைத்திருக்கிறார்கள். தமிழ் நாட்டில் மெல்லிய அரிசியே கிடையாதா ? ஃபைன், சூபர் ஃபைன், அரிசியே கிடையாதா ? விவசாயிகளுக்கு ஆக்கமும், ஊக்கமும் கொடுப்பதற்கு அந்த சர்க்கார் அந்த விலை கொடுக்கும்பொழுது, ஏன் இங்கே கொடுக்கவில்லை ? இங்கே இருப்பதெல்லாம் மட்ட அரிசியா என்பதைத்தான் சிந்தித்துப் பார்க்க வேண்டும். விவசாயிகளுக்கு கட்டுப்படியான விலை கொடுக்கவில்லை. மத்திய சர்க்கார் கொடுத்த விலையையே கொடுக்கவில்லையே ? முன்னால் இருந்த சர்க்கார் மத்திய சர்க்கார் சொன்ன விலையும் கொடுத்து, போனஸும் கொடுத்தது. இப்பொழுது பழைய விலைதான் கொடுக்கப்படுகிறது. ப்ரொக்யூர்மெண்ட்டு பற்றி உத்தியோகஸ்தர்கள் சொல்வதை வைத்து, அதை ஏற்றுக்கொள்ளவேண்டாம் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். நாங்கள் உத்தியோகஸ்தர்கள் சொன்னதை கேட்டு எங்களுக்கு என்ன ஆயிற்றோ, அதே நிலைமையில் தான் நீங்களும் ஆவீர்கள் உத்தியோகஸ்தர்கள் சொல்வதைக் கேட்டால். உத்தியோகஸ்தர்களை தயவு செய்து நம்பவேண்டாம் என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். உத்தியோகஸ்தர்களை நம்பி எங்களுக்கு என்ன கதி ஆயிற்றோ அதே கதி தான் உங்களுக்கும் ஆகும். உத்தியோகஸ்தர்களை தயவு செய்து நம்பாதீர்கள் என்று உங்களுக்கு எச்சரிக்கையாகச் சொல்ல விரும்புகிறேன். (ஆரவாரம்.)

விலையைச் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். அதிக விலை கொடுத்தால் படி அரிசி போட முடியாது என்று சொன்னால் நாங்கள் அதை ஏற்றுக்கொள்ள முடியும். இரட்டை நாக்கிலே பேசுவதாக ஒரு அங்கத்தினர் சொன்னார்கள். இப்பொழுது மட்டுமல்ல. மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்களிடம் பல இடங்களில் சொல்லியிருக்கிறேன். டெல்லியில் சொல்லியிருக்கிறேன். எல்லா இடங்களிலும் சொல்லியிருக்கிறேன். பிரதம அமைச்சர் நேரு அவர்களிடம் கூட சொல்லியிருக்கிறேன் ' I prefer my son to be a dock labourer to his beinga farmer inthis country என்று பாராளுமன்றத்திலேயே சொல்லியிருக்கிறேன். விவசாயிகளுக்கு ஊக்கமும் ஆக்கமும் கொடுப்பதற்கு அவர்களுக்கு கட்டுப்படியாகக்கூடிய விலையைக் கொடுத்தால்தான், உற்பத்தியை அதிகமாகப் பெருக்க முடியும்.

படி அரிசித் திட்டத்தைப் பற்றி சொன்னார்கள். தென் சென்னை தேர்தலில் அரிசிதான் அதிகமாக விளையாடிற்று. முதல் தர அரிசி மூன்றாவது தர அரிசியாக படி அரிசி திட்டத்தில் போடப்பட்டது. அந்த நஷ்டத்தையும் பொது மக்கள் வரிப்பணத்திலிருந்துதான் ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலை ஏற்படுகிறது. இப்பொழுது பொருளாதாரக் கஷ்ட நிலை. முதல் அமைச்சர் அவர்கள் படி அரிசித் திட்டத்திற்கு ரூ. 5 கோடி சில்லறை வேண்டும் என்று சொன்னார்கள். உணவு அமைச்சர் அவர்கள் இப்பொழுது பல புள்ளிவிவரங்களைச் சொல்லியிருக்கிறார்கள். இதில் எது உண்மை என்று தெரியவில்லை. அதிகாரிகள் கொடுத்த ஸ்டாடிஸ்டிக்ஸை வைத்துக்கொண்டு, அதை மூடி மறைக்கவேண்டுமென்று சொல்கிறார்களா ? ஏதோ $2\frac{1}{2}$ பாயிண்டு, $2\frac{1}{2}$ பாயிண்டு என்று இங்கொரு பாயிண்டு, அங்கொரு பாயிண்டு சேர்க்கிறார்கள். நிதி அமைச்சரான முதல் அமைச்சர் அவர்கள் சொன்னது உண்மையா, அல்லது இவர்கள் இப்பொழுது சொல்லியிருப்பது உண்மையா ? அவர்களுக்குள் அபிப்பிராய பேதம் இருக்கிறது என்று நினைக்கிறேன். . . .

**திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி :** ஆன் எ பாயிண்டு ஆப் ஆர்டர், ஸார். அதிகாரிகளைப் பற்றி மறுபடியும் இங்கு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். சட்டசபையைப் பற்றியோ அல்லது சட்டசபையில் இருக்கிறவர்களைப்பற்றியோ வெளியிலே இருக்கிற யாராவது அவமதிப்பாகச் சொன்னால், அது இந்தச் சபையின் கவுரவத்தைப் பாதிக்கிறது என்று நாம் உரிமைப் பிரச்னை எழுப்புகிறோம். அதே மாதிரி சட்ட சபைக்கு வெளியிலே இருப்பவர்களை, உத்தியோகஸ்தர்களை நம்பக்கூடாது என்கிற மாதிரி எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகிறார்கள். அப்படிச் சொல்வது உத்தியோகஸ்தர்களாக இருப்பவர்களை அவமதித்துப் பேசுவது ஆகாதா ? சட்டசபைக்கு வெளியிலே இருப்பவர்களை அவமதிப்பதாக அர்த்தம் ஆகாதா ? ஆகவே அப்படிப்பட்ட வார்த்தைகள் சபையின் நடவடிக்கைக் குறிப்பில் இடம் பெறாமல் இருந்தால் நன்றாக இருக்கும் என்று கருதுகிறேன். சபாநாயகர் அவர்களுடைய தீர்ப்பை நான் எதிர்பார்க்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையில் இல்லாதவர்களைப் பற்றி பேசலாம். பேரவையில் இல்லாதவர்களைப் பற்றி பேசக்கூடாது என்று நமது விதிகளில் கிடையாது.

**திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி :** அவமரியாதையாகப் பேசலாமா ?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** பெயரைச் சொல்லக்கூடாது, அவ்வளவு தான். இவர்கள் எதிர்க்கட்சியில் இருக்கும்போது பேசின பேச்சை விடவா நான் பேசிவிட்டேன் ? சபாநாயகர் அவர்களே, இதைவிட என்னவெல்லாமோ பேசியிருக்கிறார்கள். இவர்கள் எனக்கு புத்தி சொல்ல வந்துவிட்டார்கள். ஆசைத்தம்பி அவர்கள் எதிர்க்கட்சி வரிசையில் இருக்கும்பொழுது எப்படி, எப்படி பேசியிருக்கிறார்கள், லஞ்சம் வாங்குகிறார்கள், ஊழல் தாண்டவமாடுகிறது என்று பலவிதமாகப் பேசியிருக்கிறார்கள். வானத்திற்கு மேலே பேசியிருக்கிறார்கள். அவர்களை நாங்கள் இன்று நல்ல பிள்ளைகளாகப் பண்ணிவைத்திருக்கிறோம்.

இது மாதிரியான நிலையில் இப்பொழுது இருக்கும்படியான பிரச்னை இதுதான். திரு. எஸ். ஜே. ராமசாமி அவர்கள் பல நல்ல காரியங்களைப் பற்றி பேசினார்கள். அதை நான் ஆதரிக்க விரும்புகிறேன். மக்களிடமிருந்து நெல் வாங்கும்படியான நிலையிலிருந்து, அதாவது மில்லுக்குப் போய் பிறகு வாங்கி உண்பவர்களுக்கு, கன்ஸ்யூமர்ஸுக்கு வருவதற்குள் இடையில் எத்தனை ரூபாய்க்கு சேதம் ஆகிறது ? உருப்படியான யோசனைகளைச் சொல்லுங்கள் என்று கூறினார்கள். நான் சொல்கிறேன், கன்ஸ்யூமர்ஸ் கடைசியாக வாங்கும்படியான விலைக்கும், விவசாயிகளுக்குக்கொடுக்கும்படியான விலைக்கும் இடையே 10 சத வீதம்தான் வித்தியாசம் இருக்கவேண்டும் என்ற ஒரு ஏற்பாட்டை அரசாங்கம் செய்ய முன் வர வேண்டும். உற்பத்தியாளர்களுக்குக் கொடுக்கும்படியான விலைக்கும், வாங்கி உண்பவர்களுக்கு விற்கும்படியான விலைக்கும் வித்தியாசம் 10



சத வீதத்திற்கு மேல் இல்லாமல் இருந்தால், குவிண்டாலுக்கு ரூ. 5, ரூ. 6 நெல்லுக்கு அதிகமான விலை கொடுக்க முடியும். மில்காரர்களிட மிருந்து ஒரு டெண்டர் கால்ஃபார் பண்ணவேண்டும். மில்காரர்கள் ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். 60 சத வீதம்தான் அரிசி தேரும் என்று சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். அறைக்கும் பொழுது ஏகப்பட்ட சேதமாகிறது. 63 சத வீதம்தான் அரிசி கிடைக்கிறது என்பது இல்லை. திருவாரூரில் வைத்திருக்கும்படியான மில்லில் 70 சத வீதம் வரைக்கும் அவுட்டர்ன் ஆகிறது. அதுமாதிரி எல்லா இடங்களிலும் மாடர்ன் மில்லை அமைக்கும்படியான ஒரு ஏற்பாட்டை செய்யக்கூடிய நிலை இருக்குமானால், ஏழை மக்களுக்கு, விவசாய மக்களுக்குக் கொடுக்கக் கூடிய விலை நல்ல விலையாக இருக்கும், கட்டுபடியான விலையாக இருக்க முடியும் என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

படி அரிசி எல்லா இடங்களிலும் கொடுக்கவில்லையே என்று நாங்கள் சொன்னால், உடனே முதல் அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள், புலிக்கு பயந்தவர் என் மேல் விழுங்கள் என்று சொல்வது போல், முதல் அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். மத்திய சர்க்காருடைய உதவி வரவேண்டும், காங்கிரஸில் இருப்பவர்கள் ஆதரவு கொடுக்கவேண்டும் என்றெல்லாம் சொன்னார்கள். முதலில் தேர்தல் நேரத்திலேயே இவைகளெல்லாம் சேர்ந்தால்தான் படி அரிசித் திட்டம் கொடுக்க முடியும் என்று சொல்லியிருந்தால், அப்பொழுது கேட்டிருந்தால், நல்மாக இருக்கும். மத்திய சர்க்கார் உதவி, எங்களுடைய உதவி கிடைத்தால் இது மாதிரி படி அரிசி திட்டம் எல்லா இடங்களிலும் போடுவோம் என்று இப்பொழுது சொல்கிறார்கள். அப்பொழுதே சொல்லியிருந்தால் ஏற்றுக்கொண்டிருக்கலாம். ஆனால் இப்பொழுது சொல்கிறார்கள். அப்பொழுது சொல்லவில்லை. ஓரளவுக்கு நன்றி. அதிலே எத்தனை கஷ்டம் இருக்கிறது ? படி அரிசி திட்டத்திற்கு ரூ. 5 கோடி செலவழிப்பதை விட்டால், அதைக் கொண்டு எவ்வளவு திட்டங்களை நாம் போடலாம் . . .

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** ஒன்றைச் சொல்லும்பொழுது அதில் எல்லாம் இணைந்திருப்பதாகத்தான் அர்த்தம். மத்திய சர்க்கார் உதவி, எதிர்க் கட்சியின் ஒத்துழைப்பு எல்லாவற்றையும் சேர்த்து போடுவது என்று தான் அர்த்தம். குழந்தை பெற்றுத் தருவதாகச் சொன்னால், மருத்துவச்சி உதவியோடு, ஆஸ்பத்திரி உதவியோடு, டாக்டர் உதவியோடு என்று சொல்ல வேண்டிய அவசியமில்லை. தேவையான எல்லா உதவிகளோடும் என்று தான் அர்த்தம். நான் இன்னொன்றும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு நினைவு படுத்த விரும்புகிறேன். தமிழ் நாட்டு காங்கிரஸ் தலைவர் ஒன்று சொன்னால், தமிழ் நாட்டு காங்கிரஸைக் கட்டுப்படுத்தும், அங்கு இருக்கிற ஆட்சியைக் கட்டுப்படுத்தும். ஆனால், அகில இந்திய காங்கிரஸ் தலைவர் ஒன்றை சொன்னால் மாநிலங்கள் எல்லாவற்றையும் கட்டுப்படுத்தும். பொதுத் தேர்தலுக்கு முன்பு அகில இந்திய காங்கிரஸ் தலைவர் மதிப்பிற்குரிய திரு. காமராஜ் அவர்கள் "நாங்கள் ஜெயித்தால் ஆளுக்கு ஒரு வீடு கட்டித்தருவோம்" என்று சொன்னார்கள். தேர்தலில் காங்கிரஸ் ஜெயித்த மாநிலங்களிலெல்லாம் ஆளுக்கு ஒரு வீடு கட்டித்தரப்பட்டிருக்கிறதா என்பதைத் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இது தான் தப்பித்துக்கொள்வதற்கு வழி. நாங்கள் சொன்னோம் என்று சொல்லிவிட்டுத் தப்பித்துக் கொள்ள முடியாது. நாங்கள் எதிர்க்கட்சியில் இருக்கிறோம், கேட்கிறோம். அதற்காக, நீங்கள் சொன்னீர்களே என்று சொல்லி தப்பித்துக்கொள்ள முடியாது. "நாங்கள் செய்யவில்லை என்றால், கசையடி தண்டனை கொடுங்கள்" என்றெல்லாம் சொன்னீர்கள். இன்னும் என்னவெல்லாமோ சொன்னீர்கள். அதையெல்லாம் நான் இப்பொழுது இங்கே சொல்வ தென்றால் மன்றத்திற்கு இழுக்கு நேரிடும். அப்பொழுது பொது மக்கள் ஏமாந்துவிட்டார்கள். இப்பொழுது நன்றாக உணர்ந்துகொண்டு விட்டார்கள். "மிரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்" என்பது மாதிரி, எல்லாம் காங்கிரஸ்தான் செய்கிறார்கள் என்று

சொல்கிறீர்கள். எங்கள் மீது எதற்கு எடுத்தாலும் பழிபாவத்தைப் போடுகிறீர்கள். இதைத் தேர்தல் பிரச்னையாக, அரசியல் பிரச்னையாகக் கருதவேண்டாம். இது பொருளாதாரப் பிரச்னை என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும். பருப்பு வியாபாரத்தைப் பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பருப்பு கெட்டுவிட்டது என்று சொன்னார்கள். ஒரு டெண்டர் கூட கால்ஃபார் பண்ணாமல் ஏன் விற்றார்கள் ? இது பொறுப் புள்ள செயலா ? ஏன் டெண்டர் கால்.'.பார் பண்ணவில்லை ? ரூ. 0·95 லிட்டருக்கு என்று விலை வைத்து கொடுத்தார்கள். வெளியில் ரூ. $3\frac{1}{2}$-க்கு விற்கப்பட்டது. அதில் எவ்வளவு தூரம் நஷ்டம் என்பதைப் பார்க்க வேண்டும். அதற்குச் சொல்கிறார்கள் ரூ. 22 லட்சம் நஷ்டத்தைக் குறைத்திருக்கிறோம் என்று சொல்கிறார்கள். படி அரிசித் திட்டத்திற்கு ரூ. 5 கோடி செலவிடும்பொழுது, இந்த நஷ்டத்தையும் ஏன் ஏற்றுக் கொண்டிருக்கக்கூடாது ? ரூ. 22 லட்சத்தையும் அதோடு ஏற்றுக்
பி. ப. 2-00 கொண்டிருக்க முடியாதா ? டெண்டர் கால்ஃபார் பண்ணியிருக்கவேண்டும். இதையெல்லாம் கேட்டால் ஏதோ சால்ஜாப்பு சொல்வது நல்லது இல்லை.

இந்தக் காரியங்களையெல்லாம் செய்யும் போது, ஸ்டேட் ட்ரேடிங் மூலம் சர்க்காரே பூராவாக எடுத்து நடத்தினாலும் சரியாக இருக்கும். ஒரு பக்கம் வியாபாரியும், மறு பக்கம் சர்க்காரும் செய்வது அவ்வளவு நலமாக இருக்காது. காங்கிரஸ் கட்சியின் திட்டம் என்னவென்றால், ஸ்டேட் ட்ரேடிங் நடத்த வேண்டுமென்றால், நல்ல விலையை விவசாயி களுக்குக் கொடுக்க வேண்டும். அதே நேரத்தில் நாட்டிலே மக்களுக்கு நம்பிக்கை ஏற்படும் வகையில், ஒரு திட்டத்தை "நோ லாஸ், நோ ப்ராஃபிட்", லாபமும், நஷ்டமும் இல்லாத வகையில் சர்க்காரே பூராவாக வாங்கும் பொறுப்பை எடுத்துக் கொண்டு செய்தால், விவசாயிகளுக்கு நியாமான விலை, கட்டுப்படியாகும் விலை கொடுத்து, சாப்பிடுகிறவர் களுக்கும், "கன்ஸ்யூமர்ஸ் ப்ரைஸ்", அதன் மேல் 10 சத வீதம் குறைத்துக் கொடுத்தால்தான் நன்மை பயக்கும் என்று நம்புகிறோம்.

அந்த வகையில் வெட்டுப் பிரேரணையை கொடுத்திருக்கிறோம். பட்டணத்தில் இருக்கும் மக்களுக்கு மட்டும் கொடுக்கிறோம் என்றால், மக்கள் எங்களைக் கேட்கிறார்கள், கிராமங்களில் கேட்கிறார்கள், நாங்களும் உங்களுக்கு வோட்டுப் போடவில்லையா ? என்று. ஆகவே, போடவேண்டும் என்றால், பொறுப்பு உங்களுடையது ; எப்படிப் போடுவீர்கள் என்பது எங்களுக்குத் தெரியாது. படி அரிசி எல்லோருக்கும் கிடைக்கச் செய்ய வேண்டும். அதற்கான பொறுப்பினை நீங்கள் ஏற்றுக் கொண்டு செயல் படவேண்டும் என்று திரு. விநாயகம் கொடுத்துள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரித்து என் உரையை முடிக்கிறேன்.

* **மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியத்தின்மீது நடந்த விவாதம் மிக நல்ல சூழ்நிலையிலும், மிகச் சுவையாகவும், பயன் உள்ளதாகவும் நடைபெற்ற தற்காக மாமன்றத்தினுடைய எல்லாப் பகுதி உறுப்பினர்களுக்கும் என் னுடைய நன்றியையும் வணக்கத்தையும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக் கிறேன். இரண்டு நிமிஷம் நான் வெளியே போயிருந்ததற்காக, மாண்பு மிகு உறுப்பினர் அவர்கள் அதைப் பற்றிக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். சபையினுடைய நடவடிக்கைகளில் உள்ள விழிப்புணர்ச்சிக்காகப் பாராட்டு கிறேன். ஆனால் புதிதாக வந்தவர் அவர், போகப்போகத் தெரிந்து கொள்வார்கள். யாராவது ஒரு மந்திரி இருந்தால் போதும். என் சக அமைச்சர் திரு. முத்துச்சாமி இருந்தார்கள். எல்லா மந்திரிகளும் எப் பொழுதும் இங்கே உட்கார்ந்துகொண்டிருக்க வேண்டும் என்பதில்லை. (குறுக்கீடு) கன்ஸர்ண்ட் மினிஸ்டர் கூட எப்போதும் இருக்க வேண்டும் என்பதில்லை. கூட்டுப் பொறுப்புத்தான். வேறு அமைச்சர் இருந்தால் போதும். வேறு அமைச்சரே கூட பதிலும் சொல்லலாம். 'கலெக்டிவ் ரெஸ்பான்ஸிபிலிடி' தான். அதுதான் பொருள். அதுதான் சம்பிரதாயம். திரு. கனகசபை அவருடைய குடும்பத்தைச் சேர்ந்தவர் மரணப் படுக்கையில் இருக்கிறார் என்று சொன்ன விஷயத்தை ஒட்டி, அவர்கள் கூப்பிட்டதற்கு இணங்க ஒரு நிமிஷம் போனதற்காக அதைக் குறிப்பிட்டதற்கு நன்றியைத



தெரிவிக்கிறேன். அதேபோல நல்ல பொறுப்புக்களை ஏற்று இருக்கிற எதிர்க் கட்சி, சில வேளைகளிலே அவையில் கூட்டமே இல்லாமல் இருக் கிறது. அப்படியில்லாமல் அவர்களெல்லாம் இருந்தால், எங்களுக்கும் அது பயன் உள்ளதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அது சின்ன விஷயம்.

எல்லா உறுப்பினர்களும், எதிர்க் கட்சித் தலைவரும் கூட, வேகமாக பேச வேண்டுமென்று சொன்னார்களே தவிர, புதிதாக இன்றைக்கு ஏதா வது சொல்லுகிறார்களா என்று பார்த்தால், புதிதாக எதுவும் சொல்ல வில்லை. அப்படியேதான் இருந்தது அவர்கள் பேச்சு. அதையே திரும் பத் திரும்பச் சொன்னார்கள். அதனாலே என்னுடைய வேலையைக் குறைத் திருக்கிறார்கள். என்னுடைய கட்சிக்காரர்கள் சொன்னதற்கும் சந்தோஷம். ஒரு கட்சி என்ற ஒரு நிலை இல்லாமல், திரு. ராமசாமி அவர்கள் பேசிய போது, காங்கிரஸ் உறுப்பினரா என்று எண்ணக்கூடிய அளவில்பேசி னார்கள். அதை நான் வரவேற்கிறேன். அதே மாதிரித்தான், நம்முடைய —நான் ஆச்சரியப்படவில்லை—முதலியார் அவர்கள, அவர்களே பெரிய நிலக்கிழார். அவர்கள் எங்கள் கட்சியின் ஆதரவோடு இருக்கும் நிலை இருந்து பேசினார்கள். எல்லோருமே நல்ல வகையில் பேசினார்கள். இதிலிருந்து ஒன்று நிரூபணம் ஆகிறது. அதற்காக நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். படி அரிசித் திட்டம் போடலாமா, அது விவேகமா, 1968-ல் படி அரிசியைப் போடலாமா, அது விஸ்தரிக்க வேண்டிய ஒன்று தானா, என்பதில் சந்தேகம் இல்லாமல், அதை எல்லோரும் ஆதரிக் கிறார்கள். போட வேண்டியதுதான், முகூர்த்தம் பார்க்க வேண்டியது தான் பாக்கியேதவிர, மற்றப்படி எல்லோரும் ஒத்துக்கொள்கிறார்கள். இதைக் கண்டு முன்னேற்றக் கழகம் வெற்றி கொள்ளலாம். தலை சிறந்த வெற்றி. அதற்காக மீண்டும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு கேள்வி கேட்டார்கள். இந்த மாதம் போடவில்லையா என்று. ஆமாம், சொன்னோம், ஒத்துக் கொள்கிறோம். இப்பொழுது போடமுடிய வில்லை. அப்பொழுது சொன்னோம். இப்பொழுதும் சொல்கிறோம். போட முடியவில்லை என்றால், போடவே மாட்டார்கள் என்று பொருள் இல்லை. அல்லது விட்டுவிட்டோம் என்றும் பொருள் இல்லை. ஆகவே, விவாதத் திற்கு அதிகம் பதில் சொல்ல வேண்டியதில்லை என்று நினைக்கிறேன்.

இன்னொரு ஆபத்தான விஷயம். முதல்அமைச்சர் 5 கோடி ரூபாய் ஆகியது என்று சொன்னார்களே, நீங்கள் $2\frac{1}{2}$ கோடி ரூபாய் என்று சொல் கிறீர்களே, வேறு வேறு தொகைகளைச் சொல்கிறார்களே, என்றார்கள் (குறுக்கீடு) முடிச்சுப் போடுகிறார்கள் என்கிறார். அவ்வளவு சின்ன வேலையை அவர்களுக்குக் கொடுக்க மாட்டேன் (ஆரவாரம்). முதல் அமைச்சர் சொன்னதும், நான் சொன்னதும், இரண்டும் ஒன்றுதான். அதை விளக்க வேண்டும் என்று நினைக்கிறேன். முதல் அமைச்சர் தன்னுடைய நிதி நிலை அறிக்கையின் 51-வது பக்கத்திலே—உறுப்பினர் கொஞ்சம் வேகமாகப்படித்துவிட்டார்கள் போலும், பொறுத்துப்படித்து இருந்தால் புரிந்திருக்கும்—சொல்லியிருக்கிறார்கள் :

" உணவு தானிய விற்பனையின் மீது வழங்கப்படும் உதவித் தொகைக் கான நிதி ஒதுக்கம், அப்போது '124—உணவுத் தானியங்களின் அரசு வாணிபம்' என்கிற மூலதனத் தலைப்பின் கீழ் வகை செய்யப்பட்டிருந்தது. அது, இப்போது வரவு-செலவுத் திட்ட மரபுகளைப் பின்பற்றி, நடைமுறைக் கணக்குக்கு மாற்றி எழுதப்பட்டுள்ளது. இதனால், நடைமுறைக் கணக்கில் செலவினம் 5 கோடியே 10 இலட்சம் ரூபாய் அளவிற்கு உயர்ந்துள்ளது " என்று சொல்லியிருக்கிறார்கள். அதையேதான் நானும் சொன்னேன். இப்பொழுது என்னுடைய முடிவுரையிலும் சொல்லுகிறேன். உணவு தானியங்கள், அரிசி கொடுப்பதற்கு 42 லட்சம் குடும்பக் கார்டுகள், ஒரு கோடியே இருபத்தாறு லட்சம் பேரும் இருக்கிறார்கள். அதற்கு தமிழக அரசுக்கு ஆகிய செலவு ரூ. 5.1 கோடி. அதிலே $2\frac{1}{2}$ கோடி அந்தப் பகுதி கணக்கு. அடிக்கடி எதிர்க் கட்சித் தலைவர் சொல்லுகிறாரே அந்த நகரப் பகுதிக்கு $2\frac{1}{2}$ கோடி என்று நான் சொன்னேன். $2\frac{1}{2}$ கோடிக்கான விவரங் கள் உரையிலேயே இருக்கிறது. ஆகவே, $2\frac{1}{2}$ கோடி என்பது சரியில்லை என்பது சரியானதாகாது. அதை மாத்திரம் சொல்ல விரும்புகிறேன்.

அது அவர்களுக்கும் தெரியும். சொல்லிப் பார்க்கிறார். அவ்வளவுதான். திரு. கருத்திருமன் பாஷையில் சொல்ல வேண்டும். அவர்களுக்குத் தெரிய வில்லை என்று சொல்லக் கூடாது. அப்படிச் சொல்வதானால், எதிர்க் கட்சித் தலைவர் பதவியே கிடைத்திருக்காது. இங்கே 15 வருஷம், 10 வரு ஷம் டெல்லிப் பட்டணத்திலே இருந்தவர்கள். அங்கேயும் இதையேதான் பேசிக்கொண்டு இருந்தார்கள். அக்ரிகல்சருக்குக் கொடுக்க வேண்டும், என்று. இன்னும் சொல்லப்போனால், அவர்கள்தான் மந்திரியாகப் போகி றோம் என்று இருந்தார்கள். அவருடைய நிலையைப் பார்த்து பரிதாபமாக இருக்கிறது. வந்திருந்தால் இந்தப் பணியை எப்படிச் செய்வாரோ, ஆனால் தமிழ்நாட்டு மக்கள் புத்திசாலிகள். அப்படிப்பட்ட கெட்டகாலத்தை ஏற் படுத்திக்கொள்ளவில்லை.-ஆகவே, ஐந்து கோடி ரூபாயில் சென்னை நகருக் குப் படி அரிசித் திட்டத்திற்காக ஆன செலவு $2\frac{1}{2}$ கோடி. மற்றவைகளுக்கு, போனஸ் போன்றவைகளுக்குச் செலவு $2\frac{1}{2}$ கோடி. ஆகவே, முதல் அமைச்சர் சொன்னதற்கும், நான் சொன்னதற்கும் எந்தவிதமான முரண்பாடும் இல்லை.

அடுத்து திரு. பிரம்மானந்த ரெட்டியைப் பற்றிச் சொன்னார்கள். நேரிலே ஆந்திராவிலேயே தெரிந்துகொண்டேன். ரூ. 46 கோர்ஸ் வெரய்டிக்கு, மோட்டா சம்பாவிற்குக் கொடுக்கிறார்கள். இங்கே நாம் ரூ. 43 கொடுக் கிறோம். அங்கே வசுமதி அரிசி மாதிரியுள்ள அரிசிக்கு ரூ. 70 கொடுக் கிறார்கள். இங்கேயுள்ள மோட்டா அரிசிக்கு அந்த விலை, ரூ. 70 கொடு என்றால் அது பொருத்தமாகாது. தப்பித்துக்கொள்கிறோம் என்கிறார்கள். நாங்கள் போய் திரு. பிரம்மானந்த ரெட்டி திரைமறைவிலா தப்பித்துக் கொள்ள வேண்டும்? திரு. ஜகஜீவன்ராம் அவர்களைப் பற்றிச் சொன்னார்கள். அவர்கள் சொல்கிறார்கள் என்று மட்டுமல்ல; அக்ரிகல்சுரல் ப்ரைஸ் கமிஷன் சொல்கிறது என்று மட்டுமல்ல; இந்த அரசாங்கமே விலைவாசிகள் அத்யாவசியப் பொருள்கள் மீது குறைக்கப்பட வேண்டும் என்று இருக்கிறது. விலைவாசி ஏற்றத்தை எதிர்த்ததற்காகவே ஜெயிலுக்குப் போனவன் நான். விலைவாசிகளைக் கட்டுப்படுத்த வேண்டும் என்கிற போராட்டத்தில் ஈடுபட்டவன் நான். எனக்கு ஆறு மாதம் கடுங்காவல் தண்டனை கொடுத்தார்கள் இங் கிருந்த புண்ணியவான்கள்; இங்கே மந்திரிகளாக இருந்தவர்கள். என் னுடன் தண்டனை பெற்றவர்களுக்கு நான்கு மாதம் என்றால், எனக்கு ஆறு மாதம் தண்டனை போட்டார்கள். என்னுடைய தலைமையில் மறியல் நடைபெற்றது. என்னோடு ஐந்து பேர்கள் ஜெயிலுக்கு வந்தார்கள். என்னோடு சிறைச்சாலைக்கு வந்த தோழர்களில் ஆயிரம்விளக்கு நகரசபை உறுப்பினராக இருந்த, என்னுடைய அருமை நண்பர் திரு கோ. சு. மணி அவர்களும் ஒருவர். விலைவாசியைக் குறைக்க வேண்டும் என்பதற்காக நடத்திய போராட்டத்தில் என்னோடு கலந்துகொண்டு, சிறைத் தண்டனை அடைந்து, என்னோடு சிறைச்சாலைக்கு வந்த என்னுடைய அருமைத் தோழரை சிறைச்சாலையிலிருந்து பிணமாகத்தான் விடுதலை செய்தார்கள். உயிருடன் சிறைச்சாலைக்குச் சென்ற என்னுடைய தோழன், விடுதலை பெறுவதற்கு முன்னால், பிணமாய்த்தான் சிறைச்சாலையிலிருந்து சுடு காட்டுக்கு அனுப்பப்பட்ட நிலை ஏற்பட்டது. ஐந்து பேரை அழைத்துக் கொண்டு போனேன். ஆனால், நான்கு பேர்தான் வெளியே வந்தோம். நான் இந்த மந்திரிப் பதவியை ஏற்றுக்கொண்டவுடனே, இந்த விலை வாசியைக் குறைப்பதற்கான இந்த ஒரு காரியத்தைச் செய்ய வேண்டும் என்பதைத்தான் என்னுடைய முதல் கடமையாகக் கருதிக்கொண்டு, இதைச் செய்கிறேனே தவிர, ஏதோ உபசாரம் பெறுவதற்காகவோ, எங்க ளுக்குக் கிடைத்த பதவி அந்தஸ்துக்காகவோ நாங்கள் ஒருநாளும் கருதிய தில்லை. இழந்துவிட்ட அந்த நண்பரின் நினைவாக உணவுத் தானியங்களின் விலைகளைக் கட்டுப்படுத்துவதுதான் அடிப்படை அம்சம். அதுதான் மற்ற விலைவாசிகளைக் குறைப்பதற்கு மிக அடிப்படையான அம்சம். அப்படி கட்டுப்பாடு செய்யும்போது, அது கட்டுபடியாகக்கூடிய விலையாகவும் இருக்க வேண்டும் என்பதையும் இந்த அரசு மிகத் தெளிவாக உணர் ருக்கிறது என்பதை நான் ஏற்கனவே சொன்னேன். ஆகவே, நாங்கள் யார் பின்னாலும் புகுந்துகொள்ள வேண்டிய அவசியம் இல்லை. இது நியாய மானது என்று திட்டவட்டமாகத் தெரிகிறது. விவசாய மக்களும் நல்ல வகையில் ஆதரித்திருக்கிறார்கள் என்று நான் சொல்லிக்கொள்கிறேன்.



மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. பாலசுப்பிரமணியம் அவர்களும், கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர் திரு. சங்கரய்யா அவர்களும், பத்து எக்கருக்கு மேலே நிலம் இருப்பதைப் பற்றிய விவரங்களைக் கேட்டார்கள். ஆரம்பத் திலேயே அதைத்தான் சொன்னேன். ஒருவர் பத்து எக்கருக்கு மேலே நிலம் வைத்திருக்கக்கூடிய நிலையில், ஆறு லட்சம் ஏக்கர்தான் இருக்கிறது. மொத்தம் 65 லட்சம் ஏக்கரில் 6 லட்சம் ஏக்கர்தான் இந்த வகையில் இருக்கிறது. அதாவது, பத்தில் ஒரு பங்குதான் இருக்கிறது. அதுவும் நாம் இப்பொழுது மார்க்கெட்டபிள் சர்பிளஸ் என்று சொல்கிறோம். அதனால் பெரிய லட்சியத்தை அடைவதற்கு இல்லை. பெருமளவில் அதிகமான ஏக்கர்களில் அத்தகைய நில உரிமைகள் அதிகமாக இல்லை; ஆறு லட்சம் ஏக்கர்தான் இருக்கிறது.

மதிப்பிற்குரிய உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் சில கருத்துக் களைச் சொன்னார்கள். அவர்களும் தங்களுடைய கொள்கையில் இன்னும் அழுத்தமாகத்தான் இருக்கிறார்கள். கொஞ்சம் நடைமுறையில் இருக்கும் நிலைமைகளைப் பார்த்தால், மதிப்பிற்குரிய ராஜாஜி அவர்கள் பதவியில் இப்பொழுது இருந்தாலும், அவரும் இப்படித்தான் செய்வார்கள்.

அவர்களே கூட கண்ட்ரோல் வைத்திருந்தார்கள். பார்ஷல் டீ-கண்ட் ரோல் வைத்தார்கள். கோயமுத்தூரையும், தஞ்சையும் இணைத்தார்கள். விசாகப்பட்டிணம், நெல்லூர் என்று இப்படி ஐந்து மண்டலங்களாகத்தான் ஆரம்பித்தார்கள். ஒரே சீராக ஆக்கிவிடவில்லை. ஆனால், ஜில்லாக்களுக்கு மத்தியில் நடமாட்டத்தில் தடை இருக்கக்கூடாது என்று சொன்னார்கள். அந்தக் கருத்தை ஏற்றுக்கொள்ளுகிறேன். தாலூக்காவிற்குத் தாலூக்கா நடமாட்டக் கட்டுப்பாடுகள் எல்லாம் இருக்கக்கூடாது என்பதையும் நான் ஏற்றுக்கொள்ளுகிறேன். ஆனால், ப்ரொக்யூர்மெண்ட் முடிந்தவுடனே நாங்கள் எடுத்து விடுகிறோம். இதெல்லாம் இருப்பதால், எங்களுக்கு ஒன்றும் சந்தோஷம் இல்லை. ராஜாஜி அவர்களுக்குக் கிடைத்த பெயரில் கால்வாசி யாவது எடுக்க வேண்டும் என்ற ஆசை எங்களுக்கு மட்டும் இருக்காதா? ஆனால், இது தனிப்பட்ட பிரச்சினை அல்ல. மூன்றேமுக்கால் கோடி மக்க ளுக்குச் சாப்பாடு போடுகிற ஒரு பெரிய வேலை இது; மூன்றேமுக்கால் கோடி உயிரோடு விளையாடக்கூடாது என்ற பொறுப்பு எங்களுக்கு இருக்கக் கூடிய காரணத்தால்தான், அதை மேற்கொள்ள முயலுகிறோமே தவிர மற்றப்படி, ஜில்லாக் கட்டுப்பாட்டைப்பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை.

மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் திரு. சங்கரய்யா அவர்களும், கம்யூனிஸ்டுக் கட்சியைச் சேர்ந்த திரு. சுப்பைய்யா அவர்களும், சோஷலிஸ்டு கட்சி நண்பர்களும், மற்றவர்களும் பேசினார்கள். பிரத்தியேகமாக ஒன்றைச் சொன்னார்கள். வேறு இடங்களுக்கு இதை விஸ்தரிக்க வேண்டும், அதிகமாகப் போடவேண்டும், படியரிசித் திட்டத்தை நாங்கள் ஒன்றும் சொல்லவில்லை என்று சொன்னார்கள் அது நல்ல வரவேற்கத்தகுந்த கருத்தாகும். இந்த அரசாங்கம் அதை மிக அனுதாபத்தோடு அமல்படுத்த இருக்கிறது.

மதிப்பிற்குரிய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். முதலிலேயே அவர் கொள்முதலுக்குத் த னி யத்தை அளந்து விட்டார். சட்ட விதிகளில் சொல்லியிருப்பதற்குப் பத்து மூட்டைகள் அதிகமாகவே அவர் கொள்முதலுக்கு அளந்தார்கள். கட்டு படியாக இல்லாவிட்டால் எங்கே கொடுத்துவிடப் போகிறார்?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நான் சட்டத்திற்கு மிகவும் கட்டுப்பட்டுக் கொடுத்திருக்கிறேன். இருபது வருஷங்களாகவே இப்படித்தான் நான் கொடுத்து வருகிறேன். அதற்காக மூன்று லட்ச ரூபாய் என்னுடைய குடும்பத்திற்கு நஷ்டம்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** ஒரு ஏழை விவசாயிக்கு நஷ்டமே மூன்று லட்ச ரூபாய் என்றால், அவருக்கு எவ்வளவு பெரிய சொத்து இருக்கவேண்ம் என்று எண்ணிப் பார்க்கவேண்டும். (சிரிப்பு)

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இருபது வருஷக் கணக்கைச் சொல்கிறேன். அமைச்சர்களெல்லாம் மாதம் 500 ரூபாய் சம்பளம் வாங்கிக் கொண்டு செலவிடுகிறார்களே, எனக்கு அந்த வருவாய் கூட இருக்கக் கூடாதா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** நான் சீக்கிரமாகவே உரையை முடிக்க வேண்டும் என்று விரும்புகிறேன். கட்டுபடியாகக்கூடிய விலையைக் கொடுத்துத்தான் விவசாய மக்களிடமிருந்து கொள்முதல் செய்யப்படுகிறது. இரசாயன உரங்களுக்குச் சென்ற ஆண்டு கள்ள மார்க்கெட் இருந்தது. இப்பொழுது வாங்குவோர் இல்லை. கள்ள மார்க்கெட்டுக்கு இப்பொழுது இடமே இல்லை. அந்த அளவுக்கு இரசாயன உரம் அளிக்க முடிந்தது. உயர்தர விதைகள் அளிக்கிறோம். ஒரு போகத்தை இரு போகமாக்குவதற்கான காரியங்களில் ஈடுபடுகிறோம். விவசாயிகளுக்குக் கடன் வழங்கக்கூடிய காரியங்களைச் செய்துகொண்டு வருகிறோம். விவசாயிகள் நன்றாகத்தான் இருக்கிறார்கள். விவசாயிகளுக்குச் செய்யவேண்டிய இத்தகைய நல்ல காரியங்களை மேலும் அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் இனி இருக்கின்றன.

சென்னை நகரத்தைப் பொறுத்த வரையில், ஒரு மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்தில் அறிவிக்க விரும்புகிறேன். சென்னை நகரத்தில் ரேஷன் முறையில் வாரத்திற்கு ஒரு தடவை ரேஷன் வழங்கப்பட்டு வருகிறது. வாரந்தோறும் வாங்குவதற்குப் பதிலாக ஒரு மாதத்திற்குரிய ரேஷனை மொத்தமாக சேர்த்து வாங்கிக் கொள்ளுகிறோம், அதனால் நான்கு தடவை வாங்கும் சிரமத்தைக் குறைக்கவேண்டும் என்று பல பேர்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள் ; வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள். அந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் விருப்பம். ஆனால், புழுங்கல் அரிசி, பச்சை அரிசி என்ற இரண்டு விவகாரமும் வருகிறது. புழுங்கல் அரிசியைப் பொறுத்து, அதை ஒத்துக்கொண்டு விட்டால், போக்குவரத்து சம்பந்தமாக ஏதாவது தவிர்க்க முடியாத இடையூறுகள் வந்து விட்டால் சரியாக இருக்காது என்று கருதி, முதல் கட்டமாக, பச்சையரிசிக்கு இந்தத் திட்டத்தைக் கொண்டுவர இருக்கிறோம். மாதத்திற்கு ஒரு முறை மொத்தமாக வாங்கிக் கொள்ளலாம் என்ற இந்தத் திட்டம், பச்சை அரிசியைப் பொறுத்த வரையில், இந்த மார்ச் மாதம் 15-ந் தேதியிலிருந்து அமலுக்கு வரும். இந்த மாதம் 15 நாட்களுக்குரிய ரேஷன் மொத்தமாகக் கொடுக்கப்படும். அடுத்த மாதம், முதல் தேதியிலிருந்து, ஒரே த்டவையாக வாங்கிக்கொள்ளப் போகிறோம் என்று சொல்லி விட்டால், பச்சை அரிசி கார்டு வைத்திருப்பவர்கள் அவ்வாறு ஒரே தடவையில் வாங்கிக் கொள்ளலாம். இதிலே ஒரே தடவைதான் வாங்கவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. வாரா வாரம் வாங்க விரும்பினால், வாரா வாரமும் வாங்கிக் கொள்ளலாம். இப்போதைய ஏற்பாட்டின்படி சென்னை நகரத்திற்கு இந்தத் திட்டம் வருகிறது என்பதை இந்த நேரத்தில் நான் மகிழ்ச்சியோடு சென்னை நகர மக்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இந்த விவாதத்தில் பலர் பல கருத்துக்களை இங்கே எடுத்துரைத்தார்கள். உணவு முனையில் இன்னும் பல விஷயங்களைச் செம்மைப்படுத்த வேண்டும் என்றுதான் இந்த அரசாங்கம் விரும்புகிறது. இந்த மாமன்றத்தில் மட்டுமல்ல, மற்ற மாநிலங்களில் உள்ளவர்களும், மத்திய அரசாங்கத்தில் உள்ளவர்களும் நம்முடைய மாநிலத்தில் கடைப்பிடிக்கக் கூடிய உணவுக் கொள்கையை மிகப் பெரிய அளவில் பாராட்டுகிறார்கள். ஓராண்டுக்கு முன்னால் என்ன என்னவோ நிலைமைகளை இந்த மாநிலத்தில் நாம் பார்த்தோம். ரேஷன் கடைகளின் முன்னால் எத்தனை க்யூ வரிசைகள் நின்றன ? ஓட்டலில் கூட சாப்பாடு கிடைக்காத நிலை, எப்படியெல்லாம் இருந்தது ? எத்தனை பேர் செத்தார்கள் ? எத்தனை வழிப்பறி நடந்தது ? எத்தனை கிடங்குகள் சூறையாடப்பட்டன ? எத்தனை துப்பாக்கிப் பிரயோகங்கள் நடைபெற்றன ? அந்தப் பழைய நிலைகளெல்லாம் சென்ற ஓராண்டுக் காலத்தில் மாறி, இன்றைக்கு "க்வாண்டிடி"-யைப் பற்றிய விவகாரம் இல்லாமல், தரத்தைப் பற்றியும், இன்னும் மற்றவற்றையும்



உணவுப் பற்றிச் சொல்லும் அளவுக்குத்தான் நிலைமை இருக்கிறது. பொருள் கிடைக்கவில்லை என்ற பிரச்சினை இல்லை, என்ற நிலையில், முதல் கட்டத்தைத் தாண்டி, இரண்டாவது கட்டத்திற்குப் பிரவேசித்திருக்கிறோம். கடந்த வாரம் நான் ஹைதராபாத்துக்குச் சென்றிருந்தேன். அங்கு ஆந்திர மாநில முதலமைச்சர் அவர்களைச் சந்தித்துப் பேசியதன் விளைவாக, "மொலகுலு" என்று சொல்லக்கூடிய, நெல்லூர் அரிசிக்கு ஒப்பான, உயர்தர அரிசி 15,000 டன் வரையில் நமக்குக் கொடுப்பதாக அவர்கள் வாக்களித்திருக்கிறார்கள். அதற்காக ஆந்திர முதலமைச்சர் திரு. பிரம்மானந்த ரெட்டி அவர்களுக்கும், ஆந்திர உணவு அமைச்சர் அவர்களுக்கும் இந்த மாநிலத்தின் சார்பாக நான் நன்றி தெரிவித்துக் கொள்ளுகின்றேன். பக்கத்து மாநிலமான கேரள மாநிலத்திற்கும் நாம் மிகுந்த பரிவு உணர்ச்சியுடன் நடந்துகொண்டு, நம்மாலான அளவுக்கு உதவக் கூடிய சாத்தியக்கூறுகளைச் செய்துகொண்டு வருகிறோம்.

கோதுமையைப் பற்றி ஓரிரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். ஏற்கனவே கிடைத்து வந்த அளவில் மூன்றில் ஒரு பங்குதான் இப்பொழுது நமக்குக் கோதுமை கிடைக்கிறது. முன்பு மத்திய அரசினர் கோதுமைக்காக சப்ஸிடி கொடுத்துக் கொண்டிருந்தார்கள். முன்பு டன் 550 ரூபாய்க்கு விற்ற கோதுமையின் விலையை ஜனவரி முதல் தேதியிலிருந்து 670 ரூபாய்க்கு உயர்த்தி விட்டார்கள். அதற்கு முன் கோதுமையின் விலை டன் ஒன்றுக்கு 550 ரூபாயாக இருந்தது. அப்பொழுது சப்ஸிடி இருந்தது. சென்ற வருஷம் கொடுத்ததில் மூன்றில் ஒரு பங்குதான் இப்பொழுது கிடைக்கிறது. இதற்காகவும் நாம் போராட வேண்டும். கோதுமை சாப்பிடுங்கள் என்று சொல்லிக் கொண்டிருந்த நிலைமை போக, இப்பொழுது கோதுமை ஆலைகளை ஏற்படுத்தலாம் என்றால், அதற்கு அனுமதி கொடுப்பதில்லை. 120 ரூபாய் ஸப்ஸிடி கொடுத்துக்கொண்டிருந்ததைக் கூட ஜனவரி 1-ந் தேதியிலிருந்து நிறுத்தி விட்டார்கள். காங்கிரஸ் அரசாங்கம்தான் கோதுமை சாப்பிடச் சொன்னார்கள். அவர்கள் தான் அந்த அளவையும் குறைத்து, சப்ஸிடியையும் நிறுத்தி விட்டார்கள். இதையெல்லாம் சொன்னால், குறைசொல்வதாகச் சொல்வார்கள். அதைச் சொன்னால், வடநாட்டுக்காரர்கள்—தென்னாட்டுக்காரர்கள் என்று பாகுபாடு படுத்திச் சொல்வதாகச் சொல்வார்கள். கோதுமையின் விலை முன்பைவிட 100 ரூபாய், 120 ரூபாய் என்று ஏறியிருக்கிறது. அந்த ஏற்றத்திற்கு சப்சிடி கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தொழிலாளர் வர்க்கம் கோதுமையை உணவாக ஏற்றுக்கொண்டிருக்கிறது. அந்த நிலையில் கோதுமைக்குச் சப்ஸிடி கொடுக்காமல் இருப்பது நியாயமல்லவென்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். இதற்காக தமிழக அரசின் சார்பிலும், நம்முடைய முதல்வர் அவர்கள் சார்பிலும் வாதாடிப் பெற வேண்டிய நிலைமையில் நாம் இருக்கிறோம். கோதுமை அதிக அளவில் வேண்டும் என்பதை எல்லாக் கட்சிக்காரர்களும் மத்திய அரசுக்கு தெளிவுபடுத்தி வற்புறுத்த வேண்டும். சர்க்கரையைப் பொறுத்தமட்டில் இந்த மாநிலத்தில் தட்டுப்பாடு இல்லாமல் இருந்து வருகிறது. பருப்பைப் பற்றிச் சொன்னார்கள். இன்னும் ஐந்து வருடங்களுக்குச் சொல்லிக் கொண்டிருக்கலாம்.

சென்ற ஆட்சியில் உத்திரப்பிரதேசத்திலிருந்து உருளைக்கிழங்கை இறக்குமதி செய்து கும்பகோணத்திலும், மதுரையிலும், சென்னையிலும், மற்றும் பெரிய நகரங்களிலும் விநியோகம் செய்யப்பட்டது. அதன் மூலம் அரசாங்கத்திற்கு ஏராளமான அளவில் நஷ்டம் ஏற்பட்டது. சுமார் 22 லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கும் என்று மதிப்பிடப்படுகிறது. இதைப் பற்றிக் கேட்டபோது கலெக்டர் சரியான முறையில் டெண்டர் கொடுக்கவில்லை என்றெல்லாம் சொல்லப்பட்டது. இங்கு இந்த மாமன்றத்தில் நடத்தப்படும் விவாதங்கள் எல்லாம் இந்த மாநில மக்களின் நன்மைக்கு வழி செய்வதாய் அமைய வேண்டும் என்பதற்காகவே நாங்கள் பொறுப்பு ஏற்றுக்கொண்டிருக்கிறோம். நீங்கள் எந்த விதமான குற்றச்சாட்டுகளையும் கண்டனங்களையும் எழுப்பினாலும், அதைத் தாங்கிக் கொள்ளத்தான் நாங்கள் பழக்கப்பட்டவர்கள். நீங்கள் இந்த அரசைப் பாராட்டாவிட்டாலும் பரவாயில்லை, ஆனால் காரணமற்ற பழி சுமத்தாதீர்கள் என்று கேட்டுக்

கொள்கிறேன். மற்றும் எந்தவித தஸ்தாவேஜையும் காண்பிப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். நாளைக்குப் பப்ளிக் அக்கவுண்ட் கமிட்டிக்குப் பதில் சொல்ல தயாராக இருப்போம். ஆகவே, வீணாக பழி சுமத்த வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நீங்கள் அதிகாரிகளை எந்த முறையில் பழக்கியிருக்கிறீர்களோ, அந்த அளவில்தான் அவர்கள் பணியாற்றுகிறார்கள். எங்களுக்கு வேண்டியவர்களோ, எங்களது கட்சிக்காரர்களோ, எங்கள் கட்சியின் உறுப்பினர்களோ இல்லை. லாப நோக்கத்தோடு நடந்து கொண்டார்கள் என்று சொல்வது உண்மைக்குப் புறம்பான ஒரு கூற்று என்று தெரிவித்துக்கொள்கிறேன். பெரிய மன்றங்களிலே பேசும் அக்கறையற்ற பேச்சு என்பதையே இது எடுத்துக்காட்டுகிறது. எங்கேயாகிலும் தவறான காரியங்கள் நடந்திருக்கின்றன என்றால் அதை நிரூபியுங்கள், நீங்கள் சொல்வது உண்மையாகயிருந்தால் தக்க நடவடிக்கைகளை எடுத்துக் கொள்கிறோம். ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளைப் பொதுப்படையாகக் குறிப்பிட வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படிப்பட்ட வாதங்களைத் துவங்காமல் இருப்பது நம்முடைய மன்றத்தின் மரபுக்கும், தமிழ்ப் பண்பாட்டிற்கும், ஜனநாயகக் கொள்கைக்கும் உகந்தது என்று கூறிக்கொள்கிறேன். எந்தத் தவறும், எந்த முறைகேடான காரியங்களும் நடைபெறவில்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மன்றத்தில் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரும், எதிர்க்கட்சி உறுப்பினர்களும், ஆளும் கட்சி உறுப்பினர்களும் தங்கள் தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். உணவுத் துறை மேலும் நல்ல முறையில் வெற்றிபெற உங்களுடைய பேராதரவைக் கொடுக்க வேண்டுமென்று கூறி முடிக்கக் கருதுகிறேன். உணவு முனையிலே அரசியல் இல்லையென்று சொன்னார்கள். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்திருக்கின்ற வெட்டுத தீர்மானங்களை வற்புறுத்தாமல் திரும்பப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டிக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் :** பாயின்ட் ஆஃப் பர்ஸனல் எக்ஸ்ப்ளனேஷன். என்னுடைய விவசாய வாழ்க்கை அனுபவத்திலிருந்து சொல்வது என்னவென்றால் நெல் விலையைக் கூட்ட வேண்டும் என்பது தான். அதே நேரத்தில் விவசாயம் செய்கிறவர்களுக்கு உற்சாகம் கொடுக்க வேண்டும். அதற்காக இரண்டு வழிகளைச் சொன்னேன். ஒன்று நிர்வாகச் செலவு—அட்மினிஸ்ட்ரேஷன் செலவு. அடுத்தது குவிண்டாலுக்கு ஒரு ரூபாய் கொடுப்பது. வண்டிச் செலவு, ரிஜிஸ்ட்ரேஷன் கமிஷன், லாபம் என்ற வகைகளில் நிர்வாகச் செலவு என்பதற்காக ஒரு ரூபாய் ஒரு குவிண்டால் அரிசிக்குக் கொடுக்கப்படுகிறது. அதைக் குறைத்து உற்பத்தியாளர்களுக்குக் கொடுக்கலாம்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மாண்புமிகு உறுப்பினர் அதை என்னிடத்திலே பல முறைகளில் சொல்லியிருக்கிறார். அது பரிசீலனைக்குரியது, அதைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டதாகத் தான் கொள்ள வேண்டும். மீண்டும் வற்புறுத்தத் தேவையில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பாயின்ட் ஆஃப் பெர்சனல் எக்ஸ்ப்ளனேஷன் என்றால் தன்னிலை விளக்கம். தன்னைப்பற்றி மட்டுமே பேச வேண்டும். விவாதம் செய்யக்கூடாது. 81-வது விதியின் வரம்புக்குட்பட்டு இருக்க வேண்டும்.

**திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் :** சர்க்காருடைய திட்டத்தை நான் ஆதரிக்கிறேன். படி அரிசித் திட்டத்தை அமல்படுத்தும்போது செலவுகளைக் குறைக்க வழி செய்யவேண்டுமென்றுதான் கூறுகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** ஏற்கெனவே இருந்த செலவுகளைக் குறைக்கலாமா என்று ஆராயப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, வெட்டுத் தீர்மானங்களின் மீது பேரவையின் வாக்கெடுப்பு நடைபெறும்.





THIRU K. VINAYAKAM : Sir, I want a clarification from the Hon. Minister before I withdraw my cut motion. The Hon. Minister was pleased to state that he agreed with the one-rupee-a-measure scheme and that he intended to extend it all over the State. But he regrets that it is not possible to do so at this junture. That does not mean that he has given up the scheme. He may please let me know whether he is serious in extending it within a reasonable time. I want to know what is the time-limit within which he can extend the scheme to the entire State ? Would that be possbile before the budget session of next year ?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : We always speak serious things. The point raised by the Hon. Member will be known and the Government consider that it is their duty to inform the House about it.

**மாண்புமிகு பேரவைத்தலைவர் :** இப்பொழுது வாக்கெடுப்பு நடைபெறும். திரு ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் அவர்கள் தன்னுடைய இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத்தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்படுவதாகக் கருதப்படுகிறது.

அடுத்து திரு. கே. விநாயகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம்.

THIRU K. VINAYAKAM : Sir, I press my cut motion.

வெட்டுத் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது என அறிவிக்கப்பட்டது.

(திரு. கே. விநாயகம் எழுந்தார்.)

MR. SPEAKER : The cut motion is intended to discuss the general policy and that has been done. Even so, the hon. Member is entitled to press for a division if he so requires.

THIRU K. VINAYAKAM : The desirablility of extending the scheme is also there.

MR. SPEAKER : It is only intended to discuss it and the discussion has taken place.

THIRU K. VINAYAKAM : The cut motion should be taken as a whole and should not be split into parts.

MR. SPEAKER : There is no need for explanation. The hon. Member is entitled to press for a division if he so requires.

THIRU K. VINAYAKAM : In deference to you and to the wishes of the House, I wish to withdraw my cut motion

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. கே. விநாயகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் வற்புறுத்தப்படவில்லை. ஆகையால் அது பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்படுகிறது.

[பேரவைத்தலைவர்.]

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. செ. பாலசுப்பிரமணியன், திரு. ஏ. அ. சுப்பராஜா, திரு. சோ. அழகர்சாமி, திருமதி கே. பி. ஜானகியம்மையார் ஆகியோரின் வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்படுகின்றன.

அடுத்து, பேரவை முன்னுள்ள கேள்வி :—

"கோரிக்கை எண். 46—அரசாங்க வாணிகத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,07,86,78,300-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப் பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இத்துடன் இன்றை நிகழ்ச்சிகள் முடிவுறுகின்றன. மீண்டும் பேரவை நாளை காலை 9 மணியளவில் கூடும்.

பி. ப. 2·30 பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

### 5. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A, Statutory Rules and Orders.

95. Notification issued with G.O. P. No. 2075, Revenue, dated the 25th November 1967, making an amendment to the Madras General Sales Tax Rules, 1959, published at pages 232–280 of the Rules Supplement to Part I of the *Fort St. George Gazette,* dated the 1st April 1959. [*Laid on the Table of the House under section* 53 (5) *of the Madras General Sales Tax Act,* 1959 (*Madras Act I of* 1959.)]

96. Notification issued with G.O.P. No. 1875, Revenue, dated the 26th October 1967, making an amendment to the Madras General Sales Tax Rules, 1959, published at pages 232–280 of the Rules Supplement to Part I of the *Fort St. George Gazette,* dated the 1st April 1959, as subsequently amended. [*Laid on the Table of the House under section* 53 (5) *of the Madras General Sales Tax Act,* 1959 (*Madras Act I of* 1959.)]

### B. Reports, Notifications and Other Papers

*Nil.*

# தமிழக சட்டப் பேரவை.

---

**சனிக்கிழமை, 1968 மார்ச் 9.**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர், திரு. சி. பா. ஆதித்தனார் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. உரை நேர வரம்பைக் கட்டுப்படுத்த வண்ண விளக்கு அமைப்பு.

THIRU K. VINAYAKAM : On a point of information, Sir. What are these lights for (pointing to the lights newly installed on the Speaker's table)? Are we to be terrorised by these dangerous lights?

MR. SPEAKER : I suppose the lights will not terrorise as much as the gong?

THIRU K. VINAYAKAM : Red light is always a mark of terror, danger.

MR. SPEAKER : What about the sound of the bell?

THIRU K. VINAYAKAM : The bell is a very innocent article.

MR. SPEAKER : The lights are installed only for trial.

THIRU A. BALASUBRAMANYAN : The bull is always afraid of the red colour.

MR. SPEAKER : If ten minutes are allotted to a member, the yellow light will burn at the eighth minute so that he may continued to talk and finish the topic he is then dealing.

THIRU K. VINAYAKAM : I want you to explain it to the members.

THIRU N. KASIRAMAN : It is like the automatic traffic signal.

MR. SPEAKER : It is not like the traffic signal. It is a device adopted in many conferences. If the Opposition parties think that the bell is milder. we will revert to it. I have not disposed off the gong yet.

### 2. வினாக்கள்-விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

### பயிற்சி பெற்ற பட்டதாரி ஆசிரியர்களின் சம்பளம்

* 180. வினா— **திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :** மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகம் பூராவும் பி.ஏ., பி.டி. பாஸ் செய்துவிட்டு உயர் தொடக்கப்பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கை . எவ்வளவு ?

(இ) பி.எ., பி.டி. பாஸ் செய்துவிட்டு உயர்தொடக்கப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் அனுமதிக்கப்பட்டுள்ள சம்பளத்தில் உள்ள வித்தியாசம் என்ன ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) நானூற்று ஆறு பேர்.

(இ) பயிற்சி பெற்ற பட்டதாரி ஆசிரியர்கள், உயர்நிலைப்பள்ளிகளில் ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டாலும் 400-ம் அதற்கு மேலும் மாணவர்கள் தொகை உள்ள உயர் தொடக்கப்பள்ளிகளில் தலைமை ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டாலும் அவர்களுக்கு ரூ. 140—5—180—10—250 என்றும் ஒரே சம்பள விகிதமே அனுமதிககப்படுகிறது. 400-க்கும் குறைந்த மாணவர் தொகை உள்ள உயர் தொடக்கப்பள்ளிகளுக்கு அவர்கள் நியமிக்கப்பட்டால், "செகண்டரி கிரேடு" ஆசிரியர்களுக்கு அளிக்கப்படும் ரூ. 90—140 என்னும் சம்பள விகிதமே பெறுவார்கள்.

**திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :** தலைவர் அவர்களே, இருவர்களும் மாணவர்கள் தொகை அடிப்படையில் போடப்படுவதால் வித்தியாசம் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இருவர்களும் பி.எ., பி.டி. பாஸ் செய்திருப்பதால் ஒரே மாதிரியான ஸ்கேல் ஆப் பே, சம்பளம் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, வேலைக்கு ஏற்ற அளவுக்குத்தான் சம்பளம் தரவேண்டும். படிப்பிற்கு ஏற்ற அளவில் சம்பளம் தரவேண்டுமென்றால் எல்லா பி.டி. களையும் சேர்த்துக் கொள்ளவேண்டும். கல்வியின் தரம் உயரவேண்டும் என்பதற்காகத் தலைமை ஆசிரியர்கள் பதவி, பி.டி. களுக்குக் கொடுக்கப்படுகிறது. 400-க்குக் குறைந்த மாணவர்கள் உள்ள பள்ளிகளில் செகண்டரி கிரேட் ஆசிரியர்கள் நியமிக்கப்படவேண்டுமென்று இருப்பதால், அந்த வேலைக்கு வருகிறவர்கள் பி.டி. களாக இருந்தாலும் அவர்களுக்கு பி.டி. சம்பளம் தரப்படுவதில்லை. தலைமை ஆசிரியர்கள் பதவிக்கு வருவதற்கு முதல் சலுகை பி.டி.க்குக் கொடுக்கப்படும்.

Dr. H.V. HANDE : The grievances of these teachers working in the higher elementary schools is a longstanding grievance. Since a number of years that have made representations to the previous Government and I am sure they have made representations to this Government also. There are twenty or twenty-one castes among the teachers. Will the Government review the salary paid to teachers, reduce as far as possible the varieties and see that they are paid on a parity? This will at least reduce their grievance. Will the Government review and reconsider the whole thing in a way which is favourable to the teachers?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** பல்வேறு வகையான பள்ளிகள் இருக்கிற காரணத்தினால், பல்வேறு முறையான சேர்ப்புகள் இருக்கிற காரணத்தால், பல்வேறு தன்மையான ஆசிரியர்கள் நியமிக்கப்படுகிறார்கள். கூடுமானவரை அவர்களுடைய சர்வீஸ் கண்டிஷன்ஸ் முதலியவற்றையெல்லாம் தனியார் பள்ளி, அரசினர் பள்ளி இவற்றில் உள்ளவற்றையெல்லாம் ஒருமுகப்படுத்துவதற்கு மேலும் மேலும் முயற்சிகள் நடந்துவருகின்றன. கன்னியாகுமரி மாவட்டத்தைப் பார்த்தால்கூட அங்கே வேறுபாடுகள் இருக்கின்றன. அவற்றை ஒருமுகப்படுத்துவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. அவர்களுக்குப் பாதகம் ஏற்படுவதாக இருந்தால் அதைத் தவிர்ப்பதற்கு என்ன செய்யவேண்டுமென்பது ஆராயப்படும்.



**திரு. என். கிட்டப்பா :** உயர்தொடக்கப்பள்ளிகளிலே பணிபுரிகின்ற பி.எ., பி.டி., பி.எஸ்ஸி., பி.டி. ஆசிரியர்கள் உயர்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களைப்போல் விடைத்தாள் திருத்தும்பணியைப் பெறுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அந்த வகுப்புகளுக்கு உரிய உயர்நிலைப் பள்ளிகளிலே பணிபுரிகிறவர்களுக்குத்தான் பாடங்கள் நடத்துகிறவர்களுக்குத்தான் அந்த வாய்ப்பு அளிக்கப்படும். கீழே யுள்ளவர்கள் அந்த நிலைக்கு வருகிறபோது அந்த வாய்ப்பைப் பெறுகிறார்கள்.

Thiru K. VINAYAKAM : The Minister was pleased to say that salaries were paid according to the post to which the Incumbents were appointed and not according to their qualifications. Likewise teachers,, working in colleges who are M.A., B.T. qualified are paid only B.A. B.T. salary even though they are appointed as teachers. What is the reason for this practice obtaining in Government Colleges ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** கல்லூரிகளிலேகூட டியூட்டர்களாக வருகிறவர்களுக்கு ட்யூட்டர் சம்பளம் தரப்படுகிறதே தவிர பி.டி. ஆசிரியர்கள் சம்பளம் தரப்படுவதில்லை. ட்யூட்டர்களுக்கு ஒரு சம்பளம், விரிவுரையாளர்களுக்கு ஒரு சம்பளம், பேராசிரியர்களுக்கு ஒரு சம்பளம் என்று வகை செய்யப்படுகிறது. ட்யூட்டர்களுக்கு பி.டி. சம்பளம் கொடுக்கவேண்டிய அவசியம் இல்லை. அவர்கள் எம்.எ. படித்திருந்தாலும்கூட ட்யூட்டர்கள் சம்பளம்தான் தரப்படுகிறது.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பட்டப்படிப்பு படித்துவிட்டு ஆசிரியர்கள் பயிற்சி பெறாமல் ஆசிரியர்கள் வேலை பார்க்கிறவர்களுக்கு எந்த விகிதத்தில் சம்பளம் கொடுக்கப்படுகிறது ? இத்தனை ஆண்டுகள்தான் அவர்கள் அப்படி வேலை பார்க்கலாம் என்ற நிபந்தனை இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** பி.டி. பயிற்சி பெறாமலேயே வேலைசெய்கிறவர்களுக்கு எவ்வளவு சம்பளம் கொடுக்கிறார்கள் என்ற விவரம் இல்லை. பி.டி. பயிற்சி பெறாதவர்கள், பி.டி. பயிற்சி பெறுவதற்கான சலுகைகள் தரப்பட்டு அந்த முறையிலே நடந்துவருகிறது.

Thiru K. S. KOTHANDARAMIAH: With a view to improve the quality of education and also to ensure efficient administration in higher elementary schools, will the Hon. Minister for Education think of posting only holders of B.A., B.T. degrees as headmasters of higher elementary schools?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இந்தக் குறிக்கோள்தான் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. 400 மாணவர்களுக்கு மேல் இருப்பார்களானால் பி. எ., பி.டி. இருக்கலாம் என்ற குறிக்கோள் கடைப்பிடிக்கப்பட்டு நிதிவசதியைப்பார்த்து எல்லாப் பள்ளிகளிலும் விஸ்தரிக்கமுடியுமா என்பது கவனிக்கப்படும்.

**திரு. சி. கோவிந்தராசன் :** வேலைக்குத்தான் சம்பள விகிதம் இருக்கிறதே தவிர, படிப்புக்காக இல்லை என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். 1-4-1968 முதல் ஜில்லா போர்டு ஹைஸ்கூல்களை அரசாங்கமே நேரிடையாக எடுத்து நடத்துவதாக இருக்கிறது. அப்படி எடுத்து நடத்துகிறபோது அந்த ஆசிரியர்களுடைய சம்பளம், பென்ஷன்போன்ற எல்லா வசதிகளும் அதிகமாக இருக்கலாம் என்றும் தெரிகிறது. இவர்கள் செய்கிற வேலைகளையே இன்றையதினம் முனிசிபல் ஹைஸ்கூல்களில் இருந்து செய்துகொண்டிருக்கக்கூடிய ஆசிரியர்களுக்கும் இதே சம்பள விகிதம், பென்ஷன் விகிதம் எல்லாம் அளிக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** 1-4-1968 முதல் ஜில்லா போர்டு ஹைஸ்கூல்களை அரசாங்கமே நேரிடையாக எடுத்துக்கொள்வது என்கிற நிலையில் இன்னும் முடிவு எடுக்கப்படவில்லை. அது ஒரு செய்தியாகத்தான் வந்தது. அரசாங்கமே அவற்றை எடுத்துக்கொள்வதில் சில இடையூறுகள் இருக்கின்றன. ஆகவேதான் அதுபற்றி ஆராய்ந்து பரிசீலனை செய்வதற்காக ஒரு அதிகாரி போடப்பட்டிருக்கிறார். எல்லாத் தலைமை ஆசிரியர்களையும் கலந்து இதுபற்றி ஒரு சுமுகமான ஏற்பாடு எடுக்கவேண்டியிருக்கிறது. ஆகவே 1-4-1968-ல் அத்திட்டம் அமலுக்கு வராது. இதுபற்றிப் பரிசீலிக்கிறபோது நகராட்சி உயர்நிலைப் பள்ளிகளையும் சேர்த்து கவனித்து ஒரு நிலைக்குக்கொண்டுவர முயற்சி எடுக்கப்படும்.

**திரு. வை. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, இப்போது 400 பிள்ளைகளுக்குமேல் உள்ள பள்ளிகளில்தான் பி.ஏ., பி.டி. தலைமை ஆசிரியர்களைப் போடவேண்டும் என்ற விதி இருக்கிறது. கல்வியின் தரத்தையும், நிர்வாகத்தையும் உத்தேசித்து அந்த 400 என்ற எண்ணிக்கையை 300 என்று குறைத்தால் நன்றாக இருக்கும் என்பதை அரசாங்கம் பரிசீலனை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இப்போதே 400 பிள்ளைகளுக்கு மேல் இருக்கிற இடங்களிலேயே பி.ஏ., பி.டி. தலைமை ஆசிரியர்களைப் போட முடியாத அளவில் நிதிநிலை இருந்து கொண்டிருக்கிறது. 400 பிள்ளைகளுக்குமேல் இருக்கிற பள்ளிகளுக்கு பி.ஏ., பி.டி. தலைமை ஆசிரியர்களைப் போடுகிற திட்டம் முதலில் நிறை வேற்றப்பட்டு, வசதி உள்ள நிலை ஏற்படுமேயானால் அதைக் குறைப்பதற்கு முயற்சி எடுத்துக்கொள்ளலாம்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** கல்விக்குத் தகுந்த சம்பளம் இடையாது, வேலைக்குத் தகுந்த சம்பளம்தான் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அது உண்மையாக இருக்குமானால் சில பாடசாலைகளில் செகண்டரி கிரேட் ஆசிரியர்கள்கூட பி.ஏ., பி.டி. ஆசிரியர்கள் செய்கிற வேலைகளைச் செய்துகொண்டிருக்கிறார்களே, அவர்களுக்கும் பி.ஏ., பி.டி. ஆசிரியர் சம்பளம் கொடுக்கப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** சாதாரணமாக, பி.ஏ., பி.டி. ஆசிரியர்களைப்போல 9, 10, 11-வது வகுப்புகளுக்கு 12 பீரியட் பாடம் எடுக்கிற நிலை இருக்காது. அப்படி இருக்கிறபோதுதான் இந்த நிலை கையாளப்படுகிறது. குறிப்பாக முதல் கிரேட் தமிழ் ஆசிரியர்களுக்கு 9, 10, 11-வது வகுப்புகளுக்கு பாடம் எடுக்கிறவர்களுக்கு 10 ரூபாய் அதிகமாகத் தரப்படுகிறது. இரண்டாம் நிலைத் தமிழ் ஆசிரியர்களாக இருந்தாலும் 9, 10, 11-வது வகுப்புகளுக்கு முதல் கிரேட் தமிழாசிரியர்களைப்போல பாடம் எடுக்கிறவர்களுக்கும் 10 ரூபாய் தரப்படுகிறது.

**THIRU K. VINAYAKAM :** Sir, in the answer given by the Hon. Minister to my prior supplementary question, he has stated that tutors appointed in colleges, if they are qualified as tutors, will not be paid B.T. salary . But is he aware that in the City of Madras in many colleges like the Teachers' College at Saidapet, teachers who are first-class or second class M.As. are paid only the B.T. salary though they are termed as tutors. So, will the Hon-Minister institute an enquiry into the matter and rectify the defect, if any?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அதுபற்றிய விவரக் குறிப்பு என்னிடத்தில் இல்லை. ட்யூட்டர் சம்பளம் பி.ஏ., பி.டி. ஆசிரியர் சம்பளத்திற்குக் கிட்டத்தட்ட இருக்கலாம், என்றாலும் தனிக்கேள்வி போட்டால் விவரம் அளிக்கலாம்.



**திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :** செகண்டரி கிரேட் போஸ்டில் வேலைசெய்கிற பி.ஏ., பி.டி. ஆசிரியர்கள் உயர்நிலைப் பள்ளிகளுக்குப் போகிறபோது இந்தப் பழைய ஊழிய காலத்தையும் சேர்த்துக் கணக்கில் எடுத்துக்கொள்ள அரசாங்கம் உத்தரவு போடுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** செகண்டரி கிரேட் போஸ்டில் இருந்த ஊழிய காலமும் சேர்த்துத்தான் கணக்கிடப்படுகிறது.

### கோவையில் பல்கலைக்கழகம்

* 181 வினா—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவையில் சர்வகலாசாலை ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது ஏற்படுத்தப்படும் ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. சு. துரைசாமி :** பேரவைத்தலைவர் அவர்களே, கோவையில் ஏராளமான கலைக் கல்லூரிகள், பொறியியல் கல்லூரி, மருத்துவக் கல்லூரி, விவசாயக் கல்லூரி ஆகியவை இருக்கின்ற காரணத்தினால் அவற்றை இணைத்து அங்கே ஒரு சர்வகலாசாலை ஏற்படுத்த வாய்ப்பு இருப்பதனால் கோவையில் ஒரு சர்வகலாசாலை ஏற்படுத்த அரசாங்கம் முன்வருமா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** பொதுவாக ஒரு கோடி மக்களுக்கு ஒரு பல்கலைக் கழகம் ஏற்படுத்தித்தர வேண்டுமென்றாலும் அண்மையில்தான் மதுரையில் ஒரு பல்கலைக் கழகம் ஏற்படுத்தப்பட்டது. ஒரு பல்கலைக் கழகம் என்றால், அதன் அமைப்பு, முறை, கட்டடம் ஆகிய எல்லாவற்றிற்கும் ஆறு, ஏழு கோடி ரூபாய் ஆகிறது. மதுரைப் பல்கலைக் கழகத்திற்குப் போதுமான இடவசதி, கட்டட வசதி ஏற்படுத்தித் தர சில லட்சம் ரூபாய்தான் ஒதுக்கக்கூடிய நிலையில் நாம் இருக்கிறோம். ஆகவே முதலில் புதிதாக ஏற்படுத்தப்பட்ட பல்கலைக்கழகத்தைச் செம்மை படுத்திவிட்டு மற்றவற்றை யோசிக்கலாம். இடையில் திருச்சி, கோவை போன்ற இடங்களில் பல்கலைக் கழக சென்டர்களை—முன்பு மதுரையில் ஏற்படுத்தியிருந்ததைப்போல—ஏற்படுத்தலாமா என்பது யோசனையில் இருக்கிறது. மதுரை, அண்ணாமலை பல்கலைக் கழகங்களுக்கே போதுமான நிதி ஒதுக்கம் செய்ய முடியாத நிலையில் நாம் இருப்பதால் இப்போது கோவையில் பல்கலைக் கழகம் அமைக்கும் திட்டத்தை மேற்கொள்வதற்கில்லை.

**திரு. அ. ப. சண்முகசுந்தரம் :** கோவையில் பல்கலைக் கழகம் ஏற்படுத்த வேண்டுமென்று பல ஆண்டுகளாக வேண்டுகோள் கொடுக்கப்பட்டு வருகிறது. அங்கே பல்கலைக் கழகம் ஏற்படுத்துவதற்கான சூழ்நிலைகளும் இருப்பதனால் அங்கு ஏற்படுத்த வேண்டிய அவசியத்தை இந்த அரசு அனுதாபத்தோடு பரிசீலிக்குமா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அனுதாபம் ஏராளமாக இருக்கிறது. அதில் உள்ள சங்கடங்களை எல்லாம் இப்போதுதான் சொன்னேன். முதலில் ஏற்படுத்தப்பட்டது செம்மைப்படுத்தப்பட்டாக வேண்டும். மேலும் ஒரு பல்கலைக் கழகம் 80 கல்லூரிகளை ஆட்சி செய்து வருகிறது என்றால், அதை நாற்பது, நாற்பது என்று பிரித்து இரண்டு பல்கலைக் கழகமாக ஒவ்வொன்றுக்கும் தனித்தனியாக நிர்வாக

அமைப்பு, துணைவேந்தர், ரிஜிஸ்திரார், செனட், சிண்டிகேட் என்று போடுவதனுல் எந்தவிதமான நன்மையும் வந்துவிடப்போவதில்லை. அதற்குப் பதிலாக சப்ஜெக்ட் வாரியாக—விவசாயத்திற்கு ஒரு பல்கலைக் கழகம், மருத்துவத்திற்கு ஒரு பல்கலைக் கழகம் என்பதாக—இப்படி அமைக்க முடியுமா என்கிற எண்ணம் இருக்கிறது. ஆகவேதான், இப்போது கோவை, திருச்சிபோன்ற இடங்களில் பல்கலைக்கழக செண்டர்களை அமைக்கும் கருத்து ஆலோசனையில் இருக்கிறது. புதிதாக இப்போது பல்கலைக்கழகம் ஏற்படுத்துகிற எண்ணம் இல்லை.

**திரு. அ. லெ. சுப்பிரமணியம் :** தலைவர் அவர்களே, அமைச்சர் மதுரைப் பல்கலைக் கழகத்தைப்பற்றிச் சொன்னதால் ஒரு கேள்வி. மதுரைப் பல்கலைக் கழகத்தில் சட்டப்படிப்புக்குக் கல்லூரி இல்லையே, அதை ஏற்படுத்துகின்ற திட்டம் இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அந்தத் திட்டம் பரிசீலனையில் இருந்து வருகிறது.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தைப் போல காரைக்குடி கல்லூரிகளை ரெசிடென்ஷியல் பல்கலைக்கழகமாக ஆக்குவதற்கு அரசு ஏதாவது முடிவு எடுத்துள்ளதா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அப்படிப்பட்ட முறை இல்லை. அங்குள்ள என்ஜினியரிங் கல்லூரியைக்கூட அவர்களால் நடத்த முடியவில்லை என்று அரசாங்கமே எடுத்துக்கொண்டிருக்கிறது. அவை மதுரைப் பல்கலைக் கழகத்தின்கீழ் வருகிறது.

**திருமதி வி. ப. பழனியம்மாள் :** தலைவர் அவர்களே, பல்கலைக் கழகம் ஏற்படுத்துவதற்கான செலவை அரசாங்கமே எடுத்துக்கொள்கிறதா? அல்லது கல்லூரி ஏற்படுத்த அந்தப் பகுதியில் உள்ளவர்கள் 5 லட்சம் தர வேண்டும் என்பதுபோல ஏதாவது தொகை தரவேண்டுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அரசாங்கம் தான் ஏற்றுக் கொள்கிறது.

**பாசன ஏரிகளை ஆழப்படுத்தல்.**

* 182 வினு—**திரு. பெ. மலைச்சாமி :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவிற்கு விடையளிப்பாரா—

பத்து ஏக்கர் நிலத்துக்குமேல் பாசனத்துக்குத் தண்ணீர் கொள்ளும் கண்மாய்களை ஆழப்படுத்தும் திட்டத்தைப் பத்து ஏக்கர் நிலத்துக்குக் கீழ், பாசன வசதியுள்ள கண்மாய்களுக்கும் அமலாக்கும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

**மாண்புமிகு திரு. மு. கருணுநிதி :** ஒரு ஏரியைத் தூர் வாரிப் பண்படுத்துவதற்கு அந்த ஏரியின்கீழ் உள்ள பதிவான ஆயக்கட்டு எவ்வளவு என்பதைக் கருதிமட்டும் நிச்சயிப்பதில்லை. ஆனுல் பத்து ஏக்கருக்கும் குறைவான ஆயக்கட்டுள்ள ஏரிகளின் கீழ் பதிவான ஆயக் கட்டில் பயிர் விளைவிப்பதில் அதிக இடைவெளி ஏற்பட்டுவிடாது. அதனுல் ஒரு சில ஏக்கர்மட்டுமே பயன்பெறும் இத்தகைய ஏரிகளைத் தூர் வாரிப் பண்படுத்தும் திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்வது இயலாது. எனவே, இத்தகைய ஏரிகள் இத்திட்டத்தின் கீழ் வழக்கமாய் எடுத்துக்கொள்ளப் படுவதில்லை.

**திரு. எஸ். முருசையன் :** சார், இந்த ஏரிகளைத் தூர்வாரி ஆழப் படுத்தக்கூடிய திட்டத்தின்கீழ் ஆழப்படுத்துவதற்கான விதிமுறைகள் என்ன என்ன ? ஒரு ஏக்கருக்கு இதற்காக எவ்வளவு பணம் செல



வழிக்கலாம் ? இந்த ஆண்டு எவ்வளவு ஏரிகள் மராமத்துச் செய்யப்பட இருக்கின்றன, எவ்வளவு தொகை செலவழிக்கப்பட இருக்கிறது ?

**மாண்புமிகு திரு. மு. கருணுநிதி :** பின்வரும் நிபந்தனைகளுக்குட் பட்ட பாசன ஏரிகளுக்குமட்டுமே தூர்வாரிப் பண்படுத்தும் பணி பொதுப் பணித் துறையால் மேற்கொள்ளப்படும் :—

(1) ஏரியின் கொள்ளளவு பெருமளவு குறைந்திருக்கவேண்டும்.

(2) ஏரியின்கீழ் உள்ள பதிவு செய்யப்பட்ட ஆயக்கட்டில் ஒரு பகுதி நிலத்திற்குப் பாசன வசதி கிடைக்காதிருக்க வேண்டும்.

(3) பண்படுத்துவதற்கேற்றவாறு ஏரியின் உள்வாயில் நீரில் மூழ்கிய நிலங்கள் இருக்கவேண்டும்.

(4) கடந்த ஐந்து ஆண்டுகளில் பெரும்பாலான ஆண்டுகளில் ஏரி கோடி போயிருக்கவேண்டும்.

(5) உள்வாயில் நிலங்களை உடைய உழவர்கள் தங்களுடைய நிலங்களைப் பண்படுத்துவதில் விருப்பமுள்ளவர்களாக இருக்கவேண்டும்.

(6) நீர் அளவைத் திரும்பப் பெறுவதற்கேற்றவாறு ஏரியின் நீர் வரவுப் பகுதியிலிருந்து போதுமான நீர்வரத்து இருக்கவேண்டும்.

(7) இவற்றிற்கெல்லாம் மேலாக இத்திட்டம் அதிக அளவு பயன்தரும் சிக்கனமான திட்டமாயிருக்கவேண்டும். ஒரு டன்னுக்கு இவ்வளவு செலவாகலாம் என அரசு நிச்சயித்துள்ளதற்கு உட்பட்டிருக்கவேண்டும்.

செலவாகும் தொகை ஒரு டன்னுக்கு மாவட்டங்களுக்கு ஏற்றவாறு நிர்ணயிக்கப்படுகிறது. உதாரணமாக கோவை, தர்மபுரி மாவட்டங்களை எடுத்துக்கொண்டால், ஒரு டன் உணவு தானியத்திற்கு 3,500 ரூபாய் என்ற அளவிலும், மற்ற மாவட்டங்களில் டெல்டா பிரதேசங்கள் தவிர உள்ளவற்றிற்கு 3,000 ரூபாய் என்ற அளவிலும், டெல்டா பிரதேசமாக இருந்தால் 2,000 என்ற அளவிலேயும், பழைய ஜமீன் பிரதேசமாக இருந்தால் ஏக்கருக்கு 500 ரூபாய் என்ற அளவிலும் ஒதுக்கப்படுகின்றன.

**திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் :** தூர் எடுக்கும் மெஷின்கள் எத்தனை இருந்துகொண்டிருக்கின்றன ? இதுவரையில் எந்த எந்த மாவட்டங்களுக்குப் பிரயோஜனப்பட்டுள்ளது ? பரவலாக எல்லா மாவட்டங்களுக்கும் கொடுப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடுசெய்யுமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணுநிதி :** இந்தக் கேள்வியில் துணைக்கேள்வி எழவில்லை.

**திரு. வி. டி. அண்ணுமலை :** மாண்புமிகு தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொடுத்த திட்டத்தில் கிராம விவசாயிகளிடமிருந்து பணம் ஏதாவது வசூலிக்கப்படுகிறதா ? அல்லது அவ்வளவும் சர்க்காருடைய மானியத்திலிருந்து ஒதுக்கப்படுகிறதா ?

**மாண்புமிகு திரு. மு. கருணுநிதி :** திட்டம் $1\frac{1}{2}$ லட்சத்திற்குமேல் செலவுள்ளதானுல் அவர்களிடமிருந்து பெட்டர்மெண்ட் என்ற அளவுக்கு வசூலிக்கப்படுகிறது.

**திரு. எம். சுரேந்திரன் :** சார்; இந்த ஏரிகள் தூர் எடுக்கும் திட்டத்தின் கீழ் மேட்டூர் அணைப்பகுதி வருகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணுநிதி :** மாவட்டவாரியாகத்தான் தகவல் இருக்கிறது. மேட்டூர் அணைப் பகுதியைப் பற்றிய குறிப்பு இல்லை.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், மலையடிவாரங்களிலே இருக்கக் கூடிய நிலங்கள் மழைக்காலத்திலே சாயிலும் அடித்துக்கொண்டுபோய்

[1968 மார்ச் 9

விடுகிறது. அவ்வளவும் பாதிக்கப்படக்கூடிய நிலைமை இருப்பதால் அந்தப் பிரதேசங்களில் சிறிய சிறிய செக் டாம்ஸ் கட்டுவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** இவையெல்லாம் பரிசீலிக்கப் படும்.

**திரு. வை. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, இனம் கிராமங்களில் உள்ள குளங்கள் எந்த இலாகாவின் கீழும் வருவதில்லை. அவற்றை யாருமே தூர் எடுப்பதில்லை. ஆகவே அம்மாதிரியான குளங்களும் இந்தத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இப்பொழுது பரிசீலிக்கப்பட்டு வருகின்ற திட்டத்தில் சேர்க்கமுடியுமா என்பதைப் பார்க்கவேண்டும்.

**திரு. ந. வீராசாமி :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொன்ன விதிமுறைகளுக்குட்பட்டு சில ஏரிகள் இருந்தும்கூட, தூர் எடுப்பதற்கு லட்சக்கணக்கான ரூபாய்கள் செலவாகிறது என்ற காரணத்தால் தூர் எடுக்கப்படாமல் ஏதாவது ஏரிகள் கைவிடப்பட்டிருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** செலவையொட்டி அதன்மூலம் கிடைக்கின்ற வருமானம் அல்லது ஒரு டன்னுக்கு நிர்ணயிக்கப்படுகின்ற செலவு இவற்றையொட்டி சில கைவிடப்பட்டு இருக்கலாம்.

**திரு. என். மருதாசலம் :** தலைவர் அவர்களே, கோவையிலே உள்ள குளங்களைத் தூர் எடுப்பது அரசாங்கத் திட்டத்தில் இருக்கிறதா ? அங்கே தூர் எடுக்கப்படாமல் ஏரிகள் எல்லாம் மூடப்படுகின்ற நிலைமை இருப்பதால் அவற்றைத் தூர்ப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** எவை என்று குறிப்பாகச் சுட்டிக் காட்டி உறுப்பினர் சொல்வாரானால் கவனிக்கப்படும்.

**திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, சென்ற ஆண்டுக்கு முந்தைய ஆண்டு செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள ஏரிகளை டி.சி.ஆர். திட்டத்தின்கீழ் வேலை செய்தார்கள். தென் ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள வேலைகளைச் சென்ற ஆண்டே எடுத்துக்கொள்வதாக இருந்தது. ஆனால் செங்கற்பட்டிலிருந்து தெற்கே போய்விட்டதே தவிர, செங்கற்பட்டு மாவட்டத்திலிருந்து தென் ஆர்க்காடுக்கு வரவில்லையே, என்ன காரணம் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** வரிசையாகப் போய்க்கொண்டு இருப்பதில்லை ; தேவைப்படுகின்ற இடங்களுக்குப் போகும்.

**திரு. இல. பலராமன் :** 1968–69-ம் ஆண்டில் எத்தனை ஏரிகள் தூர் எடுக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது ? இன்னும் எத்தனை ஏரிகள் தூர் எடுக்கவேண்டுமென்ற செயற்குறிப்பு வந்துள்ளது ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** 1968–69-ம் ஆண்டில் எடுத்துக் கொள்ளப்படவேண்டிய வேலைகள் 121 இருக்கின்றன. 1967–68-ல் எடுத்துக்கொள்ளப்பட்ட வேலைகளின் விவரங்கள் இல்லை. மாவட்ட வாரியாகக் கூறுவதற்கில்லை.

**திரு. ஆர். என். அரங்கநாதன் :** கொள்ளளவு குறைந்து இருக்க வேண்டுமென்று நிபந்தனையிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார் கள். கொள்ளளவு குறைந்து இருக்கிறதா என்று பார்ப்பது அதிகாரிகள் அவர்களாகப் பார்க்கிறார்களா அல்லது கோரிக்கைகளின்பேரில் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கிறார்களா ?



1968 மார்ச் 9]

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அதிகாரிகளே தங்களுடைய கடமையைச் செவ்வனே செய்யவேண்டும். அவர்கள் கவனிக்காமல் இருந்தால் கோரிக்கைகளும் கவனிக்கப்படும்.

**திரு. சோ. அழகர்சாமி :** கண்மாய்களைப் பொறுத்தவரையில் கோவில் பட்டி தாலூகாவில் நம்பிபுரம் கண்மாயில் 800 ஏக்கர் நஞ்சை இருக்கிறது. அந்தக் கண்மாயை ஆழப்படுத்தவேண்டும் என்று கோரிக்கை இருக்கிறது. அது ஆழப்படுத்தப்படாமல் இருப்பதால் 800 ஏக்கர் நிலமும் கதிர் வாங்குகிற நேரத்தில் தீய்ந்து விட்டது. அதிகாரிகளிடம் இதுபற்றிக் கேட்டால் அதை ஆழப்படுத்தினால் அந்த மண்ணைக் கொட்டுவதற்கு இடம் இல்லை என்று சொல்கிறார்கள். . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாவாகக் கேளுங்கள்.

**திரு. சோ. அழகர்சாமி :** இந்த ஆண்டாவது அதை ஆழப்படுத்துவதற்கு அரசு அனுமதிக்குமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நான் குறிப்பிட்டுள்ள விதிமுறை களுக்குள்ளே இருந்தால் அவைதான்கணக்கில் கொள்ளப்பட்டு அகலப் படுத்துவதோ, ஆழப்படுத்துவதோ நடைபெறுகிறது. தனியாக அவர்கள் இதைப்பற்றி விவரமாக எழுதியனுப்பினால் அரசு பரிசீலிப்பதற்குத் தயாராக இருக்கிறது.

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** தமிழ்நாட்டிலே இத்தகைய நீர்நிலைகள் பல ஆயிரக்கணக்காக இருக்கிற காரணத்தால் அரசாங்கமே அவ்வளவை யும் செய்வது என்பது சாத்தியமாகாது. ஆகவே, சிரமதானத்தின்மூலம் அவற்றைச் செய்வதற்கும், பொதுமக்களின் ஒத்துழைப்போடு தூர் எடுப் பதற்கும் அரசு ஏற்பாடுகள் செய்யுமா ?

**Thiru K. VINAYAKAM :** On a point of order. I find that the hon. Member representing Panruti is putting a question from a place which is not his usual place. The members of the Opposition are so vigilant that nothing should go wrong in procedural matters. Is he in his allotted seat or is he contravening the rule?

**Mr. SPEAKER:** When there is a change of seating, I shall announce it.

**Thiru K. VINAYAKAM :** We should be made aware of any change.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** ஒரு குறிப்பிட்ட அளவுள்ள குளங் கள் ஏரிகள், என்ற அளவில் குறைந்த செலவில் செய்யக்கூடியனவாக இருந்தால் அவற்றைச் சிரமதானத்தைக்கொண்டு பயன்படுத்திச் செய்வதிலே எந்தவிதமான தடையும் இருக்க முடியாது. இதுபோன்ற காரியங்களுக்குச் சிரமதானம் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**திரு. அ. மாரிமுத்து :** தலைவர் அவர்களே, தற்காலம் பஞ்சாயத்துக் கள் ஏற்று நடத்திவரும் குடிமராமத்துக்கு உரிய அளவு $2\frac{1}{2}$ ஏக்கராக இருப்பதை இன்னும் அதிகப்படுத்த அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இப்பொழுது அதைப்பற்றிய செயற் குறிப்பு எதுவும் இல்லை.

**Dr. H. V. HANDE :** Sir, will the Minister be able to tell us roughly the number of irrigation tanks in the State, the number of irrigation tanks that the Government propose to deepen and

reclaim and the number of irrigation tanks that the Government have actually taken up for reclamation and commenced work? These tanks are most important to agriculturists next only to Major irrigation sources. If the Minister has not got the exact figures, will he at least give rough figures?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** முப்பதாயிரம் குளங்கள் என்கிற அளவிலே மொத்தக் கணக்குச் சொல்லலாம். கேட்கப்படுகிற கேள்வி டி.சி.ஆர். பற்றிக் கேட்கப்பட்டிருப்பதால் பதில் அளிப்பதற்கான விவரங்களை நான் பெற்றிருக்கவில்லை.

### *Bridge across Kusasthali River*

* 183 *Q.*—Thiru K. VINAYAKAM : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Government propose to construct an over bridge or causeway over Kusasthali river flowing between Kanakammachatram and Thiruvalangadu in Thiruttani taluk ; and

(*b*) if so, the estimated cost of the scheme?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி**— (அ) தற்போதைக்கு அவ்விதமான திட்டமொன்றும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. கே. விநாயகம் :** சார், திருத்தணி தாலுக்காவில் கனகம்மா சத்திரத்துக்கும் திருவாலங்காட்டுக்கும் தூரம் 5 மைல். அதன் குறுக்கே
மு. ப. 9-30 இந்த நதி இருப்பதால்தான் போக முடியவில்லை. பஸ்கள் போக முடிவது இல்லை, கார்கள் போகமுடிவது இல்லை. மக்கள் நடந்துதான் போக வேண்டிய நிலை இருப்பதால், திருவாலங்காட்டுக்குப் போகவேண்டும் என்ருல் திருவள்ளூர் என்ற தாலுக்காவிற்குப் போய்த்தான் இங்கு வர வேண்டும். இதற்கு 20 மைல் தூரம் ஆகிறது. இந்தக் கஷ்டத்தை உணர்ந்து அரசாங்கம் இப்போது ஏதாவது அதற்காக எஸ்டிமேட் தயார் செய்யுமா ? முந்தைய அரசு எஸ்டிமேட் தயார்செய்து 15 லட்சம் ரூபாய் ஆகிறது என்று சொல்லி கொஞ்சம் அதிக்மாய் இருக்கிறது என்று விட்டு விட்டார்கள். இந்த அரசு அதைப் பரிசீலனை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** 15 லட்சம் அல்ல 23 லட்சம் ரூபாய் செலவாகுமென்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. ஊடுபாலம் ஆக கட்டுவது என்ருல் 12 லட்சம் ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப் பட்டிருக்கிறது. ஆனல் நான்காவது திட்டத்திற்கு மொத்தம் நம் மாநிலத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை ஏறக்குறைய 23 கோடி ரூபாய் அளவுக்கு இருக்கிற நிலையில், இந்த 23 லட்சம் ரூபாய் செலவு நமக்கு இந்த நேரத்தில் கட்டி வருமா என்ற நிலையில் அதைப்பற்றி யோசித்துக் கொண்டு வருகிருேம். ஊடுபாலம் அமைப்பதுபற்றிச் சொன்ஞர்கள். அதைக் கட்டும் அளவுக்கு அங்குள்ள மக்கள் சம்மதம் தருவார்களானல், அது அவர்களுக்குத் திருப்தி அளிக்கும் என்று கூறுவார்களானல், அதைப் பற்றி யோசிக்கலாம்.

**திரு. கே. விநாயகம் :** இந்த ஓவர் பிரிட்ஜ் கட்டுவதற்குக் கொஞ்சம் அதிகம் செலவாகலாம் என்பதால் ஊடுபாலம் கட்டலாமென்று சொல்கிருர்கள், அதற்கு மக்கள் அனுமதி தரவேண்டும் என்ற நிபந்தனை எங்கு இருக்கிறது ? அதுமாதிரி விதிகள் ஏதாவது இருக்கிறதா ? அது என் தொகுதியில் இல்லை, அவர்கள் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் தொகுதியில்தான் உள்ளது. ஆகவே, பொலிடிகல் டிஸ்கிரிமினேஷன் வேண்டாம் என்று சொல்லிக்கொள்கிறேன். இதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா ?



**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** திரு. விநாயகம் அவர்கள் கேள்வி நேரத்தில் கடைபிடிக்கவேண்டும் என்று சொல்கிற மரபுக்கு முற்றிலும் முரண்பட்டது இது. திருத்தணி தொகுதி ஆக இருந்தால் விநாயகர் காப்பு என்ற அளவில் நிறைவேற்றி இருப்போம். ஊடுபாலம் கட்ட மக்கள் அனுமதி தரவேண்டும் என்ற விதி இல்லை. அது திருப்தி அளிக்கவில்லை என்ற முறையீடு வருமே என்ற கவலையில்தான் சொன்னேன். வேறு இல்லை.

### *Poramboke lands*

* 184 *Q.*—Thiru S. RAMACHANDRAN : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state whether there is a proposal to lease out the poramboke lands instead of assigning them as at present?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இல்லை.

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** சர்க்கார் நிலங்களை ஒப்படைவுசெய்து விடுவதால் பிறகு சர்க்கார் பொதுக் காரியங்களுக்கு அந்த நிலங்களை மேற்கொள்கிறபோது கஷ்டமாக இருக்கிறது. ஆகவே, ஆண்டுக்கு ஒரு முறை அல்லது பல ஆண்டுகளுக்கு ஒரு முறை என்று குத்தகை அல்லது ஏலம் ஆகிய அடிப்படையில் ஏதாவது செய்வதற்கு யோசனை இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** சில நிலங்கள் ஒப்படைவு செய்யப்படுகின்றன, சில நிலங்கள் குத்தகைக்கு விடப்படுகின்றன. அந்தந்த நிலத்தின் இயல்பு என்னென்ன காரியங்கள் செய்வதற்காக எந்த உபயோகத்திற்காகக் கேட்கிருர்கள். அவை அரசாங்கத்துக்கோ அல்லது ஸ்தலஸ்தாபன நிறுவனங்களுக்கோ இவற்றுக்குத் தேவையாக இருக்கிறதா என்று இவற்றை எல்லாம் ஆராய்ச்சி செய்து அந்த அடிப்படையில் சில நிலங்கள் அஸைன் செய்யப்படுகிறது, சில நிலங்கள் லீஸ் செய்யப்படுகிறது.

**திரு. கொளத்தூர் கோதண்டம் :** 1965–66, 1966–67 இந்தப் புறம்போக்கு நிலங்களைப் பட்டா செய்வதில் ஏற்கனவே சில பல கேடுபாடுகள் நிகழ்ந்து இருப்பதால், இனிமேலாவது ஏழை ஹரிஜனங்களுக்கும் நிலம் இல்லாத ஏழைகளுக்கும் பட்டா செய்துகொடுக்கும்போது சில விதிமுறைகளைக் கண்டிப்பாகச் செயல்படுத்த அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** ஏற்கனவே உள்ள நிலைமைகளை எல்லாம் மாற்றி, தமிழகத்தில் இந்த மாதிரியான புறம்போக்கு நிலங்கள் துரிதமாகப் பல இடங்களில் நிலம் அற்ற ஏழை விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டு வருவது கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரியும். சமீபத்தில்கூட அவர் தலைமையில்தான் வருவாய்த் துறை அமைச்சரும் மற்ற அமைச்சர்களும் பட்டா வழங்கியதையும் அவர்கள் அறிவார்கள்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** விவசாயம் செய்யும் நிலங்களை ஜாரி செய்வதில் விதிமுறைகள் கெடுபிடியாக இருந்தாலும் குடி இருக்கக் கூடிய வீடுகளைக் கட்டிக்கொண்டிருக்கக் கூடியவர்களுக்காவது உடனடியாக, விதிமுறைகளுக்கு அப்பாற்பட்டிருந்தாலும் சரி, அதை அவர்களுக்குப்பட்டா வழங்க துரித நடவடிக்கைகள் எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** புது அரசு வந்ததற்குப் பிறகு பட்டா வழங்குகிற முறையில் சில மாறுதல்களைச் செய்திருக்கிருேம். இன்னும் நல்ல தீவிரமான மாறுதல்களைப் புகுத்தும் ஆலோசனை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. என்க்ரோச்மெண்ட் செய்திருக்கிருர்களென்ருல் அன் அப்ஜக்ஷனபில் என்க்ரோச்மெண்டை பொறுத்தவரையில் கூடுமானவரை அவர்களுக்குப் பட்டா செய்ய வேண்டும் என்பதற்காக மாவட்ட கலெக்டர்கள், வருவாய்த்துறை அதிகாரிகள் இவர்களுக்கு தாக்கீதுகள் பிறப்பிக்கப்பட்டு பல்வேறு மாவட்டங்களில் உரிமம் வழங்குகிற செயல் வேகமாகத் துரிதமாக நடைபெற்றுக்கொண்டு வருகிறது.

**திரு. மு. ச. சிவசாமி :** தூத்துக்குடித் தொகுதியில் தூத்துக்குடி நகரத்தில் வீடு இல்லாத, நிலம் இல்லாத ஏழைகள் நிலம் வேண்டுமென்று கோரி மனுப்போட்டு 12 ஆண்டு காலம் ஆகியும் எந்த விதமான முன்னேற்றமும் இல்லாமல் இருக்கிறது. கலெக்டர் இடத்தில் அதுபற்றிய காரணத்தைக் கேட்டால் அதற்கு அசைன்மெண்ட் க்ளர்க் இல்லாததால் இவ்வளவு கால தாமதம் ஆகிறது என்று சொல்கிறார்கள். ஆகவே, உடனடியாக ஒவ்வொரு தாலூக்காவிற்கும் ஒவ்வொரு துணை தாலூக்கா அலுவலகங்களிலும் அசைன்மெண்ட் க்ளார்க்கைப் போட்டுத் துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அங்கத்தினர் அவர்கள் கூறுகிற குற்றச்சாட்டுக்கள் உண்மையாக இருக்கலாம். இப்படி மந்தமான நிலையில் இத்துறை இருப்பதை நிவர்த்தி செய்வதற்காகத்தான் இப்போது பல்வேறு இடங்களில் இது வேகமாக, விறுவிறுப்பாக நடைபெறுவதற்கான வசதிகளை ஏற்படுத்த எல்லா முயற்சிகளையும் சர்க்கார் சிரத்தையுடன் எடுத்துக்கொண்டிருக்கிறது.

THIRU T. MARTIN : Sir, may I request the Hon. Minister to state whether there is any proposal pending before the Government for assigning the Government poramboke lands to the educational institutions which are running orphanages for poor children so that they can be self-supporting?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Sir, I want notice.

**திரு. ஏ. முனியாண்டி :** கோடை ரோடில் அன்னசமுத்திரம் கண்மாயைப் பல ஏழை எளியவர்கள் கைப்பற்றி வைத்துக்கொண்டு இருக்கும்போது அங்கு ஒரு காங்கிரஸ்காரர் அவர்களை அங்கிருந்து வெளியேற்றிவிட்டு அதை அவர்கள் கைப்பற்றி இருக்கிறார்கள். அதன்மீது நடவடிக்கை எடுக்க ஏதாவது செயற்குறிப்பு உள்ளதா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தனிக் கேள்வி போட்டால் தகவல் கொடுக்க முடியும். பொதுக் கேள்வியில் இது வராது.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** புறம்போக்கு நிலங்களைக் குத்தகைக்கு விடும்போது ஐந்து வருஷங்களுக்கான குத்தகைப் பணத்தை ஒரே தவணையில் கொடுக்கவேண்டுமென்று உத்திரவு இடப்பட்டு உள்ளதா ? ஆண்டிப்பட்டி பகுதியில் கடமலைக்குண்டு என்ற இடத்தில் இப்படி ஒரே தவணையில் கொடுக்க வேண்டும் என்று உத்தரவு இடப்பட்டு உள்ளதா ? அதுபற்றி அந்தப் பகுதி மக்களிடமிருந்து ஏதாவது கோரிக்கை வந்துள்ளதா ?

(பதில் இல்லை.)

**திரு. இல. பலராமன் :** பஞ்சாயத்துக்கு ஒப்படைக்கப்பட்ட புறம்போக்கு நிலங்களை மீண்டும் அரசாங்கமே எடுத்துக்கொள்வதற்குக் காரணம் என்ன? அப்படி அரசாங்கம் எடுத்துக் கொள்ளாமல் பஞ்சாயத்திடம் ஒப்படைக்க ஏதாவது செயற்குறிப்பு உண்டா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** பஞ்சாயத்துகளில் இருக்கிற நிலங்களை அரசாங்கம் அத்தியாவசியமான காரணங்களுக்காகத் தேவை என்றால் அந்தந்தக் காரணங்களின் அடிப்படையில் எடுத்துக்கொள்ள அரசாங்கத்துக்கு உரிமை உண்டு.

**திரு. ஜே. எஸ். இராசு :** வசதி படைத்த நிலக்கிழார்கள் ஆக்கிரமித்து இருக்கிற புறம்போக்குத் தரிசு நிலங்களை ஏழை விவசாயிகளுக்குப் பட்டா செய்து கொடுத்திருந்தும், அந்த விவசாயிகள், பட்டா செய்யப்பட்ட நிலைமையிலும் விவசாயம் செய்ய முடியாத நிலை பல இடங்களில் இருக்கிறது. அந்நிலையில் போலீசோ அல்லது ரெவினியூத் துறையோ எந்த விதமான





நடவடிக்கையும் எடுக்காமல் அந்த விவசாயிகள் நிலத்தில் எந்தவிதமான பாத்தியதையும் கொண்டாட முடியாத நிலை இருக்கிறது. இதைத் தடுக்க அரசாங்கம் தக்க நடவடிக்கைகள் எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** குறிப்பிட்ட ஒரு சம்பவத்தைப் பற்றிச் சொன்னால் தெளிவாக இருக்கும். அதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்தால் உரிய நடவடிக்கைகள் எடுப்பதுபற்றிக் கவனிக்கலாம்.

**திரு. ந. தீர்த்தகிரி :** பல ஆண்டுக் காலமாக அரிசனங்கள் சர்க்காரால் கொடுக்கப்பட்ட நிலங்களில் வீட்டைக்கட்ட முடியாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குக் குறிப்பிட்ட தொகையைக் கொடுத்து வீடு கட்டித் தருவதற்கு அரசாங்கம் முன் வருமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இது புறம்போக்கு நிலங்களைக் கொடுப்பதுபற்றிய கேள்வி. கனம் உறுப்பினர் அவர்கள் கேட்பது வீட்டைப்பற்றியது.

**திரு. என். ராஜாங்கம் :** அரிசனங்களுக்குப் புதிதாக நிலம் கொடுப்பது ஒருபுறமிருக்க, பஞ்சம தரிசு நிலங்கள் என்று அவர்களுக்குக் கொடுக்கப்பட்டு வந்த நிலங்கள் ஆயிரக்கணக்காக சர்வே செய்யப்படாமல் முறையாக அவர்களுக்கு வழங்கப்படாமல் இருக்கின்றன. அதைக் கொடுப்பதிலே துரிதமான நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** நான் ஏற்கெனவே சொன்னேன். இந்தத் துறையிலே பல வருஷ காலமாக ஏற்பட்டிருந்த மந்த நிலையை மாற்ற புதிய அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டு வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. குறிப்பாக, தென்னாற்காடு மாவட்டத்தில் சர்வே செய்வதற்காக விசேஷ அதிகாரிகளையும், ஊழியர்களையும் நியமித்து வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

**திரு. சி. வீரமணி :** புறம்போக்கு நிலங்களைத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒப்படைவு செய்வதில் பெரும் இடையூறாக இருப்பவர்கள் கிராம முனிசீபுகளும், கர்ணங்களுந்தான், இதிலே அரசியல் சூழ்நிலைகளும் கலந்து விடுகின்றன. ஆகவே, அத்தகைய முனிசீபுகள், கர்ணங்கள்மீது நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன் வருமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அசைன்மெண்ட் செய்வதிலே அரிசன மக்களுக்கு விசேஷமான அக்கறையும் சிரத்தையும் காட்டப்பட்டு வருகிறது. அவர்களுக்குத் துரிதமாகக் கொடுப்பதிலே எல்லா விதமான நடவடிக்கைகளையும் எடுத்துக்கொள்ள அரசாங்கம் முயற்சி எடுத்து வருகிறது.

**திரு. செ. கோ. விசுவநாதன் :** திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தபிறகு பல மாவட்டங்களில் விவசாயத்திற்குப் புறம்போக்கு நிலங்கள் வழங்கப்படுவதும், வீட்டு மனைகள் வழங்கப்படுவதும் துரிதப்படுத்தப்பட்டு வழங்கப்பட்டிருக்கின்றன. அவை மாவட்டவாரியாக எவ்வளவு என்று அமைச்சர் அவர்கள் கூறுவார்களா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** வருவாய்த் துறை மானியத்தின்போது இதைப்பற்றி விரிவாக விளக்கம் அளிக்கப்படும்.

**திரு. ந. சோமசுந்தரம் :** ஒவ்வொரு மாவட்டத்திலும் செல்வாக்குப் படைத்தவர்கள் என்று சொல்லக்கூடிய நிலக்கிழார்கள் ஆக்கிரமித்துள்ள புறம்போக்கு நிலங்களை அவர்களுடைய ஆக்கிரமிப்பிலிருந்து நீக்கி ஏழை எளியவர்களுக்குக் கொடுக்க அரசாங்கம் முன் வருமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இப்போது ஒவ்வொரு மாவட்டத்திலும் இதற்கென்று தனிப் பிரிவுகள் வேகமாக, துரிதமாகப்

புணியாற்றி வருகின்றன. இன்னும் ஓரிரு ஆண்டுகளில் இந்த நிலைமைகள் எல்லாம் சீர்திருந்தி நல்ல அபிவிருத்தி ஏற்படும் வகையில் எல்லா வேலைகளும் நடைபெற்று வருகின்றன.

**திரு. கு. கிருஷ்ணமூர்த்தி :** " பி " மெமோ பெற்று சாகுபடி செய்து வரும் விவசாயிகளுக்குப் பல ஆண்டுகளாக பட்டா கொடுக்காமல் இருப்பது பற்றிச் சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அவர்கள் அவ்வாறு சாகுபடி செய்வதே தவறு. அப்படி இருக்கும்போது அவர்களுக்குப் பட்டா செய்து கொடுக்காததற்காக நடவடிக்கை எடுத்துக் கொள்ளச் சொல்லுகிறார்கள். அவர்கள் நிலத்தை ஆக்கிரமித்துக் கொண்டு விவசாயம் செய்கிறார்கள். இருந்தாலும் அவ்வாறு ஆக்கிரமிப்பு செய்து கொண்ட நிலங்கள் ஆட்சேபணைக்குரிய இடங்களாக இல்லாமல் இருந்தால் அவர்களுக்கு உரிமை வழங்கவும் இந்த அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது.

**திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் :** புறம்போக்கு நிலங்களுக்காக மனுச் செய்து வரும் ஏழை மக்களுக்கு நிலம் ஜாரி செய்து கொடுக்கப்படாமல் கிராமக் கர்ணங்களும், ரெவின்யூ இன்ஸ்பெக்டர்களும் பலவிதமான இடைஞ்சல்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்த இடைஞ்சல்களை நீக்குவதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** நான் ஏற்கெனவே சொன்னேன். முன்பு ஆட்சியில் இருந்தவர்கள் இதிலே ஈடுபாடு காட்டாத காரணத்தால் ஒரு மந்தமான நிலைமை இருந்தது. இப்போது விரைவாக நடவடிக்கை எடுத்து ஏழை எளிய மக்களுக்கு நிலவுடைமையில் உரிமையளிக்க வேண்டுமென்பதிலே புதிய அரசு மிகுந்த அக்கறை காட்டி இதற்கான பல புதிய திட்டங்களை அமலுக்குக் கொண்டு வந்திருக்கிறது. நடவடிக்கைகள் துரிதமாக எடுக்கப்பட்டு வருகின்றன.

**திரு. ரா. ரா. முனுசாமி :** பழைய அரசு இருந்தபோது பட்டா மாறுதல் செய்வதிலும், வழங்குவதிலும் கர்ணம், மணியகாரர் தலையீடு காரணமாகக் காலதாமதம் ஏற்பட்டு வந்தது. புதிய அரசு அந்த நிலைமைகளைத் தவிர்த்து புறம்போக்கு நிலங்களுக்குப் பட்டா வழங்குவதைத் துரிதப்படுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அதைத்தான் சொன்னேன். ஒவ்வொரு மாவட்டத்திலும் ஏராளமான புறம்போக்கு நிலங்கள் இருக்கின்றன. இருக்கின்ற புறம்போக்கு நிலங்கள் முழுவதையும் கொடுத்து விட முடியாது. ஏரிப் புறம்போக்கு, குளத்துப் புறம்போக்கு, பாதை புறம்போக்கு, களத்துமேடு, ஊரிலுள்ள மைதானம் போன்று தேவையான புறம்போக்குகள் இருக்கின்றன. அவை தவிர மற்றவற்றை விவசாயம் செய்வதற்கு லாயக்கான நிலங்களை ஏழைகளுக்குப் பட்டா செய்து கொடுக்க துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இராமநாதபுரம் மாவட்டத்தில் பரமக்குடி பகுதியில் இந்த வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. சென்னையின் புறமாவட்டமாகிய செங்கற்பட்டு மாவட்டத்தில் கூட 30,000 ஏக்கருக்கு மேல் உள்ள புறம்போக்கு நிலத்தை நிலமற்ற விவசாயிகளுக்குக் கொடுப்பதற்கான செயற் குறிப்பைத் தயாரிக்க வேண்டுமென்று கலெக்டர் அவர்களுக்கு ஆணையிடப்பட்டிருக்கிறது. மற்ற மாவட்டங்களிலும் வேலைகள் நடைபெற்று வருகின்றன.

**திரு. பி. துரைராஜ் :** இந்தச் சர்க்கார் புறம்போக்கு நிலங்களை ஏழை விவசாயிகளுக்குக் கொடுக்கும்போது, ராணுவத்தினர் விவசாயம் செய்ய முன் வந்து கேட்டால் தனிச் சலுகை கொடுப்பதற்கு அரசாங்கம் முன் வருமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** ராணுவத்தினருக்கு ஏற்கெனவே சலுகை காட்டி வருகிறார்கள். இப்போதும் காட்டப்படும்.





**திரு. ஆ. கருப்பையா :** ராணுவத்தினர் பல காலமாகப் புறம்போக்கு நிலங்களை அனுபவித்து வந்தும் நாளது தேதி வரை பட்டா வழங்கப்படாமல் இருக்கிறது. அதனால் அவர்கள் ஒன்றுக்குப் பத்து மடங்கு அபராதம் செலுத்தி வருகிறார்கள். அவர்களுக்கு உடனடியாகப் பட்டா வழங்க அரசு முன் வருமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இது, முன்னாலே ஆண்ட அரசினுடைய பிதுரார்ஜிதமாகப் பெற்றவை. கனம் உறுப்பினர் அவர்களுடைய உணர்ச்சியை இந்த அரசு உணர்ந்துள்ளது. அதனால் வேகமாக இந்தக் காரியம் நடைபெற வேண்டுமென்ற முறையில் துரிதமாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**திரு. பெ. பெரியசாமி :** சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரை ஏற்கனவே இருந்த சர்க்கார் 1,500 ஏக்கருக்கு மேல் உள்ள நிலத்தை வழங்கியும் இன்னும் பட்டா வழங்கப்படாமலே அவர்கள் பயிர் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நமது சர்க்கார் பட்டா வழங்க முன் வருமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இதுவும் பரிசீலிக்கப்படும்.

**திரு. ஜே. எஸ். இராசு :** புறம்போக்கு நிலங்களை ஏன் உடனடியாகப் பட்டா செய்து தரக்கூடாது என்று வட்ட அலுவலகங்களில் கேட்கிற நேரத்தில், ப்ரொக்யூர்மெண்ட் அலுவல்கள், ஸ்டேட் லோன் கலெக்ஷன், ஆர்.டி.ஓ., கலெக்டர் போன்றவர்கள் இடும் பணிகள் ஆகியவற்றில் நாங்கள் ஈடுபட்டிருப்பதால் எங்களால் பட்டா செய்து கொடுக்கும் பணியில் துரிதமாக ஈடுபட முடியவில்லை என்று கூறுகிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட தாசில்தார்களுடைய வேலைகளில் மாற்றம் செய்தோ அல்லது இதற்கென்று தனியாக தாசில்தாரை நியமித்தோ துரிதமாகப் பட்டா வழங்க ஏற்பாடு செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** கனம் உறுப்பினர் அவர்கள் கூறுவது முற்றிலும் தவறானது அல்ல. சில உண்மைகளாக இருக்காது. அவர்களுக்கு வேலைப் பளு உள்ளது. இந்த வேலையைச் செய்யும்போது இடர்ப்பாடுகள் ஏற்படுகின்றன.. இதற்காகத் தனியாகக் கவனித்து, சாத்தியக்கூறான வகையில், நிதி நிலைமை அனுமதிக்கும் அளவில் இந்த அமைப்பு விரிவு படுத்தப்படும்.

**திரு. க. இராமமூர்த்தி :** புது அரசின் இந்த புறம்போக்கு நிலங்கள் பற்றிய கொள்கை காரணமாக கிராமங்களில் அதிகப்படியான ஆக்கிரமிப்புகள் ஏற்படுகிற நேரத்தில் அங்குள்ள மேய்ச்சல் நிலங்களில் விவசாயத்திற்கு மிக முக்கியமானது மேய்ச்சல் நிலங்கள்—ஆக்கிரமிப்புகள் ஏற்படாமல் தடுக்க முன்வருமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தகுந்த முறையில் தடுக்க முன்வந்து கொண்டிருக்கிறது.

**திரு. ரா. ராமச்சந்திர துரை :** பஞ்சாயத்துக்களுக்கு ஒப்படைக்கப்பட்ட புறம்போக்குகள் பொது மக்களுக்கு அத்தியாவசியமான தேவை என்று கருதும்போது மக்கள் அபிப்பிராயமும் அல்லது பஞ்சாயத்து தீர்மானமும் இல்லாது மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் தனிப்பட்டவர்களுக்கு வழங்குவதைத் தடுக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தனிப்பட்டவர்களுக்கு எங்கே வழங்கப்பட்டிருக்கிறது என்று எடுத்துச் சொன்னால் சரியாக இருக்குமே தவிர பொதுப்படையாகச் சொல்வது சரியானதல்ல. பஞ்சாயத்துக்கள் கருத்து இவைகள் எல்லாம் எடுத்துக்கொள்ளப்படுகிறது. அவைகளையும் யோசித்துத்தான் இந்த உரிமங்கள் வழங்கப்படுகின்றன.

[1968 மார்ச் 9

* 185 *Q*.—THIRU A. CHIDAMBARANATHA NADAR :—Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(*a*) whether there is any proposal with the Government either to assign or lease the lands available in the name of " Malattar " in Tirukoilur taluk, South Arcot district, to individuals; and

(*b*) if so, when will the process of assignment be completed?

THE HON. THIRU K. A. MATHIALAGAN :—(*a*) No such proposal is under contemplation by the Government.

(*b*) Does not arise.

### அரசு அச்சகம்.

*186 **வினா.—திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு தாழ்த்தப் பட்டோர் நல, செய்தித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :—

(அ) சர்க்கார் தலைமை அச்சகத்தில் ஓய்வுபெற்ற அதிகாரிகளுக்கு 1966–67-வது ஆண்டுகளில் உத்தியோக நீடிப்பு கொடுக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், யார் யாருக்கு அவ்வாறு கொடுக்கப்பட்டுள்ளது ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** (அ) ஆம்.

(இ) கீழே குறிப்பிட்டுள்ள இரு அலுவலர்களுக்கு இச்சலுகை அளிக் கப்பெற்றுள்ளது :—

(1) திரு. எல். மாதவபாலகிருஷ்ணன், சீனியர் டெபுடி ஒர்க்ஸ் மேனேஜர், 30—6—1966-ல் இருந்து 29—6—1967 வரை உத்தியோக நீடிப்பு கொடுக்கப்பட்டது. பிறகு 30—6—1967-லிருந்து ஓர் ஆண்டு மீண் டும் பதவியில் அமர்த்தப்பட்டுள்ளார்.

(2) திரு. பி. வேம்புலி, அசிஸ்டெண்ட் ஒர்க்ஸ் மேனேஜர், சர்க்கார் தலைமை அச்சகத்தில் ஓய்வு பெற்ற பின் 20—7—1966 லிருந்து-1—7—1967 வரையிலும் பிறகு 11—8—1967 லிருந்து 2—7—1968 வரை யிலும் மீண்டும் பதவியில் அமர்த்தப்பட்டுள்ளார்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** பலபேர்கள் படித்துவிட்டு வேலை யில்லாதிருக்கக் கூடிய இந்த நேரத்தில் எதற்காக வேண்டி ஓய்வுபெற்ற பிறகும் இவர்கள் நீடிக்கப்பட வேண்டும் ? இனிமேலாவது இதுபோன்று நீடிக்கப்படாத அளவிற்கு பார்த்துக் கொள்ள ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** பொதுப்பணித் துறை 19—2—1963 தேதி, 290 எண் உள்ள அரசாங்க ஆணைப்படி விஞ் ஞானப் பணியாளர்கள், தொழில் நுட்பப் பணியாளர்கள் இவர்களை மீண்டும் வேலையில் அமர்த்திக் கொள்வது என்ற கொள்கையை அரசு வகுத்துள் ளது. அவர்கள் உடல் நலம் உள்ளவர்களாகவும், பிற வகைகளில் அர சாங்கப் பணிகளுக்கு தகுதியுள்ளவர்களாகவும் இருக்க வேண்டுமென்ற நிபந் தனைக்கு அது உள்பட்டதாகும். மேலும் நிர்வாகத்திற்குட்பட்ட பல பணி களை அவர்கள் திறமையாகச் செய்யலாம் என்ற நம்பிக்கையில் அனுபவ சாலிகள், திறமைசாலிகள் இவர்களுக்கு மேலும் ஒன்றல்லது இரண்டு ஆண்டு காலம் உடல்நலம் சரியாக இருக்குமானால் மேலும் நீடிக்கலாம் என்று அப்போதைய அரசு முடிவு எடுத்திருக்கிறது. அதைத் தொடர்ந்து தான் இப்போது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.



1968 மார்ச் 9]

DR. H. V. HANDE : Sir, are the Government aware of the fact that this sort of extension to officers is the most important source of corruption because the officers, when they know that their service is going to be extended or likely to be extended, go in a way which is not conducive to the proper administration. So, will this Government at least be a beacon to all other States and see that extension of service is not given to officers whether they are High Court Judges or other officers. Also, will the Cabinet take a decision to retire them at the age of fifty-five or whatever period they fix and see that no extension is granted to any officer working in this State?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** மேலும் ஒரு ஆண்டு நீடிக்கப்பட வேண்டுமென்பதற்காக அதிகாரிகள் தவறான பாதை யில் அரசாங்கத்தை நாடுகிறார்கள் என்ற குற்றச்சாட்டு இருக்குமானால் அவைகளை தகுந்த முறையில் பரிசீலனை செய்வதற்கு அரசுக்கு உரிமை யிருக்கிறது. நாடுகிறார்கள் என்பதற்காக பல நல்ல உரிமைகள் தரப்படக் கூடாது என்று பேசுவது சரியானதல்ல என்று கருதுகிறேன்.

**திரு. எ. பாலசுப்பிரமணியன் :** இந்த எக்ஸ்டென்ஷன் என்ற கொள்கை நடைமுறையில் பலவிதத்தில் துர்விநியோகம் செய்யப்படுவ தாக பரவலான கருத்து இருப்பதை முன்னிட்டு அசாதாரணமான கார ணங்கள் இருந்தால்தான், அந்தக் குறிப்பிட்ட இடத்தில் வேறு எவராலும் அந்தப் பணியை நீடித்து நடத்த முடியாத அளவிற்கு அசாதாரணமான காரணங்கள் இருந்தால்தான் எக்ஸ்டென்ஷன் தருவது என்று அந்த விதியை மாற்றும் எண்ணம் அரசுக்கு உண்டா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** இப்போது பதவி நீடிப்பு தருவது எறத்தாழ உறுப்பினர் அவர்கள் கூறிய வகையில் தான் வழக்கமாக தரவேண்டுமென்ற நியதி இருந்தாலும் சில காரியங் களை பரிசீலனை செய்து தான் தரப்படுகிறது. முதலில் கூறியபடி ஸீனியர் டெப்டி வொர்க்ஸ் மானேஜருக்கு இரண்டு ஆண்டு காலம் பதவி நீடிப்பு தரப்பட்டிருக்கிறது. மேலும் ஒரு ஆண்டு அவருக்கு தருவதற்கு மறுக்கப் பட்டிருக்கிறது. காரணம் அவர்கள் மேலும் அங்கு இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை என்று அரசாங்கம் எண்ணுகிற காரணத்தினால்தான்.

*187 **வினா—திரு. பெ. மலைச்சாமி :** மாண்புமிகு தாழ்த்தப்பட்டோர் நல, செய்தித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரையில், கிளை அரசு அச்சகம் ஒன்று நிறுவுவதற்குரிய செயற்குறிப்பு உண்டா ?

(இ) ஆம் எனில், எப்போது முதல் அமல்படுத்தப்படும் ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** (அ) அவ்வித செயற்குறிப்பு ஒன்றும் அரசின் கவனத்தில் இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

### *Co-operative Motor Transport Societies.*

* 188 *Q*.—THIRU A. CHIDAMBARANATHA NADAR : Will the Hon. the Minister for Law and Co-operation be pleased to state—

(*a*) the number of Co-operative Motor Transport Societies functioning in the State ; and

(*b*) the number among them intended for the benefit of persons belonging to the Scheduled Castes?

[1968 மார்ச் 9

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) பத்து (10).

(இ) ஒன்று (1).

*Seats vacant in Medical Colleges*

* 189 *Q.* THIRU K. VINAYAKAM:—Will the Hon. the Minister for Public Health be pleased to state;—

(*a*) whether the three-man high power committee constituted for interviewing candidates for admission to the vacant seats in Medical Colleges interviewed and selected the candidates ; and

(*b*) if so, the number of candidates so selected?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) இருபத்தி ஆறு.

THIRU K. VINAYAKAM: Sir, out of those available 26 seats which have not been filled up due to writ petitions pending in the High Court, how many of the persons who actually filed the writ petitions succeeded in getting seats. Also, are the Government aware of the fact that the Supreme Court has struck down the procedure adopted by this Government, viz., that the seats should be allotted district-wise and what is the procedure or *modus operandi* which the Government are going to propose with regard to the selection of candidates in future?

THE HON. THIRU S. J. SADIQ PASHA: I have not got particulars with regard to the question, how many of the candidates who had filed writ petitions have been selected. So far as the decision of the Supreme Court is concerned, the Supreme Court had held that the district-wise allocation of seats was void. The Supreme Court in its judgment struck down Rule No. 8. The question of revising the rules for the selection of candidates for admission to the course is under the consideration of the Government and the proposals called for from the Director of Medical Services are awaited.

DR. H. V. HANDE: Sir, the very fact that 26 persons have been selected after the reconstitution of the second Committee shows that this particular second Committee did not agree with the first Committee and that is obvious on the face of it. We have been saying for the last so many years that there is a feeling among a vast section of the public that it is not done in the way in which it ought to be done. So, in view of the constant irritation that this matter creates, will this Government come forward straightaway to say that the candidates will be selected only on the basis of marks. Also, so far as interviews are concerned, within ten minutes they cannot decide anything. They can have a Medical Board to examine whether a person has got two hands and two legs. .... .... ....

MR. SPEAKER: Everybody knows that a person has got two hands and two legs and that is not in question.



1968 மார்ச் 9]

DR. H. V. HANDE: I am grateful to the Hon. Speaker. So will this Ministry set up a new example and not follow the policy of the previous Ministry and also see that the selection is done in an equitable basis without giving any rise to any doubts whatsoever in the minds of the public?

THE HON. THIRU S. J. SADIQ PASHA: My hon. Friend has not put a supplementary question, he has made a short speech. I am unable to answer it. மு. ப. 10.00

THIRU T. MARTIN: May I request the Hon. Minister to state whether at least for the coming year this Government will publish the names of the candidates applying for admission and the marks obtained by them in the Pre-University Course and also in the interview at least for the perusal of the hon. Members of this House?

THE HON. THIRU S. J.: SADIQ PASHA Let my hon. Friend put a separate question.

THIRU K. VINAYAKAM: Sir, may I know what stands on the way of the Government laying the cards on the table of the House and even for inspection by the public the names of those who apply, their marks in the Pre-University Course, their marks in the interview and the names of those selected for admission, so that the party in power may not be suspected or will the Government think of the possibility of constituting a board of persons from outside the State for making the selection?

THE HON. THIRU S. J. SADIQ PASHA: We are the inheritors of old systems and regulations. If my Firend puts a separate question, certainly I will give the particulars.

திரு. ஆலடி அருணா : தலைவரவர்களே, காங்கிரஸ் ஆளுகையிலுள்ள கர்நாடகம், ஆந்திரம் போன்ற மாநிலங்களிலுள்ள மருத்துவக் கல்லூரிகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களின் மதிப்பெண்கள் வெளியிடப் பட்டதா? கடந்த காலத்திலே இங்கு காங்கிரஸ் கட்சி ஆளுகையிலிருந்த போது மதிப்பெண்களை வெளியிட்டதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கடந்தகால அரசாங்கம் வெளியிடவில்லை. இப்பொழுதும் அது வெளியிடப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

### 3. ஒற்றிவைப்புத் தீர்மானம்.

திரு. க. அன்பழகனும் அவரைச் சார்ந்தவர்களும் தாக்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, ஒற்றிவைப்புத் தீர்மானங்கள். திரு. கோவிந்தராஜன் அவர்கள் ஒற்றிவைப்புத் தீர்மானத்தைப் படிக்கும்பொழுது அதிலே அனுமதிக்கப்படாத சொற்களைச் சேர்த்துப் படிக்கக் கூடாது என்ற வேண்டுகோளை விடுத்து, அவர்களைப் படிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

*திரு. சி. கோவிந்தராசன் : பேரவைத் தலைவரவர்களே, சட்டமன்ற விதி 42-ன் கீழ் அடியிற்கண்ட அவசர முக்கியத்துவம் வாய்ந்த பிரச்னையை விவாதிப்பதற்கு சபையை ஒத்திவைக்கக் கோருகிறேன்.

"8–3–1968 மாலை திருநெல்வேலி எக்ஸ்பிரஸில் செல்ல காரில் சென்ற நாடாளுமன்ற திராவிட முன்னேற்ற கழக தலைவர் திரு. க. அன்பழகன் அவர்களையும் அவருடன் சென்றவரையும் காங்கிரஸ் காரர்கள் தாக்கி சட்டையைக் கிழித்து காரைத் தாக்கி, சேதப்படுத்தி, உயிருக்கே ஆபத்தை உண்டாக்கக்கூடிய பயங்கரமான சூழ்நிலை ஏற்பட்டதைப் பற்றியும் அதனால் பொது மக்களுக்கு ஏற்பட்ட பரபரப்பையும் பற்றியும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சாதாரண நிர்வாகத்துக்கு உட்படாத பிரச்சினையாக இருக்கிறதா என்பதைப் பற்றிக் கூற வேண்டுமே தவிர, இது நடந்தது இன்ன கட்சியால் என்று குறிப்பிடாமல் பேசும்படி கேட்டுக் கொள்ளுகின்றேன்.

**திரு. சி. கோவிந்தராசன் :** தலைவரவர்களே, இரயிலில் பிரயாணம் செய்ய வந்தவர் நாடாளுமன்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராகும். அங்கே வந்திருந்தவர்கள் ஏற்கெனவே ஒரு தலைவரை வரவேற்பதற்காக வந்தவர்கள். அவர்கள் வேறு கட்சியைச் சேர்ந்தவர்கள். அவர்கள் வந்திருப்பது சாதாரணமாக அல்ல. அந்தத் தலைவரை வரவேற்பதற்குக் கம்பும், கழியும் தேவை இடையாது. திருவாளர் அன்பழகன் வந்த காரைப் பார்த்ததும், கொடி பறந்ததைப் பார்த்ததும் தாக்கி கொடியைக் கிழித்து காரையும் சேதப்படுத்தி கையிலிருந்த தடியால் அடித்திருக்கிறார்கள். ஏற்கெனவே ஒரு பத்திரிகையில் தடியுடனும், கம்புடனும் வர வேண்டுமென்று அவர்களுக்கு வந்த அறிக்கையின் அடிப்படையில் தான் அவர்கள் கைத்தடியுடன் வந்திருக்கிறார்கள். எனவே, அவர்களுக்குப் பிடிக்காத எந்தத் தலைவர் சென்றிருந்தாலும், திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரோ, முதலமைச்சரோ, மற்ற அமைச்சர்களோ, சட்டப் பேரவைத் தலைவரோ யாராயிருந்தாலும், மாற்றுக் கட்சியைச் சேர்ந்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை அவர்கள் அடித்திருப்பார்கள். இது மிகவும் ஆபத்தான நிலைமை.

**THIRU K. VINAYAKAM :** On a point of order, Sir, I read about this incident in the Press and I also read that the Police have registered a case against certain person. As such will it not be *sub-judice* and is it right to discuss this matter on the floor of this House? When a Court is seized of the matter, are we right in discussing it. You cannot say that you adopt two standards. May God save us !

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. விநாயகம் அவர்களுக்கு விடையளிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்கள் பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்பினார்கள். உறுப்பினர்கள் பேசும்பொழுது "இம்ப்யுடேஷன்" வேண்டாமென்று திரு. இராமமூர்த்தி அவர்களுக்கும், தங்களுக்கும் சொல்லி, அதற்குப் பிறகு எப்படி பேசுவதற்கு இடம் கொடுக்கப்பட்டதோ, அந்த அளவுக்குத்தான் இப்பொழுதும் கொடுக்கப்படுகிறது.

Dr. Hande also has given notice of a simlar adjournment motion.

***DR. H. V. HANDE :** Sir, first of all I raise a point of order. I gave my notice earlier and I should have been given precedence to read it. I think it is not in order to ask me to read it now. I have given notice of the following :—

I wish to move that the business of this House stands adjourned to discuss a definite matter of urgent public importance, namely, the manhandling of the Leader of the D.M.K. Group in the Parliment Thiru K. Anbazhagan and the driver and the other occup nt of the car in which he was proceeding to entrain the Trivandrum Mail or some other train at the Egmore Statoin by an unruly crowd on 8th March 1968. I request you, Sir, to adjourn the business of this House to discuss the situation that led to the incident and the measures to be taken to avoid the recurrence of such incidents.





I am not interested in discussing whether it comes under 'sub-judice' or not. The point I want to urge is entirely different. Another person was manhandled by a crowd in some other place. He also was the victim of violence. He was expected to arrive at the Egmore Station and a crowd had gone to receive him. Mr. Anbazhagan had nothing to do with that incident. He was in Delhi all these days and he had absolutely no connection with this incident. I know Mr. Anbazhagan as a collegaue in the Legislature. He was very very careful in the use of words. He does not allow even his partymen to use harsh words. A person of that type and who has nothing to do with the incident had been attacked. Unless the situation is nipped in the bud, the situation in the entire Tamilnad will go out of control. This exchange of compliments in a violent way should be stopped. We got independence by the efforts of no loss a person than Mahatma Gandhi who preached non-violence. Even to-day violent ac s of th's nature are going on. It is becoming a feature for unruly crowds to attack a Congress leader to-day, a D.M.K. leader to-morrow and so on. The purpose for which I propose the adjournment of the business of this House is to urge this. Let us all unite, let the party leaders sit together and come to a decision that this sort of violence should be put an end to. Let us express our view, let us have the gentlemanliness to disagree with others. If this sort of violent acts go on, where will it end ? To-morrow we may do something which may not be acceptable to some. What happened to Mr. Anbazhagan may happen to any one of the members of this House. Let us sit round a table and come to a settlement. If this is not possible, I request that the business of this House be adjourned for half an hour and let the leader be given an opportunity to express their views. A man of Mr. Anbazhagan's character — I know very well that he is incapable of using any harsh words —has been attacked. I can understand if a man who is always used to harsh words has been attacked. Here is a man whom we know very well. Take the proceedings of the Assembly and the Council and see whether he has at any time gone against parliamentary practice and spoken in a manner which will hurt the feelings of the people. I request you to adjourn the business of this House to consider this matter.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அவைத் தலைவரவர்களே, இரண்டு ஒற்றிவைப்புத் தீர்மானங்களின் மூலம் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிற அத்தகைய நிகழ்ச்சிகள் உள்ளபடியே வருந்துவதற்கு உரியது. ஆனால் முறைப்படி காவல் துறையினர் என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமோ அந்த நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள். அன்றாட நடவடிக்கைகளின் கீழ் இது வருவதால் முறைப்படி காவல்

துறையினர் நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அதற்காக இந்த அவையை ஒற்றி வைத்து விவாதிக்க வேண்டிய தேவையில்லை. ஆனால் இந்த நிகழ்ச்சிகள் வருந்துவதற்குரியது என்பதை அத்தனை பேரும் ஒத்துக்கொள்வார்கள் என்பதை இந்த அவையினர் அறிவார்கள். இந்த நிகழ்ச்சி, நாடாளுமன்ற திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் திரு. அன்பழகன் அவர்களும் அவருடன் சென்ற திரு. சுந்தரம் அவர்களும் சுற்றி வளைக்கப்பட்டு, தாக்கப்பட்டு, சட்டை கிழிக்கப்படுகின்ற அளவுக்கு நிலைமைகள் ஏற்பட்டிருப்பது வருந்துதற்குரிய ஒன்று. இந்த நிகழ்ச்சியைப் பற்றி தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்களோ, அல்லது பெருந் தலைவர்களோ, ஒத்துக்கொள்ளக் கூடியது என்று சொல்ல மாட்டார்கள். யாரும் இதை ஒத்துக்கொள்ளக் கூடியது என்று சொல்ல மாட்டார்கள். எந்த கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், வன்முறை செயல்களில் ஈடுபடுவதை, எந்த வகையில் நடைபெற்றாலும் ஈடுபட வேண்டாமென்று தான் சொல்வார்கள். கோவையிலே, இந்திய துணை அமைச்சர் திரு கே. எஸ். இராசாமி அவர்கள் எதிர்பாராத வகையில் தாக்கப்படுகின்ற அளவுக்கு சூழ்நிலைகள் ஏற்பட்டபொழுது, ஜனநாயகத்தில் உள்ள பிரச்சினைகளை வன்முறை செயல்களால் தீர்த்துக்கொள்ள முடியாது என்றும், அப்படி தீர்த்துக்கொள்ள வேண்டுமென்று ஈடுபடுவதன்மூலம் ஜனநாயகத்தை இழிவு நிலைக்குக் கொண்டு செல்பவர்கள் ஆவோம் என்றும் இது மிகமிக வருந்துதற்குரியது என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் அறிக்கையின் மூலம் தெரிவித்து இருக்கிறார்கள். இந்த மன்றத்தின் மூலமும் தெரிவித்து இருக்கிறார்கள்.

பல்வேறு அரசியல் கட்சியைச் சேர்ந்த தலைவர்கள் இந்த மாதிரி வருந்தத்தக்க நிகழ்ச்சிகள் எதிர் காலத்தில் நடைபெறாத வண்ணம் இதை விவாதிக்கலாம். பல்வேறு அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களை தடுப்பது, வளைத்துக் கொள்வது, சூழ்ந்து கொள்வது போன்ற நிகழ்ச்சிகள் இடம் பெறுமானால் யாருமே வெளியே போக முடியாத நிலை ஏற்படும். இரயிலிலே பிரயாணம் செய்து கொண்டிருந்தபொழுது, யாருக்கும் தெரியாமலேயே திரு. உபாத்தியாயா அவர்கள் தாக்கப்பட்டு, தூக்கி வெளியே எறியப்படுகின்ற அளவுக்கு நிலைமைகள் வளர்ந்து கொண்டு போகுமானால், எந்தக் கட்சித் தலைவர்களும் வெளியிலே நடமாட முடியாத சூழ்நிலைகள் தான் ஏற்படும்.

**மாண்புமிகு முதலமைச்சர்** அவர்கள் கூட்டிய சர்வ கட்சித் தலைவர்கள் கூட்டத்திலேகூட, இதை அந்தந்த கட்சியின் தலைவர்கள் பார்த்துக் கொள்ளுவதன் மூலமாக நல்லதொரு சூழ்நிலையை உருவாக்க முடியுமென்ற கருத்து தெரிவிக்கப்பட்டது. வெளியிலே பேசுவதன் மூலமாகவும், எழுதுவதன் மூலமாகவும் தான் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. எழுதுவது தான் — பத்திரிகைகளிலே எழுதுவது தான் — இத்தகைய நிகழ்ச்சிகளுக்குக் காரணமாக இருக்கிறது என்பதையும் நாம் உணருதல் வேண்டும். அந்த முறையிலே வன்முறையிலே பத்திரிகைகளிலே எழுதப்பட்டும், பேசப்பட்டும் வருவதுதான் இத்தகைய நிகழ்ச்சிகளுக்குக் காரணமாகும். அண்மையிலேகூட, 25-ஆம் தேதி அமைச்சர்களுடைய கார்களைச் சூழ்ந்து கொள்ள வேண்டு மென்றும், ஆதித்தனார் அவர்களுடைய காரைச் சூழ்ந்துகொள்ள வேண்டுமென்றும் அவர்களை நகரவிடக் கூடாது என்றெல்லாம் கூட எழுதப்படுகின்ற தன்மையிலே நிகழ்ச்சிகள் அமைகின்றன. அந்த வகையிலே அதுபற்றி நடவடிக்கைகள் எடுக்கின்ற பொழுது கூட, காவல் துறையினரிடம் அத்தகைய கட்சித் தலைவர்களிடம் சொல்லி , அதுபோன்ற நிகழ்ச்சிகள் இனிமேல் நடைபெறாத அளவுக்கு நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இத்தகைய நிகழ்ச்சிகளை மற்றைய கட்சிகளிலே உள்ளவர்கள் ஒத்துக் கொள்வார்கள் என்று யாரும் கருதுவதற்கில்லை. அவர்களோ இதிலே ஈடுபட்டு, செய் என்றோ சொல்ல மாட்டார்கள். பெருந் தலைவர்கள் இந்த காரியத்தைச் செய்யுங்கள் என்றும் சொல்ல மாட்டார்கள், செய்ய வேண்டாமென்றும் சொல்ல மாட்டார்கள். இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் செய்வதைப் பற்றி நான் தான் சொல்ல வேண்டும். நான்



சொல்லுகிறபடி தான் செய்ய வேண்டுமென்று, அந்தந்த கட்சித் தலைவர்களே, இந்த மாதிரி வன்முறை செயல்களில் ஈடுபடக் கூடாது என்று சொல்லுவதன் மூலமாக, அவர்கள் இத்தகைய முயற்சிகள் மேற்கொள்ளுவதன் மூலமாகத் தான் இத்தகைய நிலைமைகள் ஏற்படாத நிலைமையை நாம் உருவாக்க முடியும். அந்த வகையில் தான் காவல் துறையினருக்கும் இம்மாதிரி நிகழ்ச்சிகளின்போது அந்தந்த கட்சித் தலைவர்களிடம் சொல்லி, நல்ல முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இதை கட்சிக் கண்ணோட்டத்தோடு நோக்கக் கூடாது, அம்மாதிரி நிகழ்ச்சிகளில் ஈடுபடக் கூடாது என்பதை இந்த தீர்மானம் கொண்டு வந்ததின் மூலம் உணர வேண்டும். ஆனால் இது அரசினுடைய அன்றாட நிகழ்ச்சிக்கு, அன்றாட நிர்வாகத்திற்கு உட்பட்டிருக்கிற தன்மையில் அதை இங்கே விவாதித்து முடிவு எடுக்கத் தேவையில்லை. காவல் துறையினரும் ஒரு வழக்கு தொடுத்து 6 பேரை கைது செய்திருக்கிறார்கள். மேற்கொண்டு அவர்கள் வழக்குகளை நடத்துவார்கள். ஆகவே அதனுடைய தன்மைகளைப் பற்றி இங்கே ஆராய்வது முறையாகயில்லை. ஆகவே, இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் மேலும் நடைபெறாமல் இருப்பதற்கு இம்மன்றத்தின் மூலமும், வேண்டுகோள்களின் மூலமும் நல்லதொரு சூழ்நிலை ஏற்பட வேண்டும். அந்தந்தக் கட்சியினர் தங்கள் தங்கள் கட்சியினர் எந்த அரசியல் வாதியின் மீதும் வன்முறைகளில் ஈடுபடக் கூடாது என்றும், அம்மாதிரி ஏற்படாமல் தடுத்து நிறுத்துவதற்கும் வழி ஏற்படுத்தி முன் வரவேண்டுமென்றும் சர்வகட்சித் தலைவர்கள் கூட்டத்திலே முடிவு எடுத்துக் கொண்டோம். இதை நாம் வலியுறுத்தி சொல்லியிருக்கிறோம்.

இந்த நிகழ்ச்சிகள் முறைப்படி கவனிக்கப்படும். ஆனால் சட்டதிட்டத்தின் மூலமாகவோ, அல்லது வெறும் விவாதத்தின் மூலமாகவோ இதைத் தீர்த்துக் கொள்ள முடியாது. இதைத் தீர்த்து விடுவதற்கு அவரவர்கள் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். மனிதனுக்கு மனிதன் காட்ட வேண்டிய அன்பு, ஒழுங்கு முறை, நியதி இந்த முறைகளை எல்லாம் நாம் கடைப்பிடிக்க வேண்டும். அதைத் தான் அண்ணல் காந்தியடிகள் கூறினார்கள். திரு. வி. கல்யாணசுந்தரம் அவர்கள் அடிக்கடி சொன்னார்கள். கருத்து வேற்றுமைக்கு மதிப்பளிக்கின்ற ஜனநாயகப் பண்பு இந்த நாட்டிலே நிலைத்திருந்தால்தான் நாம் நல்ல முறையில் இருக்க முடியும் என்று சொன்னார். அந்த கருத்துக்கு மதிப்பளிக்காத வகையில் எதிர்காலத்தில் இப்படிப்பட்ட சம்பவங்கள் ஏற்படாமல் தடுக்க, இந்த பிரச்சினை கொண்டு வருவதும், அதை இங்கே சொல்வதும் பயன்படும். ஆகவே, அவையை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டிய தன்மையில் இது இல்லை என்பதை மட்டும் கூறிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது அரசினரின் அன்றாட நிர்வாகத்திற்கு உட்பட்டு வருகிறது. எனவே, பேரவையினை ஒற்றிவைக்கத் தேவையில்லை யென்று கருதுகிறேன்.

டாக்டர் ஹாண்டே அவர்கள் எழுப்பிய பாயிண்ட் ஆஃப் ஆர்டருக்கு நான் தீர்ப்பு சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். முதலிலே கொடுத்த ஒற்றிவைப்புத் தீர்மானத்திற்கு முதலிலே பேச வாய்ப்பு கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். அவ்விதம் செய்ய வேண்டுமென்று விதிகளிலே கிடையாது. மேலும், ஒற்றிவைப்புத் தீர்மானத்தைப் பேரவையின் தலைவர் கையில் கொடுக்கக் கூடாது. அதை செயலாளரிடத்திலே கொடுக்க வேண்டும். ஏதோ, கொடுக்கிறாரே என்பதற்காக மரியாதைக்காக ஒரு முறை நான் வாங்கினால், அதனால் அவர்கள் முன்னாலே கொடுக்கப்பட்டது என்று அதை எடுத்துக்கொள்வது தவறாகும். செயலாளரிடம் முன்னாலே கொடுக்கப்பட்ட தீர்மானம்தான் இன்று முதலிலே எடுத்துக்கொள்ளப் பட்டது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

### 4. கவன ஈர்ப்பு.

### பல்லடம், அவிநாசி வட்டங்களில் விளைச்சலின்மையும் கடன்கள் வசூல் ஒத்திவைப்பும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, 41-வது விதியின் கீழ் உள்ள கவன ஈர்ப்புத் தீர்மானம். திரு. துரைசாமி, திரு. பூபதி, திரு. குமாரசாமி, திரு. பரமசிவம் ஆகிய நால்வரும் ஒரே காரியத்தைப் பற்றி கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இப்பொழுது அவர்கள் தீர்மானத்தைப் படிப்பார்கள்.

**திரு. சு. துரைசாமி :** தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின் 41-வது விதியின் கீழ் அவசரமும், பொது முக்கியமும் வாய்ந்த காரியத்தை மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

கோவை மாவட்டம், பல்லடம், அவிநாசி ஆகிய வட்டங்களில் பருவ மழை தவறிய காரணத்தால் பயிர் விளைச்சலின்றியும், குடி தண்ணீர் இல்லாமலும் கால்நடைகளைப் பராமரிக்க முடியாமல் மக்கள் அவதியுறுவதால், அரசினர் வழங்கிய கடன்களை ஓராண்டு காலம் ஒத்தி வைக்க வேண்டிய அவசியம் பற்றிய அவசரமும் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**திரு. பி. எஸ். பரமசிவ கவுண்டர் :** தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின 41-வது விதியின் கீழ் அவசரமும், பொது முக்கியமும் வாய்ந்த காரியத்தை மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

கோவை மாவட்டம், பல்லடம், அவிநாசி ஆகிய வட்டங்களில் பருவ மழை தவறிய காரணத்தால் பயிர் விளைச்சலின்றியும், குடிதண்ணீர் இல்லாமலும் கால்நடைகளை பராமரிக்க முடியாமல் மக்கள் அவதியுறுவதால், அரசினர் வழங்கிய கடன்களை ஓராண்டு காலம் ஒத்தி வைக்க வேண்டிய அவசியம் பற்றிய அவசரமும் பொது முக்கியமுமான காரியத்தை மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. பூபதி அவர்கள் இருப்பிடத்தில் இல்லை. திரு. குமாரசாமி அவர்கள், சொல் வேற்றுமை இல்லையென்றால் படிக்க வேண்டியதில்லை. சொல் வேறுபாடு இருக்குமானால் படியுங்கள்.

**திரு. கே. என். குமாரசாமி :** தலைவர் அவர்களே, தீர்மானத்திலே சர்க்கார் வழங்கிய கடன்கள் என்று குறிப்பிட்டிருப்பதிலே, கோவாபரேடிவ் கடன்களையும் சேர்த்து வசூலிப்பதை ஒத்தி வைக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் மாவட்டத்தின் சில பகுதிகளில் பருவ மழை பொய்த்துவிட்டதன் காரணமாக, புன்செய்ப் பயிர்கள் சாவியாகிவிட்டன. பாசனக் கிணறுகளில் நீர் கிடைப்பது அரிதாகிவிட்டதால் மிகப் பெரும் பகுதிகளில் தோட்டப் பயிர்கள் கூடப் பாதிக்கப்பட்டுள்ளன. நீர்த் தேக்கங்களிலிருந்தும் வாய்க்கால்களிலிருந்தும் பாசனம் பெறும் வசதியுடைய நன்செய்ப் பயிர்கள் ஓரளவிற்கு நன்னிலையில் உள்ளன. ஆனால், சிறு ஆறுகளின் வாய்க்கால் பாசன ஏற்பாட்டின் கீழுள்ள நன்செய்ப் பயிர்கள் பெரும்பாலும் வாடிவிட்டன. பெரும்பான்மையான பாசன ஏரிகளுக்கு நீர் கிடைக்கவில்லை. நடப்புப் பசலியில் கடன் தவணைகளைச் செலுத்துவது கடினமென்று உழவர்கள் உணர்கின்றனர். கடன் தவணைகளையும் நிலவரியையும் மெதுவாக வசூல் செய்யுமாறு சார்நிலை அதிகாரிகளுக்குக் கலெக்டர் கட்டளை பிறப்பித்துள்ளார்.



பல கிராமங்களில் குடி நீர்ப் பஞ்சமும் ஏற்பட்டுள்ளது. ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் ஆகியவற்றிடம் உள்ள நிதியைக் கொண்டு குடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்துமாறு கலெக்டர் கட்டளை பிறப்பித்துள்ளார்.

மாவட்டம் முழுவதிலும் உள்ள பருவ நிலைமை குறித்து கலெக்டர் இன்னும் மதிப்பீடு செய்யவில்லை. மதிப்பீடு செய்து முடித்ததும் குறிப்பான செயற்குறிப்புகளை அனுப்பி வைப்பதாக கலெக்டர் உறுதி கூறியுள்ளார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, மற்றொரு கவன ஈர்ப்புத் தீர்மானம். திரு. எஸ். ராமசாமி நாயுடு அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால், பேரவையின் அனுமதியுடன் அந்த கவன ஈர்ப்புத் தீர்மானம் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்படுகிறது.

### 5. அரசினர் மசோதா.

### தமிழ்நாடு 1968-ம் ஆண்டு இனம்கள் (துணை) திருத்த மசோதா.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தமிழ்நாடு 1968-ம் ஆண்டு இனம்கள் (துணை) திருத்த மசோதாவை அறிமுகப்படுத்த நான் அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தமிழ்நாடு 1968-ம் ஆண்டு இனம்கள் (துணை) திருத்த மசோதாவை அறிமுகப்படுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மசோதா அறிமுகப்படுத்தப் பட்டிருக்கிறது.

### 6. 1968–69-ம் ஆண்டிற்கான நிதிக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு (தொடர்ச்சி).

### கோரிக்கை எண் 17—மீனளம்

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன் மொழிகிறேன் :—

"கோரிக்கை எண் 17—மீனளம் என்ற தலைப்பின் கீழ் ரூ.1,21,53,800-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."

**Dr. H. V. HANDE :** Sir, to discuss policy—I move the following cut motion :—

'That the allotment of Rs. 1,21,53,800 under Demand No. 17—Fisheries be reduced by Rs. 100.'

**Thiru K. RAMAMOORTHY :** Sir, to discuss policy with special reference to the improvements to the Cuddalore Port—I move the following cut motion :—

'That the allotment of Rs. 1,21,53,800 under Demand No. 17—Fisheries be reduced by Rs. 100.'

திரு. கே. பி. எஸ். மணி : " மீனவர் நலம் பற்றி விவாதிக்க "
" கோரிக்கை எண் 17—மீனளம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 1,21,53,800-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் "

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

### கோரிக்கை எண் 18—விலங்கின வளர்ப்பு

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்—

" கோரிக்கை எண் 18—விலங்கின வளர்ப்பு என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,64,68,000-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

DR. H. V. HANDE : Sir, to discuss policy–I move the following cut motion :—

'That the allotment of Rs. 3,64,68,000 under Demand No. 18 —Animal Husbandry be reduced by Rs. 100.'

திரு. இல. பலராமன் : " புதிய விலங்கினங்கள் வளர்ப்பு குறித்து விவாதிக்க "—

" கோரிக்கை எண் 18—விலங்கின வளர்ப்பு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 3,64,68,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும் "

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : "கால் நடை இன்சூரன்ஸ் ஏற்படுத்தாததைப் பற்றி விவாதிக்க "—

" கோரிக்கை எண் 18—விலங்கின வளர்ப்பு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 3,64,68,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் "

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : " திருநெல்வேலி மாவட்டம் எட்டய புரத்தில் ஒரு கால்நடை மருத்துவமனை கட்டிடம் கட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று விவாதிக்க "—

" கோரிக்கை எண் 18—விலங்கின வளர்ப்பு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 3,64,68,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் ".

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

### கோரிக்கை எண் 35—காட்டுவளத் துறை

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன் :—

" கோரிக்கை எண் 35—காட்டுவளத்துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,83,42,500-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."

DR. H. V. HANDE : Sir, to discuss policy—I move the following cut motion :—

'That the allotment of Rs. 1,83,42,500 under Demand No. 35—Forest Department be reduced by Rs. 100.'



திரு. இல. பலராமன் : " ஆதிவாசிகளுக்கும், நிலமற்ற விவசாயி களுக்கும் காட்டு வளத்துறையின் மரமற்ற தரை காடுகளை பட்டா வழங்குதல் பற்றியும், பஞ்சாயத்து அமைப்பு முறையில் காடுகளை மேற்பார்வை செய்து பராமரித்தல் பற்றியும் விவாதிக்க "—

" கோரிக்கை எண் 35—காட்டுவளத்துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 1,83,42,500-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் "

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. எம். சுரேந்திரன் : " வனவாசி, பக்கநாடு காட்டுப் பகுதிகளில் விவசாயிகளுக்கு நிலம் பட்டா செய்து கொடுக்க ஏற்பாடு செய்யாதது குறித்து விவாதிக்க "—

" கோரிக்கை எண் 35—காட்டுவளத்துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 1,83,42,500-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் "

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகின்றேன்.

### கோரிக்கை எண் 44—காட்டுவள மூலதனச் செலவு

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன் மொழிகிறேன்:—

"கோரிக்கை எண் 44—காட்டுவள மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 97,78,200-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும். "

THIRU K. RAMAMOORTHY : Sir, to discuss policy—I move the following cut motion :—

'That the allotment of Rs. 97,78,200 under Demand No. 44 —Capital Outlay on Forests be reduced by Rs. 100.'

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுது கோரிக்கைத் தீர்மானங்களும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின்முன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : தலைவர் அவர்களே, நான் கொண்டுவந்திருக்கும் மானியக் கோரிக்கைகளின் மீது தற்சமயம் நான் முன்னுரையாக பேசவேண்டியிருந்த கருத்துக்களை அச்சிட்டு, புத்தகங்களாக @ வழங்கியிருக்கிறேன். அவைகளை நான் படித்ததாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று தலைவர் அவர்களை பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் வைத்திருக்கிற விளக்கக் குறிப்பு பேரவையின் நடவடிக்கைகளில் அவர் படித்ததாகக் கொள்ளப்படும்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : என்னுடைய உரையை இறுதியில் வைத்துக்கொள்கிறேன். கடைசியில் குறைந்தது ஒரு மணி நேரமாவது எனக்குக் கொடுத்தால் நலமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த விளக்குகள் சற்று பயமுறுத்துவதாக இருக்கின்றன என்று கருத வேண்டாம். 10 நிமிடம் என்று ஒரு கணக்கு, மற்ற மகாநாடுகளில் நேரத்தைக் கட்டுப்படுத்த இதே மாதிரி வைத்திருப்பதை நான் பார்த்திருக்கிறேன். நேரம் முடிவதற்கு இரண்டு நிமிடங்களுக்கு முன்னால் மஞ்சள் விளக்குத் தோன்றும். அப்படித் தோன்றினால் உறுப்பினர்கள் அவர்கள் சொல்லிக் கொண்டுவந்த கருத்தை பேசி முடிப்பதற்கு நேரம் கிடைக்கும். நேரம் முடியும்பொழுது சிவப்பு விளக்குத் தோன்றும். அப்பொழுது கூட எடுத்த வாக்கியத்தைச் சொல்லி முடித்துக் கொள்ளலாம். இது எந்த அளவுக்கு வசதியாக இருக்கிறது என்று பார்க்கலாம். மற்ற மகாநாடுகளிலே நான் பார்த்த அளவிலே இந்த முறை வெற்றி பெற்றிருக்கிறது. இங்கும் இது வெற்றி பெறுமானால், இதைக் கையாளலாம்.

---

@ 88-125-ம் பக்கங்களில் I, II, III இணைப்புகளாக அச்சிடப்பட்டுள்ளன.

[1968 மார்ச் 9

**திரு. டி. மார்டின் :** ஸ்பீக்கர் சார், எந்தெந்த மகாநாடுகளில் பார்த்தீர்கள் என்று சபைக்குச் சொன்னால் நலமாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சொல்லட்டுமா ? ஒன்று, ஆஸ்ட்ரியா நாட்டில் பார்த்தேன், சமாதான மகாநாட்டில். இரண்டு, இங்கே இந்த நகரத்திலே மருத்துவர்கள் மகாநாட்டில் பார்த்தேன். இரண்டு சொன்னால் போதுமா ? இந்த முறையைக் கையாண்டு, நன்மை உண்டா என்று பார்ப்போம். மணி அடிப்பது மற்றப் பேரவைகளில் இல்லாத ஒன்றாக இருப்பதால், விளக்கு முறையை சோதனை செய்யலாம் என்று நினைக்கிறேன். நல்லதாக இருந்தால் ஏற்றுக்கொள்ளலாம். பேரவையில் உள்ள எல்லோரும் ஏற்றுக் கொண்டால் சரி, இல்லையென்றால் விட்டுவிடலாம்.

முற் பகல் 10-30

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மஞ்சள் விளக்கை உறுப்பினர்கள் பார்க்கவில்லையென்றால், மணி அடித்து பார்க்கும்படி செய்வீர்கள் அல்லவா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மணி அடிப்பது என்பதை ஒரு இறுதிக் கட்டமாகக் கொள்ளவேண்டும்.

***திரு. க. இராமமூர்த்தி :** அவைத் தலைவர் அவர்களே, இந்த மீன் வளர்ச்சித் துறையின் மீதான என்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்தி, என்னுடைய கருத்துக்களை என்னுடைய கட்சியின் சார்பிலே தெரிவிக்க விரும்புகிறேன். மீனளத் துறையைப் பொறுத்த வரையில், அச்சிடப்பட்டுக் கொடுக்கப்பட்டிருக்கிற மீனளத்துறை வளர்ச்சி பற்றிய குறிப்புகள், அந்தப் புத்தக வடிவு மிக அழகாக அமைந்திருக்கின்றன. அதிலே பல ஆண்டுகளாக ஏற்பட்ட வளர்ச்சி, அபிவிருத்தித் திட்டங்கள் பற்றி மிக அழகாகவும், தெளிவாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அதே நேரத்திலே, எந்த அபிவிருத்தித் திட்டங்கள் எந்த அளவில் ஒவ்வொரு ஆண்டிலும் வளர்ச்சி அடைந்து வந்திருக்கிறது என்பதையும் சொல்ல வேண்டும். சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு எந்த எந்த திட்டங்கள் புதிதாக எடுக்கப்பட்டன, எத்தனை நிறைவேற்றப்பட்டன, என்பதற்கான விரிவான, தெளிவான குறிப்புகளையும் தந்திருந்தால் விவாதம் இன்னும் சற்றுச் சுவையாகவும், பயன் உள்ளதாகவும் அமைந்திருக்க முடியும். இன்றையதினம் அவைபற்றி குறிப்புகள் எதுவும் இல்லாத நிலையில், ஏற்கனவே இருந்த திட்டங்களால் ஏற்பட்ட வளர்ச்சியையும், அபிவிருத்தியையும் கருத்தில் கொண்டு பேச வேண்டிய நிலையில் தான் இருக்கிறோம். அடுத்த ஆண்டில் இப்படிப்பட்ட விளக்கக்குறிப்புகளையும் சேர்த்து, இன்னும் அதிகமான விளக்கங்களோடு கொடுப்பார்கள் என்று நம்புகிறேன். சென்ற ஆண்டுக்கு இந்த ஆண்டு நிறைவேற்றுவதில் என்ன நிலை, ஏதாவது முடியாத நிலை ஏற்பட்டிருந்ததா, திட்டங்கள் ஏதாவது புதிதாக எடுத்து முடிந்து இருக்கிறதா என்பதையெல்லாம்பற்றி ஸ்டேஜ் பை ஸ்டேஜாகக் கொடுத்தால் நலமாக இருக்கும். அது நன்றாகவும் இருக்கும், விவாதம் சுவையுள்ளதாகவும் அமையும் என்பதையும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, என்னுடைய வட்டாரத்தில் கடலூர் துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதைப்பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். கடலூர் துறைமுகத்தைப் பொறுத்தவரையில், இன்றையதினம் அது மீன்பிடித் துறையில் மிக நல்ல முறையில் வளர்ந்திருக்கிறது. சென்ற ஆட்சியின் நல்ல முயற்சிகளால் அந்தத் துறைமுகம் விரிவாக்கப்பட்டு நல்லமுறையில் பயன்பட்டு வந்தது. இப்பொழுது இந்த அரசும் கூட நல்ல பொறுப்போடு வளர்த்து வருகிறது. ஆகவே, அந்தத் துறைமுகத்தை நல்லமுறையில் வளர்க்க வேண்டும் என்று சொல்லும்போது, சென்ற புயலின்போது மீனவர்கள் படகுகளோடு அடித்துச் செல்லப்பட்டு, ஒருவாரத்திற்குப் பிறகு தான் அவர்களைக் கண்டு பிடிக்கும் நிலைமை ஏற்பட்டது. ஆகவே, இப்படிப்பட்ட மீன்பிடித் துறைமுகங்களை, மீனவர்களுக்கு உதவும் வகையில்—ஏனென்றால், அது ஒரு "ஹியூமன் ப்ராப்ளம்" (Human problem) மீனவர்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கும் வகையில், அபாய



1968 மார்ச் 9] [திரு. க. இராமமூர்த்தி]

அறிவிப்பு சாதனங்கள் அதிகமாகப் பொருத்தப்பட்டு, புயல், கடல் கொந்தளிப்பு இவற்றைப் பற்றி விளக்கமாகத் தெரிவிக்கும் நிலையை ஏற்படுத்தினால், மீனவர்களுக்கு உதவும் வகையில், படகில் சென்றாலும், கட்டுமரங்களில் சென்றாலும், அவர்களுக்கு ஆபத்து அறிவிக்கப்படும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். கடலூருக்கு மட்டுமல்ல இப்படிச் செய்ய வேண்டும் என்று நான் கேட்பது. இப்படிப்பட்ட துறைமுகங்கள் எல்லாவற்றிலுமே இந்த ஏற்பாடுகள் இருக்க வேண்டும். ஆனால் கடலூருக்கு உடனடியாக வர வேண்டும். ஏனென்றால், மீன்பிடிப்பில் அது வளர்ச்சி அடைந்த துறைமுகம்.

இங்கே துயர் துடைப்பு நிதி பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதைப் பற்றி பெருமையோடு சொல்லும் நேரத்தில், இந்த மன்றத்திலே உறுப்பினராக இருக்கும் முன்னாள் அமைச்சர் திரு. பூவராகன் அவர்களால் இந்தியாவிலேயே முதன் முறையாக அந்தத திட்டம் கொண்டு வரப்பட்டது. இந்தத் திட்டம் மீனவர்களுக்கு மிகவும் உதவியாக இருக்கிறது. இதைப் பற்றிக் குறிப்பிடும்போது, அது யாரால் கொண்டு வரப்பட்டது என்பது பற்றியும் சொல்லியிருந்தால் நலமாக இருந்திருக்கும். எங்களைப் பெருமைப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதற்காகச் சொல்லவில்லை. இந்த மீனளத் துறையைப் பொறுத்தவரையில் எந்த அளவிற்கு எங்கள் அரசு அக்கறை காட்டியிருக்கிறது என்பதை எடுத்துக்காட்டவே சொல்கிறேன். இந்த அரசும் ஆர்வம் காட்டுகிறது. ஆகவே அந்த அளவில் பாராட்டு தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறார்கள் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

எங்கள் பகுதி, பரங்கிப்பேட்டையில் ஒரு ஐஸ் பாக்டரி பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. அது ஏற்கெனவே நல்ல முறையில் இருப்பது. ஏற்கனவே இருந்த அரசு செயல்படுத்தியது. இன்றையதினம் புதிய அரசு என்னென்ன புதிய திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறது என்று குறிப்பிடவில்லை. ஏற்கெனவே எங்கள் அரசு ஆரம்பித்த வேலைகளைத் தொடர்ந்து செய்து கொண்டு, "நாங்கள் செய்கிறோம்" என்று சொன்னால் மட்டும் போதாது. நீங்கள் புதிதாக என்னென்ன செய்திருக்கிறீர்கள் என்பதையும் விளக்கத்தோடு சொன்னால்தான் நலமாக இருக்கும். குறிப்பிலிருந்து பார்த்தால் பலப்பலத் திட்டங்களும் வளர்ச்சியடைந்திருக்கிறது என்றால், அவை ஏற்கெனவே தொடங்கப்பட்டு, தொடர்ந்து செய்யப்பட்டு வருபவைகள்தான். அவற்றை நடுவிலே நிறுத்தவும் முடியாது. தொடர்ச்சியாக இருக்கும் திட்டங்கள் அவை. ஆகவே, இந்த அரசு புதிதாக ஆக்கபூர்வமாக எடுத்த நடவடிக்கைகள் என்னென்ன என்பதை அவைமுன் வைத்தால் இந்த மன்றமும், நாங்களும் புரிந்து கொள்ள முடியும். அந்த வகையில் தெரிந்து கொள்ள நாங்களும், இந்த மன்றமும் ஆவலாக இருக்கிறோம். அவற்றை குறிப்பில் காட்டியிருந்தால் நல்லதாக இருந்திருக்கும்.

தூத்துக்குடி துறைமுகத்தைப்பற்றி அழகாகச் சொல்லப்பட்டிருக்கிறது. தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த அரசு பெருமையோடு சொல்லியிருக்கிறது. அதே நேரத்திலே, தூத்துக்குடி துறைமுகத்தின் அபிவிருத்திக்காக மத்திய சர்க்கார் எந்த அளவுக்கு உதவிகள் அளித்திருக்கிறது என்பதையும் சொல்லியிருந்தால் நலமாக இருந்திருக்கும். இண்டோ-நார்வீஜியன் திட்டம், மண்டபத்தில் வேற்று நாட்டோடு உடன்பாடு ஏற்படுத்தப்பட்டது. அந்த முறையில் நடைபெற்றுவரும் திட்டம் அது. அது முன்னேறி வந்திருக்கிறதா, எந்த அளவுக்கு முன்னேறி வந்திருக்கிறது, நடைமுறைக்கு எந்த அளவு கொண்டுவரப்பட்டிருக்கிறது என்பதை அவை அறிய ஆவலாக இருக்கிறது. காரணம், இந்த இலாகாவைப் பொறுத்தவரையில், இண்டோ-நார்வீஜியன் ஸ்கீம் மந்தப்பட்ட நிலையில் இருப்பதாக தனியாகத் தகவல் கிடைத்திருக்கிறது. அந்தத் திட்டம் தீவிரமாக அமுலாக்கப்பட வேண்டும் என்று எடுத்துக் கொள்ளப்பட்ட திட்டம் என்றாலும் இப்போது மந்தமடைந்திருப்பதாகத் தகவல் இருக்கிறது. ஆகவே, அமைச்சரவர்கள் அதுபற்றி விளக்குவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

இந்தக் குறிப்புகளைப் பார்க்கும்போது சென்ற ஆண்டுக் குறிப்புகளை படிப்பது போலவே இருக்கிறது. அதையேதான் இந்த ஆண்டும் கொடுத்திருக்கிறார்கள். ஆங்கிலத்தில் சொல்ல வேண்டுமென்றால், " It is only a repetition of the past Government's achievements ". சென்ற ஆண்டுப் புத்தகத்தையே மறுபடியும் படிக்கும் புத்தகம் போலத்தான் இருக்கிறதே தவிர, புதிய பாடங்கள், புதிய திட்டங்கள் உள்ள புத்தகமாக இல்லை என்பதை பணிவோடு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல, இந்தக் குறிப்பில் Physical Target கொள்கையளவில் என்னென்ன என்பது ஒருபுறமிருக்க, Physical Target உண்மை நிலை என்ன, எந்த அளவில் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்பதையெல்லாம் காணோம்.

என்னுடைய வட்டத்தைப் பொறுத்த வரையில், மரக்காணம் கடலோரப் பகுதி, பெரும் மீன் கிடைக்கும் பகுதி என்பது மட்டுமல்லாமல், (Rare Varities) அரிய வகைகள் என்று சொல்லும் அளவில் அரிய மீன்களும் கிடைக்கும் பகுதி. பண்டாரமீன் என்று கூட ஒரு வகை உண்டு. அங்கே பிடித்த மீன்களை, மரக்காணத்திலிருந்து அந்த மீன்களை சந்தைக்கு, மார்க்கெட்டுக்கு உடனடியாகக் கொண்டு போக வசதிகள் இல்லை. அமைச்சரவர்கள் உடனே " நீங்கள் என்ன செய்தீர்கள் " என்று கேட்கலாம். செய்தோம், படிப்படியாகச் செய்து வந்திருக்கிறோம். இப்போது நீங்கள் செய்ய வேண்டும். மீன்களைக் கொண்டு போகும் வான்களை, என்னுடைய வட்டம் என்று மட்டும் சொல்லவில்லை இன்னும் திண்டிவனம், செஞ்சி முதலிய பகுதிகளுக்கும் பிடித்த மீன்களை துரிதமாகக் கொண்டு போக வசதியாக ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். மற்ற இடங்களிலும் இந்த மீன்களை விற்பனை செய்யக்கூடிய நிலை ஏற்பட்டால், மீன்கள் கடலூரில் மட்டுமல்ல, உள்நாட்டு மக்கள் எல்லோருமே உடனடியாக அனுபவிக்கக் கூடிய நிலைமை ஏற்படும். அந்த வகையில் இந்த அரசு உடனடியாக நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். அதே போல, கடலூர் பகுதி மீனவர்களுக்கும், மரக்காணம் பகுதி மீனவர்களுக்கும் பாதை வசதி இல்லாமல் இருக்கும் கொடுமை பெரிய கொடுமை. அது மணற்பரப்புள்ள இடம். இங்கிருக்கும் பஞ்சாயத்து யூனியனால் முழுப் பொறுப்பையும், முழுச் செலவையும் ஏற்றுக் கொண்டு ரோடு போட முடியாத நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட பகுதிகளில் மீனவர்களுக்கு—பிற்பட்டவர்களுக்கு—தங்கள் உயிரையும் உடலையும் மற்றவர்களுக்காகப் பணயம் வைப்பவர்களுக்கு—மிக அதிகமாக இந்த அரசு உதவி செய்யக் கடமைப்பட்டிருக்கிறது. அரசு தாராளமாக முன் வந்து, அவர்களுக்கு வேண்டிய இந்த வசதியைச் செய்து தர வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

கடலோரப் பகுதிகளில் கம்யூனிட்டி ஹால் கட்ட வேண்டும் என்ற முறையில் மரக்காணத்தில் அந்தத் திட்டம் கொண்டுவரப்பட வேண்டும் என்று ஏற்கனவே இருந்த அரசாங்கம் தெரிவித்திருந்தது. என்ன காரணத்தினாலோ அந்தத் திட்டத்தைப்பற்றிய குறிப்புகளை இந்த அறிக்கையில் காணோம். இந்த அரசு நிச்சயமாக அந்தத் திட்டத்தை கைவிட்டுவிட்டது என்று கருதுகிறேன். அமைச்சர் அவர்கள் அதைக் கவனித்து, அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன். கம்யூனிட்டி ஹால் அமையுமானால், அங்கிருக்கும் மீனவர்களுக்கு ஒரு நல்ல நிலைமையும், அவர்கள் தங்களுடைய மன நிலைகளைப் பறிமாறிக்கொண்டு, அவர்களையே காத்துக் கொள்ளும் நிலைமையும் இருக்கும். புயல் காற்று, சீதோஷ்ண நிலை முதலியவற்றை முன்கூட்டியே அறிந்து கொள்ளக்கூடிய வகையில் அரசாங்கமும் அத்தகைய அறிவிப்புக்களை அவர்களுக்குத் தெரிவிப்பதற்கும் வசதியாக இந்த கம்யூனிட்டி ஹால் அமையக்கூடும். ஆகவே, அதில் கவனம் செலுத்த வேண்டும் என்று மீண்டும் கேட்டுக்கொள்ளுகிறேன்.



வடாற்காடு மாவட்டத்திலுள்ள சாத்தனூர் அணைக்கட்டில் மிக அதிகமாக மீன் கிடைப்பதாகத் தெரிகிறது. மேட்டூர் அணை, சாத்தனூர் அணை, வீடூர் அணை ஆகியவற்றில் இருக்கும் மீன்களையும் பரவலாக விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். கடல் பகுதிகளிலிருந்து உள் நாட்டுக்கு மீன் வருகிறது என்றாலும், உள்நாட்டில் கிடைக்கும் மீன்களையும் பிடித்து, பரவலாக விநியோகிப்பதற்கான முறையிலும் கவனம் செலுத்த வேண்டும்.

கடலூர், மரக்காணம் ஆகிய இடங்களில் மிக அதிகமான அளவுக்கு இறால் என்கிற மீன் பிடிபடுகிறது. இது மிக அதிகமாகப் பிடிக்கப்படுவதாகத்தான் கேள்விப்படுகிறோமே தவிர, அந்த மீன் பெருமளவுக்கு அயல்நாடுகளுக்குத்தான் ஏற்றுமதியாகிறது. நம் கடலோரப் பகுதிகளில் இருப்பவர்களே மிக அதிகமாக விலை கொடுத்து வாங்கவேண்டிய நிலை அந்த மீனுக்கு ஏற்பட்டிருக்கிறது. மீன், நாட்டு மக்களுடைய அத்தியாவசிய உணவாக அமையவேண்டும் என்று நம்முடைய அரசு மிகப்பெருமளவில் ஆர்வம் செலுத்திவரும் இந்த நேரத்தில், இப்படிப்பட்ட அத்தியாவசிய மீன்களும்கூட மலிவான விலைக்கு மக்களுக்குக் கிடைக்கும் நிலையை இந்த அரசு நிச்சயமாக ஏற்படுத்தவேண்டும், அதற்கான பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நான் வலியுறுத்த விரும்புகிறேன.

சென்னை, கடலூர், இராமேஸ்வரம் ஆகிய இடங்களில் மீன்பிடி நிலையங்களில் ஏற்படவேண்டிய அபிவிருத்திகள் பற்றிச் சொன்னார்கள். ஆனால், இந்த நிலையங்களிலிருந்து செல்லவேண்டிய படகுகள், விசைப் படகுகள் எந்த அளவிலே விநியோகம் செய்யப்படுகின்றன, இவற்றினுடைய வளர்ச்சி என்ன, இவைகள் எந்த அளவில் எப்படிக் கட்டப்படுகின்றன என்ற விவரங்கள் வந்திருந்தாலும்கூட, இந்த ஆண்டு எத்தனை கட்டப்பட்டன, அடுத்த ஆண்டு எத்தனை கட்டப்படும், யார் யாருக்குத் தரப்பட்டன என்ற விவரம் தரப்படவில்லை. யார் யாருக்குத் தரப்பட்டன என்பதைப்பற்றி அதிகமாக எனக்கு அக்கறை இல்லை. மீனவர்களுக்கும், அந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கும்தான் நிச்சயமாகத் தரப்பட்டிருக்கும். என்றாலும், எந்த முறையில் அது விநியோகம் செய்யப்பட்டிருக்கிறது என்பதை இந்த அவைக்குத் தெரியப்படுத்தியிருந்தால் மிக மிக நன்றாக இருந்திருக்கும் என்று சொல்லி, இந்தத் துறையில் எங்களுடைய கட்சியைப் பொறுத்தவரையில் தெரிவிக்கப்படும் கருத்துக்களை அமைச்சர் அவர்களும் இந்த அரசும் தீர ஆலோசித்து, ஏற்று, அவற்றை அமல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய வெட்டுப் பிரேரணையை வலியுறுத்துகின்றேன். வணக்கம்.

***திரு. மா. இராசாங்கம் :** சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, நேரம் குறைவாக இருப்பதால், சுருக்கமாகவே என்னுடைய கருத்துக்களை இந்த வனத்துறை, கால்நடை வளர்ப்பு ஆகிய இந்த மானியக் கோரிக்கைகளை ஆதரித்துத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

மதுரை மாவட்டத்தில், கடமலைக்குண்டு பகுதியை இந்த அறிக்கையில் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள் அந்த மிகப் பெரிய பகுதி முன்பு எப்படி இருந்தது, இன்றுள்ள நிலைமை என்ன, இனிமேல் இருக்கப்போகிற நிலைமை என்ன என்பதை விளக்கிக் காட்டியிருப்பதற்காக அந்தப் பகுதி மக்களின் சார்பாக, குறிப்பாக மதுரை மாவட்ட மக்களின் சார்பாக இந்த அரசுக்கு எங்களுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்த நாட்டின் வளம், காடுகளின் வளத்தை முக்கியமாகப் பொறுத்துள்ளது என்பதை நாம் அறிந்திருக்கிறோம். ஆனால், இன்று காடுகள் இருக்கும் நிலைமையைப் பார்த்தால், தேவைப்படுவதில் பாதிப் பரப்பளவு கூட இல்லை என்ற பரிதாப நிலைமை இருக்கிறது. காடுகளைக் காப்பாற்ற வேண்டிய சூழ்நிலையில் நாம் இன்றைக்கு இருக்கிறோம். ஆனால், அதே நேரத்தில் விவசாயிகளையும் காப்பாற்ற வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறோம். கடமலைக்குண்டு பகுதி ஜமீன் பூமியாக இருந்த காலத்தில், ஏறத்தாழ எண்பது ஆண்டுக் காலமாக, அதை விவசாயம் செய்து

வருகிறார்கள். அதில் இப்பொழுது இருக்கும் நிலைமை என்னவென்றால், ஏறத்தாழ நாற்பதாயிரம் ஏக்கருக்குமேல் அத்தகைய நிலங்களை பல ஆண்டுகளாகப் பயிர் செய்து வருகிறவர்கள், அந்த நிலங்கள் தங்களுக்கு எப்பொழுது கிடைக்கும் என்று சர்க்காரை எதிர்நோக்கியிருக்கிறார்கள். ஆனால், கடந்த ஆண்டு, இதே மன்றத்தில் மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த சர்வகட்சி அங்கத்தினர்களும், அமைச்சர் உட்பட, அந்த இடத்திற்குச் சென்று, நிலைமையை ஆராய்ந்து, அவர்களுக்கு ஆவன செய்வதாக உத்தரவாதம் அளித்து வந்தோம். அங்கிருக்கும் மக்களுடைய இன்றைய நிலைமை எப்படியிருக்கிறதென்று பார்த்தால், நில அளவு குறைந்தாலும் பரவாயில்லை, ஆனால், கால அளவு குறைந்துவிடக் கூடாது என்ற நிலைமை இருக்கிறது. ஆகையால், நமது சர்க்கார் உடனடியாக ஆராய்ந்து, அதற்கு வேண்டிய பல அடிப்படை வேலைகளைச் செய்து, தற்போது யார் யார் எந்த அளவுக்கு நிலம் வைத்திருக்கிறார்களோ அவர்கள் அந்த நிலத்தை வைத்துக்கொள்ளலாம் என்ற உத்தரவாதத்தைக் கொடுப்பதற்கு முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்த நிலத்திற்கு சர்க்காரிடம் கடன் வாங்கவோ, மற்ற எந்த மானியத்தைப் பெறவோ தஸ்தாவேஜுகளில் அதற்கு இடம் அளித்து அந்த நிலத்தை வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். பத்தாண்டுகளாக அவர்கள் பயத்தோடு இருந்தார்கள். கடந்த ஆண்டு அவர்கள் வெளியேற்றப்படுவார்களோ என்று பயந்திருந்த நிலைமையைப் போக்கிய இந்த சர்க்காருக்கு மீண்டும் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

காட்டுப் பகுதிகளிலிருந்து தலைச்சுமை விறகு எடுப்பதற்கு ஏழை எளியவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். பிளாக்குகள் குறிப்பிட்டு, காட்டிலாக்கா அதிகாரிகள் அவர்களிடம் பணம் வசூலிக்கிறார்கள். சட்ட விரோதமாகக் கூட சில இடங்களில் பணம் வசூலிக்கிறார்கள். இத்துப் போகும் விறகு, மண்ணோடு மண்ணாகப் போகிற விறகு, காய்ந்து போன விறகு இவைகளை எடுத்துச் செல்லத் தனிச் சலுகை அளிக்க வேண்டும். ஏழைகளின் சர்க்கார் என்று உண்மையிலேயே மக்களால் கருதப்படுகிற இந்தச் சர்க்கார், தலைச்சுமை விறகு எடுத்துச் செல்ல அனுமதியளித்து உடனடியாக உத்தரவிடவேண்டும் என்று இந்த மாமன்றத்தில் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

உதகை, கோடைக்கானல் போன்ற இடங்களில் வேலை பார்க்கும் காட்டிலாக்கா அலுவலர் சம்பந்தமாகச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். உதகை, கோடைக்கானல் போன்ற மலைப் பகுதிகளில் அலுவலர்கள் ஒரு வருஷமாவது தொடர்ந்து இருக்க வேண்டும் என்ற நிபந்தனை இருக்க வேண்டும். குளிர்ப் பகுதிகளில் பல கஷ்டங்களுக்கிடையே வேலை பார்க்க வேண்டிய சூழ்நிலையில் அவர்கள் இருக்கிறார்கள். நான்கு வருஷம், ஐந்து வருஷம் கட்டாயம் இருக்க வேண்டும் என்ற நிலைமை இருக்கவே கூடாது. அத்தகைய நிலையை மாற்றி, அந்தக் குளிர்ப் பிரதேசத்தில் வசித்துப் பழக்கம் உள்ளவர்களை அந்தப் பகுதியில் வேலைக்கு அமர்த்தவேண்டும். பழக்கமில்லாதவர்களை அமர்த்துவதனால் சிக்கல் ஏற்படுகிறது. பழக்கம் இல்லாத காட்டிலாக்கா அதிகாரிகளும் மலைப்பகுதிகளில் ஒழுங்காகத்தான் இருக்கிறார்கள், கோடைக்கானல், உதகை போன்ற இடங்களில் ஒழுங்காக இருக்கிறார்கள் என்றால், வீட்டிலேதான் அவ்வாறு இருக்கிறார்கள். அந்த நிலைமையை நாம் மாற்றியமைக்கவேண்டும் என்று இந்த சர்க்காரைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏராளமான ஏக்கர்களை அழித்து அதில் ரப்பர் ப்ளான்டேஷன் செய்து வருகிறார்கள். ஆயிரக்கணக்கான ஏக்கர்களில் தொழில் செய்து வருகிறவர்களெல்லாம் ஏறத்தாழ 150 ரூபாய்க்கும் குறைவாகவே வருவாய் பெறுகிறவர்களாகத்தான் இருக்கிறார்கள். ஆனால் சர்க்கார் சார்பாக, நமக்கு அன்னியச் செலாவணி கிடைக்கவேண்டும் என்பதற்காக நான்கு அசிஸ்டென்ட் கன்சர்வேடர் ஆப் ஃபாரஸ்ட்ஸ் போட்டிருக்கிறார்கள். தவிர, முப்பதுக்கு மேல் மற்ற அதிகாரிகளையும் போட்டிருக்கிறார்கள். ரப்பர் ப்ளான்டேஷனில் வரும் வருமானத்தையும் இந்த அதிகாரிகளுக்கு ஆகும் செலவையும் கணக்கிட்டால், அதிகாரிகளுக்கு



செலவுதான் கூடுதலாக இருக்கிற நிலைமை இருக்கிறது. ஆகவே, நமக்கு வருமானத்தோடு இன்னும் ஆபத்து இருக்கிறது. பேச்சிப்பாரா, பெருஞ்சாணி போன்ற மிகப் பெரிய நீர்த்தேக்கத் திட்டங்களில் ரப்பர் பிளான்டேஷன் வைத்த காரணத்தால், எதிர்காலத்தில் பாசன வசதி பாதிக்கப்படக் கூடிய வகையில், அதெல்லாம் பந்தடி களங்களாக, நீரே வற்றிப் போகுமோ என்ற நிலைமை இருக்கிறது. ஆகவே, இதைச் சர்க்கார் யோசித்து வனங்கள் அழிவதைத் தடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

கால்நடை மானியத்தையொட்டி சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்த அரசின் புதிய சாதனையாக பல நல்லவைகளைச் செய்திருக்கிறது. கால்நடை மருத்துவர்களை அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகளாக மாற்றிய பெருமை இந்தச் சர்க்காரையே சாரும். கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வரை கூட்டு இயக்குநர் நிலைக்கு உயர்த்தியிருப்பதும் இந்தப் புதிய சர்க்கார் செய்த மிகப் பெரிய நன்மைகளில் ஒன்றாகும்.

வெட்டரினரி டாக்டர்களுக்கும், இன்ஸ்பெக்டர்களுக்கும் சம்பள உயர்வு கொடுத்திருப்பதும் வரவேற்கத்தக்கது. அதே நேரத்தில், கால்நடையைப் பொறுத்தவரையில், தமிழ்நாட்டிலேயே சைதாப்பேட்டை ஒன்றில்தான் கால்நடைகளுக்கு என்று மிக நல்ல வசதியுள்ள மருத்துவ மனை இருக்கிறது. சைதாப்பேட்டையில் இருக்கும் மிகப் பெரிய வசதியை தமிழ் நாட்டில் பூராவிலும் இருக்கக் கூடிய கால்நடைச் செல்வங்களுக்கும் விஸ்தரிக்கும்பொருட்டு மாவட்டத்திற்கு ஒரு மருத்துவ மனை ஏற்படுத்த வேண்டும். நல்ல வசதியுள்ள கால்நடை மருத்துவ மனை மாவட்டந்தோறும் ஏற்படுத்துவதோடு கூட, நடமாடும் ஆம்புலன்ஸ் வண்டிகளும் வைத்து, கால்நடைகளுக்கு வைத்திய வசதி அளிக்கவேண்டும். மாடுகளுக்கு எப்பொழுது வியாதி வரும் என்றே தெரியாது. "பட்" என்று வியாதி வந்து "பொட்" என்று உயிர் போகும் என்று சொல்வார்கள். நடமாடும் மருத்துவ மனைகளை மாவட்டவாரியாக ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். தினக் கூலிக்கு பட்டியல் பிரகாரம்தான் வேலை பார்க்கக் கூடிய நிலைமை இருக்கிறது. அவர்களுக்கு இந்த நிலைமை இருப்பதால், கிராக்கிப்படி, பென்ஷன் போன்ற சலுகைகளை அவர்கள் அடைய முடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே, இதற்கு மாற்றுத் திட்டங்களைச் சர்க்கார் தயார் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மேலும், வெளி மாநிலங்களிலிருந்து தமிழ் மாநிலத்திற்குள் வருகிற மாடுகளுக்கு நாம் வரி வசூலிப்பதில்லை. மற்ற மாநிலங்கள், வெளி மாநிலங்களிலிருந்து வருகிற மாடுகளுக்கு வரி வசூலிக்கிறது. அந்த வரி வசூலித்த பிறகுதான் மாடுகள் அந்த மாநிலத்திற்குள் புக முடியும். அதுபோல நம்முடைய மாநிலத்திலும் அந்த வரி வசூலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்படி வரி வசூலிப்பதன் மூலமாக நமது மாநிலத்திற்கு சுமார் 5 லட்சம் ரூபாய்க்கு மேல் வருவாய் கிடைக்கக் கூடிய வாய்ப்பு இருக்கிறது. மேலும், வரி வசூலிப்பு ஏற்படுகிற நேரத்தில் வெளி மாநிலங்களிலிருந்து நோயுள்ள மாடுகள் வருவதைத் தடுத்து நிறுத்த முடியும். தற்போது நோயுள்ள மாடுகள் வெளியிலிருந்து இம்மாநிலத்திற்கு வருவதால் இங்கிருக்கும் மாடுகளுக்கும் அந்நோய் பரவி, கால்நடைச் செல்வங்கள் அழிந்துபோக வழி ஏற்பட்டு விடுகிறது. ஆகவே நோயுள்ள மாடுகள் வருவதைத் தடுத்து நிறுத்த வேண்டும்.

அடுத்தபடியாக கால்நடை வளர்ப்புத் துறையில் வேலை பார்க்கக் கூடியவர்களுக்கு, 15 ஆண்டுகளாக வேலை பார்த்துக் கொண்டிருக்கக்கூடியவர்களுக்கு உத்தியோக உயர்வுக்கு வழி இல்லாத நிலைமை இருந்து வருகிறது. சம்பள உயர்வும் கிடைப்பதில்லை. சாதாரணமாக சிவில் அசிஸ்டென்டு சர்ஜனுக்கு ஆரம்பத்தில் இருக்கக் கூடிய வாய்ப்பும் இவர்களுக்கு இல்லாத நிலைமை இருக்கிறது. ஆகவே, இவர்களுக்கு நல்ல வசதிகளை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தமிழகத்தில் பல இடங்களில் நல்ல இன மாடுகளைப் பெறுவதற்காக கால்நடை நிலையங்கள் இருக்கின்றன. "கிராஸ் ப்ரீடிங்" முறையில் கலப்பு செய்கின்றபொழுது சில சமயங்களில் நல்ல இன மாடுகளாகப் பெற முடிகிறது. சில சமயங்களில் அதனுடைய தனித்தன்மையும் கெட்டுவிடுகின்றன. ஆகவே, மேலும் கலப்பின முறையில் நல்ல இன மாடுகளாகப் பெறுவதற்கு வேண்டிய முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டும். என்னுடைய பகுதியில் "ஹைவேவ்ஸ் எஸ்டேட்" என்ற இடத்தில் மிக அருமையான, வளமான, பலன் தரும் மாடுகள் இருப்பதை தங்களுக்குக் கூறுகிறேன். மாடுகள் தானாகவே மேய்ந்து வந்தால்தான் அதிகப் பாலைக் கொடுக்க முடியும். மேய்ச்சல் நிலங்கள் ஏராளமாக இருந்தால் கால்நடை வளர்ச்சிக்கு சிறப்பான வழிசெய்யும். கிராமப்புறங்களிலே "மாடு உண்டு களிக்க வேண்டும்; மனிதன் தின்று களிக்க வேண்டும்" என்று ஒரு பழமொழியைச் சொல்வார்கள். கால்நடைகள் தானாக மேய்ந்து வருவதற்கு வேண்டிய மேய்ச்சல் நிலங்கள் ஏற்படச் செய்ய வேண்டும். பசும்புல்லை மேய்ந்தால்தான் அதிக அளவில் பசு பால் தர முடியும். அப்போதுதான் கால்நடைச் செல்வங்களை நாம் காப்பாற்ற முடியும். இன்று நாம் பசுக்களுக்கும், மாடுகளுக்கும் ஏதோ செயற்கைத் தீவனங்களைத்தான் கொடுத்துக்கொண்டு வருகிறோம். இது தவிர கால்நடைகளின் தீவனமாக உபயோகப்படும் வைக்கோல்கள் எல்லாம் சில சமயங்களில் தீக்கு இரையாகி விடுகின்றன. அந்த வைக்கோலைக் காப்பாற்ற முடியாத நிலைமை இருந்து வருகிறது. இதற்கு சர்க்கார் வழிவகைகளை ஆராய்ந்து, மாடுகளின் தீவனமான வைக்கோல் போன்றவற்றைப் பாதுகாக்க தக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, இத்துடன் என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

***திரு. கே. பி. எஸ். மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனளத் துறையையொட்டியும், அதையடுத்த மற்ற இலாகாக்களைப் பற்றியும் விரிவாக எடுத்துக்கூற குறுகிய காலமே தரப்பட்டிருப்பதால், ஒருசில கருத்துக்களை மட்டுமே எடுத்துக்கூற விரும்புகிறேன். நம்முடைய தேசத்திலே மீன்வளம் மிகச் சிறந்த ஒன்றாக இந்தக் காலத்திலே கருதப்படுகிறது. மனிதனுடைய போஷாக்கிற்கும், உடல் வளர்ச்சிக்கும், அறிவுத் திறனுக்கும், மனிதனுடைய சிந்தனாசக்திக்கு விருந்தாகவும் மீன் பயன்படுகிறது என்று உலக நாடுகளின் பல்வேறு ஆராய்ச்சி நிபுணர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவேதான் பல்வேறு பகுதிகளிலே மீன்களை நல்ல முறையில் உற்பத்தி செய்ய வேண்டுமென்று சொல்கிறார்க்ள். மேலும் மீன் நம்முடைய ஆகாரத்தின் ஒரு பகுதியாக அமைந்திருக்கிறது. மீன்களை நல்லமுறையில் உற்பத்தி செய்து மக்களுக்கு வினியோகிக்க வேண்டுமென்ற எண்ணத்தினால்தான் கடந்த கால அரசாங்கமும், இன்றைய அரசாங்கமும் அதற்கென ஒரு தனி இலாகாவை அமைத்து ஊக்கப்படுத்தி வருகிறார்கள். கடந்த கால சரித்திர ஏடுகளைப் புரட்டிப் பார்த்தால் குறிப்பாக, கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாகத் தான் மீன் இலாகா வெகு துரிதமாகவும் வெகு சிரத்தையுடனும் செயல்பட்டு, தன் முழுச் சக்தியையும் பயன்படுத்தி வந்திருக்கின்றது என்பது தெளிவாகத் தெரிகிறது. இன்றையதினம் மீன் இலாகாவின் துரிதமான வளர்ச்சி, திட்டங்கள், அபிவிருத்தி போன்றவைகள் எல்லாம் எந்த அளவிலே இருந்து வருகின்றன என்பதை உலக வாணிபப் பொருட்காட்சியிலே நாம் பார்த்துப் பெருமைப்படுகிறோம். இப்படிப்பட்ட ஒரு துறையை மேன்மேலும் அபிவிருத்தி செய்வதற்கும், ஊக்குவிப்பதற்கும் வெளிநாடுகளில் மீன்பிடிக்க உபயோகப்படுத்துகின்ற "டிராலர்ஸ்" சாதனங்களை நாமும் உபயோகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தற்போது மீனவர்களுக்குக் கொடுக்க வேண்டிய உதவிகள் மிகவும் முக்கியமானவை, அவசியமானவை. மீனைக் கடலிலிருந்து கொண்டுவர வேண்டுமென்று சொன்னால் அது சாதாரணமான பிரச்சினையல்ல. ஆழ்கடலில் சென்று மீன் பிடித்துவரும் சமூகத்தினருக்கு நாம் ஜீவாதாரமான காரியங்களை முதலில் செய்ய வேண்டும். முதலாவதாக, ஆழ்கடலில் சென்று மீன் பிடிப்பவர்களுக்கு இன்ஷ்யூரன்ஸ் திட்டத்தை அர



சாங்கம் ஏற்படுத்த வேண்டும். "கோலா" போன்ற மீன்களைப் பிடிக்க அவர்கள் வெகுதூரம் செல்ல வேண்டியிருக்கும். கடலில் சென்றவர்கள் உயிரோடு திரும்பி வந்தால்தான் நிச்சயம். அந்தச் சமூகத்திலே ஊறிப் பழகுகின்றவர்களில் ஒருவனாகிய நான் அவர்களுடைய கஷ்டங்களை நன்றாக உணர்ந்தவன். "ஒருவன் இறந்துவிட்டால் வாய்க்கரிசி போடுவது" என்று சொல்வார்களே, அதுபோல ஆழ்கடலுக்குச் செல்லும் மீனவர்கள் தாங்கள் போகும்போதே வாய்க்கரிசி பெற்றுக்கொண்டு போவார்கள். அதாவது அவர்கள் உயிரோடு திரும்பிவருவது என்பது அவ்வளவு நிச்சயம் அல்ல. கடலில் 100, 200 மைல் என்று செல்கிறவர்கள் இயற்கையின் கோளாறினாலோ, புயல் காற்றின் கடுமையினாலோ, கடல் கொந்தளிப்பினாலோ தங்களுடைய இன்னுயிரை இழக்கக்கூடிய நிலைமைகள் ஏற்படலாம். ஆகவே, அந்த மீனவ சமூகத்தினருக்கு அவசியமாக இன்ஷ்யூரன்ஸ் திட்டத்தை அரசாங்கம் அமல்படுத்த வேண்டும்.

அடுத்தபடியாக, மீனவர்களுடைய குடியிருப்பு கடல் கொந்தளிப்பு ஏற்படுகின்ற நேரத்திலும், புயல் அடிக்கும் காலங்களிலும் மிகவும் பாதிக்கப்படுகிறது. மேலும், அவர்களுடைய விலையுயர்ந்த படகுகள், மீன்பிடிக்கும் வலைகள் எல்லாம் இயற்கையின் சீற்றத்தினால் அழிந்துவிடுகின்றன. ஆகவே, மீனவர்களுடைய வலைகள், படகுகள், குடியிருப்பு இவைகள் பத்திரமாகப் பாதுகாக்கப்பட அரசாங்கம் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். மீனவர்கள் தங்களுடைய வலைகளையும், விலையுயர்ந்த படகுகளையும் கட்டிப் பாதுகாக்க ஒரு சமுதாய மன்றம் ஒன்றை ஏற்படுத்தித்தர வேண்டும். மேலும், ஒவ்வொரு சமுதாய மன்றத்திலும் வானிலைக் கருவிகளை அமைத்து, அவ்வப்பொழுது ஏற்படும் வானிலை மாற்றத்தை முன்கூட்டியே அறிவிக்கச் செய்ய வேண்டும். இதனால் பல்லாயிரக்கணக்கான மீனவர்களுடைய உயிர்களைப் பாதுகாக்க முடியும். இந்தக் காரியங்களை எல்லாம் அங்கங்கிருக்கும் பஞ்சாயத்து யூனியன்களிடம் ஒப்படைத்து விடக்கூடாது. ஏனெனில் பஞ்சாயத்து யூனியன்களுக்கு போதுமான நிதி வசதி கிடையாது. ஆகவே, அரசாங்கமே பொறுப்பேற்று தக்க நடவடிக்கைகளை எடுத்து, சமுதாய மன்றமும் ரேடியோ நிலையமும் ஏற்படுத்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தத் திட்டங்கள் எல்லாம் மத்திய சர்க்காரால் ஏற்கப்பட்டு, ஒரு புதிய திட்டத்தை உருவாக்கி, புதிய திட்டம் இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன் ஆரம்பிக்கப்பட்டு தற்போது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தை மறுபடியும் இந்த ஆண்டு நடைமுறையில் கொண்டுவர வேண்டுமென்று நான் விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

முந்தைய சர்க்கார் விசைப்படகுகள் கொடுத்த போது "ஏர் கூலிங்" மெஷின்கள் கொண்ட படகுகளைக் கொடுத்தார்கள். இதை குற்றம் சொல்வதாக யாரும் எடுத்துக்கொள்ள வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த "ஏர் கூலிங்" மெஷின்களால் மீனவர்கள் மிகவும் கஷ்டப்பட வேண்டியிருக்கிறது. ஆகவே, அதைக் கொடுக்காமல் "வாட்டர் கூலிங் சிஸ்டம்" உள்ள விசைப்படகுகளைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இது மீனவர்களுக்கு மிக்க வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, காட்டு இலாகாவைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். ஆற்றோரப் பகுதிகளில் விவசாயத்திற்குத் தகுதியுள்ள நிலங்களாக இருந்தால், அவற்றை விவசாய நிலங்களாக மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கொள்ளிடக்கரைப் பகுதியிலே பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் வளமுள்ள நிலங்களாக இருந்தும் 100 வருஷங்களாக காடுகளாக இருந்து தற்போது தரிசாக இருந்து வருகிறது. அந்த நிலங்கள் விவசாயத்திற்கு ஏற்ற வளமுள்ள நிலங்கள். காட்டு இலாகா அந்தப் பகுதிகளில் வெறும் முள்மரங்களையும், வேலிக்கு உபயோகப்படும் மரங்களையும், கொடுக்காப்புளி போன்ற மரங்களையும் வைத்து வளர்க்கிறார்கள். அந்த இடங்களில் நல்ல பயன்தரக்கூடிய மரங்களை வைத்து வளர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தவிர, வளமுள்ள பகுதிகளை விவசாய நிலங்களாக மாற்றியமைக்க இந்த அரசு முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மு. ப. 11-00. அதுமட்டுமல்லாமல் ஆற்றோரங்களில் ப்ளான்டேஷன் என்று சவுக்கு மரங்களை வைக்கிறார்கள். பத்து ஆண்டுகள் வளர்க்க வேண்டியிருக்கிறது. கன்று வைத்து காவல் போட்டு அவற்றைக் காப்பாற்றி இதற்காகும் நடைமுறைச் செலவுகளை எல்லாம் பார்க்கிறபோது, முடிவில் அந்தச் சவுக்கு மரங்களை ஏலத்தில் பத்தாயிரம் எட்டாயிரம் என்று விடுகிறபோது நஷ்டம் தான் வருகிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன். அதுவும் ஏலம் எடுக்கிற காண்டிராக்டர்கள் ஒட்டுமொத்தமாக ஒற்றுமையாக இருந்து விட்டால் குறிப்பிட்ட தொகைக்கு மேல் ஏலம் போவதில்லை. இதனால் நமக்கு மிகுந்த நஷ்டம். ஆகவே இந்த நிலங்களை அங்கங்கே உள்ள பஞ்சாயத்து யூனியன்களிடம் லீசுக்கு விட்டு உணவுதானியப் பொருள்களை —கிழங்கு, புகையிலை போன்றவற்றைப் பயிர் செய்யச் சொன்னால் மிகுந்த லாபமாக இருக்கும். அதுவும் புகையிலைப் பயிர் வைக்கச் சொன்னால் உற்பத்தியாளர் வரி கட்டுகிறார், விற்பவர் வரி கட்டுகிறார், உபயோகப்படுத்துகிறவர் வரி கட்டுகிறார். அந்நியநாட்டுச் செலாவணியைக் கூடத் தேடிக் கொடுக்கும் வாய்ப்பு இருக்கிறது. இப்படிப்பட்ட ஆற்றோரப்பகுதிகளை எல்லாம் காட்டு இலாக்கா பஞ்சாயத்துகளிடம் மாற்றிவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கால்நடைகள் மனிதர்களுக்கு மிகவும் உதவியாக இருக்கின்றன. அந்தக் கால்நடைகளுக்கு வைத்தியம் செய்கிற டாக்டர்கள்—மனிதர்களால் கால்நடைகள் அலட்சியம் செய்யப்படுகிறதுபோல சமுதாயத்தில் கவனிக்கப்படாதவர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கு தங்குவதற்கான வீட்டு வசதியோ, மற்ற டாக்டர்களுக்கு இருக்கும்படியான மரியாதையோ இல்லை என்று சொல்லவேண்டும். ஆகவே அவர்களுக்குப் போதுமான ஊதியம் அளிக்கப்படவேண்டும். அவர்களுடைய அந்தஸ்தை உயர்த்துவதற்கான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படவேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, கால்நடைகளுக்கு பசும்புல் தீவனம் தேவைப்படுகிறது. ஆகவே கால்நடை தீவன வளர்ச்சிக்கு மேஜர் பஞ்சாயத்துகள், முனிசிபாலிடிகள் போன்றவைகளாவது அதற்கான இடத்தை ஒதுக்கி வழிவகை செய்ய வேண்டும். அரசாங்க பால் பண்ணையை சிறப்பாக நடத்த முடியாது என்கிற நிலையில் கைவிட இருந்த நிலையை மாற்றி இந்தச் சர்க்கார் அதை நல்ல முறையில் நடத்த முடியும் என்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிற இந்த நேரத்தில் ஆங்காங்கே கால்நடைகளின் மேய்ச்சலுக்கான வசதிகள் செய்துதரப்படவேண்டும் என்கிற முக்கியமான விஷயத்தின் கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஜனநாயகத்தில் பேரில் நாம் சொல்கிற கருத்துக்களை அப்படி அப்படி ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். சில விஷயங்களில் சர்வாதிகார ஆட்சியைப்போல வற்புறுத்திச் செய்யச் சொல்லியாகவேண்டும். அதன் மூலம்தான் மக்களுக்கும், கால்நடைகளுக்கும் நல்ல வழிவகை பிறக்கும் என்று சொல்லி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

***திரு. ஏ. அ. சுப்பராஜா :** தலைவர் அவர்களே, காட்டு இலாக்கா சம்பந்தமாக ஒருசில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இத்துறை அதிகாரிகள் எவ்வளவு கண்ணும்கருத்துமாக இருந்தாலும், மொபைல் பார்ட்டி வைத்துப் பாதுகாக்கின்ற நிலைமை இருந்தாலும் ஆங்காங்கே இன்னும் சில இடங்களில் அதிகாரிகளுக்கும் தெரியாமலேயே காடுகள் அழிக்கப்படுகின்றன. குறிப்பாக போதைப்புல் புதர்களை தீவைப்பது சரி. ஆனால் புதிதாக நல்ல முறையில் மாடுகள் மேய்வதற்கு வசதியாக வளர்ந்துள்ள புற்களை எல்லாம தீவைத்து எரித்துவிடுகிறார்கள். மேய்ச்சலுக்காக என்று சலுகை பெற்று உள்ளே போகிறவர்கள் இதுபோன்ற காரியங்களைச் செய்யாமல் அடித்தளத்தில் இருப்பவர்கள் கொஞ்சம் கண்காணிப்பாக இருக்க வேண்டும்.

அதோடு முக்கியமான விஷயம் கூப் கண்டிராக்டர்கள் செய்கிற காரியம். எப்போதுமே ஒரு ஓடை, ஆறு இவற்றின் பக்கத்தில் கூப் காண்டிராக்ட் எடுத்தால் அந்த ஓடை, ஆற்றுக்கு அருகில் உள்ள மரங்களை வெட்டக் 





கூடாது. அவற்றையும் அவர்கள் வெட்டிவிடுவதனால் ஆங்காங்கே மண் அரிப்பு ஏற்படுவதும், மலைகளுக்கே தீங்கு விளைவிக்கக்கூடிய நிலைமை ஏற்படுவதையும் பார்க்கிறோம். அதிகாரிகளின் மேல் குற்றம் சொல்வதற்காகச் சொல்லவில்லை. அவர்கள் அதிகமாக இவற்றில் கவனம் செலுத்த வேண்டியதாக இருக்கிறது.

இன்றைக்கு இதே நேரத்தில் சாதாரண ஏழை மக்கள் அன்றாடம் காட்டிற்குச் சென்று சுள்ளிகள் பொறுக்கிவந்து ஒரு ரூபாய், இரண்டு ரூபாய் என்று விற்று தங்கள் வாழ்க்கையை நடத்த வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். அவர்களுக்கு நான்கணா, எட்டணா என்று கட்டணம் வசூலிக்கப்படுகிறது. அதை வாங்கிக் கொண்டு உள்ளேபோய் எடுக்கின்ற நேரத்தில் கூட சில இடங்களில் வேண்டியவர்கள் ஒருவிதமாகவும், வேண்டாதவர்கள் ஒருவிதமாகவும் சுள்ளி பொறுக்குவதில் நடத்தப்படுகிறார்கள். ஆகவே அன்றாட தங்களுடைய வாழ்க்கையை நடத்தவேண்டிய நிலையில் உள்ள அவர்களுக்கு சர்க்கார் கட்டணச் சலுகை அளிக்க வேண்டும். எல்லோரும் ஒரேமாதிரியான முறையில் நடத்தப்படுவதற்கான ஏற்பாடுகளை அதிகாரிகள் மேற்கொண்டாகவேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அதோடு இன்றையதினம் காட்டு இலாக்காவில் அதிகமான சமவெளிகளை எல்லாம் பாரஸ்ட் லாண்டு என்று பண்ணி வைத்திருக்கிறார்கள். புதுக்கோட்டைப் பகுதியில் பார்த்தால் தெரியும். அந்த சமவெளிகளில் நல்ல முறையில் விவசாயம் செய்ய முடியும். இருந்தும் வெள்ளையர்கள் காலத்தில் அப்படி அவற்றை எல்லாம் பாரஸ்டு லாண்டு என்று வைத்தார்கள். அதற்குக் காரணமும் கூட, இங்குள்ளவர்களுக்கு இங்கே வேலை கிடைக்க சந்தர்ப்பம் இல்லாமல் இருந்தால்தான் அவர்கள் எல்லாம் சிலோன், பர்மா போன்ற மற்ற நாடுகளுக்கு கூலிகளாகப் போக சம்மதிப்பார்கள் என்று செய்துவிட்டார்கள் என்று சொல்லப்படுகிறது. அந்த முறையை இன்றைக்கும் நீடிக்கக்கூடாது என்பது என்னுடைய தாழ்மையான கருத்து. பாரஸ்ட் இலாக்காவில் இருந்து அந்த சமவெளிப் பகுதிகளை எல்லாம் நீக்கிவிட்டு ஏழை விவசாய மக்களுக்கு பட்டா வழங்கி, உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கான வாய்ப்பினை இந்த அரசாங்கம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கால்நடைகளைப் பொறுத்தவரையில் ரெண்டர்பெஸ்ட் என்கிற வியாதி ஏராளமாக—காட்டுமாடுகளுக்குக் கூட வருகிறது. ஆயிரம், ஐநூறு என்று அதனால் மாடுகள் சாகின்றன. அப்பேர்ப்பட்ட மோசமான வியாதிக்கு மாடுகள் இரையாகாமல் இருக்க ப்ரிவென்டீவ் மெஷராக அதிகாரிகள் மாடுகளுக்கு ஊசிபோட நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கால்நடைகளுக்கான தீவனத்தைப் பொறுத்தவரையில் எப்படி மனிதர்களுக்கு உணவு அளிக்க பங்கீட்டு முறையை வைத்து அரசாங்கம் எல்லா நடவடிக்கைகளையும் எடுத்துக்கொள்கிறதோ அதுபோலத்தான் கால்நடைகளுக்கும் தீவனம் கிடைக்கச் செய்ய இந்த அரசு உறுதி செய்யவேண்டும். குறிப்பாக பிண்ணாக்கு, சினியாபுல் உணவுகளை அரசாங்கமே கொள்முதல் செய்து கால்நடைகளுக்கு நல்ல தரமானதாகக் கிடைக்க வழி செய்ய வேண்டும்.

கடைசியாக, அடித்தளத்தில் இருக்கக்கூடிய குறைகளைக் களைவதற்கு சட்டசபை உறுப்பினர்கள், பொதுக்காரியத்தில் ஈடுபடுகிறவர்கள் இவர்களைக் கொண்ட ஒரு கமிட்டியை அமைத்து, எல்லாக் குறைகளையும் நல்ல முறையில் பரிசீலனை செய்யச் சொல்லி, அதிகாரிகளின் கவனத்திற்கு அவை கொண்டுவரப்பட்டு அவைகளைக் களைவதற்கு முன்வந்தால்தான் நிர்வாகம் செம்மையாக நடைபெற அதன்மூலம் அரசாங்கத்திற்கும், மக்களுக்கும் நன்மை கிடைக்கும் என்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இனி பேசுகின்ற உறுப்பினர்கள் 8 நிமிடங்களுக்குள் தங்கள் உரையை ஆற்றவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

* **திரு. மு. வேதாசலம் :** தலைவர் அவர்களே, இன்று மீன் வளர்ச்சி பற்றிப் பேச வாய்ப்புத் தந்தமைக்கு நான் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழகத்தில் நீண்ட கடற்கரை இருக்கிறது. அதில் ஏராளமான மீன்களும், முத்துக்களும், சங்குகளும் இருக்கின்றன. இன்று கொடுக்கப்பட்டிருக்கிற அறிக்கையில் மிக அழகாகவும் நல்ல திட்டத்தையும் தந்திருக்கிறார்கள். முன்பு இருந்த அரசாங்கம் தமிழகத்தினுடைய மீனவர்களின் நிலைமையைப் புரிந்து கொள்ளாமல் அவர்கள் எப்படி வாழ்ந்தாலும், எப்படி இருந்தாலும் அதைப்பற்றிக் கவலைப்படாமல் ஏதோ அந்த நேரத்திலே மட்டும் ஓட்டுச் சேர்ப்பதற்காக காலத்தைத் தள்ளி வந்தார்கள். இப்பொழுதுள்ள அரசாங்கம் அவர்கள் நல்லமுறையில் வாழ்வதற்கான திட்டத்தைத் தீட்டி ஏராளமான வகைகளில் மீனவர்களுக்கு நன்மைகளைச் செய்திருந்தாலும் ஒரு சில குறைகளைச் சொல்வதற்கு ஆசைப்படுகிறேன். மீன் வளர்ச்சிக்கு 1¼ கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அது போதாது என்று கருதுகிறேன். மீன் உற்பத்தி இந்த நாட்டிற்கு மிக மிக அவசியம். உணவு தானியங்களுக்கு அடுத்தபடியாக இருப்பது மீன்தான். மீன் உற்பத்தி அதிகமாகச் செய்தால் உணவுப் பற்றுக்குறை தீரும் என்று நினைக்கிறேன். அதற்காகவே தமிழக அரசாங்கம் 10 கோடி ரூபாய் செலவில் ஒரு மாஸ்டர் பிளான்போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்தால் தான் மீன் வளம் பெருகும். தமிழகத்திலே எல்லாப் பகுதிகளிலும் சுலபமாக மீன் கிடைக்கக்கூடிய நிலை ஏற்படும். அப்படி அதிகமாகக் கிடைக்கக்கூடிய மீனை பதன்செய்து வெளிநாடுகளுக்கு விற்பனை செய்வதன் மூலம் நிறைய அன்னியச் செலாவணி கிடைக்கக்கூடிய வழியேற்படும்.

மீனவர்களுக்கு முன்பு இருந்த அரசாங்கம் 32 ஆயிரம் ரூபாய் செலவிலே பாப்லோ போட் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். ஏழை மீனவர்கள், ஐந்நூறு ரூபாய் கொடுத்து கட்டுமரம் வாங்கமுடியாத மீனவர்கள் 32 ஆயிரம் ரூபாயில் எப்படி பாப்லோ போட் வாங்கமுடியும்? ஆகவே ஏழை மீனவர்கள் வசதிக்காக ஆயிரம் ரூபாய் செலவில் விசைப் படகுகள் கொடுப்பதற்கான திட்டத்தை இந்த அரசாங்கம் யோசனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடற்கரைப் பகுதிகளிலே வாழுகின்ற மீனவர்கள் ஏழை எளியவர்கள். அவர்கள் குடிசைகளிலேதான் வாழ்கிறார்கள். புயல் அடிக்கின்ற நேரத்திலே அவர்களுடைய குடிசைகளை அடித்துக்கொண்டு போய்விடுகிறது. அவர்களுக்கு அடிக்கடி நிவாரணங்கள் அளிக்கக்கூடிய நிலைமை அரசாங்கத்திற்கு ஏற்படுகிறது. அப்படியில்லாமல் அவர்களுக்கு பெர்மனெண்ட் ஸ்ட்ரக்சர் ஆக நிரந்தரமாக குறைந்த செலவிலே வீடுகள் கட்டிக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆழ்கடல் திட்டம் இன்னும் தமிழக அரசால் அமல் நடத்தப்படவில்லை. அதற்கு அதிகச் செலவு ஆகும் காரணத்தால் அதை உடனடியாக நிறைவேற்ற முடியாத நிலையில் இருப்பதால் அதிகமாக டிராலர்ஸ் அரசாங்கம் ஏற்படுத்தி அதை நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முன்பு இருந்த அரசாங்கம் பாப்லோ போட் கொடுக்கும்பொழுது, அதற்கு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட ரஸ்டன் எஞ்சின் அமைத்துக் கொடுத்தார்கள். அந்த எஞ்சின் ரிப்பேராகப் போய் விடுவதால் அவர்கள் எல்லாம் இரண்டாயிரம் மூவாயிரம் ரூபாய் வரையில் நஷ்டம் அடைந்திருக்கிறார்கள். அதிலே உள்ள ஏர் கூலர் (Air Cooler) நம்முடைய நாட்டுக்கு ஒத்துவராது. ஆகவே, வாட்டர்கூலர் (Water Cooler) பொருத்தமாக இருப்பதால் அதை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அறிக்கையின்படி 200 போட் தயாரிக்கப்படும் என்று இருக்கிறது. ஏற்கனவே 1,500 பேர்கள் விண்ணப்பங்கள் போட்டிருக்கிறார்கள் என்ற காரணத்தால் இருநூறு போட்டை ஆயிரம் போட்டாக தயாரிக்கவேண்டும்.



மீனவர்கள் படிப்பதற்கு வசதியற்றவர்கள். வாழ்வதற்கு வகையற்றவர்கள். அவர்கள் மோஸ்ட் பேக்வர்ட் (Most Backward Class) ஆக இப்பொழுது இருக்கிற காரணத்தால் அவர்களை, மத்திய அரசாங்கத்திற்கு எழுதி, ஷெட்யூல்ட் கிளாஸில் சேர்த்து எல்லாவிதமான சலுகைகளும் அவர்களுக்குக் கிடைப்பதற்கு வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மீனவர்கள் வாழுகின்ற பகுதியில் எந்த ஒரு குப்பத்தை எடுத்துக்கொண்டாலும் ரோடு வசதி கிடையாது, லைட் வசதி கிடையாது. குடிதண்ணீர் கிடைக்கவில்லை என்பதால் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே அவர்களுக்கு குடி தண்ணீரையும், ரோடு, லைட் வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய அரசாங்கம் ஏழை மீனவர்களின் நிலையை உணர்ந்த அரசாங்கம், நம்முடைய அமைச்சர் அவர்கள் நன்கு அதைப்பற்றி புரிந்தவர்கள், அவர்களுக்குத் தெரியும். ஆகவே குறைந்த விலையில் மீனவர்களுக்கு படகுகள் தரவேண்டும். அவர்களுக்கு மானியம் அதிகமாகத் தந்து மீன் உற்பத்தியை அதிகப்படுத்துவதற்கு மாஸ்டர் பிளான் அவசியம் வேண்டும் என்று கருதுகிறேன். அதற்கு அடுத்த ஆண்டுக்குள் ஏற்பாடு செய்து 10 கோடி ரூபாய் செலவில் அந்த பிளானைப் போட வேண்டும். அடுத்ததாக, டஃப்ரின் கோர்ஸ் (Duffrin Course) சென்னையில் இல்லை. பம்பாயில்தான் இருக்கிறது. அது இங்கே இருந்தால் வசதியாக இருக்கும் என்பதால் அந்த டஃப்ரின் கோர்ஸை சென்னையில் ஏற்படுத்த மத்திய அரசாங்கத்தைக் கேட்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

***THIRU K. S. KOTHANDARAMIAH**: Hon. Speaker, Sir, I rise to welcome and support the Demand—Animal Husbandry. In this connection, I am very happy to state that the Hon. Minister for Agriculture has toured our taluk and I appreciate the way in which he has studied the problem there and the way in which he has understood the difficulties there. Also I had an occasion to meet him and discuss about the problem regarding Agriculture and Animal Husbandry in person. From the way in which he gave a patient hearing to me, I understand that he is the most suitable person for his portfolio. He is also interested in Agriculture.

Now I want to say a few words about a neglected animal, goat. Sir, the goat plays an important part in the rural economy of our country. It is a very useful animal in our country because it gives us food, manure, etc. Somehow the previous Government has neglected it. If a person keeps about 20 to 25 goats, he is able to maintain his family because it pays quick dividends. Moreover, the manure that is got from the goats is highly good and qualitative and is very useful for agriculture. A poor person or a petty landholder is not able to purchase fertilizer at a higher price. But if he keeps a few goats, he is able to secure manure and also skins from which he can get some amount. Also the flesh of the goat is a very highly nutritive diet and he can use it as part of food. It is stated in a book called 'Agriculture in India' how goats play an important role in the rural economy of our country. India possesses over 50 million goats which is nearly one-fourth of the goat population in the world. Therefore, these goats play an important part in our economy and in the life of the poor people. I do not know why our Government have neglected them. The reason that they say is that they eat away the forests but I do not

think that it is completely correct. In every village they can set apart a few acres of land for grazing. In many villages the forest boundary is so close to the villages that there arise frequent quarrels between the forest guards and the people there. So, I suggest that a few acres of land should be reserved for grazing in every village. As the goat is a very important and useful animal to the people, I request the Hon. Minister for Agriculture and the present Government to pay greater attention to it. Also when we go to the villages, there are general complaints that they have to get permission from the Government if one has to keep some goats, and that the permission is not given. When the Minister came there, the people made many complaints. They asked him to grant them permission to have goats. In the interests of rural economy and in the interests of agriculturists, I request the Hon. Minister to consider this question, which was neglected by the previous Government, and see that permission is granted to agriculturists for rearing goats. Kashmiri goats are very useful and their fine, silken wool is used for making shawls. We can introduce Kashmiri goats in our State also. That will bring a lot of profit to the Government. Therefore I request the Government to pay attention to this. With these words I resume my seat.

***திரு. சோ. அழகர்சாமி** : தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல முன் வருகிறேன். மீன்வள வளர்ச்சி சம்பந்தமான திட்டங்களின் கீழ் சர்க்காரால் கொடுக்கக் கூடிய உதவிகளை மீனவ மக்கள் பெறமுடியாமல் இருக்கிறார்கள். அவர்களுடைய தேவை என்ன என்பதை உணர்ந்து அவர்களுக்கு உதவக்கூடிய முறையில் திட்டத்தை வகுத்தால் பயனுள்ளதாக இருக்கும். அவர்களுக்காக வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அந்த வீடுகளில் அவர்கள் குடியேறாமல் இருப்பதாக அறிகிறோம். அதே போன்று விசைப்படகுகள் வாங்குவதற்காக கடன் வசதிகள், உதவிகள் செய்து கொடுத்தாலும் கூட அதைப் பெற முடியாமல் இருக்கிறார்கள். அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் மீனவர்கள் தனியார் கட்டு மரங்களையும், வலைகளையும் வாடகைக்கு எடுத்துத் தங்கள் தொழிலைச் செய்கிறார்கள். அதனால் அவர்களுக்கு அவர்களுடைய தொழிலிலே நியாயமான பங்கு கிடைக்காமல் போகிறது. ஆகவே, அரசாங்கமே சிறு கட்டணத்தில் கட்டுமரம், வலைகள் ஆகியவற்றை அவர்களுக்கு வாடகைக்குக் கொடுத்தால் அவர்கள் பிடிக்கும் மீன்களால் ஏற்படக்கூடிய பலனில் பெரும் பகுதியை அவர்களே அடைய முடியும். மீனவர்களுடைய வாழ்வைச் சீராக்குவது பற்றி பரிசீலனை செய்வதற்கு ஒரு குழுவை ஏற்படுத்தினால் நேரடியாகப் பார்த்து பயனுள்ள காரியங்களைத் திட்டமிட்டுச் செய்ய முடியும்.

கால்நடைகளைப் பொறுத்தவரை மேய்ச்சல் காடுகள் இல்லாமல் அவற்றின் தரம் குறைந்து வரக்கூடிய நிலைமை இருக்கிறது. ஒவ்வொரு வட்டாரத்திலும் வாய்ப்புள்ள இடங்களில் எல்லாம் மேய்ச்சல் காடுகளை அமைத்துப் பாதுகாக்க வேண்டியது மிகவும் அவசியம். பஞ்சாயத்து யூனியன்கள் மூலமாக மேய்ச்சல் காடுகளை அமைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். ஆடுகள் பரிவர்த்தனை என்று இன விருத்திக்காக செய்யப் படுகிறது. இதனால் பிரயோசனம் ஏற்படுவதில்லை. அவ்வாறு தனியார்களுக்குக் கொடுக்கப்படுகிறது. ஒரு இனத்தை கொடுத்து பழைய இனங்களைத் திரும்பப் பெறுகிறார்கள். அதைப் பெறுகின்ற தனியார் அது சரியில்லை என்று சொல்லி உடனே விற்று விடுகிறார்கள். ஆகவே, அந்த மாதிரி கிடாய்களைக் கொடுக்கும்போது அந்தந்த பஞ்சாயத்துக்கு பத்து பதினைந்து கிடாய்களைக் கொடுத்தால் அது எப்போதும் அங்கே இருக்கும் நிலைமை இருக்கும். அதனால் பயன் ஏற்படக்கூடும்.





ஆடுகளை அபிவிருத்தி செய்வதற்காக கடனும், மானியமும் கொடுக்கப் படுகிறது. அதனால் எந்தப் பயனும் ஏற்படுவதில்லை. ஆடுகள் வைத்திருப்பவர்களிலே செல்வாக்குப் படைத்தவர்கள் 500 ரூபாய் கடனாகவும், 500 ரூபாய் மானியமாகவும் பெற்று புதிதாக ஆடுகளை வாங்காமல் பழைய ஆடுகளையே காண்பித்துவிடக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே, இதற்கு மானியம் கொடுப்பது எந்த வகையிலும் விரயமாகத்தான் போய் விடுகிறது. ஆகவே இதற்காக மானியம் கொடுக்காமல் கடன் மட்டுமே கொடுக்க வேண்டும்.

கால்நடைகளுக்கு வைத்திய வசதி போதாது. திடீரென்று நோய் ஏற்பட்டு விட்டால் 10, 15 மைல் தூரம் போக வேண்டி இருக்கிறது. அங்கு கூட சரியான முறையில் மருத்துவ வசதி கிடைப்பதில்லை. மருத்துவர் இருப்பதில்லை. அந்தந்த வட்டாரங்களிலேயே கால்நடை வைத்திய வசதிக்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

கால்நடைகளுக்காக இன்ஷூரன்ஸ் வசதியை செய்து தரவேண்டும். இன்று ஒரு ஜோடி மாட்டின் விலை ஆயிரம், இரண்டாயிரம் ரூபாய்களுக்கு மேல் ஆகிறது. மாடுகள் திடீரென்று இறந்து விட்டால் பெருத்த நஷ்டம் ஏற்படுகிறது. அதே போன்று ஆடுகளுக்கு நோய் வந்தாலும் 100, 200 ஆடுகள் மொத்தமாக இறந்து விடுகின்றன. ஆகவே, கால்நடைகளுக்குக் கட்டாயமாக இன்ஷூரன்ஸ் வசதியைச் செய்து தரும் திட்டத்தை கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோயில்பட்டி வட்டாரத்தின் மத்திய பகுதியில் உள்ள எட்டயபுரத்தில் கால்நடை ஆஸ்பத்திரி ஒன்றை நிறுவி வைத்திய வசதிக்கு வழி செய்து கொடுக்க வேண்டும். இப்போது கொடுக்கப்படும் காங்கேயம் மாடுகள் பலமான மாடுகளே தவிர, பால் அதிகமாகக் கறப்பதில்லை என்று கூறப்படுகிறது. ஆகவே அதிக பால் தருகிற இனத்தை விருத்தி செய்வதற்கு வழி செய்ய வேண்டும்.

வனத்துறையைப் பொறுத்தவரை, சாகுபடிக்கு லாயக்கான நிலங்களை எல்லாம் எடுத்து விவசாயத்துறைக்குக் கொடுத்து, விவசாயத் தொழிலாளர்களுக்கு அந்த நிலங்களைப் பிரித்துக் கொடுப்பதின் மூலம் உணவு உற்பத்தியைப் பெருக்க ஏற்பாடு செய்ய வேண்டும். காடுகள் பராமரிப்பு போதாது. மரங்களை தனியார் வெட்டுகிறார்கள். அதைத் தடுக்கவேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். வேதாரண்யம் பக்கத்தில் கோடிக்காடு என்ற இடத்தில் மரங்களை வெட்டுவதோடு மட்டுமல்லாமல் வன விலங்குகளையும் வேட்டையாடுகிறார்கள். இந்தமாதிரி நிலைமைகளையெல்லாம் தடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

***திரு. எஸ். முருகையன்** : சட்டமன்றத் தலைவர் அவர்களே, விவசாயத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய மூன்று மானியக் கோரிக்கைகளை ஆதரித்து, வரவேற்று என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கக்கூடிய அறிக்கையிலே சந்தனக்கட்டைகள் மூலமாக 1¼ கோடி ரூபாய் வருமானம் வந்திருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. எங்களுடைய வட ஆற்காடு மாவட்டத்தில் வருஷம் ஒன்றுக்கு ஏறக்குறைய ஒரு கோடி ரூபாய்க்கு மேல் சந்தனக்கட்டைகள் கிடைக்கின்றன. அந்த சந்தனக்கட்டைகளை எல்லாம் வெளி மாநிலங்களுக்குக் கொண்டு போய் அங்கே சந்தன அத்தர் போன்ற பொருள்களைச் செய்து விற்கிறார்கள். இந்த வட ஆற்காடு மாவட்டத்தில் விளையக்கூடிய சந்தனக்கட்டைகளைக்கொண்டு அத்தர் போன்ற பொருள்களைத் தயாரிக்கக்கூடிய தொழிற்சாலைகளை இந்த மாவட்டத்திலேயே ஆரம்பித்தால் இந்த வட்டார மக்கள் பயன் பெறுவதோடு ஒரு கோடி ரூபாய்க்கு மேல் பெறுமானமுள்ள சந்தனக்கட்டைகள் வெளி மாநிலங்களுக்குக் கொண்டு போகப்படாத நிலைமையும் ஏற்படும். இது அமைச்சர் அவர்கள் மிக அவசரமாகச் செய்ய வேண்டிய காரியம் என்று குறிப்பிட விரும்புகிறேன். ஒவ்வொரு ஆண்டும் வட ஆற்காடு மாவட்டத்திலிருந்து

ஒரு கோடி ரூபாய் பெருமானமுள்ள சந்தனக்கட்டைகள் வெளி மாநிலங்களுக்குச் செல்லுகின்றன. இந்த மாவட்டத்திலே தொழிற்சாலையை ஆரம்பிக்க வேண்டுமென்றால் தனியார் முன் வந்தால் வைக்கலாம் என்று அமைச்சர் அவர்கள் சொல்லக்கூடும். வட ஆற்காடு மாவட்டத்தில் இந்த தொழிற்சாலையை அமைக்க பலர் முன் வந்திருக்கிறார்கள். ஆகவே, அதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வட ஆற்காடு மாவட்டத்தில் மூங்கில்களும் ஏராளமாக இருக்கின்றது. ஈரோட்டின் அருகிலுள்ள காகிதத் தொழிற்சாலைக்கு வட ஆற்காடு மாவட்டத்திலிருந்து ஏராளமான மூங்கில்கள் கொண்டு செல்லப்படுகின்றன. இங்கிருந்து மூங்கில்களை லாரியில் கொண்டு சென்று அங்கே காகிதங்களை உற்பத்தி செய்யக்கூடிய நிலை இருக்கிறது. அதனால் செலவு கூட அதிகம் ஆகும். அதை விட இந்த மாவட்டத்திலேயே ஒரு காகிதத் தொழிற்சாலையை ஆரம்பிக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டும். காகிதத் தொழிற்சாலை அமைத்தால் அதற்கு வேண்டிய அளவு மூங்கில்கள் இருக்குமா என்று அமைச்சர் அவர்களுக்கு சந்தேகம் எழக்கூடும். நிபுணர்களையும், சம்பந்தப்பட்ட காட்டு இலாக்கா அதிகாரிகளையும் கேட்டுப் பார்த்தோம். இங்கே ஒரு காகித தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு தேவையான அளவுக்கு மூங்கில்கள் இருக்கின்றன என்று சொல்கிறார்கள். ஆகவே, அமைச்சர் அவர்கள் இதை அவசியமாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மூற் பகல் 11-30 செங்கம் தாலுக்காவிலோ, போளூர் தாலுக்காவிலோ, இந்த இரண்டு இடங்களில் ஏதாவது ஒரு இடத்தில் இந்த தொழிற்சாலையை ஆரம்பிப்பது மிகமிக முக்கியமானது.

சாத்தனூர் ஆயக்கட்டுப்பகுதியில், சாத்தனூர் அணைப்பகுதியில் ஒரு ஆயிரம் ஏக்கர் காட்டு நிலங்கள் நல்ல முறையில் சாகுபடிக்கு லாயக்கான அளவுக்கு, நஞ்சை சாகுபடி செய்யக்கூடிய அளவுக்கு இருந்து கொண்டு இருக்கிறது. அந்த நிலங்களை யாருக்கும் குத்தகைக்கு விடுவது கிடையாது. தனிப்பட்டவர்கள் சாகுபடி செய்யக்கூடாதென்று காட்டிலாக்கா அதிகாரிகள் தடுக்கிறார்கள். அங்கு நல்ல நீர் வசதியும் இருக்கிறது. நல்லமுறையில் பாசனத்திற்கு கொண்டு வரக்கூடிய நிலம் இருக்கிறது. ஆயிரம் ஏக்கர் நஞ்சை சாகுபடி செய்யக்கூடிய வசதியான நிலங்கள் எல்லாம் வீணாகிக்கொண்டு இருக்கின்றன. அமைச்சர் அவர்கள் இந்த நிலங்களை நீண்ட கால குத்தகைக்கு அல்லது குறுகிய கால குத்தகைக்கு அல்லது அந்தப் பகுதி மக்கள் சாகுபடி செய்வதற்கு வேண்டிய ஏற்பாட்டை உடனடியாகச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஜவ்வாது மலைப்பகுதியில் அங்குள்ள மலைவாசிகள் ஏறக்குறைய 100 ஆண்டு காலம், 50, 60 ஆண்டு காலமாக அவர்களுக்குச் சொந்தமாக இல்லாத காட்டுப் பகுதி நிலங்களை சீர்திருத்தம் செய்து கிணறு வெட்டி சாகுபடி செய்து கொண்டு இருக்கிறார்கள். நீண்டகாலமாக அவர்கள் அந்த நிலங்களை தங்களுக்குப் பட்டா செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் பட்டா கொடுக்கப்படாமல் இருந்து கொண்டிருக்கிறது. 10 ஆண்டுகளுக்கு முன்பு இருந்தவர்களுக்கு வேண்டுமானால் அத்தகைய நிலங்களுக்குரிய பட்டாக்களைக் கொடுக்கலாமென்று வரைமுறைப்படுத்தி அதைப்போல உள்ளவர்களுக்கு பட்டா கொடுக்க வேண்டிய ஏற்பாடுகளை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பல இடங்களில் நீலகிரிக் கன்றுகளை வைத்து வளர்க்கிறார்கள். அது ஏதோ 10 ஆண்டுகளுக்குப் பிறகு விறகுக்காக வேண்டி பயன்படுத்தலாமே தவிர எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையில் தைலம் இறக்கக்கூடிய அளவுக்கு அந்த மரங்கள் வளர்வது கிடையாது. அந்த மரங்களை வைப்பதைவிட புளியங்கன்றுகளை வைத்து பயிர் செய்யலாம். சென்ற புயலின்போது ஏராளமான புளியமரங்கள் சாய்ந்து விட்டன. அதன் காரணமாக புளி பற்றுக்குறை இருக்கும் சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. நீலகிரி மரங்களை வைப்பதானால் நல்ல மலைப்பாங்கான இடங்களில் வைக்கலாமே தவிர வட ஆர்க்காடு மாவட்டத்தைப் போன்ற மைனர் ஃபாரஸ்ட்கள் இருக்கக்கூடிய இடங்களில் புளியங்கன்றுகளை வைத்து உற்பத்தி செய்தால் புளி பற்றுக்குறையை 10 ஆண்டுகளுக்குள் நிவர்த்தி செய்யக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. நீலகிரி மரங்களை வைப்பதற்குப் பதிலாக புளியங்கன்றுகளை வைப்பதுதான் மிகமிக நல்லது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.



விவசாயத்திற்கு வேண்டிய தழைகள் மற்ற இதர பொருள்கள், விறகுகள் முதலியவற்றை காடுகளிலிருந்து கொண்டுவரவேண்டிய நிலை விவசாயிகளுக்கு இருந்துகொண்டிருக்கிறது. அந்தத் தழைகளைக் கொண்டு வருவதற்கு பாஸ் கொடுப்பதற்கு சில விதிகள் இருக்கின்றன. அந்தப் பாஸ்களை ஃபாரஸ்ட் கார்டுகள் சரிவர கொடுப்பது இல்லை. வேண்டியவர்களாக இருந்தால் 10 வண்டி 20 வண்டிக்கு பாஸ் கொடுக்கிறார்கள். மற்றவர்களுக்குக் குறிப்பிட்ட அளவுக்குத்தான் கொடுக்கமுடியும் என்று சொல்லக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது யார் வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளுவதற்கு பாஸ் கொடுக்கும்படியாக நாங்கள் உத்திரவு போட்டிருக்கிறோம் என்று சொல்லலாம். ஆனால் உண்மையிலேயே நடைமுறையில் இருப்பது என்னவென்றால் அங்கே இருக்கக்கூடிய ஃபாரஸ்ட் கார்டுகளும் ஃபாரஸ்டர்களும் அவர்களுக்கு வேண்டியவர்களுக்கு எந்தெந்த வகையில் நன்மைகளைச் செய்யமுடியுமோ அந்த அளவுக்கு செய்து கொண்டுதான் இருக்கிறார்கள். சட்டப்படி வேண்டுமானால் தடுக்க முடியாமல் இருக்கலாம். காடுகளிலுள்ள விலை உயர்ந்த மரங்கள் அழிக்காமல் விவசாயத்திற்கு வேண்டிய தழைகளை மட்டும் எடுத்துக்கொள்ளக்கூடியவர்களுக்கு எவ்வளவுக்கு வேண்டுமானாலும் பாஸ் கொடுக்கலாமென்ற நிலை இருந்தால் நல்லது. ரசாயன உர வகைகளைப் போடுவதைவிட பசுந்தாள் உரங்களைப் போட்டு விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்கு நிரம்ப அவசியம் இருக்கிறது. ஆகவே, காடுகளிலிருந்து விவசாயத்திற்கு வேண்டிய தழைகளை விவசாயிகள் எடுத்துக்கொள்வதற்கு வேண்டிய பாஸ்களை அவ்வப்போது கொடுக்க வேண்டுமென்ற வகையில் காட்டிலாக்கா சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு சர்க்கார் உத்திரவு பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காட்டிலாகாவில் உத்தியோகம் செய்யக்கூடிய பணியாளர்களுக்கு பதவி உயர்வு கொடுப்பதில் நீண்ட காலதாமதம் இருந்து கொண்டிருக்கிறது. ஃபாரஸ்டராக உள்ளவர்கள் 10, 12 ஆண்டு காலமாகியும் கூட ஃபாரஸ்டராகவே இருந்து கொண்டிருக்கிறார்கள். ஃபாரஸ்ட் ரேஞ்சர்களாக இருப்பவர்களுக்கு 6, 7 ஆண்டுகளாகியும் பதவி உயர்வு கொடுப்பது இல்லை. நேரடியாக ஆட்களை எடுத்துக்கொண்டுவிடுகிறார்கள், அல்லதுவேண்டியவர்கள் யாரோ அவர்களை நியமித்து விடுகிறார்கள். நீண்டகாலமாக இந்த புகார்கள் இருந்து கொண்டு வருகின்றன. இந்த புகார்களை அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து யார் நியாயமான முறையில் தங்களுடைய உத்தியோகத்தில் செயல்பட்டுக்கொண்டு வருகிறார்களோ, அவர்களுக்கு எந்தவிதமான பாதகமும் இல்லாமல் பதவி உயர்வுக்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஃபாரஸ்ட் கார்டுகளும் ஃபாரஸ்ட் வாட்சர்களும் மிகமிகக் கடுமையான நிலையில் காடுகளைச் சுற்றிவர வேண்டியிருக்கிறது. அவர்களுக்கு வேண்டிய உடைகளுக்காக 50 ஆயிரம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். அது போதாது. அதிகமாக ஒதுக்கி வேண்டிய வசதிகளைச் செய்துகொடுக்க வேண்டும்.

வாட்சர்களாக இருப்பவர்கள் ஏறக்குறைய 10 ஆண்டு காலம், 15 ஆண்டுக்காலம் வேலை செய்திருந்தாலும், நல்ல முறையில் வேலை செய்திருந்தாலும், அவர்கள் உயர்நிலைப் பள்ளியில் படிக்கவில்லை என்ற காரணத்துக்காக அவர்களுக்குப் பதவி உயர்வு கொடுப்பது தடைபடுகிறது. வாட்சர்களாக இருப்பவர்களை கார்டுகளாக உயர்த்துவதற்கு எந்த கல்வி யோக்கியதாம்சமும் தேவையில்லை என்று நான் நினைக்கிறேன். அவர்கள்

படித்துவிட்டு என்ன செய்யப்போகிறீர்கள்? காட்டுப் பகுதிகளைச் சுற்றி காடுகளைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அவர்களுக்கு இருக்கிறது. அதனால் வாட்சர்களாக இருப்பவர்களுக்கு ஃபாரஸ்டு கார்டுகளாக பதவி உயர்வு கொடுக்க வேண்டும். கார்டுகளாக இருப்பவர்களுக்கு, அவர்களுக்கு எல்லாத் தகுதிகளும் சரியாக இருந்தால் ஃபாரஸ்டர்களாக பதவி உயர்வு கொடுக்க வேண்டும். ஃபாரஸ்டர்களாக இருப்பவர்களை ரேஞ்சர்களாக போடவேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். இந்தக் குறை அவர்களுக்கு நீண்டகாலமாக இருந்து கொண்டு வருகிறது. ரேஞ்சர் பயிற்சி பெறுவதற்காக காட்டிலாகாவிலே பணிபுரியக்கூடிய அலுவலர்களுடைய பிள்ளைகள் மனுச் செய்தால் அவர்களுக்கு முதல் சலுகை கொடுத்து பயிற்சிப் பள்ளிகளில் இடம் கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

கால்நடையைப் பொறுத்தவரையில், வட ஆர்க்காடு மாவட்ட விவசாயிகள் ஏராளமாக கால்நடைகளை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அங்கே, மருத்துவ வசதி, எல்லாப் பஞ்சாயத்து யூனியனும் கேட்டிருந்தாலும், இன்னும் போதுமான அளவுக்கு இல்லாமல் இருக்கிறது. ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் 4, 5 லைவ்ஸ்டாக் அஸிஸ்டென்ட்களை நியமித்து கால்நடைகளுக்குப் போதிய வசதிகள் செய்து கொடுக்கவேண்டும். கலசபாக்கத்தில் மருத்துவமனை இப்போது திறக்கப்பட்டிருக்கிறது. அதையொட்டி செயற்கை கருத்தடை நிலையம் ஒன்றையும் ஏற்படுத்த வேண்டும்.

ஆட்டுப்பண்ணைகள் உண்மையிலேயே லாபகரமாக நடக்கின்றனவா, இனவிருத்தி ஏற்படுகிறதா என்று நன்றாகப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அண்மையில் அமைச்சரவர்கள் தண்டராம்பட்டு பகுதிக்கு வந்திருந்தபோது ஆட்டுப் பண்ணை என்ற போர்டு இருந்தது. அங்கு ஆடும் கிடையாது ஒன்றும் கிடையாது. ஆனால் ஆடு மேய்க்கின்ற பையன் மட்டும் இருந்தான் என்று சொன்னார்கள். இம்மாதிரி குறை இல்லாமல் நல்ல முறையில் இப்போது கால்நடை வைத்தியத் துறையை பெருக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு எனது உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மஞ்சள் நிற விளக்கு போட்டவுடனேயே பேச்சை முடிக்கவேண்டும் என்ற தேவை இல்லை. பேசிக் கொண்டிருந்த கருத்தை பேசி முடிக்க நேரம் இருக்கும்.

***திரு. கொளத்தூர் கோதண்டம்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு விவசாயத்துறை அமைச்சரவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற மீனளம், காட்டிலாகா, கால்நடைவளம் ஆகிய மானியக் கோரிக்கைகளை ஆதரித்து என்னுடைய கருத்துக்களை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நீண்ட நேரம் இல்லாத காரணத்தால் முதலாவதாக காட்டிலாகாவைப்பற்றி ஒருசில கருத்துக்களை இந்த நேரத்தில் நான் குறிப்பாகச் சொல்கிறேன்.

சேலம் மாவட்டத்தில் வனவாசி, பக்கநாடு போன்ற காடுகளில் பயிரிட்டுக் கொண்டுவந்த ஏழை விவசாயிகள் சென்ற ஆட்சியிலே கட்டாயமாக வெளியேற்றப்பட்டார்கள். மாண்புமிகு விவசாய அமைச்சர் அவர்களும் முதல் அமைச்சர் அவர்களும் இதிலே பெரும் கவனம் செலுத்தி அங்கு விவசாயிகள் நிரந்தரமாக இருக்கும் அளவுக்கு ஏற்பாடு செய்து தந்ததற்காக இந்த அமைச்சரவைக்கு இந்த நேரத்தில் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய பகுதியில் காட்டுப்பாக்கத்தில் இருக்கும் விவசாயிகளுக்கும் அப்பேற்பட்ட நிலைமையை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். விவசாயிகள் காடுகளில் இருந்து தழைகளை வெட்டிக்கொள்வதற்கான ஏற்பாட்டினை இன்னும் தீவிரமாகச் செய்துதரவேண்டும் என்று விரும்பி, வேண்டிக்கேட்டுக்கொள்கிறேன்.

மீனள இலாகாவைப் பொறுத்தவரையில் என்னுடைய பகுதியில் கடந்த ஆண்டு புயல் அடித்த நேரத்தில், அதற்காக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பெரு முயற்சி எடுத்து அங்கிருக்கும் மீனவ மக்களுக்கு



வேண்டியவற்றைச் செய்து இருக்கிறார்கள். இந்த நல்ல செய்தியை சொல்லும் நேரத்தில் கடலூரில் இருந்து இடக்காடு கரை ஓரம் வரையில் இருக்கும் கடல் ஓரத்தில் மீனவர்களுக்கு குடிதண்ணீர் வசதியும் போக்குவரத்து வசதியும் இல்லாத காரணத்தால் அதிலெல்லாம் குறிப்பாக அதிகமாக கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக கால்நடையைப்பற்றிப் பேச ஆசைப்படுகிறேன். கால்நடைத் துறையைப்பற்றிப் பேசும்போது உணவுத்துறை எப்படி முக்கியமாகக் கருதப்படுகிறதோ, விவசாயம் எப்படி முக்கியமாகக் கருதப்படுகிறதோ, அதேபோல் இன்றயதினம் கால்நடைத் துறையும் விவசாயத்திற்கு மிகமிக முக்கியமான தேவையாகும். விவசாயிகளுக்குத் தேவையான கால்நடைகளை உற்பத்தி செய்து தருவதிலும், கால்நடைகளைப் பராமரிப்பதிலும் கால்நடை இலாக்கா அதிகமான பொறுப்பை ஏற்கவேண்டும். அந்த இலாக்காவைப் பொறுத்தவரையில் பலபல நிலைமைகளை எடுத்து சொல்கிற நேரத்தில் எனக்கு முன் பேசிய மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்டது போல் ஆடுகள் வளர்ப்பைப் பற்றிச் சொல்லும்போது மக்களிடையே மிகமிக மோசமான நிலையில் அதைப்பற்றிப் பேசுகிற நிலையில், அதை வெறுத்துப் பேசுகிற நிலையில் ஆடுகள் வளர்ப்புப் பண்ணைகள் இருக்கின்றன. கால்நடை மருத்துவ மனைகள் இன்றயதினம் ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படுவதில் குறிப்பாக கிராம மக்கள் அங்கு சென்று தங்கள் கால் நடைகளுக்கு வைத்திய வசதி செய்துகொள்ளக் கூடிய நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் சம்பந்தப்பட்டவரையில் அங்கு நடமாடும் கால்நடை மருந்தகங்களை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். என் பகுதியில் உள்ள சூணம்பேடு என்ற இடத்தில் ஒரு கால்நடை மருந்தகம் கட்டப்பட்டு ஓராண்டு ஆகியும் கூட இன்னும் திறக்கப்படாமல் வாடகைக் கட்டடத்திலேயே இருந்து வருகிறது, அதை போகிறபோதும் வருகிறபோதும் நான் பார்த்துக்கொண்டிருக்கிறேன். கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு விட்டது. அப்படி முடிக்கப்பட்டு ஒரு ஆண்டு ஆகியும் கூட அது இன்னும் திறக்கப்படவில்லை. அதற்கான காரணம் என்னவென்று எனக்கு விளங்கவில்லை. அதைப்பற்றி நான் எழுதியிருக்கிறேன்.

கோழிப்பண்ணைகளைப் பொறுத்தவரையில் கோழிகளுக்கு வருகிற வியாதி எங்கிருந்து, எப்படி வருகிறது என்பதைத் தெரிந்துகொள்ள முடியவில்லை. திடீர் திடீரென்று அது வருகிறது. ஆகவே, கிராமங்களில் விவசாயிகளிடம் கோழிப் பண்ணைகள் வைக்கச் சொல்லும்போது கட்டாயமாக இரண்டு நாட்களுக்கு ஒரு முறை அத்துறையிலுள்ள மருத்துவர் அல்லது அவர் கீழ் இருப்பவர் நிச்சயம் சென்று அவற்றைப் பார்வையிடக் கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தித்தரவேண்டும். ஆயிரம் ரூபாய்க்கு மேல் முதலீடு செய்து ஒரு கோழிப் பண்ணையை வைத்துக்கொண்டிருக்கும் போது திடீர் என்று வியாதி வந்து ஐம்பது அறுபது கோழிகள், மருந்தகத்திற்குச் சென்று வருவதற்குள்ளாக, இறந்து விடுகின்றன. ஆகவே இரண்டு நாட்களுக்கு ஒரு தடவை சூப்பர்வைஸ் செய்கிறதொரு நிலையிருந்தால் அது நல்ல முறையாக இருக்கும்.

கால்நடை இன்ஷூரன்ஸ் பற்றிச் சொல்லும்போது, கிராமங்களில் நல்ல கால்நடைகளை வைத்திருக்கக்கூடிய விவசாயிகளுக்கு, சிறிய விவசாயிகளுக்கு விவரங்கள் தெரியாத காரணத்தினால், அவர்களுக்கு இது குறித்து யாரை அணுகுவது என்று தெரியாத நிலையில் இருக்கிறார்கள். ஆகவே, அதையும் கவனித்து இத்திட்டத்தை செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். என் எண்ணம் என்னவென்றால், கோழிகள் வளர்ப்பிற்காக கொடுக்கப்படுகிற மானியங்கள் கொடுக்கப்படாமல் நிறுத்தப்பட்டால் கூட நலமாயிருக்கும் என்று நான் கருதுகிறேன், கோழிகளுக்கு கட்டப்பட்டிருக்கும் வீடுகளைப் பார்க்கும்போது கடந்த காலத்தில் ஜனநாயகத்தில் ஏற்பட்டிருக்கிற ஒரு மறுமலர்ச்சி இந்தக் கோழிகளுக்குக் கட்டப்பட்டிருக்கிற வீடுகளைப் பொறுத்துத்தான்—மக்கள் வெதும்பிவிட்டார்கள். ஏழைகளுக்கு வீடு இல்லாத நேரத்தில் கோழிகளுக்குக் குளிர்சாதன இல்லங்களை அளிக்கிற நிலை எதற்கு என்ற கருத்து மக்களிடையே பரவலாகப் பேசப்பட்டு

அதன் எதிரொலியாகக் கூட இன்றையதினம் இம்மாற்றம் ஏற்பட்டிருக்கும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். கோழிகள் மூலம் நாம் நல்ல உணவைப் பெற்றாலும் நல்ல இறைச்சியைப் பெற்றாலும். நல்ல முட்டைகளைப் பெற்றாலும் கூட விவசாயிகளுக்கு வேண்டியதைச் செய்ய முடியாத நேரத்தில், சிலபல சூழ்நிலைகள் காரணமாக இப்போது அவற்றிற்குக் கொடுக்கப்பட்டுவரும் வசதிகளைச் சற்றுக் குறைத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கால்நடைகளைப் பொறுத்து, பால் நமக்கு இந்த நேரத்தில் அதிகமாகத் தேவைப்படுகிறது. மக்களுக்கு முக்கியமாக வேண்டியது பால், முட்டை, இறைச்சி, மீன் இவைகள்தான். ஆகவே, கால்நடைகள் நல்ல போஷாக்கான உணவைக் கொடுக்கக்கூடிய காரணத்தினால் இந்த இலாக்காவினர் இதில் இன்னும் தீவிர பங்கு கொண்டு செயல்படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக இந்த கோழி இறைச்சி ஒரு சில இடங்களில்தான் இன்றைய தினம் விற்கப்பட்டு வருகிறது. அதை மேஜர் பஞ்சாயத்து போன்ற பகுதிகளில் அங்கு உள்ள இடங்களில் விற்றால் மக்களுக்கு நல்ல இறைச்சியைக் கொடுக்க நல்லதொரு சூழ்நிலை ஏற்படும். இப்போது சர்க்கார் விலையில் முட்டை ஒன்று 25 காசு என்ற அளவில் கிடைக்கிறது. ஆனால் மற்றப் பகுதிகளில் 32 காசுகள், 34 காசுகள் கொடுத்து வாங்க வேண்டிய நிலையிருக்கிறது. ஆகவே இதைப் பரவலாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கால்நடை இலாகாவைப் பொறுத்தவரையில் ஏற்கனவே ஏற்பட்ட சிலபல நிலைமைகள் காரணமாக, அதில் ஏற்பட்டுள்ள சில ஒழுக்கக் கேடுகள் இன்னும் மக்களிடையேயிருந்து விலகியதாகத் தெரியவில்லை. கால்நடை இலாகா என்று சொல்லும்போதே மக்கள் சந்தேகக் கண்ணோட்டத்தோடுதான் பார்க்கிறார்கள். ஆகவே நான் விவசாயத் துறை அமைச்சர் அவர்களை வேண்டிக் கேட்டுக்கொள்வதெல்லாம் அதில் ஏற்பட்டுள்ள ஒழுக்கக் கேடுகளை உடனடியாகக் களைந்துவிட தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். காளைகள் வாங்குவதில் குறிப்பிட்ட ஒரு சிலரிடம் மட்டுந்தான் வாங்கப்பட்டிருக்கிறது என்ற பட்டியல் என்னிடம் இருக்கிறது. அப்பேர்ப்பட்ட நிலை இல்லாமல் ஏழை விவசாயிகள், நல்ல முறையில் கால்நடையை உற்பத்தி செய்யவேண்டுமென்ற எண்ணம் கொண்ட விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் அவர்களுக்கு நல்லதொரு நிலைமை ஏற்படுத்தித் தரக் தக்க வகையில் அப்பேர்ப்பட்ட விவசாயிகளிடமிருந்து காளைகளை வாங்க ஏற்பாடுகளைச் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கால்நடை மருத்துவர்கள் இதுவரை கெஸட் பதிவில்லாதவர்களாக இருந்து கொண்டிருக்கிறார்கள். மனிதனுக்கு டாக்டர் எப்படி தேவையோ அப்படி கால்நடைகளுக்கும் மருத்துவர்கள் தேவை. ஆகவே அவர்களை கெஸட் பதிவுள்ள அதிகாரிகளாக ஆக்குகிற ஒரு திட்டத்தை நம் விவசாய அமைச்சர் அவர்கள் முழு வடிவத்தில் கொண்டு வந்துள்ளார்கள் என்று அறிகிறேன். அதை உடனடியாகச் செயல்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த வாய்ப்பினை அளித்தமைக்கு மன்றத் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

***திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, கிட்டத்தட்ட ஆறேமுக்கால் கோடி ரூபாய்க்குள்ள மூன்று மானியக் கோரிக்கைகளைக் குறித்து, குறிப்பிட்ட குறைவான நேரத்தில் பேசுவது என்பது சிரமமான காரியந்தான். இப்போது அமைச்சராக இருப்பவர்கள் சென்ற அரசின்போது எதிர்க்கட்சியில் இருந்தபோது இதே பிரச்சினையை—நேரம் போதாதென்பதை—கிளப்பினார்கள் என்பது என் ஞாபகம். ஆகவே அடுத்த பட்ஜட் வரும்போதாவது இதற்கு அதிகமாக நேரம் ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன் முதலில்.



கால்நடையை எடுத்துக் கொண்டால் இன்றைய தினம் கோமாரி என்ற வியாதியைப் போக்க தீவிர நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளவேண்டும். மாடுகளை அதிகமாகப் பாதிக்கக்கூடிய வியாதி இந்த கோமாரி வியாதி. இந்த வியாதியைப் போக்க இன்றைய தினம் உள்ள வைத்திய வசதிகள் போதாது. ஆகவே கிராமங்களில் மொபைல் யூனிட்ஸ்களை அதிகமாகப் போட்டு, டாக்டர்களையும் அதிகமாகப் போட்டு கிராமங்களுக்குச் செல்வதற்கான வழிவகைகளைக் காண்பது மிகவும் அவசியம். கால்நடை இலாகா ஊழியர்கள், "கண்டின்ஜன்ஸி மீனியல்ஸ்" என்றிருக்கிறார்கள். அவர்கள் கடுமையான வேலைகள் செய்யக்கூடிய நிலையில் இருக்கிறார்கள். அவர்களை நிரந்தர ஊழியர்களாக ஆக்கி சர்க்கார் கொடுக்கும் சலுகைகள், பிராவிடண்ட் பண்ட் போன்ற வசதிகளை அவர்களும் பெறுவதற்கு வழி செய்தால் பல ஆயிரக்கணக்கான ஊழியர்களுக்கு உற்சாகம் ஏற்படும். அதற்கு ஓர் ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம் நாட்டில் பன்றி வளர்ப்பிற்கு அதிகமான ஊக்கம் அளிக்கப்படவேண்டும். மேல் நாடுகளில் அதற்கான முயற்சிகளைப் பெருமளவில் எடுத்து வருகிறார்கள். பன்றிகளை வளர்க்க சிறப்பான ஏற்பாடுகளை எல்லாம் அங்கு செய்து வருகிறார்கள். நம் நாட்டில்தான் மட்டன் பஞ்சம் உள்ளது. இதைப் போக்க பன்றி வளர்ப்பதில் நாம் அதிகப்படியான கவனம் செலுத்த வேண்டும். போன தடவை சட்டசபையில் மீன் வளம் பற்றி, அப்போது எதிர்க்கட்சித் தலைவராகயிருந்த மாண்புமிகு திரு. நெடுஞ்செழியன் அவர்கள் நிகழ்த்திய பேச்சைப் படித்துப் பார்த்தேன். இப்போது கொடுக்கப்பட்டுள்ள அறிக்கையையும் படித்துப் பார்த்தேன். அன்று சொன்ன பல விஷயங்களை வலியுறுத்தியாக வேண்டும். மீன் வளத்தை எடுத்துக் கொள்ளும்போது அதற்கு ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை ரொம்ப ரொம்பக் குறைவு.

உணவுப் பஞ்சம் இருக்கக்கூடிய இன்றைய தினத்தில் கிட்டத்தட்ட 620 மைல்கள் கடல் வளத்தைப் பெற்றிருக்கும் நாம் அதை முறையாகப் பயன்படுத்தி அதிகப்படியான மீன்களைப் பெருக்குவதற்கு வசதி செய்தால் உணவுப் பஞ்சத்தைப் போக்க முடியும். அதற்காக இன்னும் அதிகமான தொகை ஒதுக்க வேண்டும். அதில் அதிகக் கண்காணிப்புடன் இருக்க வேண்டியது அவசியம் என்று வற்புறுத்திச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நைலான் சப்சிடி கொடுக்கப்பட்டு வந்தது "நேஷனல் எமர்ஜென்ஸி" வந்ததால் கைவிடப்பட்டது. "நேஷனல் எமர்ஜென்ஸி" நீக்கப்பட்டு விட்டதால் நைலானுக்கு சப்ஸிடி கொடுக்கும் திட்டத்தை மீண்டும் அமலுக்குக் கொண்டு வந்து மீனவர்களுக்கு உதவி செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டியது அவசியம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வீடு கட்டும் திட்டம். இந்தத் திட்டம் தேசீய நெருக்கடியின் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டது. சுதந்திரம் பெற்று இருபது ஆண்டு காலமாகியும் மீனவர்களுக்கு இன்னும் சுதந்திரம் கிடைக்கவில்லை. அவர்களுக்கு வீட்டு வசதி கிடையாது. எனது தொகுதியில் அமைச்சரவர்கள் நேரடியாகப் பார்த்திருக்கிறார்கள். அங்கு கிட்டத்தட்ட 15,000 மக்களுக்கு ரோடு வசதியோ, போக்குவரத்து வசதியோ, படிப்பு வசதியோ கிடையாது. அவர்களுக்கும் ஆறு அறிவு இருக்கிறது என்பதைத் தவிர வேறு எந்த விதமான வசதியுமற்ற நிலையில் அவர்கள் இருக்கிறார்கள். அமைச்சரவர்கள் இதற்காக விசேஷத் திட்டத்தை நிறுவி அந்தப் பகுதியிலே உள்ள மக்களுக்கு நிரந்தரமாக வீடுகள் கட்டிக்கொடுக்க முன் வர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். ஏனென்றால், அங்கேயுள்ள மக்கள் நீண்ட நெடுங்காலமாகப் புறக்கணிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே, சமூகத்திற்கு முக்கியமாக இருக்கக்கூடிய மீனவர்களுக்கு நம் அரசாவது வீடுகள் கட்டிக்கொடுப்பதற்கு தீவிர நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அரசு மாறியிருக்கிறது, அமைச்சர்கள் மாறிவிட்டார்கள், ஆனால் அந்த இலாக்காவில் மாறுதல் இல்லை, சுறுசுறுப்பில்லை. ஒரு சின்ன விஷயம்.

31, பழனிச்சாமி என்ற ஒரு குழு போட்டிற்காக அப்பிளிகேஷன் போட்டும், எம். எல். ஏ. பார்த்தும், டைரக்டரைப் பார்த்தும் விஷயம் நடக்கவில்லை. உதாரணத்திற்காக இதைச் சொல்லுகிறேன். நம் அரசு வந்த பிறகாவது அந்த இலாக்காவைச் சுறுசுறுப்பாக ஆக்க வழிவகை செய்ய வேண்டும். நம் அரசாங்கம் இதில் நிச்சயமாகக் கவனம் செலுத்திக்கொண்டு வருகிறது என்பதில் ஆட்சேபணை இல்லை. ஆனாலும் இந்த இலாக்காவில் "டிஸ்ட்ரிபியூஷன்" சுறுசுறுப்பாக நடத்துவதற்கு இன்னும் அதிக முயற்சிகள் எடுத்துக்கொள்ளச் செய்யவேண்டும்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** மொத்தமாக போட்களை சேகரித்து வழங்கயிருக்கிறது. தனிப்பட்ட முறையில் வழங்கவில்லை என்ற குற்றச்சாட்டை இப்போது வலியுறுத்த வேண்டாம்.

**திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :** தலைவரவர்களே, தனிப்பட்ட முறையில் சொல்லவில்லை. உதாரணத்திற்காகச் சொன்னேன். போட் வழங்குவது சரியாக வழங்கப்படவில்லை என்று உதாரணத்திற்குக் கூறுகிறேன். என்னிடத்தில் பல மனுக்கள் இருக்கின்றன. வினியோகத்தில் அதிக அக்கறை செலுத்த வேண்டுமென்றுதான் கேட்டுக்கொள்ளுகின்றேன். சுமார் 580 போட்டுகள் கொடுக்கப்பட்டதிலே 70 போட்டுகள் கடலிலே அழிக்கப்பட்டுவிட்டன. 70 போட்டுகளுக்கு இன்ஷூயூர் செய்திருந்தார்கள். அந்த இன்ஷூரன்ஸ் கிளியர் ஆகவில்லை என்று சொல்வதால் மீனவர்கள் மிகுந்த கஷ்டங்களுக்காளாகிறார்கள். இந்த மாதிரி சங்கடங்களையெல்லாம் இந்த அரசு நிச்சயமாகக் கவனித்து அந்தக் குறைகளைப் போக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். கிராமங்களில் கோவாப்பரேட்டிவ்ஸ் மூலம் போட்களை வழங்கி கிராம மக்களுக்குப் பயன்படும்வகையில் திட்டத்தை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். மீன் வினியோகம் நமக்குப் போதவில்லை. நம்முடைய மாநிலத்திற்கு வேண்டிய மீன் தேவையைப் பூர்த்தி செய்து, அதை நல்ல முறையில் வினியோகிக்க நடவடிக்கை எடுத்துக்கொள்வது அவசியம் என்று கருதுகிறேன். அந்த விதத்திலே மீன் விஷயத்தை நாம் கவனிக்க வேண்டியது மிகவும் அவசியம்.

"டிரெய்னீஸ்" பற்றி ஒரு குறிப்பைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அவர்கள் விஷயத்திலும் இன்னும் அதிகக் கவனம் செலுத்த வேண்டும்.

நாகப்பட்டினம் பகுதியை ஒரு மீனளத் துறைமுகமாக ஆக்குவதற்கு நாம் எல்லா வேலைகளையும் துரிதமாகச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். காரணம் அங்கே சுமார் 15,000 மக்கள் வாழ்கிறார்கள். அவர்களுக்கு அதிக வசதியைச் செய்து தந்தால் மீன் அதிகமாகக் கிடைக்காத நெருக்கடியைப் போக்குவதற்கான நடைமுறையைச் செய்ய முடியும். எனவே அங்கு மீன்பிடி துறைமுகமாக மாற்றுவதற்குத் துரித நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அடுத்தபடியாக, முத்துக் குளித்தலைப்பற்றி அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதைப் பார்த்து நான் மிகுந்த பெருமைப்படுகிறேன். சங்க காலத்திலே வாணிகத்தைப்பற்றிப் பார்க்கும்பொழுது அருமையான முத்துக்கள் தென்பாண்டி நாட்டிலே இருந்ததைக் காண்கிறோம். உலகத்தில் கிடைக்காத முத்துக்கள் எல்லாம் அங்கே கிடைத்ததைப் பார்க்கிறோம். எனவே முத்து விஷயத்தில் அதிகமாகக் கவனம் செலுத்த வேண்டும். எகிப்து தேசத்து முத்துக்களை விட நம் நாட்டு முத்து நல்ல வெள்ளையாகவும், தரமாகவும் இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. அதில் இன்னும் அதிகமாகக் கவனம் செலுத்த வேண்டும். முத்துக் குளிப்பதற்கு அதிகமான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

காடுகளைப் பொறுத்தவரையிலே நிச்சயமாக இந்த அரசிலே நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. வருஷநாடு மலையில் 240 அடியில் சாகுபடி செய்ய நிலத்தைக் கொடுக்க வேண்டுமென்று அரசு



நடவடிக்கை எடுத்திருப்பதை மனமார வரவேற்கிறேன். அது பாராட்டத்தக்கது. இன்னும் கொஞ்சம் உயரத்திலே கிராமங்கள் இருக்கின்றன. அந்த முறையில் அங்குள்ள மக்களுக்கும் நிரந்தரமான ஏற்பாட்டைச் செய்ய ஒரு வசதியைச் செய்து தருமென்று நம்புகிறேன். அதைக் கவனிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கினறேன். அங்குள்ள தேயிலைத் தோட்ட முதலாளிகள் தேயிலைத் தோட்டங்களை விரிவுபடுத்திக்கொண்டு போகிறார்கள். தேயிலைத் தோட்ட முதலாளிகள் தோட்டங்களின் விஸ்தீரணங்களை விஸ்தரித்துக்கொண்டு போகிறார்கள். அங்குள்ள "டீ எஸ்டேட்டுகளைக்" கவனிக்க வேண்டும், கண்காணிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

சிப்பி ஒடிப்பவர்கள் மீது வழக்குகள் போடுகிறார்கள். அவர்கள் மீது பல வழக்குகள் போடப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. "லிபரல்" கண்ணோட்டம் இருந்தால் உதவியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காட்டு வளப் பாதுகாப்பைப் பொறுத்த வரையில் எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்த வேதாரண்யத்தில் ஒரு காடு உள்ளது. அதைப் பாதுகாப்பதில், அதிகக் கண்காணிப்பை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாகப் போட்டைப் பொறுத்த வரையில், "யார்ன்" மார்க் என்ஜின்கள்தான் வேண்டுமென்று சொல்கிறார்கள். மற்றவை நடுக் கடலிலே நின்றுவிடுகின்றன என்று கூறுகிறார்கள். இதே மாதிரியான என்ஜின்களை ஏற்படுத்த "யார்ன்" மார்க்குக்கு ஒதுக்கிக் கொடுத்தால் உபயோகமாக இருக்கும். இதைப் பற்றி வல்லுனர்களைக் கலந்து இதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் ஜில்லாவிலே ஸ்பெஷல் புராஜக்ட் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அங்குள்ள மீனவர்கள் சமீபத்தில் மழை, புயல் காரணமாக வீடுகளை இழந்திருக்கிறார்கள். அவர்களுக்கு எந்த விதமான நிவாரணமும் கொடுக்கப்படவில்லை. அங்குள்ள டெபுடி டைரக்டரைப் பார்த்து மீனவர்கள் எடுத்துரைத்தார்கள். எனவே அங்கு நிரந்தரமாக இருக்க ஒரு புரொவிஷன் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். "ஸ்பெஷல் புராஜக்ட்" படி அம்மாப்பட்டினத்தில் வீடுகள் கட்டக்கூடிய நிலையில் அங்குள்ளவர்களுக்கு குடிநீர் வசதி, சாலை வசதி முதலியவைகளைச் செய்து தர வேண்டுமென்ற உத்தரவாதத்திற்கான ஏற்பாடுகளையும் செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். அதுவும் குறிப்பாக எப்பொழுது புயலடித்தாலும் நாகப்பட்டினம் பகுதியில் உள்ள மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். அங்கிருப்பவர்களுக்கு ஒரு ஸ்பெஷல் புராஜக்ட் போட்டு எல்லோருக்கும் கொடுக்கக்கூடிய வகையில், 100, 50 என்றில்லாமல் எல்லோருக்கும் கொடுக்கக் கூடிய வகையில் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

சாமந்தன்பேட்டையிலே ரோடு வசதி, தண்ணீர் வசதி, போக்குவரத்து வசதிகள், சாமான்கள் வாங்கச் செல்ல முடியாமல் கஷ்டப்படும் நிலை அங்கேயிருக்கிறது. ஜில்லா டைரக்டரைச் சமீபத்தில் பார்த்து இதைப் பற்றி கேட்டேன். அங்குள்ளவர்கள் 20 வருஷ காலமாக இந்த நிலைமையிலேயே இருந்துகொண்டுதான் இருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த வசதியைச் செய்து தருவதற்கு ஒரு ஸ்பெஷல் புராஜக்ட் மூலம் ஏற்பாடு செய்து கொடுக்கவேண்டுமென்று மிகபபணிவன்போடு கேட்டுக்கொள்ளுகிறேன். அதேபோல் அங்கு குடி தண்ணீர் வசதி இல்லை. அதற்கு எந்த விதமான ஏற்பாடும் செய்யவில்லை. முனிசிபாலிடியிலே கேட்டால் நாங்கள் கொடுப்பதற்கில்லை என்று சொல்லுகிறார்கள்; பஞ்சாயத்து யூனியனிலே கேட்டால் பணமில்லை என்று சொல்லுகிறார்கள். அதனால் இங்குள்ள மக்கள் குடி தண்ணீர் கிடைக்காமல் கஷ்டப்படுகிறார்கள். குடி தண்ணீருக்கு ஐந்து மைல் தூரம் செல்ல வேண்டியிருக்கிறது. சாமந்தன்பேட்டையிலுள்ளவர்கள் நாகப்பட்டினத்திற்கு வந்து தண்ணீர் கொண்டுபோகக்கூடிய நிலை இருக்கிறது. இந்த நிலைமைகள் மாற வேண்டுமானால் உடனடியாக அவர்

களுக்குக் குடி தண்ணீர் வழங்குவதற்கான ஏற்பாட்டை நாம் செய்து வைத்தால் நிச்சயம் அவர்கள் நம்மைப் பாராட்டுவார்கள். அந்த ஏற்

ந. ப. 12-00 பாட்டை நாம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

நேரம் இல்லாத காரணத்தால், மீனளம், காடு, கால்நடை, விவசாயிகளுக்குப் பிரதானமான சமாச்சாரங்கள், விஷயங்கள் இவைகளைப் பற்றிப் பேச முடியாமல் இருக்கிற காரணத்தால் (குறுக்கீடு) நான் எழுதித் தருகிறேன். இருந்தாலும், அமைச்சர் அவர்கள் எதிர்க் கட்சியிலே இருந்த பொழுது கூறிய மாதிரி, அடுத்த பட்ஜெட்டிலே இதைப் பற்றி விவாதிக்க போதிய அவகாசம், சந்தர்ப்பம் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டு இப்பொழுது சொன்ன மாதிரியான ஏற்பாடுகள் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, சபாநாயகர் அவர்கள் மூலமாக சொல்ல விரும்புவது என்னவென்றால், 70 போட்டுகள் டெஸ்ட்ராய் ஆகியிருக்கின்றன, ஆனால், இன்ஷூரன்ஸ் இன்னும் கிளியராகவில்லை என்ற காரணத்தால், அதைக் கொஞ்சம் துரிதப்படுத்தி, அவர்களுக்குப் புதிய போட் கொடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கிராமப்புறங்களிலே தனிப்பட்ட நபர்களுக்கு போட் கொடுப்பதன் மூலமாக, அவர்களுக்குச் சௌகரியம் ஏற்படும் என்ற காரணத்தால், அதையும் கொஞ்சம் யோசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அந்த ஏற்பாட்டையும் செய்ய வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

இந்த எமர்ஜென்ஸி வந்ததற்குப் பிறகு, நைலான் வலைக்குக் கொடுக்கப்பட்ட சப்ஸிடி நிறுத்தப்பட்டது. அப்படி நிறுத்தப்பட்டதை மீண்டும் கொடுப்பதன் மூலமாக அவர்கள் பாராட்டுவார்கள் என்று அமைச்சர் அவர்களுக்கு சபாநாயகர் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே மாதிரி, இந்த வீடு கட்டும் திட்டம் எமர்ஜென்ஸி வந்ததற்குப் பிறகு மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. அதனால் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் மக்கள். ஆகவே, அதையும் மாற்றி அந்த திட்டத்தை நடைமுறைப் படுத்த உத்தரவைப் போட வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அதோடு கால்நடை இலாகாவில் உள்ள கண்டின்ஜன்சி மீனியல்ஸ் அந்த ஊழியர்கள் பல வருடங்கள் தொடர்ந்து வேலை செய்தும் நிரந்தரமாக்கப்படாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை உத்தரவாதம் தந்து, அவர்கள் வாழ்விலே ஒரு மறுமலர்ச்சி ஏற்பட வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு நேரம் இல்லாத காரணத்தாலே திருப்தி இல்லாமல் இந்த வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

***திரு. ஜெ. பெள்ளி கௌடர் :** வணக்கத்திற்குரிய தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள மானியக் கோரிக்கையை ஆதரித்து இரண்டொரு வார்த்தைகள் பேச விரும்புகிறேன். முதுமலைக் காட்டு யானையைக்கொண்டு அந்தப் பணியாளர்கள் நல்ல முறையில் வேலை வாங்குகிறார்கள். அவர்களுக்குக் கொடுக்கின்ற ஊதியத்தை மாற்றி நல்ல தொகையைப் போட்டுக் கொடுக்க வேண்டும். அவர்களுடைய குறைகளை உடனடியாகத் தீர்க்க வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த 6, 7 ஆண்டு காலமாக அங்கே வேலை செய்கின்ற அரசாங்க ஊழியர்கள், அதிகாரிகள் ஆகியோர்களெல்லாம் நிரந்தரமாக்கப்படாமல் வைக்கப்பட்டு இருப்பதால், ஊதியத்தைத் தவிர அவர்கள் மற்ற சலுகைகளை இழக்கின்றனர். அவர்களுக்குப் போதிய சலுகைகள் கொடுக்கின்ற வகையில் நிரந்தர ஊழியர்களாக அவர்கள் ஆக்கப்பட வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இலங்கையிலிருந்து வரும் தமிழ்ப் பெருங்குடி மக்களுக்கு நீலகிரி மாவட்டத்தில் வேலை வாய்ப்புக் கொடுப்பதை நான் வரவேற்கிறேன். அங்கே குடியேற்றப்படும் தமிழ்ப் பெருங்குடி மக்களுக்கு அவர்கள் பழக்கப்



பட்ட தொழிலை அளிக்கும் திட்டம் அமைத்து அவர்களுக்கு வாழ வழி அமைக்க அரசு முன் வந்திருப்பது பாராட்டுக்குரியது. அவர்கள் இங்கு வந்ததும், தொல்லைப்படாமல், சிரமமின்றி, நல்ல முறையில் அவர்கள் தங்குவதற்குத் தேவையான வீட்டு வசதியையும், மற்ற வசதிகளையும் செய்து தருவதற்கு அமைச்சர் அவர்கள் கூர்ந்து கவனிக்க வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் எப்பநாடு கிராமத்தைச் சேர்ந்த ஆனைக்கட்டி, கல்லம்பாளையம் போன்ற இடங்களில் விளைச்சல் தரும் நிலங்கள் நிறைய இருந்தும், அவை பயிர் செய்யப்படாமல் இருக்கின்றன. அங்கு நல்ல முறையிலே விவசாயம் செய்வதற்கு விவசாயப் பெருங்குடி மக்கள் முன் வந்திருக்கிறார்கள். அதைக் கால தாமதம் செய்யாமல் உடனடியாக அவர்களுக்கு விவசாயம் செய்வதற்கு வசதி செய்து கொடுப்பதற்கு அரசு முன்வர வேண்டுமென்று கரங்கூப்பி பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

இன்று பல ஊர்கள் இருக்கின்றன. ஊருக்கு அருகிலே நெருங்கி மரம் நடுவதைத் தயவு செய்து தடுக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட அளவு வைத்துத் தள்ளி நடுமாறு மக்கள் விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறார்கள். அதைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மரம் நடும் அளவை தள்ளிவைக்க ஒரு வரம்பை நிர்ணயிக்குமாறு பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

நீலகிரி மாவட்டத்தில் மரங்கள் விறகுக்கு மிகவும் அத்தியாவசியமாகப் பயன்படும் வகையில் அங்குள்ள மக்கள் தங்களுடைய சொந்தத் தோட்டங்களிலேயே, தேயிலைத் தோட்டங்களிலேயே நட்டுக்கொண்டு வருகிறார்கள். மரங்களை வெட்டி விறகுக்கு எடுத்துவருகின்றபொழுது பல தொல்லைகள் ஏற்படுகின்றன. ஆகவே, தாங்கள் போட்டு விளைவித்த மரத்தைத் தாங்கள் வெட்டி எடுத்து உபயோகம் செய்வதற்கு இடையிலே இருக்கிற குறைபாடுகளை நீக்கத்தக்க வகையில் அவர்கள் நல்ல முறையில் அதை உபயோகிக்கத் தக்க வகையிலே ஒரு குறிப்பிட்ட அளவு, கால் ஏக்கரோ, அல்லது அரை ஏக்கரோ என்று ஒரு வரம்பு நிர்ணயித்து, அதை அவர்கள் வெட்டி எடுத்துக்கொள்ளலாம் என்ற ஒரு அளவுக்கு அரசு வழிவகை செய்யுமானால் மாவட்ட மக்கள் என்றும் அரசுக்குக் கடமைப்பட்டவர்களாக இருப்பார்கள் என்று கூறி, இந்தக் குறைகளை எல்லாம் போக்கத் திறனோடு பணிபுரியும் நமது மாண்புமிகு அமைச்சரவர்கள் ஆவன செய்வார்கள் என்று நம்பி, வணக்கத்தைக் கூறி முடித்துக்கொள்கிறேன்.

**திரு. வ. ஜார்ஜ் :** அவைத்தலைவர் அவர்களே, மீன் ஒரு சுவையான உணவு மட்டும் அல்ல, மற்ற உணவுப் பொருட்களையும் சுவையாக உட்கொள்ளச் செய்யக்கூடிய ஒரு உணவுப் பொருள். மேலும் ஊட்டச் சத்து, நிறைந்துள்ள உணவு. இந்நிலையில் உணவுப் பற்றாக்குறைக்குப் பரிகாரமாக மீன் வளத்தைப் பெருக்குகிறோம் என்று, உணவு உற்பத்தித் துறையினரும் அரசியல்வாதிகளும் மற்றவர்களும் வழி கூறுவார்களானால்; அது நம் நாட்டினுடைய பொருளாதார நிலையையும், வாழ்க்கைத் தரத்தையும் மக்களுடைய உணவுப் பழக்க வழக்கங்களையும் நன்கு உணராமல், வெறும் புத்தக அறிவை வைத்துச் சொல்வதுதான் என்று நான் எடுத்துக் கூற விரும்புகிறேன். மீன், நான் முன்னால் குறிப்பிட்டதுபோல மற்ற உணவுப் பொருட்களையும் சுவையாக உட்கொள்ளச் செய்கின்ற ஒன்றாதலால் உணவுப் பற்றாக்குறையை நீக்குவதற்குப் பதிலாக, உண்மையிலேயே உணவைக் கூடுதலாக உட்கொள்ளச் செய்கின்றது என்று எடுத்துக் கூற விரும்புகிறேன். எனவே, உணவுப் பற்றாக்குறை கண்ணோட்டத்தை விட்டுவிட்டு, ஊட்டச் சத்து மிகுந்த பொருள் என்றும், உணவைச் சுவையாக உட்கொள்ளச் செய்கிறது என்ற முறையிலும் மீன் வள இலாகாவை நாம் இன்னும் போற்றிப் பேண வேண்டியது கடமை என்று நான் எடுத்துக் கூற ஆசைப்படுகிறேன்.

மேற்சொன்ன நிலையில், நாம் மீன் உற்பத்தியை பெருக்குவதற்குத் தேவை இருக்கிறது—உணவுப் பற்றாக்குறையினால் அல்ல ; உணவு ஊட்டச் சத்துக் குறைவினை நீக்கி சுவையாக மற்ற உணவுப் பொருள்களை உட்கொள் சய்வதற்காக என்று கூறிக்கொண்டு இந்த மீன்வளத் துறையை அரசு எவ்வாறு கவனிக்கிறது என்று கூற முற்படலாம் என்று ஒன்றேன்.

நமது மாநிலத்திற்கு 57 கோடி மீன் குஞ்சுகள் தேவைப்படும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், கடந்தகால அரசு 1966-67-ல் 4.96 கோடி மீன் குஞ்சுகளையும் செயற்கை முறையில் 4.24 கோடி அளவு மீன் குஞ்சுகளையும் வழங்கினார்கள் என்ற வகையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், அதே சமயத்தில் இந்த அரசு 1967-68-ஆம் ஆண்டிலும் 1968-69-ஆம் ஆண்டிலும், ஆக இரண்டு வருடங்களுக்கும் சேர்த்து 6 கோடி மீன் குஞ்சுகளையும் 8 கோடி செயற்கை மீன் குஞ்சுகளையும்தான் சேகரிக்கத் திட்டமிட்டிருக்கிறது. 1966-67-ஆம் ஆண்டினைவிட இது குறைவாக இருப்பதற்குக் காரணம் மீன் வளத்தைப் பெருக்க இந்த அரசு நல்ல முறையில் செயல்படவில்லை என்பதுதான் என்று நான் கூற ஆசைப்படுகிறேன்.

ஒரு அங்கத்தினர் மாஸ்டர் பிளான் ஒன்று அமைப்பதற்கு 10 கோடி ரூபாய் வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். இதைப் பற்றி அமைச்சரவர்கள் பதிலளிக்கையிலே குறிப்பிடுவார்கள் என்று நினைக்கிறேன். எங்களால் கடந்த வருடங்களில் ஐந்தாண்டுத் திட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகின்ற பொழுது, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திற்காக 10 கோடிக்கு மேலே ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்று கருதுகிறேன். எனவே, இந்த மாஸ்டர் பிளான் எந்த விதமாகவும் ஒரு நூதன கருத்தாக பயன்படத் தக்க கருத்தாக எனக்குப் புலப்படவில்லை.

மேலும் நேற்றையதினம் எங்களது கட்சித் தலைவர் அவர்கள் ஒன்று குறிப்பிட்டார்கள். புள்ளி விவர இலாகா கொடுக்கின்ற புள்ளி விவரங்களை நம்பி மோசம் போகாதீர்கள் என்று குறிப்பிட்டார்கள். அதையே நான் மீண்டும் இங்கு கூற வேண்டியது அவசியம் என்று கருதுகிறேன்.

இந்த அறிக்கையிலே முதலாவது பக்கத்திலே நமது நாட்டில் எட்டு இலட்சம் எக்கர் பரப்பளவு உள்நாட்டு நீர் நிலைகள் இருக்கின்றன என்றும், அதில் நாம் மீன் வளர்க்க வேண்டுமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அதே சமயத்தில், 4-வதுபக்கத்தில், நீர் வற்றாத நீர்நிலைகளின் மொத்த பரப்பளவு 1.5 இலட்சம் எக்கர் என்றும், குறிப்பிட்ட காலங்களில் மட்டும் நீருள்ள நிலைகளின் பரப்பளவு 3.9 இலட்சம் எக்கர் என்றும் கூறப்பட்டிருக்கிறது. ஆக, 5.4 இலட்சம் எக்கர் பரப்பளவுதான் வருகிறது ஆனால், இந்தக் கணக்கு எந்த முறையில் லட்சம் எக்கர் என்று வந்தது என்று எனக்கு தெரியவில்லை.

அடுத்து, கடந்த 3 வருஷ திட்டத்தின் மூலமாக, முன்னால் இருந்ததை விட, 4 மடங்காக மீன் உற்பத்தியைப் பெருக்கி இருக்கிறோம். ஆகவே, முன்னால் இருந்த காங்கிரஸ் இந்தத் துறையை கவனிக்கவில்லையென்று ஆளும் கட்சியினரும் அல்லது அவர்களோடு துணை கொண்டுள்ள எதிர் கட்சியினரும் குறை கூறினால் அந்தப் பெருக்கத்திற்கு என்ன விளக்கம் கூறுவார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. மீனவர்கள் கடல் பிரதேசத்தில் கொந்தளிப்பாக இருக்கும் இடங்களில் வசிக்கிறார்கள். அவர்களுக்கு நிலையான வீடுகள் கட்டிக்கொடுக்கப்படாத நிலைமை இருக்கிறது. அம்மாதிரி $3\frac{1}{2}$ லட்சம் மக்கள் இருக்கிறார்கள். அவ்வளவு பேர்களுக்கும் வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு ஒரு லட்சம் வீட்டு மனைகள் தேவையாக இருக்கும் என்ற முறையில் கணக்கிட்டுப் பார்த்தால், இப்பொழுது இந்த நிதி ஆண்டில் வெறும் 100 வீடுகள் கட்டிக் கொடுப்பதற்குதான் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது என்றால் இது இந்தப் பிரச்சினையை எந்த வேகத்திலே சமாளிக்கலாம் என்பது புரியவில்லை. ஜனத்தொகை பெருகிக்கொண்டிருக்கும் அளவிலே 100 வீடுகள் வருடம் ஒன்றுக்கு





கட்டிக்கொடுத்தால், மீனவர்கள் வீட்டுப் பிரச்சினை ஒரு நாளும் தீராது என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். எனவே, வீட்டு வசதிக்கு கூடுதலாக பணம் ஒதுக்கீடு செய்யப்படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதிலே 100 வீடுகள் என்று சொல்லியிருந்தாலும், டீடைல்டு பட்ஜட் மைனர் ஹெட்டில் எண் 20-ல் வீட்டு வசதிக்காக அலாட் செய்யப்பட்டிருக்கிற பணம் ரூ. 100. அது எந்த முறையில் என்பது புலப்படவில்லை. 100 வீடுகளுக்கு ரூ. 100 என்ற கணக்கிலா ? (ஓர் உறுப்பினர் : டோகன் கிராண்டு).

அடுத்தபடியாக, மீன் வளத்தைப் பெருக்குவதற்காக நாம் பல மீன்பிடித் துறைமுகங்களை அமைத்துக்கொண்டிருக்கிறோம். குளச்சல் நகரத்தில் ஒரு மீன்பிடித் துறைமுகம் கட்ட வேண்டுமென்று திட்டம் வகுத்து, அதற்கான ஹைட்ரோகிராபிக் சர்வேயெல்லாம் முடிந்து நான்காவது டிராப்ட் அறிக்கையிலே சேர்க்கப்பட்டிருந்தது. அது சம்பந்தமாக இதுவரையில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று வருத்தத்தோடு கூறிக்கொள்ளுகிறேன். இந்த அரசு அதற்கான நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், குளச்சல் நகரத்தில் ஒரு படகு கட்டும் தளம் ஏற்படுத்தப்படும் என்று நான்காவது ஐந்தாண்டுத திட்டக் குறிப்பில் கூறப்பட்டிருந்தது. ஆனால், அது சம்பந்தமாகவும் எந்தவிதமான நடவடிக்கையும் இதுகாறும் எடுக்கப்படவில்லை. இனிமேலாவது, இந்த அரசு இதைக் கவனித்து அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வேண்டிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தோணித் துறைமுகம் கட்டுவதற்காக எனது மாவட்டத்தில் லீபுரம், முட்டம் ஆகிய இடங்களில் ஹைட்ரோகிராபிக் சர்வே முடிந்துவிட்டது என்று நான்காவது டிராப்ட் பிளானில் கூறப்பட்டது. ஆயினும் அங்கு கூட ஏதாவது செய்ததாகத் தோன்றவில்லை. எனவே தயவு செய்து குளச்சல், லீபுரம், முட்டம் போன்ற இடங்களில் மீன் பிடித் துறைமுகம், தோணித் துறைமுகம் கட்டித்தர இந்த அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் குளச்சலில் படகு கட்டும் தளத்தைப் பற்றிக் குறிப்பிட்டேன். அங்கு நிறைய மீனவர்கள் வாழும் பகுதி. அங்கு படகு கட்டுவது மிகவும் தேவை. அங்குள்ள வன இலாகாவிலிருந்து அதற்கான மரங்கள் எளிதில் கிடைக்க வாய்ப்பு இருக்கிறது. அதை நாம் பயன்படுத்தி படகு கட்டும் துறையை உடனடியாக கட்டிக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு பிரச்சினை என்னவென்றால், குளிர்பதன, நிலையங்கள், மீன்பதனக்கூடங்கள் போக்குவரத்து வண்டிகள் இவைகளெல்லாம் உள்ளதால் எல்லா மீன்களும் வெளியே போய்விடுகின்றன. அதனால் மீன் பிடிக்கின்ற இடங்களில் மீன் கிடைப்பதில்லை. இதை இப்பொழுது வியாபார கண்ணோட்டத்தில் அணுகுகிறார்கள். மீன் பிடிக்கும் இடத்தில் உள்ளவர்களும் மீன் புசிப்பார்கள் என்பதை உணர்ந்து, ஒரு குறிப்பிட்ட அளவு மீன், அதாவது அந்த இடத்தில் உள்ளவர்களுக்குத் தேவையான மீன்கிடைப்பதற்கு வழிவகைகள் செய்யவேண்டும். குளிர்பதன நிலையங்கள், போக்குவரத்து வண்டிகள் ஆகியவைகளுக்கு மீன்கள் எடுத்துச்செல்லப் படும்பொழுது, ஒரு குறிப்பிட்ட அளவை அங்குள்ளவர்களுக்கு என்று ஒதுக்கிவிட்டு, மீதமுள்ளதைத்தான் எடுத்துச் செல்லும்படியான ஏற்பாட்டைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வனத்துறையைப் பற்றி ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். ஐந்தாண்டுத் திட்டக் குறிப்பில் வனத்துறை 17 சதமான இடம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், இப்பொழுது அவையின் முன்னாலே வைக்கப்பட்டிருக்கிற அறிக்கையில் 13 சதமானம் வனப் பிரதேசம் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. மீதி 4 சதமானத்தை இந்த அரசு கபளீகரம் செய்துவிட்டது என்று நான் சொல்லவரவில்லை. ஆனால், இந்தக் கணக்கில் ஏதோ தவறு இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நம்முடைய மாநிலத்தில் தேவையான அளவு வனப்பிரதேசம் இல்லை. இங்கே வெறும் முள்ளும்,

புதர்களும் நிறைந்த இடங்களை ரிசர்வ் பாரெஸ்டு என்று ஒதுக்கி வைத்திருப்பதில் வன இலாகாவுக்கு எந்தவிதமான லாபமும் இல்லை என்றுகூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். உண்மையிலேயே நல்ல வனமாக இருக்கின்ற இடங்களை வனத்துறை ரிசர்வ் பாரெஸ்டாகி எடுத்துக்கொண்டால் போதும் என்று எனக்குத் தோன்றுகிறது. மற்றப் பகுதிகளை எடுத்துக்கொண்டால், பாறைகள் நிறைந்த இடங்களாக இருப்பதால் பெரிய மரங்கள் வளரக்கூடிய நிலைமை இல்லை என்று தோன்றுகிறது. கன்னியாகுமாரி மாவட்டத்தில் நிறைய செழிப்பான அடர்ந்த வனப் பிரதேசங்கள் ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் இருக்கின்றன. அங்கு மேலும் ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் ரப்பர் தோட்டங்கள் செயல்பட்டுவருகின்றன. இந்த நிலையில் அங்கு ஒரு டிஸ்டிரிக்ட் பாரெஸ்டு ஆபீஸ் இல்லாமல் இருப்பது மிகவும் வருந்தத் தக்கது. அதற்காக அங்குள்ள மக்கள் திருநெல்வேலி மாவட்டத்திற்குச் சென்று அணுகவேண்டியிருக்கிறது. என்வே, உடனடியாக பிரச்சினைகளைப் பரிசீலித்து முடிவு செய்வதற்கு முடியாத நிலையில் இந்த இலாகா செயல்பட்டு வருகிறது அந்தப் பகுதியில். ஆகவே, உடனடியாக இந்தக் குறை நிவர்த்திக்கப்பட வேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அங்கு இருக்கிற அடர்ந்த காட்டுப் பகுதிகளுக்கு ஏற்றாற் போல், ரப்பர் தோட்டங்களின் தேவைக்கு ஏற்றபடி அங்கே நிச்சயம் ஒரு டிஸ்டிரிக்ட் பாரெஸ்டு ஆபீஸ் தேவை என்பதை நான் வலியுறுத்திக் கூறவேண்டிய தேவையில்லை. அமைச்சர் அவர்கள் இதை நன்கு உணர்ந்து, ஆவன செய்வார்கள் என்று நம்புகிறேன்.

மேலும், இந்த அறிக்கையிலே குறிப்பிட்டிருப்பதுபோல, வனத்துறை மழை பெய்வதற்கு நல்ல காரணமாக இருக்கிறது. ஆனால், இப்பொழுது குமரி மாவட்டத்தில் இருக்கிற நிலையை எடுத்துக்கொண்டால், முன்னால் இருந்த அடர்ந்த காடுகளில் இருந்த நீரூற்றுகளினால், மேகங்கள் முட்டும்பொழுது, தடுக்கப்பட்டு குளிர்ச்சிபெற்று மழை பொழிவதற்கு வழியாக இருந்தது. அந்த நீருற்றுள்ள வனப்பிரதேசங்கள் ரப்பர் தோட்டங்களாக மாற்றப்பட்டதன் காரணமாகவும், கோதையார் ஹைட்ரோ எலக்டிரிக் ஸ்கீமின் கீழ் ஆயிரக் கணக்கான ஏக்கர் வனப் பிரதேசங்கள் காலி செய்யப்பட்டதாலும், அந்த மாவட்டத்தில் இப்பொழுது மழை இல்லாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்று பொது மக்கள் கூறிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அடர்ந்த காடுகளை ரப்பர் தோட்டங்களாக மாற்றும்பொழுது அதிகமாக கவனித்து செயல்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏனெனில், ரப்பர் தோட்டங்கள், தேயிலை தோட்டங்கள் ஆகும்பொழுது இயற்கையிலே இருக்கிற நீரூற்றுகள் வறண்ட தோட்டங்களாக மாறிவிடுகிறது. இந்த நிலையில் மேகங்கள் தடுக்கப்பட்டு குளிர்விக்கப்பட்டு மழை பெய்ய இயலாத ஒரு நிலைமை ஏற்பட்டுவிடுகிறது. ஆகவே, இந்தத் திட்டத்தை வாணிலை இலாகாவினரோடு தொடர்பு கொண்டு சிந்தித்து கவனமாக செயல்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் எனது சிற்றுரையை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகுபேரவைத் தலைவர் :** திரு. எம். சுரேந்திரன் அவர்களுக்கு ஐந்து நிமிடம் கொடுக்கப்படுகிறது. அதற்குள்ளாக முடித்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

***திரு. எம். சுரேந்திரன் :** மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இந்த மூன்று இலாகாக்களின் மானியங்களின் மீது விவாதிக்க ஒதுக்கப்பட்டிருக்கிற நேரம் மிகவும் குறைவு என்று முதலில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஒரு கட்சி சார்பில் பேசுகிறவர்களுக்கு இன்னும் சிறிது அதிக நேரம் வழங்குவதற்கு அடுத்தாற்போலாவது ஏற்பாடு செய்யவேண்டும் என்று பணிவோடு சபாநாயகர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். இப்பொழுது இந்த மூன்று மானியங்களில் நான் வெட்டுத் தீர்மானம் அளித்திருக்கிற காட்டு இலாகா மானியத்தைப்பற்றி மட்டும் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இன்றைக்கு இருக்கிற 50,331 சதுரமைல்களில், 8,129 சதுரமைல் காட்டு இலாகாவின் கணக்கில் இருக்கிறது. காட்டு இலாகாவின் கணக்கில் இந்த விஸ்தீரணம் இருக்கிறதே தவிர, இது முழுவதும் காடாக, வனமாக



இல்லை என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அம்மாதிரி நிலப்பரப்புக்கள் இருக்கிற பல பகுதிகளிலே விவசாயிகளால் விவசாயம் செய்யப்படுகிற பகுதிகள் இருக்கின்றன. விவசாயம் செய்யாமல் காலியாக சும்மா கிடக்கிற பகுதிகள் இருக்கின்றன. இம்மாதிரி இருக்கிற பகுதிகள் வனவாசி, பக்கநாடு பாரெஸ்டு பகுதியிலே விவசாயம் செய்துவருகிற பகுதி 1,500 ஏக்கரா இருக்கிறது. அந்தப் பகுதியில் கடந்த யுத்த காலத்தில் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்காக, அந்தத் திட்டத்தின் கீழ் அந்தப் பகுதி விவசாயிகள் விவசாயம் செய்ய அனுமதிக்கப் பட்டிருந்தார்கள். காங்கிரஸ் அரசாங்கம் வந்ததற்குப் பின்னால் 1953-ம் ஆண்டில் இந்த நிலங்களில் அவர்கள் குமரி லிஸ்டத்தில்தான் விவசாயம் செய்யவேண்டும் என்று அவர்களுக்கு அறிவிக்கப்பட்டது.

அம்மாதிரி அவர்கள் விவசாயம் செய்யாமல் இருக்கிறார்கள் என்கிற காரணத்தால், 1954-ல் அவர்கள் நிலத்திலிருந்து வெளியேற வேண்டும் என்று நோட்டீஸ் கொடுக்கப்பட்டது. அப்படி அளிக்கப்பட்ட நோட்டீஸ் நியாயம் இல்லை. அவர்கள் பல நாட்களாக விவசாயம் செய்கிறார்கள். அவர்களை வெளியேற்றக்கூடாது என்பதற்காக அந்த விவசாயிகள் அனைவரும் சேர்ந்து வனவாசி பக்கநாடு விவசாயிகள் சங்கம் என்று ஒரு சங்கத்தை 1954-ல் அமைத்துக்கொண்டார்கள். அந்தச் சங்கம் அவர்களுக்காக பல்வேறு விதமான கிளர்ச்சிகள் செய்து, ஓராயிரம் ஆண்களும், பெண்களும், சேலம் வரை நடந்து சென்று முதல் அமைச்சர் திரு. காமராஜரையும், அப்பொழுது காட்டிலாகா அமைச்சராக இருந்த திரு. பக்தவத்சலத்தையும், சந்தித்து முறையிட்டார்கள். அதன் பிறகு பிரஜஷா சோலிஸ்ட் கட்சி தலையிட்டு, அதன் மத்திய கட்சிக்கு அந்தக் தகவலை தந்தது. அவர்கள் பேராசிரியர் தந்துவாதே என்பவரை அனுப்பி, அவர் நிலைமைகளைப் பரிசிலித்து ஒரு ரிபோர்ட்டு கொடுத்தார். அதன் பிறகு தலைவர் திரு. கிருபாளனி, திரு. காமராஜரைச் சந்தித்து அந்த நிலங்கள் பூராவையும் அவர்களுக்கே வழங்குவது என்று 1958-ல் காட்டிலாகா அமைச்சர் திரு. பக்தவத்சலத்தின் ஆட்சியில், அரசாங்கதிற்கும் அந்த சங்கத்திற்கும் ஒப்பந்தம் ஒன்று ஏற்பட்டது. அந்த ஒப்பந்தப்படி அந்த நிலங்கள் சர்வே செய்யப் பட்டு, எல்லைகளை வகுத்து, பக்கத்தில் இருக்கும் நிலங்களுக்கு வாங்கும் குறைந்த வரியை குத்தகையாக வைத்துக் கொள்வது என்கிற முடிவுக்கு வந்தார்கள். அந்த முடிவுக்குப் பிறகு, அவர்கள் 1958-ல் செய்யப் பட்ட ஒபபந்தப்படி 1963-ல் 5 வருட குத்தகையை முழுவதும் அளிக்க வேண்டுமென கட்டளை பிறந்தது. சர்வே செய்து, கல் போட்ட நாளிலிருந்து, அல்லது 20 வருஷத் தவணை குத்தகைப் பாக்கியை சர்க்கார் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சங்கம் கொடுத்த கோரிக்கைக்கு பதில் இல்லாமல் இருக்கும்போது, 1966-ம் வருஷத்தில் குத்தகைப்பணம் 5,000 ரூபாயையும், விவசாயிகளிடமிருந்து சங்கம் வாங்கிக் கட்டியது, இப்படிக் கட்டப்பட்டிருந்தும், சர்க்காருக்கும் விவசாயிகளுக்கும் ஒப்பந்தம் இருந்தும், காங்கிரஸ் அரசு 1966-ம் வருஷம் ஜூன் மாதம் 30- ம்தேதியில் அந்த விவசாயிகளை பலரையும் இரவுக்கு இரவே போலீசாரை வைத்து சிலரை வெளியேற்றினார்கள். அவர்கள் செய்த அரசியல் விரோதத்தினாலேயே அல்லாது, நியாயமான காரியம் அல்ல. அப்படி வெளியேற்றினவர்கள் லாரிகளில் ஏற்றிக் கொண்டு போய் தூரமான பகுதியில் விட்டு விட்டார்கள். அவர்கள் சங்கத் தலைவர் நீதி மன்றத்தை அணுகி அங்கே ஒரு ரிட் பெடிஷனைப் போட்டார்கள். அதன் பேரில் ஒரு தடை உத்தரவையும் பெற்றுக் கொண்டார்கள். அந்தச் சங்கத்தின் தலைவர் திரு வடிவேல் அவர்களுடைய முயற்சியால் பெற்றுக் கொண்ட அந்தத் தடை உத்தரவிற்குப் பிறகு, காட்டிலாகா அதிகாரிகளும், போலீசாரும் அதையும் மீறி காரியங்களைச் செய்தார்கள். மீண்டும் அந்தச் சங்கத்தின் தலைவர் கோர்ட்டை அவமதித்ததாக வழக்கு போடப்பட்டது காங்கிரஸ் சர்க்கார். அதன்பிறகு நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக அரசு ஏற்பட்டது. அப்படிஏற்பட்ட உடனே, இது சம்பந்தமாக 1967-ம் வருஷம் மார்ச்சு மாதம் 21-ம் தேதியில் மாண்பு மிகு அண்ணா அவர்களைச் சந்தித்து, நிலைமைகளைச் சொல்லி, அனைத்தையும் பற்றி குறிப்பிடப்பட்டது.

உடனேயே அவர்கள் இந்த விஷயத்தை கவனத்தில் எடுத்துக் கொண்டு, அனுதாபத்துடன், மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சரையும் அழைத்து நிலைமைகளை அவர்களுக்கும் விளக்கி, அங்கே ஒரு மாநாடு கூட்டி, அந்த, மாநாட்டுக்குச் சென்று அங்கே தீர்மானம் நிறைவேற்றி பிரச்சினைகளைப் பற்றி ஆராயச் சொன்னார்கள். அதே முறையில் 1967-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 4-ம் தேதியில் அந்தப் பகுதியிலே விவசாயிகள் மாநாடு ஒன்று கூட்டி, தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அந்தத் தீர்மானத்தின்படி, 1967-ம் வருஷம் மே மாதம் 4-ம் தேதியில் அங்கே விஜயம் செய்த முதல் அமைச்சரையும் சந்தித்து, அப்பொழுது அவர்கள் பூளாம்பட்டி, மேட்டூர் கூட்டத்தில் விவசாயிகளுக்கு நிலங்களை வழங்குவதாக பகிரங்கமாகக் கூறியிருக்கிறார்கள். ஆகவே, அந்த விவசாயிகளுடைய சரித்திரம் ஒரு நீண்ட சரித்திரம். அது மட்டுமல்ல. அந்த விவசாயிகள் இந்தக் காலத்திற்குள் 150 வீடுகளைக் கட்டியிருக்கிறார்கள். 90 கிணறுகளையும் வெட்டியிருக்கிறார்கள். அந்த நிலங்களைச் செப்பனிட்டு ஒழுங்கு செய்ய செலவிட்டிருக்கும் பணம் கிட்டத்தட்ட மூன்று லட்சம் வரையில் இருக்கும். ஆகவே, அந்த நிலங்களை அந்த விவசாயிகளுக்கு பட்டா செய்து கொடுக்க வேண்டுமே தவிர, அது பற்றி ஆராயப்படும் என்று அமைச்சருடைய ஆய்வுரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. குறிப்பிலே பவானிசாகரிலே நிலத்தை வழங்க ஒரு கமிட்டியை அமைத்து குத்தகைக்கு கொடுப்பது பற்றி ஆராயப்படும் என்று எழுதப்பட்டிருக்கிறது. அது மற்ற இடங்களுக்கு பொருத்தமாக இருக்கலாம். இந்த மாதிரி முறையில் எங்கள் பகுதியைப் பொறுத்த வரை ஒரு தீர்மானத்திற்கு வரக் கூடாது, என்று அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால், 1940-லிருந்து இருந்துவரும் பிரச்சினை அங்கே கிணறுகள், வீடுகள் இவைகளையெல்லாம் அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். மற்ற இடங்கள் போன்றபுதுப்பகுதியல்ல. சமீபத்திலே அமைச்சர் சபையிலே குறிப்பிட்டார்கள். மதுரையில் 40,000 ஏக்கர், கோவையில் 6,000 ஏக்கர், சேலத்தில் 4,000 ஏக்கர் காட்டிலாகா நிலத்திலிருந்து விவசாயத்திற்கு அளிக்கப்படும் என்று. ஆனால், இந்த ஆய்வுரையில் இது சம்பந்தமான குறிப்பு இல்லை. இந்த விவசாயிகளுக்கு பட்டா செய்து கொடுக்க பல காரணங்கள் இருக்கின்றன. ஏற்கனவே இந்தப் பகுதி சர்வே செய்து, எல்லைக்கல்கள் போட்டு, ஒரு வருஷக் குத்தகையும் கட்டியிருக்கிறார்கள். 1958-லேயே சர்க்காருக்கும், அந்த விவசாயிகளுக்கும் ஒப்பந்தம் வேறு இருக்கிறது. ஆகவே பல அம்சங்களில் அவர்களுக்கு நிலம் அளிக்க, பட்டா அளிக்க எல்லா விதமான நியாயங்களும் இருக்கின்றன. மற்ற இடங்களில் போல இல்லை. ஆகவே, இங்கே பட்டா கொடுக்க வேண்டிய அவசியம் இருக்கிறது என்பதை அமைச்சருக்கு தெரிவிக்க விரும்புகிறேன்.

கால்நடையைப் பற்றிப் பார்க்கும் போது, பல இடங்களில், அவை நல்ல முறையில் பராமரிக்கப்படுவதில்லை. அதற்குக் காரணம், அவற்றிற்குத் தேவையான, பிண்ணாக்கும், தவிடும், இன்னும் மற்ற உணவுப் பொருள்களும் சரியான வகையில் கிடைப்பதில்லை. விலையும் அதிகமாக இருக்கிறது. இதையெல்லாம் கவனிக்க வேண்டும். வெளிநாடுகளுக்குப் போய்விடுவதால் தான் கிராக்கியாக இருக்கின்றது.

அடுத்து, மீனவர்களுக்கு செவ்வனே காரியங்கள் செய்யப்படுகின்றன. என்னுடைய பகுதியில் மேட்டூர் அணையிலிருந்து மீன் பிடிக்கிறார்கள். அப்படிப் பிடிப்பவை எல்லாம் வெளியிலே போய்விடுகின்றன. ஆனால் பக்கத்தில் இருக்கும் மக்களுக்கு குறைந்த விலைக்கு, சாப்பிடக் கிடைக்கவில்லை. பிடிக்கும் மீன்களை அத்தனையையும் வெளி இடங்களுக்கு அனுப்பி விடுகிறார்கள். அதே நேரத்தில் அந்தப் பகுதி மக்களுக்கு, எளியவர்களுக்கு குறைந்த விலையில் மீன் கிடைக்கக் கூடிய ஏற்பாடுகளையும் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பிடிக்கும் மீன்களை வெளி



யிடங்களுக்கு அனுப்புபவர்கள் பலர் லாபத்திற்கு அனுப்பி லாபம் சம்பாதிக்கிறார்கள். அதனால் கிடைக்கும் லாபமோ பலனோ மீனவர்களுக்கு சரியான முறையில் பயன் படுவதில்லை. இந்தக் குறை எல்லா இடங்களிலும் இருக்கிறது. விற்பனையால் ஏற்படும் பலன் மீனவர்களுக்குக் கிடைக்கச் செய்தால் நலமாக இருக்கும். அந்த வகையில் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடிக்கிறேன்.

***திரு. ஜி. நடராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை அமைச்சரவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கும் மூன்று மானியக் கோரிக்கைகளையும் ஆதரித்து, நேரம் ஐந்து நிமிஷமே இருப்பதால், என்னுடைய கருத்துக்களைச் சுருக்கமாகச் சொல்ல விரும்புகிறேன். மீன் உற்பத்தியை முன்னிட்டு நம்முடைய அரசு அதிகமான தொகையை ஒதுக்கியிருப்பதை வரவேற்று, அதே நேரத்தில் மீன் உற்பத்தி பற்றி சில கருத்துக்களையும் குறிப்பிட விரும்புகிறேன். சிறு குளங்கள், ஏரிகள் என்று சொல்லக் கூடியவற்றை தனி நபர்களுக்கு பட்டா வழங்குவதை விட்டு, பஞ்சாயத்து ஒன்றிப்புகளுக்கு வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

கால்நடை பற்றியும் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். விவசாயத்திற்குக் கால்நடைகள் மிக மிக அவசியமானவை என்பது உண்மை. அதற்காக ரூ. 3,66,68,000 நிதி ஒதுக்கியிருப்பதை வரவேற்கிறேன். இன்றுள்ள நிலையில் கால்நடைகள் மிகவும் ஈனமடைந்திருப்பதையும் நாம் காண்கிறோம். குறிப்பாக, வடாற்காடு மாவட்டத்தில் கால்நடைகள் வளர்ச்சியடையவில்லை என்ற நிலையைக் கருதி, கால்நடைகளுக்கு அதிக ஊக்கம் அளிக்கும் பிற்பகல் வகையில் அங்குள்ள காடுகளில் புல் உற்பத்தி செய்து, இயற்கையான 12·39 உணவுச் சத்துக்கள் கால்நடைகளுக்குக் கிடைக்கும் ஏற்பாட்டை செய்ய வேண்டும். அங்குள்ள காடுகளில் ஒரு பகுதியை கால்நடைகளின் தீவனத்திற்கென்று ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

விவசாயிகள் கால்நடைகள் வாங்கிக்கொள்வதற்கு வேண்டிய கடனுதவிகளை அதிகமாகக் கொடுக்க வேண்டும். கால்நடை மருத்துவ மனைகளை ஊராட்சி ஒன்றிப்பின் சார்பில் ஆங்காங்கு ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆனால், அந்த மருத்துவ மனைகளில் போதுமான மருத்துவ அதிகாரிகள் இல்லாத நிலை இருக்கிறது. கால்நடைகளுக்கு வியாதி வரும்போது, அவற்றை மருத்துவ மனைக்குக் கொண்டு வந்து சிகிச்சை பெற வேண்டிய நிலையில், அங்கு அதிக நேரம் காத்திருக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. காரணம், போதிய மருத்துவ அதிகாரிகள் இல்லாததுதான். ஆகவே, கால்நடை மருத்துவ மனைகளில் அதிகமான எண்ணிக்கையில் மருத்துவ அதிகாரிகளை நியமித்து, கால்நடைகளுக்கு உடனுக்குடன் மருத்துவ வசதி கிடைக்கச் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

வடாற்காடு மாவட்டத்தில் உள்ள காடுகளில் நீலகிரித் தைலம் உற்பத்தி ஆகக்கூடிய செடிகளை உற்பத்தி செய்ய அரசாங்கம் நிதி ஒதுக்கியிருக்கிறது. அதற்குப் பதிலாக, அங்கு தேயிலை தோட்டங்களையும் வைத்து உற்பத்தி செய்தால், அடுத்த ஆண்டில்

இலங்கையிலிருந்து வரக்கூடிய தமிழர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தக் கூடிய நிலைமை ஏற்படும். அதையும் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

சிறு காடுகள், தோப்புகள், என்று சொல்லக்கூடிய தோப்புகளை ஊராட்சி ஒன்றியப்புகளிடம் ஒப்படைத்தால், அந்தத் தோப்புகளில் நல்ல தழை தரும் மரங்களை உற்பத்தி செய்ய முடியும். அத்துடன், புளிப் பஞ்சம் ஏற்பட்டிருக்கும் நிலையில், புளியஞ் செடிகளையும் உற்பத்தி செய்ய வாய்ப்பு இருக்கும். ஆகவே, காடு சம்பந்தப் பட்ட தோப்புகளை பஞ்சாயத்து யூனியனிடம் ஒப்படைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, பேச வாய்ப்பு அளித்த தலைவருக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். வணக்கம்.

MR. SPEAKER : Dr. Hande will wind up for his party in about ten minutes.

*DR. H. V. HANDE : I am grateful to the Speaker for this opportunity to speak on these four Demands. On behalf of the Party we have given a cut motion for each Demand. The total of these Demands comes to roughly Rs. 8 crores. To-day we are debating a subject which is going to tax us to the tune of nearly Rs. 8 crores.

At the very outset, I cannot resist the temptation to pay my compliment to the Minister for Agriculture for the excellent reply he gave last time. I noted with what maticulous care he listened to the speeches of the members and gave his reply. I would request the other Ministers to follow suit. We members get the satisfaction that all the points have been noted and that action will be taken on them.

Fisheries is very important as far as our State is concerned. We have a coastline of nearly one thousand kilometers or six hundred odd miles. Having such a vast coastline I am afraid the performance of the Fisheries Department is not very satisfactory. It could have done better. For instance, I wish to point out that we were able to catch 2·51 lakh tonnes of fish in 1965-66 and 2·79 lakh tonnes in 1966-67. In one year we have raised the catch by 10 to 12 per cent. We can do much better with the amount that we are spending.

Now I come to the budget allotment for fisheries. According to page 74 of the Budget Memorandum, the Revised Estimate for 1967-68 for Fisheries Development Schemes is Rs. 58·93 lakhs where as the Budget Estimate for 1968-69 is Rs. 42·98 lakhs. Normally we find that the provision is increasing. As far as in Fisheries Development Schemes are concerned, there is not only no increase, but there is a decrease to the tune of Rs. 16 lakhs. The other expenditure has increased from Rs. 43·13 lakhs to Rs. 45·27 lakhs. That may be due to the fact that we have given a higher dearness allowance. The point is that for development schemes we have not only not increased, but decreased the allotment. I wish the Minister for Agriculture takes note of this fact.

Another point I would like to stress is the pathetic conditions in which our fishermen are living to-day. They are not able to





get enough catch and sell what they catch at a competitive rate. We should try to increase their catch. We should see that fishermen are able to sell fish directly to the consumers as far as possible and that middlemen are avoided. For instance, we can have vans for the speedy transport of fish to the consumers instead of having a dozen middlemen.

The living condition of fishermen is a very important aspect on which I would like to lay particular stress. In very interesting survey that was made recently by a very good friend of mine, I found some appalling points which I would like to place before the Minister.

' A study of their housing conditions tells a very sorry tale. More than 90 per cent of the houses are flimsy and cheap construction to serve the purpose of providing just shelter. 94 per cent have only thatched roof, 75 per cent have mud walls and 74 per cent mud floor. 55 per cent of the houses have only one room. Household utensils are mostly mud pots, aluminium plates and glass tumblers. Almost all families depend on the meagre facilities provided by the Corporation. Taking the kuppams in the City as a whole—I am speaking of the standard of living with regard to the City, I am sure the conditions will be much worse in other places-there is only one tap for 94 families, one lavatory for 171 families and one bath room for 67 families.'

Undernourishing food and this appalling condition are their lot, in spite of the fact that they provide the people with protein-rich fish. Their longevity is least, because they spend a lot of energy. How best can we cope up with this problem ? We can cope up with this problem by seeing that their economic condition is improved, that they catch more fish and that the fish is transported to the consumer point without middlemen.

There was a Russian Team which came and made some remarks. I do not remember what the remarks are. There was a Reserve Bank Team which made some investigation. I would like the Hon. Minister in his reply to tell us what the observations of the Russian Team are and what the outcome of the investigtion by the Reserve Bank Team is.

I would stress that we should try to encourage private traders as far as possible. This is not my usual slogan. I am only pleading on behalf of the poor people. I would plead that they should be given incentives.

With regard to cyclone protection, we should have places where we can give protection to fishermen whenever there is a cyclone. The persons first affected by a cyclone are the fishermen who are almost on the coast. Cyclone protection is very important and I am sure my distinguished Friend opposite (Thiru M. Vedachalam) will agree with me.

With regard to the Forest Department, I have to say, first of are all, that I am happy about Cinchona. It has given us better dividends. . . .

THE HON. THIRU A. GOVINDASAMY : We are not discussing about Cinchona now.

Dr. H. V. HANDE : Now, coming to Forests, I must say that the forest area must be increased and there should be increased afforestation. Even in the olden days importance was given to the preservation of forests. As far as the Forest Department is concerned, I think that they can do much better but unfortunately it is not so now. In this connection, I wish to point out certain facts to the Hon Minister. On page 86 of the Budget Memorandum it is stated that under Demand 35.—Forest Department—Establishments the Revised budget Estimate for 1967–68 is Rs. 70·45 lakhs. The Revised Estimate has gone up to Rs. 86 58 lakhs. In 1968–69. it has gone up to Rs. 98 17 lakhs. There has been a steady upward curve during these three years. In the Explanation it is stated that the increase is also due to the establishment of a Tea Plantation for the rehabilitation of repartriates from Ceylon. I cannot agree with this part of the explanation for the reason that under Damand 44—Capital Outlay and Forests—Organisation, Improvement and Extension of Forests, the Budget Estimate (Revised) for 1967–68 is Rs. 20·75 lakhs while the Revised Estimate for 1967–68 is only Rs. 17·39 lakhs, that is nearly Rs. 3¼ lakhs less than the original Estimate. Also, under ' Development Schemes—Schemes in the Five-Year Plan ', the Budget Estimate (Revised) for 1967–68 is Rs. 52·72 lakhs and the Revised Estimate is only Rs. 43·81 lakhs. The Budget Estimate for 1968–69 is further reduced to Rs. 38·43 lakhs. Therefore, the explanation that the increase is due to the establishment of a Tea Plantation under Demand 35—Forest Department is not very convincing. On the other hand, there has been increase in the Establishment charges. On the development side, there is decrease in expenditure. This should not be the case. There should be more amount allotted for development schemes. I request the Hon. Minister to collect the relevant facts and figures and see that more funds are allotted for the development schemes. Now, so far as the forest resources are concerned, our State is the most backward State in the entire country. So far as Mysore and Andhra States are concerned, they have got a lot of forests. We must also develop our forests. If there are no forests and consequently no rain, it will be a terrible phenomenon and I would request the Hon. Minister to look into the matter.

Now, I want to say a few words about Animal Husbandry. Now we are having small poultry farms which are not functioning properly, as is evident from the answers given by the Hon. Minister during question hour. I would like the Hon. Minister to plug the loopholes which came in the way of the proper working of the Farms.

Now I come to another point. The Government instead of directly entering the production field, can take keener interest in improving the livestock. I would request the Hon. Minister to address himself to the desirability of increasing the livestock potential in our State.



With regard to Hosur Farm, the hon. Member, Thiru Venktaswamy knows it very well. He has supplied me some points. One is the Calf Subsidy Scheme. Although our cattle population is very large, yet vast majority of these cattles and Buffaloes are nondescript type and of poor productivity. The need for improving the quality of cattle and raising their productivity has been recognised since long and organised attempts to develop cattle on an effective scale was initiated with the introduction of the Key Village Scheme. The Key Village Blocks helped in creating pockets of good quality cattle in various parts of the State where the superior progeny are giving much more milk than their dams. These good graded progenies which are developed in Hosur taluk are sold at higher rates to the milkmen at Bangalore. In order to stop this drain of good graded cross-bred heifers, the calf subsidy scheme should be introduced. If the public are given the incentive to rear the cross-bred heifer calves up to the age of maturity there will be much increase in the production of milk and milk products.

The second point is with regard to the Calf Rearing Centre at Ratnagiri near Hosur. Graded heifer calves and good heifer calves can be purchased from the public through a committee and can be reared at the calf-rearing station in Hosur taluk. These calves when they are attaining maturity can be inseminated with the semen from pure-bred Jersey and Fersian buiported bulls of high milk yield. Thus in the first generation there will be much improvement in the milk yield. Recently when I went by car I saw a number of Ongole bulls. The quality of the bulls in Nellore and Guntur is good. We must also improve the quality of the bulls in our State.

Finally, I come to fodder. The weakest link in the chain of Livestock development in the State has been the lack of availability of adequate amount of fodder crops for cattle. The gain obtained by genetic imporvement cannot be expressed by the animal unless adequate nutrition is provided. It has been estimated that proviosin of adquate food to cattle alone can raise milk production by about 50 per cent.

In order to improve the fodder, 10-acre pasture demonstration plots should be raised in each panchayat area by giving the cultivation cost in the first year and then followed by the yearly subsidy of Rs. 20 per acre for maintenance. Even the interested ryots should be given the cultivation cost for the cultivation of fodder crops such as lucerne, etc., and further every year Rs. 50 per acre subsidy should be given for maintenance. Sir, I request the Hon. Minister for Agriculture to consider all the points I have made. If my suggestions are accepted, it will facilitate improvement in the cattle wealth, health of the cattle and the increased milk production. Also, I am quite sure that we will have excellent and enough fish and also excellent forests and good milk.

*திரு. எஸ். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியத்தின் மீது என்னுடைய கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன். நம்முடைய நாடு ஆயிரம் கிலோ மீட்டர்

தூரம் கடற்கரையை உடையதாகவும், 8 லட்சம் ஏக்கர் பரப்பளவு உள்ள நீர் நிலைகளைக் கொண்டதாகவும், 3½ லட்சம் பேர் மீனவர்களைக் கொண்டதாகவும் இருந்த போதிலும், இன்னும் மீனவர்களுடைய வாழ்க்கைத்தரம் உயரவில்லையென்பதைப் பற்றி நண்பர்கள் எல்லாம் சொன்னார்கள். மாண்புமிகு எதிர்க் கட்சி உறுப்பினர் திரு. க. இராமமூர்த்தி அவர்கள், " நாங்கள் நிறைய சாதித்து விட்டோம் " என்று கூறினார்கள். அவருக்குப் பதிலளிக்கும் வகையில்தான் டாக்டர் ஹாண்டே அவர்கள் புத்தகத்தை எடுத்துப் பக்கம் பக்கமாகப் புரட்டி பதிலளித்திருக்கிறார்கள். ஆளும் கட்சி உறுப்பினர் தி. வேதாசலம் அவர்கள் மீனவர்கள் நிலைமையைப் படம் பிடித்துக் காட்டினார்கள்.

கடந்த இருபது ஆண்டுகளாக மீனவர்களுக்கு அநீதி இழைக்கப் பட்டு விட்டது. என்னுடைய பழைய நண்பரும், முன்னாள் அமைச்சருமான திரு. பூவராகன் அவர்களும் இந்தப் பணியில் ஐந்தாண்டுக் காலம் ஈடுபட்டிருந்தார். துரதிர்ஷ்டவசமாக இதில் போய் மாட்டிக் கொண்டார் என்ற அளவிற்கு நினைக்க வேண்டி யிருக்கிறது. நண்பர் திரு. இராமமூர்த்தி அவர்கள், " நாங்கள் ஏராளமான சாதனைகளைச் செய்திருக்கிறோம் ; நீங்கள் அவைகளைத் தொடர்ந்து நடத்தினால் போதும் " என்று கூறினார். அவர்கள் செய்த சாதனைகளில் சிலவற்றைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

கடந்த ஆண்டு நடந்த பொதுத் தேர்தலின் போது திராவிட முன்னேற்றக் கழகம் பெரும்பாலான இடங்களைப் பெற்று ஆட்சிப் பொறுப்பை ஏற்கும் நிலை பிப்ரவரி மாதத்தில் இருந்தது. புதிய அரசு பொறுப்பு ஏற்றுக்கொள்வதற்குள், ஏற்கனவேயிருந்த அமைச்சர் அவர்கள் இந்தத் துறையிலே எந்த அளவுக்கு அக்கறை காட்டியிருந்தார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மீனளத்துறையின் பொறுப்பை ஏற்றிருந்த அமைச்சர் அவர்கள் ஃபைல்களில் மார்ச் மாதம் 1-ம் தேதி கையெழுத்து போட்டிருக்கிறார், 2-ம் தேதி கையெழுத்துப் போட்டிருக்கிறார், 3-ம் தேதி, 4-ம் தேதி என்று கையெழுத்துப் போட்டிருக்கிறார். 5-ம் தேதி நல்ல காலமாக விடுமுறை நாளாக இருந்தது, 6-ம் தேதிதான் புதிய அரசு பதவிக்கு வந்தது. தேர்தல் நடந்து, புதிய அரசு பதவி ஏற்பதற்குள்ள இடைக்காலத்தில் இந்தத் துறையின் அமைச்சர் அவர்கள் கட்டப் பட்ட விசைப்படகுகளை வினியோகிக்க கையெழுத்துப் போட்டிருந்தார். படகுகள் அலாட்மெண்ட் ஆர்டர்களிலே கையெழுத்துப் போட்டிருந் தார். கட்டப்பட்ட படகுகள் மட்டுமல்ல, கட்டப்படாத படகுகளுக்கும் கூட அலாட்மெண்ட் ஆர்டரிலே கையெழுத்துப் போட்டிருந்தார். இதை எதற்காகக் குறிப்பிடுகிறேன் என்றால், இந்தத் துறை அமைச்சர் அவர்கள் படகு வினியோகம் செய்வதில் தன் கவனத்தைச் செலுத்தினாரே தவிர, 3½ லட்சம் மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக வழி ஒன்றும் செய்யவில்லையென்பதை வருத்தத் துடன் சுட்டிககாட்டத்த ,,ன்.

அடுத்து, அவர்கள் வாராவாரம் அமைச்சராக இருந்தபோது விருத்தாசலத்திற்கு வந்து கொண்டிருந்தது எனக்குத் தெரியும். காரணம் நான் அப்போது அங்கே பணிபுரிந்து கொண்டிருந்தேன். அப்படி விருத்தாசலத்திற்கு சென்றதற்குப் பதிலாக ஒரு முறை கேரளாவிற்குச் சென்றிருந் தார்களானால் எப்படி அவர்கள் மீனளத் துறையின் மூலமாக 20 கோடிக்கு அந்நியச் செலாவணியைச் சம்பாதிக்கிற அளவுக்கு அத் துறையில் வளர்ச்சி கண்டிருக்கிறார்கள் என்பதைப் பார்த்து வந்து இங்கேயும் வளர்ச்சி கண் டிருக்கலாம். விருத்தாசலத்திற்குப் பல முறைகள் சென்று வந்ததற்குப் பதிலாக டெல்லிக்குப் பலமுறை இத் துறை சம்பந்தமான திட்டங்களை எடுத்துச் சென்று வந்திருப்பாரேயானால் சில பல திட்டங்களாவது இன்றைக்கு செயல்பட்டுக்கொண் டிருக்கும்.



அதுமட்டுமல்ல, மூன்று ஆண்டுகளுக்கு முன்பு இராமேசுவரம் புயல் ஏற்பட்ட சமயத்தில் அவர்களுக்கு நிவாரணம் அளிப்பதற்காக 25 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. ஆனால் மீனவர்களுக்கு நிவாரணம் அளிப்பதில் அந்தப் பணம் சரியான முறையில் செலவழிக்கப்படவில்லை என்பதை அக்கவுண்டெண்ட் ெ ஜனரல் அவர்கள் குற்றம் சாட்டியிருக்கிறார்கள். அதன் மேல் நடவடிக்கை எடுத்துக் கொள்வதாக, ஒரு குமாஸ்தா வேலையில் இருந்து நீக்கப்பட்டார். ஆனால் என்ன கோளாறு வருமோ என்று பயந்து திரும்பவும் அவர் வேலையில் அமர்த்தப்பட்டுவிட்டார். ஆகவே மீனவர்களின் நிவாரணத்திற்காக ஒதுக்கப்பட்ட 25 லட்சம் ரூபாய் சரியான முறையில் செலவிடப்படவில்லை என்ற கருத்து அவர்களிடம் நிலவுகின்ற காரணத்தினால் அதைப்பற்றி விவரமாக ஆராய்ந்து விளக்கு வதற்கு இந்த அரசு ஒரு கமிட்டியைப் போடவேண்டும். அதன் மூலம் காங்கிரஸ் கட்சியின் சாதனை என்ன என்பதை எடுத்துக் காட்டவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல் மீனளத் துறை யை விரிவுபடுத்துவதற்காக எண்ணூருக்கு அருகில் மீன்பிடி டீசல் என்ஜின் படகுகளை ஜப்பான் நாட்டின் ஒத்துழைப்புடன் துவக்குவதற்கான ஒரு திட்டத்தைத் தயாரித்து மத்திய அரசுக்கு அனுப்பி யிருக்கிறது. ஆனால் இதுவரை அந்தத் திட்டம் அனுமதிக்கப்படவில்லை. உத்தரப் பிரதேசத்தில் உள்ளவர்களும், மத்தியப் பிரதேசத்தில் உள்ளவர்களும் ஆதிக்கம் செலுத்தக்கூடிய மத்திய ஆட்சியில் உள்ளவர்களுக்கு மீனளத்தைப்பற்றி அக்கறை இல்லை. நார்வே நாட்டில் உள்ளவர்கள் நாம் இந்தத் துறை வளர்ச்சி அடையச் செய்ய வேண்டும் என்கிறார்கள். ஜப்பான் நாட்டைச் சேர்ந்தவர்கள் சொல்கிறார்கள். நமக்கு வேண்டிய உதவியை அளிப்ப தாகச் சொல்கிறார்கள். பிரஞ்சு நாட்டைச் சேர்ந்தவர்கள் உதவி புரியத் தயாராய் இருக்கிறார்கள். ஆனால் எல்டர்லி ப்ரதர்ஸ் என்கிறவர்கள் நமக்கு உதவி செய்யவில்லை என்கிறபோது வேதனைப் படுகிறேன். ராயபுரம் பிஷ்ஷிங் ஹார்பர் வரவில்லை. இந்தத் துறையில் பொது மக்களாகிய நம்மில் பாதி பேர் கடலிலேயே வாழக்கூடிய நிலையை என்றைக்கு ஏற்படுத்துகிறோமோ அன்றைக்குத் தான் நம் நாட்டுப் பொரு ளாதாரம் பெருகும்.

மாநில சர்க்கார் தூத்துக்குடியில் முத்துக் குளிப்பவர்களுக்கு நாள் ஒன்றுக்கு 5 ரூபாய் அளவிற்கு கூலியை உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள். என்றைக்கு படகு கட்டும் துறையில் இன்னும் அதிக விரைவாக நாம் செல்லப் போகிறோம் என்று தெரியவில்லை. நமக்கு மூன்று பக்கமும் கடல் இருப்பது மத்திய அரசில் உள்ளவர்களுக்குப் பிடிக்கவில்லை. அதனாலே தான் நமக்கு வேண்டிய உதவியை அவர்கள் இத் துறையில் அளிக்க மறுக்கிறார்கள். 3½ லட்சம் மீனவர்களை காங்கிரஸ் கட்சி தொடர்ந்து புறக்கணித்து வந்திருக்கிறது, புறக்கணித்துக் கொண்டிருக்கிறது. இந்த நிலையை மாற்றி அமைக்க இந்த அரசு முயற்சி செய்ய வேண்டும், அவர்களது நிலையை உயர்த்த வேண்டும், பொருளாதாரத் துறையில் அவர்கள் வளர்ச்சி அடையச் செய்ய வேண்டும், அந்நியச் செலாவணியைப் பெருக்கிக் கொடுக்கும் தொழில் துறையாக வளரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. இரா. மாணிக்கவாசகம்:** தலைவர் அவர்களே, மூன்றில் ஒரு பங்கு காடுகள் இருக்க வேண்டும் என்கிற போது ஒரு பங்கு மலைவளம் இருக்க வேண்டும், அப்போது தான் நீர்வளம் கிடைக்கும் என்று நில நூல் வல்லுநர்கள் கூறுகிறார்கள். ஆகவே மலைவளத்தை நாம் பெருக்கி யாக வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு மலைகளில் கால்நடைகளை மேய்ப்பதற்கு இப்போது கட்டணம் வசூலிக்கப்படுகிறது. அதை ரத்து செய்து கால்நடைகள் நல்ல முறையில் மேய்வதற்கான வசதிகளைச் செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பர்கூர் மலைப்பகுதி கால்நடைகள் மிகவும் பிரசித்தி பெற்றன. அதற்கு நல்ல முறையில் வளர்ச்சித் திட்டங்களை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. இரா. மணிக்கவாசகம்] [1968 மார்ச் 9

அடுத்து, தாராபுரம், அவிநாசி, பல்லடம் போன்ற இடங்களில் இன்றையதினம் பஞ்ச நிலை காரணமாக பெரும்பாலோர் கால்நடைகளை விற்றுவிட முன்வந் திருக்கிறார்கள். எல்லாக் கால்நடைகளும் போய் விடாதபடிக்கு அங்குள்ளவர்களுக்கு கால்நடைகளைப் பராமரிக்க கடன் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கால்நடை தீவனத்தை உற்பத்தி செய்வதற்கு விவசாய அதிகாரிகள் பலர் இருக்கிறார்கள். விதையை ஒருவர் கொடுக்கிறார். நட்ட பின் பார்ப்பதற்கு ஒருவர் வருகிறார். வளர்ந்து விட்டால் வேறு ஒரு அதிகாரி வருகிறார். அறுவடை செய்கிறபோது வேறு ஒருவர் வருகிறார். இப்படிப் பார்க்கிறபோது கால்நடைத் தீவன வளர்ச்சிக்கு 10 ரூபாய் விவசாயிக்குக் கொடுத்தால் 25, 30 ரூபாய் நிர்வாகச் செலவுக்கே போகிறது. எனவே அதை அருள்கூர்ந்து கவனித்து ஒரே அதிகாரியின் கீழ் கால்நடைத் தீவன உற்பத்தி வேலை நடைபெறச் செய்ய வேண்டும்.

1965 - ஆம் ஆண்டில் மீனளத் துறையில் பல ஊழல்கள் நடைபெற்றிருப்பதாகப் பல செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. அதை இந்த அமைச்சரவை அருள்கூர்ந்து கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று சொல்லி பேச சந்தர்ப்பம் அளித்ததற்காக நன்றி கூறி விடை பெறுகிறேன். வணக்கம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, திரு சிவசாமி சிப்பி எடுப்பது பற்றிய கருத்தை மட்டும் சொல்வார்.

***திரு. மு. ச. சிவசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, மீனள மானியத்தின் மீது ஒரு சில வார்த்தைகள் இரண்டு நிமிடத்திற்குள் முடிக்கிறேன். எனக்கு முன்பு பேசிய உறுப்பினர் அரசு மாறிவிட்டது, அமைச்சர்கள் மாறிவிட்டார்கள், அதிகாரிகள் மாறவில்லை என்றார்கள். இந்த ஓராண்டுக் கால அனுபவத்தில் அதிகாரிகளின் மனோபாவங்களும் மாறிவிட்டன என்று நான் சொல்ல விரும்புகிறேன். நல்ல பல காரியங்களை தூத்துக்குடியைப் பொறுத்த வரையில் மிக விரைவாகச் செய்து கொண்டிருக்கிறார்கள் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் ஞாபகப்படுத்துகிறேன். இதற்கு முன்பு இருந்த அரசாங்கம் தூத்துக்குடியில் ஆண்டு தோறும் முத்துக்குளிப்பு நடக்கிறபோது தொழிலாளர்களுக்கு சிப்பிக்கு 47 காசு கொடுத்து வந்தார்கள். அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய தொழிலாளர்கள் தங்களுக்குக் கூலி உயர்வு வேண்டும், வேண்டும் என்று கேட்கிற காலத்தில் அவர்கள் 40 நாட்கள், 50 நாட்கள் வேலை நிறுத்தம் செய்ததற்குப் பின்னால் முந்தைய அரசாங்கம் மனமிரங்கி அவர்கள் கொடுத்த கூலி உயர்வு சங்குக்கு ஒரு பைசா தான். ஆனால் இன்றைக்குத் தமிழக அரசு வந்ததற்குப் பிறகு இராமேஸ்வரம், தூத்துக்குடி போன்ற இடங்களில் இருக்கின்றவர்கள் கூலி உயர்வு வேண்டுமென்று கேட்கிற காலத்திலே அதைப்பற்றி அமைச்சர்களையும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும் அணுகி தொழிலாளர்கள் சார்பில் கேட்கிற நேரத்தில் சங்குக்கு 13 பைசா கூலி உயர்வு கொடுத்தார்கள். அதன் சரித்திரத்திலேயே இதற்கு முன்பு, அந்தத் தொழிலாளர்களுக்குக் கூலி உயர்வு 13 பைசா கொடுத்ததே கிடையாது. இதன் மூலமாக ஒரு நாளைக்கு அந்தத் தொழிலாளர்களுக்கு ஏற்கெனவே இருந்ததைவிட 5 ரூபாய் அதிகமாகக் கிடைக்கின்றது.

தூத்துக்குடியில் ஒரு மீன்பிடி துறைமுகம் இல்லாமல் இருக்கிறது. 2 கோடி 40 லட்ச ரூபாய் செலவில் திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன. அதற்கான திட்டங்கள் தீட்டப்பட்டு வரைபடங்கள் வரையப்பட்டு அது மத்திய அரசாங்கத்தின் அங்கீகாரத்திற்காக காத்திருக்கிறது. இந்த அரசாங்கம் தூத்துக்குடியில் மீன்பிடி துறைமுகம் ஆரம்பிப்பதற்குத் துரிதமாக வேலை செய்து வருகிறது என்பதை நான் இந்த நேரத்தில் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அடுத்த ஆண்டிற்குள் தூத்துக்குடியில் 2 கோடியே 40 லட்ச ரூபாய் செலவில் மீன்பிடி துறைமுகம் பெறுவதற்கு மத்திய அரசோடு போராடி சீக்கிரமாக ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.



1968 மார்ச் 9]

***திரு. கோ. பூவராகன் :** கனம் சபாநாயகர் அவர்களே, இன்றைய தினம் சபை முன் கொண்டுவந்திருக்கின்ற மூன்று மானியக் கோரிக்கைகளின் மீது என்னுடைய கட்சியின் சார்பாக கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணையை ஒட்டி சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இன்றைய தினம் உணவுப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு விவசாய இலாகாவால் மட்டும் முடியாது. கால்நடை இலாகாவும், மீனள இலாகாவும் பெரிய அளவிலே இணைந்து செயல்பட்டால் தான் நல்ல முறையிலே அதைத் தீர்க்க முடியும் என்பதை நாம் எல்லாம் அறிகிறோம். மீன் பெரிய அளவிலே கிடைப்பதற்குத் தமிழ்நாட்டிலே இயற்கையாகவே ஒரு நல்ல அமைப்பு இருப்பதை பார்க்கிறோம். ஆனால் அந்த இயற்கை வளத்தை நாம் எந்த அளவுக்குப் பயன்படுத்தியிருக்கிறோம் என்று பார்க்கிறபொழுது மிகக் குறைந்த அளவிலே தான் நாம் பயன்படுத்தியிருக்கிறோம். நீண்ட கடற்கரையும், அதிகமான நிலப்பரப்பும் உள்ள தமிழ்நாட்டில் இதற்காக ஒதுக்குகின்ற பணம் குறைவான தொகையாக உள்ளது என்று தான் சொல்லவேண்டும். ஏற்கெனவே இருந்த அரசாங்கம் கவனம் காட்டவில்லை, இப்போதுள்ள அரசாங்கம் நல்ல முறையிலே கவனம் காட்டுகிறது என்று முன்னாலே பேசிய உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். என்னைப் பொறுத்த அளவிலே விருத்தாசலத்திற்கு அடிக்கடி போய் வந்தார். நான் கொச்சிக்கும், கல்கத்தாவுக்கும் போய் வந்தால் நல்லதாக இருக்கும் என்று அவர்கள் சொன்னார்கள். நான் கொச்சிக்குப் போய் வந்திருக்கிறேன். அங்கே எப்படி மீன் பிடிப்பு நடைபெறுகிறது, யார் யார் அதில் ஈடுபட்டு இருக்கிறார்கள்; பம்பாயில் எப்படி மீன்பிடி தொழிலாளர்கள் அதில் ஈடுபட்டிருக்கிறார்கள்; மற்ற இராச்சியங்களிலும் எப்படி அந்தத் தொழிலாளர்கள் தங்கள் வேலையிலே ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதையெல்லாம் அறிந்து இருக்கிறவன் என்பதை என்னைப் பொறுத்த அளவிலே நான் பெருமைப் படுத்துவதற்காகச் சொல்லிக்கொள்ளவில்லை. அந்தத் துறையைச் சேர்ந்த பணியாளர்கள், காரியதரிசிகள், மீனவர்கள் இவர்களையெல்லாம் கூட்டி வைத்து ஒரு நீதிபதியை வைத்து அக்கறை காட்டினார்களா, காட்டாமல் விட்டார்களா என்று விசாரித்தால் அவர்கள் கொடுக்கிற தீர்ப்பினை ஏற்றுக்கொள்வதற்கு நான் இன்றும் தயாராக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். மீனளத்துறைக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்ற தொகை போதாது, அதிகமாக ஒதுக்கவேண்டுமென்று கோரினார்கள். நானும் போதாது என்று தான் கூறுகிறேன். முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் இதற்காக 34 லட்சம் ஒதுக்கி, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 74 லட்சமும், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் $2\frac{1}{4}$ கோடி ரூபாயும், நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 10 கோடி ரூபாயும் ஒதுக்கக்கூடிய அளவுக்கு இந்த இலாகாவைக் கொண்டுவந்தது யாருடைய பொறுப்பு என்று அங்கே பணியாற்றுகின்ற பணியாளர்களையும் காரியதரிசிகளையும் அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றவர்களையும் கேட்டால் நன்றாகத் தெரியும் என்பதையே நான் உறுப்பினர் அவர்களுக்கு விடையாக அளிக்கிறேன். ஒருவருக்கொருவர் வேண்டுமென்றே பேசுவதில் பயனில்லை. ஏதோ அங்கத்தினர் அவர்கள் பேச எழுந்தவுடன் நல்ல யோசனைகளைச் சொல்வார்கள், குறிப்பாக மாவட்டத்திலே உள்ள கோரிக்கைகளை எடுத்துச் சொல்வார்கள் என்று நினைத்தேன். ஆனால் அவர்கள் வேண்டாத காரியத்திலே போய், யார் கையெழுத்துப் போடுவதற்கு அதிகாரம் இருக்கிறது என்று சொல்லுகிறவர் கையெழுத்துப் போடுவதற்கு, தான் முயற்சியெடுத்து முடியாததினால் அந்தப் பொறாமையினால் தான் அப்படிச் சொல்லிக்கொண்டு வருகிறார்கள் என்பதை நான் மிக வருத்தத்தோடு சொல்லிக்கொள்கிறேன். என்னைப் பொறுத்த அளவிலே இந்தத் துறையிலே நல்ல முறையிலே கவனம் செலுத்தப்படவேண்டுமென்று . . .

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தாங்கள் பாயிண்டு ஆப் ஆர்டர் என்றால் கேட்கலாம், ஆனால் பாயிண்ட் ஆப் பர்சனல் எக்ஸ்பிளநேஷன் என்றால் அவர்கள் பேசி முடித்த பிறகுதான் சொல்லவேண்டும். பாயிண்ட் ஆப் கிளாரிபிகேஷன் கேட்பதற்கு பேசுகிறவர்கள் உட்கார்ந்தாலன்றி உங்களுக்கு உரிமையில்லை.

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர் சார், உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபொழுது போட் தரவில்லையென்று சொன்னது பொறுமையால் போட் தரவில்லை என்று சொன்னதாகச் சொன்னார்கள். நான் பொறுமையால் சொல்லவில்லை, போட் வேண்டுமென்று கேட்கவில்லை.

**திரு. கோ. பூவராகன்:** இங்கே போட் பற்றிய பிரச்சினை இல்லை. மீனளத் துறைக்கு அதிகத் தொகை வழங்கப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு அதிகமாக ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால் சென்ற ஆண்டு ஒதுக்கிய பணத்தைத் தக்கபடி செலவு செய்யவில்லை. இப்பொழுதே எதிர்பார்த்து பணத்தை அடுத்த ஆண்டு கூட்டலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். இப்பொழுது ஒதுக்கப்பட்டிருக்கின்ற பணம் போதாது ; ஆகவே அதிகமாக ஒதுக்க வேண்டும். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 10 கோடி ரூபாய் இதற்கு என்ற அளவில் இருப்பதால் தமிழ்நாட்டிலே போடுகின்ற முதலீட்டிலே அதிகமாகக் கவனம் காட்டி நல்ல முறையிலே பணத்தை ஒதுக்க வேண்டும். இந்தத் துறை வளர்ந்தால் தான் உணவுப் பிரச்னையைத் தீர்க்கக்கூடிய வாய்ப்பு இருக்கும். இன்றைய தினம் மீனவர்களுக்கு படகுகள் கொடுப்பதற்காக படகு கட்டக்கூடிய இடங்களை ஏற்படுத்தியிருக்கிறோம். ஏற்கெனவே இருந்த அரசாங்கம் ஒன்றும் கவனிக்கவில்லை என்று சொன்னார்கள். சென்ற காலத்தில் 1 படகு கட்டும் இடம் தான் இருந்தது. அது இரண்டு, மூன்று, நான்காக பெருகியிருக்கிறது. பனிக்கட்டி தயாரிக்க சாதனம், குளிர்ப்பதன சாதனங்களை அதிகமாக ஏற்படுத்தியிருக்கிறோம். அந்த அளவுக்கு ஏற்கெனவே இருந்த ஆட்சி செய்திருக்கிறது. ஆனால் ஏற்கெனவே கட்டி முடித்ததையெல்லாம் கூட இந்த அறிக்கையில் தொடர்ந்து குறிப்பிட்டு இருக்கிறார்கள். அதற்கு என்ன காரணம் என்று எனக்குத் தெரியவில்லை. இன்னும் பல இடங்கள் இருக்கின்றன. அவற்றையும் நல்ல முறையில் பயன்படுத்தவில்லை. நார்வேஜியன் படகுத் திட்டத்தை விரிவுக்குக் கொண்டுவர வாய்ப்புக் கூறுகள் இருந்தும் அதைப் பற்றி ஒன்றும் கவனிப்பதாகத் தெரியவில்லை. கடலூரிலே படகுகள் கட்டக் கூடிய இடத்தை ஏற்படுத்த குறிப்புகள் இருந்தும், இந்த ஆண்டு மானியக் கோரிக்கையில் அது வரவேண்டுமென்று எதிர்பார்த்தேன், அதையும் காணோம். அங்கே அதிகமான அளவில் படகுகள் வழங்கப்படுகின்ற நிலை இருக்கிறது. ஆகவே படகு கட்டுகின்ற நிலையத்தை அங்கே ஏற்படுத்த வேண்டும். உறுப்பினர்கள் ரஸ்டன் எஞ்ஜின், ஏர் கூலர் இவற்றைப் பற்றியெல்லாம் சொன்னார்கள். இப்படிப்பட்ட குறைகள் தொன்று தொட்டு இருந்து வருகின்றன. இதற்கு சர்வீஸ் ஸ்டேஷன் நன்றாக இயங்கக் கூடியதாக ஆங்காங்கு ஏற்படுத்த வேண்டுமென்று, படகுகள் வழங்கப்படுகின்ற இடங்களில் சர்வீஸ் ஸ்டேஷன்களை வைத்தால் மீனவர்கள் கஷ்டமில்லாமல் தொழிலைச் செய்யலாம். அப்படி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா, நிரந்தரமான பரிகாரம் காணப்பட்டிருக்கிறதா என்று பார்க்கும்போது ஒன்றும் காணப்படவில்லை என்று தான் சொல்வேன். படகுகளில் பழுது ஏற்பட்டால் ஒன்றிரண்டு அல்லது மூன்று மாதங்கள் வரையில் அவர்களுடைய தொழில் தடைப்பட்டு விடுகிறது காரணம் உறுப்புகள் கிடைக்கவில்லை. ரிப்பேர் செய்வதற்கு பயிற்சி பெற்றவர்கள் கிடைப்பதில்லை. ஆகவே வழங்கப்படுகின்ற நாள் முதல் ஓராண்டு வரையில் அரசாங்கமே, பழுதுகள் ஏற்பட்டால் அவற்றைச் செய்து கொடுக்கவேண்டுமென்ற ஒரு விதி பிறப்பித்தால் கூட மீனவ சமுதாயத்தில் இருக்கக்கூடியவர்களுக்கு அது நலமாக இருக்கும். அதுமட்டுமல்லாமல் எந்தெந்த உறுப்புகள் அடிக்கடி பழுதுபடுகின்றனவோ அந்த உறுப்புக்களை எளிதாகப் பெறக்கூடிய வகையில் ஆங்காங்கு இலாகாவின் மூலமாக சர்வீஸ் ஸ்டேஷன்கள் இருக்கும் இடத்தில் கிடைக்கும்படியாக அமைக்கவேண்டும்.

படகுகள் கட்டுகின்ற இடத்தில் மரங்களும், மற்றப் பொருள்களும் வாங்குகிறார்கள். அவற்றுக்கெல்லாம் அவ்வப்போது சரியான முறையில் கணக்குகள் வைத்துக்கொள்ளவேண்டும். கணக்குகள் வைத்து முறையாகச் செயல்படவேண்டும். அப்படிச் செயல்பட்டால்தான் படகு கட்டும்



செலவு குறையும். அதற்கான மரங்களைக் கூட காட்டு இலாகாவிலிருந்து தான் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். இப்போதும் அங்கிருந்து தான் பெற்றுக்கொண்டு வருகிறார்கள் என்று கருதுகிறேன். காட்டு இலாக்காவோடு ஒப்பந்தம் பேசி வெளியில் விற்கும் விலையை விடக் குறைவான விலைக்கு படகுகள் கட்டுவதற்குக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். இரண்டு இலாகாக்களின் பொறுப்பும் ஒரே அமைச்சரிடம் இருப்பதால் அவ்வாறு செய்வதில் சங்கடம் இருக்காது. அந்த நல்ல முறையைக் கையாண்டு குறைந்த செலவில் மீனவர்களுக்குப் படகை வழங்குவதற்கு வழிவகை காணவேண்டும்.

படகுகளில் சென்று மீன் பிடிக்கும்போது நிறைய மீன்கள் கிடைக்கின்றன. ஓரளவு வருமானமும் வருகிறது. ஆனால் வருமானம் முழுவதும் மீனவ சமுதாயத்தில் இருப்பவர்களுக்கு நேரடியாகச் சேருகிறதா என்று பார்த்தால் நேரடியாகச் சேருவதில்லை. இடையில் இருப்பவர்கள் வருகின்ற வருமானத்தில் முக்கால் பங்கைப் பெறும் நிலைமை இருக்கிறது. அதைத் தவிர்க்க சீரான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். இன்றையதினம் மார்க்கெட்டிங் சொசைட்டி இருக்கிறது. அதைப் பற்றி நான் அன்றைய தினமும் கூறி வந்தேன், இன்றும் கூறுகிறேன். அது செயல்படுவது செம்மைப்படுத்தப்படவேண்டும். மீனவர்களிடமிருந்து மீன்களை வாங்கும் போது அவர்களுக்கு நியாயமான விலை கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும். இதிலே மாவட்ட வாரியாகக் கவனம் காட்ட வேண்டும். இதற்காகத் தனிப்பட்ட முறையில் டெபுடி டைரக்டர் ஒருவரைப் பொறுப்பில் வைத்தால் கூடத் தகும் என்று இந்தச் சமயத்தில் சொல்வேன். கல்கத்தா கார்ப்பரேஷன் என்று மத்திய அரசாங்கத்திலிருந்து ஒரு அமைப்பை நிறுவி இருக்கிறார்கள். அதிலே நாமும் முதல் போட்டிருக்கிறோம். பங்குதாரர்களாக இருக்கிறோம். நீர்த் தேக்கங்களில், குறிப்பாகச் சொன்னால் மேட்டூர் நீர்த் தேக்கத்தில் பிடிக்கப்படுகின்ற மீன்கள் நம்முடைய நாட்டில் விற்பனையாவதில்லை. கட்லா என்ற அந்த மீன்கள் பெரிய அளவில் இருப்பதால் கல்கத்தா போன்ற நகரங்களுக்குச் சென்றால் தான் விற்பனையாகும். அங்கே அதற்கு நல்ல விலை இருக்கிறது. ஐந்தாறு மடங்கு அதிக விலை விற்கும் நிலைமை இருக்கிறது. ஆனால் அவ்வாறு கிடைக்கும் விலையிலே அந்தப் பங்கு மீன் பிடிக்கின்ற மீனவர்களுக்குக் கிடைப்பதில்லை. அதற்காகத் தான் கல்கத்தா கார்ப்பரேஷனில் முதல் போட்டிருக்கிறோம். ஆகவே, லாபத்தில் நமக்குப் பங்கு கிடைக்கும் நிலையை உருவாக்க வேண்டும்.

சங்கு குளிப்பு பற்றித் தூத்துக்குடி உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். சங்கு முன்பு இலங்கையில் இருந்து வந்தது. அதனால் நம்முடைய சங்கு கல்கத்தாவிற்குச் செல்வது சிரமமாகிவிடும் என்று சொன்னோம். சங்கில் வளையல் செய்வது அந்தந்தப் பகுதியில் தான் செய்கிறார்கள். மற்ற இடங்களில் கிடையாது. அங்கே ஒரு முறை வைத்திருக்கிறார்கள். ஆண்டுக்கு ஒரு முறை பெண்மணிகள் சங்கு வளையல்கள் அணிந்து உடைக்க வேண்டுமென்று முறை வைத்திருக்கிறார்கள். நவீன காலத்தில் அந்த முறை கூட மாறி வருகிறது. அவ்வாறு உடைப்பது என்ற பழக்கத்தை விட்டு விடுவார்களோ என்று கருத வேண்டியிருக்கிறது. ஆனாலும்— சிலோனில் இருந்து சங்கு வந்தால் நம்முடைய சங்கு விற்பனையாகாது என்று மத்திய அரசாங்கத்திடம் சொல்லி நிறுத்திவிட்டோம். சங்கை எடுத்து விற்கின்றபோது எந்த அளவுக்கு நஷ்டம் வராமல் பார்த்துக் கொள்ளவேண்டுமோ அந்த அளவுக்குப் பார்த்துக்கொண்டு அந்தத் தொழிலிலே ஈடுபட்டிருப்பவர்களுக்கு ஓரளவுக்கு உயர்வான ஊதியத்தைக் கொடுக்கமுடியும் என்ற நிலை இருந்து வந்தது. அதற்கு நல்ல விலை கிடைக்கச் செய்து தொழிலாளர்களுக்கு அதன் பலன் கிடைக்கச் செய்யவேண்டும். கல்கத்தா கார்ப்பரேஷன் மூலம் மீனை விற்பதோடு கூட சங்கையும் விற்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

மீன்களை வெளியிடங்களுக்கு விற்பனை செய்கிற காரியம் முக்கியமானது. கிராமப் புறங்களில் இருப்பவர்கள், உள் நாட்டில் இருப்பவர்கள் ஆகியோருக்கு மீன்கள் கிடைப்பதில்லை. உள் இடங்களுக்கு மீன்களை எடுத்து

செல்ல வண்டிகளைப் பயன்படுத்துகிறோம். அந்த வண்டிகள் சரியான முறையில் பயன்படுகிறதா என்று பார்க்கவேண்டும். சில சமயங்களில் வேறு விதமாகப் பயன்படுத்துகிற நிலைமை இருக்கிறது. அப்படி இல்லாமல் விற்பனைக் கூடங்களுக்கு வண்டிகளைக் கொடுக்கும்போது இன்னின்ன இடங்களில் உள்ள மீன்களை எடுத்து இன்னின்ன இடங்களுக்கு எடுத்துச் சென்று விற்பனை செய்யவேண்டுமென்ற முறையில் ஏற்பாடு செய்ய வேண்டும்.

சென்னை நகரத்தைப் பொறுத்துப் பார்த்தாலும் இங்கு மீன் தேவைப் படுகிறவர்கள் அதிகமான விலை கொடுத்து வாங்கவேண்டிய நிலைமை இருக்கிறது. பரீட்சார்த்தமாக ஒரு திட்டத்தைச் செய்து பார்க்கும்படி அந்த இலாகாவில் பணியாற்றக்கூடிய அதிகாரிகளுக்கும், காரியதரிசிக்கும் சொன்னேன். தனியாக விசைப் படகுகளை வைத்து அதிலே கிடைக்கின்ற மீன்களை எல்லாம் அரசாங்கத்தில் பணியாற்றுகின்ற சிப்பந்திகளுக்கும் ஏழைகள் அதிகமாக வசிக்கிற இடங்களிலும் மலிவான விலையில் விற்கவும், மக்களுக்கு நியாயமான விலையில் கிடைக்கவும் வழி செய்யவேண்டுமென்று கூறினேன். இதைப் பரீட்சார்த்தமாகச் செய்து பார்த்தால் நல்ல லாபம் வருவதோடு நல்ல முறையில் மீன்களும் விற்பனையாகும். இதைச் செய்வதிலே அமைச்சர் அவர்கள் வழிவகை காணவேண்டும்.

விற்பனையைப் பொறுத்தவரை ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு விதமாக இருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு விதம், திருநெல்வேலி மாவட்டத்தில் ஒரு விதம், தென்னாற்காடு மாவட்டத்தில் ஒரு விதம், தஞ்சை மாவட்டத்தில் ஒரு விதம் என்று ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு முறை இருக்கிறது. இதிலே பல பேர் ஈடுபட்டிருக்கிறார்கள். பலதரப்பட்டவர்கள் எப்படியோ இதிலே ஈடுபட்டு மீனவர்களுக்கு நல்ல முறையில் பலன் கிடைக்காத அளவுக்கு நிலைமை இருக்கிறது. குறிப்பாக, ஒரு இடத்தைக் குத்தகைக்கு எடுக்கிறார்கள் என்றால் இன்னார் வந்து தான் எடுக்கவேண்டுமென்று வைத்திருக்கிறார்கள். சில மாவட்டங்களில் ஏலம் விடுவது என்ற முறையில் கைப்பணம் வாங்கிக்கொண்டு அவர்கள் பொறுப்பிலே விடும் நிலைமை இருக்கிறது. மீனவர்கள் தொன்று தொட்டு இந்தப் பாதையில் சென்று கொண்டிருக்கிறார்கள். அந்தப் பாதையைச் செம்மைப்படுத்த அரசாங்கமே நேரடியாக மீன்களை நல்ல விலைக்கு வாங்கி நல்ல விலைக்கு விற்று, லாபம் எல்லோருக்கும் கிடைக்கும் வகையில் ஏற்பாடு செய்யவேண்டுமென்று இந்தச் சமயத்தில் கூறிக் கொள்கிறேன்.

எல்லா நீர்த்தேக்கங்களிலும், மீன் பிடிக்கும் தொழிலை நம்முடைய ராஜ்யத்திலே நல்ல முறையிலே திட்டமிட்டு மற்ற ராஜ்யங்களை விட சிறப்பான முறையில் செயல்படுத்தி வருகிறோம். மேட்டூர் நீர்த்தேக்கம் தவிர மற்ற நீர்த்தேக்கங்களில் நம்முடைய அரசாங்கம் எந்த அளவுக்கு மீன் பிடி தொழிலில் ஈடுபட்டிருக்கிறது என்பதற்கு விளக்கம் இல்லை. மேட்டூர் நீர்த்தேக்கத்தில் இருப்பது போல் எல்லா நீர்த்தேக்கங்களிலும் மீன் பிடிப்பதற்குக் குத்தகை முறையிலோ மற்ற எந்த முறையிலோ ஏற்பாடு செய்து அந்த மீன்களையும் நல்ல விலைக்கு விற்பனை செய்து அந்த லாபம் அந்தத் தொழிலிலே ஈடுபட்டிருப்பவர்களுக்குப் பலன் கிடைக்கும் முறையில் ஏற்பாடு செய்யவேண்டும். நீர்த்தேக்கங்களை இன்று நாம் நன்றாகப் பயன்படுத்தவில்லை. மேட்டூரில் நம்முடைய முயற்சி இல்லாமல் மீன் இயற்கையாகவே வளர்ந்து வருவதைப் பார்க்கிறோம். நம்மிடம் இருக்கும் நீர்த்தேக்கங்களில் எந்த அளவுக்குப் பயன்படுத்தியிருக்கிறோம் என்று பார்க்கும்போது, புதிய நீர்த்தேக்கங்களை ஓரளவு பயன்படுத்திக் கொண்டிருந்தாலும் கூட, பழைய நீர்த்தேக்கங்களைப் பொறுத்து கவனம் செலுத்தாத நிலைமை தான் இருக்கிறது. பெரிய ஏரி, குளங்கள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் சர்வே செய்யவேண்டும். அத்தகைய ஏரிகளில் ஒரு ஆண்டில் எத்தனை மாதங்கள் தண்ணீர் இருக்கும் என்று பார்க்கவேண்டும். அந்த அளவுக்கு வளர்ச்சி பெறுகிற மீன்களை அதிலே விடுவது என்று வரையறுக்கவேண்டும். நம்முடைய ராஜ்யத்தில் கோயில் இருக்கும் இடங்களில் எல்லாம் குளங்கள் இருக்கின்றன.



தஞ்சை மாவட்டத்தில் பெரிய பெரிய குளங்கள் இருக்கின்றன. அங்கு 26, 36 ஏக்கர் பரப்புள்ள குளங்கள் இருக்கின்றன. அங்கு ஆண்டு பூராவிலும் வற்றாத குளங்கள் உள்ளன. திருவாரூரில் சம்பந்தப்பட்ட தேவஸ்தான தர்மகர்த்தாக்கள், அதிகாரிகள் இவர்களோடு கூடிப் பேசப்பட்டிருந்தது. அங்கு பெரிய குளம் இருக்கிறது. அங்கும் மீன் இருக்கிறது. ஆனால் சாப்பிடக்கூடிய அளவில் பெரிய, நல்ல மீன்கள் விரும்புகிற அளவிற்கு இருக்கிறதா என்றால் இல்லை. அப்படிப்பட்ட குளங்களில் தரமான மீன்களை வளர்க்க ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் மீன் உற்பத்தியைப் பெருக்க முடியும்.

இப்போது கிணற்றுப் பாசனம் அதிகரித்து, இப்போது 10 லட்சம் கிணறுகள் இருக்கின்றன. கோவை, சேலம், வட ஆற்காடு போன்ற மாவட்டங்களில் பெரிய பெரிய கிணறுகள் இருக்கின்றன. அங்கெல்லாம் நல்ல தரமான மீன்களை வளர்க்க ஏற்பாடு செய்ய வேண்டும். இந்த மீன் இலாக்காவில் பணியாற்றுகிறவர்கள் தானாகவே அங்கு சென்று எல்லா நீர்த்தேக்கங்களிலும் மீன் குஞ்சுகளை விட்டு மீன்களை வளர்க்க ஏற்பாடு செய்யவேண்டும்; இதற்கு ஒரு சர்வே செய்யப்பட வேண்டும். எவ்வளவு ஆண்டுகளுக்குள் இதைப் பூர்த்தி செய்வது என்று பார்த்து ஒரு ஏற்பாடு செய்வது நல்லது.

நார்வீஜியன் திட்டப்படி, மண்டபத்தில் இவ்வளவு நேரத்திற்குள் முடித்திருக்க வேண்டும் அந்தத் திட்டங்கள். ஆனால் அத் திட்டங்கள் இதுவரை முடியவில்லை. அங்குள்ள என்ஜினியர்களிடம் இது பற்றிக் கேட்டால் அவர்கள் சொல்கிறார்கள். "இப்போதுள்ள அரசாங்கம் இதில் கவனம் காட்டவில்லை, ஆகவே காலதாமதமாகிறது" என்று. ஏன் இதில் கவனம் காட்டப்படவில்லை என்று தெரியவில்லை. அது நமக்கு நல்ல வருமானத்தைத் தரக்கூடிய திட்டமாகும். கேரளாவில் அமைந்திருப்பதை விட நம் ராஜ்யத்தில் நல்ல முறையில் அமைந்திருக்குக்கூடிய திட்டம் அது. அதில் சிறிது வேகம் காட்டப்பட வேண்டும். அதைச் சீக்கிரத்தில் செய்து முடிக்க வேண்டும். அப்படிச் செய்வதால் வெளிநாட்டிலிருந்து வந்திருப்பவர்கள் உற்சாகத்தோடு மேலும் பல திட்டங்களை நமக்குக் கொடுப்பார்கள். டாக்டர் ஹாண்ட்ட அவர்கள் சொன்னார்கள். "ரஷ்யாவிலிருந்தும் ரிஸர்வ் பாங்கியிலிருந்தும் ஒரு டீம் வந்ததே, அவர்கள் திட்டத்தில் பங்கு கொடுப்பதாகச் சொன்னார்களே, தமிழ்நாட்டில் நல்ல பல வாய்ப்புகள் இருக்கின்றன. தூத்துக்குடியில் அல்லது சென்னையில் ஏற்படுத்த உதவி அளிக்கிறோம் என்று சொன்னார்களே அத்திட்டம் எப்படியிருக்கிறது"? என்றார்கள். அது எந்த அளவில் இருக்கிறது என்பதை இப்போது பொறுப்பேற்றுக் கொண்டிருக்கும் அமைச்சர் அவர்கள் பதிலில் கூறுவார்கள் என்று நினைக்கிறேன்.

டீஸல் என்ஜின் பாக்டரி எண்ணூரில் வருவதற்கு, அற்காக மத்திய அரசாங்கத்தினிடமிருந்து இடம் வேண்டுமென்று கேட்டு இடம் கொடுக்கத் தயாராகயிருக்கிறோம், அதில் பங்கு போடத் தயாராக இருக்கிறோம் என்று சொல்லியிருந்ததும், சென்ட்ரல் ஃபிஷரீஸ் போர்டில் உள்ளவர்கள், அந்த இலாக்கா அமைச்சர் அவர்கள், அந்த இலாக்கா காரியதரிசி அவர்கள் ஒப்புதல் கொடுத்து சென்னையில் தான் ஏற்பாடு செய்யவேண்டுமென்று இருந்த திட்டம் எப்படியிருக்கிறது? மேலும் முயற்சி எடுக்கப்பட்டதா? அப்படி மேலும் முயற்சி எடுக்கப்பட்டிருந்தால் அது எப்போது நடைமுறைக்கு வரும்? அதில் எந்த அளவிற்குக் கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது என்பது தெரியவில்லை.

அடுத்தபடியாக, புயல் ஏற்படும்போது மீனவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்காக ஏராளமான பணம் கொடுக்கப்பட்டது. அதைச் சரியாகச் செலவழிக்கவில்லை என்று சொன்னார்கள். பணம் கொடுத்தவர்களுக்கும் அதை நேரில் வழங்கியவர்களுக்கும், அதைப் பார்த்தவர்களுக்கும் தான் அதைப் பற்றித் தெரியும். அதைப் பார்க்காதவர்கள் அதைப் பற்றிச் சொல்வது பொருத்தமாகாது. தஞ்சை மாவட்டம், திருநெல்வேலி மாவட்டம் போன்ற இடங்களில், தொடர்ந்து புயலால் மீனவர்கள்

பாதிக்கக்கூடிய இடங்களில், அடுத்தடுத்து புயல் வீசி அதனால் பாதிக்கப்படுகிற மீனவர்களுக்கு அவர்கள் தங்குவதற்காக ஒரு சமுதாயக் கட்டம் கட்டப்பட வேண்டும் என்று அதற்காக 20,000 ரூபாய் செலவில் 21 இடங்களில் கட்டவேண்டும் என்று சொல்லி அது இங்கு தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதற்காகப் பணமும் ஒதுக்கியிருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர்களும் இன்னின்ன இடங்களில் கட்டவேண்டும் என்று இடங்களைக் குறிப்பிட்டு அனுப்பியிருக்கிறார்கள். 20,000 ரூபாய் செலவில் சமுதாயக் கட்டடம் அமைக்கப்பட வேண்டும், திடீரென்று புயல் ஏற்படும்போது அவர்கள் அங்கு வந்து தங்கிக்கொள்ள ஏற்பாடு செய்யப்பட வேண்டுமென்றும், 1,000 ரூபாய்க்குப் பாத்திரங்கள் வாங்கி வைக்க வேண்டும். அதை மீனவக் குப்பங்களில் உள்ள மீனவர்கள் நல்ல காரியங்கள், விசேஷங்கள் நடக்கிறபோது அந்தப் பாத்திரங்களை உபயோகித்துக்கொள்ள அவற்றைக் கொடுக்க வேண்டும் என்று அதற்கான ஏற்பாடுகள் எல்லாம் செய்யப்பட்டிருந்தன. அதை எந்த அளவிற்குச் செய்து முடித்திருக்கிறார்கள் என்று தெரியவில்லை. அது செய்யப்படவில்லை என்றால் என் செய்யப்படவில்லை? அந்தப் பணத்தை வேறு துறைகளுக்குச் செலவிடுவதாயிருந்தால் அது பொருத்தமாக இருக்காது. இராமேஸ்வரத்தில் கடல் கொந்தளிப்பு ஏற்பட்டபோது பல ராஜ்யங்களிலிருந்து பல தொழில்துறையினர் இந்தப் பணத்தை இந்தக் காரியத்திற்காகத் தான் பயன்படுத்த வேண்டுமென்று கொடுத்தார்கள். நிதி இலாக்கா காரியதரிசி, விவசாய இலாக்கா காரியதரிசி, டைரக்டர் எல்லோரும் சேர்ந்து ஏற்பாடு செய்து வைத்திருக்கிற திட்டம், உருவான அத் திட்டத்தை நடத்தியே தீர வேண்டும்.

மீனவர்கள் கிராமங்களுக்கிடையே போக்குவரத்து வசதி குறைவாக இருக்கிறது என்று சொன்னார்கள். இன்று நிறைய மீனவ கிராமங்கள் இருக்கின்றன. ஒரு திட்டத்தை உருவாக்கி ஐந்து அல்லது பத்து ஆண்டுகளுக்குள், ஒவ்வொரு மாவட்டத்திலும் 20 அல்லது 30 மீனவக் கிராமங்கள் கொண்டதொரு பகுதியாக எடுத்து குடி தண்ணீர் வசதி, பாதை வசதி, மின்சார வசதி இவைகளைச் செய்து கொடுக்க வேண்டும். அப்படி எல்லா மீனவக் கிராமங்களுக்கும் வசதி செய்து கொடுக்க வேண்டும். பரீட்சார்த்தமாக தஞ்சையில் திருமலைவாசலில் ஏற்படுத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து செய்கிறார்களா என்று தெரியவில்லை. அதை எல்லா இடங்களுக்கும் விஸ்தரிக்க வேண்டும். பொதுப்பணித் துறையில் பணியாற்றுகிற ஒரு என்ஜினியர் பொறுப்பில், ஒரு உயர்தர என்ஜினியரைப் போட்டு மீனவக் கிராமங்களுக்குச் சாலைகள் போட்டு நீண்ட சாலைகளோடு தொடர்புபடுத்த ஒரு சர்வே செய்து இந்த மன்றத்தில் வைத்து அதற்காக நிதி ஒதுக்க ஏற்பாடு செய்தால் நலமாக இருக்கும். இதையெல்லாம் ஏற்கெனவே அரசாங்கத்தை நடத்தியவர்கள் கவனத்தில் இருந்த காரியங்கள், இடையில் அவை தடைப்படாமல் பரிசீலனை செய்து அதற்கான பணத்தை ஒதுக்க முன்வர வேண்டும்.

வற்றல் மீன் விற்பனை செய்வதற்கு நமக்கு சிலோன் ஒன்று தான் இருக்கிறது. அங்கு கூட இப்போது சைனாவிலிருந்து மீன் வற்றல் வந்து நம் வற்றலுக்கு விலை அதிகமாக இருக்கிறது என்று காரணம் காட்டி நமது மார்க்கெட்டைக் கெடுத்துக் கொண்டிருக்கிற நிலை இருக்கிறது என்று சொல்கிறார்கள். அதை நன்கு சரியான முறையில் பரிசீலனை செய்ய வேண்டும். இதற்கு என்று அங்கு ஒரு அதிகாரி இருக்கிறார். நம் மார்க்கெட்டு கெட்டு விடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். எந்த முறையில் அங்கு இந்த வற்றல் வியாபாரத்தைப் பெருக்க முடியும் என்று பார்க்கவேண்டும். அதற்குத் தடையாக ஏதாவது இருந்தால் அத் தடையைப் போக்க வேண்டும். அல்லது வெளியிடங்களில் அதற்கு வேறு மார்க்கெட் பிடிக்க ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

கடற்பாசி நம்மாநிலத்தில் உள்ள கடலில் அதிகமாகக் கிடைக்கிறது. அதை வைத்து நல்லதொரு தொழிலை ஆரம்பிக்க நாம் முன்னோடியாக இருக்க வேண்டும். அகார் அகார் என்றவற்றிற்கு ஒரு தொழிற்சாலை ஏற்படுத்துவதாக இருந்தது. இதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டும். திருநெல்வேலியில் சர்காளம் நிறையக் கிடைக்கிறது. அதை வைத்துக் கொண்டு அங்குள்ளவர்கள் உணவுப் பண்டங்கள் தயார் செய்துகொண்டி



ருக்கிறார்கள். நமக்கு கிடைக்கும் வீ வீட்ஸ்களைக்கொண்டு என்னென்ன பொருள்கள் தயாரிக்கலாம் என்பதில் கவனம் செலுத்தி அவைகளைத் தயார் செய்ய முன்வர வேண்டும். மீன் வளர்ப்பில் இன்னும் அதிகப்படியான கவனம் செலுத்தப்பட வேண்டும்.

அடுத்தபடியாக, விலங்கின வளர்ப்பு. (மணி அடிக்கப்பட்டது) நான் சொல்வது அவர்களுக்குக்கூட உதவியாக இருக்கும். ஆகவே என் நேரத்தை வெட்ட வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். நான் குற்றம் சொல்லவில்லை. யோசனைகள்தான் சொல்கிறேன். மூன்று ஆண்டுகளாக அது குறித்து நன்கு படித்து அதுபற்றிய விவரங்களைத் தெரிந்து, நல்ல பல காரியங்கள் செய்து கொண்டு வந்தவன் நான். நான் ஜீவாலஜி பி. ப. 1-30.
(ஹானர்ஸ்) படித்தவன். என்ஜினீயரிங் படித்துவிட்டு வரவில்லை. அதில் எவ்வளவு தூரம் சிரமங்கள் இருக்கின்றன, எப்படியெப்படி இருக்கின்றன என்றுதான் நான் சொல்லுகிறேனே தவிர சர்க்காரைக் குறை சொல்ல அல்ல. நாம் எவ்வளவு தூரம் ஈடுபாடுடையவர்களாக இருக்க வேண்டும், எவ்வளவு தூரம் கவனம் காட்ட வேண்டும் என்பதற்காகச் சொல்லுகிறேன். அவ்வாறு சொல்லுவதால் அவர்கள் பணியாற்றுகின்ற துறையிலே இருப்பவர்களுக்கு உதவியாக இருக்கும் என்ற எண்ணத்தில்தான் என்னுடைய கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். நிறுத்தச் சொன்னால் நிறுத்துக்கொள்கிறேன்.

மீன் இலாக்காவை மூன்று "ஸோன்களாகப்" பிரித்து ஒவ்வொருவருக்கும் ஒரு பணியைக் கொடுக்க முன்பு யோசனை செய்திருந்தது. அதைப் புதிய அமைச்சர்கள் பரிசீலனை செய்திருக்கலாம். அதிலே கஷ்டமிருக்கிறது என்று சொன்னால் மாற்றிக்கொள்ள உரிமை இருக்கிறது. மாற்றங்கள் செய்து கொள்ளலாம். எந்த அளவிற்குக் கஷ்டம் இருக்கிறது, சரியான நடைமுறையா, இல்லையா என்று பரீட்சார்த்தமாகப் பார்க்க வேண்டும்.

படகுகள் கட்டுவது பற்றி நான் ஒன்றைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். போட்டுகளுக்கு ஏர்கூலர் இஞ்சின் வைக்கும்போது படகின் அகல, நீள, எடை இவைகளை மாற்றிவைத்தால் நல்லதாக இருக்குமா என்பதைப்பற்றிப் பார்க்க வேண்டும். அவ்வாறு ஓரிரு படகுகளிலாவது எஞ்சின்கள் வைத்து அதை எந்த அளவிற்கு மாற்றியமைத்தால் சரியானதாக இருக்கும் என்று பரிசீலனை செய்து பார்க்க வேண்டும். அவ்வாறு ஓரிரு போட்டுகளைப் கட்டிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

காட்டிலாகாவைப்பற்றிச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன் இதற்குச் சென்ற ஆண்டு கொடுத்த பணம் சரியான முறையில் செலவு செய்யப்படவில்லை. இதிலே செலவழிக்கப்பட்ட தொகை திட்ட வேலைகளுக்காகவோ அல்லது மூலதன வேலைகளுக்காகவோ செலவு செய்யப்படவில்லை. பணியாளர்களுக்கும் பொது நிர்வாகத்திற்கும்தான் செலவழித்திருக்கிறார்கள். இலட்சக்கணக்கான ரூபாயைக் குறைத்திருக்கிறார்கள். இந்த இலாகாவிற்கு அதிகம் செலவழிக்கப்பட வேண்டும். டாக்டர் ஹாண்டே அவர்கள்கூட இதைத்தான் சொன்னார்கள். மூலதனச் செல்வு, திட்டச் செலவு ஆகியவற்றுக்குக் குறைப்பது பொருத்தமாக இராது. பணியாளர்களுக்கும், பொது நிர்வாகத்திற்கும் அதிகச் செலவு செய்தார்கள் என்ற போக்கில் போனால் சரியான முறையிலே அந்த இலாக்கா செயல்படுவதாகச் சொல்ல முடியாது.

கால்நடை இலாக்காவை எடுத்துக் கொண்டால், பால் உற்பத்தியை அதிகமாகப் பெருக்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். விவசாயத்திற்கு மாடுகள் முக்கியமாகயிருந்தாலும் விஞ்ஞான முன்னேற்றத்தின் காரணமாக மாடு தேவையில்லை என்ற நிலையில் டிராக்டர்கள் வந்துவிட்டன என்று சொல்லும்படியான சூழ்நிலைகள் வந்து கொண்டிருக்கின்றன. பால் வளர்ச்சிக்காக எருமைகளை வெளியிடங்களிலிருந்து கொண்டு வருகிறோம். அப்படிக் கொண்டு வருவதை வைத்துக்கொண்டு இங்கு மேலும்

விரிவுபடுத்த ஏற்பாடு செய்ய வேண்டும். அரசாங்கமே இந்த முழுப் பளுவையும் ஏற்றுச் செய்வதா என்று பார்த்தால் தனிப்பட்டவர்களுக்கும் ஊக்கமளிக்கலாம். கால்நடை வளர்ப்பதிலே உற்சாகமுள்ளவர்கள் எங்கெங்கே இருக்கிறார்களோ அவர்களை அணுகி, மாவட்ட வாரியாக எடுத்து அவர்களிடம் சென்று மாடுகளை வளர்ப்பதன் மூலம் வருமானம் இருக்கிறது என்று அவர்களுக்குத் தெரிவித்து, அவர்களை ஊக்குவிக்க மானியம் கொடுப்பது, கடன் கொடுப்பது முதலியவைகளை ஏற்றுக்கொண்டு செய்ய வேண்டும். அவ்வாறு செய்து நல்ல முறையிலே வளர்க்க வேண்டும்.

இன்று இந்தத் துறையில் படிப்பதற்கு வருவதில்லை என்று சொல்லப் பட்டது. அவர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளம் போதவில்லை. தவிரவும் எம்.பி.பி.எஸ். படித்துவிட்டு வருபவர்களுக்கும், கால்நடை மருத்துவம் படித்துவிட்டு வருபவர்களுக்கும் வித்தியாசமுண்டு. எம்.பி.பி.எஸ். படித்துவிட்டு வருபவர்கள் தனிப்பட்ட முறையில் "டிஸ்பென்ஸரி" நடத்துவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. கால்நடை மருத்துவத்தைப் படித்துவிட்டு வருபவர்களுக்கு நம்முடைய அரசாங்கம்தான் வழிவகை செய்ய வேண்டும். உத்தியோகப் பொறுப்பிற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். "டிஸ்டிரிக்ட் வெடரினரி ஆபீஸர்" களை ஒவ்வொரு டிவிஷனிலும் ஏற்பாடு செய்ய வேண்டும். ஏனென்றால் கால்நடைகளும் அதிகமாகப் பெருகி இருக்கின்றன. அதற்குத் தகுந்தாற்போல் நோய்களும் வந்திருக்கின்றன. கால்நடைகளுக்கு முதலில் ஜுரம் என்று வருகிறது, பிறகு இரண்டு நாட்கள் மூன்று நாட்கள் கழிந்த பிறகு இறந்துவிடுகிறது. அதற்கு மருந்து கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதா? ஏன் கண்டுபிடிக்கவில்லை என்று பார்க்க வேண்டும். அதற்குத் தடுப்பு ஊசி போட முடியுமா என்று பார்க்க வேண்டும். அதற்கு நல்ல பணியாளர்களை அமர்த்தி ஒரு டிவிஷனை அவர் பொறுப்பில் கொடுத்துப் பார்த்துக்கொள்ளும்படி சொல்ல வேண்டும்.

கால்நடை வளர்ப்பதில் மேய்ச்சேரி ஆடுகளைப் பற்றிச் சொன்னார்கள். அந்த ஆட்டின் மாமிச உணவுக்கு வெளியிடங்களில் நல்ல கிராக்கி இருக்கிறது. அதை விருத்தி செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். மேய்ச்சேரி பகுதியிலே நல்ல இடமிருக்கிறது. ஆடுகளை வளர்ப்பதற்குச் சந்தர்ப்பங்கள் இருக்கிறது. மேய்ச்சேரி பகுதியில் அந்த ஆடுகளுக்காகப் பண்ணை ஒன்றை ஏற்படுத்த ஏற்பாடு செய்ய வேண்டும்.

அடுத்து வெள்ளாடு வளர்ப்பதற்கு நிறைய இடங்கள் தென்னாற்காடு மாவட்டத்தில் இருக்கின்றன. உளுந்தூர்ப்பேட்டை பகுதியில் பரிக்கல் காட்டில் ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்புள்ளது. அங்கு ஒரு வெள்ளாட்டுப் பண்ணை ஏற்படுத்த வேண்டும். அங்கு வெள்ளாட்டுப் பண்ணை வைக்க வாய்ப்புள்ளது. காடுகளைப் பட்டா போட்டுக் கொடுக்கலாம் என்று சொன்னார்கள். எந்தக் காட்டைச் சொன்னார்கள் என்று தெரியவில்லை. என்னுடைய தொகுதியிலே காடுகள் இருக்கின்றது. அதை முன்னாலே, காட்டிலாக்கா அதிகாரிகள் வந்து பார்த்து அரிஜன மக்களுக்கும், பின் தங்கியவர்களுக்கும் விவசாயத்திற்குக் கொடுக்க ஏற்பாடு செய்யலாம் என்று சொன்னார்கள். அதற்கு மனுப் போட்டிருக்கிறார்கள். இப்பொழுது அவ்வாறு மனுப் போட்டவர்களை விட்டுவிட்டு வேறு யார் யாருக்கோ கொடுப்பதற்கு முயற்சித்து சிலர் அதையே பிழைப்பாக வைத்திருக்கிறார்கள் என்று பேசப்படுகிறது. அம்மாதிரி இருக்கக் கூடாது. யார், யார் முன்னாலே மனுப் போட்டார்களோ அவர்களுக்குக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

**மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் தலைமை.)**

தென்னாற்காடு மாவட்டத்தில் முந்திரித் தொழில் சிறப்பான முறையில் ஏற்படுத்துவதற்கு வாய்ப்பு இருக்கிறது. 3-வது 5-ஆண்டுத் திட்டத்தில் ஏற்பாடு செய்தார்கள். அப்போதிருந்த நிலை வேறு. இப்பொழுது விருத்தாசலம் வட்டாரத்திலே காடாம்புலியூர் பக்கத்திலே அல்லது என்னுடைய தொகுதியில் மணக்கொல்லை கிராமப் பகுதியில் ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்பு உள்ள முந்திரி காடுகள் இருக்கின்றன. எனவே அந்த இடங்களில் முந்திரித் தொழிலுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.



என்னுடைய தொகுதியிலே கோழிப்பண்ணை, கால்நடைப்பண்ணை ஏற்படுத்துவதற்கு முன்பு டைரக்டர், கலெக்டர் எல்லாம் ஏற்பாடு செய்தார்கள். இவர்கள் வந்தவுடனே பொறுப்பேற்றிருக்கிற அமைச்சர் "அது இங்கே வேண்டாம் என் தொகுதிக்கு மாற்றிவிடுங்கள்" என்று சொல்லி வேறு இடத்திற்கு மாற்றிவிட்டதாகத் தெரிகிறது. அது நல்ல முறையாக இருக்காது. இது சம்பந்தமாகப் பார்த்தால் விருத்தாசலம் வட்டம்தான் அந்த மாவட்டத்திலே மிகவும் பின்தங்கி உள்ளது. புள்ளி விவரம் எடுத்துப் பார்த்தால் தெரியும். ஒவ்வொரு ஜில்லாவிலும், ஒவ்வொரு தாலுககாவிலும் பார்த்துக் கணக்கெடுத்து எங்கெங்கு குறைவாக இருக்கிற என்பதைப் பார்த்து அந்த இடத்தை ஒதுக்கினார்கள். இப்பொழுது அதை வேறு இடத்திற்கு மாற்றிவிட்டார்கள். இப்பொழுது மாற்றிவிட்டாலும் இந்த ஆண்டிலே அப்படிப்பட்ட திட்டங்கள் வரும்பொழுது அங்கு அதை அளிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். இதில் அரசியல் கருத்துக்களோ வேறுபாடுகளோ இருக்கக் கூடாது. மேலும் கோழி வளர்ப்பதற்கும் எனக்கும் சம்பந்தமில்லை. அந்த வட்டார மக்களுக்குக் கோழி வளர்ப்பதற்குச் சந்தர்ப்பம் இருக்கும். அதற்கு வாய்ப்பளிக்க வேண்டுமென்று சொல்லிக்கொண்டு என்னுடைய கட்சியின் சார்பிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற வெட்டுப் பிரேரணையை நான் ஆதரித்து என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்ளுகின்றேன்.

**திரு. எஸ். இராமச்சந்திரன்** : பர்சனல் எக்ஸ்பிளனேஷன் சார், மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினரவர்கள் பேசும்பொழுது "நான் என்ஜினீயரிங் படித்துவிட்டு வரவில்லை, "ஜுவாலஜி" படித்துவிட்டு வந்தேன், அதற்காக அதிக நேரம் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். அவர்கள் என்ஜினீயரிங் படிக்காதது என்ஜினீயர்களுக்கு நல்லது.......... (மணி அடிக்கப்பட்டது).

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி** : துணைத் தலைவரவர்களே, நான் கொண்டு வந்த 3, 4 மானியங்களின் மீது 18 உறுப்பினர்கள் மிக்க பொறுப்புணர்ச்சியோடு தங்களது சீரிய கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். 18 பேர் பேசியதையும் குறிப்பெடுத்திருக்கிறேன். அனைவருக்கும் பதில் சொல்ல நேரம் கிடைக்காது என்பதால் இரண்டொருவர் சொன்னதைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய அவசியத்தில் இருக்கிறேன். மற்றவர்கள் சொன்னதையும் கவனத்தில்கொள்வேன் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

குறிப்பாகவும், சிறப்பாகவும் முன்னாள் அமைச்சர் பூவராகன் அவர்கள் மிகச் சிறந்த கருத்துக்களை, குறிப்பாக மீன் வளத் துறையைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அவர் இந்த இலாகாவைப் பொறுப்பேற்றிருந்ததால், அவருடைய அனுபவத்திலே ஏற்பட்ட நல்ல கருத்துக்களைக் கூறினார்கள். அதை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். எதிர்க்கட்சியினர் சொன்ன நல்ல கருத்துக்களை ஏற்றுக்கொள்ளமாட்டோம் என்ற அந்தக் கல்லூரியிலே நான் படிக்கவில்லை. எதிர்க்கட்சியிலுள்ளவர்களுக்கு மதிப்பளிக்க வேண்டுமென்ற நிலையிலேதான் நாங்கள் இருந்துகொண்டிருக்கிறோம்.

மீன்துறை அமைச்சராக இருந்த கனம் பூவராகன் அவர்கள் நாங்கள் விட்டுச்சென்றபொழுது சில குறைபாடுகள் இருந்திருக்கும். அதையும் திருத்த வேண்டுமென்ற முறையிலே பல அரிய கருத்துக்களையும் சொன்னார்கள். நான் இருந்தபோது ஏதாவது குறைபாடு இருந்திருக்கலாம், அதையும் திருத்திக் கொள்ள வேண்டுமென்று அவர்கள் இருந்தபொழுது குறைபாடுகள் இருந்திருக்கும் என்ற கருத்தை அவர்களே ஒத்துக்கொண்டதற்காக நான் அவருடைய நல்லெண்ணத்தைப் பாராட்டுகிறேன்.

**திரு. கோ. பூவராகன்** : இது ஏதோ பேச்சிலே அவர் கூறினார், ஒத்துக்கொண்டார், அந்தக் குறையை திருத்துவதற்கு நான் வந்திருக்கிறேன் என்று சொல்வது நல்லதல்ல. ஏற்கனவே, இருந்த முறையில்

மாற்றங்கள் செய்யலாம்—நல்ல காரியங்களுக்காக என்றுதான் சொன்னேன். அதை விட்டுவிட்டு அவரே ஒத்துக்கொண்டார், அதைத் திருத்துவதற்கு நான் வந்திருக்கிறேன் என்று சொன்னால் அது பொருத்தமாக இருக்காது என்று சொல்லிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** முன்பிருந்த தவறை மாற்றியமைக்கலாம் என்று குறிப்பிட்டு இருக்கலாம். அதை யெல்லாம் திருத்தியமைப்பது புதிய அரசினுடைய பொறுப்பு என்று அவர்கள் சொன்னதனால் தான் இதைக் குறிப்பிட்டேன்.

மேலும், அவர்கள் பல நல்ல கருத்துக்களைச் சொல்லுகின்ற நேரத்திலே கடைசியாக அவர் சொல்லியது முற்றிலும் உண்மைக்குப் புறம்பான கருத்தாக இருந்தது. அந்தக் கருத்து என்ன வென்றால், கோழிப் பண்ணை ஒன்றை அவருடைய தொகுதியில் அமைக்க இருந்தது பற்றியது. அதை என்னுடைய தொகுதிக்குக் கொண்டு போனதாக அவர் சொன்னார்கள். அவருக்கு யாரோ தவறான செய்தியைக் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் என்னுடைய மாவட்டத்துக்காரர் தான். என்னுடைய தொகுதிக்கு வருகின்றபொழுது, 'அங்கு அப்படி இல்லை' என்பதை அறிந்து தன்னுடைய எண்ணத்தை மாற்றிக் கொள்வார்களானால் அதுதான் சிறந்த பண்பாடு என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த மாதிரி நிலை ஏற்படவில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அது அவர்களுக்கு வேண்டுமானாலும் இருக்கலாம். ஆனால் என்னுடைய கழகத்திற்கு அப்படிப்பட்ட எண்ணம் கிடையாது. அதைப் போன்ற ஒரு கருத்திலே மாற்ற வேண்டுமென்ற எண்ணம் எங்களுக்கு நிச்சயமாகக் கிடையாது.

அடுத்து திரு. பூவராகன் அவர்கள் பேசுகையிலே நாங்கள் இருந்ததினால் முயற்சி செய்து கொடுத்ததை இவர்கள் பொறாமை உணர்ச்சியுடன் சொல்லுகிறார்கள் என்று நண்பர் இராமலிங்கம் அவர்கள் பேசியதைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். நான் இந்த நேரத்தில் ஒன்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். பிப்ரவரி 23-ஆம் தேதி சென்ற ஆண்டு காங்கிரஸ் மந்திரி சபை இருந்திருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழக அரசுதான் வரும் என்று தெரிந்திருந்தும்கூட, பிப்ரவரி மாதம் 28-ம் தேதியும், மார்ச் மாதம் 1-ஆம் தேதியும், மார்ச் மாதம் 3-ஆம் தேதியும், மார்ச் மாதம் 4-ஆம் தேதியும் போட் வழங்குவது சம்பந்தமான உத்திரவைப் போட்டிருக்கிறார்கள். ஆனால் அதே அமைச்சரவையிலே இருந்த தொழில் அமைச்சர் வெங்கட்டராமன் அவர்களும், ஹரிஜனத் துறை அமைச்சர் கக்கன் அவர்களும், அவர்கள் தேர்தலில் தோற்றுவிட்ட பிறகு அந்தக் காரணத்தாலே கையெழுத்துப் போட மறுத்து விட்டார்கள். புதிய அரசு வந்து அந்த ஃபைல்களைப் பார்த்துக் கொள்ளட்டும். என்று வைத்து விட்டார்கள். அந்த பண்பாடு அந்த அமைச்சரவையிலேயிருந்த அவர்களுக்கும் இருந்தது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன் அதிகாரத்தில் இருக்கிறபொழுது கையெழுத்துப் போடுவதை யாரும் தவறு என்று சொல்லமாட்டார்கள். அவர்கள் தோற்ற பிறகு இதுபோன்று கையெழுத்துப் போட்ட காரணத்தாலேதான் அதைச் சொல்லிக் குறிப்பிட நேர்ந்தது என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

'விசைப் படகு கட்டுவதற்குத் தேவையான மரங்களைக் காட்டிலாகாவிலிருந்தே வாங்க வேண்டும். அதைக் கொண்டு போட் கட்ட வேண்டும்' என்று சொன்னார்கள். நம்முடைய காடுகளிலே இருக்கின்ற ஆயினி என்ற ஒரு மரமும், வெண்தேக்கு என்ற மரமும் தான் போட் கட்டுவதற்கு நல்ல மரங்கள். 200 படகுக் கட்ட ஆயினி என்ற மரம் 40,000 கன அடி தேவைப்படுகிறது. ஆனால் நம்முடைய காடுகளிலே 10,000 கன அடி அளவுக்குத்தான் கிடைக்கிறது. தேக்குக்கு 20,000 கன அடி அளவுக்குத் தேவைப்படுகிறது. ஆனால் நம்முடைய காடுகளிலே 5,000 கன அடி அளவுக்குத்தான் கிடைக்கிறது. ஆகவே, சாத்தியமில்லாததைச் செய்ய வேண்டுமென்று திரு. பூவராகன் அவர்கள் சொல்லியிருக்கிறார். அதை அமுல் படுத்த முடியாமைக்காக வருந்துகிறேன்.



குளங்களில் மீன் வளர்க்க வேண்டுமென்று திரு. பூவராகன் அவர்கள் சொன்னார்கள். இப்பொழுதே வளர்த்துக் கொண்டுதான் இருக்கிறோம். அவருடைய வீட்டுக் கிணற்றிலே வேண்டுமானால், அவர் மீன் வளர்க்க விரும்பினால் அதற்கும் வழி செய்யலாம். திரு பூவராகன் அவர்கள் மீன் சாப்பிடுவது கிடையாது. எங்கெங்கு மறுப்பில்லையோ அங்கெல்லாம் மீன் குஞ்சுகள் விடப் பட்டு மீன் வளர்ப்புக்கு வேண்டிய ஏற்பாடுகளையும் செய்யத் திட்டம் போட்டு, அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

'கடலூரிலே போட் கட்ட வேண்டும் ; அங்கு ஒரு தொழிற்சாலை வேண்டும் என்று சொன்னார்கள். அந்தத் திட்டம் இப்பொழுதே ஆலோசனையிலே இருக்கிறது. அந்தத் திட்டத்தை விரைவிலே நிறைவேற்ற இருக்கிறோம். அதற்காக 8 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. கடலூர், தூத்துக்குடி, குளச்சல் ஆகிய மூன்று இடங்களிலே விரைவிலே ஏற்படுத்த வகை செய்யப்பட்டிருக்கிறது. இது நிதி நிலையைப் பொறுத்து 1969-70 அல்லது 1970-71-லே நிச்சயமாக வரும் என்பதைத்தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் சர்வீஸ் ஸ்டேஷன்கள் வேண்டுமென்று திரு. பூவராகன அவர்கள் சொன்னார்கள். ஆனால், அவர்கள் இருந்தபொழுதே சர்வீஸ் ஸ்டேஷன்கள் இருந்தன. அதை எப்படி மறதியாகச் சொல்லிவிட்டார் என்று தெரியவில்லை. சென்னை, இராமேஸ்வரம், நாகபட்டினம், தூத்துக்குடி, குளச்சல் ஆகிய பகுதிகளில் இப்பொழுதும் இருக்கின்றன. இந்த ஆண்டில், புதியதாகக் கடலூரிலும் மண்டபத்திலும் சர்வீஸ் ஸ்டேஷன்கள் துவக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

'நம்முடைய சங்குகள் கூடுதலான விலையில் வெஸ்ட் பெங்காலுக்கு அனுப்பப்படுகின்றன. சங்கை அதிகமாக அனுப்ப வேண்டும்' என்று. சொன்னார்கள். இப்பொழுதும் அனுப்பிக் கொண்டுதான் இருக்கிறோம். திரு. பூவராகன் அவர்கள் வைத்துவிட்டுப் போன சங்கைக்கூட விற்றிருக்கிறோம் என்பதையும் சொல்லிக்கொள்கிறேன்.

**திரு. கோ. பூவராகன் :** இந்தச் சங்குகளைக் கூடுதலான விலைக்கு விற்றதாக அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். அதற்கு இவர்களாலே என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்றுதான் கேட்டேன். சிலோனில் இருந்து சங்கு வந்தால் நம்முடைய சங்கு விற்பனையாகாது என்று மத்திய அரசாங்கத்தினிடம் சொல்லி அதைந் டுமென்று நிறுத்தினோம். அந்த சங்கு இங்கு வராததால் இந்தச் சங்கினுடைய விலை இன்னும் அதிகமாக இருக்கிறது.

சர்வீஸ் ஸ்டேஷன்களைப் பற்றி சொல்லுகின்றபொழுது அது ஏற்கனவே இருந்திருக்கிறது. ஆனால் இப்பொழுது இருக்கிற சர்வீஸ் ஸ்டேஷன்களிலே போதுமான உறுப்புகள் இல்லை. அதை வாங்கி வைக்க வேண்டுமென்று தான் சொன்னேன். அதைத் தனிப்பட்ட முறையிலே கவனிப்பதற்கு அதிகாரிகளை வைக்க வேண்டுமென்று சொன்னேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** இப்பொழுதே சரியாகத்தான் இயங்கிக்கொண்டு இருக்கிறது. குறை இருந்தாலும் எடுத்து வைக்கலாம். அதை நீக்குவதற்குத் தகுந்த நடவடிக்கை எடுப்போம் என்றும் இந்த சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்கிறேன்.

திரு. ஹாண்டே அவர்கள் ரஷியாவிலிருந்து நமது நாட்டின் ஆழ்கடல் வளத்தைக் கவனிப்பதற்காக ஒரு குழு வந்தார்களே அது என்ன ஆயிற்று என்று கேட்டார்கள். வழக்கமாக மத்திய

அரசு இந்த விஷயத்திலே கொஞ்சம் கவனம் செலுத்தாமல் இருக்கிறது. (குறுக்கீடு) இருக்கிற நிலைமையைச் சொல்லுகிறேன். கோபப்படுவதிலே பிரயோஜனம் இல்லை நமது தமிழகத்தில் தூத்துக்குடியில் பரிசீலனை செய்து அவர்கள் அறிக்கை இந்திய அரசுக்கு நேராக ரஷ்யர்களால் அனுப்பப்பட்டது. அது இந்திய அரசின் பரிசீலனையில் உள்ளது.

உலக வங்கிக் குழு தூத்துக்குடிக்கு வந்து, 120 அடி, 90 அடி நீளம் வரை உள்ள நீண்ட விசைப் படகுகளைக் கொண்டு, ஆழ்கடல் மீன் பிடிப்புத் திட்டத்திற்கு உள்ள வழிவகைகளை ஆராய்ந்துள்ளார்கள். இதற்கு வேண்டிய நிதி வசதிகளை உலக வங்கி வழங்கும். இத் திட்டத்திற்கு அங்கீகாரம் அளிக்க வேண்டிய நிலையிலே மத்திய அரசுதான் இருக்கிறது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஞானசம்பந்தன் அவர்கள் 'எதற்காக நிதியைக் குறைத்திருக்கிறீர்கள்.' என்று கேட்டார்கள். திரு இராமமூர்த்தி அவர்கள் திரு. ஜார்ஜ் அவர்கள், இதிலே அக்கறை செலுத்தாத நிலையிலே அந்தக் கருத்திலே குறைத்திருப்பதாகச் சொன்னார்கள். சென்ற ஆண்டை விட அதிகமாகச் செலவு ஆகக் கூடிய ஒரு சூழ் நிலை தான் இருக்கிறது என்று நிச்சயமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். நைலான் வலை விஷயத்திலே 4,87,200-ஐ 2,21,000 ஆகக் குறைத்திருக்கிறோம். இரண்டாவது திட்டத்திற்கு வாங்கிய நைலான்கள் போதுமானதாக இருப்பதாலேயே இதைக் குறைத்து விட்டோம். மேலும், போட் விஷயத்தில் 32,67,000, 19,74,-00-ஆக குறைக்கப்பட்டிருக்கிறது. 1·35 என்ஜின்கள் வாங்கி வைக்கப்பட்டிருக்கிற காரணத்தாலேயே குறைக்கப்பட்டிருக்கிறது. ரிவைஸ்டு எஸ்டிமேட் வருகின்றபொழுது, எவ்வளவு தொகை ஒதுக்க முடியுமோ அந்த அளவு ஒதுக்குவதற்கான வழியைப் பார்த்துக்கொள்ளுவேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த மீனவர் விஷயத்திலே அவர்களுக்கெல்லாம் இன்ஷூரன்ஸ் வேண்டுமென்று திரு. ஞானசம்பந்தன் அவர்கள் குறிப்பிட்டார்கள். இப்பொழுது அதற்கு வேண்டிய முயற்சிகளை எல்லாம் எடுத்துக் கொண்டு வருகிறோம். உண்மையிலே ஆழமான கடலிலே பயணம் செய்பவர்களுக்கு ஆபத்து இருக்கிறது என்ற முறையில் அதற்கு வேண்டிய ஏற்பாடுகளை எல்லாம் செய்து வருகிறோம். போட்கள் டெஸ்ட்ராய் ஆகிவிட்டன. அதற்கு வேண்டிய தொகை யெல்லாம் கொடுக்கவில்லை யென்று சொன்னார்கள். 22 படகுகளுக்கு இன்ஷூரன்ஸ் பணம் வழங்கப் பட்டிருக்கிறது: இன்னும் 36 படகுகளுக்குத் தான் வழங்க வேண்டும். அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதையும் சொல்லிக் கொள்கிறேன்.

போட்கள் கடனுக்கு . வாங்குவதை இன்ஷூரன்ஸ் செய்து கொள்வது நல்லது என்று அந்தத் திட்டத்தை சில பேர் உணர்ந்து கொள்கிறார்கள். சிலர் உணராத காரணத்தாலே கஷ்டமான நிலையிலே இருக்கிறார்கள்.

இன்னும் திரு ஜார்ஜ் அவர்கள் பேசுகின்றபொழுது மீன்குஞ்சுகள் கழக ஆட்சியில் அதிகமாக வளர்க்கவில்லை யென்று தெரிவித்தார்கள். எங்கள் ஆட்சியில் மீன் குஞ்சுகள் அதிகமாகத்தான் வளர்க்கப்பட்டிருக்கிறது. 1966–67-ல் 9·20 கோடி வளர்க்கப்பட்டிருக்கிறது. 1967–68-ல் அது 11 கோடியாக உயர்ந்திருக்கிறது. 1968–69-ல் அதை 14 கோடியாக உயர்த்தத் திட்டமிட்டிருக்கிறோம்.

தமிழ்நாட்டில் உள்நாட்டு நீர் நிலைப் பரப்பு 8 இலட்சமாக இருக்கிறது. இதில் 1·5 இலட்சம் ஏக்கர் வற்றாத நீர் நிலைகள். 3·9 இலட்சம் ஏக்கர் பருவகால நீர் நிலைகள். l ஆக, 5·4 இலட்சம் ஏக்கர்கள் நீர்நிலைக்கு உகந்தவையாகக் கருதப்பட்டு அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எல்லாம் எடுக்கப்பட்டு வருகிறது.



இன்னும் நைலான் வலை விஷயத்தில் தற்சமயம் 25 சதவீதம் மீனவர்களுக்கு மானியமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசு அதற்காகக் கொடுத்துக் கொண்டிருந்த தொகையைக் கொடுக்காமல் நிறுத்தி விட்டதால் தமிழக அரசு முழுத் தொகையையும் கடனாகக் கொடுக்க வேண்டிய நிலை வந்திருக்கிறது.

வாட்டர்கூலர் என்ஜின் நல்லதா அல்லது ஏர் கூலர் என்ஜின் நல்லதா என்பதுப் பற்றி இரண்டுவிதமான மாறுபட்ட கருத்து இருந்து கொண்டு வருகிறது. ஒரு சாரார் வாட்டர் கூலர் என்ஜின் நல்லது என்று சொல்கிறார்கள். மற்றொரு சாரார் ஏர் கூலர் என்ஜின் நல்லது என்று சொல்கிறார்கள். இந்த நிலையிலே அதைப்பற்றி அதிகமாகச் சர்ச்சைக்குப் போகாமல், ஏற்படக்கூடிய தவறுதல்களை மட்டும் நாம் கவனித்துக் கொண்டிருக்கிறோம்.

மேலும், திரு. மணி அவர்கள் பேசுகிறபொழுது மீனவர்களுக்குச் சமுதாயக் கூடங்கள் கட்டிக்கொடுக்கப்பட வேண்டும் என்று சொன்னார்கள். அளத்துக்காடு, சின்னமுனை, கனமம்குடா, முத்துக்குடா, புதுக்குடி ஆகிய இடங்களில் கம்யூனிடி சென்டர்கள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு கூடத்திலும் ஒரு ரேடியோ பொருத்தப்படும். ஒவ்வொரு கூடத்திற்கும் ரூ. 1,000 பெறுமானமுள்ள உணவுப் பண்டங்கள் தயாரிக்கும் பாத்திரங்கள் வாங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. புயல், மழை காலங்களில் இந்தக் கூடங்கள் மீனவர்களுக்கு அடைக்கலம் அளிக்கப் பயன்படுத்தப்படும். மேலும், மீனவர்கள் ஆயுள் இன்ஷூரன்ஸ் திட்டம் பற்றிக் கூறினார்கள். ஜப்பான் நாட்டில் அமுலில் இருப்பதுபோல் இங்கே மீனவர்களுக்கு இன்ஷூரன்ஸ் திட்டத்தை அமுல் நடத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு தான் இருக்கிறோம் என்பதை கனம் அங்கத்தினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ராமமூர்த்தி அவர்கள் கடலூர் துறைமுகத்தை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அது மீன்பிடித் துறைமுகமாக்கப்பட வேண்டிய அளவுக்குக் கவனிக்கப்பட்டு வருகிறது. அதற்காக ரூ. 8 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அவர்கள் பகுதியில் மீன்களை எடுத்துச் செல்ல வண்டி வசதிகள் இல்லை என்று சொன்னார்கள். கோட்டம்குப்பம், மரக்காணம் பகுதியிலிருந்து திண்டிவனத்திற்கு எடுத்துச் செல்வதற்கு வண்டிகள் இல்லை என்று சொன்னார்கள். மூன்று வண்டிகள் இருக்கின்றன. அதில் இன் ஸோலேட் வானும் இருக்கிறது. அவைகளின் மூலம் தான் இப்பொழுது மீன்களை எடுத்துச் செல்கிறார் கள். அவர்கள் பகுதியில் மீனவர்கள் குப்பங்களுக்கு ரோடு போடவில்லை என்று கூறினார்கள். ஆலங்குளம், தாளங்காடு வழியாக வாசங்குப்பம், கைப்பாளிக்குப்பம், எக்கிக்குப்பம், ஜெகன்னாதபுரம் ஆகிய குப்பங்களுக்கு ரோடு வசதி செய்யப்பட்டிருக்கிறது. அதற்காக ரூ. 19,000 செலவழிக்கப்பட்டிருக்கிறது.

'கடலோரப் பகுதியினருக்கு அபாய அறிவிப்பு. அதாவது சைக்ளோன் வந்தால் முன்கூட்டியே தெரிவிப்பதில்லை' என்று சொன்னார்கள். வானொலி மூலம் முன்னெச்சரிக்கை செய்வதற்கு ஏற்பாடு உள்ளது. மேலும் துறைமுக நிலையத்தில் புயல் பற்றிய சிக்னல்கள் போடப்படுகின்றன. அதோடு கூட, புயல் வருவதற்கு 24 மணி நேரத்திற்கு முன்னால் டாம்டாம் அடிக்கப்படுகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிரெஞ்சு நாட்டிலிருந்து இரண்டு படகுகள் நமக்கு இனமாக, அனுப்பப்பட்டிருக்கின்றன அந்தப் படகுகளை மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் ஏற்று, எப்படி அந்தப் படகுகளை உபயோகப்படுத்துவது

அதில் சென்று மீன் பிடிப்பது எப்படி என்பதையெல்லாம் அந்த நாட்டு நிபுணர்கள் இங்கேயே தங்கி -கற்றுக் கொடுக்கிறார்கள். அதனால் ஆழ்கடல் சென்று மீன் பிடிக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. மீன் பிடிப்பதில் தனிப்பட்டவர்கள் அந்த எக்ஸ்பெர்ட்டுகளிடம் பயிற்சி பெறுகிறார்கள்.

இன்னும் 'மீன் மலிவான விலையில் கிடைக்கவேண்டும்' என்று திரு. பூவராகன் அவர்கள் சொன்னார்கள். மேட்டூர் பகுதியில் ரூ. 1·25-க்குக் கிடைக்கிறது. அவர்களுக்கு மீன் விலையைப் பற்றித் தெரியாது என்று நினைக்கிறேன். ஏதோ யார் சொன்னதையோ வைத்துக்கொண்டு அதிகமான விலை என்று தவறாக கருதிக் கொண்டு சொல்கிறார்கள். வங்காளத்தில் ரூ. 6·25-க்கு விற்கப் படுகிறது என்றால் ஆதாயம் தான். அதனால் மீனவர் சமுதாயம் தான் ஆதாயம் அடைகிறார்கள். கூட்டுறவு சொஸைடி மூலம் மீன்களை பிடிக்க வைத்து, அதனால் மீனவர்கள் பயனடையக்கூடிய வகையில் கார்ப்பரேஷன் மூலம் விற்கப்பட்டு வருகிறது என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கோ. பூவராகன் :** வங்காளத்தில் ரூ. 6·25-க்கு விற்கிறது மீன் மீனவர்களுக்கு எந்த அளவுக்குப் பங்கு கொடுக்கப்படுகிறது. எந்த அளவுக்கு அவர்களுக்கு பயன்படுகிறது ? மீனவர்களிடமிருந்து மேட்டூரில் ஒரு கிலோ என்ன விலைக்கு வாங்குகிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் இங்கே அறிவிக்க வேண்டும். மீன் விலையைப் பற்றி எனக்குத் தெரியும். எல்லா விலைகளையும் கண்டு வைத்திருக்கி கிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** அந்தப் பழக்கம் வந்திருந் தால் நல்லது. (குறுக்கீடு) குடும்பத்துக்காக மீன் வாங்கிக் கொடுத்தாலும் கூட அதுவும் நல்லது. ரூ. 1·25-க்குத்தான் மேட்டூரில் விற்கிறது. அதில் சந்தேகம் இருந்தால் சேலம் போகும் வழியில் மேட்டூர் பகுதியில் இறங்கி எந்த விலைக்கு விற்கிறார்கள் என்று தெரிந்து கொண்டு வரும்படிக் கேட்டுக்கொள் கிறேன்.

**திரு. கோ. பூவராகன் :** மேட்டூரில் மீனவர்களிடமிருந்து வாங்கி வெளியிடங்களில் கல்கத்தாவில் விற்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். மிக்க மகிழ்ச்சி. மீனவர்களிடமிருந்து ஒரு கிலோ என்ன விலைக்கு வாங்குகிறார்கள் ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** ரூ. $2\frac{1}{2}$, $3\frac{1}{2}$ என்று ஸைஸ் பிரகாரம் விற்கிறார்கள். எடுத்துச் செல்வதற்கு சார்ஜ் முதலியவை யெல்லாம் இருக்கிறது. உறுப்பினர் அவர்கள் தலையை அசைத்தும் பிரயோசனம் கிடையாது. எங்களிடத்திலுள்ள தகவல்களை வைத்துச் சொல்கிறேன்.

மீனவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு ரூபாய் ஒரு லட்சம் ஒதுக்கி, 100 வீடுகள் ஆரம்பத்தில் கட்டுவது என்ற முடிவுக்கு வந்திருக்கிறோம். சர்க்கார் நிதி நிலை எந்த அளவுக்கு இருக்கி றதோ அந்த நிலையைப் பொறுத்து, அந்த அளவுக்குச் செய்ய முடியும்.

யான்மார் என்ஜின்களை எல்லா மீனவர்களும் விரும்புகிறார்கள். சென்ற ஆண்டில் 52 யான்மார் என்ஜின்களாக இருந்தது. இந்த ஆண்டில் 102 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. மத்திய அரசிடம் வற்புறுத்திச் சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கு வேண்டிய கிராக்கி இருக்கிறது என்று எடுத்துச் சொல்லபட்டிருக்கிறது. மத்திய அரசு ரஸ்டன், கிர்லான்ஸ்கார் போன்ற உள்நாட்டுச் பொருள்களை



மீனவர்களுக்கு அளிக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். ஜப்பான் உதவி கொண்டு எண்ணூரில் ஒரு யான்மார் என்ஜின் தொழிற்சாலை ஆரம்பிக்க இருக்கிறோம். ராயபுரத்தில் மீனவர்கள் டிரையினிங்குக்காக ஒரு மத்திய டிரையினிங் ஸ்கூல் அமைக்க இருக்கிறோம்.

நேற்று முன்தினம் அகில இந்திய உலக வர்த்தகத் தொழிற் கண்காட்சியிலுள்ள போலீஷ் பெவிலியனைச் சேர்ந்தவர்கள் இங்கு என்னை வந்து சந்தித்தார்கள். நாங்களும் அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்யத் தயாராக இருக்கிறோம். டாக்டர் ஹாண்டே அவர்கள் சார்ந்திருக்கிற கட்சியின் கொள்கைப்படி, தனிப்பட்டவர்கள் ஏதாவது மீன் தொழிலை நடத்துவதற்கு வாய்ப்பு இருக்கிறதா என்று பார்த்து, அதற்கும் வாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது. சர்க்கார் மூலம் கட்டப்பட்ட ஐஸ்பிளாண்ட் குத்தகை எடுப்பதற்கு டெண்டர் விட்டிருக்கிறோம், யார் அதிக விலைக்குக் குத்தகை எடுக்கிறார்களோ அவர்களுக்குக் கிடைக்கும். எறு மீன்களை கடலூரிலிருந்து வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு) நான் மீன்கள், ஆடுகள், கோழிகள் இவற்றைப் பற்றி பேசிக் கொண்டே போனால் பசி எடுக்காமலேயே கேட்டுக் கொண்டிருக்கலாம்.

அடுத்தபடியாக, கால்நடை இலாகாவில் பணியாற்றுகின்ற ஊழி யர்களுக்குக் கெல்லாம் பேஸ்டு ப்ரொக்ராமில் உத்தியோக உயர்வு கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்களுடைய சர்வீஸ் காயம் செய்யப் பட்டு வருகிறது. அதாவது பெர்மனெண்ட் செய்யப்பட்டு வருகிறது. தற்சமயம் கால்நடை மருத்துவக் கல்லூரியில் பணியாற்றுகின்ற பணியாளர்களுக்கும், ராணிப்பேட்டை ஆராய்ச்சி நிலையத்தில் பணியாற்றுகின்ற பணியாளர்களுக்கும் அவர்களுடைய சர்வீஸும் நிரந்தரமாக்கப்பட்டு வருகிறது. கால்நடை ஆஸ்பத்திரியில் இருக்கிற டாக்டர்களுக்கு கெஜெடெட் பதவி அளிக்கப்படுவதற்கான உத்தரவு பிறப்பிக்கபட்டிருக்கிறது. அதுபோலவே, இன்னும் ஸ்டாக்மென் கிரேடு I , கிரேடு II ஆகியோர்களுக்கு உத்தியோக உயர்வுகளெல் லாம் கொடுக்கப்பட்டிருக்கிறது. சம்பள உயர்வும் அளிக்கப் பட்டிருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

ஆராய்ச்சிக் கல்வித் துறையை தனியாகப் பிரித்து வெடெரினரி காலேஜ் டீன் அவர்களை அடிஷனல் டைரக்டர் ஆகப் போட்டிருக்கிறோம். கனம் உறுப்பினர் பூவராகன் ஒரு கருத்தைச் சொன் னார்கள். மார்க்கெட்டிங்குக்கு ஒரு தனி டெப்யூடி டைரக்டர் ஆஃப் பிஷரிஸ் போட்டு கவனிக்க வேண்டும் என்று சொன்னார் கள். இந்தத் துறையைப் பொறுத்த வரையில் முன் கூட்டியே அந்த ஏற்பாடு செய்யப்பட்டுவிட்டது என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன். அதே முறையில் கால்நடைத் துறையிலும் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறோம்.

பால் பெருக்கம் செய்ய வேண்டும் என்பது தான் நோக்கம். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து கொண்டு தான் வருகிறோம். அதற்காக வேண்டி ஒரு குழு அமைத்து ஏதாவது தவறுகள் இருக்குமானால், அதைக் கண் காணிக்கும்படிச் சொல்லியிருக்கிறேன். கன்றுக்குட்டி வளர்ப்பதற்கு மானியம் கொடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். கன்றுக்குட்டி வாங்கா மலேயே, வளர்க்காமலேயே பல பேர்கள் மானியத்தை வாங்கி ஏப்பம் விட்டிருக்கிறார்கள் என்ற செய்தி வந்துகொண்டிருக்கிறது. ஆகவே தான் இந்த நிலை பற்றி ஒரு கமிட்டி பரிசீலனை செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கி கிறேன். 10 பேர்கள் பால் பெருக்கத்திற்காகப் பணம் வாங்கியும் மாடு வாங்கவே இல்லை. திரு. விநாயகம் அவர்கள் நல்ல மாடுகள்

வாங்குவதற்கு இன்னும் கொஞ்சம் கெடு கொடுக்கக் கூடாதா என்று கேட்டதெல்லாம் ஞாபகம் இருக்கும் என்று நினைக்கிறேன். பால் உற்பத்தித் திட்டத்தின் கீழ் ரூ. 5,000 கொடுக்கப்பட்டு, அந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். ரிண்டர்பெஸ்டு வியாதியைப் போக்குவதற்கு என்ன ஏற்பாடு என்று கேட்டார்கள். அதற்காக ரூ. 5 லட்சம் ஒதுக்கியிருக்கிறோம். முன் நடவடிக்கை இப்பொழுது எடுக்கப்பட்டு வருகிறது. ராணிப்பேட்டையிலுள்ள ஆராய்ச்சிக் கூடத்தில் அதற்கு வேண்டிய ஆராய்ச்சி செய்யப்பட்டு வருகிறது.

மேலும், ஆட்டுக் கிடாக்கள் பஞ்சாயத்து ஒன்றிப்பு மூலம் கொடுக்கப்
பி. ப: 2-00 படுகின்றன. நல்ல தரமான ஆடுகளை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு தான் செயல்பட்டு வருகிறோம். மேச்சேரி ஆடுகளைப் பற்றிச் சொன்னார்கள். அந்த இனத்தை விருத்தி செய்வதிலும், தடை யில்லாமல் இருக்க வேண்டும் என்றுதான் செய்கிறோம்.

கனம் கோதண்டராமையா வெள்ளாடு மேய இடம் வேண்டும் என்று சொன்னார்கள். ஹோசூர், தர்மபுரி போன்ற இடங்களில் ஏழை விவசாயிகள் வெள்ளாடுகளை நம்பித்தான் வாழ்கிறார்கள். காடுகளை மேய்ச்சலுக்கு ஒதுக்க வேண்டும் என்று பஞ்சாயத்துக் கேட்கிறது. ஆனால் காட்டிலாகா ஒரு நாளும் அதற்குச் சம்மதிக்காது. அது ஒரு தனிப் பிரச்சினை. வெள்ளாடு மேய அனுமதிக்க மாட்டார்கள். காட்டிலாகா அதிகாரிகளுடைய சம்மதத்தைப் பெற்று சர்க்காருக்கு அறிவித்தால், அதைப்பற்றி, பரிசீலித்துப் பார்க்கலாம். அதனால் விவசாயிகளுக்கு நன்மை கிடைக்கும் என்று தெரிந்தால் நடவடிக்கை எடுக்கலாம்.

பொதுவாக சிகிச்சை செய்ய 50 மருந்தகங்கள், வெடிரினரி டிஸ்பென்சரிகள் வைக்கப்பட்டிருக்கின்றன. சூணம்பட்டு பகுதியில், மருந்தகம் திறக்கவில்லை என்று குறிப்பிட்டார்கள். திரு. கோதண்டராமன். அதற்குக் காரணம், தண்ணீர் வசதி, மின்சார வசதி இல்லை என்பதுதான். மின்சாரம் இல்லாவிட்டாலும் கூடத் தண்ணீர் வேண்டும். என்ன காரணத்தினாலோ பஞ்சாயத்து யூனியன் காலம் கடத்துகிறார்கள். அதைப்பற்றி கேட்டிருக்கிறேன். வாடகைக் கட்டடத்தில் ஏன் இருக்க வேண்டும் என்றும் கேட்டிருக்கிறேன். அதற்கான நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் தெரிவிக்கிறேன்.

எஸ்டாப்ளிஷ்மெண்டுக்கு அதிகச் செலவு என்று சொன்னார்கள். கூடுதலான அதிகாரிகளைப் போட்டுவிடுவதால் அல்ல, நாங்கள் அப்படிப் போடவில்லை. சம்பளம் அதிகமாயிருக்கிறது. டி. ஏ. அதிகம். ஆகவே அதனால் செலவு அதிகமாயிருக்கிறது. வேறு காரணத்தால் அல்ல. நாங்கள் பொறுப்புக்கு வந்த பிறகு அனாவசியமான போஸ்டுகளைக் குறைத்திருக்கிறோம். கூடுதலாகப் போடவில்லை.

கோழி வளர்ப்புத் திட்டத்திலே முட்டை 25, 26 காசுக்குக் கொடுக்கிறோம். வெளியிலே, 35, 40 காசு அளவில் விற்கிறது. வெளியிலே கோழி 10 ரூபாய் என்றால் பண்ணையில் ரூ. 5 என்ற அளவில்தான் இருக்கிறது. அதோடு உரித்த கோழியும் தேனாம்பேட்டைப் பகுதியில் மலிவான விலையில் பேக் செய்யப்பட்டு விற்கிறார்கள். முழுக் கோழியை வாங்கி, உரிப்பதும் கஷ்டம். ஆகவே, அந்த ஏற்பாடும் செய்யப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சொல்ல விரும்புகிறேன். பொறுப்புக்கு வந்த பிறகு என்னதான் செய்து விட்டீர்கள் என்று கேட்டார்களே, அதற்காகச் சொல்லுகிறேன். அவசரம் அவசரமாகச் சொல்ல வேண்டியிருக்கிறது. நேரம் இல்லை. கோழி விளக்கப் புத்தகத்திலே படம் வந்திருக்கிறது. அது ஆஸ்திரேலியா



நாட்டிலிருந்து இலவசமாக நமக்கு 150 கடாக்களும், கடாரிகளும் கன்றுகளும் வந்த கன்சைன்மெண்டிலிருந்து நம் மாநிலத்திற்குக் கொடுக்கப்பட்ட 18-ஐ சேர்ந்தது. அந்த வரைடியிலிருந்து அதிகமான பால் கிடைக்கும். அதற்கு வேண்டிய சீதோஷ்ண நிலைக்காக, நீலகிரிப் பகுதியிலும், கொடைக்கானல் பகுதியிலும் வைக்கப்பட்டிருக்கின்றன. அந்தத் தரமான இனத்தை வளர்க்க வேண்டும். ஒரு மாடு வர 6,000 ரூபாய் ஆகிறது. ஆனாலும், பல்லாயிரக்கணக்கான ரூபாய்களைத் தேடிக் கொடுக்கக் கூடிய நிலையில் இருக்கிறது. அது பலன் கொடுக்கும் போது பல்லாயிரக் கணக்கான ரூபாய் கிடைக்கும்.

பன்றியைப் பற்றி ஒரு கனம் உறுப்பினர் குறிப்பிட்டார்கள். திரு. ஞானசம்பந்தம் என்று நினைக்கிறேன். வெள்ளைப் பன்றி கொழு கொழுப்பாக இருக்கும். பன்றி இறைச்சி பல வியாதிகளைப் போக்குகிறது என்கிறார்கள். மூல வியாதியைப் போக்க பன்றிக் கறி நல்லது என்கிறார்கள். ஒரு பன்றியை அடித்தால் ஆயிரம் பேர் சாப்பிடலாம் என்றும் சொல்லுகிறார்கள். அதற்குக் கூட மானியம் கொடுக்கிறோம். அவற்றை வாங்கி வளர்க்க வேண்டும். அடித்துச் சாப்பிட்டு விடக் கூடாது. (குறுக்கீடு) டெம்டிங்கா இருந்தால் சாப்பிட்டு விடலாம். ஆனால், திரு. விநாயகம் சாப்பிடக் கூடாது. சாப்பிட்டால் என்ன ஆவாரோ, அவர் குறைக்கத்தான் வழி செய்ய வேண்டும். எதைச் சாப்பிட்டால் குறைக்கலாம் என்று வேண்டுமானால் சொல்லுகிறேன். பன்றி பார்க்க அழகானது. நாம் நினைக்கிற மாதிரியில்லை. அது நல்ல காய், கறி , புல் இவற்றைத்தான் சாப்பிடும். சைவ உணவைச் சாப்பிடும் பன்றி தான் அது. கொழு கொழு என்று இருக்கும், வெள்ளைப் பன்றி. ஒரு சமயத்தில் 20 குட்டிகள் போடுகிறது. மூன்று மாதத்திற்கு ஒரு முறை குட்டி போடுகிறது. அதனால் நல்ல ஆதாயம் இருக்கிறது என்பதைத் தெரிவிக்கிறேன். அந்தப் பன்றியைப் பார்க்க வேண்டும் என்றால், காட்டுப் பாக்கம், அலமாடி பண்ணைகளில் பார்க்கலாம். இன்னும் எல்லாக் கால்நடை எக்ஸிபிஷன்களிலும் காட்டச் சொல்லியிருக்கிறோம். நல்ல பலன் இருக்கிறது.

பங்களூருக்குப் பால் போவதாக ஒரு அங்கத்தினர் குறிப்பிட்டார்கள். பெயர் நினைவு இல்லை. அப்படிப் போவதைத் தடுத்து நிறுத்த ஏற்பாடு செய்திருக்கிறோம். பால் கிடைக்கும் இடத்திலே, அவர்களும் சாப்பிட பண்ணை ஓரங்களில் இருப்பவர்களுக்கும் வேலை செய்கிறவர்களுக்கும் கிடைக்கும் வகையில் செய்திருக்கிறோம். இதைப் புதுக்கோட்டை, செட்டிநாடு முதலிய இடங்களில் செய்திருக்கிறோம். அபிசேகப் பட்டியில் இருக்கிறது என்றால் அது நகரத்திற்கு அப்பால் இருக்கிறது. கூட்டுறவு மூலமாகச் செய்வதில் தவறுகள் இருப்பதாகச் சொன்னார்கள். அதற்கெல்லாமும் வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கிறோம்.

மேலும் கால்நடைப் பண்ணையில் நிறைய நிலங்கள் இருக்கின்றன. பயன் படுத்தாமல் இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். சென்ற அரசாங்கம் காலியாக போட்டுவிட்டு போய்விட்டார்கள். தீவனம் வளர்க்க தனிக் கவனம் செலுத்தப் படுகிறது. அந்தப் பண்ணைக்கு வேண்டிய தீவனத்தை வளர்க்க, தரமான கால்நடைகளை வளர்க்க ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. தீவனம் வாங்குவதில் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்றும் சொன்னார்கள். அதற்கு நன்றி. நாங்கள் பொறுப்பிற்கு வந்த பிறகு இருக்கிற நிலைமைகளை ஆராய வேண்டும் என்று ஒரு கமிட்டியைப் போட்டு பரிசீலனை செய்யச் சொல்லியிருக்கிறோம். தீவனத்தையும் டெண்டர் கூப்பிட்டு, டெஸ்டுக்கு அனுப்பி, கோயம்புத்தூர் வெடரினரி காலேஜுக்கு அனுப்பி, தரமான பொருள் என்ற முடிவுக்கு வந்த பின் வாங்குகிறோம் என்பதையும் இந்த நேரத்தில் சொல்ல விரும்புகிறேன்.

இங்கே வெளிநாட்டு நிலைமைகளைச் சொல்லி, நம்முடைய காங்கேயம் போன்ற மாடுகளைப் பற்றியும் சொன்னார்கள். கனம் எதிர்க் கட்சித் தலைவர் நல்ல கருத்துக்களைச் சொல்லுவார்கள் என்று எதிர்பார்த்தேன். என்ன காரணத்தினாலோ, ஒதுக்கிக் கொண்டு விட்டார்கள். " டேவல் " பர்பஸ் பற்றிச் சொல்லுவார்கள் என்று நினைத்தேன். வேறு நாடுகளில், பாலுக்கும், மாமிசத்திற்கும் என்றால், நம்முடைய நாட்டைப் பொறுத்த வரையில், பாலுக்கும், வேலைக்கும் தான் வேண்டும். வேலைக்கு காங்கேயம், பாலுக்கு சிந்தி, தர்பார்க்கா என்று சொல்லுவார்கள். ஆனாலும், காங்கயத்திற்கு அதிகச் சலுகை காட்ட முடியவில்லை. உழைப்புக்குக் காங்கேயம் என்று தெரிந்தாலும், அந்த நிலை இருக்கிறது. ஆனாலும், தனிப்பட்டவர்களுடைய பண்ணைகளில் இருக்கிறது. என்பதற்காக வாங்காமல் இருக்கிறார்கள் என்று சொல்லுவது சரியில்லை. ஏற்கனவே முயற்சி இருக்கிறது என்பதைத் தெரிவிக்கிறேன். கால்நடைப் பண்ணையிலேயே மருந்தகம் வைத்து இருக்கிறோம். ஓசூர் நாட்டில் இருக்கிறது. ஹோசூரில் இருக்கிறது. இன்னும் சின்னச் சேலத்தில் இருக்கிறது. உதக மண்டலம் பண்ணையில் செம்மறி ஆடு வளர்க்கிறார்கள். நல்ல பலன் இருக்கிறது. ஒரு அங்கத்தினர் திரு. பலராமன் என்று நினைக்கிறேன். கட்டடம் இருக்கிறது மேய்க்க பையன் வைத்திருக்கிறார்கள். ஆடுகள் இல்லையே என்றார்கள். கட்டடத்தை வேறு வேலைக்குப் பயன்படுத்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. தவறுகள் இருந்தால் திருத்த வேண்டும் என்று சொன்னார்களே, அதற்காகச் சொல்கிறேன், திருத்திக் கொண்டும் இருக்கிறோம் என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்ல விரும்புகிறேன்.

காட்டிலாகாவைப் பற்றிப் பேசி நான் முடித்துவிட விரும்புகிறேன். (திரு. கே. விநாயகம் : பசி....) அதற்குள் பசி, பசி என்று சொல்லுகிறார்கள். நான் நல்ல சுவையான உணவைப் பற்றிப் பேசும்போதுகூட சில பேருக்குப் பசி வருகிறது. இருந்தாலும், சுவையான இனங்களைப் பற்றிக் கேட்கும்போது பசி எடுப்பதும் இயற்கையே. என்றாலும், நான் விரைவிலே முடித்துவிடுகிறேன்.

காட்டு வளத்தைப் பெருக்க வேண்டும் என்பதிலே சர்க்கார் தனி கவனம் செலுத்தி வருகிறது. காடுகள் நல்ல முறையில் வளர்க்கப்பட வேண்டும், அவை அழிக்கப்படக் கூடாது என்று பல நல்ல கருத்துக்களை உறுப்பினர்கள் பலரும் எடுத்துத் தெரிவித்தார்கள். குறிப்பாக, காடு அழிவதிலே அதிகக் கவலை செலுத்தினார்கள், நண்பர் திரு பூவராகன் அவர்கள். காடுகள் அழிவது குறித்துக் கவலை செலுத்தினாரே, அதையே தொடர்ந்து அவர் பேசுவார் என்று எதிர்பார்த்தேன். ஆனால், உடனே தங்களுடைய தொகுதியில் இருக்கும் காட்டை விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டும் என்று, அவரும் அந்த வழியில்தான் வந்துவிடுகிறார்கள். தொகுதி மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் அப்படிக் கேட்பது நியாயமே. இந்தச் சர்க்காரைப் பொறுத்த வரையில், விவசாயத்திற்கு லாயக்காக இருக்கும் ஆனால், கரம்பாக இருக்கும் பகுதியை விவசாயத்திற்குக் கொடுத்து, உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்பதுதான் இந்தச் சர்க்காரினுடைய கொள்கை என்பதை நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

ஒரு நாட்டினுடைய மொத்த நிலப்பரப்பில் மூன்றில் ஒரு பங்கு நிலமாவது காடுகளாக இருக்க வேண்டுமென்பதிலே சந்தேகமே கிடையாது. துரதிருஷ்ட வசமாக, மொழி வழியாக ராஜ்யங்கள் பிரிந்த நேரத்தில், இங்குள்ள வளமான காடுகளெல்லாம் மற்றப் பகுதிகளுக்குப் போய் விட்டன. ஆனால், இன்றைய நிலையில், நமக்கு இருப்பதெல்லாம் 16 சத வீதக் காடுகள்தான். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜார்ஜ் அவர்கள், ஒரு பெரிய குற்றச்சாட்டைக் கண்டுபிடித்ததுபோல, இங்கே ஒன்றைச் சொன்னார்கள். சென்ற ஆண்டு பட்ஜெட்டிலே 13 சதவீதத்திற்குக் காடுகள் இருப்பதாகச் சொன்னார்கள். இப்பொழுது ஏதோ 16 சதவீத அளவுக்கு



உயர்ந்திருப்பதாகச் சொல்லுகிறார்கள். ஆனால், இருப்பது 13 சத வீதந்தான் என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். நமது மாநிலத்தின் நிலப்பரப்பில் 13 சத வீதம் ஒதுக்கக் காடுகளாக இருக்கின்றன. மற்றும் 3 சத வீதம் அன்-ரிசர்வ்டு ஃபாரஸ்ட் என்ற வகையில், வருகின்றது. ஆக, இரண்டையும் சேர்த்துப் பார்த்தால் 16 சத வீதம் ஆகிறது. அந்த 3 சத வீதம் அடர்ந்த காடாக ஒதுக்க நிலங்களாக இருக்கிறது. மொத்தம் 16 சத வீதம்தான் இருந்து கொண்டிருக்கிறது. புள்ளி விவரங்களில் ஒன்றும் கோளாறு இல்லை, தவறுதலாகவும் அச்சிடவில்லை என்று திரு ஜார்ஜ் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

யானை மேய்க்கிறவர்களுக்கு சம்பளத்தை உயர்த்த வேண்டும் என்று இங்கே குறிப்பிட்டார்கள். ரூ. 23, ரூ. 29 என்று இப்படி இருந்த சம்பளத்தை, ரூ. 50-லிருந்து ரூ. 70 வரை விகிதத்தை உயர்த்துவதற்கும், அதே போன்று, அவர்களுக்குக் கீழ் இருக்கும் ஊழியர்கள் ரூ. 19, ரூ. 22 என்று சம்பளம் பெற்றுவந்தவர்களுக்கு ரூ. 50—1—60 என்ற விகிதத்தில் உயர்த்துவதற்கும் வேண்டிய ப்ரபோஸல் இந்த வருஷம் கவனத்தில் இருக்கிறது. விரைவிலே அது திட்டமாகி, அவர்களுக்கு அமலாக்கப்படும். அவர்கள் ஆபத்தான ஒரு தொழிலிலே ஈடுபட்டிருப்பதால் அந்தக் காரியத்தைக் கவனிக்கிறோம்.

அடுத்து, ரப்பர் தோட்டம் வேண்டாம் என்று திரு. ஜார்ஜ் அவர்கள் சொன்னார்கள். ரப்பர் தோட்டம் நமக்குத் தேவை இருக்கும்போது, என்ன காரணத்தினால், ரப்பர் தோட்டம் தேவை இல்லை என்ற கருத்தை திரு ஜார்ஜ் அவர்கள் சொன்னார்கள் என்று தெரியவில்லை.

**திரு. வ. ஜார்ஜ் :** ரப்பர் தோட்டம் வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. ரப்பர் தோட்டம் வைத்தால் அடர்ந்த வன ஊற்று வழிகள் குறைகின்றன. அதைச் சிந்தித்துப் பார்த்து, கவனித்துச் செய்ய வேண்டும் என்றுதான் சொன்னேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** ரப்பர் தோட்டம் வளர்ப்பதற்குச் சரியான இடம் என்று தெரிந்துதான் அந்த இடங்களைத் தேர்ந்தெடுத்து இருக்கிறார்கள். ரப்பர், நாட்டுக்கு மிகவும் அவசியம். கன்னியாகுமரி மாவட்டம் ரப்பர் வளர்க்கச் சிறந்த இடம் என்று தெரிந்ததால்தான் செய்கிறார்கள். மேலும், நாகர்கோவில் பகுதிக்கு ஒரு டிஸ்ட்ரிக்ட் ஃபாரஸ்ட் ஆபீசர் போட வேண்டும் என்று சொன்னார்கள். போட வேண்டியது அவசியம் என்றால், தேவை என்றால், அந்தப் பகுதி மக்களுக்கு வேண்டிய உதவி செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும்.

காட்டு நிலத்தை அழிக்க வேண்டும் என்பது சர்க்காருடைய கொள்கை அல்ல. ஆனால், அதே நேரத்தில், அது காடாக இல்லாமல், வெறும் கரம்பாக இருந்தால், அந்த நிலத்தை விவசாயத்திற்குப் பயன்படுத்தலாம் என்பதுதான் திட்டம். சில பகுதிகள் வெறும் கரம்பாக இருக்கின்றன.

புதுக்கோட்டை பகுதி பற்றி ஒரு உறுப்பினர் குறிப்பிட்டார். புதுக்கோட்டையில் நிறைய புல் வெளி இருந்துகொண்டு, காடு என்ற பெயரால் இருக்கிறது. வெள்ளையன் காலத்திலேயே அப்படியொரு நிலைமையை உருவாக்கிவிட்டார்கள் என்று சொன்னார்கள். புதுக்கோட்டை பகுதிக்குச் சென்றிருந்தபோதுகூட, அப்பேர்ப்பட்ட பகுதிகள் நிறைய இருப்பதைப் பார்த்தேன். அந்தப் பகுதியில், நல்ல தரமான பொறுக்கு விதைகளை உற்பத்தி செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடன், குடுமியாமலைப் பண்ணைக்கு என்று 3,000 ஏக்கர் நிலத்தைத் திருத்தி அமைத்துக் கொண்டிருக்கிறோம். நல்லவிதமாக அது அமைந்துகொண்டிருக்கிறது. அந்தப் பகுதியில் விவசாயத்திற்கு லாயக்கான நிலங்கள் இருக்கும்போது, அந்த நிலங்களை விவசாயிகளுக்கு வழங்குவதில் குறைபாடு வந்துவிடாது. காடுகளாக இருப்பதை அழித்துவிட்டுக் கொடுக்க வேண்டும் என்பதும் சர்க்காருடைய நோக்கம் அல்ல.

வர்ஷநாடு பகுதியைப் பற்றிச் சொன்னார்கள். வர்ஷநாட்டுப் பகுதி மதுரை மாவட்டத்தில் இருக்கிறது. மயிலாடும்பாறை, கண்டமனூர் பகுதியை வர்ஷநாடு பகுதி என்று சொல்லுகிறார்கள். 40,000 ஏக்கர் விவசாயிகளுக்குக் கொடுப்பது என்று முடிவு செய்திருக்கிறார்கள். ஒரு காலத்தில் வளமாக இருந்த காடு அழிக்கப்பட்டு, பல வருஷங்களாக அங்கே விவசாயத்தில் மக்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட மக்களை அப்புறப்படுத்த வேண்டிய அவசியம் இருக்கிறது என்று சென்ற அரசாங்கம் முயற்சி எடுத்தார்கள். ஆனால், அவர்களை அப்புறப்படுத்துவதன் மூலமாக, காடு உடனடியாக வளர்க்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறதா என்றால், இல்லை. அந்த நிலையில் அந்தப் பகுதி மக்களை அப்புறப்படுத்திவிட்டு, அவர்கள் விவசாயத்தில் ஈடுபட்டுக் கொண்டிருப்பதைக் கெடுக்க வேண்டாம் என்ற நல்ல நோக்கத்துடன், அந்த மாவட்ட எம்.எல்.ஏக்கள், மாவட்டக் கலெக்டர், காட்டிலாக்கா அதிகாரி, ஆகியவர்களையும் இன்னும் மற்றவர்களையும் அழைத்துக் கொண்டு 25 மைல் தூரம் காட்டுப் பகுதி பூராவும் நான் சுற்றிப் பார்த்தேன். அந்தப் பகுதி விவசயத்திற்கு லாயக்கான பூமி என்பதைத் தெரிந்துகொண்டு, முதலமைச்சர் அவர்களிடம் எடுத்துச் சொல்லி, அதற்கு வேண்டிய அங்கீகாரம் பெற்று, சென்ற கூட்டத்திலே இங்கே அறிவிக்கப்பட்டது. அதற்கு வேண்டிய சர்வே இப்பொழுதுதான் நடந்து கொண்டிருக்கிறது. அந்தக் காட்டு நிலங்களை வழங்குவதற்கு என்று ஒரு கமிட்டி அமைத்திருக்கிறோம். விரைவிலே அது பரிசீலனை செய்து, நிலமில்லாதவர்களுக்கு நிலம் கொடுக்கக்கூடிய நிலையில் இருக்கிறோம். ஏற்கனவே ஜமீன் இருந்த காலத்திலேயே, 400, 200 150, ஏக்கர் என்று பெரிய நிலச் சுவாந்தார்கள், ஆக்கிரமித்திருக்கிறார்கள். அந்தப் பகுதியைப் பற்றி என்ன செய்வது என்று யோசித்துக் கொண்டிருக்கிறோம். ஆனால், இந்த நிலையில், இப்பொழுது நிலமே இல்லாத விவசாயிகளுக்கு நிலம் கொடுக்க வேண்டும் என்ற நோக்கத்தில் தான் இருக்கிறோம். வேறு இடத்தில் நிலம் வைத்துக் கொண்டிருக்கிறவர்கள் சிலர், காட்டுப் பகுதியை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களை அங்கிருந்து அப்புறப்படுத்த வேண்டும் என்றுதான் இந்த அரசு இருக்கிறது. உண்மையிலேயே ஏழை விவசாயிகளாகவும், உண்மையிலேயே அறவே நிலம் இல்லாதவர்களாகவும், உள்ளவர்களுக்கு விவசாயத்திற்கு நிலம் கொடுக்க வேண்டும் என்ற நோக்கத்துடன்தான் இருக்கிறோம் என்று நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

வனவாசி, பக்கனாடு பற்றி திரு. சுரேந்திரன் அவர்கள் குறிப்பிட்டார்கள். நாற்பது வருஷப் பிரச்னை, ஆகவே, இதில் தனி கவனம் செலுத்த வேண்டும் என்று சொன்னார்கள். அது தனியாகக் கவனிக்கப்பட வேண்டும், மற்றக் காட்டுப் பகுதிகளில் உள்ள நிலங்களோடு ஒப்பிடக் கூடாது என்ற கருத்தை அவர்கள் வலியுறுத்தினார்கள். ஆனால், கடந்த கால ஆட்சியில் முதல் அமைச்சராக இருந்த திரு. பக்தவத்சலம் அவர்களோடு அது சம்பந்தப்பட்ட தலைவர் ஒரு ஒப்பந்தம் செய்தார்கள் என்று குறிப்பிட்டார்கள். ஆனால், அவர்களுடைய ஆட்சியில்தான், இரவோடு இரவாக, அந்தப் பகுதி விவசாயிகள் அப்புறப்படுத்தப்பட்டது மல்லாமல், அந்த வீடுகள் கொளுத்தப்பட்டன என்றும் சொன்னார்கள். நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய கட்டளைக்கேற்ப, அந்தப் பகுதிக்குச் சென்று பார்த்தோம். திரு. சுரேந்திரன் திரு. ஈ. ஆர். கிருஷ்ணன், திரு, எஸ். ஆறுமுகம், திரு. ஏ. ஆறுமுகம் போன்ற சட்டமன்ற உறுப்பினர்களும், இன்னும் மற்ற நண்பர்களும் அந்தப் பகுதிக்குச் சென்று பார்த்தோம். பார்த்த நேரத்தில், விவசாயத்திற்கு லாயக்கான பூமியை விவசாயிகளுக்குக் கொடுக்கலாம் என்ற முடிவில் தான் இருக்கிறோம். ஏதோ நாங்கள் கொடுக்காமல் இருப்பது போல, பெரிய குறையாக திரு சுரேந்திரன் அவர்கள் கூறிக் கொண்டிருக்கிறார்கள். திரு சுரேந்திரன் அவர்களுக்கு ஒரு அபிப்பிராயம் —ஏதோ அந்தத் திட்டத்தை அவர்கள்தான் உருவாக்கினவர்கள் போலவும் அந்த நிலத்தை விவசாயிகளுக்கு அவர்கள்தான் வாங்கிக் கொடுக்க இருந்தவர் போலவும், மற்றவர்களுக்கு என்ன உரிமை இருக்கிறது என்பது போலவும் அவர்களுடைய பேச்சு அமைந்திருந்தது. நிலமில்லாத ஏழை விவசாயிகளுக்கு நிலம் கொடுக்க வேண்டும் என்பதில் அத்தனை பேருக்கும்





அக்கறை இருக்கிறது. எல்லாக் கட்சியினருக்கும் அக்கறை இருக்கிறது. அதிலே இந்த அரசுக்கும் அக்கறை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எம். சுரேந்திரன் :** நிலம் கொடுக்கிறீர்கள். சந்தேகம் இல்லை. அதைப் பற்றி யாரும் ஒன்றும் சொல்லவில்லை. ஆனால், பட்டா பண்ணிக் கொடுக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய முக்கிய கோரிக்கை.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** அரசாங்கம் ஒரு கொள்கை வகுத்துக் கொண்ட பிறகு, அதை மாற்றுவதற்கில்லை. நீண்ட காலக். குத்தகைக்குக் கொடுப்பது என்பதுதான் அரசாங்கத்தினுடைய நோக்கம் அதைப் பட்டாவாக்க வேண்டும் என்பது திரு. சுரேந்திரன் அவர்களுடை கருத்து. இதில், ஒவ்வொரு இடத்திற்கும் ஒவ்வொரு விதமான கொள்கை வகுத்துக் கொள்வதற்கில்லை. வனவாசி பக்கனாடுக்கென்று ஒரு கொள்கை வைத்துக்கொண்டால், மதுரைக்கென்று வேறு ஒரு கொள்கை யும் சேலத்திற்கு என்று இன்னொரு கொள்கையும் வைத்துக்கொள்ள வேண்டும் என்று பரவலாகக் கேட்க ஆரம்பித்து விடுவார்கள்.

ஏழை விவசாயிகளுக்கு இன்றையதினம் கோயம்புத்தூர் மாவட்டத்தில் பவானிசாகர் பகுதியிலும், ஒரத்தநாடு பகுதியிலும் காட்டு நிலம் கொடுக்க இருக்கிறோம். வேறு பல இடங்களிலும் கொடுக்க இருக்கிறோம். இந்த நிலங்கள் எல்லாம் நீண்டகாலத் திட்டத்தின் அடிப்படையில்தான் கொடுக்க இருக்கிறோம். விவசாயிகள் நிலத்தை வாங்கிக் கொண்டு அதை விற்க முனைந்தால், அதை அனுமதிக்க முடியாது, அல்லது நிலத்தைத் தரிசாகப் போட்டாலும் அனுமதிக்க முடியாது. இந்தக் காட்டு நிலங்களையெல்லாம் நிலமில்லாத ஏழை விவசாயிகளுக்குப் பகிர்ந்தளிக்கும் முறையை வகுக்க ஒரு கமிட்டி போட உத்தேசித்திருக்கிறோம். அந்தக் கமிட்டியில் திரு. சுரேந்திரன் அவர்களும் இடம் பெறுவார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன். விவசாயிகள் வேறு ஊரிலே நிலத்தை வைத்துக்கொண்டு, நிலமில்லை யென்று கூறி, காட்டுப் பகுதியில் நிலம் பெறுவதையும் அனுமதிக்க முடியாது. இந்தமாதிரி இடையில் ஏற்படும் இடையூறுகளைத் தீர்ப்பதற்கு நண்பா திரு. சுரேந்திரன் அவர்கள் உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல், நண்பர் திரு. பூவராகன் அவர்கள் பேசும்போது, காட்டுப் பகுதி நிலத்தை யார் யாருக்கோ கொடுக்கப் போவதாகத் தகவல் கிடைத்திருக்கிறது என்று சொன்னார்கள். அம்மாதிரியான எந்தக் கோரிக்கையும் இதுவரையில் என்னிடத்தில் வரவில்லை. தவிர, அந்தந்தப் பகுதியிலுள்ள காட்டு நிலத்தை, அந்தந்தப் பகுதியிலுள்ள ஏழை விவசாயிகளுக்குத்தான் கொடுக்கப் போகிறோம். அந்தப் பகுதி விவசாய மக்களுக்குக் கொடுத்த பிறகு மீதி இருந்தால் அதைப் பற்றிப் பின்னர் யோசிக்கலாம். இப்போது பவானிசாகர் பகுதியில் சுமார் 300 ஏக்கர் பரப்புள்ள நிலத்தை விவசாயிகளுக்குக் கொடுக்கப் போகிறோம். இன்னும் அந்தப் பகுதியில் திருத்தியமைத்து சாகுபடிக்குக் கொண்டுவரக்கூடிய நிலங்கள் இரண்டாயிரம், மூவாயிரம் ஏக்கர் என்ற அளவில் இருக்கின்றன. பவானிசாகர் அடுத்துள்ள பகுதிகளில் குதிரைவால் என்ற புஞ்செய் தானியம் விளைகிறது. சேலம் மாவட்டத்தில் சேஷன் சாவடிப் பகுதிக்குச் சென்றிருந்தேன். அங்குள்ள காட்டுப் பகுதி காடாக இல்லை, ஒரு பகுதி காடாக இருக்கிறது. இன்னொரு பகுதி தரிசாக இருக்கிறது. காடாக இருக்கும் பகுதியை அழித்துத் தர முடியாது என்று சொல்லிவிட்டேன். நாங்கள் இப்படிக் காட்டுப் பகுதி நிலங்களைத் தரும்போது பார், பார், காட்டையெல்லாம் அழித்து விடுகிறார்கள் என்று சொல்லிக் கொண்டு வருகிறார்கள். காடு என்று சொல்ல முடியதா நிலைமையில் சில பகுதிகள் கரம்பாக இருக்கின்றன. அந்த மாதிரியான நிலத்தையே ஏழை விவசாயிகளுக்குக் கொடுத்துக் கொண்டு வருகிறோம். இன்னும் சிலபேர் " நிலத்தை ஆக்கிரமித்துக் கொண்டால், பின்னர் அப்புறப்படுத்த மாட்டார்கள், ஆகவே, தைரியமாக ஆக்கிரமித் துக்கொள்ளுங்கள் " என்ற தூண்டுதலின் பேரில் காட்டுப் பகுதி நிலங்களை ஆக்கிரமித்துக் கொள்கிறார்கள். இப்படி அனுமதியில்லாமல்,

ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து நிச்சயம் அவர்களை அரசாங்கம் வெளியேற்றும். அவர்கள் எந்தக் கட்சியாக இருந்தாலும்—திராவிட முன்னேற்றக் கழகமாக இருந்தாலும்—ஆக்கிரமிப்பாளர்களைக் கண்டிப்பாக வெளியேற்றும். சில இடங்களில் ஆக்கிரமிப்பாளர் சங்கம் என்று பெயர் வைத்துக் கொண்டு நிலங்களை ஆக்கிரமித்துக் கொள்கிறார்கள். உண்மையிலேயே விவசாயிகளுக்கு நிலமில்லாமல் இருந்து, அவர்கள் கோரிக்கை, மூலம், அரசாங்கத்தை அணுகினால், அவர்களுக்கு நிச்சயமாக நிலம் கிடைக்கும். முதலில் நிலத்தை ஆக்கிரமித்துக் கொண்டு, பின்னர் சமாதானம் சொல்லிக் கொள்ளலாம் என்று எண்ணுவது தவறு. ஆகவே இந்த அரசு ஏழை விவசாயிகளுக்கு நன்மை செய்வதையே தன் குறிக்கோளாகக் கொண்டிருக்கிறது என்பதை மீண்டும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தாங்கள் பெயர் அளவிலே கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களை யெல்லாம் திரும்பப் பெற்றுக்கொண்டு, ஏகமனதாக இந்த மானியக் கோரிக்கையை ஏற்று நிறைவேற்றித் தர வேண்டுமென்று கூறி விடைபெறுகிறேன்.

DR. H. V. HANDE: Sir, my problem is this. There are a number of fishermen who are not able to sell their catch directly to the consumer. The Government may at least make a beginning of some arrangement to see that they sell the fish direily at the consuming point. That will prevent the fishermen from coming out of the profession and also will help to improve their economic condition.

**மாண்புமிகு. திரு ஏ. கோவிந்தசாமி:** அந்தந்தப் பகுதியில் இருக்கும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக விற்கப்படுகின்றது. கனம் அங்கத்தினர் மார்க்கெட்டிங்செஸைட்டியைப் பற்றிச் சொன்னார்கள். அதன் மூலமாகவும் விற்கப்படுகிறது. மேலும், வேன்கள் மூலமாகவும் மீன்கள் எடுத்துச் சென்று விற்றுக்கொண்டு வருகிறார்கள். மேலும் பொதுமக்களில் சிலர் காற்று வாங்கப் போய் திரும்பி வரும்போதுகூட மீன் வாங்கிக்கொண்டு வந்து விடுகிறார்கள். உண்மையிலேயே கடைக்கு எடுத்துச் சென்று விற்க கூடிய வாய்ப்பு மீனவர்களுக்கு ஏற்படவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இத்துடன் விவாதம் முடிவுற்றது. மாண்புமிகு உறுப்பினர்கள் கொண்டுவந்த வெட்டுத் தீர்மானங்களை வாக்கெடுப்பக்கு விட வேண்டும். மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களை வற்புறுத்துகிறார்களா, அல்லது திரும்பப் பெற்றுக் கொள்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டன.

**மாண்புமிகு பேரதை துணைத் தலைவர்:**

அவை முன்னுள்ள கேள்வி:—

"கோரிக்கை எண் 17—மீனளம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,21,53,800-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 18—விலங்கின வளர்ப்பு என்ற தலைப்பின் கீழ் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து அவை முன்னுள்ள கேள்வி:

"கோரிக்கை எண். 18—விலங்கின வளர்ப்பு என்ற தலைப்பின்கீழ் ரூ. 3,64,68,000-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."





நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண். 35—காட்டு வளத்துறை என்ற தலைப்பின்கீழ் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து அவை முன்னுள்ள கேள்வி:

"கோரிக்கை எண். 35—காட்டுவளத் துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,83,42,500-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப் பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 44—காட்டுவள மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, அவை முன்னுள்ள கேள்வி:

"கோரிக்கை எண். 44—காட்டுவள மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 97,78,200-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப் பட்டது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இத்துடன் பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுறுகின்றன. பேரவை செவ்வாய்க்கிழமை காலை 9 மணியளவில் மீண்டும் கூடும். பி.ப 2·29

பின்னர் பேரவை ஒற்றிவைக்கப்பட்டது.

## 7, பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. Statutory Rules and Orders.

*Nil.*

### B. Reports Notifications and Other Papers.

*31. A Policy Note on the activities of the Government on the Food Front—Demand 46—Captial Outlay on Schemes of Government Trading (English).

*32. A Policey Note on the activites of The Government on the Food Front—Demand 46—Capital Outlay on Schemes of Government Trading (Tamil).

*Despatched to Members on 7th Martch 1968.

*Placed on the Table of the House on 8th Marh 196..

## இணைப்பு 1.

## கோரிக்கை எண் 17– மீனளம்.

[27ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

# தமிழகத்தில் மீனள வளர்ச்சி

### கொள்கை விளக்கக் குறிப்பு, 1968–69

ஆயிரம் கிலோ மீட்டர் நீளமுள்ள கடற்கரை கொண்ட தமிழ் நாட்டில் ஏறத்தாழ 8 இலட்சம் எக்கர் பரப்பளவுள்ள உள்நாட்டு நீர் நிலைகள் உள்ளன. பாமர மக்களின் உணவில் காணும் ஊட்டச் சத்துக் குறைவை மீன் உணவு ஈடு செய்வதனால் அது சிறந்ததோர் உணவுப் பொருளாகும். ஆகவே, நாட்டுத் திட்டத்தில் மீனள வளர்ச்சிக்குச் சிறப்பான இடம் அளிக்கப்பட்டுள்ளது. நல்ல மீன் பிடிக்கும் இடங்களைக் கண்டுபிடித்தல் முதலாக மீன் பிடித்தலைப் பெருக்குதல், பிடித்த மீனைக் கெடாமல் பாதுகாத்தல், எடுத்துச் செல்லுதல், அவற்றை விற்பனை செய்தல் ஈருக, நடவடிக்கைகள் பல எடுத்து மீன்பிடித் தொழிலை மேம்படுத்த மீனளத் துறை திட்டங்கள் பலவற்றை நிறைவேற்றி வருகிறது. நமது மாநிலத்தில் ஏறத்தாழ 3.5 இலட்சம் மீனவர்கள் 463 உள்நாட்டுக் கிராமங்களிலும், 308 கடலோரக் கிராமங்களிலும் பரவியுள்ளனர். ஏராளமான மீனள வாயில்களிருப்பதால் மீனள வளர்ச்சிக்கு நல்ல வாய்ப்பு உள்ளது. இம் மாநிலத்தில் 33,000 கட்டுமரங்களும் மீன்பிடி நாட்டுப் படகுகளும் பலவகையான மீன்பிடிக்கும் 82,000 வலைகளும் பயனிலுள்ளன.

2. விசைப்படகுகளின் நன்மைகளை மீனவர்களுக்கு விளக்கும் பொருட்டு முதல் திட்டத்திற்கு முன்னர் மீனளத் துறை உள்நாட்டு சிறு மீன் பிடி படகுகளைக் கட்டுவதற்கு நடவடிக்கை எடுத்து, தாங்கள் பிடித்த மீனை விரைந்து எடுத்துச் செல்ல வாடகைப் போக்குவரத்து வண்டிகள் மீனவர்களுக்குக் கொடுக்கப்பட்டன. வேண்டிய அளவுக்கு மேல் பிடிபட்டதால், விற்பனையாகாது எஞ்சியுள்ள மீன்களைக் குறைந்த செலவில் பதனப்படுத்திப் பாது காப்பதற்காக மலிவு விலையில் மீனவர்களுக்கு உப்பு வழங்கப்பட்டது. உள்நாட்டு ஆறுகளிலே வேகமாக வளரும் வங்கக் கெண்டை, மீரிகால் போன்ற கெண்டை மீன்கள் வளர்க்கப்பட்டன. மீன் பிடித் தொழில் நுட்பங்களையும், பதனப்படுத்திப் பாதுகாக்கும் முறைகளையும், மீன் போக்குவரத்தினையும், விற்பனை முறைகளையும், உள்நாட்டு நீர்நிலைகளில் மும்முரமாக மீன் வளர்த்தலை மேம்பாடு செய்யவும், மீனவர்கள் தங்கள் பொருளாதார நிலைமையைச் சீர் செய்து கொள்ளவும் ஐந்தாண்டுத் திட்டங்கள் வகுக்கப்பட்டன.

3. முதல் திட்டக் காலத்தில் ரூ. 31·34 இலட்சம் செலவில் திட்டங்கள் பல மேற்கொள்ளப்பட்டன. இரண்டாம் திட்ட காலத்தில் விசைப் படகுகளையும், செயற்கை முறுக்கு நூலையும், வலைகளையும், உதவித் தொகை கடன் அடிப்படையில் மீனவர்களுக்கு அளிப்பதற்காகவும், மீனைப் பதப்படுத்துவதற்குக் குறைந்த விலையில் உப்பு வழங்குவதற்காகவும் மீன்களை எடுத்துச் செல்வதற்காகக் குறைந்த வாடகையிலும் தவணை முறையிலும் காப்பு வண்டிகள் மீனவர்களுக்குக் கிடைப்பதற்கு வகை செய்யவும் இத் துறையின் திட்ட வேலைகள் விரிவாக்கப்பட்டன. இத் திட்டங்களுக்காக முதலீடு செய்யப்பட்ட மொத்தத் தொகை ரூ. 75·30 இலட்சமாகும்.

மூன்றுவது திட்டத்தில் மீன்பிடி தொழில் மேலும் விரிவடைந்தது. விசைப் படகுகளைத் தயாரிப்பதன் மூலம் இத் தொழிலை இயந்திர மயமாக்குவது, மீனவர்களுக்குப் பயிற்சியளிப்பது, பிடிபட்ட



மீன்களைக் கரை சேர்ப்பதற்கான வசதிகளைச் செய்து கொடுப்பது பனிக்கட்டி யந்திரம், குளிர்ப்பதன நிலையங்கள், கடற்கரையை இணைக்கும் சாலைகள், காப்பு ஏற்பாட்டுடன் கூடிய வண்டிகள் ஆகியவற்றிற்கு வகை செய்வதற்கான நடவடிக்கைகள் மும்முரமாக்கப்பட்டன. மீன் பிடி படகுகளின் எண்ணிக்கை அதிகரித்ததாலும் நவீன மீன்பிடி கருவிகளைப் பயன்படுத்தியதனால் அதிக மீன்கள் பிடிபட்டதனாலும், மேற்சொன்ன நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டி வந்தது. மூன்றுவது திட்டத்தில் தமிழ் நாட்டில் மீன் பிடித் தொழிலை மேம்பாடு செய்வதற்காக மொத்தம் 257.27 இலட்சம் செலவிடப்பட்டது. 1966–67-ம் ஆண்டில் ரூ. 128·69 இலட்சம் செலவிடப்பட்டது. 1967–68-ல் மீனள வளர்ச்சிக்காக ரூ. 164·38 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

4. இம் மாநிலத்தில் ஒருவர் உட்கொள்ளும் மீன் அளவு முதல் திட்ட காலத் தொடக்கத்தில் 3·7 கிலோவாக இருந்தது. இது இரண்டாம் திட்டக் காலத் தொடக்கத்தில் 4·8 கிலோவாக உயர்ந்தது. மூன்றும் திட்டக் காலத் தொடக்கத்தில் இது 5·2 கிலோவாக அதிகரித்தது. மூன்றுவது திட்டக் கால இறுதியில் இது 5·9கிலோவாகப் பெருகியது. அடுத்தடுத்து நிறைவேற்றப்பட்டுள்ள மூன்று திட்டங்களின் விளைவாக மீன் பிடித் தொழிலில் படிப்படியாக விரிவடைந்துள்ளதை இதனால் அறியலாம். ஆண்டு மீன் உற்பத்தி அளவு முதல் திட்டத்தின் ஆரம்பத்தில் 78,000 டன்னாக இருந்தது. இது 1967-ல் 2,79,975 டன்னாக அதிகரித்துள்ளது.

5. இம் மாநிலத்திலுள்ள மீன் வளத்தை முழுவதும் பயன்படுத்த திட்டத்தின் கீழ் 1968–69-ல் மேற்கொண்டு வகுக்கப்பட்டுள்ள திட்டங்கள் வருமாறு :—

(1) **விசைப்படகுகளைக் கட்டுதலும், அவற்றை வழங்குதலும் :—** விசைப் படகுகளையும் முறுக்கேற்றிய செயற்கை நைலான் வலைகளையும் பயன்படுத்தி, கடல் மீன் வேலையை மும்முரப் பிடிப்பு படுத்துவதே இத் திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும். நவீன முறைகளைப் பயன்படுத்துவதால் மீன்பிடித் தொழில் பெருமளவிற்கு முன்னேறியுள்ளது. பழைய கட்டு மரங்களும், நூல்வலைகளும் வெகு வேகமாக கைவிடப்பட்டு அவற்றிற்குப் பதிலாக விசைப் படகுகளும் முறுக்கேற்றிய நைலான் வலைகளும் பயன்படுத்தப்படுகின்றன. இதனால் கடற்கரை நெடுக மீன்பிடி வேலை வெகுவாக முன்னேறியுள்ளது.

இத் திட்த்தின்கீழ் விசைப்படகுகளைக் கட்டி அவற்றைக் குறைந்த விலையில் மீனவர்களுக்கு வழங்க இத்துறை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. என்ஜின் விலையில் 50 சத வீதமும் படகுத் தட்டின் விலையில் 25 சத வீதமும் விலைக் குறைவு அனுமதிக்கப்படுகிறது. நார்வே அற நிலையத்தினால் பரிசாக வழங்கப்பட்டுள்ள இயந்திரங்களைக் கொண்டு கட்டப்பட்டுள்ள படகு கட்டும் தளம் உட்பட மீனளத் துறைக்குத் தற்போது படகு கட்டும் தளங்கள் நான்கு சொந்தமாக உள்ளன. இவை ஆண்டொன்றுக்கு 200 விசைப் படகுகள் கட்டும் திறனுடையன. இது வரையில் 584 படகுகள் மீனவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. 1967–68-ல் இத் துறையைச் சேர்ந்த படகு கட்டும் தளங்கள் மூன்றில் 135 விசைப் படகுகளையும் இந்திய-நார்வே திட்டப் படகு கட்டும் தளத்தில் 60 விசைப் படகுகளையும் கட்டி மீனவர்களுக்கு வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 1968–69-ம் ஆண்டு 200 படகுகள் கட்டும் பணியை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

(2) **மீன்பிடி வேலைகளுக்குத் தேவையான பொருள்களை மீனவர்களுக்கு வழங்கல்**—இத் திட்டத்தின் கீழ் நைலான் நூல் அடக்க விலையில் முக்கால் விலைக்கு மீனவர்களுக்கு வழங்கப்படுகிறது. இக் குறைந்த விலையும் இரண்டாண்டுக் காலத்திற்குள் 18 திங்கள்

தவணைகளில் மீனவர்களிடமிருந்து வசூலிக்கப்படுகிறது. 1967–68-ம் ஆண்டில் விசைப்படகுகளுடன் 9,000 கிலோ நைலான் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 1968–69-ல் மீனவர்களுக்கு வழங்குவதற்காக, மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் வாங்கிய நைலான் நூல் விலையில் 25 சத வீதத்தை உதவித் தொகையாக வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த உதவித் தொகை ரூ. 1 இலட்சம் வரை வழங்கப்படும். இத் திட்டத்தின் கீழ் மீனவர்கள் தங்களது நாட்டுப் படகுகளில் பயன்படுத்துவதற்காக 12,000 கிலோ நைலான் வாங்குவதென எதிர் பார்க்கப்படுகிறது.

மீனவர்களுக்கு ரூ. 50,000 செலவில் 15 சத வீத உதவித் தொகையுடன் பருத்தி நூல் வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த உதவித் தொகை பருத்தி நூல் வழங்கப்படுகையில் முழுவதும் வசூலிக்கப்படும்.

(3) **உள்நாட்டு மீன்பிடி நீர் நிலைகள்.**—மீன்வளம் நிறைந்த உள்நாட்டு நீர்நிலைகள் தமிழ்நாட்டில் ஏராளமாக உள்ளன. காவிரி, கொள்ளிடம், பொன்னியாறு, வைகை, தாமிரவருணி போன்ற ஆறுகள் பாயுமிடங்களில் எல்லாம் நீர்நிலைகள் ஏராளமாக உள்ளன. நீர்த் தேக்கங்கள், பெரிய, சிறுபாசன வாயில்கள், ஏரிகள் முதலியவற்றின் கீழ்வரும் எப்பொழுதும் நீர் வற்றாத நீர்நிலைகளின் மொத்தப் பரப்பளவு 1·5 இலட்சம் ஏக்கராவாகும். குறிப்பிட்ட பருவ காலங்களில் மட்டும் நீருள்ள நீர் நிலைகளின் பரப்பளவு 3.9 இலட்சம் ஏக்கராவாகும். இந்த நீர் நிலைகளிலெல்லாம் முறைப்படி மீன்வளம் கொழிக்கச் செய்ய வேண்டுமாயின் 57 கோடி மீன் குஞ்சு தேவைப்படும். இத்தேவையை நிறைவு செய்ய மீனளத் துறை மீன் குஞ்சுகளின் சேகரிப்பைப் படிப்படியாக அதிகரித்து வருகின்றது. 1966–67-ல் 4·96 கோடி மீன் குஞ்சுகளும் செயற்கை முறையில் உற்பத்தியான 4·24 கோடி மீன் குஞ்சுகளும் வளர்க்கப்பட்டு உள்நாட்டு நீர்நிலைகளில் சேகரித்து வைக்கப்பட்டுள்ளன.

1967–68, 1968–69-ல் 6 கோடி மீன் குஞ்சுகளும் செயற்கை முறையில் உற்பத்தியான 8 கோடி மீன் குஞ்சுகளும் சேகரிக்கப்பட வேண்டுமெனத் திட்டமிடப்பட்டுள்ளது. நீர்த்தேக்கங்கள் அமைக்கப்பட்டவுடன் அவையனைத்தையும் மீனளத் துறை மேம்படுத்த வேண்டும் என்பது அரசாங்கத்தின் கொள்கையாகும். இந்த கோட்பாட்டையொட்டி, மேட்டூர் அணை, பவானி சாகர், வைகை, அமராவதி, கிருஷ்ணகிரி, சாத்தனூர், மணிமுத்தாறு முதலிய பெரிய நீர்த்தேக்கங்களை இத்துறை மேம்படுத்தியது. இந்த நீர்த் தேக்கங்கள் தற்போது பல டன் மீனை உற்பத்தி செய்கின்றன. வீடூர், கோமுகி, பில்லூர் நீர்த்தேக்கங்களை மேம்பாடு செய்வதற்கான வேலை அண்மையில் மேற்கொள்ளப்பட்டது. மீன் குஞ்சுகளை வளர்த்துச் சேகரிப்பதற்கென நீர்த் தேக்கங்களின் பக்கங்கள் நெடுகவும், மீன் பண்ணைகளும், மீன் வளர்ப்பிடங்களும் கட்டப்பட்டு வருகின்றன. மீன்முட்டைகளை மிகுதியான அளவில் உற்பத்தி செய்வதற்கான மீன் பண்ணைகள் மணிமுத்தாறு, கிருஷ்ணகிரி, சாத்தனூர் ஆகிய இடங்களில் கட்டப்பட்டு வருகின்றன. பூங்கா என்ற இடத்தில் மீன் முட்டைகளை உற்பத்தி செய்வதற்காக வென்றே 1966–67-ல் கட்ட எடுத்துக் கொண்ட மீன் முட்டைப் பண்ணையை பொதுப்பணித்துறையினர் கட்டி வருகின்றனர். இந்தப் பண்ணை 1968–69-ல் தயாராகி விடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

அண்மையில் மீனளத் துறை ஜப்பான் நாட்டிலிருந்து "டிரவுட் என்னும் மீன் வகையின் முட்டைகளைப் பெற்றது. இந்த முட்டைக அவலான்ஞ்சியில் உள்ள மீன்முட்டை பொரிக்கும் நிலையத்தி வளர்க்கப்பட்டு பெரியனவாக ஆக்கப்படும். பின்னர் அவை நீ மின்சார நீர்த் தேக்கங்களில் விடப்படும்.



(4) **ஊராட்சிகள் மூலம் மீனள வளர்ச்சி.**—இணைமானிய அடிப்படையில் , ஊராட்சிகளில் மீனள வளர்ச்சிக் கென கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது:—

1. தனிப்பட்டவர்களுக்கு நைலான் மிதவைகள் முதலியவற்றை வழங்குதல்.
2. மீன் விற்பனை நிலையங்களுக்கு மேம்பாடுகள்.
3. மீன் வளர்ப்புக் கென ஏரிகளைப் புதுப்பித்தல்.
4. மீன் வளர்ப்பிடங்களைக் கட்டுதல்.
5. மீன் வளர்ப்பிடங்களை பேணி நடத்தி வருதல்.
6. மீன் குஞ்சுகளை வழங்குவதும் பங்கிடுவதும்.

மேற்சொன்ன திட்டங்களை 1968-69-ல் தொடர்ந்து செயல்படுத்தக் கருதப்பட்டுள்ளது.

(5) **கழிமுகப் பண்ணைகள்.**—இம் மாநிலத்தில் பல கழிமுகங்களும் உப்பங்கழிகளும், சதுப்பு நிலங்களும், உள்ளன. பழவேற்காடு, எண்ணூர், அடையாறு கோவளம், மரக்காணம், கிள்ளை, பரங்கிப் பேட்டை, முத்துப்பேட்டை, கோடிக்கரை, மண்டபம், புன்னக்காயல், மணக்குடி ஆகிய இடங்களில் முக்கியமாக அவை காணப்படுகின்றன. இரண்டாவது திட்டத்தின்போது மீன்பண்ணைகள் அடையாற்றில் நிறுவப்பட்டன. மூன்றாவது திட்டத்தில் மணக்குடியில் அமைக்கப்பட்டன. இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் உதவியுடன் ஆராய்ச்சிப் பிரிவு ஒன்று அடையாற்றில் நிறுவப்பட்டுள்ளது. மீன் பண்ணைகள் குறித்தும், அவற்றைப் பேணி வருவது குறித்தும் கிடைத்த புள்ளி விவரங்கள் மூலம், இம் மாநிலத்திலுள்ள கழிமுகங்களை—ஆதாயம் அளிப்பவையாக மேம்பாடு செய்யும் வாய்ப்புக் கிட்டியுள்ளது. சில முக்கிய கழிமுகங்களை மேம்பாடு செய்வதற்காக, ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. 1967–68-ல் தென் ஆற்காடு மாவட்டத்திலுள்ள வெள்ளாறு கழிமுகத்தை மேம்பாடு செய்யும் வேலை மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்வு முடிந்த பிறகு, வரும் ஆண்டுகளில் மேம்பாடு செய்வதற்கென மேலும் சில கழிமுகங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டன.

(6) **மீனள ஆராய்ச்சி.**—மீனள நிர்வாகம் ஒரு தொழில் நுட்பத் துறையாகும். மீன் குறித்த உயிரியல், அவை இடம் மாறுவது, வளர்வது ஆகியவை குறித்தும், நீரின் நிலைமைகள் குறித்தும் மிகுந்த அறிவு தேவையாகும். மேலும், கடல் குறித்தும் நீரியல் குறித்தும் பல புள்ளி விவரங்களைச் சேகரிப்பது இன்றியமையாததாகும். இவற்றை யெல்லாம் நன்கு அறிந்திருந்தால் தான், குறைந்த செலவில் நிறைய மீன்களைப் பிடிப்பதற்கான ஏற்ற முறைகளைக் கண்டு பிடிப்பது இயலும். மீனைப் பதப்படுத்துவது குறித்தும் ஆராய்ச்சியும் சோதனைகளும் நடத்த வேண்டியுள்ளது. இம் மாநிலத்திலுள்ள தெரிந்தெடுத்த சில ஆராய்ச்சி நிலையங்களில் கடல் கூறுகள், தொழில் நுட்பக் கூறுகள் குறித்தும், நன்னீர் மீனளங்கள் குறிததும் இத் துறை ஆராய்ச்சி வேலை நடத்தி வருகின்றது. எண்ணூரில் ஒன்றும், குருசடைத்தீவில் ஒன்றும், தூத்துக்குடியில் ஒன்றும், குமரி முனையில் ஒன்றும் ஆக நான்கு கடலுயிர் ஆராய்ச்சி நிலையங்கள் உள்ளன. நாகப்பட்டினத்திலொன்றும், தூத்துக்குடியிலொன்றும், குமரிமுனையிலொன்றும் ஆக மூன்று தொழில் நுட்ப நிலையங்கள் உள்ளன. பவானி சாகரில் நன்னீர் உயிரியல் ஆராய்ச்சி நிலையம் ஒன்றும், சென்னையில் நீரியியல் ஆராய்ச்சி நிலையம் ஒன்றும், அடையாற்றில் சிறிது உப்பான நீர் ஆராய்ச்சிப் பிரிவு ஒன்றும் உள்ளன. நீலகிரியில் உள்ள மேட்டுநில மீனள ஆராய்ச்சி நிலையம் தகுதியுள்ள அதிகாரியின் பொறுப்பில் உள்ளது. ஆராய்ச்சிகள் மூலம் கிட்டிய விளைவுகள்

திரைப்படக் காட்சிகள் மூலமும், செய்திப் பரப்பு விளம்பரப் பணியின் மூலமும் இரு தனி செய்திப் பரப்புப் பிரிவுகளால் மீனவர்களுக்குத் தெரிவிக்கப்படுகின்றன.

(7) **மீனைப் பக்குவப்படுத்தல்.**—ஏராளமான விசைப்படகுகளும் போக்குவரத்து வண்டிகளும் பயன்படுத்துவதன் விளைவாகவும், நைலான் நூலால் தயாரிக்கப்பட்டுள்ள வலைகள் கொண்டு மீன் பிடிப்பதற்கு வசதி ஏற்படுத்தியுள்ளதன் காரணமாகவும் மீனைப் பாதுகாத்துச் சேர்த்து வைப்பதற்கான இயந்திரங்களை மேம்படுத்துவது அவசியமாகியுள்ளது. ஐந்தாண்டுத் திட்டங்களின் கீழ் இதுவரை 36 பனிக்கட்டி இயந்திரங்கள் குளிர்ப் பதனக் கூடங்கள் நிறுவும் வேலை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவற்றில் 24 செயல்பட்டு வருகின்றன. 12 கட்டப்பட்டு வருகின்றன. கட்டப்படுபவற்றில் 2 எண்ணூரிலும், தூத்துக்குடியிலும் மீனை உறைய வைக்கும் வேலைக்கெனப் பயன்படுத்தப்படுகின்றன. எண்ணூர் நிலையம் ஒரு மாத காலத்தில் செயல்படும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. அதில் 3 டன் மீன் உறையச் செய்யப்படும். உறைய வைத்த 50 டன் மீனை அது சேமித்து வைக்கும் திறன் கொண்டிருக்கும். இந்த நிலையங்கள் முடிக்கப்பட்டவுடன், மீனை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் வாய்ப்புகள் கிட்டக்கூடும். குமரி முனையிலும், இடிந்த கரையிலும் உள்ள பனிக்கட்டி—குளிர்ப்பதன நிலையங்களும், தூத்துக்குடியிலுள்ள மீன் உறைய வைக்கும் நிலையமும் 1968–69-ல் முடிக்கப்படும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. இவை முடிக்கப்பட்டவுடன் எல்லா நிலையங் களின் பனிக்கட்டி உற்பத்தித் திறன் நாளொன்றுக்கு 79 டன் ஆகவும் ஒரு சமயத்தில் மீனைச் சேர்த்து வைக்கும் திறன் 191 டன் ஆகவும் இருக்கும்.

போதிய எண்ணிக்கைக்குப் போக்குவரத்து வண்டிகள் ஏற்கெனவே உள்ளன. மீனைக் கரை சேர்க்கும் இடங்களுக்கு இவை பயன்படுத்தப்படுகின்றன. ஹங்கேரியிலிருந்து இறக்குமதி செய்யப் பட்ட குளிர்ப்பதன வசதிகள் கொண்ட 3 வண்டிகள் மீனை எடுத்துச் செல்வதற்கென பயன்படுத்தப்படுகின்றன.

(8) **மீன் பதனக் கூடங்கள்.**—துறைப்பணியாளர்களின் முறை யான மேற்பார்வையின் கீழ் மீனவர்கள் மீன்பதனக் கூடங்களில் மீனைச் சுகாதார முறையில் பக்குவப்படுத்துவதில் ஊக்கமளிப்பதற்கென, அவர்களுக்குக் குறைந்த விலைகளில் நல்ல ரக உப்பு வழங்கப் படுகிறது.

(9) **மீனவர்களுக்குப் பயிற்சி.**—தற்பொழுது 6 பயிற்சி நிலையங்கள் உள்ளன. ஒவ்வொரு 10 திங்களுக்கும் 300 மீனவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்தப் பயிற்சி நிலையங்கள் அனைத்தும் தொடர்ந்து இடைவிடாமல் செயல்படுகின்றன. மீன் பிடிப்பதற்கான தற்கால முறைகளிலும், "டீசல்" பொறி பொருத்தப்பட்டுள்ள விசைப்படகுகளை இயக்கிப் பேணி வருவதிலும், மீனவர்களுக்குத் தொகுதி, தொகுதி யாகப் பயிற்சியளிக்கப்படுகிறது. இந்தப் பயிற்சி நிலையங்களில் வசதிகள் படிப்படியாக அதிகரிக்கப்பட்டு வருகின்றன. மீனவர்களுக்கு நடைமுறைப் பயிற்சியளிப்பதற்கென இந் நிலையங்களுக்கு 3 உயர் விசைப்படகுகளை வழங்கக் கருதப்பட்டுள்ளது.

மீனளத் துறையைச் சேர்ந்த 4 பணியாளர்கள் தற்போது "கியர்" தொழில் நுட்பத்திலும் "டீசல்" பொறி பொருத்திய படகுகளை இயக்குவதிலும் பயிற்சி பெற்று வருகின்றனர்.

(10) **மீனவர் நலத் திட்டங்கள்.**—மீன் பிடி கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகள், அணுகுசாலைகள், குடி நீர் வசதிகள், வீட்டு வசதி, மின்சார வசதி, கல்வி வசதி ஆகியவற்றிற்கு வசதி செய்வதே இவ் வேலைத் திட்டத்தின் நோக்கமாகும். 1967–68 வரையில், விரைவுத் திட்டத்தின் கீழ் 10 இணைப்புச் சாலைகளை முடிக்கும்



வேலை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மீனளத் துறையினர் மீனவர்களுக் கான வீட்டு வசதித் திட்டத்தை 1968–69-ல் மீண்டும் செயல்படுத்தக் கருதியுள்ளனர். இத் திட்டத்தின்கீழ் 100 மீனவர்களுக்கு வீடுகள் கட்டுவதற்கென உதவித் தொகையாக ரூ. 750-ம், கடனாக ரூ. 250-ம் வழங்கப்படும்.

(11) **மீன்பிடி துறைமுகங்களுக்கும், மீனைக் கரைசேர்க்கும் தோணித் துறைகளுக்கும் வகை செய்தல்.**—சென்னை, கடலூர், நாகப்பட்டினம், மண்டபம், இராமேஸ்வரம், தூத்துக்குடி, குளச்சல் முதலிய இடங்களில் விசைப் படகுகளின் எண்ணிக்கை பெருமளவிற்கு அதிகரித்துள்ளது. எல்லா விசைப் படகுகளும் கரை சேருமிடங்களில் அவற்றை நிறுத்தி வைப்பதற்குப் போதுமான இடவசதியில்லை. இயற்கை யான வடி நிலங்களை அமைப்பதற்காக உப்பனாறு, கடுவையாறு கழிமுகங் களைப் பயன்படுத்திக் கொண்டு கடலூர், நாகப்பட்டினம் ஆகிய இடங்களில் பிடித்த மீனைக் கரை சேர்ப்பதற்குத் தேவையான வசதிகளை மீனளத்துறை மேம்படுத்தியுள்ளது. இராயபுரத்தில் மீன்பிடித் துறைமுகம் ஒன்றைப் பெரிய அளவில் கட்டுவதற்கான வரைப்படங்களும், மதிப்பீடுகளும் தயாரிக் கப்பட்டுள்ளன. இத்திட்டம் சென்னைத் துறைமுக ஆணைக் குழு நிறை வேற்ற எண்ணியுள்ள எண்ணெய்த் துறையுடன் இணைக்கப்பட்டுள்ளது. இத்திட்ட அறிக்கையை இந்திய அரசு முனைந்து ஆய்வு செய்து வருகிறது. ரூ. 240 லட்சம் செலவில் தூத்துக்குடியில் மீன்பிடி துறைமுகம் ஒன்றை அமைப்பதற்கு அரசாங்கப் பொதுப் பணித்துறை வரைப்படங்களையும், மதிப் பீடுகளையும் தயாரித்துள்ளது. இந்த வரைபடங்களையும், மதிப்பீடுகளையும் இந்திய அரசு ஆலோசனை செய்து வருகிறது.

பிடித்த மீன்களைக் கரை சேர்ப்பதற்கான தோணித் துறைமுகங்களை இராமேஸ்வரத்திலும் மண்டபத்தில் பாக் ஜலசந்தியின் அருகே நிறுவு வதற்கு அரசாங்கம் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இவ் வேலை விரைவில் எடுத்துக்கொள்ளப்படும்.

(12) **ஆழ்கடலில் மீன் பிடித்தல்.**—ஆழ்கடலில் மீன்பிடிப்பு முறை யாக இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. தனியார் எவரும் இதை மேற் கொள்வதும் தற்போது இயலாது. இரண்டாவது உலகப் போர் முடி வடைந்த பின்னர் ஆழ் கடலில் சென்று மீன் பிடிக்கும் சோதனைகள் நடத்தப்பட்டன. ஆனால் அதற்குத் தேவையான மீன்பிடி நாவாய்கள் இல்லாததால் இந்தச் சோதனைகளை மேலும் தொடரவோ முனைப்பாகச் செயல்படுத்தவோ இயலவில்லை. ஆழ்கடலில் மீன் பிடிப்பதற்காக மீன்பிடி நாவாய்கள் (Trawlers) நான்கு பெறுவதற்காக இந்திய அரசின் மூலமாக முயற்சி செய்யப்பட்டு வருகிறது.

6. **இந்திய நார்வே திட்டம்.**—இந்திய அரசாங்கத்திற்கும் நார்வே அரசாங்கத்திற்கு மிடையே ஏற்பட்ட ஓர் ஒப்பந்தத்தின்படி 1963-ம் ஆண்டு மத்தியில் மண்டபத்தில் இந்திய–நார்வேத் திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டது. மீன் உற்பத்தியைப் பெருக்குதல், மீனை நன்கு பதப்படுத்திப் பாதுகாத்தல், பிடித்த மீன்களை உடனுக்குடன் விற்பனை செய்தல் ஆகியவற்றிற்குத் தேவையான வசதிகளுடன் மீனள வளர்ச்சியை தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் முனைப்பாக்குவதே இத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். படகு கட்டும் துறை படகுகளைத் தயாரிக்கத் தொடங்கி விட்டது. நவீன முறைகளில் மீன் பிடிப்ப தற்குப் பயிற்சியளிப்பதற்காக உள்ள பயிற்சி நிலையம் 180 மீனவர் களுக்கு ஏற்கெனவே பயிற்சியளித்துள்ளது. உறைநிலைப் பிரிவுடன் கூடிய பனிக்கட்டி யந்திரம்—குளிர்ப்பதன வசதிகள், மீன் மாவு தயாரிக்கும் தொழிற்சாலை ஆகியவற்றை நிறுவுவது, தோணித்துறை முகம் கட்டுதல், பாக் வளைகுடாவின் அருகே தோணித் துறைச் சுவர்

கட்டுவது ஆகிய பணிகளில் சில முடிவடையும் தருவாயிலுள்ளன. சில வேலைகள் நடந்தேறி வருகின்றன. ஒவ்வொரு திட்டமும் எந்தெந்த அளவு முன்னேறியுள்ளது என்பது கீழே விரிவாகக் கூறப்பட்டுள்ளது:—

(i) **படகுகளைக் கட்டுதலும் வழங்குதலும்.**—நார்வே நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட யந்திரங்களைக் கொண்டு படகு கட்டும் துறை ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

மண்டபம் படகு கட்டும் துறையில் 1964–65-ம் ஆண்டில் 32 அடி நீளமுள்ள 40 படகுகளும், 1965–66ம் ஆண்டில் 32 அடி நீளமுள்ள 80 படகுகளும் கட்டுவதென வரையறுத்த வேலைத் திட்டம் வகுக்கப்பட்டது. 1966-ம் ஆண்டில் 43 அடி நீளமுள்ள பெரிய படகுகள் இரண்டும் கட்டும் வேலையும் மேற்கொள்ளப்பட்டது. இவற்றில் 32 அடி நீளமுள்ள 11 படகுகள் கட்டப்பட்டு மீனவர்களுக்கு ஒதுக்கப்பட்டன. 32 அடி நீளமுள்ள 11 படகுகள் பயன்படுத்தத்தக்க நிலையில் உள்ளன். இவை மீனவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். 32 அடி நீளமுள்ள 44 படகுகளும், 43 அடி நீளமுள்ள 2 படகுகளும் பற்பல நிலைகளில் கட்டப்பட்டு வருகின்றன. 36 குதிரைத் திறனுள்ள 44 பொறிகளும், 48 குதிரைத் திறனுள்ள ஒரு பொறியும், 60 குதிரைத் திறனுள்ள 2 பொறிகளும் நார்வே நிறுவனத்திடமிருந்து நமக்குக் கிடைத்துள்ளன. இவை அனைத்தும் இங்கு கட்டப்பட்டு வரும் படகுகளுக்கு நார்வே நிறுவனத்திடமிருந்து கிடைக்கும் உதவியாகும்.

(ii) **பயிற்சி நிலையங்கள்.**—1964, செப்டம்பரில் பயிற்சி நிலையம் ஒன்று அமைக்கப்பட்டது. ஒரு தொகுதிக்கு 60 மீனவர்கள் வீதம் இதுவரை மூன்று தொகுதியினருக்கு முன்னரே இந்த நிலையத்தில் பயிற்சியளிக்கப்பட்டது. நான்காவது தொகுதியினர் 1968, பிப்ரவரியில் தங்கள் பயிற்சியை முடித்தனர். பயிற்சிக்கால அளவு 10 திங்களாகும். பயிற்சி பெறுபவர்களுக்கு ரூ. 50 உதவித் தொகை வழங்கப்படுகிறது.

திரைப்படம் காட்டும் பிரிவு ஒன்று நார்வே நிறுவனத்தினால் நன்கொடையாக அளிக்கப்பட்டு, பயிற்சி நிலையத்தில் நிறுவப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் நிலைக்குழு, பயிற்சி நிலையத்திற்கு ‘M’ படகு ஒன்றினை மாற்றுவதற்கு ஒப்புக்கொண்டுள்ளது. ஆழ்கடலில் மீன் பிடிப்பதற்கு மீனவர்களுக்குப் பயிற்சி அளிக்க இந்தப்படகு உதவும்.

(iii) **பனிக்கட்டி யந்திரம், உறைய வைக்கும் பிரிவு.**—பனிக்கட்டி யந்திரம், உறைய வைக்கும் பிரிவு, உறைய வைக்கப்பட்ட பொருள்கள் ஆகியவற்றிற்கான கட்டிடமும், வரவேற்பு அறையும் கட்டி முடிக்கப்பட்டு விட்டன. ரூபாய் 5,90,908·04 மதிப்புள்ள இயந்திரங்கள் வந்துள்ளன. அவற்றை நிறுவும் வேலையும் பெரும்பாலும் முடிந்துவிட்டது. இறுதியான இனங்களை முடிப்பதில் நாட்டம் செலுத்தப்பட்டு வருகின்றது.

(iv) **மீன் மாவு தயாரிக்கும் தொழிற்சாலை.**—பாக் வளைகுடா அருகே பத்து ஏக்கர் நிலம் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. மீன் மாவுத் தொழிற்சாலைக்கான வரை படங்களும், மதிப்பீடுகளும் தயாரிக்கப்பட்டு ஆய்வில் உள்ளன. கட்டிடச் செலவு ரூபாய் 9·12 இலட்சம் ஆகுமென்று மதிப்பிடப்பட்டுள்ளது. நார்வே நிறுவனம் அளிக்க முன் வந்துள்ள இயந்திரங்களின் மதிப்பு ரூபாய் 5,35,000 என்று மதிப்பிடப்பட்டுள்ளது. சுங்க வரியையும், ஏனைய வரிகளையும் தவிர இயந்திரங்களுக்கான செலவில் ரூபாய் 2,34,000 மாநில அரசாங்கத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். இந்தத் தொழிற்சாலை 1968-ல் முடிந்து விடும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

(v) **பாக் வளைகுடா அருகே தோணித் துறைமுகங்களை கட்டுதல்.**—10·96 இலட்சம் ரூபாய்க்கு வரைபடங்களும், மதிப்பீடுகளும் தயாரிக்கப்பட்டு, ஆய்வில் உள்ளன. எந்த இடத்தில் தோணித் துறைமுகங்களை அமைப்பது என்று அறிவதற்காக அங்கே துளையிட்டுப் பார்க்கும் முன்னேற்பாட்டுப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.



(vi) **வழிகாட்டி விளக்குகள்.**—நான்கு வழிகாட்டி விளக்குகள் கிடைத்துள்ளன. அவை படகுகளுக்கு வழி காட்டுவதற்காக பாக் வளைகுடா அருகிலும், மன்னார் வளைகுடா அருகிலும் அமைக்கப்பட்டுள்ளன.

## புதிய ஒப்பந்தம்

முந்திய ஒப்பந்தக் காலம் 31–3–1967-ல் முடிவடைந்து விட்டதால் ஐந்து ஆண்டுகளுக்கான மற்றொரு ஒப்பந்தம் 1967 மார்ச் திங்களில் கையெழுத்திடப்பட்டுள்ளது. அதன்படி 31–3–1967 அன்று முடிவுறுத நிலையில் உள்ள திட்டங்கள் அனைத்தும் நார்வே நிறுவனத்தின் உதவியுடன் முடிக்கப்படும். நார்வே அரசாங்கத்தால் விரிவுபடுத்தப்பட்டுள்ள கடன் திட்டத்தின்கீழ் மீன் பிடிப்பதற்காக கடலில் பயன்படுத்தப்படும் படகுகளுக்கான டீசல் என்ஜின்கள் தொடர்ந்து வழங்கப்படும். 1967–68-லும், 1968–69-லும் பனிக்கட்டி யந்திரம்–குளிர்ப்பதனம் உறைய வைக்கும் பிரிவு ஆகியவற்றைக் கட்டி முடிக்கும் வேலையும், மீன்மாவுத் தயாரிப்புத் தொழிற்சாலை, தோணித் துறைமுகம், தோணிச் சுவர் ஆகியவற்றைக் கட்டி முடிக்கும் வேலையும் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்தின் கீழ் உள்ள படகு கட்டும் துறையில் 1968–69-ல் 32’ நீளமுள்ள 58 படகுகளும், 43’ நீளமுள்ள 2 படகுகளும் கட்டப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தப் படகுகளுக்குத் தேவையான என்ஜின்களை நார்வே நிறுவனம் அளிக்கக்கூடும்.

7. **மீனளத் துறையின் ஏனையத்திட்டங்கள்.**—பல்வேறு நாடுகளின் ஒத்துழைப்புடன், பல திட்டங்களின் மூலமாக மீனளத் துறையினை மேம்படுத்துவதற்கான வழிகளையும் இந்தத்துறை ஆய்வு செய்து வந்துள்ளது. இந்தியாவில் சோழ மண்டலக் கடற்கரையில் உள்ள மீனவர்களின் முன்னேற்றத்திற்காக, படகுகள், கருவிகள், பிரான்ஸ் நாட்டிலிருந்து வந்துள்ள வல்லுநர்கள் போன்ற வசதிகளுடன் “டோரிஸ் திட்டம்” என்ற திட்டம் 1968 ஜனவரியில் சென்னையில் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தின்கீழ், அட்லாண்டிக் பெருங்கடலிலுள்ள செயின்ட் பியர்மிக்கேலான் தீவில் வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்பட்ட இரண்டு “டோரிஸ்” வகைப் படகுகள் (“Doris” type launches) பிரான்ஸ் நாட்டவர்கள் அடங்கிய ஒரு குழுவினால் இந்தியாவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. இந்த குழுவில் ஒரு தலைவரும், நான்கு பிரான்ஸ் நாட்டு மீனவ வல்லுநர்களும் உள்ளனர். அவர்கள் மீன்பிடிக்கும் சோதனைகளைச் சென்னைக்கு அப்பால் நடத்தி வருகின்றனர். இந்த “டோரிஸ்” விசைப்படகுகளில் மீன்கள் உள்ள இடத்தைக் காட்டும் மின் கருவி பொருத்தப்பட்டிருக்கின்றது. எனவே, 40 பேதம் (fathoms) ஆழத்தில் மீன்கள் இருந்தாலும் அதைக் கண்டுபிடிக்கும் திறன் இதற்கு உண்டு என்று அந்த வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர். இந்தச் சோதனை வெற்றிகரமானதாக இருந்தால், இம் மாநிலத்தில் உள்ள மீன் பிடிக்கும் தொழிலில் குறிப்பிடும்படியான மாற்றத்தை எதிர்பார்க்க முடியும். ஏனென்றால், இந்தப்படகுகளின் விலை ரூபாய் 15,000 மட்டுமே என்று மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும் இவற்றை இயக்குவதற்கு இரண்டு பேரே போதும். இந்தப் படகுகளின் வடிவமைப்பில் உள்ள கூடுதலான நன்மை என்னவெனில் அவைகளுக்குத் துறைமுக வசதிகள் தேவையில்லை. அவற்றைக் கரைக்கு இழுத்துவந்துவிட முடியும்.

8. **உள்நாட்டு நீர்நிலைகளில் மீன் பிடிப்பதைக் குத்தகைக்கு விடுதலும், உரிமம் வழங்குதலும்.**—இம் மாநில அரசாங்கத்தின் கீழ் உள்ள நீர்நிலைகளில் மீன் பிடிப்பதற்கான உரிமைகள் 1963-ம் ஆண்டிலும் 1964-ம் ஆண்டிலும் ஏலத்திற்கு விடப்பட்ட தொகையைக் காட்டிலும் பத்து சத வீத அதிகத் தொகைக்கு மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் குத்தகைக்கு விடப்படுகின்றன. ஊராட்சிகளிலும், ஊராட்சி ஒன்றியங்களிலுமுள்ள நீர்நிலைகளில் பொது ஏலத்தில் குத்தகைக்கு விடும் அதிகாரம் ஊராட்சிகளுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

மீனளத் துறையின் ஆளுகையின் கீழுள்ள பெரிய நீர்த் தேக்கங்களில் மீன்பிடி உரிமைகளை உரிமை முறையின்கீழ் மீனவர்கள் தொடர்ந்து அனுபவித்து வருகின்றனர்.

**9. மத்திய மீனளக் கழகம்** (Central Fisheries Corporation). கல்கத்தாவில் உள்ள மத்திய மீனளக் கழகம் லிமிடட் என்னும் நிறுவனத்தில் பங்கு மூலதனமாக இம்மாநில அரசாங்கம் ரூ. 3 இலட்சம் முதலீடு செய்துள்ளது. இந்த நிறுவனம் கல்கத்தாவைத் தலைமை இடமாகக் கொண்டு, 5 கோடி ரூபாய் அதிகாரம் பெற்ற மூலதனத்துடன் தொடங்கப்பட்டது. மீனைப் பயன்படுத்துகிறவர்கட்கு நியாய மான விலையில் மீன் கிடைக்க உதவி செய்வதும், கிழக்குப் பாக்கிஸ்தானி லிருந்து மீன் இறக்குமதி செய்வதன் மூலம் அந்நியச் செலாவணி குறைந்து போவதால் அங்கிருந்து மீன் இறக்குமதி செய்வதைப் படிப்படி யாகக் குறைப்பதும், இந்தியாவில் உள்ள மீன் உற்பத்தியாளர்க்கு நியாய விலையில் மீன் கிடைக்கச் செய்வதும் இக் கழகத்தின் பொதுவான நோக்கங்களாகும். இம் மாநிலத்து நீர்த் தேக்கங்களிலே உபரியாகப் பிடிக்கப்படும் மீன்களைக் கல்கத்தா மாநகரில் விற்பனை செய்யும் பணி யையும் இக்கழகம் மேற்கொண்டுள்ளது. இக் கழகம் சென்னை மாநகரில் நான்கு இடங்களில் சில்லறையில் மீன் விற்கும் நிலையங்களைத் தொடங்கி யுள்ளது.

**10. முத்துக் குளித்தலும் சங்கெடுத்தலும்—(A) சங்கெடுத்தல்.**—திருநெல்வேலியில் சங்கெடுக்கும் பணியும், தஞ்சாவூர் ஒரு பகுதியில் சங்கெடுக்கும் பணியும் மீனளத் துறையினால் நடத்தப்படுகின்றன. இராம நாதபுரத்துக்கு அப்பாலும், சிவகங்கையிலும், தஞ்சாவூர் மாவட்டத்தில் ஒரு பகுதியிலும் தென்னாற்காடு, செங்கற்பட்டு, சென்னை, கன்னியாகுமரி மாவட்டக் கடற்கரையிலும், சங்கெடுத்தல் பணி குத்தகைக்கு விடப்பட் டுள்ளது. இவ்வாறு மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை குத்தகைக்கு விடப் படுகிறது. மீனளத் துறையே சங்கெடுக்கும் பணியை ஏற்று நடத்த இயலாத இடங்களிலும் பொருளாதார வகையில் கட்டுப்படியான நிலையில் அவற்றை மற்றவர்களுக்குக் குத்தகைக்கு விடுவதும், மீனளத் துறை வாயிலாக எடுக்கப்பட்ட சங்குகளைப் பெறுவதும், அவற்றை அரசாங்கக் கிடங்குகளில் சேமித்து வைப்பதும், ஒப்பந்தப் புள்ளி மூலம் சங்கு வியாபாரி களுக்கு அவற்றை விற்பதும் அல்லது உடன்படிக்கை வீதங்களின்படி மேற்கு வங்காளத்திற்கு விற்பனை செய்வதும் இத் துறையின் அலுவல் களாகும். மீனளத் துறைக்கு அதிக வருவாயினைத் தேடித் தருகிற இனங் களில் இதுவும் ஒன்றாகும்.

**(B) முத்துக் குளித்தல்.**—இன்று உலகத்திலே நல்முத்து குளிக்கும் ஒரு சில இடங்களில் தூத்துக்குடி கடற் பகுதியும் (திருநெல்வேலி மாவட் டம்) ஒன்றாகும். முத்துக் குளித்தல் ஆண்டுதோறும் நடைபெறுவதில்லை. ஆண்டு முழுவதிலும் கூட நடைபெறுவதில்லை. ஒரு சில ஆண்டுகளுக்கு ஒரு முறையும் தொடர்ச்சியாக இராமலும் நடைபெறுகிறது. 1805-ம் ஆண்டு முதல் 1964-ம் ஆண்டு வரையில் 27 முறை முத்துக் குளிக்கப் பட்டுள்ளது. 1926–28 ஆண்டுகளில் நடைபெற்ற முத்துக் குளியலி லிருந்து மீனளத் துறை முத்துச் சிப்பிகளைப் பற்றிய புள்ளி விவரங்களைத் திட்டவட்டமாகச் சேகரித்து, முத்துச் சிப்பி பார்களை ஆராய்ந்து வருகின்றது. இதன் விளைவாக 1955-ம் ஆண்டு முதல் 1961-ம் ஆண்டு வரையில் பல முறை முத்துக் குளியல் நடைபெற்றுள்ளது. 1959-ம் ஆண்டு நடைபெற்ற முத்துக் குளித்தலே மிகப் பெரிய முத்துக் குளித்தலாகும். அப்போது என்றுமே கண்டிராத அதிக அளவில் முத்துச் சிப்பிகள் கிடைத்தன. இதுவரை நடத்தியுள்ள முத்துச்சிப்பிப்பார் ஆய்வுகளிலிருந்து எடுக்கத் தக்க முத்துச் சிப்பிகள் மிகக் குறைவாகவே இருப்பதாகவும், சிறிய அளவில் முத்துக் குளிக்கக்கூட இது போதுமானதாக இல்லை என்றும் தெரியவந்தன.

**11. பதப்படுத்திய மீன்களை டப்பியில் அடைத்தலும், மீன்மாவும், கடற்கோரையிலிருந்து கூழ் தயாரிப்பதற்கான யந்திரங்களும் (Agar-agar Plants).**—தூத்துக்குடியில் சூடை மீனையும், இருவையும் பதப்படுத்தி டப்பிகளில் அடைக்கும் தொழிற்சாலை ஒன்று 1966 ஜூன் திங்களில் செயல்படத் தொடங்கியது. நாளொன்றுக்கு 5,000





டப்பிகளை இத் தொழிற்சாலை தயாரிக்கும். 1967 டிசம்பர் வரையில் 1,73,704 பதப்படுத்திய சூடை மீன்களும், 18,264 பதப்படுத்திய இறால் மீன்களும் டப்பியில் அடைக்கப்பட்டன. இந்த டப்பிகள் படை அதிகாரி களுக்கும் பொது மக்களுக்கும் விற்பனை செய்யப்படுகின்றன. மீனைப் பதப்படுத்தி டப்பிகளில் அடைக்கும் தொழிற்சாலையிலிருந்து கிடைக்கும் கழிவுப் பொருள்களைப் பயன் படுத்துவதற்காக, மீன் பதப்படுத்தி டப்பியில் அடைக்கும் அரசாங்கத் தொழிற்சாலையின் துணை நிலையமாக மீன்மாவுத் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று நிறுவப்பட்டுள்ளது. இந்த மீன் மாவுத் தயாரிக்கும் தொழிற்சாலை 1967-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 21-ம் தேதி முதற்கொண்டு முறையாக உற்பத்தி செய்யத் தொடங்கியது. மீனைப் பதப்படுத்தி டப்பிகளில் அடைக்கும் தொழிற்சாலையிலிருந்து கிடைக்கிற கழிவுப் பொருள் அனைத்தையும் இத் தொழிற்சாலை பயன்படுத்திக் கொள்கிறது. மீனளத்துறைப் படகுகள் பிடிக்கிற பலவகை மீன்களையும், எளிதில் விற்பனையாகாத மீன்களையும் இத் தொழிற்சாலையே பயன் படுத்திக் கொள்கிறது. கடற்கோரையிலிருந்து கூழ் தயாரிப்பதற்கான யந்திரச்சாலை செயல்படும் நிலையில் உள்ளது.

**12. சுறா, ஈரல் எண்ணெய் உற்பத்தி.**—சுறா, ஈரல் எண்ணெய் எடுக் கும் நிலையங்கள் ஆண்டுதோறும் தூய்மைப் படுத்தப்படாத 20 ஆயிரம் கிலோ சுறா ஈரல் எண்ணெய் எடுத்து வருகின்றன. இதனால் கேரள அரசாங்கத்திடமிருந்து ஆண்டுதோறும் ரூ. 55,000 வருவாய் கிடைக்கிறது.

**13. மீன் காட்சிச் சாலை.**—மெரினா கடற்கரையில் அமைந்துள்ள மீன் காட்சிச் சாலை பொது மக்கள் மீன்களைப் பற்றி அறிய வாய்ப்பு அளிப்ப துடன், அவர்களுக்கு ஒரு பொழுது போக்கு நிலையமாகவும் விளங்கி வருகிறது. இதன் மூலம் வருவாயும் கிடைக்கிறது. ஆண்டுதோறும் மீன் காட்சிச் சாலை மூலம் ரூ. 10,000 முதல் 20,000 வரை வருவாய் கிடைக் கிறது. அண்மையில் இக் காட்சிச் சாலையில் கடல் மீன்களையும் காட்சிக்கு வைப்பதற்காகக் கடல் நீர் வசதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**14. மீனவர்களுக்கு உதவி.**—கடற்கரைக் குடிசைகளில் வசிக்கிற மீன வர்கள் பருவநிலை மோசமாக இருக்கும்போது கடலில் சென்று மீன் பிடிக்காமல் தடுக்கப்படுவதுடன், அவர்களுடைய குடிசையும் சேதமடைவ தால் பாதிக்கப்படுகின்றன. இத்தகைய நெருக்கடி காலங்களில் அம் மீனவர்களுக்கு உணவு முதலியவை வழங்குவதற்காக, உடனடியாக உதவி செய்வதற்குப் பயன்படுத்தும் பொருட்டு, மீனளத் துறையிடம் சிறப்பு மானியம் எதுவும் இல்லை. இது சில காலமாகவே அரசாங்கத்தின் நாட்டத்தில் இருந்து வந்தது. இப்போது மீனவர் சமூகத்தின் நலனை முன்னிட்டு துயர் தணிப்பு நிதி ஒன்றை அரசாங்கம் ஏற்படுத்தியுள்ளது. இதற்கு அரசாங்கமும் பொது மக்களும் தொகை வழங்குவர். இதுவரை எட்டு முறை இயற்கைப் பேரிடர் ஏற்பட்ட போது இந்த நிதியிலிருந்து 16 ஆயிரம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

1966-ம் ஆண்டு ஏற்பட்ட புயலினாலும், தீ விபத்தினாலும் கடற்கரைப் பகுதி நெடுகிலும் இடருற்ற மீனவர்களுக்கு 50 சத வீதம் உதவித் தொகையும் 50 சத வீதம் கடன் தொகையும் வழங்குவதற்காக, 1966–67, 1967–68-ம் ஆண்டுகளில் அரசாங்கம் ரூ. 9,51,000 வழங்க ஒப்புதல் அளித்துள்ளது. இராமநாதபுரம் கடற்கரையிலும் தஞ்சாவூர் கடற்கரை யின் அறந்தாங்கி, பட்டுக்கோட்டை வட்டங்களிலும் 1967 டிசம்பரில் வீசிய கடும் புயலால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு இடர் உதவித் தொகை அளிப்பதற்காக ரூ. 7,50,000-க்கு அரசாங்கம் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இப்போது மீண்டும் செயல்பட்டு வரும் மீனளத் துறை வீட்டு வசதித் திட்டம் நீங்கலாக தஞ்சாவூர் மாவட்டம் அம்மாப் பட்டினத்தில் 200 வீடுகள் உள்ள புதுக் குடியிருப்பு ஒன்றைக் கட்டும் சிறப்புத் திட்டம் ஒன்றும் மீனவர்களுக்கு உதவி செய்யும் பணி மேற் கொள்ளப்பட்டுள்ளது. இத் திட்டம் படிப்படியாக நிறைவேற்றப்படும். இந்த ஆண்டில் 60 வீடுகளைக் கட்டும் பணி தொடங்கப்பட்டு 1968 மார்ச்சுத் திங்களுக்குள் முடிவுறும்.

கல்பாக்கத்தில் அணு மின் நிலையம் அமைப்பதனால் பாதிக்கப்படும் மீனவர்களை வேறிடத்தில் குடியமர்த்தும் திட்டமும் மேற் கொள்ளப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ் நான்கு கிராமங்களைச் சேர்ந்த 327 மீனவக் குடும்பங்கள் மனை வசதியுடன் வேறிடங்களில் குடியமர்த்தப்படுவர்.

**15. சென்னை, இராமேச்வரம், கடலூர் ஆகிய இடங்களில் அண்மைக் கடல் மீன்பிடி நிலையங்கள்.**—அண்மைக் கடல் மீன் பிடிக்கும் வழி வகைகளை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குச் சென்று விளக்கவும், அண்மைக் கடல் மீன் பிடிக்கும் ஆய்வு விவரங்கள் சேகரிக்கவும், மீன் பிடி இடங்களைப் புதிதாகக் கண்டுபிடிக்கவும் திருத்தி அமைக்கப்பட்ட புதிய கருவிகளைப் பரிசோதித்து, அவற்றைப் பயன்படுத்துவதால், ஏற்படும் நன்மைகளை மீனவர்களுக்கு விளக்கிக் கூறவும் இந்த நிலையங்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளன.

**16. பொது**—நமது மாநிலத்தைச் சூழ்ந்துள்ள கடல்களும் இங்குள்ள ஆறுகளும் வற்றாத மீன் செல்வத்தை தமிழகத்தே கொண்டுள்ளவையாகும். நவீன விசைப் படகுகள், மீன்பிடித் துறைகள், குளிர்ப்பதனச் சாலைகள், கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் மீனவர்களுக்கு அளிக்கப்படும் உதவி இவை அனைத்தும் மீன் பிடி தொழில் கூட்டுறவு அடிப்படையில் ஆதாயம் தரும் வகையில் வளர்வதற்கும் இத் துறையில் பல புதிய தொழில்கள் பல்கிப் பெருகுவதற்கும் உதவியாக இருக்கும். கடலிலும் ஆறுகளிலும் கிடைக்கும் வற்றாத மீன் செல்வத்தை மீனவர்கள் செவ்விய முறையில் போதிய அளவில் பயன்படுத்தத் தொடங்குவார்களேயானால், அவர்களுடைய பொருளாதார நிலை உயர்வதற்கு அது பேருதவியாக அமையும். வரும் ஆண்டுகளில் இவ்வகையில் முயற்சிகள் முனைந்து மேற்கொள்ளப்படுவதோடு, அவை மேன்மேலும் ஆர்வத்தோடு நிறைவேற்றப்படும்.



## இணைப்பு 2.

[27-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க].

## கோரிக்கை எண்—XVIII விலங்கின வளர்ப்பு.

## 1968-69-ம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு ரூ. 3,64,68,000.

### காலநடை ளர்ப்புத் துறை கொள்கை விளக்கக் குறிப்பு.

இம்மாநிலத்தின் கால்நடைச் செல்வத்தை மேம்படுத்தி, உணவு
உற்பத்தியைப் பெருக்குவதற்குக் கால்நடை வளர்ப்புத் துறை உழவர்
களுக்கு உதவுவதில் பெரும் பங்கு வகித்து வருகின்றது. நமது மாநிலத்
திற்கு வேண்டிய ஊட்டச் சத்து நிறைந்த உணவுப் பொருள்கள் கிடைக்கச்
செய்வதிலும் இத்துறைக்கு முக்கிய பங்கு உண்டு. தரமான பால், முட்டை
இறைச்சி, ஆகியவை பெருமளவில் நமக்குக் கிடைப்பதற்காகப் பல திட்டங்
களையும் இத்துறை மேற்கொள்ளுகிறது. மாடுகள் வளர்ச்சி ஆட்டுப்
பண்ணை, கோழிப் பண்ணைப் பெருக்கம், பன்றி வளர்ப்பு, கால்நடைச்
சுகாதாரப் பணி, கால்நடை நோய்க் கட்டுப்பாடு, கால்நடை மருத்துவக் கல்வி
ஆராய்ச்சி முதலிய பணிகளில் இத்துறை ஈடுபட்டுள்ளது. இம் மாநிலத்தி
லுள்ள பல்வேறு கால்நடைப் பண்ணைகளிலும் மையக் கிராமத் திட்டத்தின்
மூலமாகவும், இனப் பெருக்கம் செய்த உயர்ந்த இன எருதுகள், ஆட்டுக்
கடாக்கள், சேவல்கள் மூலமாகவும் உள்ளூர் இனங்களின் தரத்தை உயர்த்
தும் பணி நடைபெறுகின்றது. மாவட்டங்களில் அமைந்துள்ள கால் நடை
மருத்துவ நிலையங்களும் ஆங்காங்கே பணியாற்றும் பணியாளர்களும்,
கால்நடைகளின் சுகாதாரத்தைப் பேணும் பணியையும் கால்நடை நோய்
கட்டுப்பாட்டுப் பணியையும் மேற்கொள்கின்றனர்.

இத் துறையின் பணியை ஆற்றுவதற்குத் தேவையான தொழில்
நுட்பப் பணியாளர்கள் சென்னையில் உள்ள கால்நடை மருத்துவக் கல்லூரி
யில் பயிற்சி பெறுகின்றனர். இக் கல்லூரி இந்த நாட்டிலேயே தலை
சிறந்த கல்லூரிகளில் ஒன்றாகும். தொழில் நுட்பப் பணியாளர்கள்
தேர்ந்தெடுக்கப்படுகின்ற பண்ணைகளில் உள்ள கால்நடை உதவிப் பணி
யாளர் பயிற்சி நிலையங்களிலும் பயிற்சி பெறுகின்றனர். இராணிப்
பேட்டையிலுள்ள கால்நடை நோய்த் தடுப்பு மருந்து தயாரிப்பு நிலையம்
இந்த நாட்டின் வட்டார நிலையமாக ஆக்கப்பட்டுள்ளது. கால்நடைகளைப்
பிடிக்கும் தொத்து நோய்களுக்குச் சிகிச்சை அளிப்பதற்கு வேண்டிய
அம்மைப்பால் குத்துவதற்குத் தேவைப்படும் உயிரியல் மருந்துப் பொருட்
களை இந்த நிலையம் தயாரிக்கின்றது. சிறந்த வகை அம்மைப்பால்களை
தயாரிப்பது பற்றிய ஆராய்ச்சிப் பணி, பல்வேறு அம்மைப்பால்களின்
நோய்த் தடுப்புத் திறனை ஒப்பிட்டு ஆராய்வது, பலவகைக் கலவை அம்மை
பால்களைக் குறித்து சே'தனை செய்து பார்ப்பது ஆகிய பணிகளும் இந்த
நிலையத்தில் மேற்கொள்ளப்படுகின்றன. ஆய்வுக் கூடப் பணியாளர்களைத்
தவிர, வெவ்வேறு நோய்களையும் தனித் தனியே ஆராய்ந்து பார்க்கும்
பணியாளர்களும் உள்ளனர். அவர்கள் இம் மாநிலத்தில் நோய் ஆராய்ச்
சிப் பணியை மேற்கொள்கின்றனர். இப்பணியாளர்கள் நேரடியாகச்
சோதனை செய்து பார்த்து ஆய்வுக்கூடப் பணிக்கு இணக்கமாக வேலை
செய்கின்றனர்.

### I. கால்நடை வளர்ப்பும், கால்நடைப் பண்ணைகளும்.

**(அ) மையக் கிராமத் திட்டம்.**—நாட்டின் கால்நடைச் செல்வத்தை
மேம்படுத்தும் நோக்கத்துடன் மையக் கிராமத் திட்டம் நிறைவேற்றப்
பட்டு வருகிறது. சில கிராமங்களை ஒன்றாகத் தொகுத்து, கால்நடை இனப்
பெருக்கம், கால்நடைத் தீவனம், நிர்வாகம், நோய்க் கட்டுப்பாடு, முதலிய
வற்றை அறிவியல் முறையில் மேற்கொள்வதுடன், கால்நடையின் தரத்தில்
பல்வேறு திட்டங்கள் மூலம் ஏற்றங் காண்பதுமே மையக் கிராமத் திட்டத்
தின் நோக்கமாகும். கால்நடை வளர்ப்புத் திட்டத்தின் கீழ் இனப்

பெருக்கம் செய்யத் தக்க 10 ஆயிரம் ஆவினங்கள் செயற்கை முறையில் கருத்தரிக்கச் செய்யப்படுகின்றன. இதற்காக மையக் கிராமப் பகுதிக்குள் ஏற்புடைய 10 கிராமங்களில் துணை நிலையங்கள் நிறுவப்படுகின்றன. கால்நடை மேம்பாட்டுச் சட்டம் திறமையாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பயனில்லாத, திறன் குன்றிய காளைகள் ஆண்மை நீக்கப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் 1966–67 வரையில் 650 மையக் கிராமத் துணை நிலையங்களுடன் 75 மையக் கிராம நிலையங்கள் (செயற்கை முறை கருத்தரிப்பு நிலையங்கள்) நிறுவப்பட்டன. மையக் கிராம நிலையங்கள் தவிர, நகர்ப்புறத்திலும் கிராமப்புறத்திலும் ஆவினங்களின் தரத்தை உயர்த்துவதற்கும் அவற்றின் பால் உற்பத்தியைப் பெருக்குவதற்கும் 29 செயற்கை முறைக் கருத்தரிப்பு நிலையங்களும் மையக் கிராமத் திட்டத்தின் கீழ் 73 மையக் கிராம வளர்ச்சி நிலையங்களும் தொடர்ந்து செயல்பட்டு வருகின்றன. தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் தீவன வசதிகளையும், மேய்ச்சல் வசதிகளையும் மேம்படுத்துவது மையக் கிராமத் திட்டத்தின் மற்றொரு நோக்கமாகும். தீவனப் பயிருக்கு வேண்டிய விதைகளும், புல் வளர்க்கும், வசதிகளும், குடியானவர்களுக்குப் பாதி விலைக்கு வழங்கப்படுகின்றன. புல், வைக்கோல், முதலியவற்றை வெட்டுங் கருவிகளும் குறைந்த விலைக்கு வழங்கப்படுகின்றன. ஏற்கனவே கன்று வளர்ப்பு உதவித் திட்டத்தின் கீழ் வந்துள்ள கன்றுகளுக்குத் தொடர்ந்து உதவித் தொகை அளிக்கப்பட்டு வருகின்றது.

(ஆ) **மலை மாடுகள் வளர்ச்சித் திட்டம்.**—பொதுவாகக் கால்நடைகளை மேம்படுத்துவது தவிர, தேர்ந்தெடுத்த பகுதிகளில் மலை மாடுகளை மேம்படுத்துவதற்கும் சிறப்பான முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. கோடைக்கானலில் ஏற்ற சூழ்நிலையும், பசுமையான புல் தரைகளும் இருப்பதால், வெளிநாட்டு ஜெர்சி இன மாடுகளைப் பயன்படுத்தி உள்நாட்டு ஆவினங்களை தரமுயர்த்த முடியுமெனக் கருதப்படுகிறது. இந்திய அரசின் முழு நிதி உதவியுடன் மூன்றும் திட்டக் காலத்தில் 5 துணை நிலையங்களுடனும் 8 கிளை நிலையங்களுடனும் கோடைக்கானலில் மலை மாடு மேம்பாட்டுத் திட்டம் தொடங்கப்பட்டது. மூன்றுவது திட்டம் முடிவடைந்த பின்னர், மலை மாடு வளர்ப்புத் திட்டம் மாநிலத் திட்டமாகத் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. இத் திட்டம் இப்போது உள்ளூர் தேவைகளை ஒட்டித் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. சிறப்புப் பணியாளர்களின் உதவியுடன் செயற்கைக் கருத்தரிப்புப் பணி முறைப்படி நிறைவேற்றப்பட்டு வருகிறது.

(இ) **கலப்பின கால்நடை வளர்ச்சி.**—நீலகிரி மாவட்டத்தில் கலப்பினக் கால்நடைகளை வளர்ப்பதற்காக உதகமண்டலத்தில் மாநிலத் திட்டம் ஒன்று தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. வெளி நாட்டு ஜெர்சி காளைகளைக் கொண்டு நீலகிரி மாவட்ட ஆவினங்களின் தரத்தை உயர்த்துவதே இதன் நோக்கமாகும். இதன் முக்கிய நிலையம் உதகமண்டலத்தில் உள்ளது. நாலு துணை நிலையங்கள் நீலகிரி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ளன. உள்நாட்டு ஆவினங்களையும், ஏற்கனவே இருக்கின்ற கலப்பு ஆவினங்களையும் வெளிநாட்டு உயர்வகைக் காளைகளின் விந்து கொண்டு செயற்கை முறையில் கருத்தரிக்கச் செய்வதன் மூலம், உள்நாட்டு மாடுகளின் தரம் மேலும் உயர்த்தப்படுகிறது. மையக் கிராமத்தில் செய்யப்படுவது போன்றே மேற்கூறிய இரண்டு திட்டங்களிலும் தீவன வளர்ச்சிப் பணிகளும் ஏனைய வளர்ச்சிப் பணிகளும் நடத்தப்படுகின்றன.

ஒசூர், புதுக்கோட்டை, ஒரத்தநாடு, அபிஷேகப்பட்டி, செட்டிநாடு, உதகமண்டலம் ஆகிய இடங்களில் நிறுவப்பட்ட 6 கால்நடைப் பண்ணைகள் மன நிறைவு அளிக்கும் வகையில் தொடர்ந்து செயல்பட்டு வருகின்றன. இந்தக் கால்நடைப் பண்ணைகளில் கறவை மாடுகளின் தரத்தினை உயர்த்துவதில் சிறப்பான நாட்டம் செலுத்தப்பட்டு வருகிறது. நல்ல வகைக் கால்நடைகளை கால்நடை உரிமையாளர்கள் தொடர்ந்து பேணி வருவதற்கு வசதியாக, பால் வற்றிய ஆவினங்களின் மீட்புப் பண்ணை ஒன்று அலமாதியில் செயல்பட்டு வருகிறது. இதன் துணை நிலையம் ஒன்று மாதவரம் பால் பண்ணையில் செயல்பட்டு வருகிறது. பால் மரத்த ஆவினங்களை வைத்துக் காப்பாற்றுவதே இதன் அலுவலாகும். இதனால், ;உயர்ந்த



வகை ஆவினங்களைப் பலரும் வைத்துப் பேண முடிகின்றது. ஆவின உரிமையாளர்களின் வருமானத்திற்கேற்ப, பெயரளவில் அவர்களிடமிருந்து கட்டணம் விதித்து வாங்கப்படுகிறது.

கால்நடை வளர்ப்பு மும்முர வேலைத் திட்டம் கால்நடை வளர்ப்பு வேலைத் திட்டத்தின் மற்றொரு முக்கியமான கூறுகும். முன்னிலும் சிறந்த நுட்ப முறைகள், சிறந்த தீனி வழங்கல், அறிவியல் வகையில் நிர்வாகம் ஆகியவையின் மூலம் உள்ளூர்க் கால்நடைகளின் தரத்தை உயர்த்துவதே இதன் நோக்கமாகும். விரைவுத் திட்டத்தின் கீழ் 1964–65-ம் ஆண்டில் கால்நடை வளர்ப்பு மும்முர வேலைத் திட்டப் பிரிவுகள் சைதாப்பேட்டை, மதுரை, கோயம்புத்தூர், ... இடங்களில் ஏற்படுத்தப் பட்டன. அவை தொடர்ந்து செயலாற்றி வருகின்றன. செயற்கைக் கருத்தரிப்பு முறை முறையாக நடத்துவது, சிறந்த தீவனம் கொடுத்துக் கால்நடைகளை வளர்ப்பது, நோய்களைக் கட்டுப்படுத்துவது ஆகியவை மூலம் கால்நடைகளைத் தரம் உயர்த்தும் பணி இப்பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சைதாப்பேட்டையிலுள்ள, மும்முரக் கால்நடை வளர்ச்சித் திட்டத்தில் முன்னோடித் திட்ட அடிப்படையில், 1966–67-ம்ஆண்டில், இந்திய அரசின் ஆலோசனையின்படி கால்நடைக் காப்புறுதித் திட்டம் செயல்படுத்தப் பட்டுள்ளது. காப்புறுதித் தவணை விதங்களையும், இழப்பீடுகளையும், கணக்கிடுவதற்காக, காப்புறுதி செய்வதற்குரிய வயதுக்குட்பட்ட மாடுகள், எருமைகள் ஆகியவற்றின் இறப்பு பற்றிய புள்ளி விவரம் சேகரிக்கும் ஆய்வுப் பணியை மேற்கொள்வதற்காக இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

(ஈ) **ஆவினக் காப்பகங்கள் வளர்ச்சி.**—சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட தனியார் ஆவினக் காப்பகங்களும், இந்து சமய அறக் கட்டளைகள் வாரியத்தின் மேற்பார்வையிலுள்ள அறநிலையங்களும், அவைகளிடம் ஒப்புதல் பெற்ற நல்ல இன மாடுகள் இருந்தால், ஆவின வளர்ச்சித் திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட தனியார் ஆவினக் காப்பகங்களுக்கும், அறநிலையங்களுக்கும் இத் திட்டத்தின் கீழ் மாட்டுத் தொழுவம் முதலியவற்றைக் கட்டுவது போன்ற பணிகளுக்காகத் தொடரா மானியங்களும், மாடுகள் வளர்ப்புக்காக ஆண்டுதோறும் தொடர் மானியங்களும் வழங்கப்படுகின்றன. மேலும், குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள கன்றுகள் வளர்ப்பதற்காக உதவித் தொகையும் வழங்கப்படுகிறது. தற்போது 21 ஆவினக் காப்பகங்கள் செயல்பட்டு வருகினறன.

(உ) **கலப்புப் பண்ணை.**—உழவர்கள் வேளாண்மை ஒன்றை மட்டுமே முக்கியமாகச் சார்ந்திருப்பதால், நிலங்களின் மூலம் வருவாய் அதிகரிப்பு ஏற்பட்டு விடாது என்று கருதப்பட்டது. எனவே, வேளாண்மையுடன், மேம்பட்ட கால்நடை வளர்ப்பு முறைகளையும், மேற்கொள்ளுவதற்கு உழவர்களைத் தூண்டுவதற்காகக் கலப்புப் பண்ணைத் திட்டத்தை செயலுக்குக் கொண்டுவரத் திட்டமிடப்பட்டது. கலப்புப் பண்ணை முறையில் பண்ணை நடத்துவதற்கு ஊக்கம் அளிக்கும் நோக்கத்துடன் முன்னோடி அடிப்படையில் இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டது. மூன்று முதல் ஐந்து ஏக்கர் கொண்ட இத்தகைய 24 சிறிய பண்ணைகளும், 25 ஏக்கர் கொண்ட ஒரு தீவன விதைப் பண்ணையும், தஞ்சாவூர் மாவட்டத்தில் மும்முர வேளாண்மைத் வளர்ச்சித் திட்டப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ளன. ஆனால், நிதித் தட்டுப்பாடு காரணமாக இந்தத் திட்டம் மற்றப் பகுதிகளுக்கு விரிவுபடுத்தப் படவில்லை. எனினும், உழவர்களுக்கு அளிக்கப்படும் கடன், கால்நடைகள் வாங்குவதற்காக அவர்களால் பயன்படுத்திக்கொள்ளப்படுகிறது. தவணை முறையில் இந்தக் கடன் வசூலிக்கப்படுகிறது.

(ஊ) **பன்றி வளர்ப்பு.**—ஒசூர் கால்நடைப் பண்ணையிலுள்ள கால்நடை ஆராய்ச்சி நிலையத்திலும், காட்டுப்பாக்கத்திலுள்ள செம்மறியாட்டுப் பண்ணையிலும், புதுக்கோட்டை, ஒரத்தநாடு, செட்டிநாடு ஆகிய இடங்களிலுள்ள மாவட்டக் கால்நடைப் பண்ணைகளிலும் நிறுவப்பட்டுள்ள பன்றி வளர்ப்புப் பிரிவுகள் முன்னேற்றத்துடன் தொடர்ந்து செயல்படுகின்றன. தமிழ்

நாட்டில் நீலகிரி, செங்கற்பட்டு மாவட்டங்கள் தவிர, மற்றெல்லாப் பகுதிகளிலும் 1966–67 வரையில் நிறுவப்பட்டுள்ள பன்றி வளர்ப்புப் பிரிவுகள் பதின்மூன்று செயல்பட்டு வருகின்றன. இவை தவிர அலமாதியில் விரைவுத் திட்டத்தின் கீழ் பன்றி வளர்ப்புப் பண்ணை ஒன்று தொடங்கப்பட்டுள்ளது.

(எ) **செம்மறியாடு வளர்ப்பு.**—பொருளாதார மேம்பாட்டிற்கு செம்மறியாடு வளர்ப்பு இன்றியமையாதது என்பது உணரப்பட்டுள்ளது. உதகமண்டலத்திலும், சின்ன சேலத்திலும் உள்ள செம்மறியாடு வளர்ப்பு ஆராய்ச்சி நிலையங்களிலும், காட்டுப்பாக்கத்திலுள்ள செம்மறியாட்டுப் பண்ணையிலும், சாத்தூரிலுள்ள செம்மறியாட்டுப் பிரிவிலும், ஒசூர் கால்நடைப் பண்ணையிலுள்ள செம்மறியாட்டுப் பிரிவுகளிலும், செட்டிநாட்டிலுள்ள இராமநாதபுரம் மாவட்டக் கால்நடைப் பண்ணையிலும் செம்மறியாடுகள் வளர்ப்பு குறித்த மேம்பாட்டுப் பணிகள் நிறைவேற்றப்படுகின்றன. செம்மறியாடுகளின் எண்ணிக்கையை மேம்படுத்துவதற்காக பல்வேறு திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளன. உதகமண்டலத்திலுள்ள செம்மறியாடு வளர்ப்பு ஆராய்ச்சி நிலையம் நீலகிரியிலுள்ள செம்மறியாடுகளின் வளர்ச்சிக்கான பல்வேறு கூறுகளைப் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளது.

தற்போது இம்மாநிலத்தில் செம்மறியாடு-கம்பளி வளர்ச்சி நிலையங்கள் 82 செயல்பட்டு வருகின்றன. அவற்றில் 10 நிலையங்கள் 1966–67-ம் ஆண்டில் நிறுவப்பட்டன. இது வரையில் செம்மறியாடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் 16 அமைக்கப்பட்டுள்ளன. அவற்றில் 6 சங்கங்கள் 1966–67-ம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டவை. உழவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கென சின்ன சேலத்தில் நிறுவப்பட்ட செம்மறியாடு-கம்பளி வளர்ப்புப் பயிற்சி நிலையம் ஒன்று தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. இவற்றைத் தவிர, கிராமப்பகுதிகளில் செம்மறியாடு-வெள்ளாடு வளர்ப்புப் பணியைப் பற்றி மக்களுக்கு எடுத்து விளக்குவதற்கென, செம்மறியாடு-வெள்ளாடு செய்முறை விளக்கப் பிரிவுகள் ஏழு செயல்பட்டு வருகின்றன.

## II. கோழிப் பண்ணை வளர்ச்சி.

கோழி இறைச்சியும், முட்டைகளும், மக்களுக்கு சத்துள்ள உணவாகும் என்பதை யாவரும் உணர்ந்துள்ளனர். கோழிப் பண்ணை வளர்ச்சிக்காகவும், முட்டை உற்பத்தியைப் பெருக்குவதற்காகவும் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. கோழிப் பண்ணை வளர்ச்சியின் மூலம் கோழி முட்டை கோழி இறைச்சிக்கான தேவைகளை நிறைவு செய்ய இயலும் என்பதைத் தவிர, அவற்றின் மூலம் உழவர்களுக்கு நிலையான வருவாய் உறுதியாகக் கிடைக்கும். கோழிப் பண்ணை வளர்ச்சியின் வெவ்வேறு கூறுகள் குறித்து ஆராய்ச்சி மேற்கொள்வதற்கென சென்னையிலுள்ள கோழிகள் இன ஆராய்ச்சி நிலையம் நிறுவப்பட்டுள்ளது. ஒசூர் கால்நடைப் பண்ணையிலும், கோழி இனப் பிரிவுகள் நிறுவப்பட்டுள்ளன. கோழிப் பண்ணை வளர்ச்சி நிலையங்கள், கோழிப் பண்ணைப் பொருள் விற்பனை நிலையங்கள், மும்முர கோழிப் பண்ணை வளர்ச்சி வட்டாரங்கள் ஆகியவையும் நிறுவப்பட்டுள்ளன.

இம் மாநிலத்தில் கோழிப் பண்ணை வளர்ச்சி நிலையங்கள் 75 செயல்பட்டு வருகின்றன. 1966–67-ல் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட கோழிப்பண்ணை வளர்ச்சி நிலையங்கள் எட்டும் அவற்றிலடங்கும். மூன்றுவது திட்டத்தின் கீழ் கோழிப் பண்ணை வளர்ச்சி நிலையங்கள் நான்கும். 1966–67-ம் ஆண்டில் பத்தும் 500 கோழிகள் கொண்ட பண்ணைகளாகத் தரம் உயர்த்தப்படுவதற்கென எடுத்துக் கொள்ளப்பட்டன. கோழிப் பண்ணைத் திட்டங்களின் மும்முர வளர்ச்சிக்கென இத் திட்டம் பெருமளவில் ஊக்கமளிக்கும் என்று கருதப்படுகிறது.

(அ) **கோழிப் பண்ணைகளை விரிவு படுத்துதல்.**—கோழிப் பண்ணைகளை விரிவுபடுத்தும் திட்டத்தின்கீழ், தற்போதுள்ள கோழிப் பண்ணைகளில் அடைகாக்கும் கூடங்கள், குஞ்சு பொரிக்கும் சாதனங்கள், பிற சாதனங்கள் ஆகியவற்றுக்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன. 5 மாதம் வரை ஏராளமான கோழிக் குஞ்சுகளை வளர்த்து அவற்றை வெளியில்



வழங்குவதற்காக அவ் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. வெளியே வழங்குவதற்கென கோழிக் குஞ்சுகளை வளர்க்கும் திட்டம் மூன்றுவது திட்டத்தின்போது காட்டுப்பாக்கத்தில் ஏற்கெனவே நிறுவப்பட்டுள்ளது. 1966–67-ல் ஒசூரிலும் இத் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கிராமங்களிலும், பண்ணைகளிலும் கோழிப் பண்ணை வளர்ச்சிக்கென கோழிக்குஞ்சுக்கள் வழங்குவதை உறுதிப்படுத்துவதே இத் திட்டங்களின் நோக்கமாகும்.

தருமத்துப்பட்டியில் உள்ள குஞ்சு பொரிக்கும் திட்டத்திற்கு மூன்றுவது திட்டத்தில் ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. அது தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

(ஆ) **முட்டை, கோழி மும்முர உற்பத்தி, விற்பனை நிலையங்கள்.**—மூன்றுவது திட்டத்தில் இத்தகைய 5 நிலையங்கள் நிறுவப்பட்டன. செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள காட்டுப்பாக்கத்தில் ஒன்றும், சேலம் மாவட்டத்திலுள்ள சேஷன்சாவடியில் ஒன்றும், கோவை மாவட்டத்திலுள்ள அரசூரில் ஒன்றும், மதுரை மாவட்டத்திலுள்ள தருமத்துப்பட்டியில் ஒன்றும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள கோட்டப்பட்டியில் ஒன்றுமாக அந்த நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. பர்மாவிலிருந்து தாயகம் திரும்பியோரின் நலனுக்கென 1966–67-ம் ஆண்டில் தஞ்சாவூரில் ஒரு நிலையம் துவக்கப்பட்டுள்ளது. கோழி இனங்கள் வளர்ப்பவர்களுக்கு வழங்கப்படும் கடன்கள், இத் திட்டத்தின் கீழ்க் குறிப்பிட்டுள்ளபடி, அவற்றை வளர்ப்பவர்களிடமிருந்து முட்டைகளாகவும், கோழிகளாகவும் திரும்பப் பெறப் படுகின்றன. இந் நிலையங்களிலுள்ள விற்பனைப் பிரிவுகள் மூலம் முட்டைகளும், பக்குவப்படுத்திய கோழிக் கறியும் விற்கப்படுகின்றன.

(இ) **கூட்டுறவு, கோழிப் பண்ணை வளர்ச்சி வட்டாரங்களை நிறுவுதல்.**—1966–67-ல் ஈரோடில் நிறுவ ஒப்பளிக்கப்பட்ட இத் திட்டம், கோழி இனங்கள் வளர்ப்பவர்களைக் கூட்டுறவுச் சங்கத்தில் சேர்ப்பதன் மூலம் கோழிப் பண்ணை வளர்ச்சி வட்டாரங்களை நிறுவ வகை செய்கிறது. 50 கோழிகள் கொண்ட பிரிவுகளைச் சேர்ந்த 75 உறுப்பினர்களுக்கும் 25 கோழிகள் கொண்ட பிரிவுகளைச் சேர்ந்த 50 உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட்ட 5,000 கோழிகளை ஒவ்வொரு சங்கமும் பேணிவரும். இனவளர்ச்சிக்கான பறவைகள் தீனி, சாதனங்கள், தொழில் நுட்ப ஆலோசனை, நோய்க் கட்டுப்பாடு, கோழிப் பண்ணைப் பொருள்களுக்கு விற்பனை வசதி ஆகியவற்றை ஒரே சமயத்தில் கோழிப் பண்ணை வைத்திருப்பவர்களுக்கு வழங்க இத் திட்டம் வகை செய்கிறது. மூன்றும் திட்டத்தில் 8 வளர்ச்சி வட்டாரங்கள் நிறுவப்பட்டன. ஒவ்வொரு வட்டாரத்திலும் 100 கோழிகள் வளர்க்கும் 25 பேருக்கு உதவி வழங்கப்பட்டது.

(ஈ) **கோழிப் பண்ணை நடத்துபவர்களுக்குப் பயிற்சி.**—இத் திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட கோழிப் பண்ணை நடத்துபவர்களுக்கு 6 வார காலத்திற்கு பயிற்சியளிக்கப்பட்டது. பயிற்சிக் காலத்தில் ரூ. 60 உதவிப் பணம் வழங்கப்பட்டது. கோழி இன வளர்ப்பில் தற்கால முறைகளைக் கையாள்வதை அவர்களுக்குக் கற்பிப்பதே இத் திட்டத்தின் நோக்கமாகும். கோழிப் பண்ணை விற்பனை நிலையங்களில் அந்தப் பயிற்சி அளிக்கப்பட்டது. மூன்றுவது திட்டத்தில் இப் பணி மேற்கொள்ளப்பட்டது. 1966–67-ம் ஆண்டிலும் இது தொடர்ந்து செயல்படுத்தப்பட்டது. 1967-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 31-ம் தேதி முடிய, 188 பேருக்குப் பயிற்சியளிக்கப்பட்டது.

(உ) **கோழி இல்லங்கள்.**—கோழி வளர்ப்பவர்கள் கோழியில்லங்களைக் கட்டுவதற்காக அல்லது மேம்படுத்துவதற்காக அவர்களுக்கு உதவித்தொகை வழங்க இத் திட்டம் வகை செய்கிறது. ஒவ்வொரு இல்லத்திற்கும் ரூ. 50 வரை உதவித்தொகை வழங்கப்படுகிறது. 1966–67-ல் இலக்கிட்டபடி, 600 இல்லங்களுக்கு உதவித் தொகை வழங்கப்பட்டது.

## (III) சென்னையிலுள்ள கால்நடை மருத்துவக் கல்லூரி.

சென்னையிலுள்ள கால்நடை மருத்துவக் கல்லூரி நாட்டின் முதன்மையான பட்ட மேற்படிப்பு நிலையமாகத் தொடர்ந்து செயல்படுகிறது. சென்னைப் பல்கலைக் கழகத்தின் B.V.Sc., M.V.Sc., பட்டப் படிப்புகளில் தகுதி பெற மாணவர்களுக்கு இக் கல்லூரி பயிற்சியளிக்கிறது. முதன்மையான ஆராய்ச்சி நிலையமாகவும் இது தொடர்ந்து செயல்படுகிறது. இத் துறைக்கெனத் தேவைப்படும் கால்நடை உதவியாளர்களுக்கு பயிற்சியளிப்பதற்கென 11 மாத குறுகிய காலப் பாடமுறை ஒன்றும் உள்ளது. ஐந்தாண்டு கொண்ட B.V.Sc., ஒருங்கிணைந்த பட்டப்படிப்பு 1960–61 கல்வியாண்டிலிருந்து தொடங்கப்பட்டுள்ளது. ஆண்டுதோறும் இப்படிப்பிற்குச் சராசரி சுமார் 136 மாணவர்கள் அனுமதிக்கப்படுகின்றனர். இவற்றைத் தவிர, கால்நடை உதவியாளர்களுக்கான பாடமுறைகள் இம் மாநிலத்தின் ஓசூர் கால்நடைப் பண்ணையிலும், ஒரத்தநாடு கால்நடைப் பண்ணையிலும் நடத்தப்பட்டு வருகின்றன. ஆண்டுதோறும் இந்த நிலையங்களில் தற்பொழுது 150 பேர் பயிற்சி பெற்று வருகின்றனர். நகரிலும், மாவட்டங்களிலும், கால்நடைத் தோல் உரிப்பவர்களுக்குப் பயிற்சியளிப்பதற்கென இக் கல்லூரியில் 3 மாத கால அளவிற்கு ஒரு பயிற்சி முறையும் நடத்தப்படுகிறது.

**M.V.Sc. பட்டத்திற்குரிய பட்டமேற் படிப்பு.**—சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் பல்வேறு துறைகளில் M.V.Sc. Ph.D. பட்டங்கள் பெற பட்ட மேற்படிப்பு ஆராய்ச்சி மேற்கொள்ள வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பிட்ட துறைகளில் பயிற்சியளிப்பதற்கென 1958-ல் துவக்கப்பட்ட M.V.Sc. பட்டத்திற்குரிய பட்ட மேற்படிப்புப் பயிற்சியின் இரண்டாண்டுப் பாடமுறை இப்போது ஒன்பதாவது ஆண்டாகச் செயல்பட்டு வருகின்றது. நோய்க் குறிஇயல், நுண்ணுயிர் இயல், மருந்தியல், கால்நடை ஊட்டச்சத்து, கால்நடைப் பிறப்பு விவரம் பால் பண்ணைத் தொழில், சுகாதாரம், இறைச்சி ஆய்வு, போன்ற துறைகளில் மேற்குறிப்பிட்ட இரண்டாண்டுப் பட்ட மேற்படிப்பு பாட பயிற்சி அளிக்கப்படுகிறது. 84 பட்ட மேற்படிப்பு மாணவர்களில் 48 மாணவர்கள் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள். எஞ்சிய 36 பேர் பிற மாநிலங்களைச் சேர்ந்தவர்கள்.

## IV. கால்நடை நோய்த் தடுப்பு நிலையம் இராணிப்பேட்டை.

இந் நிலையம் 1932-ம் ஆண்டில் நிறுவப்பட்டது. கால்நடைகளுக்கும், கோழி இனங்களுக்கும், ஆடுகளுக்கும் உண்டாகும் தொத்து நோய்களை எதிர்த்துப் போராடுவதற்காக உயிரியல் மருந்துப் பொருள்களை உருவாக்கி வழங்குவதில் இந்நிலையம் இந்தியாவிலுள்ள முக்கியமான நிறுவனங்களில் ஒன்றாகும். உயிரியல் மருந்துப் பொருள்களை இம்மாநிலத்திற்கு மட்டுமன்றி இந்தியாவிலுள்ள ஏனைய மாநிலங்களுக்கும் இந் நிலையம் அனுப்பி வைக்கிறது. இதன் பணிகள் இப்போது பல்கிப் பெருகியுள்ளன. நவீன முறையில் அம்மைப்பால் தயாரிக்கும் பொருட்டு உறை உலர் யந்திரம் (Freeze drying Machine) ஒன்று இங்கு அமைக்கப்பட்டுள்ளது. இந்த நிலையத்தில் தேவைப்படும் அம்மைப்பால் அனைத்தும் தயாரிக்கப்பட்டு உறைந்து உலர்ந்த நிலையிலேயே வழங்கப்படுகின்றன. உயிரியல் மருந்துப் பொருள்களை நவீன முறையில் திறமையாகத் தயாரிப்பதற்கும், அதற்கு வேண்டிய ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கும், இந்த நிலையத்தில் நவீன வசதிகள் நிறைந்துள்ளன. அம்மைப்பால் தரத்தை மேம்படுத்துவது, நோய் தடுப்புத் திறனை ஒப்பிட்டு ஆராய்ந்து, பலவகை அம்மைப்பால்களைக் கலந்து சோதித்து பார்ப்பது போன்ற ஆராய்ச்சி வேலைகள் இந்த நிலையத்தில் மேற் கொள்ளப்படுகின்றன. இங்கு ஆடு, மாடு, கோழி முதலியவற்றிற்கான தனித் தனி நோய் ஆராய்ச்சிப் பிரிவுகள் மாநிலம் முழுவதும் பரிசோதனை நடத்தி அவற்றை ஆய்வுக் கூடப் பரிசோதனையுடன் இணைத்து முடிவு காணும் செயலில் ஈடுபட்டுள்ளன. ஆடுகளுக்கு ஆட்டு அம்மை காணுவதிலிருந்து பாதுகாப்பு அளிப்பதற்காக, பலனுள்ள அம்மைப்பால் ஒன்றை உருவாக்கும் திட்டம் பி.எல். 480





உதவித் திட்டத்தின்கீழ் 1964 நவம்பரில் தொடங்கப்பட்டது. இது இப்போதும் இந்த நிலையத்தில் தொடர்ந்து செயல்பட்டு வருகின்றது.

## V. கால்நடை மருத்துவ மனைகள்.

இம் மாநிலத்தில் 447 கால்நடை மருத்துவ நிலையங்கள் உள்ளன. இவற்றில் 36 கால்நடை மருத்துவ மனைகளும், 319 கால்நடை மருந்தகங்களும், 73 கால்நடை சிறு மருந்தகங்களும், 19 சுற்றி இயங்கும் மருத்துவப் பிரிவுகளும் 47 முதலுதவி நிலையங்களும் உள்ளன. நோயுற்ற கால்நடைகளுக்கு இந்த நிலையங்களில் சிகிச்சை அளிக்கப்படுவதுடன், கால்நடை வளர்ச்சிப் பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. கால்நடைச் சிறு மருந்தகங்களில் பொறுப்பு வகிக்கும், கால்நடை மருத்துவர் தொத்து நோய் பற்றிய அறிக்கைகள் கிடைத்தவுடன் அவற்றைக் கவனித்து வேண்டிய ஊசி போடுகிறார். அத்துடன் கொள்ளைநோய் பரவியுள்ள பகுதிகளில் பாதுகாப்பு முறையாக கால்நடைகளுக்குத் தடுப்பு ஊசி போடுகிறார். தொத்து நோய்களை உடனடியாகக் கட்டுப்படுத்தும் பொருட்டு 21 கால்நடை வளர்ப்பு மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொன்றாக 21 இயங்கும் மருத்துவப் பிரிவுகள் பணியாற்றி வருகின்றன. தொத்து நோய்களை உடனடியாகத் தடுப்பதில் இவை பெரும்பங்கு வகிக்கின்றன.

**கால்நடைகளுக்கு ஏற்படும் நோய்கள்.**—நோய் பரவியுள்ளது பற்றிய அறிக்கைகள் வந்தவுடன், கால்நடைத் துறை அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொள்கின்றனர். நோய் கண்ட பகுதிகளில் கால்நடைகளுக்குத் தடுப்பு ஊசி போடப்படுகின்றது. கால்நடைகளிடையே வெக்கை நோயை ஒழிப்பதற்காக, பிற மாநிலங்களை ஒட்டி உள்ள மாவட்டங்களிலே ஏற்படுத்தப்பட்ட சோதனைச் சாவடிகள் தொடர்ந்து செயலாற்றி வருகின்றன.

## VI. செய்திப் பரப்பும், விளம்பரமும்.

கால்நடை வளர்ப்புத் துறையைச் சேர்ந்த புள்ளி விவரப் பிரிவு, கீழ்க் காணும் வழக்கமான பணிகளுடன் செய்திப் பரப்பிற்கும் விளம்பரத்திற்கும் தேவையான புள்ளி விவரங்களைத் திரட்டுகின்றது :—

(i) கால்நடை வளர்ப்புப் பணி குறித்த புள்ளி விவர ஆராய்ச்சி.

(ii) கால்நடை வளர்ப்பு பற்றிய புள்ளி விவரங்களைத் திரட்டுதல்.

(iii) கால்நடைப் பண்ணைகள் குறித்து திங்கள் வளர்ச்சி அறிக்கைகளைச் சீர்தூக்கிப் பார்த்தல்.

(iv) கால்நடைகளுக்கு ஏற்படும் வழக்கமான நோய்கள் பற்றிய விவரங்களைச் சேகரித்தல் ; பல்வேறு வெளியீடுகளில் வெளியிடத் தகவல் வழங்குதல்.

(v) கால்நடைப் பண்ணைகளில் அனைத்துக் கால்நடைகள் குறித்தும் உயர்வகைக் கால்நடைப் பதிவேடுகள் வைத்து வருதல்.

பால் உற்பத்தி குறித்த மாதிரி ஆய்விற்கான திட்டமும் இறைச்சி உற்பத்தியை மதிப்பிடுவதற்காக நம்பகமான புள்ளி விவரங்களைச் சேகரிக்கும் திட்டமும் மாதிரி ஆய்வுத் திட்டமும் 1967–68-ம் ஆண்டில் வெற்றிகரமாக முடிக்கப்பட்டன. சேகரிக்கப்பட்ட உரிய புள்ளி விவரங்கள் பகுக்கப்படுவதற்காக, வேளாண்மை ஆராய்ச்சிப் புள்ளி விவரங்கள் பிரிவுக்கு (இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் குழுவுக்கு) அனுப்பப்பட்டன. இந்த ஆய்வுகளின் முடிவுகள் கிடைக்கும்போது அவை கால்நடை வளர்ப்புத்துறையின் உற்பத்தி-வளர்ச்சித் திட்டங்களை வகுப்பதற்குப் பேருதவியாக இருக்குமென்பது திண்ணம்.

## VII. 1968–69-ம் ஆண்டின் திட்டம்.

இறைச்சி, பால், முட்டை போன்ற இன்றியமையாத பொருள்களின் பற்றுக்குறையைப் போக்கும் நோக்கத்துடன் கால்நடைகளின் தரத்தையும் கால்நடைப் பொருள்களின் தரத்தையும் மேம்படுத்த வேண்டி பல்வேறு கால்நடை வளர்ச்சித் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. 1966–67-ம் ஆண்டில் பத்து மையக் கிராம வட்டாரங்கள் நிறுவப்பட்டன. கன்று வளர்ப்பு உதவித் திட்டத்தின்கீழ் 1,000 கன்றுகள் புதிதாகச் சேர்க்கப் பட்டன. பசுக்காப்பகங்கள் இரண்டு நிறுவப்பட்டன. கோழி வளர்ப்பு நலப் பரப்பு நிலையங்கள் ஏழு புதிதாக நிறுவப்பட்டன. ஏற்கெனவே செயல் பட்டு வந்த கோழி வளர்ப்பு நலப்பரப்பு நிலையங்கள் பத்து விரிவு படுத்தப் பட்டன. கோழிக் குஞ்சு வளர்ப்புத் திட்டம் ஒசூரில் செயல்படுத்தப் பட்டது. கோழிகள் விற்பனை நிலையம் தஞ்சாவூரில் தொடங்கப்பட்டது. கோழி வளர்ப்புக் கூட்டுறவு வளர்ச்சி வட்டார மொன்று ஈரோடு வட்டத் தில் நிறுவப்பட்டது. கோழி வளர்ப்புப் பணியில் 180 குடியானவர் களுக்குப் பயிற்சி அளிக்கபட்டது. கோழி வளர்ப்புப் பெட்டிகள் மேம் பாட்டிற்காக 600 பேருக்கு உதவித் தொகை வழங்கப்பட்டது. செம்மறி யாடு-கம்பளி நலப் பரப்பு நிலையங்கள் பத்து நிறுவப்பட்டன. செம்மறி யாடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் ஐந்து அமைக்கப்பட்டன. இருபத் தைந்து கால்நடை மருந்தகங்கள் புதிதாகத் தொடங்கப்பட்டன. இவை தவிர, மூன்றாவது திட்டத்தில் நிறைவேற்றப்படாது எஞ்சிய வேலைத் திட்டங்களும் 1966–67-ல் நிறைவேற்றி முடிக்கப்பட்டன.

நிதிப் பற்றுக்குறையினால் இப் பணிக்காக 1967–68-ல் ரூ. 80·70 லட்சமே ஒதுக்கப்பட்டுள்ளது. மூன்றாவது திட்டக் காலத்தில் தொடங்கப் பட்ட மும்முரக் கால்நடை வளர்ப்புத் திட்டங்கள் மூன்று உட்பட 1966–67-ம் ஆண்டில் தொடங்கப்பட்ட பணிகள் திட்ட வேலைகளின்கீழ் தொடர்ந்து செயல் படுத்தப்படுகின்றன. இவற்றைத் தவிர, 1967–68-ல் 50 புதிய கால்நடை மருந்தகங்களை நிறுவவும், 13 கண்காட்சி-கருத்தரங்குகளை நடத்த வும் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

கட்டிடங்கள் கட்டி முடித்துள்ள ஊராட்சி ஒன்றியங்களில் 50 கால்நடை மருந்தகங்களைத் தொடங்கவும் வெக்கை நோய் பரவுவதை எதிர்த்து ஊசி குத்தும் வேலையைப் பெருமளவில் மேற்கொள்ளவும் 1968–69-ம் ஆண் டிற்கான வேலைத் திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. குடியானவர் களுக்குப் பயனளித்து நன்மை புரிந்து வந்த பல்வேறு கால்நடை வளர்ப்பு, கோழியின வளர்ப்பு வேலைத் திட்டங்கள் தொடர்ந்து செயல் பட்டுவருகின்றன.





## இணைப்பு-3.

[27–ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

### 1967–68-ல் காட்டு இலாக்காவின் சாதனைகளும் 1 68-69-க்கான வேலைத் திட்டங்களும்.

**காடுகளும் பரப்பும்.**—தமிழ் நாட்டில் மொத்தம் 17,264 சதுர கிலோ மீட்டர் (6,664 சதுர மைல்) பரப்பளவுள்ள ஒதுக்கக் காடுகள் உள்ளன. பெரும்பாலும் முன்னாள் ஜமீன் காடுகள் அடங்கியுள்ள ஒதுக்க நிலத்தில் பரப்பளவு 3,769 சதுர கிலோ மீட்டர் (1,465 சதுர மைல்) ஆகும். தமிழ்நாடு காடுகள் சட்டத்தின்கீழ் இவற்றை அளவை செய்து, எல்லை வகுத்து அப்பால் அறிவிப்பு வெளியிட்டு இக்காடுகளைத் தமிழ்நாடு காடுகள் சட்டத்தின் கீழ் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவற்றின் சட்டபூர்வமான நிலை முற்றிலும் நிலை நாட்டப்பட்ட பின்னர், அவற்றை மேம்படுத்துவதற்கும் காப்பதற்கும் வேண்டிய பணிகள் காடுகள் துறையால் மேற்கொள்ளப்படும். தமிழ்நாடு ஊராட்சிச் சட்டம் திருத்தப்படும் வரையில் இப் பணியில் முன்னேற்றம் காண்பது கடினம்.

**காடுகள் நமது நாட்டு உடைமை.**—காடுகள் நமது நாட்டுச் செல்வத்தின் கணிசமான பகுதியாகும். பயனூட்டவல்ல பல மர வகைகள் காடுகளில் வளர்கின்றன. நமது காடுகள், சிறப்பாக நாம் எளிதில் செல்ல இயலாத மலையடிவாரங்களிலும், மலைகளிலும், பரந்து கிடக்கும் காடுகளினூடே உற்பத்தியாகும் ஓடைகளும் காட்டாறுகளும் அந்தந்த வட்டாரத்தின் வேளாண்மைக்கும், தொழில்களுக்கும் உதவி செய்வதில் பெரும் பங்கு பெறுகின்றன. வெட்டுமரம், எரிபொருள், காடுபடு சிறு பொருள்கள் ஆகியவை கிடைக்கின்றன. மேலும், மண்ணரிப்பைத் தடுப்பதிலும் மழை வளத்தை உறுதியாகத் தருவதிலும், காடுகள் சிறந்த பணியாற்று கின்றன. முறையான பாசனத்தை நம்பியிருக்கும் கோடிக்கணக்கான உழவர்களின் ஏற்றத்தையும் இறக்கத்தையும் முடிவு செய்கிற மழை வளத்தை முறைப்படுத்துவதுடன் தொழில் வளம், போக்குவரத்து, நீர் மின் உற்பத்தி ஆகியவை மேன்மேலும் பெருக, காடுகள் பெரிதும் உதவுகின்றன. உள்நாட்டின் தட்ப வெப்ப நிலைக்கும், நீர் வளங்களுக் கும், மண் வளத்திற்கும் காடுகளே பெரிதும் காரணம் என்பதை அனை வரும் அறிவர். பொது நலனுக்குச் சிறந்த பயனளிக்க வேண்டும் என்ப தால், பயிற்சி பெற்ற பணியாளர்களைக் கொண்ட காடுகள் துறையிடம் இம் மாநிலக் காடுகளை நிர்வகிக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. எனவே, தன் பாதுகாப்பில் ஒப்படைக்கப்பட்ட சொத்தினை நாட்டத்துடன் நிர்வகித்து அதன் உற்பத்தித்திறனை உயர்த்த வேண்டியது இத்துறையின் பொறுப்பாகும். இம் மாநிலக் காடுகளின் பெரும்பகுதி வறட்சியுடைய தாகவும், ஆண்டு ஒன்றிற்கு 90 சென்டி மீட்டருக்கும் குறைந்த அளவே மழை வளம் உடையதாகவும் உள்ளது. வறண்ட வட்டாரங்களைச் சுற்றி யுள்ள காடுகளில் வளரக்கூடிய, குறைந்த அளவு ஈரமே தேவைப்படுகிற முட்புதர், குத்துச் செடிகள் போன்றவை மண்டியுள்ள பகுதிகளும் மேற்படி பரப்பளவில் அடங்கியுள்ளன. சரிவரப் பலன் தராத காடுகளை வளமாக்க அப்பகுதிக்கு ஏற்ற பயன் தரும் மரங்களைத் தகுந்த காடு வளர்ப்புத் திட்டங்களின் மூலம் செயல்படுத்திப் பேணிவர வேண்டும். கிராமப் பகுதிகளிலே மரங்கள் ஏராளமாக அழிக்கப்படுகின்றன. இதன் காரணமாக அண்மையிலுள்ள காட்டுப் பகுதிகளும் சிதைவுறுகின்றன. இந்தப் போக்கினைத் தடுத்து நிறுத்தினாலன்றி இப்பகுதிகளில் உள்ள காடுகளும் நாளடைவில் நசித்துப் போகும். புதிய தொழில்களைத் தொடங்குதல், புதிய இருப்புப் பாதைகளை அமைத்தல், நீர் மின்சாரத் திட்டங்களை நிறுவுதல், புதிய தொழில்களை விரிவுபடுத்துதல், நகரியங்களை விரிவுபடுத்துதல் முதலான காட்டுப் பயனல்லாத ஏனைய காரியங்களுக்காக காடுகள் இடைவிடாமல் அழிக்கப்பட்டு வருவதால், நாட்டின் பொருளா தாரம் சீர்குலைந்துள்ளது. ஏற்கெனவே, நமது மாநிலத்தில் இருக்க

வேண்டிய பரப்பளவில் பாதிப் பரப்பளவில்கூட காடுகள் தற்போது இல்லை. நிலைமை இவ்வாறிருக்கையில், இருக்கின்ற ஒரு சில காடுகளையும் அழித்து விட்டால், நிலைமை மிகவும் சீர்கேடுறும்.

தீராத நிலப்பசியுள்ள இந்தியநாட்டிலே, இருக்கின்ற நிலத்தின் பெரிதும் பயன்படுத்த எல்லா முயற்சிகளும் மேற் கொள்ளப்பட வேண்டும். பொதுவாகச் சொல்லப் போனால், காட்டு நிலங்கள், காட்டுப் பயனல்லாத ஏனைய செயல்களுக்கு விடுவிக்கப்படுவதில்லை என்றாலும், சிலபல ஆண்டுகளாகவே காட்டு நிலங்களில் உணவுப் பயிர் விளைவித்து வருகிற நிலமில்லா ஏழைக் குடியானவர்களுக்கு அக்காட்டு நிலங்கள் ஒப்படை செய்யப்பட்டு வருகின்றன. எனவே, கோயம்புத்தூர் மாவட்டத்தின் பவானிசாகர் நீர்த்தேக்கப் பகுதியில் நீரில் மூழ்கக்கூடிய 328 ஏக்கர் காட்டு நிலம் இந்த அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட அரசாங்க அதிகாரிகளும் ஏனையவர்களும் கொண்ட குழுவின் பரிவுரையை ஒட்டி, நிலமில்லா ஏழைக் குடிமக்களுக்குத் தலைக்கு ஒரு ஏக்கர் வீதம் பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளது. ஆட்சேபணை அல்லாத ஏனைய பகுதிகளும் இயன்ற வரையில் குத்தகைக்கு விடப்படும். மதுரை மாவட்டத்திலே கண்டமநாயக்கனூர் முன்னாள் ஜமீன் காட்டுப் பகுதியில் நிலமில்லா ஏழைக் குடிமக்கள் பயிர் விளைவிப்பதற்காக வெளவிய நிலங்களை அவர்களுக்கே முறையாக ஒப்படை செய்து கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எங்கெங்கே நிலங்கள் வெளவப்பட்டுள்ளன என்பதைக் கண்டறிவதற்காக ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பயிர் விளைவிப்பதற்காக, குத்தகைக்கு விடுவதற்கு ஆட்சேபணை இல்லாத பகுதிகளை வரையறுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அவ்வண்ணமே, சேலம் மாவட்டத்தில் வனவாசி—பாக்கநாடு காட்டுப் பகுதியில், அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட சிறப்புப் பணியாளர் ஆட்சேபணை அல்லாத பகுதிகளைக் கண்டறிவதற்காகவும் வெளவியவர்களின் பொருளாதார நிலையைக் கண்டறிவதற்காகவும் வனத்துறை அதிகாரிகளின் உதவியுடன் ஆய்வு ஒன்றை நடத்தி வருகின்றனர். பவானிசாகர் நிலங்கள் குறித்துச் செய்யப்பட்டதைப் போன்றே அரசாங்க அதிகாரிகளும் மற்றவர்களும் கொண்ட குழுக்களால், கண்டமநாயக்கனூர், வனவாசி—பாக்கநாடு பகுதிகளிலுள்ள நிலங்கள் குத்தகைக்கு விடப்படும். இம் மாநிலத்திலுள்ள காட்டுப் பகுதி இருக்க வேண்டிய அளவைவிட மிகவும் குறைவாகவே இருப்பதால், காட்டுப் பகுதியில் புதிய வெளவுதல் எதுவும் இனி அனுமதிக்கப்பட மாட்டாது. அனுமதியின்றி அவ்வாறு வெளவியவர்கள் அகற்றப்படுவர். காடுகளாய் உள்ள பகுதிகளை இனியும் அவ்வாறே பேணி வருவதிலும் இந்தக் காடுகளில் அதிக உற்பத்தி செய்யப்படுமாறு பார்த்துக் கொள்வதிலும் மர அடிப்படைத் தொழில்களுக்கு வேண்டிய மரம் வழங்குவதிலும் பல இடர்ப்பாடுகள் இருந்தபோதிலும் இம் மாநிலக் காடுகள் துறை கடினமான முயற்சி மேற்கொள்ள வேண்டியுள்ளது.

**காடுகளும், மக்களும்.**—மக்களுடைய வாழ்வு தாவர வாழ்க்கையுடன் தவிர்க்க இயலாத முறையில் பின்னிப் பிணைந்துள்ளது என்ற உண்மை போதிய அளவு எவராலும் உணரப்படவில்லை. காடுகள் என்றும் வற்றாத வளம் பொருந்தியவை அல்ல. காட்டுவளத்தைப் பெருக்க பல்லாண்டுகள் ஆகும். ஆனால், அவ்வளத்தை அழிக்க அதிக காலம் ஆகாது. மக்களின் நலனுக்காகவே நம்முடைய காடுகளை நாட்டத்துடன் பாதுகாத்துச் சிறந்த முறையில் ஒழுங்காக நிர்வகிக்க வேண்டும் என்பதை எவரும் எளிதில் உணர்வதில்லை. இந்த நாட்டின் வாழ்வும் வளமும் காடுகளையே பொறுத்துள்ளதால், எதிர்காலச் சந்ததியினரின் நன்மைக்காக இக் காட்டுச் செல்வத்தைப் போற்றி வளர்ப்பது மக்களின் கடமையாகும். காடுகள் சமுதாயத்தின் தேவைகளை எந்த அளவில் நிறைவு செய்கின்றன என்பதைப் பார்த்தோமானால், காடுகளை அடுத்துள்ள ஏராளமான கிராமங்கள் தங்கள் தேவைப் பொருளான எரிபொருளையும், கால்நடைத் தீவனத்தையும், தழை எருவையும், பிறபொருள்களையும் காடுகளிலிருந்து பெறுகின்றன என்பது தெரியவரும். கிராமப் பகுதியிலுள்ள பெரும்பாலான குடிசைத் தொழில்கள் தங்களுக்கு வேண்டிய மூலப் பொருள்களுக்குக் காடுகளையே நம்பியுள்ளன. மக்கள் தங்களுடைய கால்நடைகளை



மேய்ச்சலுக்கு விடுவதற்கும், வேளாண்மைத் தொழில் நடைபெறாத காலத்தே வேலை பெறுவதற்கும் காடுகளையே பெரிதும் நம்பியுள்ளனர். காட்டுப்பணிகளை முன்னிட்டுச் செய்யப்படுகிற செலவுகளில் கணிசமான பகுதி காடுகள் துறை மேற்கொள்ளும் பல்வேறு நடவடிக்கைகளை நிறைவேற்றுகை கிராம மக்களுக்கு ஊதியமாக வழங்கப்படுகிறது.

**காடுகளும், வெட்டுமரம் வழங்கலும்.**—இரயில்வே போன்ற பல்வேறு துறைகளுக்கும் பொதுமக்களுக்கும் வெட்டுமரம் வழங்கும் பணியை காடுகள் துறை மேற்கொண்டுள்ளது. மக்களுடைய பெருகிவரும் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் இத்துறை தேக்குமரம் ஏனைய கடின மரம் ஆகியவற்றை வளர்ப்பதற்காக வெட்டுமர உற்பத்தித் திட்டங்களையும் மேற்கொண்டுள்ளது.

1966–67-ம் ஆண்டில் மொத்தம் 32,589 கன மீட்டர் வெட்டுமரம் உற்பத்தியாயிற்று. இது தவிர, குறிப்பிட்ட 151 பைன் வகை மரங்கள் 345 கன மீட்டருக்கு விற்கப்பட்டன.

1966–67-ல் இரயில்வேக்களுக்கு வழங்கப்பட்ட தண்டவாளக் குறுக்குக் கட்டைகள் குறித்த விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| | கன அடி. |
|---|---|
| அகலமான பாதை | 20,361 |
| குறுகலான பாதை | 5,122 |
| மிகக் குறுகலான பாதை | 266 |
| சிறப்புப் பாதை | 308 |
| அகலப் பாதைத் தொகுதிகள் | 129 |
| குறுகல் பாதைத் தொகுதிகள் | 146 |

இரயில்வேக்களுக்கு வழங்கப்பட்ட தண்டவாளக் குறுக்குக் கட்டைகளுக்காகப் பெறப்பட்ட தொகை 4·86 இலட்சம் ரூபாயாகும்.

**காடுகளும், விறகு வழங்கலும்.**—ஒவ்வொரு குடும்பத்திற்கும் விறகு இன்றியமையாதத் தேவைப் பொருளாகும். 1966–67-ம் ஆண்டில் காடுகள் துறை மொத்தம் 7·29 இலட்சம் கனமீட்டர் எரிபொருள் வழங்கியது. விறகு மரங்களை பெருக்கும் நோக்கத்துடன் விரைவில் வளரும் யுகாலிப்டஸ் சவுக்கு போன்ற மரங்கள் வளர்க்கும் வேலை பல பிரிவுகளிலும் காடு வளர்ப்புத் திட்டங்களின்கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**மேய்ச்சல்.**—காடுகளில் மேய்ச்சலுக்கும் வசதி உள்ளது. காடுகளுக்கு அருகிலும் சுற்று வட்டாரத்திலுமுள்ள கால்நடைகள் மேய்ச்சலுக்கு காடுகளுக்கே செல்கின்றன. இம் மாநிலம் முழுவதும் மேய்ச்சல் கட்டணம் ஒரேபடித்தான வீதத்தில் விதித்து வாங்கப்படுகிறது. பல்வேறு கால்நடைகளுக்கு வாங்கப்படும் மேய்ச்சல் கட்டணம் வருமாறு :—

| | ரூ. | காசு. |
|---|---|---|
| எருமை மாடு ஒன்றுக்கு | 1 | 00 |
| பசு அல்லது எருது ஒன்றுக்கு | 0 | 50 |
| ஆடு ஒன்றுக்கு | 0 | 25 |

1966–67-ல் 16·36 இலட்சம் கால்நடைகள் மேய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டது. இவ்வகையில் ரூ. 5·56 லட்சம் வருவாய் கிட்டியது. வட ஆர்க்காடு மாவட்டத்திலும், சேலம் மாவட்டத்திலுமுள்ள மலையாளிகளுக்கும், நீலகிரி மாவட்டத்திலுள்ள தோடர்கள், கோட்டர்கள் ஆகியவர்களுக்கு இலவச மேய்ச்சலுக்கும் அனுமதி வழங்கப்பட்டது.

**காடுபடு சிறு பொருள்கள்.**—காடுகளிலிருந்து முன்போலவே முந்திரி, கடுக்காய், தேன், அரக்கு வாட்டில் பட்டை, தந்தம் கொம்புகள் முதலியன தொடர்ந்து கிடைத்தன. 1966–67-ல் இத்தகைய காடுபடு சிறு பொருள்கள் மூலம் 21·29 இலட்சம் கிடைத்தது.

1967-ம் ஆண்டில் காட்டுப் பகுதிகளில் முந்திரி சேகரிப்பு உரிமையை விற்றதினால் ரூ. 9·20 லட்சம் கிடைத்தது. 187 டன் அளவுள்ள முந்திரி கிடைத்தது. காடுபடு சிறு பொருள்களில் அரக்கும், தேனும் மிக முக்கியமானவை. அரக்குப் பொருள்களை விற்றதனால் ரூ. 0·69 லட்சம் வருவாய் கிட்டியது. தேன் விற்பனை மூலம் இத்துறைக்கு 0·18 லட்சம் கிடைத்தது. பல்வேறு காட்டுப்பிரிவுகளிலிருந்தும் காட்டுப் பொருள்களைப் பயன்படுத்தும் அதிகாரியிடம் 2,478 கிலோ தேன் வந்து சேர்ந்தது. 176 கிலோ எடையுள்ள தந்தங்களை விற்றதனால் ரூ. 0·14 லட்சம் கிடைத்தது.

**காடுகளும், காடு சார்ந்த தொழில்களும்.**—காடுகளின் பொருள்களை மூலப்பொருள்களாக கொண்டு இயங்கும் தொழில்களின் வளர்ச்சிக்காக இத்துறை தனது பணிகளைத் தொடர்ந்து செயல்படுத்தி வருகின்றது. இவ்வகையில் இத்துறை காகித ஆலைகளுக்குத் தேவையான மூங்கில்களையும், தோல் பதனிடும் தொழில்களுக்கு வாட்டில் பட்டைகளையும், மருந்துத் தயாரிப்புத் தொழில்களுக்குக் கற்பூர இலைகளையும், ரயான் பட்டுத் தயாரிப்புத் தொழில்களுக்கு கற்பூர மரத்தையும், சந்தன எண்ணெய் தொழில்களுக்குச் சந்தன மரக்கட்டைகளையும் வழங்குகின்றன.

**சந்தனமரம்.**—வட கோயம்புத்தூர், கிழக்கு வேலூர், மேற்கு வேலூர், சேலம், தருமபுரி கொட்டத்தைச் சேர்ந்த காடுகள் முன்போலவே சந்தன உற்பத்தியில் பெரும் பங்கு கொண்டன.

1966–67-ல் 1,221 டன் சந்தனமரம் ஏலத்தில் விற்கப்பட்டது. இதன் மூலம் ரூ. 117·90 லட்சம் கிடைத்தது. 1 டன் சந்தனக் கட்டையின் வாயிலாகக் கிடைக்கும் சராசரி வருவாய் ரூ. 9.656 ஆகும். 8 டன் சப்பங்கிமரம் (Sapwood) விற்பனையினால் ரூ. 0·04 லட்சம் கிடைத்தது.

பள்ளிபாளையத்திலுள்ள காகித ஆலைக்கு 31,523 டன் அளவு உலர்ந்த மூங்கிலை இத்துறை வழங்கியது. காடுகளிலிருந்து மூங்கில்களை அகற்றுவதற்கான உரிமையை விற்றதினால் காடுகள் துறைக்கு ரூ. 21 லட்சம் வருவாய் கிடைத்தது.

வட மதுரை, நீலகிரிக் கோட்டங்களிலிருந்து எடுக்கும் வாட்டில் பட்டைக்காக டான் இந்தியா வாட்டில் எக்ஸ்ட்ராக்ட்ஸ் லிமிடெட் (The Tan India Wattle Extracts Co., Limited) கம்பெனி வாட்டில் பட்டைக்காக எக்கர் ஒன்றுக்கு ரூ. 304 செலுத்த வேண்டுமென்றும், தென் இந்திய விஸ்கோஸ் லிமிட்டெட் வாட்டில் மரத்திற்காக எக்கர் ஒன்றுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 100 வீதம் செலுத்த வேண்டுமென்றும் ஒப்பந்தம் செய்யப்பட்டது. தென் இந்திய விஸ்கோஸ் லிமிடேட் கம்பெனி நீலகிரியில் கற்பூரமரம் வெட்டி எடுப்பதற்காக எக்கர் ஒன்றுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 450 வீதம் செலுத்த வேண்டுமென அந்நிறுவனத்துடன் காடுகள் துறை ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளது.

டான் இந்தியா வாட்டில் எக்ஸ்ட்ராக்ட்ஸ் லிமிடெட் கம்பெனி நீலகிரி கோட்டத்தில் அனுமதிக்கப்பட்டுள்ள பகுதியில் வாட்டில் பட்டையை எடுத்து வந்தது. அது 419·60 டன் மரப்பட்டையை அகற்றியது. தென் இந்தியா விஸ்கோஸ் லிமிடெட் கம்பெனி 1966–67-ல் அதற்கு ஒதுக்கப்பட்ட 121 ஹெக்டர் பரப்பளவில் கற்பூர மரங்களை வெட்டி எடுக்கும் வேலையே முடிக்கவில்லை.

வடமதுரைக் கோட்டத்தில் இந்நிறுவனங்கள் 1966–67-ல் வேலையைத் தொடங்கவில்லை.



தென் இந்திய விஸ்கோஸ் கம்பெனிக்கு ஒதுக்கப்படாத பகுதிகளில் கற்பூர மரங்களை அகற்றும் உரிமை முந்திய ஆண்டுகளில் போலவே ஏலம் விடப்பட்டது. 56,065 கன மீட்டர் கற்பூர மரம் அகற்றப்பட்டது. அதன் மூலம் ரூ. 2·28 இலட்சம் வருவாய் கிடைத்தது.

வடமதுரைக் கோட்டத்தில் வாட்டில் பட்டை, வாட்டில் மரம், கற்பூர மரம் ஆகியவற்றின் மூலமாக ரூ. 1·36 இலட்சம் வருவாய் கிடைத்தது.

**காடுகள் ஆராய்ச்சி.**—இம் மாநிலத்தில் வளர்ந்துவரும் பொருளாதாரத் திற்கேற்ப, காட்டுப் பொருள்களின் உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் இத் துறை காடுகளில் வளரும் மரங்களின் இனங்களைக் குறித்து பல்வேறு ஆராய்ச்சிகளை மேற்கொண்டுள்ளது. மாநிலக் காடுகள் வளர்ப்புப் பிரிவு முந்திரி, வாட்டில், கற்பூர மரம், சவுக்கு மரம், சந்தன மரம் ஆகியவை குறித்து தொடர்ந்து ஆராய்ச்சி நடத்தி வருகிறது.

அரசாங்க ரப்பர் தோட்டத்தில் சோதனைப் பண்ணைகளில் எருச் சோதனைகள் தொடர்ந்து நடத்தப்பட்டன.

**வனவிலங்குகள்.**—தமிழ் நாட்டில் காடுகள் பரந்து விரிந்து கிடக்கின்றன. இம் மாநிலத்திலுள்ள ஒதுக்கக் காடுகளில் சில அரிய விலங்குகளும், பறவைகளும் உறைகின்றன. இத்தகைய விலங்குகளையும், பறவைகளையும் இந்தியாவில் வேறெங்கும் காண முடியாது. சிங்க வால் குரங்கு போன்ற காண்பதற்கரிய விலங்குகள் இங்கு உள்ளன. மானியல் ஆட்டு வகை இந்தியாவிலேயே தமிழ் நாட்டில்தான் பெருமளவு காணப்படுகின்றது. இத்தகைய வகை விலங்கினங்கள் இந்தியாவைத் தவிர உலகில் வேறெங்கும் காணப்படுவதில்லை. எனவே இத்தகைய வனவிலங்குகளைப் பாதுகாப்பதற்குக் கண்டிப்பாக நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

தமிழ் நாட்டில் வன விலங்குகளைப் பாதுகாப்பதற்கும் அவற்றின் நல்வாழ்வை வளமாக்குவதற்கும் மாநில வனவிலங்குகள் நிறுவனமென அழைக்கப்படும் தனிப்பட்டதொரு நிறுவனம் மாநில வன விலங்குகள் அதிகாரியின்கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிறுவனம் தமிழ் நாடு காடுகள் பகுதியின் ஒருங்கிணைந்த பகுதியாக ஏற்படுததப்பட்டுள்ளது. இது 1960, ஜூலைத் திங்களில் நிறுவப்பட்டது.

1960, ஜூலைத் திங்களுக்குமுன் தமிழ் நாட்டில் வன விலங்கு உய்விடங்கள் மூன்று இருந்தன. அவையாவன :—முதுமலை வனவிலங்குகள் உய்விடம், வேடந்தாங்கல் நீர்ப்பறவைகள் உய்விடம், கிண்டியிலுள்ள மான் பூங்கா. அதற்குபிறகு, மேற்கொண்டும் இரண்டு உய்விடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அவைதான் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த முண்டந்துறையில் உள்ள புலிப்புகலிடம், தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த கோடிக்கரை வன விலங்குகள் உய்விடம்.

இவற்றைத் தவிர, தமிழ்நாட்டில் நீர்ப்பறவை புகலிடங்கள் 16 உள்ளன. இப் புகலிடங்களில் அங்கேயே வாழ்ந்துவரும் நீர்ப்பறவைகளும் வெளிநாடுகளிலிருந்து இடம் பெயர்ந்துவரும் நீர்ப் பறவைகளும் மாரிக் காலத்தில் வந்து குவிகின்றன. இந் நீர்ப்பறவைகளுக்கு பாது காவலர்களால் பாதுகாப்பு அளிக்கப்படுகின்றன.

இம் மாநிலத்திலுள்ள வன விலங்குகள் உய்விடங்களுக்கு உள்நாட்டிலிருப்போரும், வெளிநாட்டினரும் ஆண்டு முழுவதும் வந்தவண்ணம் இருக்கின்றனர். இவ்வுய்விடங்களை 1967-ம் ஆண்டில் 154,932 சுற்றுலாப் பிரியர்கள்—உள்நாட்டிலிருந்தும், வெளிநாட்டிலிருந்தும் வந்தவர்கள்—கண்டு களித்தனர்.

1—1—1967 முதற்கொண்டு 31—12—1967 வரையில் உள்ள கால அளவில் 5,588 பேர் முதுமலை வனவிலங்குகள் உய்விடத்தைப் பார்வையிட்டனர். நுழைவுக் கட்டணமூலம் ரூ. 29,340 வருவாய் கிடைத்தது.

இதே கால அளவில் கிண்டி மான் பூங்காவிற்கு வந்தவர்களிடமிருந்து வசூலித்த நுழைவுக் கட்டணமூலம் ரூ. 8,503 வருவாய் கிடைத்தது.

1967, ஜூலைத் திங்களில் 35 அமெரிக்கர்கள் வேடந்தாங்கல் நீர்ப் பறவைகள் உய்விடத்தையும், கிண்டி மான் பூங்காவையும் கண்டு களித்தனர்.

இந்த உய்விடங்களுக்கு வரும் மக்களின் எண்ணிக்கை ஆண்டுதோறும் மிகுந்து வருவதால் அவர்களுக்கு மேற்கொண்டும் இடவசதி அளிப்பதற்காக முதுமலையில் ஒன்றும், கோடிக்கரையில் ஒன்றுமாக மேலும் இரு தங்குமிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

கிண்டி மான் பூங்காவில் யானை மீது ஏறிச் செல்லுதல், சிறுவர் ரயில் போன்ற பொழுதுபோக்கு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

1968–69-ல் பார்வையாளர்களுக்கு மேற்கொண்டும் வசதி செய்துகொடுப்பதன்மூலம் இந்த உய்விடங்களை மேம்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

**காட்டுவள மேம்பாட்டுத் திட்டங்கள்.**—நாட்டின் நல்வாழ்விற்கும் முன்னேற்றத்திற்கும் வகை செய்யும்பொருட்டு மொத்த நிலப்பரப்பில் மூன்றில் ஒரு பங்கு நிலமாவது காடுகளாக இருக்க வேண்டுமென்பது நமது தேசீயக் கொள்கையாகும். ஆனால், நமது மாநிலத்திலோ நிலப்பரப்பில் 13 சத வீதமே ஒதுக்கக் காடுகளாக உள்ளது. மற்றும் 3 சதவீதம் ஒதுக்க நிலங்களின்கீழ் வருகின்றது. எனவே, மும்முர நடவடிக்கைகளை மேற்கொண்டு வெகு விரைவில் வளரும் மரங்களை வளர்ப்பதன் மூலம் நமது காடுகளை பெருமளவில் விரிவுபடுத்த நடவடிக்கை மேற்கொள்வது மிகவும் அவசியமாகிவிட்டது. தரிசு நிலங்களைப் பண்படுத்துவது மிகவும் முக்கியமானதொரு நடவடிக்கையாகும். ஏனெனில், நமது மாநிலத்தில் காட்டு வளத்தை அதிகரிப்பதற்கான வழிகளில் இதுவும் ஒன்றாகும். எரிபொருள், வெட்டுமரம், தொழில்களுக்கான மரங்கள் ஆகியவற்றின் தேவை நாளுக்கு நாள் பெருகிவருவதை நிறைவு செய்ய தரிசு நிலங்கள், சாலையோரங்கள், ஆற்றங்கரைகள், கால்வாய்க்கரைகள், நிலையாகச் சாகுபடி செய்வதற்கு தகுதியற்ற பிற பகுதிகள் ஆகியவற்றில் மரங்களை வளர்ப்பது உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டியதொரு வேலையாகும்.

காடுகளை அறிவியல் முறையில் வளர்ப்பதன் அவசியத்தை உணர்ந்து காடுகள் துறை ஐந்தாண்டுத் திட்டங்களில் பங்கு கொண்டது. அதன் சாதனைகள் வருமாறு :—

**முதல் ஐந்தாண்டுத் திட்டம்.**—முன்னாள் ஜமீன் காடுகள், ஊராட்சிக் காடுகள், ஆகியவற்றை உயிர்ப்பித்து அவற்றில் விறகு மரங்களையும், மென் மரங்களையும் வளர்த்ததே இக்கால அளவில் நிறைவேற்றிய முக்கியமான சாதனைகளாகும். காடுகள் வளர்ச்சித் திட்டத்திற்காக முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 30·43 லட்சம் செலவிடப்பட்டது. இக்கால அளவில் வளர்த்த மர வகைகளின் விவரம் வருமாறு :—

| | ஹெக்டர். |
|---|---|
| சவுக்கு .. .. .. .. .. | 160 |
| மென்மரம் .. .. .. .. .. .. | 1,080 |
| வாட்டில் .. .. .. .. .. .. | 1,120 |
| கற்பூரம் .. .. .. .. .. .. | 440 |
| விறகு மரக்காடுகள் .. .. .. .. .. | 12,000 |

**இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம்.**—அழிந்துவிட்ட காடுகளை உயிர்ப்பித்தல், தொழில்களுக்குத் தேவையான மரங்களை வளர்த்தல், வாணிப வகையைச் சேர்ந்த மரங்களை வளர்த்தல், வன விலங்குகளைப் பாதுகாத்தல்



போன்ற பல்வேறு பணிகள் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டன. இக்கால அளவில் எய்திய ஏழு சாதனைகளின் விவரங்களும் I-வது இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

**மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம்.**—மரத்தை அடிப்படையாகக்கொண்ட தொழில்களின் தேவைகளைப் பூர்த்திசெய்யவும், வெட்டுமர உற்பத்தியையும், விறகு மர உற்பத்தியையும் பெருக்கவும், ஆற்றுப் பள்ளத்தாக்குத் திட்டங்களைச் சேர்ந்த நீர்க்கொள் பகுதிகளில் பாதிக்கப்படக்கூடிய இடங்களில் மண்வளப்பாதுகாப்பு வேலைகளை மேற்கொள்ளவும், விரைவில் வளரும் மரவகைகளை வளர்ப்பதே மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முக்கிய நோக்கமாக இருந்தது. ஒதுக்கக் காடுகளுக்கு வெளியேயுள்ள தரிசு நிலங்களில் பண்ணைக்காடு வளர்த்தலும், காடுகளை விரிவுபடுத்தலும் பெருமளவில் மேற்கொள்ளப்பட்டன. கிராம மக்களின் விறகு, வெட்டு மரம், ஏனைய பொருள்களின் தேவைகளைச் சமாளிக்கவே அந்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. வன விலங்குகளைப் பாதுகாப்பதிலும், வனவிலங்குகள் உய்விடங்களுக்கு மேம்பாடுகள் செய்வதிலும் குறிப்பான நாட்டம் செலுத்தப்பட்டது. மூன்றாவது திட்டச் சாதனைகள் II-ம் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

**நான்காவது ஐந்தாண்டுத் திட்டம்.**—கிராம மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக, கிராமக் காடுகளை வளர்ப்பதற்கும், காடுகளில் விளையும் பொருள்களை அடிப்படையாகக் கொண்டுள்ள தொழிற்சாலைகளின் தேவைகளுக்கென விரைவில் வளரும் இனங்களான மூன்றில், யூக்கலிப்டஸ், வாட்டில் போன்ற மரவகைகளை வளர்ப்பதற்கும் பெருமளவில் தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1966–67-ம் ஆண்டின் நிதி ஒதுக்கம், சாதனைகள், 1967–68-ல் எதிர்பார்க்கப்படும் சாதனைகள் ஆகியவை குறித்த விவரம் III-ம் இணைப்பில் கண்டுள்ள அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளது.

1968-69-ம் ஆண்டிற்கான செயற்குறிப்புகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

## I. வளர்ச்சித் தலைப்பு—காடுகள்.

**1. பண்ணைக் காடுகள், விறகு மரத் தோட்டங்கள்—(அ) பண்ணைக் காடுகள், கிராமக் காடுகள்.**—கிராம மக்களின் விறகு, தழை எரு முதலிய அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கென கிராமங்களிலும், கிராமங்களைச் சுற்றிலும் உள்ள புறம்போக்கு நிலங்களில் கிராமக் காடுகளை வளர்ப்பதே இந்த வேலைத் திட்டத்தின் நோக்கமாகும். 1968–69-ல் ரூ. 4·73 இலட்சம் செலவில் இரண்டாயிரம் ஹெக்டரில் கிராமக் காடுகள் வளர்க்கப்படும்.

**(ஆ) பண்ணைக் காடுகள், காடுகளை விரிவுபடுத்தல்.**—ஊராட்சி மன்றங்களுக்கும், கல்வி நிறுவனங்களுக்கும், பொது மக்களுக்கும் நாற்றுகளை வழங்கி மரம் நடுவதில் அவர்களுக்கு ஊக்கமளிப்பதற்காக மத்தியப் பண்ணைகளை அமைப்பதே இந்த வேலைத் திட்டத்தின் நோக்கமாகும். 1968–69-ல் சேலத்திலுள்ள மத்தியப் பண்ணையைப் பேணி வருவதற்குக் கூடுதலாக ரூ. 1·98 லட்சம் செலவில் மதுரை வட்டத்தில் ஒரு மத்தியப் பண்ணை அமைக்கப்படும்.

**விறகு மரக்காடுகள்.**—மக்கள் நெரிசல் மிகுந்த நகரங்கள், விறகை மிகுதியாகப் பயன்படுத்தும் ஏனைய இடங்கள் இவற்றை அடுத்துள்ள பகுதிகளில் விரைவாக வளரும் விறகு மரக் காடுகளை வளர்ப்பதே இந்த வேலைத் திட்டத்தின் நோக்கமாகும். 1968–69-ல் ரூ. 6·28 லட்சம் செலவில் 1,000 ஹெக்டரில் இக்காடுகள் வளர்க்கப்படும்.

**2. பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த தோட்டங்கள்—(அ) தோட்டங்கள்—(i) தேக்கு.**—வெட்டு மரம் அதிகமாக வழங்கப்படுவதற்கென, தேக்கு மரங்களையும் ஏனைய மதிப்பு வாய்ந்த கடின மர வகைகளையும் வளர்ப்பதே இந்த வேலைத் திட்டத்தின் நோக்கமாகும். 1968–69-ல் 450 ஹெக்டரில் ரூ. 1·63 லட்சம் செலவில் அவை வளர்க்கப்படும்.

(ii) **மென் மரம்.**—தீப்பெட்டித் தொழிலுக்குத் தகுதியுள்ள மர வகைகளை வளர்ப்பதே இந்த வேலைத் திட்டத்தின் நோக்கமாகும். 1968–69-ல் ரூ. 0·89 லட்சம் செலவில் 250 ஹெக்டர் நிலத்தில் மென் மர வகைகள் வளர்க்கப்படும்.

(iii) **சவுக்கு.**—ஆற்றோரங்களிலும், கடற்கரையோரங்களிலும் சவுக்கு மரங்களை வளர்ப்பதே இவ் வேலைத் திட்டத்தின் நோக்கமாகும். அவற்றை வளர்ப்பதால் நில அரிப்புத் தடுக்கப்படுவதுடன், விறகும் அதிகமாகக் கிடைக்கின்றது. 1968–69-ல் ரூ. 1·25 லட்சம் செலவில் 190 ஹெக்டரில் அவை பயிரிடப்படும்.

(iv) **வாட்டில்.**—வாட்டில் மரங்களை வளர்ப்பதே இந்த வேலைத் திட்டங்களின் நோக்கமாகும். அவற்றின் பட்டை தோல் பதனிடும் தொழிலில் பயன்படுகிறது. அது காகிதத் தொழிலிலும், ரயான் தொழிலிலும் பயன்படுகிறது. 1968–69-ல் ரூ. 4·80 லட்சம் செலவில் 50 ஹெக்டரில் அவை பயிரிடப்படும்.

(v) **சந்தன மரம்.**—சந்தன மரத்தை செயற்கை முறையில் வளர்ப்பதே இந்த வேலைத் திட்டத்தின் நோக்கமாகும். அதன் மூலம் இம் மாநிலத்திற்குப் பெருமளவில் வருவாய் கிட்டும். 1968–69-ல் ரூ. 0·70 லட்சம் செலவில் 200 ஹெக்டரில் அவை வளர்க்கப்படும்.

(ஆ) **ஆறு—ஏரிக்கரை ஓரக் காடுகள்.**—ஆற்றோரங்களிலும், கால்வாய் ஓரங்களிலும், தேக்கு மரங்களையும், ஏனைய கடின மரவகைகளையும் வளர்ப்பதே இந்த வேலைத் திட்டத்தின் நோக்கமாகும். இவற்றை வளர்ப்பதன் மூலம் வண்டல் படிவு குறைவதுடன், வெட்டு மரங்களும் கிடைக்கும். 1968–69-ல் ரூ. 1·10 லட்சம் செலவில் 400 ஹெக்டர் நிலங்களில் அவை பயிரிடப்படும்.

(இ) **ரப்பர்**—ரப்பர் தோட்டங்களை வளர்ப்பதே இந்த வேலைத் திட்டத்தின் நோக்கமாகும். 1968–69-ல் ரூ. 11·09 லட்சம் செலவில் 200 ஹெக்டருக்கு மேற்பட்ட நிலங்களில் ரப்பர் தோட்டங்களைப் பயிரிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

3. **இயற்கையின் நலன் பேணலும், வன விலங்குகளின் பாதுகாப்பும்.**—வன விலங்குகளைக் காண்பதற்கான வசதிகளை மேம்படுத்துவதும், இம் மாநிலத்தில் உள்ள வன விலங்குகள் நிர்வாகத்தை மேம்படுத்துவதும் இவ் வேலைத் திட்டத்தின் நோக்கமாகும். 1968–69-ல் வன விலங்கு உய்விடங்களிலும் கிண்டி பூங்காவிலுள்ள சிறுவர் பிரிவிலும் மேம்பாடுகள் செய்வதற்கென ரூ. 3·15 லட்சம் ஒதுக்கப்படும்.

4. **வெட்டு மரங்களை எடுத்தல், காட்டுப் பொருள்களை பயன்படுத்தல்.**—காடுகளிலிருந்து வெட்டு மரங்களை மேம்பட்ட முறையிலும், விரைவாகவும் விற்பனை நிலையங்களுக்கு அனுப்ப வகை செய்வதே இந்த வேலைத் திட்டத்தின் நோக்கமாகும். யானைப் பாகர்களுக்கு கம்பளியாலான உள் சட்டைகளையும், மழையங்கிகளையும் ரூ. 0·25 லட்சம் செலவில் வாங்குவதென 1968–69-ல் கருதப்பட்டுள்ளது.

5. **பணியாளர் பயிற்சி.**—வனப் பணியாளர்களுக்கும், வனக் காப்பாளர்களுக்கும் வைகை அணையிலுள்ள தமிழக வனத் தொழில் பயிற்சிப் பள்ளியில் பயிற்சியளிப்பதே இந்த வேலைத் திட்டத்தின் நோக்கமாகும். அதன் மூலம் காடுகள் வளர்ப்பை விரிவுபடுத்தும் பணியைத் திறமையுடன் நிறைவேற்றுவதும் தகுந்த பாதுகாப்பு ஏற்படுத்துவதும் இயலும். 1968–69-ல் சுமார் ரூ. 3·30 லட்சம் செலவில் 30 வனப் பணியாளர்களுக்கும், 120 வனக் காப்பாளர்களுக்கும் பயிற்சியளிக்கப்படும்.

6. **காட்டு வள ஆராய்ச்சி.**—டெங்கனிக்கோட்டை, வண்டலூர், உதகமண்டலம், கொடைக்கானல் ஆகிய இடங்களில் பல்வேறு மர வகைகள் குறித்து ஆராய்ச்சியைத் தொடர்ந்து நடத்துவதே இந்த வேலைத் திட்டத்தின் நோக்கமாகும். 1968–69-ல் ஆராய்ச்சி சோதனைகளை நடத்துவதற்கென ரூ. 3·24 லட்சம் செலவிடப்படும்.



7. **காடுகளில் சாலை வசதி.**—காடுகளில் புதிய சாலைகளைப் போடுதலும், ஏற்கனவே உள்ள சாலைகளை மேம்படுத்துவதும் இந்த வேலைத் திட்டத்தின் நோக்கமாகும். அதன் மூலம் காடுகளில் மரங்களை வெட்டுவதும், அடிக்கடி போய் மேற்பார்வை இடுவதும், நல்ல முறையில் பாதுகாப்பு அளிப்பதும் இயலும். 1968–69-ல் இந்த வேலைத் திட்டத்திற்கென ரூ. 1·50 லட்சம் செலவிடப்படும்.

8. **கட்டிடங்கள் கட்டுதல்.**—தொலைதூர இடங்களில் உள்ள பணியாளர்களுக்கு குடியிருப்புகள் கட்டுவதே இந்த வேலைத் திட்டத்தின் நோக்கமாகும். 1968–69-ல் கட்டிடங்கள் கட்டுவதற்கென ரூ. 0·17 லட்சம் செலவிடப்படும்.

9. **வனப் பணியாளர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் வசதிகள்.**—காடுகள் குறித்த பல்வேறு வேலைகளில் பணிபுரியும் வனப்பணியாளர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் வசதிகள் செய்து கொடுப்பதே இந்த வேலைத் திட்டத்தின் நோக்கமாகும். தொழிலாளர்களுக்கு மழை தடுப்புக் கம்பளிகளையும், கம்பளியாலான உள் சட்டைகளையும் வாங்கவும், தொழிலாளர் குடியிருப்புகளைக் கட்டவும் 1968–69-ல் ரூ. 0·50 லட்சம் செலவிடப்படும்.

10. **காடுகள் பாதுகாப்பு.**—காட்டுத் தீயிலிருந்தும், கள்ளத்தனமாக மரங்களை வெட்டுவதிலிருந்தும் காடுகளைப் பாதுகாக்க வழிவகைகளைக் கண்டறிவதே இந்த வேலைத் திட்டத்தின் நோக்கமாகும்.

காடுகளில் எங்கேனும் தீப்பிடித்துள்ளதா என்பதைக் கண்காணிப்பதற்கான தூபிகளைக் கட்டவும், தீயணைப்புச் சாதனங்களை வாங்கவும் 1968–69-ல் ரூ. 0·50 லட்சம் செலவிடப்படும்.

11. **காடுபடு சிறு பொருள்கள்.**—காட்டுப்பகுதிகளில் புளியமரம், மற்றும் அதுபோன்ற மரங்களை வளர்ப்பதே இந்த வேலைத் திட்டத்தின் நோக்கமாகும்.

1968–69-ல் சுமார் 150 ஹெக்டர் நிலத்தில் ரூ. 0·79 லட்சம் செலவிடப்படும்.

12. **செயல்திட்ட கண்காணிப்பு வட்டம்.**—செயல்திட்டங்கள் தயாரிக்கப்படுவதை மேற்பார்வை இடுவதையும், சிறப்புக் கோட்டங்களின் பணிகளைத் தீவிரமாக மேற்பார்வையிடுவதையும் உறுதிப்படுத்தும்பொருட்டு செயல்திட்ட வட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

1968–69-ல் ரூ. 0·50 லட்சம் செலவில் செயல்திட்ட வட்டம் தொடர்ந்து செயல்பட வகை செய்யப்படும்.

13. **விரைவில் வளரும் மரங்களை நட்டு வளர்த்தல்.**—விரைவில் வளரக்கூடிய "யூகலிப்டஸ்", மூங்கில் போன்ற மரங்களை வளர்ப்பதே இந்த வேலைத் திட்டத்தின் நோக்கமாகும். காகிதம், ரயான் தயாரிப்புத் தொழில்களுக்கு இவை பெரிதும் உதவும். 1968–69-ல் 3,000 ஹெக்டரில் ரூ. 13·37 லட்சம் செலவில் அவை வளர்க்கப்படும்.

## II. வளர்ச்சித் தலைப்பு—மண்வளப் பாதுகாப்பு.

1. **விறகு மரக்காடுகளின் மண்வளப் பாதுகாப்பு.**—மண்ணின் வளத்தை மேம்படுத்துவதற்கென தீவிர மண்வளப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதே இந்த வேலைத் திட்டத்தின் நோக்கமாகும். 1968–69-ல் 1,100 ஹெக்டரில் ரூ. 2·44 லட்சம் செலவில் இந்த வேலைகள் மேற்கொள்ளப்படும்.

**2. வைகை ஆற்றின் நீர்கொள் பகுதியில் மண்வளப் பாதுகாப்பு.**—வைகை ஆற்றின் நீர்கொள் பகுதியில் தீவிர மண்வளப் பாதுகாப்பு வேலைகளை மேற்கொள்ளுவதே இந்த வேலைத் திட்டத்தின் நோக்கமாகும். அதன் மூலம் மண்ணின் ஈரம் அதிகரிப்பதுடன் மண் மேடு இடுவதும் தவிர்க்கப்படும். 1968–69-ல் ரூ. 2·08 லட்சம் செலவில் 400 ஹெக்டரில் இந்த வேலைகள் மேற்கொள்ளப்படும்.

**3. மேட்டூர் நீர்த்தேக்க நீர்கொள் பகுதியில் மண்வளப் பாதுகாப்பு.**—மண் அரிப்பைத் தடுப்பதற்கென மேட்டூர் நீர்த்தேக்க நீர்கொள் பகுதியில் மண்வளப் பாதுகாப்பு வேலைகளை மேற்கொள்வதே இந்த வேலைத் திட்டத்தின் நோக்கமாகும். 1968–69-ல் ரூ. 2·06 லட்சம் செலவில் 300 ஹெக்டரில் இந்த வேலைகள் மேற்கொள்ளப்படும்.

**4. குந்தா ஆற்றுப் பகுதித் திட்டப் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்பு.**—இப்பகுதிகளில் மண்ணின் ஈரத்தைப் பாதுகாப்பதும். நீர்த்தேக்கங்களில் மண் மேடிடுவதைத் தடுப்பதும் இந்த வேலைத் திடடத்தின் நோக்கமாகும். 1968–69-ல் 280 ஹெக்டர் காட்டு நிலங்களிலும் 1,800 ஹெக்டர் வேளாண்மை நிலங்களிலும் ரூ. 10·26 லட்சம் செலவில் இந்த வேலைகள் மேற்கொள்ளப்படும்.

## III. வளர்ச்சித் தலைப்பு—வேளாண்மை உற்பத்தி.

**1. காட்டுப் பகுதிகளில் முந்திரி வளர்ப்பு.**—முந்திரி அன்னியச் செலாவணியை ஈட்டித் தரும் பயிராகும். அதைத் தக்க இடங்களில் பயிர் செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். 1968–69-ல் ரூ. 2·78 லட்சம் செலவில் 1,000 ஹெக்டரில் முந்திரி பயிரிடப்படும். மத்திய அரசினர் பொறுப்பேற்கும் திட்டங்களின்கீழ் முந்திரி முனைப்புத் திட்டம் 1,000 ஹெக்டரில் செயல்படுத்தப்படும். முந்திரிப் பயிர் நன்ருக விளைவதற்கு எரு போடுதல் உட்பட பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**2. அரக்கு உற்பத்திப் பெருக்கம்.**—மதுரை மாவட்டத்திலுள்ள அரக்குப் பண்ணைகளில் அரக்கு உற்பத்தியைப் பெருக்குவதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும். 1968–69-ல் 40 ஹெக்டருக்கு மேற்பட்ட நிலங்களில் அரக்கு உற்பத்தி செய்யவும், அரக்குவகை மரங்களை நடவும் ரூ. 0·72 லட்சம் செலவிடப்படும்.

**3. துறையினர் தேயிலைத் தோட்டங்களைத் தொடங்குதல்.**—இலங்கை அகதிகள் சுமார் 5,000 பேர்களை (1,700 குடும்பங்கள்) குடியமர்த்தும் பொருட்டு ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

அதன்படி ஓராண்டில் 100 ஹெக்டர் வீதம் 15 ஆண்டுகளுக்கு நீலகிரி மாவட்டத்தில் 1,500 ஹெக்டரில் தேயிலை பயிரிடப்படும். 1968–69-ல் 100 ஹெக்டரில் தேயிலைத் தோட்டங்கள் பயிரிடப்படும்.

**வரவும் செலவும்.**—கடந்த ஐந்து ஆண்டுகளில் இத் துறைக்கு மொத்தத்தில் கிடைத்த வருவாய், இத்துறை செய்த செலவு ஆகியவை குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| ஆண்டு. | வருவாய். | செலவு. |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| 1962-63 .. .. .. | 2,22,85,691 | 1,39,13,352 |
| 1963–64 .. .. .. | 2,59,03,043 | 1,69,44,095 |
| 1964–65 .. .. .. | 3,07,62,421 | 1,85,50,017 |
| 1965–66 .. .. .. | 2,80,77,737 | 2,09,05,068 |
| 1966–67 .. .. .. | 3,18,86,433 | 2,06,76,882 |



### இணைப்பு I.

| தொடர் எண்ணும் திட்டத்தின் பெயரும். (1) | சாதனை. திட்டக் குறிக்கோள். (2) (ஹெக்டர்.) | சாதனை. நிதிச் செலவு. (3) (ரூபாய் லட்சத்தில்) |
|---|---|---|
| **A. வேளாண்மை உற்பத்தி—** | 18,972 | 27·43 |
| 1. முந்திரி .. .. .. | 130 | |
| 2. அரக்கு .. .. .. | அரக்கு பற்று மரங்கள் 137·5 டன்கள். | 2·34 |
| | | 29·77 |
| **B. காடுகள்—** | | |
| 1. வன விலங்குப் பாதுகாப்பு .. | ஓய்வு மாளிகை .. .. 1<br>சாலைகள் .. 23 கி.மீ.<br>சாலைகள் மேம்பாடு. 23 கி.மீ. 7<br>காவல் மாடம் .. .. 30<br>உப்பு மேடைகள் .. | 4·35 |
| | 4,338 | 1·75 |
| 2. தீவன சேமிப்பிடங்களை ஏற்படுத்துதல், புல்வெளிகளை மேம்படுத்துதல். | 1,554 | 8·88 |
| 3. ஆற்று வாய்க்கால்களையும், ஏரிக்கரைக் காடுகளையும் ஏற்படுத்துதல். | | |
| 4. பயிரிடும் நடவடிக்கைகளை விரிவுபடுத்துதல். | தேக்கு .. .. 2,065<br>(பாசனம் பெற்றது). 244<br>மூங்கில் .. .. 186<br>பலவகை இனங்கள் 92 | 10·16 |
| | 3,230 | 7·04 |
| 5. தீக்குச்சி மரங்களை வளர்த்தல். | .. 8,138 | 21·13 |
| 6. தொழில் தோட்டங்களை ஏற்படுத்துதல். | வாட்டில் 1,210<br>கற்பூர மரம் .. | |
| | 6,497 | 10·80 |
| 7. சீர்குலைந்த காடுகளைச் சீரமைத்தல். | 1,243 | |
| முன்னாள் ஜமீன் காடுகளை சர்வே செய்து எல்லை நிர்ணயித்தல். | சதுர கி.மீ. | |
| 8. மரங்களை வெட்டி எடுத்துச் செல்வதற்கான நவீன முறைகளை மேம்படுத்துதல். | புதிய சாலைகள் 43 கி.மீ.<br>பழைய சாலைகள் 47 கி.மீ. | 6·63 |
| | | 0·24 |
| 9. ராமேஸ்வரம் தீவில் ஆராய்ச்சி நிலையம். | .. | 0·95 |
| 10. பண்ணைக்காடுகளை மேம்படுத்துதல். | 934 | |
| | | 71·93 |

| தொடர் எண்ணும் திட்டத்தின் பெயரும். (1) | சாதனை. திட்டக் குறிக்கோள். (2) (ஹெக்டர்.) | சாதனை. நிதிச் செலவு. (3) (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|---|
| **C. மண்வளப் பாதுகாப்பு—** | | |
| 1. மண் அரித்த நிலங்களைப் பண படுத்துதல்— | | |
| (a) விறகு மரக்காடுகளை வளர்த்தல். | 24,349 | 25·74 |
| (b) மண் அரித்த நிலங்களை முன்னோடி ஆய்வுசெய்தல். | 5 மாவட்டங்கள் .. | |
| (c) தீவனக் காடுகளையும் மேய்ச்சல் நிலங்களையும் மேம்படுத்துதல். | 4,905 | 9·36 |
| (d) குடியிருப்புகளைக் கட்டுதல். | 108 குடியிருப்புகள் | 5·31 |
| 2. சவுக்குத் தோட்டங்களை விரிவு படுத்துதல். | 1,315 | 4·56 |
| | | 45·57 |
| | பெரு மொத்தம் . | 147·27 |

## இணைப்பு II.

| | | |
|---|---|---|
| **A. மத்திய அரசின் உதவி பெறும் திட்டங்கள் (காடுகள்)—** | | |
| 1. பண்ணைக் காடுகள் .. .. | 19,340 | 51·52 |
| 2. பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த தோட்டங்கள்— | | |
| (a) தோட்டங்கள்— | | |
| (i) தேக்கு .. .. | 2,388 | 6·30 |
| (ii) மென்மரம் .. .. | 3,004 | 6·15 |
| (iii) சவுக்கு .. .. | 1,416 | 5·72 |
| (iv) வாட்டில் .. .. | 6,751 } | |
| (v) கற்பூர மரம் .. .. | 2,542 } | 25·35 |
| (vi) மூங்கில் .. .. | 2,225 } | 5·35 |
| (b) காடுகளை விரிவுபடுத்தல்— | | |
| (i) ஆற்று வாய்க்கால்கள், ஏரிக்கரை காடுகள். | 2,062 | 6·43 |
| (c) ரப்பர் .. .. .. | 1,190 | 59·17 |
| 3. தொகுப்பு (ஆய்வு) .. .. | 1,606 சதுர கி.மீ. | 3·58 |
| 4. காட்டு வள ஆதாரங்கள் .. | .. | 0·12 |
| 5. சீர்குலைந்த காடுகளைச் சீரமைத்தல். | 5,276 | 8·68 |



### இணைப்பு II—தொடர்ச்சி.

| தொடர் எண்ணும், திட்டத்தின் பெயரும். (1) | சாதனை. திட்டக்குறிக்கோள். (ஹெக்டர்.) (2) | சாதனை. நிதிச்செலவு (ரூபாய் லட்சத்தில்.) (3) |
|---|---|---|
| 6. மேய்ச்சல் நிலவளர்ச்சி .. | 482 | 1·14 |
| 7. வன விலங்குப் பாதுகாப்பு .. | வன விலங்கு உய்விடங்களை மேம் படுத்துதல். | 8·11 |
| 8. வெட்டு மரம் எடுத்தல், காட்டுப் பொருள்களைப் பயன் படுத்தல். | சரக்கு பேருந்துகள் .. 5<br>குடியிருப்புகள் .. 3<br>கட்டை வெட்டும் கருவி .. | 2·87 |
| 9. பணியாளர் பயிற்சி .. .. | வைகை அணைக்கட்டிலுள்ள தமிழ் நாட்டுக் காட்டு துறைப் பயிற்சிப் பள்ளியில் 300 காட்டுத்துறையினருக்கும் 319 காட்டுப் பாதுகாவலருக்கும் பயிற்சி அளிக்கப்பட்டது. | 18·99 |
| 10. காட்டு வள ஆராய்ச்சி .. | ஆராய்ச்சிக் குடியிருப்புகள், தென் கணிக்கோட்டை, வண்டலூர், மும்முரவாட்டில் ஆராய்ச்சி நிலையங்கள், உதகமண்டலம் கொடைக்கானல். | 4·31 |
| 11. காடுகள் போக்குவரத்து — | சாலைகள் 77 கி.மீ. (புதியவை).<br>சாலைகள் 22 கி. மீ. (பழையவை). | 14·24 |
| 12. கட்டிடங்கள் — .. | 64 கட்டிடங்கள் .. | 8·32 |
| 13. காட்டுத்துறை பணியாளர்களுக்கும், தொழிலாளருக்கும் வசதிகள். | சரக்குப் பேருந்துகள் 5<br>கம்பளிகள் .. 2,550<br>தொழிலாளர் குடியிருப்புகள். 29<br>கிணறுகள் .. 58 | 6·07 |
| 14. விளம்பரம் .. — .. | திரைப்படங்கள் | 0·04 |
| 15. காடுகள் பாதுகாப்பு .. | கோயம்புத்தூரில் ஒரு பிரிவு. | 2·84 |
| 16. விறகு மரங்களை வளர்த்தல் .. | 4,701 | 26·15 |
| 17. செயல் திட்டங்கள் — .. | செயல்திட்ட வட்டம் | 0·33 |

### இணைப்பு II—தொடர்ச்சி

| தொடர் எண்ணும், திட்டத்தின் பெயரும். | | சாதனை. திட்டக்குறிக்கோள். (ஹெக்டர்.) | நிதிச்செலவு (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|---|---|
| (1) | | (2) | (3) |
| **மத்திய அரசு ஊக்குவிக்கும் திட்டங்கள்—** | | | |
| 18. விரைவில் வளரும் இனங்கள். | மூங்கில் .. | 1,166 | 15·11 |
| | யூகலிப்டஸ் .. | 609 | |
| | | | 286·89 |



### இணைப்பு II—தொடர்ச்சி.

| தொடர் எண்ணும், திட்டத்தின் பெயரும். | சாதனை. திட்டக் குறிக்கோள். (ஹெக்டர்.) | | நிதிச் செல (ரூபாய் லட்சத்தில் |
|---|---|---|---|
| (1) | (2) | | (3) |
| **B மண்வளப் பாதுகாப்பு—** | | | |
| **மத்திய அரசின் உதவி பெறும் திட்டங்கள்—** | | | |
| 1. விறகு மரக் காடுகளை வளர்த்தல் | 10,794 | | 24·4 |
| 2. மண் அரித்த நிலங்களை முன்னோடி ஆய்வு செய்தல். | 6 மாவட்டங்கள் | | |
| 3. வைகை நீர் பிடிப்புப் பகுதியில் மண் வளப் பாதுகாப்பு (ஆய்வு). | 531 சதுர கி.மீ. | | 1·5 |
| 4. மேட்டூர் நீர்த் தேக்கப் பகுதியில் மண்வளப் பாதுகாப்பு (ஆய்வு). | 1,121 சதுர கி.மீ. | | 1·6 |
| **மத்திய அரசு ஊக்குவிக்கும் திட்டங்கள்—** | | | |
| 5. குந்தா நீர்ப்பள்ளத்தாக்குப் பகுதியில் மண்வளப் பாது காப்பு. | 7,231 | | 42·4 |
| | | | 70·1 |
| **C வேளாண்மை உற்பத்தி—** | | | |
| 1. முந்திரி .. .. .. | 5,397 | | 12·7 |
| 2. அரக்கு .. .. .. | (அரக்குப் பற்று மரங்கள்) | 208 | 2·4 |
| | | | 15·1 |
| பெரு மொத்தம் .. | | | 372·1 |

## இணைப்பு III

| தொடர் எண்ணும், திட்டத்தின் பெயரும். | நான்காவது திட்ட குறிக்கோள் அளவு. | | சாதனைகள். 1966–67. | | சாதனைகள். 1967–68 (எதிர்பார்க்கப்படுபவை). | |
|---|---|---|---|---|---|---|
| | திட்டக் குறிக்கோள் அளவு. | நிதிச் செலவு. | திட்டக்குறிக்கோள் அளவு. | நிதிச் செலவு. | திட்டக்குறிக்கோள் அளவு. | நிதிச் செலவு. |
| | (ஹெக்டர்.) | (ரூபாய் லட்சத்தில்.) | (ஹெக்டர்) | (ரூபாய் லட்சத்தில்.) | (ஹெக்டர்). | (ரூபாய் லட்சத்தில்.) |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| காடுகள்—மத்திய அரசின் உதவி பெறுபவை. | | | | | | |
| 1. பண்ணைக்காடுகள், விறகு மரக்காடுகள் வளர்ப்பு— | | | | | | |
| (a) பண்ணைக்காடுகளும், கிராமக்காடுகளும் .. | 26,000 | 65·00 | 1,990 | 7·18 | 2,082 | 4·52 |
| (b) பண்ணைக்காடுகள், காடுகளை விரிவுபடுத்துதல் — | மத்திய செடி வளர்ப்பிடம். | 5·00 | சேலம் மாவட்டத்தில் ஒரு மத்திய செடி வளர்ப்பிடம் அமைக்கப் பட்டது. | 0·1 | சேலம் மாவட்டத்தில் மத்திய செடி வளர்ப்பிடத்தைப் பேணி வருதல். | 1·17 |
| (c) விறகு மரக்காடு — — — — | 12,000 | 60·00 | 1,626 | 9·16 | 1,200 | 6·93 |
| 2. பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த தோட்டங்கள்— | | | | | | |
| (a) மலைத் தோட்டங்கள்— | | | | | | |
| (1) தேக்கு — — — — — | 3,600 | 18·00 | 505 | 1·67 | 424 | 1·28 |
| (2) மென்மரம் .. .. .. .. — | 2,400 | 7·00 | 170 | 0·51 | 318 | 0·48 |
| (3) சவுக்கு .. .. — — — | 1,800 | 10·00 | 194 | 1·43 | 219 | 1·08 |
| (4) வாட்டில் .. .. — — — | 7,200 | 15·00 | 800 | 7·90 | 818 | 5·56 |
| (5) கற்பூர மரம் .. .. .. .. — | 2,400 | 7·00 | 530 | 2·31 | 218 | 2·21 |
| (6) மூங்கில் .. .. .. .. .. | .. | .. | — | 0·32 | — | .. |
| (7) சந்தன மரங்களுக்கு புத்துயிரளித்தல் — | 400 | 1·00 | 125 | 0·20 | 95 | 0·41 |
| (b) ஆறு, கால்வாய், ஏரிக்கரைக்காடுகள் .. .. .. | 1,600 | 11·00 | 450 | 1·33 | 447 | 1·10 |
| (c) ரப்பர் தோட்டங்கள் .. .. .. — .. | 1,200 | 75·00 | 200 | 17·36 | 197 | 9·64 |
| 3. தொகுத்தல் .. .. .. .. — | 1,295 ஹெ.மீ. | 3·00 | .. | 0·02 | .. | 0·02 |
| 4. சீர்குலைந்த காடுகளைச் சீரமைத்தல் .. — | 1,200 | 5·00 | 327 | 0·86 | 247 | 0·57 |
| 5. இயற்கையைப் பாதுகாத்தலும் வனவிலங்கு பாதுகாப்பும். | கண்கவர் இடங்களையும் வன விலங்கு உய்விடங்களையும் மேம்பாடு செய்தல். | 16·00 | வனவிலங்கு உய்விடங்களை மேம் படுத்துதல். | 1·67 | கோடிக்கரையிலும், முதுமலை வன விலங்கு உய்விடங்களைச் சேர்ந்த ஒய்வு மாளிகைகளை மேம்பாடு செய்தலும், கிண்டி பூங்காவிலுள்ள ஒதுக்கக் காட்டில் பொழுதுபோக்கு நிலையம் ஒன்றும் அமைத்தல். | 5·56 |
| 6. வெட்டுமரம் எடுத்தலை மேம்படுத்துதலும் காட்டுப் பொருள்களை பயன்படுத்துதலும். | வெட்டுமரங்களை எடுத்துச் செல்வதற்கு வண்டி ஆகிய வசதி செய்து தருதல். | 10·00 | 2 லாரிகள், 42 மழைக்கோட்டு கள் வழங்குதல், கட்டை வெட்டும் நிலையத்தைக் கட்டுதல். | 1·35 | 42 மழைக் கோட்டுகள். 1 தொழிலாளர் குடியிருப்பு. 1 கான்க்ரீட் பாலம். | 0·54 |
| 7. பணியாளர் பயிற்சி .. — — — — | 150 வனத் துறையினருக் கும் 600 வனப் பாது காப்பாளர்களுக்கும் பயிற்சியளித்தல். | 20·00 | 30 வனத்துறையினர். 116 வனப்பாதுகாப்பாளர்கள். | 3·29 | 30 வனத் துறையினர். 120 வனப்பாதுகாப்பாளர்கள். | 3·25 |
| 8. காடுகள் ஆய்வு — — — — .. | ஆய்வு செய்வதற்காகும் செலவு. | 20·00 | 4 நிலையங்கள். | 2·09 | 4 நிலையங்கள். | 3·60 |
| 9. காட்டுச் சாலைகள் .. — — — .. | 100 கி.மீட்டர் (புதிய சாலை கள்). 25 கி. மீட்டர் (பழைய சாலைகள்). | 25·00 | 35 கி. மீட்டருக்கு மேற்பட்ட சாலைப் பணிகள். | 2·43 | சாலைப் பணிகளை முடித்தல். | 1·99 |

இணைப்பு III—தொடர்ச்சி.

| தொடர் எண்ணும், திட்டத்தின் பெயரும். | நான்காவது திட்டக் குறிக்கோள் அளவு. | | சாதனைகள். | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | 1966–67. | | 1967–68 (எதிர்பார்க்கப்படுபவை). | |
| | திட்டக் குறிக்கோள் அளவு. | நிதிச் செலவு. | திட்டக் குறிக்கோள் அளவு. | நிதிச் செலவு. | திட்டக் குறிக்கோள் அளவு. | நிதிச் செலவு. |
| | (ஹெக்டர்.) | (ரூபாய் லட்சத்தில்.) | (ஹெக்டர்) | (ரூபாய் லட்சத்தில்.) | (ஹெக்டர்) | (ரூபாய் லட்சத்தில்.) |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 10. கட்டிடங்களைக் கட்டுதல் .. .. .. .. | குடியிருப்புகளைக் கட்டுதல். | 15·00 | 7 குடியிருப்புகள். | 2·27 | கட்டிடங்களைக் கட்டி முடித்தல். | 0·60 |
| 11. வனப் பணியாளர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் வசதிகள் செய்து தருதல். | | 10·00 | 500 கம்பளிகள் | 0·18 | 500 கம்பளிகள். | 0·15 |
| 12. காடுகள் பற்றி விளம்பரம் .. .. .. .. | விளம்பரப் பிரிவு .. | 5·00 | | | | |
| 13. காடுகள் பாதுகாப்பு .. .. .. .. .. | தீ விபத்தறிவதற்கான தூபி ஆகியவை. | 10·00 | இழு வண்டிகளுடன் கூடிய 2 ஜீப்கள். | 0·83 | .. | 0·10 |
| 14. செயல் திட்டங்கள் .. .. .. .. .. | செயல்திட்ட வட்டத்தை ஏற்படுத்துதல். | 5·00 | செயல்திட்ட வட்டம் ஏற்படுத்தப் பட்டது. | 0·40 | செயல்திட்ட வட்டம் ஏற்படுத்தப் பட்டது. | 0·42 |
| 15. காடுபடு சிறு பொருள்கள் .. .. .. .. | 1,400 | 6·00 | 205 | 0·41 | 210 | 0·79 |
| 16. காடுகள் பற்றிய புள்ளிவிவரம் .. .. .. | புள்ளிவிவரப் பிரிவு .. | 3·00 | .. | — | .. | — |
| 17. நிர்வாகத்தினை மும்முரமாக்குதல் .. .. .. | .. | 2·00 | .. | .. | .. | — |
| 18. காட்டுவள ஆதாரங்களை ஆய்வு செய்தல் .. .. | ஆய்வு செய்தல் .. .. | 10·00 | .. | .. | .. | — |
| | மொத்தம் .. | 439·00 | | 65·36 | | 52·02 |
| மத்திய அரசு ஊக்குவிக்கும் திட்டங்கள். | | | | | | |
| 1. விரைவில் வளரும் இனமரங்களை நட்டுப்பயிர் செய்தல். | 6,000 | 50·00 | 921 மூங்கில் மரங்கள். 659 யூகலிப்டஸ். | 7·74 | 2,300 | 13·37 |
| | மொத்தம்—காடுகள் .. | 489·00 | | 73·10 | | 65·39 |
| மண்வளப் பாதுகாப்பு—மத்திய அரசின் உதவிபெறும் திட்டம். | | | | | | |
| 1. விறகு மரக்காடுகளை வளர்த்தல் .. .. .. | 14,500 | 25·00 | 1,269 | 1·90 | 2,150 | 2·41 |
| 2. மண் அரித்த நிலங்களில்—முன்னோடி ஆய்வு செய்தல். | .. | .. | 2 மாவட்டங்கள். | 0·82 | .. | .. |
| 3. வைகை நீர் பிடிப்புப் பகுதியில் மண்வளப் பாதுகாப்பு. | 2,400 | 12·50 | 262 | 1·96 | 132 | 2·47 |
| 4. மேட்டூர் நீர் தேக்கப் பகுதியில் மண்வளப் பாதுகாப்பு. | 2,800 | 12·50 | 561 | 4·23 | 303 | 3·55 |
| மத்திய அரசு ஊக்குவிக்கும் திட்டம். | | | | | | |
| மண்வளப் பாதுகாப்புத் திட்டம்—குந்தா நீர்ப் பள்ளத்தாக்குப் பகுதியில் மண்வளப் பாதுகாப்பு. | 12,000 | 90·00 | 1,704 | 10·11 | 3,200 | 10·45 |
| மண்வளப் பாதுகாப்புச் செலவு மொத்தம் .. .. .. | | 140·00 | | 19·02 | | 18·88 |
| வேளாண்மை உற்பத்தி | | | | | | |
| 1. காட்டுப் பகுதிகளில் முந்திரி வளர்ப்பு .. .. | 6,000 | 24·00 | 1,117 | 2·84 | 895 | 2·59 |
| 2. காட்டுப் பகுதிகளில் அரக்கு பற்று மரங்களை வளர்த்தல். | 280 | 6·00 | 49 அரக்கு பற்று மரங்கள். 6,197 கி.கி. அரக்கு. | 0·33 | 39 (அரக்கு பற்று மரங்கள்). | 0·52 |
| | மொத்தம் .. | 30·00 | | 3·17 | | 3·11 |

# தமிழக சட்டப் பேரவை

செவ்வாய்க்கிழமை, 1968 மார்ச் 12.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9–00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர், திரு. சி. பா. ஆதித்தனர் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினுக்கள்—விடைகள்

### வெள்ளிக்குறியிட்ட வினுக்கள்.

### கைத்தறி நெசவுத் தொழில்

*190 வினு.—**திரு. சி. கோவிந்தராசன் :** மாண்புமிகு கல்வி—தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவிற்கு விடையளிப்பாரா :—

கைத்தறி நெசவுத் தொழில் பாதிக்கப்படுவதால், விசைத் தறிகளை புதிதாக அனுமதிக்கும் திட்டத்தை அரசாங்கம் கைவிடுவது ஆராய்வில் இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இல்லை , ஐயா.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், விசைத் தறிகளைப் புகுத்துவதை கைவிடுவதற்கில்லை என்று சொன்னல், இன்றைக்கு அந்தத் தொழில் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது, அந்தத் தொழில் நல்ல நிலையில் இருப்பதற்கு வேண்டியும், அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிற தொழிலாளர்களுடய வாழ்க்கைத்தரம் உயர்வதற்கு வேண்டியும் தொடர்ந்து அதற்காக வேண்டி என்ன திட்டத்தை வகுத்திருக்கிறதென்று சொல்லமுடியுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, விசைத் தறிகளைப் பற்றி பவர்-லூம் என்கொயரி கமிட்டி—விசைத்தறி ஆய்வுக் குழு திரு. அசோக்மேத்தா அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்டு பல்வேறு நிலைமைகளை அது ஆராய்ந்து விசைத் தறிகளை எப்படிப் பகிர்ந்து அளிப்பது என்று முடிவு செய்யப்பட்டது. ஒவ்வொரு மாநிலத்தினுடைய நிலைமையும் ஆராயப்பட்டு, அந்தந்த மாநிலத்தில் எவ்வளவு கைத்தறிகள் இருக்கின்றன, அந்தந்த மாநிலத்தின் மக்கள் தொகை எவ்வளவு, இருந்துவரும் விசைத் தறிகள் எவ்வளவு, தொழில் துறையில் பின் தங்கிய நிலையிலுள்ள நூற்பு ஆலைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பனவற்றையெல்லாம் கணக்கெடுத்து தமிழகத்திற்கென்று 12,500 விசைத் தறிகளை நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அமைக்கலாம் என்ற அளவிற்கு அந்தக் குழு சிபார்சு செய்து தமிழகத்திற்குத் தந்தது. அவர்கள் தருகின்றபோது 50 சதவீதம் கூட்டுறவுத் துறைக்கும், 50 சதவீதம் தனியார் துறைக்கும் என்று சிபார்சு செய்திருக்கிறார்கள். நீண்ட நாட்களாக நமது மாநிலத்தில் விசைத் தறிகள் தேவையில்லை என்று சொல்லிக் கொண்டு வருகின்றபோதிலும், பக்கத்து மாநிலங்களில் விசைத் தறிகள் வைக்கப்பட்டு, துணிகள் நெய்யப்பட்டு இந்த மாநிலத்திற்கு அவைகள் வருகின்றபோது அவற்றைத் தடுப்பதற்கு வழியில்லாமல் இருக்கிறது. தமிழ்நாடு ஹாண்ட்லூம் போர்டு இதைப் பற்றி ஆலோசித்து 12,500 விசைத் தறிகளை ஏற்றுக் கொள்ளலாம் என்றும், கைத்தறிகளில் என்னென்ன துணிகளை நெய்ய வேண்டுமென்று

குறிப்பிட்டுவிட்டு, அதைத் தவிர மற்றவைகளை மாத்திரம் விசைத்தறிகளில் நெய்வதற்கு ஒதுக்கலாம் என்று திட்டம் தீட்டி கைத்தறிபோர்டு இயக்குநர் அவர்கள் அனுப்பியிருக்கிறார்கள். அது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது.

DR. H. V. HANDE : Sir, where as it is not possible for this Government to prevent the expansion of power-looms at the expense of the handloom-weavers, will this Government come forward with some concrete proposals such as for instance, complete reservation of coloured sarees and bordered dhoties to the handlooms as had been recommended by this House in the past ? Will this Government try to rigidly enforce that recommendation ? Will this Government come forward with some concrete proposals to see that one-sixth of the total number of handloom weavers in the country who are in the Madras State are adequately protected and are not thrown out of employment in the streets ? Will the Government take some such rigid, concrete proposals to see that the handloom weavers get all the shares that are due to them ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, நெசவு ஆலைகளினுடைய படையெடுப்பினின்று கைத்தறியைக் காப்பாற்ற வேண்டுமென்ற கொள்கை கொண்டிருக்கிற காரணத்தினால், விசைத் தறியினின்று கைத்தறியைக் காப்பாற்ற வேண்டிய திட்டம் தீட்டப்பட வேண்டிய நிலையில் இருக்கிறோம். நாம் இப்பொழுது விசைத் தறிகளை வேண்டாமென்று சொன்னால், மற்றைய மாநிலங்களுக்கு 12,500 விசைத் தறிகளை ஒதுக்கிவிடுவார்கள். மைசூர், மகாராஷ்டிரம் போன்ற மாநிலங் களுக்கு அந்த விசைத் தறிகளை ஒதுக்கிவிட்டால் அவற்றின் மூலம் அங்கே நெய்யப்பட்டு இங்கே வருகின்ற துணிகளைத் தடுப்பதற்கு வழி யில்லை. இடம் விட்டு இடம் பெயரக்கூடிய முறையில் அவைகள் இங்கு வந்தால் நாம் அதைத் தடுப்பதற்கு முடியாது. இங்கேயுள்ள நெசவாளர்களே விசைத் தறிகளை வைத்துக் கொள்வதற்கு முன்வந்தால் அவர்களுக்கு வேண்டிய வாய்ப்புகளையும், வசதிகளையும் செய்து கொடுக்க லாம். அப்படிக் கொடுக்கின்றபோது கரை போட்ட வேஷ்டிகளையும் சேலை களையும் நெசவாலைகளில் நெய்யாமல், அவற்றை கைத்தறிக்கே ஒதுக்க வேண்டுமென்ற அடிப்படையில் கைத்தறி இயக்குநர் ஆலோசித்து வரு கிறார்கள். கைத்தறிகள் பாதிக்கப்படாத முறையிலே விசைத் தறிகளைக் கொண்டு வருவதற்கான திட்டத்தைத் தீட்டித் தந்திருக்கிறார்கள். அது பரிசீலனையில் இருக்கிறது.

**திரு. கு. துரைசாமி :** பேரவைத் தலைவரவர்களே, விசைத் தறிகளை அதிகமாகப் புகுத்தக்கூடாது என்ற நிலையில் மகாராஷ்டிரத்தில் 100-க்கு 70 பங்கு விசைத் தறிகள் புகுத்தப்பட்டுள்ளன. தமிழ் நாட்டிலிருந்து நூல் அங்கே கொண்டு போகப்பட்டு வேஷ்டியாக நெய்யப்பட்டு நமக்கு அனுப்பப்படுகிறது. அதன் காரணமாக பிப்ரவரி மாதத்தில் 60,000 பேல்கள் தேங்கிக் கிடக்கின்றன. இந்த நிலைமையை மாற்றுவதற்கு நாமே வேஷ்டிகளை உருவாக்கக்கூடிய வகையில் இங்கே அதிகமான விசைத் தறிகளை புகுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** நான் ஏற்கெனவே குறிப்பிட்டபடி நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட 12,500 விசைத்தறிகளையும் கைத்தறிக்கு பாதகம் ஏற்படாத அளவில் கூட்டுறவுத் துறையில் எந்த வகையில் பயன்படுத்தலாம் என்பதுபற்றி ஆலோசனை செய்யப்பட்டுவருகிறது. அது பரிசீலனையில் இருந்து வருகிறது என்று முன்பே குறிப்பிட்டேன்.



THIRU K. VINAYAKAM : Even though the Central Government was prepared to allot some thousands of power-looms for our State and whereas the previous Government was not in favour of taking up the allotment and whereas the handloom industry could not co-exist along with the power-loom industry, may I know in what way this Government proposes to see that the power-looms will not affect the handloom industry in this State when we actually take the power-looms allotted to us ? What is the reaction of the Central Government when we made a representation that bordered dhoties and coloured sarees should be entirely reserved for the handloom industry ? What was the reaction of the Central Government to this kind of proposal so far as this State is concerned ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** ஒதுக்கப்பட்ட 12,500 விசைத்தறிகளும் முந்தைய அரசாங்கத்தில் ஒதுக்கப்பட்டது. அவற்றை வேண்டாமென்று இப்போது சொல்லவில்லை. கைத்தறி போர்டாரும் மற்ற வர்களும் அதை வேண்டாமென்று சொன்னார்கள். அதற்குப் பிறகு இருக்கிற சூழ்நிலையின் அடிப்படையிலே அவற்றை கூட்டுறவுத் துறையிலே நடத்த வேண்டுமென்ற முறையில் முந்தைய அரசாங்கம் ஏற்றுக் கொண்டது. கைத்தறி பாதுகாக்கப்பட வேண்டுமென்ற அடிப்படையில் தான் ஆராயப்பட்டு வருகிறது. அப்படிச் செய்யும்போது கரை போட்ட வேஷ்டிகளையும், சேலைகளையும் கைத்தறிக்கே ஒதுக்க வேண்டுமென்ற முறையில் திட்டம் தீட்டப்படுவதற்கு ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

**திரு. வி. டி. அண்ணாமலை :** ஏற்கெனவே கைத்தறி நெசவாளர் களினுடைய நிலைமை பவர் லூம் ஏற்பட்டதினால் பாதிக்கப்பட்டிருக்கிறது. விசைத் தறிகள் இன்னும் அதிகமான பகுதிகளில் ஏற்பட்டால் அதன் மூலம் பாதிக்கப்படும் கைத்தறி நெசவாளர்களுக்கு மாற்று வேலைகள் கொடுக்க என்னென்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன ?

**மாண்புமிகு திரு. இரா: நெடுஞ்செழியன் :** நான் முதலிலே குறிப் பிட்டபடி நாம் இங்கே ஒதுக்கப்பட்டுள்ள விசைத் தறிகளை ஏற்றுக் கொள்ளா விட்டால் பக்கத்து மாநிலங்களுக்கு அவர்கள் ஒதுக்கிவிடப் போகிறார்கள். அங்கே நெய்யப்பட்ட துணிகள் இங்கே வரத்தான் இருக்கின்றன. அதைத் தடுப்பதற்கு வழியில்லை. ஆகையால் கைத்தறி நெசவாளர்கள் பாதிக்காத அளவில் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுகின்றன. கோவை மாவட்டத்திலே கைத்தறி தொழிலிலே ஈடுபட்டிருக்கின்றவர்களை ஆலைத் தொழில்களுக்கும் என்ஜினியரிங் தொழில்களுக்கும் ஈர்த்துக்கொள்ளக் கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட நிலைமை உடனடியாக வரமுடியாது. நாளாவட்டத்தில்தான் வரும். ஆகையால் இருக்கிற சூழ் நிலைகளை வைத்து அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கப்பட்டு வருகிறது. 12 கைத்தறி நூற்பு ஆலைகளை வைத்து அதன் மூலம் அவர்களுக்கு உதவி செய்ய முயற்சிக்கிறோம்.

**திரு. சா. மெய்யப்பன் :** விசைத் தறியினால் தயாரிக்கப்படும் துணிகளைக் காட்டிலும் ரயான், டெரிலின் என்பதனை மக்கள் அதிகமாக விரும்பு கிறார்கள் என்பது உண்மையா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அதுபற்றிய விவரம் இல்லை.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** விசைத் தறியைப் புகுத்துகிறபோதே விசைத் தறிக்கு என்று சில சில ரகத் துணி ஒதுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அந்த வகையில்தான் ஆராயப்பட்டு வருகிறது. இருக்கக்கூடிய கைத் தறிகள் எதுவும் பாதிக்கப்படாத வகையில் இந்த திட்டம் மேற் கொள்ளப்படும்.

**திரு. கு. கிருஷ்ணமூர்த்தி :** கைத்தறி நெசவுத் தொழில் பாதிக்கப்பட்டிருப்பதன் விளைவாக சில கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படாமல் இருக்கின்றன. அவற்றைச் செயல்படும்படிச் செய்ய சர்க்கார் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** எந்த எந்த கூட்டுறவுச் சங்கங்கள் . என்பது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டால் நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. கே. பி. எஸ். மணி :** விசைத் தறிகளைப் புகுத்தும்போது கைத்தறி நெசவாளர்களையே கொண்ட கூட்டுறவு ஸ்தாபனங்களை ஏற்படுத்தி, அவற்றில் இதைப் புகுத்துவார்களா ? அந்த கூட்டுறவுச் சங்கங்களுக்கு மானியமோ, கடனோ கொடுக்க திட்டமிடுவார்களா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** கூட்டுறவுத் துறையில் விசை தறிகளைப் புகுத்துவது பற்றிதான் அரசு யோசித்துக்கொண்டிருக்கிறது.

**திரு. ஆர். நாகசுந்தரம் :** தலைவர் அவர்களே, வண்ணம் மாறும் மெட்ராஸ் ப்ளீடிங் துணி ரகம் இப்போது வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படவில்லை என்பது உண்மையா ? ஆம் எனில் காரணம் என்ன ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** மூலக் கேள்விக்கும் இந்தத் துணை வினாவுக்கும் சம்பந்தம் இல்லை.

**திரு. என். சங்கரய்யா :** நாம் வேண்டாம் என்றால் மற்ற மாநிலங்களுக்கு இது போய்விடுகிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மைசூர் போன்ற மாநிலங்களை எல்லாம்விட நம் மாநிலத்தில் அதிகமாக கைத்தறி நெசவாளர்கள் இருக்கிறார்கள். கிட்டத்தட்ட நமது நாட்டில் உள்ள கைத்தறி நெசவாளர்களில் ஐந்தில் ஒரு பங்கு இங்கேதான் இருக்கிறார்கள். ஆகவே இந்தப் பவர்லூமினால் நம்முடைய கைத்தறி நெசவாளர்கள் பாதிக்கப்படாமல் இருப்பதற்கு பவர் லூம்கள் மூலம் உற்பத்தியாகிற துணிகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** எந்த எந்த வகையில் நம்முடைய கைத்தறியாளர்கள் பாதுகாக்கப்படவேண்டுமோ அவற்றை எல்லாம் ஆராய்ந்து கொண்டிருக்கிறது. நான் குறிப்பிட்டபோது நமக்கு பவர் லூம் வேண்டாம் என்றால் மற்ற மாநிலங்களுக்குத் தரப்போகிறார்கள். அங்கே துணிகள் உற்பத்தியாகி இங்கே வரப்போகின்றன. ஆகவே தான் இங்கேயே பவர் லூம்—கைத்தறியாளர்கள் பாதிக்கப்படாமல்—கொண்டுவந்து ஏற்றுமதிக்குத் தகுதியுள்ள ரகங்களை ஏற்றுமதி செய்வது பற்றியும் யோசிக்கலாம்.

### எட்டயபுரத்திலுள்ள பாரதியாரின் வீடு

* 191 வினா.—**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:—

எட்டையபுரத்தில் அமரகவி சுப்பிரமணிய பாரதியார் வாழ்ந்த வீட்டை விலைக்கு வாங்கி, தேசிய. நினைவுச் சின்னமாகப் பாதுகாக்கும் செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்சென் :** இல்லை.

THIRU K. VINAYAKAM : Sir, whereas Poet Bharathi is considered to be the national board of the common people and who was responsible for the inspiration of the spirit of Independence in South India and whereas the houses where he lived—not only in Ettayapuram but also in Triplicaneare considered to be places of





national importance and almost patriotic temples, will the Government reconsider the desirability of not only purchasing those houses at Ettayapuram and Triplicane and keep them open for the people —if not this generation but at least the generation which is fast losing interest in this kind of field—to draw the inspiration of patriotic spirit ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மகாகவி பாரதியார் அவர்களுடைய நினைவு எழுகிற வகையில், அவரைப் பற்றி மக்கள் உள்ளத்தில் தங்குகிற வகையில் எட்டையபுரத்தில் ஒரு நினைவு மண்டபம் எழுப்பப்பட்டிருக்கிறது. அது நூல் நிலையமாகவும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் உலகத் தமிழ் மகாநாட்டை ஒட்டி பாரதியார் சிலை ஒன்று கடற்கரையில் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக எட்டையாபுரத்தில் உள்ள அவரது வாழ்ந்த இல்லத்தை வாங்கலாம் என்றால் மாவட்ட ஆட்சியாளர் அதனுடைய நியாயமான மதிப்பு 14 ஆயிரம் என்கிறார். ஆனால் வீட்டின் சொந்தக்காரர் இந்தச் சிறப்பான நிலையை மனதில் கொண்டு வீட்டிற்கு 35 ஆயிரம் கோருகிறார். ஆகவே அக்விசிஷன் ஆக்ட் பிரகாரம் அதைக் கைக்கொள்ளலாமா என்பது அதிகாரிகளால் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. அந்த ஊரில் இருக்கிறவர்கள் பாரதியாரின் நினைவுச் சின்னமாகக் கருதி பாதுகாக்க அந்த வீட்டை இனாமாகவே கூடக் கொடுக்கலாம். ஆனால் அதிக மதிப்பு கோருவதன் காரணமாக நிலைமை பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

**திரு. அ. லெ. சுப்பிரமணியம் :** பாரதியாருடைய மனைவியார் ஊர் கடையம் ஆகும். அங்கேதான் அவர் நீண்ட நாள் வாழ்ந்தார்கள். காணி நிலம் வேண்டும் என்று அவர் பாடினாரே, அந்தக் காணிநிலம் கூட அங்கேதான் இருக்கிறது. அங்கு அவர் வாழ்ந்த வீட்டை மக்கள் பார்வைக்கு ஆக்குவதற்கான எண்ணம் அரசாங்கத்திற்கு உண்டா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** பாரதியாரைப் பற்றி எண்ணலாமே தவிர, உற்றார், உறவினர் யாவரையும் பற்றி எண்ணிக் கொண்டு போனால் முடிவு ஏற்படாது.

DR. H. V. HANDE : Sir, while we are confident that this Government have fully realised the necessity of reminding ourselves of the sayings and teachings of Subramania Bharathiar, I wish to know what are the concrete steps taken by this Government to perpetuate the excellent teachings and sayings of Bharathiar, just as the Government have taken positive steps with regard to the teachings and sayings of Thiruvalluvar !

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** பாரதியாருடைய நூல்கள் தேசியமாக்கப்பட்டிருக்கிறது. அதை அரசாங்கமே அச்சிட்டு மலிவு விலையில் மக்களுக்கு விநியோகித்திருக்கிறது. பாரதியாருடைய நாளைக் கொண்டாடுவதன் மூலமாக மக்களிடத்தில் அவரது இலக்கியம் பரப்பப்பட்டு வருகிறது. தபால் தலை வழங்குவதன் மூலமாகவும் இந்த அரசாங்கம் பல வகையில் திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறது.

### தஞ்சை மாவட்டத்திலுள்ள வடிகால் வாய்க்கால்கள்

* 192 வினா.—**திரு. ஆ. கு. சுப்பையா :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில், இதுவரை எத்தனை வடிகால் வாய்க்கால்களில் நாணல் அகற்றும் வேலை நடந்துள்ளது ?

(இ) அதற்கான திட்டங்கள் எவ்வாறு தயாரித்து அமல்படுத்தப்படுகிறது ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :**

(அ) பன்னிரண்டு வாய்க்கால்கள்.

(இ) தேவையையும், களையின் வளர்ச்சியையும் கருத்திற்கொண்டு ஆண்டுதோறும் வாய்க்கால்களும் வடிகால்களும் களையெடுக்கப்படுவதற்காகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. களையெடுக்கப்படவிருக்கும் வடிகால்கள், வாய்க்கால்களின் பட்டியல் கலெக்டருக்கு அனுப்பப்படும்; அதில் இதற்காகும் மதிப்பீட்டுச் செலவும் இச்செலவில் 25 சதவீதத் தொகை வசூலிக்கப்படவிருக்கும் ஊராட்சி மன்றத்தின் பெயரும் அடங்கியிருக்கும். இப்பணியின் மதிப்பீட்டுச் செலவின் 25 சதவீதத் தொகையை ஏற்றுக்கொள்வதாகச் சம்பந்தப்பட்ட ஊராட்சி மன்றங்களிடமிருந்து ஒப்புதல் கடிதமும் கலெக்டரின் இசைவும் வரப்பெற்றதும், பொதுப்பணித்துறை அப்பணியை நிறைவேற்றுகிறது.

**திரு. ஆ. கு. சுப்பையா :** ஐயா, தஞ்சாவூர் மாவட்டத்தில் பிரிவுகள் இருக்கின்றன. காவேரி, வெண்ணார், மேட்டூர் கால்வாய் இந்த மூன்று பிரிவுகளில் எந்த எந்தப் பிரிவுகளில் தூர் அகற்றும் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது? அந்த வேலை மிகவும் தாமதமாக நடைபெற்று வருகிற காரணத்தினால் விரைவுபடுத்தும் திட்டம் ஏதாவது ஆலோசனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இதற்கென செலவிட அரசாங்கம் ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் ஒதுக்கியிருந்தும் கிட்டத்தட்ட ஏழாயிரம், எட்டாயிரம் ரூபாய் அளவுக்குத்தான் பயன்படுத்திக்கொள்ளப்பட்டிருக்கிறது. காரணம் அந்த அந்த ஊராட்சி மன்றங்கள் பொறுப்பேற்றுக்கொண்டு 25 சதவிகிதம் செலவிட முன்வந்தால் சர்க்கார் 75 சதவிகிதம் உதவி செய்கிறது. ஆகவே இனியாவது ஊராட்சி மன்றங்கள் அக்கறையோடு முன்வந்து இந்தத் திட்டத்திற்கு பொறுப்பேற்றுக்கொண்டு செயல்படுத்த முன்வந்தால் அரசாங்கம் இந்த ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாயையும் செலவழிக்கத் தயங்காது.

**திரு. இரா. சௌந்தரராஜ மூப்பனார் :** அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட 12 வாய்க்கால்கள் என்ன என்ன? அவை அவை சம்பந்தப்பட்ட ஊராட்சி மன்றங்கள் என்ன என்ன? உலக பாங்கு மூலமாக இருக்கும் திட்டம் தற்போது என்ன நிலையில் உள்ளது?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** ஊராட்சி மன்றங்கள் என்ன என்ன என்கிற விவரம் இல்லை. ஆனால் திருத்துறைப்பூண்டி வட்டத்தில் நாட்டு வாய்க்கால், அதிவீரராமனாறு வாய்க்கால், கடுகுருட்டியாறு வாய்க்கால், கோடிவிநாயகநல்லூர் வாய்க்கால், பழவனாறு வாய்க்கால், வடபாதி எண் 1, 3 வாய்க்கால்கள், பிச்சன்கோட்டகம் ஊராட்சி எல்லைகளில் உள்ள பறுப்பாடி வாய்க்கால், நாகப்பட்டினம் வட்டத்தில் இரண்டு வாய்க்கால்கள், சீர்காழி வட்டத்தில் 4 வாய்க்கால்கள். அந்தப் பணி நடைபெற்றது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் பயிர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் வடிகால் வசதிகள் என்ன என்ன செய்ய திட்டமிடப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** வடிகால் வசதித் திட்டத்திற்காக இன்றையதினம் ஒரு தனிப்பிரிவு தஞ்சை மாவட்டத்தில் இயங்கி வருகிறது. அந்தத் தனிப்பிரிவு நடத்திய ஆராய்ச்சியின் மூலம் கீழ்க்கண்டவாறு ஐந்து திட்டங்கள் இப்பொழுது மேற்கொள்ளப்படலாம் என்ற அளவிலே தொடங்கப்பட்டு வருகிறது :—

1. வெண்ணாற்றில் இப்பொழுது வடியும் மேல்நில வடிகாலைத் திருப்புதல்.





2. வடக்கே கொள்ளிடத்தைப்போலவே தெற்கே பாமினி ஆற்றையும் வெள்ள நீர் வடிகால் ஆறாக மேம்படுத்துதல்.

3. நேரடியான வடிகால்களை அமைப்பதன் மூலம் வெள்ள நீரைக் கடலில் செலுத்துவது.

4. அதிகப்படியான நீரைக் கழிமுகப் பண்ணையில் செல்லும்வகையில் இறைத்து ஆற்றுநீரைக் கடலில் கலக்க வகைசெய்தல்.

5. தாழ்வான இடங்களில் அவசியமான வடிகால் ஏற்பாடுகளைச் செய்தல்.

இதற்காக 250 லட்ச ரூபாய் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இவற்றிற்கான ஆராய்ச்சிகள் நடைபெற்று இப்பொழுது முடிவடைந்திருக்கின்றன.

**திரு. கே, பி. எஸ். மணி :** ஐயா, அமைச்சர் அவர்கள் சொன்னதிலிருந்து இந்த வடிகால் திட்டத்தை மேலும் அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று தெரிகிறது. நாங்கள் பலமுறைகளாக கேட்டுக்கொண்டு இருந்தபொழுது போதுமான அளவுக்குப் பணம் இல்லை தஞ்சை மாவட்டத்தில் செலவழிப்பதற்காக. குறிப்பிட்ட அளவில்தான் செலவழிக்கமுடியும் என்று சொல்லிவிட்டதால் உப்பனாறு போன்ற வடிகால்களைச் சரிசெய்வதற்கு வழியில்லை என்று சொல்லி அதனால் ஒவ்வொரு ஆண்டிலும் 150 வேலி நிலத்திற்கு மேலாக பாதிக்கப்பட்டு அறுவடையெல்லாம் பாதிக்கப்படுகின்ற அளவிலே இருப்பதனாலே தஞ்சை மாவட்டத்திற்கு இதற்காக அதிகமாகத் தொகை கொடுப்பதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இருக்கிற நிதி வசதியைப் பொறுத்து தஞ்சை மாவட்டத்தினுடைய இப்படிப்பட்ட குறைகளைத் தீர்த்து வைக்க அரசு தயங்காது.

**திரு. அ. மாரிமுத்து :** கிராமப்புறங்களில் பல கிராமங்களில் "ஏ" கிளாஸ், "பி" கிளாஸ் என்று பிரித்து ஒன்றும் நம்பர், இரண்டாம் நம்பர் என்று இருக்கக்கூடிய வடிகால்கள் எல்லாம் பஞ்சாயத்துக் குடிமராமத்து மேற்பார்வையில் வராது என்று சொல்கிறார்கள். பி.டபிள்யூ.டி. டிபார்ட்மெண்டிலும் அதைச் சரிசெய்ய தயங்குகிறார்கள். இதனால் தஞ்சை மாவட்டம் பெரிதும் பாதிக்கப்படுவதால் அது சம்பந்தமாக அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நான் ஏற்கனவே சொன்னேன். 25 சதவீதத்தை ஊராட்சி மன்றம் ஏற்றுக்கொள்ள ஒப்புதல் அளித்தால் 75 சதவீதம் அரசு ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறது. அதற்கு மாண்புமிகு உறுப்பினரைப் போன்றவர்கள் ஊராட்சி மன்றங்களை அணுகி 25 சதவீதம் அவர்கள் ஏற்றுக்கொள்வதற்கு முயற்சிகளைச் செய்வார்களானால் நல்லது.

**மாணபுமிகு பேரவைத்தலைவர் :** திரு. தனுஷ்கோடி அவர்கள் தஞ்சை மாவட்டத்தில் வாய்க்கால்களில் நாணல் அகற்றும் வேலையைப் பற்றிய கேள்வியைக் கேட்பார்கள்.

**திரு. பி.எஸ். தனுஷ்கோடி :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறும்பொழுது சர்க்கார் 75 சதவீதம், ஊராட்சி மன்றம் 25 சதவீதமும் ஏற்றுக்கொண்டால் வேலைநடைபெறும் என்று சொன்னார்கள். அந்த வாய்க்கால்கள் ஓடுவது ஊராட்சி மன்ற சம்பந்தப்பட்டவையா அல்லது டிபார்ட்மெண்ட சம்பந்தப்பட்டவையா? அல்லது அதற்கு வேண்டிய தொகையை ஊராட்சி ஒன்றிப்பு ஏற்றுக்கொள்ளவேண்டுமா? குடிமராமத்துச் செய்யக்கூடிய நேரத்தில் சர்வே நடத்தாமலே இருப்பதால் வடிகால்கள் தூர்ந்து போய் இருக்கின்றன. தனியார் வாய்க்கால்கரைகளை அவற்றை ஆக்கிரமித்துக்கொள்கிறார்கள். ஆகவே உடனடியாக அவற்றை சர்வே செய்து கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமோ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** - வடிகால்கள் வெட்டுவதற்கு அவ்வப்பொழுது வேண்டிய முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. சர்வே முதலியவைவையும் செய்யப்படுகின்றன. ஊராட்சி மன்றத்தின் குடிமராமத்தில் அவை இருப்பவை அல்ல. 25 சதவீதம் ஊராட்சி மன்றம் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று சொன்னேன்.

**திரு. சா. மெய்யப்பன் :** சார், அகற்றிய நாணல் தட்டைகளை பாய்கள் பின்னுவதற்கும், தட்டிகள் பின்னுவதற்கும் உபயோகப்படுத்திக்கொண்டு அதன் மூலம் வருமானம் சம்பாதிப்பதற்கு அரசு முயற்சிக்கிறதா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நாணல் அகற்றப்படுவதல்ல. அகற்றப்படுவது ஆகாசத் தாமரை போன்றவைதான், நாணல் அல்ல.

### நத்தம்-செந்துறைச் சாலையில் பாலங்கள் கட்டுதல்.

* 193 **வினா.—திரு. பெ. மலைச்சாமி :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

நத்தம்-செந்துறைச்சாலையில் உள்ள, விரிச்சாலாறு, பாலாறு, திருமணி முத்தாறு (செந்துறைக்கு அண்மையில் உள்ளது) ஆகியவற்றின் மீது பாலம் கட்டுவதற்கு மதிப்பீடுகள் தயாரிக்கப் பெற்றும் இதுநாள் வரை வேலைகள் தொடங்காததற்கான காரணங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நத்தம்-செந்துறைசாலையில் பாலாறு, மணிமுத்தாற்றின் குறுக்கே பாலம் அமைக்கும் வேலை மட்டுமே 1968–69-ம் ஆண்டில் மேற்கொள்ளப்படும். நிதிக்குறைவின் காரணமாக விரிச்சலாற்றின் குறுக்கே பாலம் அமைக்கும் வேலையை மேற்கொள்ளுவதற்கான செயற்குறிப்பு எதுவும் தற்போதில்லை.

**திரு. கொளத்தூர் கோதண்டம் :** தலைவர் அவர்களே, 1967–68-ம் ஆண்டில் ஒப்புதல் அளிக்கப்பட்ட பால வேலைகள் என்ன என்ன ? அவற்றின் மதிப்பீட்டுச் செலவுகள் என்ன என்ன ? 1968–69-ல் ஒப்புதல் அளிக்கப்பட இருக்கிற பால வேலைகள் என்ன என்ன ? அதற்காக ஒதுக்கப்பட இருக்கிற பணம் எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** 1967–68-ல் ஒப்புதல் அளிக்கப்பட்ட பால வேலைகள் கீழ்வருவன :

1. தென் ஆற்காடு மாவட்டத்தில் சூணம்பெட் சாலை. இதற்கு ஒதுக்கப்பட்ட பணம் 2·12 லட்ச ரூபாய்.

2. தென் ஆற்காடு மாவட்டத்தில் சூணம்பெட் சாலையில் இன்னொரு பகுதி, ஒதுக்கப்பட்ட பணம் 3 லட்ச ரூபாய்.

3. கோவை மாவட்டத்தில் அந்தியூர்-அம்மாபெட் சாலை. ஒதுக்கப்பட்ட பணம் 2·60 லட்ச ரூபாய்.

4. கோவை மாவட்டத்தில் திருப்பூர் நகர எல்லைக்குள் உடுமலை—திருப்பூர் சாலை. ஒதுக்கப்பட்ட பணம் 5·75 லட்ச ரூபாய்.

5. தஞ்சை மாவட்டத்தில் ஆலங்குடி—தலைஞாயர் சாலை. ஒதுக்கப்பட்ட பணம் 3 லட்ச ரூபாய்,

ஆக மொத்தம் 16·47 லட்ச ரூபாய் 1967–68-ல் செலவழிக்கப்பட்டிருக்கிறது.

1968–69-ல் ஒப்புதல் அளிக்கப்பட இருக்கும் பால வேலைகள் ஆறு அவை கீழ்வருமாறு :—

1. தர்மபுரி மாவட்டத்தில் ஒசூர் தல்லி சாலை, இதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிற பணம் 0·30 லட்ச ரூபாய்.

2. தென் ஆற்காடு மாவட்டத்தில் கடலூர் டிவிஷனில் குள்ளஞ்சாவடி—காட்டு கூடலூர் சாலை ஒதுக்கப்பட்டிருக்கிற பணம் 1·50 லட்ச ரூபாய்.





3. தென் ஆற்காடு மாவட்டத்தில் விழுப்புரம் டிவிஷனில் பாப்பனப்பட்டி—வழுதூர் சாலை. ஒதுக்கப்பட்டிருக்கிற பணம் 12·00 லட்ச ரூபாய்.

4. தஞ்சை மாவட்டத்தில் முத்துப்பேட்டை—மீமிசல் சாலை. ஒதுக்கப்படுகிற பணம் 10·00 லட்ச ரூபாய்.

5. மதுரை மாவட்டத்தில் நத்தம்—செந்துறை சாலை, ஒதுக்கப்படுகிற பணம் 1·50 லட்ச ரூபாய்.

6. மதுரை மாவட்டத்தில் நத்தம்—செந்துறை சாலை. ஒதுக்கப்பட்டிருக்கிற பணம் 1·00 லட்ச ரூபாய்.

ஆக மொத்தம் இந்த ஆறு வேலைகளுக்காக 1968–69-ல் ஒப்புதல் அளிக்க இருக்கின்ற மொத்த ஒதுக்கீடு ரூ. 26·30 லட்சம்.

### மாவு அரைவு ஆலைகள்

*194 **வினா.—திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு உணவு வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டத்தில் (Roller Flour Mills) மாவு மில் ஒன்று ஆரம்பிக்கும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) இத்தகைய மில்கள் நமது ராஜ்யத்தில் எந்தெந்த மாவட்டங்களில் இப்போது இயங்கி வருகின்றன?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :**

(அ) இல்லை.

(இ) சென்னை நகரம், கோயம்புத்தூர், சேலம், மதுரை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மாவட்டங்கள்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், இப்பொழுதே போதுமான அளவுக்கு மாவு கிடைக்கவில்லை என்ற காரணத்தினால் அடிக்கடி ரொட்டிக் கடைகளும், ஹோட்டல்களும் கதவடைப்பு செய்யக்கூடிய நிலைமை இருந்து வருகிறது. போதுமான அளவுக்கு இதில் உற்பத்தியைச் செய்யக் கூடிய அளவுக்கு, அது எந்த மாவட்டத்திலே இருந்தாலும் சரி, இது போன்ற மாவு ஆலைகளை மேலும் ஏற்படுத்த அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மாவு ஆலைகளுக்கு உரிமம் வழங்குகின்ற உரிமை மத்திய அரசிடத்திலே இருக்கிறது. சமீபத்திலே இங்கிருந்து போகின்ற விண்ணப்பங்கள் எல்லாம் நிராகரிக்கப்படுகின்றன. தமிழகத்தில் மேலும் நான்கு மாவு ஆலைகள் வேண்டுமென்று அதற்காக நியமிக்கப்பட்ட கமிட்டியிலே சொல்லப்பட்டு செங்கற்பட்டு, தூத்துக்குடி, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் தொழிலாளர்கள் அதிகமாக இருக்கிற காரணத்தினாலே அவற்றிற்கு அனுமதி வழங்க வேண்டுமென்று மத்திய அரசிடம் வற்புறுத்தப்பட்டிருக்கிறது.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** தலைவர் அவர்களே, சென்னையில் இப்பொழுது மாவு கிடைக்கவில்லை. ஆரம்பிக்கப்பட்டிருக்கிற ஆலைகளில் எவ்வளவு மாவு உற்பத்தியாகிறது ? தமிழ்நாட்டுக்கு அது போதுமா ? போதாது என்றால் மத்திய சர்க்காரிடம் வற்புறுத்த என் தயக்கம் காட்டுகிறார்கள் ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இந்த மாநிலத்தில் போதிய மாவு ஆலைகள் வேண்டுமென்று மத்திய அரசிடம் வற்புறுத்தி இருக்கிறோம். ஆலைகள் வந்த பிறகுதான் எவ்வளவு உற்பத்தியாகும் என்று சொல்லமுடியும்.

மு. ப. 9-30 THIRU K. VINAYAKAM: Sir, was there not any need felt for opening such flour mills in North Arcot? Also, was there any request made by anybody in that regard? Also, will the Government start at least their own enterprises and open a mill of that kind so as to cater to the needs of bakers, etc.?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** திரு. வி. ஆர். பட்டாபிராமன் வேலூரைச் சேர்ந்தவர். இந்தமாதிரி அனுமதி வேண்டுமென்று விண்ணப்பம் செய்திருந்தார்கள். அதை மத்திய அரசு நிராகரித்து விட்டது. அவர்கள் கிரவுண்ட்ஸ் எதும் சொல்லவில்லை. தேவை இல்லையென்று நிராகரித்து விட்டார்கள். நான்காவது திட்டத்தின் கீழ், ஏராளமான பேர்கள் கோதுமையைச் சாப்பிடுவது, உபயோகிப்பது பல்வேறு மாநிலங்களில் அதிகரித்து இருப்பதால் ஏற்கெனவே இருக்கிற மில்களை விஸ்தரிப்பதற்கும் புதிதாக ஏற்படுத்துவதற்கும் சிபார்சுகள் செய்வதற்கு ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கமிட்டியில் நம் மாநிலத்திற்கு இன்னும் புதிதாக ஃப்ளவர் மில்கள் ஏற்படவேண்டுமென்று அதற்கான உரிமங்கள் வழங்க ஒத்தாசை வேண்டுமென்று இந்த அரசு வற்புறுத்தியிருக்கிறது.

**திரு. கே. போஜன்:** இம்மாதிரியுள்ள மாவு மில்களுக்கு அரைப்பதற்குக் கொடுக்கப்படும் கோதுமை நம் மாநிலத்திற்கு ஒதுக்கப்பட்ட கோதுமையிலிருந்து கொடுக்கப்படுகிறதா? அல்லது மத்திய அரசு நேரிடையாக மில்களுக்கு ஒதுக்குகிறதா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** நம் ஆலோசனையோடுதான் இதற்குக் கொடுக்கப்படுகிற அளவில் இந்த மில்களுக்கு ஒதுக்குகிறார்கள். ஏற்கெனவே இருக்கிற மில்களில் மூன்றில் ஒரு பங்குதான் வேலை நடக்கிறது. அவற்றிற்கு உதவி செய்வதற்குக் கூட கோதுமை அளவை நாம் வற்புறுத்திப் பெற வேண்டியிருக்கிறது.

**திரு. மு. சின்னசாமி:** தமிழக அரசு அரிசிக்கு மானியம் வழங்குவது போல் மத்திய அரசு கோதுமைக்கு மானியம் வழங்கியதா? ஆம் எனில் இந்தியா பூராவும் மொத்தத் தொகை எவ்வளவு? அதில் தமிழகத்துக்கு கிடைத்த ஸப்ஸிடி எவ்வளவு? தற்சமயம் மானியம் நிறுத்தப்பட்டதால் கோதுமையின் விலை ஏறியுள்ளதா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** இவர்கள் கூறுவது போல் மத்திய அரசில் இருந்து ஸப்ஸிடி, இங்கு போட்ட அரிசித் திட்டம்மாதிரி, கோதுமைக்கு டன் ஒன்றுக்கு 120 ரூபாய் மானியம் கொடுத்து வந்தார்கள். 550 ரூபாய் டன் என்று பெற்றுக்கொண்டிருந்தோம். இப்போது அது 670 ரூபாயாக விலை ஏறியிருக்கிறது. 1968-ம் ஆண்டு ஜனவரி மாதம் 1-ம் தேதி முதல் நம் மாநிலத்திற்கு 550 ரூபாயாக கொடுத்துக்கொண்டிருந்த கோதுமையை 670 ரூபாய்க்கு இந்திய சர்க்கார் கொடுக்கிறார்கள். 120 ரூபாய் வரையில் மானியம் கொடுக்கப்பட்டு வந்தது நிறுத்தப்பட்டதால் கோதுமையின் விலை 1-ம் தேதி முதல் ரூபாய் 66 என்று விற்றது ரூபாய் 81-க்கு விற்க வேண்டியிருக்கிறது. இவ்வளவு நாட்கள் இந்த மாநிலத்திற்கு இந்த ஸப்ஸிடியினால் பெரிய பயன் கிடைத்தது இல்லை. ஆனால் இந்தியா முழுவதும் இந்திய சர்க்கார் 1-ம் தேதி வரையில் ஏறத்தாழ 120 கோடி வரை சப்ஸிடி கொடுத்து வந்தார்கள் கோதுமைக்காக. இதில் நம் மாநிலம் சற்றேறக்குறைய பெற்ற பலன் 1 கோடியிலிருந்து $1\frac{1}{2}$ கோடியென்று குத்து மதிப்பாக மதிப்பிடலாம். இந்தியா முழுவதும் கொடுத்துவந்த 120 கோடி சப்ஸிடியை இப்போது நிறுத்திவிட்டார்கள். இதனால் நம் மாநிலத்திற்குக் கிடைத்து வந்த பலன் ஒரு கோடி ரூபாய் தான்.

**திரு. ந. வீராசாமி:** தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் பதில் சொல்கிற நேரத்தில், எந்தெந்தப் பகுதியில் தொழிலாளர்கள் அதிகமாக இருக்கிறார்களோ அத்தகைய பகுதிகளில் இப்படிப்பட்ட மாவு மில்களைத் திறக்க அனுமதி கோரியிருப்பதாகச் சொன்னார்கள். ஒரு மாவு மில் ஆரம்பிப்பதற்கு எவ்வளவு செலவாகும் என்று இப்போது ஏதேனும் திட்டம் இருக்கிறதா? அப்படிப்பட்ட மாவு மில்களில் இவ்வளவு தொழிலாளர்களுக்கு குறைந்தபட்சமாக வேலை தரப்படும் என்ற நோக்கமாவது இருக்கிறதா?



**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** அதுபற்றிய விவரங்கள் எதுவும் என்னிடம் இல்லை.

**திரு. டி. மார்டின்:** தமிழக அரசு பொதுத் துறையில் மாவு மில்களை நிறுவுவதற்காக மத்திய அரசிடம் மனுக்கள் ஏதேனும் செய்ததுண்டா? அது எந்தெந்த இடங்களில் என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** அப்படிப்பட்ட மனுக்கள் செய்ததாகத் தகவல் இல்லை.

THIRU K. VINAYAKAM: Sir, whereas the Central Government has stopped the entire subsidy given to States with regard to foodgrains especially wheat, I understand that they continue to give subsidy to the Kashmir State. So, will the Government of Madras take up this matter with the Centre and urge upon them that there should be no discrimination shown between the States as far as the subsidy is concerned Also, will this Government continue to agitate in regard to this matter and get the subsidy which is now stopped?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** இந்த அரசு, முதலமைச்சர்கள் மாநாட்டில் நம்முடைய முதலமைச்சர் சார்பில் இந்த வீட் சப்சிடியை மற்ற மாநிலங்களுக்கும் நீங்கள் கொடுக்கவேண்டும். இதனால் ஏழைகள் தான் பலன் அடைகிறார்கள் என்பதாக அவர்கள் சார்பிலும் இந்த அரசு சார்பிலும் நான் வற்புறுத்தினேன். அதற்குப் பிறகும் கூட அவர்கள் இதை நிறுத்தியிருக்கிறார்கள். காஷ்மீர் சம்பந்தமாக அரிசிக்குக் கூட அங்கே சப்சிடி கொடுக்கிறார்கள். அதைக் கேட்டால் தனியான பிரத்தியேகமான நிலைமை அங்கு இருப்பதாகச் சொல்கிறார்கள். கோதுமைக்கு சப்சிடி கொடுக்க வேண்டும் என்பது இந்த அரசின் கருத்தும் நம் முதல் அமைச்சர் அவர்களின் கருத்துமாகும்.

**திரு என். மருதாசலம்:** சார், மாவு மில்களை நிறுவுவதற்கு மத்திய அரசிடம் விண்ணப்பித்துள்ளதாகச் சொன்னார்கள். இந்த மில்கள் வந்த பிறகு தனியார்த் துறையில் விடப்படுமா அல்லது சர்க்காரே நடத்த உத்தேசம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** இப்போது இருக்கிற தனியார்த் துறையைக் காப்பாற்ற நாம் பிரம்மப் பிரயத்தனம் செய்ய வேண்டியிருக்கிறது. ஆகவே, இப்போது பொதுத் துறையைப்பற்றி யோசிக்கவேண்டிய சூழ்நிலை எழவில்லை.

DR. H. V. HANDE: Sir, with regard to the mills which are already in existence, there has been a long-standing complaint that rava, atta and suji, even after they are produced, are actually in the godown itself and consequently they are getting spoiled. Also, the responsibility of its collection and distribution is not with the mills but with the Government. So, in the absence of co-ordination between the Civil Supplies Department and the mills, these things are getting spoiled. Therefore, will the Government take the necessary steps expeditiously and see that the stocks are transferred to the consumers' point quickly and distributed properly?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அவர்கள் குறிப்பிட்டது போல் இவைகளை சரியாக அமைப்பதற்கான முயற்சிகளை உணவு வழங்கு துறை எடுத்துக்கொண்டு வருகிறது.

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, நான்கு ஆலைகளுக்காக மத்திய அரசிடம் ஒப்புதல் பெறக் கோரியுள்ளதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால் இருக்கின்ற ஆலைகளில் மூன்றில் ஒரு பங்குக்குத் தான் கோதுமை இருப்பதாகச் சொன்னார்கள். அதிகம் ஆலைகள் இந்திய சர்க்கார் தராததற்குக் காரணம் கோதுமை மேலும் அதிகம் கொடுக்க வேண்டுமென்பதாலா ? அல்லது வேறு காரணம் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** நான்கு ஆலைகள் தமிழக அரசு இங்கு நிறுவப்படவேண்டுமென்று தான் சிபார்சு செய்தார்களே தவிர நான்கு ஆலைகள் தமிழக அரசுக்கு வேண்டுமென்று விண்ணப்பம் செய்யவில்லை. இப்போது கோதுமை மூன்றில் ஒரு பங்கு தான் கொடுக்கிறார்கள். கோதுமை கொடுக்கமுடியாததுதான் காரணமா என்று கேட்டார்கள். அதனால்தான் வழங்கப்படவில்லை என்று சொல்வது சரியானது அல்ல. இன்னும் அதை நாம் வற்புறுத்தினால் வெற்றி பெற வாய்ப்புகள் இருப்பதாக இந்த அரசு கருதுகிறது.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** இப்போது இயங்கி வரக்கூடிய மில்களில் சராசரி ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு மைதா, ஸுஜி, ஆட்டா உற்பத்தி ஆகிறது ? அதில் நமது ராஜ்யத்துக்கு எந்த அளவிற்கு ஒதுக்கப்படுகிறது ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அதுபற்றிய முழு விவரம் என்னிடம் இல்லை. பொதுவாக போன ஆண்டில் எவ்வளவு கொடுத்தார்களோ அதில் மூன்றில் ஒரு பகுதி தான் இந்த ஆண்டு கொடுக்கப்படுகிறது, கோதுமை, கோதுமைப் பொருள்களாக. 1966–67-ல் இந்த மாநிலத்துக்கு எவ்வளவு ஒதுக்கப்பட்டதோ அந்த மொத்தத்தில் மூன்றில் ஒரு பங்கு தான் இந்த அரசு பெற முடிந்தது.

### ஊராட்சிகளில் நியாய விலைக் கடைகள்

195. **வினா.—திரு பெ. மலைச்சாமி :** மாண்புமிகு உணவு–வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

ஒவ்வொரு ஊராட்சிக்கும் அரசினரின் நியாய விலைக்கடை திறக்கும் செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இல்லை.

**திரு. பெ. மலைச்சாமி :** மேலூர் வட்டம் இந்த ஆண்டு அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, மேலூர் வட்டத்தைப் பொறுத்தவரையிலாவது நியாய விலைக் கடைகளைத் திறக்க அரசு முன் வருமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மேலூர் வட்டம் என்பது மட்டுமல்ல ; நியாய விலைக் கடைகள் என்று சொல்லும்போது அதன் பின்னாலேயே ஒரு தத்துவம் இருக்கிறது. தமிழ்நாட்டில் 1,26,00,000 மக்கள் நியாய விலைக் கடைகளின் பலனை அனுபவிக்கிறார்கள். பற்றாக் குறை மாவட்டங்கள், அல்லது பஞ்சப் பிரதேசமாக இருக்கும் மாவட்டங்களில் சாதாரண வியாபாரிகள், கள்ள மார்க்கெட்காரர்கள், பதுக்கல்காரர்கள் விலையை அதிகமாக ஏற்றிவிட்டு அவர்களுடைய தயவு தாட்சண்யத்தில் எல்லோரையும் ஒப்படைத்துவிடக்கூடாது என்பதற்காகத் தான் நியாய விலைக் கடைகள் தமிழ்நாட்டில் திறக்கப்பட்டு 1,26,00,000 மக்கள் உணவு தானியங்களையும், மற்றப் பொருட்களையும் நியாயமான விலையில் பெறுவதற்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது.



**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** இந்த வருஷம் பருவ மழை தவறிவிட்டாலும் அதிகமான விளைச்சல் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே, பற்றாக்குறை மாவட்டங்களாக இருக்கும் பகுதிகளில் கிளாஸ் 1, கிளாஸ் 2 பஞ்சாயத்துக்கள் என்ற வித்தியாசம் இல்லாமல் நியாய விலைக் கடைகள் மூலம் உணவுத் தானியங்களை வழங்க அரசு முன் வருமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இந்த மாகாணத்தின் உணவு நிலையை எடுத்துக்கொண்டால் செங்கற்பட்டு மாவட்டம், வட ஆர்க்காடு மாவட்டம், தென்னார்க்காடு மாவட்டம், திருச்சிமாவட்டம், தஞ்சை மாவட்டம் ஆகியவை உபரி மாவட்டங்கள். இங்கெல்லாம் மிக அதிகமாக விலை ஏறுவதற்கு நியாயம் இல்லை. இங்கெல்லாம் நியாய விலைக் கடைகளோ, குடும்பக் கார்டு திட்டமோ அமலாகவில்லை. அதற்கு அடுத்தபடியாக, மதுரை, இராமநாதபுரம், கன்னியாகுமரி, சேலம், தருமபுரி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்கள் ஓரளவு பற்றாக்குறை மாவட்டங்கள் என்ற பட்டியலில் வரும். ஆனால் சென்னை நகரமும், நீலகிரி மாவட்டமும் ஹைலி டெஃபிசிட் என்ற பட்டியலின் கீழ் வருகின்றன. நீலகிரியில் ஐந்து லட்சம் மக்கள் குழந்தைகளும் சேர்த்து இருக்கிறார்கள். அவர்கள் அனைவருக்கும் குடும்பக் கார்டு கொடுக்கப்பட்டிருக்கிறது. சென்னை நகரிலும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதே மாதிரி கன்னியாகுமரி மாவட்டத்திலும் ஏறக்குறைய இருக்கின்றது. ஆறு லட்சம் மக்களுக்கும் குடும்பக் கார்டு கொடுக்கப்பட்டிருக்கிறது. பற்றாக்குறை மாவட்டங்கள், உபரி மாவட்டங்கள் என்ற வித்தியாசத்தைப் பார்க்க வேண்டும்.

**திரு. ஏ. முனியாண்டி :** நிலக்கடலை போன்ற புஞ்சைப் பயிர்களால் பலன் பெறக்கூடிய தொகுதி என்னுடையது. அங்கு பருவ மழை இன்மையால் புஞ்சைப் பயிர்கள் கூடப் பாதிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, அங்கு நியாய விலைக் கடைகளைத் திறக்க அரசு முன் வருமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** எந்தப் பகுதியிலாவது அவசரமான, நெருக்கடியான நிலைமை ஏற்பட்டால் நியாய விலைக் கடைகளைத் திறப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கலெக்டர் அவர்கள் கட்டளை இடப்பட்டிருக்கிறார். அவர்கள் அவசியத்தை உணர்ந்து, நிரந்தரமாக இல்லாவிட்டாலும் தற்காலிகமாகவாவது திறப்பதற்கு அவசியம் இருக்கிறதா என்று பார்த்து நியாய விலைக் கடைகளைத் திறப்பதற்கு வழி செய்வார்கள்.

**திரு. சோ. அழகர்சாமி :** 'நெல்லை மாவட்டத்தில் கோயில்பட்டி தாலுகாவின் பெரும்பகுதி பஞ்சப் பிரதேசமாக இருக்கிறது. தொடர்ந்து இரண்டு மூன்று வருஷங்களாகப் பருவ மழை இல்லை. முன்பு எல்லாக் கிராமங்களிலும் நியாய விலைக் கடைகள் திறக்கப்பட்டிருந்தன. தேர்தலுக்கு முன்னால் அவை மூடப்பட்டன. சங்கரன்கோவில், கோவில்பட்டி தாலூக்காக்களில் பருவ மழை தவறியதால் அந்தப் பகுதியிலுள்ள கிராமங்களில் நியாய விலைக் கடைகளைத் திறக்க அரசு முன் வருமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** கனம் உறுப்பினர் அவர்கள் சொல்லுவது முற்றிலும் சரியானது அல்ல. தேர்தலுக்குப் பிறகு மூடப்பட்டது என்று சொன்னது சரியல்ல. கலெக்டர் அவர்கள் அந்தப் பகுதிகளில் உள்ள நிலைமைகளைப்பற்றி ஆராய்ந்து சில இடங்களில் குடும்பக் கார்டு முறை கொண்டுவரப்பட்டிருக்கிறது. இன்னும் அவசியமானால் நிலைமையைப் பார்த்து மேலும் குடும்பக் கார்டுகளை வழங்குவதற்கு அரசு தயங்காது. கோயில்பட்டி தாலூகாவைப் பொறுத்தவரை பயிர் வகைகள் மற்ற தாலூகாக்களை விட, சங்கரன்கோவில், நான்குனேரி பகுதிகளை விட நன்றாக இருக்கிறது என்பது கனம் உறுப்பினர் அவர்களுக்குத் நன்றாகத் தெரியும்.

(திரு. அழகர்சாமி எழுந்தார்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உங்கள் வினாவைத் திருத்திக் கொள்கிறீர்களா ?

**திரு. சோ. அழகர்சாமி :** தேர்தலுக்கு முன்னால் நிறுத்தப்பட்டது என்று தான் சொன்னேன். எல்லாக் கிராமங்களிலும் போட்டு வந்ததை தேர்தலுக்கு ஒரு மாதத்திற்கு முன்னால் நிறுத்தப்பட்டது. அந்தப் பகுதியில் 110 கிராமங்களுக்கு தற்போது நியாய விலையில் போடப்படுகிறது. மீதி 150 கிராமங்களுக்குப் போடப்படவில்லை. ஆகவே, ஒரு கிராமத்தில் 1½ ரூபாய் விலையிலும், இன்னொரு கிராமத்தில் 3 ரூபாய் விலையிலும் அரிசி விற்கக்கூடிய நிலை இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** முந்திய கேள்வியைத் திருத்திக் கொள்வதற்குத்தான் அனுமதி கொடுத்தேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** எந்தக் கிராமத்திற்கும் போடவில்லை என்று சொன்னதற்காகச் சொன்னேன். இப்போது அவர்களே ஏற்றுக்கொண்டார்கள் சில கிராமங்களில் போடுவதாக. எந்தெந்தப் பகுதியில் ரொம்ப அவசியம் என்ற இலக்கணப்படி, கொள்முதல் செய்கின்ற அளவையும் கணக்கில் கொண்டு முடிவு செய்யப்படும்.

**திரு. ரா. ராமச்சந்திர துரை :** பதுக்கல்காரர்கள், கள்ளச் சந்தைக்காரர்கள் இருக்கும் இடங்களில் குடும்பக் கார்டு திட்டத்தையும், நியாய விலைக் கடைகளையும் ஏற்படுத்துவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அத்தகைய பதுக்கல்காரர்கள் பிடிக்கப்பட்டு எத்தனை பேர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தனிக் கேள்வி போட வேண்டும்.

**திரு. பி. துரைராஜ் :** திருநெல்வேலி மாவட்டத்தில் சங்கரன்கோயில் வட்டமானது மிகப் பின் தங்கிய வட்டம் என்று மத்திய சர்க்கார் குறிப்பிலேயே சேர்க்கப்பட்டிருக்கிறது. அப்பகுதியில் கடந்த காலத்தில் பருவ மழை தவறி விட்டதால் ஏற்பட்டுள்ள நிலைமையைக் கலெக்டர் அவர்களே நேரடியாக வந்து பார்த்துச் சென்றிருக்கிறார்கள். அப்பகுதியிலுள்ள மக்கள் அத்தனை பேருக்கும் ரேஷன் முறையில் உணவு தானியங்கள் வழங்க அரசு முன் வருமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** கனம் உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது.

**திரு. மு. ச. சிவசாமி :** நெல்லை மாவட்டத்தில் நான்குனேரி, திருச்செந்தூர், ஸ்ரீவைகுண்டம், கோவில்பட்டி வட்டங்களைச் சேர்ந்த கடற்கரைப் பிரதேசங்களில் நஞ்சையோ, புஞ்சையோ இல்லாமல் வெறும் மணல் பிரதேசமாக இருக்கிற காரணத்தால் அங்கு உணவு தானியங்கள் உற்பத்தி செய்யக்கூடிய நிலைமை இல்லை. ஆகவே, அந்தக் கடற்கரைப் பகுதிகள் அத்தனைக்கும் குடும்பக் கார்டு அமலுக்குக் கொண்டுவரப்படுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** கனம் உறுப்பினர் அவர்கள் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த உறுப்பினராவார்கள். திருநெல்வேலி மாவட்ட விவசாயிகள் கொள்முதலில் அவ்வளவு உற்சாகம் காட்டவில்லை. கடந்த ஆண்டில் கொள்முதல் செய்த அளவுக்கு இந்த ஆண்டு கொள்முதல் ஆவதற்கு நியாயம் இருந்தும் கூட, இந்த ஆண்டு அந்த அளவு கொள்முதல் ஆகவில்லை. இதிலே, எல்லாச் சட்ட மன்ற உறுப்பினர்களும் ஈடுபாடு காட்டி கொள்முதலை அதிகரித்தால் இந்த மாதிரி குடும்பக் கார்டுகள் கொடுப்பது பற்றி யோசிக்க வாய்ப்பு ஏற்படும்.

**திரு. எம். பூபதி :** கோவையை ஒட்டி இருக்கிற பல்லடம், அவனாசி, போன்ற பகுதிகளில் மழை இல்லாமல் மக்கள் பெரிய அளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற நிலைமை அரசுக்குத் தெரியும். பஞ்சப் பிரதேசமாக இருக்கக்கூடிய அந்தப்பகுதியில் நியாய விலைக் கடைகளைத் திறக்கவும், கால்நடைகள் தீவனம் இல்லாமல் இறந்து விடுவதைத் தடுத்து பாதுகாப்பதற்கும் நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுமா ?



**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அந்த நிலைமை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதியில் எந்தெந்த இடங்களில் நியாய விலைக் கடைகளும், மற்ற உதவிகளும் அளிக்கப்பட வேண்டுமென்ற முறையில் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருப்பது கனம் உறுப்பினர் அவர்களுக்கே கூட நன்றாகத் தெரியும். தண்ணீர்ப் பற்றாக் குறையைப் போக்க கிணறுகள் வெட்டிக் கொடுக்கக்கூடிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. அங்கு துரிதமாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதை அவர்களே நன்றாக அறிவார்கள்.

**THIRU K. VINAYAKAM :** Whereas it has been stated by this Government that they are sincere about solving the food problem in this State and whereas it has been the intention of the Government to extend the one-rupee-a-measure-rice scheme all over the State even though it is not possible to extend it at the present juncture, in some of the surplus districts rice is not available at a reasonable price. Will the Government reconsider the question and open fair price shops in the Chingleput district ? Even though it is supposed to be a surplus district, rice is sold there at Rs. 2·50 and 3 per measure, especially in Tiruttani taluk.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** காங்கிரசினுடைய பெருந்தலைவர் அவர்கள் ஸ்ரீவைகுண்டத்தில் நேற்றைய முன்தினம் பேசுகிற போது "படியரிசித் திட்டத்தை விட்டு விடுங்கள்" என்று பேசியிருப்பதைக் கனம் அங்கத்தினர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

**THIRU K. VINAYAKAM :** On a point of order, Sir, It is K. Vinayakam who puts the question. He is not concerned with somebody talking something. I want a categorical answer from the Minister whether the Government is in a position to extend the one-rupee-a-measure scheme or at least open fair price shops which will go to certain extent to control the rise in price ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்** அவர்கள் எழுந்தார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் தீர்ப்புச் சொன்ன பிறகு சொல்லுங்கள். வினாக்களைக் கேட்கும்போது அமைச்சர்களுக்குப் பதில் சொல்லமால் இருக்கவும் உரிமை உண்டு. ஒரு பொருளைப் பற்றிக் கேட்க மற்றொரு பொருளைப் பற்றி பதில் சொல்லவும் உரிமை உண்டு. மழுப்பலாகப் பதில் சொல்லவும் உரிமை இருக்கிறது.

**THE HON. THIRU C. N. ANNADURAI :** Sir, the hon. Member should, first of all, correct himself with regard to the question itself. He has raised the question, whether it is the intention of the Government to give one-rupee-measure-rice throughout the State. It has never been the policy of this Government to give it to the entire State. Parts of the State are divided into, as the Minister for Food has already stated, into deficit regions and surplus regions. It would not be admissible to give such cheap rice to the surplus districts. In other places the scheme will be extended, qualified by the availability of foodgrains through procurement and also the financial implications involved in that. That has been the policy of this Government and that has been explained time and again. But anyhow if hon. Members are interested in raising that question for the sake of party propaganda, they are at liberty to do so.

## பழ உற்பத்தித் திட்டங்கள்.

*196—வினா. திரு கொளத்தூர் கோதண்டம் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழ உற்பத்தியைப் பெருக்குவதற்காக புதிய திட்டங்கள் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) பழச் செடிகளுக்கும், தென்னைக்கும் மானியம் வழங்கும் திட்டம் தற்போது நடைமுறையிலுள்ளதா ?

**மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி :**

(அ) இல்லை.

(இ) ஆம்.

**திரு. கொளத்தூர் கோதண்டம் :** இந்தச் செடிகளுக்கும் தென்னைகளுக்கும் கொடுக்கப்படும் மானியம் எந்த அளவில் கொடுக்கப்படுகிறது ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** செடிகளுக்கும் தென்னைகளுக்கும் ஏக்கர் ஒன்றுக்கு 300 ரூபாய் நீண்ட காலக் கடனாகக் கொடுக்கப்படுகிறது. இத்திட்டம் 1967-68-லும் தொடர்ந்து நிறைவேற்றப்படும்.

**திரு. மு. சண்முகம் :** திராட்சை உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு ஊக்கமளிக்கும் வகையில் 1967–68-ல் அரசாங்கம் கடன் உதவி செய்யும் உத்தேசமிருக்கிறதா ? அப்படியானால் எவ்வளவு ஏக்கர் சாகுபடிக்கு அந்த உதவி செய்யப்படும் ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** 1967–68-ல் இரண்டாயிரம் ஏக்கர் பரப்பில் திராட்சை விவசாயம் செய்ய திட்டமிடப்பட்டிருக்கிறது. ஏக்கருக்கு ரூ. 1,500 கொடுப்பது என்றும் ஒருவருக்கு ரூ. 6,000-க்கு மேற்படாத தொகை வழங்குவது என்றும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நேற்று நான்கு உறுப்பினர்கள் எழுதிக் கேட்டதால் இங்கு ஒரு விளக்கம் சொல்லுகிறேன். வினா–விடைக்கு ஒதுக்கப்படும் நேரம் முடிவடையும் தருணத்தில், இதுவரையில் இன்று துணை வினா கேட்காதவர்களுக்கு முதலிடம் கொடுக்க விரும்புகிறேன்.

**திரு. மா. பா. சாரதி :** பஞ்சாயத்துக்கள் மூலம் பழத் தோட்டங்களை விஸ்தரிக்க சர்க்கார் எவ்வளவு மானியம் வழங்கியிருக்கிறது ? எந்த விகிதத்தில் மானியம் வழங்கப்படுகிறது ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** தென்னம்பிள்ளை வளர்க்க 25 சத வீதமும், பழச்செடிகள் வளர்க்க 25 சத வீதமும் மானியமாகவும் அந்தத் தொகை 15 ரூபாய்க்கு மேற்படாத அளவிற்கு கொடுக்கப்படுகிறது.

**திரு. கரு. இராம. கரியமாணிக்கம் அம்பலம் :** இந்த ஐட்டங்களுக்காக கடன் கொடுக்கப்படுவது எந்த டிபார்ட்மெண்ட் மூலம் கொடுக்கப்படுகிறது ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** வேளாண்மைத் துறை மூலம்.

**திரு எம். எஸ். மணி :** பழ உற்பத்தியைப் பெருக்குவதற்கான புது திட்டத்தின் கீழ் இந்த ஆண்டு திருச்சி மாவட்டத்தில் அத்திட்டத்தைத் துவக்க அரசாங்கம் ஏதாவது பரிசீலனை செய்துள்ளதா ? அப்படியாயின் அது போன்று வாழைக்கும் கடன் கொடுக்கிற திட்டமும் இதில் அடங்கியிருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** திருச்சி மாவட்டத்தில் இரண்டாயிரம் ஏக்கர் பரப்பளவிலும், வட ஆர்க்காடு, செங்கல்பட்டு மாவட்டங்களில் 500 ஏக்கர் பரப்பளவிலும், வாழை வளர்ப்பு முனைப்புத் திட்டத்தை விரிவுபடுத்தும் திட்டமிருக்கிறது. 1967–68-ல் இரண்டாம் பகுதித் திட்டமாக எடுத்துக்கொள்ளப்பட்டு அண்மையில் ஆணையிடப்பட்டுள்ளது.



**திரு. ந. சோமசுந்தரம் :** முந்திய அரசாங்கம் பழத் தோட்டங்கள் அமைக்கவும், தென்னங்கன்றுகள் போடவும் பஞ்சாயத்துக்களுக்கு லட்சக்கணக்கான ரூபாய்கள் செலவழித்தும் பல இடங்களில் அதன் வடு கூடத் தெரியாமலிருக்கிறதென்பதை அரசு அறியுமா ? அதற்குப் பொறுப்பானவர்கள் மீது தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** அந்த இடங்கள் எங்கெங்கு இருக்கின்றன என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தால் அது பற்றி விரிவாக ஆராயலாம்.

**திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் :** அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது 2,000 ஏக்கரில் திராட்சை உற்பத்தி செய்ய கடன் கொடுப்பதாகச் சொன்னார்கள். அந்த இரண்டாயிரம் ஏக்கர் எந்த மாவட்டத்தில் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** ஏற்கெனவே அமலிலுள்ள பகுதிகளில் இத்திட்டம் அமலாக்கப்படுகிறது.

திம்மாபுரத்திலும் (தர்மபுரி மாவட்டம்), பெரியகுளத்திலும் (மதுரை மாவட்டம்), குன்னூரிலும் (நீலகிரி மாவட்டம்), குற்றாலத்திலும் (திருநெல்வேலி மாவட்டம்), கோடைக்கானலிலும் (மதுரை மாவட்டம்), ஆத்தூரிலும் (சேலம் மாவட்டம்), பூவணியிலும் (ராமநாதபுரம் மாவட்டம்), கூடப்பட்டிலும் (வட ஆர்க்காடு), மருங்குளத்திலும் (தஞ்சாவூர் மாவட்டம்) செயல்பட்டு வருகின்றன.

**திரு. இல. பலராமன் :** அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது பழச்செடி வளர்ப்பிற்காக ஏக்கருக்கு ரூ. 300 கடன் வழங்கப்படுகிறது என்று சொன்னார்கள். அது போதவில்லை என்று விவசாயிகளிடையே பரவலாக அதிருப்தி ஏற்பட்டிருப்பதால் அதை அரசாங்கம் ரூ. 500 என்றோ அதற்கு மேலோ உயர்த்த உத்தேசமுண்டா ? பழங்கள் ஒரு உணவுப் பொருளாக இருப்பதால் அதற்காக விவசாயப் பிரிவில் ஒரு ஆராய்ச்சிக் கூடம் ஏற்படுத்தி அவற்றுக்கு ஏற்படும் நோய்களைத் தடுக்கவும், இந்த விவசாயிகளுக்கு பழ உற்பத்தியைப் பெருக்குவதற்கான அறிவுரை வழங்கவும் உத்தேசமிருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** அங்கத்தினர் அவர்களுடைய எண்ணம் ரூ. 300 என்பது போதாது என்றிருக்கலாம். அது ஏற்கெனவே இருந்த அரசு கொடுத்து வந்த தொகைதான். தொடர்புத் திட்டமாக அது நிறைவேற்றப்பட்டு வருகிறது.

**திரு. அ. லெ. சுப்பிரமணியம் :** திருநெல்வேலியில் கடையம், தென்காசி, புளியங்குடி போன்ற இடங்களில் எலுமிச்சம்பழத் தோட்டங்கள் இருந்தன. அங்கு ஒரு நோய் வந்து அதில் 90 சத வீதம் அழிக்கப்பட்டு விட்டன. ஆஸ்ட்ரேலியாவிலிருந்து வந்த ஒரு நிபுணர் அதை முழுவதையும் அழித்து விட்டு மறுபடியும் போட்டால்தான் அது பலன் தரும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அதில் ஒரு தனி அக்கறை காட்டி அந்த எலுமிச்சம் பழத் தோட்டங்களை மீண்டும் போடுவதற்காக ஒரு தனித் திட்டத்தை அரசு வகுக்குமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** இந்த எலுமிச்சம்பழத் தோட்டம் விஷயமாக தனிக் கேள்வி போட்டால் என்ன செய்யலாம் என்பது பற்றி ஆலோசிக்கலாம்.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** எவ்வளவோ பஞ்சாயத்து யூனியன்கள் பழத் தோட்டங்கள் வைத்து அவை எந்த நிலைமையில் இருக்கின்றன என்பது சர்க்காருக்குத் தெரியும். ஆகவே பணத்தைப் பாழாக்காமல்

உருப்படியாக யார் செய்கிருர்களோ அப்படி தனிப்பட்டவர்களுக்கு உதவி கேட்டால் உதவி கொடுக்க அரசாங்கம் தயாராக இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** நான் ஆரம்பத்தில் சொன்னேன், தனிப்பட்டவர்களுக்கும் வழங்கி வருகிறது. திரு. சாரதி அவர்கள் கேட்ட கேள்வி பஞ்சாயத்துக்களுக்கு வழங்கப்படுகிறதா என்பதாகும். வழங்கப்படுகிறது என்றேன். பஞ்சாயத்து சார்பில் பழத்தோட்டங்கள் அமைத்து வெறும் போர்ட் மட்டும்தான் இருக்கிறது, பழத்தோட்டங்கள் இல்லாமல் காலியாக இருப்பதை நானும்நேரில் பார்த்திருக்கிறேன். அதைக் கவனித்து, தனிப்பட்டவர்களுக்கும் உபயோகப்பட வேண்டுமென்ற அடிப் படையில் இந்தக் கடன் வழங்கப்படுகிறது.

**திரு. கே. போஜன் :** குன்னூர் ஸிம்ஸ் பார்க்கிலுள்ள சர்க்கார் பழ உற்பத்தி நிலேயம் நன்கு நடக்கிறது. அதை விரிவுபடுத்தும் திட்டம் ஏதாவது உண்டா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** இந்த ஆண்டு ஆயிரம் ஏக்கர் கூட விஸ்தரிக்கிற எண்ணமுண்டு.

### இடுவாய் கிராம மக்களுக்கு வீட்டு வசதி

* 197 விஞ.—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு தாழ்த்தப்பட்டோர் நல, செய்தித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா.

(அ) திருப்பூர் தொகுதி, இடுவாய் கிராம மக்களிடம் இருந்து 1967-ம் வருஷம் மார்ச் மாதம் 17-ம் தேதியிட்டு தங்களுக்கு வீட்டு வசதி பற்றிய விண்ணப்பம் ஏதாகிலும் வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** (அ) இல்லே.

(இ) இடமில்லே.

முற் பகல் 10-00 **திரு. சு. துரைசாமி :** பேரவைத்தலேவர் அவர்களே, இடுவாய் கிராம மக்கள் அமைச்சரவர்களுக்கு ஒரு விண்ணப்பத்தை அனுப்பியதோடு சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் எனக்கும் நகலே அனுப்பியிருக்கிருர்கள். ஆகவே, அந்த விண்ணப்பம் வந்திருக்கும் என்று கருதுகிறேன். மாவட்ட நல அதிகாரி அவர்கள் அப்படிப் பட்ட விண்ணப்பம் வரவில்லே என்று என்னிடத்திலே சொன்ஞர்கள். மாவட்ட நல அதிகாரி அவர்களும், நானுமாக நேரடியாகவே சென்று அந்த இடுவாய் பகுதியைப் பார்த்திருக்கிறேம். எனவே விரைவிலே முடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலேவர் :** அமைச்சரவர்கள் விண்ணப்பம் வரவில்லே என்று சொல்கிருர்களே.

**திரு சு. துரைசாமி :** அமைச்சரவர்கள் வரவில்லே என்று சொன்ஞர்கள். தபாலிலே அனுப்பி, எனக்கும் சேர்த்து அனுப்பியிருக்கிருர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலேவர் :** அமைச்சரவர்கள் சொன்னதை இறுதியாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** எனக்கு வரவில்லே. சட்டமன்ற உறுப்பினருக்கு வந்தபொழுது அவராவது என்னிடத்திலே கூறியிருக்கலாம். ஆனல் தவறிவிட்டார். இனியாவது செய்வார் என்று எதிர்பார்க்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலேவர் :** திரு. ராமச்சந்திர துரை அவர்கள் இடுவாய் கிராமம் பற்றிய கேள்வி ஒன்றைக் கேட்பார்கள்.



**திரு. ரா. ராமச்சந்திரதுரை :** பொதுக் கேள்வி, சார்.

**மாண்புமிகு பேரவைத் தலேவர் :** பொதுக்கேள்விக்கு இடம் இல்லே என்று சொல்கிறேன். இதையொட்டித்தான் (துணை விஞ) இருக்க வேண்டும்.

**திரு. ரா. ராமச்சந்திரதுரை :** தலேவரவர்களே, முன்பிருந்த அரசாங்கம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீடு கட்டிக்கொள்ள ஒதுக்கிக் கொடுத்து வந்த பொருள் உதவி நிறுத்தப்பட்டிருப்பதை மீண்டும் இந்த அரசாங்கம் கொடுத்து உதவ முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலேவர் :** தாங்கள் விதி 38-ஐ எடுத்துப் பாருங்கள். நீங்கள் இடுவாய் கிராமத்தை ஒட்டிய விஞவாகக் கேட்டிருக்க வேண்டும். இப்பொழுது தாங்கள் கேட்டிருப்பது மூல விஞவை ஒட்டியதாக இல்லே.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** மூல விஞவிற்கு முற்றிலும் தவருனதாக துணே விஞ இருந்தாலும், கடந்த முறையிருந்த சர்க்கார் கொடுத்ததை ஏன் நிறுத்திவிட்டது என்பதைப்பற்றி கடந்த முறையிருந்த சர்க்காரிடத்தில் கேட்டிருக்கலாம். முன்பு 1,000 ரூபாய், அதாவது மானியமாக ரூ. 750-ம் கடனக 250 ரூபாயும் கொடுக்கப்பட்டது. அந்தத் திட்டம் கடந்த முறை நிறுத்தப்பட்டது. புதிய திட்டம் மத்திய சர்க்கார் துணே மூலம் உருவாகிக் கொண்டு வருகிறது.

### *Wage earning scheme for prisoners*

* 198 *Q.*—**Thiru T. MARTIN :** Will the Hon. the Minister for Law and Co-operation be pleased to state—

(*a*) whether there is any proposal pending before the Government to introduce a wage earning scheme for prisoners undergoing imprisonment in different central jails in this State ; and

(*b*) if so, the details thereof ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) சிறைச்சாலேயில் கைதிகள் ஊதியம் ஈட்டிடும் திட்டம் கொண்டு வருவது அரசினர் பரிசீலனையிலிருக்கிறது.

(இ) இத்திட்டத்தின் விவரங்கள் பற்றி ஒரு இறுதியான முடிவெடுக்க மேலும் சிறிது காலம் பிடிக்கும்.

**Thiru T. MARTIN :** Speaker Sir, I remember that in Kerala the Government has sponsored a similar scheme. May I request the Hon. Minister to send a group of officials to Kerala to find out the feasibility of the scheme which has been worked out by that Government before this Government finalises the scheme ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** கேரளாவில் இருக்கிறதா என்பதைப் பற்றி அரசாங்கத்திற்குத் தகவல் இல்லே. பஞ்சாப், டெல்லி சிறைச்சாலேகள் இந்தத் திட்டத்தை அமல் நடத்தி நல்ல முறையில் நடைபெற்று வருவதாகப் புள்ளி விவரங்களே இந்த அரசாங்கம் பெற்றிருக்கிறது; அதை நாங்கள் பரிசீலனே செய்கிறேம்.

[1968 மார்ச் 12

### வெல்ல சர்க்கரை தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், முருகங்குடி

* 199 விஞ—திரு. எஸ். இராமச்சந்திரன் :
திரு. ஏ. எம். ராஜா : } மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னார்க்காடு மாவட்டம், முருகங்குடி வெல்ல சர்க்கரை தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு நாளது தேதி வரை தமிழ் நாடு கதர் கிராமத் தொழில் போர்டால் கொடுக்கப்பட்டுள்ள மானியம், கடன் தொகை முறையே எவ்வளவு ?

(இ) மேற்படி சங்கத்திற்கு கடன் வாங்கும் சக்தி எவ்வளவு ?

**மாண்புமிகு திரு மா. முத்துசாமி :** (அ) தென்னார்க்காடு மாவட்டம், முருகங்குடி கரும்பு வெல்ல சர்க்கரை தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு நாளது தேதி வரை தமிழ் நாடு கதர் கிராமத்தொழில் பெருவாரியத்தால் கொடுக்கப்பட்ட மானியம், கடன் தொகை முறையே கீழ்கண்டவாறு :—

| விவரம். | கடன். ரூ. பை. | மானியம். ரூ. பை. |
|---|---|---|
| பைங்குத் தொகை கடன் (Share capital Loan) .. .. .. | 3,325·00 | .. |
| 2 மூலதனக் கடன் (Paid-up at the end of 1966-67). .. .. .. | 15,000·00 | .. |
| 3 எருதுகளினால் இயக்கும் கரும்பு பிழியும் இயந்திரம். (Bullock-driven crushers) | 840·00 | .. |
| 4 கையினால் இயங்கும் சுழல் இயந்திரம். (Hand driven centrifugal) | 1,300·00 | 1,300·00 |
| 5 கொப்பறை (Pans) .. .. | 54·33 | 54·33 |
| 6 மர அச்சுக்கள் (Wooden mould) .. | 40·76 | 40·76 |
| மொத்தம் .. | 20,560·09 | 1,395·09 |

(இ) கடன் வாங்கும் சக்தி ரூபாய் 38,000.

**திரு. எஸ். ராமச்சந்திரன் :** விருத்தாசலம் தாலுக்காவில் இந்த சொஸைட்டிக்கு 1967–68-ஆம் ஆண்டு கொடுத்த கடன் தொகை எவ்வளவு ? அது எப்போது அளிக்கப்பட்டது? அந்தப்பணம் அதே ஆண்டு செலவழிக்கப்பட்டதா ? இல்லையா? அந்தப் பணம் கொடுப்பதற்குக் காரணம் முன்னாள் அமைச்சரின் செல்வாக்கு என்று கூறப்படுவது உண்மையா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** 1967–68-ஆம் ஆண்டுக்குக் கடன் கொடுக்கப்படவில்லை. 1966–67-இல் 15,000 ரூபாய் கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த ஆண்டின் இறுதி நேரத்திலே வழங்கப்பட்டதால் அது பயன்படுத்த முடியாமல் அடுத்த ஆண்டு பயன்படுத்தும் நிலை ஏற்பட்டது. அமைச்சரின் செல்வாக்குக்காக கொடுக்கப்பட்டதா என்ற விவரம் இங்கு இல்லை.

**திரு. ஏ. எம். ராஜா :** தலைவரவர்களே, வெல்ல சர்க்கரை சொஸைட்டிகள் கதர் தொழிலாளர் சங்கத்திற்குப் பணம் கொடுத்து உள்ளதா ? ஆமெனில் கதர் கிராமத் தொழில் போர்டு எடுத்த நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** அதுபற்றிய விவரம் இல்லை.



1968 மார்ச் 12]

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** தலைவரவர்களே, 3,000 ரூபாய் பங்குத் தொகை. அதற்கு 15,000 ரூபாய் கடன் கொடுக்கப்பட்டது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். எவ்வளவு ரூபாய் பங்கு இருந்தால் எவ்வளவு கடன் கொடுக்கப்படுகிறது என்ற நியதி ஏற்பட்டிருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** ஓர் உறுப்பினருக்கு 20 பங்குகள் மட்டும் என்று வரையறுக்கப்பட்டுள்ளது. தற்போது 38 உறுப்பினர்கள் உள்ளனர். செலவழித்த பங்குத் தொகை ரூ. 3,800. இதற்குக் கடன்பெறத் தகுதியுடைய தொகை ரூ. 38,000.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விஞக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.

## 2. கவன ஈர்ப்பு

### பாளையம் ஊராட்சி ஒன்றியப் பகுதியில் பருவமழையின்மையும் விவசாயிகள் பாதுகாப்பும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 41-வது விதியின் கீழ் அவசரமும், பொது முக்கியமுமான காரியம் ஒன்றை திரு. என். வரதராஜன் அவர்கள் மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

**திரு என். வரதராஜன் :** தலைவரவர்களே, சட்டப்பேரவையின் 41-வது விதியின் கீழ் அவசரமும், பொது முக்கியமுமான காரியம் ஒன்றை மாண்புமிகு உணவு அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மதுரை மாவட்டம் பாளையம் பஞ்சாயத்து யூனியன் பகுதியில் பருவமழை தவறியதால் பஞ்ச நிலை ஏற்பட்டு சுமார் 60 ஆயிரம் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளதால். மலிவு விலையில் உணவு, கடன் ஒத்திவைப்பு, நிவாரண வேலைகள் கொடுத்து விவசாயிகளை பாதுகாக்க வேண்டியது பற்றிய அவசரமும், பொது முக்கியமுமான காரியத்தை மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த பாளையம் ஊராட்சி ஒன்றியத்தில் பருவமழை பொய்த்ததன் காரணமாக 60,000 குடியானவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும், அதனால் கடன் வசூலிப்பது தள்ளிப்போடப்படவேண்டுமென்றும், துயர் தணிப்பு வேலைகள் தொடங்கப்படவேண்டும் என்றும், நியாய விலைக்கடைகள் திறக்கப்படவேண்டுமென்றும் நாட்ட ஈர்ப்பு அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாளையம் ஊராட்சி ஒன்றியம் வேடசந்தூர் வட்டத்தில் உள்ளது. இந்த வட்டத்தில் பஞ்ச நிலைமை எதுவும் இல்லை. மதுரை மாவட்டத்தில் குறிப்பிட்ட எந்த வட்டாரத்திலும் அல்லது கிராமப் பகுதியிலும் பயிர்கள் சாவியாகப் போகவில்லை. எனவே, கிஸ்தி வசூலிப்பதை நிறுத்தி வைப்பதற்கோ, கடன் வசூலிப்பதைத் தள்ளி போடுவதற்கோ, பஞ்சத் துயர் தணிப்பு வேலைகளைத் தொடங்குவதற்கோ, நியாய விலைக் கடைகளைத் திறப்பதற்கோ அவசியமில்லை என்று அரசு கருதுகிறது.

## 3. அரசினர் தீர்மானம்

### அவையினர் குழுவிற்கு தேர்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அரசினர் தீர்மானம் ஒன்றை மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சரவர்கள் கொண்டு வருவார்கள்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, " தமிழ் நாடு சட்டப் பேரவை விதிகளைச் சேர்ந்த 221 (1)-வது விதியின் கீழ், 1968–69-ம் நிதியாண்டுக்குரிய அவையினர் குழுவின் உறுப்பினர்களாய் இருக்கும்படி பதினொன்று உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் நிச்சயிக்கும் தேதியன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்" என்ற தீர்மானத்தைக் கொண்டு வருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

## 4. அறிவிப்பு.

### அவையினர் குழுவிற்கு தேர்தல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஒற்றை மாற்று வாக்கு முறைப்படி தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைமை வகுத்துள்ள விதிமுறைகளின் கீழ், அவையினர் குழுவிற்கு (House Committee) உறுப்பினர்களை தேர்ந்தெடுக்கப்படுவதற்கு, வேட்பாளர்கள் நியமனத்தாள்களை 1968-ம் வருஷம் மார்ச் மாதம் 15-ம் தேதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்கவேண்டும். நியமனத்தாள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

நியமனத்தாள்கள் 1968-ம் வருஷம் மார்ச் மாதம் 16-ம் தேதி சனிக்கிழமை காலை 11 மணிக்கு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 1968-ம் வருஷம் மார்ச் மாதம் 18-ம் தேதி திங்கட்கிழமை காலை 11 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது பதினொன்றுக்கு, மேற்படுமாயின் 1968-ம் வருஷம் மார்ச் மாதம் 20-ம் தேதி புதன் கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே வாக்கெடுப்பு நடைபெறும்.

## 5. 1968-69-ம் ஆண்டிற்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

### கோரிக்கை எண் 14—மருத்துவம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, நிதிக் கோரிக்கை எண். 14—மருத்துவம், மாண்புமிகு மருத்துவத்துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

" கோரிக்கை எண். 14—மருத்துவம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 13,46,99,600-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

**திரு. கே. பி. எஸ். மணி :** ஐயா, மருத்துவ மனைகளின் சீரமைப்புப் பற்றி விவாதிக்க—

" கோரிக்கை எண். 14—மருத்துவம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் படுகின்ற ரூ. 13,46,99,600-ல் ரூ 100 குறைக வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகின்றேன்.





**திரு. கரு. சீமைச்சாமி :** சார், பஞ்சாயத்துக்கள் ஒவ்வொன்றுக்கும் ஒரு தாய்-சேய் நலவிடுதி ஏற்படுத்துவது பற்றி விவாதிக்க—

" கோரிக்கை எண். 14—மருத்துவம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் படுகின்ற ரூ. 13,46,99,600-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகின்றேன்.

**திரு. ஏ. அ. சுப்பராஜா :** தலைவர் அவர்களே, புதிய மருத்துவ மனைகள் கட்டுவது, ஜனத்தொகை அடிப்படையில் அல்லாது, மாவட்டம், வட்டம், தலைமையிடங்களுக்கு முதலிடம் அளிப்பதில் உள்ள குறையை விவாதிக்க—

" கோரிக்கை எண் 14—மருத்துவம் என்றதலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 13,46,99,600-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்." என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகின்றேன்.

THIRU K. VINAYAKAM : Sir, to discuss the general policy and the desirability of opening more hospitals in the taluk head-quarters and giving more facilities to the medical men working in the hospitals I move the following cut motion :—

'That the allotment of Rs. 13,46,99,600 under Demand No. 14—Medical be reduced by Rs. 100.'

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், அரசாங்க மருத்துவ மனைகளில் போதுமான மருந்து இல்லாததால் நோயாளிகள் வெளியே மருந்துகள் வாங்கிவர வேண்டிய நிலைமையை போக்குவது பற்றி விவாதிக்க—

" கோரிக்கை எண். 14—மருத்துவம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 13,46,99,600-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகின்றேன்.

THIRU N. KASIRAMAN : Sir, to discuss about the necessity for increasing the number of beds and for providing necessary other facilities in the Kumbakonam Government Hospital—

" கோரிக்கை எண். 14—மருத்துவம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 13,46,99,600-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகின்றேன்.

**திரு சோ. அழகர்சாமி :** ஐயா, எட்டயபுரம் அரசினர் மருத்துவ மனையை விரிவுபடுத்த வேண்டுமென்று விவாதிக்க—

" கோரிக்கை எண். 14—மருத்துவம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 13,46,99,600-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகின்றேன்.

**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** ஐயா, எல்லா மருத்துவ ஊழியர்களையும் நாட்டுடைமையாக்குவது பற்றி விவாதிக்க—

" கோரிக்கை எண். 14—மருத்துவம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 13,46,99,600-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகின்றேன்.

**திரு எம். சுரேந்திரன் :** ஐயா, அரசாங்க மருத்துவ மனைகளில் டாக்டர்களையும் நோய் கண்டுபிடிப்பு சாதனங்களையும் அதிகப்படுத்துவது பற்றி விவாதிக்க—

" கோரிக்கை எண் 14—மருத்துவம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 13,46,99,600-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகின்றேன்.

கோரிக்கை எண். 15—பொதுச் சுகாதாரம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, நிதிக் கோரிக்கை எண் 15—பொதுச் சுகாதாரம், மாண்புமிகு மருத்துவத்துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகின்றேன்—

" கோரிக்கை எண் 15—பொதுச் சுகாதாரம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 5,25,34,200-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்".

**Dr. H. V. HANDE :** Sir, to discuss policy I move the following cut motion :—

' That the allotment of Rs. 5,25,34,200 under Demand No. 15—Public Health be reduced by Rs. 100'

**திரு. கே. பி. எஸ். மணி :** ஐயா, பொதுச் சுகாதார விஸ்தரிப்பு முறை பற்றி விவாதிக்க—

" கோரிக்கை எண் 15—பொதுச் சுகாதாரம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 5,25,34,200-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகின்றேன்.

**Thiru N. KASIRAMAN :** Sir, to discuss about the insufficient allotment for Public Health—I move the following cut motion :—

' That the allotment of Rs. 5,25,34,200 under Demand No. 15—Public Health be reduced by Rs. 100.'

**திரு ஏ. அ. சுப்பராஜா :** தலைவர் அவர்களே, நகரசபைகளின் தண்ணீர் திட்டத்திற்கு அரசாங்கம் மொத்தக் கடனை அளிப்பதை மாற்றி பாதிக் கடன், பாதி மான்யமாக அளிக்க வேண்டியது பற்றி விவாதிக்க—

" கோரிக்கை எண் 15—பொதுச் சுகாதாரம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 5,25,34,200-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகின்றேன்.

**திரு எம். சுரேந்திரன் :** எல்லா மக்களுக்கும் குடி நீர் வசதி செய்து தர வகை செய்வது குறித்து விவாதிக்க—

" கோரிக்கை எண் 15—பொதுச் சுகாதாரம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 5,25,34,200-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகின்றேன்.

**திரு சோ. அழகர்சாமி :** ஐயா, கோவில்பட்டி நகர குடி தண்ணீர் திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள—

" கோரிக்கை எண் 15—பொதுச் சுகாதாரம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 5,25,34,200-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகின்றேன்.

**திரு கரு. சீமைச்சாமி :** சார், ஊராட்சி ஒன்றிப்பு மன்றங்கள் வட்டாரத்தில் பிரதம சுகாதார நிலைய கட்டிடம் உடனடியாக கட்ட வேண்டியதின் அவசியத்தை வலியுறுத்த—

" கோரிக்கை எண் 15—பொதுச் சுகாதாரம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 5,25,34,200-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகின்றேன்.



**திருமதி கே. பி. ஞானகியம்மாள் :** தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் குஷ்டரோக நிவாரண நிலையம் ஒன்று கட்டிக் கொடுக்கும் நடவடிக்கை பற்றி விவாதிக்க—

" கோரிக்கை எண் 15—பொதுச் சுகாதாரம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 5,25,34,200-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகின்றேன்.

கோரிக்கை எண் 38—பொதுச் சுகாதார மூலதனச் செலவு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, நிதிக் கோரிக்கை, எண் 38—பொதுச் சுகாதார மூலதனச் செலவு, மாண்புமிகு மருத்துவத்துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகின்றேன்.—

" கோரிக்கை எண் 38—பொதுச் சுகாதார மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 57,400-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

**திரு. வை. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, காலரா, அம்மை இவைகளை அறவே தடுப்பது சம்பந்தமாக விவாதிக்க—

" கோரிக்கை எண் 38—பொதுச் சுகாதார மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 57,400-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்பொழுது நிதிக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவையில் விவாதத்திற்கு வைக்கப் பட்டுள்ளன. மாண்புமிகு சுகாதாரத்துறை அமைச்சர் அவர்கள் ஏதாவது சொல்ல விரும்பினால் சொல்லலாம்.

**Thiru Sowdi S. SUNDARA BHARATHI :** Sir, on a point of order. There is one cut motion standing in my name, viz., cut motion No. 317. I have given notice of this cut motion for the Irrigation Demand and not for Demand No. 15—Public Health.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** " இரிகேஷன் டிமாண்ட் " வரும்போது தாங்கள் இதைக் கொண்டுவர நான் அனுமதிக்கிறேன்.

**திரு. எம். சுரேந்திரன் :** ஐயா, என்னுடைய 315-வது எண்ணுள்ள வெட்டுத் தீர்மானம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் முன்கூட்டியே எழுதிக் கொடுத்தீர்களானால் நன்றாக இருக்கும்.

**Thiru Sowdi S. SUNDARA BHARATHI** rose.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் அனுமதிக்கிறேன் என்று சொல்லியாகிவிட்டது.

**Thiru Sowdi S. SUNDARA BHARATHI** rose.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தங்களை அனுமதிக்கிறேன் என்று சொல்லியாகிவிட்டது. இந்த வெட்டுத் தீர்மானத்தை தாங்கள் எதன் மீது கொண்டு வரவேண்டுமென்று விரும்பினீர்களோ அதன்படியே அனுமதிப்பதற்கு தயாராக இருக்கிறேன் என்று சொல்லிவிட்டேன்.

(திரு எம். சுரேந்திரன் அவர்கள் நின்று கொண்டே இருந்தார்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானங்களை முன்
கூட்டியே எழுதிக் கொடுக்க வேண்டும். ஆனால் நீங்கள் முன்
கூட்டியே தரவில்லை.

**திரு. எம். சுரேந்திரன் :** முன்கூட்டியே எழுதிக் கொடுத்திருக்
கிறேன்.

எல்லா மக்களுக்கும் குடி நீர் வசதி செய்துதர வகை செய்வது
குறித்து விவாதிக்க—

"கோரிக்கை எண் 15—பொதுச் சுகாதாரம் என்ற தலைப்பின் கீழ்
ஒதுக்கப்படுகின்ற ரூ. 5,25,34,200-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"
என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்பொழுது நிதிக் கோரிக்கை
களும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவையில் விவாதத்திற்கு வைக்கப்
பட்டுள்ளன. மாண்புமிகு சுகாதாரத்துறை அமைச்சர் அவர்கள்
பேசலாம்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** பேரவைத் தலைவர்
அவர்களே, இன்று இந்த மன்றத்தின் முன்னால் மூன்று மானியக்
கோரிக்கைகளைச் சமர்ப்பித்திருக்கிறேன். மேற்படி மானியக் கோரிக்கை
களைப் பற்றிய விவரங்களும், புள்ளி விவரங்களும் கனம் உறுப்பினர்
களுடைய பரிசீலனைக்காக வைக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு
உறுப்பினர்கள் மேற்படி அறிக்கைகளைக் கொண்டும், புள்ளி விவரங்
களைக் கொண்டும் தங்கள்வெட்டு பிரேரணைகளையொட்டி விவாதித்து பேசிய
பிறகு இறுதியாக நான் அதற்கான பதிலைச் சொல்வதாக இருக்
கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் கோரிக்கைகளையும்
தங்கள் கருத்துக்களையும் சொல்லும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

### *கோரிக்கை 14—மருத்துவம் 1968-69.

### 1. கொள்கை

(i) வளங்கொழு அரசு ஒன்றில் மக்களின் உடல்நலனைக் காப்பதும்,
மக்களுக்கு மருத்துவ வசதி செய்து கொடுப்பதும், அரசாங்கத்தின் முக்கியக்
கடமைகளாகும். எனவே, சமுதாயத்தினருக்கு முன்னேற்றவகைகளில்
திறன்மிக்க மருத்துவப் பணியினை நல்க வேண்டுமென்ற ஆர்வமும் ஊக்க
மும் கொண்டு அரசாங்கம் பணியாற்றி வருகிறது. எனெனில் ஜனநாயக
நிர்வாகம் இறுதியில் வெற்றியடைய வேண்டுமென்றால், அது இந்த
நாட்டு மக்களின் சிறந்த உடல் நலனைப் பொறுத்தே இருக்கிறது. அடுத்
தடுத்து நிறைவேற்றப்பட்ட ஐந்தாண்டுத் திட்டங்களில் ஏற்கெனவே உள்ள
மருத்துவப் பணிகளை விரிவு படுத்துவதும் எல்லா மக்களுக்கும் சிறந்த
மருத்துவ வசதிகளை அதிக அளவில் எளிதில் கிடைக்கச் செய்வதும்,
மருத்துவப் பட்டதாரிகளின் எண்ணிக்கையையும், செவிலியர், மருந்து
கலப்பவர்கள் முதலிய துணைப் பணியாளர்களின் எண்ணிக்கையையும்,
உயர்த்துவதும், குடும்ப நல திட்டத்தைப் பரப்புதலும் நாட்டு மக்களின்
உடல் நலனைப் படிப்படியாக பேணி வளர்ப்பதும் இந்த அரசாங்கத்தின்
நோக்கங்களாக இருந்து வந்துள்ளன.

(ii) 1968–69-ம் ஆண்டு வரவு செலவுத் திட்டம் மருத்துவத் துறையில்
முந்திய ஆண்டைவிட செலவு 0·7 சதவீதம் அதிகரித்துள்ளதைக் காட்டு
கிறது. "மருத்துவ மனைகளும், மருந்தகங்களும்" என்பதன் கீழ் ரூ. 958
லட்சம் செலவிட இதில் வகை செய்யப்பட்டுள்ளது. இத் தொகை மருத்
துவக் கோரிக்கையில் 71 சதவீதமாகும். மொத்தச் செலவில் 14 சத
வீதத்தைக் குறிக்கிற ரூ. 183 லட்சம் "மருத்துவக் கல்லூரிகளும் பள்ளி
களும்" என்பதன்கீழ் ஒதுக்கப்பட்டுள்ளது. மொத்தச் செலவில் 10 சத
வீதம். "அரசாங்கத் தொழிலாளர் காப்புறுதிக்கு"ச் செலவிடப்படுகிறது.

*அச்சிட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட உரை.





"மருத்துவப் பணியாளர்", "மருத்துவ உதவிக்கான மானியங்கள்" என்
பவற்றின்கீழ் ரூ. 72 லட்சம் செலவிடத் திட்டமிட்டுள்ளது. இவ்
வாறாக, மருத்துவக் கோரிக்கையின்கீழ் ஆகின்ற செலவு ஆண்டு தோறும்
படிப்படியாக உயர்ந்துகொண்டே போகிறது.

### 2. மருத்துவக் கல்வி.

சென்னைப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராகிய டாக்டர்
ஆ. இலட்சுமணசாமி முதலியார் அவர்களின் தலைமையின் கீழ் இந்திய
அரசு அமைத்த சுகாதார ஆய்வு திட்டக் குழு, மருத்துவக் கல்விக்குப்
போதுமான வசதிகள் செய்யப்பட வேண்டுமானால், ஒவ்வொரு ஐம்பது
லட்சம் மக்கட் தொகைக்கும் ஒரு மருத்துவக் கல்லூரி இருக்க வேண்டும்
என்றும், இத்தகைய மருத்துவக் கல்லூரிகள் ஒவ்வொரு மாநிலத்திலும்
ஒரு சிலவாகிலும் இருக்க வேண்டும் என்றும் அப்போதுதான் அம்
மாநிலத்தே மருத்துவ வசதிகளைப் பெருக்குவதற்கும் அம் மாநில மாண
வர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கும் சிறந்த வாய்ப்புகள் கிடைக்கும்
என்றும் எடுத்துக் கூறியுள்ளது. இந்த நாட்டிலே மருத்துவக் கல்லூரிகள்
பல மாநிலங்களிலும் நியாயமான அளவுக்குப் பரவலாக அமைக்கப்படு
வதற்காக, அந்தந்த மாநிலத்தின் மக்கட் தொகையையும் அந்தந்த
மாநிலத்தில் இப்போதுள்ள மருத்துவக் கல்லூரியின் எண்ணிக்
கையையும் கருத்தில் கொண்டு இக்குழு நான்காவது ஐந்தாண்டுத்
திட்டத்தில் பல்வேறு மாநிலங்களிலும் ஏற்படுத்த வேண்டிய மருத்துவக்
கல்லூரிகளை ஒதுக்கிக் கொடுத்தது—இந்த நாட்டிலே இப்போது மொத்தம்
90 மருத்துவக் கல்லூரிகள் இருக்கின்றன. அவற்றிலே 9 கல்லூரிகள்
இம்மாநிலத்தில் அமைந்துள்ளன. எட்டுக் கல்லூரிகள் அரசாங்க மருத்துவக்
கல்லூரிகளாகும். ஒன்பதாவது கல்லூரி வேலூர் கிருத்துவ மருத்துவக்
கல்லூரியாகும். அரசாங்க மருத்துவக் கல்லூரிகள் எட்டிலும் மொத்தம்
1,125 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

### 3. பல் மருத்துவப் பட்டப் படிப்பு.

1953-ம் ஆண்டு சென்னை மருத்துவக் கல்லூரியின் பல் மருத்துவப்
பிரிவில் பல் மருத்துவப் பட்டப் படிப்பு ஒன்று தொடங்கப்பட்டது. இதில்
ஆண்டுதோறும் 15 மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். பல்
மருத்துவப் பிரிவுக்குப் போதிய அளவு இடவசதியின்மையால், தனிப்
பட்ட கட்டிட தொகுதி ஒன்று ரூ.15 லட்சம் செலவில் கட்டப்பட்டது
இதனால் சேர்த்துக்கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 45 ஆக
உயர்த்தப்பட்டது. இதுவரை இந்த நிறுவனத்திலிருந்து 174 பேர் பல்
மருத்துவப் பட்டம் பெற்றுள்ளனர்.

### 4. மருந்து தயாரிப்போர் பட்டப்படிப்பு.

(i) 1939-ம் ஆண்டில் சென்னை மருத்துவக் கல்லூரியில் முதன்முத
லாக மருந்து தயாரிப்பு இரண்டாண்டுப் பட்டப்படிப்பு தொடங்கப்பட்டது.
மருந்து தயாரிக்கும் துறையில் விரைவான முன்னேற்றம் ஏற்பட்டதன்
காரணமாக, இந்தப் படிப்பு 1950-ம் ஆண்டில் 3 ஆண்டுப் படிப்பாக
மாற்றியமைக்கப்பட்டது. அதன் பின்னர் இப்படிப்பின் கால அளவு
மேலும் ஓராண்டுக் காலம் நீடிக்கப்பட்டது. எனவே, இப்போது இப்படிப்பின்
கால அளவு 4 ஆண்டுகளாகும். இப்படிப்பில் 1939-ம் ஆண்டில்
12 பேர் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்க, இப்போது 35 பேர் சேர்க்கப்படு
கின்றனர்.

(ii) தனியார்த் துறையிலும், பொதுத் துறையிலும், மருந்து தாயரிக்
கும் பட்டம் பெற்றவர்கள் அதிக அளவு தேவைப்படுவதால், மருந்து தயா
ரிக்கும் பட்டப்படிப்பு 1963-ம் ஆண்டில் மதுரையிலுள்ள மதுரை மருத்
துவக் கல்லூரியில் தொடங்கப்பட்டது. இதில் 25 மாணவர்கள் சேர்த்துக்
கொள்ளப்படுகின்றனர்.

### 5. செவிலியர் பி. எஸ். ஸி. பட்டப்படிப்பு.

சென்னை மருத்துவக் கல்லூரியில் 2½ ஆண்டுக் காலம் பயில்கிற செவிலியர், பி.எஸ்ஸி. பட்டப்படிப்பு கற்பிக்கும் செவிலியர் கல்லூரி ஒன்று 1967 ஜூலைத் திங்களில் தொடங்கப்பட்டது. இக் கல்லூரி சென்னைப் பல்கலைக் கழகத்துடன் இணைப்பு பெற்றதாகும். இந்தப் படிப்பிலே மருத்துவ-அறுவை செவிலியர் படிப்பும், பொதுச்சுகாதார் செவிலியர் படிப்பும் ஆக இரண்டு சிறப்புப் படிப்புகள் இருக்கின்றன. செவிலியராகப் பணியாற்றும் பதின்மர் இப்போது இப்படிப்பு பயின்று வருகின்றனர். 1968 ஜூலை முதல் இப்படிப்பில் 20 பேர் சேர்த்துக் கொள்ளப்படுவர். இவர்களில் 10 பேர் பணியாற்றும் செவிலியர்களாகவும் ஏனைய 10 பேர் தனிப்பட்டவர்களாகவும் (இவர்கள் தகுதி பெற்ற செவிலியராவர்) இருப்பர்.

### 6. குற்றவியலிலும் குற்றவியல் மருத்துவத்திலும் டிப்ளோமா படிப்பு.

இம்மாநில அரசாங்கத்தின் காவல், சட்டம், சிறைகள், மருத்துவம் முதலிய துறைகளின் பயனுக்காக குற்றவியலிலும் குற்றவியல் மருத்துவத்திலும் ஓராண்டுப் படிப்பு சென்னை மருத்துவக் கல்லூரியில் தொடங்கப்பட்டது. இது சென்னைப் பல்கலைக் கழகத்துடன் இணைப்புப் பெற்றதாகும். இதில் ஆண்டுதோறும் 20 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

### 7. குற்றவியலிலும் குற்றவியல் மருத்துவத்திலும் எம். ஏ. பட்டப்படிப்பு.

குற்றவியலிலும், குற்றவியல் மருத்துவத்திலும் எம். ஏ. பட்டப்படிப்பு சென்னை மருத்துவக் கல்லூரியில் 1965 முதல் தொடங்கப்பட்டது. இதில் ஆண்டு தோறும் 8 பேர் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். குற்றவியல் மருத்துவத்தில் மேற்பயிற்சி அளிப்பதற்காக இக்கல்லூரியின் குற்றவியல் மருத்துவத் துறையை தரம் உயர்த்த எண்ணியுள்ளது.

### 8. மருத்துவ மேல்பட்டப்படிப்பு.

(i) இம்மாநிலத்தில் 9 மருத்துவ நிறுவனங்களில் மருத்துவ மேல் பட்டப் படிப்பு கற்பிக்கப்படுகிறது. சென்னையிலுள்ள சென்னை மருத்துவக் கல்லூரி, ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி, வேலூரிலுள்ள கிறித்தவ மருத்துவக் கல்லூரி, கிண்டியிலுள்ள கிங் இன்ஸ்டிட்யூட், சென்னையிலுள்ள மகப்பேறு மருத்துவ-மகளிர் நோய் மருத்துவ நிறுவனம், சென்னையிலுள்ள மேக நோய் மருத்துவ நிறுவனம், சென்னையிலுள்ள பார்ஞூர்டு கதிர் இயக்க நிறுவனம், மதுரையிலுள்ள மருத்துவக் கல்லூரி, சென்னையிலுள்ள அரசாங்கக் கண் மருத்துவ மனை ஆகியவையே மேற்கூறிய ஒன்பது நிறுவனங்களாகும். இப்போதுள்ள மருத்துவக் கல்லூரிகளிலும், வருங்காலத்தில் அமைக்கப்படவிருக்கும் கல்லூரிகளிலும், அதிக அளவில் தேவைப்படும் ஆசிரியர்களை உருவாக்குவதற்காகவும், மாவட்டத் தலைமை இடங்களிலும், வட்டத் தலைமையிடங்களிலும் தேவைப்படும் வல்லுநர்களை உருவாக்குவதற்காகவும் இம்மாநிலத்திலுள்ள பட்ட மேற்படிப்பிற்கான வசதிகள் படிப்படியாக பெருக்கப்பட்டு வருகின்றன.

(ii) "மருத்துவ மேல்மட்ட படிப்பு மேம்பாடு" என்னும் மத்திய அரசு ஆதரவு தரும் திட்டத்தின் கீழ் மத்திய அரசு கொடுக்கும் நிதி உதவியைப் பயன்படுத்திக் கொண்டு சென்னையிலுள்ள சென்னை மருத்துவக் கல்லூரியில் ப்ளாஸ்டிக் அறுவை சிகிச்சை, மர்ம உறுப்பு-மூத்திரக் குழல் அறுவைச் சிகிச்சை, சிசு நோய் அறுவை சிகிச்சை, நரம்பு சிகிச்சை, கதிர் வீச்சு சிகிச்சைத் துறைகள் மேம்படுத்தப்படும்.

### 9. மருத்துவ ஆராய்ச்சி.

(i) நாட்டு மக்களின் சுகாதாரத்திற்கும் நல் வாழ்வுக்கும், மருத்துவ ஆராய்ச்சி அதிக அளவில் வாய்ப்பு அளிக்கின்றது. எனவே, இம்மாநிலத்தில் 1944-ம் ஆண்டு மாநில மருத்துவ ஆராய்ச்சிக் குழு ஒன்று அமைக்கப்பட்டுச் செயல்பட்டு வருகின்றது. இது மருத்துவ விஞ்ஞானத்



திலும், மருத்துவக் கலையிலும், ஆராய்ச்சி செய்ய ஊக்கமளிக்கின்றது. இம்மாநிலத்தில், ஆராய்ச்சியைத் தொடங்கும், உதவி செய்யும், வளர்க்கும், ஒருங்கிணைக்கும், ஏற்புடைய மருத்துவ நிறுவனங்களுக்கு சிறு அளவில் மானியம் வழங்குவதுடன் நோய்க் கூறுகளை ஆய்வதற்கும், அவற்றைத் தடுப்பதற்கும் அவற்றின் காரணங்களையும் தீர்வுகளையும் அறிவதற்கும் உதவி செய்கிறது. இதற்காக ஆண்டு தோறும் இக் குழுவிடம் மொத்தமாக ரூ. 50,000 மானியம் வழங்கப்படுகிறது.

(ii) மருத்துவக் கல்லூரிகளின் செயல் முறைப்படிப்பிற்கு முற்பட்ட துறைகளிலும் செயல் முறைப் படிப்புத் துறைகளிலும் தேவைப்படுவனவற்றைச் செய்து கொடுப்பதற்காக மருத்துவக் கல்லூரியில் ஒவ்வொரு துறையிலும் பொது ஆராய்ச்சி நிலையம் இருக்க வேண்டுமென்றும் தொடர்பான துறைகளின் வசதிகளைத் தொகுப்பதன் மூலம் ஆராய்ச்சிப் பிரிவுகள் அமைக்கப்படலாமென்றும், இந்திய மருத்துவ மன்றம் 1964-ம் ஆண்டில் பரிவுரை செய்தது. இந்தப் பரிவுரைக் கிணங்க, சென்னையிலுள்ள, சென்னை மருத்துவக் கல்லூரியில் தேவையான பணியாளர்கள், கருவிகள் முதலியவற்றுடன் மத்திய ஆராய்ச்சிப் பிரிவு ஒன்றை ஏற்படுத்துவதற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

### 10. பல் மருத்துவ ஆராய்ச்சி

பல்லில் காரை படிவதற்குரிய காரணங்களை ஆராய்வதற்கான ஐந்து ஆண்டு ஆராய்ச்சித் திட்டமொன்றுக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. சென்னையிலுள்ள சென்னை மருத்துவக் கல்லூரியின் பல் மருத்துவப் பிரிவில் இந்த ஆராய்ச்சி இப்பொழுது நடந்துவருகிறது. இந்திய மருத்துவ ஆராய்ச்சி மன்றம் "தென் இந்தியாவில் பல் சுகாதாரத்தைப் பாதிக்கும் நோய் ஆராய்ச்சி" என்னும் திட்டத்திற்கும் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. அந்த மன்றமளிக்கும் மானிய உதவியுடன் இத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

### 11. மருத்துவப் பதிவேடுகள் துறையை நிறுவுதல்

மருத்துவப் பட்ட மேற்படிப்பை ஒருங்கிணைப்பது குறித்த நிலைக் குழுவின் பரிவுரையை யொட்டி, சென்னை அரசினர் பொது மருத்துவ மனையில் மருத்துவப் பதிவேட்டுத் துறை ஒன்று 1966 ஆகஸ்ட் முதல் துவக்கப்பட்டது. நோயாளிகளுக்கு அளித்துள்ள சிகிச்சைகள் குறித்து முழு விவரங்கள் அடங்கிய பதிவேடுகளைச் சரியான முறையில் இந்தத் துறை பேணி வரும். நோய் கூறு விவரங்களை அனைத்து நாட்டு நோய் வகைப் பாட்டை யொட்டித் தொகுத்து, அவற்றிற்குரிய குறி ஈட்டு எண்கள் கொடுப்பதும், எல்லா மருத்துவப் பதிவேடுகளையும் ஒரு மைய அமைப்பின் கீழ்க் கொண்டு வருவதும், தற்போதுள்ள நோயாளிகளுக்கும், இனிமேல் வரும் நோயாளிகளுக்கும் சிகிச்சை அளிப்பதற்கான மேற்படி பதிவேடுகளை உடனுக்குடன் கிடைக்கச் செய்வதும், பட்ட மேல்படிப்பு மாணவர்களின் ஆய்வுக்காக அவற்றைக் கிடைக்கச் செய்வதும் இத் துறையின் மற்றப் பணிகளாகும். இதன் மூலம் நோயாளிகளுக்கு மருத்துவ வசதி அளிக்கும் முறை மேம்பாடு அடைவதுடன், மருத்துவ ஆராய்ச்சி மேம்பாடடைவதற்கு வசதி ஏற்படும். இம் மாநிலத்திலுள்ள ஏனைய கற்பிக்கும் பெரிய மருத்துவ மனைகளில் அத்தகைய துறைகளைப் படிப்படியாக நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது.

### 12. துணை மருத்துவ பணியாளர்களுக்கும் பயிற்சி

### மருந்து செய்முறைப் பயிற்சியில் டிப்ளோமா.

(i) மருந்து செய்முறைப் பயிற்சியில் இரண்டாண்டு டிப்ளோமாப் படிப்பு 1965-ல் சென்னை மருத்துவக் கல்லூரியில் துவக்கப்பட்டது. தொடக்கத்தில் 15 மாணவர்கள் அனுமதிக்கப்பட்டனர். 1956-ல் அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 60-ஆக உயர்த்தப்பட்டது. மருந்து தயாரிப்போரின் பணி பொதுத் துறையிலும், தனியார்த் துறையிலும் அதிக

மாகத் தேவைப்பட்டதைச் சமாளிப்பதற்கென, இப் பாடமுறையில் சேர்த்துக் கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 1959-ல் 100-ஆக உயர்த்தப்பட்டது. மதுரை மருத்துவக் கல்லூரியில் இப் பாடமுறை 1960-ல் கொண்டுவரப்பட்டது. தொடக்கத்தில் அதில் 100 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இரண்டாம் திட்டத்தில் வழங்கப்பட்ட மத்திய உதவியைப் பயன்படுத்திக் கொண்டு இக் கல்லூரியில் சேர்த்துக் கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 1961 ஜூலையில் 150-ஆகவும், 1963 ஜூலையில் 200-ஆகவும் உயர்த்தப்பட்டது. அதே போல் சென்னை மருத்துவக் கல்லூரியில் சேர்த்துக் கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 1963 ஜூலையிலிருந்து 150-ஆக உயர்த்தப்பட்டது. எனினும், போதிய எண்ணிக்கையுள்ள மாணவர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டுள்ளதால், இக் கல்லூரியில் அனுமதிக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 1967 முதல் 100-ஆகக் குறைக்கப்பட்டது.

(ii) கல்லூரி புகுமுகக் தகுதியைக் கொண்டுள்ள மருந்தியல் டிப்ளொமா பெற்றுள்ளவர்கள், இரண்டாவது ஆண்டு ஒருங்கிணைந்த B. மருந்தியல், பட்டப் பாட முறையில் நேரடியாகச் சேர இம் மாநிலப் பல்கலைக் கழகங்கள் அனுமதியளித்துள்ளன. இதன் விளைவாக, மருந்தியல் துறையில் அவர்கள் உயர்ந்த தகுதியைப் பெறுவது இயலும். இதற்கென சென்னை மருத்துவக் கல்லூரியில் 15 பேரையும், மதுரை மருத்துவக் கல்லூரியில் 15 பேரையும் சேர்த்துக்கொள்ள அரசாங்கம் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

### 13. கதிர்வீச்சு மருத்துவ உதவியாளர்கள் பயிற்சி.

சென்னை அரசினர்ப் பொது மருத்துவ மனையில் உள்ள "பார்னூர்டு" கதிர்வீச்சு மருத்துவ நிலையத்தில் இப் பாட முறை முதன் முதலில் துவக்கப்பட்டது. ஆண்டு தோறும் 20 மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப் பட்டனர். மாவட்ட, வட்டத் தலைமையிட மருத்துவ மனைகளுக்கென கதிர்வீச்சு மருத்துவப் பணியாளர்கள் அதிகமாகத் தேவைப்பட்டதால், சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியிலும், மதுரை மருத்துவக் கல்லூரியிலும் இப் பாட முறை துவக்கப்பட்டு, 1960 முதல் ஆண்டு தோறும் 15 பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். பயிற்சி பெற்றவர்களுக்குப் போதிய வேலை வாய்ப்புகள் கிட்டாமையால், ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் இப் பாட முறை பின்னர் நிறுத்திவிடப்பட்டது.

### 14. நிழற்படம் கழுவுவதற்கான உதவியாளர்களுக்குப் பயிற்சி.

சென்னை, "பார்னூர்டு" கதிர்வீச்சு மருத்துவ நிலையத்திலும், சென்னை ஸ்டான்லி மருத்துவ மனையிலும் இப் பாட முறை நடத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு பயிற்சித் தொடரிலும் ஆண்டு தோறும் இரு முறை மாணவர்கள் இப் படிப்பிற்குச் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். இதில் தேறுபவர்கள் இம் மாநிலத்தில் மருத்துவ மனைகளில் உள்ள கதிர்வீச்சு மருத்துவத் துறைகளில் நிழற்படம் கழுவும் உதவியாளர்களாக நியமிக்கப் படுகின்றனர்.

### 15. II-ம் தர ஆய்வுக்கூடத் தொழில் நுட்பப் பணியாளர்கள் பயிற்சி.

II-ம் தர ஆய்வுக் கூடத் தொழில் நுட்பப் பணியாளர்களுக்கென ஆறு திங்கள்கள் கொண்ட ஒரு குறுகிய காலப் பயிற்சி முறைக்கு 1959-ம் ஆண்டு அரசாங்கம் ஒப்பளிப்பு வழங்கியது. சென்னை மருத்துவக் கல்லூரியிலும், சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியிலும், மதுரை மருத்துவக் கல்லூரியிலும் 1958–59 முதல் மூன்றுண்டுகளுக்கு இப் பாட முறை நடத்தப்பட்டது. அக் கால அளவில் சுமார் 300 பேர் பயிற்சி பெற்றனர். பயிற்சி பெற்றவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் பொருட்டு, அதன் பிறகு பயிற்சி தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. எனினும் புதியமருத்துவக் கல்லூரிகளும், மாவட்டப் பொதுச் சுகாதார ஆய்வுக் கூடங்களும் துவக்கப்பட்டதன் விளைவாகவும், தற்போதுள்ள மருத்துவக் கல்லூரிகளில் அனுமதிக்கப்படுவோரின் எண்ணிக்கை 1963 முதல் அதிகரித்த





தாலும், இந்தப் பணியாளர்கள் அதிகம் தேவைப்பட்டனர். இந்தத் தேவையை நிறைவு செய்யவும் தற்போதுள்ள பணியாளர்களுக்கு இன்னும் மேம்பட்ட பயிற்சியை அளிக்கும் பொருட்டும், கீழ்க்கண்ட ஆறு நிலையங்களில் ஓராண்டுப் பயிற்சி முறையை நடத்தும்படி அரசாங்கம் ஆணையிட்டது.

சென்னை மருத்துவக் கல்லூரி, சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி, சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி, கிண்டி கிங் நிலையம், தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி, மதுரை மருத்துவக் கல்லூரி, இந்த நிலையங்கள் ஒவ்வொன்றிலும் முதல் பயிற்சி தொடரில் 12 பேர் அனுமதிக்கப்பட்டனர். 1966-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ம் தேதி முதல் அந்த எண்ணிக்கை 15 ஆக உயர்த்தப்பட்டது. 1969-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ம் தேதி வரையில் இந்த ஓராண்டுப் பயிற்சி முறை இந்த நிலையங்களில் நடத்தப்படும்.

### 16. I-ம் தர ஆய்வுக்கூடத் தொழில் நுட்பப் பணியாளர்கள் பயிற்சி.

இந்தப் பயிற்சி முறையும் 1966-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 1-ம் தேதி முதல் முந்திய பாராவில் குறிப்பிட்டுள்ள 6 நிலையங்களில் நடத்தப்படுகிறது. பயிற்சிக் கால அளவு ஓராண்டாகும். ஓராண்டில் 90 பேருக்குப் பயிற்சியளிக்கப்படுகிறது.

### 17. பல்நோய் சுகாதாரப் பணியாளர்களுக்கும் பல்நோய் குறித்த தொழிலியல் பணியாளர்களுக்கும் பயிற்சி.

பல் நோய்க்கு மேம்பாடுற்ற முறையில் சிகிச்சையளிப்பதற்கென, பல் நோய் சிகிச்சைத் துறையில் தகுதி வாய்ந்த துணைப் பணியாளர்கள் தேவைப்படுவர். அத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கென, சென்னை மருத்துவக் கல்லூரியின் பல் சிகிச்சைப் பிரிவில் இப் பயிற்சி முறைகள் 1965 செப்டம்பர் முதல் மத்திய அரசின் உதவியுடன் துவக்கப்பட்டன. பல் நோய்த் தொழிலியல் பணியாளர்களுக்கு இரண்டாண்டுகளுக்குப் பயிற்சியும் பல் நோய் சுகாதாரப் பணியாளர்களுக்கு ஓராண்டுப் பயிற்சியும் அளிக்கப்படுகின்றது.

### 18. மூக்குக்கண்ணாடி பொறுத்துபவருக்குப் பயிற்சி.

சென்னை, அரசினர் கண் நோய் மருத்துவ மனையில் இப் பயிற்சி முறை 1962-ல் துவக்கப்பட்டது. பயிற்சிக் கால அளவு இரண்டாண்டுகளாகும். ஒவ்வொரு ஆண்டும் இதில் 30 பேர் சேர்க்கப்படுகின்றனர்.

### 19. முடநோயியல் துறைப் பணியாளர்களுக்குப் பயிற்சி.

மூன்றுண்டுக் கால இப் பயிற்சி வகுப்பு மதுரை மருத்துவக் கல்லூரியில் 6 மாணவர்களுடன் 1968-ம் ஆண்டு ஜனவரி மாதம் 1-ம் தேதி துவக்கப்பட்டது. பயிற்சி பெறும் மாணவர்களுக்குத் திங்கள் தோறும் ரூ. 60 பயிற்சி உதவிப் பணம் வழங்கப்படுகிறது.

### 20. செவிலியர்களுக்குப் பயிற்சி.

செவிலியர், துணைச்செவிலியர், மருத்துவச்சிகளுக்கென இம் மாநிலத்தில் கீழ்க்கண்ட பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன :—

(அ) செவிலியர்க்கான பொதுப் பயிற்சி—மூன்றுண்டுக் கால அளவு.

(ஆ) செவிலியர் மாணவர்களுக்கென மருத்துவச்சிப் பயிற்சி—6 திங்கள் கால அளவு.

(இ) துணைச் செவிலியர் மருத்துவச்சிகள் பயிற்சி—இரண்டாண்டுக் கால அளவு.

மூன்றுண்டுச் செவிலியர் பயிற்சிக்கென 6 பள்ளிகள் உள்ளன. மருத்துவச்சிகளுக்கான 6 மாத பயிற்சி அளிப்பதற்கென 5 பள்ளிகள் உள்ளன. 1967 ஜூலை பயிற்சித் தொடர் வரையில் அனுமதிக்கப்பட்ட செவிலியர்

களின் எண்ணிக்கை, பொதுச் செவிலியர் பயிற்சி முறையில் தேறியவர்களின் எண்ணிக்கையைப் பொறுத்திருந்தது. 1968-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 1-ம் தேதி அரையாண்டுக்கொரு முறை 150 செவிலியர் மாணவர் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். 1960 முதல் 1967 வரை மொத்தம் 2,831 செவிலியர் தேறினர். பொதுச் சுகாதார செவிலியர்ப் பயிற்சிப் படிப்பு, இம் மாநிலத்திலுள்ள செவிலியர் பயிற்சிப் பள்ளிகள் அனைத்திலும் அடிப்படைச் செவிலியர் பயிற்சிப் படிப்புடன் இணைக்கப்பட்டுள்ளது. 1966–67-லும், 1967–68-லும் 450 பேர் அனுமதிக்கப்பட்டனர். அவர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர்.

## 21. துணைச்செவிலி மருத்துவச்சிகள் பயிற்சி.

துணைச் செவிலி மருத்துவச்சிகளுக்காக எட்டு பயிற்சிப் பள்ளிகள் உள்ளன. இவற்றில் ஆண்டு தோறும் 255 பேர் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். இப்போது துணைச் செவிலி மருத்துவச்சிகளாக 510 பேர் பயிற்சி பெற்று வருகின்றனர். 1960 முதல் 1967 வரையுள்ள ஆண்டுகளில் மொத்தம் 1,613 பேர் தேர்ச்சி பெற்றனர்.

## 22. செவிலியர்களுக்கு தனித்துறைகளில் பயிற்சி அளித்தல்.

பொதுச் சுகாதாரச் செவிலிப் பணி, மனநோய் மருத்துவச் செவிலிப் பணி, எலும்பு முறிவு மருத்துவச் செவிலிப்பணி, நரம்பு அறுவை மருத்துவச் செவிலிப் பணி முதலிய பல்வேறு தனித் துறைகளில் செவிலியர்களுக்கு இந்தியாவிலும் அயல்நாடுகளிலும் பயிற்சியளிக்கப்படுகின்றது. இதுவரை செவிலிப் பணியாளர்கள், மன நோய் மருத்துவச் செவிலிப் பணியில் 29 பேர்களுக்கும் பொதுச் சுகாதாரச் செவிலிப் பணியில் 20 பேர்களுக்கும், சிசு நோய் மருத்துவச் செவிலிப் பணியில் 20 பேர்களுக்கும் பல் மருத்துவச் செவிலிப் பணியில் 10 பேர்களுக்கும் ஏனைய பல்வேறு தனித் துறைகளில் 21 பேர்களுக்கும் அயல் நாடுகளில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

## 23. கிண்டி கிங் நிலையம்.

கிங் நிலையம் இம்மாநிலத்திற்கு அம்மைப்பால் பணி மனையாகப் பணியாற்றும் பொருட்டு முதலில் அமைக்கப்பட்டது. ஆனால் இந்த நிலையம் இப்போது நோய்த் தடுப்பு மருந்து, நோய் எதிர்ப்பு ஊனீர், குருதி நிணநீர் (Blood Plasma), நோய்க் கிருமி ஒழிப்புக் கரைசல் முதலிய எதிர் நுண்மப் பொருள்களை (Biological Products) உற்பத்தி செய்கின்ற முக்கிய நிலையமாக வளர்ச்சியடைந்துள்ளது. இவற்றைத் தவிர, இம்மாநிலத்தில் நுண்ணுயிரியல் முறையில் நோய் அறுதி செய்தல், குருதி நிண நீரியல் முறையில் நோய் அறுதி செய்தல் ஆகியவற்றுக்கு வசதியில்லாத நிறுவனங்கள் அனைத்திடமிருந்தும் வருகின்ற மாதிரிகளைக் கொண்டு நோய் அறுதி செய்யும் பணியையும் இந்த நிலையம் மேற்கொண்டுள்ளது. இது பட்ட மேற்படிப்புப் பயிற்சி ஆராய்ச்சி நிலையமாகவும் செயல்பட்டு வருகின்றது. மருத்துவச்சார்பற்ற பட்டதாரிகளுக்கு (நுண்மையியல்) எம். டி. படிப்பிலும் (நுண் உயிரியல்) எம்.எஸ்ஸி.படிப்பிலும் பட்ட மேற்படிப்புப் பயிற்சியளிக்கும் நிலையமாகவும் இதற்கு ஏற்பளிக்கப்பட்டுள்ளது.

## 24. நாட்டு மருத்துவக் கல்லூரி.

சென்னை கீழ்ப்பாக்கத்தில் இருந்த ஒருங்கிணைந்த மருத்துவக் கல்லூரியை மூடி விட்டதைத் தொடர்ந்து, நாட்டு முறை மருத்துவத்தில் பட்டம் அளிக்கத்தக்க பயிற்சி அளிப்பதற்கான ஒரு நிறுவனத்தை தொடங்க வேண்டிய தேவை ஏற்பட்டது. இந்தத் தேவையை நிறைவேற்றும் பொருட்டு அரசாங்கம், பி.ஐ.எம். (B. I. M.) பட்டப் படிப்பில் பயிற்சியளிப்பதற்காக நாட்டுமுறை மருத்துவக் கல்லூரி ஒன்றை பாளையங்கோட்டையில் தொடங்கியது. இக்கல்லூரியில் சித்த ஆயுர்வேத, யூனானி ஆகிய மூன்று வகை மருத்துவத்தில் சுத்த முறையில் பயிற்சியளிக்கப்படும்.



எனினும், இக்கல்லூரியில் ஆயுர்வேத, யூனானிபிரிவுகளில் சேர்ந்து பயிற்சி பெறுவதற்குத் தகுதியுள்ள மாணவர்கள் முன்வரவில்லை. ஆகவே, இக் கல்லூரி 1964-ம் ஆண்டு அக்டோபர் திங்களில் சித்த மருத்துவப் பிரிவுடன் மட்டுமே தொடங்கப்பட்டது. மாணவர்களுக்கு மாதத்திற்கு ரூபாய் 75 வீதம் பயிற்சி உதவிப் பணம் வழங்கப்படுகிறது.

## 25. அயல்நாடுகளில் மேல் பயிற்சி.

கொழும்புத் திட்டம், உலகச் சுகாதார நிறுவனம் முதலிய பல்வேறு உதவித் திட்டங்களின்கீழ் வழங்கப்படுகின்றவசதிகள் அரசாங்கத்தால் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. 1960 முதல் 1967 வரையுள்ள கால அளவில் மொத்தம் 49 மருத்துவ அதிகாரிகள் அயல்நாடுகளில் பயிற்சிக்கு அனுப்பப்பட்டனர்.

## 26. கல்விக்கான கடன்களும் படிப்புஉதவித் தொகைகளும்.

உயர் கல்வியில் சிறப்பாக தொழில்நுட்பப் படிப்பிலும் தொழிற் படிப்பிலும் இயல்பான ஆர்வமுடைய, சராசரி நிலைக்கு மேம்பட்ட திறனுடைய பல மாணவர்கள் போதிய பொருள் வசதியற்ற காரணத்தினால் அத்தகைய கல்வியைத் தொடர்ந்து பயில இயலாத நிலையில் உள்ளனர். இம்மாநிலத்தில் அத்தகைய மாணவர்களுக்கு உதவியளிக்க வேண்டியதன் தேவையை உணர்ந்து, மருத்துவக் கல்லூரி போன்ற தொழிற் கல்லூரிகளில் படிக்கின்ற மாணவர்களுக்கு வட்டியில்லாக் கடன் வழங்குவதற்கான ஒரு திட்டத்திற்கு அரசாங்கம் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

(i) விண்ணப்பம் செய்கின்றபோது மாநில அரசாங்கத்தில் பணியாற்றும் அரசிதழ்ப்பதிவு பெறாத அலுவலர்களின் பிள்ளைகள் ;

(ii) விண்ணப்பம் செய்யும்போது, ஏற்பளிக்கப்பட்ட தொடக்கப்பள்ளிகளிலும் உயர்நிலைப் பள்ளிகளிலும் பணியில் உள்ள ஆசிரியர்களின் பிள்ளைகள் ;

(iii) ஆண்டிற்கு 1,500 ரூபாயும் அதற்குக் குறைவாகவும் வருவாய் பெறுகின்ற பெற்றோர்களின் பிள்ளைகள் ஆகிய அனைவரும் இத் திட்டத்தின்கீழ் கடன் பெறத் தகுதியுடையவர்களாவர். 1966–67 கல்வியாண்டின்போது இக்கடன் வழங்குவதற்காக ரூபாய் 1,85,000 செலவிடப்பட்டது.

(iv) மருத்துவக் கல்லூரிகளில் படிக்கின்ற அரசியல் தியாகிகளின் பிள்ளைகளுக்கும், இளநிலை படைப் பொறுப்பு அதிகாரிகள், ஏனைய சாதாரண நிலைப் படைவீரர்கள் ஆகியோரின் பிள்ளைகளுக்கும், கல்வி உதவித் தொகைகளும் கல்விச் சலுகைகளும் வழங்கப்படுகின்றன.

## 27. மருத்துவமனைகளில் படுக்கைகளின் எண்ணிக்கை.

இம்மாநிலத்தில் உள்ள அரசாங்க மருத்துவ மனைகளில் படுக்கைகளின் எண்ணிக்கை படிப்படியாகப் பெருகி வந்துள்ளது. இம் மாநிலத்தில் உள்ள அரசாங்க மருத்துவ நிறுவனங்களில் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் போதும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்போதும் 8,918 படுக்கைகள் கூடுதலாக்கப்பட்டன. இதனால் இந்த நிறுவனங்களில் படுக்கைகளின் மொத்த எண்ணிக்கை 16,873 ஆக உயர்ந்தது. மூன்றாவது திட்டக்காலத்தில் 3,055 படுக்கைகள் கூடுதலாக்கப்பட்டன. எனவே, நான்காவது திட்டக்காலத்தின் தொடக்கத்தில் இம்மாநிலத்திலுள்ள அரசாங்க மருத்துவ மனைகளில் படுக்கைகளின் மொத்த எண்ணிக்கை 19,928 ஆக இருந்தது. 1966–67-ம் ஆண்டிலும் 1967–68-ம் ஆண்டிலும் மேலும் 211 படுக்கைகள் கூடுதலாக ஏற்படுத்தப்பட்டன. இதனால் படுக்கைகளின் மொத்த எண்ணிக்கை 20,139 ஆக உயர்ந்தது.

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1968 மார்ச் 12

## 28. தொழு நோய்.

(i) தொழு நோய் பீடிக்கப்பட்டவர்களுக்கு அவர்கள் வீட்டிலேயே டி. டி. எஸ். (D.D.S.) முறை கொண்டும் பிற முறைகள் கொண்டும் சிகிச்சை அளித்தலின் அடிப்படையில் நவீன முறையில் தொழுநோய்க் கட்டுப்பாட்டுப்பணி நடைபெற்று வருகிறது.

அதாவது, தொழு நோய் எந்த அளவுக்குப் பரவியுள்ளது என்பதைக் கண்டறியும் ஆய்வு, இந்த நோய் குறித்தும், இந்த நோய் பற்றியவர்களுக்கு மறு வாழ்வு அளிப்பது பற்றியும் பொது மக்களுக்கு அறிவுரை வழங்குதல், இயன்றபோதும் அவசியமான இடத்தும் தொழு நோயாளிகளுக்கு மறு வாழ்வு அளித்தல் ஆகியவற்றின் அடிப்படையில் இந்த பணி மேற்கொள்ளப்படுகிறது. இக் கோட்பாட்டின் அடிப்படையில் இம் மாநிலத்திலுள்ள மாவட்டங்கள் அனைத்திலும் இயங்கும் தொழு நோய் சிகிச்சைப் பிரிவுகள் நிறுவப்பட்டன. இரண்டாவது திட்டக் காலத்தில், 50,000 பேரைக் கவனித்துக் கொள்ள 14 இடங்களில் தொழு நோய் சிகிச்சைத் துணை நிலையங்கள் நிறுவப்பட்டன. ஒவ்வொரு நிலையத்திலும் மருத்துவ அதிகாரி ஒருவரும், துணை மருத்துவப் பணியாளர் மூவரும் பணி புரிவர்- மூன்றுவது திட்டக் காலத்தில் 7 இடங்களில் மொத்தம் 150,000 பேருக்குச் சிகிச்சை அளிப்பதற்காக விரிவான மருத்துவப்பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டன. இவற்றில் பயிற்சி பெற்ற மருத்துவ அதிகாரி ஒருவரும், அவருக்குத் துணையாக 11 துணை மருத்துவப் பணியாளர்களும் பணி புரிகின்றனர். இயற்கை மருத்துவ வசதிகளும், மருத்துவமனை வசதிகளும் இங்கு உள்ளன. 1966–67-ல் அத்தகைய ஏழு பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவைதவிர, பொது மருந்தகங்களுடன் இணைக்கப்பட்டுள்ள " ஆய்வு, கல்வி, சிகிச்சைப் பிரிவுகள் " எனப் பெயர் சூட்டப்பட்டுள்ள சிறு பிரிவுகள் 18 இடங்களில் தொடங்கப்பட்டுள்ளன.

(ii) துணை மருத்துவப் பணியாளர்கள், மருத்துவத்தின் கீழ் வராத மேற்பார்வையாளர்கள் ஆகியவர்களுக்குப் பயிற்சியளிக்கும் திட்டங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இதுவரை இவ்வாறு 136 பேர் பயிற்சி பெற்றனர். இவர்களில் ஐவர் மருத்துவததின் கீழ் வராத மேற்பார்வையாளர்கள் ஆவர். 131 பேர் துணை மருத்துவப் பணியாளர்கள் ஆவர்.

## 29. காச நோய்.

காச நோய் சிகிச்சையில் பெருத்த முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. காச நோய்க் கட்டுப்பாடு பற்றிய கருத்தில் பெரும் புரட்சி ஏற்பட்டுள்ளது. இதை இப்போது சமுதாய நோக்குடன் அணுகுகிறோம். காச நோயால் வருந்துகிறவர்களின் இல்லத்திலேயே இப்போது அவர்களுக்குச் சிகிச்சை அளிக்கப்படுகிறது. மருத்துவர்களை நாடிச் சென்று மருத்துவமனையில் சேர்ந்து சிகிச்சை பெறும் முறை குறைந்து வருகிறது. இம் மாநிலத்தில் காச நோயைப் பயனுள்ள வகையில் கட்டுப்படுத்துவதற்காகவும், பெரும்பாலான காச நோயாளிகளுக்கு அவர்கள் இல்லங்களிலேயே சிகிச்சையளிப்பதற்கென இந்திய அரசு வழங்கும் நிதி உதவியைப் பயன்படுத்திக் கொள்வதற்காகவும், இம்மாநிலத்தில் தருமபுரி நீங்கலாக மற்ற மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொன்று வீதம் காச நோய் சிகிச்சை நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

காச நோய் மருத்துவம் செயல் விளக்கப் பயிற்சி நிலையம் ஒன்று 1963-ம் ஆண்டிலேயே இம்மாநிலத்திற்கென சென்னை, சேத்துப்பட்டில் தொடங்கப்பட்டது. இந்நிலையத்தில் காச நோயால் வருந்துபவர்களுக்குச் சிகிச்சை அளிக்கப்படுவதுடன் அவர்களின் வீடுகளுக்குச் சென்றும் இந்நிலையத்தினர் சிகிச்சை செய்கின்றனர். மேலும், சென்னை மாநகரில் உள்ள காச நோய் சிகிச்சை சாலைகள் அனுப்பும் நோயாளிகளைப் பரிசோதித்துப் பார்த்து ஆலோசனை நல்கும் நிலையமாகவும் இது பணியாற்றுகின்றது.



1968 மார்ச 12] [திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா]

இம் மாநிலத்திலே வட்டத் தலைமையிட மருத்துவ மனைகளில் நுரையீரல் சிகிச்சை சாலைகள் பத்தினை ஏற்படுத்த வேண்டுமென இலக்கிடப்பட்டதில், ஏற்கனவே அருப்புக்கோட்டையில் ஒன்றும் புதுக்கோட்டையில் ஒன்றுமாக இத்தகைய இரண்டு சிகிச்சைச் சாலைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. நுரையீரல் மருத்துவச் சாலைகள் மூன்றினைத் திருவண்ணாமலை, பூவிருந்தவல்லி, திண்டுக்கல் ஆகிய இடங்களில் நிறுவ அரசாங்கம் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இச்சிகிச்சைச்சாலைகளுக்கென கட்டிடங்கள் 1967–68-ம் ஆண்டில் முடிக்கப்பட்டன. இவை அடுத்த ஆண்டில் செயல்படத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## 30. தலநிதி மருத்துவ நிறுவனங்களை அரசாங்கம் மேற்கொள்வது.

(i) வட்டத் தலைமையிடம் ஒவ்வொன்றிலும் நவீன சாதனங்கள் நிறைந்த மருத்துவமனை ஒன்றை நடத்தி வரவேண்டும் என்பது அரசாங்கத்தின் கொள்கை. இதனையொட்டி வட்டத் தலைமையிட மருத்துவ மனைகள் அனைத்தையும் ஏறகனவே அரசு மேற்கொண்டுள்ளது. மேலும் 1958-ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தின் விதித்துறைகளின் கீழ் ஊராட்சி ஒன்றியங்களை நிறுவியதன் பலனாக, 105 உள்ளாட்சி நிதி மருத்துவ நிறுவனங்கள் 1960–61, 1961–62, 1962–63-ம் ஆண்டுகளில் அரசாங்க ஆளுகையின் கீழ் மாற்றப்பட்டன. 1965–66-ல் நகராட்சி மருத்துவ மனைகள், இரண்டு,ஊராட்சி மருத்துவ மனைகள் மூன்று, தனியார் மருத்துவமனை ஒன்று ஆக ஆறு மருத்துவ மனைகள் அரசாங்கம் மேற்கொண்டது. 1967–68-ல் குமாரபாளையத்திலுள்ள ஊராட்சி ஒன்றிய மகப்பேறு நிலையத்தையும், செய்யாற்றிலும், தொண்டியிலும் உள்ள ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களையும் மேற்கொள்ளும் திட்டத்திற்கு ஒப்பளிப்புவழங்கப்பட்டுள்ளது.

(ii) 1958-ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தின் கீழ் கிராமப் பகுதிகளில் மருத்துவ வசதி ஏற்படுத்துவது ஊராட்சி ஒன்றியத்தின் பொறுப்பாகும். ஆனால், நடைமுறையில் பார்க்கப்போனால், கீழ்க்கண்ட நிறுவனங்கள் வாயிலாக மருத்துவ வசதிகளை அரசாங்கமும், ஊராட்சி ஒன்றியங்களும் நல்கி வருகின்றன. அரசாங்க மருத்துவமனைகள், மருந்தகங்கள், ஊராட்சி ஒன்றியங்கள் பேணிவரும் ஆரம்பச் சுகாதார நிலையங்கள், மருந்தகங்கள் ஆகியவை அந்த நிறுவனங்கள் ஆகும். இம் மாநிலத்தின் கிராமப்புறங்களில் மருத்துவ வசதியை ஏற்படுத்தவும் மேம்படுத்தவும் கிராமங்களிலே மருத்துவ வசதிகளைப் பெருக்கவும் இந்த அரசாங்கம் ஒல்லும் வகையெல்லாம் முயலும்.

## 31. மருத்துவ மானியங்களும் கடன்களும்.

தனியார் துறையிலுள்ள மருத்துவ மனைகளுக்கும் உள்ளாட்சி மன்ற மருத்துவ நிலையங்களுக்கும் அரசாங்கம் மானியம் வழங்கி வருகிறது. மருத்துவ மனைகளைச் சரிவர நடத்தி வருவதற்காகவும், கட்டிடங்கள் கட்டுவதற்காகவும், கருவிகள் வாங்குவதற்காகவும் இந்த மானியங்கள் வழங்கப்படுகின்றன. 1968–69-ல் இவ்வகையில் ரூ. 31 லட்சம் செலவாகுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

## 32. மருத்துவம் கற்பிக்கும் மருத்துவ மனைகளுக்கு மேம்பாடு செய்தல்.

(i) இருதய நோய்களுக்கு நல்ல முறையில் சிகிச்சை செய்வதற்கு வகை செய்யும் பொருட்டு இருதய நோய்ச் சிகிச்சைப் பிரிவு ஒன்று அரசாங்கப் பொது மருத்துவமனையில் கட்டப்பட்டு வருகின்றது. இவ் வேலை அடுதத ஆண்டும் தொடர்ந்து நடத்தப்படும். ரூ. 7 லட்சம் செலவில் நரம்பு நோய் சிகிச்சைப் பிரிவுக்கான கட்டிடங்களைக் கட்ட அரசாங்கம் ஒப்புதல் வழங்கியுள்ளது. இது குறித்து சென்னை ஆரோக்கிய ஆசிரம சமிதி நன்கொடையாக வழங்கியுள்ள ரூ. 1·8 லட்சம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

(ii) சென்னை, அரசாங்கக் கண்நோய் மருத்துவமனையில் புதிய வெளி நோய்ப் பிரிவு ஒன்றை ரூ. 14 லட்சம் செலவில் கட்டும் வேலை வெகுவேகமாக நிறைவேறி வருகிறது. சென்னை ராயப்பேட்டையில் உள்ள அரசாங்க மருத்துவமனையில் ரூ. 6·25 லட்சம் செலவில் மூன்றடுக்குப் பிரிவு ஒன்றைக் கட்டும் வேலை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது குறித்து இந்த மருத்துவமனையின் பொன்விழாக்குழு அளித்துள்ள ரூ. 1·25 லட்சம்நன்கொடையும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. எலும்பு முறிவுப் பிரிவு, X கதிர் பிரிவு ஆகியவை குறித்த வெகுநாள் தேவையை இக்கட்டிடம் நிறைவு செய்கின்றது.

## 33. புதிய மருத்துவ மனைகளைக் கட்டுதல்.

(i) ரூ. 26·36 லட்சம் செலவில் 250 படுக்கைகள் கொண்ட சிறுவர் மருத்துவ மனைக்கு எழும்பூரில் கட்டிட வேலை முடியும் நிலையில் உள்ளது. தற்போது சென்னைப் பொது மருத்துவமனை, சென்னை மருத்துவக் கல்லூரி ஆகியவற்றில் பரவலாக அமைந்துள்ள சிசு நோய் மருத்துவ நிலையத்தின் பணிகளுக்கும், சிசுநோய் அறுவை சிகிச்சை முறை மேம்பாட்டுக்கும் சிறுவர்களின் நோய்கள் குறித்த நடவடிக்கைகள் ஆகியவற்றிற்கு இது உதவும்.

(ii) ஆம்பூர், ஸ்ரீபெரும்புதூர் அரசாங்க மருத்துவ மனைகளில் தற்போது உள்ள வசதிகளைப் பெருக்கும் நோக்குடன் இந்த மருத்துவ மனைகளுக்கான புதிய கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. தேனியில் புதிய மருத்துவமனை ஒன்றைக் கட்டும் பணியும், அறந்தாங்கியிலும் தேவக்கோட்டையிலும் தற்போது செயல்பட்டுவரும் மருத்துவமனைகளுக்காகப் புதிய கட்டிடங்கள் கட்டும் பணி 1968-69-ல் மேற்கொள்ளப்படும்.

## 34. அரசாங்க மருத்துவ மனைகளில் எக்ஸ் கதிர் பிரிவுகள் ஏற்படுத்தல்.

இம் மாநிலத்தில் புற்று நோய் சிகிச்சைக்கான வசதிகள் (Cobalt Therapy treatment) இதுவரை தனியார் மருத்துவமனைகளில்தான் இருந்தன. இத்தகைய வசதிகள் குறிப்பாக ஏழைகளின் நலனுக்காக, சில அரசாங்க மருத்துவ மனைகளிலும் ஏற்படுத்த வேண்டும் எனக் கருதப்பட்டது. சென்னையில் உள்ள அரசாங்கப் பொது மருத்துவ மனையில் இப்போது இத்தகைய சிகிச்சைப் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. மதுரையில் உள்ள அரசாங்க எர்ஸ்கின் மருத்துவ மனைக்காகவும், சென்னையிலுள்ள மகளிர்-சிசுநல அரசாங்க மருத்துவ மனைக்காகவும் இத்தகைய பொறிகள் இரண்டினை வாங்க ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இக்கருவிகளை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதற்கான உரிமம் கிடைத்தவுடன் இந் நிறுவனங்களுக்காக இத்தகைய கருவிகள் வாங்கப்படும். 1968-69-ல் சென்னை, அரசாங்க ஸ்டான்லி மருத்துவ மனைக்காக இத்தகைய கருவி வாங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டில் மொத்தம் ரூ. 8·60 லட்சம் செலவில் எக்ஸ்-கதிர பொறிகளை வாங்குவதற்காகவும் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. மருத்துவம் கற்பிக்கும் மருத்துவ மனைகளுக்காக ரூ. 5 லட்சம் செலவிலும், மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகளுக்காக ரூ. 2·60 லட்சம் செலவிலும், வட்டத் தலைமையிட மருத்துவ மனைகளுக்காக ரூ. 1 லட்சம் செலவிலும் இக்கருவிகளை வாங்க ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

## 35 நீராவி சலவைச் சாலைகள்.

மதுரை அரசாங்க எர்ஸ்கின் மருத்குவ மனையிலும், தாம்பரம் காச நோய் மருத்துவ மனையிலும் நீராவிச் சலவைச் சாலைகளை ஏற்படுத்த அரசாங்கம் ஒப்புவிப்பு வழங்கியுள்ளது. இது குறித்த வேலைகள் நிறைவேறி வருகின்றன. 2968-69-ல் சென்னை இராயப்பேட்டையில் உள்ள அரசாங்க மருத்துவமனையில் நீராவி சலவைச் சாலையை ரூ. 1·30 லட்சம் செலவில் நிறுவி ஒப்புவிப்பு வழங்கத் நிட்டமிடப்பட்டுள்ளது.





## 36. ஆய்வுக் கூடங்கள்.

மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகளில் பொதுச் சுகாதார ஆய்வுக் கூடங்களை நிறுவ இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தலைமை ஆய்வுக் கூடம் கோயம்புத்தூரில் செயல்படும். மருத்துவ, பொதுச்சுகாதார அதிகாரிகளும் பிற சுகாதாரப் பிரிவுகளும் அனுப்பும் நுண்ணுயிர்கள், நிணநீர், சிகிச்சைப் பொருள்கள் இந்த ஆய்வுக்கூடங்களில் பரிசீலனை செய்யப்படும். வேலூர், பாளையங்கோட்டை, சேலம், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், நாகர்கோயில், கடலூர், திண்டுக்கல் ஆகிய இடங்கள் ஒவ்வொன்றிலும் ஒன்றாக எட்டு மாவட்ட ஆய்வுக் கூடங்கள் தொடங்கப்பட்டன. கோயம்புத்தூரில் தலைமை ஆய்வுக்கூடத்திற்கான கட்டிட வேலை மூன்றாவது திட்டக் காலத்தில் முடிக்கப்பட்டது. இக்கட்டிடத்தில் மேசை, நாற்காலிகள், எரிவாயுப்பொறி (Gas plant), மின்சார சாதனங்கள், உயர் அழுத்த மின்சக்தி வழங்கல், குளிர் பதன வசதிகள் போன்றவற்றை அமைக்கும் வேலை இப்பொழுது நடைபெறுகிறது. இந்த ஆய்வுக்கூடத்திற்கு அவசியமான கருவிகள் வாங்கப்பட்டு, பணியாளர்களும் நியமிக்கப்படுவர். இந்த ஆய்வுக்கூடம் 1968-69-ம் ஆண்டில் செயல்படத் தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

## 37. கண் சேமிப்பு நிலையங்கள்

சென்னையிலுள்ள அரசாங்கக் கண்நோய் மருத்துவ மனையில் ஒன்றும் ஸ்டான்லி மருத்துவ மனையில் ஒன்றும் மதுரையிலுள்ள அரசாங்க எர்ஸ்கின் மருத்துவ மனையில் ஒன்றும் ஆக மூன்று கண் சேமிப்பு நிலையங்கள் இம்மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றன.

## 38. குருதி சேமிப்பு நிலையங்கள்.

செங்கற்பட்டு, கரூர், விருதுநகர், காஞ்சிபுரம், பழனி ஆகிய இடங்களில் குருதி சேமிப்பு நிலையங்களை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் 1966-67-ல் ஒப்பளிப்பு வழங்கியது. இக்குருதி சேமிப்பு நிலையங்கள் ஏற்கனவே நிறுவப்பட்டுவிட்டன. அவை 1967-68-லும் தொடர்ந்து செயல்படும். தற்போது இம்மாநிலத்தில் மொத்தம் 23 குருதி சேமிப்பு நிலையங்கள் செயல்பட்டுவருகின்றன.

## 39. மாற்று மின்சக்தி உற்பத்திப் பொறிகளை நிறுவுதல்.

மின்சக்தி வழங்கல் நிலைமை தடைப்படுகையில் அரசாங்க மருத்துவ மனைகளில் வேலை தடைப்படுகின்றது. இதன் மூலமாக நோயாளிகளும் பணியாளர்களும் பிறரும் அவதியுறுகின்றனர். இத்தகைய நிலை ஏற்படாது தவிர்ப்பதற்காக, முதற்கண் பெரிய அரசாங்க மருத்துவமனைகளிலாவது மாற்று மின்சக்தி உற்பத்திப் பொறிகளை நிறுவுவது அவசியமெனக் கருதப்படுகிறது. சென்னை அரசாங்கப் பொது மருத்துவமனை, தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி, கிண்டி கிங் நிறுவனம் ஆகியவற்றிற்காக மாற்று மின்சக்தி உற்பத்திப் பொறிகளை நிறுவ ஒப்புதல் வழங்கப்பட்டது. இத்தகைய பொறி ஒன்றை மதுரையிலுள்ள அரசாங்க எர்ஸ்கின் மருத்துவ மனையில் நிறுவ 1968-69-ல் ஒப்பளிப்பு வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இம் மாநிலத்திலுள்ள பிற பெரிய அரசாங்க மருத்துவ. மனைகளுக்கும் இவ் வசதி படிப்படியாக நீடிக்கப்படும்.

## 40 சுற்றியங்கும் மருத்துவப் பிரிவுகள்

தமிழ் நாட்டில் தற்போது சுற்றியங்கும் பதினொரு மருத்துவப் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. போதுமான மருத்துவ வசதிகள் இல்லாத பழங்குடி மக்கள் வாழும் பகுதிகளிலும், தொன்மை மிக்க ஏனைய பகுதிகளிலும் அவை நோயாளிகளுக்கு மருத்துவ உதவிகள் அளிக்கின்றன.

[திரு. எஸ்.ஜே. சாதிக் பாட்சா] [1968 மார்ச் 12

### 41 தொழிலாளர் அரசாங்க காப்புறுதித் திட்டம்

(i) தொழிலாளர் அரசாங்கக் காப்புறுதித் திட்டம் முதன் முதலில கோயம்புத்தூரில் 1955 ஜனவரியில் செயலுக்குக் கொண்டு வரப்பட்டது. இத் திட்டத்தின் கீழ் தற்போது 1,07,000 பேர்களும், 2,23,300 குடும்பத் தினரும் காப்புறுதி செய்து கொண்டுள்ளனர். 1967–68-ம் ஆண்டில் இத் திட்டத்தை திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள வரகனேரி கிராமம், கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள மயிலேரிப்பாளையம், மதுரை மாவட்டத் திலுள்ள பரவை, தேனூர், சமயநல்லூர் ஆகிய புதிய பகுதிகளுக்கு அர சாங்கம் விரிவுபடுத்தியுள்ளது. சென்னை மாநகரிலும் அதைச் சேர்ந்த புறநகர்களிலும் காப்புறுதி செய்து கொண்டவர்களின் குடும்பத்தினருக் கும், இத்திட்டத்தின் கீழ் மருத்துவமனை வசதிகள் உட்பட மருந்து வசதி கள் அளிப்பதை அரசாங்கம் விரிவு படுத்தியுள்ளது. இம்மாநிலத்தில், காப்புறுதி செய்து கொண்டவர்களின் குடும்பத்தினருக்கு இத்திட்டத்தின் கீழ் மருத்துவ மனை வசதிகள் அளிப்பது இதுவே முதல் முறையாகும். இத்திட்டத்தை மேலும் சிலைமான், கப்பலூர், கரிசல்குளம், கோயில்பட்டி, ஆரணி, ஓடப்பல்லி, பள்ளிப்பாளையம், பல்லடம் ஆகிய புதிய பகுதிகளுக்கு விரிவுபடுத்துவதற்கு அரசாங்கம் ஆணையிட்டுள்ளது. இந்த இடங்களில் விரைவில் இத் திட்டம் நிறைவேற்றப்படும்.

(ii) தொழிலாளர் அரசாங்க காப்புறுதி நோயாளிகளுக்கென்றே, சென்னை மாநகரத்தில் நவீன வசதிகள் நிறைந்த, 200 படுக்கைகளுடன் கூடிய மருத்துவமனை ஒன்று 1962 எப்ரல் முதலே செயல்பட்டு வருகின் றது. சென்னை மாநகரத்திலும் அதைச் சேர்ந்த புறநகர்களிலும், காப் புறுதி செய்து கொண்டவர்களின் குடும்பத்தினருக்கு இத்திட்டத்தை விரிவு படுத்தியதன் விளைவாக இந்த மருத்துவ மனையில் உள்ள படுக்கைகளின் எண்ணிக்கை 500 ஆக் உயர்த்தப்பட்டுள்ளது. கோடம்பாக்கம் புதூர் பகுதியில் தொழிலாளர் அரசாங்கக் காப்புறுதி மருத்துவமனை ஒன்றினைக் கட்டும் வேலை விரைவில் மேற்கொள்ளப்படும். கோயம்புத்தூர் தொழி லாளர் அரசாங்கக் காப்புறுதி மருத்துவ மனையில் 500 படுக்கைகள் இருக் கும். இந்த மருத்துவ மனைக் கட்டிடத்தின் கீழ்தளமும், முதல் மாடியும் கட்டி முடிக்கும் தறுவாயில் உள்ளன. மதுரையில், தொற்றுநோய் மருத்துவ மனை கூடுதல் கட்டிட வசதிகளுடன் தொழிலாளர் அரசாங்கக் காப்புறுதி மருத்துவ மனையாக மாற்றி அமைக்கப்பட்டு வருகிறது. தொழி லாளர் அரசாங்கக் காப்புறுதி நோயாளிகளுக்கென்றே நான்கு காச நோய் மருத்துவ மனைகளைக் கட்டவும் திட்டமிடப்பட்டுள்ளது.

(iii) கோயில்பட்டி அரசாங்க மருத்துவ மனையில் 32 படுக்கைகள் கொண்ட தொழிலாளர் அரசாங்கக் காப்புறுதி மருத்துவப் பிரிவு ஒன்று கட்டப்பட்டுள்ளது. நாகர்கோயில் அரசாங்க மருத்துவ மனையில், தொழி லாளர் அரசாங்கக் காப்புறுதித் திட்டத்தின் கீழ், 26 படுக்கைகள்கொண்ட காச நோய் மருத்துவ மனை ஒன்றைக் கட்டும் வேலை நிறைவெய்தும் நிலையிலுள்ளது. காவேரி நகர், உசிலம்பட்டி, ஆகிய இடங்களில் உள்ள தொழிலாளர் அரசாங்கக் காப்புறுதி மருந்தகங்களில், ஒவ்வொன்றிலும் 10 படுக்கைகள் கொண்ட பிரிவு ஒன்றைக் கட்டுவதற்கும், பெண்ணத்தூரில் (வட ஆர்க்காடு) அரசாங்கக் காச நோய் நலம் பேண் மருத்துவ மனையில் 26 படுக்கைகள் கொண்ட காச நோய்ப் பிரிவு ஒன்றைக் கட்டுவதற்கும் அரசாங்கம் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

தொழிலாளர் அரசாங்கக் காப்புறுதி மருந்தகங்களுக்காக 36 இடங் களில் கட்டிடங்கள் கட்டுவதற்கு அரசாங்கம் இதுவரை ஒப்பளிப்பு வழங்கி யுள்ளது; இவற்றில் 30 மருந்தகங்கள் ஏற்கனவே கட்டி முடிக்கப்பட்டு செயலில் உள்ளன. ஏனைய ஆறு இடங்களிலும் மருந்தகங்கள் கட்டும் பணி மேற் கொள்ளப்பட்டுள்ளது. இவை 1967–68-ல் முடிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் 42 இடங்களில் மருந்தகங்கள் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது. 13 அரசாங்க மருத்துவ மனைகளில் 16 படுக்கை கள் கொண்ட ஒவ்வொரு வார்டு கட்டவும் திட்டமிடப்பட்டுள்ளது.



1968 மார்ச் 12] [திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா]

(iv) தொழிலாளர் அரசாங்கக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் உள்ள மருத்துவ வசதிகளை கோயம்புத்தூர், மதுரை, விக்கிரமசிங்கபுரம், தூத்துக் குடிப் பகுதிகளில் குடியிருக்கும் காப்புறுதி செய்து கொண்ட குடும்பத் தினருக்கு படிப்படியாக விரிவு படுத்த அரசு எண்ணியுள்ளது.

### 42. குடும்பக் கட்டுப்பாடு.

(i) மருத்துவத் துறையைச் சேர்ந்த நிறுவனங்களில் 1967 எப்ரல் முதல் 1968 ஜனவரி வரையில் ஆண்கள் 41,107 பேருக்கும் மகளிர் 2,795 பேருக்கும் அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. மொத்தம் 2,082 பேருக்கு "லூப்" பொருத்தப்பட்டது. ஆண்கள் அறுவை சிகிச்சை முறை பற்றி கிராமப் பகுதிகளில் ஆலோசனை கூறப்பட்டது. இதனால் ஏற்பட்ட விளைவு ஊக்கமூட்டுவதாக உள்ளது.

(ii) இம்மாநிலத்திலுள்ள நகரம், மாவட்டம், வட்டம், தலைமையிடம் ஆகிய இடங்களிலுள்ள மருத்துவ மனைகள் அனைத்திலும் "லூப்" பொருத் தும் திட்டத்தை அரசாங்கம் தொடங்கியுள்ளது. சில நகராட்சி மருத்துவ நிறுவனங்களிலும் இத்திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. "லூப்" பொருத்திக் கொள்ளும் தாய்மார்களுக்கும், மருத்துவ அதிகாரிக்கும், முகவருக் கும் தொகை வழங்குவதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. சென்னை யிலுள்ள மகப்பேறு-மகளிர் நோயியல் நிறுவனத்திலும் மதுரையிலுள்ள அரசாங்க எர்ஸ்கின் மருத்துவ மனையிலும் "லூப்" பொருத்தும் திட்டத் தில் பயிற்சியளிக்கப்படுகிறது.

(iii) வேலூரிலும், கோயம்புத்தூரிலும் உள்ள அரசாங்கத் தலைமையிட மருத்துவ மனைகளில் கருத்தடைக் கருவிகள் வழங்கும் முன்னோடித் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இப்பணியினை மேற்கொள்ளும் இம்மாநில மருத்துவ அதிகாரிகளுக்கும் செவிலியருக்கும் ஏனைய தென்னிந்திய மாநிலங்களைச் சேர்ந்த மருத்துவ அதிகாரிகளுக்கும் சென்னையிலுள்ள தாய்-சேய் நல அரசாங்க மருத்துவ மனையுடன் இணைக்கப்பட்டுள்ள குடும்பக் கட்டுப்பாட்டு பயிற்சி நிலையத்தில் பயிற்சியளிக்கப்படுகிறது.

### 43. இந்திய மருத்துவ முறையை மேம்படுத்தல்.

எல்லா மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகளிலும் சித்த மருத் துவப் பிரிவைத் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது. முன்னோடித் திட்ட முறையில் திருச்சிராப்பள்ளி மாவட்டத் தலைமையிட மருத்துவ மனையில் பிரிவு ஒன்றை தொடங்க ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. சென்னையைச் சேர்ந்த அரும்பாக்கத்தில் 100 படுக்கைகள் கொண்ட இந்திய மருத்துவ மனை ஒன்றைக் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. கட்டிடப் பணி விரைவில் தொடங்கப்படும். தலைமைச் செயலகப் பணியாளர்களுக்காக செயலகத்தில் சித்த மருத்துவ மனை ஒன்று தொடங்கப்பட்டுள்ளது.

### 44. ஐந்தாண்டுத் திட்டம்.

(i) மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் மருத்துவத்திற்கென ரூ. 644·17 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது. அத்திட்டக் காலத்தில் ரூ. 667·03 லட்சம் செலவாகியது. மருத்துவ திட்டச் செலவில் பெரும் பகுதி கட்டிடம் கட்டுவதற்கே செலவிடப்படுகிறது. தேசிய நெருக்கடி காரண மாக இவ்வேலைகள் தள்ளிப்போடப்பட்டன. இருந்தும், மூன்றாவது திட்ட கால ஒதுக்கீட்டுத் தொகையைவிட 23 லட்சம் ரூபாய் அதிகம் செலவிடப் பட்டது. நான்காவது திட்டத்தில் மருத்துவத்திற்கென ரூ. 1,558·75 லட்சம் தாற்காலிக நிதி ஒதுக்கப்பட்டது. ஆண்டுத் திட்டங்களின் கீழ் 1966–67-ம் ஆண்டில் ரூ. 177·74 லட்சம் செலவிடப்பட்டது. 1967–68-ம் ஆண்டின் திருத்த மதிப்பீடு ரூ. 216·42 லட்சம் ஆகும். 1968–69 திட்ட வேலைகளின் கீழ் ரூ. 241·15 லட்சம் செலவிடப்படுமென மதிப்பிடப் பட்டுள்ளது. இது மட்டுமன்றி, மத்திய அரசு ஊக்குவிக்கும் திட்டங்கள் என்பதன் கீழ் மத்திய அரசின் பங்காக 1966–67-ம் ஆண்டில் ரூ. 114·25

லட்சம் செலவிடப்பட்டது. இதுபோல 1967–68-ம் ஆண்டு திருத்த மதிப்பீடு ரூ. 131·82 லட்சம் எனவும், 1968–69-ம் ஆண்டு வரவு-செலவு திட்ட மதிப்பீடு ரூ. 138·27 லட்சம் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

(ii) திட்ட நிதி ஒதுக்கம் முழுவதுமாகப் பயன்படுத்தப்பட்டு மருத்துவ வசதிகள் முன்பிருந்ததை விட அதிக அளவுக்கு பொது மக்களுக்கு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இம்மானியக் கோரிக்கையை ஏற்குமாறு இம்மான்றத்தினை நான் வேண்டுகின்றேன்.

***கோரிக்கை எண் 15 பொதுச் சுகாதாரம், 1968–69.**

கொள்கை.—நாடு விடுதலை அடைந்த பின்னர் மிகச் சேய்மையில் உள்ள கிராம மக்களுக்கும் சுகாதாரப் பணியின் நன்மைகள் கிட்டும் பொருட்டு, அடிப்படையான சுகாதாரப் பணிகள் அனைத்தையும்—விரிவுபடுத்துவதற்காகச் சுகாதார தேசீயத் திட்டங்கள் பல தொடங்கப்பட்டுள்ளன. சுகாதாரத் துறை இன்றியமையாத பணியாற்றும் துறைகளில் ஒன்றாகும். மக்கள் நோய்வாய்ப்படுவதைத் தடுக்கவும், மக்களின் சுகாதாரத்தை நல்ல முறையில் மேம்படுத்தவும் எடுக்கப்படுகிற நடவடிக்கைகள் அனைத்தும் இத் துறையைச் சார்ந்தவையே.

2. இம் மாநிலத்திலும் பொதுவாக இந்த நாட்டிலும் பரவியுள்ள மலேரியா, பெரியம்மை, வாந்திபேதி போன்ற அச்சந்தரத்தக்க நோய்களை அறவே ஒழிப்பதற்காக தேசீய நிலையிலும் மாநில நிலையிலும் பல்வேறு திட்டங்களை சுகாதாரத் துறை நிறைவேற்றியுள்ளது. இந்தத் துறையிலே மேற்கண்ட நடவடிக்கைகளின் பயனும் பெருமளவில் வெற்றி கிட்டியுள்ளது. இதனால் மக்களின் ஆயுட்காலம் நீண்டுள்ளது. யானைக்கால் நோய், நரம்புச்சிலந்தி நோய் வெகுவாகக் குறைந்துவிட்டன. முப்பால் அம்மை குத்தும் திட்டம், பி.சி.ஜி. அம்மை குத்தும் திட்டம் போன்ற திட்டங்களின் பலனாக, குழந்தைகளுக்கு ஏற்படும் கக்குவான், தொண்டைக்கட்டி நோய் போன்ற பல நோய்கள் மிகவும் குறைந்துள்ளன. பள்ளிச் சுகாதாரப் பணியின் காரணமாகவும் பேறு கால மகளிர் முதலியவர்களுக்கு ஆடை எடுத்த பால் போன்ற துணை உணவுப் பொருள்களை வழங்குதல் போன்ற பணிகளின் காரணமாகவும் மக்களின் உடல் நலன் பெரிதும் மேம்படுத்தப்பட்டுள்ளன. சுற்றுப்புறச் சுகாதாரத்தை மேம்படுத்துவது குறித்தும் பாதுகாக்கப்பட்ட தூயநீர் வழங்குவது குறித்தும் இப்போது நாட்டம் செலுத்தப்பட்டு வருகிறது.

3. பிறப்பு, இறப்புப் புள்ளி விவரங்களைத் திரட்டும் பணியைத் திறம்படச் செய்வதற்கு இப்போது முயற்சிகள்மேற்கொள்ளப்பட்டுப் வருகின்றன. குடும்ப நலத் திட்டம் போன்ற சுகாதாரத் திட்டங்களால் வாழ்க்கை எந்த அளவு மேம்பட்டுள்ளது என்பதை மதிப்பிடுவதற்கு இப் புள்ளி விவரங்கள் பெரிதும் உதவும். பிறப்பு, இறப்புப் புள்ளி விவரங்களில் பற்றுள்ள அனைவருக்கும் பிறப்பு இறப்புப் புள்ளி விவரக் கழகம் பயிற்சி அளித்து வருகிறது. பிறப்பு இறப்புப் புள்ளி விவரங்களைப் பதிவு செய்ய வேண்டியதன் முக்கியத்துவத்தைப் பொதுமக்கள் இப்போது நன்றாக உணர்ந்து வருகின்றனர். சுகாதாரத் துறை ஆற்றி வரும் பணிகளின் முக்கிய கூறுகளைப் பற்றி இப்போது விளக்க முற்படுகின்றேன் :—

## I. பரவும் நோய்களைக் கட்டுப்படுத்தல்

4. தொத்து நோய்களையும் கொள்ளை நோய்களையும் தடுப்பதும் கட்டுப்படுத்துவதும் சுகாதாரத்தை நன்முறையில் மேம்படுத்துவதும் சுகாதாரத் துறையின் முக்கியமான அலுவல்களாகும். இம்மாநிலத்திலே அதிகமாகப் பரவியுள்ளவை கொள்ளை நோய்கள், வாந்திபேதி, பிளேக், பெரியம்மை முதலியனவாகும்.

* அச்சிட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட உரை.



### (1) வாந்திபேதி.

5. ஆற்றுச் சங்க முகங்களில் உள்ள மாவட்டங்கள், இம் மாநிலத்தில் இந் நோய் பரவும் பகுதிகளாக உள்ளன. இம் மாநிலத்தில் வாந்திபேதி பரவுதல் இத்துறை எடுத்துக் கொண்ட பயனளிக்கும் நடவடிக்கைகளின் விளைவாக 1967–68-ம் ஆண்டில் பெரிதும் குறைந்து விட்டது. வாந்திபேதியால் பெரிதும் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குப் பணியாளர்களையும், மருந்துகள், கருவிகள் முதலியவற்றையும் விரைந்து எடுத்துச் செல்வதற்குக் கொள்ளை நோய் ஒழிப்பு இயங்கும் பிரிவுகள் பெரிதும் பயன்பட்டன. கொள்ளை நோய்கள் அதிகம் பரவக்கூடிய பகுதிகளான தஞ்சாவூர், தென்னார்க்காடு, திருச்சிராப்பள்ளி மாவட்டங்களிலே வாந்திபேதி காணுவதற்கு முன்னரே தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக வாந்திபேதி ஒழிப்புப் பிரிவுகள் மூன்றினுக்கு அரசாங்கம் ஒப்பளிப்பு வழங்கியது. இந்தப் பிரிவுகளில் மருத்துவ அதிகாரி ஒருவரும், பொதுச் சுகாதாரச் செவிலியர் ஒருவரும், தேர்வுத் தர சுகாதார மேற்பார்வையாளர் ஒருவரும், நான்கு சுகாதார மேற்பார்வையாளர்களும் இருப்பர். இவர்கள் பிணியாளர்களுக்கு அவர்கள் இருக்கும் இடங்களிலேயே சிகிச்சை அளிப்பர். இத்தகைய பிரிவு ஒன்று ஏற்கெனவே அமைக்கப்பட்டு தஞ்சாவூரில் இப்போது செயலாற்றி வருகிறது. 1968–69-ம் ஆண்டில் அமைக்கப்படவிருக்கும் ஏனைய இரு பிரிவுகள் தென்னார்க்காடு, திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் செயலாற்றும்.

### (2) பிளேக்.

6. சென்ற ஆண்டைப் போலவே இந்த ஆண்டிலும் இம்மாநிலத்தில் பிளேக் இல்லை.

7. நீலகிரி, தருமபுரி மாவட்டங்களும், கோயம்புத்தூர் மாவட்டத்தின் சில பகுதிகளும் பிளேக் ஏற்படக்கூடிய பகுதிகள் ஆகும். இப்பகுதிகளில் பிளேக் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. பிளேக் தடுப்பு நடவடிக்கைகளில் பயன்படுத்துவதற்காகப் போதுமான மருந்துகளும் கருவிகளும் வாங்கிச் சேகரித்து வைத்துப் பயன்படுத்தப்பட்டன.

8. ஒரு சில சுகாதார மேற்பார்வையாளருக்கு பிளேக் தடுப்பு நடவடிக்கைகளில் ஒவ்வோராண்டும் பயிற்சி அளிப்பதற்காக தருமபுரி மாவட்டத்திலுள்ள ஒசூரில் பயிற்சிப் பிரிவு ஒன்று உள்ளது. சில ஆண்டுகளுக்கு முன்னர் இந்த நோயினால் ஏராளமானவர் உயிரிழந்து வந்தனர். சுகாதாரத் துறை எடுத்துக்கொண்ட பயன் தரும் நடவடிக்கைகள் காரணமாக இது இப்போது தவிர்க்கப்பட்டுள்ளது.

### (3) பெரியம்மை.

9. பெரியம்மை ஒழிப்புத் தேசியத் திட்டம் 1964-ம் ஆண்டு மார்ச்சுத் திங்களில் செயல்படுத்தப்பட்டன. அதன் பின் இம் மாநிலத்தின் எல்லாப் பகுதிகளிலும் உள்ள குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும் படிப்படியாக அம்மை குத்தும் பணி மும்முரமாக நடைபெற்றது.

10. பெரியம்மை ஒழிப்புத் தேசீயத் திட்டத்தினால் ஏற்பட்ட பலனை நிலை நிறுத்தும் நடவடிக்கை இரண்டாவது ஆண்டிலும், அதாவது 1967–68-லும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது. இம் மாநிலம் எங்கணும் அனைவருக்கும் முனைப்பாக அம்மை குத்தப்பட்டு வருகிறது.

11. இந்த ஆண்டிலே பெரியம்மை பரவுவது அநேகமாகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

12. இம் மாநிலத்தில் இந்த நோய் இனியும் ஏற்படாமல் இருக்க வேண்டுமானால், இவ்வேலைத் திட்டத்தைத் தொடர்ந்து நடத்துவது அவசியமாகும். இந்த வேலைத் திட்டம் இடையீடின்றி நடைபெற்றுள்

ளதால் இந்த நோயினைக் கட்டுப்படுத்துவதில் நாம் நல்ல வெற்றி கண்டுள்ளோம். சில மாநிலங்களிலே பெரியம்மை ஒழிப்பு தேசியத் திட்டப் பணியாளர்கள் சிறிது காலம் மக்களுக்குப் பெருவாரியாக அம்மை குத்திய பின்னர் திரும்பப் பெறப்பட்டு இத் திட்டத்தால் பெற்ற பயனை நிலை நிறுத்துவதற்கான பொறுப்பை ஏனைய பொதுச் சுகாதார பணியாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. அந்த மாநிலங்களிலே மீண்டும் பெரியம்மை அதிக அளவில் தோன்றத் தொடங்கியுள்ளது.

13. உலகச் சுகாதார நிறுவனமும் இந்திய அரசின் வல்லுநர் குழு ஒன்றும் இம் மாநிலத்தில் பெரியம்மை ஒழிப்புத் தேசியத் திட்டப் பணியினால் ஏற்பட்ட விளைவுகளை மற்ற மாநிலங்களில் ஏற்பட்ட விளைவுகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தன. அவ்வாறு நோக்கியதில் இம்மாநிலத்தில் மேற்கொள்ளப்பட்ட பணி இந்த நோயினை வெற்றிகரமாக ஒழித்துக் கட்டுவதற்கு வேண்டிய தேவைகள் அனைத்தையும் நிறைவு செய்வதாகக் கருத்தறிவித்தனர்.

14. முதல் தடவை அம்மை குத்தப்படுவோரிடையே, இந்நோய் காணப்படக்கூடியவர்களுக்கு மட்டும் 1968–69-ம் ஆண்டில் முனைப்பாக நடவடிக்கை எடுத்துக்கொள்வதெனத் திட்டமிடப்பட்டுள்ளது. பயன் நிலை நிறுத்தும் பணியின் மூன்றுவது ஆண்டின் கீழ், 1968–69-ம் ஆண்டில் பெரியம்மை ஒழிப்புத் தேசியத் திட்டத்தைத் தொடர்ந்து நடத்துவது குறித்து இந்த அரசாங்கம் ஆலோசனை செய்து வருகிறது.

### (4) மலேரியா.

15. முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் இந்த நோய் பலருக்கும் பரவியிருந்தது. இப்போது இந்த நோய் காண்போரின் எண்ணிக்கையும், இந்த நோயில் இறப்பவர்களின் எண்ணிக்கையும் வெகுவாகக் குறைந்துள்ளன. இதன் காரணமாக, மக்கள் தொகையில் பெரும்பான்மையினராக உள்ள விவசாயிகளின் ஈட்டும் திறன் கூடியுள்ளது. மலேரியா ஒழிப்புத் தேசியத் திட்டத்தின் நோக்கங்கள் :—

(1) குறிப்பிட்ட காலம் வரை இம் மாநிலத்தின் எல்லா இடங்களிலும் டி.டி.டி. மருந்து தெளிப்பதும், (2) மலேரியா தடுப்பு மருந்துகளை மக்களுக்குக் கொடுப்பதும், வீடு தோறும் சென்று மும்முரமாகக் கண்காணிப்பதும், (3) அதன் பின்னர் விழிப்புடன் காப்பு நடவடிக்கைகளைத் தொடங்குவதும் ஆகும்.

16. மலேரியா ஒழிப்புத் தேசியத் திட்டத்தின் முதல் நிலையின் கீழ் அதாவது நோயைத் தாக்கும் நிலையின் கீழ் எல்லாப் பகுதிகளிலும் மருந்து தெளிக்கப்பட்டது. அதன் பின்னர் இத் திட்டத்தின் இரண்டாவது நிலையாக மருந்து தெளிப்பதுடன் கண்காணிப்பும் மும்முரமாகச் செய்யப்பட்டது. அதே நேரத்தில் மருத்துவ நிறுவனங்களில் கண்காணிக்கும் பணியும் தனிப்பட்டவர்கள் மூலம் கண்காணிக்கும் பணியும் மேற்கொள்ளப்பட்டன. மலேரியா ஒழிப்பு வேலைத் திட்டத்தின் மூன்றுவது நிலையின் கீழ் மருந்து தெளிப்பது நிறுத்தப்பட்டு, எல்லாப் பிரிவுகளிலும் கவனக் கண்காணிப்புப் பணிகள் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டன.

17. கண்காணிப்பு நிலையின் கீழ், மலேரியா கண்காணிப்புப் பணிகள் குறிப்பிட்டுள்ள விதமாக அந்தந்த மாவட்டங்களில் திட்டமிட்ட மேற்பார்வையுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 24 யூனிட் பிரிவுகள் கண்காணிப்பு நிலையை அடைந்தன. சுமார் 4·5 யூனிட் பகுதிகள் நான்காவது ஐந்தாண்டுத் திட்ட முதல் ஆண்டாகிய 1966–67-ல் கண்காணிப்பு நிலையை அடைந்தன. எஞ்சியுள்ள பகுதிகள் முந்திய நிலைகளிலேயே உள்ளன.



18. வழக்கப்படி, மலேரியா ஒழிப்பு தேசியத் திட்டத்திற்கென இந்திய அரசினரிடமிருந்து ஒரு மானியம் கிடைக்கும். அத்துடன் டி.டி.டி. தூள், வண்டிகள், நுண் பெருக்காடிகள், மலேரியாத் தடுப்பு மருந்துகள் போன்ற சாதனங்களும், பொருள்களும் இம்மாநிலத்திற்கு இலவசமாக வழங்கப்படுகின்றன. இத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான எஞ்சிய செலவை மாநில அரசாங்கம் ஏற்கிறது.

19. மலேரியா ஒழிப்புக்கென சுகாதாரத் துறை ஆற்றியுள்ள பணி நாட்டிலேயே மிகச் சிறந்த பணி என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த சாதனையை எய்தியதற்கு பொது மக்களின் ஒத்துழைப்பு முக்கிய காரணமாகும்.

### (5) யானைக்கால் காய்ச்சல்.

20. தமிழ்நாட்டின் பல மாவட்டங்களில் பைலேரியா நோய் ஆங்காங்கு கண்டுள்ளது. செங்கற்பட்டு, சிதம்பரம், கும்பகோணம், வேலூர் ஆகிய இடங்களைத் தலைமை இடங்களாகக் கொண்டு "பைலேரியா" கட்டுப்பாட்டுப் பிரிவுகள் நான்கு மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. மத்திய அரசினர் பொறுப்பேற்கும் திட்டங்களின்கீழ் நான்காவது திட்டத்தில் இவை தொடர்ந்து செயல்படுகின்றன. அதற்கென பொருள்களும், சாதனங்களும் இலவசமாகக் கிடைக்கின்றன.

21. இத் திட்டத்தை நிறைவேற்ற இம் மாநில அரசாங்கத்திற்கு மத்திய உதவி கிடைக்கின்றது. 1967–68-ல் பைலேரியா நோய்ப் புழுக்களை ஒழிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. கொசுப் புழுக்களை ஒழிப்பதற்கான எண்ணெயைத் தெளித்தல், சாக்கடைக் குழிகளை மூடுதல், கச்சா வடிகால்களை அமைத்தல், குழிகளை மூடி விடுதல் முதலியன போன்ற பல பணிகள் தொடர்ந்து நிறைவேற்றப்படுகின்றன. இப் பகுதிகளில் பைலேரியாத் தொற்று நோயால் பாதிக்கப்பட்டவர்கள் குறித்து ஆய்வு செய்வதற்கென, பல்வேறு இடங்களில் குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு முறை கொசுக்கள் சேகரிக்கப்படுகின்றன. இப்பிரிவுகளின் பணியாளர்கள் இந்நோயைக் குறித்தும் அதன் விளைவுகளைக் குறித்தும் திரைப்படங்களைக் காட்டுவதிலும், விரிவுரைகள் நடத்துவதிலும் ஈடுபட்டனர். மேலும் பைலேரியா நோய்க்கட்டுப்பாட்டு முறைகள் குறித்தும் பொதுமக்களுக்கு அவர்கள் விளக்கி வந்தனர்.

22. பைலேரியா ஒழிப்பு நடவடிக்கைகளை 1968–69-ல் தொடர்ந்து செயல்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

### II. நரம்புச் சிலந்தி நோய் ஒழிப்புத் திட்டம்.

23. நீலகிரி, கன்னியாகுமரி மாவட்டங்கள் நீங்கலாக எல்லா மாவட்டங்களிலும் இந்த நோய் கண்டுள்ளது.

24. நரம்புச் சிலந்தி ஒழிப்புத் திட்டம் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் ஒரு திட்ட வேலையாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

25. ஆய்வாண்டில் நரம்புச் சிலந்தி நோய் தொற்றிக் கொள்வது குறித்து 8,260 கிராமங்களிலும், சிற்றூர்களிலும் ஆய்வு நடத்தப்பட்டது. அவற்றில் 124 கிராமங்களில் இந்த நோய் கண்டுள்ளதாக அறியப்பட்டது. 1,172 நேர்வுகளில் இந்த நோய் தொற்றியுள்ளதாகப் பதிவு செய்யப்பட்டது.

26. இந்த நோய் பரவுவதைத் தடுக்கும் பொருட்டு 50 சத வீதம் நீரில் ஈரமாகும் டி.டி.டி. மருந்தைக் (D. D. T. Water Wetable Powder) குடிநீருடன் கலப்பதே இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இத்துடன் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள குடிநீர் ஆதாரங்களில் இரசாயன மருந்துகள் தெளிக்கப்படுகின்றன. நரம்புச் சிலந்தி கண்டுள்ள நோயாளிகளுக்கு 3 சதவீத "கார்பாலிக் லோஷன்" போட்டுச் சிகிச்சை அளிக்கப்பட்டது. பாதிக்கப்பட்ட உறுப்

புகளுக்கு மருந்துத் துணி கட்டப்பட்டது. அதன் மூலம் நோயாளிகளுக்குண்டான வலி குறைக்கப்பட்டதுடன் இரண்டாவது முறையாக இந்த நோய் அவர்களை பாதிப்பது தடுக்கப்பட்டது. செய்முறை விளக்கங்கள் நடத்துதல், விரிவுரைகள் நடத்துதல், திரைப்படங்கள் காட்டுதல் போன்ற சுகாதாரக் கல்விப் பணியில் அவர்கள் ஈடுபட்டனர். அத்துடன் துண்டு வெளியீடுகளையும், சுவரொட்டிகளையும், அவர்கள் பொதுமக்களுக்கு வழங்கினர். நோய் உண்டு பண்ணும் நுண்ணுயிர்கள் குறித்தும் நரம்புச் சிலந்தி நோயைத் தடுக்க எளிதான முறை குறித்தும் செய்முறை விளக்கங்கள் நடத்தப்படுகின்றன. நெருங்கி நெய்யப்பட்டு இரண்டாக மடிக்கப்பட்டத் துணியின் மூலம் நீரை முறையாக வடிகட்டுவது குறித்து கிராம மக்களுக்கு விளக்கிக் காட்டப்படுகிறது.

27. நரம்புச் சிலந்தி நோயைக் கட்டுப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் நல்ல பலன்களை அளித்தன என்பது மகிழ்ச்சிக்குரியதொன்றாகும்.

28. நரம்புச் சிலந்தி நோய் ஆங்காங்கு கண்டுள்ள மாவட்டங்களில் உள்ள கிராமங்கள் அனைத்திலும் 1968–69-ல் ஆய்வு நடத்தக் கருதப்பட்டுள்ளது. இந்த நோயின் தொற்றுத் தன்மை குறித்து ஆய்வு செய்ய இது பெரிதும் உதவும்.

## III. குய்ய நோய்க் (Yaws) கட்டுப்பாட்டுத் திட்டம்.

29. 1967–68-ல் இத் திட்டம் தொடர்ந்து செயல்பட்டது. சமூக-பொருளாதார நிலையில் பின்தங்கியவர்களிடையே இந்த நோய் காணப்பட்டது. கோவை மாவட்டத்தில் இந்நோய் பெருமளவிற்குக் கட்டுப்படுத்தப்பட்டு விட்டதால், 1967–ம் ஆண்டு ஜூலை மாதம் 30-ம் தேதி அன்று இத் திட்டம் அம் மாவட்டத்தில் நிறுத்தப்பட்டது. இத் திட்டம் குறித்து மும்முர ஆய்வு நடத்திப் பணிகள் மேற்கொள்வதற்கென, இத் திட்டம் மதுரை, திருச்சிராப்பள்ளி மாவட்டங்களுக்கு 1967-ம் ஆண்டு, ஆகஸ்டு மாதம் முதல் தேதி முதல் நீடிக்கப்பட்டது. மதுரை மாவட்டத்தில் பெரியகுளம் வட்டத்தில் ஒன்றும், பழனி வட்டத்தில் ஒன்றும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் கரூர் வட்டத்தில் ஒன்றும் ஆக மூன்று பிரிவுகள் துவக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பிரிவிலும் அலுவல் நடத்தப்படுவதற்கென ஒரு " ஜீப் " வழங்கப்பட்டுள்ளது.

30. ஆய்வாண்டில் இப் பிரிவுகள் தங்களது எல்லைக்குள் மும்முர ஆய்வு, சிகிச்சை நடவடிக்கைகளை மேற்கொண்டன. இந்நோய் பரவாமல் தடுக்க எல்லா தடுப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

31. கோவை மாவட்டத்தில் சிகிச்சை அளிக்கப்பட்ட நோயாளிகளின் நிலை குறித்து ஆய்வு செய்யப்பட்டு, சிகிச்சையளித்ததன் பயன் கண்டறியப்பட்டது. முந்திய சிகிச்சை மூலம் குணமடையாதவர்களுக்கு மேற்கொண்டும் சிகிச்சை செய்யப்பட்டது. 1,529 கிராமங்களும், சிற்றூர்களும், ஆய்வு செய்யப்பட்டன. 49,721 குடும்பங்களிலிருந்து 1,96,787 பேர் சோதித்துப் பார்க்கப்பட்டனர். 838 பேர் இந்நோயால் பாதிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவந்தது. இந் நோய்குறித்தும், இந் நோயை எவ்வாறு தடுப்பது என்பது குறித்தும் யாவருக்கும் ஆலோசனை கூறுவதென சுகாதார அறிவு நல்கும் பணி மும்முரமாக மேற்கொள்ளப்பட்டது.

## IV. ஆரம்பச் சுகாதார நிலையங்கள்.

32. ஒரு பகுதியில் வசிக்கும் மக்களுக்கு நோயைக் குணப்படுத்தவும், வரும் நோயைத் தடுக்கவும், ஒருங்கிணைந்த முறையில் மருத்துவப் பாதுகாப்பு அளிக்கும் ஒரு சிறிய மருத்துவப் பிரிவே ஆரம்பச் சுகாதார நிலையமாகும்.

33. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட தொடக்கத்தில் இம் மாநிலத்தில் 120 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் செயல்பட்டன. 1967 தொடக்கத்தில் இம் மாநிலத்தில் 222 நிலையங்கள் இருந்தன. ஆய்





வாண்டில் மேற்கொண்டும் 35 நிலையங்கள் தொடங்கப்பட்டன. மலேரியா ஒழிப்பு தேசியத் திட்டத்தின் இரண்டாவது பேணுதல் நிலையில் சேர்க்கப்பட்டுள்ள 60 வட்டாரங்களில் 60 ஆரம்பச் சுகாதார நிலையங்களைத் துவக்க அரசாங்கம் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

34. 1968-ல் 45 நிலையங்களைத் துவக்கக் கருதப்பட்டுள்ளது. வட்டாரத்திற்கு ஒரு நிலையம் வீதம் நான்காவது திட்ட இறுதியில் 375 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் ஏற்படுத்ததுவதே நமது குறிக்கோளாகும்.

35. இந்தக் குறிக்கோள் அளவை எய்தினால் சமூகத்தின் சுகாதாரத் தேவைகளை நிறைவு செய்ய இயலும்.

## V. குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம்.

36. இம் மாநிலத்தில் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் நல்ல முறையில் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

37. மலேரியா ஒழிப்புத் தேசியத்திட்டம், பேணுதல் நிலையை அடைந்துள்ள எந்தெந்த வட்டாரங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ளனவோ அங்கு இந்திய அரசு வகுத்துள்ள சீரமைக்கப்பட்ட குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் 125 வட்டாரங்களில் அமுலில் இருக்கிறது.

38. தற்போது 125 கிராமக் குடும்பக்கட்டுப்பாட்டு பிரிவுகள் உள்ளன. மேலும், மாவட்டத்திற்கு ஒரு நிலையமாக 13 மாவட்டக் குடும்பக் கட்டுப்பாட்டு நிலையங்கள் உள்ளன. ஒவ்வொன்றிலும் மாவட்டக் குடும்பக் கட்டுப்பாட்டு மலேரியா ஒழிப்பு அதிகாரி ஒருவர் உள்ளார். அரசாங்க மருத்துவ மனைகளில் முதலாவது, இரண்டாவது திட்டங்களின்போது ஏற்படுத்தப்பட்ட 15 நகரக் குடும்பக்கட்டுப்பாட்டு நிலையங்களும் 85 கிராமக் குடும்பக் கட்டுப்பாட்டு நிலையங்களும் தொடர்ந்து செயல்படுகின்றன. அத்துடன், சில நகராட்சிகளும், தனித் தொண்டு, நிறுவனங்களும் இந்திய அரசு அனுமதித்துள்ள மானியத்தைப் பயன்படுத்திக் கொண்டு, குடும்பக் கட்டுப்பாட்டு நிலையங்களைத் துவக்கியுள்ளன. தற்போது இம் மாநிலத்தில் 1,216 குடும்பக்கட்டுப்பாட்டு நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

39. ஆண்களுக்கான குடும்ப நல அறுவை சிகிச்சை பலரும் விரும்பும் கருத்தடை முறையாகும். இவற்றை நடத்துவதற்கென அரசாங்க மருத்துவ மனைகளிலும் ஆரம்பச் சுகாதார நிலையங்களிலும் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. இந்தத் திட்டத்தின் கீழ் அறுவை சிகிச்சை செய்து கொள்ளும் தந்தை, அல்லது தாய் ரூ. 30 பெற உரிமை உடையவராவார். குடும்பக் கட்டுப்பாட்டு அறுவை சிகிர்சைகளை நடத்துவதற்காக 452 நிலையங்களுக்கு அரசாங்கம் ஒப்புதல் அளித்துள்ளது. 1967 ஏப்ரல் முதல் 1967 டிசம்பர் வரையில் 89,629 ஆண்களுக்கும், 5,138 மகளிருக்கும் அறுவை சிகிச்சை செய்யப்பட்டது.

### (1) பயிற்சி.

40. குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்துடன் தொடர்புள்ள எல்லா வகை அதிகாரிகளுக்கும் பயிற்சியளிப்பதற்காக, மூன்று பயிற்சி நிலையங்கள் உள்ளன. அடையாற்றிலுள்ள வட்டாரக் குடும்பக் கட்டுப்பாட்டுப் பயிற்சி நிலையம், காந்தி கிராமத்திலுள்ள கிராமச் சுகாதார குடும்பக் கட்டுப்பாட்டு நிலையம், சென்னையிலுள்ள மகளிர்ப் பேறுகால நிலையம் ஆகியவையாகும்.

### (2) "லூப்" திட்டம்.

41. கற்பிக்கும் மருத்துவ மனைகள், மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகள், வட்டத்தலைமையிட மருத்துவமனைகள் ஆகியவற்றில் மகளிருக்கு "லூப்" பொருத்தும் திட்டத்திற்கு அரசாங்கம் ஒப்புதல் வழங்கியுள்ளது.

[திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா] [1968 மார்ச் 12

### (3) தேசியப் பரிசு.

42. 1965–66, 1966–67-ம் ஆண்டுகளில் குடும்பக் கட்டுப்பாட்டு அறுவை சிகிச்சைத் திட்டத்தில் முன்னோடியாக செயல்பட்டதற்காக, தமிழ்நாடு அரசாங்கத்திற்கு இந்திய அரசு தேசீயப் பரிசு வழங்கியுள்ளது.

### (4) அடுத்தாண்டிற்கான வேலைத் திட்டம்,

43. (1) சீரமைக்கப்பட்ட குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை ஆரம்பச் சுகாதார நிலையங்கள் தொடங்கப்பட்டுள்ள வட்டாரங்கள் அனைத்திலும் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

(2) தகுதியுள்ள தந்தைகளுக்கும் தாய்களுக்கும் குடும்பக் கட்டுப் பாடு பற்றி அறிவூட்டும் திட்டத்தினை மும்முரப்படுத்துதலும் சுற்றிவரும் செய்திப் பரப்பு வண்டிகளில் வகைசெய்துள்ள திரைப்படச் சாதனங்கள் கொண்டு பெரிய அளவில் செய்தி பரப்புதலும்.

(3) அரசாங்கம், உள்ளாட்சி மன்றங்கள், தனிப்பட்ட நிறுவனங்கள் ஆகியவற்றினால் நியமிக்கப்படும் பல்வேறு வகையைச் சேர்ந்த பொதுச் சுகாதாரப் பணியாளர்களுக்கு இம் மாநிலத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள மூன்று பயிற்சி நிலையங்களில் பயிற்சியளிக்கும் திட்டத்தை மும்முரப்படுத்துதல்.

(4) மகப்பேறு சிசுநலப்பணிகளிலும் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டங்களிலும் நிர்வாகத் தொழில் முறை, செய்முறை பணிகளை மும்முரப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

### 5) அடையாற்றிலுள்ள வட்டாரக் குடும்பக் கட்டுப்பாட்டுப் பயிற்சி நிலையம்.

44. பொதுச் சுகாதாரத் துறையின் பணியாளர்களுக்குக் குடும்பக்கட்டுப்பாட்டுத் திட்டத்தில் பயிற்சி அளிக்க இந்நிலையம் வகை செய்கின்றது. பயிற்சி நிலையத்தின் செலவு முழுவதும் இந்திய அரசால் ஏற்கப்படுகிறது. வளர்ச்சி வட்டார விரிவு ஆசிரியர்களுக்கும், குடும்பக்கட்டுப்பாட்டுச் சுகாதார ஆய்வாளர்களுக்கும் அடிப்படைச் சுகாதாரப் பணியாளர்களுக்கும் 15 நாட்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. சுகாதாரப் பார்வையாளர்களுக்குத் துணைச் செவிலி மருத்துவச்சி/மகப்பேறு உதவியாளர்களுக்கு 10 நாட்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகின்றது. 1967-ல் 534 பேருக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. இந்நிலையத்தைச் சேலத்திற்குமாற்ற திட்டமிடப்பட்டுள்ளது.

### (6) தாய்சேய் நலப் பணிகள்

45. பின்தங்கிய பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ்த் தொடங்கப்பட்ட 19 முக்கிய தாய்சேய் நல இல்லங்களும் 4 துணை நிலையங்களும் தொடர்ந்து செயல்பட்டன. நகராட்சிகளும் அந்தந்தப் பகுதிகளில் பேறு கால மருத்துவ இல்லங்கள், நிலையங்கள் மூலமாகத் தேர்ச்சி பெற்ற மருத்துவப் பணிக்கு வகை செய்தன. நகராட்சிகளில் தற்போது 63 பேறுகால இல்லங்களும் 202 பேறுகால நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. தமிழ்நாடு 1958-ம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் கீழ் பத்தாயிரம் மக்கள் தொகையுள்ள ஒவ்வொரு பகுதிக்கும் ஒரு தாய்சேய் நிலையம் வீதம் வட்டார மொன்றுக்கு அதிக அளவாக 10 நிலையங்கள் வரை தொடங்குவது ஊராட்சி ஒன்றியத்தின் பொறுப்பாகும்.

### VI. சுகாதாரப் பார்வையாளர் பயிற்சி.

46. சுகாதாரப் பார்வையாளர்கள் சுகாதாரத் துறையினால் பயிற்சி அளிக்கப்படுகின்றனர். இதில் இரண்டுவிதமான பயிற்சிமுறைகள் உள்ளன. முறையான பயிற்சிமுறை ஒன்று. ஒருங்கிணைத்த பயிற்சி முறை மற்றொன்று. மாநில அரசாங்கம், நகராட்சிகள் ஆகியவற்றின்கீழ் பணிபுரியும் சுகாதாரப் பார்வையாளர்களுக்காக ஒருவார நினைவூட்டுப் பயிற்சி ஒன்று நடத்தப்படுகின்றது. ஒருங்கிணைந்த பயிற்சியின்கீழ் 1965–ம் ஆண்டு ஜூலையில் எடுத்துக் கொள்ளப்பட்ட 44 பேரும் முறையான பயிற்சிக்கு 1966–ம் ஆண்டு ஜூலையில் எடுத்துக் கொள்ளப்பட்ட 37 பேரும் 1967, டிசம்பர் முடிவில் தங்கள் பயிற்சியை முடித்தனர்.



1968 மார்ச் 12] [திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா]

47. நான்காவது திட்டக்காலத்தில் ஒருங்கிணைந்த திட்டத்தின்கீழ் ஆண்டொன்றுக்கு 50 பேர் வீதம் பயிற்சியளிக்கத் திட்டமிடப்பட்டுள்ள 250 சுகாதாரப் பார்வையாளர்களில் 1966, ஜூலைத் திங்களில் 48 பேரும், 1967 ஜூலைத் திங்களில் 50 பேரும் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளனர். அவர்கள் தொடர்ந்து பயிற்சி பெற்று வருகின்றனர்.

### VII. வெண்ணெய் நீக்கப்பட்ட பால் திட்டம்.

48. நமது மாநில முழுவதிலும் இத்திட்டம் பரவலாகச் செயல்பட்டுவருகிறது. சத்துணவு நிலையை மேம்படுத்தி உணவுக் குறையை ஈடுசெய்யும் முக்கியமான திட்டங்களில் இதுவும் ஒன்றாகும். ஐக்கிய நாடுகள் சிசு நல நிதி நிறுவன உதவியுடன் நிறை கர்ப்பிணிகள், குழந்தைகள் ஆகியோருக்கு வெண்ணெய் நீக்கப்பட்ட பால் வழங்குவதற்குரிய திட்டம் 1967–68-ம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் அன்றாடம் சுமார் 57,000 பேருக்கு பால் வழங்கப்படுகின்றது. பள்ளிபுகாச் சிறுவர்கள், 14 வயதுக்குட்பட்ட சிறுவர்கள், பேறுகால மகளிர், பாலூட்டும் தாய்மார்கள் ஆகியோருக்கு இத்திட்டத்தின்கீழ் பால் வழங்கப்படுகின்றது. இம் மாநிலத்தில் பேறு கால நிலையங்கள், சிசு நல நிலையங்கள் ஆரம்பச் சுகாதார நிலையங்கள் போன்ற 2,000 நிலையங்கள் இத்திட்டத்தின்கீழ் செயல்படுகின்றன. 1967-ம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சிறுவர் நல நிதியிலிருந்து 6·7 இலட்சம் ராத்தல் எடையுள்ள வெண்ணெய் நீக்கப்பட்ட பால்பொடி வரப்பெற்றது. இது இத் திட்டத்தின்கீழ் மாவட்டத்தில் வழங்கப்பட்டது. இம் மாநிலத்திற்கு மொத்தம் 10 இலட்சம் ராத்தல் பால்பொடி தேவைப்படுகின்றது. எஞ்சிய அளவு பால்பொடி ஐக்கிய நாடுகள் சிறுவர் நல நிதியினால் 1968–ம் ஆண்டு பிப்ரவரி—மார்ச் திங்களில் வெளியிடப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

### VIII. மூன்று நோய்த் தடுப்பு ஊசி போடும் திட்டம்.

49. கக்குவான், தொண்டைக்கட்டு நோய், இழுப்புவாதம் ஆகிய நோய்களிலிருந்து பள்ளிப் பருவம் அடையாத குழந்தைகளுக்குப் பாதுகாப்பு அளிக்க முப்பால் அம்மை கொண்டு மூன்று நோய் தடுப்பு ஊசி போடும் திட்டம் 1964–ம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இத் திட்டம் மிக முன்னேறியுள்ளது.

50. மூன்று நோய்த் தடுப்பு ஊசி 5 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு சிறப்பாக—சிறு குழந்தைகளுக்கு போடப்படுகிறது. தற்பொழுது இத்திட்டம் 255 ஆரம்பச் சுகாதார நிலையங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. புதிதாக ஆரம்பச் சுகாதார நிலையங்கள் தொடங்கப்பட்டால் அவற்றிலும் இத்திட்டம் செயல் படுத்தப்படும்.

51. 1967–ம் ஆண்டில் 82,781 சிறுவர்களுக்கு இந்த முப்பால் ஊசிகள் 277,952 போடப்பட்டன.

### IX. பள்ளிகளில் சூழ்நிலைத் துப்புரவு.

52. 1967–68–ம் ஆண்டில் ஆய்வு செயல்திட்டம் நடைபெறும் ஐந்து மாவட்டங்களில் ஒவ்வொன்றிலும் ஆறு பள்ளிகளில், "பள்ளிகளில் சூழ்நிலைத் துப்புரவுத் திட்டத்தினை" செயல் படுத்துவதற்காக ரூ. 1 இலட்சம் செலவிட அனுமதி வழங்கப்பட்டது. இத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக பள்ளிகளைத் தேர்ந்தெடுப்பதற்கும் வசதிகள் செய்துதருவதற்கும் பொறுப்புவகிக்கும் ஆய்வு நடவடிக்கைத்திட்ட உதவிப் பொறியாளர்கள் மூலம் இப்பணிகளைச் சுகாதாரத் துறையினர் நிறைவேற்றிவருகின்றனர். பள்ளிகளைத் தேர்ந்தெடுப்பதில் சுகாதாரத் துறை கல்வி அதிகாரிகளைக் கலந்தாலோசிக்கின்றது. 1967–ம் ஆண்டில் 30 பள்ளிகளிலே 6 பள்ளிகளில் ரூ. 13,873 மொத்தச் செலவில் துப்புரவு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

[திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா] [1968 மார்ச் 12

எஞ்சிய பள்ளிகளிலும் இவ்வேலையை நிறைவேற்ற நடவடிக்கை யெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 1968–69-ம் ஆண்டில் இத்திட்டத்தினை நிறைவேற்றுவது குறித்த செயற் குறிப்பு அரசாங்கத்தின் ஆலோசனை யிலிருந்து வருகிறது.

### X. சந்தைகளும் திருவிழாக்களும்.

53. இந்த ஆண்டில் இம் மாநிலத்தில் 500 சந்தைகளும் திரு விழாக்களும் நடத்தப்பட்டன. அண்மையில் குடந்தையில் நடை பெற்ற மகாமகம் திருவிழா உட்பட பெரிய திருவிழாக்களில் மிக விரிவான துப்புரவு ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

### XI. மக்கள் பிறப்பு-இறப்புப் புள்ளி விவரம்.

54. தமிழ் நாட்டில் மக்கள் பிறப்பு-இறப்பு கணக்கைப் பதி வதற்கான அலுவலகத்தை மேம்படுத்தவும் விரிவுபடுத்தவும் தலைமை அலுவலகத்தில் புள்ளி விவரக் கணக்கிடும் யந்திரப் பிரிவு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. 1967, ஜனவரி 1-ம் தேதி முதற் கொண்டு பணியாளர்களைக் கொண்டு பிறப்பு-இறப்பு புள்ளி விவரங் களைத் தொகுக்கும் முறை கைவிடப்பட்டது. தற்போது யந்திரம் மூலமே இப் புள்ளி விவரத் தொகுப்பு வேலை நடைபெற்று வருகின்றது.

55. ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட 8 பெரிய நகராட்சிகள் ஒவ்வொன்றிலும் புள்ளி விவரச் சேகரிப்பு உதவியாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். மக்கள் பிறப்பு-இறப்பு குறித்த புள்ளி விவரங்களைப் பதிவு செய்யும் முறையை மேம்படுத்தும் பணியை இவர் கவனித்து வருகிறார். இப் புள்ளி விவர சேகரிப்பு உதவியாளர்கள் பெருமளவில் பயணங் களை மேற்கொண்டு மக்கள் பிறப்பு-இறப்புப் பதிவுப் பணியில் ஈடு பட்டுள்ள பணியாளர்களுக்கு ஆலோசனை வழங்குகின்றனர்.

56. சென்னை மாநகராட்சிக்காக நியமிக்க ஒப்புதல் வழங்கப்பட்ட புள்ளி விவர வல்லுநர் பதவி ஒன்று, புள்ளி விவர உதவியாளர் பதவி ஒன்று, புள்ளி விவர எழுத்தர் பதவி இரண்டு ஆகியவை நடப்பாண்டில் நிரப்பப்பட்டன. சென்னை மாநகராட்சிக்காக ஒப்புதல் வழங்கப்பட்ட கணக்கிடுவோர் பதவி இரண்டு இன்னும் நிரப்பப்படவில்லை.

### XII. மாதிரிப் பதிவுத் திட்டம் அல்லது இறப்பின் காரணம் குறித்த ஆய்வு.

57. குறிப்பிட்டதொரு பகுதியில் எக்காரணத்தினால் அதிக அளவு மக்கள் இறக்கின்றனர் என்பதைக் கண்டறியவும் பதிவு செய்யப்படாத பிறப்பு-இறப்பு நிகழ்ச்சிகளை கண்டு பிடிக்கவும் வகை செய்வதே இத் திட்டத்தின் நோக்கமாகும். ஆங்காங்கே நிகழ்ந்த மரணம் குறித்த சூழ்நிலைகளைக் குடும்ப உறுப்பினர்களைக் கேட்டறிந்து கிடைக் கும் தகவல்களைக் கொண்டு இந்த ஆய்வு நடத்தப்படுகின்றன. இத் திட்டம் 12 ஆரம்பச் சுகாதார நிலையங்களில் செயல்பட்டு வந்தது. சென்னை, தருமபுரி நீங்கலாக ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு ஆரம்பச் சுகாதார நிலையத்தில் இத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வந்தது, 1—1—1968 முதற்கொண்டு இத் திட்டம் இம் மாநிலத்தில் 34 ஆரம்பச் சுகாதார நிலையங்களில் விரிவுபடுத்தப்பட்டது. அதாவது 10 லட்சம் மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்பச் சுகாதார நிலையம் என்ற அளவில் இத் திட்டம் நிறைவேற்றப்படுகின்றன. இத்திட் டத்தை நிறைவேற்றுவது குறித்து குறிப்பிட்ட சில ஆரம்பச் சுகாதார நிலையங்களின் மருத்துவ அதிகாரிகளுக்குப் புள்ளி விவரத் துறை உதவி இயக்குநர் பயிற்சி அளித்து வருகின்றார். இத்திட்டத்தினை



1968 மார்ச் 12]

நிறைவேற்றுவது குறித்து மருத்துவ அதிகாரிகள் ஒவ்வொரு திங்களும் விவரக் கணக்கொன்றை சுகாதார பணி இயக்குநர் அலுவலகத்திற்கு அனுப்பவேண்டும். இந்த விவரக் கணக்கு, ஆய்வு செய்யப்பட்டு இந்தியாவின் பதிவுத்துறைத் தலைமை அதிகாரிக்கு அனுப்பப்படும்.

### XIII. மாதிரிப் பதிவுத் திட்டம்.

58. மாதிரிப் பதிவுத் திட்டத்தினை முழு அளவில் செயல்படுத்துவது குறித்த செயற் குறிப்புகள் அரசாங்கத்தின் ஆய்வில் இருந்து வருகின்றன.

#### பயிற்சி.

59. பிறப்பு-இறப்பு குறித்த புள்ளி விவரங்களைப்பதிவு செய்யும் முறையை மேம்படுத்த பயிற்சி அளிக்கும் திட்டம் மத்திய அரசா ஙக்குவிக்கும் திட்டங்களில் ஒன்றாகும். இதற்காக, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு துறையிலிருந்து முழுநேர அதிகாரி ஒருவரது பணி கிடைக்க வகை செய்யப்பட்டுள்ளது. மாவட்டங்களிலும் நகராட்சி களிலும் நியமிக்கப்பட்டுள்ள புள்ளி விவர உதவியாளர்களுக்கு பிறப்பு-இறப்பு குறித்த புள்ளி விவரங்களைப் பதிவு செய்வது குறித்த முறையை மேம்படுத்துவதற்கு மாநில தலைமை அலுவலகத் தில் இரண்டு வாரப் பயிற்சி கொடுக்கப்பட்டது. பிறப்பு-இறப்பு பதி வாளர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கான பெரும் திட்டமொன்றைத் தயாரிப்பதற்காக தேவையான ஆலோசனையும் அளிக்கப்பட்டது. ஏறத்தாழ எல்லா மாவட்டங்களிலும் ஆரம்பப் பதிவாளர்களுக்கு பயிற்சியளிக்கும் திட்டம் தொடங்கப்பட்டு கன்னியாகுமரி மாவட்டத்தில் இத் திட்டம் முடிவடைந்து விட்டது..

### XIV. சுகாதாரக் கல்விக் கழகம்.

60. சுகாதாரக் கல்விக் கழகம், சுகாதார கல்விபற்றி வெளியீடுகள் தயாரிக்கின்றன. உள்ளாட்சி நிறுவனங்கள் அவற்றின் தேவைக ளுக்கேற்ப, இவ் வெளியீடுகளைப் பயன் படுத்திக்கொண்டு இம் மாநிலத்தில் சுகாதாரக் கல்வி பரப்பும் பணியை இணைந்து செயல் படுத்தலாம்.

#### (1) பத்திரிகைகள்.

61. மாநிலச் சுகாதாரக் கல்விக் கழகம் "தமிழ்நாடு சுகாதாரக் கல்வி" என்ற காலாண்டு ஆங்கிலப் பத்திரிகையையும், "ஆரோக்கிய மார்க்கம்" என்னும் தமிழ்ப் பத்திரிகையையும் தொடர்ந்து வெளியிட்டு வருகின்றது. சுகாதாரம் பற்றிய பல்வேறு பொருள்கள் குறித்த கட் டுரைகள் இப் பத்திரிகைகளில் வெளியிடப்படுகின்றன. முக்கியமான காலங்களில் பத்திரிகைகளில் சிறப்பு வெளியீடுகள் வெளியிடப்பட்டன.

#### (2) விளம்பரம்.

62. எளிதில் விளங்கும் நடையில் அறிக்கை இதழ்களும் சிறு நூல் களும் தமிழில் தயாரிக்கப்படுகின்றன. தலைமை நிலையங்களில் உள்ள சுகாதாரக் கல்வி-விளம்பர வண்டிகள் இம்மாநிலத்தின் பல்வேறு பகு திகளில் திரைப்படக்காட்சிகளைக் காட்டுவதுடன் விளம்பரப் பணி களையும் ஆற்றி வருகின்றது. இம்மாநிலம் முழுவதிலும் நடத்தப் பட்ட பல கண்காட்சிகளில் சுகாதாரக் கல்விக் கழகம் பங்கு கொண்டது. எல்லாத் துறை நிறுவனங்களுக்கும் துறைச் சார்பற்ற நிறுவனங்களுக்கு அனுப்புவதற்காக சுகாதாரம் குறித்து 16 மி. மீ. அளவுடைய சுமார் 141 திரைப்படங்கள் திரைப்பட நூலகத்திடம் உள்ளன.

### (3) பயிற்சி.

63. இப்போதுள்ள பணிகளை மேம்பாடு செய்வதற்காக ஆரம்பச் சுகாதார நிலையப் பணியாளர்களுக்கு சிறு சிறு தொகுதியாக மூன்று வாரங்களுக்கு பணிக்காலப் பயிற்சித் திட்டங்கள் நடத்தப்படுகின்றன. சென்னையிலுள்ள சுகாதாரப் பார்வையாளர்கள் பள்ளி, பூவிருந்தவல்லியில் உள்ள மறு பயிற்சி நிலையம், இம்மாநிலத்தில் உள்ள ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள் போன்ற பயிற்சி நிறுவனங்களில் சுகாதாரக் கல்வி பற்றி மாநிலச் சுகாதரக் கழகம் விரிவுரையாற்றுகின்றது.

### XV. உணவுக்கலப்பட தடுப்பு

64. உணவுக் கலப்படத்தடுப்புச் சட்டம் இப்போது சென்னைமா நகராட்சியிலும் இன்னும் 299 உள்ளாட்சி மன்றங்களிலும் செயலில் இருந்து வருகிறது.

65. 1965–ல் திருத்தப்பட்ட இச்சட்டத்தில், முதன்முதலாக குற்றம் செய்வோருக்கும் கூட சிறைத்தண்டனை உள்பட கடுந்தண்டனை விதிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இம்மாநிலத்தில இச்சட்டத்தின் கீழ் கண்டு பிடிக்கப்படுட குற்றங் களுக்கும் பெருமளவில் அபராதங்கள் விதிக்கப்படுகின்றன.

66. 1967–ம் ஆண்டுக்காலத்தில் பல்வேறு உணவுப் பொருள்களின் 23,099 மாதிரிகள சோதனை செய்யப்பட்டன. இவற்றில் 22 சதவீதம் பொருள்களில் அதாவது 5,094 மாதிரிகளில் கலப்படம் செய்யப்பட்டிருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டது. கிடைத்துள்ள விவரப்படிப் பார்த்தால், 1967 நவம்பர் திங்கள் வரை இச்சட்டத்தின் கீழ் 957 வழக்குகளில் தண்டனை விதிக்கப்பட்டது. கலப்படம் செய்யப் பயன் படுத்தப் படுகின்ற பொருள்களின் தன்மையில் குறிப்பிடத் தக்க வகையில் மாறுதல் ஏதும் ஏற்படவில்லை ; கலப்படம் செய்கின்ற குற்றமும் குறிப்பிடத்தக்க அளவில் குறைந்தபாடில்லை. உணவுக் கலப்படம் செய்கின்ற தீய வழக்கத்தை ஒழிப்பதற் காக ஆய்வுக்கூட வசதிகளை மேம்பாடு செய்யும் பொருட்டு கோயம்புத்தூரில் உள்ள தலைமை ஆய்வுக்கூடத்தில் உணவுப் பகுப்பாய்வுக்கூடம் ஒன்றை நிறுவும் திட்டத்திற்கு அரசாங்கம் ஒப்புதல் அளித்துள்ளது. 1968–ம் ஆண்டில் இயன்ற விரைவில் இந்த ஆய்வுக் கூடத்தைச் செயல்படச் செய்யும் பொருட்டு விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### XVI. கழிவு நீர்ப் பகுப்பாய்வு—நீர்ப் பகுப்பாய்வுக் கிளையில் சாக்கடை தொழிற்சாலைக்கழிவு பகுப்பாய்வுப் பிரிவும் நேரிடப் புலய்னுவுக்கான இயங்கும் பிரிவும்

67. காற்றையும் நீரையும் அசுத்தப்படுத்துவதைப் புலனாய்வு செய்வதற்காக சாக்கடை தொழிற்சாலைக் கழிவுப் பகுப்பாய்வுப் பிரிவு ஒன்றையும், நீர் வழங்குமுறைகளையும் சாக்கடை, தொழிற் சாலைக் கழிவு மற்றும அவற்றை அகற்றும் முறைகளையும் ஆங்காங்கே சென்று புலனாய்வு செய்வதற்கான இயங்கும் பிரிவு ஒன்றையும் தேவையான பணியாளர்களுடனும் தேவை யான கருவிகளைக் கொண்டும் சுகாதாரத்துறையின் நீர்ப் பகுப்பாய்வுக் கிளையில் அரசாங்கம் அமைத்துள்ளது.

68. பல்வேறு தொழிற்சாலைக் கழிவுகள், கழிவுநீர் முதலியவற்றை ஆராய்ச்சி செய்யும் பணி நடைபெற்று வருகின்றது. 1967–68–ம் ஆண்டின் முதல், இரண்டாவது, மூன்றுவது காலாண்டு களில் இதற்காக ரூ. 22,285·80 செலவிடப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி இரண்டு பிரிவுகளும் 1969–ம் ஆண்டு பிப்பரவரி மாதம் 28–ம் தேதி வரை தொடர்ந்து செயல் படுவதற்கு அரசாங்கம் ஒப்புதல் அளித்துள்ளது.



### XVII. ஊட்டச்சத்து ஆய்வுக் கூடம்

69. உணவுகளை எல்லா வகையான சாதாரண முறை இரசாயனப் பகுப்பாய்வு செய்வதற்கும் இந்த ஊட்டச்சத்து ஆய்வுக்கூடத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. உயிரியல் சோதனைகள் செய்வ தற்காக விலங்கு அறை ஒன்றும் இதனுடன் இணைக்கப் பட்டுள்ளது. பணியாளர்களுக்காகவும் சாதனங்கள் பொருட்டும் ஆகின்ற செலவு முழுவதையும் மாநில அரசாங்கமே ஏற்றுக் கொள்ளுகிறது. இந்த ஊட்டச்சத்து ஆய்வுக்கூடம் பின்வரும் பணிகளைச் செய்துவருகின்றது :—

(1) வட்டாரத் தொழில் சமுதாய அடிப்படையில் ஊட்டச்சத்து அட்டவணைப்படிக்கான உணவு முறைகள் குறித்து ஆய்வு செய்தல் ;

(2) சற்று அரிதான உள்நாட்டு உணவுப் பொருள்களின் உணவு மதிப்பை சிறப்பாக பச்சை · இலைக் காய்கறிகளின் உணவு மதிப்பை—ஆய்வுக்கூட முறையில் ஆராய்ச்சி செய்தல் ;

(3) மாதிரி உணவுகள் இல்லங்களில் பெரும்பாலும் தயாரிக்கப்படு கின்ற உணவுப் பண்டங்கள் ஆகியவற்றின் ஊட்டச்சத்தினை மதிப்பீடு செய்தல் ;

(4) கல்வி நிறுவனங்களிலும் மருத்துவ மனைகளிலும் வழங்கப்படும் உணவுகளைப் பகுப்பாய்வு செய்தல் ;

(5) பள்ளிகளில் வழங்கப்படும் நண்பகல் உணவுகள் மருத்துவ மனைகளில் வழங்கப்படும் உணவுகள் முதலியவை குறைந்த விலையில் ஊட்டச்சத்து அமைந்ததாக இருக்கும் பொருட்டு தகுந்த தயாரிப்பு வழிவகைகளையும் உணவு வகைகளையும் கண்டறிதல் ;

(6) நிறைவற்ற அரிசி உணவுகளைச் சரி செய்வது குறித்து ஆராய்ச்சி நடத்துதல் ;

(7) அடுத்தடுத்து கணக்காய்வு செய்வதன் மூலம் உணவு முறையில் காணப்படும் இயல்புகள், குழந்தைகள் பிறப்பு வீதம் ஆகியவை குறித்து ஆராய்ச்சி செய்தல் ;

(8) பயன்முறை ஊட்டச்சத்து குறித்து சுகாதாரப் பணி யாளர்களுக்குப் பல்வேறு தரங்களில் பயிற்சியளித்தல்.

70. ஐக்கிய நாடுகள் சிறுவர் நல நிதி நிறுவனத்திடமிருந்து ஆண்டு தோறும் கொடையாகக் கிடைக்கின்ற பால் மாவைக் கொண்டு பல்வேறு மகப் பேறு-குழந்தை நல நிலையங்கள் மூலமாகவும் வட்டாரப் பகுதிகளில் உள்ள பள்ளிகள் மூலமாகவும் பால் உணவு வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### XVIII. நீர் வழங்கல்—வடிகால் திட்டங்கள்

71. இந்தக் கோரிக்கையில், "நகர நீர் வழங்கல்—வடிகால் திட்டங் கள்" குறித்து ஏற்படும் செலவினம் சேர்க்கப்படவில்லை. இத் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப் பின்வரும் பொதுக் கோட்பாடு பின் பற்றப்படுகிறது.

72. நகராட்சிகளும் பேரூராட்சிகளும் அவற்றின் நீர் வழங்கல் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக அவற்றுக்குக் கடன்கள் மட்டுமே பொதுவாக வழங்கப்படுகின்றன. நீர் வழங்கல் திட்டங்களை கட்டுப்படி யாகும் அடிப்படையில் நிறைவேற்ற வேண்டுமென நகராட்சிகளும் பேரூ ராட்சிகளும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளன. இதற்காக வீடுகளில் செல வாகும் தண்ணீரின் அளவைக் கணக்கெடுக்க மீட்டர்களைப் பொருத்தி தண்ணீரைப் பயன்படுத்துவோருக்குத் தகுந்த அளவில் கட்டணங்களை விதிக்க வேண்டும். இத்திட்டங்களைப் பேணுவதற்கு ஆகும் செலவுகளை ஈடு செய்வதற்காக மட்டுமன்றி இத்திட்டங்களை நிறைவேற்றுவதற்காக வாங் கிய கடன்கள் குறித்து ஆண்டுத் தவணைத் தொகைகளைச் செலுத்துவதற்கும்

இத்திட்டங்களை வருங்காலத்தில் மேம்பாடு செய்வதற்கும் போது
மான வருவாய் கிட்டுகிற வகையில் மேற்சொன்ன கட்டணங்கள் விதிக்கப்பட
வேண்டும். நிதி நிலை ஏற்புடையதாக இல்லாத உள்ளாட்சி மன்றங்களைப்
பொறுத்தவரை அவைகள் நிறைவேற்ற மேற்கொண்டுள்ள நீர் வழங்
கல் திட்டங்கள் பயன்தரத் தொடங்கிய பின்னர் அக் கடன்களுக்கான ஆண்
டுத் தவணைத் தொகைகளைச் செலுத்தலாம் என்று அனுமதிக்கப்படு
கின்றன. இருப்பினும், அதுவரை அக் கடன்களுக்குரிய சாதாரண வட்டியை
அம் மன்றங்கள் செலுத்திவர வேண்டும். அரசாங்கத்திடமிருந்து கடன்
பெற்ற பிறகும் இத் திட்டங்களுக்காகச் செலவிட இயலாத நிலையில் உள்ள
ஊராட்சிகளுக்குத் தனிப்பட்ட சூழ்நிலைகளில் மேற்படி திட்டங்களை நிறை
வேற்றுவதற்காக தேவையான அளவிற்கு உதவி மானியமும் வழங்கப்
படுகிறது.

73. கழிவுநீர் வடிகால் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக உள்
ளாட்சி மன்றங்கள், ஏற்பளிக்கப்பட்ட வீதங்களில் தண்ணீர் வரிகளையும்,
கழிவுநீர் வடிகால் வரிகளையும் விதித்து மிகுந்த அளவில் தன் வரு
வாயைத் திரட்டிய பின்னரும், திருப்பிச் செலுத்தத்தக்க திறனுக்
கேற்ப அரசாங்கத்திடம் மிகுந்த அளவிற்குக் கடன்கள் பெற்ற பின்ன
ரும் கழிவுநீர் வடிகால் திட்டங்களின் முதலீட்டுச் செலவில் ஈடு செய்ய
இயலாத பகுதி அந்த உள்ளாட்சி மன்றங்களுக்கு உதவி மானியமாக
வழங்கப்படுகிறது.

## XIX. சென்னை மாநகருக்கு நீர் வழங்கல்—கழிவு நீர் வடிகால் திட்டங்கள்.

74. ஏறத்தாழ 20 இலட்சம் மக்களுக்கு சென்னை மாநகராட்சி நாள்
ஒன்றுக்கு 32 மில்லியன் காலன் முதல் 33 மில்லியன் காலன் வரை
மட்டுமே நீர் வழங்க இயலுகின்றது. பொதுச் சுகாதாரம் குறித்து முடிவு
செய்யப்பட்டுள்ள தரங்களின்படி. ஒரு நாளைக்கு ஒருவருக்குக் குறைந்த
அளவு 25 காலன் நீர் தேவைப்படுகிறது. ஆனால், இப்போது ஒரு
நாளைக்கு ஒருவருக்கு 20 காலனுக்கும் குறைவான அளவிலேயே நீர்
வழங்கப்படுகிறது. இப்போதுள்ள தண்ணீர் வழங்குவதற்கான பங்கீட்டுத்
திட்டம் மக்களின் தேவையை நிறைவேற்றுவதற்குப் போதுமானதாக
இல்லை. எனவே, மண்டல அடிப்படையில், நீர் பங்கீட்டு ஏற்பாட்டை
மாற்றி அமைப்பதற்காக விரிவான திட்டங்களை ரூபாய் 300 லட்சம் மதிப்பீட்டுச்
செலவில் சென்னை மாநகராட்சி மேற்கொண்டுள்ளது. ரூ. 78 லட்சம்
மதிப்பீட்டுச் செலவில் தியாகராய நகரில் தனிப்பட்ட தலைமை அமைப்பு
களும் கட்டுப்பட்டு வருகின்றன.

75. சென்னை மாநகருக்குத் தேவைப்படும் தண்ணீர் சோழவரம்
ஏரி, புழலேரி ஆகியவற்றிலிருந்தும் பூண்டியிலுள்ள சத்தியமூர்த்தி சாகரி
லிருந்தும் கொண்டுவரப்படுகிறது. இந்த ஏரிகள் மொத்தமாகச் சுமார்
5,800 மில்லியன் கன அடி நீர் கொள்ளும் திறனுடையவையாயினும்
நீராவியாதல், கசிவு ஆகியவற்றால் ஏற்படும் இழப்பு போக இவற்றின்
கொள் அளவு மேற்சொன்ன அளவைக்காட்டிலும் மிகவும் குறைவான
தாகவே இருக்கும். புழலேரியின் கொள் அளவுத் திறனையும் சோழ
வரம் ஏரியின் கொள் அளவுத் திறனையும் மிகுதிப்படுத்துவதற்காக ரூ.
15·72 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் அவற்றின் நீர் மட்ட அளவு முறையே
இரண்டு அடியும் நாலு அடியும் உயர்த்தப்பட்டு வருகிறது. பூண்டி
நீர்த்தேக்கத்திலிருந்து புழலேரிக்கு திறந்த கால்வாய் மூலமாக நீர்
கொண்டுவருவதற்காக ரூ. 85 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் கால்வாய்
கட்டப்பட்டு வருகிறது.

76. புழலேரி, சோழவரம் ஏரி ஆகியவற்றின் ஆயக்கட்டில் உள்ள
7,500 ஏக்கர் நன்செய் நிலங்கள் முழுவதையும் கையகப்படுத்தலாம்
என்றும் இதனால் இப்போது பாசனத்திற்காகப் பயன்படுத்தப்படுகின்ற
500 மில்லியன் கன அடி நீரைக் குடிநீர் வசதிக்காகப் பாதுகாக்கலாம்
என்றும், நீர் வழங்கல் உயர் அதிகாரக் குழு 1961–ம் ஆண்டில் பரிந்



துரைத்தது. இதற்கிணங்க, புழலேரி, சோழவரம் ஏரி ஆகியவற்றின் பாச
னத்திலுள்ள 7,500 ஏக்கர் நிலம் முழுவதையும் கையகப்படுத்த ஆணை
கள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. மேற்படி நிலங்களைக் கையகப்படுத்திய பின்
னர் நன்செய் நிலத்தின் மதிப்பில் 50 சத வீதத் தொகையை வசூல்
செய்து கொண்டு அந்த நன்செய் நிலங்களை அவற்றிற்குரிய ஆயக்கட்டு
தாரர்களுக்கே புன்செய் நிலங்களாகத் திருப்பித் தர வேண்டும் என்
றும் ஆணையிடப்பட்டது. நிலக்கிழார்களுக்கு இழப்பீடு வழங்குவதற்காக
ரூ. 210 லட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. 31–1–1968 வரை 6,649.24
ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது.

77. சென்னை மாநகரில் வீட்டுப் பணிகளுக்கும் தொழில் பணிகளுக்கும்
நீர் வழங்குதலில் பற்றுக்குறை இருந்து வருகிறது. சென்னை மாநகரின்
குடிநீர் வசதியைப் பெருக்க, காவேரி ஆற்றிலிருந்து நீரைக் கொண்டுவர
அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

78. நிலத்துக்கடியிலுள்ள ஊற்று நீரைக் கொணர நிலநீர் ஆய்
வுத் திட்டம் ஐக்கிய நாடுகள் மன்ற ஆதரவில் சென்னையில் 17–3–1966-ம்
தேதி முதல் செயல்படத் தொடங்கியுள்ளது. இத் திட்டம் நிலநீர் வளங்
களை ஆய்வு செய்து வருகிறது. சென்னைமாநகரம், அதன் சுற்றுப்புறங்
கள், பாலாறு வடிநிலம், நெய்வேலிப் பகுதி, காவேரி சங்கமுகப் பகுதி
ஆகிய நான்கு வட்டாரங்களில் உள்ள நிலநீர் வளங்களை மேம்படுத்துவது
பற்றியும், அவற்றின் தொழில் நுட்ப சாத்தியக் கூறுகள், பொருளாதார
சாத்தியக் கூறுகள் ஆகியவை குறித்தும் இத் திட்டம் மதிப்பிடுகிறது.
இத்திட்டத்தின் செயற்கால அளவு மூன்றுண்டுகளாகும். வானிலை ஆராய்ச்சி
நீரின் பண்பியல், ஆய்வு, நில உட்கூற்றியல், நீர்நில உட்கூற்றியல்
ஆகியவற்றின் விவரங்கள் சேகரிக்கப்பட்டு அதுகுறித்த முதல் மதிப்
பீடு செய்து முடிக்கப்பட்டுள்ளது.

79. கழிவுநீரைத் தொழிற்சாலைப் பணிகளுக்குப் பயன்படுத்தும் வகை
யில் மாற்றும் சாத்திய கூறு பற்றி ஓர் ஆராய்ச்சிப் பிரிவு முன்னோடி
ஆய்வை மேற்கொண்டுள்ளது.

80. சென்னை நகரில் கழிவுநீரை, அகற்றும் ஏற்பாடு தற்போதுள்ள
மக்கள் தொகைக்கு ஏற்ப செவ்வனே அமைந்திருக்கவில்லை ; இதன் விளை
வாய் கழிவுநீர் வழிந்து பக்கிங்ஹாம் கால்வாயிலும் கூவம் ஆற்றிலும்
சென்றடைகின்றது. இதற்கு சென்னை மாநகராட்சி விரிவான திட்டம்
ஒன்றைத் தயாரித்துள்ளது. இதன்படி சென்னைமாநகரம் ஐந்து மண்
டலங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு மண்டலத்திலும், "கழிவுநீர்
இறைப்பு நிலையங்கள்" தொகுதி அமைந்திருக்கும் ; இவை அந்தந்தப்
பகுதியின் கழிவுநீரை அதற்கென நகர்ப்புற எல்லைகளில் தெரிந்தெடுக்கப்
பட்டுள்ள பகுதியில் இறைத்து அப்புறப்படுத்தும். நான்கு மண்டலங்
களுக்குரிய திருத்தியமைக்கப்பட்ட திட்டங்களுக்கு அரசாங்கம் ஒப்பளிப்பு
வழங்கியுள்ளது.

81. சென்னை மாநகராட்சியின் நீர்வழங்கல் கழிவுநீர் ஏற்பாடு அமைப்
புத் திட்டங்களுக்கு பாதி கடனாகவும், பாதி மானியமாகவும், நிதி வழங்
கப்படுகிறது.

## XX. நகர் அமைப்பு.

82. மூன்றாவது திட்ட காலத்தில், இம் மாநிலத்திலுள்ள முக்கிய
மான நகரங்கள், பட்டணங்கள், யூனியன் ஆட்சிப் பகுதி ஆகியவற்றின்
நகர் அமைப்புக்காக பெருந் திட்டங்களைத் தயாரிப்பதற்கென இந்திய
அரசு ஒரு திட்டத்தை ஊக்குவித்துள்ளது. இதற்காக மத்திய அரசு
முழு நிதி உதவி அளிக்கிறது. இத் திட்டத்தின்கீழ் மூன்றாம் திட்ட
காலத்தில் சென்னை, கோயம்புத்தூர், தூத்துக்குடி துறைமுகப் பகுதி,
நெய்வேலி பழுப்பு நிலக்கரி ஆதாரங்களின் வட்டாரம் ஆகிய நகரங்
களுக்கென நகர் அமைப்பு பெருந் திட்டங்களைத் தயாரிக்கும் பணியை
மேற்கொண்டுள்ளது. தூத்துக்குடி துறைமுகப் பணி முடிக்கப்பட்டு விட்

டது. எஞ்சிய வட்டாரப் பணிகள் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வருகின்றன. திருச்சிராப்பள்ளி, மதுரை ஆகியவற்றுக்கான பெருந் திட்டங்களைத் தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு நிறைவேறி வருகிறது.

சென்னை மாநகரத்திற்காக பயணிகள் போக்குவரத்து, சரக்குப் போக்குவரத்திற்கான திட்டத்தைத் தயாரிப்பதற்காக விரிவான ஆய்வு தொடங்கப்பட்டுள்ளது. இதற்காகும் செலவினை இந்திய அரசு ஏற்றுக்கொள்ளும். கோயம்புத்தூர், செங்கற்பட்டு, சேலம், திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களுக்காக வட்டாரத் திட்டங்கள் தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், நகர் அமைப்புத் துறை தெரிந்தெடுத்த நகர்ப்புறங்களுக்காக வரைவு வளர்ச்சி திட்டங்களைத் தயாரிப்பதிலும் ஈடுபட்டுள்ளது. விரிவாக நகர் அமைப்புத் திட்டங்களைத் தயாரிப்பதற்கும் நிறைவேற்றுவதற்கும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு அரசு கடன் வழங்குகிறது. திட்ட வேலைகளில் சிறந்த திறமையையும், விரிவான முன்னேற்றத்தையும் காண்பதற்காக சென்னை மாநகர், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி ஆகிய இடங்களில் வட்டார அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். நகரமைப்புப் பணியில் வல்லுநர்களுக்குப் பயிற்சியளிக்கும் திட்டம் ஒன்று உள்ளது. இத் துறையைச் சேர்ந்தவர்கள் பட்ட மேற்படிப்புப் பாட முறையிலும் டிப்ளொமாவிற்கும் மேற்பட்ட பாட முறையிலும் பயிற்சி பெற அனுப்பப்படுகின்றனர். 1968-69 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இதற்குத் தேவையான நிதி ஒதுக்க வகை செய்யப்பட்டுள்ளது.

இம் மானியக் கோரிக்கையை ஏற்குமாறு இம் மன்றத்தினை வேண்டுகின்றேன்.

*** கோரிக்கை 38—பொதுச் சுகாதார மூலதனச் செலவு.**

இந்த மானியக் கோரிக்கையில் கீழ்க்கண்ட இனங்கள் அடங்கும் :—

(i) a. பணிகள்.

(ii) b. உதவி மானியங்கள்.

(iii) c. வளர்ச்சிப் பணித் திட்டங்கள்.

(iv) d. கழிக்கவும்—30. பொதுச் சுகாதாரத்திற்கு மாற்றப்பட்ட மூலதனச் செலவு.

**இனம்—(i)—a. பணிகள்—[(—) ரூ. 25,95,400]—**

நகராட்சிகளிலும், ஊராட்சிகளிலும் நீர் வழங்கு திட்டங்களையும், கழிவுநீர் அகற்றல் திட்டங்களையும் விரைந்து நிறைவேற்றும் பொருட்டு வெளிக் கடைகளில் எளிதில் கிடைக்காத குழாய் முதலிய பொருள்களைத் தேவையான அளவிற்கு அரசு வாங்கி, இருப்பில் வைத்து வருகின்றது. நீர் வழங்குதல், கழிவுநீர் அகற்றுதல் ஆகிய வேலைத் திட்டங்களுக்காகப் பயன்படுத்தப்படும் குழாய்கள், ஏனைய பொருள்கள் ஆகியவை குறித்த செலவு, சரிகட்டுதல் மூலம், சம்பந்தப்பட்ட வேலைத் திட்டங்களுக்குப் பற்றாக எழுதப்பட்டு, அந்தந்த உள்ளாட்சி மன்றங்களிடமிருந்து வசூலிக்கப்படும். பொருள்கள் செலவாக ஆக, அவற்றிற்கு ஈடாகப் பொருள்கள் வாங்கி இருப்பு வைக்கப்படுகின்றது.

**இனம்—(ii)—b. உதவி மானியங்கள்[(—) ரூ. 1,26,200]—**

சென்னை மாநகராட்சி நிறைவேற்றும் நீர் வழங்கு திட்டங்களுக்கும் கழிவுநீர் அகற்றல் திட்டங்களுக்கும் வழங்கப்பட்ட உதவி மானியங்கள் குறித்த செலவு, 1956-57, 1957-58-ம் ஆண்டுகளில் முதற்கண் மூலதனக் கணக்கிலிருந்து சரிக்கட்டப்பட்டது. இச் செலவுத் தொகையை மூலதனக் கணக்கிலிருந்து 15 ஆண்டுகளில் வருமானக் கணக்கிற்கு மாற்றி எழுதப்பட வேண்டுமென்று ஆணையிடப்பட்டது. இதற்கு நிகராக “30. பொதுச் சுகாதாரம்” என்பதன்கீழ் செலவு கூட்டப்பட்டுள்ளது.

* அச்சிட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட உரை.





**இனம்—(iii)—c. வளர்ச்சி வேலைத் திட்டங்கள்—[ரூ. 57,400]—**

(A) கிராமப் பகுதிகளுக்குக் குடிநீர் வழங்குவதே கிராம நீர் வழங்கு (அடங்கல்) வேலைத் திட்டத்தின் நோக்கமாகும்.—(i) விசை ஏற்ற அமைப்பு இணைக்கப்பட்ட துளைக் கிணறுகள், (ii) மேந்தொட்டிகளும் (Overhead tanks) விசை ஏற்ற அமைப்புகளும் கொண்ட மூடப்பட்ட கிணறுகள், (iii) நகராட்சிகளின் நீர் பெருங் குழாய்களிலிருந்து இணைப்புகள், (iv இழு கிணறுகள் ஆகியவற்றின் மூலம் கிராமங்களுக்கும் குடிநீர் வழங்கப்படும். பொதுவாக, வேலைத் திட்டத்தின் செலவில் 25 சத வீதம், இவ் வேலைத் திட்டத்தினால் பயன்பெறுபவர்களிடமிருந்து வசூலிக்கப்படும். ஆனால், அரிஜனங்கள், ஏழை மக்கள், பின்னிலை வகுப்பினர் ஆகியோர் பயன்படுத்தும் கிணறுகளுக்காக எவ்விதத் தொகையும் வசூலிக்கப்படுவதில்லை. முதலாவது, இரண்டாவது திட்டக் காலத்தில், 14,272 நீர் வழங்கு வேலைகள் நிறைவெய்தின. இவ் வேலைத் திட்டம், பின்னர் கிராமப் பணிகள் திட்டத்துடன் இணைக்கப்பட்டது.

கம்பம் பள்ளத்தாக்கு பஞ்சாயத்துக்களுக்கான நீர் வழங்கு (அடங்கல்) திட்டத்திற்கு 1955-ல் ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. இத் திட்டம் பயனுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. பெரியாற்றின் குறுக்கே படுகை அணை கட்டுவது தவிர, மற்றெல்லாப் பணிகளும் செய்து முடிக்கப்பட்டுள்ளன. இத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள ஊராட்சிகள் இப் பணிக்காகும் செலவினைச் செய்வதற்காக, அந்த ஊராட்சிகளுக்கு மானிய உதவி அளிக்கும் பொருட்டு ரூ. 1,800 ஒதுக்கப்பட்டுள்ளது.

1966 டிசம்பர் திங்களில் நாங்குனேரி ஊராட்சிக்குக் குடிநீர்த் திட்டத்திற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இவ் வேலை நிறைவேறி வருகிறது. இத் திட்டத்திற்காகும் செலவினைச் செய்வதற்காக, நாங்குனேரி ஊராட்சிக்கு மானிய உதவி வழங்குவதன் பொருட்டு ரூ. 50,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

**(B) தேசிய நீர்வழங்கல், துப்புரவு (கிராம நலத்) திட்டம்.—** 5,000-க்கு மேற்படாத மக்கட் தொகை கொண்ட கிராமங்களில் காலரா, டைபாய்டு முதலிய நீரால் பரவும் நோய்களை ஒழிப்பதற்கான இத் திட்டம் இந்திய அரசு ஊக்குவிக்கும் ஒரு திட்டமாகும். அத்தகைய கிராமங்களுக்குப் போதுமான நீர் வழங்கும் வசதிகளையும், துப்புரவு வசதிகளையும் அளிக்க இத் திட்டம் வகை செய்கிறது. துளைக் கிணறுகள் அல்லது மேல் நிலைத் தொட்டிகளை நிறுவி அதனின்று குழாய்கள் மூலம் காப்புக் குடிநீர் ( Protected Water-supply ) வழங்கப்படுகிறது. உள்ளடங்கு கழிவிடங்களைத் (Bore-hoe latrines) தனியார் வீடுகளில் அமைத்தும், கிராமத்தார் பொதுவாகப் பயன்படுத்த பொதுக் கழிவிடங்களை ( Community latrines ) அமைத்தும், துப்புரவு வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. இத் திட்டத்திற்காகும் செலவில் 5 சதவீதம் இத் திட்டத்தினால் பயனடைவோரிடமிருந்து வசூலிக்கப்படுகிறது. அரிஜனங்கள், ஏழைமக்கள், பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்தோர் ஆகியோர்களின நன்மைக்காகவென்றே ஏற்படுத்தப்பட்ட வேலைகளுக்காகும் செலவில் பங்குத் தொகை எதும் வசூலிக்கப்படுவதில்லை. இரண்டாவது திட்டக் காலத்தில் 405 கிராமங்களில் 1,039 வேலைகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன. இத் திட்ட வேலைகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. முடிவடையாத வேலைகள் மட்டுமே நிறைவேற்றுவதற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. இத் திட்டத்தின்கீழ் முடிவுறுமலுள்ள வேலைகளை நிறைவேற்ற 1968-69-க்கான வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 5,600 வகை செய்யப்பட்டுள்ளது.

**இனம் (iv)—d. கழிக்கவும்—“30. பொதுச் சுகாதாரத்திற்கு” மாற்றப்பட்ட மூலதனச் செலவு.—[(—) ரூ. 5,800]—**

கிராம நீர் வழங்கு (அடங்கல்) வேலைத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும் வேலைகளுக்கு, அவற்றிலிருந்து பயன் பெறுபவர்களிடமிருந்து திட்டத்திற்காகும் செலவில் 25 சதவீதம் வசூலிக்கப்படும். எஞ்சிய தொகையாக ரூ. 5,800 பயன் பெறுபவர்களிடமிருந்து வசூலிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இத் தொகையை மூலதனக் கணக்கிலிருந்து வருமானக் கணக்கிற்கு மாற்றவேண்டும்.

இம் மானியக் கோரிக்கையின்கீழ், ரூ. 57,400-ஐ ஒதுக்குவதற்கு இம் மன்றம் ஒப்புதல் வழங்குமென நான் நம்புகிறேன்.

### * நீர் வழங்கல்—கழிவு நீர் அகற்றுதல் குறித்த சிறப்புத் திட்டங்கள்.

### பகுதி I—நீர் வழங்கல்.

### சென்னை மாநகரம்.

சென்னை மாநகருக்காக வழங்கப்படும் நீரைப் பெருக்கவேண்டிய தேவை உள்ளது என்பது கடந்த சில காலமாக அரசின் நாட்டத்தை ஈர்த்து வந்துள்ளது. புறநகரில் உள்ள (1) சத்தியமூர்த்தி சாகரம், (2) சோழவரம் ஏரி, (3) புழலேரி ஆகிய மூன்று நீர்த்தேக்கங்களிலிருந்து சென்னை மாநகரம் தற்போது குடிநீர் வசதி பெறுகிறது. இம் மூன்று நீர்த் தேக்கங்களுக்கும் வடகிழக்குப் பருவகாலத்தில் கொற்றலையாற்றிலிருந்து நீர் கிடைக்கிறது. மேற்சொன்ன மூன்று ஏரிகளிலிருந்தும் நாளொன்றுக்கு ஏறக்குறைய 300 இலட்சம் காலன் அளவிற்கு இயல்பாக நமக்குத் தண்ணீர் கிடைக்கிறது. நாளொன்றுக்கு அதிக அளவு 350 இலட்சம் காலன் தண்ணீரும், வறட்சியான ஆண்டுகளில் மிகக் குறைவாக நாளொன்றுக்கு 120 இலட்சம் காலன் தண்ணீரும் கிடைத்து வந்துள்ளது.

2. சென்னை மாநகருக்காகவும் அண்மையிலுள்ள தொழிற்சாலைகளின் தேவைகளுக்காகவும் வழங்கப்படும் நீரின் அளவை அதிகரிக்க வேண்டியது மிகவும் அவசியமாகி விட்டபடியால் பின்வரும் குறுகிய காலப் பணிகளுக்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது :—

| | மதிப்பீட்டுச் செலவு. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| (1) நீர் அனுப்பப்படுகையில் 40 கோடி கன அடி அளவுக்கு நீர் விரயம் ஆவதைத் தவிர்ப்பதற்காக பூண்டியிலிருந்து புழலேரிக்கு திறந்த காரைப்பூச்சுக் கால்வாய் ஒன்றைக் கட்டுதல். | 85 (தோராய மதிப்பீடு). |

இப் பணி மாநகராட்சியால் நிறைவேற்றப்பட்டு வருகிறது. 1968 ஜனவரி வரையில் ரூ. 25·68 இலட்சம் செலவிடப்பட்டது. இத் திட்டம் 1968-ல் முடிவுறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

| | மதிப்பீட்டுச் செலவு. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| (2) இப்பொழுது பாசனத்திற்குப் பயன்படுத்தப்படும் 55 கோடி கன அடி தண்ணீரைப் பாதுகாப்பதற்காக புழலேரி, சோழவரம் ஏரிகளின் அருகிலுள்ள 7,264 ஏக்கரா நன்செய் நிலம் முழுவதையும் கையகப்படுத்துதல். (புன்செய் நில மதிப்பைக் கழித்தது போக இழப்பீட்டுத் தொகையாக கொடுக்க வேண்டிய நிகர தொகை.) | 1,47·00 |

7,264 ஏக்கரா நிலத்தில் 1968 ஜனவரி இறுதி வரை 6,658·9( ஏக்கரா பரப்பளவுள்ள நிலம் கையகப்படுத்தப்பட்டுவிட்டது. நிலக் கிழார்களுக்கு 1,11·62 இலட்ச ரூபாய் இழப்பீட்டுத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள பகுதியைக் கையகப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது.

* அச்சிட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட குறிப்பு.



| | மதிப்பீட்டுச் செலவு. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| (3) கூடுதலாக 68 கோடி கன அடி அளவு நீரைச் சேமித்து வைக்க புழலேரி, சோழவரம் ஏரி ஆகியவற்றின் கரையை முழு ஏரி மட்டத்தை உயர்த்துதல் (41+27). | 24·59 |

மேற்படி வேலைக்கான மதிப்பீட்டிற்கு 1967 செப்டம்பரில் ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. இவ் வேலை நிறைவேற்றப்பட்டு வருகிறது. இந்த இடைக்காலப் பணிகளின் பலனாக நாளொன்றுக்கு 280 இலட்சம் காலன் அதிக அளவு நீர் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### நில நீர் வழங்கல்.

3. 1965 பிப்ரவரித் திங்களில் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட நில நீர் ஆய்வுப் பிரிவு தற்போது சென்னை எண்ணெய்த் தூய்மைப் படுத்தும் தொழிற்சாலைக்கு நாளொன்றுக்கு 37·5 இலட்சம் காலன் நீரையும், மணலியில் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ள உர உற்பத்தித் திட்டத்திற்கு நாளொன்றுக்கு 60 இலட்சம் காலன் நீரையும், வழங்குவதற்கான திட்டங்களை வகுப்பதில் ஈடுபட்டுள்ளது. கட்டிட வேலைக்கென எண்ணெய்த் தூய்மைப் படுத்தும் ஆலைக்கு நாளொன்றுக்கு 7·5 இலட்சம் காலன நீர் ஏற்கனவே வழங்கப்பட்டு வருகிறது.

எண்ணெய்த் தூய்மைப்படுத்தும் ஆலைக்கு நாளொன்றுக்கு 30 இலட்சம் காலன் நீர் வழங்கும் திட்டத்திற்கு தேவையான கிணறுகள் முடிக்கப்பட்டுள்ளன. குழாய்களை அமைத்து இணைக்கும் வேலை நிறைவேறி வருகிறது.

சென்னை உர உற்பத்தி திட்டத்திற்கு நில நீர் வழங்குவதைப் பொறுத்தவரையில், தொடக்க வேலைகளுக்கென ரூ. 14 இலட்சம் செலவிட ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இப் பணி நிறைவேற்றப்பட்டு வருகிறது. இத் திட்டத்திற்கென நாளொன்றுக்கு 60 இலட்சம் காலன் நீர் வழங்குவதற்கென ரூ. 196 இலட்சம் செலவில் கிணறுகள், குழாய்கள் முதலியவற்றை அமைக்கும் திட்டம் குறித்து அரசாங்கம் ஆய்வு செய்து வருகிறது.

ஐக்கிய நாடுகள் மேம்பாட்டுத் திட்டத்தைச் சேர்ந்த நில நீர் ஆய்வுத் திட்டம் செயலில் உள்ள பகுதிகள் நீங்கலான பிற பகுதிகளில் நில நீர் ஆய்வு குறித்த அடங்கல் திட்டம் ஒன்றுக்கு அரசாங்கம் நிர்வாக ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இத் திட்டத்திற்கு இந்திய அரசினரின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

4. ஐக்கிய நாடுகள் மேம்பாட்டுத் திட்டம் 1966 மார்ச் 17-ம் திங்களன்று செயலுக்கு வந்தது. சென்னை நகரம், அதன் சுற்றுப்புறங்கள், பாலாறு வடி நிலம், நெயவேலிப் பகுதி, காவிரி சங்கமுகப் பகுதி ஆகிய நான்கு வட்டாரங்களில் உள்ள நில நீர் வளங்களைக் கண்டுபிடிப்பதற்கும், நீரின் அளவினை முடிவுசெய்து, இந் நீர் வளங்களை மேம்படுத்த தொழில் நுட்ப பொருளாதார வாய்ப்புகளை இத் திட்டம் மதிப்பிடுகிறது. இத் திட்டம் மூன்றாண்டுகளுக்குச் செயலிலிருக்கும். ஐக்கிய நாடுகள் அனுப்பியுள்ள வல்லுநர்களும், சென்னை பொதுப்பணித் துறையைச் சேர்ந்த தொழில் நுட்பப் பணியாளர்களும் இணைந்து, இந்த நான்கு வட்டாரங்களிலும் ஆய்வுகள் நடத்துகின்றனர்.

5. சென்னைப் பகுதியில் ஆய்வு வேலை விரைவாகத் தொடங்கப்பட்டு விட்டது. குறிப்பாக கொற்றலையாறு, ஆரணியாறு வடி நிலப் பகுதியில் ஆய்வு வேலைத் தொடங்கிவிட்டது. சென்னையிலும் அதன் சுற்றுப்புறங்களிலும், கடல் நீர் உட்புகுவது குறித்து ஆய்வு முடிந்துவிட்டது. ஊற்று

நீர் மட்டங்கள், காலமாறுதலுக்கிணங்க வேறுபடுவதை ஆராயவும், நீரின் அளவினை ஆராயவும், பாலாற்றுப் பரப்பில் பரிசோதனைக் கிணறுகள் பல அமைக்கப்பட்டுள்ளன. நெய்வேலியில் உள்ள கடலூர் கனிக் கற்களின் அடுக்குகளில் நில நீர் கிட்டும் வாய்ப்புகளை மதிப்பிடவும், அப் பகுதியில் நில நீரைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்புகளை உறுதிப் படுத்தவும் இத் திட்டம் கருதியுள்ளது.

தற்போது ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ள இத் திட்டத்தில் காவிரி சங்கமுகப் பகுதி முழுவதும் அடங்கா. காவிரிச் சங்கமுகப் பகுதி முழுவதற்கும் இத் திட்டத்தால் பயன் கிடைக்கும் பொருட்டு ஐக்கிய நாடுகளிலிருந்து கூடுதலான சாதனங்களும், வல்லுநர்களும் கிடைக்கும் வகையில் இததிட்டத்தைத் திருத்தியமைக்க வேண்டுமென்றுஐக்கிய நாடுகள் திட்டக்குழு இந்திய அரசின் மூலம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

## காவிரி ஆற்றிலிருந்து நீர் கொண்டுவருதல்.

6. மேலே கூறிய நிலத்துக்கடியிலுள்ள நீர் வளங்களும் குறுகிய கால நடவடிக்கைகளும் தற்போது சென்னை மாநகரின் அவசரத் தேவைகளைக்கூட முழுவதும் நிறைவேற்ற முடியாது. எனவே, ஆண்டு முழுவதும் வற்றாது நீர் வழங்கக் கூடிய நீல நீர்வளம் ஒன்றைக் கண்டுபிடிக்க வேண்டியது இன்றியமையாததாகிறது. காவிரி ஆற்றிற்கு தென் மேற்குப் பருவமழை மூலமாகவும, வடகிழக்குப் பருவமழை மூலமாகவும் நீர் வசதி கிடைப்பதால், சென்னை நகரில் குடிதண்ணீர் வசதியை இடைக்காலத்தில் பெருக்குவதற்காக காவிரி ஆறறிலிருந்து தண்ணீர் கொண்டுவருவது சிறந்த திட்டமாகும். காவிரியிலிருந்து சென்னை மாநகருக்குத் தண்ணீர் வசதியைமேம்படுத்துவதற்காக, ஏழு இடங்களில் ஏதாவது ஒன்றிலிருந்து தண்ணீர் எடுத்து வருவது குறித்து சிறப்பு ஆய்வுப் பணியாளர் ஆலோசனை செய்தனர். ஒவ்வொருஇடத்திலிருந்தும் காவிரித் தண்ணீர் அனுப்புவதன் தகுதிகளையும் தகவின்மைகளையும் குறித்துத் தலைமைப் பொறியாளர் ஆராய்ந்து பார்த்து, வீராணம் ஏரியிலிருந்து சென்னைக்குத் தண்ணீர் எடுத்துவரும் திட்டத்தையே பரிந்துரைத்தார். நாள் ஒன்றுக்கு 4 கோடி காலன் தண்ணீர் கொண்டு வர 21·30 கோடி ரூபாய் மூலதனச் செலவும், 45 இலட்ச ரூபாய் பேணுதல் செலவும் ஆகுமென மதிப்பிடப்படுகிறது. வீராணம் ஏரியிலிருந்து சென்னைக்குத் தண்ணீர் கொண்டு வருவதை முதற்கண் ஒப்பளிப்பு வழங்கப்படலாம் என்றும் சென்னைக்கு மேற்கொண்டும் தேவையுள்ள நீரை இரண்டாம் நிலையாக கிருஷ்ணா நதியிலிருந்து கொண்டு வரலாமென தலைமைப் பொறியாளர் பரிந்துரைத்தார்.

வீராணம் நீர் வழங்கும் திட்டத்தை மேற்கொள்ள அரசாங்கம் முடிவு செய்துள்ளது. இத்திட்டம் 1967 அக்டோபர் 30-ல் தொடங்கி வைக்கப்பட்டது. இநதிய அரசின் ஒப்புதலுக்கென, வரைவுச் செயற் குறிப்புகள் அனுபபப்பட்டுள்ளன. இத் திட்டத்திற்கென ரூ. 25 இலட்சம் 1968–69 ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது. 1969–70-ல் தீட்டப்படும் புதிய நான்காம் திட்டத்தில் இத் திட்டத்தை நிறைவேற்றும் பணிக்கு முதலிடம் அளிக்கப்படும்.

## கோயம்புத்தூர் நீர் வழங்கல் திட்டம்.

7. கோயம்புத்தூர் நகருக்காக தற்போதுள்ள நீர் வழங்கு திட்டம் 1931-ல் முடிக்கப்பட்டது. மேற்குத் தொடர்ச்சி மலையிலுள்ள சிறுவாணி ஆறுதான் நீர்வழங்கு ஆதாரமாகும். இத் திட்டத்தைச் செயலுக்குக் கொண்டுவந்ததிலிருந்து நகரின் மக்கள் தொகை பெருகியுள்ளது. கோயம் புத்தூர் நகருக்கும், கோயம்புத்தூர் நகரைச் சுற்றிலும் மேம்பாடடைந்துள்ள பகுதிக்கும் நீர் வழங்கு வசதியைப் பெருக்க வேண்டும் என்றும், கேரள மாநிலத்தில் தற்போதுள்ள சிறுவாணி ஆற்றின் குறுக்காக ஒரு



நீர்த் தேக்கத்தைக் கட்டி வழி நெடுக உள்ள கிராமங்களுக்கு நீர் வழங்க வகை செய்ய வேண்டும் என்றும் கோயம்புத்தூர் நகராட்சி முறையீடு செய்துகொண்டுள்ளது. அம்முறையீடு குறித்து அரசாங்கம் ஆலோசித்து வருகிறது. நூற்று முப்பது கோடி கன அடி நீரைப் பெறும் விதத்தில் சிறுவாணி நீர் வழங்குத் திட்டத்தை ஆய்வு செய்வதற்கான பணியை இந்த அரசாங்கம் மேற்கொள்வதற்கு கேரள அரசாங்கம் ஒப்புதல் அளித்துள்ளது. சிறுவாணியின் குறுக்காக 65 கோடி கன அடி கொள் அளவுள்ள ஒரு நீர்த்தேக்கத்தைக் கட்ட தலைமைப் பொறியாளர் (பொதுச் சுகாதாரப் பொறியியல், நகராட்சிப் பணிகள்) அடங்கல் அறிக்கை ஒன்றை அனுப்பியுள்ளார். அந்த நீர்த்தேக்கத்திலிருந்து 130 கோடி கன அடி நீரைப் பெறுவது இயலும். அதன் செலவு மதிப்பீடு ரூ. 4,81 இலட்சமாகும். விரிவான ஆய்வுக்குப் பின்னர் அந்த அறிக்கை தயாரிக்கப் பட்டுள்ளது. அந்த அறிக்கை குறித்து அரசாங்கம் தீவிரமாக ஆய்வு செய்து வருகிறது. இத்திட்ட அறிக்கைக்குக் கேரள அரசாங்கத்தின் ஒப்புதல் கிடைத்த பிறகு இத் திட்டம் நிறைவேற்றப்படும். வேலைத் தொடக்கத் தேதியிலிருந்து ஐந்தாண்டுகளில் இத் திட்டம் முடிக்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

## பகுதி II—கழிவு நீர் அகற்றும் சிறப்புத் திட்டங்கள்.

### சென்னை மாநகரம்.

சென்னை நகரில் கழிவு நீர் அகற்றும் திட்டம் 1910-ம் ஆண்டில் அமைக்கப்பட்டபோது நாளொன்றுக்கு, ஒருவருக்கு 25 காலன் என்ற அடிப்படையில் 6·5 இலட்சம் மக்களின் தேவைகளைச் சமாளிப்பதற்கென்றே நிறுவப்பட்டது. அதன் பின் சென்னை நகரம் விரைந்து வளர்ந்துள்ளது. மக்கள் தொகையும் ஒரு சீராக உயர்ந்து வந்துள்ளது, இவ்வாறு வளர்ந்து வரும் நகரின் தேவையைச் சென்னை நகர கழிவு நீர் அகற்றும் திட்டம் சரிக்கட்ட முடியவில்லை. சென்னை நகரில் கழிவுநீர்கால்கள் பலவற்றிலும் கழிவு நீர் அளவுக்கதிகமாக பெருகிப் போய் குடிநீருடன் கலக்கத் தலைப்பட்டுள்ளது. அவ்வப்போது நிலைமையைச் சீர்செய்வதற்கு தனித்தனியே முயற்சி செய்யப்பட்டதென்றாலும் கழிவு நீர் அகற்றும் மேம்பாட்டு அடங்கல் திட்டம் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட தொடக்கத்தில் தான் வகுக்கப்பட்டது. இதுவும் கூட நாளொன்றுக்கு ஒருவர் 25 காலன் தண்ணீர் பயன்படுத்துவார் என்ற அடிப்படையிலே வகுக்கப்பட்டது. சென்னையிலே வாழ்க்கைத்தரம் உயர்ந்துவிட்டதன் காரணமாக ஒருவர் பயன்படுத்தும் தண்ணீர் அளவும் உயர்ந்துவிட்டது. எனவே, சென்னை நகரில் தண்ணீர் வசதியை பெருக்க வேண்டிய அவசியம் நேர்ந்துள்ளது, சென்னை நகரில் பற்பல புதிய பகுதிகளுக்குத் தண்ணீர் வசதி அளிக்கப் பட்டு உள்ளதாலும் சென்னை நகரின் பரப்பளவு இப்போது அதிகரித்துள்ளதாலும், சென்னை நகரில் கழிவு நீர் அகற்றும் ஏற்பாட்டினை விரிவுபடுத்தி மாற்றியமைக்க வேண்டியுள்ளது. சென்னை நகரில் வருங்கால மக்கள் தொகையின் அடிப்படையில் நாளொன்றுக்கு ஒருவர் 40 காலன் தண்ணீர் பயன்படுத்துவார் என்ற அடிப்படையில் கழிவுநீர் அகற்றும் திட்டத்தை மாற்றி அமைக்க வேண்டுமென அரசாங்கம் முடிவு செய்தது. இது வரையில் இவ்வாறு அகற்றிய கழிவு நீர் சாக்கடைப்பண்ணையில் விடப்பட்டது. இதனால் இதற்கு அதிகப் பரப்பளவில் நிலம் தேவையாக இருந்தது. எனவே, இத்தகைய பழங்கால சுகாதாரக் கேடான முறையைக் கைவிட்டு கழிவு நீரைத் தூய்மைப் படுத்தும் பணியை மேற்கொள்ளுவதென அரசாங்கம் முடிவு செய்தது. இதனால் கழிவு நீரிலுள்ள அழுக்குகளும், பாக்டீரியா நுண்ணுயிரும் தூய்மைப் படுத்தும் குட்டைகளில் நீக்கப்படும். இவ்வாறு தூய்மைப் படுத்திய நீரைக்கொண்டு தொழிற்சாலைகளில் இயந்திரங்களுக்குக் குளிரூட்டவும், இக் கழிவு நீர் விடப்படும் பகுதிகளில் வேளாண்மைப் பண்ணைகளையும் மீன் பண்ணைகளையும் ஏற்படுத்தவும் முடியும்.

சுற்றுப்புறத் திட்டங்களில் மாநில வீட்டு வசதிப் பெருவாரியமும் தனக்குச் சொந்தமான கழிவு நீர் அகற்றும் திட்டம் தனியாக வைத்திருப்பதால் மாநில வீட்டு வசதிப் பெருவாரியத்தின் கழிவு நீர் அகற்றும் திட்டம் மாநகராட்சித் திட்டத்துடன் இணைந்து செயல்பட வேண்டும் என்று அரசாங்கம் கருதியது. இக் குறிக்கோளின் அடிப்படையில் சென்னை மாநகரை ஐந்து மண்டலங்களாகப் பிரிக்கும் விரிவான திட்டம் ஒன்று வகைப்படுத்தப்பட்டது. ஒவ்வொரு மண்டலத்தையும் குறித்த திட்டங்களின் விவரங்களும் அவற்றின் தற்போதைய நிலையும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

**மண்டலம் I**—தொண்டையார்பேட்டை, இராயபுரம், ஜார்ஜ்டவுன், பார்க் டவுன் ஆகிய இடங்கள் இம்மண்டலத்தில் அடங்கும். இந்த மண்டலத்திற்காக ரூ. 239·345 இலட்ச செலவில் மாற்றியமைக்கப்பட்ட விரிவான திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளது. கழிவு நீர் இறைப்பு நிலையங்களின் திறனை அதிகரிப்பது, கூடுதலான குறுக்குச் சாக்கடைகளை அமைப்பது, கழிவு நீர் அகற்றும் இடத்திற்குப் பெருங் குழாய் அமைப்பது, கழிவு நீர் அகற்றும் பணிகளை அமைப்பது, ஆகியவை கழிவு நீர் அகற்றும் திட்டத்தை மேம்படுத்தும் செயற்குறிப்புகளில் அடங்கும். இரண்டாம் மண்டலத்தின் தூய்மைப்படுத்தும் வேலைக்காக கொடுங்கையூரில் 800 ஏக்கர் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலத்தில் இம்மண்டலத்தின் கழிவு நீரைத் தூய்மைப் படுத்துவதற்காக தூய்மைப்படுத்தும் நிறுவனம் ஒன்று நிறுவப்படும். வடக்கு கடற்கரைச்சாலை, இப்ராகிம் சாகிப் தெரு ஆகிய இடங்களில் சாக்கடைகளை அமைக்கும் வேலையும், ஏற்றப் பெருங்குழாய் அமைக்கும் வேலையும் விரைந்து நடை பெற்று வருகிறது. 1968-ம் ஆண்டு இறுதியில் இந்த வேலைகள் முடிவு பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இம் மண்டலத்திற்காக 1967–68-ம் ஆண்டுக்கு ரூ. 2 இலட்சமும், 1968–69-ம் ஆண்டுக்கு ரூ. 6·50 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளன. தூய்மைப் படுத்தும் தொழிற்சாலை நிறுவும் வேலையைத் தவிர இவ்வேலைத் திட்டத்தைச் சேர்ந்த பிற வேலைகள் அனைத்தும் 1970-ல் பொதுமக்களுக்குப் பயனளிக்கத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தூய்மைப்படுத்தும் நிறுவன வேலை ஐந்தாண்டுத் திட்டத்தில் நிறைவேற்றப்படும். தூய்மை படுத்தும் வேலைகள் நிறுவப்படும் வரை கழிவு நீரைக் கடலுடன் கலக்கச் செய்யும் இப்போதையத் திட்டம் தொடர்ந்து நடைபெறும்.

**மண்டலம் II**.—நுங்கம்பாக்கம், கீழ்ப்பாக்கம், எழும்பூர், பெரம்பூர், புரசைப்பாக்கம் ஆகிய இடங்களுக்குப் பயனளிப்பதற்குத் இத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. அயன்புரம், செம்பியம் ஆகிய இடஙுகளுக்கான கழிவு நீர் அகற்றும் திட்டமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. செம்பியம் பகுதியில் ஆழமான சாக்கடைக் குழாய்கள் அமைப்பது நீங்கலாக, இத் துணைப் பகுதிகள் அனைத்திலும் ஏனைய சாக்கடைத் குழாய்கள் அமைக்கும் பணி முடிவுபெற்றுள்ளது. கழிவு நீர் இறைக்கும் நிலையங்களை கட்டும் பணியும் கழிவுநீர் இரைக்கும் இயந்திரங்கள் ஆங்கு நிறுவும் பணியும் விரைவில் மேற்கொள்ளப்படும். செம்பியம் பகுதியில் ஆழமான சாக்கடைக் குழாய்கள் அமைப்பதற்கு புதிய ஒப்பந்தப்புள்ளி அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளது. அயன்புரம் பகுதிகளில் வேலைகளை நிறைவேற்றுவதற்காக 1967–68-ம் ஆண்டுக்கு ரூ. 3·90 இலட்சமும், 1968–69-ம் ஆண்டுக்கு ரூ. 3·50 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது. புரசைப்பாக்கம், பெரம்பூர், எருக்கஞ்சேரி ஆகிய இடங்களில் கழிவு நீர் இறைக்கும் கூடுதல் நிலையங்களைக் கட்டும் பணியும் இம்மண்டலத்திற்குரிய திருத்தப் பணித்திட்டத்தில் அடங்கியுள்ளது. இதற்கு வேண்டிய இயந்திரங்கள் வாங்கப்படும். 22,050 அடி நீளத்திற்கு 33 அங்., 42 அங்., 48 அங்., வார்ப்பட இரும்புக் குழாய்கள் அமைக்கப்படும். சாக்கடை நீரைக் கொடுங்கையூரில் கொண்டு போய் சேர்ப்பதற்காகவே இவ்வாறு அமைக்கப்படுகிறது. ரூ. 165·08 இலட்சம் செலவுள்ள திருத்த மதிப்பீட்டிற்கு அரசாங்கம் 1968 செப்டம்பரில் ஒப்புதல் வழங்கியுள்ளது. புரசைப்பாக்கம், எருக்கஞ்சேரி முதலான பகுதிகளில் கழிவு நீர் இறைக்கும் கூடுதல் நிலையங்கள் கட்டுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இப்பணி நாளடைவில்



மேற்கொள்ளப்படும். 42 அங். வார்ப்பட இரும்புக் குழாயினை புரசைப்பாக்கத்திலிருந்து அமைக்கும் பணியும், இப்போது மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத் திட்டத்திற்காக 1967–68-ம் ஆண்டுக்கு ரூ. 13·10 இலட்சமும், 1968–69-ம் ஆண்டுக்கு ரூ. 20·50 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளன. இம் மண்டலத்திற்காக கொடுங்கையூரில் கழிவு நீர் தூய்மைப் படுத்தும் இயந்திரசாலையை அமைக்கும் பணி ஐந்தாவது திட்டகாலத்தில் மேற்கொள்ளப்படும்.

**மண்டலம் III**—முதலில் இந்தத் திட்டம் கோடம்பாக்கம் பகுதிக்கு மட்டுமே பயன்படுவதற்காக வகுக்கப்பட்டது. ஆனால் தியாகராயநகர் கழிவு நீர் ஏற்பாட்டையும் இம் மண்டலத்துடன் இணைக்க, பிறகு முடிவு செய்யப்பட்டது. திருத்த மதிப்பீட்டின்படி இவ்வேலைத் திட்டத்துக்காக ரூ. 135 இலட்சம் செலவாகும். இதற்கு அரசாங்கம் 1967 மார்ச் திங்களில் ஒப்புதல் அளித்தது. இந்த மண்டலத்தின் கழிவுநீர்த் தூய்மைப்படுத்தும் பணிக்காக கோயம்பேடு கிராமத்தில் 250 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டது. கூடுதலாக 37 ஏக்கர் இப்பொழுது கையகப்படுத்தப்பட்டு வருகிறது. ஆழமில்லாத எல்லா சாக்கடைகளும் அமைக்கப்பட்டுவிட்டன. மூன்றும் திட்டக்காலத்தில் இந்த மண்டலத்தின் பெரும்பாலான பகுதிகளில் ஆழமான சாக்கடைகள் அமைக்கும் வேலை முடிக்கப்பட்டுவிட்டது. கழிவுநீர் இறைப்பு நிலையங்களைக் கட்டும் வேலையும் முடியும் தறுவாயில் உள்ளது. கழிவுநீரிறைக்கும் இயந்திரங்களை நிறுவுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. நீரிறைக்கும் இந்த நிலையங்களிலிருந்து கழிவுநீர் கொண்டு விடப்படும் கோயம்பேடு வரையில் 15 அங்., 27 அங்., 30 அங். வார்ப்பட இரும்புக் குழாய் அமைக்கும் பணி இந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்டு முடிவடையும் நிலையிலுள்ளது. இத் திட்டத்திற்காக 1967–68-ம் ஆண்டில் ரூ. 5 இலட்சமும், 1968–69-ம் ஆண்டில் ரூ. 1 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளன. இம் மண்டலத்தில் தூய்மைப்படுத்தும் பணி நீங்கலாக ஏனைய பணிகள் அனைத்தும் நான்காவது திட்டக் காலத்தில் நிறைவுறுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த மண்டலத்தின் கீழ் வருகிற அரும்பாக்கம் பகுதியிலும் வட் அகர (விரிவுப்) பகுதியிலும் சாக்கடை அமைக்கும் திட்டத்தை மாநகராட்சி வகுத்து வருகிறது. இப்பணி முடிவுற்றதும் இம்மண்டலம் முழுவதிலும் கழிவுநீர் அகற்று ஏற்பாடு செயல்படும்.

**மண்டலம் IV**.—சைதாப்பேட்டை, மேற்கு மாம்பலம், கிண்டி ஆகிய இடங்கள் இந்த மண்டலத்தில் அடங்கும். மாநில வீட்டு வசதிப் பெருவாரியத்தின் கோடம்பாக்கம், புதூர் புறநகர் இடங்களில் இருந்து வரும் கழிவுநீர் அகற்று ஏற்பாடும் இத்திட்டத்தில் இணைக்கப்படும். ரூ. 70 இலட்சம் செலவாகிற இத்திருத்த திட்டத்திற்கு அரசாங்கம் பிப்ரவரி திங்களில் ஒப்புதல் அளித்துள்ளது. இந்த மண்டலத்திற்கு தூய்மைப் படுத்தும் நிறுவனம் ஒன்றினை அமைக்க நேசப்பாக்கம், கோடம்பாக்கம் கிராமங்களில் 104 ஏக்கர் புறம்போக்கு நிலங்கள் உட்பட 213 ஏக்கர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. மூன்றும் திட்டக் காலத்தில் கழிவுநீர் அகற்று வேலைகள், கழிவுநீர் இறைப்பு நிலையங்களைக் கட்டுவது, ஏற்றப் பெருங்குழாய் அமைப்பது, கழிவுநீர் இறைப்புப் பொறிகளை அமைப்பது ஆகிய வேலைகள் முடிக்கப்பட்டன. நான்காம் திட்ட காலத்தில் இந்த மண்டலத்திற்குக் கழிவுநீர் முழு தூய்மைப்படுத்தும் நிறுவனம் அமைக்கும் வேலை மேற்கொள்ளப்படும். இந்த மண்டலத்தின் விரிவுபடுத்தப்பட்ட இடங்களாகிய கிண்டி, கோட்டூர், பள்ளிப்பட்டு, வேளச்சேரி ஆகிய இடங்களில் கழிவுநீர் அகற்றும் திட்டம் அமைக்கும் செயற்குறிப்புகள் வகுக்கப்பட்டுள்ளன.

**மண்டலம் V**.—தென் சென்னையிலுள்ள மற்ற இடங்களுக்கும், திருவல்லிக்கேணி, மயிலாப்பூர், அடையாறு ஆகிய இடங்களுக்கும் இத்திட்டம் பயன்படும். இம்மண்டலத்தின் கழிவுநீர் ஏற்பாட்டிலிருந்து பக்கிங்காம் கால்வாய்க்கு வழிந்தோடுவதைத் தடுப்பதற்கான இத்திட்டம் மேநிலைப்

படுத்தும் ஒரு திட்டமாகும். பொதுச் சுகாதார நலனைக் கருதியும் பக்கிங்காம் கால்வாயைத் தூய்மைப்படுத்தி உள் நாட்டு நீர்நிலையாக அதனை பயன்படுத்துவது கருதியும் இது மிக இன்றியமையாத ஒரு திட்டமாகும். இம் மண்டலத்திற்காக 278·836 இலட்சம் ரூபாய் செலவில் திருத்தப்பட்ட திட்டம் ஒன்றுக்கு அரசாங்கம் ஏற்கெனவே ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. தற்போதுள்ள கழிவுநீரிறைக்கும் நிலையங்களை வலுப்படுத்துதல், கூடுதலாக நீரிறைக்கும் பொறிகளை நிறுவுதல், தூய்மைசெய் பொறிகளை அமைத்தல் ஆகியவை இம்மண்டல மேநிலைப்படுத்து வேலைகளில் சேர்க்கப்பட்டுள்ள வேலைகளாகும். இம்மண்டலத்திலிருந்து கழிவு நீர் அகற்றும் திட்டத்திற்குத் தேவையான நிலங்கள் பள்ளிக்காரனை, பெருங்குடி கிராமங்களில் கையகப்படுத்தப்பட்டுள்ளன. மாநில வீட்டு வசதிப் பெருவாரியத்தினால் அமைக்கப்பட்ட சாஸ்திரி நகர், இந்திரா நகரிலிருந்து கழிவுநீர் அகற்றும் பணியும் இத்திட்டத்தோடு இணைக்கப்படும். பள்ளிக்காரனை சதுப்புநிலத்தில் 875 ஏக்கர் பரப்பளவு மாநகராட்சிக்கு மாற்றப்பட்டுள்ளது. இங்கு முழுவதும் தூய்மை செய்யப்பட்ட கழிவு நீரை வேளாண்மைத் துறை, மீன் பண்ணைகளின் வளர்ச்சிக்காக பயன்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு வேண்டிய வார்ப்பட இரும்புக் குழாய்கள் வாங்கப்பட்டு, திருவல்லிக்கேணியிலுள்ள கழிவு நீரிறைக்கும் நிலையத்திலிருந்து சலிவன் தோட்டம் சாலையிலுள்ள வடமயிலை கழிவு நீரிறைக்கும் நிலையம் வரை குழாய் போடும் பணி ஏற்கனவே செய்து முடிக்கப்பட்டுள்ளது. வட மயிலாப்பூர் கழிவு நீரிறைக்கும் நிலையத்திலிருந்து இராமகிருஷ்ண மடம் சாலையிலுள்ள கழிவு நீர் சேகரிப்பிடத்திற்கு 33 அங். குழாய் அமைக்கும் பணியும் அடையாறு கழிவு நீரிறைக்கும் நிலையத்திலிருந்து கழிவு நீர் கொண்டுவிடப்படும் பள்ளிகாரனை வரை 42 அங்.—48 அங். குழாய் அமைக்கும் பணியும் விரைந்து நிறைவேறி வருகின்றன. இவற்றில் 70 சத வீதப் பணி முடிவுற்றுள்ளது. மேற்கொண்டும் வேலை நடந்தேறி வருகிறது திருவல்லிக்கேணி கழிவு நீரிறைக்கும் நிலையத்தில் அப்பணியினை மின்சார வசதியுடன் செய்வதற்கு அவசியமான மின்சார .மோட்டார்களும் விசையேற்றத் தொகுதிகளும் வந்து சேர்ந்துள்ளன. இவற்றை நிறுவும் பணி விரைவில் மேற்கொள்ளப்படும். அடையாற்றில் கழிவு நீரிறைக்கும் நிலையம் ஒன்றைக் கட்டுவதற்கும் அடையாறுக்கும் பள்ளிக்காரனைக்கு மிடையில் கழிவு நீரிறைக்கும் நிலையம் ஒன்றை கட்டுவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்காக 1967–68-ம் ஆண்டிற்கு ரூ. 28·18 இலட்சமும், 1968–69-ம் ஆண்டிற்கு ரூ. 26 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளன.

சுருங்கக் கூறின், தற்போதைக்கு மண்டலங்கள் I, II முன்னரே போதுமான கழிவுநீர் அகற்றும் திட்டங்களைப் பெற்றிருக்கின்றன. V, III, VI மண்டலங்களில் நாளுக்கு நாள் அதிகரித்துவரும் கழிவு நீரை அப்புறப்படுத்த வகை செய்யும் வேலைத் திட்டங்கள் உடனடியாகத் தேவைப்படுகின்றன. வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட தொகைக்கு ஏற்றவாறு நவீன, சுகாதார முறையினை மேற்கொண்டு, இவை படிப்படியாகச் செயலாற்றப்படுகின்றன.

### இடைக்கால நடவடிக்கை.

ஐந்தாவது மண்டலத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு இன்னும் சிலகாலம் ஆகுமாதலாலும், திருவல்லிக்கேணி, மயிலாப்பூர் பகுதி சாக்கடை நீர் பக்கிங்காம் கால்வாய் உப்பங்கழி போன்ற நீர்க்காலுடன் கலப்பதால் அப்பகுதியிலுள்ள மக்களுக்கு ஓரளவு இடைக்கால பரிகாரம் அளிக்க வேண்டியதன் அவசியத்தை முன்னிட்டும் சாக்கடைநீர் வழிந்தோடுவதைக் குறைப்பதற்காக ரூ. 5·3 இலட்சம் செலவில் இடைக்காலத் திட்டம் ஒன்றிற்கு அரசாங்கம் ஒப்பளிப்பு வழங்கியது. இந்தத் திட்டத்தின்படி தூய மேரி சாலையிலுள்ள தென்மயிலாப்பூர் பகுதியின் கழிவு நீரிறைக்கும் நிலையமும், சலிவன் தோட்டத்திலிலுள்ள வட மயிலாப்பூர் கழிவு நீரிறைக்கும் நிலையமும் கூடுதல் மின்சார மோட்டார்களும், விசையேற்றங்களும் பெற்று வலுப்படுத்தப்பட்டுள்ளன. இந்தப் பிரிவுகள் அண்மையில் செயலாற்றத் தொடங்கின. இப் பகுதிகளுக்குரிய அடங்கல், மண்டலத் திட்டத்துடன் பொருந்தும் வகையில் கூடுதல் குழாய்களும் அமைக்கப்பட்டுள்ளன.



அடையாறு உப்பங்கழியிலும், பக்கிங்காம் கால்வாயிலும் வீசும் கெட்ட நாற்றத்தைப் போக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதுடன் கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்வதற்கென அரசாங்கம் ரூ. 25,000 செலவாகிற ஒரு திட்டத்திற்கும் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

(அ) உப்பங்கழிகளின் கரையோரங்களில் நிரம்பி வழிகிற சாக்கடை நீரை இரும்புக் குழாய்கள் மூலம் உப்பங்கழியின் நடுப்பாகத்திற்குக் கொண்டு செல்லுதல், (ஆ) உப்பங்கழிகளின் மேல் உண்டாகும் நுரை கழிவுப் பொருள்கள் ஆகியவற்றை அகற்றுதல் , (இ) கரைகளில் சிலிநைட்ரேட்டைக் குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு முறை தூவுதல், (ஈ) கடல் நீரை உட்புகுத்தி நீர் மட்டத்தை உயர்த்தி வைத்திருத்தல். (உ) உப்பங்கழிகளுக்குச் சாக்கடை நீரைக் கொண்டு செல்லும் திறந்த சாக்கடைக் கால்களை மூடிவிடுதல். மேற்சொன்ன நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் அந்த நீர் நிலைகளை அடுத்துள்ள பகுதிகளில் வசிப்போருக்குப் பெரிதும் நிம்மதி ஏற்படும்.

### இந்திய உலக வணிக தொழில் சந்தையிலிருந்து கழிவு நீரை அகற்றுவதற்கென ஒரு தனி விசையேற்றப் பெருங்குழாய் அமைத்தல்.

இந்திய உலக வாணிக-தொழில் பொருட்காட்சி சம்பந்தமாக நிலத்திற்கடியில் செல்லும் வடிகால் அமைப்பை (விசையேற்ற நிலையத்துடன்) மேற்படி பொருட்காட்சியின் சார்பாக வீட்டுவசதி வாரியம் நிறைவேற்றியது. வீட்டு வசதி வாரியம் கட்டிய விசையேற்ற நிலையத்திலிருந்து கழிவுநீரை அகற்ற ஏற்பாடுகள் செய்யுமாறு, மாநகராட்சி கேட்டுக் கொள்ளப்பட்டது. இந்தப் பகுதி III-ம் வடிகால் மண்டலத்தில் இருப்பதால், கோயம்பேடு அருகில், கழிவுநீரைக் கொண்டு செல்ல வேண்டும் என்று இருப்பினும், அவசரத்தன்மை காரணமாக தற்போதுள்ள ஷெணய் நகர் விசையேற்ற நிலையத்திற்கு கழிவு நீரைத் தற்காலிகமாகக் கொண்டு செல்லலாம் என்று ஒப்புக் கொள்ளப்பட்டது. இந்த வேலைக்காக அரசாங்கம் ரூ. 3·95 இலட்சம் செலவிற்கு ஒப்பளிப்பு வழங்கியது. சுமார் ரூ. 2·50 இலட்சம் செலவில் அந்த வேலை முடிக்கப்பட்டது. பொருட்காட்சி தொடங்குவதற்கு முன்பு விசையேற்றப் பெருங்குழாய் செயல்படத் தொடங்கியது.

### மழை நீர் அகற்றும் திட்டம்

நகரின் பல்வேறு இடங்களில் மழை நீர் அகற்றுவதற்கான வடிகால்களைக் கட்டுவதற்கென மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத் தொடக்கத்திலிருந்து ஒவ்வொரு ஆண்டும் ரூ. 10 இலட்சம் செலவிற்கு அரசாங்கம் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. தியாகராயநகர், மேற்கு மாம்பலம், கோடம்பாக்கம் ஆகிய இடங்களிலுள்ள தாழ்வான பகுதிகளில் அவ்வப்போது நீர் தேங்கி விடுவதைத் தவிர்ப்பதற்கென, சிறிது காலத்திற்கு முன்பு ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டது. அத் திட்டத்தின் செலவு மதிப்பீடு சுமார் ரூ. 12 இலட்சமாகும். இந்தப் பகுதிகளை மழை நீர் வடிகால்கள் மூலம் ஆற்று நீருடன் இணைக்கும் வேலை அண்மையில் முடிக்கப்பட்டது. இந்த வடிகால்கள் அமைக்கப்பட்ட பிறகு, கடைசியாகப் பெய்த மழையின் போது பலன்கள் தெரியவந்தன. நடப்பாண்டில் நகரில் மழைநீர் வடிகால்களை கட்டுவதற்கென சுமார் ரூ. 12 இலட்சம் செலவிடப்பட்டது.

### கழிவு நீரைச் சீர்படுத்தி ஆக்கப் பணிகளுக்குப் பயன்படுத்தும் முன்னோடி ஆராய்ச்சி.

மேலே குறிப்பிட்டுள்ள வேலைத் திட்டங்களைத் தவிர, கழிவு நீரைத் தூய்மைப்படுத்தி, தொழில் மனைகளில் மறுபடியும் பயன்படுத்தும் சாத்தியக் கூறுகளை ஆராய்வதற்கான முன்னோடித் திட்டம் ஒன்றுக்கு

அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இரசாயன ஆய்வுக்கூடத்துடன் கூடிய ஆய்வு நிறுவனம் ஒன்று கொடுங்கையூர் கழிவுநீர்ப் பண்ணையில் நிறுவப்பட்டு ஆராய்ச்சி வேலைகள் 1966-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்களிலிருந்து தொடங்கப்பட்டன. ஆராய்ச்சியின் குறிக்கோள்களாவன :—(1) தொழிற் சாலைகளில் கழிவுநீரைப் பயன்படுத்துவதற்குரிய சாத்தியக் கூறுகளை ஆலோசித்தல், (2) கழிவுநீர் தூய்மை செய் முறையை முடிவு செய்தல் இது வரை நடத்திய ஆராய்ச்சிகளின் பயனாக, நகரத்துக் கழிவுநீரினை தூய்மை செய்து, சீர்படுத்துவதால், அது தொழிற்சாலைகளில் குளிர்பதன் முறைகளுக்குப் பயன்படுத்தப் பெரிதும் தகுதியுடையதாகிறது என்றும், குறைவழுத்தக் கொதிகலன்களுக்கும், நடுத்தர அழுத்தக் கொதிகலன் களுக்கும் அதைப் பயன்படுத்த இயலும் என்றும் தெரியவருகிறது. தூய்மை செய் வேலை முறை குறித்து மூன்று முறைகளில் சோதனைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன. அவையாவன :—(அ) உயிர் வாயுவைச் (Oxygen) செலுத்தித் தூய்மைப்படுத்துதல் (Treatment by oxidation (இ) முன்னோடியாக அமைக்கப்பட்ட வடிகட்டும் சாதனத்லிருந்து நீர் கசிந்து செல்லும்படிச் செய்தல் (Treatment by trickling filter Pilotplant) (உ) இயங்குதிறன் (ஊக்குவிக்கப் பட்ட) மிகுந்த ஸ்லெட்ஜ் முறையில் (Activated sludge process) தூய்மைப்படுத்துதல். இது பற்றி இறுதியாக முடிவெடுக்குமுன். ஆய்வு வேலைகள் இன்னும் இரண்டு ஆண்டுக் காலத் திற்கு (1970 பிப்ரவரி 20-ம் தேதி வரையில்) தொடர்ந்து நடத்தப் படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

***திரு நா. காசிராமன்** : தலைவர் அவர்களே, பொதுச் சுகாதாரம், மருத்துவம் ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீது ஒரு சில கருத்துக் களைக் கூற விரும்புகிறேன். இந்த மானியங்களின் மீது பேசுவதற்கு முன்பாக, பொது சுகாதார இலாகாவின் உத்தரவினால் ஏற்படுத்தப்பட்ட கும்பகோணத்தில் சமீபத்தில் நடந்த மகாமகத் திரு விழாவின் ஏற்பாடுகளைக் கவனிக்க ஏற்படுத்தப்பட்டிருந்த கூட்டுக் குழுவினரும் மற்ற அதிகாரிகளும் செய்துள்ள சேவையைப்பற்றி இரண்டொரு வார்த்தைகள் கூறிக் கொள்ள விரும்புகிறேன். அரசாங்க உத்தரவின் பேரில் அமைக்கப்பட்ட கூட்டுக் குழு மிகுந்த நல்ல முறையில் செயல்பட்டு, மக்களுக்கு திருப்தி அளிக்கக்கூடிய வகையிலே எல்லா ஏற்பாடுகளையும் செய்திருந்தது. 15, 20 லட்சம் மக்கள் வந்ததோ, போனதோ தெரியாமல், எந்தவிதமான அசம்பாவிதமும் நடக்காமல் அதிகாரிகள் நல்ல முறையில் நடந்து கொண்டு, தீவிரமான ஏற்பாடு களைச் செய்திருந்தார்கள். போலீஸ் அதிகாரிகளாக இருந்தாலும் சரி, சுகாதார அதிகாரிகளாக இருந்தாலும் சரி, மற்ற அதிகாரி களாக இருந்தாலும் சரி, அவர்கள் எல்லோருக்கும் இந்த மன்றத் தின் வாயிலாக என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அதே சமயத்தில் விழா நன்கு நடப்பதற்கு பொது சுகாதாரத்தின் கீழ் அந்த விழா நன்கு நடைபெற வேண்டும் என்று அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொண்டு அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய முன்வந்ததற்கு நன்றியை யும், பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பொது சுகாதார மான்யத்தின் மீது ஒரு சிறு கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். இப்பொழுது எல்லா இனங்களிலும், எல்லா அதிகாரிகளுக்கும், ஊழியர்களுக்கும், டியர்னஸ் அலவன்ஸ் கூட்டிக்கொடுத்திருக்கிறோம். சில நகரங்களில் ஹிடி-காம்பன்ஸேடரி அலவன்ஸ் கொடுக்கிறோம். அதோடு கூட பொது சுகாதாரத் துறைக்கு வேண்டிய கருவிகள், மற்ற மருந்துகள் (கெமிக்கல்ஸ்) இவைகளெல்லாம் விலை ஏறிக்கொண்டிருக்கிறது. வருஷா வருஷம் நடந்து வருகிற நிலைமைகளையும், பணம் ஒதுக்கும் நிலைமையையும் பார்த்தால், 1966–67-ல் செலவழிக்கப்பட்ட மொத்த தொகையையும் விட 1968–69-ல் ஒதுக்கப்பட்ட தொகை மிகவும் கணிசமான அளவுக்குக் குறைவாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். 1965–66 கணக்குப் பிரகாரம் ரூ. 383



இலட்சம் செலவு செய்யப்பட்டிருக்கிறது. 1966–67-ல் ரூ. 528 லட்சம் செலவு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், 1968–69-க்கு ரூ. 525 இலட்சம் தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதிகப்படியான சம்பள விகிதங் களையும் கொடுத்து, கூடுதல் விலையில் உள்ள மருந்துகளையும் வாங்கும் பொழுது, முன்பு செய்ததைவிட குறைவான வசதிகளைச் செய்யக் கூடிய நிலைமையைத்தான் இது உண்டாக்கும். இந்த ஆண்டுக்கு ஒதுக்கப்பட்டத் தொகை மிகவும் போதாது.

அதோடு கூட, சென்னை கார்ப்பரேஷனுக்கும், நகரசபைகளுக்கும் குடி தண்ணீர், சாக்கடைத் திட்ட வசதிகள், மலேரியா, காலரா, யானைக்கால். வியாதி ஆகியவைகளை தடுப்பதற்கான வசதிகள் மற்றும் குழந்தைகளுக்கு சுகாதார வசதிகள் செய்து கொடுப்பது ஆகிய இனங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகை, பஞ்சாயத்து யூனியன் களுக்குக் கொடுக்கப்படும் தொகை, அதாவது கிராண்ட்ஸ் ஃபார் பப்ளிக் பர்பஸஸ். என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பட்ட தொகை மிகவும் குறைவாக இருக்கிறது. 1965–66-ல் இதற்காக ரூ. 42 லட்சம் ஒதுக்கப்பட்டது. 1966–67-ல் ரூ. 44 லட்சம் ஒதுக்கப்பட்டது. ஆனால், 1968–69-ல் ரூ. 24 இலட்சம்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்த அளவில் பார்க்கப்போனால், நகரசபைகளில் பொதுச் சுகாதார, மருத்துவ வசதிகள் எந்த அளவுக்குக் குறைக்கப்படும், எந்த அளவுக்கு வசதிகள் பாதிக்கப்படும் என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அதுமட்டுமல்லாது, பஞ்சப்படி உயர்த்தப்பட்டிருக்கிறது. மருந்து விலையும் அதிகமாகியிருக்கிறது. இதையும் நாம் கணக்கில் கொண்டு பார்த்தோமானால், முன்பு செய்ததைவிட மிகக் கணிசமான அளவுக்கு வசதிகள் குறைந்துவிடும். 1963–வது வருஷத்தில் மருத்துவ, பொது சுகாதார மான்யக் கோரிக்கைகளின் மீது பேசும் பொழுது இப்பொழுது அமைச்சராக இருக்கும் மாண்புமிகு திரு. மாத வன் அவர்கள் கூட கிராமப்புறங்களில் சுகாதார வசதிகள் அதிக மாக செய்து கொடுக்கப்படவேண்டும். மருத்துவ வசதிகள் அதிகமாக செய்து கொடுக்கவேண்டும். என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், இப்பொழுது உள்ள நிலையைப் பார்க்கும்பொழுது, சென்னை நகரத் திற்குக் கூடுதலாகவும், கோவை நகரத்திற்கு கூடுதலாகவும் ஒதுக்கப்பட் டுள்ளது. சென்னை நகரத்திற்கோ, கோவை நகரத்திற்கோ கூடுதலான வசதிகளைச் செய்து கொடுப்பதில எந்தவிதமான ஆட்சேபனையும் இல்லை, செய்து கொடுக்கத்தான் வேண்டும். அந்தப் பகுதிகளும் செனனை ராஜ்யத் திலுள்ள பகுதிகள்தான். அதே சமயத்தில் மொபஸல், அதாவது சென்னை நகரம், கோவை நகரம் அல்லாத பகுதிகள், அதாவது கிராமப் புறங்கள் நிறைய உள்ள பகுதிகளுக்குச் செய்யவேண்டிய வசதிகளைக் கூடுதலாக செய்துகொடுக்காவிட்டாலும் கூட, இருக்கிற வசதிகளை குறைக் காமல் இருந்தால் மிகவும் நலமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் சொன்னதுபோல், கிராண்ட்ஸ் ஃபார் பப்ளிக் ஹெல்த் பர்பஸஸ் என்ற இனத்தின்கீழ் ஒதுக்கப்பட்ட தொகை குறைக்கப்பட்டிருப்பதினால், பல நகரசபைகளுக்கும், பல பஞ்சாயத்து யூனியன்களுக்கும் செய்ய வேண்டிய வசதிகளும், கொடுக்கவேண்டிய உதவிகளும் கணிசமாக குறைந்துவிடக்கூடிய நிலைமை உண்டாகும். அதன் காரணமாக நாட்டிலே சுகாதாரக்கேடு உண்டாகும், மக்கள் அல்லல் உறுவார்கள், அது நல்லது அல்ல. சென்னையிலும், கோவையிலும் மட்டும் பொது சுகாதாரம் நல்ல முறையில் இருக்க வேண்டும் என்பது அரசாங்கத்தின் நோக்கமாக, கண் டிப்பாக இருந்திருக்க முடியாது. ஆனால் ஒதுக்கப்பட்ட தொகையை பார்த் தால் மொபஸல் பகுதிகளில் அவ்வாறு நல்ல முறையில் வசதிகள்செய்ய இயலாது என்றுதான் தோன்றுகிறது.

கண்டிரோல் ஆஃப் எபிடமிக் டிஸீஸஸ், அதாவது காலரா போன்ற நீரினால் பரவக்கூடிய வியாதிகளைத் தடுப்பதற்கு ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை வெகு அதிகமாக குறைக்கப்பட்டிருக்கிறது. நீரினால்

[திரு. நா. காசிராமன்] [1968 மார்ச் 12

பரவக்கூடிய வியாதிகள் தடுக்கப்படவேண்டும். அவைகளினால் ஏற்படக்கூடிய சங்கடங்கள் குறைக்கப்பட வேண்டும் என்றால், குடி தண்ணீர், சாக்கடை நீர் கழிவு வசதி மிகக் கணிசமான முறையில் அதிகப்படுத்தப்பட வேண்டும். ஆனால், குறிப்பாகப் பார்க்கும்பொழுது, வருஷா வருஷம் ஒதுக்குவதைவிட இந்த வருஷம் குடி தண்ணீருக்கும் சாக்கடைத் திட்டத்திற்கும் ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை கணிசமான அளவுக்குக் குறைக்கப்பட்டிருக்கிறது. அதிலும், அந்தத் தொகையை பங்கீடு செய்யும்பொழுது, 20 லட்சம் ஜனத்தொகை உள்ள சென்னை நகரத்திற்கு ரூ. 85 லட்சமும், அதே சமயத்தில் 330 லட்சம் ஜனத் தொகை உள்ள தமிழ் நாட்டிலுள்ள மற்ற பிரதேசங்களுக் கெல்லாம் சேர்த்து ரூ. 40 லட்சமும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதைப் பார்க்கும்பொழுது, ஏற்கனவே மிகவும் திருப்தியற்ற நிலையில் இருந்து கொண்டிருக்கும்குடிதண்ணீர் வசதிகள், சாக்கடை வசதிகள் எந்த அளவுக்கு பாதிக்கப்படும், முன்னேற்றம் தடைபடும், எந்த அளவுக்குக் குறைக்கப் படும், அதனால் என்னென்ன வியாதிகள் பரவுவதற்கு ஏதுவாகும் என்பதையெல்லாம் யோசித்தால், மிகவும் பயங்கரமான தோற்றத்தை நம் முன் காண்கிறோம். ஆகவே, இந்த இனத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு போதாது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்னும் கணிசமான அளவுக்குக் கூடுதலாக கிராமப் பகுதிகளுக்கும், மற்றைய நகரப் பகுதிகளுக்கும், மேலும் பஞ்சாயத்துப் பகுதிகளுக்கும் நிதி ஒதுக்கீடு செய்திருக்கவேண்டும் என்று கருதுகிறேன். சென்னைக்கும் கோவைக்கும் அதிகமான வசதிகளைப் பற்றி குறை கூறவில்லை. செய்ய வேண்டியதுதான். எது செய்தாலும் கூட குடி தண்ணீர் வசதி செய்தாலும் சரி, சாக்கடை வசதி செய்தாலும் சரி, இப்பொழுது வெகுவாகப் பேசப்படுகிற படி அரிசித் திட்டம் கொண்டு வந்தாலும் சரி, மற்ற எந்த விதமான வசதிகள் செய்து கொடுத்தாலும் சரி, அதை வரவேற்கிறோம். நாம் தமிழ் நாட்டில் உள்ள எல்லோரும் சென்னை நகரத்திற்கு அடிக்கடி வந்துகொண்டிருக்கிறோம். அங்கே நல்ல வசதிகள் செய்துகொடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்துவதோடு கூட, அதே சமயத்தில் அதிகமான மக்கள் வாழும் கிராமப் பகுதிகள், மற்ற நகரப் பகுதிகளுக்கு கணிசமான நிதி ஒதுக்கீடு செய்து கொடுத்தால்தான், அங்குள்ள மக்கள் நல்ல முறையில் சுகாதார வசதி, மருத்துவ வசதிகள் பெற்று வாழ முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கும்பகோணம் நகர சபையில் பாதாள சாக்கடைத் திட்டம் 1954-ம் ஆண்டு துவக்கப்பட்டது. கிட்டத் தட்ட ஒரு மகாமகம் முடிந்து விட்டது. இந்த நகரத்தில் ஐந்தில் ஒரு பகுதியில்தான் இந்தத் திட்டம் ஓரளவுக்கு முடிவு பெற்றிருக்கிறது. இதற்கு முக்கிய காரணம், கும்பகோணம் ஒரு தனியான, பெகூலியர் ஸிச்சுவேஷன் உள்ள இடம். வருஷத்தில் 9 மாத காலத்திற்கு வாடர் டேபிள் உயர்வாக இருக்கும். அங்கு கோடை காலத்தில் தான் இந்த குழாய் வேலைகள் வேகமாகச் செய்து முடிக்க முடியும். அப்பொழுதுதான் வாடர் டேபிள் குறைவாக இருக்கும். ஆகவே, அந்த வேலைகளை துரிதமாகச் செய்து முடிப்பதற்காக அதிகப்படியான தொகை ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்பொழுதுதான், அந்தத் திட்டத்தை துரிதமாக நிறைவேற்ற நலமாக இருக்கும். தமிழ் நாட்டில், சிதம்பரம், கும்பகோணம் போன்ற இடங்களில் யானைக்கால் வியாதி அதிகம் என்று முன்பே கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அங்கு சுகாதார வசதிகள் அவசியம் செய்து கொடுக்கப்பட வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, உடனடியாக ஏற்பாடு செய்து, இந்தத் திட்டத்திற்கு கூடுதலான தொகை ஒதுக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஸ்டேட் எலக்டிரிஸிடி போர்டு இருப்பதுபோல, குடி தண்ணீர், சாக்கடை வசதி செய்து கொடுப்பதற்கு வாடர் சப்ளை அண்டு டிரைனேஜ் போர்டு ஒன்றை ஏற்படுத்தி, தமிழ் நாட்டில் பொதுவாக எங்கெங்கே குடி



1968 மார்ச் 12] [திரு. நா. காசிராமன்]

தண்ணீர் வசதியைப் பெருக்கவேண்டும், சாக்கடை வசதியைப் பெருக்க வேண்டும், என்றெல்லாம் தனிப்பட்ட முறையில் ஆராய்ந்து, திட்டத்தை வகுத்து, உடனடியாக அந்த வேலைகளைத் துவக்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்தால் ரெட் டேப் டிலே இல்லாமல், அப்படிப்பட்ட அவசியமான திட்டங்களை துரிதமாக நிறைவேற்ற வழிவகைகள் உண்டாகும். அம்மாதிரி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கும்பகோணம் ஆஸ்பத்திரியை 1925-ம் வருஷத்தில் நகரசபை யிடமிருந்து சர்க்கார் ஏற்றுக்கொண்டார்கள். கிட்டத்தட்ட அன்றைக்கு நிலைமைகள் எப்படி இருந்தனவோ, அதே நிலை தான் இன்றைக்கும் இருக்கிறது. **5 ஏக்கர்** நிலம் அப்பொழுதே வாங்கி ஆர்ஜிதம் செய்யப் பட்டது. அந்த நிலத்தை இப்பொழுதும் குத்தகைக்கு விட்டுக்கொண் டிருக்கிறார்களே தவிர, கட்டடம் கட்டுவதற்கு ஒன்றும் ஏற்பாடு செய்யப் படவில்லை. அங்குள்ள மருத்துவ அதிகாரிக்கு வீட்டு வசதி இல்லை, நர்ஸுகளுக்கு வீட்டு வசதி இல்லை. தமிழ் நாட்டில் பல இடங்களில் அப்படித் தான் நிலைமை இருக்கிறது. இந்தக் குறைகளெல்லாம் நீக்கப்பட வேண்டும். கும்பகோணத்தில் நேரில் பார்த்ததால் நான் சொல் கிறேன். தமிழ் நாட்டில் அநேக இடங்களில் டாக்டருக்கு வீட்டு வசதி இல்லை, நர்ஸுகளுக்கு வீட்டு வசதி இல்லை. இந்தக் குறைகள் ஓரளவுக்கு நீக்கப்பட்டால் தான், அவர்கள் மன நிம்மதியுடன் ஆஸ்பத்திரிகளில் நல்ல முறையில் பணிபுரிவதற்கு நலமாக இருக்கும். ஆகவே, இந்த வசதிகளை உடனடியாகச் செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள் கொள்கிறேன்.

மருத்துவ துறையின் கீழ் 20 லட்சம் ஜனங்கள் உள்ள சென்னை நகரத்திற்கு ரூ. 233 லட்சமாக இருந்ததை ரூ. 274 லட்சமாக உயர்த்தி யிருக்கிறார்கள். இண்டக்கிரேடெட் மெடிசின் உள்பட அது வரவேற்கக் கூடிய அம்சம்தான். கிராமப்புறங்கள், நகரசபைகள், மேஜர் பஞ்சாயத்துக்கள் போன்ற 330 லட்சம் ஜனங்கள் உள்ள மொபஸல் பகுதிகளுக்கு1966-67-ல் ரூ. 477 லட்சம் ஒதுக்கப்பட்டிருந்தது. 1968-69-ல் அந்த மான்யத்தொகை ரூ. 368 லட்சமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. சம்பளம், பஞ்சப்படி இவைகளெல்லாம் உயர்த்தப்பட்டு, மருந்து விலை களும் கூடியிருக்கக்கூடிய இந்த நேரத்தில் வசதிகளைப் பெருக்கா விட்டாலும், ஏற்கெனவே செய்து கொடுக்கும் வசதிகளை, கணிசமான அளவுக்குக் குறைத்துவிட்டது நல்லது அல்ல. அந்த அளவுக்கு குறைத்தால் சுகாதார வசதிகள் என்ன ஆவது என்பதை மனதிலே கொண்டு, அதற்கு அதிகமான தொகை ஒதுக்கீடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதைப்பற்றி கூறுகிறபொழுது, ஒன்றிரண்டு சம்பவங்களை இங்கே எடுத்துத் தெரிவிக்காமல் இருக்க முடியாது. இரண்டு, மூன்று வருஷங்களுக்கு முன்பு அமைச்சராக இருந்த திரு. கக்கன் அவர்கள் வந்துகொண்டிருக்கும்பொழுது, கூட வந்திருப்பவர் களுடைய, கார் விபத்துக்குள்ளானபொழுது, காயமடைந்தவர்களை திண்டிவனம் ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கே போது மான அளவுக்கு மருந்துகள் இல்லாத காரணத்தினால், நல்ல முறையில் சிகிச்சை செய்ய முடியாத நிலை ஏற்பட்டது. இப்பொழுது கூட, 5, 6 மாதங்களுக்கு முன்பு நமது பொதுப்பணித் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. மு. கருணாநிதி அவர்கள் ஒரு கார் விபத்தில் காயம் அடைந்த பொழுது, திண்டிவனம் ஆஸ்பத்திரியில் மருந்து இல்லாத காரணத்தினால், பணியாளர்களை வெளியே அனுப்பி மருந்து வாங்கிக்கொண்டு வந்து, பிறகு சிகிச்சை செய்யும்படியான நிலைமை ஏற்பட்டது என்று திண்டிவனம் தொகுதி உறுப்பினர் திரு. ராமமூர்த்தி அவர்கள் என்னிடம் சொன்னார்கள்.

அதிலே பார்க்கும்போது; மருத்துவ மனைகளில் மருந்துகள் வசதி முற்பகல்
போதாமல் இருக்கிறது. முன்பு, எஸ்டிமேட் கமிட்டி ரிபோர்ட்டில் கூட 10-30
ஆஸ்பத்திரிகளுக்கு தேவையான மருந்துகளில் 40 சத வீதம் தான்

கொடுக்கப்பட்டிருக்கிறது. பாக்கியை அவர்கள் வெளியிலே வாங்க வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஸெண்ட்ரல் மெடிகல் ஸ்டோர் மருந்துகளைக் கொடுப்பதில் காலந்தாழ்த்திக் கொடுக்கிறார்கள். அவர்களிடமிருந்து மருந்துகள் வாங்க சுற்றுவழியில் விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டிய நிலைமை இருக்கிறது என்பதையும் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே, ஆஸ்பத்திரிகளுக்கு வேண்டிய மருந்துகள் காலாகாலத்தில் கிடைக்கச் செய்யும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டால், மக்களுக்குத் தொந்தரவு இல்லாமல் இருக்கும். திண்டிவனம் ஆஸ்பத்திரியில் எக்ஸ்ரே யூனிட் நல்ல விதத்தில் வேலை செய்யாமல் இருக்கிறது. அதை நல்ல விதத்தில் இயங்கச் செய்ய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் தான் அது பயன் உள்ளதாக இருக்கும்.

நான் குறிப்பிட்ட வகையில் மருத்துவ இனங்களில் இவ்வாறு நிதி ஒதுக்கீடுகள் குறைக்கப்பட்டிருப்பதால் பல மருந்துகள் ஆஸ்பத்திரிகளில் வசதிக் குறைவாக இருக்கும் நிலைதான் உருவாகும். சென்னை நகரத்தைத் தவிற மற்ற தமிழ்நாட்டிலுள்ள எல்லாப் பகுதிகளுக்கும், 1966–67-ல் ஒதுக்கப்பட்டிருந்த தொகை ரூ. 1,45,23,000 சொச்சம். ஆனால் இப்பொழுது 1968–69-ல் ரூ. 85,50,000 சொச்சம் தான் ஒதுக்கியிருக்கிறார்கள். இதனால் மருந்துகளுக்கு ஒதுக்கப்பட்டிருந்த தொகை, 94 லட்சம் என்று இருந்தது, இப்பொழுது 63 லட்சமாக குறைக்கப் பட்டிருக்கிறது. இப்பொழுது இருந்த நிலைகளும் அதிகம், ஆனால் அதே சமயத்தில் ஒதுக்கப்பட்டிருக்கும் தொகையும் குறைவு. இதனால் மிகக் குறைந்த அளவு மருந்துகளே கிடைக்கக் கூடிய வாய்ப்புத்தான் இருக்கிறது. ஆகவே, மக்களுக்கு மருந்துகள் கிடைக்கும் வசதிகளைச் செய்து கொடுக்க முடியாத நிலை தான் இருக்கிறது. ஆஸ்பத்திரி வசதிகளுக்காக ஏற்கனவே 22 லட்சம் ஒதுக்கப்பட்டிருந்ததில் இப்பொழுது 7½ லட்சம் வெட்டியிருக்கிறார்கள். என்ன காரணத்திற்காக வெட்டியிருக்கிறார்கள் என்பது தெரியவில்லை. பல ஆஸ்பத்திரிக் கட்டடங்கள் பழுது அடைந்திருக்கின்றன. விஸ்தரிக்க வேண்டிய நிலைமைகளும் இருக்கின்றன. படுக்கைகளும் அதிகப் படுத்த வேண்டிய நிர்ப்பந்தமும் இருக்கிறது. கும்பகோணம் ஆஸ்பத்திரியை எடுத்துக் கொண்டால், 190 பெட்டுகள் இருக்கும் ஆஸ்பத்திரியில், குறைந்தது 290 வியாதியஸ்தர்கள் தினமும் இருக்கிறார்கள். பலர் தரையிலும், பயிலும் படுத்திருக்கும் நிலைமைதான் இருக்கிறது. அப்படிப்பட்ட சங்கடமான நிலைமை இன்னமும் இருக்கிறது. நாடு முன்னேறிக் கொண்டு வருகிறது என்று சொல்லும் போது, இதையெல்லாம் பார்க்கும் போது மனத்தில் திருப்தி கொள்ள முடியாத நிலைமைதான் இருக்கிறது.

அதே போலத்தான் வியாதியஸ்தர்கள் ஆகாரம் சம்பந்தமாகவும் தொகைகள் குறைக்கப்பட்டிருக்கின்றன. முன்பு 80 லட்சம் என்று இருந்தது, இப்பொழுது 58 லட்சமாகக் குறைந்திருக்கிறது. ஆஸ்பத்திரிகளுக்கு வரும் நோயாளிகளில் முக்கால்வாசிப் பேர்கள், ஏழை எளியவர்கள் தான். அவர்களுக்கு நல்ல ஆகாரம் கொடுத்தாலே போதும். மருந்தோடுகூட நல்ல சத்துள்ள ஆகாரம் கொடுத்தால், வியாதியிலிருந்து குணம் அடையக்கூடிய வாய்ப்பு ஏற்படும். அந்த வகையிலும், 80 லட்சமாக இருந்தது, இப்பொழுது 58 லட்சமாக குறைக்கப்பட்டிருக்கிறது. இதனால் எந்தவிதமான கஷ்டங்கள் ஏற்படும், சிரமங்கள் ஏற்படும் என்பதை எண்ணிப்பார்க்கும்போது, தொகைகளைக் கூட்டியல்லவா இருக்க வேண்டும், குறைத்திருக்கிறார்களே என்று சொல்லத் தோன்றுகிறது. பல இனங்களிலும் குறைக்கப்பட்டிருக்கிறது வருத்தமாக இருக்கிறது.

கடைசியாக, கும்பகோணம் அரசாங்க மருத்துவ மனையைப் பற்றி இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். அந்த ஆஸ்பத்திரியில் விசேஷ அபிவிருத்திகள் இல்லை யென்றாலும் கூட, அதிர்ஷ்டவசமாக, அங்கே வரும் டாக்டர்கள் எல்லாம், கைதேர்ந்த, ராசியுள்ள டாக்டர்களாக இருக்கிறார்கள். அதன் காரணமாக, நோயாளிகள்



நாளுக்கு நாள் எண்ணிக்கையில் அதிகமாக இருக்கிறது. கும்பகோணத்தைச் சுற்றியுள்ள பகுதிகளிலிருந்து, கொள்ளிடக் கரைக்கு வடக்கே உள்ள பிராந்தியங்கள், தென்னார்க்காடு, திருச்சி மாவட்டங்களிலுள்ள கிராமங்கள், இவற்றிலிருந்து நூற்றுக்கணக்கான நோயாளிகள் அந்த ஆஸ்பத்திரிக்கு வருகிறார்கள். அப்படியிருக்கும்போது, அந்த ஆஸ்பத்திரியில் இட வசதி போதாமல் இருக்கிறது. குறிப்பாகப் பெண்களுக்கு லேபர் வார்டு என்று சொல்லுவார்களே அது, குறைவாக இருக்கிறது. ஒரு லட்சம் வரை ஜனத்தொகையுள்ள இடத்தில், நான்கே பெட்டுகள்தான் இருக்கின்றன. அவ்வளவு மக்களுக்கு நாலே பெட்டு என்றால் எத்தகைய கஷ்டம் என்பதை யோசித்துப் பார்க்கவேண்டும். கும்பகோணம் நகர சபையில் ஒரு மெடர்னிடி ஆஸ்பத்திரி நடத்துகிறோம். அந்த ஆஸ்பத்திரிக்கு நகரசபை நிதியிலிருந்து, ஒரு லட்ச ரூபாய்க்குக் கூடுதலாகச் செலவாகிறது. அப்படி ஒரு ஹாஸ்பிடலை நகரசபை நடத்த வேண்டும் என்கிற கட்டாயம் இல்லை என்றாலும், நாங்கள் நடத்துகிறோம். அந்த ஆஸ்பத்திரியையும் சர்க்காரே எடுத்துக் கொண்டால், அங்குள்ள நவீன வசதிகள், உபகரணங்கள் இவற்றை நல்ல முறையில் உபயோகப் படுத்தி, மக்களுக்கு நன்மைகளைச் செய்ய முடியும். அந்த வகையில் நகர சபையில் கூட ஒரு தீர்மானம் நிறைவேற்றி, சர்க்காருக்கு அனுப்பியிருந்தோம். ஆனால், என்ன காரணத்தாலோ, அதை ஏற்றுக் கொள்ள முடியாது என்று பதில் எழுதியிருக்கிறார்கள். அதை மறுமுறையும் பரிசீலனை செய்ய வேண்டும் என்றும், அந்த ஆஸ்பத்திரியை சர்க்காரே எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும், கேட்டுக் கொண்டிருந்தோம், அதை கனம் முதல் அமைச்சரவர்களும், சுகாதார அமைச்சரவர்களும், மற்றும் அதிகாரிகளும் கூர்ந்து கவனித்து, சர்க்கார் நிர்வாகத்தில் எடுத்துக் கொண்டால் மக்களுக்கு நல்ல முறையில் பயன் படுத்த முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடைசியாகச் சொல்லும் போது, சென்னைக்கு அதிகமாக ஒதுக்கியிருக்கிறது என்று சொல்லும் போது, அதைக் குறைக்க வேண்டும் என்று நான் சொன்னதாக எடுத்துக் கொள்ளக்கூடாது. சென்னைக்கு எல்லா வகையிலும் வசதிகள் அதிகமாகச் செய்ய வேண்டியது தான். நூராலஜி ப்ளாக்குக்கூட மாண்புமிகு முதல் அமைச்சர் அடிக்கல் நாட்டினார்கள் என்று தெரிந்து கொண்டேன். அது வரவேற்க வேண்டியது தான். ஆனாலும், தமிழ் நாட்டில் மற்ற பகுதிகளுக்கும் வேண்டியதைச் செய்ய வேண்டும். 20 லட்சம் பேர்கள் உள்ள சென்னைக்கு வசதிகள் செய்யும் போது, 330 லட்சம் பேர்களுக்கு, பாக்கி உள்ள எல்லோருக்கும் வசதிகளைச் செய்ய வேண்டும் என்பதையும் மனத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். நாம் கூடுதலாகச் செய்யாவிட்டாலும் கூட, குறைக்காமலாவது இருக்க வேண்டும், அப்பொழுதுதான் மக்களுடைய குறைந்த தேவைகளையாவது நாம் பூர்த்தி செய்ய முடியும். மக்களும் திருப்தி அடைவார்கள்.

நகர சபைகளில் ஹெல்த் ஆபிசர்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்த ஹெல்த் ஆபீசர்களுக்கும், நகர சபை ஆணையாளர்களுக்கும் தகராறுகள் ஏற்படுவது பற்றி நான் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. திரு. எம். எஸ். மணி அவர்களைக் கேட்டால், நன்றாகச் சொல்லுவார்கள். நான் பெரிய அதிகாரியா, நீ பெரிய அதிகாரியா என்று போட்டாபோட்டி ஏற்பட்டு, தகராறுகள் வளர்கின்றன. அதை இல்லாமல் செய்ய வேண்டும்" ஹெல்த் ஆபீசர்கள் நகர சுத்திசெய்வதையெல்லாம், இம்மாதிரி சாதாரண வேலைகளையெல்லாம் கவனிக்க வேண்டுமென்று செய்திருக்கிறார்கள் ஒரு ஹெல்த் ஆபீசருடைய, மருத்துவம் படித்து, பட்டம் பெற்றவருடைய, திறன் இந்த சின்னச் சின்ன வேலைகளுக்குப் பயன்படுத்தாமல், தெருக் கூட்டுவதையும், நகர சுத்தி செய்வதையும் கவனிக்க வீணாக்காமல், இம்மாதிரியான மெகானிகல் ஜாபுகளை கமிஷனரிடமே விட்டு விட்டு, ஹெல்த் ஆபீசர்களை நல்ல முறையில், மருத்துவ வகையில் உபயோகப் படுத்தினால், நாட்டுக்கும் நலம், அவர்களுக்கும் நலம். 50,000 ஜனத்தொகையுள்ள ஒவ்வொரு நகரத்திலும் ஒரு ஸானிடரி இன்ஸ்பெக்டர் இருக்கிறார். அவர்கள் கமிஷனருடைய முழுக் கண்ட்ரோலில் இருப்பதால்

தகராறுகள் இல்லை. 50,000-க்கு ஒரு ஸானிடரி இன்ஸ்பெக்டா என்பது போல, ஜில்லாவை மூன்று கூறுகப் பிரித்து, ஒவ்வொரு பகுதிக்கும் ஒரு டிஸ்ட்ரிக்ட் ஹெல்த் ஆபீசர் என்று ஏற்படுத்தி, அவர்கள் டெக்னிகல் சப்ஜக்டுகளை மட்டும், மருத்துவ விஷயங்களை மட்டும், பஞ்சாயத்து யூனியன்களுக்கும், நகர சபைகளுக்கும், ஆலோசனைக் கூறும் வகையில் அவர்கள் கண்ட்ரோலில் வைத்து, ஏற்பாடுகளைச் செய்தால், வேலைகள் நல்ல முறையில் நடக்க ஏதாவது இருக்கும். அதோடு, மருத்துவ அதிகாரிகள் பணிகளும் குறைவதால், எபிஷெண்டாக வேலை செய்ய முடியும். அதையெல்லாம் மனதில் கொண்டு, அரசாங்கம் நல்ல விதத்தில் செயல்படவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்த சந்தர்ப்பம் கொடுத்த தலைவருக்கும் நன்றி கூறி முடிக்கும் போது, மவுண்ட் ரோடில் மஞ்சள் விளக்கு காண்பித்தால் "போகலாம்" என்றிருப்பது, இங்கே "நிறுத்த வேண்டும்" என்பதற்காகக் காட்டப்படுகிறது என்றாலும், சொல்ல வேண்டியதைச் சொல்லிவிட்டேன் என்று ஓரளவுக்குத் திருப்தியுடன், தலைவருக்கு நன்றியைத் தெரிவித்து முடிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மஞ்சள் விளக்குப் போட்ட பிறகும், தங்கள் கருத்தைப் பேசி முடிக்கலாம். பழைய பேரவை நடவடிக்கைகளைப் பார்த்தால், சில உறுப்பினர்கள் பேசிக்கொண்டிருக்கும் போதே வாக்கியத்தின் பாதியில், "மணியடிக்கப்பட்டது" என்று குறிப்பிட்டு, பாதியில் நிறுத்தப்பட்டிருக்கிறது. அப்படிச்செய்யக்கூடாது என்பதற்காகத்தான் இந்த ஏற்பாடு.

**திரு. நா. காசிராமன் :** மஞ்சள் விளக்குப் போட்டவுடன், அது எரிந்தால் உடனேயே நிறுத்திவிட வேண்டும் என்று அர்த்தமில்லை என்பதைப் புரிந்து கொண்டிருக்கிறேன், நன்றி.

***திரு எம். எஸ். மணி :** சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு சுகாதார அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற மருத்துவம், பொதுச் சுகாதாரம் ஆகிய மானியக் கோரிக்கைகளை ஆதரிக்கும் முகத்தான் என்னுடைய சில கருத்துக்களை இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

இன்று பேசுவதற்கு இருக்கும் உறுப்பினர்களும், கடந்த ஆண்டு பேசின அத்தனை பேரும் நாட்டிலே மருத்துவம், பொதுசுகாதாரம் ஆகிய துறைகளின் கீழ் வசதிகள் அதிகப்படுத்தப்படவேண்டும் என்று கூறி வருகிறார்களே தவிர, எங்கள் ஊருக்கு மருத்துவம் தேவை இல்லை என்றோ சுகாதார வசதிகள் தேவை இல்லை என்றோ சொல்லுகிறவர்கள் யாரும் இல்லை. எனவே, இந்த இலாக்கா நாளுக்கு நாள் வளர்ந்து வருகிற ஒரு இலாக்காவாக இருக்கிறது. அது மட்டுமல்ல. வருமானம் இல்லாத ஒரு இலாக்காவாகவும் இருக்கிறது. மற்ற இலாக்காக்களைப் பார்த்தால், அரசாங்கத்திற்கு ஏராளமான வருவாயை ஈட்டிக் கொடுத்து, அதிலிருந்து ஒரு பகுதியைச் செலவு செய்வதற்கு வழி வகுக்கும். ஆனால், இந்த இலாக்கா, அரசாங்கத்திலே பல இலாக்காக்களின் மூலமாக வரும் வருமானத்தைச் செலவு செய்கிற ஒரு இலாக்காவாக இருக்கிறது. அது மட்டுமல்ல. தேவையான இலாக்காவும் கூட.

இந்த மருத்துவத் துறையில் பல முறைகளைப்பற்றி நாட்டிலே சொல்லுகிறார்கள். சொல்லப்படுகிற அத்தனை முறைகளிலும் சிற்சில உண்மைகள் இருப்பதையும் நாம் பார்க்கிறோம். பொதுவாக, அலோபதி, சித்த வைத்தியம், ஹோமியோபதி, யூனானி என்று பல முறைகளைச் சொல்லுகிறபோது, அவரவர்கள் அது பற்றிப் பெருமையாகப் சொல்லுகிறார்கள். ஆனால், பெருமையாகச் சொல்லுகிற நேரத்தில், அரசாங்கம் அதிலே கவனம் கொண்டு, இந்த அத்தனை முறைகளிலும் என்ன என்ன நல்ல அம்சங்கள் இருக்கின்றனவோ அவற்றை நாட்டு மக்களுக்குப் பயன்படுத்துவதற்கு முன்வரவேண்டும்.



பொதுவாக, சில பேருக்கு ஆங்கில வைத்தியம் சரிப்பட்டு வராவிட்டால், அவர்கள் தமிழ் வைத்தியத்தின் மூலம் தங்கள் நோய்களைக் குணப்படுத்திக் கொள்ளும் ஒரு நிலைமை இருக்கிறது. நாட்டிலே எங்கு பார்த்தாலும் டி.பி. வியாதி பரவுகிறது. குறிப்பாக, பீடித் தொழிலாளர்களின் மத்தியில் இந்த வியாதி அதிகமாகப் பரவுகிறது. ஆனால், போதுமான படுக்கை வசதிகளும், அவர்களுக்கு வேண்டிய நல்ல உணவும் கொடுப்பதற்குள்ள வசதிகளும் இன்றையதினம் இல்லை. ஆனால், தமிழ் வைத்தியர்கள் ஒரு பாட்டு சொல்லுகிறார்கள். "இன்புரு வேரின்றி இறுமி இறுமிச் செத் தாண்டி" என்பது ஒரு பாட்டு. இன்புரு வேர் எங்கே இருக்கிறது என்று தேடிப் பிடிக்கவேண்டும். அந்த வேரைக் கொடுத்தால், காச நோய் வராது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்தப் பாட்டிலே உள்ள பொருளை நாம் கவனிக்காமல் விட்டு விடுகிற காரணத்தால், டி.பி. வியாதி வந்த ஒரு வியாதியஸ்தருக்கு நாம் ஆயிரக்கணக்கான ரூபாய்களைச் செலவிட வேண்டியிருக்கிறது. எனவே, அதிலே கொஞ்சம் கவனம் செலுத்தவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய இந்தக் கோட்டையில் சித்த வைத்தியத்திற்கு என்று ஒரு பிரிவு ஒதுக்கியிருக்கிறார்கள். அதை நான் மனமார பாராட்டுகிறேன். சித்த வைத்திய முறையில் நம்பிக்கையுள்ளவர்கள் அந்த முறையின் மூலம் வைத்திய வசதி பெறுவதற்கு இது ஒரு வழிவகை காணும் என்று கருதுகிறேன். அதைப்போலவே, ஹோமியோபதி முறையைப் பற்றிச் சொல்கிறபோது, அவர்கள் சில தத்துவங்களைச் சொல்லுகிறார்கள். ஆங்கில முறையில் ஒரு மருந்துக்குப் பதிலாக டாக்டர் வேறொரு மருந்தைக் கொடுத்துவிட்டால், அதன் காரணமாக நோய் இரட்டிப்பாகிறது. ஆனால், ஹோமியோபதி முறையில், எந்த மருந்தைத் தவறாகக் கொடுத்தாலும், கெடுதல்வருவதில்லை. நன்மையைத்தான் பார்க்கிறோம். ஆகவே, ஹோமியோபதி முறையிலும் சில நன்மைகள் இருக்கின்றன என்பதை நாம் ஒத்துக் கொள்ளவேண்டும்.

திருச்சி நகராட்சி மன்றத்தில் ஒரு ஹெல்த் ஆபிசர் இருக்கிறார். திரு. ராமன் என்று அவருக்குப் பெயர். அவர் "நற்குறள் நானூறு" என்று ஒரு புத்தகத்தை எழுதியிருக்கிறார். எப்படி வள்ளுவர் ஏழு வார்த்தைகளில் ஒரு குறள் எழுதியிருக்கிறாரோ, அதைப்போல, திரு. ராமன் அவர்கள் ஏழு வார்த்தைகளுக்கு ஒரு குறள் வீதம் நானூறு குறட்பாக்களை எழுதி யிருக்கிறார். 400 குறள்களில் நல்ல மருத்துவத்தைச் சொல்லியிருக்கிறார் அவர். அது மக்களுக்கு விநியோகிக்கப்பட வேண்டும் என்று அரசாங்கத்திற்கு அந்தப் புத்தகத்தை அனுப்பி இருக்கிறார். இதுவரையில் உத்தரவு அவருக்குக் கிடைக்கவில்லை என்று கருதுகிறேன். அவருக்கு வைத்திய அறிவும், புலமையும் இருக்கிறது. அப்படிப்பட்டவர்களுக்கு நல்ல வாய்ப்பு அளிக்க வேண்டும் என்று அமைச்சர் அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

டாக்டர் பயிற்சி பெறுகிறவர்களுக்கு நாம் முக்கியமாகச் சொல்லிக் கொடுக்க வேண்டியது பொறுமை. யார் எதைச் சொன்னாலும், நோயாளி தனக்குள்ள நோயின் தன்மைகளை யெல்லாம் சொல்லுகிறபோது, காது கொடுத்துக் கேட்கவேண்டும். காது கொடுத்துக் கேட்டுப் பதில் சொன்னாலேயே பாதி நோய் போய்விடும் என்று கருதுகிறேன். அந்த முறையில் இந்த இலாக்காவிற்குப் பொறுப்பாக வந்திருக்கும் அமைச்சரும், நாம் எதைச் சொன்னாலும் காது கொடுத்துக் கேட்டுப் பொறுமையாகத் தீர்த்து வைக்கும் நல்ல பண்புள்ளவராக இருக்கும் காரணத்தால், இந்த இலாக்கா மிகச் சிறப்பாக நடைபெறுகிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், ஒவ்வொரு பகுதியிலும் படுக்கைகளை அதிகரிக்கவேண்டும் என்று எனக்கு முன்னால் பேசியவர்கள் குறிப்பிட்டார்கள். பலரும் சொல்கிறார்கள். பொதுவாகவே ஒரு எண்ணம் இருக்கிறது. சில பேர், வசதி இல்லாதவர்கள், வேலை வாய்ப்பு இல்லாதவர்கள் கூட,

ஆஸ்பத்திரியில், "எனக்குப் படுக்கை வசதி வாங்கித் தாருங்கள்" என்று கேட்டு, ஒரு பத்து நாட்கள் படுத்துவிட்டு வருகிற நிலைமை இருக்கிறது. இதைக் கூடுமான வரையில் நாம் கண்காணிக்க வேண்டும். நோய் வந்து ஆஸ்பத்திரிக்குச் சென்று, பிறகு நோய் குணமாகி டிஸ்சார்ஜ் செய்யப்படும் போது, "இன்னும் ஒரு பத்து நாள் ஆஸ்பத்திரியிலேயே இருந்துவிட்டு வீட்டுக்குப் போகிறேன்" என்று சொல்லக் கூடியவர்களும் இருக்கிறார்கள். காரணம், அப்படிப்பட்ட நிலையில், அங்கே சில வசதிகள் இருப்பதால், அதை அனுபவிக்கலாமே என்ற நிலைமையில் அப்படிச் செய்கிறார்கள். ஆகவேதான், இந்த இலாகா வளருகிற ஒரு இலாகா என்று சொன்னேன். அந்த இலாக்காவை யொட்டி, திருச்சி நகரில் ஒரு பெரிய மருத்துவக் கல்லூரி கட்ட வேண்டும் என்பதற்காக முப்பது லட்ச ரூபாய்க்கு மேல் வசூலித்து வைத்திருக்கிறார்கள். அந்த மருத்துவக் கல்லூரி கட்டுவதற்கு ஒரு கோடி ரூபாய் தேவை என்ற காரணத்தினாலேயோ, என்னவோ, அடுத்த ஆண்டு பார்க்கலாம் என்று நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் கருதுகிறார்கள். ஆனாலும், ஒரே ஆண்டில் ஒரு கோடி ரூபாயையும் செலவழித்துவிடுவதில்லை. ஒரு மருத்துவக் கல்லூரி ஏற்படுத்துவதென்றால், இந்த ஆண்டு பத்து லட்ச ரூபாய், அடுத்த ஆண்டு பத்து லட்ச ரூபாய் என்று ஆண்டுக்காண்டு செலவழிக்கப்பட்டு, நான்கைந்து ஆண்டுகளில் தான் அந்த ஒரு கோடி ரூபாய் செலவழியுமே தவிர, ஒரே ஆண்டில் செலவழிப்பது என்பதல்ல. ஜனங்களுக்கு ஒரு நல்ல வாக்குறுதி கொடுத்திருக்கிறோம். அந்த வாக்குறுதியைக் காப்பாற்றுவதற்காக, திருச்சியில் மிக விரைவில், அடுத்த ஆண்டுக்குள்ளாகவே, ஒரு மருத்துவக் கல்லூரியை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கையை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

திருச்சியில் ஒரு டி. பி. சானிடோரியம் இருக்கிறது. அது பலருடைய நன்கொடைகளால் நடத்தப்படுகிறது. ராஜாஜி சானிடோரியம் என்று பெயர் இருக்கிறதே தவிர, உள்ளே சென்று பார்க்கும்போது, அங்கே படுக்கை வசதிகள் இருந்தாலும், அது காலியாகவே இருக்கிறது. நகராட்சிகென்று பத்து படுக்கைகள் ஒதுக்கி யிருக்கிறார்கள். நகராட்சி பணம் கொடுக்காத காரணத்தால், அந்தப் படுக்கைகளில் யாரையும் அனுமதிப்பதில்லை. அந்தப் பத்து படுக்கைகளும் காலியாகவே இருக்கின்றன. அதைப் போல், தனியார் ஸ்தாபனங்கள், பெரிய பெரிய ஸ்தாபனங்கள் எல்லாம் பணம் கொடுப்பதை நிறுத்திவிடும் காரணத்தால், அந்தப் படுக்கைகளும் காலியாகவே இருக்கின்றன. அப்படிப்பட்ட ஒரு நிர்வாகத்தை நம்முடைய அரசாங்கம் ஏற்று நடத்துவது மிக நல்ல முறையில் டி. பி. வியாதியஸ்தர்களுக்கு ஒரு பாதுகாப்பாக இருக்கும். அங்கே பணம் இல்லாத காரணத்தால், நோயாளிகள் செல்லும்போது, மருந்தை எழுதிக் கொடுத்து, விடுகிறார்கள். அதை வெளியே பணம் செலவழித்து வாங்கும் நிலையில் பல பேர் இன்றைய தினம் இல்லை. ஆதலால் தான் இந்த நிலைமையை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திருச்சி நகரத்திற்குப் பாதாள சாக்கடைத் திட்டம் வேண்டும் என்பது குறித்து, அங்குள்ள மக்கள் கோரி வருகிறார்கள். திட்டம் போட்டிருக்கிறோம், திட்டம் போட்டிருக்கிறோம் என்று அரசாங்கத் தரப்பில் சென்று பத்தாண்டுக் காலமாகவே சொல்லி வருகிறார்கள். சென்னைக்கு அடுத்த பெரிய நகரம் மதுரை என்கிறோம். மதுரைக்கு அடுத்து கோவை என்று கருதுகிறோம். இப்படிப்பட்ட நகரங்களைப் போன்று திருச்சி நகரமும் வளர்ந்து வருகிற பெரிய நகரமாக இருக்கிறது. அப்படிப்பட்ட நகரத்திற்குப் பாதாள சாக்கடை இல்லாதது மிகப் பெரிய குறை தான். ஏனென்றால், சாக்கடைக் கழிவு நீரெல்லாம் காவிரி நதியிலே கலக்கிறது. அந்தக் காவிரி நதியிலிருந்து தான் குடி தண்ணீர் பல இடங்களுக்குக் கொண்டு செல்லப்படுகிறது. ஆகவே, விரைவில் பாதாள சாக்கடைத் திட்டத்தை திருச்சி நகரத்திற்கு நிறைவேற்றித்தர இந்த அரசாங்கம் திருச்சி நகராட்சிக்கு நல்ல ஒத்துழைப்புத் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.



மத்திய சர்க்கார், திருச்சிக்குப் பக்கத்தில் உள்ள திருவெறும்பூரில் ஹெவி எலக்ட்ரிகல்ஸ் என்ற ஸ்தாபனத்தைத் துவக்கி யிருக்கிறார்கள். ஆற்றிலிருந்து அவர்கள், தங்களுடைய சொந்த ஏற்பாட்டில் காவிரியிலிருந்து தண்ணீரைக் கொண்டு வந்து பெரிய நகரத்தை உண்டாக்கி யிருக்கிறார்கள். அதே போல், துப்பாக்கித் தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்தி, சொந்தப் பணத்திலேயே தண்ணீர் கொண்டு வந்து, அதிலிருக்கும் ஆயிரக் கணக்கான தொழிலாளர்களுக்கு வசதி செய்து கொடுத்திருக்கிறார்கள். திருச்சியில் 5 லட்சம் மக்கள் இருக்கிறார்கள், அவர்களுக்கு ஐந்து மேல் மட்டத் தண்ணீர்த் தொட்டிகள் கட்டி நான்கு ஆண்டு ஆகிறது. அந்தத் தொட்டிகளுக்குத் திறப்பு விழாவும் செய்துவிட்டார்கள். ஆனால், தண்ணீர் கொடுக்கவில்லை. காரணம் என்னவென்றால், இதற்கு முன்னால் போட்ட குழாய்களெல்லாம் மிக மோசமான குழாய்களாகப் போடப்பட்ட காரணத்தாலும், இடையிலே பற்ற வைத்த ஈயம் சரியாகப் பதியாத காரணத்தாலும் அப்படிப்பட்ட நிலை என்று சொல்லுகிறார்கள். அப்படிப்பட்ட நிலைமையினால், தண்ணீர் தெருவில் ஓடும் நிலை இருக்கிறதென்று சொல்லுகிறார்கள். லட்சக்கணக்கான ரூபாய் செலவழித்து, கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு முன்னால் மேல் மட்டத் தொட்டிகளைக் கட்டியிருக்கிறார்கள். அவை உடனடியாக வேலை செய்வதற்கும், தண்ணீர் கொடுப்பதற்கும் நம்முடைய அரசாங்கம் நல்ல வழிவகை செய்து கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஆஸ்பத்திரிகளில் உள்ள நோயாளி ஒருவருக்கு நாளொன்றுக்கு ஒரு ரூபாய்க்குள்ள உணவு கொடுப்பது என்ற திட்டத்தை 1947-ம் ஆண்டிலே ஏற்படுத்தினார்கள். அந்த ஒரு ரூபாயில் காலைக் காப்பி, பகல் உணவு, இரவு உணவு ஆகியவை அதுவும் நல்ல சத்துள்ள உணவு, கொடுக்க வேண்டும் என்ற நிலை இருக்கிறது. 1947-ம் ஆண்டிலிருந்து 1967–68 வரை இதே நிலை தான் இருக்கிறது. இந்தத் திட்டம் வகுத்து இப்படி இருபதாண்டுக்கு மேல் ஆகிறது. இன்னும் இந்த ஒரு ரூபாய்த் திட்டம் இருக்கிறது. அந்த ஒரு ரூபாய் தொகை போதாத நிலையைக் கவனித்து, தனவந்தர்களிட மிருந்து நன்கொடை வசூலித்தாவது இன்னும் கூடுதலாகத் தொகை ஒதுக்கி, நோயாளிகளுக்கு போதுமான சத்துள்ள உணவு கொடுக்க முயற்சிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன். 1968-இல் காச நோயாளிகளுக்கு இரண்டு ரூபாய்க்கு நாளொன்றுக்கு உணவு கொடுக்கிறார்கள். பற்றாக்குறையாக இருந்தாலும், ஏதோ இரண்டு ரூபாய்க்குள்ளே அவர்கள் காரியத்தை முடித்துக்கொள்ள முடிகிறது. இந்த நிலைமைகளை யெல்லாம் பரிசீலனை செய்து, அரசாங்கம் தங்களுடைய கருத்திலே கொண்டு, இந்த இலாகாவிற்குக் கொஞ்சம் கூடுதலாகச் செலவானாலுங்கூட, அதை ஏழை எளிய மக்களுக்குப் பயன்படுகிற அளவில் நாம் செய்ய வேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ளுகிறேன்.

திருச்சியில் ஒரு பெரிய ஆஸ்பத்திரி இருக்கிறது. திருச்சி நகரத்தில் இருப்பவர்கள் மட்டுமல்லாமல், சுற்றுப் புறங்களில் உள்ள நகர மக்களும் அங்கே தான் வரவேண்டி யிருக்கிறது. கிட்டத்தட்ட 50, 60 மைல் விஸ்தீரணத்திற்குத் திருச்சி நகரம் பரவி யிருக்கிறது. அத்தகைய பெரிய நகரத்தில் அமைந்திருக்கும் பெரிய மருத்துவ விடுதிக்கு மூன்று ஆண்டு காலமாக சூபரின்டெண்ட் இல்லாமல் இருக்கிறது. டி.எம்.ஓ. க்கு அடுத்த படியாக, "சூபரின்டெண்ட்" என்று போர்டு இருக்கிறது. அந்த போர்டு இருக்கிறதே தவிர, சூபரின்டெண்ட் போடப்படவில்லை. விரைவில், சூபரின்டெண்ட் ஒருவரைப் போட்டால் தான் மிக நலமாக இருக்கும். அந்தக் காரியத்தைக் கவனிப்பதற்கும் ஒரு வாய்ப்பாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

"ஹானரரி சர்ஜன்" என்ற பெயரில் சம்பளம் பெறாமல் ஆஸ்பத்திரிகளில் மருத்துவப் பணி புரிகிறார்கள். ஆஸ்பத்திரிகளில் வேலை செய்வதன் மூலம் தங்களுடைய அனுபவத்தைப் பெருக்கிக்கொள்வதோடு, நோயாளிகளுக்கும் மருத்துவ வசதி செய்யப் பலர் முன்வந்து இன்றைய

தினம் செய்துகொண்டிருக்கிறார்கள். பல பேர்கள் நாட்டு மக்களுக்கு உழைக்க வேண்டும் என்ற நல்ல எண்ணத்தில் பணியாற்றுகிறார்கள் என்றாலும், சில பேர்கள் செய்யும் நிலைமையை நான் இங்கே சொல்லித் தான் தீரவேண்டும். ஆஸ்பத்திரியில் வரும் நோயாளிகளுக்கு இன்ஜெக்ஷன் கொடுக்க வேண்டுமென்றால், ஒரு சிட்டோக்கள் கொடுக்கவேண்டும். ஆனால், அப்படிக் கொடுக்கக் கூடிய இன்ஜெக்ஷன் டொக்கனை நோயாளிகளிடம் கொடுப்பதில்லை. டாக்டரே சேகரித்து வைத்துக்கொண்டு விடுகிறார். ஐம்பது சேர்ந்தவுடன் அதைக் கொண்டு போய் மொத்தமாகக் கொடுத்து அதிலே கிடைக்கக்கூடிய இன்ஜெக்ஷன் ட்யூப்களை வாங்கி அவர் வெளியிலே எடுத்துச் செல்லும் நிலைமை இருக்கிறது. சம்பளம் இல்லாமல் இலவசமாக வேலை பார்க்கவேண்டும் என்பதற்காக அவர்களை அரசாங்கம் நியமிக்கிறது. ஆனால், சம்பளம் இல்லை என்ற காரணத்தால், வெளியிலே கொண்டு போய், சம்பளத்திற்குப் பதிலாகப் பயன்படுத்துகிற நிலைமை ஒரு சில இடங்களில் இருக்கிறது. அதை அரசாங்கம் தடுக்க அக்கறை கொண்டு, அப்படிப்பட்டவர்களை இந்த ஆஸ்பத்திரிகளில் இலவசமாக வேலை பார்ப்பதற்கு அனுமதிக்கக் கூடாது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

எனவே தான், ஒரு ஆஸ்பத்திரிக்கு மருந்து வாங்க வேண்டுமென்று சொன்னால், வருடத்திற்கு சுமார் 7 லட்சம் ரூபாய்க்கு மேல் செலவாகிறது. மேலும் குறிப்பிட்ட ஒரு மருந்து சில விடங்களில் அதிகம் செலவாகின்றது. அப்படி குறிப்பிட்ட மருந்து அதிகம் செலவாகி, மேலும் தேவை யென்ற நிலைமை வந்தபோது உடனடியாக அம் மருந்தை தனியார் ஸ்தாபனங்களிலோ, மற்ற இடங்களிலோ இருந்து வாங்கும்படியான நிலைமை இருப்பதில்லை. மத்திய அரசாங்கமோ, மாநில அரசாங்கமோ, குறிப்பிடுகின்ற இடங்களுக்குச் சென்று தான் வாங்கக்கூடிய நிலைமை இருக்கின்றது. அவசரத் தேவைக்காக தனியார் ஸ்தாபனங்களில் வாங்கும்படியான நிலைமை இல்லை. ஆகவே, அரசாங்கம், பெரிய சுகாதார அதிகாரிகள் தேவையான மருந்தை அவசரத் தேவைக்காக தனியார் ஸ்தாபனங்களில் வாங்கிக் கொள்ளலாம் என்ற நிலைமையை உண்டாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருச்சியிலே காலரா நோய் ஏற்பட்ட போது, ஹெல்த் ஆபீசர்களும், சுகாதார இன்ஸ்பெக்டர்களும் காலை 6 மணியிலிருந்து இரவு 10 மணி வரை மக்களுக்கு இன்ஜெக்ஷன் போட்டுக்கொண்டிருந்தார்கள். அவர்கள் தங்களுடைய சிரமங்களையும் பாராமல் இடைவிடாமல் வேலை செய்து கொண்டிருந்தார்கள். ஆனால் அப்படி ஊக்கத்துடன் வேலை செய்பவர்களுக்கு இரவில் பெட்ரோமாக்ஸ் லைட் வசதி கூட செய்து தரப்படவில்லை, அவர்களுடைய டிபன், சாப்பாடு முதலியவற்றுக்கு ஒன்றும் வழி செய்யப்படவில்லை. இப்படி உடனடியாக நோய் ஏற்படுகின்ற நேரத்தில் உழைக்கும் சுகாதார அதிகாரிகளுக்கு வேண்டிய வசதிகளைச் செய்துதர வழிவகை செய்ய வேண்டும். அரசாங்கம் இதைக் கருத்திற் கொண்டு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இந்த நிர்வாகத்திலே இருக்கக்கூடிய பெரிய பிரச்சினைகளை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். சுகாதாரத் துறையிலே, சுகாதார ஆய்வாளர்கள் என்பது ஒரு பெரிய பகுதியாக இருக்கிறது. சுமார் 1,500-க்கு மேற்பட்ட ஹெல்த் இன்ஸ்பெக்டர்கள் சுகாதாரத் துறையில் வேலைசெய்கிறார்கள். இந்தப் பணியாளர்கள் பதினைந்து வருடங்கள், இருபது வருடங்கள் சர்வீஸ் ஆனவர்களாக இருக்கிறார்கள். இப்படி 1,500-க்கு மேற்பட்டவர்களாக இருந்தும் இவர்களில் 128 பேர்களைத்தான் அரசாங்கம் நிரந்தரப் பணியாளர்களாகச் செய்திருக்கிறது. பதினைந்து, இருபது வருடங்கள் வேலை செய்து விட்டு இன்னும் நிரந்தரமாக்கப்படாமல் இருப்பது அவர்களுக்கு மனவேதனையைத் தருகின்றது. அவர்களை நிரந்தர மாக்காவிட்டால் அவர்களுக்கு மனநிம்மதியே இருக்காது. "நாம் இருபது வருடங்கள் வேலை செய்துவிட்டோம், இன்னும் பொறுப்பில்லாத நிலைமை இருக்கிறது. இன்னும் பர்மனெண்டு செய்யப்



படவில்லை" என்று அவர்கள் குறைபட்டுக் கொள்கிறார்கள். இது யாருடைய கவனக் குறைவால் ஏற்பட்ட குறையோ? கடந்த காலத்தில் ஏற்பட்டிருந்தாலும் இந்த அரசு இந்தக் குறையைப் போக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைய தினம் அரசாங்கத்திலே தொடர்ந்து மூன்று ஆண்டுகள் வேலை செய்தால் அவர்கள் பர்மனெண்டு செய்யப்படுகிறார்கள். அந்த அடிப்படையில் இந்த சுகாதார ஆய்வாளர்களுக்குப் பாதுகாப்பு கொடுத்து, அவர்களை நிரந்தரமாக்க வேண்டும். சுகாதார ஆய்வாளர்களை யெல்லாம் மேற்பார்வை யிடுகின்ற சுகாதார அதிகாரிகள் எல்லாம் பர்மனெண்டு செய்யப்பட் டிருக்கிறார்கள். ஆகவே, சுகாதார ஆய்வாளர்களையும் விரைவிலே பர்மனெண்டு செய்ய வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் சுகாதார ஆய்வாளர்களை சில நேரங்களில் ஒரு மாவட்டத்தை விட்டு வேறு மாவட்டங்களுக்கு மாற்றும்படியான உத்தரவுகள் வருகின்றன. குறைந்த சம்பளம் பெறும் இவர்கள் ஒரு மாவட்டத்தை விட்டு வேறு மாவட்டங்களுக்குச் சென்று தங்கள் குடும்பத்தை நடத்த முடியாமல் கஷ்டப்படுவார்கள். ஆகவே, கூடுமான வரையில் அந்தந்த மாவட்டங்களுக் குள்ளேயே மாற்றல் உத்தரவுகளை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

"மாவட்டக் குடும்ப நலத் திட்ட அலுவலர்கள்" பொதுச் சுகாதாரத் துறையின்கீழ் செயல்பட்டு வருகிறார்கள். அப்படிப்பட்ட இடங்களிலே, கிராமங்களிலே பிரச்சாரம் செய்ய அனுப்பப்படுபவர்கள் பயிற்சி உள்ளவர்களாகத்தான் இருக்க வேண்டும். பயிற்சி பெறாத அலுவலர்களை யெல்லாம் பிரச்சாரத்திற்கு அனுப்பக் கூடாது. சில இடங்களில் ரெவின்யூத் துறையில் இருக்கும் டெபுடி தாசில்தார்கள் போன்றவர்கள் எல்லாம் குடும்ப நலத் திட்டத்தைப் பற்றிப் பிரச்சாரம் செய்ய வருகிறார்கள். அம்மாதிரியானவர்கள் பயிற்சி பெறாத காரணத்தால், நல்ல முறையில் பிரச்சாரத்தை நடத்த முடியாது. நல்ல பயிற்சி பெற்றவர்களை அனுப்பினால் தான் குடும்பநலத் திட்டம் வெற்றியடையும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரியிலே, வெளி நோயாளிகளுக்காக அவுட் பேஷண்ட் ஒரு மருத்துவ மனைப் பிரிவு சுமார் 10 லட்சம் ரூபாய் செலவிலே கட்டப்பட்டு பல ஆண்டுகளாகத் திறக்கப்படாமல் இருந்து வருகிறது. இந்தப் பிரிவை திறந்தால் வெளியிலே இருந்து வரும் நோயாளிகளுக்குத் தக்க பரிகாரம் கிடைக்கும், அவுட் பேஷண்ட் நோயாளிகள் தகுந்த முறையில் சிகிச்சை பெற்றுக்கொள்ள முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சுகாதார அமைச்சர் அவர்களும், பொதுச் சுகாதாரத் துறை டைரக்டர் அவர்களும், அத் துறையில் பணியாற்றும் அதிகாரிகளும் மிகவும் நல்ல முறையிலே பணியாற்றி வருகிறார்கள். அவர்களுக்கு எல்லாம் என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* THIRUMATHI A. SUARES : Mr. Speaker, Sir, while supporting the Demand for Rs. 5 crores and odd under Public Health, I wish to offer a few remarks. Public Health Department has been considered to be one of the most essential services because it not only prevents diseases but also promotes active health. The Public Health Department in this State deserves commendation for the work done by it under the National Smallpox Eradication Programme throughout the State during the past four years. By mass intensive vaccination work the disease has been controlled and the World Health Organisation Team has stated that the work done under this programme has been very successful.

[Thirumathi A. Suares] [1968 மார்ச் 12

Another disease that has been controlled successfully in this State is malaria. By D.D.T. spraying, administration of anti-malarial drugs and vigilance measures carried out for long periods in the affected areas, great success has been achieved. Compared with the work done in the various States in the country, Madras has won the reputation of being the best State for the work done in this field also.

I would like to draw the attention of the Government to the fact that Government used to pay grants for medical inspection in schools in past years. This has been given up as a measure of economy. May I suggest that medical check-up of young children may be entrusted to the Public Health Department ? Children in the age group of 3 to 7 attend nursery, kindergarten, Montessori and primary schools. If a medical check-up of these children is carried out, many diseases can be detected and attended to. There are many cases of primary complex in the Madras State and elsewhere which are not readily diagnosed. If there is a check-up of young school children of pre-primary and primary classes, the diseases from which they are suffering can be detected and modern paediatric treatment given.

This Department has already started the immunisation programme. With triple vaccine injections three sicknessess can be prevented or at least made very mild—whooping cough, tetanus and dyphtheria. This saves the children a lot of anxiety and trouble. When there is an epidemic of typhoid, as we had recently T.A.B. injections can be given to school children.

I would also suggest that short-sightedness in school children should be included in this programme. When a child cannot read what is written on the blackboard, it is a sure indication that there is defective vision and it may be attended to immediately.

To facilitate the work in this respect, I recommend that mobile vans may be provided to the Public Health Department, to carry out this work with the necessary staff and equipment. Follow-up work is necessary in such cases and with mobile vans, follow-up work will be possible. The Primary Health Centre Scheme in this State has made very good progress. At the beginning of the Third Five-Year Plan there were only 120 Primary Health Centres. This number increased to 222 by 1967. Later on about 95 more Primary Health Centres were opened and in the present day there are 362 Primary Health Centres. These Centres provide medical care, both curative and preventive. In the early days, it was difficult to get doctors to consent to go to these Centres. The living conditions in these areas must have improved, for the number of Centres has increased three-fold. With 362 Centres great medical relief is given to the rural areas and, in the years to come, I feel that the whole State will be covered and every village will have some medical care.

Thank you, Sir.



1968 மார்ச் 12]

**திரு. கரு. சீமைச்சாமி :** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, மு.ப.
அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த இந்த மானியக் கோரிக்கைகளின்மீது— 11-00
அவற்றை வரவேற்று—எனது கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். மருத்துவக் கல்லூரிகளில் முன்பு மாவட்ட வாரியாக இடம் ஒதுக்கப்பட்டு மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். சமீபத்தில் மாவட்ட ரீதியாக இடங்களை ஒதுக்கக் கூடாது என்று சுப்ரீம் கோர்ட் ஜட்ஜ்மெண்டு வந்திருக்கிறது. அதன்மேல் இனி எந்த அடிப்படையில் மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முன்பு மாவட்ட ரீதியாக பிற்பட்ட வகுப்பினருக்கென்று 25 சத விகிதம் இடம் ஒதுக்கப்பட்டு வந்தது. அதை இப்போது மாநிலம் முழுவதற்கும் பிற்பட்ட வகுப்பினருக்கு 25 சத விகிதம் என்று வைத்துவிட்டால் அது மிகமிகக் குறைவாகப்போய்விடும். இராமநாதபுரம் ஜில்லா போன்ற இடங்களில் இருந்து மாணவர்கள் சேருவதற்கே இடமில்லாது போய்விடும். முதுகுளத்தூரை எடுத்துக் கொண்டால் இதுவரை அந்தப் பகுதி மாணவன் ஒருவன் கூட மருத்துவக் கல்லூரியில் சேர்க்கப்படவில்லை. முன்பு 25 சதவிகிதம் மாவட்ட வாரியாக பிற்பட்ட சமூகத்தவர்களுக்கு ஒதுக்கினாலும், ஓபன் தேர்விலும் நிறைய மார்க்குகள் வாங்கி யிருந்தால் பிற்பட்ட சமூகத்தைச் சேர்ந்த மாணவன் சேர்த்துக்கொள்ளப்பட வாய்ப்பு இருந்தது. இனிமேல் எந்த முறையை வகுக்க இருக்கிறார்கள் என்பதை விளக்க வேண்டும். குறிப்பாக பிற்பட்ட இனத்தவர்களுக்கு என்று 40 சத விகிதம் ஒதுக்கினால்தான் விவசாயப் பெருங்குடி மக்களுடைய பிள்ளைகள் வைத்தியப் படிப்பில் சேர்வதற்கு வசதி ஏற்படும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற கொள்கை விளக்கத்தில் மக்களுக்கு வைத்திய வசதி செய்து கொடுக்க அரசாங்கம் கடமைப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. நகரங்களுக்குச் செய்து கொடுக்கிற வசதிகளைப் போல கிராமங்களுக்குச் செய்து கொடுப்பது இல்லை என்பதுதான் எங்கள் குறையாகும். நகரத்தில் வீட்டு வசதி செய்து கொடுக்கப்படுகிறது. தண்ணீர் வசதி செய்து கொடுக்கப்படுகிறது. மருத்துவ வசதி செய்து கொடுக்கப்படுகிறது. நண்பர் திரு. விநாயகம் அவர்கள்கூட நகரத்தில் கொசுத் தொல்லை மிகுதியாக இருக்கிறதே என்று கேட்டார். உடனே கொசுக்களை ஒழிக்க என்ன என்ன திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கிராமங்களில் கொசுக்கடித் தொல்லை எவ்வளவு இருக்கிறது என்று எனக்குத் தெரியும். அமைச்சர் அவர்களுக்கும் தெரியும். ஆகவே, கிராமங்களைப் பொறுத்த வரையில் மேலும் வைத்திய வசதி, சுகாதார வசதிகளை அதிகரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சாதாரணமாக, இப்போது ப்ரைமரி ஹெல்த் சென்டர்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆனால் கட்டிடம் என்பது இல்லை. பெரும்பாலான ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு நீர் வசதி இல்லை. கிராமங்களுக்கு வைத்திய வசதி கிடைக்கச் செய்ய முடியும் என்றால் ஆரம்ப சுகாதார நிலையத்தின் மூலமாகத்தான் செய்ய முடியும். முன்பு டாக்டர் இல்லை என்ற குறை இருந்தது. இப்போது அமைச்சர் அவர்கள் டாக்டர்களைப் போட்டிருக்கிறார்கள். ஒரு பஞ்சாயத்து யூனியனில் 44 பஞ்சாயத்துகள் இருக்கும். கிட்டத்தட்ட 200 கிராமங்கள் இருக்கும். ஆகவே, ஆரம்ப சுகாதார நிலையத்தில் உள்ள டாக்டர்களுக்கு ஜீப் வசதி செய்து கொடுப்பதன் மூலமாகத்தான் கிராம மக்கள் வைத்திய வசதியைப் பெற வழி செய்ய முடியும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்து டாக்டர்களுக்கு அங்கே வீட்டு வசதிகள் செய்து தரப்பட வேண்டும்.

அடுத்தாற்போல பல் வைத்தியத்திற்கு போதிய வசதிகள் செய்துதரப்படவில்லை. முன்பு 15 மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப் பட்டார்கள். அப்புறம் 15 லட்சம் ஒதுக்கி கட்டடம் கட்டிய பிறபாடு 45 மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். இந்த நிறுவனத்தில் இருந்து இதுவரை 174 பேர்கள் பல் மருத்துவப் பட்டம் பெற்றுச் சென்றுள்ளார்கள் என்று

அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். ஒரு பல் சொத்தையாகிவிட்டால் உடம்பே கெட்டுவிடும். உடம்புக்கு வருகிற வியாதிகள் எல்லாம் பற்களிலேயேதான் வருகின்றன. சென்ற தடவையேகூட நான் பேசுகிறபோது குறிப்பிட்டேன். மதுரையில் பல்லைப் பிடுங்குவதற்கு வசதி இருக்கிறதே 'தவிர பல்லைக் கட்டுவதற்கு, பல் வியாதிகளைக் குணப்படுத்துவதற்கு வசதி யில்லை என்று. அதற்கு வேண்டிய வசதிகளை அங்கே செய்து தரவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

பிரசவ கேஸ்களில் குறைந்த வயதுடைய தாய்மார்கள் இறக்கவேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஆறு, எழு தாய் சேய் நலவிடுதி இருக்கிறது. அதனை ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் ஏற்படுத்தித் தரவேண்டும். விவசாயப் பெருங்குடி மக்களின் தாய்மார்களைக் காப்பாற்றித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மதுரையைப் பொறுத்தவரையில் ஆப்பரேஷன் தியேட்டருக்கு ஏர் கண்டிஷன் செய்து தரவேண்டும் என்று கேட்டு வருகிறேன். இதுவரையும் அது செய்யப்பட்டவில்லை. உடனடியாக அதைச் செய்து தரவேண்டும். மதுரை ஆப்பரேஷன் தியேட்டரில் தொண்டை ஆப்பரேஷனுக்காக நான் சென்றிருக்கிறேன். அடிக்கடி மின்விசைத் தடை ஏற்படுகிறது. அதனால் ஆப்பரேஷன் தடைபடுகிறது. ஆகவே தடை யில்லாத முறையில் மின் சக்தி கிடைக்க அங்கே ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னையில் சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு ஆஸ்பத்திரியில் பி கிளாஸ் வார்டுதான் கொடுக்கிறார்கள். அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கு ஏ கிளாஸ் கொடுக்கிறபோது சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு ஏ கிளாஸ் கொடுக்கக் கூடாதா? (மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா—குறுக்கீடு) கனம் அமைச்சர் அவர்கள் கொடுக்கலாம் என்று சொல்லிவிட்டார்கள். மிகவும் நன்றி.

எலும்பு முறிவுகளை குணப்படுத்தும் வசதி மதுரை ஆஸ்பத்திரியிலும் செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொளுகிறேன். ஆஸ்பத்திரிகள் சிறப்பாகப் பணியாற்ற டாக்டர்கள் தான் நல்ல முறையில் செயல்பட வேண்டும். தஞ்சாவூரில் இருந்து ஒரு பெரிய டாக்டர் மதுரைக்கு வந்திருக்கிறார். அவர் வந்ததில் இருந்து ஊரே பரபரப்புத்தான். பத்திரிகையில்கூட வந்திருக்கிறது. அவர்கள்மீது என்ன நடவடிக்கை எடுப்பது என்பதைப பற்றி சிந்தித்து ஏற்பாடு செய்ய வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன. நான் சட்டமன்ற உறுப்பினராக இருந்தும் திருப்பூவந்தி யூனியனுக்கு பெருந் தலைவராக இருக்கிறேன். அங்கே ஒரு டாக்டர் சரியாகத் தம் வேலையைச செய்வதில்லை. நானே கூப்பிட்டுக் கேட்டால் "என் வேலையை எனக்குச் செய்யத் தெரியும்" என்கிறார். ஹெல்த் இன்ஸ்பெக்டர் அவரைக் கெடுத்துவிட்டார் என்கிறார்கள். ஹெல்த் இன்ஸ்பெக்டரைக் கூப்பிட்டுக் கேட்டால்—எனக்கு பஞ்சாயத்து யூனியன் கூட்டத்திற்கு வரவேண்டும் என்பதில்லை என்கிறார். தகராறு ஏற்படக் கூடிய சூழ்நிலை, தகராறு செய்கிறவர்களை மாற்றுவதுதான் ஒரு வழி என்று சொல்லவில்லை. அவர்கள்மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொண்டு, மதுரையில் குடி தண்ணீர் கஷ்டத்தைப் போக்க வசதிகள் செய்து தரவேண்டும் என்று கேட்டு, இந்த மானியக் கோரிக்கையை வரவேற்று என் பேச்சை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திருமதி கே. பி. ஜானகியம்மாள் :** தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய சில கருத்துக்களைத் தெரிவிக்க ஆசைப்படுகிறேன். பொதுவாக சமுதாயத்தில் உணவு, கல்வி, மருத்துவம் இந்த மூன்றும் மிகவும் முக்கியமான அம்சங்களாக இருக்கின்றன. கல்வியை சமுதாயத்தில் உள்ள மக்களின் அறிவு வளர்ச்சிக்காக எவ்வளவு பயன்படுத்துகிறோமோ அதேபோல சமுதாயத்தில் இருக்கக்கூடிய மக்களின் உடல் ஆரோக்கியத்திற்கு மருத்துவம் மிகவும் முக்கியமான விஷயம். அந்த





முறையில் பார்த்தால் சென்ற ஆண்டுகளைவிட இந்த ஆண்டு ஓரளவுக்கு அதிகப்படியான நிதி ஒதுக்கப் பட்டிருந்த போதிலும் இன்றைக்கு இருக்கக்கூடிய 3½ கோடி மக்களின் அளவுக்கு அது போதுமானதா என்று பார்க்கும்பொழுது இல்லை என்றுதான் கூறவேண்டி யிருக்கிறது. குறிப்பாக சென்னை, மதுரை இந்த நகரங்களில் இருக்கக்கூடிய இரண்டு மருத்துவமனைகளும் பெரிய அளவில் இருக்கக்கூடியவை. சென்னையிலே இருக்கக்கூடிய மருத்துவமனையைப் பார்த்தால் அதைப்பற்றி மக்களிடையே பெரிய அதிருப்தி பரவியிருக்கிறது என்பதைக் பார்க்க முடியும். அதிகமாக விஞ்ஞானம் வளர்ச்சி யடைந்திருக்கிறது. மருத்துவமனைகளிலே விஞ்ஞான ரீதியிலே வைத்திய சிகிச்சை கொடுக்கப்படுகிறது. அது போற்றுதற்குரிய விஷயம்.

ஆனால் நோயாளிகளுக்கு இடவசதி யில்லாமல் குறைந்த படுக்கை வசதிகளை வைத்துக்கொண்டு அதில் அதிகப்படியான நோயாளிகள் அவதிப்படுகிறார்கள் என்ற நிலைமை குறிப்பாக கவனிக்கப்பட வேண்டியது. சென்னையிலே உள்ள கண் ஆஸ்பத்திரியிலே மருந்து கொடுப்பதை பேப்பரில் கொடுக்காமல் பேப்பர் இல்லை என்று சொல்லி கையிலே அள்ளிக் கொடுக்கிறார்கள் என்று தெரிய வருகிறது. இது மிகவும் சாதாரண விஷயம். ஆகவே, இதை கவனித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மதுரை ஆஸ்பத்திரி பெரிய ஆஸ்பத்திரியாக இருக்கிறது. அங்கே யிருந்து மருந்துகள் வெளியே போய்க்கொண்டு இருக்கின்றன என்பதை எத்தனையோ சம்பவங்களின் மூலம் கேள்விப்படுகிறோம். அங்கே வேலை பார்க்கக் கூடிய டாக்டர்கள் சம்பளம் இல்லாமல் வேலை செய்கிறவர்களும் சம்பளத்துடன் வேலை செய்கிறவர்களும் யாராக இருந்தாலும் அவர்கள் வெளியே டிஸ்பென்சரி வைத்துக்கொண்டு இருக்கிற முறை பழக்கத்தில் இருக்கிறது. அதன் காரணமாக மக்களுக்காக நாம் வாங்கக்கூடிய மருந்துகளை எல்லாம் அவர்கள் வெளியே கொண்டு போய் விடுகிறார்கள் என்ற வதந்தி நிலவுகிறது. அதில் சிறு உண்மை உள்ளது என்றும தெரியவருகிறது. அப்படி மருந்துகள் வெளியே கொண்டுபோவதைத் தடுப்பதற்கு சம்பளம் வாங்குகிற டாக்டர்களாக இருந்தாலும்சரி, சம்பளம் இல்லாமல் வேலை பார்க்கின்ற டாக்டர்களாக இருந்தாலும் சரி, அவர்கள் வெளியிலே டிஸ்பென்சரி வைத்துக்கொள்ளக் கூடாது என்று கட்டுப்பாடு கொண்டு வருவதன் மூலமாகத்தான் நாம் நோயாளிகளுக்காக வாங்கிக் கொடுக்கின்ற மருந்துகளை அவர்களுக்காக அங்கேயே செலவழிக்கின்ற வசதி ஏற்படுத்த முடியும். இந்த யோசனையை அரசாங்கம் உடனடியாக கவனித்துச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னையில் கோஷா ஆஸ்பத்திரி இருக்கிறது. அதைப்பற்றி பலவிதமான பிரச்சாரங்கள் வெளியே இருந்துகொண்டிருக்கின்றன. மருந்துகள் அங்கிருந்து வெளியே போய்க்கொண்டு இருக்கின்றன. சிகிச்சையாளர்களுக்கு சரிவர மருந்துகள் கிடைக்கவில்லை என்ற பிரச்சாரம் இருக்கிறது. அதையும் கண்காணிக்க வேண்டும். அது பெரிய ஆஸ்பத்திரி, அதை ஒரு பயிற்சிக் கூடமாக மாற்றி அதிகமாக டாக்டர்களும் பெண்களும் பயிற்சி பெறுகின்ற நிலையமாக ஏற்படுத்தினால் இப்படிப்பட்ட குறைபாடுகளைத் தீர்க்க முடியும். கோஷா ஆஸ்பத்திரி மருத்துவத்திற்குதான் இருக்கிறது என்ற நிலைமையை மாற்றி அதை ஒரு பிரசவ சிகிச்சை, பயிற்சிக்கூடமாக மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நாகையில் இருக்கக்கூடிய ஆஸ்பத்திரியை தஞ்சை ஜில்லாவில் தலைமை ஆஸ்பத்திரியாக இருந்த போதிலும் அங்கே இ.என்.டி டிபார்ட்மெண்ட்டும் எக்ஸ்-ரே டிபார்ட்மெண்டும் கொண்ட பெரிய ஆஸ்பத்திரியாக அதை மாற்றிவிடுவதன் மூலம் ஜில்லாவில் இருக்கக்கூடிய ஆஸ்பத்திரிகளுக்கு எல்லாம் அது தலைமை ஆஸ்பத்திரியாகவும் அந்த ஜில்லாவில் இருக்கக்கூடிய எல்லா மக்களும் அதைப் பயன்படுத்திக் கொள்ளக் கூடிய நிலைமையும் ஏற்படுத்த முடியும்.

[திருமதி கே. பி. ஜானகியம்மாள்] [1968 மார்ச் 12

சென்னையில் இருக்கக் கூடிய பெரிய ஆஸ்பத்திரிக்கு அடுத்தாற்போல் மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய மூன்று மாவட்டங்களுக்குமாக சேர்ந்து பெரிய ஆஸ்பத்திரியாக மதுரை ஆஸ்பத்திரி விளங்குகிறது. மதுரை ஜில்லாவில் இருக்கிற மக்கள் 30 லட்சம் பேர்கள் அங்கே வந்து போகக் கூடிய நிலை உள்ளது. அங்கே இப்பொழுதுள்ள டி.பி. வார்டில் வசதிகள் சரியாகச் செய்து கொடுக்க முடிவதில்லை. காரணம் டி.பி. நோயாளிகளுக்கு என்று 20 படுக்கைகள்தான் இருக்கின்றன — நோயாளிகள் நூற்றுக் கணக்காக இருக்கிறார்கள். வெயிட்டிங் லிஸ்டில் மட்டும் 700 பேர்கள் காத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களை ஆஸ்டின் பட்டி டி.பி. சானிடோரியத்திற்கு லிஸ்ட்படி அனுப்புகிறார்கள். அங்கு ஒரு மாதம், இரண்டு மாதங்கள் வைத்து சிகிச்சை கொடுத்து அனுப்பி விடுகிறார்கள். ஆகவே; வெயிட்டிங் லிஸ்டிலுள்ள நோயாளிகள் அனைவருக்கும் இடம் கிடைப்பதற்குள்ளாக அவர்கள் இறந்துபோகக்கூடிய பரிதாபகரமான நிலைமை ஏற்படுகிறது. ஆகவே, மதுரையில் இருக்கக்கூடிய டி.பி. வார்டில் படுக்கைகளை 100, 150, 200 என்ற அளவில் அதிகப்படுத்த ஏற்பாடுகள் செய்ய வேண்டும். அங்கே இரண்டு கட்டிடங்கள் காலியாக இருக்கின்றன, அவற்றையும் இதோடு இணைத்து டி.பி.-க்கு ஆரம்பசிகிச்சைபெறக்கூடியஅளவிலே அதை ஒரு நல்லவகையில் விஸ்தரிக்க வேண்டும். அத்துடன் ஆஸ்டின்பட்டியில் 100 படுக்கைகள் இருக்கின்றன, அதற்குப் பக்கத்திலே மறுநிலை ஆரம்ப சிகிச்சைக்காக கட்டப்பட்ட கட்டிடம் ஒன்று இருக்கிறது. அதில் நோயாளிகள் இல்லை. ஆகவே, அதையும் இந்த டி.பி. சானிடோரியத்தில் சேர்த்து அதையும் விஸ்தரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தொழுநோயை எடுத்துக்கொண்டால், இப்பொழுது அதிகமாகப் பரவிப் போகக்கூடிய நிலைமை. நாம் சென்னையில் எலக்ட்ரிக் டிரெயின் போகக் கூடிய பிளாட்பாரத்தில் பார்த்தால் புரிந்துகொள்ள முடிகிறது. குஷ்ட நோயாளிகள் அதிகமாகப் பெரிய நகரங்களில் பரவியிருக்கிறார்கள், அவர்கள் திருவிழாக் காலங்களில் நகரங்களுக்கு வருவதைப் பார்க்கிறோம். ஆகவே தொழுநோய்த் தடுப்பு நிலையம் ஒன்று ஏற்படுத்தி அவர்களுக்கு ஆரோக்கியமும் சிகிச்சையும் கொடுத்து ஓரளவுக்கு அவர்களுடைய நோயைக் கட்டுப்படுத்தி அவர்கள் சிறிய தொழில்கள் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொடுத்து அவர்களுக்கு நல்ல பாதுகாப்புக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மெண்டல் ஆஸ்பத்திரி சென்னையில் இருக்கிறது. மதுரை நகரில் இல்லை. அங்கே ஒரு மெண்டல் ஆஸ்பத்திரி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, குழந்தைகளுக்காக ஒரு டிபார்ட்மெண்ட் மதுரையில் ஏற்படுத்தப்பட வேண்டும். 'டிப்தீரியா, கக்குவான், வலிப்பு ஆகிய மூன்றும் குழந்தைகளுக்கு வந்தால் அவர்கள் மூன்று தினங்களுக்குள்ளே இறந்து போகக்கூடிய பரிதாபகரமான நிலைமை இருக்கிறது. இதைப்பற்றி மதுரையில் உள்ள டீன் அவர்களே சொல்லியிருக்கிறார்கள்—ஆகையால் மதுரை ஆஸ்பத்திரியிலேயே ஒரு தனி வார்டு ஏற்படுத்தி அதிலே குழந்தைகளுக்குத் தொத்து நோய்கள் வந்தால் அவற்றைப் பார்ப்பதற்கு வசதியாக அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்பொழுது டி. பி. பேஷண்ட்களை வைத்திருக்கின்ற வார்டிற்குப் போகக் கூடிய இடத்திலே இந்த டிப்தீரியாபோன்ற குழந்தைகளை வைத்துப் பார்க்கின்ற அமைப்பை வைத்திருக்கிறார்கள். இது பரிதாபகரமான நிலைமையாக இருக்கிறது. ஆகவே இதற்காக ஒரு தனி வார்டு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

ஆஸ்பத்திரியில் பணியாற்றுகின்ற ஆண்களுக்கும், பெண்களுக்கும், நர்ஸ்களுக்கும், அட்டெண்டர்களுக்கும் மற்ற சிப்பந்திகளுக்கும்—நோயாளிகள் அதிகமாக வருகிற காரணத்தால்—வேலைப்பளு அதிகமாக இருக்கிறது. அதனால் அவர்கள் சரிவர பேஷண்ட்களைக் கவனிக்கமுடியவில்லை. படுக்கைகள் விஸ்தரிக்கப்படுகின்ற நேரத்தில் பணியாட்களையும் விஸ்தரிக்க வேண்டும். ஆசிரியர்கள் எப்படி வேலையில்லாத் திண்டாட்டத்தில் இருக்கிறார்களோ அதைப்போல நர்ஸ்களும் வேலையில்லாத் திண்டாட்டத்தில் இருக்கிறார்கள். சேலத்திலே 400 பயிற்சி பெற்ற நர்ஸ்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். ஜில்லாப் பஞ்சாயத்துகளிலும் கிராமப் பகுதிகளிலும் நர்ஸ்களுக்கு வேலை கொடுத்து நகர ஆஸ்பத்திரியில் படுக்கைகளை அதிகப்படுத்தும் பொழுது நர்ஸ்களுக்கும் வேலை கிடைக்க முடியும். அதற்குத் தகுந்தாற் போல் சிப்பந்திகளையும் அதிகப்படுத்துவதற்கு முயற்சியெடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1968 மார்ச் 12] [திருமதி கே. பி. ஜானகியம்மாள்]

அதே நேரத்தில் அட்டெண்டர்கள், ஆயாக்கள், தோட்டிகள் போன்ற கீழ்த்தர சிப்பந்திகள் நிரந்தரமாக்கப்பட வேண்டும். அவர்களுக்கு வீட்டு வசதியும், சம்பள உயர்வும் கொடுக்கப்பட வேண்டும். மதுரை நகர ஆஸ்பத்திரியில் உள்ள கீழ்த்தர சிப்பந்திகளுக்கு வீட்டு வசதி கிடையாது. கூரை வீடுகளாக இருக்கின்ற அவர்களுடைய வீடுகளுக்கு மின்சார வசதி கிடையாது. டி.பி. பேஷண்டுகளைக் கவனிக்கின்ற அந்தச் சிப்பந்திகளுக்கு அந்த நோய் ஏற்படாமல் தடுப்பதற்குத் தடுப்பு நடவடிக்கையோ, பாதுகாப்பு நடவடிக்கையோ இல்லை. டி.பி. வார்டில் வேலை செய்யக் கூடிய கீழ்த்தர சிப்பந்திகள் இறந்து விட்டால், அவர்களுடைய குடும்பத்தைப் பாதுகாக்க பாதுகாப்பு நிதியும் இல்லை. இதையெல்லாம் கொஞ்சம் கவனித்துச் செய்தால் உபயோகமாக இருக்கும்.

பாளையங்கோட்டையிலே இந்திய வைத்திய முறைக் கல்லூரி இருக்கிறது. அதிலே இங்கிலீஷ் வைத்திய முறையும், சித்த வைத்திய முறையும், மற்றும் சில வைத்திய முறைகளும் கற்றுக் கொடுக்கப்படுவதாக அறிகிறேன். அதிலே, நல்ல முறையில் ஆயுர்வேதம், சித்த வைத்தியம், ஓமியோபதி போன்ற முறைகளில் நல்ல பயிற்சி கொடுத்து அதிலே பயிற்சி பெறக்கூடிய மாணவர்கள் தமிழ்நாட்டு மக்களுக்கு நல்ல முறையில் பயன்படும் வகையில் ஏற்பாடுகளைச் செய்வது பற்றி யோசிக்கவேண்டும்.

பொதுச் சுகாதாரத்தை எடுத்துக்கொண்டால், சமீபத்தில் மழை இல்லாத காரணத்தால் மதுரையில் கூட தண்ணீர் பஞ்சம் வந்து விட்டது. பொதுவாக, மற்றப் பகுதிகளில் தண்ணீர்ப் பஞ்சம் இருக்கும். மதுரையில் அந்த நிலை ஏற்பட்டதில்லை. இன்று மதுரையிலேயே தண்ணீர் பஞ்சம் ஏற்பட்டு விட்டது. கோயம்புத்தூரில் போத்தனூர் போன்ற பகுதிகளில் ஒரு வண்டித் தண்ணீர் ஒரு ரூபாய் என்று கூடக் கொடுத்து வாங்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்த நெருக்கடியான நிலைமையில் கிராமச் சேரிகளில் வாழக் கூடியவர்கள், தாழ்த்தப்பட்ட மக்களாக இருக்கக்கூடியவர்கள் மிகவும் பாதிக்கப்படுவார்கள். ஏற்கெனவே கிராமப் பகுதிகளில் சுகாதாரக் குறைவான நிலைமை இருப்பதால் நரம்புச் சிலந்தி, காலரா, அம்மை போன்ற தொத்து நோய்கள் அதிகமாகப் பரவுகின்றன. இதைத் தடுக்க கிராமப் புறங்களில் இருக்கக்கூடிய தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்பட்ட ஏழை மக்கள் ஆகியோருக்குப் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்க வேண்டியது முக்கியமான கடமையாகும். பஞ்சாயத்து யூனியன்கள் மூலம் ஓரளவு செய்து வருவது உண்மை தான் என்றாலும் இதைத் தீவிரப்படுத்துவது முக்கியமானதாகும்.

குழந்தைகளைப் பொறுத்தவரை அவர்கள் ஹைஸ்கூல்களில் படித்து வரக்கூடிய காலத்திலேயே அவர்களுடைய உடல் நிலையைப் பரிசோதனை செய்து வியாதிகள் தோன்றுவதற்கான அம்சங்கள் உடலில் இருக்குமானால் அதைத் தடுப்பதற்கு தடுப்பு நடவடிக்கையை அப்போதே எடுத்து விட்டால் எதிர்காலத்தில் அவர்கள் திடகாத்திரமானவர்களாக இருப்பதற்கு வழி ஏற்படும். இதை நல்ல முறையில் செயல்படுத்த அதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

பாதாளச் சாக்கடைத் திட்டம் மிகவும் முக்கியமானது. தொத்து நோய்களுக்கும், கொசுத் தொல்லைக்கும் காரணம் பாதாளச் சாக்கடை இல்லாதிருப்பது தான். மதுரை போன்ற நகரங்களில் கூட ஒரு

[திருமதி. கே. பி. ஜானகியம்மாள்] [1968 மார்ச் 12

வார்டில் பத்து தெருக்களில் பாதாளச் சாக்கடை இருக்கும், சமீபத்தில் விஸ்தரிக்கப்பட்ட இரண்டு தெருக்களில் இருக்காது. அதனால் இங்கு தொத்து நோய் பரவுவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது. இதைத் தவிர்க்க அந்த இரண்டு தெருக்களுக்கு மட்டும் பாதாளச் சாக்கடைத் திட்டம் அமைப்பதற்காக நகரவை எஞ்ஜினியர் ஒரு ஸ்கீம் போட்டு அனுப்பினால் தலைமையில் இருக்கக்கூடிய சீஃப் என்சினியர் அனுமதி கொடுப்பதில்லை. மொத்தத்தில் பாதாளச் சாக்கடைத் திட்டம் இல்லை என்ற காரணத்தால் ஒரு பகுதிக்குக் போடப்பட்ட திட்டம் கூட நிறுத்தப்படுகிறது. இதனால் அந்த இரண்டு தெருக்களின் மூலமாக நோய்கள் பரவ வழி ஏற்படுகிறது. உதாரணமாக, மதுரையில், 1-வது வார்டு, 11-வது வார்டு, 24-வது வார்டு ஆகிய பகுதிகளில் விஸ்தரிக்கப்பட்ட தெருக்களுக்கு பாதாளச் சாக்கடைத் திட்டம் நிறுத்தப்பட்ட காரணத்தால் அந்த இடங்களிலிருந்து மற்றப் பகுதிகளுக்குத் தொத்து நோய் பரவுவதற்கு வழி ஏற்படுகிறது. இந்த மாதிரி இடங்களில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்ற நகர சபைக்கு அனுமதி கொடுக்கவேண்டும்.

குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை இஷ்டபூர்வமாகச் செயல்படுத்த வேண்டும். இன்றைக்கு இருக்கக்கூடிய குடும்பக் கட்டுப்பாடு திட்டம், தரகர்களை வைத்து வயோதிகர்களையும், வாலிபர்களையும், விவாகம் ஆகாதவர்களையும் வியாபாரப் பொருள்களாகக் கருதி அந்தத் திட்டத்திற்குள்ளே உட்படுத்தும் முறை சரியல்ல. மக்கள் இஷ்டபூர்வமாகச் செய்ய வேண்டும். பிரசாரத்தின் மூலமாக மக்களுடைய மனத்தில் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தின் நன்மையை உணர்த்த வேண்டும். இந்தக் குறைகளை எல்லாம் பரிசீலித்து நிறைவேற்ற அரசாங்கம் ஓரளவு அதிகக் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு ச. துரைசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களால் தாக்கல் செய்யப்பட்ட மானியக் கோரிக்கைகளை ஆதரித்து என்னுடைய உரையைத் துவக்கலாம் என்று கருதுகிறேன்.

திருப்பூர் நகரத்தைப் பொறுத்தவரை ஏறத்தாழ 120,000 மக்கள் இருக்கிறார்கள். அது அந்த வட்டத்தினுடைய தலைநகரமாக இருந்து கொண்டிருக்கிறது. பல்லடம் வட்டத்தில் ஐந்து லட்சம் ஜனத்தொகை இருக்கிறது. அப்படிப்பட்ட இடத்தில் இருக்கின்ற ஆஸ்பத்திரியில் ஆண்கள் பகுதிக்கு 12 படுக்கைகள், பெண்கள் பகுதிக்கு 12 படுக்கைகள், பேறு காலப் பகுதிக்கு 12 படுக்கைகள், குழந்தைகள் பகுதிக்கு 6 படுக்கைகள் என்று மொத்தம் 42 படுக்கைகளே இருக்கின்ற நிலைமையில் தாலூகா மருத்துவ மனை இருக்கிறது. அந்தப் பகுதியில் ஏறத்தாழ பத்தாயிரம் தொழிலாளர்கள் தொழிலாளர் இன்ஷூரன்ஸ் அமைப்பின் கீழ் இருக்கிறார்கள். பத்தாயிரம் பேருக்கும் 11 படுக்கைகள் அதே ஆஸ்பத்திரியில் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. இவை போதுமானதாக இல்லை. மக்கள் தொகையை அடிப்படையாக வைத்தும், தொழிலாளர்கள் எண்ணிக்கையை அடிப்படையாக வைத்தும் அந்த ஆஸ்பத்திரியை விரிவுபடுத்த வேண்டுமென்று மக்கள் எல்லாம் நீண்டகாலமாகக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் இதை அனுதாபத்தோடு கவனித்து ஆஸ்பத்திரியை விரிவுபடுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அந்த ஆஸ்பத்திரியில் நாள் ஒன்றுக்கு 700 நோயாளிகளுக்கு மேல் வந்து காட்டி விட்டுச் செல்லுகிறார்கள். ஒரு நோயாளிக்கு ஒரு நிமிடம் என்று எடுத்துக் கொண்டாலும் 10 மணி நேரத்திற்கு மேல் ஆகும். அந்த ஆஸ்பத்திரியில் ஒரு ஆண் டாக்டர், ஒரு பெண் டாக்டர், ஆக இரண்டு பேர்தான் இருக்கிறார்கள். அந்த இரண்டு பேர் போதுமானதாக இல்லை. ஆகவே, நம்முடைய அரசாங்கம் டாக்டர்களின் எண்ணிக்கையை மேலும் அதிகரிக்க வேண்டுமென்றும், ஆனரரி டாக்டர்களாக இரண்டு பேரைப் போட்டுக் கொடுத்தால் மக்களின் உடனடித் தேவைகளுக்குப் பரிகாரமாக இருக்கும் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன். கண், காது,



1968 மார்ச் 12] [திரு. ச. துரைசாமி]

மூக்கு, பல் போன்றவற்றுக்கு நோய் ஏற்பட்டால் சிறப்பு டாக்டர் இல்லாததால் அதைக் கவனிக்க கோவை நகரத்திற்குத் தான் போய் வர வேண்டிய நிலைமை இருக்கிறது. அமைச்சர் அவர்கள் அந்தத் தேவைகளை எல்லாம் நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கோவை நகரத்தில் இருக்கின்ற மாவட்டத் தலைமை மருத்துவ மனையில் தண்ணீர்ப் பற்றுக்குறை இருந்து கொண்டிருக்கிறது. ஆயிரம் பேருக்கு மேல் மருத்துவ வசதிபெற வருகிறார்கள். போதுமான அளவுக்கு ஃபிளஷ் அவுட் லெட்ரின் இல்லாதகுறை இருக்கிறது. மாவட்டத் தலைமை மருத்துவ மனையில் கட்டடங்கள் சரியான முறையில் பராமரிக்கப்படாமல் பழுதுபட்டிருக்கின்றன. அதைப் போக்கக்கூடியமுறையில் அந்தக் கட்டடங்களைப் பராமரிக்க அரசாங்கம் அதிகமாக நிதியை ஒதுக்கிக்கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். அந்த ஆஸ்பத்திரியில் ஒரு லே செக்ரடரி இருக்கிறார். மாவட்டம் முழுவதற்குமாக உள்ள தலைமை மருத்துவ மனையைப் பார்க்க வேண்டுமென்றால் முடியாத காரியமாக இருக்கிறது. ஆகவே, அந்த எண்ணிக்கையையும் உயர்த்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோவை நகரத்தில் பப்ளிக் ஹெல்த் லேபரடரி இருக்கிறது. அதற்கான கருவிகள் எல்லாம் தருவிக்கப்பட்டும் அங்குள்ள சில அதிகாரிகளுடைய நிர்வாகத்தின் குறைபாடு காரணமாக, மந்த நிலைமை காரணமாக, செயல்பட முடியாமல் இருக்கிறது. அதைச் செயல்படுத்தவும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும்.

பவானியிலும், உடுமலைப் பேட்டையிலும், பொள்ளாச்சியிலும் மருத்துவ மனைகள் கட்டப்பட வேண்டும். இந்த மூன்று தாலூகாக்களிலும் மருத்துவ மனை இல்லாத குறைபாடு இருக்கிறது. அதைப் போக்கிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோவை மாவட்டத்தில் உள்ள எல்லாப் பஞ்சாயத்து யூனியன்களிலும் ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் ஒரு பிரைமரி ஹெல்த் சென்டர் என்ற அடிப்படையில் பிரைமரி ஹெல்த் சென்டர்கள் ஆரம்பிக்கப்படுவதில் பல இடங்களில் ஆரம்பிக்கப்படாமல் இருக்கிறது. திருப்பூர் பஞ்சாயத்து யூனியனை எடுத்துக் கொண்டால் அங்கே ப்ரைமரி ஹெல்த் சென்டர் இல்லை. அதற்காக பெருமாநல்லூரில் அரசாங்கத்திற்குச் சொந்தமான நிலம், தனிப்பட்டவர்கள் நிலம் எல்லாம் பார்க்கப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதியில் உள்ள மக்கள் மருத்துவ உதவி வேண்டுமென்றால் 13 மைல் திருப்பூர் நகரத்திற்கு வந்தால்தான் பார்க்கக்கூடிய நிலைமைஇருக்கிறது. ஆகவே, பெருமாநல்லூரில் விரைவில் பிரைமரி ஹெல்த் சென்டரை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கோயம்புத்தூர் நகரத்தில் ஏறத்தாழ ஒரு லட்சத்துக்கும் அதிகமான தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். அங்கே இன்ஷூரன்ஸ் அமல்படுத்தப்பட்டு இருக்கிறது. அந்த இன்ஷூரன்ஸ் திட்டம் கோவை நகரத்திலும் அதன் சுற்றுப்புறங்களிலும் இருக்கிற தொழிலாளர்களுக்குமட்டுமே இருக்கிறது. அந்தத் திட்டத்தை மிக விரைவில் அந்தத் தொழிலாளர்களுடைய குடும்பங்களுக்கும் விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல பல்லடம்பகுதிக்கும் இந்த ஈ.எஸ்.ஐ. திட்டத்தை விரிவுபடுத்துவதாகக் குறிப்பிடுகிறார்கள். பல்லடம், சோமனூர் ஆகிய இப்படிப்பட்ட பகுதிகளையும் ஒன்றாகச் சேர்த்து இந்த ஈ.எஸ்.ஐ. திட்டத்தை அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கும் பனியன் தொழிற்சாலையில் வேலை செய்பவர்களுக்கும் காச நோய் மிக அதிகமான அளவுக்கு வருகிறது. அதைப் போக்கும் முறையில் திருப்பூர், கோயம்புத்தூர் ஆகிய இரண்டு இடங்களிலும் ஈ.எஸ்.ஐ. திட்டத்தின் அடிப்படையில், இரண்டு காசநோய் மருத்துவ மனைகளை ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஈ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரிகள் எங்கெங்கே இருந்தாலும்—கோயம்புத்தூரில் இருந்தாலும், சென்னையில் இருந்தாலும் அந்த இடத்தில் இருக்கிற தொழிலாளர்கள் எல்லாம் தங்கள் பங்குத் தொகையைத் தருகிறார்கள். அதே போல் நிர்வாகத்தில் இருப்பவர்களும் பங்குத் தொகையைக் கொடுக்கிறார்கள். இப்படிப்பட்ட இடங்களில் அமையும் டாக்டர்கள் சிறப்புப் பட்டம் பெற்ற டாக்டர்களாக அமையவேண்டும். ஈ.எஸ்.ஐ.ஆஸ்பத்திரிகளில் சிறப்புப் பட்டம் பெற்ற டாக்டர்கள் இல்லையென்ற குறைபாடு இருக்கிறது. அதைப் போக்குவதற்கும் நம்முடைய அமைச்சரவை நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திருப்பூர் பகுதியைச் சுற்றியுள்ள 6, 7 மைல் தொலைவிலிருந்து திருப்பூர் நகரத்திற்குத் தொழிலாளர்கள் வேலைக்கு வருகிறார்கள். அந்தத் தொழிலாளர்களுக்கு நல்ல முறையில் மருத்துவ வசதி அனுமதிப்பதற்கும் வகை செய்யவேண்டும். திருப்பூரைச் சுற்றி 4, 5 மைல்களுக்கு மருத்துவ வசதி வாய்ந்த வான்கள் சென்று மருத்துவ வசதியை விஸ்தரிக்க வேண்டும். அந்த முறையில் ஈ.எஸ்.ஐ. திட்டத்தின் கீழ் திருப்பூர் பகுதிக்கும் ஒரு வைத்தியவசதி வான் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மருத்துவக் கல்லூரியைப் பொறுத்தவரையில் அதிகமான மருத்துவக் கல்லூரிகளை ஆரம்பிக்க வேண்டும் என்று நாம் எல்லோரும் பேசுகிறோம். ஆனால் அதைப் பொறுத்த வரையில் என்னுடைய சொந்த அபிப்பிராயம் என்னவென்றால், அதிகமான மருத்துவக் கல்லூரிகளை ஆரம்பிப்பதைவிட, அதற்காகச் செலவழிக்கக் கூடிய பணத்தைக்கொண்டு இன்னும் கிராமங்களில் மிகப் பெரிய அளவில் ஆஸ்பத்திரிகளைக் கட்டவேண்டும் என்பது தான். சென்ற ஆண்டிலே இதே மன்றத்தில் கவனஈர்ப்புத் தீர்மானம் ஒன்றை நான் கொண்டு வந்தேன். மருத்துவக் கல்லூரியில் படித்துப் பட்டம் பெறுகிற மாணவர்கள் பட்டம் பெற்ற பிறகு சொந்தமாகத் தொழில் செய்வதற்கும் வெளிநாடுகளுக்குச் சென்று மேல் பயிற்சி பெறுவதற்கும் முயற்சி செய்கிறார்கள். அப்படிப் பட்டம் பெறும் மாணவருக்கு அரசாங்கம் ஏறத்தாழ 20 ஆயிரம் 30 ஆயிரம் செலவு செய்கிறது. பெரிய அளவுக்கு அரசாங்கத்துக்குச் செலவு ஏற்படுத்திப் படிக்கும் மாணவர்கள் பட்டம் பெற்ற பிற்பாடு நாட்டுக்கு சேவை செய்யவேண்டும், மற்றவர்களுக்கு எல்லாம் உதவி செய்யவேண்டும் என்ற உணர்வை மறந்துவிட்டு தங்கள் நலன்களையே கருதிக்கொண்டு தாங்கள் பெரிய டாக்டர் ஆகவேண்டும், நிறைய பணம் சம்பாதிக்கவேண்டுமென்ற நோக்கத்தோடு தனிப்பட்ட முறையில் தொழில் நடத்துவதைத் தடுக்கக்கூடிய முறையில் அரசாங்கம் அப்படிப்பட்ட மருத்துவக் கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும்போதே கட்டாயம் ஒரு மூன்று ஆண்டுகாலம் அல்லது ஐந்து ஆண்டு காலம் கிராமங்களிலே போய் சேவை செய்யவேண்டும் என்ற விதிக்குக் கட்டுப்படுகிற மாணவர்களுக்குத் தான் மருத்துவப் படிப்பு சொல்லிக் கொடுக்கப்படும் என்ற ஒரு முறையைக் கொண்டு வருவது வசதியாக இருக்கும்.

ஏற்கனவே டைரக்டர் ஆஃப் மெடிகல் சர்வீஸஸ், டைரக்டர் ஆஃப் பப்ளிக் ஹெல்த் என்ற இரண்டு பிரிவுகள் இருந்தன. அந்த இரண்டையும் இப்போது ஒன்றாகச் சேர்த்து இருக்கிறார்கள். இது தவிர டைரக்டர் ஆஃப் மெடிகல் எஜுகேஷன் என்ற முறையிலே ஒரு பிரிவும் இருக்கிறது. இப்படிப் பிரிவுகள் பரவலாக இருப்பதால் அந்தந்தத் துறைக்குப் பொறுப்பாக இருக்கும் பெரிய அதிகாரிகள் தங்கள் தங்கள் துறை தான் சிறப்பாக பணியாற்ற வேண்டுமென்ற கருத்தில் அரசாங்கத்தில் இருக்கும் பணத்தை அந்தந்தத் துறைக்கு எடுத்துக்கொள்ளத் திட்டமிட நினைக்கிறார்களே தவிர நாட்டுமக்களுடைய பொதுத் தேவை என்ன, நாட்டுமக்களுக்கு எப்படி மருத்துவத் துறையில் உதவ முடியும் என்ற நோக்கத்தை அவர்கள் பார்ப்பதில் இருந்து தவறிவிடுகிறார்கள். இந்த நிலையை மாற்றியமைக்கும் முறையில் இந்த மூன்று துறைகளையும் இரண்டாகச் சேர்த்திருக்கிறார்களென்றாலும் இந்த மூன்று அமைப்புக்கும் ஒரு தொடர்பு ஏற்படுத்தும் முறையில் அரசாங்கம் அதற்கு வேண்டிய காரியங்களில் ஈடுபட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



கோயம்புத்தூர் நகரத்திற்கு சிறுவாணியிலிருந்து குடிதண்ணீர்கொண்டு வருவதற்கான திட்டம் 1931-ம் ஆண்டு தீட்டப்பட்டது. இப்போது 36 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. இருந்தாலும், நம்முடைய அமைச்சரவர்கள் 130 கோடி கன அடி தண்ணீருக்கு ஒரு உடன்பாடு கேரள அரசாங்கத்துடன் ஏற்படுத்தியிருப்பதாக அவர்களுடைய அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். சிறுவாணி குடிதண்ணீர் திட்டத்தை இப்போது ஆரம்பித்தாலும் அது முடிவதற்கு வரஇன்னும் 5 ஆண்டுகாலம் ஆகுமென்று அதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டத்தை இன்னும் விரிவுபடுத்தி கோவை நகரத்திற்கும் அதைச் சுற்றியுள்ள சிங்காநல்லூர், பீளமேடு, போதனூர் போன்று பகுதிகளுக்கும் விரிவுபடுத்தும் முறையில் அரசாங்கம் மிக விரைவில் நடவடிக்கை எடுத்துத் தண்ணீர் திட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திருப்பூர் நகரத்திற்கு ஏறக்குறைய ஒரு கோடி எட்டு லட்சம் ரூபாய்க்கு ஒரு திட்டம் நிறைவேற்றப்பட்டு இருக்கிறது. அரசாங்கம் கொடுக்கும் இந்த ஒரு கோடி எட்டு லட்சம் ரூபாயில் இன்னும் 18 லட்சம் ரூபாய் செலவு செய்யாமல் இருக்கிறது. திருப்பூர் நகரத்தை விரிவுபடுத்தும் முறையில் செலவிடவேண்டும் என்று நகராட்சி மன்றம் தீர்மானம் நிறைவேற்றி மதுரையில் இருக்கும் இந்தத் துறை அதிகாரிக்கு அனுப்பி அவரும் அந்தத் திட்டத்தைத் தொகுத்து சென்னையில் இருக்கும் தலைமை பொறியாளருக்கு அனுப்பி இருப்பதாகத் தெரிகிறது. அதிலே அரசாங்கம் தலையிட்டு விரைவில் ஆவன செய்ய வேண்டும். ஏறக்குறைய 15 லட்சம் ரூபாய் திட்டம் இது. திருப்பூர் நகரம் மிகப் பெரிய தொழில் நகரமாக வளர்ந்து வருகிறது. அரசாங்கம் ஏற்கனவே கொடுத்த பணமும் இருக்கிறது. அதை நிறைவேற்றும் முறையில் திருப்பூர் குடிதண்ணீர் திட்டத்தை மிக விரைவில் நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பவானி குடிதண்ணீர் திட்டத்திற்காக தொட்டி கட்டி முடிக்கப்பட்டு மூன்று ஆண்டுகள் ஆகியும் அந்தத் தொட்டி பழுதுபட்டுக் கொண்டிருக்கிறது. ஆனால் அங்கிருக்கும் வேறு சில் குறைபாடு காரணமாக அந்தக் குடிதண்ணீர் திட்டம் இன்னும் நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. மிக விரைவில் அந்த பவானி குடிதண்ணீர்த் திட்டத்தை அமல்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நகர அமைப்புத் திட்டம் என்ற முறையில் டவுன் ப்ளானிங் ஸ்கீம் என்ற அமைப்பு இருக்கிறது. அந்த அமைப்பு என்னதான் வேலை செய்கிறது என்று தெரியாமல் இருக்கிறது. திருப்பூர் நகரத்திற்கு 1946-ம் ஆண்டு ஸ்கீம் 3 என்ற அடிப்படையில் ஒரு திட்டத்தை அங்கீகரித்திருக்கிறார்கள். இப்போது 1968-ம் ஆண்டு வந்துவிட்டது. இவ்வளவு காலமாகியும் கூட 1946-ம் ஆண்டு அங்கீகரிக்கப்பட்ட திட்டத்தை முறையாக அந்த அமைப்பால் அமல்படுத்த முடியவில்லை. இவ்வளவு பெரிய தாமதம் முறையானதாகத் தெரியவில்லை.

திருப்பூர் நகரத்தில் இருக்கும் ஒரு வீதி அடைக்கப்பட்டிருக்கிறது. அதுபற்றி ஏற்கனவே இந்த மன்றத்தில் நான் தெரிவித்து இருக்கிறேன். ஊரிலே செல்வாக்கு உள்ளவர்கள், நகர மன்றப் பொறுப்புள்ளவர்கள், ஏற்கனவே இந்த அமைச்சரவையில் இருந்தவர்களுக்குக் கூட உறவினர்கள், தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்தி நகர அமைப்புத் திட்டத்தின்படி பாதை விடவேண்டிய பகுதியை அடைத்து வைத்திருக்கிறார்கள். அந்தப் பாதை நீண்டகாலமாக இருந்துகொண்டு வருகிறது. 1956-ம் ஆண்டிலேயே அந்தத் திட்டத்தை அங்கீகரித்திருப்பதாகத் தெரிய வருகிறது. ஆனால் இன்று வரையில் அந்தப் பாதை அடைக்கப்பட்டிருக்கிறது. இன்னும் அந்தப் பாதை சரிசெய்யப்படவில்லை. அதற்காக அமைச்சரவை நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கனம் அமைச்சரவர்களுக்கும் சம்பந்தபட்ட அதிகாரிகளுக்கும் கடிதம் எழுதியிருக்கிறேன். உபயோகப்படக்கூடிய, பயன்படக்கூடிய பாதை அடைத்து வைக்கப்பட்டிருக்கிறது. திருப்பூர் நகரத்

தில் 50, 60 பேர்கள் லே-அவுட் சாங்ஷன் இல்லாமல் நிலங்கள் விற்று இருக்கிறார்கள். வாங்கிவிட்ட பொதுமக்கள் பெரிய அளவுக்குப் பாதிக்கப்படுகிறார்கள். இதனால் அங்கிருக்கும் பொதுமக்கள் மிகுந்த இடையூறுக்கு ஆளாகி இருக்கிறார்கள். அதைப் போக்கும் முறையில் நகர் அமைப்புத் திட்டத்தில் இருக்கும் அதிகாரிகளை ஊக்குவித்து அவர்களுக்கு இருக்கும் குறைபாடுகளைக் கூடிய விரைவில் போக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை நகரத்தில் இருக்கும் தலைமை மருத்துவ மனையில் இருக்கும் டாக்டர்கள் நீண்ட காலமாகச் சென்னையிலேயே இருந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களைக் கிராமப்புறங்களுக்கு மாற்றினால் அவர்கள் அங்கே போவதற்கு விரும்புவது இல்லை. சென்னையில்தான் இருக்க வேண்டும், அங்குள்ள வசதிகளை அனுபவிக்க வேண்டும், தொழிலை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்று விரும்புகிறார்களே தவிர, கிராமங்களுக்குப் போக வேண்டும், அங்குள்ளவர்களுக்குப் பணிபுரியவேண்டும் என்ற நல்ல மனப்பான்மை டாக்டர்கள் மத்தியில் இல்லாமல் இருக்கிறது. ஆகவே, சென்னையில் இருக்கும் தலைமை மருத்துவ மனைகளில் மூன்று ஆண்டு காலத்திற்கு அதிகமாக சர்வீஸ் உள்ளவர்களை அவர் யாராக இருந்தாலும்—கண்டிப்பாக உடனடியாக வேறு இடங்களுக்கு மாற்ற வேண்டும். இதிலே எந்தவிதமான சலுகை இருக்கக்கூடிய நிலைமையும் இருக்கக் கூடாது. என்னுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையில் பெருந்துறையில் ஒரு டி. பி. சானடோரியம் இருக்கிறது. அது தனிப்பட்டவர்களால் நடத்தப்படுகிறது. அதனால் அங்கே பொதுமக்களுடைய குறைகள் கவனிக்கப்படுவது இல்லை. அரசாங்கம் மானியத்தொகை கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், இவர்களை அங்கத்தினர்களாகக் கொண்ட ஒரு கமிட்டியைப் போட்டு குறைப்பாடுகளை எடுத்துச் சொல்ல வாய்ப்பை ஏற்படுத்த வேண்டும். அரசாங்கம் மானியம் கொடுக்கக்கூடிய இப்படிப்பட்ட ஒரு அமைப்பில் இந்தக் குறைப்பாடு இருக்கிறது. அதையும் போக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது சென்னையில் இருக்கும் சுகாதார ஆய்வாளர்களுக்கு ஏற்கனவே 60 ரூபாயில் இருந்து 100 ரூபாய் வரை சம்பளம் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். 100 ரூபாய் அடிப்படைச் சம்பளம் போதுமானதாக இல்லை. அதை உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்று பத்தாயிரம் பேர்கள் இருக்கும் ஒரு பகுதிக்கு ஒரு மகப்பேறு இல்லம் என்ற நிலை இருக்கிறது. அதை 5 ஆயிரம் பேர்கள் இருக்கும் பகுதிக்கு ஒன்று என்று மாற்றி அமைக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு வை. சுவாமிநாதன்:** தலைவர் அவர்களே, எங்கள் கட்சி சார்பாகக் கொண்டு வரப்பட்டிருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரித்து சிலவார்த்தைகள் கூற விரும்புகிறேன். மதிப்பிற்குரிய நண்பர் மணி அவர்கள் சொன்னதுபோல் திருச்சியில் அவசியம் ஒரு மருத்துவக் கல்லூரியை ஏற்படுத்த வேண்டும். அங்கு கிட்டத்தட்ட 33 லட்சம் ரூபாய் வரையில் வசூலிக்கப்பட்டிருக்கிறது. திருச்சியில் ஒரு மருத்துவக் கல்லூரி வரும் என்ற நம்பிக்கை திருச்சியில் உள்ள மக்களிடம் பரவலாக இருந்து வருகிறது. ஆகவே இதற்குச் சாதகமான பதிலை அமைச்சர் அவர்கள் அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எங்கள் பகுதியில் உள்ள உய்யக்கொண்டான் ஆற்றில் அங்குள்ள கெமிகல் பாக்டரியிலுள்ள கழிவுத் தண்ணீரை விடுகிறார்கள். அதனால் தொத்து வியாதிகள் பரவி வருகின்றன. அதைத் தடுக்க அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அம்பிகாபுரம் அருகில் ஒரு கம்போஸ்ட் பிட்டை திருச்சி முனிசிபாலிடி போட்டு வருகிறார்கள். அந்த இடம் முன்பு காடாக இருந்தது. அப்போது பரவாயில்லை. ஆனால் இப்போது அங்கு பல தொழிற்சாலைகள் ஏற்பட்டிருப்பதால், அங்கு மக்கள் நிறையக் குடியேறிஇருப்பதால், இதன் காரணமாக



(கம்போஸ்ட் பிட்) தொத்து வியாதிகள் பரவி விடுகின்றன. ஆகவே அந்தப் பிட்டை ஐந்து மைல்கள் தூரத்திற்கப்பால் போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது கிராமங்களை எடுத்துக் கொண்டால் அங்குள்ள ஆஸ்பத்திரிகளில் டாக்டர்கள் இல்லை. காரணம் அவர்களுக்கு 100 ரூபாய்தான் கொடுக்கிறார்கள். அதை வைத்துக்கொண்டு கிராம மருத்துவமனைகளுக்குச் சென்று எப்படி வேலை பார்க்க முடியும்? பஸ் சார்ஜுக்குக் கூட அது போதவில்லை என்ற நிலைமை இருக்கிறது. ஆகவே கிராமங்களுக்குச் செல்லும் டாக்டர்களுக்குத் தொகையை அதிகரித்துக்கொடுத்தால் நலமாக இருக்கும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். 1965-க்கு முன்பு பாதுகாப்பு வேலைகளுக்காக என்று இங்கிருந்து சென்ற டாக்டர்கள் குடும்பங்களுக்கு 250 ரூபாய் தமிழக அரசாங்கத்தால் கொடுக்கப்பட்டு வருகிறது. 65-க்கு பிறகு போன டாக்டர்களுக்கு அது கொடுக்கப்படுவது இல்லை. ஆகவே அவர்களை நாம் திரும்ப எடுத்துக்கொண்டால் இந்த 250 ரூபாய் மிச்சமாகும். அதனால் அரசாங்கத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு இரண்டுலட்சம் ரூபாய்க்கு மேல் மீதம் ஆகும். 65-க்கு பிறகு சென்ற டாக்டர்களை நீங்கள் திரும்ப எடுத்துக்கொண்டால் அவர்களும் உங்களைப் பாராட்டுவார்கள். ஆகவே இதையும் கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்சாயத்து யூனியன்களில் அதிகப்படியான ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும். தேசீய நெருக்கடி காரணமாக நிறுத்தப்பட்டிருக்கிற ஆரம்ப சுகாதார நிலையங்களை மீண்டும் துவக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். பட்டம் பெற்று வருகிற டாக்டர்களை அவர்கள் கிராமங்களுக்குச் சென்று இரண்டு ஆண்டுகள் வேலை செய்ய வேண்டுமென்று கட்டாயமாக வைத்தால் கிராமங்களுக்குச் சென்று அவர்கள் வேலை செய்வதற்கு வாய்ப்பாக இருக்கும். எங்கள் பகுதியில் உள்ள காந்தி ஞாபகார்த்த ஆஸ்பத்திரியில் இடவசதியே இல்லை. அங்கு படுக்கை வசதிகளை அதிகமாகச் செய்து கொடுக்க வேண்டும். கிராமங்களில் உள்ள மருத்துவ மனைகளில் மருந்துகளே இருப்பதில்லை. மருந்துகள் வாங்குவதற்கு அங்கீகாரம் வாங்க வேண்டியிருப்பதால் காலதாமதமாகிறது. ஆகவே மருந்துகளை ஸ்டாக்கில் வைத்துக்கொள்ள ஏற்பாடு செய்யவேண்டும். ஆயிரம் ரூபாய்க்குள்ள மருந்தையாவது மாதாமாதம் வைத்துக்கொள்ள வேண்டுமென்று ஏற்பாடு செய்தால் மக்கள் சென்று மருத்துவ வசதி பெற அனுகூலமாயிருக்கும். எப்போதும் மருந்துகள் தயாராக இருந்தால் தான் மக்கள் வைத்திய வசதி செய்து கொள்ள அங்கு போவார்கள்.

அடுத்தபடியாக, பஞ்சாயத்து யூனியன்களில் ஹெல்த் இன்ஸ்பெக்டர்கள் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் கமிஷனரின் மேற்பார்வையில் இல்லாமல் டிஸ்டிரிக்ட் ஹெல்த் ஆபீசர் சொல்வதைத்தான் கேட்கிறார்கள். ஆகவே அவர்கள் கமிஷனரின் கண்ட்ரோலில் இருக்கும்படிச் செய்ய வேண்டும். இப்போது பல கிராமங்களில் குடி தண்ணீர் வசதி இல்லை. கிராமங்களில் ஓவர் ஹெட் டாங்குகளைக் கட்டிவிடுகிறார்கள். ஆனால் சாக்கடை வசதியில்லாததினால் அங்குள்ள சுகாதாரம் கெட்டு விடுகிறது. ஆகவே மேல்மட்ட நீர்த்தேக்கத் தொட்டி கட்டும்போதே சாக்கடை வசதியையும் சேர்த்துச் செய்வது நல்லது.

மதிப்பிற்குரிய திரு. மணி அவர்கள் சொன்னதுபோல் ஸ்மால் ஆர்ம்ஸ் பாக்டரிக்கு காவேரியில் இருந்து தண்ணீர் வருகிறது. அதில் ஒரு பகுதித் தண்ணீரை நடுவில் உள்ள கிராமங்களுக்கும் கொடுத்தால் நலமாக இருக்கும். இப்போது தாய் சேய் நல விடுதிகள் 10,000 பேர்களுக்கு ஒரு விடுதி என்ற அளவில் கட்டி வருவது போதாது. ஆகவே 5,000 பேர்கள் உள்ள இடத்திற்கு ஒரு தாய் சேய் நல விடுதி என்ற முறையில் அமைப்பதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எங்கள் பகுதியில் ரூரல் டிஸ்பன்ஸரி வேண்டுமென்று கோரிக்கை அனுப்பி

யிருக்கிறோம். அதையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த வாய்ப்பளித்தமைக்கு என் நன்றியைக் கூறி முடித்துக் கொள்கிறேன்.

**திரு. செஞ்சி வெ. முனுசாமி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கும் இந்த மான்யக் கோரிக்கைகளை ஆதரித்து நான் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம், சுத்தம் சோறு போடும் என்ற பழமொழிக்குச் சொந்தமான நாம் இந்த மூன்று தலைப்பின் கீழ் ரூ. 18,72,91,200 வழங்குமாறு கேட்டிருக்கிறோம். இந்நிலையில் மாற்றுக் கட்சித் தோழர்கள், வெட்டுப் பிரேரணைகள் கொண்டு வந்திருப்பவர்கள் இந்தத் தொகையை வெட்ட வேண்டுமென்று கோர மாட்டார்கள் என்று கருதுகிறேன். கூட்ட வேண்டுமென்றுதான் கோருவார்கள் என்று நினைக்கிறேன். நாம் இந்தச் சுகாதாரத்துறையை வெகுவாகப் பாராட்டக்கடமைப் பட்டிருக்கிறோம். வேறுஎதற்காகப் பாராட்டாவிட்டாலும் இதற்காக நிச்சயம் பாராட்ட வேண்டும். இருபது இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னால் பெரியம்மை, காலரா போன்ற வியாதிகள் பரவலாக இருந்து வந்ததையும், அதைக் கண்டு வெள்ளைக்காரர்களே பயப்பட்டதையும் நாம் அறிவோம். அவை இன்றையதினம் பெருவாரியாகக் குறைந்திருக்கிறது. அதை யாவரும் ஒத்துக்கொள்கிறோம். அதே நேரத்தில் பணக்காரர்கள் வியாதிகளான டயபெட்டிஸ், கான்ஸர், ப்ளட் ப்ரஷர் போன்ற வியாதிகள் இன்றையதினம் அதிகரித்துக்கொண்டு வருகின்றன. பணக்காரர்களுக்குத் தான் அந்த வியாதிகள் வருகிறதா என்றால் இல்லை, ஏழைகள், இளம் சிறார்கள் இவர்களுக்கும் இந்த வியாதிகள் வருகின்றன. ஆகவே அவ்வியாதிகள் வருவதைத் தடுக்க வேண்டும். நகரப் புறங்களில் உள்ளவர்களுக்குத்தான் நோய்கள் வருகின்றன என்ற எண்ணத்தில் இதுவரையில் செலவினங்கள் செய்யப்பட்டு வந்திருக்கின்றன. கிராமங்களில் உள்ளவர்களுக்கு நோய்கள் வராதா என்றால் வரும், வந்து கொண்டிருக்கின்றன. இதை உணர்ந்து செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைய நிலையில், நகரப்பறங்களில்தான் அதிகப்படியான மருத்துவமனைகள் இருந்து வருவதும், மருத்துவ வசதிகள் இருந்து வரும் நிலையும் இருக்கிறது. கிராமப்புறங்கள் மருத்துவ வசதியற்ற நிலையில் அங்குள்ள ஏழை எளிய விவசாயிகள் பாதிக்கப்பட்டு வருகிறார்கள் என்பதைக் காண்கிறோம். கிராமங்களின் நிலை எப்படி யிருக்கிறதென்றால் பிள்ளைப்பேறு பெறவேண்டுமென்றால் பல மைல்கள் கட்டை வண்டியில் செல்ல வேண்டிய நிலைதான் இருக்கிறது. அருகில் வட்டத் தலைநகரில் ஒழுங்கான ஆஸ்பத்திரிகள் இருக்கின்றனவா என்று பார்த்தால் அதைப்பற்றிச் சொல்வதற்கு வேதனைப்படுகிறேன். சுகாதாரத் துறையிலாவது சுத்தம் இருக்க வேண்டும். ஆனால் இன்று ஆஸ்பத்திரிக்குச் சென்று பார்த்தால் அங்கு படுக்கைகள் இருப்பதே அரிது. அப்படி இருந்தாலும், அழுக்கேறிய படுக்கைகள், அழுக்கேறிய உரைகள் இவைகளைத்தான் பார்க்க முடிகிறது. என் தொகுதியில் உள்ள செஞ்சி, திண்டிவனம் இந்த இரண்டு தலைநகரங்களிலும் உள்ள மருத்துவ மனைகள் வேதனைக்குரியனவாக இருப்பதை இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். மதிப்பிற்குரிய பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் கார் விபத்துக்கு ஆளானபோது திண்டிவனம் மருத்துவ மனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அங்கு படுக்கை வசதி கூட இல்லாமல் தனியாரிடம் சென்று, தலையணை, மின்விசிறி இவைகளைக் கேட்டு வாங்கி வர வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அங்கு படுக்கை இல்லை, தலையணை இல்லை, உரையில்லை, மருந்தில்லை என்ற நிலை வேதனைக்குரியதாகும். ஆகவே தனிப்பட்ட முறையில் கடைக்குச் சென்று மருந்து வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அமைச்சர் அவர்களுக்கே இந்த நிலை என்றால் கிராம மக்களின் நிலை என்னவாக இருக்கும் என்று ஆலோசனை செய்து பார்க்கவேண்டும். ஆகவே இந்நிலை தடுக்கப்பட வேண்டும். எங்கள் பகுதியில் இருப்பவர்கள் ஆஸ்பத்திரிக்குச் செல்லும்போது, வேலூர் ஆஸ்பத்திரிக்குச் செல்கிறேன், பாண்டி ஆஸ்பத்திரிக்குச் செல்கிறேன் என்பார்கள். வேலூர் ஆஸ்பத்திரிக்குச் செல்கிறேன் என்றால் அரசாங்க ஆஸ்பத்திரிக்குச் செல்கிறார்களா என்றால் இல்லை,





அங்குள்ள மிஷன் ஆஸ்பத்திரிக்குச் செல்கிறேன் என்பார்கள். அந்த அளவிற்கு அரசாங்க ஆஸ்பத்திரிகளின் பேரில் பொது மக்களுக்கு அவநம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. அதை நாம் போக்கியாக வேண்டும். அப்படிப் போகின்ற மக்கள் செஞ்சி, திண்டிவனம், வேலூர் ஆகிய இடங்களிலுள்ள அரசாங்கத் தலைமை ஆஸ்பத்திரிகளுக்குச் சென்றால்கூட நாம் பாராட்டலாம். ஆனால் அவர்கள் அமெரிக்கன் ஆஸ்பத்திரிக்குத்தான் செல்வோம் என்று சொல்லும்படியான நிலைமையைப் பார்க்கிறோம். அந்த நிலையை நாம் போக்கியாக வேண்டும். இன்றையத்தினம் சுகாதாரத்தின் மூலம் நல்ல திடகாத்திரதுடன் இருக்கலாம் என்ற நம்பிக்கை இருக்கிறது. இப்படிப்பட்ட நேரத்தில் ஆஸ்பத்திரிகளில் பணியாற்றுகின்ற சில மருத்துவர்களைப்பற்றி மிக்க வேதனையோடு சொல்லிக்கொள்ள வேண்டியதாக இருக்கிறது. அந்த மருத்துவர்களுக்கு நோயாளிகளிடம் கருணையும், கனிவும், பரிவும் இருக்க வேண்டும். உண்மையிலே அவ்வாறு இருக்கிறதா ? பிள்ளைப் பேற்றிற்காக மருத்துவ மனைகளுக்குச் சென்றால் அங்குள்ள லேடி டாக்டர்களே கிண்டல் செய்கிறார்கள். வருகிறவர்களிடம் "இதைவிட வேறு வேலை இல்லையா" என்று கேட்கிறார்கள் என்பதை மிக்க வேதனையுடன் சொல்லிக்கொள்ளுகின்றேன். அந்த நேரத்தில் வருகின்ற நோயாளிகளிடம் பணிவு கூடக் காட்ட வேண்டாம், பரிவாவது காட்டக் கூடாதா ? அவர்களுக்கு நல்ல வார்த்தைகளைச் சொல்லக் கூடாதா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

கிராமப்புறங்களுக்கு டாக்டர்கள் செல்வதில்லை என்ற குறை இருக்கிறது. அவர்களுக்கு வேலையில்லாமல் போய்விட்டால் வீட்டில் "பிரைவேட் டிஸ்பென்சரி" வைத்துக் கொள்ளலாம் என்ற நம்பிக்கை இருக்கிறது. அதை வைத்துத்தான் இப்படி நடக்கிறார்கள். நான் ஒன்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். இன்று படித்தவர்கள் குறைந்தது 10 ஆண்டு காலமாவது அரசாங்கத்திலேயே வேலை செய்து விட்டு பிறகு பிரைவேட் டிஸ்பென்சரி வைக்கவேண்டும், அவ்வாறு ப்ரைவேட் டிஸ்பென்சரி வைப்பதற்கும் அரசாங்கத்திடம் அனுமதி பெற்றாக வேண்டும் என்ற நிலையை வைத்தால்தான் வைத்தியங்கள் நல்ல முறையில் இருக்கும் என்று சொல்லிக்கொள்ளுகிறேன்.

அடுத்து, குடிதண்ணீர்ப் பிரச்சினையை எடுத்துக் கொண்டால் கார்ப்போரேஷன், மற்ற முனிசிபாலிட்டிகளில் இதைத் தீர்க்க வேண்டுமென்று சொல்லுகிறோம். இன்னும் கிராமங்களில் புல்லி என்கிற ராட்டினம் போட்டு இழுக்கும் நிலையும் தாம்புக் கயிற்றைப்போட்டுச் சேந்தும் நிலையும் இருக்கிறது. பஞ்சாயத்தில் "ஓவர் ஹெட் டாங்க்" கட்டுவது என்றால் 15,000 ரூபாய்க்குக் குறைந்து எஸ்டிமேட் போட முடியவில்லை. இப்படிப்பட்ட நேரத்தில் அலுமினியம் டேங் ஒன்றை 5,000 ரூபாய்க்குள் முடிக்க முடியுமென்றும், 'கெமிக்கல் அனலிசஸ்" மூலம் முடியுமென்றும் பல பொருட்காட்சிகளில் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அப்படிக் குறைந்த செலவிலேயாவது கொஞ்ச காலத்திற்காக 5,000 ரூபாய்க்குத் திட்டங்களைப் போட்டு அந்த டாங்குகளைப் பொறுத்தி கிராம மக்களுக்கு வசதி செய்தால், அங்கு தாம்புக் கயிற்றாலும், புல்லி ராட்டினத்தாலும் தண்ணீர் மொள்ளக் கூடிய மக்கள் உண்மையிலேயே பாராட்டுவார்கள் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கிராமப்புறங்களில் பஞ்சாயத்துக்களில் "ஓவர்" ஹெட் டாங்க் திட்டம் போட வேண்டுமென்றால் "கிங் இன்ஸ்டிட்யூட்டி" ற்கு அந்தத் தண்ணீரை பரிசோதனைக்கு அனுப்ப வேண்டும். அங்கு அந்தத் தண்ணீர்" திருப்தியாக இல்லை என்று சொல்லி திருப்பப்படுகிறது. விஞ்ஞானத்தின் வளர்ச்சியிலே கெட்ட தண்ணீராக இருந்தாலும் அதை நல்ல தண்ணீராக மாற்ற "கெமிகல்ஸ்" இருந்து கொண்டிருக்கின்றன. எனவே தண்ணீர் திருப்தியாக இல்லையென்றாலும் "கெமிக்கல்ஸ்" மூலம் நல்ல தண்ணீராக மாற்றுவதற்கும், அத்தாட்சிகளை சரளமாக வழங்குவதற்கும் "கிங் இன்ஸ்டிட்யூட்டிற்கு" த் தெரிவிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இப்பொழுது எங்கு பார்த்தாலும் கொசுத் தொல்லைகள் பரவிக்கொண்டிருக்கின்றன. ஈ ஒழிப்பு வாரம், கொசு ஒழிப்பு வாரம் என்று கொண்டாடப்படுகிறது. அவ்வாறு செய்தும் கொசு ஒழிந்ததா என்றால் இல்லை. எங்கு பாத்தாலும் கொசுக்கள் பெருகிக் கொண்டேயிருக்கின்றன. ஒழிப்பு வாரம், ஒழிப்பு வாரம் என்று சொல்லிக்கொண்டு, "உற்பத்தி வாரங்கள்" தான் கொண்டாடப்பட்டதா என்ற ஐயப்பாடு ஏற்படுகிறது. கொசுக்களினால் பல நோய்கள் பரவிக் கொண்டிருக்கின்றன. அவைகளைத் தடுக்க வேண்டுமென்றால் கொசுக்களை எப்படியாவது ஒழித்தேயாக வேண்டும். கொசுக்களினால் யானைக்கால் வியாதி, மலேரியா போன்ற இன்னும் பல நோய்கள் வருகின்றன. எனவே அதைப் போக்குகின்ற வகையில் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று மிக்க பணிவன்போடு கேட்டுக்கொள்ளுகின்றேன்.

செஞ்சியைப் பொறுத்த வரையில் ஒரிரு வார்த்தைகள் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். செஞ்சி இன்று சீர்கேடான நிலையிலிருக்கிறது. அங்கு மருத்துவமனைக்கு வந்தால நோயாளிகள் க்யூவில் நின்று கொண்டிருக்கவேண்டும். அங்கு ஆண் டாக்டரும், பெண் டாக்டரும் ஒரே யிடத்தில் உட்கார்ந்து கொள்கிறார்கள். பெண்களுக்கு என்று ஒரு டாக்டர், ஆண்களுக்கு என்று ஒரு டாக்டர் என்ற நோக்கத்தில்தான் அது இருக்கும் என்று கருதுகிறேன். அங்கு வருகின்ற பெண்கள் தங்கள் நோய்களைப் பற்றி ஆண்கள் மத்தியில் சொல்ல வெட்கப்படலாம். எனவே ஆண்களுக்கு என்று தனியாக ஆண் டாக்டர் ஒரு இடத்திலும், பெண்களுக்கு ஒரு டாக்டர் தனியாக ஒரு இடத்திலும் இருந்தால் அவர்களுடைய வியாதிகளை வாய்விட்டு, கூச்சமில்லாமல் சொல்ல முடியும். ஆகவே அப்படிப்பட்ட நிலைமையை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன். இந்த அமைச்சரவை அதை நிச்சயமாகக் கவனிக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. கிராமங்களைத் தன் கண்களாகப் பாவித்து நகரத்திலுள்ளது போலவே கிராமங்களுக்கும் வைத்திய வசதியை அபிவிருத்தி செய்தால் விவசாயிகள் நல்ல திடகாத்திரத்தோடு இருப்பதற்கு உதவும், அவர்கள் வியாதியற்றவர்களாக இருப்பதற்கும் உதவும் என்று கூறிக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்ளுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து திரு. சுப்பையா முதலியார் அவர்கள் என்னுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி 7 நிமிடங்கள் பேசுவார்கள்.

***திரு ஏ. ஆர். சுப்பையா முதலியார் :** பொதுச் சுகாதாரம், மருத்துவம் மானியத்தின்மீது சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். இப்பொழுது நமக்கு ரொம்ப முக்கியமாக உள்ளது செலக்ஷன் கமிட்டி சம்பந்தமானது. உயர்நீதி மன்றத்தில் தீர்ப்புக் கொடுக்கப்பட்டது. அதை அனுசரித்து உயர்நீதி மன்றத் தீர்ப்புக்கு விரோதமில்லாதபடி சட்ட நிபுணர்களைக் கொண்டு ஒரு குழு அமைத்துப் பரிகாரம் காண்பது தேவை என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன், காரணம் பின்தங்கிய பகுதிகளுக்கு சாதகம் ஏற்படக்கூடிய நிலைமைவேண்டும். அந்தத் தீர்ப்புப்படி பார்த்தால் நகரத்திலிருப்பவர்களுக்குச் சலுகை அதிகம் போகக்கூடிய நிலை ஏற்படும். பிற்பகுதியில் உள்ளவர்கள் மிகவும் கஷ்டத்திற்குள்ளாகிறார்கள் என்று சொல்லிக்கொண்டு உடனடியாக அடுத்த குழு நியமிக்கும் முன் எப்படி சீர்திருத்தம் செய்யலாம் என்று பார்க்க வேண்டுமென்பதை முக்கியமாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தது, குடிதண்ணீர் பற்றி சில வார்த்தைகள் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கடையநல்லூர் குடி தண்ணீர் பற்றி 1967-ல் ஜீ.ஓ. போடப்பட்டிருக்கிறது. அதில் சொல்லப்பட்டிருக்கிறது :

'An estimated cost of Rs. 30 lakhs and Rs. 02,300 per annum to maintain.'



'The Chief Engineer......is informed that only a token start for the execution of the scheme should be made during 1966–67 and that substantial expenditure on the scheme should be incurred only during 1967–68. The extent to which funds could be made available for the scheme will be determined in June, 1967, when the regular plan for 1967–68 is expected to be finalised.' இது மிகவும் வருந்தக்கூடிய காரியம், வெட்கப்படக்கூடிய காரியம் என்று சொல்லிக்கொள்கிறேன். தேர்தலுக்கு 10 நாட்களுக்கு முன்பு ஜீ.ஓ.போடப்பட்டது. 1967-ல் ஜனவரி 21-ம் தேதி போடப்பட்டது. ஜீ.ஓ. போடப்படுவதற்கு முன் "கல் நாட்டு" விழா நடத்தப்பட்டது. ஜனவரி மாதம் ஜீ.ஓ. ஜனவரி மாதத்திற்கு முன்பே கல்நாட்டு விழாவும் நடத்தப்பட்டது. குழாய்களை கொண்டுபோய் போடப்பட்டு இரண்டு வருஷங்கள் ஆகின்றன. 1967 தேர்தலுக்கு முன் குழாய்களை வரிசையாக்கக் கொண்டுபோய் போட்டார்கள். 1967 முடிந்து 1968 வந்திருக்கிறது. இந்தப் புத்தகத்தைப் புரட்டிப் புரட்டிப் பார்த்தேன். அனெக்சர் 6-இல். 'Materials are being conveyed" என்று போடப்பட்டிருக்கிறது. அனெக்ஷர் 10-ஐ எடுத்துப்பார்த்தால் தற்போது செயலிலுள்ள நகரங்கள் என்றிருப்பதில், "கடைய நல்லூர்" காணவில்லை. எதற்குச் சொல்லுகிறேன் என்றால் மக்களை நம்ப வைக்க வேண்டும். "செக்ரடரி டு கவர்ன்மேண்ட்" கையெழுத்து போட்டிருக்கிறார்கள். இரண்டு வருஷங்களாக ஒன்றும் நடக்கவில்லை. மக்கள் என்ன நினைப்பார்கள் ? கொண்டுவந்த குழாய்களும் ஒவ்வொன்றாய்ப் போய்க் கொண்டிருக்கின்றன. பணமே இல்லாவிட்டால் எப்படி இந்த குழாய்கள் வந்தன ? இந்த ஜீ. ஓ. எதற்குப் போட்டார்கள். ஜீ. ஓ. வை ஏன் அமுல் நடத்தவில்லை? இதை நினைக்கும்பொழுது வருத்தமாக இருக்கிறது.

In G.O. Ms. No. 2888, Public Works Department, dated 9th December 1966, it is stated :

"The Government approve the proposal of the Director of Medical Services in paragraph I above for the construction of additional buildings in the Government HospitaldKadayana lur, Tirunelveli district. for Rs. 5 lakhs. They also irect that no expenditure should be incurred during 1966–67 "

இந்த மாதிரி ஒரு ஜீ. ஓ. போட்டால் யாரிடம் ஐயா போய் சொல்வது

'They also direct that no expenditure should be incurred during 1966–67'.

It is more or less an election propaganda G.O.

இந்த மாதிரி நடந்து விட்டது. அவர்கள் டெண்டர் கால் ஃபார் பண்ணினார்கள். டெண்டர் கால் ஃபார் பண்ணுவதற்கு ரூ. 1,500 நன் செலவு என்று நினைக்கிறேன். டெண்டர் கொடுக்கப்பட்டது. டெண்டர் 12- டெபாஸிட்ஸும் செய்யப்பட்டிருக்கின்றன. இப்போழுது டெபாசிட் செய்யப்பட்ட தொகை, வாபஸ் செய்ப்படுவதாகக் கேள்விப்படுகின்றேன்.

(திரு. வை. சுவாமிநாதன் தலைமை).

கடையநல்லூருக்கு 32 படுக்கை உள்ள விடுதியைக் கொண்டுவர திட்டம் போட்டார்கள். மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்கள் கூட பார்த்திருக்கிறார்கள்—ஏழை மக்கள் பெருத்த இடம் என்னுடைய தொகுதி. இன்று கிட்டதட்ட 40,000 ஜனங்கள் உள்ள இடம். பெரும்பலானவர்கள் ஏழைகள். அதற்காகத்தான் இந்த திட்டம். ரூ. 5,00,000 ஒதுக்கப்பட்டது. ஆஸ்பத்திரி காம்பவுண்டில் நல்ல மரங்கள் எல்லாம் வெட்டப்பட்டன. நான்கூட திட்டம் வரும் என்று நினைத்தேன். எல்லோரும் எதிர் பார்த்தோம். நான் நம்முடைய தமிழக சர்க்காரை—இந்த சர்க்காரைக்

கேட்டுக்கொள்வது திட்டங்கள் போட்டு இருந்தால், அதை நீங்கள் பரிசீலனை செய்து திட்டங்களை உடன் உருவாக்குவது நம்முடைய கடமையாக வைத்துக் கொள்ள வேண்டும். ஆனால் சில திட்டங்கள் தவறுதலாக ஏற்பட்டிருக்கலாம். தேர்தல் நேரத்தில், தன்னுடைய ஊருக்கு நன்மை செய்ய வேண்டுமென்று அப்பொழுதிருந்தவர்கள் செய்திருக்கலாம். இருந்தாலும் அது மக்களுக்கு உபயோகப்படக்கூடிய ஒரு திட்டம். குறைந்த செலவிலாவது நீங்கள் இதை அமுல் நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இல்லாவிட்டால் மக்கள் வேறுவிதமாக நினைப்பார்கள். குடிதண்ணீர் திட்டத்திற்காக 38 இலட்சம் ரூபாய் செலவழிக்க முடியாவிட்டால், எனக்குத் தெரிந்த யோசனையைச் சொல்லுகிறேன். அந்த யோசனையின்படி குறைந்த செலவில் அந்த திட்டத்தை உருவாக்கலாம். திட்டத்திற்கு எங்கு தண்ணீர் எடுக்கப்போகிறார்கள் என்பதுங்கூட இன்னும் முடிவாகவில்லை என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். தேர்தலுக்கு 15 நாட்களுக்கு முன்னதாகப் போடப்பட்டிருக்கிற ஜீ. ஓ. வைப் பார்த்தாலே திட்டத்தை எப்படி உருவாக்குவது என்று தெரியாமலேயே உருவாக்கியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவிக்க வருத்தப்படுகிறேன். எங்கே இருந்து தண்ணீர் எடுக்கப்போகிறார்கள் என்பது தெரியாமல் திட்டம் வகுத்திருக்கிறார்கள். நீங்கள் உடன் செய்ய சிறந்த வழி இருக்கிறது. ஒரே வருஷத்தில் திட்டத்தைச் செய்யலாம்.

அதே மாதிரி, 32 படுக்கையுள்ள விடுதி ஒன்றை அங்கு ஏற்படுத்த முடியாமல் நிறுத்தப்பட்டிருக்கிறது. ஐந்து லட்சம் ரூபாய் அளவுக்கு குறைந்த திட்டம் தான் அது. அதை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கடையநல்லூர் ஆஸ்பத்திரி 1964-ல் பஞ்சாயத்து யூனியனிடமிருந்து சர்க்காரால் எடுத்துக் கொள்ளப்பட்டது. 1964-லிருந்து 1968-ம் வருஷம் வந்துவிட்டது. ஆனால் இன்னும் அங்கு இருக்கிற சிப்பந்திகளைப் ப்ரவின்ஷியலைஸ் பண்ணவில்லை. 4 வருஷம் ஆகிவிட்டது. பஞ்சாயத்து யூனியன் ரூ. $1\frac{1}{2}$ இலட்சமுள்ள தங்கள் சொத்தையும் கொடுத்து இந்த டிஸ்பென்சரியையும் கொடுத்திருக்கிறார்கள். அவர்களை ப்ரவொன்ஷியலைஸ் பண்ண வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஒரு பொதுக் காரியத்தைப் பற்றிச் சொல்ல ஆசைப்படுகின்றேன். பஞ்சாயத்து யூனியன்களில் நிறைய ஆஸ்பத்திரிகள் இருந்து கொண்டிருக்கின்றன. பல மாவட்டங்களில் அப்படி இருந்து கொண்டிருக்கிறது. ஆனால், அங்கு டாக்டர்கள் இல்லாமல் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஓய்வு பெற்ற டாக்டர்கள் தான் பஞ்சாயத்து யூனியன் ஆஸ்பத்திரிகளுக்கு வர ஆசைப்படுகிறார்கள். ரெகுலர் சர்வீசில் இருப்பவர்கள் அங்கு வருவதற்குக் கொஞ்சம் யோசிக்கிறார்கள். காரணம், அவர்களுக்கு அங்கு கொடுக்கப்படுகின்ற ஊதியம் சரியாக இல்லாததோடு, நல்ல நிலைக்கும் வர முடிவதில்லை. ஆகவே, அந்த ஆஸ்பத்திரிகளுக்கு டாக்டர்களை சர்க்காரிலிருந்து போட்டு பஞ்சாயத்து யூனியன் பொது நிதியிலிருந்து தொகை பெற்றுக்கொள்ளலாம். அதன் மூலம் அந்த டிஸ்பென்சரிகள் எல்லாம் நல்ல முறையில் செயல்பட வழி இருக்கிறது. இதன் மூலம் பஞ்சாயத்து யூனியன் ஆஸ்பத்திரிகளில் நல்ல டாக்டர்கள் இருப்பார்கள். அதை ஒரு பாலிஸியாக எடுத்துக் கொள்ள வேண்டுமென்று சொல்லிக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

***திரு க. ந. இராமச்சந்திரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவம் பொதுச் சுகாதாரம் என்ற தலைப்புகளில் தமிழக அரசு முறையே $13\frac{1}{2}$ கோடி, $5\frac{1}{2}$ கோடி ரூபாய் செலவிட திட்டமிட்டு ஒதுக்கியிருப்பதை நான் மனமாரப்பாராட்டுகிறேன். இந்தியாவில் மொத்தம் 90 மருத்துவக் கல்லூரிகள் இருப்பதில் தமிழகத்தில் மட்டும், தனியார் கல்லூரி ஒன்றும் அரசாங்கக் கல்லூரிகள் 8-ம் உள்ளன. இந்த ஒன்பது மருத்துவக் கல்லூரிகளிலும் ஏறத்தாழ, 1,200 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். ஆண்டுக்காண்டு அதிகமாக மருத்துவ மானியம் கேட்கப்



படுவதும் அதிகமான தொகை செலவழிக்கப்படுவதும் நோய்கள் அதிகமாக பெருகுவதைத் தான் காட்டுகிறது. வருடம் ரூ.1,500 வரை சம்பளம் வாங்குகிற ஊழியர்களின் பிள்ளைகளுக்காக அரசாங்கம் ஏறத்தாழ 85,000 ரூபாய் செலவழித்திருப்பதை நான் மனமாரப் பாராட்டுகிறேன்.

சென்ற ஆண்டு இருந்த மருத்துவமனை படுக்கைகளின் எண்ணிக்கை 19,928. இந்த ஆண்டு மேலும் 211 படுக்கைகள் கூடுதலாக உயர்த்தப்படுவதை மனமாரப் பாராட்டுகிறேன். சிறப்பாக, திருச்சியில் சித்த மருத்துவத்தைப் போற்றும் வகையில் திருச்சி மாவட்ட தலைநகரத்தில் உள்ள தலைமையிட மருத்துவ மனையில் சித்த வைத்திய பிரிவு ஒன்றை தொடங்க ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளதையும் அதற்காக 100 படுக்கைகள் கொண்ட இந்திய மருத்துவ மனை ஒன்றைக் கட்ட திட்டமிட்டுள்ளதையும் மனமாரப் பாராட்டுகிறேன்.

1962-ல் சீனப் படையெடுப்பின்போது சில டாக்டர்கள் ஏ. எம். ஸி. "ஆர்மி மெடிகல் கோரில்" சேர்க்கப்பட்டார்கள் என்பதை நண்பர் சுவாமிநாதன் அவர்கள் பேசுகின்றபொழுது குறிப்பிட்டார்கள். அந்த டாக்டர்களுக்கு இழைக்கப்பட்ட தவறுகள் ஏதோ இந்த அரசினால் இழைக்கப்பட்டதைப்போல அவர்கள் பேசினார்கள். 1962-ல் எமர்ஜென்ஸி ஏற்பட்டபொழுது சில டாக்டர்கள் அனுப்பப்பட்டார்கள். 1963-ல் "டி.எம். எஸ்." ஆபீஸ் மூலம் 120 டாக்டர்கள் அனுப்பப்பட்டார்கள். 1965-ல் பாகிஸ்தான் படையெடுப்பின்போதும் பல டாக்டர்கள் அனுப்பப்பட்டார்கள். அவர்கள் அரசாங்கத்தால் அனுப்பப்பட்டாலும், "டி.எம்.எஸ்." ஆபீஸின் மூலம் அனுப்பப்பட்டாலும் அவர்களுடைய குடும்பத்திற்கு "ஃபாமிலி அலவன்ஸ்" ஆக ரூ. 250 கொடுக்கப்படும் என்று குறிப்பிட்டார்கள். ஆனால் சில டாக்டர்களுக்கு இன்றுவரை அந்த தொகை வழங்கப்படவில்லை. "டி.எம்.எஸ்." ஆபீஸ் மூலமாகவோ, அல்லது தனிப்பட்ட முறையில் தானாக வாலண்டரியாக சேர்ந்தவர்களுக்கோ அந்த "ஃபாமிலி அலவன்ஸ்" 250 ரூபாய் இதுவரை வழங்கப்படவில்லை. ஏதோ இந்த அரசு அந்தத் தவறைச் செய்து விட்டதைப் போலவும் அதை திருத்திக் கொள்ள வேண்டுமென்றும் அவர்கள் குறிப்பிட்டார்கள். இது அவர்களுடைய ஆட்சியில் செய்யப்பட்ட தவறு என்பதோடு இது மிகவும் வருந்துதற்குரியது என்றும் குறிப்பிட விரும்புகிறேன். அதோடு, அந்த டாக்டர்கள் அத்தனை பேருக்கும் அவர்கள் போரிலே ஈடுபட்டு திரும்பி வந்தால் அவர்களுடைய சீனியாரிடிகள் எந்த விதத்திலேயும் பாதிக்கப்படாது என்று உத்தரவாதம் முந்தைய அரசால் கொடுக்கப்பட்டு அவர்கள் அனுப்பப்பட்டார்கள். இந்தியாவிலேயே மற்ற மாநிலங்களைவிட, நம்முடைய மாநிலத்திலிருந்து—தமிழகத்திலிருந்துதான் அதிகமான டாக்டர்கள் போர்க்களத்துக்குச் சென்றதை நாம் பத்திரிகையின் வாயிலாகப் பார்த்தோம். அதன்காரணமாக பலருடைய பாராட்டுதல்களை அவர்கள் பெற்றதையும் நாம் பார்த்தோம். அவர்களுடைய சீனியாரிடிக்கு எந்த வித ஆபத்தும் ஏற்படாது என்று உத்தரவாதம் கொடுத்து அவர்களை அனுப்பிவிட்டு, 1963-ல் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலம் சில டாக்டர்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். மீண்டும், 1966-லும் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். சென்ற ஆண்டுகளிலே பாஸ் செய்த மாணவர்கள்கூட தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஜூனியர்களாக இந்த டாக்டர்கள்—யுத்தத்திற்கு சென்ற டாக்டர்கள்—இருக்கிறார்கள். இந்தக் கொடுமையையும் அநியாயத்தையும் சென்ற அரசு இழைத்திருந்தாலும் தற்போதுள்ள அரசு நல்ல முறையிலே அதைப் பரிசீலித்து அவர்களுக்கு, அந்தந்த குடும்பங்களுக்கு தனிப்பட்ட முறையில் சென்றவர்களாக இருந்தாலும், "டி.எம்.எஸ்." ஆபிஸினால் அனுப்பப்பட்டவர்களாக இருந்தாலும், ஜீ.ஓ. நெ. 2020, ஹெல்த், டேட்டட், 23—9—1965-ல் உள்ள உத்தரவாதத்தின்படி யார் யாருக்குக் ஃபாமிலி அலவன்ஸ் கொடுக்கப்படவில்லையோ அவர்களுக்கு எல்லாம் ஃபாமிலி அலவன்ஸை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த டாக்டர்களுக்கு சீனியாரிடிப்படி உத்தியோக உயர்வு கொடுக்க வேண்டுமென்று மிகத்தாழ்மையுடனும் பணிவுடனும் கேட்டுக்கொள்கிறேன். யுத்தத்திற்குச் சென்றவர்கள் நம்

முடைய உயிருக்கும் உடைமைக்கும் ஆபத்து ஏற்படக்கூடாது என்ற வகையில் தங்களுடைய உயிரைப் பற்றி கவலையுறாமல் பணி செய்து திரும்பியிருப்பதைப் பார்க்கின்றோம். அத்தகைய தியாகம் புரிந்த டாக்டர்களுக்கு நாம் நன்றி செலுத்துகின்ற வகையில்—மீண்டும் போர் ஏற்பட்டால் அவர்கள் செல்லுகின்ற வகையில்—அவர்களுக்கு நல்ல எண்ணத்தை உண்டாக்க வேண்டுமானால் தயவுசெய்து நம்முடைய தமிழக அரசு தங்களுடைய காலத்திலாவது இவர்களுடைய குறைகளை நீக்கப் பாடுபட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஹெல்த் டிபார்ட்மெண்டைப் பொறுத்தவரையில் தற்போது 1553 ஹெல்த் அஸிஸ்டெண்டுகள் இருக்கிறார்கள். அவர்களில் 128 பேர் மட்டும் நிரந்தரமாக்கப்பட்டிருப்பதாக கேள்விப்பட்டேன். அதைப் பார்த்து மிகவும் வருத்தப்படுகிறேன். இந்தத் துறையிலே இருப்பவர்களுக்கு நன்மை ஏற்படக்கூடிய வகையில் இன்றையதினம் சட்டதிட்டங்கள் அமையவில்லை. சானிட்டரி இன்ஸ்பெக்டர்கள் 20 ஆண்டுகளாக பணிபுரிந்தும் மாக்ஸிமம் சம்பளத்தை வாங்கி அதற்குப் பிறகு, 10, 15 ஆண்டுகள் வேலை செய்தும் அவர்களுக்குப் பதவி உயர்வு கிடைக்கவில்லை. ஆனால், ஹெல்த் அஸிஸ்டெண்ட்களை தேர்ந்தெடுப்பதற்கு "எம்.பி.எஸ்.ஸி." யிலிருந்து ஆட்களைக் கேட்பதாகத் தெரியவருகிறது. ஆகவே, இவர்களுக்குப் பதவி உயர்வு கொடுக்கும் வரை எம்.பி.எஸ்.ஸி.யிலிருந்து ஆட்களை தேர்ந்தெடுக்க வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குடி தண்ணீர் திட்டத்தைப் பொறுத்தவரையில், வீராணம் ஏரியிலிருந்து சென்னைக்குக் குடி தண்ணீர் கொண்டுவர இந்த அரசு செயல்படுவதை நான் பாராட்டுகிறேன். என்னுடைய பகுதியைப் பொறுத்தவரையில் ஜெயங்கொண்டான் கொள்ளிடத்திலிருந்து தண்ணீர் கொண்டு வருவதற்கு . அடிப்படை வேலை தொடங்குவதற்கு ரூ. 10,000 ஆகும் என்று சொன்னார்கள். அந்த திட்டம் சிறப்பாக செயல்படத் தொடங்குமானால் அங்குள்ள மக்கள் நன்றி செலுத்துவார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அந்த திட்டம் அரசாங்கத்தினுடைய இந்தக் குறிப்பீட்டில் இடம் பெறாமைக்கு மிகவும் வருத்தப்படுகிறேன்.

எனக்கு முன்பு இருந்த சட்ட மன்ற உறுப்பினர்கள் அவ்வளவு பேர்களும், உடையார்பாளையம் வட்டத்திற்கு குடி நீர் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தியிருக்கிறார்கள். வேறு எந்தத் திட்டத்தை நிறைவேற்றாவிட்டாலும், இந்தக் குடிநீர்த் திட்டம் மிக மிக அவசியமானது, பல குடும்பங்களில் திருமணத்திற்கு தண்ணீர் தவிர எல்லாப் பண்டங்களும் காசுகொடுத்து வாங்குகிறோம் என்பார்கள். ஆனால், எங்கள் பகுதியில், ஒரு குடம் தண்ணீர் ஒரு அணா கொடுத்து வாங்குகிறார்கள். தண்ணீரைக் கூட காசு கொடுத்துவாங்கும் அந்தப் பகுதியில் குடிநீர்த் திட்டத்தை வெகு விரைவாகச் செயல் படுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதைச் செய்தால் தான் அந்தப் பகுதி மக்களுக்கு நன்மை செய்தவர்களாக ஆவோம்.

மருத்துவத் துறையில் கணவன் மனைவி இருவரும் வேலைபார்த்தால், இரண்டு பேர்களையும் சேர்ந்து ஒரு இடத்தில் போடாமல் பிரித்துப் போடும் கொடும் பழக்கத்தை கைவிட்டுவிட வேண்டும். அப்படி மாற்றல்கள் செய்யும்போதும், ஆண்டு இறுதியில், ஏப்ரல் மார்ச்சு மாதங்களில் தான் மாற்ற வேண்டுமே ஒழிய, திடீர் திடீர் என்று மாற்றுவதால், அவர்கள் பள்ளிகளில் படிக்கும் பிள்ளைகளை விட்டு விட்டுப் போகவேண்டிய நிலைகள் ஏற்படுகின்றன. அதனால் அவர்கள் பல தொல்லைகளுக்கும் ஆளாகிறார்கள் என்பதை நான் நேரிடையாகப் பார்த்திருக்கிறேன். அந்த மாதிரித் தொல்லைகள் இல்லாமல் செய்யவேண்டும். ப்ரைமரி ஹெல்த் செண்டர்களில் பல டாக்டர்கள் இருக்கிறார்கள். அவர்கள் வீடுகளை பல மைல் தூரத்தில் வைத்துக் கொண்டு இருக்கிறார்கள். 30 மைலுக்கு அப்பால் வைத்துக் கொண்டு, இரவோடு





இரவாக வீடு திரும்புகிறார்கள். அவ்வாறான நிலைமை அப்பொழுது இருந்த டி.பி.ஹெச். அவர்களுக்கும் கூடத் தெரியும். இரவு நேரங்களில் ஏதாவது ஆபத்து ஏற்பட்டால், அங்கேயுள்ள மக்கள் டாக்டரைத் தேடிக் கொண்டு போகமுடியாத நிலை ஏற்பட்டு, மக்கள் அவதிப்படுகிறார்கள். ஒன்று அப்படிப்பட்ட டாக்டர்கள் வேலையை விட்டு விட வேண்டும். அல்லது எங்கே அவர்களுடைய வேலை இருக்கிறதோ அங்கே அவர்கள் வீடு இருக்க வேண்டும். அப்படி இல்லாத டாக்டர்களை தக்க நடவடிக்கை எடுத்துக் கண்காணிக்க வேண்டும், என்பது என்னுடைய தாழ்மையான எண்ணம்.

தொத்து வியாதியஸ்தர்கள் சென்னையில் அதிகமாக பரவியிருக்கிறார்கள். ரெயில்வே ஸ்டேஷனில், இன்னும் மற்ற இடங்களில் பிச்சைக்காரர்களாக இருக்கிறார்கள். கோவிலுக்கு போகும் பக்தர்கள் கூட வியாதியஸ்தர்களைத்தான் முதலில் காண்பார்கள். பஸ் ஸ்டாண்டில் இவர்கள் பிச்சை கேட்கிறார்கள். மக்கள் பிச்சை போடுகிறார்கள். அவர்கள் வாங்கிய காசைக் கொண்டு, கடைக்குச் சென்று வெவ்வேறு பொருள்களை வாங்குகிறார்கள். அந்தக்காசு இன்னும் பலருக்கும் திரும்பத் திரும்ப வருகிறது. அதனால், அந்த நோய் பரவுவதற்கு இலகுவாக இருக்கிறது. ஆகவே, அப்படிப்பட்ட தொத்து நோயாளிகளை ஒன்றாகச் சேர்த்து, எங்காவது கொண்டு போய், வைத்தியம் செய்யக் கூடிய நிலையில் உள்ளவர்களுக்கு, வைத்தியம் செய்யலாம், மற்றவர்களைத் தனியாக வைக்கலாம். அந்த வகையில் தொத்து நோய் பரவாமல் தடுக்க முடியும். ஆகவே, அந்த வகையில் அரசு ஆவன செய்ய வேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

உணவுக் கலப்படம் செய்கிறார்கள். இதில் பப்ளிக் ஹெல்த் டிபார்ட்மெண்டார் அக்கறை எடுப்பதைப் பாராட்டுகிறேன். ஜப்பான் நாட்டில் கழிவுப் பொருள்களைப் போற்றிப் பயன்படுத்துகிறார்கள். ஆனால் நாம், கழிவு நீரை திருச்சியில் உய்யக்கொண்டான் ஆற்றில் விட்டு பயன் இல்லாமல் செய்து விடுகிறோம். கூவம் நீரும் அவ்விதமே பயன்படுத்தபடாமல் போகிறது. ஆனால் ஜப்பான் நாட்டில் அதையெல்லாம் பயன் தரும் பொருள்களாக மாற்றி மூட்டை இவ்வளவு என்று விற்கும் நிலையைப் பார்க்கிறோம். ஜப்பான் நாட்டில் பாத் ரூமுக்குப் போவதாக இருந்தால், "எங்கள் வீட்டிற்கு வாருங்கள், எங்கள் வீட்டிற்கு வாருங்கள்" என்று சொல்லி அழைப்பார்களாம். காரணம், அந்த நாட்டின் கழிவுப் பொருள்களுக்கு அவ்வளவு மதிப்பும், மரியாதையும் வைக்கும் நிலை இருக்கிறது, அதன் தன்மையை அவர்கள் உணர்ந்திருக்கிறார்கள். நாம் இங்கே அதையே கேவலமாக நினைத்து, அந்தச் சொத்தை வீணாக்குகிறோம், விரயம் ஆக்குகிறோம். ஆகவே, அந்த விஷயத்திலும் அரசு அக்கறை செலுத்தி, பொது சுகாதாரத்திற்கும், மருத்துவத்திற்கும், குடிநீர்த் திட்டங்களுக்கும், அதிகமான அக்கறை காட்டவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, பேச சந்தர்ப்பம் கொடுத்த தலைவர்க்கு நன்றி கூறி, அமர்கிறேன். வணக்கம்.

***திரு ஏ. ஆர். மாரிமுத்து :** கனம் தலைவர் அவர்களே, இன்றைக்கு நாட்டிலே பொதுவாக, வைத்திய வசதிகள் அதிகமாக்கப்பட்டிருக்கிறது என்பது உண்மையேயானாலும். நாட்டுமக்களுக்குத் தேவையான அத்தனை வைத்திய வசதிகளையும் தருவதற்கான நிலையில் நாம் இல்லை என்பதை நாம் உணர கடமைப் பட்டிருக்கிறோம். பொதுவாக கிராமப்புறங்களை எடுத்துக்கொண்டால், எத்தனையோ ஆண்டுகளாக எந்தவிதமான வசதியும் அற்ற நிலையில் வாழ்ந்து வந்த மக்களில் பலருக்கு இப்பொழுது தேசத்தில் வைத்திய அபிவிருத்தி ஏற்பட்டிருந்தாலும் கூட, இன்னமும், அந்த வைத்திய வசதிகள் எட்டவில்லை என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆரம்ப சுகாதார நிலையங்களை அமைப்பதன் மூலம், கிராம மக்களுக்கு வைத்திய வசதி செய்ய முடிகிறது என்பது உண்மையென்றாலும், நாட்டின் பெரும்பான்மையான பகுதிகளில், குறைந்த பட்சம் 10, 15 மைல் தூரம்

கூட செல்ல வேண்டிய நிலையில் சில கிராம மக்கள் இருக்கிறார்கள். இன்னமும் கூட சரியான ரோடு வசதிகள் சிற்சில கிராமங்களில் அமைக்கப் படாததால், நோயுற்ற நோயாளிகளையும் பிரசவத்திற்குரிய தாய்மார்களையும் மருத்துவ நிலையத்திற்குக்கூட அழைத்துச் செல்ல முடியாத நிலை இருக்கிறது. ஆனாலும் உடனடியாக ஒரே நாளில் அல்லது ஒரே வருஷத்தில் அதையெல்லாம் செய்ய முடியவில்லை என்றாலும், இம்மாதிரியான பிற்பட்ட பகுதிகளைக் கணக்கில் எடுத்துக்கொண்டு அந்த பகுதிகளுக்கு வசதிகளைச் செய்து கொடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும். குறிப்பாக சொல்லமுடியும் என்னுடையதொகுதியில் திருவோணம் பகுதியிலே 15 மைலுக்குட்பட்டு வைத்திய வசதியே கிடையாது. ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிக்க வேண்டும் என்று பஞ்சாயத்து யூனியனிலும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டும் கட்டடம் சரியாக இல்லை என்ற காரணத்தால் அது ஆரம்பிக்கப்படவில்லை. இருக்கிற கட்டடத்தைத் தானே நாங்கள் கொடுக்க முடியும் ? ஒரு லட்சத்திற்கு இப்பொழுது கட்டடம் கட்டிக் கொடுங்கள் என்றால் அந்தப் பகுதி மக்களுக்கு அந்த வசதி கிடையாது. பொருள் படைத்தவர்களாக இருந்தால், தனிப்பட்ட வைத்தியர்களிடம் வைததியம் செய்து கொள்ள முடியும். அம்மாதிரியான நிலை இல்லாத பகுதி அது. பிற்பட்ட பகுதி. வரண்ட பகுதி. தஞ்சை மாவட்டத்தில், நெற்களஞ்சியம் என்கிற பகுதியின் வரண்ட பகுதியாக இருக்கின்ற பகுதியைச் சேர்ந்தது இது. ஆகவே, இருக்கின்ற கட்டடத்தைத் தானே அந்த மக்கள் கொடுக்க முடியும். அந்த இடத்திலே ஆரம்ப சுகாதார நிலையத்தை ஆரம்பிக்க வேண்டும். அப்படி அமைத்தால் தான் அங்குள்ள மக்களுக்கு வைத்திய வசதிகளைச் செய்ய முடியும். உயர் மட்ட அதிகாரிகளைக் கண்டு பேசியதில், அவர்கள் திட்டவட்டமாகக் கூறுகிறார்கள், கட்டடம் போதுமானதாக இல்லை என்று. நவீன வசதிகளை அமைக்க முடியாது என்கிறார்கள். அந்த கட்டடம் தான் இருக்கிறது. அது வேறு காரியத்திற்காகக் கட்டப்பட்டது. அப்படி அது சரியாக இல்லை என்றால், புதிய கட்டிடம் ஒன்றைக் கட்டுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட படவேண்டும். என்னுடைய வேண்டுகோள். எந்த வகையிலும் அங்கே வெகு குறுகிய காலத்தில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப் வேண்டும். வேறு கட்டடம் வேண்டும் என்றால், இருக்கும் கட்டடத்தை தானே கொடுக்கமுடியும். இரண்டு தினங்களுக்கு முன்பு கூட அதிகாரியைச் சந்தித்துப் பேசியபோது, அதைத்தான் சொல்லுகிறார்கள். ஆகவே, நான் சொல்கிறேன், இருக்கும் கட்டடத்தில் தற்காலிகமாக ஆரம்பியுங்கள், சீக்கிரமாகவே திட்டம்போட்டு ஒரு புதுக் கட்டடத்தைக் கட்டிக் கொடுங்கள். இன்றைக்கு 15 மைலுக்கு மேல் போகவேண்டியிருக்கிறது வைத்திய வசதி பெற வேண்டும் என்றால் ; ஆகவே, உடனடியாக அந்த நிலையத்தை அங்கே ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

தலைமை மருத்துவ மனையில் அதிகப்படியான மக்கள் வைத்திய வசதி கோரி வருகிறபோது, போதிய டாக்டர்கள் இல்லாததால், வருகிற கூட்டத்தை "டிஸ்போஸ்" செய்யவேண்டும் என்று, சரியான முறையில் நோயாளிகளைப் பரிசோதிக்க முடியவில்லை. அப்படிப்பட்ட அவல நிலை இருக்கிறது. வைத்தியர்களை குறை கூறவில்லை. அவர்கள் மீது குறை கூற முடியாது. ஏனென்றால், ஒருவர் ஒரு நாளிலே 50 பேர்களைப் பரிசோதிக்க முடியும் என்றால் அங்கே 200 பேர்கள் வந்தால் அவர்கள் எப்படி ஒழுங்காக கவனம் செலுத்த முடியும் ? செலுத்த முடியவில்லை. நம்மிடத்தில் வேலை கோரி வைத்தியப் பட்டம் பெற்றவர்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். எங்கெல்லாம் சரியாக கவனம் செலுத்தப் படவில்லையோ, அங்கே எல்லாம் போதுமான வைத்தியர்களை நியமனம் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மருந்துகள் நிலைமைப் பற்றிச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை என்று கருதுகிறேன். நோய்வாய்ப்பட்ட ஒருவர் திடீரென்று ஆஸ்பத்திரிக்கு வந்தால், மருந்து கிடையாது, வாங்கிக் கொண்டு வாருங்கள்



என்று சீட்டு எழுதிக் கொடுக்கிறார்கள். மருந்து இல்லாததால், நோயாளிகளை காப்பாற்ற வேண்டும் என்று, காசு கொடுத்தாவது மருந்து வாங்கிக் கொண்டு வாருங்கள் என்கிறார்கள். அவர்கள் மீது குறை சொல்ல வில்லை. ஆனால், அங்கே வருபவர்கள் ஏழை எளியவர்களாக இருப்பதால், காசு இல்லாமல் அங்கே வந்தால், மருந்து வாங்க முடியாத நிலையில், அவர்கள் எங்கே போவது ? இந்த அவல நிலை இருக்கவே கூடாது. போதிய மருத்துவ வசதி எல்லா மருத்துவ மனைகளிலும் இருக்க வேண்டும். அதற்கு வேண்டிய பண வசதியையும் அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். மருத்துவமனை இருந்தும், கட்டிடம் இருந்தும், டாக்டர் இருந்தும், அங்கே மருந்து இல்லையென்றால் என்ன பயன் ? ஏழைகள் வரும்போது, 'மருந்து இல்லை, வேறு எங்காவது அழைத்துச் செல்லுங்கள்' என்று சொல்லும் அவல நிலை இருக்கக் கூடாது. உதாரணத்திற்குச் சொல்ல முடியும். ஒரு நோயாளி, காலரா அறிகுறியுடன் பட்டுக்கோட்டை ஆஸ்பத்திரிக்குச் கொண்டு வரப்பட்டார். அந்த நேரத்தில், 'இந்த இடத்தில் ஸலைன் கிடையாது, தஞ்சைக்குக் கொண்டு செல்லுங்கள்' என்று கூறிவிட்டார்கள். அப்பொழுது அந்த நோயாளியின் நிலை என்ன என்பதை யோசித்துப் பார்க்கவேண்டும். தஞ்சைக்குப் போவதற்கு டாக்சி வசதி கிடையாது. அப்படியே ஏதாவது கார் வாடகைக்குக் கிடைத்தாலும் ஐம்பது ரூபாய்க்குக் குறையாமல் ஆகும். பட்டுக்கோட்டையிலிருந்து தஞ்சைக்குப் போய்த்தான் இம்மாதிரி நெருக்கடியான நிலைமையிலும் கூட வைத்திய வசதி பெறவேண்டும் என்று நிலை ஏன் இருக்கவேண்டும் ? அவசரமாகத் தேவையாக இருந்தால் அப்போதைக்கப்போது, அந்த மருத்துவ அதிகாரி அங்கேயே மருந்துவாங்கி, உடனடியாக வைத்தியம் செய்வதற்கான அனுமதி அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்தால், 'தஞ்சைக்கு அழைத்துச் செல்' என்று சொல்லக்கூடிய அவல நிலை அந்த ஆஸ்பத்திரியில் இருந்திருக்க முடியாது. ஆகவே, அவசரமாகத் தேவைப் படும் மருந்துகளையாவது, கடையில் வாங்கிப் பன்படுத்தலாம் என்ற அதிகாரம் அந்தந்த மருத்துவ அதிகாரிக்கு கொடுக்கப்பட வேண்டும்.

மருத்துவ நிலையங்களில் வழங்கப்படும் உணவு சம்பந்தமாகக் கூறினார்கள். இப்பொழுது அங்கே கொடுக்கக்கூடிய உணவு போதுமானதாக இல்லை. தரமானதாகவும் இல்லை. எப்பொழுதோ கொடுத்துக்கொண்டு வந்த தொகையே இன்னும் கொடுத்துக் கொண்டிருப்பதால், இப்பொழுதுள்ள விலைவாசியில் அந்த அளவுக்கு உணவு கொடுக்க முடியாது. அதற்கு வேண்டிய வசதிகளும் செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இன்றைக்கிருக்கும் மருத்துவ மனைகள்தோறும் சென்று பார்த்தால் ஏழைகள்தான் பெரும்பாலும் வைத்திய வசதி பெறச் செல்லுகிறார்கள். அங்குள்ள பல வசதிக் குறைவின் காரணமாக ஏழைகள்தான் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். வசதி படைத்தவர்கள் சொந்த முறையில் வைத்தியம் செய்துக்கொள்ள முடியும். செய்துக் கொள்கிறார்கள். ஏழைகளுக்குத்தான் இந்த அவல நிலை இருக்கிறது. பணம் போதாது, பணத்திற்கு என்ன செய்வது என்ற நிலை இருக்கக்கூடாது என்ற முறையில், வேண்டிய தொகையை அதற்கு ஒதுக்கித்தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். கிராமப்புறங்களுக்கு அதிக வைத்திய வசதி செய்வதற்கு அதிக கவனம் செலுத்த வேண்டும். அலோபதி முறை தான் இப்போது நடைமுறையில் நாம் வைத்திருக்கிறோம். நாட்டு வைத்திய முறைக்கும் வரமுயலுகிறோம். பாளையங்கோட்டையில் ஆரம்பிக்கப் பட்டிருக்கிற அந்த நாட்டு மருத்துவக் கல்லூரியில் சித்தமுறை மட்டும் தான் சொல்லிக்கொடுக்கப்படுகிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது ஏன் ஆயுர் வேத, யுனானி முறைகள் அங்கே சொல்லிக்கொடுக்கவில்லை. அவற்றைச் சொல்லிக்கொடுப்பதற்கு தகுதி படைத்தவர்கள் வரவில்லை என்று சொல்லப்படுகிறது. ஆயுர்வேதமுறை சொல்லிக்கொடுப்பவர்களுக்குச் சமஸ்கிருத மொழியில் புலமை வேண்டியிருக்கலாம். யுனானி முறை சொல்லிக் கொடுப்பவர்களுக்கு உருது மொழியில் புலமை வேண்டியிருக்கலாம். அந்தந்த மொழிகளில் உள்ள நூல்களைத் தமிழில் மொழி பெயர்த்து சொல்லிக்கொடுக்கப்படுமானால், அந்த உயர்ந்த மருத்துவமுறை

களையும், நாம் அங்கே சொல்லிக்கொடுக்க முடியும். இப்படி, பாளையங்கோட்டைக் கல்லூரியில், சித்த வைத்தியம், ஆயுர்வேதம், யுனானி ஆகிய இந்த மூன்று முறைகளையும் சொல்லிக் கொடுப்பதற்கு வழி செய்ய வேண்டும். அந்த முறையில் அதற்கான நூல்களை மொழி பெயர்ப்பதற்கான முறைகளைக் கையாளவேண்டும்.

ஒவ்வொரு வைத்தியமுறையிலும் சில சிறந்த மருந்துகள் இருக்கின்றன. சில வியாதிகளுக்கு ஆயுர்வேத மருந்துகள் நல்ல பலனைக் கொடுக்கின்றன. சில வியாதிகளுக்கு அலோபதி மருந்துகள் நல்ல பலனைக் கொடுக்கின்றன. இன்னும் சிலவற்றிற்கு யுனானி மருந்துகளும், இன்னும் சிலவற்றிற்கு சித்த வைத்திய மருந்துகளும் நல்ல பலனைக் கொடுக்கின்றன. ஆகவே, எல்லா முறைகளிலும் இருக்கும் உயர்ந்த மருந்துகளையெல்லாம் எடுத்து, ஒரு கலப்பு வைத்திய முறையை நாம் அமைத்துக்கொண்டால், ஏழைகளுக்கு நோய் வந்தால், அவர்களுக்கு உடனடியாகப் பலன் அளிக்கும் காரியங்களையெல்லாம் நாம் செவ்வனே செய்யமுடியும். அலோபதி, ஆயுர்வேதம்,சித்தா,யுனானி ஆகிய இந்த முறைகளில் உள்ள தரமான மருந்துகளைக் கண்டுபிடித்து, இதையெல்லாம் யோசித்து, ஒரு கலப்பு வைத்திய முறையை நாட்டில் ஏற்படுத்தினால், அது சாதாரண மக்களுக்கு ஏற்படும் நோய்களைக் குணப்படுத்தக்கூடியதாக அமையக்கூடும்.

பொதுவாக, ஹோமியோபதி முறையை எடுத்துக்கொண்டால், நாட்டில் பரவலாக ஹோமியோபதி வைத்தியர்கள் எங்கு பார்த்தாலும் இருக்கிறார்கள். அந்த ஹோமியோபதி முறையை அங்கீகாரம் செய்து, அவர்களுக்குக் குறைந்த பட்சப் பயிற்சி கொடுத்து, அப்படிப்பட்டவர்கள் தான் வைத்தியம் செய்ய வேண்டும் என்று சட்டபூர்வமாக வரையறுக்க வேண்டும். அம்மாதிரி பயிற்சி ஏற்படுத்தி, அங்கீகாரம் செய்யாவிட்டால், ஏதோ சர்ட்டிபிகேட்டை வைத்துக்கொண்டு அவர்கள் வைத்தியம் செய்ய ஆரம்பித்து விடுகிறார்கள். அம்மாதிரி வைத்தியம் செய்வதின்மூலம் தவறான மருந்துகளையெல்லாம் கொடுத்து, நாட்டிலிருக்கும் மக்கள் கஷ்டப்படக் கூடிய நிலைமை ஏற்படலாம். ஆகவே, ஹோமியோபதி முறையில் வைத்தியம் செய்கிறவர்களை நாம் அனுமதித்துக்கொண்டு இருக்கும்போது, அதைச் சட்டபூர்வமாக அங்கீகரிக்கும் அளவுக்கு அவர்களுக்குப் பயிற்சி அளித்தால், அது நாட்டுக்கு பயனுள்ளதாக இருக்கும். ஆகவே, ஹோமியோபதி முறையை அங்கீகாரம் செய்து, அந்த முறையில் வைத்தியம் செய்கிறவர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டிய வசதியைச் செய்து கொடுக்க வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

நகர சுகாதாரத்தைப்பற்றி நான் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. நகரங்களிலும் சுகாதார வசதிகள் பெருக்கப்படவேண்டும். நகரங்களிலும் சுகாதார வசதிகள் கம்மியாக இருக்கின்றன. அதெல்லாம் கவனிக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஹெல்த் இன்ஸ்பெக்டர்களைப் பொறுத்தவரையில், 1538 பேர்கள் நமது மாநிலத்தில் வேலை செய்கிறவர்களில் 128 பேர்கள் தான் இதுவரையில் ரெகுலரைஸ் பண்ணப்பட்டிருக்கிறார்கள். பாக்கிப் பேர் என் இன்னும் ரெகுலரைஸ் செய்யப்படவில்லை? தனியார்துறையில் இருக்கிறவர்களுக்கு இவ்வளவு நாட்கள் வேலை செய்திருந்தால், அங்கீகாரம் அளிக்கப்பட வேண்டும், கன்பர்ம் பண்ணியாகவேண்டும் என்று கட்டாயப்படுத்தும்போது, அரசாங்கத்துறையில் இருக்கிறவர்களைமட்டும் இவ்வளவு காலமாக ரெகுலரைஸ் பண்ணாமல் வைத்திருப்பது மிகவும் வருந்தத்தக்கது. அவர்களையெல்லாம் ரெகுலரைஸ் பண்ணவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைப்பற்றி ஓரிரு வார்த்தைகள் கூற விரும்புகிறேன். பட்டுக்கோட்டையில் குடி தண்ணீர் திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. என்றாலும் இன்னும் தண்ணீர் சப்ளை கிடைக்கவில்லை. தண்ணீர் இன்னும் விநியோகம் செய்யப்படவில்லை. டாங்க் கட்டி பைப் போடப்பட்டிருக்கிறது. ஆனால், நிலம் கொடுக்கின்றவர்களுடைய ஆட்சேபனையினால் இது தாமதமாகிக் கொண்டிருக்கிறது. ஆகவே, உடனடியாக 'போர்



வெல் போட்டாவது டாங்கில் தண்ணீர் நிரப்பி, உடனடியாக மக்களுக்கு சப்ளை செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு உரையை முடிக்கின்றேன். வணக்கம்.

***திரு சோ. அழகர்சாமி :** தலைவர் அவர்களே, இந்த மருத்துவத்துறை பொது சுகாதாரத்துறை மானியக்கோரிக்கைகளில் ரூபாய் 100 குறைக்க வேண்டும் என்ற வெட்டுப் பிரேரணையை நான் கொடுத்திருந்தாலும், இவற்றிற்காக ஒதுக்கப்பட்ட தொகை போதாது,அதிகரிக்கப்படவேண்டும் என்பது தான் என்னுடைய முக்கியமான வேண்டுகோள் ஆகும். மருத்துவத்திற்காக ரூபாய் 13,46,99,600, பொது சுகாதாரத்திற்காக ரூபாய் 5,25,34,200 என்று சொல்வது மிகவும் குறைவு என்று நான் கருதுகிறேன். ஏனென்றால், பொதுவாக நாட்டிலே சுகாதார வசதிகள், வைத்திய வசதிகள் அதிகரிக்கப்பட வேண்டியது அவசியம் என்பதை ஒவ்வொரு அங்கத்தினரும் கூறினார்கள். 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்று சொல்வதுண்டு. இப்போது நாட்டில் பல நோய்கள் ஏற்படுவதற்குக்காரணம, கிராமப் பகுதிகளில் சுகாதார வசதி போதாது என்ற நிலையும் நகரங்களில் பல இடங்களில் சுகாதார வசதி அறவே இல்லை என்ற நிலையும் தான் என்பதை நாம் தெரிந்திருக்கிறோம். ஆகவே, இதற்காக அதிகப்பணம் ஒதுக்கியிருக்க வேண்டும். இருந்தாலும், இப்போது பொதுவான ஓரிரண்டு விஷயங்களைக் குறித்துச் சொல்ல விரும்புகிறேன்.

குடிநீர் வசதியைப்பொறுத்தவரையில், கிராமங்களிலும், நகரங்களிலும் பல இடங்களில் இன்னும் அத்தகைய வசதி இல்லாமல் இருக்கிறது. கிராமப்புறங்களில், பல இடங்களில்,இன்னும் நாலைந்து மைல் தூரம் அலைந்து சென்று தான் நல்ல தண்ணீரை எடுத்து வர வேண்டிய நிலை இருக்கிறது. பல நகரங்களிலும் குடி நீருக்கான நெருக்கடி இன்னும் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இந்த துறையில் அதிகப்பணம் செலவழிக்க வேண்டியிருக்கிறது. ஆகவே குடிதண்ணீர் வசதிக்காகவென்று தனியாக ஒரு போர்டு நியமித்தால் நல்லதாக இருக்கும். மின்சாரக் குழுவை ஏற்படுத்தி எல்லா இடங்களிலும் மின்சாரம் வழங்குவது மாதிரியே, குடிதண்ணீர் வசதிக்காகவும் ஒரு தனி போர்டு நிறுவி, அதன் கையில் பணம் கொடுத்து எல்லா இடங்களிலும் குடி தண்ணீர் வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு ஏற்பாடு செய்தால் நன்றாக இருக்கும். அதை அரசாங்கம் ஆலோசிக்கலாம்.

இப்போதுள்ள நிலையில், சுகாதார வசதியும், மருத்துவ வசதியும் கிராமப் பகுதிகளில் உள்ள மக்களுக்குக் கிடைக்கின்றனவா என்று பார்த்தால், அது மிகவும் கஷ்டமான காரியமாகவே இருக்கிறது. பத்து, பனிரண்டு மைல்களுக்குக்கூட ஒரு ஆஸ்பத்திரி இல்லாத பல இடங்கள் இருக்கின்றன. பல மைல்கள் அலைந்து திரிந்து ஒரு ஆஸ்பத்திரிக்குச் சென்றாலும், அங்கே சேர்க்கப்படுவது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ஒரு நோயாளியை ஆஸ்பத்திரியில் சேர்ப்பதற்குப் பலவிதமான கஷ்டங்கள் இருக்கின்றன. பிரசவ கேசாக இருந்தாலும் கூட, அதைக்கூட உடனடியாகச் சேர்க்க முடியாத நிலைமை இருக்கிறது. அதற்குக் காரணம் டாக்டர் இல்லாமல் இருக்கிறார்கள் என்பது. டாக்டர் இருந்தால் மருந்து இல்லாமல் இருக்கிறது. இப்படிப்பட்ட குறைகளும், மருந்துகள் இல்லை என்ற குறையும் அறவே இல்லாமல் இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சாதாரண ஏழை மக்கள் ஆஸ்பத்திரியில் சேர வேண்டுமென்றால், நல்ல வைத்திய வசதி பெற வேண்டுமென்றால், அதற்காக லஞ்சம் கொடுக்க வேண்டியிருக்கிறது. லஞ்சம் கொடுக்காவிட்டால், சரியாக கவனிக்கப்படுவதில்லை. அவர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள் என்ற குறை எல்லா இடங்களிலும் இருக்கிறது. இதை இப்போதுள்ள அரசு உடனடியாகப் தபாக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். நாட்டிலுள்ள பெரும்பகுதி மக்கள் மேக்கு இந்த அரசின் மூலம் பலவிதமான கஷ்டங்கள் போகும். இந்தக் குறைகளெல்லாம் நிவர்த்தியாகும் என்ற நம்பிக்கையோடு இருக்கிறார்கள். அந்த நம்பிக்கைக்குத் தகுந்த முறையில், இம்மாதிரியான கஷ்டங்களைப் [illegible]க்க முயற்சிக்க வேண்டும்.

அரசாங்க ஆஸ்பத்திரிகளுக்கு டாக்டர் கிடைப்பது கஷ்டம் என்று கூறுகிறார்கள். கிராமப்பகுதிகளில் ஆஸ்பத்திரிகளை ஏற்படுத்த வேண்டுமானால், அதற்கு டாக்டர்கள் வரமாட்டார்கள் என்று சொல்லப்படுகிறது. ஆகவே, வைத்தியக்கல்லூரியில் தேர்ச்சி பெறக்கூடிய டாக்டர்களை, கட்டாயமாக ஐந்து ஆண்டுகளுக்கு கிராமப்பகுதிகளில் போய் அங்கு சேவை செய்ய வேண்டும் என்ற உத்திரவாதத்தை அவர்களுக்கு ஒரு 'கண்டிஷனை'ப் போடவேண்டும். அப்படியிருந்தால்தான், பட்டம் பெற்று வந்தவுடன் கிராமப் புறங்களுக்கு அவர்கள் வருவார்கள். அது மட்டுமல்ல. தனியாக ஆஸ்பத்திரி வைத்தால், இதைவிட அதிகமான வருமானம் பெறமுடியும் என்று அவர்கள் நினைக்கிறார்கள். அத்துடன், ஆஸ்பத்திரிகளில் வேலை பார்க்கும் டாக்டர்கள் தனியாக ஆஸ்பத்திரி வைக்கக்கூடாது, தனியாக வைத்தியம் செய்யக்கூடாது என்ற விதியையும் ஏற்படுத்த வேண்டும். ஆஸ்பத்திரிக்கு வரக்கூடியவர்களிடம், 'இங்கே மருந்து இல்லை தனியாக வீட்டுக்கு வாருங்கள்' என்று டாக்டர்கள் சொல்லி அனுப்பிவிடக் கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே டாக்டர்கள் 'தனியாக வைத்தியம்' செய்யக்கூடாது என்ற விதியை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமங்களிலுள்ள மக்கள் சுகாதார வசதியற்ற தண்ணீரைத்தான் குடித்து வருகிறார்கள். பல இடங்களில் கிராமமக்கள் தரைக் கிணறுகளில் தண்ணீர் இறைத்துத்தான் குடித்து வருகிறார்கள். இன்னும் பல இடங்களில் மழைக்காலங்களில் தேங்கிக்கிடக்கும் நீரை, அதாவது 6,7 மாதங்களுக்கு கண்மாய்களில் தேங்கிக்கிடக்கும் நீரைக்குடித்து வருகிறார்கள். மழையில்லாத காலங்களில் சுமார் நான்கைந்து மைல்தூரம் சென்று தேடியலைந்து தண்ணீரை எடுத்து வருகிறார்கள். ஆகவே குடிநீர் வசதி திட்டத்தின்கீழ் கிராம மக்களுக்கு நல்ல குடிநீர் வசதியைஏற்படுத்த வேண்டுமென்று அரசாங்கத்தை கேட்டுக்கொள்கிறேன்.

குடிநீர் திட்டத்திற்கு கிராமப்பஞ்சாயத்து அதிகப் பணம் செலவிட வேண்டியிருக்கிறது. பஞ்சாயத்துக்கு வரக்கூடிய வருமானம் மிகமிகக் குறைந்த நிலையில் இருக்கின்றது. ஆகவே, அரசாங்கம் குடித்தண்ணீர் திட்டத்திற்காக கிராமப்பஞ்சாயத்துக்களுக்கு சுமார் 75 சதவிகிதம் மானியமோ, அல்லது முழுத்தொகையும் மானியமாகவோ கொடுத்து கிராம மக்களுக்கு குடிதண்ணீர் வசதியை ஏற்படுத்தித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல, நகரசபைகள் குடிதண்ணீர் திட்டத்திற்காக பெறும் தொகையில் 50 சத விகிதம் மானியமாகவும் 50 சத விகிதம் கடனாகவும் கொடுத்து உதவ வேண்டும். நகரசபைகளுக்குக் கொடுக்கப்பட்டு வந்த மானியம் நிறுத்தப்பட்டிருக்கிறது. இதனால் நகரசபைகளின் வருமானத்தில் பெரும்பகுதி கடனைத் திருப்பிக் கட்டுவதற்கே போய்விடுமாதலால், குடிதண்ணீர் பிரச்னையை சரிவர தீர்க்க முடியாது. ஆகவே அரசாங்கம் நகரசபைகளுக்கும் மானியம் வழங்கி, மக்களுக்கு நல்ல குடிதண்ணீர் கிடைக்க வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கிராமப்பகுதிகளிலே சாக்கடைத் திட்டத்திற்க்காகப் பணம் ஒதுக்கப்பட்டு, செலவழிக்கப்பட்டு வந்தது. ஆனால் இப்போது அந்தத் தொகை நிறுத்தப்பட்டிருக்கிறது. கிராமங்களில் தெருக்களில் ஓடும் நீரை ஒழுங்கு படுத்தி வழிந்தோடச் செய்வதற்குப் பஞ்சாயத்துக்களுக்குப் போதுமான பணத்தை அரசாங்கம் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இப்போது கிராமப் பகுதிகளுக்குச் சாக்கடைத் திட்டம், போன்ற சுகாதாரத் திட்டங்களுக்கு எந்தப் பணமும் ஒதுக்கப்படவில்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் பணம் ஒழுங்காக பஞ்சாயத்துக்களுக்குக் கிடைக்க வழிவகை செய்யவேண்டும்.

குடும்பக் கட்டுப்பாடு சம்பந்தப்பட்டமட்டில் ஏஜெண்டுகளுக்கு 10 ரூபாய் கமிஷன் தரும் ஏற்பாடு சரியல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏஜெண்டுகள் பணத்திற்கு ஆசைப்பட்டுக்கொண்டு, 55 வயதிற்கு மேற்பட்டவர்களைக்கூடக் கொண்டுவந்து அறுவை சிகிச்சை செய்ய வைத்துவிடுகிறார்கள். இன்னும் பலவாறான பொய்களைச் சொல்லி கிராம மக்களை





ஏமாற்றிவிடுகிறார்கள். மேலும் ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும், ஒவ்வொரு கிராம சேவக்கும் இத்தனை பேர்களை குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தில் சேர்க்க வேண்டுமென்று ஒரு கணக்கு இருந்து வருகிறது. ஆகவே, ஏஜெண்டுகளுக்கு 10 ரூபாய் கமிஷன் கொடுப்பதற்குப் பதிலாக, குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தில் பங்குகொண்டவர்களை மேலும் ஒருவாரம் அல்லது ஒரு மாதம் வரைக்கும் ஆஸ்பத்திரியில் வைத்திருந்து அவர்களுக்கு நல்லவகையான ஊட்டச்சத்துள்ள ஆகாரம் கொடுத்தால் பலன் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதன் மூலம் குடும்பக் கட்டுப்பாடு திட்டம் நல்ல பலனை அளிக்கும் என்ற என் ஆலோசனையைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடைசியாக என்னுடைய தொகுதியைப்பற்றி ஒரு சில வார்த்தைகளை மட்டும் கூறிக்கொள்ள விரும்புகிறேன். எட்டையாபுரம் ஆஸ்பத்திரி மிகச் சிறியதாக இருக்கிறது. அந்த ஆஸ்பத்திரியை விஸ்தரிக்க வேண்டுமென்ற எண்ணத்தில் அங்கிருந்த டாக்டர் அவர்கள் பொதுமக்களிடத்தில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் பணம் வசூலித்து வைத்திருந்தார்கள். பொது மக்களும் பணம் கொடுத்தனர். அந்தப் பணம் ஒரு பாங்கியில் போடப்பட்டிருக்கிறது. எட்டையாபுரம் ஆஸ்பத்திரி சுமார் பத்துப் பதினைந்து கிராமங்களுக்கு மையமாக இருக்கிறது. ஆகவே, அரசாங்கம் எட்டையாபுரம் ஆஸ்பத்திரியை அபிவிருத்தி செய்து அப்பகுதி மக்களுக்கு உதவ வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கோயில்பட்டி குடித்தண்ணீர் திட்டம் அசராங்கத்தினுடைய பரிசீலனையில் இருக்கிறது. அரசாங்கம் உடனடியாக இத்திட்டத்தை ஏற்படுத்தித் தரவேண்டும். இந்தத் திட்டத்திற்காகும் பாதித் தொகையை மானியமாகவும், மீதியைக் கடனாகவும் கொடுத்து குடித் தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்த்துவைக்க வேண்டும் என்று கூறி, இத்துடன் என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

***திரு கொளத்தூர் கோதண்டம் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சுகாதார அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

முதலாவதாக, இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையில் நம் மாநிலத்தில் மூன்று புதிய மருத்துவக் கல்லூரிகளுக்கு வளர்ச்சித் திட்டத்திற்கு சுமார் 80 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு உள்ளது. அந்த மூன்று கல்லூரிகளுள் செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரியையும் சேர்த்திருப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என் நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மதுராந்தகத்தில் நீண்ட நாட்களாக இருந்து வந்த குறையை நீக்கும்பொருட்டு, மதுராந்தகத்தில் எக்ஸ்ரே யூனிட் அமைக்க முன்வந்த மாண்புமிகு சுகாதார அமைச்சர் அவர்களையும், சம்பந்தப்பட்ட இலாகா காரியதரிசி அவர்களையும் பாராட்டி என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்தில் டி.எம்.எஸ்., டி.பி.எச். என்று தனித்தனியாக இருந்த துறைகளை இணைத்து, ஒரே துறையாக ஆக்கியிருக்கிறார்கள். இந்த நேரத்தில் என் தனிப்பட்ட எண்ணத்தையும் எடுத்துக்கூற விரும்புகிறேன். இந்த இரண்டு இலாக்காக்களோடு, டி.எம்.இ. என்ற துறையையும் ஒன்றாக இணைத்து விட்டால் மேலும் நல்ல பலன்களை நாம் பெற முடியும் என்ற என் தனிப்பட்ட அபிப்பிராயத்தைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, கிராமப்புறங்களிலே மருந்துகள் வாங்குவதிலே இன்றைய தினம் ஏற்பட்டிருக்கின்ற சிக்கல்களைப் பற்றி பல நண்பர்கள் எடுத்துச் சொன்னார்கள். கிராமப்புறங்களில் ஆஸ்பத்திரிகளில் இருப்பவர்கள் "இண்டெண்ட்" போட்டு "சென்ட்ரல் ஸ்டோர்ஸ்"-லே வாங்குகின்ற நிலைமை இருந்து வருகிறது. மேலும் இண்டெண்ட் போடுவதில் 40 சதவிகித மருந்துதான் கொடுக்கப்படுகிறது. ஆகவே, போதுமான மருந்துகள் ஆஸ்பத்திரிக்குக் கிடைக்கப்படுவதில்லை. ஆகவே, சென்ட்ரல் ஸ்டோர்ஸிலே இருந்து மருந்து பெறும் முறையை மாற்றி, வேறு முறையைப் புகுத்துவதே சாலச் சிறந்ததாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் இன்றைக்கு ஆஸ்பத்திரிகளில் தரப்படும்

மருந்துகளைப் பார்த்தால் தரக் குறைவான மருந்துகளாகவே இருக்கின்றன. மருந்துகளின் தரம் நிச்சயமாக நல்ல தரமாக அமையவில்லை. இதற்குக் காரணம் மருந்துகள் வாங்கும்போது, "லோயஸ்ட் டெண்டர்கள்" மூலம் வாங்குகிறார்கள். மற்ற மருந்துகளோடு ஒப்பிட்டுப் பார்த்தால் இந்த மருந்துகளின் தரம் மிகவும் குறைந்து காணப்படுகிறது. லோயஸ்ட் டெண்டர்களின் மூலமாக வாங்குவதைக் காட்டிலும் "ரேட் காண்ட்ராக்ட்" மூலமாக மருந்துகள் வாங்கினால் நிச்சயமாக நல்ல தரமான மருந்துகள் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மத்திய மருத்துவமனையைப் பொறுத்த வரையில், நோயாளிகளின் எண்ணிக்கை மிக அதிகமாக இருக்கிறது. இட நெருக்கடி அதிகமாக இருக்கிறது. 42 படுக்கைகள் கொண்ட இடத்திற்கு சுமார் 120 பேர்களைக் கூட அனுமதிக்கக்கூடிய நிலை இருந்து வருகிறது. இங்கே இருக்கின்ற உறுப்பினர்களில் பெரும்பாலோருக்கு இந்த மருத்துவமனையில் பெரிய அனுபவமே கிடைத்திருக்கிறது. மருத்துவமனையில் கொடுக்கப்படக்கூடிய மருந்துகளும் தரக்குறைவாகவே இருக்கின்றன. உணவைப் பொறுத்த வரையில், சட்டமன்ற அங்கத்தினர்களுக்குக்கூட நல்ல சாப்பாடு கொடுக்கப்படவில்லை. நோயாளிகளுக்கு நல்ல உணவு கிடைக்க வழி செய்ய வேண்டும். மேலும் நோயாளிகளிடம் உடன் இருந்து வேலைசெய்யும் செவிலியர், போன்றவர்களுடைய வசதிக் குறைகளும் அதிகமாக இருக்கின்றன. நோயாளிகளுக்காக உழைக்கும் அந்த நல்ல உள்ளங்களுக்கு அளிக்கப்படும் உணவு தரமுடையதாக இல்லை, போதுமானதாகவும் இல்லை. மாண்புமிகு சுகாதார அமைச்சர் அவர்களே இதை நன்கறிவார்கள். மேலும் நர்ஸுகளுக்குக் கொடுக்கப்பட வேண்டிய இன்க்ரீமெண்டுகளும் 5, 10 ஆண்டுக் காலமாகக் கொடுக்கப்படவில்லை. இதைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு சட்டமன்ற உறுப்பினர்கள் ஒன்றுசேர்ந்து விண்ணப்பித்திருக்கின்றோம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த விஷயத்தில் கவனத்தைச் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், மருத்துவமனையில் ஸ்பெஷல் வார்டுகள் கிடைப்பது மிகக் கடினமானதாக இருக்கின்றது. ஸ்பெஷல் வார்டுகள் கிடைக்காமல் நோயாளிகள் மிகமிக மோசமான நிலையில் இருந்து வருகிறார்கள். ஆகவே, ஸ்பெஷல் வார்டுகள் இருப்பது போதாது. இன்னும் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதனால் அரசாங்கத்திற்கு நல்ல வருவாயும் கிடைக்கும், மக்களும் நன்மையைப் பெற முடியும்.

மருத்துவத் துறையைப் பொறுத்தவரையில், மாணவர்கள் மனுப் போடும்போதே, ஐந்தாண்டுக் காலம் நிச்சயமாகக் கிராமப்புரங்களில் வேலை செய்பவர்களுக்குத்தான் இடம் கொடுக்கப்படும் என்ற விதியை ஏற்படுத்த வேண்டும். அதேமாதிரி போஸ்ட் கிராஜுவேட் கோர்ஸுக்கு மனுப் போடுகிறவர்களுக்கும் கிராமப்புரங்களில் ஐந்தாண்டுக் காலம் கட்டாயம் வேலை செய்ய வேண்டும் என்ற விதியை ஏற்படுத்தினால் நல்லது என்று கருதுகிறேன்.

மேலும், இன்றையதினம் டாக்டர்கள் "பிரைவேட் பிராக்டீஸ்" செய்வது என்ற நிலைமை நிச்சயமாக நிறுத்தப்பட வேண்டும். சென்னையைப் பொறுத்தவரையில் ஏழை எளிய மக்கள் நல்ல மருத்துவ உதவியைப் பெற முடியவில்லை. 20 ரூபாய் 50 ரூபாய் என்ற அளவில் தான் டாக்டர்களை அணுக முடிகிறது. ஆகவே, இந்த பிரைவேட் பிராக்டீஸ் நிலையங்களை எல்லாம் அடியோடு மூடிவிட வேண்டும்.

அடுத்தபடியாக நான்காவது கிரேடு ஊழியர்களுக்குச் சம்பளம் உயர்த்தப்பட வேண்டும். நமது அரசு இந்த ஊழியர்களின் குறைகளை அறிந்து சம்பளம் உயர்த்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில் ஊதிய உயர்வு கோரிக்கையையும் நல்லமுறையில் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மினிஸ்டீரியல் ஸ்டாபைப் பொறுத்த வரையில் சென்னையில் உள்ளவர்களுக்கு ஒரு விதம், மற்ற இடங்களில்





உள்ளவர்களுக்கு ஒரு விதம் என்று இருக்கிறது. அதுபோலவே சென்னையில் உள்ளவர்களுக்குப் பதவி உயர்வு வருவதைப்போல, மற்ற இடங்களில் உள்ளவர்களுக்கு வருவது இல்லை. ஆகவே, எல்லா இடங்களுக்கும் ஒரே விதமாகச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக எனது தொகுதியைப் பற்றிச் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். செய்யாரில் மொபைல் வான் யூனிட் ஒன்று இருக்கிறது. 6 மாதங்களாக அது வேலை செய்யவில்லை. அங்கிருக்கிற டாக்டர் என்ன செய்கிறார் என்றே தெரியவில்லை. ஒரு அவசர பிரசவ கேஸ் சம்பந்தமாக அவரைப் பார்த்தபோது அவர் இல்லை என்கிற நிலைதான் ஏற்பட்டது. ஆகவே தக்க நடவடிக்கை எடுத்து அந்த மொபைல் வான் யூனிட் நல்ல முறையில் வேலை செய்யும்படியாகச் செய்யவேண்டும்.

என் பகுதி மருத்துவத் துறையில் மிகவும் பின்தங்கிய பகுதி, அது அமைச்சருக்கும் தெரியும். அந்தத் துறை செயலாளருக்கும் தெரியும். 50 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட மருத்துவ மனை அப்படியே இருக்கிறது. அங்கே டாக்டர்களும் குறைவு. அந்தப் பகுதியில் மருத்துவ வசதியே குறைவு. கூவத்தூருக்குக்கூட அமைச்சர் அவர்கள் வந்திருந்தார்கள். இருபதாயிரம் மக்கள் தண்ணீருக்கு அப்பால் இருக்கிறார்கள். ஆகவே பவுஞ்சூரில் ப்ரைமரி ஹெல்த் சென்டருக்கு ஜீப் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மதுராந்தகம் வட்ட தலைமை மருத்துவ மனையில் இந்த ஆண்டு எக்ஸ்ரே யூனிட் ஏற்படுத்தும் வேலை முடிவாகும் தருவாயில் இருக்கிறது. 24 படுக்கைகள் கொண்டு ஒரு மருந்தகத்தை கட்டவேண்டுமென்ற யோசனையும் அரசின் பரிசீலனையில் இருக்கிறது. நான் அதற்கு 30 ஆயிரம் ரூபாய் நன்கொடையும் வாங்கித் தருவதாக உறுதி கூறியிருக்கிறேன். அதிகமான நர்சுகள். ஸ்டாப் நர்சுகளையும் போட வேண்டும். மதுராந்தகத்தைச் சுற்றி பல மைல்கள் வைத்திய வசதி இல்லை, செங்கல்பட்டுக்குத்தான் போக வேண்டும். ஒரு பிரசவ கேசுக்காக என்னுடைய ஊரில் இருந்து செய்யூர் வந்து, அங்கே முடியாதென்று மதுராந்தகம் வந்து, அங்கும் முடியாதென்ற பிறகு செங்கல்பட்டு போகும் படியாகி விட்டது. ஆகவே தான் மதுராந்தகத்து, மருத்துவ மனையை விரிவுபடுத்தியாக வேண்டும். அதிகமான ஸ்டாப் நர்சுகளையும் போட வேண்டும். நோயாளிகள் இத்தனை பேர்களுக்கு ஒரு ஸ்டாப் நர்சு என்ற கணக்கு இருந்தாலும் இப்போது இருபது, முப்பது பேர்களைக் கூட பார்த்துக் கொள்ளவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அவர்களுக்குப் போதுமான பயிற்சி கொடுத்திருக்கிறோம். ஆனால் உடனடியாக வேலை கொடுக்கப்படவில்லை. ஆகவே 3 ஆண்டு காலம், நான்காண்டு காலம் வேலையில்லாமல் இருக்கிற நிலையைப் போக்க அவர்களை அதிகம் போடவேண்டும்.

குடி தண்ணீர் பிரச்சினை மதுராந்தகம் பகுதியில் பெரிய பிரச்சினையாக இருக்கிறது. நான் அமைச்சர் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள் கொடுத்திருக்கிறேன். பாலாற்றில் இருந்து தண்ணீர் எடுத்து மதுராந்தகம் கொண்டு வருகிற நேரத்தில் இரண்டு மேஜர் பஞ்சாயத்துகளும், 8 மைனர் பஞ்சாத்துகளும் பயன்படக்கூடும். அதற்காகும் செலவில் அந்த அந்த ஊராட்சி மன்றங்கள் பங்கு கொடுப்பதாக சம்மதம் தெரிவித்திருக்கிறார்கள். அறுபதாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் பலன் அடைவார்கள். இடையில் சர்க்கரை ஆலை ஒன்றும் இருக்கிறது. இதையெல்லாம் வைத்து இந்தக் குடி தண்ணீர் திட்டத்தை அமுல் செய்வதற்கு சர்க்கார் முன் வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முடிவாக மதுராந்தகம் மருத்துவ மனையை விரிவுபடுத்த வேண்டும், கூவத்தூரில் மருந்தகத்தை ஏற்படுத்த வேண்டும், பவுஞ்சூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஜீப் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு பேச வாய்ப்பு நல்கிய தலைவருக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*THIRU K. VINAYAKAM : Mr. Deputy Speaker, Sir, in spite of my Cut Motion, generally speaking on this Demand I have no quarrel with the Government or the Department concerned, for

after all this Government have inherited a legacy left behind by the previous Government and within such a short span of time viz., about one year, I do not expect any extraordinary change or revolution to take place either in the medical field or in the public health field or whatever it may be. The Party in power is only carrying on the programme initiated by the previous Government and now it is only a replica of the activities carried on by the previous Government. Sir, what is after all the general malady in this country. The malady is not the diseases which the hon. Members are talking about. The general malady which besets our country is the paucity of doctors and the shortage of funds which stand in the way of executing the programme. There cannot be two opinions as far as medical relief is concerned. There cannot be any difference of opinion as far as public health conditions or environment inour country are concerned. Every Party agrees that diseases have got to be eradicated but what is the way out. Either we must have enough doctors willing to serve in the rural parts or we should have enough money to sponsor those schemes. Sir, I am only reminded of the entire period of 20 years which we have traversed. About 20 years ago contagious diseases like plague, cholera, malaria smallpox and what not, were besetting the population. As far as plague is concerned, it is amatter of past history and we do not see any outbreak of plague now. But it used to be an annual occurrence in almost all villages 20 years ago. Also, when cholera broke out in a village, the entire people in the village have to be evacuated to the neighbouring village and the people used to run away leaving their belongings and useful things. Then everything was left to the mercy of God or the local medical man or whatever human agency there was in that village. Only when it subsided they used to come back. Now our medical men and the Department concerned have done yeoman service. It is not so prevalent now nor is it an annual occurrence in the villages. Now the occurrence of cholera is very rare. Even when it breaks out on important occasions like national festivals, means have go to be found out to eradicate it. Also, even before the outbreak of cholera, positive methods should be found out to prevent it. As the common adage goes, 'Prevention is better than cure'. For this, the Government will have to spend more money. We cannot help but move cut motions to reduce the allotment for this Demand, whereas we want that the Government should allot more money. It is the parliamentary convention that we should move cut motions. On the other hand we are for more allotment of funds for this field.

Now, I come to another Scheme called National Malaria Eradication Programme. In all villages we see the words 'N.M.E.P.' pasted all over. But what is the conceivable result ? Of course, it is not so dangerous as it used to be before. We must prevent the spread of this disease in the villages and also eradicate it. That is the reason why many of my colleagues want that medical facilities should be extended to the villages and notbe concentrated only in MadrasCity and other big cities. But how to tempt these doctors to go back to the villages ? It is very fine to talk about asking medical men to go back to the villages. Most of us have got a galmour for the City. In spite of our having been elected by the villagers, we want to stay in Madras City. That is because we have got all facilities in the City. The Hon. Minister for Education knows that medical education is one of the finest education that one can boast of, next to law. How on earth do we expect the doctor to go to the village ? He wants to be always in a very fine society, in a very good environment where everything is easily available. We know how the departments are straining themselves when a transfer is effected. Immediately somebody asks the Director of Medical Services or whoever the officer may be. Why don't you see that the transfer is cancelled and the incumbent posted back to the City ? That is the general malady. Someone else says 'I am interested in resea ch, I want to do M.S. or M.D. So please retain me in the city'. This is the problem which is causing great havoc to our improvement. My friends were making suggestions but they were very vague. Students who want to qualify themselves in medicine will have to be compelled to execute an agreement with the Government, similar to what is done in the Teachers College. Such of those teachers who want to get trained must execute a bond in favour of the Governor that they will work in the countryside for three years after training. Otherwise they must be prepared to shell out the stipend. That must be the condition. I know there are legal difficulties. Unless the Act is amended, we cannot compel a student to execute an agreement like that. Only after he executes a bond, educational concessions should be given. We get a sum of Rs. 100 per month per student from the Central Government. Dr. Sushila Nayyar launched upon a scheme of giving concessions only to those who were willing to do service in family planning. Many students have not come forward to take advantage of that. First they must accept this pre-condition and then only they must be given educational concessions. The concession must be entire, no question of half-fee. Such of those who are willing to go to the villages must be freely educated. After the conclusion of the course, you have got to post them in villages without consulting them. Living conditions in the villages will have to be improved. A doctor gets married soon after education and you cannot expect a couple to live in a place where there is not even good drinking water, no radio and nothing to be glamourous about. I am expatiating on general policies. I am not interested in these small affairs and in asking, 'Build a hospital in my constituency'. If I go to the Minister, he will certainly grant my request. These are the general maladies or common problems which have got to be faced. Any party in power will not be in a position to deliver the goods to the entire satisfaction of the nation unless it solves the problem of paucity of doctors and paucity of funds. Necessary funds will have to be made available.

In spite of the modern equipment that we are providing for the hospitals, we are far behind when compared to the conditions prevailing in foreign countries. I understand that in foreign countries

[Thiru K. Vinayakam] [1968 மார்ச் 12

they have got the latest equipment,they detect the disease immediately and give medical aid. Whereasour doctorshere, to diagnoseand find out what the disease is, send the patient to one department, then to another department and again to a third department and by the time they arrive at a possible conclusion. I am afraid he goes to the grave. That is the problem. We must have efficient men and they must be tempted to serve us. I find that most efficient men in different fields of medicine are away from us and are not with us. They are all very good and they have no glamour for medical service.

When the Hon. Chief Minister was continuously absent, I was very much worried. I want that he should be spared for our country and he must do his work. I never meant any offence to the doctors attending on him when I suggested a board of doctors. On second thought I thought that the doctors will pull up their faces when I go to the General Hospital thinking this is the villain of the piece and he was questioning our ability. What I wanted was some more efficient and t lented men to assist those doctors.

Family Planning is one of the vital questions which we will have to tackle. Family Planning is a vital thing which will deliver the goods. It should not at all be a propaganda affair. There is a feeling that we must have some tamasha and that we must invite some individual, legislator or Minister. The party that is now in power was against the loop system. How much inconvenience they feel now when they are invited to partake in the two-week celebration. Formerly we had only one-week celebration. Politics apart, they characterised the loop system as if it was a system that we (the Congress Party) invented. I am very glad that they have taken to it now.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** குடும்பக் கட்டுப்பாடு திட்டத்திற்கு திராவிட முன்னேற்றக் கழகம் என்றுமே மாறுபட்டு இருந்தது இல்லை. இன்னும் சொல்லப்போனால் சுயமரியாதை இயக்கம் தொடங்கப் பட்ட நாளிலிருந்தே அதற்கு ஆதரவு தருகின்ற வகையில் இருந்தது. லூப் சிஸ்டத்திற்கு, குறிப்பிட்ட கருத்தடை முறைக்கு மாறுபட்டு இருந்தது இல்லை. அதிலுள்ள குறைகளைப்பற்றிச் சொல்லும்பொழுது இது சரியாக இல்லை, பொருத்தப்படவில்லை என்று குற்றஞ் சொல்லியிருக்கலாமே தவிர, குடும்பக் கட்டுப்பாடுத் திட்டமே இருக்கக்கூடாது, இருக்க வேண்டாம் என்று சொல்லவில்லை.

**திரு. கே. விநயகம் :** அமைச்சர் அவர்கள் தமிழிலே பேசியதால் நானும் தமிழிலேயே பதில் சொல்ல விரும்புகிறேன். அதிகமான பிள்ளை பெற்றவர்களுக்குப் பரிசு கொடுத்ததும் இந்த நாட்டிலேதான் நடந்தது, இங்கேதான் நடந்தது..........

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இந்த அவையில் கொடுக்கவில்லை.

**திரு. கே. விநயகம் :** இந்த அவையில் இல்லை. அதற்கு ஆதரவாக இருந்தவர் இந்த அவையில்தான் இருக்கிறார்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அதிகமான குழந்தைகளைப் பெற்றவர்களுக்குப் பரிசு கொடுத்ததுகூட அவ்வளவு அதிகமான பிள்ளைகளையும் பெற்றுக் காப்பாற்றக்கூடிய திறமை இருப்பதற்காகத்தான் கொடுக்கப்பட்டதே தவிர அவர்கள் அதிகமாகப் பிள்ளைகள் பெறவேண்டுமென்பதற்காக அல்ல.



1968 மார்ச் 12]

THIRU K. VINAYAKAM : Finally, Mr. Deputy Speaker, there was a proposal to build a hospital in Tiruttani, there was a tangle among the local people and the Collector was shrewd enough to say that the consideration of the proposal had to be postponed on account of the emergency due to Chinese invasion. It was put in cold storage in the Secretariat. I request the Minister to revive it and see that the hospital is built.

*DR. H. V. HANDE : Hon. Deputy Speaker, Sir, at the very outset I wish to make a general observation with regard to the way in which funds have been allotted for these three Demands. Public Health has unfortunately been in the past several years something like the Cinderella of the Cabinet. There has always been a tendency to ignore public health. Even from a cursory glance of the allotments made, you will realise that the amount allotted to public health has not increased satisfactorily or to a proportionate extent compared for instance with the increase in allotment to Education Department. Ever since I entered the Legislature, I have been observing that the Public Health Demand has been standing between Rs. 12 to 13 crores. This is a very, very unfortunate thing which I want to bring to the attention of the Treasury Benches. பிற்

பகல்

Sir, unless the entire members of the Cabinet sit together and come to a decision, we cannot solve this problem. Public Health is a growing department just like Education where we appropriate more and more money. Unless we decide to increase the amount allotted for this Demand, we will not make any headway. If only we go through the cut motions which are nearly 100, and total the sums required for carrying out the schemes mentioned therein, I am sure we will find out that the amount will come to 20 to 40 crores of rupees which would be nearly 2 to 2½ times the allotted amount. Unless the Hon. Chief Minister who is also the Finance Minister gives a little more amount to the Health Minister, I am quite sure the Health Minister will not be in a position to do anything. 1-00

Now I come to the Draft Fourth Five-Year Plan (Madras State). On page 161 under the heading 'Control of Diseases' it is stated that out of Rs. 50 lakhs allotted towards Tentative Fourth Plan Outlay the actuals for 1966–67 are only Rs. 1·27 lakhs, the Revised Estimate for 1967–68 Rs. 3·53 lakhs and the Budget Estimate for 1968–69 of Rs. 4·26 lakhs. In other words, it is almost 1/25 of the amount to be spent during all the five years which is spent in the first year and nearly 1/12 of the amount allotted for this year. This is just to point out the callousness or the indifference with which we view the Public Health Department itself. Then on page 164 under the heading 'Control of Diseases—Tuberculosis', the Tentative Fourth Plan Outlay is Rs. 30 lakhs. The actuals for 1966–67 are Rs. 1·69 lakhs, less than 1/15 of the total outlay, Revised Estimate for 1967–68 Rs. 1·61 lakhs and the Budget Estimate for 1968–69 Rs. 0·94 lakhs—less than 1/30th of the total Outlay. This shows that we have neglected one of the most important departments, viz., Public Health. In this connection, I wish to point out one

thing. With regard to the one-rupee-a-measure rice scheme, the exact amount profited by the people is about Rs. 7 crores and the people involved are not large. Whereas if we spend one crore of rupees on public health, the people would profit to the extent of Rs. 4 to 5 crores. This is one aspect of the matter which I would like the Hon. Minister for Public Health to address himself and the Cabinet.

Now I come to the next point, viz., integration of Medical and Public Health Departments. I had expressed my views very clearly in unambigaus terms in my last Budget speech. I am against this integration. I am for the existence of two Directors one for Public Health and the other for Medical Services. I oppose this integration for the following reasons :—

1. Posting of Director of Medical Services as Director of Health Services would affect the natural development of Preventive Health. The posting of the D.M.S. who has no experience in the field of Health would do more harm than good.

2. This is in no way a measure of economy. This has cost Rs. 7½ lakhs extra expenditure to the Government.

Therefore, on this particular matter, I do not see eye to eye with the Government, especially the manner in which the integration was brought about. It was reported sometime back but it was brought in a sudden manner. I do not want to go into details. My submission is that it should have been done in a perfect order but unfortunately it has not been done in a proper order. I wish to have a clear-cutanswer from the Hon. Minister for Public Health.

Now, I come to the drug control administration. This is a very important matter. In this connection, I wish to read some excerpts from the recommendations of the Borkar's Committee which was appointed during the year 1964 by the Government of India, Ministry of Health, to study the conditions of the Drugs Control Administration in the different States and to recommend the steps to be taken to ensure effective enforcement of Drugs Act, 1940. It is stated :

'The Drugs Control Department is separate in many States such as Maharashtra, Kerala, Mysore and Gujarat. At present at Madras State, the Drugs Control Department is attached to the Director of Health Services, and the above Director is also the Drugs Controller for Madras State.'

The Borkar's Committee has recommended the following :—

'From all angles, the conclusion seems to be inescapable that in order to achieve better and more effective enforcement of the Drugs and Cosmetics Act,' there should be a full-time officer in charge who should be conversant with the manufacture of drugs, their testing and their standards in every State.'

So I request the Hon. Minister to consider this aspect of the matter



Next I come to nurses. There is an age-limit for nurses. After they are recruited, if it is found that they are overaged, they do not get a job either in the Government Office or outside and thus they are left in the lurch. I request the Hon. Minister to look into this aspect of the matter also.

Then I come to leprosy. Leprosy is a curable disease. But unfortunately people think that it is an incurable disease and treat the leper as an outcaste. It can be cured in the first or second stages before certain deformities have taken place. In this connection I want to pointout that the ghastly sight that wewitness in several places can be spared if a little more budget allotment is made towards the treatment of leprosy.

Now I come to the construction of new hospitals. Due to lack of funds the construction of new hospitals is making snail's progress. I request the Hon. Minister to allot more funds for the construction of new hospitals.

Next I want to refer to one other matter which my hon. Friend, Thiru Ellappa Bhagavathar, has asked me to raise. That is with regard to the hospital at Chingleput. The hospital employees have not been given dearness allowance. Even though they have put in a service of more than 14 years, they have not been made permanent. I request the Hon. Minister to look into this matter.

Now I come to the next point, viz., the panchayat unions. Most of the hon. Members are disgusted with the way in which we are able to make progress with regard to the construction of buildings especially for primary health centres. It is in regard to this matter something must be done immediately and unless the Cabinet sits together and discusses the matter, no tangible result can be achieved. In this connection, I would like to refer to a matter which my hon. Friend, Thiru K. M. Ramaswami Gounder wanted me to raise. That is with regard to the taluk headquarters hospital at Gobichettipalayam. No experienced doctor is posted there. That is a grievance of the people there and I request the Hon. Minister to look into the matter.

Then I come to another hospital which is in my constituency. I am referring to the General Hospital. It is the most important hospital in the State which caters to the needs of most of the members of the Legislature also. Even about 10 years ago, Dr. A. L. Mudaliar wanted that the Penitentiary should be removed from that place and the entire building should be handed over to the General Hospital authorities. I also request the Hon. Minister to look into this aspect of the matter and see that it is removed to some other place.

Now I come to the Integrated and Indian System of Medicine. Thereare thousands of doctors who are practising under these systems I request the Hon. Minister to look into their problems also.

Then I come to the Director of Sidha. There is a feeling that the Director of Sidha has not been appointed according to the rules and regulations. I hope the Hon. Minister will be able to give a proper answer that he has been appointed according to the rules and regulations. There is a consistent but dismal record in the utilisation of the planned funds by almost all the Health Ministries since Independence to this day. This is a question to which I would like the Ministry to address themselves. Unless we build hospitals, we will not be able to provide adequate medical relief to the people.

The time at my disposal is over. I request the Cabinet Members to sit together and later on come forward with a supplementary demand for Rs. 3 crores or 4 crores. Unless the people are given proper health and medical facilities, they will not be able to realise their hopes and aspirations from this Ministry.

THE HON. THIRU C. N. ANNADURAI : The hon. Member spoke as if to say that this integration of public health and medical dep rt ments was taken in a manner which made him think that it was not in order. I would like to inform him that this integration scheme wasordered in April 1966 by the previous Government and that we haveonly implemented it.

Another point that he was making very often was that the Cabinet Members should sit together before a lotting funds.

DR. H. V. HANDE : I know definitely that the Cabinet Members sit together. But I want the Government to consider this. In the last Ministry, Thirumathi Jothi Venkatachalam was the Minister for Public Health. Generally Health portfoloio is not given to the senior Minister. In the Cabinet the pull is on the other side. I would like the pull to be on this side.

THE HON. THIRU C. N. ANNADURAI : If asa doctor he feels that more funds should be given to medical departments, as a patient I endorse it. But the hon. Member should point out wherefrom is the money to be taken.

*திரு செ. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த மருத்துவக் கோரிக்கை மீது நான் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இதன் மீது வெட்டுப்பிரேரணை கொண்டு வரும்போது இதன் செலவைக் குறைக்க வேண்டுமென்று கொண்டு வரவில்லை. வெட்டுப் பிரேரணை கொண்டு வருவதின் மூலம் இதுபற்றி விவாதிக்க சந்தர்ப்பம் இருக்கிறது என்பதினால் தான். ஒருவேளை அதைக் கூட்டுவதற்கு விதிகள் வசதியாக இருந்தால் நிச்சயமாக இந்த மானியத்தின் மீதுள்ள செலவைக் கூட்ட வேண்டுமென்று கேட்டிருப்போம். தற்போது கிராமங்களில் பலவித முறைகளில் வைத்தியம் செய்து வருகிறார்கள். ஹோமியோபதி படிப்பு படித்து விட்டு சில பேர்கள் அடிப்படை வைத்திய யோக்கியதாம்சம் இல்லாமல் கிராம மக்களிடையே வைத்தியம் செய்து வருகிறார்கள். அடிப்படை வைத்திய யோக்கியதாம்சங்கள் எதுவும் இன்றி சித்த, யுனானி வைத்திய முறைகளில் வைத்தியம் செய்து வருகிறார்கள். அவர்கள் அலோபதி மருந்துகளை உபயோகித்து வைத்தியம் செய்கிறார்கள். அவர்கள் ஆன்டிபையாட்டிக்ஸ் மருந்துகளை உபயோகிக்கும்போது அதனால் பல கெட்ட விளைவுகள் ஏற்படுகின்றன. ஆகவே, இந்த அரசாங்கம் தன் பொறுப்பில் ஹோமியோபதி வைத்தியர்கள் எந்த முறையில் பயிற்றி



விக்கப்பட வேண்டும், எந்த விதமான யோக்கியதாம்சங்கள் அவர்களுக்கு இருக்க வேண்டும், சித்த, யுனானி வைத்தியர்களுக்கு எந்த வகையில் பயிற்சியளிக்க வேண்டும், அவர்களுக்கு என்னவித யோக்கியதாம்சங்கள் இருக்க வேண்டும் என்ற வகையில் ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தால் தான் இந்த க்வாக் டாக்டர்களிடமிருந்து மக்களை காப்பாற்ற முடியும். அவர்கள் அலோபதி மருந்துகளை வைத்து வைத்தியம் செய்வதால் அடிப்படை வைத்திய யோக்கியதாம்சங்கள் அவர்களுக்கு இல்லாததன் விளைவாக கெடுதல்கள் பல நேரிடுகின்றன. ஆகவே எல்லாவற்றையும் ஒழுங்குபடுத்தும் வகையில் அலோபதி, ஹோமியோபதி, சித்த, யுனானி டாக்டர்களுக்கு என்னென்ன அடிப்படை யோக்கியதாம்சங்கள் இருக்க வேண்டும், எப்படி அவர்கள் பயிற்றுவிக்கப்பட வேண்டும் என்பவைகள் பற்றி ஒரு சட்டம் கொண்டு வரப்படவேண்டும். அப்படி ஒரு சட்டம் கொண்டு வருவது இந்த அரசாங்கத்தின் அதிகாரத்திற்கு அப்பாற்பட்டதாக இருந்தால் அகில இந்திய ரீதியில் மத்திய அரசாங்கம் அதுபற்றிய ஒரு சட்டத்தை கொண்டு வர இந்த அரசாங்கம் கேட்டுக்கொள்ள வேண்டுமென்று இந்த அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன். கிராமங்களில் போதிய வைத்திய வசதிகள் இல்லை. இது பலதடவை பல உறுப்பினர்களால் இம்மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. கிராமப் புறங்களில் வைத்திய வசதி மிகக் குறைவான நிலையில் இருக்கிறது. நம் நிதி வசதிகளுக்கு அப்பாற்பட்டதாக இருக்கிறது என்று சொல்லலாம், அந்தக் கஷ்டங்களை நான் உணருகிறேன். நான் கேட்டுக்கொள்வது, ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் ஒவ்வொரு ப்ரைமரி ஹெல்த் சென்டர் ஏற்படுத்தி அதில் நடமாடும் வைத்திய வசதியுள்ள ஒரு வானை வைத்து வாரத்திற்கு ஒரு முறை பல கிராமங்களை ஒரு கூட்டாக வைத்து அங்கு சென்று வைத்திய வசதி அளிக்கும் முறையை ஏற்படுத்தினால் கிராம மக்களுக்கு வசதியாகயிருக்கும். ஆகவே, எல்லாப் பஞ்சாயத்து யூனியன்களிலும் ஒரு ப்ரைமரி ஹெல்த் சென்டர் ஏற்படுத்தி நடமாடும் வைத்திய வான் ஒன்றும் கொடுக்கப்பட வேண்டும்.

அடுத்து, சமீபத்தில் சென்னை அரசினர் மருத்துவ மனையில் பயிற்சி பெற்ற நர்ஸ்ஸுக்கு 1967 ஜனவரியில் பயிற்சி பெற்றவர்களுக்கு வேலை கிடைக்காமலிருக்கிறது. சில பேர்களுக்குத்தான் கொடுத்திருக்கிறார்கள். 1967 ஜூனில், 1968 ஜனவரியில் பயிற்சி பெற்றவர்களுக்கு வேலை கிடைக்கவில்லை. அவர்கள் வேறு தனியாகச் சென்று வேலை பார்க்கவும் முடியாத நிலையிருக்கிறது. தனிப்பட்ட டாக்டர்கள் நர்ஸ்களை வைத்துக்கொண்டு வேலை செய்வதில்லை. பயிற்றுவிப்பதன் நோக்கமே இவர்கள் எல்லோருக்கும் அரசாங்க ஆஸ்பத்திரிகளில் வேலை கொடுப்பதற்காக அல்ல. தனிப்பட்ட டாக்டர்களும் அவர்களை வேலைக்கு வைத்துக்கொள்ளவேண்டும். நான் அரசாங்கத்தினிடம் ஒன்று கேட்டுக்கொள்கிறேன். நம் அரசினர் இந்திய அரசினரை அணுகி தனிப்பட்ட முறையில் பயிற்சி செய்கிற ஒவ்வொரு டாக்டரும் ஒன்றுக்கு மேற்பட்ட நர்ஸஸ், ஒன்றுக்கு மேற்பட்ட கம்பவுண்டர்கள் இவர்களை வைத்துக் கொள்ளவேண்டும் என்று மெடிக்கல் சட்டத்தைத் திருத்த வழிவகை செய்யுமானால் இந்த நர்ஸஸ், இந்த கம்பவுண்டர்கள் இவர்களின் வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்னை தீர்ந்துவிடும். ஆகவே அரசாங்கமே எல்லோருக்கும் வேலை கொடுக்க முடியாவிட்டாலும்கூட தனிப்பட்டவர்கள் இவர்களை வேலையில் எடுத்துக்கொள்ள வேண்டிய வசதிகள் சட்டத்தில் செய்யப்படவேண்டும்.

அடுத்து, குடிநீர் பற்றி பெருந்துறையில் ஒரு திட்டம் போட்டார்கள். அதை சென்ற அரசு போட்டது. திரு. சுப்பையா முதலியார் அவர்கள் குறிப்பிட்டதுபோல் அது தேர்தலுக்காகக்கூட இருக்கலாம். அவசர அவசரமாக முதலில் அடிக்கல் நாட்டினார்கள். பிறகு உத்தரவுகள் எல்லாம் போட்டார்கள். இப்போதிருக்கிற அரசுக்கு அதை நிறைவேற்றுகிற பொறுப்பு வந்திருக்கிறது. அடிக்கல் நாட்டி, உத்தரவுகள் போட்டபின்னர், வருடம் ஒன்றாகியும் வேலைகள் நடக்கவில்லை. அதற்காக சென்ற ஆண்டு மூன்று லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. அதுபற்றி பிரதம என்ஜினியர், சூப்பரென்டெண்டிங் என்ஜினியர், டிவிஷனல் என்ஜினியர், இவர்களை

அனுமதி கேட்கும்போது அவர்கள் நல்ல வார்த்தைகளாகப் பேசி, அவர்கள் சொல்கிற சமாதானம் நன்றாகப் படுகிறதென்றாலும் காரியத்தில் ஏதாவது நடக்கிறதா என்றால் ஒன்றும் நடப்பதில்லை. அந்த மூன்று லட்சம் ரூபாயை எப்படிச் செலவு செய்தார்கள் அல்லது பணத்தைச் செலவு செய்யாமல் விட்டுவிட்டார்களா என்றுகூட சந்தேகம் ஏற்படுகிறது. அந்தப் பகுதி ஒரு வரண்ட பகுதி, பஞ்சத்தால் பாதிக்கப்பட்ட பகுதி அது. பெருந்துறையில் குடம் தண்ணீர் பத்து பைசா என்று விற்கிறது. அத் திட்டத்திற்கு 42 லட்சம் ரூபாய் செலவாகும் என்று சொன்னார்கள். காங் கேயத்திற்கு அதை விஸ்தரிப்பதாகச் சொன்னார்கள். அப்படி விஸ்தரிப்பது பற்றி ஆட்சேபணையில்லை. அங்குள்ளவர்களுக்கும் குடி நீர் வேண்டும். அப்படி விஸ்தரிப்பதானால் 58 லட்சம் ரூபாய் செலவாகும் என்று சொன்னார்கள். அந்த வேலையை ஆரம்பித்துவிடுங்கள். அப்போதுதான் அங்குள்ள மக்களுக்கு நம்பிக்கை ஏற்படும். பிறகு அதை விஸ்தரிக்க வேண்டுமென்றால் விஸ்தரிக்கும் முறையில் அதை புனரமைக்கலாம் என்று கூறி என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. அ. லெ. சுப்பிரமணியம்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கைகளை வரவேற்று ஒரு சில வார்த்தைகள் குறிப்பிட விரும்புகிறேன். நான் முதலில் குறிப்பிட விரும்புவது இந்திய மருத்துவ முறைகளைப் பற்றித்தான். பாளையங்கோட்டையில் இந்திய மருத்துவம் பற்றிய ஒரு கல்லூரி இருக்கிறது. சென்ற அரசு, திட்டமிடாதபடி அந்தக் கல்லூரியை ஆரம்பித்து விட்டுப்போனதால் இப்போது பலவிதத் தொல்லைகள் ஏற்பட்டு, அங்குள்ள மாணவர்களுக்கு பல சலுகைகள் தரப்படவில்லை என்ற புகார்கள் எழுந்தன. அதுகுறித்து அங்குள்ள மாணவர்கள் வேலை நிறுத்தம் செய்திருந்தார்கள். அப்போது நான் தலையிட்டு அறிஞர் அண்ணா அவர்களையும், சுகாதார அமைச்சர் அவர்களையும் விருதுநகரில் சந்தித்து அதற்கான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டதன் பேரில், அவர்கள் தலையிட, அவர்கள் வார்த்தைக்கிணங்கி மாணவர்கள் வேலை நிறுத்தத்தைத் திரும்பப் பெற்றுக் கொண்டார்கள். அதற்காக நான் முதல் அமைச்சர் அவர்களையும், சுகாதார அமைச்சர் அவர்களையும் பாராட்டிக்கொள்கிறேன். மாணவர்களின் குறைகளில் முக்கியமானவை சில மாணவர்களுக்கு ஸ்டைபண்ட் வரவில்லை, லெக்சரர்ஸ் போடவில்லை, வாகன வசதிகள் இல்லை என்பன போன்றவைகளாகும். அக்குறைகளை எல்லாம் உடனடியாகக் களைந்திருக்கிறார்கள் அமைச்சர் அவர்கள். மாணவர்களின் குறைகளைக் கேட்பதில் இந்த அரசு மிக மிக அக்கறை கொண்டுள்ளது என்பது இதிலிருந்து தெளிவாகிறது. அதற்காக மாணவர்கள் சார்பில் அறிஞர் அண்ணா அவர்களுக்கும், சுகாதார அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இன்னொரு குறைபாடு, இந்திய மருத்துவம் பற்றி டாக்டர் மேத்தா அவர்கள் தலைமையில் ஒரு கமிட்டி போட்டிருந்தார்கள். அக்கமிட்டி இரண்டு முக்கிய சாரத்தைச் சொல்லியிருக்கிறார்கள். எம்.பி., பி.எஸ். படித்த டாக்டர்களுக்கு என்னென்ன தகுதிகள் தரப்படுகின்றனவோ, அவர்களுக்கு என்ன சம்பளம் தரப்படுகிறதோ அவையெல்லாம் பி.ஐ.எம். பட்டம் பெறுகிறவர்களுக்கும் தரப்பட வேண்டுமென்ற கொள்கையை மேத்தா கமிட்டி வலியுறுத்தியிருக்கிறது.

இரண்டாவது, வியாதியைக் கண்டறிய, டயக்னோசிஸ் செய்ய மாடர்ன் எக்விப்மெண்டை உபயோகப்படுத்தலாம். ஆனால், மருந்து தருவதில் இந்திய மருந்தைத் தரவேண்டுமென்று கொள்கையாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இவைகளைப்பற்றி அரசாங்கம் சீக்கிரம் முடிவெடுக்க வேண்டும். வெளியேறியுள்ள மாணவர்களுக்கு நல்ல வசதிகளைச் செய்து தர வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு யோசனையையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு இருக்கும் மாணவர்களுக்கு பி.யூ.சி. அடிப்படைக் கல்வித் தகுதியாக இருக்கிறது. எம்.பி.பி.எஸ். படிப்பவர்களுக்கும் பி.யூ.சி. அடித்தளத் தகுதியாக இருக்கிறது. அதனால் எம்.பி.பி.எஸ். படித்த டாக்டர்



களுக்கு நாங்கள் குறைந்தவர்கள் என்ற எண்ணம் ஏற்படுகிறது. இதைத் தவறாகத் தோன்றாத வகையில், இந்திய மருத்துவத்திலே அக்கறை இருந்தால் எம்.பி.பி.எஸ். படித்த பிறகு மற்ற ஸ்பெஷலிஸ்டுகளைப்போல் இந்திய மருத்துவத்திற்கும் சென்று இரண்டாண்டு காலம் அல்லது மூன்றாண்டுகாலம் மேல் பட்டப் படிப்பாக "ஸ்பெஷலைஸ்டு கோர்ஸ்" ஆக வைத்துக்கொள்ளலாம். தேவையில்லை என்று கருதினால் எஸ்.எஸ்.எல்.சி. தகுதியோடு மூன்றாண்டு காலம் "டிப்ளமா கோர்ஸ்" ஆக வைத்து விடலாம். இரண்டில் ஒன்றைக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

மருத்துவக் கல்லூரியில் அட்மிஷனைப் பற்றிப் பல புகார்கள் குறிப்பிடப்பட்டன. ஒன்றே ஒன்றை மட்டும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அமைச்சரவர்கள் நெல்லையில் சுற்றுப்பிரயாணம் செய்யக்கூடிய நேரத்தில், காங்கிரஸ் கட்சியிலே பெரிய காங்கிரஸ்காரர் என்று பாராட்டப்படும் ஆலங்குளம் பஞ்சாயத்து யூனியன் தலைவர் அமைச்சரவர்களுக்கு வரவேற்பு தந்தார்கள். அவ்வாறு அமைச்சரவர்களுக்கு வரவேற்பு தரும் நேரத்தில், சுகாதார அமைச்சரவர்களைப் பாராட்டி விட்டு, இந்த ஆண்டுதான் மெடிகல் காலேஜ் அட்மிஷன் பாராட்டத் தக்கமுறையில் இருந்தது என்று கூறிப் பாராட்டியதைக் காங்கிரஸ்காரர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

டாக்டர் ஏ. எல். முதலியார் : அவர்களின் கமிட்டி ரிப்போர்ட்டிலே 50 லட்சம் பேர்களுக்கு அதிகமாக உள்ள இடங்களில் மெடிகல் காலேஜ் ஆரம்பிக்க வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறது. ஆனால் செங்கல்பட்டில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. செங்கல்பட்டில் 30 லட்சம், 32 லட்சம் தான் ஜனத்தொகை இருக்கிறது. சென்னையிலிருந்து 30 மைல் தூரத்தில்தான் செங்கற்பட்டு இருக்கிறது. சென்னையிலேயே 3 கல்லூரிகள் இருக்கின்ற பொழுது செங்கற்பட்டிலே ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கம் என்ன ? ஒன்று முன்பிருந்த காங்கிரஸ் தலைமையமைச்சர் அவர்கள் அந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்பதற்காக இருக்க வேண்டும் அல்லது செங்கற்பட்டில் மத்திய சர்க்காரின் மிக்க செல்வாக்கு பெற்ற அமைச்சர் ஒருவர் இருந்த காரணத்தினால் ஆரம்பிக்கப்பட்டிருக்க வேண்டும் என்று கருதுகிறேன். முதலில் "கன்டென்ஸ்ட் எம்.பி.பி.எஸ். கோர்ஸ்" ஆக இருக்கிறது என்று சொன்னார்கள். இன்று ரெகுலர் கோர்ஸாகவே ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அடுத்து, திருநெல்வேலி பகுதியில், மருத்துவக் கல்லூரியில் படித்தவர்கள் வருவதற்கே அச்சப்படுகிறார்கள். திருநெல்வேலியை அவர்கள் "பனிஷ்மெண்ட்" ஏரியா என்று கருதுகிறார்கள். சென்னையிலே இருக்கக்கூடியவர்களின் திறமை எங்கள் மாவட்டத்திலும் பயன்படும் வகையில் இங்கேயிருக்கும் நிபுணர்களை அங்கே மாற்றித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

தச்சநல்லூர், காயல்பட்டினம், விளாத்திகுளம் ஆகிய இடங்களில் பிரைமரி ஹெல்த் செண்டர்கள் வேண்டும். அவைகளுக்கு சப்-செண்டர்களும் அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

குடும்பக்கட்டுப்பாடு திட்டத்தில் இரண்டு முறைகள் இருக்கின்றன. ஒன்று ஆண்களுக்கானது, மற்றொன்று பெண்களுக்கானது. பெண்களுக்காக இருக்கும் திட்டத்தில் "லூப்" இருக்கிறது. அதை அவர்கள் எப்பொழுது தேவையோ அப்பொழுது புகுத்திக்கொள்ளலாம். அது தற்காலிக செட்டப்பாக இருக்கிறது. ஆண்களுக்கோ ஆப்பரேஷன் பர்மனெண்ட் முறையில் அமைந்து விடுகிறது. இதனால் அவர்கள் ஆண்மை இழந்து விட்டோமே என்று நினைக்கிறார்கள். இதனால் ஒருவித அச்சம் "இன்ஃபீரியாரிட்டி காம்ப்ளெக்ஸ்" அடைகிறார்கள். அதனால் அவர்கள் இதில் அதிகம் ஈடுபடுவதில்லை. ஆகவே, ஆண்களுக்கும் "லூ"

[திரு. அ. லெ. சுப்பிரமணியம்] [1968 மார்ச் 12

முறையைப் போல், "டெம்பரரி"-யாக இருக்கக்கூடிய முறையைக் கண்டு பிடிக்க முடியுமா என்று ஆராய்ந்து பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

திருநெல்வேலியில் பாதாள சாக்காடைத் திட்டம் வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். அதையும் கூடிய விரைவில் முடித்துத்தர வேண்டு மென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். பாளையங்கோட்டைக்கு 12½ லட்சம் ரூபாய்த் திட்டத்தில் நீர்த்தேக்கம் வேண்டுமென்று கேட்டிருந்தோம். அதையும் அமைச்சரவர்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகின்றேன்.

**திரு. ஏ. அ. சுப்பராஜா :** தலைவரவர்களே, இந்த வெட்டுப் பிரேரணை மீது ஒரு சில வார்த்தைகள் சொல்ல விழைகிறேன். இந்த மெடிகல் துறையிலே எல்லாம் வியாதிகள் வந்த பிறகு செய்யக்கூடியது. இதில் "பிரிவெண்டிவ் மெஷர்ஸ்" என்றமுறையில் பப்ளிக் ஹெல்த் தான் அதிக முக்கியத்துவம் வாய்ந்தது. மலேரியா, ஸ்மால் பாக்ஸ், ஊப்பிங் காஃப், டிஃப்தீரியா போன்ற வியாதிகள் வந்த பிறகு நாம் மருத்துவத்திற்கு அதிகச் செலவு செய்ய வேண்டிய நிலையிலிருக்கிறோம். இந்தச் செலவைக் குறைக்கவேண்டும். ஆகையால் பப்ளிக் ஹெல்த்தில் அதிகக் கவனம் செலுத்தவேண்டும். "புரொடெக்டட் வாட்டர் சப்ளை அண்ட் டிரெய்னேஜ் ஸ்கீம் போர்டு" என்று வைக்கவேண்டும். அந்தப் போர்டை வைத்து அதன் மூலம் புதிய வழிகளை மேற்கொள்ள வேண்டும். நமது "நேஷனல் புரொடெக்டட் வாட்டர் சப்ளை ஸ்கீம்" திட்டத்திலிருந்து இந்திய அரசாங்கம் கொடுக்கக்கூடிய பணத்தை அதன் மூலமாகக் கேட்டு, நல்ல முறையில் போர்டைப் பயன்படுத்தி எல்லா இடங்களிலும், கிராமங்களிலும் இந்த "புரொடெக்டெட் வாட்டரைக்" கொண்டு வந்தால் மிக்க நல்ல முறையிலே இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து நகர சபைகளில் இருக்கும் சிக்கலை சொல்ல விரும்புகிறேன் நகரசபை பொருளாதார நிலையில் பின்தங்கி இருந்தாலும், வாட்டர் ஸ்கீம் கிடைப்பதற்கு அரசாங்க நிபந்தனைகளை ஒப்புக்கொள்ளுகிறோம் பின்னுல் கட்ட முடியாத நிலையில் சிக்கல்கள் வருகிறது. கவுன்சிலில், டேப் ரேட்டை கூட்டும்படி அரசாங்கம் வற்புறுத்தும் நிலையில், என்னைப் போன்ற, சாரதி, காசிராமன், போன்ற நகர சபைத் தலைவர்களுக்குப் பெருத்த தலைவலி உண்டாகிறது. இங்கு அரசியலும் புகுந்துகொண்டு, அரசாங்கமும் நடவடிக்கை எடுக்காத நிலையும் ஏற்படுகிறது. இதை யோசித்து வாரியம் தன்னிச்சையாக செயல்பட்டால், முனிசிபல் Public Fountin கேட்டால்,. அதை நகரசபையிடமும் Rate வசூலிக்கவும், Private Fountain தனிப்பட்டவர்களிடம் வாங்க ஏதுவாகவும், நல்ல முறையில் Scheme நடக்கும்.

மருத்துவத் துறையிலே முக்கியமாக நான் சொல்லவேண்டியது என்ன வென்றால், எங்கு பார்த்தாலும் மாவட்டத் தலைமையிடம், வட்டத் தலைமை யிடத்திலேயே ஆஸ்பத்திரிகள் இருக்கின்றன. வெள்ளைக்காரர்கள் இருந்த பொழுது டிஸ்டிரிக்ட் ஹெட்குவார்ட்டர்ஸ், தாலூகா ஹெட்குவார்ட்டஸ் என்பது அவர்களுக்குச் சௌகர்யமாக இருந்தது. அதை அவர்கள் கடைப் பிடித்து அந்த முறையிலேயே நடத்தப்பட்டது. ஜனத் தொகை அடிப் படையிலேயே ஆஸ்பத்திரிகளை நாம் அமைக்க வேண்டும். வியாதி யஸ்தர்கள் எங்கு அதிகமாக இருக்கிறார்களோ அங்கு தான் அமைக்க வேண்டும். அதை விட்டுவிட்டு ஹெட்குவார்ட்டரஸில் அமைத்திருக்கிறது என்றால் யார் போய் அங்கு படுத்துக்கொள்வது ? உதாரணமாக இராஜ பாளையம் ஜனத்தொகை கிட்டத்தட்ட 85,000 ஆகும். இது இராமநாத புரம் ஜில்லாவில் ஜனத்தொகையில் முதல் இடம் பெற்று உள்ளது. மற்ற விருதுநகர், ஸ்ரீவில்லிப்புத்தூர், அருப்புக்கோட்டை ஆகிய நகரங் களின் ஜனத்தொகை இதில் பாதிக்கும் குறைவு. ஆனால் இராஜபாளை யத்தில் படுக்கை வசதி 36 தான். இருப்பினும் விருதுநகரில் 118 படுக்கைகள், 7 டாக்டர்கள், அருப்புக்கோட்டையில் 66 படுக்கைகள், 4 டாக்டர்கள், ஸ்ரீவில்லிப்புத்தூரில் 50 படுக்கைகள், இராமநாதபுரத்தில்



1968 மார்ச் 12] [திரு. ஏ. அ. சுப்பராஜா]

100 படுக்கைகள் இருக்கின்றன. இவ்வாறு ஹெட்குவார்ட்டர்ஸில் இருக்கவேண்டுமென்பதை நாம் மாற்றி ஜனத்தொகை அடிப்படையில் வர வேண்டும். இந்தக் கொள்கையை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மருந்து சம்பந்தமாக ஒரு சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படு கிறேன். "கொட்டேஷன்ஸ்" கால் ஃபார் செய்து ரொம்பக் குறைவான விலையிருப்பதாகப் பார்த்து மருந்துகள் வாங்கப்படுகிறது. மருந்தின்— "குவாலிட்டியைப்" பார்ப்பதில்லை. அதை ஓரளவு கட்டுப்படுத்த வேண் டும். "குவாலிட்டி" இல்லாத மருந்தைச் சாப்பிட்டால் சீக்கு கூடித்தான் வருகிறதே தவிர குறைய மாட்டேனென்கிறது. இதை நல்ல விதத்திலே அரசாங்கம் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அங்கெல் லாம் பேப்பர் ஸ்டேஷனரி கொடுக்கப்படவில்லை. நான் அட்வைசரி கமிட்டி யிலே மெம்பராக இருப்பதால் அங்கே இருக்கிற குறைகள் எனக்கு தெரி கின்றன. ஸ்டேஷனரி இல்லாத காரணத்தால் நோயாளிகளிடம் 10 பைசா கொண்டுவா என்று கேட்கிறார்கள். அவர்கள் கொண்டுவரவில்லை யென்று சொன்னால் பிறகு வந்து பாரும் என்று சொல்லுகிறார்கள். அது வரையிலும் "சிக்" இருக்க முடியாது. ஆகவே, அதையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த டவுன் பிளானிங் சம்பந்தமாக ஒரே ஒரு வார்த்தை . . . . . .

பிற் பகல் 1-30

***திரு. கே. பி. எஸ். மணி :** மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர் களே, என்னுடைய வெட்டுப் பிரேரணையைக் குறித்து இரண்டொரு கருத்துக் களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். பொதுவாக எனக்கு முன் பேசிய அங்கத்தினர்கள் எல்லோரும் எல்லாக் கருத்துக்களையும் எடுத்துக் கூறி னார்கள். அதுவும் மிக முக்கியமாக நமது மருத்துவத் துறை அமைச்சர் அவர்கள் திடீர் சோதனைமூலம் பல விஷயங்களைத் தெரிந்துகொண்டார்கள் என்பதையும் குறிப்பிட்டார்கள். அது நீடிக்கப்பட வேண்டிய கருத்திலே மட்டும் இரண்டொரு விஷயங்களை குறிப்பிட ஆசைப்படுகிறேன்.

முதலிலே நான் சொல்ல விரும்புவது பள்ளிக்கூடங்களிலேயே நாம் சுலபமாக நோய்கள் பரவாமல் தடுத்து விடலாம் என்பது தான். "எலி மெண்டரி எஜுகேஷன்" என்று சொல்லுகின்ற 5-வது வகுப்பு வரை படிக்கும் ஒவ்வொரு மாணவனுக்கும் 6-வது 7-வது வகுப்புகளில்— படிக்கிற மாணவனுக்கும் "மெடிக்கல் ஃபிட்" செய்கின்ற ஒரு முறையை ஏற்படுத்தி அவனை பரிசோதனை செய்வதன் மூலம் சுலபமாக அவனுக்கு இருக்கிற நோயைக் கண்டு பிடித்து விடலாம். ஒரு குறிப்பிட்ட முறைப்படி பள்ளிக்கூடங்களில் இருக்கிற ஒவ்வொரு குழந்தையையும் "பிளட் செக்" செய்து, அவர்களுக்கு ஏதாவது வியாதி இருந்தால் அந்த வியாதிகளையும் ஆரம்பத்திலேயே தடுத்து விட முடியும் என்ற முறையை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசாங்கம் இன்று இருக்கின்ற நிலையில் அதற்குள்ள நிதி நிலையில் அதிகமாகச் செலவு செய்ய முடியாது என்ற ஒரு நிலைமை இருக்கிறது என்பது நமக்கு நன்றாகத் தெரிகிறது. இருப்பினும், இப்படி செலவழிக் கப்படுகின்ற தொகை நியாயமாக ஜனங்களுக்குப் போகின்றதா என்று பார்த்து, அதைத் துரிதமாகக் கண்காணித்தாலே ஓரளவு நான் கூறிய அத்தனை குறைகளையும் நீங்கள் நிவர்த்தி செய்ய முடியும் என்பது வெள் ளிடை மலையாக இருக்கிறது. காரணம் பல பல இருக்கின்றன என்று சொல்ல ஆசைப்படுகிறேன். தஞ்சாவூர், சென்னை போன்ற இடங்களில் இருக்கின்ற பெரிய ஆஸ்பத்திரிகளிலே சில்லறை சிப்பந்திகள், சானிட்டரி யாளர்கள், தொழிலாளர்கள், காண்ட்ராக்டர்கள் இவர்கள் செய்கின்ற ஒரு கீழ்த்தரமான செயல்களினால் மேல் நிலையில் இருக்கின்ற அமைச்சரவை கூட மக்களைச் சரியான முறையில் கண்காணிக்கவில்லை என்ற குறை இருந்து வருகிறது மக்களிடத்திலே. அவர்கள் செய்கின்ற கீழ்த்தரமான காரியங்களினால் மேல் நிலையிலே இருக்கின்றவர்கள் மேல் பொதுமக்களுக்கு இந்த மாதிரி ஒரு எண்ணம் ஏற்படுகின்றது என்று வலியுறுத்திச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக "டாலுக் ஹெட்க்வார்ட்டர்ஸில்" இருக்கிற ஒவ்வொரு மருத்துவ மனையிலும் "பிளட் பாங்குகள்" அவசியம் இருக்க வேண்டும். அதோடுகூட, ஆம்புலன்ஸ் ஒன்று இருக்க வேண்டிய அவசியத்தையும் நான் எடுத்துக் கூற விரும்புகிறேன். கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னாலே எங்கள் ஊரிலே ஒரு கொலை நடந்தது. சாதாரண கத்திக் காயம் பட்டு ஒரு பெண் இறந்தாள். காரணம், அவளை துரிதமாக ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வந்து சேர்க்க முடியாத நிலை. அதே மாதிரி ஒரு மாதத்திற்கு முன்பு கொலை செய்ததாக ஒருவன் கைது செய்யப்பட்டான். கொலை செய்யப்பட்டவனுக்கு சாதாரணக் கத்திக் காயம் தான் பட்டது. ஆனால் இறந்து விட்டான். இடது கையிலே காயம் பட்டது, ஆனால் இறந்து விட்டான். வேறு ஒரு காயமும் கிடையாது. முதலுதவி செய்யக் கூடிய வசதியும் வாய்ப்பும் இல்லாத காரணத்தாலே அந்த சகோதரர் இறந்து போனார். ஆகவே, ஒவ்வொரு "ஹெட்க்வார்ட்டர்ஸ்" ஆஸ்பத்திரியிலேயும் ஆம்புலன்ஸ் ஒன்று வைக்கப்படவேண்டியது அவசரமான காரியம். இதை அரசாங்கம் வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கிராமங்களிலே டாக்டர்கள் கட்டாயமாக, நிச்சயமாக வேலை செய்ய வேண்டும் என்று நிர்ப்பந்தப்படுத்தப்படவேண்டும். எப்படி டிரெய்னிங் ஸ்கூலிலே படித்தவர்கள் சரியாக கிராமப் புறங்களில் வேலை செய்யாவிட்டால் அவர்களுக்குக் கொடுக்கின்ற கிராண்டை நாம் வசூல் செய்கின்றோமோ அதே போல் டாக்டர்கள் கிராமங்களிலே நிச்சயமாக, கட்டாயமாக சேவை செய்யவேண்டுமென்று 1957-லிருந்து நான் சொல்லிக்கொண்டிருக்கிறேன். அதைப் பற்றி சர்க்கார் பரிசீலிக்கப்போவதாகத் தெரிகிறது. அதைப் பரிசீலித்து இந்த அரசாங்கம் ஒரு முடிவு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தேர்வுக் காலத்திலே ஒவ்வொரு ஆண்டும் மருத்துவக் கல்லூரியில் தேர்வு பெறுபவர்களுடைய பட்டியலைப் போட்டு, அவர்களுடைய மார்க்குகளையும் போட்டு போர்டிலே தொங்கப் போடுவார்கள். ஆனால், ஏனோ இந்த ஆண்டிலே அது தொங்கவிடப்படவில்லை. சாதாரணமாக நான் கேள்விப்படுவது என்னவென்றால், பிற்பட்ட வகுப்பினருக்கு ஒதுக்கப்படுகின்ற "ரிசர்வ்டு சீட்டுகள்" 16 அவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. ஆகையினால் தான் அதைத் தொங்கப் போடவில்லை என்று ஒரு புகார் இருக்கிறது. அதை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அடுத்து, நர்சுகள் தேர்விலே இருக்கிற சிரமங்கள் இதற்கு முன்னாலே நமது தமிழகத்துப் பெண்கள் நர்சுகள் உத்தியோகத்திற்கு வருவதில்லை. வெளியிடங்களிலிருந்து வந்து கொண்டிருந்தார்கள். ஆனால், இப்பொழுது பெரிய இடத்துப் பெண்கள், வசதி வாய்ப்பு உள்ளவர்கள், எல்லோரும் இந்த உத்தியோகத்திற்கு வர வேண்டுமென்ற விருப்பத்திலே இருக்கிறார்கள். ஆகவே, தயவு செய்து அதிலே இருக்கிற குறைபாட்டை போக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தமிழ்நாட்டிலே இருக்கிற பெண்களுக்கும் படித்தவர்களுக்கும் முதலிடம் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அத்தகைய வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வெளிநாட்டிலே யாருக்காவது குஷ்டரோகம் இருந்தால், தன்னுடைய டாக்டரிடத்திலே போய் எனக்குக் குஷ்டரோகம் இருக்கிறது என்று சொல்லிவிடுவான். ஆனால் நம் நாட்டிலே இருக்கிற சகோதரர்கள் அதை சட்டை போட்டோ அல்லது விபூதி பூசியோ மறைத்து விடுகிறார்கள். ஆகவே, குஷ்டம் பரவுவதற்கு வசதியாக இருக்கிறது. அப்படிப்பட்டவர்களைத் தனி இடங்களுக்குக் கொண்டு போகவேண்டுமென்று சொல்வதோடு இந்த பிரைமரி ஹெல்த் சென்டர்கள் பஞ்சாயத்து யூனியன்களிலே இருக்கின்றன. ஆனால் அவைகள் பஞ்சாயத்து யூனியன் கண்ட்ரோலிலும் இல்லாமல், டிஸ்டிரிக்ட் ஹெல்த் ஆபீஸர் கண்ட்ரோலிலுமில்லாமல் இரட்டை ஆட்சியாக இருக்கிற முறையினாலே, அந்த டிபார்ட்மெண்டிலே அவர்களைக் கண்டிப்பதற்கு யூனியன் கமிஷனர்களால் முடியாத ஒரு நிலை இருக்கிறது. அவர்கள் எதைச் செய்தாலும் கேட்க முடியாத ஒரு நிலை இருக்கிறது. ஆகவே, தயவு செய்து அமைச்சர் அவர்கள் முழுவதும் ஹெல்த் டிபார்ட்மெண்டின் பொறுப்பிலோ அல்லது முழுவதும் யூனியனுடைய பொறுப்பிலோ விட வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இறுதியாக இந்த குடும்பக் கார்டு விஷயத்திலே....





**திரு. பி.ஜி. கருத்திருமன் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, அவை முன் வைத்திருக்கும்படியான இந்த மானியத்தின்மீது எங்கள் கட்சியின் சார்பிலே கொடுக்கப்பட்டிருக்கும் சில வெட்டுப் பிரேரணைகளையொட்டி சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன்.

பொதுவாக, ஒரு க்ஷேமநல சர்க்காரிலே உணவு, சுகாதாரம், கல்வி இந்த மூன்றும் எவ்வளவுக்கெவ்வளவு எளிதாகக் கிடைக்கின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு நல்லது என்பதோடு இந்த மூன்றும் எளிதாகக் கிடைக்குமானால் அந்த சர்க்காரால் நன்றாக செயல்பட முடியும் என்பதை யாரும் மறுத்துக் கூறமுடியாது. இருந்தாலும் கூட, நமது சென்னை மாநிலத்திலே இருக்கும்படியான இந்த மருத்துவ, பொதுச் சுகாதாரத் துறைகள் சம்பந்தமாக என்னுடைய பேச்சை மூன்று பகுதிகளாகப் பிரித்துப் பேச விரும்புகிறேன்.

முதலிலே, இவற்றிலே ஈடுபட்டிருக்கும்படியான நம் வைத்தியர்களைப் பற்றி. இரண்டாவது நிர்வாகம். மூன்றாவது பொது மக்களுக்கு எவ்வளவு தூரம் இவை பயன்படுகின்றன என்னும்படியான பிரச்சினை.

முதலிலே, நமது சென்னை மாநிலத்தைப் பொறுத்தவரையில், நமது வைத்திய நிபுணர்கள் அகில உலகத்திலேயும் மிகவும் சிறந்தவர்கள் என்றால் அது மிகையாகாது. எதிர்க்கட்சி என்றாலே எதற்கெடுத்தாலும் எதிர்த்துப் பேசுவதை விட்டு விட்டு ஆக்க பூர்வமான நல்ல காரியங்களுக்கு நல்ல ஆலோசனைகளை சொல்ல வேண்டுமென்ற முறையிலே சிலவற்றைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

இன்றைய நிலையிலே உலகத்திலே, சுகாதாரம், மருத்துவம், மருந்துகள் எல்லாம் விஞ்ஞான முறையிலே தயாரிக்கப்படுவதனால் தான் ஏதேதோ நோய்கள் எல்லாம் கட்டுப்படுத்தப்பட்டு, அடங்கி ஒடுங்கி இருக்கும்படியான ஒரு நிலையிலே, ஓவாப் பிணி இருக்கும்படியான நிலையிலே இருக்கிறோம் என்று சொன்னால் அது மிகையாகாது.

சென்னை மருத்துவக் கல்லூரியிலே பட்டம் பெற்ற மருத்துவர்களுக்கு அமெரிக்காவிலேயும் கிராக்கி இருக்கிறது. இலண்டனிலும் நம் மாணவர்கள் எல்லாம் போய் சிறப்பாக இருக்கிறார்கள். (மாண்புமிகு திரு. மு. கருணாநிதி குறுக்கீடு) ஓவாப்பிணி நீங்கும்படியான ஒரு நிலையிலே, பிணிகள் கட்டுப்பட்டு இருக்கக்கூடிய ஒரு நிலையிலே அடக்கி இருக்கிறோம். தவறாகச் சொன்னதற்கு மன்னித்துக்கொள்ளவேண்டும். தவறைத் திருத்தியதற்கு நன்றி.

அப்படி இருக்கும்படியான நிலையிலே இலண்டனிலே நம்முடைய மாணவர்கள் சிறப்பாக பணி புரிகின்றார்கள். அமெரிக்காவிலும் பணியாற்றுகிறார்கள். நமது டாக்டர்கள் வெளி நாட்டிலே தெரிந்துகொள்வதற்கு ஒன்றும் இல்லை என்னும் படியான நிலை கூட இருக்கிறது.

காலஞ் சென்ற டாக்டர் குருசாமி முதலியார் அவர்கள் எங்கள் குடும்ப வைத்தியர். ஒரு சமயம் அவர்கள் வெளிநாடு சென்று திரும்பியபொழுது வெளிநாடு போனீர்களே என்ன என்று கேட்டேன். அங்கே போய் எனக்குக் கற்றுக்கொள்வதற்கு ஒன்றும் இல்லை. என்னிடத்திலே பலர் கற்றுக்கொள்ளும்படியான நிலை தான் இருக்கிறது என்று அவர் என்னிடத்தில் சொன்னார்.

நம்முடைய மருத்துவத்திலே இருக்கும்படியான டாக்டர்கள், அங்கு வேலை செய்யும்படியான டாக்டர்கள், சிறந்தவர்களாக, உயர்ந்தவர்களாக, நன்றாக பணி புரிபவர்களாக இருக்கிறார்கள் என்பதற்காக நம்முடைய பாராட்டுதல்களை தெரிவிக்காமல் இருக்க முடியாது.

ஆனால், இந்த டாக்டர்கள் நமது நோயாளிகளுக்கு எவ்வளவு தூரம் பிரயோஜனப்பட்டார்கள் என்று கேட்டால் கடந்த ஆண்டு நிலையைப் பார்த்தால் யாருக்கும் பலனில்லாமல் போய் விட்டது என்பதைத் தான் வருத்தத்துடன் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இவ்வளவு நல்ல டாக்டர்கள் எல்லாம் பட்டணத்திலே தான் இருக்கிறார்கள். கீழான நிலையிலே அவர்களுக்கு கிராமப் புறத்திலே போய் வேலையை ஏற்றுக்கொள்வதற்கு மனம் வருவதில்லை. ஆகவே, அவர்கள் வெளியிடங்களுக்குப்போய் சர்க்காரிடத்திலே குறைந்த ஊதியம் பெறுவதை விட, தனிப்பட்ட முறையிலே போனால் சரி என்று அந்த நிலையிலே அவர்கள் போய் விடுகிறார்கள். ஆகவே, நம்முடைய டாக்டர்களின் மேல் குறை காண முடியாது. இன்றையதினம் இன்ஜினீயர்கள் வேலையில்லாத் திண்டாட்டத்திலே இருக்கிறார்கள். ஆனால், டாக்டர்களைப் பொறுத்தமட்டில், இந்தப் படித்த டாக்டர்கள் மட்டும் அல்ல, படிக்காதவர்கள் சிலர் டாக்டர்கள் என்று பெயர் வைத்துக்கொண்டே எவ்வளவோ சம்பாதிக்கும்படியான நிலையிலே இருந்து கொண்டிருக்கிறார்கள்.

இந்த மன்றத்திலே இருக்கும்படியான இந்த மானியக் கோரிக்கையைப் பார்க்கிற நேரத்தில், நம்முடைய டாக்டர்கள் எந்த அளவுக்கு நம்முடைய மக்களுக்குப் பயன்படுகிறார்கள் என்று பார்த்தால், எதிர்பார்த்த அளவிலே நிச்சயமாக இல்லை என்பதைத் தான் கண்டிப்பாக சொல்லிக்கொள்ளமுடியும். ஆகவே, உலகத்திலே சிறந்த நம்முடைய வைத்தியர்களைக் கொண்டிருந்தாலும் நம் நாட்டிலே இன்று மக்களைப் பற்றி எண்ணும்போது, வருந்தத்தக்க நிலையிலே தான் இருக்கிறோம். இதற்கெல்லாம் ஏற்பாடு செய்யவேண்டுமானால், மருத்துவத் துறைக்கு அதிகமாகப் பணம் செலவழிப்பது மட்டுமல்ல, கிராமப் பகுதிகளில் மருத்துவர்கள் வேலை செய்வதற்கு அதிக வாய்ப்புக் கொடுக்கவேண்டும். அவர்களுக்கு வேண்டிய வசதிகள் செய்து தரவேண்டும். அதற்கு என்னுடைய ஆலோசனை என்னவென்றால், அதிகமாகப் பட்டப் படிப்பை விட, டிப்ளோமா கோர்ஸ் வைத்து, எஸ். எஸ். எல். ஸி. படித்தவர்களுக்கு பழைய எல். எம். பி. கோர்ஸ் மாதிரி வைத்து, நான்கு வருஷம் படிக்கக் கூடிய ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தினால், கிராமப் புறத்தில் இருப்பவர்களுக்கு வசதியாக இருக்கும், கிராம மக்களுடைய சுகாதார நலனுக்கு பயனுள்ளதாக இருக்கும். லைசென்ஷியேட் இன் மெடிகல் பிராக்டிஸ் என்று பழைய காலத்தில் இருந்த டிப்ளமா கோர்ஸை எடுத்துவிட்டபடியால், இப்பொழுது இந்தப் படிப்புக்கு பிரஷர் ஜாஸ்தியாகி, கிராக்கி அதிகமாகி, இடம் கிடைக்கவில்லை என்ற ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, பழையபடி அந்த எல். எம். பி. கோர்ஸை மீண்டும் துவக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்தால் டாக்டர்கள் கிராமப் பகுதிகளில் தொண்டு புரிவதற்கு ஒரு சாதகமான நிலை ஏற்படும் என்று ஆலோசனை கூறிக் கொள்கிறேன். பொது சுகாதாரத் துறைக்கு ஒதுக்கியிருக்கும் பணத்தைவிட மருத்துவத் துறைக்கு அதிகமாகப் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. பொது சுகாதாரத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கும் பணம் மிகக் குறைவு. மருத்துவத் துறைக்கு அதை விட இரண்டு பங்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. டாக்டர்களுக்கு செலவழிப்பதை, பொது சுகாதாரத்திற்கு செலவழித்தால் நலமாக இருக்கும், நோய் வருவதற்கு முன்பு தடுக்கும்படியான முறைகளைக் கையாண்டால் மருத்துவத்திற்கு குறைவாக செலவழிப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்பது என்னுடைய அபிப்பிராயம்.

பொது சுகாதாரத்தை எடுத்துக்கொண்டால், பல பகுதிகள் இருக்கின்றன. நேற்று முன் தினம் ஒரு கல்யாணத்திற்குப் போயிருந்தேன். ஸ்லம் பகுதிகளைப் பார்த்தால், குடி தண்ணீர் வசதி கூட இல்லாமல்,



சேற்றுடன் குழம்பிய தண்ணீருக்கு மத்தியில் மக்கள் வாழ்கிறார்கள் பொதுச் சுகாதாரம் நல்ல நிலையில் இல்லை. குறிப்பாக ஸ்லம்களில், அங்கெல்லாம் பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் வசதி, டிரைனேஜ் ஸிஸ்டம் ஆகிய வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டும். கிராமப் புறங்களில் வாழும் மக்களுக்கு இந்த வசதிகளை செய்து கொடுத்தோமானால், மருத்துவத் துறைக்குச் செலவு செய்யப்படும் தொகையைக் குறைத்துக்கொள்ளலாம்.

அடுத்தபடியாக, பிரதம சுகாதார நிலையங்கள்பல இடங்களில் இருந்தும், அநேக இடங்களில் டாக்டர் இல்லாத குறை இருந்து கொண்டிருக்கிறது. பட்டியலை எடுத்தால் டாக்டர்களை போஸ்டு செய்திருக்கலாம், ஆனால் அந்தப் பகுதிகளுக்கு டாக்டர்கள் போவதில்லை. 268 சுகாதார நிலையங்கள் இருந்தும் 50 சுகாதார நிலையங்களில் தான் டாக்டர்கள் இருக்கிறார்கள் என்ற நிலைமை இருக்கிறது. டாக்டர்களைப் பெயருக்குப் போட்டிருந்தாலும் கூட, டாக்டர் இல்லாத சுகாதார நிலையங்கள் தான் அதிகம் இருக்கின்றன. சுகாதார நிலையங்கள் நல்ல முறையில் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. நூற்றுக்கணக்கான நோயாளிகள் வந்து சிகிச்சை பெறுவதற்கு ஏற்றவையாக இருக்கின்றன. கிராமப் பகுதிகளிலுள்ள சுகாதார நிலையங்கள் அந்த வகையில் நன்றாக பணி புரியக்கூடிய வகையில் அமைந்திருக்கின்றன. ஆகவே, திட்டப்படி நான்காவது ஐந்தாண்டு இறுதி வருஷத்திற்குள் 1972-ம் வருடத்திற்குள் 375 சுகாதார நிலையங்கள் ஏற்பட்டு விடும் என்று அமைச்சர் அவர்கள்அறிக்கையில்சமர்ப்பித்திருப்பதை நான் வரவேற்கிறேன். எல்லா பிளாக்குகளிலும் இந்த சுகாதார நிலையம் நிச்சயம் வரவேண்டும். எல்லா நிலையங்களிலும் நிச்சயம் டாக்டர்கள் இருக்கவேண்டும். அதற்கு வேண்டிய வசதிகளைச் செய்துகொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்கு போதுமான அளவுக்கு ஊதியம் கொடுக்கப்படாததினால் தான் டாக்டர்கள் கிராமங்களுக்குப் போகாமல், தனிப்பட்ட முறையில் தொழில் நடத்தப் போய் விடுகிறார்கள். இருந்தாலும் கூட, இரண்டு விதமாகச் செய்தால் நிலைமை திருப்திகரமாக இருக்கும் என்று நினைக்கிறேன். பட்டணத்தில் இருப்பவர்களுக்குக் குறைவாக சம்பளம் கொடுக்கவேண்டும். கிராமத்தில் போகிறவர்களுக்கு 50 சத வீதம் அதிகமாகச் சம்பளம் கொடுக்கப்படும் .என்று இந்த சர்க்கார் அறிவிக்க வேண்டும். அந்த நிலையில் நிச்சயம் கிராமங்களுக்கு எல்லாவிதமான டாக்டர்களும் போய் பணி புரிவார்கள் என்பதில் சந்தேகமே கிடையாது. அந்தமான் தீவில் போய் டாக்டர் பணி புரியவேண்டுமென்றால், மூன்றில் ஒரு பங்கு ஜாஸ்தி கொடுக்கிறார்கள். எக்ஸ்ட்ராவாக ஊதியம் கொடுக்கிறார்கள். ஆகவே, என்னுடைய ஆலோசனை என்னவென்றால், 5,000 ஜனத்தொகை உள்ள கிராமங்களுக்குச் சென்று பணி புரியும் டாக்டர்களுக்கு 50 சத வீதம் சம்பளம் அதிகமாகக் கொடுக்கிறோம் என்று சர்க்கார் அறிவிப்பார்களேயானால், நிச்சயம் அநேக டாக்டர்கள் கிராமப்புறங்களுக்குச் சென்று சேவைசெய்வதற்கு முன் வருவார்கள். (குறுக்கீடு) கிராமப் புறத்தில் இருக்கும்படியானவர்கள் தான் அதிகமான வரிகளைக் கொடுக்கிறோம். (குறுக்கீடு) என்னுடைய பையன் அங்கு தான் சேவை செய்வான். நான் நிச்சயம் சிபார்சு செய்வேன். அதோடு மட்டுமல்ல. வசதியுள்ளவர்கள் இலவசமாக சிகிச்சை அளிக்க முன் வருவார்களேயானால், அதையும் நான் ஆதரிக்கத் தயாராகக் காத்துக்கொண்டிருக்கிறேன். ஆகவே, அது மாதிரி நிலையை கிராமப் புறத்தில் ஏற்படுத்தவேண்டும். இந்தப் பிரச்னையை தீர்க்க வேண்டுமென்றால், பட்டணத்தில் ரூ. 400 சம்பளம், கிராமத்திற்குச் சென்றால் ரூ. 600 சம்பளம் என்ற நிலை அறிவிக்கப்படுமானால், ஒரு இடம் பாக்கி இல்லாமல் எல்லாக் கிராமங்களுக்கும் நிச்சயம் டாக்டர்கள் சென்று இருப்பார்கள். அது தான் சமதர்ம நிலையை நாட்டுவதற்கு வழி. கிராம மக்களுக்கு நன்மை செய்வதற்கு அது தான் வழி, அந்த வகையில் ஏற்பாடுகளைச் செய்தால் தான் கிராம மக்கள் நல்ல முறையில் சுகாதாரத்தோடு வாழச் செய்ய முடியும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

கடைசியாக ஒரு நண்பர் சொன்னார். மருத்துவக் கல்லூரி அட்மிஷன் பற்றி பேசுங்கள் என்று தெரிவிப்பது போல் குறிப்பிட்டார்கள், "மிகவும் நியாயமாக நடந்தது, அதைப் பாராட்டுகிறேன்" என்று அங்கத்தினர்

அவர்கள் சொன்னார்கள். நான் அதைப் பற்றி மிகவும் வருத்தத்துடன் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்த வருஷம் மருத்துவக் கல்லூரி அட்மிஷன் பட்டியல் தயாரிப்பதில் எவ்வளவு தவறுதல்கள் நடந்துள்ளன என்பதையெல்லாம் சர்க்கார் தீவிரமாக சிந்தித்துப் பார்த்து, இந்த முறையில் தான் இனிமேல் அட்மிஷன் நடக்கும் என்று திட்டவட்டமாக ஒரு முறையை வகுத்துக்கொள்ளவேண்டும். அப்படிச் செய்தால் மிகவும் நல்மாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். இந்த வருடம் நடந்த அட்மிஷனில் பலவிதமான புகார்கள் வந்திருக்கின்றன. முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பழைய காலத்தில் ராஜாக்கள் நகர் சோதனைக்கு செல்வது வழக்கம். இப்பொழுது தான் ஸி.ஐ.டி. முறை இருக்கிறதே. ஆகவே, தமிழ்நாட்டில் நகர சோதனைக்குப் போகும்படியான நிலை இல்லை. முதல் அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். எத்தனையோ புகார்கள் வந்திருக்கின்றன. அவர்களுடைய காதுக்கும் வந்திருக்கும். எல்லோருடைய காதுகளுக்கும் வந்திருக்கும். இந்த எம்.எல்.ஏ-ஐப் பிடித்தால் ஸீட்டு கிடைக்கும்.— இந்த அமைச்சரைப் பிடித்தால் ஸீட்டு கிடைக்கும், இந்த எம். எல். ஏ-க்கு இவ்வளவு கோட்டா, இந்த அமைச்சருக்கு இவ்வளவு கோட்டா என்றெல்லாம் இருப்பதாக புகார்கள் வந்துகொண்டிருக்கின்றன. இந்தநிலைமை. இப்பொழுது மட்டுமல்ல. பழைய காலத்திலும் இருந்து வந்திருக்கிறது ஆனால், இது மாதிரி பொது மக்களிடத்தில் மிகவும் கெட்ட நம்பிக்கை எப்பொழுதுமே பரவியதில்லை என்ற குற்றச்சாட்டை மிகவும் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு திரு சி. என். அண்ணதுரை :** இந்த வருஷம் கெட்ட பெயர் அதிகமாகப் பரவியிருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லுகிறார்கள். அந்தக் கெட்ட பெயரை பரப்ப பொறுப்பேற்றுக் கொண்டிருப்பவர்கள் மத்தியிலே அவர்கள் இருப்பதனால், அப்படி அவர்கள் கருதுகிறார்கள் என்று நினைக்கிறேன். அதற்கு நேர் எதிர்மாறாக மருத்துவக் கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்க்கின்ற முறையைப் பற்றி உயர் நீதி மன்றத்திற்குக் கொண்டுவரப்பட்ட வழக்குகள், மேல் உயர் நீதி மன்றம் வரையில் சென்று, மாவட்ட வாரியாக கோட்டா தருவது தவிர, மற்ற எதுவும் தவறுதலாக அவர்களால் குறிப்பிடப்படாமல், அந்தத் திட்டத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்பதை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் உணரவேண்டும்.

**திரு பி. ஜி. கருத்திருமன் :** முதல் அமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார்கள். ஆனால், இவர்கள் இல்லை என்று மறுத்த 25 மாணவர்களுக்கு இடம் கொடுக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே இது எந்த நிலையிலே நியாயம் என்பதை யோசித்துப் பார்க்கவேண்டும். ஏனென்றால், பணக்காரர்கள், வசதி உள்ளவர்கள் கோர்ட்டுக்கு போகலாம் அவர்களுக்கு இடம் கிடைக்காமல் இருந்தால். ஆனால், சாதாரணக் குடும்பத்தைச் சேர்ந்த மாணவன் மார்க்குகள் வாங்கியிருந்தாலும் கூட, இடம் கிடைக்கவில்லை யென்றால், கோர்ட்டுக்குக் போக முடியாத நிலை துர்ப்பாக்கிய நிலையாக இருக்கிறது. எனவே தான்..

**மாண்புமிகு திரு சி. என். அண்ணதுரை :** 25 பேர்களுக்கு இடம் கொடுக்கவேண்டும் என்று ஹைகோர்ட்டு உத்தரவிடவில்லை. மறு பரிசீலனை செய்யவேண்டும் என்று தான் குறிப்பிட்டார்கள். மறுபரிசீலனை செய்வதாலேயே அவர்கள் சேர்த்துக்கொள்ளப்படவேண்டும் என்ற அவயசிம் கூட குறிப்பிடப்பட்டதா என்றால், இல்லை. வழக்கு மன்றங்களில் அல்லாது வெளியிலேயும் பல புகார்கள் சொல்லப்பட்டதாக நண்பர் அவர்கள் சொன்னார்கள். மந்திரிக்கு இவ்வளவு, எம்.எல்.ஏ-க்கு இவ்வளவு என்றெல்லாம் கோட்டா பிரித்ததாக சொன்னார்கள். (குறுக்கீடு) இந்தப் பக்கத்தில் மட்டுமல்லாமல், உங்கள் பக்கத்திலிருந்தும் வந்த சிபார்சுக் கடிதங்கள் என்னிடம் நிறைய இருக்கின்றன. அந்த சிபார்சுக் கடிதங்கள் படி நடக்கவில்லை என்று ஆதாரம் சொல்லவேண்டுமானால், அந்தச் சிபார்சுக் கடிதங்களின்படி யாரும் சேர்க்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



**திரு. பி.ஜி. கருத்திருமன் :** இப்பொழுது இருக்கும்படியான விஷயம் என்னவென்றால், முன்பு ஒரு கமிட்டி போடப்பட்டிருந்தது. இப்பொழுது ரீஜனல் கமிட்டி என்று மூன்று கமிட்டிகள் போடப்பட்டன. முதலில் அமைச்சர் அவர்கள் மெடிகல் காலேஜுக்கு தகுதி, திறமையின் அடிப்படையில் மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்று சொன்னார்கள். ஆனால், திடீரென்று 15 நாட்கள் கழித்து மூன்று பக்கத்தில் கமிட்டி போட்டார்கள். அப்படிப் போடப்பட்டும் அவர்கள் சொல்கிறார்கள், நீதி மன்றத்தில் மற்றவிஷயங்கள் சரி என்று சொல்லப்பட்டுவிட்டதாகச் சொல்கிறார்கள். நீதிமன்றம் மார்க்லிஸ்டைக் கொடுங்கள் என்று கேட்டசமயத்தில் ஏன் அது அழிக்கப்பட்டுவிட்டது என்று சொல்லவேண்டும் ? சிறந்த முறையில் இது அமைக்கப்பட்டிருந்தால், சிறந்த முறையில் மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தால், அரசாங்கம் மார்க் லிஸ்டு இல்லை என்று சொல்வதற்குக் காரணம் என்னவென்று எனக்குத் தெரியவில்லை.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணதுரை :** காரணம் தெரிந்தே எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகிறார்கள். மார்க் லிஸ்டு அழிக்கப்பட்டு வருவது நாங்கள் பொறுப்பேற்றுக்கொண்ட இந்த வருடத்தில் மட்டுமல்ல. சென்ற வருஷங்களில் அவர்கள் இருந்தபொழுதும் மார்க் லிஸ்டை அழித்துவிடுவதுதான் பழக்கமாக வைத்துக்கொண்டிருந்தார்கள்.

**திரு பி.ஜி. கருத்திருமன் :** கோர்ட்டுக்குப் போகும்படியான சமயத்தில் அப்பொழுது மார்க் லிஸ்டு கேட்டிருந்தால், நிச்சயம் கொடுக்கப்பட்டிருக்கும். எனக்குத் தெரியும், ஓரளவுக்கு அட்மினிஸ்டிரேஷன் பற்றி. நிச்சயம் கொடுக்காமல் இருப்பதற்காகத்தான் மார்க் லிஸ்டு அழிக்கப்பட்டுவிட்டது என்று சொன்னார்களே தவிர, நிச்சயம் மார்க் லிஸ்டு இருந்துகொண்டுதான் இருக்கிறது. கொடுக்காமல் இருப்பதற்குத் தான் அழித்துவிட்டதாகச் சொல்லிவிட்டார்கள். அப்படிக் கொடுக்காமல் இருப்பதற்காக அழித்துவிட்டோம் என்று சொல்லுகிறார்கள். என்னுடைய குற்றச்சாட்டு, கமிட்டி லிஸ்டைக் கொடுத்த பிறகு அதை 15 நாட்கள் வரையில் வெளியிலே பிரசுரிக்கப் படவில்லை என்பதுதான். அப்படி 15 நாட்கள் அரசாங்கத்திலேயே அந்த லிஸ்டு இருந்ததால், அந்த வேளையில் என்னென்ன தவறுகள் நடந்திருக்குமோ என்றுதான் சந்தேகப்படவேண்டிய நிலையில் இருக்கிறோம்.

**மாண்புமிகு திரு சி. என். அண்ணதுரை :** எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் தன்னையும் அறியாமல் சொல்லுகிறார்கள். உயர் நீதி மன்றத்திற்கு வழக்குகள் சென்றபோதும், அதைப் பற்றிச் சொல்லப் படவில்லை. எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் தவறான கருத்து வரும்படி பேசியிருக்கிறார்கள். உயர் நீதி மன்றத்திலேயும் தரப்பட்ட தீர்ப்பில் அட்மிஷன் கமிட்டியின் சிபாரிசின்பேரில் செய்யப்பட்ட முடிவுகள் பற்றியும் அந்தக் கமிட்டிகளில் இருந்தவர்கள் பற்றியும் குறிப்பிடும்போது, நல்ல முறையில செய்யப் பட்டிருக்கின்றன என்றுதான் பரிந்துரை வந்திருக்கிறது. 15 நாட்கள் வரை வைத்துக் கொண்டிருந்தார்கள். அந்த நேரத்தில் ஏதோ தவறுகள் நடந்துவிட்டன என்று புகாராகப் பேசப்பட்டிருக்கலாம். அடுத்து, நம்முடைய நண்பர் குறிப்பிட்டார்கள், ஹைகோர்ட்டில் அவர்களை எடுக்கச் சொன்னார்கள், ஆகவே அதில் ஏதோ கோளாறுகள் இருந்தன என்றார்கள். உண்மை என்னவென்றால், 29 இடங்கள் காலியாக இருந்தன. அப்படி காலியிடங்கள் இருப்பதால், இந்த ஹைகோர்ட்டில் மனுப்போட்ட மாணவர்களையும் சேர்த்துப் பரிசீலனை செய்யுங்கள் என்றார்கள். அவர்களைச் சேர்த்துக்கொள்ளவேண்டும் என்று குறிப்பிடவில்லை. சேர்த்துக் கொள்ளத்தான் வேண்டும் என்ற அவசியமும் இல்லை. அவர்களும் பரிசீலனைக்கு இடம் கொடுக்கப்படவேண்டும் என்றார்கள், இடங்கள் காலியாக இருந்தால். சுப்ரீம் கோர்ட் வரையில், ஜட்ஜ்மெண்ட் கொடுக்கும் வரை, நாங்கள் எடுத்துக்கொண்ட ஒரு முறையாகிலும் தவறு என்று சொல்லவில்லை. ஆனால் ஒரு யோசனை கூறியிருக்கிறார்கள். அவர்கள் சொல்லியிருக்கும் யோசனை என்ன என்றால், மாவட்ட வாரியாக ஒதுக்

கும் "கோட்டா" சரியானதல்ல, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இத்தனை மாணவர்கள் என்று வைத்து இடங்கள் கொடுப்பது சரியில்லை, அது வேண்டாம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஹைகோர்ட்டின் முடிவு வேறு மாதிரியாக இருந்திருக்குமேயானால், என்னென்ன மாதிரியான பிரசாரங்கள் இருந்திருக்கும் என்பதும் தெரியும். அந்த நிலையில் இப்பொழுது இருக்கும் ஹைகோர்ட் முடிவிலும் ஏதாவது கொஞ்சம் சொல்ல வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சொல்வது, அவருடைய சாமர்த்தியத்தைக் காட்டுமே அல்லாது, நிலைமையை விளக்காது.

**திரு பி.ஜி. கருத்திருமன் :** சபாநாயகர் அவர்களே, இந்த விளக்கமும் பூரண திருப்தியை அளிக்கவில்லை. முதலிலேயே லிஸ்டு வந்தது, எல்லா இடங்களும் நிரப்பப் பட்டுவிட்டன. ஆனால், பின்னால் 29 இடங்கள் காலியாக இருக்கிறது என்று சொல்வது, அவர்கள் தங்கள் தவறை மறைக்க, சிலரை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலையைப் பார்த்து, செய்தது. சர்க்காராகப் பார்த்து எதை வேண்டுமானாலும் செய்யலாம். ஏற்கனவே பூரணமாக எல்லா இடங்களும் நிரப்பப்பட்டு விட்டன. ஆனால், பின்னால், அட்ஜஸ்ட்மெண்ட் என்கிற மாதிரியில், இடம் காலி என்று சொல்லி, அவர்களாகவே ஏற்படுத்திய ஒரு நிலை என்று சந்தேகிக்கும் நிலையில்தான் பொது மக்களாகிய நாங்கள் இருக்கிறோம். முதலிலேயே அனுமதிக்கப்பட்ட இடங்களுக்கு எல்லாம் தேர்ந்தெடுத்தாகி விட்டது. காலி இடங்கள் இருப்பதாக நிச்சயமாகப் போடவில்லை. ஒரு ஜில்லாவிற்கு 56 இடங்கள் என்றால், அந்த 56 இடங்களும் கொடுத்தாகிவிட்டது என்கிற நிலைதான் இருந்தது.

**மாண்புமிகு திரு சி. என். அண்ணாதுரை :** இது மிக முக்கியமான பிரச்சினையாக இருப்பதால், இந்த அவையில் தவறான கருத்து, எதிர்க் கட்சித் தலைவர் சொல்லியிருப்பதால், அந்தத் தவறு அவைக் குறிப்பில் அப்படியே ஏறக்கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். லிஸ்டு வந்து 15 நாட்கள் கழித்துத்தான், தாமதித்துத்தான் வெளியிடப்பட்டது என்பது சரியில்லை. சர்க்காரிடத்தில் அந்த லிஸ்ட் கொடுக்கப்பட்டது, 26-10-67 அன்று. அதை நாங்கள் வெளியிட்டது 27-10-67 அன்று. ஆகையினால் 15 நாட்கள் தாமதத்திற்குப் பிறகுதான் வெளியிட்டார்கள் என்று இன்னமும் வலியுறுத்திச் சொல்வதானால், நிச்சயமாக சட்ட மன்ற விதிமுறைகளின்படி அதை நீக்குவதற்கான வழிமுறைகளைத் தேட வேண்டியிருக்கும். அப்படிப் பட்ட புகார்கள் சொல்லியிருக்கலாம். ஆனால், 15 நாட்களுக்குப் பிறகுதான் நாங்கள் வெளியிட்டோம் என்பதற்கு மாறான பட்டியலை நான் கொடுத்தேன். 26—10—1967 அன்று கொடுக்கப்பட்டது. 27—10—1967 அன்று வெளியிடப்பட்டது. பத்திரிகைகளில் வெளியிடப்பட்டது 27-ம் தேதி. ஆகவே, எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள், 15 நாட்கள் தாமதித்துத்தான் வெளியிட்டார்கள் என்று சொல்வதைத் திரும்பப் பெற்றுக் கொள்ளவேண்டும். அது சர்க்காரைப் பாதிக்கும் என்றதால் அல்ல. எதிர்க் கட்சித் தலைவர், மிக்க அனுபவம் உள்ள சட்ட மன்ற உறுப்பினர் இல்லாததைச் சொன்னார்கள் என்று அவைக் குறிப்பில் ஏறுவது சரியாக இருக்காது, அவர்களுக்கு. 29 இடங்கள் காலியாக இருந்தன என்றால், தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் 29 பேர்கள் "ஸெலக்டட் கேண்டிடேட்ஸ்" வேண்டாம் என்று சொல்லிவிட்டதால் இந்த 29 இடங்களும் காலியாகிவிட்டன.

**திரு பி.ஜி. கருத்திருமன் :** முதல் அமைச்சரவர்கள் விளக்கத்தை ஏற்றுக் கொள்ளத்தயாராக இருக்கிறேன். பொறுப்புடன் முதல் அமைச்சர் சொல்வதை ஏற்றுக் கொண்டாலும், 27-ம் தேதி அக்டோபர் வரைக்கும், இரண்டு மாதங்கள் வரை ஆகவேண்டிய நிலைமை, ஏன் அப்படி வந்தது என்று கேட்கத்தான் வேண்டியிருக்கிறது.

**மாண்புமிகு திரு சி. என். அண்ணாதுரை :** நான் மறுத்துச் சொல்வது, "பட்டியல் தரப்பட்டு, 15 நாட்கள் தாமதத்திற்குப் பிறகு வெளியிட்டோம்" என்று சொன்னது தவறு.





**திரு. பி.ஜி. கருத்திருமன் :** அந்த முடிவைச் சொல்ல அக்டோபர் வரைக்கும் ஆயிற்று என்று பொறுப்போடு முதல் அமைச்சர் சொல்கிறார்கள் என்றால் அதை நான் ஏற்றுக் கொள்ளத்தயாராக இருக்கிறேன். எனக்குக் கிடைத்த தகவலை வைத்து நான் குறிப்பிட்டேன்.

**மாண்புமிகு திரு சி. என். அண்ணாதுரை :** நான் சொல்கிறேன் என்பதற்காக அல்ல ; உண்மையிலேயே தங்களுடைய பெயரிலே ஒரு தவறு அவைக் குறிப்பில் இருப்பது சரியில்லை என்றுதான் சொல்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் ;** முதல் அமைச்சர் சொன்னதற்குப் பிறகு நான் சொன்னது தவறு என்று ஏற்றுக்கொள்கிறேன். பொறுப்புடன் முதல் அமைச்சர் சொன்னதற்குப் பிறகு நான் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை என்றால், அது என்னுடைய பண்பாட்டிற்குத் தகாததாக இருக்கும். ஆனாலும் அக்டோபர் வரைக்கும் தேர்வு இருக்கவேண்டுமா, ஜூலை மாதத்தில், ஆகஸ்டு மாதத்தில் போட்டு இருந்தால் சந்தேகத்திற்கு இடம் வந்திருக்காதே என்பதைத்தான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். நியாயமான சந்தேகம் வரும் நிலை ஏற்பட்டுவிட்டது. கமிட்டியைப் போடும்போதே, நான்கு கமிட்டிகளாகப் போட்டார்கள் . . . . . .

**மாண்புமிகு திரு சி. என். அண்ணாதுரை :** நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் ஒரு புகாரைச் சொல்லி, அதற்குப் பிறகு, நான் கொடுத்த விளக்கத்திற்குப் பிறகு, 10-வது மாதம் வரையிலுமா என்கிறார்கள். சிறு திருத்தம், 10-வது மாதம் இல்லை, 26—7—1967. ஏழாவது மாதம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** ஏழாவது மாதம், என்றால் 10-வது மாதம் பற்றி சொன்னதையெல்லாம் நான் திருத்திக் கொள்கிறேன். அவர் வாயிலேயே தவறுகள் வருகின்றன . . . . .

**மாண்புமிகு திரு சி. என். அண்ணாதுரை :** அவர் வாயிலேயே என்பதல்ல. வாய் இருப்பதே, இரண்டையும் பேசுவதற்காகத்தானே.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** முதல் அமைச்சர் எப்படிவேண்டுமானாலும் பேசலாம். அவர்களுக்கு நன்றி தெரிவிக்கிறேன். அடுத்த வருஷமாவது இதுதான் திட்டமான நிலை என்று இருக்கவேண்டும். போனது போகட்டும். அடுத்த வருஷமாவது சரிசெய்ய வேண்டும். மருத்துவக் கல்லூரியில் திறமையின் அடிப்படையில், பிற்போக்கான சமூகங்கள், அரிசன சமூகம் இவற்றிற்கு ஒதுக்கும், 16 சதவீதம், 25 சதவீதம் என்கிற இடங்களுக்கும், இந்த சமூகங்களைச் சேர்ந்த மாணவர்களிலே திறமையானவர்களுக்கே கொடுக்கப்படும் நிலைமை இருக்க வேண்டும். (மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : "பிற்படுத்தப்பட்ட" சமூகம் என்று சொல்லுங்கள்). ஆம், இந்த பிற்படுத்தப்பட்ட சமூகங்களுக்கு அடுத்த வருஷமாவது, நல்ல வகையில், செய்வதைச் சீக்கிரமே செய்தால், அனுமதிக்கப்படும் எல்லா இடங்களுக்கும் முடிவுகளைச் சொன்னால், எல்லாவற்றிற்கும் நல்லதாக இருக்கும். எங்களுக்கும் கஷ்டங்கள் இல்லாமல் இருக்கும் (குறுக்கீடு) நான் யாரிடத்திலும் கடிதம் எழுதிக் கேட்டதாக சந்தேகிக்க இடம் இல்லை. (மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : கடிதங்கள் இருக்கின்றன) நான் எழுதியதா ? இருக்கமுடியாது. (மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : நீங்கள் எழுதவில்லை. வேறு சிபாரிசுக் கடிதங்கள்.)

**மாண்புமிகு திரு சி. என். அண்ணாதுரை :** எதிர்க் கட்சித் தலைவர் கடிதம் எழுதவில்லை. இருந்தாலும், அவருடைய பிள்ளை மருத்துவ மனையில் படித்துக் கொண்டிருக்கிறார். மற்றவர்கள் சிபாரிசு செய்த மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளப்படவில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன் . . . இன்னும் சொல்ல வேண்டுமென்றால், நம்முடைய அமைச்சர் கோவிந்தசாமி அவர்களுடைய மகளுக்குக் கூட அட்மிஷன் கிடைக்கவில்லை.

பிற்பகல் 2-00 **திரு பி. ஜி. கருத்திருமன் :** அதே மாதிரி, என்னுடைய மகன் முதல் வகுப்பு பெற்றிருந்தும், அவனுக்கும் இடம் கிடைக்கவில்லை. அதையும் காங்கிரஸ் சர்க்காரினுடைய பெருமையாகப் பேசிக் கொள்ளலாம்.

**மாண்புமிகு திரு சி. என். அண்ணுதுரை :** அதிலிருந்து அமைச்சர் திரு. கோவிந்தசாமி அவர்கள் ஆறுதல் பெறலாம். அடுத்த வருஷம் ஒருசமயம் அவருடைய மகளுக்கு இடம் கிடைக்கலாம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இப்போதே சொல்லியாகிவிட்டது. என்னுடைய நண்பருடைய மகளுக்கு இடம் கொடுப்பதுபற்றி நன்றி.

மருந்துகளில் கலப்படம் செய்வது, அடல்ட்டரேஷன் செய்வது என்பது ஒரு பெரிய சமூகத் துரோகமான காரியமாகும். நியாயமான அளவுக்குச் சரியான மருந்துகளைச் சேர்க்காமல், ஸ்டாண்டர்டுக்குக் குறைந்த நிலையில் தப்பான கம்பெனிகள் செய்யும் மருந்துகளை நிறுத்துவதற்குச் சர்க்கார் முற்படவேண்டும். இந்தத் துறையில் எல்லோரும் சேர்ந்து ஒத்துழைப்பதன் மூலமாகத்தான் இத்தகைய குற்றங்குறைகளைக் கண்டுபிடித்து நிவர்த்திக்கமுடியும் என்று சொல்லிக்கொண்டு, பொது சுகாதாரத் துறையைப் பற்றிப் பேச நேரம் அதிகமாக இல்லாத காரணத்தால், அடுத்துவரும் சந்தர்ப்பங்களில் அதுபற்றிப் பேசிக்கொள்ளலாம் என்று கருதுகிறேன். நம்முடைய முதலமைச்சர் அவர்கள், இவ்வளவு உடம்பு சரியில்லாத நிலையிலும், இதிலே குறுக்கிட்டு மறுப்புத் தெரிவிக்கவேண்டிய நிலையில் அவருக்குக் கஷ்டத்தைக் கொடுத்ததற்கு என்னுடைய வருத்தத்தைத் தெரிவித்துக்கொண்டு, அடுத்த வருஷமாவது மெடிகல் காலேஜில் மாணவர்களைச் சேர்க்கும் விஷயத்தில் எந்தவிதமான புகாரும் இல்லாமல் செய்யப்படும் என்ற உறுதியை அளிப்பார் என்ற நம்பிக்கையோடு என்னுடைய உரையை முடிக்கின்றேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை :** "நண்பருடைய கருத்துக்களெல்லாம் கவனிக்கப்படும்" என்றுதான் நான் உறுதி அளிக்கலாம். "புகார் இருக்காது" என்று உறுதியளிக்க முடியாது. மனித சுபாவம் மாருமல் இருக்கிறவரை, எல்லாவற்றிற்கும் ஏதாவது ஒரு புகார் யாராவது சொல்வார்கள்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தின் முன் வைக்கப்பட்ட மானியக் கோரிக்கைகளின் பேரில் கனம் உறுப்பினர்கள்—ஆளுங்கட்சித் தரப்பிலும், எதிர்க் கட்சிகளின் தரப்பிலும்—நல்ல கருத்துக்களைச் சொன்னார்கள். இங்கே இந்த மானியக் கோரிக்கைகளின்மீது விவாதம் மிக நல்ல சூழ்நிலையில் ஆரம்பமாயிற்று. முதலாவதாகப் பேசிய நம்முடைய கனம் உறுப்பினர் திரு. காசிராமன் அவர்கள், மகாமகத் திருவிழாவின்போது சுகாதாரத் துறையினர் செய்த நல்ல பணிகளைப் பாராட்டினார்கள். எதிர்க்கட்சி வரிசையில் இருந்தாலும், சுகாதாரத் துறையினர் செய்த நல்ல பணிகளைப் பாராட்டியதற்காக அவருக்கு நான் நன்றி சொல்லிக்கொள்ளக் கடமைப் பட்டுள்ளேன்.

இங்கே பேசிய அத்தனை பேரும், வெட்டுப் பிரேரணைகள் கொடுத்தவர்கள் கூட, இந்த இலாகாவிற்கு ஒதுக்கப்பட்ட தொகை போதுமானது அல்ல, அதை உயர்த்த வேண்டும் என்று சொன்னார்கள். மருத்துவ வசதிகளைப் பெருக்கவேண்டும், மருத்துவ மனைகளைக் கட்டவேண்டும், கிராமப்புறங்களுக்கெல்லாம் மருத்துவ வசதிகளை விரிவுபடுத்தவேண்டும் என்ற நல்ல கருத்துக்களைச் சொன்னார்கள். அந்த நல்ல கருத்துக்களைச சொல்லி, அரசாங்கம் அதிகமான தொகை ஒதுக்குவதற்கான ஆலோசனைகளைச் சொன்ன அத்தனை பேருக்கும் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

இம்மாதிரி இலாக்காவுக்கு நம்முடைய மதிப்பிற்குரிய நண்பர் திரு. காசிராமன் அவர்கள், மகாமகத் திருவிழாவின்போது நடைபெற்ற நல்ல ஏற்பாடுகளைப் பாராட்டி எழுதிய கடிதத்தை நான் இங்கே படிக்க விரும்புகிறேன்.



"The general opinion is that the special sanitary and other arrangements made this yearwere adequate and impressive and that the same is largely responsible for the peaceful and orderly conduct of the festival."

மேற்படி திருவிழா நல்லமுறையில் நடைபெறுவதற்கு சுகாதாரத் துறையினர் நல்ல உதவி புரிந்திருக்கிறார்கள் என்ற நல்ல கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். இப்படி, பல பேர்கள் பல கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கருத்துக்களையெல்லாம் நிச்சயமாக இந்த அரசாங்கம் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே பேசிய நம்முடைய நண்பர் திரு. காசிராமன் அவர்கள் கும்பகோணம் நகராட்சிமன்றம் நடத்துகிற மெடர்னிடி ஆஸ்பத்திரியை அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையைச் சமர்ப்பித்து, காலம் கடந்துவிட்டது, அதுபற்றி குறிப்பு வரவில்லை என்று சொன்னார்கள். அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், அதுபோன்ற குறிப்பு இல்லை என்ற நிலைமை இருந்துவருகிற காரணத்தால், அதைத் தனியாக அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கலாம் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திண்டிவனம் மருத்துவ மனையைப்பற்றிச் சொல்லும்போது, அங்கிருக்கும் எக்ஸ்ரே யூனிட்டைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். மேற்படி யூனிட், இப்பொழுது 15 எம்.எம். யூனிட் என்ற அளவில் இருப்பதால், இப்பொழுது எக்ஸ்ரே படங்கள் எடுப்பதற்கான நிலைமைகள் இருக்கின்றன. எனவே, எப்போதும்போல் இருக்கிறது என்ற நிலைமை இருந்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

மருத்துவ மனையில் கொடுக்கக்கூடிய உணவு, மருந்து ஆகியவற்றுக்காக சென்ற ஆண்டு கொடுக்கப்பட்ட தொகை இந்த ஆண்டு குறைக்கப்பட்டது என்ற குற்றச்சாட்டை திரு. காசிராமன் அவர்கள் குறிப்பிட்டார்கள். அவர் சொல்லும்போது, 24 லட்ச ரூபாய் குறைக்கப்பட்டதாகச் சொன்னார்கள் ஆனால், "டீடெய்ல்டு பட்ஜெட் எஸ்டிமேட்ஸ்" என்னும் புத்தகத்தில் 521-வது பக்கத்தில் பார்த்தால், "பட்ஜெட் எஸ்டிமேட்ஸ் (ரிவைஸ்டு)" என்ற தலைப்பின்கீழ் 1967–68-ம் ஆண்டுக்காக ரூ. 24,58,300 ஒதுக்கப்பட்டிருப்பதையும், 1967–68-ம் ஆண்டுக்கான "ரிவைஸ்டு எஸ்டிமேட்" என்னும் தலைப்பின்கீழ் ரூ. 27,25,500 செலவிடப்பட்டிருப்பதையும் காணலாம். அதேபோல், 1968–69-ம் ஆண்டுக்கான பட்ஜெட் எஸ்டிமேட்டின் கீழ் ரூ. 24,90,100 என்று இருக்கிறது. ஆக, ரூ. 31,800 அதிகமாகத்தான் இந்த ஆண்டு பட்ஜெட் எஸ்டிமேட்டில் இருக்கிறதே தவிர, குறைவாக இருக்கிறது என்று சொல்லுகிற கருத்து சரியல்ல என்பதை அவருடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகின்றேன். மேலும், அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், இந்தப் பிரச்சினைகளிலெல்லாம் தீவிரமான அக்கறை எடுத்துக்கொண்டு நல்லமுறையில் இவை பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

திருச்சி மருத்துவ மனையைப் பொறுத்தவரையில், அங்கே விலை உயர்ந்த மருந்துகளைக் கொடுப்பதற்கும் அதற்கான நடவடிக்கை எடுக்கப்படுகிறது. விலை உயர்ந்த மருந்துகள் வாங்க வேண்டுமென்றால், அதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரி டோக்கன் எழுதிக் கொடுத்தால்தான் அதைக் கொடுப்பதற்கான முறை இருக்கிறது. அந்தக் குறிப்பிட்ட செக்ஷன்களிலே அதற்காகக் கையெழுத்து வாங்கிக் கொள்ளப்படுகிறது. எனவே, அத்தகைய குறைபாடு இல்லாமல் நடவடிக்கை எடுத்து வரப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகர்சாமி அவர்கள் கோயில்பட்டி தண்ணீர்த் திட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள்.

The main scheme costing Rs. 98 lakhs has been forwarded to the Government for sanction. A scheme affording temporary relief costing Rs. 2·76 lakhs has been sanctioned and the work is in progress.

எனவே கோயில்பட்டி நகரத்தைப் பொறுத்தமட்டில், தண்ணீர்த் திட்டத்திற்காக ரூ. 2·76 லட்சத்திற்கு அனுமதி அளித்து வேலை துவக்கப்பட்டிருக்கிறது. எனவே, அந்த வேலை துரிதமாக நடைபெறும்.

கும்பகோணம் ட்ரெயினேஜ் ஸ்கீமைப் பொறுத்தவரையில், அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 21 எக்கர் பூமி ஆர்ஜிதம் செய்வதற்கு தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

ப்ரைமரி ஹெல்த் சென்டரைப் பொறுத்த வரையில், ஒவ்வொரு ப்ளாக்குக்கும் ஒரு ப்ரைமரி ஹெல்த் சென்டர் திறப்பது என்ற முறையில் இப்பொழுது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதல்லாமல், பஞ்சாயத்து யூனியனும் ப்ரைமரி ஹெல்த் சென்டர் அமைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளையும் அரசாங்கம் எடுத்துக்கொண்டு வருகிறது. ஆனால், கனம் உறுப்பினர்கள் எல்லோரும் ப்ரைமரி ஹெல்த் சென்டருக்குத் தேவையான கட்டடங்கள் கட்டிக் கொடுக்கவேண்டும் என்ற கோரிக்கையைச் சொன்னார்கள். அது ஒரு நியாயமான கோரிக்கைதான், நிச்சயமாக அது செய்யவேண்டியதுதான். இருந்தாலும், இப்பொழுது இருக்கும் நிதி நிலைமையை அனுசரித்து, எல்லா இடங்களிலும் கட்டடங்கள் கட்டும் நிலைமை இல்லை என்பதை நான் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ள வேண்டியிருந்தாலும், இப்பொழுது, 'கேர்' நிறுவனமும் கட்டடங்கள் கட்டுவதற்கு உதவி செய்ய முன்வந்திருக்கிறது.

We have practically finalised the discussion with the CARE for the construction of 254 buildings for primary health centres, family planning clinics and staff quarters at a cost of over Rs. 8 crores. The land should be made available by us and the entire cost of construction should be met by CARE.

எனவே, கிட்டத்தட்ட எட்டு கோடி ரூபாய் அளவில் நமக்கு மருத்துவமனை கட்டுவதற்கான உதவியை 'கேர்' நிறுவனம் அளிக்க முன்வந்திருக்கிறது. அந்த உதவி நமக்குக் கிடைக்கும்போது நிச்சயமாக சொந்தக் கட்டடம் இல்லாமலிருக்கும் ப்ரைமரி ஹெல்த் சென்டர்களுக்கெல்லாம் சொந்தக் கட்டடங்களை கட்டவும், டாக்டர்களுக்கு குடியிருப்பு வசதி செய்து கொடுக்கவும் முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இன்னும் ஒரு கருத்து சொல்லப்பட்டது. கட்டாயமாக டாக்டர்கள் கிராமப்புறங்களுக்குச் சென்று பணியாற்றியாக வேண்டும் என்று சொன்னார்கள். ஆனால், நிலைமை என்னவென்றால், கிராமப்புறங்களில் போதுமான டாக்டர்கள் இருக்கிறார்கள். கிராமங்களுக்கு டாக்டர்கள் போவதைப் பற்றி ஆட்சேபணை இல்லை. இன்றிருக்கும் நிலைமையில் ப்ரைமரி ஹெல்த் சென்டர்களில் எல்லாம் டாக்டர்கள் இருக்கிறார்கள். நம்முடைய நண்பர்கள்கூட, 'இன்னும் நாற்பது ஐம்பது இடங்களில் டாக்டர்கள் இல்லை' என்று சொன்னார்கள். நமக்குக் கிடைத்த தகவலின்படி, ஆறு அல்லது பத்து இடங்களில்தான் டாக்டர் இல்லை என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம், ஒரு டாக்டர் லீவில் போய் இன்னொரு டாக்டரை அங்கே போடும்போது. இதற்கிடையில் ஏற்படும் சிறிது தாமதம் காரணமாக இத்தகைய குறைபாடு எங்காவது இருக்கலாமே தவிர, டாக்டர் வந்து பணியாற்றாத நிலைமை நிச்சயமாக இல்லை. மேலும், டாக்டர்களைக் கட்டாயப்படுத்தி கிராமப்புறங்களுக்குப் போய் பணியாற்றச் செய்ய வேண்டும் என்றால்,





அதிலே சட்டச் சிக்கல் இருக்கிறது என்பதை திரு. விநாயகம் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால், அரசாங்கத்திடமிருந்து ஸ்காலர்ஷிப் உதவி பெறுகிறவர்களைப் பொறுத்தவரையில், அவர்களிடமிருந்து ஒரு 'பாண்டு' எழுதி வாங்கிக்கொண்டு, கட்டாயமாக அரசாங்கம் கோருகிற இடத்திற்கு அவர்களை அனுப்புவதற்கான நிலைமை இன்றும் இருந்து வருகிறது. கட்டாயப்படுத்தி டாக்டர்களை கிராமப்புறத்திற்கு அனுப்ப வேண்டிய நிலை இல்லை என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஆனாலும். அங்கே அத்தியாவசியமான வசதிகள், ப்ள்ளிக்கூட வசதிகள், கனம் திரு. விநாயகம் குறிப்பிட்டதுபோன்ற மற்ற வசதிகள் இல்லாத காரணத்தால், அங்கே அவர்கள் செல்வதற்கு சற்று தயங்குகிறார்கள். ஆனால், இப்பொழுது தேர்வு பெற்று வெளிவருகிற டாக்டர்கள் ப்ரைமரி ஹெல்த் சென்டர்களுக்குச் சென்று நல்லமுறையில் பணியாற்றுகிறார்கள். அவர்களை நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். பல இடங்களுக்கு நான் நேரில் சென்று பார்த்தபோது, பல ப்ரைமரி ஹெல்த் சென்டர்களில் டாக்டர்கள் சிறப்பாகப் பணியாற்றுகிறார்கள்.

அவர்களுக்கு சில கஷ்டங்கள் இருந்தபோதிலும், தேவையான உதவி தக்க நேரத்தில் கிடைக்காவிட்டாலும் இருக்கின்றவைகளை வைத்துக்கொண்டு சிறப்பாகப் பணியாற்றுகிறார்கள். அப்படியிருக்கின்ற இளைஞர்களான டாக்டர்களை நாம் பாராட்டித்தானகவேண்டும். இன்னும் சிறப்பாக அவர்கள் எதிர்காலத்தில் ஊக்கத்துடன் பாடுபடுவார்கள் என்று கருதுகிறேன்.

நண்பர் திரு. எ. ஆர். மாரிமுத்து அவர்கள் பேசும்போது, 'திருவோணத்தில் ஆஸ்பத்திரிககுக் கட்டிடம் இருக்கிறது, அங்கே ப்ரைமரி ஹெல்த் சென்டர் ஏற்படுத்தப்படவில்லை என்று குறிப்பிட்டார்கள். கிராமப்புறங்களில் எல்லா வசதிகளும் கொண்ட கட்டிடங்கள் இருக்கும் என்று எதிர்பார்ப்பது சரியல்ல. நிச்சயமாக உறுப்பினர் சொன்ன குறைகளைப் பரிசீலித்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நர்ஸுகளைப் பற்றிய பிரச்சினையில், அவர்களுக்கு பல ஆண்டுகளாகியும்கூட, வேலை கொடுக்கப்படவில்லை என்று குறைபட்டுக் கொண்டார்கள். இதுபற்றி மத்திய அரசாங்கத்தைக்கூட வற்புறுத்தி வருகிறோம். பல உறுப்பினர்கள் பேசும்போது, ஒவ்வொரு பிரைவேட் டாக்டரும், தன்னுடைய டிஸ்பென்சரியில் ஒரு நர்ஸுக்கு வேலைவாய்ப்பு கொடுக்க வேண்டும் என்று கூறினார்கள். நாம் யாரையும் கட்டாயப் படுத்த முடியாது. கட்டாயப்படுத்திக் காரியம் செய்தால் காரியம் கவனிக்கப்படாமல் கெட்டுப்போகும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். வேலை வாய்ப்பு கிடைக்காத நிலைமையில் பயிற்சிபெற்ற நர்ஸுகள் தாங்களாகவே விரும்பி வேறு இடங்களில் வேலை பார்க்க விரும்பினால், நோ 'அப்ஜக்ஷன் சர்ட்டிபிகேட்' கொடுக்கிறோம். இதை எல்லா நர்ஸுகளுக்கும் தெரியப்படுத்தியிருக்கிறோம்.

மருத்துவ மனைகளிலே இட நெருக்கடி இருக்கிறது என்று பல நண்பர்கள் எடுத்துக் கூறினார்கள். 'நோயாளிகள் அதிகமாக இருக்கிறார்கள், போதுமான வசதிகள் இல்லை, படுக்கைகளைப் பெருக்க வேண்டும், வசதிகளைப் பெருக்க வேண்டும்' என்று சொன்னார்கள். டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசும்போது, ஒரு சப்ளிமெண்டரி டிமாண்டு வைத்து இதற்கு அதிகமான தொகையைக் கொடுக்க வேண்டும் என்று கூறினார்கள். திட்டத்தில் எந்தவிதமான தவறுதலும் ஏற்படவில்லை. டி. எம்.எஸ்ஸையும், டி. பி. எச்சையும் ஒன்றாக இணைக்க வேண்டுமென்ற திட்டம் 1966-ம் ஆண்டில் உருவெடுத்து, பின்னர் அது 1967-ன் கடைசியிலும், 1968-ன் ஆரம்பத்திலும் நடைமுறையில் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இனி எந்தவிதமான குறைபாடும் இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1968 மார்ச் 12

அடுத்தப்படியாக, தொழிலாளர் நல இன்ஷூரன்ஸ் ஆஸ்பத்திரிகளைப் பற்றி நண்பர் திரு. சு. துரைசாமி அவர்கள் குறிப்பிட்டார்கள். திருப்பூரைப் பொறுத்தவரையில் 100 படுக்கைகள் கொண்ட ஈ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரி கட்ட முயற்சிகள் எடுத்துக்கொண்டு, அதற்காக 15 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் தற்போது இரண்டு ஆஸ்பத்திரிகள் அந்தப் பகுதியில் செயல்பட்டு வருகின்றன.

கோயம்புத்தூரைப் பொறுத்தவரையில், இது ஒரு முக்கியமான தொழில் நகரம். இந்த நகரில் சுமார் 500 படுக்கைகள் கொண்ட ஒரு ஆஸ்பத்திரியைக் கட்ட முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, இப்போது கட்டிடம் முடிவடையும் தருவாயில் உள்ளது. தொழிலாளர் நல சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளை இந்த அரசாங்கம் உடனடியாக எடுத்துக்கொள்ளும் என்பது அனைவரும் அறிந்த விஷயமே. ஆகையால் இந்த அரசு தொழிலாளருக்கான நடவடிக்கைகளை முனைப்பாக மேற்கொண்டு செயல்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக நண்பர்கள் கொசுத் தொல்லையைப் பற்றிச் சொன்னார்கள். கொசுத் தொல்லை இன்றையதினம் சென்னை நகரத்தில் மட்டுமல்ல, தமிழ்நாடு பூராவிலும் பரவியிருக்கிறது. சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில் கொசுத் தொல்லையை ஒழிக்க தீவிரமான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்காக அசிஸ்டெண்ட் ஸ்பெஷல் ஹெல்த் ஆபீசர் என்று தனியாக ஒருவரை அமர்த்தி, இதற்கான வேலைகளில் அதிக கவனம் செலுத்தும்படி கேட்டுக் கொண்டிருக்கிறோம். தீவிரமான கவனம் செலுத்தப்பட்டு, உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக சென்னை நகரத்தில் முன்பைவிட தற்போது கொசுத் தொல்லை சிறிது குறைந்திருப்பதை கனம் உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று நம்புகிறேன். மேலும் அடியோடு கொசுத் தொல்லையை ஒழிக்க வேண்டிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும்.

அடுத்தபடியாக, திரு. ராமச்சந்திரன் அவர்கள் பேசும்போது, 'ராணுவத்திலே சேவை செய்யச் சென்றவர்களில் சிலருக்கு ஃபாமலி அலவன்ஸ்' கொடுக்கப்படவில்லையென்று சொன்னார்கள்.

A family allowance of Rs. 250 per month is granted to medical officers of the Madras Medical Service who have been drafted to Army Service. Among those who joined the Army Service in 1962, a few were House Surgeons and they were not members of the Madras Medical Service at the time of joining the service. Since only the members of the Madras Medical Service are granted the allowance they are not eligible for the allowance.

எனவே, 'ஹவுஸ் சர்ஜன்'களாக இருக்கும்போது சென்றவர்கள், அவர்கள் மெட்ராஸ் மெடிகல் சர்வீஸ் மெம்பராக இல்லாத காரணத்தால் அவர்களுக்குக் கொடுக்க முடியாத நிலை இருந்தது. இது போன்ற நிலைமைகளை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்தால் நிச்சயமாக தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து; நண்பர் திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் அவர்கள் பேசும்போது, கடையநல்லூர் குடிநீர் திட்டத்தைப்பற்றி மிக வருத்தத்துடன் சொன்னார்கள். இப்போதைய அரசாங்கம் அதைப் பரிசீலித்து தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1968 மார்ச் 12] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தைப் பற்றி பல உறுப்பினர்கள் தங்கள், தங்கள் கருத்தைச் சொன்னார்கள். தமிழகத்தில் குடும்பக் கட்டுப்பாடு திட்டம் மிகமிக நல்ல முறையில் வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது. ஆனால் திட்டத்திற்கு ஒதுக்கியுள்ள பணம் போதாது என்று உறுப்பினர்கள் சொன்னார்கள். கட்டாயமாக கருத்தடை செய்துகொள்ள வேண்டும், கட்டாயமாக அறுவை சிகிச்சை செய்துகொள்ள வேண்டுமென்ற நிலைமை இல்லை. கட்டாயக் கருத்தடையை இந்த அரசு அமல் செய்யவில்லை. குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை ஏற்றுக்கொண்டு காரியங்கள் வெற்றிகரமாக தமிழகத்தில் நடைபெற்று வருகிறது. தமிழகம் வெற்றிகரமாக நடத்தும் முறையைப் பின்பற்றி, மற்ற மாநிலங்களும் தமிழகத்தைப் பின்பற்றத் தொடங்கியிருக்கிறார்கள். இந்தத் திட்டத்தில் ஆங்காங்கே சில குறைபாடுகள் இருக்கலாம். எந்தத் திட்டமானாலும் பர்ஃபெக்ட்டாக இருக்க முடியாது. சில குறைபாடுகள் இருக்கலாம். நாளாவட்டத்தில் அவைகளைக் களைந்து எடுத்துவிடமுடியும். கனம் உறுப்பினர்கள் பலதரப்பட்ட கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் சொன்ன அத்தனை கருத்துக்களும் ஆராயப்பட வேண்டிய கருத்துக்களாகும், பரிசீலிக்கப்பட வேண்டிய கருத்துக்களாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்னும் ஹெல்த் இன்ஸ்பெக்டர்கள், நர்ஸுகள் போன்றவர்கள் பல ஆண்டுகளாக வேலை செய்தபோதிலும், இன்னும் ரெகுலரைஸ் செய்யப்படவில்லை யென்று சொன்னார்கள். அதைப் பற்றி அரசாங்கம் தீவிரமாகப் பரிசீலித்து வருகிறது. இந்த நிலைமைகளையெல்லாம் அரசு விரைவில் நிவர்த்திக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தக் குறைகள் எல்லாம் கடந்த பல ஆண்டுகளாகத் தேக்கிவைக்கப்பட்ட குறைபாடுகள். இவைகளை உடனடியாகச் செய்து தீர்த்துவிட முடியும் என்று எண்ணுவது சற்று கடினமான காரியம். எல்லா கருத்துக்களையும் கவனித்து இந்த இலாகா தகுந்த நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளும் என்று கூறிக்கொள்கிறேன்.

நண்பர் திரு. ஏ. அ. சுப்பராஜா அவர்கள் பேசும்போது நகர் அமைப்புத் திட்டம் பற்றிப் பேசினார்கள். பல நண்பர்கள் திருப்பூரில் பல ஆண்டுகளாகியும் கூட டவுன் பிளானிங் ஸ்கீம் அப்ரூவ் ஆகவில்லையென்று சொன்னார்கள். இதுபற்றி தீவிரமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். இம்மாதிரியான காரியங்களை உறுப்பினர்கள் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்தால் மிக மகிழ்ச்சியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய நண்பர்கள் வெட்டுப் பிரேரணைகள் என்று கொடுத்தாலும் அவர்களுடைய பேச்சுக்கள் எல்லாம் ஒட்டுப் பிரேரணைக்குத்தான். ஆகவே, அவற்றை ஒட்டுப் பிரேரணையாகக் கருதி, வெட்டுப் பிரேரணையை வலியுறுத்தாமல் இந்த மானியங்களை ஆதரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு நல்ல கருத்துரைகளை வழங்கிய எல்லா உறுப்பினர்களுக்கும் நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

**திரு. நா. காசிராமன் :** தலைவர் அவர்களே, நான் ஒரு விளக்கம் கொடுக்க விரும்புகிறேன். நான் என்னுடைய பேச்சில் குறிப்பிட்டது 1966–67-ல் 44 லட்சம் சொச்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. ஆனால் ரிவைஸ்டு எஸ்டிமேட்டில் 27 லட்சம் சொச்சம் தரப்பட்டிருக்கிறது. மறுபடி இந்த 1968–69-க்கு 24 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறதே, இது குறைவாக இருக்கிறது என்றுதான் சொன்னேன். போன ஆண்டுக்கு 27 லட்சம் சொச்சம் செலவாகியிருக்கிறபோது, இப்போது 24 லட்சம் சொச்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது குறைந்திருக்கிறது என்று சொன்னேன். என்னை தவறாகப் புரிந்துகொள்ளக்கூடாது என்பதற்காக விளக்கம் சொன்னேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இதில் தவறு ஒன்றும் இல்லை. போன ஆண்டுக்கு 24 லட்சத்து 58 ஆயிரம் ஒதுக்கினோம். செலவு 27 லட்சத்து 25 ஆயிரம் ஆகியிருக்கிறது. அதுபோல நாம் ஒதுக்கியிருப்பதையும்விட அதிகமாகச் செலவு நேரிட்டால் செலவு செய்யும் இந்த அரசு என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, மருத்துவக் கல்லூரியைப்பற்றி ஒரு வார்த்தை. தாழ்த்தப் பட்ட சமூகத்தினருக்கு 16 சதவீதம் என்றும், பிற்பட்ட சமூகத்தினருக்கு 25 சதவீதம் என்றும் இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அது தவிர அந்த சமூகத்தைச் சேர்ந்தவர்கள் ஜெனரல் சீட்டிற்கும் வரலாம். அவர்களுக்கு இப்படி இரண்டுவிதமான அனுகூலம் இருப்பதை உணரலாம். ஆனால் ஒன்று. மருத்துவக் கல்லூரி அட்மிஷன் எந்தமுறையில், எப்படி இருக்கவேண்டுமென்று திட்டவட்டமாக யாரும் யோசனை சொல்லவில்லை. இந்தப் புகார் இருக்கிறது, அந்தப் புகார் இருக்கிறது என்றார்களே தவிர, புகார்களே இல்லாதபடிக்குச் செய்ய எந்த முறையைக் கைக் கொள்ளலாம் என்று யாரும் கூறவில்லை. அப்படிக் கூறியிருந்தால் அதை ஆராய்ந்திருப்போம். என்னைப் பொறுத்தவரையில் ஒன்று சொல்ல முடியும். கடந்த வருடங்கள் எல்லாவற்றையும் காட்டிலும் இந்த வருடம் நடைபெற்ற தேர்வுதான் மிகச் சிறப்பாக நடைபெற்றிருக்கிறது. இனியும் குறைகள் ஏற்படாது என்று கூறிக்கொண்டு என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** யாரும் ஆலோசனை சொல்லவில்லை என்றார்கள். மாணவர்களைப் பொறுக்கி எடுப்பது சம்பந்தமாக நியாயமான முறையில், புகார் இல்லாத முறையில் அமையவேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். அவரவர்களுடைய மார்க், உயரம், எடை போன்ற மற்ற தகுதிகளை எல்லாம் வைத்தே அது உருவாக்கப்பட வேண்டும். ஆலோசனையே கூறவில்லை என்று நினைக்க வேண்டாம்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மார்க்கின் அடிப்படையில் தேர்வு இருந்தால் போதும், பர்சனல் இண்டர்வ்யூ என்று வேண்டாம் என்று கனம் உறுப்பினர் கருதுகிறாரா ? பர்சனல் இண்டர்வ்யூ என்று வைத்து உருவம், உயரம் இவைகள் எல்லாம் அந்த வேலைக்குப் பொருத்தமானது, தேவையானது என்று அந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கப் படவேண்டியதில்லையா ?

**திரு பி. ஜி. கருத்திருமன் :** இண்டர்வ்யூ முறை தேவையற்றது என்று சொல்லவில்லை. தாழ்த்தப்பட்டவர்களுக்கு 16 சதவீதம், பிற்பட்டவர்களுக்கு 25 சதவீதம் மற்ற சீட்டுள்-இவற்றுக்கு மாணவர்களைப் பொறுக்கி எடுக்கிறபோது வேண்டியவர்கள் என்றால் 75 மார்க் கொடுப்பதும், வேண்டாதவர்களுக்கு 'சீரோ' கொடுப்பதும் போன்ற அநீதி நடைபெறு திருக்க மார்க் லிஸ்டையும் வைக்கவேண்டும். வேண்டியவர்களுக்கு ஒன்று, வேண்டாதவர்களுக்கு ஒன்று என்கிற நிலை இருப்பது சரியல்ல என்று சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** நீதிபதிகள் வேண்டியவர்களுக்கு ஒரு மார்க், வேண்டாதவர்களுக்கு ஒரு மார்க் என்று கொடுக்கிறார்கள் என்பது போலப் பேசுவது சரியல்ல.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அந்த மார்க் லிஸ்டை வைத்தால் நான் நிரூபிப்பதற்குத் தயாராய் இருக்கிறேன். தவறு நடந்திருப்பதை நிரூபிக்க முடியும்.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** நீங்கள் ஒவ்வொரு ஆண்டும் மார்க் லிஸ்டை வைத்திருந்தீர்களா ?

**திரு பி. ஜி. கருத்திருமன் :** யாரும் கேட்கவில்லை, வைக்கவில்லை. கேட்டிருந்தால் வைத்திருப்பார்கள்.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** ஐயப்பாடு ஏற்படாதிருக்க நீங்களும் வைத்திருந்திருக்க வேண்டும்.

**Dr. H. V. HANDE :** Sir, I want to seek clarification with regard to the admission to medical colleges. As it is a complicated matter, I want it to be clarified especially in view of the reply of the Hon.



Chief Minister that according to the judgment of the High Court, the applications of about 25 persons only should be reviewed. This is the area of disagreement and I want through my clarification, to completely dispel the doubt expressed outside. I want to know whether those 25 persons were in the waiting list or outsidethewaiting list ? The Hon. Chief Minister has also stated that the High Court did not say that they should be taken but that their applications also should be examined. It is not for the High Court to tell that their applications also will have to be examined. Anyhow they would be examined. Now the question is whether the names of those persons were in the waiting list or not. Because they had the economic advantage of filing writ petitions, their applications were examined. Otherwise, they would not have been examined. There is a feeling among a number of people that because they did not file the writ petitions in the High Court, they had not been selected. Now I would suggest a solution for this problem. Interviews can be dispensed with. The Andhra State has done it. After all, the interview is not going to be of much help. It is not like a medical examination to find out the height and weight of a person. There is no interview in the Andhra State. If the Hon. the Leader of the Opposition is also prepared to accept it, will the Hon. Minister come forward with an assurance in regard to this matter ?

**திரு ஏ. ஆர். சுப்பையா முதலியார் :** உயர்நீதிமன்றத் தீர்ப்புக்கு விரோதமில்லாதபடி பாக்வார்ட் ஏரியாக்களில் உள்ளவர்களுக்கு சலுகை கொடுக்கப்படவேண்டும். மக்களுக்கு நன்மை அளிக்கும் முடிவை எடுக்க வேண்டும் என்று சொன்னேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** உயர்நீதி மன்றத்தீர்ப்புக் குப் பிறகு, அந்தத் தீர்ப்புக்கும் விரோதம் இல்லாமல், பிற்பட்ட, தாழ்த்தப்பட்ட ஏரியாக்களுக்கும் சலுகை கொடுக்கவேண்டும், எப்படிச் செய்யலாம் என்பது பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. இதுபற்றி எவ்வித புகாரும் ஏற்படக்கூடாது என்று ஆராய்ந்துகொண்டிருக்கிறோம். ஒரு முடிவுக்கு வந்தபிறகுதான் அதுபற்றி திட்டவட்டமாகச் சொல்ல முடியும். ஒரு குறிப்பிட்ட நகரப் பகுதி மாணவர்களே எல்லா இடத்தையும் எடுத்துக்கொள்ளாதபடி—எல்லா இடங்களிலும் வசிப்பவர்களுக்கு சமவாய்ப்பு கிடைக்கிற வகையில் என்ன செய்யலாம், சட்டத்திற்கு புறம்பில்லாத வகையில் என்ன செய்யலாம் என்பது அதுபற்றிய கருத்துக்களை ஆராய்ந்த பிற்பாடுதான் உருவாகும்.

**Thiru K. VINAYAKAM :** Sir, I want a clarification from the Hon. Minister.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இப்படியே ஒவ்வொருவரும் பேசிக்கொண்டே போனால் நீண்ட நேரம் ஆகிவிடும்.

**Thiru K. VINAYAKAM :** Sir, I have moved a cut motion. Sir, you will appreciate what I am going to say.

In my cut motion, I want that the Government should establish hospitals in Taluk Head quarters. My taluk is Tirutani and there is a hospital there. There was a proposal to construct a new building for that hospital but it was dropped due to the National Emergency. Now that the emergency is over, what are the Government going to do with that proposal?Has that proposal been shelved or put in cold

storage. If the Government give an assurance that they would reconsider the matter, I have no hesitation to withdraw my Cut Motion. Otherwise I would ask for a poll and I would make the House sit for one hour more.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** முதலில் டாக்டர் ஹாண்டே அவர்கள் கூறிய கருத்துக்கு விளக்கம் சொல்ல விரும்புகிறேன். உயர்நீதி மன்றம், சுப்ரீம் கோர்ட் இவை செய்துள்ள முடிவுகளை ஏற்றுக் கொள்ளவேண்டும். அதற்கு ஆட்சேபணை ஒன்றும் செய்யமுடியாது. உயர்நீதி மன்றத்தைப் பொறுத்தவரையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல் ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் சேராத காரணத்தால் இருந்த இடங்கள்—29 இடங்கள் இருந்தன என்று நினைக்கிறேன்—அவற்றில் ஏற்கனவே வெயிட்டிங் லிஸ்டில் இருந்த 21 பேர்களுக்கும், ஹைக்கோர்ட்டில் ரிட் போட்டவர்களில் 2 மாணவர்களுக்கும் இடம் கிடைக்க ஹை பவர் கமிட்டி வைத்து அதன் மூலம் உத்திரவிடப்பட்டு இருக்கிறது. ரிட் பெட்டிஷனர்ஸ் அண்ட் ஆல்ஸோ பெர்சன்ஸ் இன் தி வெயிட்டிங் லிஸ்டு இரண்டு பேர்களையும் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. அடுத்தபடியாக திரு. விநாயகம் அவர்கள் மிகவும் உருக்கமாக திருத்தணி மருத்துவ மனையைப் பற்றிச் சொன்னார்கள். தமிழ் நாட்டில் தாலுக்காவுக்கு ஒரு மருத்துவ மனை என்று இருந்து வருகிறது. சில மாவட்டங்களில் பல தாலுக்காக்களில் அப்படி மருத்துவ மனைகள் இல்லாமல் இருப்பது நாம் அறிந்ததே. அதற்காக நம்முடைய அரசாங்கம் எங்கெல்லாம் மருத்துவ மனைகள் வேண்டுமோ அங்கெல்லாம் ஏற்படுத்த அனுதாபத்தோடு பரிசீலிக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்ததாக திரு. ஏ. எல். சுப்பிரமணியம் அவர்கள் இன்டிஜினஸ் மெடிஸன் பற்றிச் சொன்னார்கள். பாளையங்கோட்டையைப் பற்றிச் சொன்னார்கள். சித்த வைத்திய முறையைப் பற்றியும் சொன்னார்கள். சித்த வைத்திய முறை, மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன், செக்ரட்டேரியட்டில் ஆரம்பிக்கப்பட்டு வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** விவாதங்கள் இத்துடன் முடிவடைந்தன. இப்பொழுது வாக்கெடுப்பு.

மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. கே. பி. எஸ். மணி, திரு. ஏ. அ. சுப்பராஜா, திரு. கே. விநாயகம், திரு. நா. காசிராமன், திரு. எம். சுரேந்திரன், திரு சோ. அழகர்சாமி, திரு. செ. பாலசுப்பிரமணியன் ஆகியோர் தங்களுடைய வெட்டுத் தீர்மானங்களை வற்புறுத்தாமையினால் அவ்வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெற்றுக் கொள்ளப்படுகின்றன.

மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. கரு. சீமைச்சாமி, திரு. வி. கே. கோதண்டராமன் ஆகியோர் தங்கள் தங்கள் இடத்தில் இல்லாமையினால் அவர்களின் வெட்டுத் தீர்மானங்கள் திரும்பப்பெற்றுக் கொள்ளப்பட்டனவாகக்கருதப்படும்.

அடுத்து, அவை முன்னுள்ள கேள்வி :

" கோரிக்கை எண் : 14—மருத்துவம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 13,46,99,600-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்".

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** டாக்டர் எச். வி. ஹாண்டே, திரு. கே. பி. எஸ். மணி, திரு. நா. காசிராமன், திரு. ஏ. அ. சுப்பராஜா, திரு. எம். சுரேந்திரன், திருமதி கே. பி. ஜானகியம்மாள் ஆகியோர்





தங்கள் வெட்டுத் தீர்மானங்களை வற்புறுத்தாமையினால் அவ்வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் படுகின்றன.

திரு. சோ. அழகர்சாமி, திரு. கரு. சீமைச்சாமி ஆகியோர் தங்கள் இடத்தில் இல்லாமையினால் அவர்கள் கொடுத்த வெட்டுத் தீர்மானங்கள் திரும்பப்பெற்றுக்கொள்ளப்பட்டனவாகக் கருதப்படும்.

அடுத்து , அவை முன்னுள்ள கேள்வி :

" கோரிக்கை எண் : 15.—பொதுச் சுகாதாரம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 5,25,34,200-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும் ".

நிதிக் கோரிக்கை நிறை வேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. வை. சுவாமிநாதன் தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வற்புறுத்தாமையினால் அவ் வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெற்றுக் கொள்ளப்படுகிறது.

அவை முன்னுள்ள கேள்வி :

" கோரிக்கை எண் : 38—பொதுச் சுகாதார மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 57,400-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும் "

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப் பட்டது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இப்பேரவையின் நிகழ்ச்சிகள் இன்று இந்த அளவில் முடிவுற்று பேரவை நாளை காலை 9 மணிக்கு மீண்டும் கூடும்.

**பின்னர் பேரவை ஒத்தி வைக்கப்பட்டது.**

## 6. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### *A. Statutory Rules and Orders.*

97. Notification issued with G.O. Ms. No. 1324, Revenue, dated the 28th July 1967, effecting a ryotwari settlement to the inam estates specified in the schedule of the notification and situated in Salem district in accordance with the provisions of the Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963. [*Laid on the Table of the House under sectibn* 73 (5) *of the Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act,* 1963 (*Madras Act* 26 *of* 1963.)]

### *B. Reports, Notifications and other papers.*

*33. A policy note on the Demand No. XVIII—the Animal Husbandry (Tamil).

*34. A Review on the progressmade in the Madras Forest Department (Tamil).

*35. A policy note on the Fisheries (Tamil).

*Despatched to all Members on 8th March 1968.

## தமிழக சட்டப் பேரவை.

---

புதன்கிழமை, 1968 மார்ச் 13.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9–00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. சி. பா. ஆதித்தனர் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினுக்கள்–விடைகள்.

### வெள்ளிக் குறியிட்ட வினுக்கள்.

### தஞ்சை மாவட்டக் கோயில்களிலிருந்து நெல் கொள்முதல்

*200 வினு.—**திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :** மாண்புமிகு கல்வி தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவிற்கு விடையளிப்பாரா—

30-6-1965-ம் தேதியுடன் (1374-ம் பசலி) முடிவடையும் காலத்தில் தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள முதல் பிரிவு ஆலயங்களின் தணிக்கை அறிக்கைகளில் (கன்கரெட் ஆடிட்) இணைந்துள்ள டி. சி. பி. பட்டியல் காலில் உள்ள பிரகாரம் வசூலாக வேண்டியதும், பாக்கி இருப்பதுமான நெல் எவ்வளவு?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** சபை முன் விவர அறிக்கை [a] ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

**திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :** தலைவர் அவர்களே, பல ஆயிரக்கணக்கான கலம் நெல் பாக்கி இருப்பதால் அதை வசூலிப்பதற்கு என்னென்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? அதை வசூலிப்பதற்கு முடியாவிட்டால் அதை ரைட் ஆஃப் செய்வதற்கு உத்தேசம் உண்டா? அல்லது வசூலிப்பதற்குத் துரித நடவடிக்கை எடுத்துக்கொள்ள உத்தேசம் இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இவற்றை வசூலிப்பதற்கு மாரடோரியம் இருக்கிற காரணத்தால் அதற்குப் பிறகுதான் கோர்ட்டுகளின் மூலம் வசூலிக்க முடியும். இதற்கு என்னென்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பரிசீலனை செய்து முடிவு எடுக்கப்படும்.

**திரு. ந. தருமலிங்கம் :** அறநிலையங்கள் நிலுவை என்ற பெயரால் வசூலிக்காமல் இருக்கும் பாக்கி தானியங்கள், தொகைகள் பெரும்பாலும் பெரும் புள்ளிகளிடமே இருக்கிறதென்று பொது மக்கள் பேசிக்கொள்கிறார்களே, அது உண்மையா? அப்படியானல் அந்தத் தொகைகளையும், நெல் தானியங்களையும் கட்டாயமாக உடனடியாக வசூலிக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, பாக்கி யாரிடத்திலே இருக்கிறது, பெரிய புள்ளியிடத்திலா, சிறிய புள்ளியிடத்திலா என்பதை விவரங்களிலிருந்து அறியலாம். அறநிலையங்கள் முறைப்படி சேர்க்கவேண்டியதற்கான ஏற்பாடுகள் பற்றி அவர்களைக் கலந்து ஆலோசித்து என்னென்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று யோசித்துச் செய்யப்படும்.

---

a 557–562-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

**திரு. எஸ். இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் தந்திருக்கிற விவரக் குறிப்பில் 11-வது அயிட்டத்தில் திருத்துறைப்பூண்டி தாலூக்காவிலுள்ள வேதாரண்யம்—வேதாரண்யேஸ்வரர் கோவிலில் பாக்கி கலம் 35,221–3–½ இருப்பதில், 16,971–3–½ கலம், காலம் கடந்தமையால் வசூலிக்கப்பட முடியவில்லை என்று இருக்கிறது. காலம் கடந்தமைக்கு யார் காரணம் என்று கூறுவார்களா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இதுபற்றிய விவரக் குறிப்பு இல்லை. தனிக்கேள்வி போட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**திரு. கோ. இர. ஞானசம்பந்தன் :** தலைவர் அவர்களே, அந்தக் கோவில்களில் நிர்வாக அதிகாரிகள் பொறுப்பு இல்லாமல் தங்களுடைய கடமைகளைச் சரியாக நிறைவேற்றாத காரணத்தால்தான் பாக்கி இருக்கிறதென்று சொல்கிறார்கள். அதைத் தடுத்து இனிமேலாவது சரியாக நிர்வகிப்பதற்கு அரசு ஆணையிடுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதுபோல் நிர்வாக அதிகாரிகள் கவனிக்காமல் இருப்பதன் காரணமாக பாக்கி இருப்பதாகத் தெரிந்தால் நடவடிக்கை எடுக்கலாம். எப்படிப்பட்ட நடவடிக்கை எடுத்தால் விரைவிலே வசூலிக்க முடியும் என்பதைக் கலந்தாலோசித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** கொடுக்கப்பட்டிருக்கிற பட்டியலைப் பார்க்கிறபோது, பல ஆயிரக்கணக்கான கலம் நெல் குத்தகை பாக்கி இருப்பதாகத் தெரிகிறது. இவை எத்தனை ஆண்டுகளாக வசூலிக்கப்படவில்லையென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, 30—6—1965 வரை என்று இருக்கிறதே தவிர, எத்தனை ஆண்டுகள் என்ற விவரக்குறிப்புகள் இல்லை. இதற்குத் தனிக்கேள்வி போடவும்.

**திரு. பி. எஸ். தனுஷ்கோடி :** தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் பெரிய கோவில்களுக்குச் சொந்தமான நிலங்கள் எல்லாம் குத்தகைச் சாகுபடிச் சட்டத்தின் பிரகாரம் 5 ஏக்கர்தான் சாகுபடி செய்ய வேண்டுமென்று இருந்தும்கூட, பல பெரிய மனிதர்கள் சிறிய குத்தகைதாரர்களிடம் குத்தகைக்கு விட்டதாகக் குத்தகைச் சீட்டு எழுதிவிட்டு, 10 வேலி, 20 வேலி என்ற அளவில் சாகுபடி செய்கிறார்கள். விளையவில்லை என்று காரணம் சொல்லி கோர்ட்டில் கேஸ் போட்டு அவர்கள் தள்ளுபடி வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். அப்படியில்லாமல் யாருடைய பெயரில் குத்தகைச் சீட்டு இருக்கிறதோ, அவர்களிடமிருந்து நேரடியாக வருமானத்தைப் பெறுகின்ற அளவிற்கு ஏற்பாடுசெய்ய அரசாங்கம் யோசிக்குமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதுபோல் அமைந்திருக்குமானால் எப்படி வசூலை விரைவுபடுத்துவதற்கு முடியுமோ, அதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும்.

**திரு. ஆ. கு. சுப்பையா :** ஐயா, இம்மாதிரிப் பல ஆயிரக்கணக்கான கலம் நெல் வசூலிக்காததற்குக் காரணம் சரியான முறையில் நெல் விளையவில்லை. குத்தகைதாரர்கள் கொடுக்கமுடியாமல் இருக்கிறார்கள். ஆகையால் வசூலைத் தள்ளிப்போடுவதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, எல்லா இடங்களிலும் இந்த நிலைமை இருக்கிறதென்று சொல்ல முடியாது. சில பல இடங்களில் ஏமாற்றுவதற்காக அப்படிச் செய்யப்படுகிறது; வசூலைத் தாமதப்படுத்து[illegible] முடிந்தவரை பார்க்கலாம் என்று அப்படிச் செய்யப்படுகிறது. ஆகையால் நிலைமைகள் எப்படி இருக்கின்றன என்று பார்த்து அதற்குத் தக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படும்.



**திரு. மா. பா. சாரதி :** மாயூரம் தாலூக்காவில் தருமபுரம் ஆதினத்தில் கே.ஜி. 8,29,338–471 பாக்கி இருப்பதாகத் தெரிகிறது. அதைத் தள்ளிப் போடச் செய்யாமல் வசூலிக்க முடியுமா? வசூலிப்பதற்குத் தக்க நடவடிக்கை எடுக்க முயற்சிக்குமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** நான் முதலிலே குறிப்பிட்டபடி சட்டப்படி என்ன நடவடிக்கைகள் எடுக்க முடியுமோ, அவற்றை எடுப்பதற்கான முயற்சிகளை அரசு மேற்கொண்டிருக்கிறது.

**திரு. கே. பி. எஸ். மணி :** கோவில்களுக்கும், மடங்களுக்கும் என்று தனித்தனியாக இரண்டு பகுதிகளாக நிலங்கள் இருக்கின்றன. மடத்திற்குச் சொந்தமான நிலத்தில் இருந்து வரக்கூடிய வருவாயைச் சன்னிதானத்தினுடைய சொந்த உபயோகத்திற்கும், கோவில் நிலத்திலிருந்து வரக்கூடிய வருமானத்தைப் பொதுவான உபயோகத்திற்கும் என்று வகை செய்யப்பட்டிருக்கிறது. இரண்டு நிலங்களுமே சரியாக விளையவில்லை. இதற்குக் காரணம் பஞ்சாயத்து யூனியனோ அல்லது அரசாங்கமோ சொல்கிறபடி உரம் போடுவதையோ அல்லது குடிமராமத்துச் செய்வதையோ கோவில்களில் ஒப்புக் கொள்வதில்லை. இதனால்தான் சரியான விளைச்சல் இல்லை. ஆகையால் என்டோமெண்ட் போர்டுக்குக் கட்டுப்பட்டிருக்கிற கோவில்களின் நிலங்களைச் சரியான முறையில் விளையச் செய்வதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, என்டோமெண்ட் போர்டு சாகுபடியைப் பெருக்குவதற்கு எந்தெந்த முறைகளை மேற்கொள்ள வேண்டுமோ அவற்றில் முயற்சிஎடுத்துக்கொண்டிருக்கிறது. குழாய்க் கிணறுகளைப் போட்டு விளைச்சலை அதிகரிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதி நிலை அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதைப்பற்றி என்டோமெண்ட் போர்டு ஆலோசித்துக் கொண்டிருக்கிறது.

**திருமதி கே. பி. ஜானகியம்மாள் :** பல்லாயிரக்கணக்கான மூடைகள் பாக்கி இருப்பதாக அறிக்கையிலிருந்து தெரிகிறது. விவசாயிகளுக்குக் குத்தகைக்கு விட்ட நிலத்தில் அவர்கள் கொடுக்காததால் பாக்கி இருக்கிறதா அல்லது அவர்கள் கொடுத்தும் இவர்கள் கொடுக்காமல் இருக்கிறார்களா ? அந்தப் பாக்கியைக் கட்டாயமாக வசூலிப்பதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அதுபற்றிக் காரண விளக்கங்கள் இல்லை. வசூலிப்பது என்றால் சட்டப்படி நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். மாரடோரியம் போன்றவை இடையில் இருக்கின்றன. இதிலே என்ன முறையில் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்பதுபற்றி ஆராய்ந்து விரைவாக நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று போர்டாருக்குத் தெரியப்படுத்தப்பட்டிருக்கிறது.

### குரங்கு முதலியவை ஏற்றுமதி

* 201 வினா.—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு கல்வி தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நமது ராஜ்யத்திலிருந்து வெளிநாடுகளுக்கும் இதர ராஜ்யங்களுக்கும் குரங்கு, தவளை ஏற்றுமதி செய்யப்படுகிறதா ?

(இ) அதன்மூலம் வருமானம் எவ்வளவு ?

(உ) 1960 முதல் 1966 வரையில் விவரம் ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) இம் மாநிலத்திலிருந்து குரங்குகள் ஏற்றுமதி செய்யப்படுவதில்லை. ஆனால், குளிர்ப்பதன முறையில் பாதுகாக்கப்பட்ட தவளைக் கால்கள் 1963–64, 1965–66 ஆண்டுகளில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதிசெய்யப்பட்டன. இம் மாநிலத்திலிருந்து நாட்டின் ஏனைய மாநிலங்களுக்குத் தவளைகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றனவா என்பது தெரியவில்லை.

(இ), (உ) : ஏற்றுமதி செய்யப்பட்ட தவளைக் கால்களின் அளவு, அதன் மூலம் கிடைத்த வருமானம் குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன—

| ஆண்டு. | அளவு. | மதிப்பு. |
|---|---|---|
| | கிலோ கிராம். | ரூ. |
| 1963–64 .. .. .. .. | 3,198 | 10,493 |
| 1965–66 .. .. .. .. | 104 | 599 |
| மொத்தம் .. | 3,302 | 11,092 |

**திரு. மு. ச. சிவசாமி :** தமிழகத்திலே எண்ணூர், கடலூர், தூத்துக் குடி ஆகிய பகுதிகளில் கிடைக்கக்கூடிய இரால் மீன்களையும், தவளைக் கால் களையும் கேரளாவிற்குக் கொண்டுசென்று அங்கே பதப்படுத்தி வெளி நாட்டுக்கு அனுப்புகிறார்கள். தமிழக அரசே அதைப் பதப்படுத்தி, குளிர் சாதன மெஷின்களை அமைத்து, தமிழகத்திலிருந்து அவற்றை ஏற்றுமதி செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அதுபற்றிய எண்ணம் அரசுக்கு இருந்து வருகிறது. மீனவத் துறையினர் ஆராய்ந்து வருகிறார்கள்.

**Thiru K. VINAYAKAM :** Even though monkeys are not exported from our State to foreign countries, they are killed for experimental purposes. Will the Government consider the possibility of banning this kind of killing of monkeys and also for the reason that monkeys are supposed to be objects of worship as symbolised in Hanuman and Anjaneya and killing them amounts to blasphemy of Hindu religion ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, ஏற்றுமதி செய்கின்ற விவகாரம் இந்திய சர்க்கார் அதிகாரத்திற்கு உட்பட்ட ஒன்று. நோய்க்கிருமிகள் கிடைக்காத காரணத்தால் வெளிநாடுகளுக்கு நோய்க்கிருமிகள் குரங்குகள் மூலமாக ஏற்றுமதி செய்யப்பட்டன. அவ் வாறு ஏற்றுமதி செய்யப்பட்ட குரங்குகள் கொல்லப்படுகின்றன என்ற புகார்கள் வந்த காரணத்தால் இந்திய அரசு குரங்குகள் ஏற்றுமதியைத் தடை செய்துவிட்டது.

**திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி :** தவளை இனக் கால்களை எந்தக் காரியத்திற்காக மற்ற நாடுகளில் இறக்குமதி செய்கிறார்களோ, அந்தக் காரியத்தைச் செய்வதற்குத் தமிழகத்திலேயே முயற்சி எடுத்துக் கொள்ளப் படுமா ? அதன்மூலம் அந்தப் பலன் தமிழகத்திற்குக் கிடைக்க வழி செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** உண்ணுகின்ற காரியத் திற்காகத்தான் தவளைக் கால்கள் இங்கிருந்து அனுப்பப்படுகின்றன. இங்கே அதற்குத் தயாராக இருந்தால் அவர்கள் அனுமதி பெறவேண்டிய அவ சியம் இல்லை. அவர்களாகவே அந்தக் காரியத்தைச் செய்யலாம்.

**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** குரங்குகள் விவசாயப் பயிர்களுக்கு நாசம் விளைவிப்பதால் அவற்றை எப்படியாவது அழிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு அதிகப்படியாகக் குரங்குகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய அரசு முன்வருமா ?



**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இங்கிருக்கக்கூடிய குரங்குத் தொல்லையை அடக்குவது வேறு ; வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வது வேறு. இரண்டும் தனித்தனியான பிரச்சினை. குரங்குகள் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதில்லை.

**திரு. எம். எஸ். மணி :** இந்தத் தவளைக் கால்கள் வெளிநாடுகளில் நடைபெறுகிற பெரிய விருந்துகளில் உண்பதற்காக வைக்கப்படுவதாகத் தெரிகிறது. இவற்றை வெளிநாடுகளுக்கு அனுப்பித் தனியார் அதிக லாபம் சம்பாதிக்கிற காரணத்தால், அரசாங்கமே நேரடியாக அனுப்புவதற்கு நட வடிக்கை எடுத்துக் கொள்ளப்படுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இப்போது அதிக லாபம் வரவில்லை. இரண்டு ஆண்டுகளுக்கும் சேர்த்து ரூ. 11,092 தான் வந் திருக்கிறது. இதன் ஏற்றுமதிமூலம் பெருத்த லாபம் கிடைக்கும் நிலை ஏற்பட்டால் அரசு அதுபற்றி ஆலோசிக்கும்.

**திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன்:** தவளை ஏற்றுமதியால் அதிகப் பணம் வருவதாகவும், ஏற்றுமதி செய்கிறவர்கள் தனி நபர்களாக இருக்கிற காரணத்தாலும் கணக்குகள் சரியாக இல்லாமல் தவறாகக் காட்டப்படுகிறதா? அந்த வருவாயில் அரசாங்கத்திற்குப் பங்கு இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** ஏற்கனவே சொன்னேன். 1963–64, 1965–66 ஆகிய இரண்டு ஆண்டுகளுக்கும் சேர்த்துக் கிடைத்த வருமானம் ரூ. 11,092 தான். இப்போது பெருத்த லாபம் வரக்கூடிய சூழ்நிலை இல்லை.

**திரு. டி. மார்டின் :** தவளைகள் அதிகமாக இங்கிருந்து ஏற்றுமதி செய்யப்படாவிட்டாலும், பாம்புகள் ஏற்றுமதி அதிகமாக இருப்பதால், தவளைகளை அதிகமாக உற்பத்தி செய்வதன்மூலம் பாம்புகளை அதிகமாக உற்பத்திசெய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதிசெய்யும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** பாம்புகள் தாமாகவே உற்பத்தியாகின்றனவே தவிர, யாரும் உற்பத்தி செய்வதில்லை. பாம்பு களின் தோலைப் பதனிடும் தொழிற்சாலைகள் அத்தகைய ஏற்றுமதியைச் செய்து வருகின்றன.

**திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் :** வயல்களில் பயிர்களுக்குக் கேடு பயக்கின்ற குருத்துப் பூச்சிகளைத் தவளைகள் தின்றுவிடுகின்றன. ஆகவே, தவளைகளை ஏற்றுமதி செய்வதால் நெல் பயிருக்குக் கேடு பயக்கும் என் பதை அரசு உணருமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** நாட்டிலுள்ள எல்லாத் தவளைகளையும் ஏற்றுமதி செய்துவிடுவது என்பதில்லை. எங்கெங்கு தொல்லை கொடுக்கின்ற அளவுக்கு இருக்கிறதோ, அவை மட்டுந்தான் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன. இரண்டு ஆண்டுகளுக்கும் சேர்த்து அதன்மூலம் கிடைத்த வருவாய் ரூ. 11,092 என்ற நிலையில் அதன் ஏற்றுமதி குறைவாகத்தான் இருக்கிறது என்பது புரியும். இந்த ஏற்று மதியால் தவளைகளின் எண்ணிக்கை குறையும், பயிர்களுக்குப் பாதகம் ஏற் படும் என்று கூறுவதற்கில்லை.

**திரு. ந. தருமலிங்கம் :** குரங்கு இனம் மனித ஜாதியின் முதல் தொடக்கமாக இருப்பதை அனைவரும் ஒப்புக்கொண்டிருப்பதால், நமது அரசு கருணைகாட்டி, பெரிய மனது வைத்து, குரங்கு இனத்தை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யாமல் பாதுகாப்பதோடு, யாரையும் பார்த்துக் குரங்கு என்று இழித்துப் பேசுவதையும் தடுத்து நிறுத்தும் எண்ணம் அரசுக்கு உண்டா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அரசுக்கு என்ன கடமை, மற்றவர்களுக்கு என்ன கடமை என்று இருக்கிறது. உறுப்பினர் அவர்கள் சொன்னது ஒழுக்கத்தின்பாற்பட்டது. "இனிய உளவாக இன்னாத கூறல் கனி இருப்பக் காய் கவர்ந்தற்று" என்று வள்ளுவப் பெருந்தகை கூறியிருக்கிறார். இப்போது குரங்குகள் ஏற்றுமதி செய்யப்படுவதில்லை என்று முதலிலேயே சொன்னேன்.

**திரு. பி. எஸ். தனுஷ்கோடி :** வயல் வெளிகளில் எலிகள் ஏராளமாக இருந்து தொல்லை கொடுக்கின்றன. அந்த வயல் வெளிகளில் உள்ள பாம்பு இனங்கள்தான் எலிகளைப் பிடித்து ஒழித்து வருகின்றன. அங்கு இருக்கும் பாம்புகளைப் பிடிக்கின்ற காரணத்தால், எலித் தொல்லை அதிகமாகும் என்ற காரணத்தால் பாம்புகளைப் பிடிக்காமல் தடைசெய்வது பற்றி அரசாங்கம் யோசிக்குமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இது தவளைபற்றிய கேள்வி. இப்போது தவளையிலிருந்து பாம்புக்குத் தாவியிருக்கிறது. எலிகளைப் பிடிக்கும் பாம்புகள் பல விஷமற்ற பாம்புகள். "பாம்பு என்றவுடனே படையும் நடுங்கும்" என்பதுபோல் மக்களுக்குப் பயம் இருக்கலாம். ஆனால் எல்லாப் பாம்புகளையும் பிடிப்பதில்லை. காடுகளில் உள்ள பாம்புகள்தான் பிடிக்கப்படுகின்றன.

**THIRU K. VINAYAKAM :** It is seen from the answer given by the Hon. Minister that the income from the export of frog's legs to other countries is tantalisingly negligible. Is it through the public sector or private sector that the income is calculated to be very low ? Is the Government aware of the fact that private agencies are employed in the State of Madras to catch frogs from ponds and wells and send them to Kerala for processing and sending to foreign countries and earning foreign exchange and will the Government think of the possibility of the Government themselves undertaking this work and earning the foreign exchange that is now earned by Kerala ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தவளை ஏற்றுமதியை யார் செய்கிறார்கள் என்ற விவரக் குறிப்பு இல்லை. இதை ஏற்றுமதி செய்வதிலே அதிக லாபம் கிடைக்கும். நிலைமை ஏற்படுமானால், அதை அரசே ஏற்றுமதி செய்வதுபற்றிப் பரிசீலனை செய்யலாம்.

### அரசினர் புதிய பேருந்துத் தடங்கள்

*** 202 வினா—திரு. கொளத்தூர் கோதண்டம் :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுராந்தகம் வட்டத்திலும், மதுராந்தகம் வழியாகவும் 1–3–1967 முதல் எத்தனை புது வழித் தடங்களில் அரசினர் பஸ்கள் விடப்பட்டிருக்கின்றன ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தமிழக அரசு போக்குவரத்துத் துறை 1–3–1967 முதற்கொண்டு மதுராந்தகத்தின் வழியாகச் செல்லும் வகையிலோ அல்லது மதுராந்தகத்தில் முடிவடைகின்ற வகையிலோ ஆறு பேருந்து வழித்தடங்களில் கடுவிசைப் பேருந்துகளையும் சாதாரணப் பேருந்துகளையும் ஓட்டி வருகின்றது.

**திரு. கொளத்தூர் கோதண்டம் :** இந்தப் புதிய அரசு பொறுப்பேற்ற பிறகு நாட்டுடமையாக்கப்பட்டது தவிர, வேறு எவ்வளவு புது வழித்தடங்கள் விடப்பட்டிருக்கிறது ?



**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இப்போது அந்த விவரங்கள் இல்லை. 16-ம் தேதி நடைபெறவிருக்கிற மானியக் கோரிக்கையின்போது முழு விளக்கங்களும் அளிக்கப்படும்.

**THIRU K. S. KOTHANDARAMIAH :** Sir, what is the number of private buses that have been withdrawn from operation in the Dharmapuri district and the number of Government buses introduced there ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இது இந்தக் கேள்வியில் இடம்பெறவில்லை.

### சர்க்கார் வாகனங்களுக்கான பெட்ரோல்

*** 203 வினா—திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சர்க்கார் உபயோகப்படுத்தும் ஜீப், வான் முதலிய வாகனங்களுக்கு இந்தியன் ஆயில் கம்பெனி விநியோகிக்கும் பெட்ரோல் உபயோகப்படுத்தப்படுகிறதா ?

(இ) இல்லையென்றால் அதற்கான காரணங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** (அ) ஆம்.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு ஏ. எம். ராஜா :** தமிழக அரசின் வாகனங்களுடைய எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்து வருகிற நிலையில், தமிழக அரசு சொந்த பெட்ரோல் பங்குகளை ஏற்படுத்த முன்வருமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இந்தியன் ஆயில் கம்பெனியிடமிருந்து எண்ணெய் வாங்குவதுபற்றிய கேள்வி தொடக்கக் கேள்வி. இந்தக் கேள்விக்கு இதில் இடமில்லை.

**திரு. கே. விநாயகம் :** நம் பேருந்து வண்டிகள், ஜீப்கள் இவை நாடு முழுவதிலும் இருக்கின்றன. இந்த வண்டிகளுக்கு வேண்டிய டீஸல் ஆயில், பெட்ரோல் மற்றவையெல்லாம் இந்தக் கம்பெனி பங்குகள் எங்கெங்கு இருக்கிறதோ அங்கு வாங்குகிறார்கள். பல ஊர்களில் பங்குகள் இல்லாத இடங்கள் இருக்கலாம். அங்கெல்லாம் என்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன ? தனிப்பட்டவர்களிடமிருந்து வாங்குகிறார்களா ? அப்படி பங்குகள் இல்லாத இடங்களில் பங்குகள் வைக்க இந்தியன் ஆயில் கார்ப்பரேஷனைக் கேட்கமுடியுமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** ஐ.ஓ.ஸி.-யில் எண்ணெய் வாங்குவதின்மூலம் குறிப்பாக நம் தமிழக அரசு போக்குவரத்துத் துறையில் உள்ள வண்டிகளுக்கு எண்ணெய் வாங்குவதின்மூலம் சில சலுகைகள் அளிக்கப்படுகின்றன. ஐ.ஓ.ஸி.யிடமிருந்து எண்ணெய் பெறமுடியாத இடங்களில் தனியார் வைத்திருக்கும் அமைப்புகளிலிருந்து எண்ணெய் பெற்றுக்கொண்டிருக்கிறது.

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** ஐ.ஓ.ஸி.-யிலிருந்து எண்ணெய் வாங்குவதில் சலுகைகள் அளிக்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தச் சலுகைகள் என்ன என்று அறியலாமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இப்போது கிலோ லிட்டருக்கு ஐந்து பைசா குறைத்துக் கொள்கிறார்கள். கிலோ லிட்டர் என்பது 1,000 லிட்டர். அங்கேயே நாம் ஒழுங்காக அவ்வப்போது பில் தொகையைக்

கட்டிவிட்டால், அதற்காக கிலோ லிட்டருக்கு இரண்டு ரூபாய் குறைக்கிறார்கள். ஒழுங்காகப் பில் தொகையைக் கட்டிவிடுகிறோம் என்று மூன்று ஆண்டுகளுக்கு ஒப்பந்தம் செய்து கொள்ளத் தயாராக இருந்தால் இரண்டு ரூபாயை ஐந்து ரூபாயாகக் குறைக்கத் தயாராயிருக்கிறார்கள். இதில் முக்கியமாகத் தேசியக் கொள்கையின் அடிப்படையில் ஐ.ஓ.ஸி.-யிடமிருந்து எண்ணெய் வாங்குவது என்று தீர்மானித்திருக்கிறோம்.

## *Fishing boats*

* 205 *Q.*—Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) the details of the French fishing boats donated by the French Government ; and

(*b*) whether similar donations are anticipated from other countries.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** (அ) பிரெஞ்சு அரசு இம்மாநிலத்திற்கு மீன்பிடி படகு எதையும் நன்கொடையாகக் கொடுக்கவில்லை. ஆயினும், பிரெஞ்சு சட்டமன்றப் பேரவையின் உறுப்பினர் திரேவியன் தலைமையில் வந்துள்ள பிரெஞ்சு வல்லுநர் குழு ஒன்று கருவிகளுடன் பொருந்திய இரண்டு ''டோரிஸ்'' படகுகளைத் தமிழ்நாட்டுக் கடற்கரையில் செய்முறை விளக்கத்திற்காகக் கொண்டுவந்துள்ளது. இப்படகுகளைக் குறைந்த செலவில் (ரூ. 15,000) தயாரிக்க முடியும் என்பதும், அதன் மின்காந்த அலைக் கருவியும் (Radar Equipment) கிளம்பிச் செல்வதற்கு அல்லது தங்கியிருப்பதற்குத் துறைமுக வசதிகள் தேவையில்லை என்பதும் இப்படகுகளின் சிறப்பியல்புகளாகும்.

(இ) மற்றெந்த நாட்டிலிருந்தும் படகு எதுவும் நன்கொடையாக எதிர்பார்க்கப்படவில்லை.

**திரு. டி. மார்டின் :** இந்த 'டோரிஸ்' விசைப்படகுகளைத் தமிழக சர்க்காரே வைத்துக்கொள்ளுகிற நோக்கமுண்டா? அல்லது அவற்றை மீனவர்களுக்கு மாவட்ட ரீதியாக பரீட்சார்த்தமாகக் கொடுக்க ஒரு திட்டமிருந்தால் இலங்கையில் இருந்து தமிழகத்திற்கு வந்திருக்கிற மீனவர்களுக்கு, பெரியதாளை, மணப்பாடு போன்ற இடங்களில், அதிகமாக மீன் கிடைக்கும் இடங்களில், இந்தப் படகுகளை விநியோகிக்க ஏதாவது செயற்குறிப்புகளுண்டா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** இந்தப் படகுகள் இப்போது பயிற்சி அளிப்பதற்காக இங்கு வந்திருக்கின்றன. காலா, வாலை, பாரை மீன்கள் எங்கு அதிகமாகக் கிடைக்கும் என்று சர்வே செய்யப்படுகிறது. கடந்த நாற்பது நாட்களாக நம் கடலோரப் பகுதிகளில் பதினைந்து மைல்களுக்கு அப்பால் சென்று ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். இதுவரையில் 175 கிலோ கிராம் மீன் பிடித்திருக்கிறார்கள். (கால் டன்.) நம் பயிற்சிப் பள்ளியில் பயிற்சி பெறுகிற மாணவர்களுக்கு, இதுவரையில் ஆறு மாணவர்களுக்குப் பயிற்சி அளித்திருக்கிறார்கள். இதில் இரண்டு டிரைவர்கள், ஒரு இன்ஸ்பெக்டர் பயிற்சி பெற்றிருக்கிறார்கள். இது படகுகளில் சென்று தூண்டிபோட்டு மீன் பிடிப்பது. இரண்டு போட்கள் பயிற்சி அளிக்க வந்து நாற்பது தினங்கள் ஆகின்றன. 15-ம் தேதி பிரெஞ்சு நாட்டிலிருந்து வந்தவர்கள், அதாவது பயிற்சி அளித்தவர்கள், நாளை ஊருக்குத் திரும்பிச் செல்கிறார்கள். இன்று அவர்களுக்கு விருந்து உபசாரம் செய்து அனுப்பிவைக்கிறோம். அந்தப் போட்ஸ் இங்குதான் தங்கியிருக்கும். இன்னும் நன்கொடையாக வழங்கியதாகச் சொல்வதற்கில்லை. அந்தப் போட்ஸ் இங்கு தங்கியிருக்கும். குறைந்த செலவில் அது நமக்குப் பலன் அளிக்கக்கூடியதாக இருக்குமானால், அதை ஏற்றுக்கொள்ள அரசாங்கம் யோசிக்கும்.



**திரு. மு. ச. சிவசாமி :** இப்போது மீன்வள இலாகாவிலிருந்து நம் மீனவர்களுக்கு கொடுக்கிற போட்டின் கிரயம் 36,000 ரூபாயிலிருந்து ரூ. 50,000 வரை ஆகிறது. அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது, இந்த, பிரெஞ்சு நாட்டுப்படகு விலை ரூ. 15,000 ஆக இருப்பதால் பிரெஞ்சு நாட்டோடு ஒரு கொலாபரேஷன் செய்து மலிவான விலைக்கு அதிகப்படியான போட்கள் தயார் செய்து மீனவர்களுக்குக் கொடுக்க இந்த அரசு முயற்சிக்குமா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** அதைத்தான் நான் ஆரம்பத்தில் சொன்னேன். இப்போது சர்வே நடத்தப்படுகிறது என்று. இதனால் பலன் இருக்குமானால் தேவையான அளவிற்கு—அந்த ரூ. 15,000 செலவில்—வாங்கக் கூடிய அந்தப் போட்டில் ஒரு விசேஷக் கருவி இருக்கிறது. எந்தப் பகுதியில் மீன் கிடைக்கிறது என்று காட்டக்கூடிய தானாகவே இயங்கக்கூடிய ஒரு கருவியிருக்கிறது. 40 அடி ஆழத்தில் இருக்கக்கூடிய மீனைக்கூட அந்தக் கருவிமூலம் அது எந்தப் பகுதியில் இருக்கிறது என்று கண்டுகொள்ள வாய்ப்பிருக்கிறது. ஒரு நாளைக்கு 640 கிலோகிராம் எடையுள்ள மீன்களைப் பிடிக்க முடியும். அதிக பட்சம் மூவாயிரம் கிலோகிராம் வரை பிடிக்கமுடியும் என்று சொல்கிறார்கள். கடந்த நாற்பது நாட்களில் பதினைந்து நாட்கள் பயிற்சிக்காக, எந்தப் பகுதிகளில், நான் முன்பு குறிப்பிட்ட மீன்கள், இருக்கின்றன என்று தேடி அலைந்திருக்கிறார்கள். இன்னும் மீன் கிடைக்கும் ஸீசனில் அதிகமாகக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறார்கள். மீன் அதிகமாகக் கிடைக்கும் வாய்ப்பும், 15,000 ரூபாய்க்குக் கிடைக்கும் போட்டைப் பயன்படுத்துவதின்மூலம் மீனவர்களுக்கு வசதியும் கிடைக்குமானால், அதைக் தமிழக அரசு பரிசீலனைசெய்து வேண்டிய ஏற்பாடுகளை மேற்கொள்ளும்.

**திரு. இல. பலராமன் :** அமைச்சர் அவர்கள் பதில்சொல்லும்போது மீன் பிடிக்க பயிற்சி தருவதாகக் கூறினார்கள். இந்தப் பயிற்சி மீன்பிடி தொழிலைத் தொழிலாகக் கொண்டுள்ள சமூக மக்களுக்குத் தரப்படுகிறதா அல்லது வேறு யாருக்காவது தரப்படுகிறதா? இந்தப் பயிற்சியைப்பெற என்னென்ன தகுதிகள் பெற்றிருக்கவேண்டும்?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** ஏற்கனவே பயிற்சிப் பள்ளியில் பயிற்சிபெறுகிற மாணவர்கள் ஆறு பேர்கள் அனுப்பியிருக்கிறோம். இரண்டு பேர்கள் ட்ரைவர் பயிற்சி பெறுகிறார்கள். மற்றவர்கள் துணையாகச் செல்கிறார்கள். முக்கியமாக இதில் மீனவர்கள்தான் சேர்க்கப்படுகிறார்கள். இதற்கு அதிகப் படிப்புத் தேவையில்லை. குறைந்த படிப்பு இருந்தால் போதும். எழுதப் படிக்கத் தெரிந்தால் போதும். மீனவர்கள் குழந்தைகளைச் சேர்ப்பதால் கடலில் துணிந்து நீந்திச் செல்லும் வலிமை அவர்களுக்கு இருக்கிறது. மற்றவர்களுக்கு அவ்வளவு இருப்பதாகச் சொல்ல முடியாது. மற்றவர்கள் யாரும் துணிந்து இந்தத் தொழிலுக்கு வரமாட்டார்கள்.

**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** சார் நம்முடைய கடல் எல்லையில்—டெரிடோரியல் வாடர்ஸ் என்று சொல்லப்படுகிற எல்லையில்—10 மைலுக்கு அப்பால் கடல் பிரதேசத்தில் மற்ற நாட்டுக்காரர்கள் வந்து யார் வேண்டுமானாலும் மீன் பிடிக்கலாம் என்றிருக்கிறது. ஏற்கனவே ஜப்பான் போன்ற இடங்களிலிருந்து வந்து இந்து மகாசமுத்திரத்தில் மீன் பிடித்துக் கொண்டு போகிறார்கள். இம்மாதிரி வெளிநாட்டுக்காரர்களை கொண்டுவந்து பயிற்சிக்கு வைத்து பிறகு, அவர்கள் இங்கெல்லாம் ஆராய்ச்சி செய்துவிட்டுப் போனபிறகு, அவர்கள் மறுபடியும் மீன் பிடிக்க வாய்ப்புகள் செய்துகொடுப்பதன்மூலம் நம்முடைய நலன்களுக்குப் பாதகமாய் இருக்கும் என சர்க்கார் கருதுகிறதா? அப்படியானால் அதைத் தடுக்க சர்க்கார் என்ன நடவடிக்கை எடுக்கும்?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** கனம் அங்கத்தினர் அவர்கள் சந்தேகக் கண்கொண்டு பார்க்க வேண்டாம். வெளிநாட்டுக்காரர்கள் நமக்கு உதவி செய்ய வருகிறார்கள் என்பதை நாம் ஏற்றுக்கொள்ள

வேண்டும். நமக்கு உதவிக்கு வருகிறவர்களைச் சந்தேகக்கண்கொண்டு பார்த்தால் நமக்குக் கிடைக்கக்கூடிய அந்நியநாட்டுச் சலுகைகள் கிடைக்காமல் போகலாம்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** இம்மாதிரியான விசேஷ கருவிகளையும் படகுகளையும் என்றுமே நாம் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதற்கு ஏற்றுக்கொண்டிருப்பதைவிட நமது நாட்டிலேயே இம்மாதிரியான கருவிகளையும் படகுகளையும் செய்வதற்கான ஒரு ஆரம்ப முயற்சியை இந்த அரசாங்கம் எடுக்குமா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** முதலில் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்கின்ற என்ஜின்களுக்குத்தான் அதிகம் மதிப்பு இருக்கிறது. குறிப்பாக யான்மார் என்ஜின்களுக்கு அதிகம் மதிப்பு இருக்கிறது. ஜப்பான் நாட்டிலே இதை உற்பத்தி செய்கிறார்கள். ஜப்பான் நிறுவனத்தோடு நாம் இராயபுரத்திலேகூட யான்மார் என்ஜின்கள் செய்யக்கூடிய ஒரு தொழிற்சாலையை நிறுவி இருக்கிறோம். வெளிநாட்டில் இருந்து வருவதே கூடாது என்றால் வெளிநாட்டுக்காரர்கள் கண்டுபிடித்த விஞ்ஞான முறையின் அடிப்படையில் செய்த யந்திரங்களையும் நாம் வேண்டாம் என்று கருதமுடியாது. இந்த யான்மார் என்ஜின்களைத்தான் மீனவர்கள் பெரிதும் விரும்புகிறார்கள். கனம் அங்கத்தினர்கள்கூட அறிவார்கள். உள்நாட்டிலும் என்ஜின்கள் தயாரிக்கப்படுகின்றன அதை மீனவர்கள் வேண்டாம் என்று சொல்கிறார்கள். என்ஜின்கள் கட்டுவதிலே இருக்கும் சங்கடங்கள் கன்னியாகுமரி, திருநெல்வேலி மாவட்டத்திலே இருக்கின்றவர்களுக்கு நன்றாகத் தெரியும்.

**திரு. ஜி. ஆர். எட்மண்ட் பெர்னாண்டோ :** தலைவர் அவர்களே, இப்போது தமிழகத்திலுள்ள மின்விசைப் படகுகளில் மிகச் சிறந்ததாகிய யான்மார் படகுகளையே மீனவர்கள் விரும்புகிறார்கள். இந்தப் படகுகளை ஜப்பானியக் கூட்டுறவுடன் எண்ணூரில் ஆரம்பிக்க வேண்டும் என்று நமது அரசாங்கம் ஒரு சில ஆண்டுகளுக்கு முன்பு திட்டமிட்டு, அதை மத்திய சர்க்காருக்கு அனுப்பியிருந்தும்கூட சமீபத்தில் டில்லியில் நடைபெற்ற மத்திய மீன்துறை குழுக்கூட்டத்தில் தலைமை உரையில் திரு. ஜகஜீவன்ராம் அவர்கள் இந்தத் திட்டம் இன்னும் பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னார்கள். இப்போது அமைச்சரவர்கள் பதில் கூறும்போது நம்முடைய மாநிலத்திலே பிரெஞ்சு கூட்டுறவுடன் இந்தப் படகுகளைச் செய்யக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அதற்கான திட்டங்களைப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம் என்று சொன்னார்கள். இப்பேர்ப்பட்ட கூட்டுறவு முறையில் படகு செய்யும் தொழிற்சாலையை ஆரம்பிக்க வேண்டும் என்றால் அதற்கு மத்திய சர்க்காரின் அனுமதியைப் பெற்றுத்தான் ஆகவேண்டுமா? அல்லது மத்திய சர்க்காரின் அனுமதி இல்லாமலே நாம் நடத்த முடியுமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** மத்திய அரசாங்கத்தினுடைய துணையுடன்தான் இந்தத் தொழிற்சாலைகளை ஆரம்பிக்க முடியும். எண்ணூரில் ஜப்பான நாட்டின் உதவியுடன் ஆரம்பிக்க இருக்கின்ற யான்மார் தொழிற்சாலையும் மத்திய அரசாங்கத்தினுடைய பரிசீலனையில் இருக்கிறது. குறிப்பாக திரு. மொரார்ஜி தேசாயின் கவனத்தில்தான் இருந்துகொண்டிருக்கிறது. திரு மொரார்ஜி தேசாய் அவர்கள் மனதுவைத்தால் அதற்குரிய உத்தரவு சீக்கிரமே கொடுக்கப்படலாம். கனம் அங்கத்தினர் அவர்கள் மத்திய மீன் குழுவில் இருப்பதால் அதனுடைய ரகசியங்களை எல்லாம் தெரிந்து இருப்பார்கள். நாம் மீண்டும் வற்புறுத்திக்கொண்டு இருக்கிறோம். திரு. ஜகஜீவன்ராமும் இந்தத் திட்டம் கூடிய விரைவில் கைகூடும் என்று நல்ல மனத்துடன் சொல்கிறார்கள்.

**திரு. எஸ். இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, நம்முடைய கடல்களிலே ஆழ்கடல் மீன் திட்டத்தின்படி எவ்வளவு மீன்கள் இருக்கின்றன என்று இன்னும் சர்வேகூட செய்யப்படவில்லை. இப்போது இந்த பிரெஞ்சு நாட்டுப் படகுகள் செய்துகொண்டிருக்கின்றன. அவையும் போதவில்லை.



ஆகையால் அதிகநாவாய் போன்ற படகுகளை வாங்கி, கடலில் எவ்வளவு மீன்வளம் இருக்கிறதென்பதை எவ்வளவு ரிஸேர்வில் இருக்கிறது என்பதைச் சர்வே செய்வதற்கு இந்திய அரசின்மூலமாக இன்னும் படகுகளை வாங்குவதற்குத் தமிழக அரசு முயற்சிக்குமா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** இது ப்ரெஞ்சு நாட்டுப் படகு பற்றியது. கனம் அங்கத்தினர் அவர்கள் எவ்வளவு கிடைக்கிறது என்று ஆராய்ச்சி செய்வதற்கு நாவாய் வாங்கவேண்டும் என்று சொன்னார்கள். நாவாய் என்று சொன்னால் ஷிப் என்று நினைக்கிறேன். அந்த அளவுக்கு நம் பொருளாதார நிலை இடம் கொடுக்குமா என்பது சந்தேகம் தான். படகு வாங்கி மீனவர்களுக்கு வழங்குவதற்கே வேண்டிய போதுமான நிதி கிடைக்காமல் மீனவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாமல் இருந்து கொண்டிருக்கிறோம். இதெல்லாம் அந்நிய நாட்டிலிருந்து வரும் சிறு சிறு தொகைகளின் மூலம் ஆராய்ச்சி செய்கிறோம். இந்த ஆராய்ச்சி முடிந்த பிறகு இதை நாமே எந்த அளவுக்கு செயல்படுத்த முடியும் என்பதை யோசிக்கலாம்.

## மதுரையில் வானொலி நிலையம்

*206 வினா. **திரு. என். எஸ். வி. சித்தன் :** / **திரு. பெ. மலைச்சாமி :** } மாண்புமிகு தாழ்த்தப்பட்டோர் நல செய்தித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரையில் வானொலி நிலையம் ஒன்று ஏற்படுத்தும்படி மத்திய அரசினை இந்த அரசு கேட்டுக்கொண்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை நகரம் பழம் தமிழர் பெருமைக்குச் சான்று கூறும் வரலாற்றுச் சிறப்புடையதாகவும், மேலும் மேலும் வளர்ந்து வரும் தொழில் கேந்திரமாகவும் இருக்கின்ற நேரத்தில் அப்பகுதி மக்களுக்கு ஒரு வானொலி நிலையம் இல்லாது இருப்பது பெரிய குறையாக இருக்கிறது. அங்கு உடனடியாக ஒரு வானொலி நிலையத்தை ஏற்படுத்துவதற்கு சிபாரிசு செய்யாமல் போனாலும் நெல்லை, கோவை போன்ற இடங்களில் உள்ளதைப் போல அஞ்சல் நிலையமாவது உடனடியாக அமைக்க இந்த அரசு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யுமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** அந்தப் பகுதியில் இருக்கின்ற மக்களுக்கு இத்தகைய பெரும் குறை இருப்பதாக இது வரையிலும் தகவல் இல்லை. மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்கிறார்கள், இருந்தாலும் அது குறித்து விசாரித்து நடவடிக்கை எடுக்கலாம்.

**திரு. பெ. மலைச்சாமி :** தலைவர் அவர்களே, தென் மாவட்டங்களுக்கு மதுரை மையமாக இருப்பதாலும் அங்கு இப்போது பலவகை நிலையங்கள் இயங்கி வருவதாலும், நெல்லையில் இருக்கின்ற அஞ்சல் நிலையத்தை மதுரைக்கு மாற்றுவது நல்லது என்ற கருத்தினை அரசு ஆராயுமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** கேள்வி வானொலி நிலையம் பற்றியது. அஞ்சல் நிலையம் குறித்தது அல்ல.

**திரு. அ. லெ. சுப்பிரமணியம் :** தலைவர் அவர்களே, நெல்லையில் இருக்கிற ரேடியோ நிலையத்தை மதுரைக்கு மாற்ற வேண்டும் என்று கனம் உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். ஏற்கனவே நெல்லையில் இருக்கும் ரேடியோ ஸ்டேஷன் ரிலே ஸ்டேஷனாக இயங்கி வருகிறது. அதை ப்ரொக்கிராம் ஸ்டேஷனாக மாற்றி அமைக்கும் திட்டம் அரசாங்கத்திடம் இருக்கிறதா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** *அப்படிப்பட்ட திட்டம் இப்போது அரசாங்கத்தின் வசம் இல்லை.*

DR. H.V. HANDE : Our State is l sing a number of things by not addressing and demanding from the Centre. The Hon. Minister said in her answer that the Government had not even made any proposal. What is the difficulty in this new Government making a proposal ? As the Hon. Member pointed out, there is a University in Madurai and quiz programme can be introduced. In view of the extreme importance of Madurai City, why should not the Ministry come forward and make a request so that the Centre may consider it sympathetically ? Otherwise, the Centre will simply say that the Madras Government have not made any request. Will the Ministry re-examine the whole thing ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** *இது குறித்து அரசு பரிசீலிக்கும் என்று கருதுகிறேன்.*

THIRU K. VINAYAKAM: Representations will have to be made to the Central Government to achieve our aim. One such representation is that the term to be used in the announcement should be ' Vanoli ' instead of ' Akashvani '. ' Akayam ' is not a sanskrit or Hindi term ; it is a Tamil term. If you look into the old literature, you will find it (Interruption). Never mind about that. I will not get into that controversy. Is the Minister aware of the fact that in spite of the representations made to the Central Government, they are not consistently announcing as ' Vanoli ', first they said ' Akashvani ' and later on they said ' Vanoli '. Is it a fact that they are using this word just to please this Government?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** *இப்போது வானொலி என்றுதான் கூறப்படுகிறதே தவிர ஆகாசவாணி என்று சொல்வது இல்லை. அது டில்லியிலிருந்து அஞ்சலாக்கப்படும் செய்திகள், டெல்லி என்று கூறி அங்கிருந்து ஆகாசவாணி என்று வருகிறது. திருச்சி, சென்னை நிலையங்களில் இருந்து வானொலி என்றுதான் அறிவிக்கப்படுகிறது. மதுரைத் தொகுதிக்கு ஒரு வானொலி வைப்பதற்கான எந்த விதமான வேண்டுகோளும் வரவில்லை. இருந்தாலும் இந்த மன்றத்தில் பல பேர் வானொலி நிலையம் அமைக்க வேண்டும் என்பதால் நான் தொடர்ந்து அதற்கான முயற்சிகளில் ஈடுபடுகிறேன்.*

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, will the Hon. Minister for Harijan Welfare and Information be pleased to state the amount required to set up a new Radio Station and other conditions required for it?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** *தனிக் கேள்வி போடவும்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** *திரு. விநாயகம் அவர்கள் மற்றொரு கேள்வியைக் கேட்டார்கள். அதற்கு முன்னால் விதி 30 உள்பிரிவு 3-இன் படி* "If a question contains a statement, the member asking it must make himself responsible for the accuracy of the statement." *என்று இருக்கிறது. ஆகாசம் என்பது தமிழ் என்று......*

**திரு. கே. விநாயகம் :** *ஆகாயம் என்பது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** *சரி, ஆகாயம் என்ற சொல் தமிழ்ச் சொல்தான் என்பதற்கு திரு. விநாயகம் அவர்கள் பொறுப்பேற்றுக் கொள்கிறார்களா ?*



THIRU K. VINAYAKAM : Subject to correction (Laughter). The Hon. Minister has announced that whenever it is relayed from Delhi, they say ' Ak sa Vani ' but whenever it is relayed from Madras, they say ' Vanoli '. So, will the Hon. Minister take steps to impress on the Central Government that while they are relaying Tamil or Telugu or Kannada songs also, they should say ' Vanoli ' instead of ' Akasa Vani ' ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** *இப்பொழுது வற்புறுத்திக் கொண்டு வருகிறோம்.*

**திரு. எம். கண்ணப்பன் :** *தலைவரவர்களே, கோவையிலுள்ள வானொலி அஞ்சல் நிலையம் தற்சமயம் பிற்பகல் நிகழ்ச்சி மட்டுமே அஞ்சல் செய்து ஒலிபரப்பி வருகிறது. அதை மாற்றி காலை நிகழ்ச்சியும் அஞ்சல் செய்யப்பட்டு ஒலிபரப்ப அரசு முயற்சி செய்யுமா ?*

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** *தகுந்த முயற்சிகளை மேற்கொள்ளலாம்.*

**திரு. என். எஸ். வி. சித்தன் :** *பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் அந்தப் பகுதியிலிருந்து எந்தவிதமான கோரிக்கையும் வரவில்லை என்று சொன்னார்கள். மதுரை நகரசபை பல முறைகள் தீர்மானம் போட்டு அனுப்பியிருக்கிறார்கள். இது அமைச்சரவர்களுக்குத் தெரியுமா ? இனியாவது மதுரையில் வானொலி நிலையம் அமைக்க அரசு முயற்சியெடுத்துக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** *பொதுமக்கள் மத்தியிலிருந்துதான் வரவில்லை என்று சொன்னேன். நகரசபையிடமிருந்து வரவில்லை என்று சொல்லவில்லை.*

**திரு. ஆர். நாகசுந்தரம் :** *தலைவரவர்களே, தமிழ் நாடு வானொலி தமிழக அரசோடு நல்ல விதத்திலே ஒத்துழைக்கின்றது. பாராளுமன்றத்தின் அன்றாட நிகழ்ச்சிகளுக்கு அதிக நேரம் ஒதுக்கப்படுகிறது. அதேபோல சட்டமன்ற நிகழ்ச்சிகளுக்கும் அதிக நேரம் ஒதுக்க வானொலி நிலையத்தை இந்த அரசு கேட்டுக் கொள்ளுமா ?*

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** *இது ஒரு நல்ல யோசனைதான். பரிசீலனை செய்ய முன்வரலாம்.*

**திரு. மு. ச. சிவசாமி :** *தலைவரவர்களே, மத்திய சர்க்கார் டெல்லி, கல்கத்தா, பாம்பே, சென்னை ஆகிய இடங்களில் டெலிவிஷன் வைக்க முடிவு செய்துகொண்டிருக்கிறார்கள். சென்னையில் உருவாகும்பொழுது தென்கோடியிலிருக்கும் தூத்துக்குடி, மதுரை, திருநெல்வேலி போன்ற இடங்களில் டெலிவிஷன்களை உபயோகிக்க முடியாது. ஆகையால் மத்திய சர்க்காரை வற்புறுத்தி ரேடியோவுக்குப் பதில் டெலிவிஷன்களை அங்கு அமைக்க தமிழக அரசு முயற்சியெடுத்துக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** *சென்னையில் இந்த அமைப்பு ஏற்படும்பொழுது இது குறித்துப் பரிசீலனை செய்யலாம்.*

### மேலூர் சிறைச்சாலை.

*207 வினா.—**திரு. பெ. மலைச்சாமி :** *மாண்புமிகு சட்டக் கூட்டுறவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *மேலூரில் உள்ள சிறைச்சாலையைத்* (Sub-Jail) *திருத்தி விரிவாக்கும் திட்டம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?*

(இ) *ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும் ?*

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) இல்லை,

(இ) கேள்விக்கு இடமில்லை.

[1968 மார்ச் 13

**திரு. பெ. மலைச்சாமி :** தலைவரவர்களே, இப்பொழுதுள்ள சிறைச்சாலை பல்லாண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்டிருப்பதால் அங்குள்ள அறைகள் பெரும்பாலும் இருட்டாகவும், கழிவுவகைகளுக்கு வசதியில்லாமலும் இருக்கிற காரணத்தால் நோய்வாய்களுக்கு ஆளாவதால் அரசு மீண்டும் பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு செ. மாதவன் :** சிறைச்சாலையை நானும் பார்த்திருக்கிறேன். நல்ல காற்றோட்டமும் வெளிச்சமும் உண்டு.

**திரு. ஆர். நாகசுந்தரம் :** தலைவரவர்களே, திறந்தவெளிச் சிறைச்சாலைகளை அமைக்கத் திட்டம் அமைக்கப்பட்டுள்ளதா ? ஆம் எனில் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** ஏற்கெனவே மன்றத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. திட்டங்கள் போட்டு நிதியில்லாத காரணத்தால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

**திரு. ஏ. முனியாண்டி :** தலைவரவர்களே, உணவு எடுத்துச் செல்லும் பாத்திரங்கள் இரும்பால் செய்யப்பட்டிருப்பதால் அதிகமாகத் துருப்பிடித்து அதனால் நோய்க்கு ஆளாகிறார்கள். இதை மாற்ற அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இரும்புப் பாத்திரங்கள் பயன்படுத்துவதால் சில நன்மைகள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் இதைப் பயன்படுத்துவதால் உணவில் கொஞ்சம் ஒருவிதமான நாற்றம் ஏற்படுவதாக கைதிகள் [புகார் செய்கிறார்கள். நாங்களே அதை அனுபவித்திருக்கிறோம். வேறு பாத்திரங்களை உபயோகிப்பது பற்றி ஐ.ஜி. அவர்களைப் பரிசீலனை செய்யும்படி அரசாங்கம் கேட்டுக்கொண்டுள்ளது.

**திரு. அ. லெ. சுப்பிரமணியம் :** தலைவரவர்களே, பொதுப்பணித் துறை அமைச்சர் இருந்த பாளையம்கோட்டை சிறைச்சாலையை மையச் சிறைச்சாலையாக மாற்ற அரசாங்கத்திடம் உத்தேசமிருந்தது. அது கைவிடப்பட்டு விட்டதா ? இருக்கிறதா ? அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** "பார்ஸ்டல் ஸ்கூலை" புதுக்கோட்டைக்கு மாற்றி இதை "சென்ட்ரல் ஜெயில்" ஆக ஆக்க உடனடியாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டு விட்டது.

**திரு. எம். எஸ். மணி :** சார், ஏற்கெனவே இருந்த முதலமைச்சர் ஒரு கேள்விக்குப் பதில் சொல்லும்பொழுது சிறைச்சாலைகளில் இரும்புப் பாத்திரங்களில் சமைக்கப்படுவதால் இரும்புச் சத்து அதிகமாக இருக்கிறது என்று சொன்னார்கள். அது நம்முடைய அரசாங்கத்திற்குத் தெரியுமா ? ஏற்கெனவே இருந்த முதலமைச்சர் சொன்னது உண்மைதானா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இரும்புச்சத்து மனிதர்களின் உணவில் இருக்க வேண்டுவது தேவைதான். இரும்புப் பாத்திரங்களில் சமைப்பதால் என்னென்ன நன்மைகள், பாதகங்கள் ஏற்படுகின்றன என்பதைப்பற்றி ஐ. ஜி. அவர்கள் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்.

**திரு. என். மருதாசலம் :** சார், சிறைச்சாலைத் தொழிற்சாலையிலே வேலைசெய்யும் கைதிகளுக்கு அதற்காகச் சம்பளம் கொடுக்கப்போவதாக ஏற்பாடு செய்திருக்கிறார்கள் என்பது உண்மையா ? அப்படியில்லையென்றால் அதற்காக சிறைச்சாலையில் வேலைசெய்யக்கூடிய கைதிகளை விரைவில் விடுதலை செய்ய உத்தேசமுண்டா என்று அறிய விரும்புகிறேன்.



1968 மார்ச் 13]

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நேற்று இதைப்பற்றிய கேள்விக்குப் பதில் சொல்லியதாக நினைவு. பஞ்சாப், டெல்லி சிறைச்சாலைகளில் இதில் ஈடுபட்டு அங்கு "வேஜ் சிஸ்டம்" என்று இருக்கிறது. அதை நம்முடைய மாநிலத்திலேயும் கொண்டுவரலாமா என்பதுபற்றிப் பரிசீலனையில் இருக்கிறது.

**திரு. முனு. ஆதி :** தலைவரவர்களே, விக்டோரியா மகாராணி காலத்தில் சென்னை நகரத்தில் உள்ள சிறை கட்டப்பட்டு இருப்பதால், நீண்ட காலமாகப் பழுதடைந்திருக்கின்றன. புகை வண்டி, மின்சார வண்டிகள் அதிர்ச்சியினாலே விழும் நிலையிலிருக்கிறது. அதைப் புதுப்பிக்கும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு. திரு செ. மாதவன் :** அங்கத்தினர் அவர்கள் சொல்லும் கருத்து சரியில்லை என்று கருதுகிறேன். இப்பொழுதிருக்கின்ற சிறைச்சாலை மருத்துவ விடுதிக்கு வேண்டுமென்ற வேண்டுகோள்தான் வந்திருக்கிறது. வேறு இடத்திற்கு, புழலேரிக்கு மாற்றும்பொழுது இந்தச் சிறைச்சாலையை யாருக்கு ஒப்படைக்கலாம் என்று பரிசீலனை செய்யப்படும்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலே சிறுவர்களுக்கென ஒரு சிறைச்சாலை தற்பொழுது இல்லை. ஆகையால் அங்கிருந்து பாளையங்கோட்டை சிறுவர்கள் சிறைச்சாலைக்குக் கொண்டு போகிறார்கள். இதனால் அரசாங்கத்திற்கு அதிகச் செலவும், மக்களுக்கு அதிகக் கஷ்டமும் ஏற்படுகிறது. ஆகவே அரசாங்கம் முன்வந்து கன்னியாகுமரி ஜில்லாவில் சிறுவர்களுக்கென சிறைச்சாலையை அமைக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** கன்னியாகுமரி மாவட்டத்தில் இந்த ஸ்கூல் இல்லாததால் அந்த மாவட்டத்தில் குற்றவாளிகளின் எண்ணிக்கை குறைந்துள்ளது என்பதை நான் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்கிறேன். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஸ்கூல் இருக்கவேண்டுமென்பது நியதியல்ல.

**திரு. ரா. ராமசந்திரதுரை :** தலைவரவர்களே, சிறைச்சாலையில் வெளியில் இருப்பதைவிட அதிகமான வசதிகளைச் செய்து கொடுப்பதால் குற்றவாளிகள் மீண்டும் அதிகப்படியான குற்றங்களைச் செய்துவிட்டு அதிக நாள் சிறையில் இருப்பதற்கு விரும்புகிறார்களே, அதனால் அங்கே அம்மாதிரியான வசதிகளைக் குறைத்தால் குற்றவாளிகள் குறைவார்கள்., குற்றங்கள் குறையலாம். அதற்கு ஏதேனும் திட்டத்தை அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** கனம் அங்கத்தினர் சிறைச்சாலைக்குப் போய் இருக்கிறார்களா என்பது தெரியாது. நாங்கள் போய் இருக்கும்பொழுது அங்கே இருப்பவர்கள் வெளியே வரவேண்டுமென்று ஆசைப்படுவதைத்தான் பார்த்திருக்கிறோம். யாரும் உள்ளே இருப்பதாகச் சொல்லவில்லை. இது சம்பந்தமாக நாட்டிலே இரு வேறு கருத்துக்கள் இருக்கின்றன. சிறைப்படுத்தப்பட்ட கைதிகளைப் பழிவாங்கவேண்டுமென்று ஒரு கருத்து. இது மிகவும் பிற்போக்கான கருத்து, பழமையான கருத்து. இன்னொன்று, சிறைக்கு வருபவர்களிடம் மனிதாபிமானத்துடன் நடந்துகொள்ள வேண்டுமென்ற கருத்து. இது முற்போக்கான கருத்து. இந்தக் கருத்தை இந்த அரசாங்கம் ஆதரிக்கிறது.

**திரு. செ. கோ. விசுவநாதன் :** தலைவரவர்களே, சென்னை மத்திய சிறைச்சாலையில் விக்டோரியா மகாராணி காலத்தில் ஏற்பட்ட அடுப்புதான் எரிந்துகொண்டிருக்கிறது என்று சொல்லுகிறார்களே, அது உண்மையா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இந்த ஆராய்ச்சியை அரசாங்கம் நடத்தவில்லை.

**திரு ரா. ரா. முனுசாமி :** தலைவர் அவர்களே, வேலூர் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருக்கின்ற அரசியல் கைதிகளின் அறைகளில் நல்ல காற்றோட்டம் இல்லாமலும் இரவுக் காலங்களில், அதாவது மாலை 5½ மணி, 6 மணிக்கு அடைக்கப்பட்டால் காலை 7 மணிக்குத்தான் அறையைவிட்டு வெளியேற்றப்படக்கூடிய நிலை இருக்கிறது. அந்தக் கைதிகளுக்குச் சரியான காற்றோட்டம் இல்லாத காரணத்தினால் வெளிச்சம் இல்லாத காரணத்தினால் மிகக் கொடுமையாக வைக்கப்பட்டிருக்கிறார்கள். அங்கு அறைகள் சரியாக இல்லாத காரணத்தினால் கைதிகள் நோய்வாய்ப்படுகிற நிலைமையை மாற்ற தமிழக அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** கைதிகளை எப்பொழுது அடைப்பது, எப்பொழுது அறையைத் திறப்பது என்பதற்கெல்லாம் விதிமுறைகள் இருக்கின்றன. அந்த விதிமுறைகள்தான் பின்பற்றப்படுகின்றன. சிறைச்சாலையிலே காற்றோட்டங்கள் இல்லாத காரணத்தினாலே கைதிகள் கஷ்டப்படுவதாக அரசாங்கத்திற்குத் தகவல் இல்லை.

**திரு. ப. மகாதேவன் :** மாண்புமிகு, அவைத்தலைவர் அவர்களே, முற்போக்கான கொள்கையின் காரணமாக மாவட்ட ஜெயிலிலே உள்ளவர்களுக்கும் வசதி செய்து தரவேண்டுமென்ற கருத்தை அரசாங்கம் கொண்டிருக்கிற காரணத்தினால் பீடி, புகையிலை போன்றவைகளை ஜெயில் கைதிகளுக்குக் கொடுத்து, வசதி செய்து கொடுக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** பீடி, புகையிலை இவைகளை உபயோகிப்பதை முற்போக்கு என்று இந்த அரசாங்கம் கருதவில்லை. பீடி எப்பொழுது கொடுப்பது, எவ்வளவு கொடுப்பது என்பதற்கெல்லாம் இப்போது விதிமுறைகள் இருக்கின்றன.

**திரு. எஸ். முருகையன் :** தலைவர் அவர்களே, பல சிறைச்சாலைகளிலே உள்ள குறைகளைப் பற்றி இங்கே எடுத்துச் சொல்லப்பட்டது. 5 பேர் கொண்ட ஒரு சட்டமன்றக் குழுவை அமைத்து, அவர்களை அங்கே இரண்டு நாள் தங்கவைத்து அங்கு இருக்கக்கூடிய குறைகளைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாவதன் :** சிறைச்சாலையிலே இருந்து அனுபவப்பட்ட அமைச்சர்களே இங்கே இருக்கின்ற காரணத்தாலே இது தேவை இல்லையென்று கருதுகிறேன்.

**திரு. ஜி. ஆர். எட்மண்ட் பெர்னாண்டோ :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் தங்கியிருந்த புதுக்கோட்டை சிறைச்சாலை மிக வசதியாக இருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால் நெல்லை மாவட்டத்தில் இருக்கிற கொக்கரகுளம் சிறைச்சாலையிலும் அல்லது தலைமைவாரியாக இருக்கிற சிறைச்சாலைகளாக இருந்தாலும் சரி, அங்கெல்லாம் சுகாதாரக் குறைவு இருப்பதுடன் இரவு நேரங்களில் மலஜலம் வெளியிலே போக வழியில்லாமல் இருக்கிறது. அதையெல்லாம் சீர்திருத்தி அமைக்கின்ற எண்ணம் அரசினருக்கு உண்டா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** குறிப்பாக எந்த சிறைச்சாலைக்காவது இந்த வசதி வேண்டுமென்று அனுப்பினால் அதை நிச்சயம் அரசாங்கம் பரிசீலிக்கும்.

**திரு. அ. துரைசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலே இருக்கிற மத்தியச் சிறைச்சாலையிலே இருக்கிற பி. வகுப்பு கைதிகளை அவர்களுடைய பிளாக்குகளிலே பூட்டி வைக்கிறார்கள். அறைகளைப் பூட்டுவது இல்லை. ஆனால் கோவையிலே பி. வகுப்பிலே கூட அறை





வாரியாகப் பூட்டுகிறார்கள். சென்னையிலே இருப்பதைப் போல கோவையிலும் பிளாக் வாரியாகப் பூட்டுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** ஒவ்வொரு சிறைச்சாலையிலும் அறை எப்படி அமைந்திருக்கின்றது, ஹால் எப்படி அமைந்திருக்கின்றது என்பதைப் பற்றி ஆராய்ந்து, அதன்படி அங்குள்ள அதிகாரிகளே முடிவு செய்கிறார்கள். அதைப்பற்றி தனிப்பட்டு ஏதாவது எழுதி அனுப்பினால் அது பரிசீலிக்கப்படும்.

## பவானி நகருக்கு பெரிய மருத்துவ மனை

* 208—வினா : **திரு ஏ. எம். ராஜா :** மாண்புமிகு மருத்துவத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பவானி வட்டத்தில் பவானி நகரில் பெரிய மருத்துவமனை கட்டும் எண்ணம் அரசாங்கத்திற்கு உண்டா ?

(இ) அந்தப் புதிய மருத்துவ மனையில் எத்தனை படுக்கைகள் இருக்கும் ?

(உ) புதிய மருத்துவமனை கட்டும் முயற்சியில் அரசாங்கம் எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) ஆம்.

(இ) 38 படுக்கைகள்.

(உ) 5 ஏக்கர் நிலத்தை வாங்கி இம்மருத்துவ மனைக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. புதிய கட்டடத்திற்கான செயற்குறிப்பு தற்போது அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளது.

**திரு ஏ. எம். ராஜா :** தலைவர் அவர்களே, பவானி வட்டத்தில் ஒரு பெரிய மருத்துவ மனையும் இல்லாத காரணத்தால் அங்குள்ள மக்கள் 15 மைல்களுக்கு அப்பாலுள்ள மருத்துவ மனைக்குச் செல்லவேண்டியிருக்கிற காரணத்தினால் அந்த மருத்துவ மனை கட்டும் திட்டத்தை விரைவுபடுத்தும் முறையில் அரசாங்கம் செயல்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது.

**திரு. நா. காசிராமன் :** சார், 38 படுக்கை வசதிகளுடைய ஒரு பெரிய ஆஸ்பத்திரி கட்டப்பட்டது என்று சொன்னார்கள். இப்பொழுது அந்த ஆஸ்பத்திரி இருக்கிறதா ? அதில் எவ்வளவு படுக்கைகள் இருக்கின்றன ? இந்த புதிய ஆஸ்பத்திரியின் மதிப்பீட்டு செலவு என்ன ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அங்கு ஏற்கனவே ஒரு மருத்துவ மனை இருக்கிறது. மருத்துவமனை என்று சொல்லுகிற அளவுக்கு அது இல்லை. எனவே, புதிய மருத்துவமனை கட்ட வேண்டுமென்ற செயற்குறிப்பு இருக்கிறது. அதன் மதிப்பு 7·73 இலட்சம் ரூபாய்.

**திரு. ஈ. எம். நடராசன் :** தலைவர் அவர்களே, பவானியில் இருக்கிற மருத்துவமனை மிகவும் மோசமான நிலையில் பார்ப்பதற்கு குதிரைக் கொட்டாய் போல் இருக்கிறது. அமைச்சர் அவர்களும் அதை வந்து பார்த்தார். மிகவும் மோசமாக இருக்கிற காரணத்தினால் அந்த மருத்துவமனையை சீர்திருத்தி, மாற்றி அமைக்கின்ற எண்ணம் அரசாங்கத்திற்கு இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்,

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மருத்துவமனை பார்ப்பதற்கு மாத்திரம் அல்ல, அங்கே இருப்பதற்குக் கூட முடியவில்லை. வேறு மருத்துவமனை கட்டுவதற்கு முயற்சி எடுத்துக் கொள்ளப்படும்.

**திரு. ஜி. ஆர். எட்மண்ட் பெர்னாண்டோ :** தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் காச நோயாளிகளுக்குத் தனி மருத்துவமனை ஒன்றும் கிடையாது. தலைமை மருத்துவ மனையில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனிப்பட்ட முறையில் கண்காணிப்பு நடத்துகிறார்கள். ஆகவே, இதிலே தனிப்பட்ட . . . . .

THIRU K. VINAYAKAM : On a point of order, Sir.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** முடிந்தபிறகு சொல்லுங்கள்.

**திரு. ஜி. ஆர். எட்மண்ட் பெர்னாண்டோ :** காச நோயாளிகளுக்கு என்று தனிப்பட்ட மருத்துவமனையைக் கட்டி வசதி செய்து தருகின்ற உத்தேசம் ஏதேனும் அரசாங்கத்திடம் உண்டா என்று கேட்க விரும்புகிறேன்.

THIRU K. VINAYAKAM: Sir, I rise on a point of order not with a view to affect Mr. Edmund Fernando or anybody in particular in this House. When a question is tabled concerning some particular hospital, the Minister will not be able to answer supplementary questions relating to some other hospital. At that rate I can ask about Tiruttani, another member may ask about Gobichettipalayam, a third member about Palni and so on. Let us not go at a tangent and waste the time of the House. I would request you to request the Members to put supplementary questions relating to the main question.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மூல வினாவுக்கு அளித்த விடையை ஒட்டித் தான் துணை வினாக்கள் இருக்க வேண்டுமென்று நமது 38-வது விதி இருக்கின்றது. இருந்தபோதிலும், மாண்புமிகு அமைச்சர்கள் விரும்பினால் அதைப்பற்றியோ, வேறு எதைப்பற்றியோ, ஏதாவது சொல்ல வேண்டுமானால் சொல்லலாம். அதற்கு அவர்களுக்கு எப்போதும் உரிமை இருக்கிறது.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தனிக் கேள்வி போட்டால் பதிலளிக்கப்படும்.

### *Underground drainage system for Kancheepuram Town.*

*209 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Public Health be pleased to state :—

(*a*) Whether the Kancheepuram Municipality has applied for a loan for effecting underground drainage system in their town ; and

(*b*) If so, what is the estimate thereof ?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : (*a*) & (*b*) No. The investigation work in connection with the drainage scheme has been undertaken and it is in progress. The estimates will be prepared after that work has been completed.



THIRU K. VINAYAKAM : Whereas Kancheepuram town is considered to be the holiest of towns—to quote a common adage 'Nagareshu Kanchi'—whereas it happened to be the headquarters of the Pallava Kingdom whereas it happens to be the birth place of our Chief Minister and whereas there is a possiblity of the headquarters of the Chingleput District being transferred to Kancheepuram, will the Government take up the issue and grant a loan though the investigation is in progress ?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : Necessary steps are being taken . There is no application for the grant of a loan.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. அ. லெ. சுப்பிரமணியம் அவர்கள், திரு. விநாயகம் அவர்கள் பாயின்ட் ஆஃப் ஆர்டர் எழுப்பினார்கள் என்பதை நினைவில் வைத்து, வினாவைக் கேட்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**திரு அ. லெ. சுப்பிரமணியம் :** தலைவர் அவர்களே, திரு. விநாயகம் அவர்கள் பாயின்ட் ஆஃப் ஆர்டர் எழுப்பியிருப்பதால், அதை ஒட்டியே கேள்வி கேட்க விரும்புகிறேன். எந்த எந்த நகரசபையிடமிருந்து புதிய பாதாளச் சாக்கடை சம்பந்தமாக மனுக்கள் வந்திருக்கின்றன. அரசாங்கப் பண உதவிப் போதவில்லையென்றால் அந்த நகரசபைகள் நேரிடையாக எல்.ஐ.சி. யிடமிருந்து கடன்பெறும் ஒரு திட்டத்தை அரசாங்கத்திடம் அனுப்பியிருக்கிறார்களா ? அதை அரசாங்கம் அனுமதிக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அதுபற்றிய விவரக் குறிப்புகள் தற்போது என்னிடத்தில் இல்லை. தனிகேள்வி போட்டால் அது பற்றியவிவரம் அளிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தள்ளி வைக்கப்பட்ட வினா எண் 204 :

### வாலாஜா வட்டத்திலுள்ள நவ்லாக் கிராமம்

* 204—வினா. **திரு எம். அப்துல் கபூர் சாகிப் :** மாண்புமிகு உணவு வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வாலாஜா தாலுக்காவில் நெ. 20 நவ்லாக் என்ற பிரிஹோல்ட் கிராமத்தை ரயத்துவாரியாக மாற்றும் யோசனை உள்ளதா ?

(இ) ஆம் எனில் அங்குள்ள குடிமக்களின் உரிமைகளை பிரிஹோல்ட் தாரர் கெடுத்துவருவது அரசாங்கத்தின் கவனத்துக்கு வந்துள்ளதா ?

(உ) மேற்படி கிராம மக்களின் உரிமையை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கும் உத்தேசம் ஏதேனும் உண்டா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** (அ) ஆம்.

(இ) இல்லை.

(உ) இக் கேள்விக்கு இடமில்லை.

**திரு. எம். அப்துல் கபூர் சாகிப் :** அந்தப் பகுதியில் புதிய கிணறுகளுக்குப் பம்ப் செட் போடப்பட்டும் அதற்கு மின்சாரம் வாங்க முடியாமல் அவதிப்படுகிறோம். அவர்களுக்குத் தனிச் சலுகை கொடுத்து விவசாயம் பாதிக்காத முறையில் மின்சார சப்ளை கொடுக்க இந்த அரசு யோசிக்குமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தலைவர் அவர்களே, இந்த நவ்லாக் தோட்டம் என்று இருக்கின்ற கிராமம் ஆற்காடு நவாபுக்குச் சொந்தமாக இருந்த நிலங்கள். அது 1861-ஆம் வருடம் கிரிஹர்ட்தாஸ் கோவிந்த்தாஸ் என்பவரால் ஏலத்திலே எடுக்கப்பட்டது. மொத்தம் 1605 ஏக்கர் உள்ள நிலம் அது. அப்பொழுது அங்கு குடியானவர்கள் இருந்து வந்தார்கள். இதை ரயத்து வாரியாக மாற்ற வேண்டுமென்ற கோரிக்கைகள் பல காலத்திலே கொண்டு வரப்பட்டது. அதுபற்றி அரசாங்கம் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. அதைப்பற்றி முடிவு எடுத்த பிறகு அவர்களுக்கு என்ன குறைகள் இருக்கின்றன, என்ன பாதுகாப்பு அளிக்க முடியும் என்பதைப்பற்றி பரிசீலிக்கப்படும்.

மு.ப 10-00 THIRU K. VINAYAKAM : Sir, it is a fact that Thiru Giridhar Das has taken it in auction but still if it is converted into a ryotwari village, pattas, will have to be granted to those tenants or farmers who are actually living on the land. Also, recently there was dispute between the auctioner who is an absentee landlord and the peasants living on the land and so, will the Government take steps to rectify this kind of anomaly and see that pattas are granted in favour of the tenants living on the land or if necessary bring forward a new legislation to cover this kind of village in the entire State ?

மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் : அதைத்தான் நான் சொன்னேன். இந்த மாநிலத்தில் இம்மாதிரியான எல்லா இடங்களிலும் உள்ள நிலங்களைச் சேர்த்து, இதுபற்றிய ஒரு சட்டம் கொண்டு வரலாம் என்று தான் யோசிக்கப்பட்டு வருகிறது. திரு. கிர்தார்தாஸ் என்பவர் 1861-ம் வருஷத்தில் வாங்கினாரோ, எப்பொழுது வாங்கினாரோ, அவருடைய சந்ததியார்கள் தங்களுக்குத்தான் சொந்தம் என்று உரிமை கொண்டாடுகிறார்கள். அவர்களுடைய நிலத்திற்கான உரிமை முன்சீப் கோர்ட்டு வழக்கில் ஒத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. அங்கெல்லாம் முறையாக்கப்படும்பொழுது, அங்கு இருக்கிற சாகுபடியாளர்களுடைய உரிமைகளைப் பாதுகாக்க சாத்தியக்கூறான முயற்சிகளை அரசாங்கம் எடுக்கும்.

திரு. எஸ். முருகையன் : இதற்கு ரயத்துவாரி பட்டா கொடுப்பதற்கு காலதாமதமானாலும், அங்குள்ள விவசாயிகள் நீண்ட காலமாக நிலத்தை அனுபவித்துக்கொண்டு வருவதால், அவர்களிடம் இன்டெம்னிடி பாண்டு வாங்கிக்கொண்டு, பம்பு செட்டுகளுக்கு கனெக்ஷன் கொடுப்பதற்கு அரசாங்கம் தனியாக ஒரு உத்தரவு பிறப்பிக்குமா ?

மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் : இந்தக் கேள்வி மூலக் கேள்வியில் எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பட்டிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. அறிவிப்பு

### கவன ஈர்ப்பு அறிவிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. சௌந்தர பாண்டியன் இருப்பிடத்தில் இல்லை என்ற காரணத்தினால்; அவர்களுடைய கவன ஈர்ப்பு அறிவிக்கை பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெற்றுக்கொண்டதாகக் கருதப்படுகிறது.



## 3. 1968-69-ம் ஆண்டிற்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

### கோரிக்கை எண் 23—சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தலைவரவர்களே ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"கோரிக்கை எண் 23—சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன என்ற தலைப்பின் கீழ் ரூ. 5,61,73,600-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்"*.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு. வை. சுவாமிநாதன் : சமுதாய நலத் திட்டங்களை இன்னும் பயனுள்ள திட்டங்களாகச் செய்வதுபற்றி விவாதிக்க —

"கோரிக்கை எண் 23—சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 5,61,73,600-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : பஞ்சாயத்து யூனியன்களுக்கு அதிக அதிகாரங்கள் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள—

"கோரிக்கை எண் 23—சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 5,61,73,600-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : மாவட்ட அபிவிருத்தி மன்றங்கள் இயங்கும் முறை பற்றியும், அவைகளுக்கு மேலும் அதிக அதிகாரங்கள் கொடுத்து, ஜனநாயக முறையில் இயங்க வைப்பது பற்றியும் விவாதிக்க—

"கோரிக்கை எண் 23—சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 5,61,73,600-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. கரு. சீமைச்சாமி : பஞ்சாயத்து யூனியன்களில் சமூகக் கல்வி என்ற பெயரால் ஆகும் வீண் செலவுகள் பற்றி விவாதிக்க —

"கோரிக்கை எண் 23—சமுதாய வளர்ச்சி திட்டங்கள் முதலியன என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 5,61,73,600-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

### கோரிக்கை எண் 29—பொதுப்பணிகள்—உதவி மானியங்கள்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"கோரிக்கை எண் 29—பொதுப்பணிகள்—உதவி மானியங்கள், என்ற தலைப்பின்கீழ் ரூ. 2,74,97,700-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்".†

---

* 562-577-ம் பக்கங்களில் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட குறிப்பு இரண்டாம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

†577-584-ம் பக்கங்களில் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட குறிப்பு மூன்றாம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

[1968 மார்ச் 13

**திரு. கே. பி. எஸ். மணி :** பொதுப்பணிகள் உதவி மானியம்பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 29—பொதுப்பணிகள்—உதவி மானியங்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,74,97,700-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. கே. சகாதேவக் கவுண்டர் :** பஞ்சாயத்து கிராம புதிய பாதைகள் அமைக்க போதுமான நிதி ஒதுக்க வேண்டியதுபற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 29—பொதுப் பணிகள்—உதவி மானியங்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,74,97,700-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. என். வரதராஜன் :** நகரசுத்தித் தொழிலாளர்களின் வாழ்க்கை நிலைமைகளைப் பரிசீலித்து அவர்கள் மேம்பாட்டிற்கு திட்டமிட மூவரைக் கொண்டு ஓர் ஆய்வுக்குழு எற்படுத்துவதுபற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 29—பொதுப்பணிகள்—உதவி மானியங்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,74,97,700-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இப்பொழுது கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் விவாதத்திற்கு விடப்படுகின்றன.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே,

நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்—
அவ்வழி நல்லை வாழிய நிலனே. —(புறநானூறு)

என்பது ஔவை மூதாட்டியின் அருந்தமிழ். நாட்டின் பெருமைக்கு இயற்கைவளத்தினும் ஊக்கமிக்க மக்கட் சிறப்பே பெருங் காரணமாகும் மக்களைப் பொதுப் பணிக்கு ஊக்குவிப்பதான கிராமக் குடியாட்சி முறை தமிழக மக்களுக்குப் புதியதல்ல. பண்டை நாள் தொட்டு இற்றைநாள் வரை தமிழகத்தில் கிராமக் குடியாட்சி நல்ல முறையில் வளர்ந்து சமுதாயத்தின் நல் வளர்ச்சிக்கு அடிப்படையாக இருந்து வந்திருக்கிறதென்ற உண்மையைத் தமிழக வரலாற்றுப் பொன்னேடுகள் நமக்குத் தெரிவிக்கின்றன. சங்க நூல்களில் 'மன்றம் பொதியில்' எனக் குறிக்கப் பட்டவை பின்னர் ஊராட்சிகளாக உருப்பெற்றுப் பெரும் புகழுடன் செயல்பட்டு வந்தன.........

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய உரை அச்சிடப்பட்டு கொடுக்கப்பட்டிருக்கிற காரணத்தினால், அவர்கள் அதைப் படிக்க வேண்டுமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** தலைவர் அவர்களே, இந்த உரை முழுதும் உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற காரணத்தினால் காலத்தினுடைய அருமையை முன்னிட்டு, இதைப் பற்றி விரிவாக விளக்கிக் கூறாமல், இதிலே கூறப்பட்டிருக்கக் கூடிய கருத்துக்களை நல்ல முறையிலே ஆய்ந்து மாண்புமிகு உறுப்னர்கள் நல்ல கருத்துக்களை எடுத்து விளக்கமாகத் தெரிவிக்க வேண்டும் என்று இந்த மாமன்றத்தில் நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். நகராட்சிகள், ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள், மாநகராட்சி மன்றம் ஆகியவை கடந்த ஓராண்டு காலத்திலே ஆற்றிவந்திருக்கக்கூடிய பணிகள் மனதுக்கு மிகுந்த நிறைவு அளிக்கத் தக்கவையாக இருக்கின்றன என்பதை நான்



1968 மார்ச் 13] [திரு மா. முத்துசாமி]

பெருமையோடு எடுத்துச் சொல்ல முடியும். சமுதாய நலத் திட்டங்களின் கீழ் நாம் சாதிக்க வேண்டியவை இன்னும் ஏராளமாக இருக்கின்றன என்றாலும், ஆண்டுக்கு ஆண்டு மைய அரசினிடமிருந்து கிடைத்திருக்கக் கூடிய நிதி உதவி குறைக்கப்பட்டதன் காரணமாகத் திட்டவட்ட முன்னேற்றத்தை நம்மால் எய்த முடியவில்லை என்பதனை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவருவது பொருத்தமுடையதாக இருக்கும் என்று கருதுகிறேன். நிதிநிலைத் தட்டுப்பாடு இருந்தாலும், ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சி மன்றங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய நிதிகளைக்கொண்டு திட்டமிட்ட முறையிலே செயலாற்றி வேளாண்மைத் துறையின் பெருக்கத்துக்கு உணவு உற்பத்திப் பெருக்கத்துக்கு தன்னாலான எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் பெருமையோடு எடுத்துச் சொல்ல முடியும். அத்தகைய சிறப்பான பணிகளுக்காகக் குடியாட்சி முறையின் அடிப்படைத் தளங்களாக விளங்குகின்ற ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சி மன்றங்கள், மாநகராட்சி மன்றம் ஆகியவைகளிலெல்லாம் பொறுப்பேற்றிருக்கக்கூடிய தலைவர்கள் உறுப்பினர்கள், ஏனைய அலுவல் துறையைச் சார்ந்தவர்களும் நம்முடைய பாராட்டுதலுக்குரியவர்கள் ஆவார்கள். கடந்த ஆண்டிலே செய்து முடித்த பணிகளையும், வருகிற ஆண்டில் செய்ய இருப்பவைகளையும் நாம் எடுத்து ஆராய்ந்து பார்க்கத் தக்க ஒரு நாளாக இதனை மேற்கொள்ள வேண்டும் என்று நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரையில் இந்த ஒரு ஆண்டில் பல புதிய திட்டங்களை மேற்கொண்டு, சிறப்புற செயலாற்றி வருவதை நீங்கள் அறிவீர்கள். அது மேலும் நல்ல முறையிலே செயலாற்றி வருவதற்கு நிதி ஒதுக்கீடுகள் கொடுத்தலையும், கடன் எழுப்ப வேண்டிய வசதிகளை அறிவிப்பதற்கான முடிவினையும், நாம் மேற்கொண்டிருப்பதை நீங்கள் அறிவீர்கள். அதைப்போல நகராட்சிகளுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. பொதுவாக நகராட்சிகளுக்கு பாதைகளைச் செம்மைப்படுத்துவதற்காக இந்த ஆண்டில் புதியதாக இதற்கு முன்னாலே எப்பொழுதும் கொடுக்கப்படாத அளவுக்கு ரூ. 7.5 லட்சம் கொடுப்பதாக அரசு முடிவு செய்துள்ளது என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறேன். பேரூராட்சி மன்றங்களுக்குப் பாதை அமைக்க மானியம் வழங்கும் முறையில், ரூ. 5 லட்சம் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்பதையும் அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். முன்பு மானியத்தொகை 6 கோடியாக இருந்தது, இப்பொழுது 5 கோடியாகக் குறைக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பார்த்து ஒரு கோடி ரூபாய் குறைந்துவிட்டதே என்கிற ஐயப்பாடு எழும். ஆனால், புதிய கிணறுகள், நீர் வழங்குதல் போன்றவையும் போன ஆண்டில் இணைத்து இருந்தது. இப்பொழுது நில அடமான வங்கிகள் கொடுக்கின்ற முறையில் ரூ. 75 லட்சம் இந்தக் கணக்கில் இல்லை.-அதைக் கவனத்தில் வைத்துக்கொண்டால், அதிகமாகத் தொகை குறைக்கப் படவில்லை என்பதைப் புரிந்துகொள்ளலாம். இவற்றை மனதில் கொண்டு, உறுப்பினர்கள் ஆக்க பூர்வமான கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டும் என்று விரும்பி வேண்டிக் கேட்டுக் கொண்டு, அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அமைச்சரின் துவக்க உரை படிக்கப்பட்டதாக எடுத்துக் கொண்டு, சட்டமன்ற நிகழ்ச்சிக் குறிப்புகளில் இடம் பெறும்.

1968–69-ம் ஆண்டு சமுதாய வளர்ச்சி ஊராட்சி மானியங்கள் கோரிக்கை.*

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :**

நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே —(புறநானூறு)

---

*அச்சிட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட உரை.

என்பது ஔவை மூதாட்டியின் அருந்தமிழ். நாட்டின் பெருமைக்கு இயற்கை வளத்தினும் ஊக்கமிக்க மக்கட் சிறப்பே பெருங் காரணமாகும். மக்களைப் பொதுப் பணிக்கு ஊக்குவிப்பதான கிராமக் குடியாட்சி முறை தமிழக மக்களுக்குப் புதியதல்ல. பண்டைநாள் தொட்டு இற்றைநாள் வரை தமிழகத்தில் கிராமக் குடியாட்சி நல்ல முறையில் வளர்ந்து, சமுதாயத்தின் நல் வளர்ச்சிக்கு அடிப்படையாக இருந்து வந்திருக்கிற தென்ற உண்மையைத் தமிழக வரலாற்றுப் பொன்னேடுகள் நமக்குத் தெரிவிக்கின்றன. சங்க நூல்களில் 'மன்றம்' 'பொதியில்' எனக் குறிக்கப் பட்டவை பின்னர் ஊராட்சிகளாக உருப்பெற்று பெரும் புகழுடன்செயல் பட்டு வந்தன. இடையிலேற்பட்ட சில அரசியல், பொருளாதார சமூக, மாற்றங்களால் அவ்வூராட்சிகளின் புகழ் குடத்திலிட்ட விளக்குப்போல் மங்கத் தலைப்பட்டது. அதனைக் குன்றின் மேலிட்ட விளக்காக ஆக்க வேண்டுவது நம் தலையாய கடனாகும்.

எல்லாத் துறைகளிலும் "தாழ்வுற்று வறுமை மிஞ்சி விடுதலை தவறிக் கெட்ட" ஒரு தேசமாக இருந்த இந்நாடு காந்தியடிகளின் பெரு முயற்சியால் வீறுகொண்டெழுந்து அரசியல் சுதந்திரம் பெற்றது. விடுதலை பெற்ற நாட்டின் உண்மையான வளர்ச்சிக்குக் கிராம வளர்ச்சியே அடிப் படை என்ற பேருண்மையை அண்ணல் காந்தியடிகள் வலியுறுத்தினார்கள். கிராமக் குடியாட்சிகள் வேரும், விழுதுமாக நிலைபெற்று நல்ல முறையில் அமைந்து செயலாற்ற முற்பட்டாலன்றி, நமக்குக் கிடைத்துள்ள விடுதலை குடியாட்சி என்பதெல்லாம் பேச்சளவிலும் எட்டளவிலேயுமே நின்று விடும். குடியாட்சி இந்நாட்டில் நல்ல முறையில் நிலைத்திருக்க வேண்டு மென்று நினைக்கின்ற அனைவரும் கிராமக் குடியாட்சிகள் சீரிய முறையில் இயங்கப் பாடுபட வேண்டியது இன்றியமையாததாகும். இத்துறையில் தமிழகம் நம் நாட்டிற்கு ஒரு வழிகாட்டியாகத் திகழ வேண்டுமென்பது என் அவா. நம் அனைவருடைய அவாவும் அஃதேயென்பது பற்றி எனக்கு ஐயமில்லை.

சமுதாய வளர்ச்சித் திட்டங்களின் காரணமாகத் தமிழகத்தில் இன்று 12,407 ஊராட்சி மன்றங்களும், 457 பேரூராட்சி மன்றங்களும், 374 ஊராட்சி ஒன்றியங்களும், 14 நகரியங்களும், 88 நகராட்சிகளும், சென்னை மாநகராட்சி மன்றமும் சிறப்புறச் செயல்பட்டு வருகின்றன. இவ்வமைப்புகள் ஆற்றிவருபவை அரும்பெரும் பணிகளாகும். மக்கள் வாழ்வாங்கு வாழ்வதற்கான வழிகள் வகைப்படுத்தப்பட்டு ஊராட்சி களில் நிறைவேற்றப்படுகின்றன.

தென்னாற்காடு மாவட்டம் கல்ராயன்மலைப் பகுதியில் உள்ள பழங்குடி மலைவாழ் மக்களின் நலனுக்காகத் தனியான வளர்சசி வட்டாரம் ஒன் றினைத் துவக்க அரசு ஆலோசனை செய்து வருகிறது. இம்மாதிரியான வளர்ச்சி வட்டாரங்கள் சேலம் மாவட்டம் கொல்லிமலையிலும், ஏற்காடு மலையிலும் உள்ளன. நடப்பு ஆண்டில் இவ்வட்டாரங்கட்காக 19·81 இலட் சம் ரூபாய்கள் செலவழிக்கப்பட்டுள்ளன.

இந்த மானியத்தில் சமுதாய வளர்ச்சித் திட்டம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 5,61,73,600 மானியம் கோரியிருப்பினும் மொத்தமாக ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக ரூ. 52 கோடியே 62 இலட்சம் செலவாகுமென்று இவ்வாண்டு வரவு-செலவுத் திட்டத்தில் கணக்கிடப்பட்டுள்ளது. இது இவ்வாண்டின் மொத்த நிதி ஒதுக்கத்தில் 24 சத வீதமாகும். இதன் விவரங்கள் நிதி இணைப்பு வெளியீட்டில் கொடுக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

ஊருக்குத் தேவையான நல்ல ஒளி அமைத்தல், "அற்றம் காக்கும் கருவி"யாய அறிவைப் பரப்ப நல்ல பள்ளியமைத்தல், பாலம்-பாசன வசதி செய்தல், மருத்துவ உதவியளித்தல், மனமகிழ் மன்றம் நிறுவல், குடிதண்ணீர் வசதியளித்தல், வானொலி நிலையம் அமைத்தல், விதை யளித்தல், நல்ல உரம் அளித்தல் உழவர்க்குத் தேவையான உதவி யளித்தல் போன்ற உயிர்நாடிகளான பணிகளை ஊராட்சிகள் மேற்கொண்டுள்ளன.



1967-68, 1968-69 ஆண்டுகளில், ஆண்டு வாரியாகத் திட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. இவ் விரு ஆண்டுகளிலும் திட்டச் செலவைக் குறைக்க நேர்ந்திருக்கிறது. இந்தச் செலவு குறைவாக இருப்பதற்குப் பல காரணங்களுண்டென்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்குக அறிவர். அதைப் பற்றி இவ்வமயம் தனியாக எதும் நான் கூற விரும்ப வில்லை. இந்தச் செலவு குறைந்ததன் காரணமாகச் சமுதாய வளர்ச்சித் திட்டத்திற்கு அரசு ஒதுக்கிய மானியம் குறைய நேர்ந்திருக்கிறது. இதனால் சமுதாய வளர்ச்சிக்கு வேண்டிய சிறு சிறு திட்டங்கள் பலவற்றை நாம் எடுத்துக்கொண்டு செயலாற்ற முடியவில்லை யென்பதும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நன்கு தெரியும். மாண்புமிகு உறுப்பினர்களில் பலர் என்னை அடிக்கடி வந்து, கண்டு; ஊராட்சிகளில் மக்களுக்கு வேண்டிய வசதிகளைப் பெருக்குமாறு கேட்டுக்கொண்டதுண்டு. அவர்கள் கேட்ட அனைத்தும் நியாயமான கோரிக்கைகளேயாயினும் அவற்றை முழுமை யாகச் செய்ய இயலாமல் இருப்பதற்கு வருந்துகிறேன். அவற்றைச் செய்யக் கூடாதென்பதல்ல எண்ணம்; வேண்டிய நிதி வசதிகள் இல்லாமையே மூல காரணமாகும். இவ்வாண்டு வரவு-செலவுத் திட்டத்தை நாங்கள் சமர்ப்பிக்கும்போது ஏராளமாகத் துண்டு விழுமென்று பலர் எதிர் பார்த்திருந்தார்கள். துண்டு விழாமல்—என் உபரியாகவே—ஒரு வரவு- செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்தது அவர்களுக்கு வியப்பை உண்டாக்கி இருக்கிறது; இந்த ஆண்டின் கணக்கில் வருமானம் உயர்ந்திருக்கிறது. வரித் தரங்களை அதிகப்படுத்தாமல் ஏற்கனவே விதிக்கப்பட்டுள்ள வரிகளை மீதமின்றி வசூலிக்க வேண்டிய வழிவகைகளை அரசு செய்திருப்பதனால், வருமானம் அடுத்த சில ஆண்டுகளில் அதிகமாகக் கூடுமென்று எதிர் பார்ப்பது நியாயமாகும். இப்படி வருமானம் அதிகரிக்கும்போது இதனால் ஏற்படும் அதிக வருமானத்தைச் சமுதாய வளர்ச்சிக்குப் பயன்படுத்த வேண்டுமென்று உங்களைப் போன்றே யானும் விரும்பி இதற்கு வேண்டிய தொகையை ஒதுக்கிக் கொடுக்க ஏற்பாடுகள் செய்ய எண்ணிக் கொண்டு இருக்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களையும் அவைகளின் நிர்வாக அமைப்பையும் சீரமைக்க வேண்டும் என்ற எண்ணம் பல நாட்களாக இருந்து வருகிறது. இதற்காக திரு. முருகேச முதலியார் அவர்களைத் தனி அலுவலராக அரசு நியமித்தது. அவர் ஓர் அறிக்கையைத் தயாரித்திருக்கிறார். அந்த அறிக்கையின் முக்கியப் பரிந்துரைகளை நான் சில மாவட்டங்களின் ஒன்றியப் பெருந்தலைவர்களுடன் கூடி விவாதித்தேன். அவர்களும் தங்களுடைய கருத்துக்களை எடுத்து உரைத்திருக்கிறார்கள். ஊராட்சி ஒன்றியப் பெருந் தலைவர்களின் மூன்றாவது மாநாடும் இவை பற்றி ஆராய்ந்தது. முதலமைச்சர் அவர்கள் சட்ட மன்றத்தின் பல கட்சித் தலைவர்களுடன் அவை பற்றி மூன்று முறை விவாதித்துள்ளார்கள். கட்சித் தலைவர்களும் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்துள்ளார்கள். இவை எல்லா வற்றையும் ஒரு சேர இணைத்து ஆலோசித்து, ஒருமனதாக எந்தெந்தப் பரிந்துரைகளை ஏற்றுக் கொள்ளலாம் என்பதைப் பற்றி விரிவாக ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. இன்னும் இது பற்றிக் கலந்தாலோசித்து இறுதியான முடிவுகளைக் கூடிய விரைவில் எடுக்க முடியுமென நம்பு கிறேன். கிராம வளர்ச்சித் திட்டம் பற்றி ஆராய டிசம்பர் திங்களின் இறுதியில் முதலமைச்சர்கள் மாநாடு ஒன்றைச் சென்னையில் நடத்தவேண்டு மென்று மைய சமுதாய வளர்ச்சித் துறை திட்டமிட்டிருந்தது. மைய அரசு இந்த மாநாட்டை ஒத்தி வைத்துள்ளது. இது ஒரு முக்கியமான பிரச்னை ஆனதால் இது குறித்து அவசரப்பட்டு முடிவு எடுக்காமல், தீர ஆலோசித்து, ஒரு முடிவு எடுக்க வேண்டுமென அரசு கருதுகிறது என்பதை உங்களிடம் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆரம்பக் கல்வியைப் பரப்புவது ஊராட்சி ஒன்றியங்கள் மேற்கொண் டுள்ள வளர்ச்சித் திட்டங்களில் மிகப் பெரியதாகும். ஆரம்பக் கல்விக்காக 2,274 இலட்சம் ரூபாய் இவ்வாண்டில் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஊராட்சி ஒன்றியங்களின் மூலமாகச் செலவு செய்யபபடும் தொகையில் இது 43 சத வீதமாகும். இத் துறையில் 23,[illegible]0 ஆரம்பப் பள்ளிகளும், 4,800 உயர்

தொடக்கப் பள்ளிகளும் உள்ளன. இவற்றுள் 11,000 பள்ளிகளுக்கு
மட்டுமே கட்டிடங்கள் எழுப்பப்பட்டுள்ளன. இன்று தமிழகத்தில் 37 இலட்
சம் சிறுர்களுக்கு 1,14,600 ஆசிரியர்கள் ஊராட்சிப் பள்ளிகளில் அறி
வூட்டி வருகின்றனர். தரமான கல்வியைப் பரப்பும் வகையில் பல மானி
யத் திட்டங்கள் தொடக்கப் பள்ளிகட்கு அளிக்கப்பட்டுள்ளன.

ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் அமைக்கப்பட்டதனுல் நண்பகல்
உணவுத் திட்டத்தை செவ்வனே நிறைவேற்றுவதற்கு வாய்ப்புக் கிடைத்
தது. 1957–58-ம் ஆண்டில் தொடக்கப்பட்ட இத்திட்டத்தின் கீழ் உணவு
வழங்கப்படும் சிறுர்களின் எண்ணிக்கை ஆண்டுதோறும் உயர்ந்து வரு
கின்றது. அரிசன நலப் பள்ளிகள், சென்னை மாநகராட்சிப் பள்ளிகள்
உட்பட 30,000 பள்ளிகளில் இத்திட்டம் செயல்பட்டு வருகின்றது. இப்பள்ளி
களில் 18·27 இலட்சம் பிள்ளைகள் நண்பகல் உணவு பெறுகின்றனர்.
பெருமளவில் முதன்முதலாக 7·30 இலட்சம் ரூபாய் இப்பள்ளிகளுக்குத்
தளவாட மானியமாக 1967–68 ஆண்டில் கொடுக்கப்பட்டுள்ளது. இம்
மானியம் தொடக்கப் பள்ளி ஒன்றிற்கு ரூ. 300 வீதமும், உயர் தொடக்கப்
பள்ளி ஒன்றிற்கு ரூ. 1,000 வீதமும் அளிக்கப்படும். இதன் மூலம்
1,122 தொடக்கப் பள்ளிகளும் 394 உயர் தொடக்கப் பள்ளிகளும்
பயன்பெறும். ஆண்டுதோறும் வழக்கமாகச் சமுதாய வளர்ச்சி நிதி
யிலிருந்து பள்ளிக் கட்டிடங்கட்கென ஒதுக்கப்படும் தொகையைத் தவிர,
இவ்வாண்டில் கல்வி மானியத்திலிருந்து பள்ளிக் கட்டிடங்கள், ஆசிரியை
குடியிருப்பு வீடுகள் கட்டுவதற்கும், தளவாடச் சாமான்கள் வாங்குவதற்கும்
27·65 இலட்சம் ரூபாய்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. இந் நிதியைச் செவ்வனே
பயன்படுத்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள், ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள்
பொதுமக்கள் ஒத்துழைப்புடன் செயலாற்றி வருகின்றனர். ஊராட்சி ஒன்
றியப் பள்ளிகளில் கல்வித் திட்டங்கள் நிறைவு பெற ஆவன செய்ய
வேண்டி துவக்கப்பட்ட கல்விப் பிரிவு இதற்கான வழி வகைகள் செய்து
வருகிறது. என்னருந் தமிழ்நாட்டின்கண் எல்லோரும் கல்வி கற்றுப்
பன்னறுங் கலைஞானத்தால், பராக்கிரமத்தால், அன்பால் உன்னத இமய
மலை போல் ஓங்கிவிடும் கீர்த்தியெய்தி இன்புற்று வாழும் நிலை விரைவில்
மலரக் கல்வி வளர்ச்சியை மேலும் வளப்படுத்துவோமாக!

இவ்வாண்டில் கிராமப் பணிகள் திட்டத்திற்கென ரூ. 182·22 இலட்சம்
நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 1967 செப்டம்பர் 30-ம் தேதி முடிய
2,700 மேல் நிலை நீர்த் தொட்டிகள், 48,900 குடிநீர்க் கிணறுகள்,
17,000 மைல்களுக்கு மேற்பட்ட இணைப்புச் சாலைகள் ஆகியவை அமைக்கப்
பட்டிருக்கின்றன. பாதை பராமரிப்புக்கென ஒவ்வொரு ஊராட்சி ஒன்றி
யத்திற்கும் நபர் ஒருவருக்கு 40 காசு என்ற விகிதத்தில் கணக்கிடப்பட்ட
"சாலைகள் மானியம்" தனியாக வழங்கப்படுகிறது. இதற்காக இவ்வாண்
டில் 110 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. தமிழகத்தில் சுமார்
29,000 சிறு பாசன ஆதாரங்கள் உள்ளன. இவற்றில் சுமார் 23,800
ஆதாரங்களைப் பேணி வரும் பொறுப்பினை ஊராட்சி ஒன்றியங்கள் மேற்
கொண்டுள்ளன. இதற்காக "தல பாசன மானியங்கள்" என்ற தலைப்
பின்கீழ் இவ்வாண்டு ரூ. 52·83 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது.
சாலைகளைப் பேணுவதற்காக ஊராட்சிகள் அரசினரிடமிருந்து நிதி உதவி
பெற, தமிழக ஊராட்சிச் சட்டத்தில் வழிவகை செய்யப்படவில்லை.
இது குறித்து, அரசினரிடம் பல முறையீடுகள் செய்யப்பட்டு வந்துள்ளன.
இவற்றிற்கிணங்க பேரூராட்சி மன்றங்களில் புழுதியற்ற மேற்பரப்பையுடைய
சாலைகளை அமைப்பதற்காகும் செலவில் பாதியை மானியமாக வழங்கும்
பொருட்டு, முதல் முறையாக வரவு-செலவுத் திட்டத்தில் ஐந்து இலட்சம்
ரூபாய்கள் இவ்வாண்டு ஒதுக்கப்பட்டுள்ளன என்பதை தெரிவித்துக்கொ
வதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். 1967-ல் வீசிய புயலினுலும்,
ஏற்பட்ட வெள்ளத்தினுலும், சாலைகள் பெரிதும் சேதமடைந்த மாவட்டங்
களில் ஊராட்சி ஒன்றியச் சாலைகளையும், ஊராட்சிகளின் சாலைகளையும்
செப்பனிடுவதற்கு ஊராட்சிகளுக்கு அரசு சிறப்பு மானியம் வழங்கி
யுள்ளது.





வேளாண்மை உற்பத்தியை அதிகரிப்பது ஊராட்சி ஒன்றியங்களின்
பொறுப்பாகுமென்று 1958-ம் ஆண்டு தமிழக ஊராட்சிச் சட்டத்தின்
முன்னுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அரசின் வேளாண்மை மானியங்
களைப் பொறுத்த வரை ஊராட்சி ஒன்றியங்களின் வேளாண்மைத் திட்டங்
கள், "இன்றியமையாதவை" விருப்ப திட்டங்கள் என இரு பகுதிகளாகப்
பிரிக்கப்பட்டுள்ளன. மேலும், ஊராட்சி ஒன்றியங்கள் தங்களுடைய
மற்றத் திட்டங்களை மேற்கொள்ளுவதற்காக "குறிப்பிட்ட பகுதிகளுக்கான
வேலைகள்" என்பதன் கீழும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. வேளாண்மை
மானியத்தின் கீழ், மீனள வளர்ச்சிக்காகத் தமிழகத்திலுள்ள ஒன்றி
யங்கள் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இதனுல் மீனளத்
திட்டங்கள் நன்கு செயல்பட்டு வருகின்றன.

மருத்துவ அகங்களை நிறுவுவதும், அவற்றைப் பேணி வருவதும்
ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பாகும். இதற்காக அரசு ஒன்றியங்
களுக்கு மானியம் வழங்குகிறது. தாய்-சேய் நல விடுதிகள் பல அமைக்கப்
பட்டு அவை நன்கு பணியாற்றி வருகின்றன. குடும்பக் கட்டுப்பாடுத் திட்ட
டத்தை ஊராட்சி ஒன்றியங்கள் செவ்வனே செயல்படுத்த இவை உதவியாக
இருக்கின்றன.

கிராம மனித உழைப்புத் திட்டம் தமிழகத்தில் 72 ஊராட்சி ஒன்றியங்
களில் செயல்பட்டு வருகின்றது. போவையில் வைக்கப்பட்ட குறிப்பின்
இரண்டாவது இணைப்பில் இத்திட்டத்தை செயல்படுத்தி வரும் ஒன்றியங்
களின் பட்டியலைக் காணலாம்.

ஆண்டுதோறும் திட்டங்கள் தீட்டி, அவற்றை நிறைவேற்றித் தங்க
ளது வருமானத்தைப் பெருக்கும் வகையில் ஊராட்சி ஒன்றியங்கள் செயல்
பட வேண்டும் என்பது எனது கருத்து. இதனைக் கருத்தில்கொண்டு
1967-ம் ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் பேரறிஞர் அண்ணு அவர்
களின் பிறந்த நந்நாளன்று ஓராண்டுத் திட்டங்களாக உணவு உற்பத்திக்
கான பல திட்டங்களை வகுத்துள்ளோம். விசைப் பொறியுடன் கூடிய
சமுதாயப் பாசனக் கிணறுகள் தோண்டுதல், டிராக்டர்கள், டில்லர்கள்,
போன்ற விவசாயக் கருவிகளை வாங்கி அவற்றைக் குறைந்த கட்டணத்தில்
விவசாயிகட்குக் கிடைக்க வழி செய்தல், பள்ளிகளில் காய்கறித் தோட்டங்
கள் அமைத்தல் போன்ற சிறந்த பணிகளை உள்ளாட்சித் துறை இவ்வாண்
டின் திட்டங்களாக மேற்கொண்டுள்ளது. இவைகளை நிறைமனதுடன் உரிய
காலத்தில் செய்து முடிப்பதோடு நில்லாமல் மேலும் தொடர்ந்து பல
ஓராண்டுத் திட்டங்களை உருவாக்கிச் செயல்படுத்த உங்கள் மேலான ஒத்
துழைப்புத் தூண்டுகோலாயிருக்க வேண்டும் என விரும்பி வேண்டி
விழைகின்றேன்.

நாம் செய்ய வேண்டிய வேலைகள் நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே
செல்கின்றன. இதற்கு வேண்டிய நிதி வசதி அதே அளவில் பெருகாததி
னுல், நம் திட்டங்கள் சில பாதிக்கப்படுகின்றன. மாநில அரசுக்கு மைய
அரசின் உதவி ஆண்டுதோறும் குறைந்து கொண்டே வருவது நீங்கள்
அறியாதது அல்ல. இத் தருணத்தில், ஊராட்சி நிறுவனங்கள் தங்கள்
நிதிப் பெருக்கத்திற்கான வழி வகைகளை ஆராய்ந்து கருத்தூன்றி செயல்
பட வேண்டும். வருமானத்தைப் பெருக்கும் திட்டங்களை ஊராட்சிகள்
அமைத்து நிதிப் பற்றுக்குறையை நீக்க வழி முறை காண வேண்டும்.
இப்பணியில் பொது மக்கள் பெரிதும் துணை நிற்பார்களென்று நம்பு
கிறேன்.

## நகராட்சி வரவு-செலவு.

தமிழகத்தில் இன்று 88 நகராட்சி மன்றங்களின் மொத்த வருமானம்
1965–66-ம் ஆண்டுக் கணக்குகளின்படி $12\frac{1}{2}$ கோடி ரூபாய் அளவில்
உயர்ந்துள்ளது என்பதை இப்பேரவையின் தனிக் கவனத்திற்குக் நான்
கொணர விரும்புகிறேன். வீட்டு வரி $4\frac{1}{4}$ கோடி ரூபாய்; கேளிக்கை வரி
வகையில் 2 கோடி ரூபாய்; நாளங்காடி, பேருந்து நிலயம் முதலான

பயனீட்டுத் துறையில் $1\frac{3}{4}$ கோடி ரூபாய் ; முத்திரை விற்பனை வகையில் அரைக் கோடி ரூபாய் ; தண்ணீர்க் குழாய் வரவு அரைக் கோடி ரூபாய் ; தொழில் வரி கால் கோடி ரூபாய் ; ஏனைய வரவுத் துறைகளில் ஒரு கோடி ரூபாய் இத்துடன் இம்மாநில அரசு மானியம் கடன் மூலமாக இரண்டு கோடி யளவில் கொடுத்துள்ளது.

மேற்கண்ட வரவிலிருந்து நகராட்சித் துறையில் நடைமுறை அளவில் $9\frac{1}{4}$ கோடி ரூபாயும் முதலீட்டுச் செயல்களில் 3 கோடி ரூபாயும் செலவாகி யுள்ளது. நடைமுறையினங்களில் ஆரம்பப் பள்ளிக்கு 130 இலட்சம் ரூபாய் ; உயர்நிலைப் பள்ளிக்கு 80 இலட்சம் ரூபாய் ; பொதுநலத்துறைக்கு $2\frac{1}{2}$ கோடி ரூபாய், குடிநீர் வடிகால் துறையில் $1\frac{3}{4}$ கோடி ரூபாய், போக்கு வரத்துப் பணிக்கு 80 இலட்சம் ரூபாய் ; பயனீட்டுத் துறைகளுக்கு 40 இலட்சம் ரூபாய் ; தெருவிளக்கு 40 இலட்சம் ரூபாய் நகரமைப்புத் துறைக்கு 20 இலட்சம் ரூபாய் ஆகும். மொத்தச் செலவு $12\frac{1}{4}$ கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது.

பொதுவாகக் கூறுமிடத்து, உள்ளாட்சி மன்றங்கள் அனைத்தும் நிதி நிலைமைக்கேற்பத் தம் பணிகளைத் திறம்படச் செயலாற்றி வருகின்றன. இன்னும் ஆற்ற வேண்டிய பணிகள் பலப்பல. இவற்றைச் செயல்படுத்த வேண்டுமானால், நிதி வசதி பெருகவேண்டியதாயிருக்கிறது. குடி தண் ணீர், வடிகால் துறைகளில் மானியம் வழியாக மற்ற ஆட்சித் துறைகளுக்கு அளித்துள்ள சலுகைகளை நகராட்சிகளுக்கும் அளிக்க மைய அரசு ஒப்புக் கொண்டால், நகராட்சி மன்றங்களின் நிதி நிலைமை குறிப்பாக முன்னேற்ற மடையும் என்பது என் கருத்து. நீர் வழங்கல், உணவு முதலாயவற்றை முன்னிட்டுச் சென்னை மாநகராட்சிக்கு 1967–68 இறுதிவரையில் மைய அரசினரின் உடமையிலிருந்து பணிக் கட்டணமாக ரூ. 25 இலட்சம் வர வேண்டியுள்ளது. இதைக் கொடுக்குமாறு மாநகராட்சி பல முறை வேண்டியும் பயனில்லை. மாநகராட்சியின் சார்பில் தமிழக அரசு மைய அரசின் பணிகள், வீட்டு வசதி வழங்கல் அமைச்சகத்திற்கு இது பற்றி நேரடியாகக் கடிதம் எழுதித் துரிதப்படுத்த வேண்டியுள்ளது.

நகராட்சி நிர்வாகத்துடன் நான் தொடர்பு கொள்ளத் தொடங்கிய பின் கடந்த ஓராண்டில் பல நகராட்சிகளின் வேலை முறைகளைக் கண்டறிகின்ற வாய்ப்பு எனக்குக் கிட்டியுள்ளது. நாளங்காடிகள், பேருந்து நிலையங்கள், லாரி நிற்குமிடங்கள், கடைகள் போன்ற ஆதாயம் தரக்கூடிய முயற்சி களில் பல நகராட்சி மன்றங்கள் ஆர்வம் காட்டுகின்றன. இத்துறையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி கண்டு நான் வியப்படைகிறேன். நகராட்சி நிறு வனங்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்ற பணிகளில் ஒன்றான கல்வி வளர்ச்சியைப் பொறுத்த வரையில் நிதி நிலை பற்றாக்குறையினால் இம் மாநிலத்தில் நகராட்சிகள் பெரிய முன்னேற்றத்தை முற்றிலும் அடைய முடியாத சூழ்நிலை உள்ளது. நகராட்சி உயர்நிலைப் பள்ளிகளை அரசாங் கமே ஏற்று நடத்த வேண்டுமென்று நகராட்சி மன்றங்களிடமிருந்து கோரிக்கைகள் வந்துள்ளன. இந்தக் கோரிக்கைகளை அரசு ஆழ்ந்த கவ னத்துடன் பரிசீலனை செய்து வருகிறது.

நகராட்சி மன்றங்கள் நெடுங்காலமாக வேண்டி வந்ததற்கு இணங்க, நக ராட்சி சாலைகளைப் பேணுவதற்கென 7·5 இலட்சம் ரூபாய் தனி மானியம் (ad hoc grant) வழங்கவும் அரசு முதன்முதலாக முடிவு செய்துள் ளது என்பதைப் பெரு மகிழ்வுடன் இப்பேரவையில் தெரிவித்துக்கொள் கிறேன்.

நகராட்சித் தலைவர்கள் மாநாடு ஒன்று ஆண்டுதோறும் நடப்பதுண்டு. இத்துடன் நகராட்சி ஆணையாளர்களும் சேர்ந்து கூடி அவர்கள் எல்லோ ரும் ஒருவருக்கொருவர் தங்கள் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்வார்கள். அந்த மாநாடு இந்த வருடம் எப்ரல் 29-ந் தேதி, 30-ம் தேதி இரண்டு நாட்கள் நடைபெறுமென்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இதில் மாண்பு மிகு முதலமைச்சர் அவர்களும், நானும், இன்னும் இத்துறையின் மற்ற அலுவலர்களும் கலந்துகொள்வோம். தற்போது நகராட்சித் துறையில் ஆணையர்களும்; பணித்துறை அலுவலரும், சுகாதாரத்துறை அலுவலரும் தான் அரசின் ஊழியர்களாக—ஓய்வு ஊதியம் பெறும் ஊழியர்களாக—



பணி புரிந்து வருகின்றனர். இன்னும் பல்வேறு சிப்பந்திகள் இதே போல அரசினர் அலுவலர்களாக மாற்றப்பட வேண்டும் எனும் கோரிக்கை பல நாட்களாக இருந்து வருகிறது. இதுவும் அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது. இதைச் செய்யுமுன் சட்டத்தை மாற்றியமைக்கும்படி யான ஓர் நிலைமை ஏற்படுவதினால், இதைச் செயலாற்ற சற்றுத் தடங்கல் இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன். இது குறித்து அரசு தீவிர மாக ஆராய்ந்து கொண்டு வருகிறது.

சமுதாய வளர்ச்சித் துறை மேன்மேலும் நன்கு செயலாற்றி பொலி வும் வலிவும் உடையதாயும் உலகத்திற்கொரு புதுமையானது மான சமுதாயம் அமைக்கத் தக்க உங்கள் மேலான கருத்துக்களை இப் பேரவையில் வழங்குமாறு மன்றத்தின் மாண்புமிகு அங்கத்தினர்களை விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

“ துணை நலம் ஆக்கந்தரூஉம் வினைநலம்
வேண்டிய எல்லாம் தரும்.”

என்ற பொய்யா மொழியின்படி வினை நலம் பெற்று “ எண்ணிய எண்ணி யாங்கு எய்தும் ” நிலையை நாம் பெறுதற்கு முயற்சிப்போமாக.

நான் பொறுப்பெற்றுக் கொண்ட ஓராண்டுக்காலமாக எனது ஆக்கப் பணியில் ஊக்கமுடன் ஒத்துழைத்த நகராட்சித் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்கள், ஊராட்சித் தலைவர்கள் மற்றுமுள்ள அலுவ லர் பலருக்கும் எனது உளங் கனிந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்வ தில் மகிழ்ச்சி கொள்கிறேன்.

இவற்றை எடுத்து விளக்க இடமளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி, வணக்கம்.

“ எல்லார்க்கும் தேசம், எல்லார்க்கும் உடைமைஎலாம் !
எல்லார்க்கும் எல்லா உரிமைகளும் ஆகுகவே !
எல்லார்க்கும் கல்வி சுகாதாரம் வாய்ந்திடுக !
எல்லார்க்கும் நல்ல இதயம் பொருந்திடுக !”

*** திரு. வை. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, சமுதாயநலத் திட்டங் கள் இந்த நாட்டில் எவ்வளவு தூரம் வெற்றிகரமாக நடைபெறுகின்றதோ அதைப் பொறுத்துத்தான், நாட்டின் எதிர்காலம் இருக்கும். குறிப்பாக நாட்டில் வாழக்கூடிய மக்களில் பெரும்பான்மையானவர்கள் கிராமங் களில்தான் வாழ்கிறார்கள். கிராம மக்களுடைய வாழ்க்கை நன்றாக இருந் தால்தான் நாட்டில் அபிவிருத்தியும் நன்றாக இருக்கும். மகாத்மா காந்தி கண்ட கனவான ராம ராச்சியம் உருவாக வேண்டுமானால், அதற்கு இன்றி யமையாதது கிராம ராச்சியம். ஆகவே, கிராம மக்களுடைய வாழ்க்கையை நலம் பெறச்செய்ய சமுதாய நலத்திட்டங்கள் வெற்றிகரமாக நடைபெற வேண்டும். கிராம மக்களுக்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுக்கப் படவேண்டும். அவர்களுக்கு வேண்டியது குடிக்க நல்ல குடி தண்ணீர், படிக்கப் பள்ளிகள், நடக்க நல்ல நடைபாதைகள் இருளை நீக்க ஒளி இவைதான் சமுதாயநலப்பணிகள். சமுதாய நலத்திட்டங்களில் கதர், கிராமத் கைத் தொழில்கள், சிறு சேமிப்பு போன்ற நல்லத் திட்டங்களும் சேர்ந்திருக்கின்றன. இவைகளெல்லாம் வெற்றிகரமாக நடைபெற்றால்தான், கிராம மக்களை நல்வாழ்வுக்கு எடுத்துச் சென்றவர்கள் ஆவோம். முக்கியமாகப் பஞ்சாயத்துக்களுக்கும், பஞ்சாயத்து யூனியன் களுக்கும் கீழ்கண்டவற்றையாவது உடனடியாகச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

முதலாவதாக, பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் மக்க ளால் நேரிடையாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன்களுக்கு என்று ஒரு தனி இலாக்கா அமைக்கப்பட

வேண்டும். மாநில அளவிலும், மாவட்ட கோட்ட அளவிலும் வருவாய்த்துறை பிணைப்பின்றி தனித்து இயங்க வேண்டும். இவற்றின் வருவாயைப் பெருக்க வழி வகைகள் இருக்க வேண்டும். பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன்களுக்கு கடன் கொடுக்க ஒரு பஞ்சாயத்து நிதி கார்ப்பரேஷன் அமைக்கவேண்டும். பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன்களுக்கு, ஜாதி, மத, அரசியல் பேதமற்ற முறையில் பணி செய்யக்கூடிய நிலைமைகள் இருக்க வேண்டும். பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன்களில், எக்காரணம் கொண்டும் அரசியல் புக முடியாத வகையில் ஏற்பாடுகள் இருக்க வேண்டும். பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன்களுக்கு உடனடியாகக் கட்டடங்கள் கட்டிக் கொடுக்கப்பட வேண்டும். இந்த பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன் ஊழியர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்படவேண்டும். வீட்டு வாடகை அலவன்ஸ் கொடுக்கத் திட்டம் இருக்க வேண்டும். பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன்களுக்கு அலுவலகம் கட்டும்போதே, அந்த எஸ்டிமேட்டிலேயே ஊழியர்களுக்கு வீடு கட்டுவதும் இடம் பெறவேண்டும். பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன்களுக்கு ஆலோசனைகள் வழங்க, ஒரு ஆலோசனைக் குழு அமைக்கப்பட வேண்டும்.

இன்றைக்குப் பஞ்சாயத்து நிலைமைகளைப் பார்த்தால், ஒரு பக்கத்திலே அதிகப்படியான அதிகாரங்கள் வேண்டும் என்ற அபிப்பிராயமும், இன்னொரு பக்கத்தில் பணம் வேண்டும் என்கிற கருத்தும் இருக்கின்றன. குறிப்பாக பணம் இருந்தால்மட்டும் போதாது. அதிகாரங்களும் பஞ்சாயத்துக்களுக்கு வேண்டும் என்ற நிலை இருக்கிறது. ஒரு சாரார் நினைக்கலாம், பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன்கள் சரிவர நடக்கவில்லை என்று. ஒரு நிலத்திலே சாகுபடி செய்கிறோம் என்றால் நல்ல மகசூல் கிடைக்கிறது. அதோடு கூடவே பதரும் இருக்கிறது. அதையும் நாம் பார்க்கிறோம். அதைப்பார்த்துவிட்டு, நிலம் பூராவுமே மோசம் என்று சொல்லிவிட முடியுமா? ஆற்றிலே புது வெள்ளம் வருகிறது. அதன் மேலேயே நுரையும் வருகிறது. அதைப்பார்த்துவிட்டு, தண்ணீரே கெட்டது என்று சொல்லமுடியுமா? அழுக்கை நீக்கி விட்டுப்பார்த்தால் நல்ல தண்ணீர் கீழே இருக்கிறது தெரியும். அதைப்போலத்தான் இங்கேயும் நல்ல பல திட்டங்கள் இருக்கின்றன.

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் பஞ்சாயத்துகளுக்கு உதவியாக நிறைய பஸ்களை விட்டிருக்கிறார்கள். ஆனால் அதே சமயத்தில், பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன்களிடம் இருக்கக்கூடிய ரோடுகளை அவர்களால் பராமரிக்கப் போதுமான பணம் அவர்களிடம் இல்லை. இன்றைக்கு உண்மையிலேயே எங்களிடம், எங்கள் பஞ்சாயத்து யூனியன் கையில் 40 மைல் ரோடு இருக்கிறது. ஆனால் அதற்காகக் கொடுக்கப்பட்டிருக்கும் தொகை ரூபாய் 33,500 தான். எங்களுக்கு பஸ்கள் போகக்கூடிய ரோடுகளின் நீளம் 20 மைல்களுக்கு மேல் இருக்கிறது. பஸ் போகக்கூடிய ரோடுகள் போட வேண்டும் என்றால் எங்களுக்கு குறைந்தது இரண்டு லட்சம் ரூபாய் வேண்டும். ஆதலால், இம்மாதிரி பஸ் போகும் இடங்களில் உள்ள ரோடுகளை அரசாங்கம் எடுத்துக் கொண்டு பஸ் போகும் வசதியைச் நல்லமுறையில் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அல்லது அதற்கு வேண்டிய தொகையை அளிக்க வேண்டும். மோட்டார் வாகனவரியிலிருந்து 25 சதவிகிதம் அளவு எங்களுக்குக் கொடுத்து உதவி செய்தால், ரோடுகளைப் பராமரிக்க ஏதுவாக இருக்கும், அல்லது பஸ் ரூட் கிராண்ட் என்று ஒரு தொகையை ஒதுக்கி அதை யூனியனுக்குக் கொடுத்தால் சௌகரியமாக இருக்கும்.

பஞ்சாயத்துக்களின் வருமானத்தைப் பெருக்க ஏதாவது வழி செய்ய வேண்டும். இன்றைய தினம் ரோடுகளுக்கு என்று கொடுக்கக்கூடிய பணம் ஜனத்தொகை அடிப்படையில் கொடுக்கப்படுகிறது. அது வெற்றிகரமாக இல்லை. ஆகவே, அதை மறுபரிசீலனை செய்ய வேண்டும். சில பஞ்சாயத்து யூனியன்களைப் பார்க்கிறோம், அவர்களுக்கு இருக்கும் ரோடுகள் 7 மைல் தான் இருக்கும், ஆனால் ஜனத்தொகை நிறைய இருக்கும். அந்த அடிப்படையில் அதிகமாகப் பணம் கிடைக்கும். சில



பஞ்சாயத்து யூனியன்களுக்கு ரோடுகள் அதிகமாக இருக்கும். ஜனத்தொகை குறைவாக இருக்கும். ஜனத்தொகை அடிப்படையில் கிடைக்கும் பணம் போதாமல் போய் விடுகிறது. ஆகவே ஜனத்தொகை அடிப்படையை மாற்றி விட்டு, ரோடுகளின் நீளத்தின் அளவில், அந்த அடிப்படையில் பணம் கொடுத்தால் நலமாக இருக்கும் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, பஞ்சாயத்துக்களின் வரும்படியைப் பெருக்க, தற்காலிக சினிமாக் கொட்டகைகளுக்கு, ரைஸ் மில்களுக்கு, இவற்றிற்கெல்லாம் லைசென்ஸ் கொடுப்பதில் தாராளமுறையைக் கைகொள்ள வேண்டும். தாராளமுறையைக் கைக்கொண்டால் பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன்களுக்கு வருமானத்தைப் பெருக்க ஏதுவாக இருக்கும். இன்னும் ஹைவேஸ்களில் இருக்கும் புளிய மரங்களையும், மற்ற காய்ப்பு மரங்களையும், பஞ்சாயத்துக்களுக்கே அவற்றிலிருந்து கிடைக்கும் பலன்களை விட்டு விட்டால், வருமானத்தைப் பெருக்க முடியும். இன்னும், கிராமங்களில் நிறைய குளங்கள் இருக்கின்றன. அவற்றில் மீன், பாசிக் குத்தகைகளை பஞ்சாயத்துக்களுக்கே விட்டுவிட்டால், அவைகளின் வருமானத்தை பெருக்கிக்கொள்ள முடியும். இவற்றை யெல்லாம் பற்றி யோசித்து, பஞ்சாயத்துக்களின் வருமானத்தைப் பெருக்கும் வழிவகைகளைக் காண வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன் கல்விச்சாலைகளை எடுத்துக் கொண்டால்,சில பஞ்சாயத்துக்களின் வருமானமே ரூபாய் 500 தான் இருக்கும். அம் மாதிரியான நிலையில், அவர்களால் பள்ளிக்கட்டிடங்களைக் கட்டமுடியாது. ஆகவே அந்த நிலைகளில் 75 சதவிகிதப் பணத்தை சர்க்காரே கொடுத்து,25 சதவிகிதப் பணத்தை பஞ்சாயத்து யூனியன் நிதியிலிருந்து கொடுத்தால் நலமாக இருக்கும். அப்போதுதான் அப்படிப்பட்ட ஊர்களில் பள்ளிக்கூடக் கட்டிடங்களை அமைக்கமுடியும். அதோடு ஆசிரியர்களுக்கு வீடுகள் கட்டும் திட்டத்திற்கும் அந்த எஸ்டிமேடிலேயே சேர்த்து இடம் கொடுக்கப்பட வேண்டும்.

அதோடு பள்ளிக்கூடங்களுக்கு அங்கீகாரம் வாங்குவதில் நிறைந்த சிரமங்கள் இருக்கின்றன. அதுபற்றி நண்பர் திரு. நாகசுந்தரத்திற்கு நன்றாகத் தெரியும். எங்கள் தொகுதியில், செம்பட்டு என்கிற கிராமத்தில் ஒரு பள்ளிக்கூடத்திற்கு அனுமதி வாங்க வேண்டும் என்று ஒரு வருஷகாலமாகச் செயல்படுகிறோம். 500 பிள்ளைகள் படிக்கிறார்கள். ஆனாலும் பள்ளிக்கூடத்திற்கு அங்கீகாரம் வேண்டும் என்றால், ஒரு மைலுக்குள் இன்னொரு பள்ளி இருக்கிறதா, அது, இது என்று பேப்பரை அலைக்கழித்து கொண்டு கால தாமதம் செய்கிறார்கள். அதன் காரணமாக அங்கே உள்ள பிள்ளைகளுக்கு மதிய உணவு கொடுக்க முடியாத நிலை இருக்கிறது. ஒரு மைலுக்கு உள்ளே இருந்தாலும்,300 ஜனத்தொகை கொண்ட இடமாக இருந்தால், பள்ளிக்கூடத்திற்கு அவசியம் இருக்கிறது என்று செய்ய வேண்டும். அதோடு அப்படிப்பட்ட பள்ளிக்கூடங்களை கமிஷனரே அமைத்து விட்டு, கல்வி இலாக்காவிற்கு இன்பர்மேஷன் கொடுத்தால் போதும் என்று ஒரு திட்டத்தை அமல் ஆக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி அமலாக்கினால் நலமாக இருக்கும். நகரத்திற்கு அருகாமையில், ஒரு மைலுக்குள் பள்ளி இருக்கக் கூடாது என்பதில் கஷ்டங்கள் நிறைய இருக்கின்றன. டவுன்களைச்சுற்றி ஏராளமான குழந்தைகள் இருக்கின்றன, தொழிலாளர்கள் அதிகமாக இருக்கிறார்கள், ஆகவே குழந்தைகளும் அதிகமாக இருக்கிறார்கள். ஆகவே, அங்கு நிறைய பள்ளிக்கூடங்கள் அமைக்க வேண்டிய சூழ்நிலையும் இருக்கிறது. ஆகவே, ஒரு மைல் என்கிற நிபந்தனையைக் கைவிட்டு, ஜனத்தொகை அடிப்படையில் பள்ளிக்கூடங்கள் வைக்கப்படவேண்டும் என்கிற திட்டத்தை வகுத்துக்கொண்டால் நலமாக இருக்கும். பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன்களை எடுத்துக் கொண்டால் ஒரு கட்டடம் மிக மிக அவசியமானதாக இருக்கிறது. ஏனென்றால், பஞ்சாயத்துத் தலைவர் தேர்தலில் இருவர் போட்டியிடுகிறார்கள். ஒருவர் ஜெயிக்கிறார். ஒருவர் தோற்கிறார். தோற்றவரும் பஞ்சாயத்து

உறுப்பினர். தலைவர் தன்னுடைய வீட்டில் பஞ்சாயத்து ஆபிசை வைத்துக் கொண்டால், மற்றவர் (தோற்றவர்) அவர் வீட்டுக்கு தான் எதற்காகப் போகவேண்டும் என்கிறார். அதனால் தகராறுகள் ஏற்படுகின்றன. அதே மாதிரி கிராம முன்சிப், கணக்குப்பிள்ளைகளும் தங்கள் கணக்குகளை எடுத்துக் கொண்டு அவர் (தலைவர்) வீட்டிற்கு என் போக வேண்டும் என்கிற பிரச்சினையும் ஏற்படுகிறது. ஆக இம்மாதிரியான சிக்கல்கள் வருகின்றன. ஆகவே, ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு பஞ்சாயத்துக் கட்டடம் கட்ட வேண்டும். அதற்காகப் பாதித் தொகையைக் கடனாகவும், பாதித் தொகையை மானியமாகவும் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

கிராமப் புறம்போக்குகளெல்லாம் கிராமப் பஞ்சாயத்துக்களுக்கே ஒப் படைக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. ஆனால், பெரும்பான்மையான கிராமங்களைப் பார்த்தால், பஞ்சாயத்துக்களுக்கு வெற்றுப் புறம்போக்குகள் கூட ஒப்படைக்கப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. கிராமக் கர்ணங்கள், புறம்போக்கு ஆக்கிரமிப்புக்களைக் காலி செய்து, அந்த நிலங்களை எந்தப் பஞ்சாயத்துக்களிடமும் ஒப்புவிக்கவில்லை. கிராமக் கர்ணங்கள் ஏதோ சாக்குச் சொல்லுகிறார்கள். ஆகவே, ஆக்கிரமிப்புக்களைக் காலி செய்வதற்கு கமிஷனருக்கே அதிகாரம் கொடுத்தால் சௌகரியமாக இருக்கும்.

கிராம முன்சிப், கர்ணம் இவர்களுக்குப் பஞ்சாயத்திலிருந்து அபிவிருத்திப் பணம் கொடுக்கப்படுகிறது. என்றாலும், பஞ்சாயத்து யூனியன் வேலைகளை விட, ரெவினியூ டிபார்ட்மெண்ட் வேலைகளைத்தான் முக்கியமாகக் கவனித்துச் செய்கிறார்களே தவிர, பஞ்சாயத்துக்கள் செய்யக்கூடிய வேலைக்கு, சைட் ப்ளான் கேட்டால், சாக்குப் போக்குச் சொல்லுகிறார்கள். இதுபோல் ஒத்துழைக்க மறுப்பதால் அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய அபிவிருத்திப் பணத்தைக் கமிஷனர் மூலமாகக் கொடுத்தால் நலமாக இருக்கும்.

பஞ்சாயத்துக்கு பெண் அங்கத்தினர் நியமிக்கப்படுகிறார். ஒரே ஒருவர் நியமிக்கப்படுவதால், அந்த ஒருவரும், கூட்டங்களுக்கு வர மறுக்கிறார். இரண்டு பெண் அங்கத்தினர்களாக இருந்தால், ஒருவருக்குத் துணையாக ஒருவர் சேர்ந்து வர சௌகரியமாக இருக்கும்.

பஞ்சாயத்துப் பகுதியிலும், யூனியன் பகுதிகளிலும் மழைகாலங்களில் வெள்ளம் வந்துவிடுகிறது. எங்கள் பகுதியில் சென்ற ஆண்டு 83 குளங் களுக்கு மேல் உடைப்பு ஏற்பட்டது. அப்பொழுது இதற்கு வேண்டிய நிதி வேண்டும் என்று நாங்கள் யோசிக்கும்போது, பஞ்சாயத்து யூனியனில் நிதி கிடையாது. கலெக்டரை பணம் கேட்டபோது, "எனக்குக் கொடுக்க அதிகாரம் இல்லை" என்று சொல்லிவிட்டார். வெள்ளம் போன்ற ஆபத்து ஏற்படும்போது, உதவுவதற்கு, பஞ்சாயத்து யூனியனிலேயே வெள்ள நிவாரண நிதி என்று சிறு தொகையை அரசாங்கம் ஒதுக்கி வைத்தால் இம்மாதிரி அவசரக் காரியங்களுக்கு எடுத்து உதவ சௌகரியமாக இருக்கும்.

பஞ்சாயத்துக்கோ, பஞ்சாயத்து யூனியனுக்கோ ஒருவர் உறுப்பினராக வரவேண்டுமென்றால், அவருடைய பெயர் வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றிருக்கவேண்டும். அப்பொழுதுதான் பஞ்சாயத்து யூனியன் உறுப்பின ராகவோ தலைவராகவோ வரமுடியும். ஆனால், ஸ்தல ஸ்தாபனங்களின் சார்பாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட எம். எல். சி.கள் அந்தந்த தொகுதி வாக்காளர் பட்டியலில் பெயர் இடம் பெறாமலேயே, வெளியிலிருந்து வரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அம்மாதிரி இருக்கக் கூடாது. ஸ்தல ஸ்தாபனங்களின் உண்மையான பிரிதிநிதியாக இருக்கவேண்டுமென்றால், வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றவர்தான் எம்.எல்.ஸி. ஆக ஸ்தல ஸ்தாபனத் தொகுதிக்குத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்ற வகையில் சட்டத்தைத் திருத்தியாக வேண்டும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

பஞ்சாயத்து யூனியனுக்கு ஜீப் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஜீப் பெயரள வுக்குத்தான் பஞ்சாயத்து யூனியனுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறதே தவிர, யூனியனுடைய பொதுப் பணிக்கு அது என்றுமே உபயோகப்படுவதில்லை,



மற்றவர்கள்தான் அதை உபயோகித்துக் கொண்டிருக்கிறார்கள். ஜீப் ரிபேரானால்தான் அது யூனியன் ஆபீசுக்கு வரும். பஞ்சாயத்து யூனியன் வேலைக்கு ஜீப் உபயோகப்படாத நிலை முன்பும் இருந்தது, இப்பொழுதும் இருக்கிறது. அந்த நிலை மாறவேண்டும். ஜீப் ரிபேராய்விட்டால், தஞ் சைக்குப் போய்தான் ரிபேர் பண்ணி வரவேண்டும். ஒரு டயர் போனாலும், உடனடியாக வாங்கிக்கொள்ள முடியாத நிலை இருக்கிறது. ஆகவே, ஜீப் கண்ட்ரோலை யூனியன் கமிஷனரிடம் ஒப்படைத்தால் நலமாக இருக்கும்.

ஜில்லா அபிவிருத்திக் கவுன்சில் இருக்கிறது. அதில் உண்மையிலேயே கலெக்டர்தான் தலைவராக இருக்கிறார். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு பிரதிநிதி ஜில்லா அபிவிருத்திக் கவுன்சில் தலைவராக இருந்தால் நன்றாக இருக்கும். ஜில்லா போர்டு இருந்த நேரத்தில், ஜில்லா போர்டுக்கு கமிஷனர் காரியதரிசியாகத்தான் இருந்தார். அதேபோல பஞ்சாயத்து யூனியனுக்குக் கமிஷனரைக் காரியதரிசியாக்கி, பஞ்சாயத்து யூனியனுக்கு இன்னும் அதிக அதிகாரம் அளித்தால் நலமாக இருக்கும்.

பஞ்சாயத்துகளுக்கு இன்னும் அதிக நிதி அளிக்க வேண்டும். அப்படி அளித்தால்தான் பஞ்சாயத்துக்கள் தங்களுடைய வேலையைச் செவ்வனே செய்ய முடியும். பஞ்சாயத்து யூனியனுக்கு நிதி அளிப்பதில் திரு. முதலியார் அவர்களுடைய அறிக்கையை அரசாங்கம் பரிசீலித்து, கூடு மானவரை விரைவில் சீக்கிரமாக முடிவு எடுத்துக்கொள்ள வேண்டும். புதிய அரசு வந்தால் ஏதாவது மாறுபாடு இருக்கும் என்று பஞ்சாயத்து யூனியனில் உள்ளவர்கள் நினைத்தார்கள். ஆனால், நல்ல முறையில் எங்களோடு ஒத்துழைத்துக் காரியங்களைச் செய்வதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அமைச்சர் அவர்கள், ஒரு கோடி ரூபாய் ஸ்தல ஸ்தாபன நிதியில் குறைந்து இருப்பதற்குக் காரணம் மத்தியக் கூட்டுறவு பாங்கில் இனி கடன் கொடுப்பதறகு ஏற்பாடு செய்து இருப்பதால் ஏற்பட்டதே என்று கூறி னார்கள். அந்த தொகையைப் பஞ்சாயத்து யூனியன் மூலமாகக் கொடுப்பது நல்லது. மத்திய பாங்கிடமிருந்து கிடைப்பது கிடைக்கட்டும். பஞ்சாயத்து யூனியன் மூலமாகவும் கொடுத்தால் நல்லது. மத்திய அட மான பாங்கிடமிருந்து கடன் வாங்க வேண்டும் என்றால் ஏராளமான கால தாமதம் ஏற்படுகிறது. யூனியன் மூலமாகவும் கடன் கிடைப்பதற்கு வாய்ப்பு வசதிகளைச் செய்ய வேண்டும்.

பஞ்சாயத்து யூனியனில் ஒரு வேலை செய்ய வேண்டும் என்றால், அசிஸ் டெண்ட் இன்ஜினியர் (Highways) அங்கீகாரம் பெற்றுத்தான் செய்ய வேண்டும் என்று இருக்கிறது. ஹைவேஸ் அசிஸ்டெண்ட் இன்ஜினியராக இருப்பதால், யூனியன் வேலையை மாற்றாந்தாய்க் குழந்தை போல்தான் நினைக்கிறார்கள். ஒரு எஸ்டிமேட்டையாவது காலதாமதமில்லாமல் அங்கீ கரிப்பது கிடையாது. ஆகவே, ஒரு தாலுக்காவிற்கு ஒரு அசிஸ்டெண்ட் இன்ஜினியர் என்ற முறையில் பஞ்சாயத்து யூனியன் வேலைகளைக் கவ னிக்க தனி அசிஸ்டெண்ட் இன்ஜினியர் நியமித்தால் கிராம வேலைகள் நல்ல முறையில் நடக்கும் என்று கூறி, பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்து உரையை முடிக்கின்றேன்.

**திரு. ஏ. சி. நரசிம்மன்** : சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த சமுதாய அபிவிருத்தி மானியத்தின்மீது பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு அளித்தமைக்காக நான் என்னுடைய நன்றி கலந்த வணக்கத் தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

பஞ்சாயத்து யூனியன்களுக்குக் கல்விக்காக இந்த ஆண்டு சென்ற ஆண்டைவிட அதிகமான தொகையை அமைச்சர் அவர்கள் ஒதுக்கியதற் காக அவர்களை நான் பாராட்டுகிறேன். ஆரம்பக் கல்விதான் இந்த நாட்டுக்கு அடிப்படை அத்தியாவசியமானது. அதிலே அவர்கள் சிரத்தை எடுத்து, பஞ்சாயத்து யூனியன்களுக்கு அதிகமான தொகை ஒதுக்கியதற்காக அவர்களுக்கு நாம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்,

[திரு. ஏ. சி. நரசிம்மன்] [1968 மார்ச் 13

நகர மன்றங்களுக்குக் கல்வி மானியங்கள் சரிவர வழங்கப்படுவதில்லை. நகர மன்றங்கள் 5 சத வீதம் வரி போட வேண்டும் என்று உத்திரவிட்டு, அத்தகைய 5 சத விகிதம் வரி போட்ட பிறகுகூட, அவர்களுக்குத் துண்டு விழக்கூடிய தொகையை நகர மன்றங்களுக்கு அவர்கள் சரியாக வழங்குவதில்லை. அதை வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆரணி நகராட்சியைப் பொறுத்தவரையில், அதற்கு ஏறத்தாழ ஒன்றரை லட்ச ரூபாய் கல்வி மானியம் வர வேண்டியிருக்க, இது வரையில் 60,000 ரூபாய்தான் வழங்கியிருக்கிறார்கள். என்ன காரணத்தினாலோ மேற்கொண்டு தொகையை அவர்களுக்குக் கொடுக்காமல் இருக்கிறார்கள். அதே போல், வேலூர் நகராட்சியைப் பொறுத்தவரையில், கல்வி மானியத்திலிருந்து ஆரம்பக் கல்வி மானியமாக ஐந்து லட்ச ரூபாய்க்குமேல் வரவேண்டியிருக்க, இதுவரையில் 60,000 ரூபாய்தான் வழங்கியிருக்கிறார்கள். எதற்காக நகரமன்றங்களுக்குக் கல்வி மானியங்கள் கொடுப்பதில் அதிக காலதாமதம் ஏற்படுகிறது என்பதைக் கவனித்துப் பார்க்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

நகராட்சி மன்றத்தின் பொறுப்பில் இருக்கும் உயர்நிலைப் பள்ளிகளை அரசாங்கம் எடுத்துக் கொள்ளவேண்டும் என்று பல நகராட்சி மன்றங்கள் கோரிக்கை விடுத்திருக்கின்றன. உயர்நிலைப் பள்ளிகளை அரசாங்கம் எடுத்துக் கொண்டால், நகராட்சி மன்றங்கள் சமூக நலப் பணிகளை சீரான வகையில் செய்ய முடியும். அதற்கான முயற்சிகளை அமைச்சர் அவர்கள் மேற்கொண்டிருந்தாலும், அவைகளை விரைவுபடுத்துவதற்கு உடனடியாக கல்வி இலாக்காவே உயர்நிலைப்பள்ளிகளை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று அவர்கள் பணிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

எப்படிப் பஞ்சாயத்து யூனியன்களுக்கு முழுக் கல்வி மானியமாக ஆரம்பக் கல்விக்காக வழங்குகிறார்களோ, அதே போல் நகராட்சி மன்றங்களுக்கும் முழுக் கல்வி மானியமளித்தால் நலமாக இருக்கும்.

திரு. முருகேச முதலியார் அவர்களுடைய சிபார்சுப்படி மூவாயிரம் பேர்கள் வேலை இழக்க இருந்தார்கள். ஆனால், அமைச்சரவையினுடைய திறமையின் காரணமாக, அவர்கள் வேலை இழக்காமல் தொடர்ந்து பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதற்காக அமைச்சர் அவர்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துப் பாராட்டுகிறேன். அதே நேரத்தில், அவசியமில்லாத சில பணிகள் பஞ்சாயத்து யூனியன்களைப் பொறுத்த வரையில் இருக்கின்றன. குறிப்பாக, விமன் வெல்பேர் ஒர்க்கர்ஸ் என்று இருக்கிறார்கள். அவர்களுக்கு என்ன வேலை என்பது தெரியவில்லை. விமன் வெல்பேர் ஒர்க்கர்ஸுக்கு வேலை கிடையாது. அவர்களைக் குடும்பக் கட்டுப்பாடு சம்பந்தமான திட்டங்களில் ஈடுபடுத்தி அவர்களுக்கு அங்கே வேலை கொடுக்கலாம். அதே மாதிரி, சமூக நல ஊழியர்கள் இருக்கிறார்கள் இவர்களுக்கும் பஞ்சாயத்து யூனியன்களில் வேலை இல்லை. உரம் வழங்குதல், சக்கரை வழங்குதல், இப்படிப்பட்ட வேலைகளில் அவர்களை ஈடுபடுத்தலாம். பஞ்சாயத்து யூனியன்களில் பல டெப்போக்களை ஏற்படுத்தி, சமூக நல ஊழியர்களை அவற்றில் வேலைக்கு அமர்த்திவிட்டால் அவர்களுக்கும், வேலை கிடைத்துவிடும். பஞ்சாயத்து யூனியனுக்கு நல்ல வருமானம் கிடைக்கும். பஞ்சாயத்து யூனியனுக்கும் நல்ல பெயர் உண்டாகும். சீரான வகையில் அவற்றை வழங்கவும் முடியும். கூட்டுறவு மூலமாக வழங்கக்கூடிய முறையில் பல தொல்லைகள் இருக்கின்றன என்பதை நாம் அனைவருமே கண்கூடாகப் பார்க்கிறோம். எனவே பஞ்சாயத்து யூனியனுக்கு அத்தகைய அதிகாரங்கள் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

காதி இலாக்காவில் கிராமத் தொழிலுகளுக்கான இன்ஸ்ட்ரக்டர்கள் இருக்கிறார்கள். இன்டஸ்ட்ரீஸ் இலாக்கா, ரூரல் இன்டஸ்ட்ரீஸ் என்ற வகையில் சில தொழில்களை ஏற்று நடத்துகிறது. அவர்களும் இன்ஸ்ட்ரக்டர்ஸ் வைத்திருக்கிறார்கள். அதேபோல் பஞ்சாயத்து யூனியன்களும் சில வேலைகளை ஏற்று அங்கே ஈ. ஓ. (இன்டஸ்ட்ரீஸ்) என்று



1968 மார்ச் 13] [திரு. ஏ. சி. நரசிம்மன்]

வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இப்படி மூன்று விதமான பிரிவுகள் இன்ஸ்ட்ரக்டர்களை வைத்துக் கொண்டிருப்பதைவிட, மூன்றையும் ஒரு முகமாக்கி, சிரத்தை எடுத்துக்கொள்ளச் செய்தால், பல்வேறு வகையில் நமது நாட்டம் சிதறுண்டு போகாமல் இருக்கும். அந்த மூன்றையும் ஒருங்கிணைத்து, பஞ்சாயத்து யூனியனில் உள்ள ஈ. ஓ. (இன்டஸ்ட்ரீஸ்) இடம் ஒப்படைக்க வேண்டும், அல்லது இன்டஸ்ட்ரீஸ் டிபார்ட்மென்டோடு சேர்த்துவிடவேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ளுகிறேன்.

நகராட்சி மன்றங்களைப் பொறுத்தவரையில், நகராட்சி மன்றங்கள் சட்டம் 1920-ம் ஆண்டில் இயற்றப்பட்டது. அது நல்ல முறையில் மாற்றி மு. ப. 10 30
அமைக்கப்படவில்லை. ஒரு சில நேரங்களில் சில சட்டங்கள் மாற்றப்படும் போதுகூட நகராட்சி மன்றங்களுக்கு வேண்டிய அதிகாரங்களையெல்லாம் குறைத்துவிட்டார்கள். தற்போது அந்தச் சட்டத்தை மாற்றுவதற்கு வேண்டிய முயற்சிகளை எடுத்துக்கொண்டதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன். இந்தப் புதிய சட்டத்திலாவது நகராட்சி மன்றங்களுக்குக் கூடுதலான அதிகாரங்களைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற வெளிநாடுகளில், நகரக் காவல் துறை, தீயணைக்கும் படை போன்றவற்றை நடத்தும் அதிகாரம் நகர மன்றங்களுக்கு இருக்கின்றன. நாங்கள் அத்தகைய அதிகாரங்கள் எங்களுக்கும் கொடுக்கப்பட வேண்டுமென்று கேட்கவில்லை. ஆனால் குடிநீர் வழங்குதல், புதுக் கால்வாய் வெட்டுதல், புதுக் குழாய் அமைத்தல் போன்ற துறைகளில் நகரமன்றங்களுக்கு அதிக அதிகாரம் வழங்கப்பட வேண்டும். ஒரு புதுக் குழாயை அமைக்க வேண்டுமென்றால், தீர்மானம் போட்டு, அதை சூப்பரிண்டெண்டிங் இன்ஜினியரிடம் அனுப்பி அவருடைய அனுமதி கிடைத்த பிறகுதான் புதுக் குழாயை அமைக்க முடியும். அதேபோல ஒரு புதுக் கால்வாயை வெட்ட வேண்டுமென்றாலும் முதலில் அனுமதி பெற வேண்டும். மேலும் ஒரு தெரு விளக்கிற்கு மின்சார இணைப்பு கொடுக்கப்பட வேண்டுமென்றாலும் அதற்கு சால்வென்சி சர்ட்டிபிகேட் கேட்கிறார்கள். அதற்காக நாங்கள் கலெக்டரிடமோ, அல்லது கலெக்டர் உதவியாளரிடமோ அந்த சால்வென்சி சர்ட்டிபிகேட் பெற்ற பிறகுதான் மின்சார இணைப்பு கிடைக்கிறது. இத்தகைய இடர்ப்பாடுகளையெல்லாம் நகர மன்றங்கள் எதிர்நோக்க வேண்டியிருக்கின்றன. ஆகவே, இத்தகைய இடர்ப்பாடுகளையெல்லாம் நீக்கி, குடிநீர் வழங்கல், புது கால்வாய் வெட்டுதல், குழாய் அமைத்தல், விளக்கு அமைத்தல் போன்ற காரியங்கள் ஒழுங்காகவும், விரைவாகவும் நடைபெற நகர மன்றங்களுக்குக் கூடுதலான அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

Places of Public Resort Act-ன் கீழ் லைசென்ஸ் வழங்கும் அதிகாரம் நகராட்சி மன்றத் தலைவர்களுக்கு அளிக்கப்பட வேண்டும். தற்பொழுது அந்த அதிகாரம் நகராட்சி ஆணையருக்கு இருக்கிறது. அப்படி நகராட்சி மன்றத் தலைவர்களுக்கு வழங்கப்படாவிட்டாலும், அம்மாதிரியான அதிகாரம் வழங்கும்போது, நகராட்சி மன்றத் தலைவருக்குத் தெரியப்படுத்தினால் நல்லது என்று தெரியப்படுத்திக்கொள்கிறேன். நகராட்சி மன்றத் தலைவருக்குத் தெரியாமல் ஆணையரே அதிகாரத்தை வழங்கி விடும்போது சில விரும்பத்தகாத, வெறுக்கத்தக்க நிகழ்ச்சிகள் நடைபெற்றுவிடும்போது, பழி எல்லாம் நகராட்சியையே சேருகிறது. குறிப்பாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். சில விரும்பத்தகாத நடன நிகழ்ச்சிகள் நகராட்சிகளில் நடக்கின்றன. அதற்கு வேண்டியஏற்பாடுகளைச் செய்கிறவர்கள், நடத்துகிறவர்கள் லைசென்ஸை ஆணையரிடம் வாங்கிவிடுகிறார்கள். நகராட்சி மன்றத் தலைவருக்கு இதைப்பற்றி ஒன்றும் தெரியாமல் போய்விடுகிறது. பிறகு நகராட்சி மன்றத் தலைவரைத் தான் குறை சொல்லுகிறார்கள். யாரும் நகராட்சி ஆணையரைக் குறை சொல்வது இல்லை. ஆகவே, லைசென்ஸை வழங்கும் அதிகாரத்தை நகர மன்றத் தலைவருக்குத் தரவில்லையென்று சொன்னாலும், நகர மன்றத் தலைவருக்குத் தெரியாமல் ஆணையர் லைசென்ஸ் வழங்கக் கூடாது என்ற சட்டத்தைப் போடவேண்டுமென்ற கோரிக்கையை அமைச்சர் அவர்களிடம் முன்வைக்கின்றேன்.

அதேமாதிரி நகராட்சி மன்றங்களுக்கு வருமானம் வரக்கூடிய சிலதிட்டங்
கள் டெக்னிகல் சாங்ஷனுக்குப் போய்,அப்ரூவலுக்குப்பல நாட்களாகின்றன.
எஸ்டிமேட் சாங்ஷன் ஆனபிறகு வருவதற்கு நீண்ட நாட்களாகின்றன.
வேலூர் நகராட்சி மார்கெட் கட்டிடம் ஒன்றைக் கட்ட வேண்டுமென்று
17 லட்சம் ரூபாயில் எஸ்டிமேட் தயாரித்து, பிறகு 12 லட்சமாக மாறி,
இப்பொழுது 5 லட்சமாக மாறியிருக்கிறது. கடந்த பத்தாண்டுகளுக்கு
மேல் கட்டிடம் கட்டுவதற்கான வேலை தொடங்கப்படாமல் அப்படியே
இருக்கிறது. நகராட்சிக்கு வருமானம் வரக்கூடிய வருமானமானது தடைப்
படுத்தப்பட்டுவிட்டது. ஆண்டு ஒன்றுக்கு இதன்மூலம் சுமார் ஒரு
லட்சம் ரூபாய்க்கு மேல் நகராட்சிக்கு வருமானம் கிடைக்கக்கூடிய
வாய்ப்பு இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைக் கவனத்தில்
கொள்ள வேண்டுமென்று தனிப்பட்ட முறையில் வேண்டிக் கேட்டுக்
கொள்கிறேன்.

மற்றொன்று. நகராட்சிகளின் மொத்த வருமானம் 12½ கோடி
ரூபாய் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. அதிலே ஒரு இலட்சம் ரூபாய்
நிலவரி என்கிற பெயராலே வசூலிக்கப்படுகிறது. அதுவும் சரி
யான முறையில் வசூலாகிறதா என்று பார்த்தால் இல்லையென்றே
சொல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே, இந்த ஒரு லட்சம் ரூபாய் வரு
மானத்தை நீக்கிவிடுவதால் ஒன்றும் கெட்டுப் போய்விடாது என்பதைத்
தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் இந்த நிலவரியை வசூலிப்பதில்
பல சிரமங்கள் இருக்கின்றன. எந்தத் தலைமுறையிலோ வாங்கப்பட்ட
நிலங்களின் பட்டாக்கள் பல கைகள் மாறியிருக்கின்றன. பட்டாதாரர்களைத்
தேடிப்போய் வசூலிப்பது மிகவும் சங்கடங்களையும் சிரமங்களையும் உண்
டாக்குகிறது. ஆகவே, இந்த நிலவரியைப் பொறுத்தவரையில் நீக்கி
விடலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, பஞ்சாயத்து யூனியன்களிலே, சொத்துக்களின் பேரில்
டாக்ஸ் போடுகிறார்கள், ஆனால் அவர்கள் போடும் மதிப்புச் சரியாக இருப்
பதில்லை, பஞ்சாயத்துக்களிலும் சரியான முறையில் மதிப்பினைக் கணிப்ப
தில்லை, அதனால் பஞ்சாயத்துக்களுக்கும், பஞ்சாயத்து யூனியன்களுக்கும்
வருவாய் குறைகிறது, ஆகவே, சொத்துக்களின் பேரில் சரியான மதிப்பைக்
கணிப்பதற்காக ஒரு தனி இலாகாவை ஏற்படுத்தி, தனி அதிகாரியை
ஏற்படுத்தினால் நல்லது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும்
வரி போடும்போது அதிகமான அளவில் போடுவதும், பிறகு டாக்ஸ்
அப்பீல் கமிட்டியில் போனால் மிகக் குறைந்த அளவிற்குக் குறைப்பதும்
போன்ற காரியங்கள்தான் தற்போது நடைபெற்று வருகின்றன. டாக்ஸ்
அப்பீல் கமிட்டியில் அதிகமான அளவில் குறைக்காமல் ஓரளவுதான்
குறைக்க வேண்டும். ஆகவே, இவற்றிற்கெல்லாம் ஒரு தனி அதிகாரியை
நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்

அடுத்தபடியாக, பஞ்சாயத்து யூனியன்களுக்கும், நகராட்சி மன்றங்
களுக்கும் பொதுமக்களுக்குக் குடிநீர் வழங்குதல், கல்வி வசதி அளித்தல்,
சுகாதார வசதி அளித்தல் போன்ற பொறுப்புகள் இருக்கின்றன. ஆகவே,
அரசாங்கம் நடத்தப் போவதாகக் குறிப்பிட்டுள்ள "லாட்டரிச் சீட்டு"
திட்டத்திலே கிடைக்கும் வருவாயில் ஒரு பகுதியை நகர மன்றங்களுக்கும்,
பஞ்சாயத்துக்களுக்கும் ஒதுக்கிக் கொடுத்து உதவ வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

நகர மன்ற பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் சம்மேளனம் கடந்த
இரண்டு ஆண்டுகளாக நடைபெறுமல் இருந்து வருகின்றது, மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் அந்தச் சம்மேளனம் நடைபெறத்தக்க முயற்சிகள்
எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சம்மேளனத்
தில் கூடிக் கலந்து உரையாடி பஞ்சாயத்துக்களுக்கும், நகரமன்றங்
களுக்கும் தேவையான தீர்மானங்களைப் போட முடியும். அதனால் நல்ல
பயன் கிடைக்குமென்று நம்புகிறேன். அப்படி நாங்கள் நிறைவேற்றி
அனுப்பக்கூடிய தீர்மானங்களைப்பரிசீலனை செய்து அமல்நடத்த வேண்டும்.
பப்ளிக் ஹெல்த் ஆக்ட்டின் கீழ் முன்பிருந்த அதிகாரங்களைக்கூட எடுத்து



விட்டார்கள். அதுபோன்ற அதிகாரங்களை மீண்டும் வழங்க வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த மானியக் கோரிக்கையை வரவேற்றுப்
பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, என் உரையை முடித்துக்
கொள்கிறேன், வணக்கம்.

**திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் :** பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, சமுதாய வளர்ச்சியும், ஊராட்சி வளர்ச்சியும் என்ற
தலைப்பின்கீழ் கொண்டு வந்திருக்கும் மானியக் கோரிக்கையை ஆதரித்து
என்னுடைய ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இந்த
மானியக் கோரிக்கையிலே, "1967-ம் ஆண்டிலே அடித்த புயல், வெள்ளத்
தால் பாதிக்கப்பட்ட பஞ்சாயத்து ரோடுகளுக்குப் பணம் ஒதுக்கப்பட்டிருப்ப
தாக" கூறியிருக்கிறார்கள். என்னுடைய தொகுதியான ராமநாதபுரம்
ஜில்லா இந்தப் புயல், வெள்ளத்தால் அதிகமாகப் பாதிக்கப்பட்ட இட
மாகும். இராமநாதபுரம் ஜில்லாவிலுள்ள பஞ்சாயத்து ரோடுகள் முழு
வதிலும் வேலையே செய்யப்படாமல் அப்படியே இருந்து
வருகின்றன. எங்கேயாவது வேலை ஆரம்பிக்கப்பட்டதா என்று
பார்த்தால், எங்கேயும் ஒரு வித வேலையும் ஆரம்பிக்கப்படவில்லை.
அதற்காக ஒதுக்கிய பணம் என்ன ஆனது என்றும்
தெரியவில்லை. அதிகாரிகளைப் போய்க் கேட்டால், "கிராண்டு
தரவில்லை, இதைச் செய்ய முடியாது, அதைச் செய்ய
முடியாது" என்று கூறுகிறார்கள். எங்கள் ஜில்லாவில் வேலை செய்யப்
போகிறார்களா, அல்லது எங்கள் மாவட்டத்தை விட்டு விட்டார்களா
என்று எனக்குச் சந்தேகமாக இருக்கிறது. அமைச்சர் அவர்கள் பதில்
கூறும்போது, எங்கள் மாவட்ட நிலையைப்பற்றி விளக்கிக் கூறும்படிக்
கேட்டுக்கொள்கிறேன். அமைச்சர் அவர்களிடமும் நான் பல தடவைகள்
நேரில் எடுத்துக் கூறியிருக்கிறேன். ரோடுகள் எல்லாம் சீரழிந்து
இருக்கின்றன. பஞ்சாயத்து ஆபீசிலிருந்து வெளியே வருவதற்கும்
ரோடுகள் தொடர்பற்ற நிலைமையில் காட்சியளித்து வருகின்றன என்ப
தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

பஞ்சாயத்து ரோடுகள் அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன. ஒரு
பஞ்சாயத்துக்கும் இன்னொரு பஞ்சாயத்துக்கும் தொடர்பே இல்லாமல்
இருக்கின்றன. ஆகவே, ராமநாதபுரம் மாவட்டத்திற்கு ரோடுகள் ரிப்பேர்
செய்வதற்காக அதிக அளவில் பணம் ஒதுக்கித் தந்து, ரோடுகளை நல்ல
முறையில் ரிப்பேர் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.
பட்ஜெட்டில் பார்த்தால் மற்ற இனங்களுக்கு எல்லாம் அதிகமான நிதி
ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் சமுதாய நலத் திட்டத்திற்கு மாத்திரம்
குறைக்கப்பட்டிருக்கிறது. எனக்கு முன்பு பேசியவர்கள் அதிகமாக ஒதுக்
கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். அப்படி இல்லை. குறைக்கப்பட்டிருக்
கிறது. சமுதாய நலத் திட்டத்திற்குக் குறைத்துக் கொண்டே போனால்
கிராமங்களின் நிலை என்ன ஆவது ? நகரங்களுக்குப் பல வசதிகள்
செய்து கொடுக்கப்படுகின்றன. கிராமங்கள் மிக மோசமான நிலையில்
இருக்கின்றன. சமுதாய நலத் திட்டங்களின் மூலமே கிராமங்கள் அபி
விருத்தி அடைய வேண்டியதாக இருக்கின்றன. ஆகவே, இதைப் புனரா
லோசனை செய்து சமுதாய நலத் திட்டத்திற்கு அதிகமாக நிதி ஒதுக்கீடு
செய்ய வேண்டுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

ப்ரைமரி ஹெல்த் சென்டர்களை எடுத்துக் கொண்டால் கட்டடமே இல்லை.
டாக்டர்கள் தங்குவதற்கு வீட்டு வசதியில்லை. அதனால் வருகிற டாக்டர்கள்
கூட வேலையை ராஜினுமாச் செய்து விட்டுப் போய் விடுகிறார்கள்.
ப்ரைமரி ஹெல்த் சென்டர்களுக்குக் கட்டடம் கட்டிக் கொடுப்பதோடு,
டாக்டர்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து அநேக இடங்களில் பஞ்சாயத்துக்களுக்குக் கட்டடம் இல்லை.
கட்டடம் இல்லாது பஞ்சாயத்துக்கள் எப்படி நடைபெற முடியும் ?
பஞ்சாயத்து ஆபீசுக்குக் கட்டடம் கட்ட வேண்டுமென்றால் அந்தப் பஞ்சாயத்
துகளின் நிதிநிலை இடம் கொடுக்கவில்லை. ஆகவே சர்க்கார் 75 சத

வீத மானியம் வழங்கினால் அவர்கள் 25 சத வீதம் போட்டுக் கட்டடம்—கட்டிக் கொள்ள வசதி ஏற்படும். ஆகவே பஞ்சாயத்துக் கட்டடங்களுக்கு 75 சத வீதம் சர்க்கார் மானியம் வழங்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பஞ்சாயத்துக்களிடம் எல்லாப் புறம்போக்கு நிலங்களும் ஒப்படைக்க வில்லை. ஏலம் விடப்போகிறபோது ரெவின்யூ அதிகாரிகள் வந்து அது ரெவின்யூ புறம்போக்கு என்று தடுத்து விடுகிறார்கள். இப்படிச் செய்தால் எப்படிப் பஞ்சாயத்துக்களுடைய வருமானம் பெருகும் ? ஆகவே, எல்லாப் புறம்போக்கு நிலங்களையும் பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைக்க ரெவின்யூ இலாக்காவுக்கு உத்தரவு போட வேண்டுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோலவே கடன் வசூல், நிலவரி இவற்றை எவ்வளவு அக்கறையாக ரெவின்யூ அதிகாரிகள் வசூல் செய்கிறார்களோ, அவ்வளவு அக்கறையுடன் பஞ்சாயத்து வரிகளை வசூல் செய்வதில்லை. எத்தனை தடவை அவர் களிடம் சொன்னாலும் அவர்கள் இதை என்னவோ மாற்றாந்தாய் பிள்ளை போலவே பாவிக்கிறார்கள். பஞ்சாயத்து வரிகளையும் நல்ல முறையில் உடனடியாக வசூல் செய்வதற்கு ஏற்பாடு செய்யுமாறு ஆர். டி. ஓ. அவர் களுக்கு உத்தரவு போடவேண்டுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஜில்லா போர்டுகளின் வாரிசாகத் தான் பஞ்சாயத்து யூனியன்கள் வந்திருக்கின்றன. ஜில்லா போர்டு தலைவருக்கு இருந்த அதிகாரங்கள் கூட இப்போது பஞ்சாயத்து யூனியன் தலைவருக்கு இல்லை. மாவட்ட மன்றக் கூட்டத்திற்கு கலெக்டர்கள் தான் தலைமை வகிக்கிறார்கள். இன்றைக்கு ஆளும் கட்சியாக இருப்பவர்கள் அன்றைக்கு எதிர்க்கட்சியில் இருந்த போது இது ஜனநாயக முறைக்கு ஒத்து வராது, பஞ்சாயத்து யூனியன் பிரதிநிதி ஒருவர் தான் தலைமை வகிக்க வேண்டும் என்று சொன்னார்கள். இப்போதாவது மாவட்ட மன்றத்திற்கு கலெக்டர் தலைமை வகிக்கிற முறையை மாற்றி, ஜனப்பிரதிநிதியை தலைமை வகிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். கலெக்டர் காரியதரிசியாகப் பணியாற்ற வேண்டும்.

பஞ்சாயத்து யூனியன்களில் எக்ஸ்டென்ஷன் ஆபீசர்கள் இருக்கிறார்கள். அவர்கள் சரியாக நடக்கவில்லை என்றால் பஞ்சாயத்து யூனியன் சேர்மன் கமிஷனருக்கு எழுத வேண்டும். கமிஷனர் அந்த டிபார்ட்மெண்டுக்கு எழுத வேண்டும். இப்படியிருந்தால் அவர்கள் எப்படி நல்ல முறையில் வேலை செய்வார்கள் ? ஆகவே, பஞ்சாயத்து யூனியன் அதிகாரிகள் நல்ல முறையில் வேலை செய்வதை மேற்பார்வையிடும் அதிகாரம் சேர்மனிடமே இருக்க வேண்டும். தவறாக நடப்பதையும், உடனடியாகத் திருத்துவதற் கான அதிகாரம் இருக்க வேண்டும். பஞ்சாயத்து யூனியன் தலைவரிடம் நம்பிக்கை இல்லை என்றால் பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன்களையே கலைத்து விடலாம். அப்படியின்றி அவற்றை வைத்துக் கொண்டு அவர் களுக்கு அதிகாரம் கொடுக்காமல் இருப்பது சரியல்ல. மத்திய சர்க்கார் எப்படி அதிகாரங்களை பரவலாக்க வேண்டும் என்கிறோமோ அது போல இந்த அரசும் தம் அதிகாரங்களை, பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன்கள் என்ற முறையில் பரவலாக்க வேண்டும். அப்போதுதான் அவை நல்ல முறையில் செயல்பட முடியும்.

பஞ்சாயத்து ரோடுகளுக்கு எல்லாம் ஆள் ஒன்றுக்கு 40 காசு என்று மானியம் கொடுக்கிறார்கள். ஆள் பேரில் மானியம் கொடுப்பது என்ன ? அந்த ரோடு எவ்வளவு மைல் நீளம் இருக்கிறது என்பதைக் கணக்கிட்டு மைல் அடிப்படையில் கொடுக்க வேண்டும். அப்போதுதான் நல்ல முறை யில் ரோடுகளைப் பராமரிக்க முடியும். பஞ்சாயத்து ரோடுகளைப் போட்டு விடுகிறார்கள். ஆனால் பஞ்சாயத்துக்களினால் அவற்றைப் பராமரிக்கமுடிய வில்லை. அவை ரொம்ப மோசமாக இருக்கிறது. அங்குள்ள ஜனங்கள் பஞ்சாயத்து சேர்மன், யூனியன் சேர்மன் இவர்களைத்தான் கண்டிக்கிறார் கள். இது மிகக் கஷ்டமாக இருக்கிறது. கிராம ரோடுகள் நல்ல முறையில் இருந்தால்தான் உணவு உற்பத்தி நல்ல முறையில் நடைபெற முடியும். ஆகவே அந்த ரோடுகளைப் பராமரிக்க அரசாங்கம் நல்ல முறையில் மானியம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



கிராமங்களில், முனிசிபாலிட்டிகளில் விளக்குகள் எரியவில்லையே என்று கேள்வி கூடக் கேட்டேன். அதற்கு "நான் பார்த்தேன். எல்லா இடத்தி லும் எரிகிறது" என்று அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். ஒரு கால் அமைச்சர் போகிறபோது எல்லா இடங்களிலும் பல்புகளைக் கொண்டு போய் மாட்டி விட்டார்கள் போலிருக்கிறது.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** போகிற இடங்களில் எல்லாம் விளக்கு எரிகிறது என்று எந்த அமைச்சர், எப்போது சொன்னார்கள் ?

**திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் :** நான் கேள்வி கேட்ட நேரத்தில் சட்ட அமைச்சர் அவர்கள்தான் கூறினார்கள். என்னுடன் இப்போது வந்து பார்த்தால் தெரியும். இரவில் ஒரே இருட்டாகத்தான் இருக்கின்றது.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நான் போகும்பொழுது கனம் அங்கத்தினர் என்னுடனே வந்தார்.

**திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் :** நிலவு வெளிச்சத்தில்..

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இங்கே விளக்கு எரிகிறது, சீக்கிரம் முடித்துவிடுங்கள்.

**திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் :** முடித்துவிடுகிறேன். அப்பொழுது வெளிச்சமாக இருந்தது, நிலவு வெளிச்சத்திலே போனோம். ஆனால் இருட்டு நேரத்திலே பார்த்தால் இருட்டு மயமாக இருக்கிறது. இதையெல்லாம் நிவர்த்தி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய டைம் முடிந்து விட்டதால் இத்துடன் என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

***திரு. பி. என். பரமசிவ கவுண்டர் :** மதிப்பிற்குரிய சட்டப்பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு இதே காலத்தில் இந்த மானியக் கோரிக்கை வந்தபொழுது சமுதாய நலத் திட்டத்தை இந்த அரசு ஏற்றுக்கொள்ளப் போகிறதா இல்லையா என்ற கேள்வி இருந்தது. உறுப்பினர்களும் மற்றுமுள்ள மக்களும் இந்தச் சமுதாய நலத் திட்டத் திலே பண ஒதுக்கீடுகள் வீண் விரயமாக்கப்பட்ட காரணத்தினாலே இந்த அரசு இந்தத் திட்டத்தை ஏற்றுக்கொள்ளப் போகிறதா இல்லையா என்ற சந்தேகத்திலே இருந்தார்கள். ஆனால் இந்த ஆண்டு இந்தச் சமுதாய மானியக் கோரிக்கையிலே ஊராட்சி ஒன்றியங்கள் மிக அத்தியா வசியமானது என்ற ஒரு கருத்து பரவலாக்கப்பட்டு அது ஊக்குவிக்கப்பட வேண்டிய ஒரு சாதனமாகக் கருதப்பட்டு வருகிறது. திரு. முருகேச முதலி யார் தனி ஆலோசகராக நியமிக்கப்பட்டு அவர்களுடைய அறிக்கை சமர்ப் பிக்கப்பட்டு அது எதிர்க் கட்சி தலைவர்களாலும் ஊராட்சி ஒன்றியங்களின் பெருந் தலைவர்கள் மாநாட்டிலும் விவாதிக்கப்பட்டு ஒரு சில சிறு மாறு தல்கள் தவிர, இந்த அமைப்பு அப்படியே சீராகச் செயல்படுத்தப்பட வேண்டுமென்று பரவலாக ஒப்புக்கொள்ளப்பட்டது. அது அரசினரின் பரிசீலனையில் இருக்கிறது. அது பற்றி அரசு நல்ல முடிவை எடுத்து நல்ல முறையிலே தொடர்ந்து நடத்தும் என்று நம்புகிறேன். இந்தச் சமுதாய நலத் திட்டமானது 1946-லே பிர்க்கா அபிவிருத்தித் திட்டம் என்று ஆரம்பிக்கப்பட்டு 1950-லே கிராம வளர்ச்சித் திட்டமாக மாறி இன்னும் கொஞ்சம் அதிகமான இடங்களில் செயல்படுத்தப்பட்டு பிறகு 1952-ல் சமுதாய நலத் திட்டம் என மாறி, பிறகு 1953-லே பஞ்சாயத்து வளர்ச்சித் திட்டமாக மாறி 1960-ம் ஆண்டு அக்டோபர் மாதம் இரண்டாம் தேதி யிலிருந்து சமுதாய நலத் திட்டம் என்ற அளவில் உருவெடுத்து 12,864 பஞ்சாயத்துக்கள் அடங்கிய 374 பஞ்சாயத்து ஒன்றியங்களால் நடத்தப்பட வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டு அன்றிலிருந்து ஊராட்சி ஒன்றியங் களால் அமல் நடத்தப்பட்டு வருகிறது. கடந்த காலத்தில் ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக அவை சரியாகச் செயல்படுத்தப்படவில்லையென்ற

[திரு. பி. என். பரமசிவ கவுண்டர்] [1968 மார்ச் 13

ஒரு பொதுவான அபிப்ராயம் இருந்தது. காரணம் என்னவென்றால் ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாகத்தான் நாட்டிலே வளர்ச்சித் திட்டங்கள் நல்ல முறையிலே நடத்தப்பட முடியும்.

வேளாண்மையைப் பொறுத்தவரையில் அதற்கு முக்கியத்துவம் கொடுத்து அதன் மூலம் செயல்படுத்தப்படுமென்ற கருத்து இருந்தாலும், 1958-ம் ஆண்டு பஞ்சாயத்துச் சட்டத்திலே அதுபற்றி வலியுறுத்திச் சொல்லப்பட்டிருந்தாலும், விவசாயத் துறையைப் பொறுத்த வரையில் ஊராட்சி ஒன்றியங்களுக்கு விவசாயத் துறைக்காக ஒதுக்கப்பட்ட 2 லட்சம் ரூபாயை, வருடம் ஒன்றுக்கு 40 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்ததை, நல்ல முறையில் செலவு செய்யவில்லை ; கடந்த ஆண்டு விரயம் செய்தார்கள் என்று கூக்குரல் கிளம்பிற்று என்றால் அது வீணை கூக்குரல் ஆகும். விரயமாகியிருக்கிறது என்று சொல்ல முடியாது. விவசாயத் துறையினர் நடத்தும் சில சிறப்புத் திட்டங்களிலே சென்ற ஆண்டு ஆடிட் ரிப்போர்ட் பார்த்தால் தெரியும், விரயமாகி இருக்கிறது. இராமநாதபுரத்தில் கரையோரப் பகுதியில் தோப்பு வளர்த்தல் என்ற திட்டம் அந்தத் துறையினரால் போடப்பட்டு அதன் மூலம் எந்த விதப் பலனும் இல்லாமல் லட்சக்கணக்கான பணம் விரயமாக்கப்பட்டிருக்கிறது. விவசாயத் துறைக்கு ஒதுக்கப்பட்ட பணத்தை பஞ்சாயத்து ஒன்றியங்களுக்கு ஒதுக்கியிருந்தால் பஞ்சாயத்து ஒன்றியங்கள்மூலம் அவற்றைப் பயன்படுத்துவதன் மூலம் அங்கே உள்ள அலுவலர்கள் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். சும்மா சுற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்ற கெட்ட பெயர் ஏற்படாதவாறு செய்யலாம். ஆகவே ஊராட்சி ஒன்றியங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து செயல்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தீவிரக் கால்நடை அபிவிருத்தித் திட்டமொன்றை மத்திய அரசு நடத்துகிறார்கள். அந்தத் திட்டமானது சமுதாய வளர்ச்சிப் பிரதேசங்களிலே நடத்தப்பட்டால்கூட அது சமுதாய வளர்ச்சித் திட்ட அதிகாரிகளுக்குச் சம்பந்தம் இல்லாமல் தனி அதிகாரிகளைக்கொண்டு நடத்தப்பட்டு வருகிறது. சென்ற ஆண்டு கோவைக்கு 50 லட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதையும் ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாகக் கொடுக்காமையினால் விரயங்களும் பல புகார்களும் வந்தன. ஆகவே அவற்றை ஊராட்சி ஒன்றியங்கள்மூலம் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாகத் தொடக்கக் கல்வி. 1958-ம் ஆண்டு பஞ்சாயத்துச் செல்வில் ஒரு பகுதியை ஒன்றியங்கள் ஏற்றுக் கொண்டு தொடக்கக் கல்வியை விஸ்தரிக்கக்கூடிய பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சொல்லப்பட்டது. நம்முடைய அரசு தொடக்கக்கல்வியைப் பொறுத்தவரையில் ஒன்றுபடுத்தி தல நல நிர்வாகத் துறையின் இயக்குநரின்கீழ் ஒரு உதவி இயக்குநரை ஏற்படுத்தி அதை நல்ல முறையில் செயல்படுத்தியிருப்பது வரவேற்கத்தக்க அம்சமாகும். அண்மையிலே நடந்த மாநில ஊராட்சி ஒன்றியங்களின் பெருந்தலைவர்கள் மாநாட்டிலே தொடக்கக் கல்வியைப் பொறுத்தவரையில் தொடக்கக் கல்வி ஊராட்சிகளினாலும், ஊராட்சி ஒன்றியங்களினாலும் பெரும்பகுதி நடத்தப்படுகிற காரணத்திலே தல நல நிர்வாகத் துறை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று தீர்மானம் கொண்டுவரப்பட்டு அது பெரும்பகுதியினரால் நிறைவேற்றப்பட்டது. தல நூலக ஆணைக் குழுவின் பெரும்பகுதி உறுப்பினர் ஊராட்சியைச் சேர்ந்தவர்களாக இருக்கிற காரணத்தால் அதுவும் தல நல நிர்வாகத் துறையினிடம் இருக்க வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டுள்ளது. ஆகவே, இரண்டு துறைகளும் தல நல நிர்வாகத் துறையின் கீழ் இருக்க வேண்டுமென்று தமிழக பஞ்சாயத்து ஒன்றியத்தின் செயலர் என்ற முறையில் கேட்டுக்கொள்கிறேன். நான் இப்படிச் சொல்வது எப்படிப்பட்ட ஒதுக்கீடுகள் எப்படிப்பட்ட அதிகாரங்கள் கொடுக்கப்பட்டு எந்தத் துறையினரால் செயல்படுத்தப்பட வேண்டுமென்பது அல்ல, எந்தத் துறையின் கீழ் இருந்தால் நல்ல முறையில் அவை செயல்படுத்தப்படும், வளர்ச்சியடையும் என்ற கருத்தில் ஊராட்சி ஒன்றியங்களின் பெருந் தலைவர்கள் மாநாட்டில் தீர்மானித்ததற்கு இணங்க இதை தல நல நிர்வாகத்தின் கீழ் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1968 மார்ச் 13] [திரு. பி. என். பரமசிவ் கவுண்டர்]

அதிகமான நேரம் ஆகிவிட்டதனாலே ஒரு சில வார்த்தைகளை மட்டும் கூறிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த மானியக் கோரிக்கையைப் பொறுத்தவரையில் திரு. கரியமாணிக்கம் அம்பலம் அவர்கள் நிறைய பணம் ஒதுக்கவில்லை என்று சொன்னார்கள். அதற்கு அமைச்சர் அவர்கள் 75 லட்ச ரூபாய் நில அடமான வங்கியிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது; ஆதலினால் குறைவாக இருககலாம் என்று சொன்னார்கள். ஒதுக்கப்பட்டிருப்பது 5.6 கோடி மட்டுமல்ல. ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் செயல்பட ஒதுக்கப்பட்டிருப்பது 56 கோடி ஆகும். ஆகவே இந்த ஆண்டு எந்தவிதமான குறைவும் ஒதுக்கீட்டில் இல்லை. இன்னொரு நல்ல திட்டமும் இந்தத் துறையிலே அமைச்சர் அவர்கள் செய்திருக்கிறார்கள். அமைச்சர் அவர்களின் முயற்சியினாலே கொண்டுவரப்பட்டிருக்கிற அந்தத் திட்டம் ஓராண்டுத் திட்டமாகும். அந்தத் திட்டத்திலே சமுதாயப் பாசனக் கிணறுகள் கட்டுதல், யந்திரக் கலப்பைகள் வாங்குதல், விசை ஏர்களையும், மருந்து தெளிக்கும் கருவிகளையும் கொடுத்தல், பள்ளிகளில் காய்கறித் தோட்டம் அமைத்தல் போன்றவை செயல்படுத்தப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. விவசாய உற்பத்தித் திட்டத்திலே அதிக அக்கறையைக் காட்டுகிறோம் என்பது ஒத்துக்கொள்வதாய் இருந்தால்கூட, இன்னும் உணவு உற்பத்தியைப் பெருக்கக்கூடியமுறையில் வீரிய விதை உற்பத்தியை அதிகப்படுத்துகின்ற திட்டத்தையும் இதில் சேர்க்கவில்லை. ஆகவே அந்தத் திட்டத்தையும் சேர்த்து, இந்த ஓர் ஆண்டுத் திட்டத்தை இயக்கினால்: நல்ல முறையில் இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இந்தக் கோரிக்கையைப் பொறுத்தவரையிலே ஒரு முக்கியமான அம்சம் ஒரு ஆண்டிற்குள்ளாக சுமார் 100 பள்ளிகள் . . (மணி அடிக்கப்பட்டது).

* **திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :** தலைவர் அவர்களே, இந்த மானியம் சம்பந்தமாகப் பேசும்போது, அமைச்சர் அவர்கள் குறிப்பிலே பல அபிவிருத்தித் திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறோம் என்று குறிப்பிட்டிருப்பது வரவேற்கத்தக்கது என்றாலும்கூட சிலவற்றை உடனடியாக அமல் செய்ய வேண்டியது அவசியம் என்று கூறவிரும்புகிறேன். போன தடவை இந்த மானியத்தின்மீது பேசும்போது மாவட்ட அபிவிருத்தி மன்றங்களுக்கு இன்னும் கொஞ்சம் அதிகாரம் கொடுக்கவேண்டுமென்று குறிப்பிட்டேன். மாவட்ட அபிவிருத்தி மன்றங்கள் பணம் சாங்ஷன் பண்ணக்கூடிய அதிகாரம் உள்ள மன்றங்களாக இருந்தால்தான் அங்கத்தினர்கள் விரும்புகின்ற திட்டங்கள் நல்ல முறையில் நிறைவேற உதவியாக இருக்கும். அதைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முற்பகல் 11-00

இராமேஸ்வரம் பஞ்சாயத்தை இப்போது டவுன்ஷிப்பாக மாற்றியிருப்பதாகத் தெரிகிறது. ஜனநாயக சகாப்தத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டு செயல்படும் நிலைமைதான் இருக்கவேண்டும். ஆகவே, இராமேஸ்வரத்தை மறுபடியும் பஞ்சாயத்தாக மாற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும். கொடைக்கானல் முனிசிபாலிடியாக இருந்தது. இப்போது டவுன்ஷிப்பாக மாறிவிட்டது. அதையும் முனிசிபாலிடியாக மாற்ற நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும். ஸ்தல ஸ்தாபனத் தேர்தல் வருவதற்கு முன்னால், மதுரையைக் கார்ப்பொரேஷனாக அறிவித்துவிடுவது நலமாக இருக்கும்.

மதுரை, திருச்சி, கோவை, சேலம் முதலிய இடங்களுக்குப் பாதாளச் சாக்கடைத் திட்டம் தேவை. இந்தக் காரியங்களை எல்லாம் செய்யவேண்டுமென்றால், அமைச்சர் அவர்கள் இந்த மானியத்திற்கு ஒதுக்கி இருக்கும் தொகை போதாது. இன்னும் அதிகத் தொகை ஒதுக்கி பாதாளச் சாக்கடைத் திட்டங்களை நிறைவேற்றித் தரவேண்டும். மதுரையைப் பொறுத்தவரை எல். ஐ. சி. கடன் கொடுக்க ப்ரொபோசல் இருப்பதாகத் தெரிகிறது. அந்தப் ப்ரொபோசல் சம்பந்தமாக அரசு சீக்கிரமாக முடிவுசெய்து மதுரையில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தை அமலுக்குக் கொண்டுவர வேண்டும்.

குடிதண்ணீர்த் திட்டத்திற்கு அமைச்சர் அவர்கள் ரொம்ப முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார்கள். மதுரைக்கு வைகையிலிருந்தும், கோவைக்குச் சிறுவாணியிலிருந்தும் குடிதண்ணீர் கொடுக்க திட்டமிடப்பட

வேண்டும். கோவைக்கு சிறுவாணியிலிருந்து தேவையான அளவு தண்ணீர் கொண்டுவருவது சிரமமென்றால், குந்தாவிலிருந்து கோவைக்குத் தண்ணீர் கொடுக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும்.

முனிசிபல் தொழிலாளர்கள் நீண்ட நெடுங்காலமாகத் தங்களுடைய வாழ்வில் ஒன்றும் வளத்தைக் காண முடியாமல் இருந்து வருகிறார்கள். அவர்களுடைய நிலைமையைப் பரிசீலித்து நல்லமுறையில் அவர்களுக்கு வசதிகளைச் செய்துகொடுப்பதற்கு ஒரு குழு அமைத்து முடிவு செய்தால், நம்முடைய பொருளாதார நிலைக்குத் தக்கவாறு நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம் என்ற ஆலோசனையைக் கூறவிரும்புகிறேன். இன்றைய தினம் மாதம் ஒரு ரூபாய் போனஸ் ஃபண்ட் என்று பிடிக்கிறார்கள். அவர்களுக்கு பிராவிடண்ட் ஃபண்ட் கொடுக்க நடவடிக்கை எடுத்துக் கொள்வது மிக மிக அவசியம்.

நகரத்திலே, 300 ரூபாய்க்குக் குறைவான வருமானம் உள்ளவர்களுக்குத் தொழில வரி வாங்காமல் இருப்பதற்கான ஆணை பிறப்பிப்பது அவசியம. சைக்கிள்களுக்குப் போடுகின்ற வரியையும் எடுத்து விடுவது அவசியம். பிரைவேட் ஹைஸ்கூல் நடத்துகிறவர்களுக்கு அதிக மானியம் கொடுக்கிறார்கள். முனிசிபல் ஹைஸ்கூல்களுக்கு அதிலே பாதி அளவு தான் கொடுக்கப்படுகிறது. முனிசிபல் ஹைஸ்கூல்களுக்கும் பிரைவேட் ஹைஸ்கூல்களுக்குக கொடுப்பதுபோல் மானியம் கொடுக்க நடவடிக்கை எடுத்துக் கொள்வது அவசியம்.

கம்யூனிட்டி டெவலப்மெண்ட் பற்றி முக்கியமாக கூறப்பட்டிருக்கிறது. இன்றுள்ள அபிவிருத்தி பட்டாதாரர்களைச் சார்ந்ததாக இருக்கிறது. அதிலே கொள்கையளவில் மாற்றம் செய்யவேண்டும். எவ்வளவு அதிக பட்டாதரர்கள் இருக்கிறார்களோ, அந்த அளவுக்கு அதிக காண்ட்ரிப்யூஷன் வருகிறது. அதைப் பொறுத்து வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன. காண்ட்ரிப்யூஷன் கிடைக்க முடியாத பல கிராமங்கள் இருக்கின்றன. அந்தக் கிராமங்கள் வசதிகளைப் பெறமுடியாத நிலையிலே இருந்து கொண்டிருக்கின்றன. இதுவரை இருந்த நிலையை மாற்றி காண்ட்ரிப்யூஷன் கொடுக்க முடியாத கிராமங்களுக்கு அபிவிருத்திகளைச் செய்துகொடுக்கும் வகையில் கொள்கையளவில் மாற்றுவது உபயோகமாக இருக்கும்.

நாகை நகர மன்றத்தைப் பொறுத்தவரை ஒரு கோரிக்கையை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். நாகை நகர மன்றத்தின் பொறுப்பில் ஒரு மகளிர் பள்ளிக்கூடம் இருக்கிறது. அதை முனிசிபாலிடி சரியாக நடத்தமுடியாத நிலையில் இருந்துகொண்டிருக்கிறது. அதனால் நாகை முனிசிபாலிட்டி ஒரு தீர்மானம் போட்டு அரசுக்கு அனுப்பியிருக்கிறது. அந்த மகளிர் பள்ளியை அரசே ஏற்று நடத்துவது அவசியம்.

நாகப்பட்டினம் புயல் பிரதேசம். மற்ற முனிசிபாலிடிகள் ஐந்து வருஷத்திற்கு ஒரு முறை ரோடுகளை ரிப்பேர் செய்யவேண்டுமென்றால், நாகையில் வருஷா வருஷம் ரிப்பேர் செய்ய வேண்டிய நிலை இருக்கிறது. அதற்குத் தக்க பண வசதி இல்லாமல் அந்த ரோடுகள் எல்லாம் மோசமாக இருக்கின்றன. அதைச் செப்பனிடும் பொறுப்பை அரசாங்கமே ஏற்றுக் கொண்டால் நலமாக இருக்கும். ஏனென்றால் நாகை முனிசிபாலிடியின் மோசமான பொருளாதார நிலை போல் வேறு எந்த முனிசிபாலிடியிலும் இல்லை. அந்த முனிசிபாலிட்டி 16,00,000 ரூபாயை அரசுக்குத் திருப்பித் தரவேண்டிய நிலையில் இருக்கிறது. அந்தக் கடனைக் காலத்தில் கொடுக்கமுடியாத காரணத்தால், 4½ சத வீத வட்டி 7½ சத விகித வட்டியாக மாறி, இன்று வட்டியாக மட்டும் 86,135 ரூபாய்க்குமேல் சட்ட வேண்டிய நிலைமை இருக்கிறது. அந்த முனிசிபாலிடியின் வருஷ வருமானம் 11 லட்சம் ரூபாய்தான். அந்தக் கடன் தொகையை வசூலிப்பதில் ஐந்து ஆண்டுகளுக்காவது மாரடோரியம் கொடுக்க வேண்டுமென்பது என்னுடைய கோரிக்கை. முனிசிபாலிடியின் பொருளாதார நிலையில்,





ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுக்க முடியாத நிலை, நகர சுத்தித் தொழிலாளர்களுக்குச் சம்பளம் கொடுக்க முடியாத நிலை இருந்து கொண்டிருக்கிறது. இந்த நிலையில் வட்டிக்கு வட்டி போடுவதை ரத்து செய்யவேண்டும்.

நாகை பஞ்சாயத்து யூனியனைப் பொறுத்த வரையில் 57 பஞ்சாயத்துக்கள் இருப்பதால் நிர்வாகம் பண்ண முடியவில்லை. அமைச்சர் அவர்களுடைய உரையில் தென்னாற்காடு மாவட்டத்தில் ஒரு பஞ்சாயத்து யூனியனை இரண்டாகப் பிரிக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டிருப்பதாகச் சொன்னார்கள். ஐம்பத்தேழு பஞ்சாயத்துக்களைக் கொண்ட இந்த நாகை பஞ்சாயத்து யூனியன் நிர்வாகத்தை நடத்துவதில் சிரமங்கள் இருப்பதால், இதை இரண்டு பஞ்சாயத்து யூனியனாகப் பிரிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

நாகை நகராட்சி வார்டுகள் பிரிக்கப்பட்டிருப்பதைக் குறித்து அமைச்சர் அவர்களிடம் நேரில் பேசியிருக்கிறேன், மனுவும் கொடுத்திருக்கிறேன். இப்போது பிரிக்கப்பட்டிருப்பது நாகை நகராட்சியில் இடம் பெற்றுள்ள ஆளும் பொறுப்பில் உள்ளவர்களால் அரசியல் காரணத்தோடு பிரிக்கப்பட்டிருக்கிறது. அங்குள்ள பொது மக்களும், அரசியல் கட்சிகளும் இந்த முறையில் வார்டு பிரிக்கப்பட்டிருக்கும்முறை தவறு என்று கருதுகிறார்கள். ஆகவே, இதை ரத்து செய்து ஏற்கெனவே இருந்த முறையில் மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கு அரசு உடனே உத்திரவிடவேண்டும்.

மாவட்ட அபிவிருத்தி மன்றத்தைப் பொறுத்தவரை ஜனநாயக முறையில் செயல்படும் வகையில் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும். ஒரு சிறு கோரிக்கை. சட்ட மன்ற உறுப்பினர்களுக்குப் பஞ்சாயத்து யூனியன் ஜீப்பைக் கொடுப்பது என்ற நிலை இருக்கிறது. சில பஞ்சாயத்து யூனியன்களில் கொடுக்க மறுக்கிறார்கள். அது பற்றியும் அமைச்சர் அவர்கள் கவனிக்கவேண்டும். பஞ்சாயத்து கமிஷனர்கள் இயங்கும்முறை திருப்திகரமானதாக இல்லை. விளக்கமாகச் சொல்ல நேரம் இல்லாததால், இதிலே உள்ள நிர்வாகம் சீராகச் செயல்படும் விதத்தில் உத்தரவுகளைப் பிறப்பிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனக்கு இந்தச் சந்தர்ப்பத்தை அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமுதாய வளர்ச்சித் திட்ட மானியக் கோரிக்கையின் மேல் சில கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பளித்தமைக்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஒரு முறை, "ஊரிலே ஒரு பாதை சீர்கேடு அடைந்தாலும், பள்ளியில் இருக்கும் ஒரு ஓலை பிய்த்துக்கொண்டு போனாலும், உடனடியாக மந்திரிக்கும், கலெக்டருக்கும் மகஜர் எழுதும் காலம் இது" என்று வேடிக்கையாகச் சொன்னார்கள். இன்றையதினம் சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் மூலமாக கிராமப் பகுதிகள் முன்னேற்றம் அடையவேண்டுமென்ற எண்ணத்தில் புதிய அரசாங்கம் பொறுப்பேற்ற பிறகு, ஓராண்டுக் காலத்தில் சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் மூலமாக நல்ல திட்டவட்டமான கொள்கைகளின் மூலமாக இப்போதுள்ள நிலையைச் சீர்படுத்துவதன் மூலம் சீரிய வளர்ச்சித் திட்டத்தை உருவாக்கிக் காட்ட முடியும் என்பதை ஓராண்டுக் காலத்தில் ஓரளவு நிறைவேற்றியிருக்கிறார்கள். ஊராட்சிகளின் பொருளாதார நிலையை உயர்த்தும்வகையில், பல வசதிகளைச் செய்து கொடுக்கும் முறையில் வேண்டிய நடவடிக்கைகளை எடுக்குமுகத்தான் டிராக்டர்கள் வாங்கிக் கொள்ள உத்திரவிட்டிருக்கிறார்கள்; டிரில்லர்கள், ஸ்ப்ரேயர்கள் வாங்கிக் கொள்ள அனுமதி வழங்கியுள்ளார்கள். இதனால் பொது மக்களிடம் நல்ல உற்சாகம் பிறந்திருக்கிறது. இன்றைய தினம் இதற்கு ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை குறைவாக இருப்பதாக எதிர்த்தரப்பில் சொன்னார்கள். ஏற்கெனவே உள்ள ஊராட்சிச் சட்டம் 1960-ம் ஆண்டு

சட்டமாக இருந்தாலும் சரி, அதையொட்டிப் பிறப்பிக்கப்பட்ட விதி முறைகளானாலும் சரி, அரசாங்கத்தின் ஆணைகளானாலும் சரி, இன்றையதினம் பல்வேறு வகையில் திருத்தப்படவேண்டுமென்று எல்லோரும் ஒருமுகமாகச் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். பொதுவாக, கிராம ஊராட்சி ஒன்றியங்களும், ஊராட்சிகளும் செம்மையான முறையில் நடைபெற வேண்டுமானால், நிதி வசதி இல்லாமல் நடைபெற முடியாத நிலைமை இருக்கிறது.

இன்றைய தினம் வீட்டு வரியாக இருந்தாலும் சரி, நில செஸ்ஸாக இருந்தாலும் சரி இவைகள் எல்லாம் அதிகமான அளவிற்கு வசூலானால்தான், ஊராட்சிகளை செம்மையாக நடத்திச் செல்ல முடியும் என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்வர். ஆனால் எந்தக் காரணத்தினாலோ வரி வசூல் அதிகமாக ஆகவில்லை. என் தொகுதியை எடுத்துக் கொண்டால், பல ஊராட்சி ஒன்றியங்களில் " நில் பாலன்ஸ் " இருப்பதைக் கண்டு வருத்தப்படுகிறவர்களில் நானும் ஒருவன். இந்தச் சூழ்நிலையில் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் என் தொகுதி கும்முடிப்பூண்டிக்கு வந்து அங்கு ஒரு கருத்தரங்கைக் கூட்டி அங்குள்ள ஒன்றிய அலுவலர்கள் வரி வசூல் செய்பவர்கள், இவர்கள் தங்கள் கடமைகளை எப்படி ஆற்ற வேண்டும் என்பது பற்றி சிறந்ததொரு உரையை ஆற்றிவிட்டு வந்தார்கள். அதற்குப் பிறகும் அதே சூழ்நிலைதான் இருக்கிறது. இதில் ஒரு மாற்றம் தேவை என்பதை எல்லோருமே ஒப்புக்கொள்வர். ஆகவே கிராம உத்தியோகஸ்தர்கள் மூலம் வரிவசூல் செய்வதை நிறுத்தி சில ஊராட்சி ஒன்றியங்களை ஒன்றாக இணைத்து அவற்றிலிருந்து வரி வசூல் செய்ய சில பில் கலெக்டர்களை நியமித்தால், அவர்கள் பகுதி நேர ஊழியர்களாக இருந்தாலும்சரி பரவாயில்லை என்ற எண்ணம் இப்போது பரவலாக ஏற்பட்டு வருகிறது.

திரு. அம்பலம் அவர்கள் சொல்வதுபோல் தணிக்கைக் கூட்டங்கள் எப்படி ரெவின்யூ இலாகாவில் நடக்கிறதோ அதேபோல் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கண்டிப்பாக கூட்டாட்சித் தலைவர் அவர்கள் பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள், பஞ்சாயத்துத் தலைவர்கள், அந்த அந்த கிராம உத்தியோகஸ்தர்கள் இவர்களைக் கூட்டி வைத்து ஒரு கூட்டத்தை நடத்தி எந்தெந்த பஞ்சாயத்துக்களில் வரி வசூலாகவில்லையோ அதை வசூலித்தாக வேண்டும். அப்படி வசூல் செய்தால்தான் கிடைக்க வேண்டிய " மாட்சிங் கிராண்ட் " கிடைத்து அதன்மூலம் நல்லபணிகளை மேற்கொள்ள முடியும் என்ற நிலை இருப்பதால், இதைச் செய்தாக வேண்டும். இப்போது அதிகாரங்கள் யார் யாருக்கு எந்த எந்த வகையில் இருக்கிறது என்று சொல்ல முடியாத நிலையில் இருப்பது பற்றி எனக்கு முன் பேசியவர்கள் சுட்டிக் காட்டினார்கள். 149,150 பிரிவுகள்படி, ஊராட்சிகளில் செயல்படாத தலைவர்களையும், உறுப்பினர்களையும் நடவடிக்கைகள் எடுத்து விலக்கலாம் என்ற முறையில் விதிகள் இருந்தாலும் என் தொகுதி பற்றிச் சொன்னால், கொஞ்சம் வேறு மனநிலையில் உள்ள தலைவர்கள் பல பேர், அவர்கள் செயல் முறையை ஒரேயடியாக கைவிட்டு வருடக்கணக்கில் ஊராட்சி மன்றங்களைக் கூட்டாமல் இருக்கிறார்கள். அப்படி கூட்டவில்லை என்பதற்காக யார் அவர்கள் பேரில் நடவடிக்கை எடுப்பது என்ற கேள்வி எழுகிறது. கலெக்டர் நடவடிக்கைகள் எடுக்கலாம் என்றால், அப்படி அவர்கள் நடவடிக்கைகள் எடுத்து, எடுக்கப்பட்ட முடிவுகளை ஏற்றுக்கொள்ளும் நிலைவரும்போது அந்தத் தலைவர்கள் நீதிமன்றத்திற்குப் போவதால், அங்குள்ள வேலைகள் தடைபடுகின்றன. ஆக, கூட்டங்களுக்கு வராத உறுப்பினர்களின்மீது நடவடிக்கைகள் எடுக்க முடியாத ஒரு சூழ் நிலை இருப்பதை அரசு கவனித்து அதற்கு வேண்டிய பரிகாரங்களைக் காணவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சாலை மானியங்கள் வழங்குவதில் 40 காசு என்றளவிற்கு வழங்கப்பட்டு வருவதை நிச்சயமாக மாற்றித் தீர வேண்டும். தமிழகத்தில் உள்ள 373 யூனியன்களில் கும்முடிப்பூண்டி யூனியன் இரண்டாவது



பெரிய யூனியனாக இருக்கிறது பரப்பளவில். அது ஆந்திரத்தின் ஓரத்தில் இருப்பதால் அந்தப் பகுதிகளில் சைக்கிளில்கூட போக முடியாத நிலையில் உள்ள பல ஊர்கள் இருக்கின்றன. அதற்கு முக்கிய காரணம் 40 காசு என்ற அளவில் கொடுக்கப்படுவதால், அதிகமான மக்கள் தொகைகொண்ட குறுகிய பரப்புள்ள யூனியனுக்கு கொடுக்கும் அதே தொகைகள்தான் எங்களுக்கும் கொடுப்பதால், அந்தப் பகுதிகளில் எந்தவித பராமரிப்பு வேலைகளும் செய்ய முடியாதவர்களாக இருக்கிறோம் என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன். இணைப்புச் சாலைகள் ஏற்படுத்துவதில், யூனியனிற்குள் உள்ள இணைப்புச் சாலைகளை அங்கே யூனியனே ஏற்படுத்திக் கொள்கிறது. ஆனால் இரண்டு யூனியன்களை இணைக்கும் சாலையின் பொறுப்பை யார் ஏற்றுக் கொள்வது என்ற பிரச்னை வருகிறது. ஆகவே இதற்கும் ஒரு வழிவகை காண வேண்டும். சட்டத்தைத் திருத்தும்போது, ஊராட்சிகளின் வருவாயைப் பெருக்க புறம்போக்கு நிலங்களை ஊராட்சிகளிடம் இன்றைய தினம் ஒப்படைத்திருக்கிறோம். அப்படி ஒப்படைக்கப்பட்ட புறம்போக்கு நிலங்களை குறுகிய கால குத்தகைக்காவது விட்டு ஒரு ஏக்கருக்கு பத்து மூட்டை நெல் அல்லது அதற்குரிய பணத்தையாவது பெற்று ஊராட்சியின் வருவாயைப் பெருக்கமுடியும். அதைச் செய்யவேண்டும். முள் செடிகளை மட்டும் போடுவதில் எந்தவித பலனும் இல்லை. விளக்குகள் எரியவில்லை என்ற புகார்கள் அதிகமாக வருவதால் பஞ்சாயத்து யூனியனில் இருக்கிற விஸ்தரிப்பு அதிகாரிகள் சில பேர்களை இதற்காக நியமித்து இரவு நேரங்களில் அவர்கள் ஒவ்வொரு ஊராட்சிக்கும் சென்றுபார்த்து கண்காணிப்பு செய்து எந்தெந்தப் பஞ்சாயத்துக்களில் விளக்குகள் எரியவில்லை என்ற கணக்கை மின்சார வாரியத்துடன் தொடர்புகொண்டு அதற்குரிய பரிகாரம் வழங்கவேண்டும். இதற்காக விஸ்தரிப்பு அதிகாரிகளைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

முந்திய அரசு கொஞ்சம் அகலக் கால் விரித்து ஏராளமான ஓராசிரியர் பள்ளிகளைத் திறந்துவிட்டதால், இப்போது எல்லாப் பள்ளிகளுக்கும கட்டடங்கள் கட்டிக் கொடுக்க முடியாத நிலையில் இருக்கிறோம். கும்முடிப்பூண்டியில் 60 70, சதவிகிதம் பள்ளிகளுக்குக் கட்டடம் இல்லாமல் இருக்கிறது. இதைச் சீர்தூக்கிப் பார்த்து போடுகிற எஸ்டிமேட்டில், மதிப்பீட்டில் ஓரளவாவது குறைவுபடுத்தி எல்லாப் பள்ளிகளுக்கும் கட்டட வசதி செய்து கொடுக்கவேண்டும்.

மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்கள் சீரிய முறையில் நடக்கின்றன. அவைகள் வெறும் " ரெக்கமண்டேடரி அத்தாரிட்டி " என்று சொல்லப்படுகிற " பரிந்துரை செய்யும் குழுக்களாக " இருக்கின்றன. இவற்றிற்குக் கூடுதல் அதிகாரங்கள் அளித்து, மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களில் கலந்து கொள்பவர்கள் ஒவ்வொரு பகுதிக்கும் சென்று, ஆங்காங்குள்ள முன்னேற்றங்களைக் கண்டறிந்து, அவை உரியவகையில் செயல்பட அதிகப்படியான அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும்.

இப்போது பொறுப்பேற்றுள்ள புதிய அரசு பஞ்சாயத்துக்களின் வருவாயைப் பெருக்க அதிகப்படியான உரிமைகள் வழங்கியுள்ளன, அதற்காக என் நன்றி. இன்னும் பல்வேறு வசதிகளைப் பெருக்கிக் கொள்ள வேண்டிய வழிவகைகளை வகுத்துக் கொள்ள அவற்றிற்கு அனுமதி வழங்கவேண்டும். ஏற்கனவே கிராமங்களில் மண்பாண்டங்கள், பொம்மை போன்ற பலவிதமான தொழில்கள் செய்து கொள்வதற்கு அனுமதி இருந்தாலும், ஒன்றியங்கள் அல்லது ஊராட்சிகள் டூரிங் சினிமாக்கள் போன்றவை நடத்த அனுமதி வழங்கவேண்டும். அதன் மூலம் ஊராட்சிகளும், ஒன்றியங்களும் தங்கள் வருவாயைப் பெருக்கிக் கொள்ள துணை நல்க வேண்டும். இவைகளையெல்லாம் தொடர்ந்து கடைப்பிடித்தால் முன்பிருந்தவர்கள் கனவு கண்ட ராம ராஜ்யத்தை ஏற்படுத்த முடியும். சோழர்கால ஊராட்சி முறையை ஏற்படுத்த முடியும் என்ற கருத்தைக் கூறி இவ்வாய்ப்பளித்தமைக்கு நன்றிகூறி விடை பெறுகிறேன். வணக்கம்,

DR. HABIBULLAH BAIG: Mr. Deputy Speaker, at the very outset I thank the Government, particularly the Hon. Minister for Local Administration, for the help they are giving to the Corporation by way of loans, etc. In the present budget the Government have been pleased to allot more funds for the Corporation. It is stated in the policy note on Demand No. 29 circulated to the Members that the Government are going to give financial assistance towards the construction of two sub-ways, one in Doraiswamy Road at Theagarayanagar and the other at Kannammapet.

I wish to bring to the notice of the Government that all the roads in the City except the trunk roads are maintained by the Corporation. When the Corporation is capable of maintaining all the roads, whether they are bus routes or not, why should the maintenance of the trunk roads be under the control of the Highways Department? This, I think, is a partiality shown against the Corporation. I request the Government to restore the maintenance of these roads to the Corporation.

Provision has been made in the budget for financial assistance for widening of Harris Bridge near Mount Road across the Cooum River; for widening of bridge at Cooks Road; for construction of a pedestrian sub-way across railway line in Perambur High Road; for reconstruction of the Elphinstone Bridge across Adyar; for construction of over-bridge at Gengu Reddy Road in lieu of level-crossing; for major improvement to causeway in Alandur Road, Saidapet; for reconstruction of Elephant Gate Bridge; for construction of Wholesale Market in Kesava Pillai Park and for construction of a multi-storeyed building in Mount Road. I am very happy about it.

Mr. Deputy Speaker, Sir, I have to thank the Government for all the grants and loans given by them to the Corporation. In addition to that, I want to point out to the Government that we are having an income of only Rs. 8 crores, out of which we are spending two to three crores of rupees for the salaries of the employees. Because the Central Government are enhancing the Dearness Allowance and the City Compensatory Allowance, the State Government are also compelled to enhance those Allowances. Now, our employees are also compelling us to give increased Dearness Allowance and also City Compensatory Allowance and we are committed to it. Our commitment in regard to D. A. and the City Compensatory Allowance comes to Rs. 168 lakhs per year. Out of a meagre income of Rs. 8 crores, a big slice of Rs. 168 lakhs will be taken away and we are not in a position to run the administration effectively. So, I request the Hon. Minister for Local Administration to be kind enough to consider the demands of the Corporation employees with regard to D.A. and City Compensatory Allowance. Apart from that, the last grade employees of the Corporation—' Thozhilalees '—have demanded that the Corporation should convert the bonus into an Employees Provident Fund and that it should be immediately complied with. A sum of Rs. 64 lakhs is deposited in the Government Securities. If we are to contribute towards the Employees Provident Fund, we have to incur an expenditure of Rs. 4 lakhs. These corporation ' thozhilalees ' have carried on a lot of agitation and we have brought this to the notice of the Government and the Hon. Chief Minister was kind enough to give assurance to us that this will be considered and now I request the Government to consider it sympathetically.



Now, Sir, since 1955 the Central Government owe to us arrears to the extent of nearly Rs. 25 lakhs for the Central Government buildings. In spite of repeated demands, we are not in a position to collect the money from them. There is a hue and cry raised that we are not collecting it from the Central Government. I am highly thankful to the Hon. Minister for Local Administration who has been kind enough to write to the Union Minister, Thiru Jagannath Rao, with regard to the clearance of the arrears. I once again request him to exercise some pressure on the Central Government and see that the arrears are cleared off.

I am also highly thankful to the Government, for this year they have allotted Rs. 5 lakhs for the construction of buildings for elementary, higher elementary and high schools. Every year we are spending Rs. 10 lakhs for the construction of those schools. Now out of Rs. 40 lakhs allotted for the whole State, they have beenkind enough to allot Rs. 5 lakhs for the construction of buildings for these schools. That means that one-eighth of the allotment has been given to us. We are highly thankful to the Government.

Now I come to the amending Act based on the White Paper on Local Administration. The Act was passed with the intention to decentralise the local bodies and give more powers to them. With the same intention the functions of the Corporation have been decentralised through an amending Act. But unfortunately because of that Act, we are simply spending lakhs and lakhs of rupees for nothing in the name of Circles. So, I would request the Government to repeal this Act and have the original Municipal Act which was there before the passing of the amending Act. Previously there were Standing Committees like the Education Committee, Taxation and Finance Committee and Public Health Committee. Now we are having Circle Committees and on the top of them a Central Committee and on the top of that, we have got Contract Committee, Appointments Committee, Taxation Appeals Committee and so on. These Committees are not functioning properly and it is a mere waste. So, I request the Government to see that they are allowed to have the original Act.

Now, Sir, in every district there is a District Development Council and the Members of the Assembly representing that district are members of that Council. As the Madras City has a Corporation which is looking after the amenities to the public, there is no necessity for a District Development Council. But I suggest that the

[Dr. Habibullah Baig] [1968 மார்ச் 13

Members of the Assembly representing the Madras City may be allowed to sit in the Corporation Council as Alderman, as was previously done, without voting power so that they can give some suggestions to improve the City and make it more beautiful. In this connection I would also suggest that the Mayor of the Madras City may be allowed to sit in the Assembly or the Council so that he can give some suggestions to improve the City and effect co-ordination. Of course, I am a Member of the Assembly and also a Mayor now but all the Mayors cannot be Members of the Assembly. So, I request the Government to consider this suggestion and see that the Mayors are allowed to sit either in the Assembly or the Council.

Then, I am highly thankful to the Government for the keen interest shown by them in bringing the Cauvery water to the City through Veeranam Tank and Jeddarpalayam. The Public Health Engineering Department has investigated the scheme and the Government have allotted Rs. 1 lakh for bringing the Cauvery water from Veeranam Tank and 4·08 lakhs for bringing the Cauvery water from Jeddarpalayam. The Government have also approved the scheme for pumping 40 million gallons of Cauvery water daily from the Veeranam Tank to the Madras City at an estimated cost of Rs. 24·5 crores but that is in the hands of the Central Government for execution. I request the Government to exercise pressure on the Central Government to implement the scheme quickly so that we can supply 40 gallons of water per head to the City of Madras. Also, in summer there is a lot of scarcity of water and people make a hue and cry about it. So, this problem must be solved and it should not be treated as a party affair. I also request the leaders of Opposition Parties to see that pressure is brought upon the Centre for the implementation of this scheme quickly.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இங்கு விளக்கு எரிவதைப் பாருங்கள். விளக்கு எரிவது காலம் முடிந்து விட்டது என்பதைக் காட்டுவதற்காக.

Dr. HABIBULLAH BAIG : Then regarding slum improvement and slum clearance, it is known to everybody and it has also
முற் பகல் 11-30 been mentioned by the Hon. Minister for Local Administration that it is the responsibility of the Centre to allot more funds. Only if more funds are allotted, there will be more improvement or clearance of slums. So far as the City is concerned, there are 491 slums and out of those slums, 100 slums have so far been cleared and improved. Unless and until more allotment is made by the Centre, we cannot clear or improve the slums. Unless and until the slums are cleared, sanitation of the people cannot be improved and the city also cannot be made beautiful. Day by day people in the villages are rushing to the City for want of food and livelihood and are squatting on the platforms near the main roads. They are also making a lot of nuisance. Unless and until the slums are cleared, the sanitation of the City cannot be improved and the City cannot be made beautiful though this is one of the beautiful cities of the country.



1968 மார்ச் 13] [Dr. Habibullah Baig]

I thank the Government and the Hon. Minister for Local Administration for the adequate provision made in the budget for the Corporation. I request that provision should be made in regard to Dearness Allowance and City Compensatory Allowance. With these words I support the Demands.

**திரு. இல. பலராமன் :** மாண்புமிகு உதவி சபாநாயகர் அவர்களே, இந்த சமுதாய வளர்ச்சித் திட்ட மானியக் கோரிக்கைமீது பேச அனுமதி வழங்கியதற்கு நன்றி தெரிவித்துக்கொண்டு பேச விழைகிறேன்.

சமுதாய வளர்ச்சித் திட்டம் என்பது இந்த நாட்டின் தந்தையான காந்தியண்ணல் அவர்களால் இந்த நாட்டின் மக்கள் முன்னேறவேண்டும், ஏழை எளிய மக்கள் சமுதாயத்தில் உயர்வு அடைய வேண்டும் என்ற ஒரு அடிப்படைத் திட்டத்தின் காரணமாக, இந்த சமுதாய வளர்ச்சித் திட்டம் தோன்றியது. அந்தத் திட்டம் நல்ல முறையில் செயல்பட்டால் தான் நாட்டின் பொருளாதாரம் செழித்து ஏழை மக்களும் உயர்வு காண முடியும் என்ற ஒரு நிலையை ஒட்டி காங்கிரஸ் அரசாங்கம் பல திட்டங்களை இந்த நாட்டு மக்களுக்காக தீட்டியிருக்கிறது.

பல குறைபாடுகளை உடையதாக இருக்கும் கிராம மக்களைப் பெருவாரியாக புறக்கணித்துவிட்டிருக்கும் அளவுக்கு உள்ள இந்த பட்ஜெட்டை சமர்ப்பித்திருப்பது கிராம மக்களுக்குப் பெரும் வேதனையையும் வருத்தத்தையும் தரக்கூடியதாக அமைந்து உள்ளது. இந்த சமுதாய வளர்ச்சித் திட்டம், கிராம மக்களின் உயர்வை, அவர்கள் சமூகத்தில் மேல் மட்டத்திற்கு உயர வேண்டும் என்ற நிலையை நாட்டுக்கு ஞாபகம் ஊட்டும் வகையில் பொதுவாக மானியமாக மொத்தத் தொகையில் 21 சத விகிதம் ஒதுக்கப்பட்டதாகச் சொல்கிறார்கள். இப்போது தமிழ் நாட்டிலே, குறிப்பாக கிராமங்களிலே 85 சதவிகிதம் மக்கள் வாழ்கிறார்கள். அப்படி 85 சத விகிதம் மக்கள் வாழ்கின்ற கிராமங்களுக்கு 21 சதவிகிதம்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்றால், அந்தப் பாகுபாடு ஏன் என்பதுதான் புரியவில்லை. பொதுவாக கிராம மக்கள் மேலும் க்ஷீணிக்கும் நிலைக்கு இந்த வரவு செலவுத் திட்டம் அமைந்திருக்கிறது. கிராமங்களுக்கு வேண்டிய கிராமப் பஞ்சாயத்துக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அத்தகைய கிராமப் பஞ்சாயத்துக்கள் இன்றைக்குப் பல வசதிகள் இல்லாமல், பொதுவாக கிணறுகள், இணைப்புச் சாலைகள் போன்ற யாதொரு வசதியும் இல்லாமல் இருக்கின்றன. ஏற்கனவே அடைந்த அபிவிருத்திகளை மேலும் வளரச் செய்வதுதான நல்ல அரசாங்கத்தின் நோக்கமாக இருக்க வேண்டும். 1967–68-ஆம் ஆண்டில் சாலைகளுக்காக 108·41 லட்சம் ஒதுக்கப்பட்டிருந்தது. 1968–69-க்கு 582·72 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதில் குறிப்பிட்ட பெருவாரியான தொகையைக் குறைப்பதற்கு நோக்கம் என்னவென்று புரியவில்லை. வாடர் சப்ளை—குடிதண்ணீர் வசதிக்காக 110 லட்சம் மானியம் 1967–68-ல் ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால் 1968–69-ல் அதை 95 லட்சம் எனக் குறைத்து அவைகளுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது வருத்தத்துக்கும் வேதனைக்கும் ஏதுவாக இருக்கிறது.

ஹைஸ்கூல் பில்டிங்ஸ்—என்ற இனத்தின்கீழ் 1967–68-ல் 40·43 லட்சம் ஒதுக்கப்பட்டிருந்தது. 1968–69-ல் இது 28·50 லட்சமாக குறைக்கப்பட்டிருக்கிறது. இப்படி கிராம மக்களுக்கு என்று ஒதுக்கப்படுகின்ற தொகைகளை குறைத்து, ஒரு உபரி பட்ஜெட் தயாரித்து இருக்கிறோம் என்று விளம்பரப்படுத்திச் சொல்கிறார்கள். இது மிகவும் வேதனையையும் வருத்தத்தையும் தருகிறது. கிராம மக்களுக்கு அபிவிருத்திக்கான திட்டங்கள் மிகவும் பின்தங்கிய நிலையிலும் பொதுவாகத் தொடர்பு இல்லாத நிலையிலும் இருப்பது மிகவும் வேதனைக்குரியது.

பஞ்சாயத்துக்கள் தங்கள் அலுவல்களை நன்கு செயல்படுத்த முடியாத, தன்னுடைய மக்களுக்கு போதுமான நன்மைகள் செய்ய முடியாத ஒரு நிலை இருக்கிறது. முன்பு ஒதுக்கப்பட்ட பணம் இப்போது பெருவாரி

யாகக் குறைக்கப்பட்டிருப்பதால், மேலும் அபிவிருத்திகள் செய்வதற்கு முடியாத ஒரு நிலை இருக்கிறது. கிராமப் பஞ்சாயத்துக்கள் இன்றைய தினம் போதுமான அலுவலக கட்டிட வசதி இலலாமல் இருக்கின்றன. அப்படி அலுவலகக் கட்டிடங்கள் இருந்தால்தான் அந்தப் பஞ்சாயத்துக்களை எப்படி நடத்த வேண்டும் என்பதற்கும் பஞ்சாயத்துக்களை நன்கு பரிபாலனம் செய்வதற்கும் ஒரு எதுவான நிலை இருக்கும். ஆகவே, கட்டிடம் இல்லாத நிலையில் கட்டிடங்கள் கட்டிக் கொடுக்க வேண்டிய நிதி ஒதுக்கீடுகளை இந்த அரசாங்கம் விரைவில் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு, இந்தப் பஞ்சாயத்துக்களுக்கு என்று ஒப்படைக்கப்பட்டிருக்கும் நிலங்களைத் திடீரென்று மாவட்ட ஆட்சித் தலைவர் அரசாங்கத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது என்று உத்திரவுபோட்டால், அது பெரும் வேதனைக்கும் வருத்தத்துக்கும் உரியதாகிறது. இந்த நிலங்களைப் பஞ்சாயத்துக்களிடம் மீண்டும் ஒப்படைத்து அவைகளில் வேண்டிய அபிவிருத்திகளை செய்ய வேறு என்ன வழி என்று இந்த அரசாங்கம் கவனிக்க வேண்டும். எந்தெந்த பஞ்சாயத்துக்கள் எந்தெந்த நிலங்களைக் குத்தகைக்கு விட வேண்டும் என்றோ அல்லது வேறு என்ன செய்யவேண்டுமென்று நினைக்கிறதோ, அந்தந்த பஞ்சாயத்துக்கள் இஷ்டம் போல செய்வதற்கு வழி வகுத்துத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பஞ்சாயத்துக்களுக்கு வீட்டு வரி ஒன்றுதான் பெருவாரியாக வரக்கூடிய ஒரு வரி. பெருவாரியாகக் கிராமங்களிலுள்ள மணியக்காரருக்கும் பஞ்சாயத்துத் தலைவருக்கும் தகராறு இருந்து கொண்டிருப்பது எல்லோரும் அறிந்த விஷயம். அந்தத் தகராறு மேலும் வளர்வதால், அவர்கள் வரி வசூலிப்பதில்கூட காலதாமதம் ஏற்படுகிறது.

மேலும் நிலவரி வசூலிப்பதில் ரெவினியூ அதிகாரிகள் அக்கறை காட்டுவது போல பஞ்சாயத்துக்களில் வரி வசூலிலே அக்கறை காட்டுவது இல்லை. ரெவினியூ இலாகாவில் ஜமாபந்தி நடத்துவது போல் கணக்குகளைத் தணிக்கை செய்வதற்கு ஒவ்வொரு பஞ்சாயத்துத் தலைமையிடத்திலும் ஜமாபந்திபோன்ற ஒரு முறையை வைத்தால் நல்லது. பஞ்சாயத்து யூனியன்களில் பள்ளிக்கூடங்களுக்கு கட்டிட வசதி இல்லாமல் பல பள்ளிகள் ஆல மரத்தடியில் நடந்து கொண்டிருக்கும்போது இப்படி கிராம வசதிக்காக ஒதுக்கப்படுகிற தொகை குறைவு செய்யப்பட்டிருப்பது வருந்தத்தக்கது. ஆகவே, இந்தப் பள்ளிக்கூடங்களுக்கான கட்டடங்கள் போன்ற மற்ற வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு இந்தப் பட்ஜெட்டில் ஒதுக்கீடு செய்யாவிட்டாலும், வேறு ஏதாவது மாற்றங்கள் செய்து பள்ளிக்கூடங்களுக்கான கட்டட வசதிகள்போன்ற மற்ற வசதிகளை செய்து கொடுக்க நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தண்ணீர் வசதி—சென்னை நகர மக்களுக்குக் காவேரித் தண்ணீரைக் கொண்டு வருவோம் என்று சபதம் செய்திருக்கும் இந்த அரசாங்கம் கிராம மக்களை நோய்கள் தாக்காத அளவுக்கு, கிராம மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட தண்ணீரை எப்படியும் தருவோம் என்று உறுதியை அளிக்க வேண்டும். பல கிராமங்களில் இன்று இணைப்புச் சாலைகள் இல்லாமல் சைக்கிள்கள்கூடப் போக முடியாத நிலையில் பல கிராம ரோடுகள் இருக்கின்றன. ஆகவே, கிராமங்களுக்கு வேண்டிய விதத்தில் சாலை வசதிகள் செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கிராமங்களில் உள்ள பள்ளிகளில் உள்ள ஆசிரியர்களுக்கு நல்ல வசதிகளைப் பெருக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கிராமங்களில் குழந்தைகளுக்கு பால்வாடி வகுப்புக்களை ஆரம்பிக்க வேண்டும். விவசாய மக்கள் விவசாய வேலைகளுக்காகச் செல்லும்போது அவர்களின் குழந்தைகளைப் பாதுகாக்க ஒரு வழி வகுத்துத் தர வேண்மென்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது டெவலப்மெண்ட் கவுன்சில் என்றிருப்பதற்குப் போதுமான அதிகாரங்கள் இல்லை. அவைகளுக்கு அதிகப்படியான அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்த கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகளையும் நல்ல முறையில் அமைத்துத் தர வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். கிராமப் பஞ்சாயத்துக்கள்





மேலும் அபிவிருத்தி அடைய மாற்று முறைகளைக் கையாண்டு அவைகளை பல இனங்களில் அதிகப்படியான பண ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

*திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, இப்போதுள்ள இந்த மானியக் கோரிக்கையின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்லிக் கொள்கிறேன்.

பஞ்சாயத்து யூனியன்களுக்கு இப்போதுள்ளதைவிட அதிக அதிகாரங்கள் கொடுக்க வேண்டுமென்பதை நான் வலியுறுத்திக் கூறிக்கொள்கிறேன். காரணம், இப்போதுள்ள இந்த சமுதாய நல வேலைகள், ஏழை கிராம மக்களுக்குச் சுகாதார வசதிகள், ஆரம்பக் கல்வி, குடிநீர் வசதிகள் எல்லாம் கொடுப்பதற்கும், அவர்களுடைய வேலைகளைத் திறமையாகச் செய்து முடிப்பதற்கும் இப்போதுள்ள அதிகாரத்தைக்கொண்டு அவர்களால் செய்ய முடியவில்லை. அது மட்டும் அல்ல, சில வேலைகளைச் செய்யும்போது ரெவின்யூ இலாகாவினுடைய தலையீடு காரணமாக, அந்த வேலைகள் காலாகாலத்தில் செய்யப்படாமல், அவர்களால் செய்ய முடியாமல் கடுமையான பாதகம் ஏற்படுகிறது என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். உதாரணமாக ஒரு பஞ்சாயத்து யூனியன் கிராமத்திலே ஒரு காவலாளி நியமிக்க வேண்டுமென்று சொன்னால் இப்பொழுது கலெக்டருடைய அனுமதியும், ரெவின்யூ அதிகாரிகளுடைய அனுமதியும் வேண்டுமென்று காரணம் காட்டி, அனுமதி கொடுக்காமலேயே எவ்வளவு காலம் கடத்தப்பட முடியுமோ, அவ்வளவு காலம் கடத்தப்படுகிறது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அது மட்டும் அல்ல, இன்று பஞ்சாயத்தினுடைய அதிகாரங்களில் ரெவினியூ இலாகா அதிகாரிகளுடைய குறுக்கீடுகள் மிக அதிகமாக இருப்பதால், ஒரு சிறு சுகாதார வசதியைக்கூட ஏற்படுத்திக் கொடுக்க முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஒரு கிணற்றைச் சுற்றி இருக்கிற மரங்களிலிருந்து இலைகள் விழுந்து அழுகி, அதனால் சுகாதாரக் கேடு ஏற்படக்கூடிய நிலையில் கூட, அந்த இடத்தில் உள்ள மரங்களை வெட்ட வேண்டுமென்று பஞ்சாயத்து யூனியன் கமிஷனரும், பஞ்சாயத்து யூனியனும் தீர்மானம் போட்டால்கூட, ரெவினியூ இலாகா தாசில்தார்கள் அல்லது ஆர்.டி. ஓ. போன்ற ரெவினியூ இலாகா அதிகாரிகள் அதை வெட்ட அனுமதி கொடுக்காமல், அந்த மரங்கள் வெட்டப்படாமலேயே இருக்கின்றன. இதனால் சுகாதாரம் பாதிக்கப்படுகிறது.

சிறுசிறு விஷயங்களுக்குக்கூட பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள் ரெவினியூ இலாகா அதிகாரிகளிடம், தாசில்தார்களிடம் செல்ல வேண்டிய நிலை இருக்கிறது. ரெவினியூ சம்பந்தப்பட்ட விஷயங்களில் தாசில்தார்களுக்கு உள்ள அதிகாரங்களை பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களுக்குக் கொடுத்துவிட்டால் ரெவினியூ சம்பந்தப்பட்ட விஷயங்கள் காலாகாலத்தில் நடைபெறுவதுடன் அதனால் வசதிகளையும் அதிகமாகச் செய்து கொடுக்க முடியும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

இன்று, மாவட்ட வளர்ச்சிக் கவுன்சிலுக்கு கலெக்டர் தலைவராக இருக்கக்கூடிய ஒரு நிலைமை இருக்கிறது. கலெக்டர் தலைவராக இருப்பதால் நாங்கள் நினைத்ததைச் சொல்ல முடியவில்லை. அது மட்டும் அல்ல, ஏதாவது ஒரு காரியத்தைப்பற்றி கலெக்டரிடம் கேள்வி கேட்டால், பதில் சொன்னாலும் சொல்வார், சொல்லாமலும் போய்விடுவார். ஆகவே, நாம் ஏதாவது சம்பந்தப்பட்ட விஷயங்களைக் கேள்வி கேட்க முடியவில்லை. பாசனத்தைப்பற்றி கவுன்சிலிலே கேட்டு எங்களுக்குச் சொல்லுங்கள் என்று மக்கள் என்னிடம் சொன்னால், நான் அதைப் பற்றி டிஸ்டிரிக்ட் கவுன்சிலிலே கேட்டால், கலெக்டர் அவர்கள் அதைப்பற்றிப் பதில் சொல்லாமல்கூட போய்விடுகிறார். அதைப்பற்றிக் கூட நமது மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த டிஸ்டிரிக்ட் டெவலப்மெண்டு கவுன்சிலைப்பற்றி அவருடைய அனுபவத்தையும் சொன்னார்கள்.

ஆகவே, கலெக்டர் தலைவராக இருப்பதற்குப் பதிலாக, அவர்களுக்குள்ளாகவே, ஒருவரைத் தலைவராகத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்ற நிலையை ஏற்படுத்தினால் சரியாக இருக்கும் என்றும் என்னுடைய அபிப்பிராயத்தைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்று, கல்வியைப் பொறுத்தவரையிலே, பஞ்சாயத்து யூனியனிலே திறக்கப்பட்ட பள்ளிகளுக்கு அங்கீகாரம் கொடுக்கப்படாத நிலை இருக்கிறது. அதோடு, இந்த கல்வி துணை தணிக்கை ஆய்வாளர்களையும் மற்ற விஸ்தரிப்பு அதிகாரிகளைப்போல் பஞ்சாயத்து யூனியனோடு இணைத்தால் மிக நலமாக இருக்கும் என்றும் என்னுடைய கருத்தைச் சொல்லிக் கொள்கிறேன்.

இன்று, பஞ்சாயத்து யூனியன்களுக்கு நிதி ஒதுக்கீடு விஷயத்தில், வருஷ ஆரம்பத்தில் ஒதுக்கப்படாமல், வருஷக் கடைசியில், ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் ஒதுக்கி, மார்ச் மாதத்திற்குள்ளாக அவசரஅவசரமாகச் செலவழிக்கின்ற நிலை இருக்கிறது. இந்த மாதிரி அவசர அவசரமாக செலவழிக்கப்படுவதால், வேலைகள் நல்ல முறையில் நடக்கப்பெறுவதில்லை. அதனால் பணம் விரயமாவதோடு, வேலையையும் திறமையாகச் செய்ய முடியாத நிலை ஏற்படுகிறது. ஆகவே, நிதி ஒதுக்கும்போது அந்த வருஷ ஆரம்பத்திலேயே ஒதுக்க வேண்டுமென்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இன்று பஞ்சாயத்து யூனியன்களிலே இருக்கின்ற ஜீப்புக்கு பெட்ரோல் கொடுக்கும்போது அந்த பஞ்சாயத்து யூனியன் ஏரியாவினுடைய விஸ்தீர்ணத்தைப் பார்த்து பெட்ரோல் கொடுக்கப்படுவதில்லை. 50 மைல் விஸ்தீரணம் உள்ள பஞ்சாயத்து யூனியனுக்கு 300 லிட்டர் பெட்ரோல் செலவழிக்கின்ற நிலைமை இருக்கிறது. ஆனால், 300 மைல் விஸ்தீரணம் உள்ள பஞ்சாயத்து யூனியனுக்கும் 300 லிட்டர் அளவுதான் பெட்ரோல் செலவழிக்கலாம் என்ற நிலைமை இருக்கிறது. ஏரியாவினுடைய அளவில் பெட்ரோல் செலவழிக்கலாம் என்று அவர்களுக்கு அனுமதி இருந்தால்தான் ஏழைகளுக்குச் சேவை செய்வதற்கு உபயோகமாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

இன்றைய தினம் பஞ்சாயத்து யூனியன்களில் சாலைகள் இருக்கின்றன. அந்த சாலைகள் பஸ்களுக்குக்கூட உபயோகமாக இருக்கின்றன. அந்த சாலைகளைப் பராமரிப்பதற்கு பஞ்சாயத்து யூனியன்களுக்குப் போதுமான நிதிவசதி இல்லாத நிலைமை இருக்கிறது. எனவே, அந்தச் சாலைகளை அரசாங்கம் எடுத்துக்கொண்டு பராமரித்தால் அந்தப் பஞ்சாயத்து யூனியன்களுக்குக் கொஞ்சம் சாதகமாக இருக்கும் என்றும் அதைச் செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் அரசினரைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பஞ்சாயத்து யூனியன்களிலே வேலைகள் நடக்கும்பொழுது முன்பு போட்ட மதிப்பீட்டைவிட இப்பொழுது அதிகமாக செலவு ஆகிறது. காரணம், சாமான்களின் விலைகள் எல்லாம் உயர்ந்துவிட்டன என்பதுதான். முன்னால் 3,000 ரூபாயில் செய்ய வேண்டிய வேலையை இன்று செய்வதானால் 5,000 ரூபாய்க்கு மேல் ஆகிறது. ஆனால் பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களுக்கும் பொறியாளர்களுக்கும் 3,000 ரூபாய் வரைதான் செலவு செய்யலாம் என்ற வகையில் அந்த அளவு எஸ்டிமேட்டுக்குத்தான் அனுமதி வழங்கலாம் என்ற நிலை இருக்கிறது. அதை 5,000 ரூபாயாக ஆக்குவதன் மூலம் காலதாமதம் ஆகாமல் வேலைகள் நடப்பதற்கு ஏதுவாக இருக்கும். கிணறு வெட்டுவது போன்ற காரியங்களுக்குக் கமிஷனருக்கு 3,000 ரூபாய் வரைதான் கடன் வழங்க அனுமதி இருக்கிறது. ஆனால், முன்பு 3,000 ரூபாய் செலவான கிணறுக்கு இப்பொழுது 5,000 ரூபாய் செலவாகிறது. ஆனால், பஞ்சாயத்து யூனியன் கமிஷனருக்கு 3,000 ரூபாய் வரைதான் வழங்க அதிகாரம் இருக்கிறது. ஆகவே, அந்தத் தொகையை 5,000 என்று ஆக்கினால், 5,000 ரூபாய் வரை அவர் அனுமதிக்கலாம் என்ற அந்த அதிகாரம் இருந்தால் காலதாமதம்



ஆகாமல் காரியங்கள் நடைபெறும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இப்பொழுது 5,000 ரூபாய்க்கு அனுமதி வாங்க வேண்டுமானால், ஆர். டி. ஓ.வுக்குப் போய், ரெவின்யூ இலாகாவுக்குப் போய் காலதாமதம் ஏற்படுகிற காரணத்தாலே செய்ய வேண்டிய வேலைகளையும் செய்ய முடியாமல் போய்விடுகிறது. ரெவின்யூ இலாகாவினுடைய குறுக்கீடால் பலவிதமாக பஞ்சாயத்து யூனியனுக்கு வரவேண்டிய பணங்களும் குறைந்து விடுகிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

கண்மாய்கள் உள்ள ஒரு சில இடங்களில் மரங்களையும் மற்றவைகளையும் பஞ்சாயத்து யூனியன்களே பாதுகாத்து வந்தாலும்கூட அந்த மரங்களை ஏலம் விடுவதாக இருந்தால், ரெவின்யூ இலாகாவுக்கோ அல்லது தாசில்தாருக்கோதான் அந்த அதிகாரங்கள் இருக்கின்றன. அதனால், பஞ்சாயத்து யூனியனுக்கு ரூ. 5,000, ரூ. 6,000 வரக்கூடிய வருமானத்தைக்கூட ரூ. 400, ரூ. 500 என்று பஞ்சாயத்து யூனியனுக்குத் தெரியாமலே ஏலம் விடக்கூடிய அதிகாரங்கள் ரெவினியூ இலாகாவிற்கு இருக்கிறது. ஆகவே, அந்த மாதிரி அதிகாரங்களை எல்லாம் பஞ்சாயத்து யூனியனுக்கு மாற்ற வேண்டும். பஞ்சாயத்து யூனியன்களுக்கு அதிகமாக அதிகாரங்கள் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, பஞ்சாயத்து யூனியன் தேர்தலைப் பற்றிச் சொல்லுகின்றபொழுது, சென்ற காலத்திலே பஞ்சாயத்து யூனியன் தலைவரை நேரிடையாகத் தேர்ந்தெடுக்காமல் மெம்பர்களால் தேர்ந்தெடுப்பதால், பல கிராமங்களிலே சண்டைகளும் சச்சரவுகளும் ஏற்படுகிறது. அதனால் பெரிய போட்டி, பூசல்களும் கிராமமே இரண்டாக பிரியும் நிலையும் ஏற்படுகிறது. இந்த நிலை மாறுவதற்கு பஞ்சாயத்துத் தலைவர் தேர்தலையும் பஞ்சாயத்து யூனியன் தலைவர் தேர்தலையும் நடத்துகிறபொழுது மக்களே நேரிடையாக அவர்களைத் தேர்ந்தெடுக்கிற வகையில் வழி செய்ய வேண்டுமென்று கூறி முடித்துக்கொள்கிறேன்.

***திரு. ஆ. கருப்பையா :** மாண்புமிகு சட்டமன்றத் துணைத்தலைவர் அவர்களே, இந்த சமுதாய வளர்ச்சி மானியக் கோரிக்கையின்மீது என்னுடைய கருத்தைச் சொல்ல வாய்ப்பளித்தமைக்காக என்னுடைய நன்றியினை துவக்கத்திலே சொல்லிக்கொள்கிறேன்.

இன்று, இந்த மானியக் கோரிக்கையில் கல்விக்காக அதிகப் பணம் ஒதுக்கப்பட்டிருக்கின்றது. அத்துடன், ஹரிஜன மக்களின் நலத்திற்காக வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் ஒன்றும் இதிலே சேர்க்கப்பட்டிருக்கிறது. அதை யாரும் பாராட்டாமல் இருக்க முடியாது. அத்துடன் இன்னும் ஒன்று. 1961–62 முதல் பஞ்சாயத்துக்களுக்கு கொடுத்து வந்த மானிய வசதியையும் முன்னைய அரசு நிறுத்திவிட்டது. இப்பொழுது நமது தமிழக அரசு அந்தத் திட்டத்தை மீண்டும் செயல்முறைக்குக் கொண்டு வந்ததற்காக இப்பொழுது தமிழகத்திலுள்ள 12,407 பஞ்சாயத்துக்களும் இந்த ஏற்பாட்டைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றன என்பதை நான் மிகப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பஞ்சாயத்துக்கள் சரியான முறையில் நடைபெற வேண்டுமானால் அவைகள் கட்சி சார்பற்ற முறையில் செயல்பட வேண்டும். எதிர் வரிசையிலே இருக்கிற காங்கிரஸ் அங்கத்தினர்களும் இதை ஒத்துக்கொள்வார்களானால்தான் இந்த சமுதாய வளர்ச்சித் திட்டத்தை நல்ல முறையில் நடத்த முடியும். இதை விட்டுவிட்டு அவர்கள் எங்கெங்கெல்லாமோ கட்டிக் கொண்டிருக்கும் அரக்கு மாளிகையை இந்த கிராமப்புறங்களிலேகூட கட்ட ஆரம்பித்து விடுவார்களானால் அதன் காரணமாக கிராம வளர்ச்சித் தடைபடும் என்று அவர்களுக்குத் தெரிவித்துக் கொண்டு மீண்டும் அவர்களுக்கு அதை நீடிக்க வேண்டாமென்று கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அரக்கு மாளிகையைக் கட்டுவதனால் அதனுடைய பலன் யாருக்குப் போகப்போகிறது என்பதைப்பற்றிச் சொல்லுகிறபொழுது புராணகாலத்தைத் திரும்பிப் பாருங்கள் என்று உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். ஆகையினால் தான் பஞ்சாயத்துக்கள் கட்சி சார்பற்ற முறையில் நடக்க வேண்டுமென்பதை எல்லோரும் ஒத்துக்கொள்ள வேண்டுமென்று நான் மீண்டும் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பஞ்சாயத்துகளுக்கும், மடம், இனம் என்ற சொத்துக்கள் இருக்கக்கூடிய சில ஊராட்சி மன்றங்களுக்கும் ஸ்டாம்பு டியூடி என்ற பணம் வரவு வராத காரணத்தினால், அவர்கள் லேட் சார்ஜ் கட்டுவதற்குக்கூட வழி இல்லாமல் இருக்கக்கூடிய சூழ்நிலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். அப்படியுள்ள பஞ்சாயத்துக்களுக்கு சர்க்கார் மானியம் கொடுத்து நல்ல முறையில் இயங்கச் செய்ய வேண்டும் அல்லது பக்கத்திலுள்ள வருமானம் வரக்கூடிய பஞ்சாயத்துக்களோடு அவைகளை இணைத்துவிடவேண்டும் என்ற என்னுடைய கருத்தை கூறிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, குடிநீர் பிரச்சினை சம்பந்தமாக, நீண்ட காலமாக சில இடங்களில் குடி தண்ணீர் தட்டுப்பாடு இருந்து கொண்டுதான் வந்து கொண்டிருக்கிறது. குறிப்பாக, ஜூன், ஜூலை, ஆகஸ்டு ஆகிய மூன்று மாதங்களில் எல்லா கிணறுகளும் வறண்டுபோய்விடுகிறது. அந்த நேரத்தில்பெரும்பாலும் தண்ணீர் தட்டுப்பாடு அதிகமாகி விடுகிறது. இதற்காக சர்க்காரிடம் கூட கோவில்பட்டி, கயத்தாறு, கங்கைகொண்டான் ஊர்களுக்கு நீர் கொண்டுவருவதற்கு, தாம்பரபரணியிலிருந்து நீர் கொண்டுவருவதற்கு ஒரு திட்டம் இருப்பதாக அறிகிறேன். இந்தத் திட்டத்தைச் சர்க்கார் உடனடியாக செயல்படுத்தினால், மக்கள் இந்தக் குடிநீர் பஞ்சத்திலிருந்து விடுபடுவார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, வெள்ள நிவாரணத்திற்காக இந்த ஆண்டு பணம் ஒதுக்கி வந்திருக்கிறார்கள். அந்தப் பணம் ராமனாதபுரம், கோவில்பட்டி போன்ற இடங்களுக்குத்தான் கிடைக்கிறது. திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த திருநெல்வேலி தாலூகாவிற்கு இந்தப் பணம் கிடைக்க வழி இல்லை. அங்கு வெள்ள நிவாரணம் தேவையில்லை என்று கருதிவிட்டார்கள் கள் என்று நினைக்கிறேன். திருநெல்வேலி தாலூகாவிலுள்ள பராக்கிரம பாண்டியன் குளம் உடைப்பெடுத்து போக்குவரத்து எல்லாம் பாதிக்கப்பட்டிருக்கிறது. அமைச்சர் அவர்கள் இதற்காக பணம் ஒதுக்கி போக்குவரத்து சாலைகளை சீர்திருத்த வழி செய்து கொடுக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

பணம் ஒதுக்குவது ஜனத்தொகை அடிப்படையில் இருக்கிறது. சில பஞ்சாயத்துக்கள் இன்னும் பஞ்சப் பிரதேசம் என்று கருதப்பட்டு வருகிறது. அதாவது, மானூர் ஒன்றியம், நிலையநல்லூர் ஒன்றியம் ஆகியவைகளை ஆண்டுதோறும் பஞ்சப் பிரதேசம் என்று கூறிக்கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த ஒன்றியங்களுக்கு அதிகமான பணத்தை சர்க்கார் செலவு செய்து ஒரு நல்ல வளம்பொருந்திய இடமாக ஆக்கிக்கொண்டு வருவதற்கு முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இதற்காகத்தான் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கல்லாறு, புனலூராறு, அச்சங்கோவிலாறு ஆகிய திட்டங்களுக்காக இந்த ஆண்டு வேலை துவக்கித் தருவதாக ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். இதைக் கண்டு அந்த வட்டார மக்கள் இந்த அமைச்சரவையை பாராட்டாமல் இருக்க முடியாது. அம்மாதிரி திட்டங்கள் நிறைவேற்றப்படுமானால், ஆண்டுதோறும் பஞ்சப் பிரதேசம் என்று கூறிவந்த நிலைமை மக்களிடையே போய்விடும். அந்த ஒன்றியங்களும் நல்ல வளர்ச்சி பெற ஏதுவாக இருக்கும் என்று இந்த நேரத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, குடிமராமத்து. பஞ்சாயத்துப் பக்கத்திலுள்ள குளங்களையெல்லாம் மராமத்து செய்வது சர்க்கார்தான். ஆனால் அவைகளிலுள்ள மீன் பாசிகளைத் தனி நபர்கள் அனுபவித்துக் கொண்டுதான் இருக்



கிறார்கள். 1958-ம் ஆண்டு சட்டப்படி குடிமராமத்து யார் செய்கிறார்களோ அவர்கள்தான் மீன் பாசியை அனுபவிக்க வேண்டும் என்று இருக்கும் பொழுது, பணம் செலவழித்துக் குளங்களைப் பாதுகாப்பது நாம், மீன் பாசியை அனுபவிப்பது தனி நபர்கள் என்று இருக்கிற முறையை மாற்றி அமைத்து, அதிலிருந்து கிடைக்கும் வருமானம் பஞ்சாயத்துகளுக்குக் கிடைக்க வழி செய்து தருமாறு அமைச்சர் அவர்களை நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அத்துடன் எங்களது திருநெல்வேலி மாவட்டத்தைப் பொறுத்த அளவில் ஒரு பகுதி வளம்பொருந்திய பகுதியாகவும், அதன் வட பகுதி பூராவும் அதிகமாக பாதிக்கப்பட்ட பகுதியாகவும் இருக்கிற காரணத்தினால், அந்தப் பகுதிக்கு அதிகமாக தொகை உதவி செய்து, அந்தப் பகுதியை ஒரு நல்ல நிலைக்குக் கொண்டுவரவேண்டும் என்று நான் இந்த அமைச்சரவையை மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, எங்கள் கங்கைகொண்டானிலுள்ள பராமக்கிரம பாண்டியன் குளம் உடைப்பெடுத்துக்கொண்டதன் காரணமாக நல்ல ரஸ்தாக்களெல்லாம் வெள்ளம் புகுந்து உடைப்பெடுத்து, அதன் மூலமாக அந்தப் பாலம் உடைப்பெடுத்துக்கொண்டு விட்டது. அந்தப் பாலத்தை சீர்செய்வதற்கு ரூ. 40,000 எஸ்டிமேட் போட்டு, அதை ஊராட்சி மன்றம் செய்வதா அல்லது பொதுப் பணித்துறை செய்வதா என்று போட்டி போட்டுக்கொண்டு, இரண்டு ஆண்டுக் காலமாக வேலை செய்யப்படாமல் காலம் கடந்துகொண்டு வருகிறது. உடனடியாக இந்தப் பாலத்தை செப்பனிட்டுத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், இந்தப் பாலம் நல்ல முறையில் இருந்திருக்குமானால் அந்த உடைப்பைக்கூட எங்களால் தவிர்த்திருக்க முடியும். பாலம் நல்ல நிலையில் இல்லாத காரணத்தினால், அதிலுள்ள கழிவு நீர் வரும் ஓடையில் ஏராளமாக தண்ணீர் புகுந்து அதன் காரணமாக ஒரு பக்கத்திலிருந்து இன்னொரு பக்கத்திற்கு போகமுடியாத சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது. அதனால் தான் அந்த உடைப்பை எங்களால் தவிர்க்க முடியாமல் போய்விட்டது என்பதை இந்த மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். காலை 6 மணிக்கு உடைப்பு எடுத்துவிடும் போலிருக்கும்பொழுதே நான் பொதுப் பணித் துறையினருக்கு போன் செய்தேன். உடனடியாக அவர்களும் வந்தும்கூட யாரும் எதுவும் செய்ய முடியாத சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது. தண்ணீரைக் கடந்து அப்பால் போவதற்கு எந்தவிதமான வழியும் கிடையாது. குளத்தில் அந்தக் கரையில் உடைப்பு எடுக்காமல் தவிர்க்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டு விட்டது. ஆகவே இந்தப் பாலத்தை முதலில் கட்டிவிட்டு, குளத்தை அடைப்பது மேல் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, சமுதாயக் கிணறுகள் என்ற பெயரால் சில பஞ்சாயத்துகளில் வெட்டப்பட்டிருக்கும் கிணறுகள் குறைந்த தொகையில் வெட்டப்படும்பொழுது அதனால் மக்களுக்கு பயன் இல்லை. ஏறத்தாழ ரூ.10,000 செலவு செய்து பெரிய கிணறுகளை வெட்டினால்தான், மக்களுக்கு பயன் தரக்கூடிய முறையில் கிணறுகளை வெட்ட முடியும். அதற்காக அவ்வளவு செலவு செய்து கிணறுகள் வெட்டக்கூடிய ஊராட்சி மன்றங்கள் ஒரு சில தான் இருக்கும். ஆகவே, இம்மாதிரி அதிக பணம் செலவு செய்து சமுதாயக் கிணறுகள் வெட்டுவதற்கு பஞ்சாயத்து மன்றங்களுக்கு மான்யமாக பணம் கொடுத்து உதவ சர்க்கார் முன்வரவேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இப்பொழுது இந்த வளர்ச்சி மன்றங்களின் கூட்டங்களுக்கு தலைவர் யாராக இருப்பது என்பதைப் பொறுத்து, ஒவ்வொருவரும் ஒவ்வொரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். நானும் என்னுடைய கருத்தைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன். மாவட்ட ஆட்சித் தலைவரே தலைவராக இருப்பதுதான் மேலாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்,

ஏனென்றால் அந்த ஒரு இடம்தான் கட்சி புகாத இடமாக இருக்கிறது. அதையும் கட்சி புகக்கூடிய இடமாக ஆக்கிவிடவேண்டாம் என்று சொல்லி நான் என்னுடைய சிற்றுரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

***திரு. எஸ். ராமசாமி நாயுடு :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமுதாய நல திட்டங்களைப் பற்றி எனக்குத் தோன்றிய சில முக்கியமான விஷயங்களை மட்டும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கிராம அபிவிருத்திக்காகப் பல துறைகளிலும் ஒதுக்கப்பட்டிருக்கும் பணம் போதாது என்பதுதான் பொதுவான அபிப்பிராயம். நான் ஒவ்வொரு திட்டத்திற்கும் ஒதுக்கியுள்ள பணத்தையும், அது எந்த வகையில் போதாது என்பதையும் சொல்வதைவிட, பொதுவாக எனக்குத் தோன்றிய அபிப்பிராயத்தை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

முதலில் கிராமப் பஞ்சாயத்துக்களைச் சீரமைக்க வேண்டும். அவசர அவசரமாக பஞ்சாயத்துக்களை அமைத்ததன் காரணத்தினால், பஞ்சாயத்துக்களின் எல்லைகளை உரியவாறு அமைக்காமல், ஏதோ அந்தப் பஞ்சாயத்து இருக்கும் ஒரு ஊர் அந்த ரெவின்யூ கிராமத்தில் இருக்கிறதா என்பதை மட்டும் குறிப்பிட்டு, அந்த ஊரை பஞ்சாயத்து ஆக்கியிருக்கிறார்கள். ஒரு பஞ்சாயத்தில் குடியிருப்பவர்களுக்குரிய நிலங்கள் மற்றப் பஞ்சாயத்து ஆட்சியின்கீழ் இருக்கின்றன. ஆகவே, இது சம்பந்தமாக ஒரு குழு அமைத்து, தாலூகா வாரியாக ஒவ்வொரு பஞ்சாயத்திற்கும் நியாயமாக அமைய வேண்டிய எல்லை எதுவென்று பார்த்து, பரிசீலித்து, பஞ்சாயத்துக்களின் எல்லைகளைத் திருத்தி அமைக்கவேண்டியது முதல் வேலை என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஒரு பஞ்சாயத்தில் குடியிருப்பவர்களின் நிலம் அந்தப் பஞ்சாயத்து எல்லைக்குள்ளேயே இருந்தால், கிராமத்திற்கு ஒரு பணி செய்ய வேண்டும் என்று விரும்பினால், அதற்கு உதவியாக வரி விதிக்கும் அதிகாரம் அந்தப் பஞ்சாயத்துக்கு இருக்கிற காரணத்தினால் வரி போட முடியும். அப்படியில்லாமல் இருந்தால், பஞ்சாயத்து எல்லைக்குப் புறம்பாக உள்ள நிலங்களுக்கு வரி விதிக்க முடியாத நிலையில் அந்த வரி விதிப்பின் மூலம் கிடைக்கும் பணம் ரொம்பவும் குறைந்துவிடக்கூடும் என்பதையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதற்காக கிராமப் பஞ்சாயத்து எல்லையைச் சரியானபடி நிர்ணயிக்க வேண்டும். எங்கள் ஊர் பக்கத்தில் ஒரு இடத்தில் ஒரு பர்லாங்கில் இருக்கும் எங்கள் ஊராருடைய நிலம்கூட அடுத்த பஞ்சாயத்தின் எல்லைக்குள் இன்றைக்கு இருந்து வருகிறது என்பதையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சாதாரணமாக இதை மாற்றுவதற்கு இயலவில்லை. சாதாரணமாக மாற்றுவதற்கு இயலாத காரணத்தினால், ஒருமுகமாக அதிகாரிகளை நியமித்து, இதைப் பரிசீலனை செய்து, தொகுப்பாக அந்தந்தக் கிராமத்தார்களுக்கு இருக்கும் நிலங்களை அந்தந்தப் பஞ்சாயத்து எல்லையின்கீழ் கொண்டுவரவேண்டும் என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம், என்னுடைய வேண்டுகோளும் கூட.

ந.ப. 12-00 அடுத்தபடியாக, பஞ்சாயத்துக்களைப் பெரிய பஞ்சாயத்துக்களாக்க வேண்டும் என்ற ஆசையும் பெரிய பஞ்சாயத்துக்களை பிரிக்கக்கூடாது என்ற எண்ணமும் சர்க்காருக்கு இருந்து வருகிறது. அது தவறான யோசனை என்று சொல்ல விரும்புகிறேன். நாட்டிலே இன்றைக்கு இருக்கும் நிலையில், ஒரு ஊருக்குள்ளேயே ஒற்றுமை இல்லாமல் இருக்கும்போது, ஒரு ஊருக்கும், மற்றதொரு ஊருக்கும் இணைப்புச் செய்வது அவ்வளவு நல்லதாக இருக்க முடியாது. ஜனத்தொகை குறைந்த கிராமத்தார்கள், தங்களுடைய நலன்கள் பாதிக்கப்படும் என்று அஞ்சுகிறார்கள். அதையே நகராட்சியிலும் பார்க்கிறோம். ஆகவே, ஒவ்வொரு ஊருக்கும், ஒரு தனிப் பஞ்சாயத்தாகத் தான் இருக்க வேண்டும். அதுதான் நியாயமானதாகவும் இருக்கும். அதுதான் கிராம வளர்ச்சிக்கு உகந்ததாக இருக்கும். அந்த நிலையில் வரி போடுவதாக இருந்தாலும், அந்த மக்கள் சந்தோஷத்துடன் கொடுப்பார்கள். ஒரு பெரிய கிராமத்தோடு இணைக்கப்பட்டிருந்தால், சிறு கிராமத்தைச் சேர்ந்த மக்கள் வரி கொடுக்கவும் தயங்குகிறார்கள். ஆகவே,



ஊர்களுக்கெல்லாம் தனித்தனியாக பஞ்சாயத்துக்கள் இயங்கும் முறையைத் தான் கடைப் பிடிக்க வேண்டும். ஒரு ஊர் தனியாக இயங்கும் சக்தி இருந்தால், தனிப் பஞ்சாயத்தாக ஆக்க வேண்டும் என்று சொல்லவிரும்புகிறேன்.

சமுதாயத் திட்டத்தின் கீழ் செய்யப்படும் பணிகளுக்கு கிராமத்திலிருந்து ஒரு சதவிகிதம் பணம் கொடுக்கப்படுகிறது. இன்றைக்கு இருக்கும் நிலையில் கிராமத்திலிருந்து பணம் கேட்பது நியாயம் இல்லை. சமுதாய நலத் திட்டங்கள் 20 வருஷமாகப் பணியாற்றி வந்ததில், இது வரையில் கிராம மக்கள் கொடுத்து வந்திருக்கிறார்கள். ஆனால், புதிய சட்டத்தின் கீழ் தங்களுடைய நிலங்களுக்கு தாங்கள் செலுத்தும் வரியோடு, கிட்டத்தட்ட ரூபாய்க்கு ரூபாய் ஸெஸ் கொடுக்கிறார்கள். ஒரு ஊரிலே 2,000 ரூபாய் நிலவரி இருக்கிறது என்றால், அந்த ஊரில் ரூ. 2,000 அளவில் ஸெஸும் கொடுக்கிறார்கள், 2,000 கொடுக்கும் கிராம மக்களின் நன்மைக்கு ஏதாவது செய்யும்போது, அந்தப் பணத்தையே அவர்கள் கொடுத்த உதவித் தொகையாகக் கருதிக் கொள்ள வேண்டும். அந்த வகையில் சர்க்காரே ஒரு நியதியை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். ஒரு கிராமத்திலிருந்து ஸெஸ் மூலம் எவ்வளவு பணம் வருகிறதோ, அதை அந்த கிராமத்தின் நிதி என்று அதை ஒதுக்கி வைக்க வேண்டும். ஏதாவது ஒரு வேலை செய்யப் புகும்போது, அத்தகைய நிதியிலிருந்து கிராமத்தாரின் பங்கை ஈடுசெய்து கொள்ள வேண்டும். எந்த வேலையை எடுத்துக்கொண்டாலும், "பங்கு பங்கு" என்று கேட்டுக் கொண்டிருப்பது, நல்லதல்ல. அது அவர்களால் தாங்கக் கூடிய சுமையும் அல்ல. ஒரு சிறு கிராமமாக இருந்தால், அங்கே குடிநீர் வேண்டுமென்றால், அல்லது சாக்கடை வேண்டுமென்றால், அல்லது ஒரு சின்ன ரஸ்தா போடவேண்டும் என்றால், ரூ. 4,000, 8,000 தேவையாக இருந்தால், சர்க்கார் மானியத்தோடு 50 சதவீதம் கிராமத்தார் கொடுக்க வேண்டும் என்றால், ஏற்கனவே அவர்கள் கொடுக்கும் வரிக்கு மேலாக, அவர்களால் கொடுக்க முடியவில்லை. ஆகவே கிராமத்தார் கொடுக்கும் ஸெஸ் பணத்தை "ஸிங்கிங் ஃபண்ட்" என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள், தமிழில் என்ன சொல்வதோ தெரியவில்லை, அப்படி ஏற்படுத்தி, ஒரு நிரந்தரமான நிதியை ஏற்படுத்தி, அந்த ஊரின் பேரில் அதை வரவு வைத்துவிட்டு, சர்க்காரே வரவு செலவைப் பார்த்துக் கொள்ளலாம், ஒரு கிணறு வேண்டும், சாக்கடை வேண்டும் என்றால், அந்தப் பணத்திலிருந்து கொடுக்கலாம். ஒரு சாலையை அமைக்க வேண்டும், பள்ளிக்கூடம் கட்ட வேண்டும் என்றால் அவர்களுக்கு "கேபிடல் எக்ஸ்பெண்டிசர்" என்று பணம் கேட்காமல், மூலதனச் செலவிற்கு அதிலிருந்து எடுத்துக்கொள்ளலாம். ஆகவே, மூலதனச் செலவு என்று வரும்பொழுது, அதற்கென்று கிராமத்தாரிடம் கேட்காமல், இருக்க முடியும். அந்தக் கிராமத்திலிருந்து வசூலிக்கப்படும் பணம் அந்தக் கிராம வேலைக்கே திரும்பவும் வருவதால், கிராம மக்களுக்கும் திருப்தியாக இருக்கும். பணம் கொடுக்கும்போதும், நல்லதொரு வேலைக்கு பயன்படும் என்கிற நம்பிக்கையும் அவர்களுக்கு இருக்கும். ஆகவே, சந்தோஷத்துடன் பணத்தையும் கொடுப்பார்கள். அந்த வகையில் கிராமத்தார் கொடுக்கும் ஸெஸ் பணத்தை அவர்கள் பேரில் வரவு வைத்துக் கொள்ளவும், தேவைப்படும்போது அதிலிருந்து செலவு செய்யவும் சர்க்கார் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

கிராம இணைப்புச் சாலைகளைப் பற்றி இன்றைக்கு நாம் கேட்கிறோம். இணைப்புச் சாலைகள் என்று போடுகிறார்கள். ஆங்கிலத்தில் சொல்வார்கள் "மிஸ்ஸேமர்" என்று, தமிழில் என்ன சொல்வது என்று தெரியவில்லை. அந்த மாதிரி, ஒரு நகரத்திலிருந்து, அல்லது ஒரு பகுதியிலிருந்து வேறு நகரத்திற்கு அல்லது வேறு பகுதிக்கு 10 மைல் ஒரு சாலை போகிறது என்றால், அது ஒரு கிராமத்தின் வழியாகப் போகிறது என்றால் அது கிராம இணைப்புச்சாலை என்று ஆகிறது. இரண்டு பெருஞ்சாலைகளை இணைக்கும்போது, அது கிராமங்களின் மேலே போகிறது என்றால், அதையும் கிராம இணைப்புச் சாலை என்கிறார்கள். அப்படிப் பட்ட சாலைகளை சர்க்காரே சர்க்கார் சாலையாக எடுத்துக் கொள்ள வேண்டும். 10, 15 மைல் சாலைகளை பஞ்சாயத்து ஒன்றியத்திற்குக் கொடுத்தால், அவற்றால் அந்தச் சாலைகளை

பராமரிக்க முடியாத நிலை இருக்கிறது. ஒன்றியத்தில் பணம் இல்லை. இன்றைக்கு சாலை பராமரிப்புககாக கொடுக்கப்படும் 40 காசு போதாது என்று அமைச்சரேக் குறிப்பிட்டார்கள். ஆகவே, சாலை பராமரிப்பு என்று பெரும் சுமையை பஞ்சாயத்து ஒன்றியங்கள் பேரில் சுமத்தியிருககிறோம். இன்னொன்றும் சொல்ல விரும்புகிறேன். கிராமச் சாலைகள் நீளமாக இருந்தால், சர்க்காரே பராமரிபபுக்கு எடுக்க வேண்டும் என்று சொல்லும் போது, ரஸ்தா நன்ருக இருந்தால பேருந்துகள் விடலாம் என்கிறார்கள், பேருந்து விடவேண்டும் என்றால் ரஸ்தா நல்லதாக இருக்க வேண்டும் என்கிறார்கள். ஆங்கிலத்தில் சொல்வார்கள், "விஷஸ் சர்கிள்" என்று. அம்மாதிரி கார்கள் போகவேண்டும் என்றால் ரோடுகள் நன்ருக இருகக வேண்டும். ரோடுகள் நன்ருக இருந்தால கார்கள் விடுவோம் என்று சொல்கிறார்கள். இது எப்படி சாத்தியம் என்று தெரியவில்லை. பெரிய ரஸ்தாக்கள், பெருஞ்சாலையை அல்லது பெரும் நகரத்தை இணைக்கும் சாலை கிராமத்தின் வழியாகப் போனாலும், போகாவிட்டாலும், சர்க்காரே பராமரிப்புக்கு எடுத்துக் கொள்ள வேண்டும என்பதை ஒரு கொள்கையாக வகுகக வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அந்த வகையில் செய்யாவிட்டால் சாலைகள் முதல் தரமான சாலைகளாக ஆக முடியாது.

இன்றைக்கு குடிநீர் வழங்கும் திட்டங்கள் இருக்கின்றன. மேல்மட்டத் தேககம் கட்டிய பிறகும், ஊருக்குள்ளே குழாய்கள் வைத்து சப்ளை கொடுக்க சர்ககார் மானியம் கொடுப்பதில்லை. மேல்நிலைத் தேக்கங்கள் மட்டும் இருக்கின்றன. ஊருக்குள்ளே மக்களுக்குத் தெருத்தெருவாக தண்ணீர் கொடுக்கவேண்டும் என்று கேட்கிறார்கள். கிராம மக்கள் தானே, முன்னே குனிந்து சேந்தியவர்களதானே, கிணற்றில் எடுததுக் கொள்ளட்டும் என்று அலட்சியமாக நாம் இருக்கக் கூடாது. ஆகவே, மேல் நிலை தேக்கம் இருந்தாலும், தண்ணீரைச் சாதரா செய்ய குழாய் மானியத்தையும் அனுமதி கொடுத்து சர்க்கார் உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு மருந்து அகங்கள் இருக்கின்றன, கிராமப்புறங்களில். கிராம டாக்டர்கள் பணி செய்யும் மருந்தகங்களும் இருககின்றன. ஆர்.ஐ.எம்.பி. டாக்டர்களும், இன்னும் மற்றவர்களும் பணி செய்கிறாகள். எல்லாவற்றிற்கும் ஒட்டுமொத்தமாக மருந்துக்கு தொகை ஒதுக்கப்படுகிறது. இன்னும் அலோபதிக் டாக்டர்களையே பார்க்க முடியவில்லை. அப்படி எதாவது இருந்தாலும், கை, கால், நடுங்கும் டாக்டர்களும், அல்லது எங்குமே தங்களுடைய தொழிலைச் செய்ய முடியாது என்கிற டாக்டர்களும் தான் அங்கேயெல்லாம் வருகிறார்கள். நல்ல டாக்டர்கள். வருவதில்லை. காரணம், அவர்களுக்குப் போதுமான ஊதியம், மற்ற வசதிகள் இருப்பதில்லை. இரண்டாவது குடியிருப்புக்கு வசதி இல்லை. மூன்றாவது அப்படி ஒரு டாக்டர் வந்தாலும, ரூ. 5,000-க்கு மட்டுமே மருந்துக்கு என்று செலவழிக்கச் சொல்லுகிறோம. ஆகவே, அவர் நல்ல முறையில் பணியாற்றி, நோயாளிகளுக்கு வைத்தியம் செய்ய முடியவிலலை. மருந்தும் இல்லை, இந்த நிலையில் இருப்பதை மாற்றவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அப்படி மாற்றினாலன்றி வேறொன்றும் செய்ய முடியாது. கிராமத்தில் இருககும் டாக்டர்கள் சரியாக வேலை செய்ய வில்லை என்றால், அவர்களை மாற்றும் அதிகாரம் ஜில்லா மருத்துவ அதிகாரியின் கையில் இருக்கிறது. கிராம டாக்டரை, நல்லவிதமாகப் பணியாற்றவில்லை என்றால், அப்படிப் பட்டவர்களை மாற்றுவது என்றால் அது சாமானியமான காரியமாக இல்லை. மஞ்சள் காமாலை வந்துவிட்டது. முடித்துவிடவேண்டும். எக்ரிமெண்டு செய்துகொண்டு கிராமத்தில் ஒரு டாக்டர் இருந்தால், ஜில்லா மருத்துவ அதிகாரியும் மாற்ற வில்லை என்றால், அப்படிப்பட்ட உபயோகமற்ற மருத்துவ சாலைகளுக்குக் கிராம மக்கள் போவதேயில்லை. அப்படியிருக்கும் மருத்துவ சாலைகளையெல்லாம் பரிசீலித்து, மூடிவிட்டு, எங்கெல்லாம் கிராமத்தார் வேண்டும் என்று கேட்கிறார்களோ, அங்கே நல்ல வகையில் இயங்கும் மருததுவ சாலைகளைக் கொடுதது அதிகாரிகளுக்கும் போதிய ஊதியம் கொடுதது ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். மஞ்சள் விளக்கு வந்துவிட்டதால் குறைத்துக் கொள்கிறேன்.



அமைச்சர் அவர்கள் பேசியபோது, ஔவையார் பாடலொன்றைக் குறிப்பிட்டு, ஆடவர் நல்லவர்களாக இருந்தால் நாடு நன்ருக இருக்கும் என்று சொன்னார்கள். ஔவையார் சொன்ன காலம், பெண்களெல்லாம் ஆடவர்களுக்கு அடங்கிக் கிடந்த காலம். இப்பொழுது பெண்டிரும் ஆடவருக்குச் சரிநிகர் சமானமாக வந்துவிட்டிருக்கிற காலமாக இருக்கிறது. அமைச்சர் அவர்கள் என்ன சொல்ல வருகிறார்கள் என்பது தெரியும். ஆடவரில் ஒரு பகுதி பெண்கள் ஆனபடியால், "ஆடவர்" என்ற சொல் பெண்களையும் குறிக்கும் என்று சொல்லுவார்கள். அதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். அப்படியிருந்தாலும்கூட, அந்த அர்த்தத்திலே அவர்கள் சொல்லவில்லை. பெண்களுடைய நலன் கருதப்பட வேண்டும். கிராமப்புறங்களில் உள்ள பெண்களினுடைய நலன் கருதப்பட வேண்டும். அந்தப் பொறுப்பு தனியாக ஒரு அதிகாரியிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. பெண்களை நாம் நல்ல விதத்தில் முன்னேற்ற வேண்டுமென்றால், பெண்கள் நலனை சமுதாய நலத்துறை அதிகாரிகளிடமே நாம் ஒப்படைக்க வேண்டும் என்பது என்னுடைய எண்ணம். அவர் இஷ்டம்போல் மாற்றுவதும் இவர்கள் ஒன்றுமே செய்ய முடியாமல் இருப்பதும் மிக நல்ல நிலையில் இல்லை என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். சமுதாயப் பணியில் பெண்களுக்கென்று ஏற்பட்டிருக்கும் அந்தத் துறையையும் சமுதாயப் பணி இயக்குநர் அவர்களிடமே ஒப்படைப்பது நலமாக இருக்கும். பெண் அதிகாரி ஒருவர் இருக்க வேண்டும் என்ற எண்ணம் இருந்தால், அவரையும் சமுதாய நல இயக்குநருக்குக் கீழே வேலை செய்யும்படியாக வைத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

கிராமங்கள் நன்ருக இருக்க வேண்டும் என்றால், கிராமப் புறங்களில் உள்ள தலைவர்கள் நல்ல சேவா மனப்பான்மையுடையவர்களாக இருக்க வேண்டும். கனம் உறுப்பினர் திரு. அழகர்சாமி அவர்கள் சொன்னது போல், கிராமத் தலைவர்கள் பஞ்சாயத்து அங்கத்தினர்களுக்கு உட்பட்டவர்களாகவோ, அதிகாரத்திற்குப் பயந்தவர்களாகவோ இருக்கக்கூடாது. ஊராட்சி ஒன்றியத் தலைவர் ஊராட்சி மன்றத் தலைவர்களுக்குப் பயந்தவர்களாக இருக்கக்கூடாது. இவர்கள் இருவரும் புறம்பான அந்தஸ்து பெற்றவர்களாக இருக்க வேண்டும். ஊர்ப் பொது மக்களாலும், பிரதேச பொதுமக்களாலும் முறையே தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாக இருக்க வேண்டும் என்று திரு அழகர்சாமி அவர்கள் சொன்னதை நான் வரவேற்கிறேன். அதைச் செய்ய வேண்டுமென்று எண்ணினோம். அதைச செய்ய முடியவில்லை. அதையும் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

***திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** தலைவர் அவர்களே, கிராமங்களினுடைய வளர்ச்சிதான் தேசத்தினுடைய வளர்ச்சி என்ற கருத்து பல ஆண்டுக் காலமாகவே ஒப்புக்கொள்ளப்பட்டு, கிராம சமுதாயத்தினுடைய வளர்ச்சிக்காக நாம் பெரும் கவனம் செலுத்த வேண்டும் என்ற கருத்தும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. கிராமப்புறங்கள் பல ஆண்டுகளாகக் கவனிக்கப்படாத குறையினாலே, மிகப் பிற்போக்கு அடைந்த நிலையிலே நாட்டினுடைய பொருளாதாரம் பாதிக்கப்பட்டிருந்த காலத்திலே, கிராம வளர்ச்சிதான் நாட்டினுடைய வளர்ச்சிக்கு ஆக்கம் தரும் என்ற கருத்து ஒப்புக்கொள்ளப்பட்டு, திட்டங்களெல்லாம் போடப்பட்டன.

கிராமத்திற்கு அன்று இருந்ததைவிட இன்றைக்கு, கடந்த காலங்களில் அதிகக் கவனம் செலுத்தப்பட்டிருந்தாலுங்கூட, நகர்ப் புறங்களுக்கும் கிராமப்புறங்களுக்கும் செலுத்தப்பட்டிருக்கிற கவனத்தை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, நாம் நினைத்தபடி, நாம் சொல்லுகின்றபடி, கிராமப் புறங்களுக்கு அதிகக் கவனம் செலுத்தப்படவில்லை என்பதைத்தான் நாம் உணர்ந்துகொள்ள முடிகிறது. முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலும் சரி, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் சரி, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் சரி, வரிசையாக எடுத்துக்கொண்டு பார்ப்போமானால், நகரங்களுக்குக் காட்டப்பட்ட உணர்வு, காட்டப்பட்ட பரிவு

கிராமங்களுக்குக் காட்டப்படவில்லை என்பதைத்தான் நாம் உணர முடிகின்றது. அதனுடைய விளைவைத்தான் இன்றைக்கு நாட்டிலே எல்லோரும் சேர்ந்து அனுபவித்துக் கொண்டிருக்கிறோம்.

(திரு. வை. சுவாமிநாதன் தலைமை.)

இதே நிலையில் தொடர்ந்து இன்னும் போய்க்கொண்டிருப்போமானால், நாட்டுப்புறங்களுக்கும் நகர்ப்புறங்களுக்கும் இருக்கின்ற வேற்றுமை அதிகரிக்கும் என்பதையும் நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். பொதுவாக, நம்முடைய மாநிலத்தை எடுத்துக் கொண்டால், மொத்த ஜனத்தொகை 340 லட்சம் இருக்கிறது. அதிலே 275 லட்சம் மக்கள்—அதாவது 80 பர்சண்ட் கிராமப் பகுதிகளிலே—நகரப் பஞ்சாயத்துக்களையும் சேர்த்தே சொல்லுகிறேன்—இருக்கிறார்கள். முனிசிபாலிடி, கார்ப்பரேஷன் பகுதிகளில் 65 லட்சம் பேர்கள் இருக்கிறார்கள். அதாவது 20 பர்சண்ட் இருப்பதாகக் கணக்கிலே சொல்லப்படுகிறது. ஆகவே, இந்த 65 லட்சம் பேர்களுக்கு ஒதுக்கப்படும் தொகையையும், இந்த 275 லட்சம் பேர்களுக்கு ஒதுக்கப்படும் தொகையையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, கிராமப் பகுதிக்கு மிகக் குறைவான தொகைதான் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைச் சபையின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

பொதுவாக, கிராமப்புறங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளாகிய நாங்கள் கிராம மக்களிடத்திலே அணுகும்போது அவர்கள் என்ன கேட்கிறார்கள் என்றால், ரோடு வசதி வேண்டும், குடி தண்ணீர் வசதி வேண்டும், பள்ளிக்கூட வசதி வேண்டும், பாலங்கள் வேண்டும் என்று கேட்கிறார்கள். இப்படிப்பட்ட கோரிக்கைகளைத்தான் அவர்கள் விடுக்கிறார்கள். ஆகவே, அம்மாதிரியான திட்டங்களுக்காக நாம் ஒதுக்கியிருக்கும் தொகையின் கணக்கைப் பார்த்தால், அது மிக மிகக் குறைவானது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில், அர்பன் வாட்டர் சப்ளை, மெட்ராஸ் சிட்டி இரண்டுக்கும் சேர்த்து ஒதுக்கப்பட்ட தொகையில் 1967–68-ம் ஆண்டிலே (ரிவைஸ்டு எஸ்டிமேட்) ரூ. 270 லட்சம் ரூபாய் நாம் செலவழித்திருக்கிறோம். இது குடி தண்ணீர்த் திட்டத்திற்காக. இந்த 1968–69-ம் ஆண்டுக்கு நாம் 210 லட்ச ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். அதே சந்தர்ப்பத்தில், ரூரல் எரியாவில் குடி தண்ணீர் திட்டத்திற்காக நாம் ஒதுக்கியிருக்கும் தொகை, 1967–68-ம் ஆண்டில், 110 லட்சமும், 1968–69-ல் 95 லட்சம் ரூபாயும் ஆகும். ஆக, 20 சதவீதம் ஜனத்தொகையுள்ள பகுதிக்கு 270 லட்ச ரூபாயும், 210 லட்ச ரூபாயும், 80 சதவீதம் ஜனத்தொகையுள்ள பகுதிக்கு 110 லட்ச ரூபாயும், 95 லட்ச ரூபாயும் ஒதுக்கப்பட்டிருப்பதாகக் கணக்கிலிருந்து தெரிகிறது. இதை நபர் வாரியாகக் கணக்கிட்டுப் பார்த்தால், 1967–68-ம் ஆண்டு நகர்ப்புறத்திற்கு நபர் வாரியாக, குடி தண்ணீர்த் திட்டத்திற்காகச் செலவழிக்கப்பட்ட தொகை தலா ரூ. 4·10 ஆகிறது. கிராமப்புறத்திலே இருப்பவர்களுக்குத் தலா 40 காசு செலவழிக்கப்பட்டிருக்கிறது. 1968–69-ம் ஆண்டு கணக்கை ஒப்பிட்டுப் பார்ப்போமானால், நகர்ப்புறத்திற்குத் தலா ரூ. 3·20 ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் கிராமப்புறத்தில் இருப்பவர்களுக்குத் தலா 35 காசு ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது எவ்வளவு பெரிய வித்தியாசம், எவ்வளவ பெரிய ஏற்றத் தாழ்வு என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். கிராமப்புறங்களில் இன்னும் சரியான நீர் வசதி இல்லை. கோடைக் காலத்தில்கூட தண்ணீர் வசதி இல்லை என்று கூறிக்கொண்டிருக்கும்போது, இம்மாதிரி ஒதுக்கப்பட்டிருப்பது மிகவும் வருந்தத்தக்கது என்பது என்னுடைய கருத்தாகும்.

அடுத்தபடியாக, ரோடு வகைகளை எடுத்துக் கொள்ளுவோம். நான்காவது திட்டத்தில் ரோடுகளுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிற ரூ. 23 கோடி தொகையில் கிராமப் பகுதிக்கு 480 லட்ச ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. சென்ற வருஷ பட்ஜெட்டையும், இந்த வருஷ பட்ஜெட்டையும்





ஒப்பிட்டுப் பார்க்கும்போது, நகரப் பகுதிக்காக 1967–68ம் ஆண்டுக்கு 55 லட்சம் 22 ஆயிரம் ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது. 1968–69ம் ஆண்டுக்கு 56 லட்சம் 20 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. 10 சதவீதம் நகரப் புறங்களுக்காக வசதி அதிகரிக்கப்பட்டிருக்கிறது. கிராமப் பகுதிகளை எடுத்துக் கொண்டால், 1967–68ம் ஆண்டுக்கு 50 லட்சம் 68 ஆயிரம் ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், 1968–69-ம் ஆண்டுக்கு 36 லட்ச ரூபாய்தான் செலவழிப்பதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது. ஆகையால், 10 சதவீதம் நகர்ப் புறங்களுக்கு அதிகரிக்கப்பட்டிருக்கும் அதே சமயத்தில், கிராமப் புறங்களுக்கு 30 சதவீதம் குறைக்கப்பட்டிருக்கிறது என்பதைத்தான் நாம் உணருகின்றோம்.

அடுத்தபடியாக, டிடெய்ல்டு பப்ளிக் ஒர்க்ஸ் பட்ஜெட்டைப் பார்த்தால், அதிலே ரோட் ஒர்க்ஸ் என்ற தலைப்பின் கீழ் 1967–68ம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட மொத்தத் தொகை 91 லட்சம் 10 ஆயிரம் 700 ரூபாய். அதிலே 1968–69-ம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூபாய் 84,27,000. அதே சந்தர்ப்பத்தில் டிஸ்ட்ரிக்ட் ரோட்ஸ், பஞ்சாயத்து யூனியன் ரோட்ஸ்க்காக சென்ற ஆண்டு ஒதுக்கிய தொகை 15 லட்ச ரூபாய். ஆனால், இந்த ஆண்டு 8 லட்ச ரூபாயாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. மொத்தத் தொகையில், எட்டு லட்சத்திற்கும் மேற்பட்ட தொகையைக் கிராம ரோடுகளிலே கொண்டு போய்க் குறைத்திருக்கிறார்கள் என்றால், இது 50 சதவீதம் குறைக்கப்பட்டிருக்கிறது.

சமுதாய வளர்ச்சிப் பணியில் கிராம இணைப்புச் சாலைகளுக்கு சென்ற ஆண்டு 108 லட்சம் 41 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த ஆண்டு இணைப்புச் சாலைக்காக ரூபாய் 58,72,000 தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆக, 50 சதவீதம் அதிலேயும் குறைக்கப்பட்டிருக்கிறது.

கிராமப் பள்ளிகளுக்காக சென்ற ஆண்டு 40 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருந்தும் இந்த ஆண்டு குறைவாக ஒதுக்கியிருக்கிறார்கள். இந்த ஆண்டு 28 லட்சம் ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது சென்ற ஆண்டைக் காட்டிலும் 30 சதவிகிதம் குறைக்கப்பட்டிருக்கிறது. கிராமப் புறங்களுக்கு நாங்கள் சென்று அங்குள்ள மக்களைப் பார்த்து, "உங்களுக்கு என்ன குறைகள்?" என்று கேட்கும்போது அவர்களிடத்திலே நாங்கள் என்ன சொல்ல முடியும்? எந்தக் காரியத்தைச் செய்ய முடியும் என்பதை நீங்கள் சற்றுச் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கடந்த ஆண்டுகளில் இருந்ததை அப்படியே பின்பற்றியிருக்கிறோம். கிராமங்களுக்கு அதிகமான நிதியை ஒதுக்கித் தந்து கிராம வளர்ச்சிக்கு அதிகமான கவனத்தைச் செலுத்த வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக விவசாய அபிவிருத்தியைப் பெருக்குவது என்பதெல்லாம் கிராமத்திலுள்ள ரோடு வசதி, மற்ற வசதிகளையும் பொறுத்திருக்கிறது. கிராமங்களில் வயலுக்கு எரு, தழை, உரம் போன்றவற்றை வண்டிகளில் எடுத்துச்செல்ல வேண்டுமென்றால், நல்ல ரோடு வசதி இருக்க வேண்டும். விவசாய அபிவிருத்தி அதிகமாக வளர்ச்சியடையவில்லையென்றால், அதையொட்டிய எல்லா வளர்ச்சிகளும் குன்றிப் போய்விடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் முடிந்துவிட்டன. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது கிராமங்கள் பற்றி அதிக கவனம் செலுத்தி அதிகமான நிதியை ஒதுக்கித் தந்து, நல்ல வசதிகளைச் செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், பஞ்சாயத்துக்களில் இருக்கும் நிதிவசதி நிலைமை மிகமிக மோசமாக இருக்கிறது என்பதைப் பல உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். வண்டி வரி, வீட்டு வரி போன்ற வரிகளை நல்ல முறையில் ஒழுங்காக வசூலிப்பதில்லை. இதனால் பல பஞ்சாயத்துக்களுடைய பொருளாதார நிலை பாதிக்கப்பட்டிருக்கிறது. கிராமங்களிலே இருக்கின்ற வரிகளை

யெல்லாம் துரிதமாக வசூலிக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதனால் பஞ்சாயத்தின் நிதிநிலைமை சீராகும். (மணியடிக்கப்பட்டது.)

**திரு. எம். சண்முகம்:** தலைவர் அவர்களே, சமுதாய வளர்ச்சி—ஊராட்சி வளர்ச்சி மானியத் திட்டத்தின் கீழ் என்னுடைய சில கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நம் நாட்டு மக்களிலே ஆறில் ஐந்து பங்கினராக கிராமங்களில் வாழும் மக்களின் வளர்ச்சியையே நாம் சமுதாய வளர்ச்சி என்று குறிப்பிட்டு அந்தக் கிராம மக்களின் வாழ்வு வளர்ச்சியடைய வேண்டுமென்பதற்காக சமுதாய வளர்ச்சித் திட்டங்களின் பெயரால் அநேக திட்டங்களை நடத்திக் கொண்டு வருகிறோம். சமுதாய வளர்ச்சித் திட்டம் கிராம மக்களுடைய வளர்ச்சித் திட்டத்தில் பெரும் அக்கறை காட்டி வருகிறது என்பதை நாம் அறிகிறோம். சமுதாய வளர்ச்சித் திட்டத்திற்காக, ஊராட்சித் திட்டங்களும், ஊராட்சித் ஒன்றியத் திட்டங்களும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் முடிந்து, தற்போது நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் ஆரம்ப நிலையில் இருந்து வருகிறோம். சமுதாய வளர்ச்சித் திட்டம் மக்களுக்கு எந்த அளவில் பயனைக் கொடுக்க வேண்டுமென்று நாம் எண்ணினோமோ அந்த அளவிற்கு மக்களுக்குப் பலன்கள் ஏற்பட்டிருக்கிறதா என்று பார்த்தால் இல்லையென்றே சொல்ல வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

ஆங்காங்குள்ள மக்கள், மக்கள் நலனுக்காகப் பாடுபட வேண்டுமென்ற நல்ல எண்ணத்துடன், தங்களுக்குத் தேவையான திட்டங்களை தாங்களே ஏற்படுத்திக் கொண்டு, அதற்கான வழிவகைகளைக் கண்டறிந்து, பாடுபடுவதே ஊராட்சித் திட்டங்களின் குறிக்கோளாகும். இன்றைய தினம் ஊராட்சித் திட்டங்களின் பெயரால் நடைபெறும் செயல்பாடுகளும், நிர்வாக அமைப்புகளும் சரியான முறையில் இயங்கவில்லையென்பதையே எடுத்துக் காட்ட விரும்புகிறேன். முற்காலத்தில் பஞ்சாயத்து முறைகள் செவ்வனே செயல்படுத்தப்பட்டு, மக்களுக்கு நல்ல காரியங்களை ஆற்றி வந்தன என்று அறிகிறோம். ஆனால் இன்றைய நிலையில் கிராமங்கள் ஒற்றுமையிழந்த நிலையில், ஒருமைப்பாடு இல்லாத நிலையில், நிர்வாக அமைப்புகளில் ஏற்பட்டுள்ள கோளாறுகளின் காரணமாகத் திட்டங்கள் எல்லாம் சரிவர நிறைவேற்றப்படாமல், குறிக்கோளை அடைய முடியாமல் இருக்கின்ற நிலைமை இருந்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முன்பு கிராமங்களிலே கட்டுப்பாடு திட்டங்கள், ஒருமைப்பாடு திட்டங்கள் இதே ஊராட்சி முறையில் நடந்து வந்ததைப் பார்க்கிறபோது, இன்றைய சட்டமுறைப்படி ஒழுங்கீனங்கள் நடைபெற்று வருகின்ற அளவுக்கு நிர்வாக அமைப்புகளில் குறை ஏற்பட்டிருக்கிறது. இந்தக் குறையைச் சீர்திருத்த வேண்டியது மிகவும் அவசியம் என்பதை வலியுறுத்திக் கூறிக் கொள்கிறேன். அநேகமாக ஊராட்சி ஒன்றியங்களுக்கும், ஊராட்சி திட்டங்களுக்கும் ஏற்படும் செலவினங்கள் மிக்க பயன்தராத நிலையில் நிர்வாக அமைப்புகள் இருந்து வருகின்றன. இன்னும் கிராம மக்களுக்குத் தேவைப்படாத, இந்தத் திட்டங்களுக்குத் தேவைப்படாத அமைப்புகள், அலுவலர்கள் எல்லாம் இந்த வளர்ச்சித் திட்டத்தின் கீழ் இருந்து வருகின்றன என்பதைக் கூறிக் கொள்கிறேன். செலவினங்கள் அதிகமாகியும் மக்களுக்கு நல்ல பயன் தராத நிலை இருக்கிறது. எந்த நோக்கத்தோடு நாம் சமுதாய வளர்ச்சித் திட்டத்தை ஆரம்பித்தோமோ, அந்தப் பலனை மக்கள் அனுபவிக்க முடியாத நிலையில் அதனுடைய அமைப்புகள் இருந்து கொண்டிருக்கின்றன. இந்த அமைப்புகளில் பெரும் சீர்த்திருத்தங்களைச் செய்ய வேண்டியது மிகமிக இன்றியமையாததாகும். நிர்வாக அமைப்புகள், திட்டங்கள் ஆகியவற்றில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனிக் கவனம் செலுத்தி சீர்திருத்தம் செய்ய முன் வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





ஊராட்சி ஒன்றியங்களுக்கு மாநில அரசு தன்னுடைய நிலைமைக்கேற்ப மானியம் வழங்கி வருகிறது. நாம் சமுதாய வளர்ச்சிக்காக மத்திய அரசாங்கத்திலேயிருந்து பெறக்கூடிய மானியம் மிகக் குறைவான அளவிலேதான் இருந்து வருகிறது. சமுதாய வளர்ச்சித் திட்டங்களுக்காக மத்திய அரசு இன்னும் அதிக மானிய உதவியைத் தரவேண்டுமென்பதை நாம் வலியுறுத்திச் சொல்லி, அதிகமான நிதி உதவியைத் பெற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மத்திய அரசிடமிருந்து சில சலுகைகளைப் பெற முடியாத நிலை இன்று ஏற்பட்டிருப்பதை நான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன். இந்த அமைச்சரவை மத்திய அரசிடமிருந்து இன்னும் அதிக அளவில் மானியம் பெறத் தக்க முயற்சிகளை எடுத்துக்கொள்ளும் என்று நம்புகிறேன்.

கிராம வளர்ச்சிக்கும் கிராம நலன்களுக்கும் சாலை அமைப்பு மிக முக்கியம் என்பதை நாம் குறிப்பிட வேண்டிய அவசியமில்லை. கிராம நல வளர்ச்சிக்கும், சமுதாய வளர்ச்சிக்கும் மிகமிக முக்கியமானது சாலை அமைப்பு, குடிநீர் வசதி, கல்வித் திட்டம், சுகாதார வசதிகள் போன்றவைகளாகும். இவைகள் உண்மையிலே நல்ல முறையில் நிறைவேற்றப்பட்டு, கிராம மக்கள் வளம் பெற்றாலொழிய சமுதாயம் வளர்ச்சியடையாது. மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் முடிந்தும் கூட கிராமங்களிலே நல்ல இணைப்புச் சாலைகள் இல்லாத நிலைமை இருந்து வருகிறது. பிற்பகல் 12-30
மூன்றில் ஒரு பங்குதான் நடைபெற்று இருக்கின்றது. ஆகவே, அரசாங்கம் கிராம இணைப்புச் சாலைகளிலே அதிக கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கிராம சுகாதார நிலையைக காப்பதற்கு ப்ரைமரி ஹெல்த் செண்டர்கள் தேவைதான். ஆனால் அவை சரியான முறையில் செயல்படுகின்றனவா என்று பார்த்தால் இல்லை. பல இடங்களில் டாக்டர்கள், நர்சுகள் தங்குவதில்லை. ஆகவே, புதிதாக ஏராளச் செலவில் ப்ரைமரி ஹெல்த் சென்டர்களை ஏற்படுத்திக் கொண்டு போவதைக் காட்டிலும் இருக்கக்கூடியவைகளில் டாக்டர்கள், நர்சுகள் தங்கி நல்ல முறையில் பணியாற்ற ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி இல்லாவிட்டால் யாதொரு பயனும் கிடைக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பல கிராமங்களில் குடிதண்ணீர் வசதி கிடையாது. குட்டை, குளங்களில் உள்ள நீரைக் குடித்து வருகிறார்கள். அப்படிப்பட்ட இடங்களில் உடனடியாகக் குடிதண்ணீர் வசதிக்கு ஆவன செய்ய வேண்டும், அதிகமான தொகை ஒதுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப் பகுதியில் வாழ்கின்றவர்கள் விவசாய மக்கள். அவர்களுடைய கால்நடைகளுக்கு வைத்தியம் செய்வதற்கும், அவற்றை அபிவிருத்தி செய்வதற்கும் போதுமான வசதிகள் செய்து தரப்பட வேண்டும். கடந்த 3 ஐந்தாண்டுத் திட்டங்களில் கால்நடைகளின் அபிவிருத்திக்காகப் பல திட்டங்களை ஏற்படுத்தியிருந்தாலும் கிராமங்களில் எந்தவிதமான வசதியும் இல்லை. முற்காலத்தில் மேய்ச்சல் புறம்போக்கு என்று இருந்தது. இப்போது அவை எல்லாம் விவசாய நிலமாக ஆக்கப்பட்டுவிட்டது. மேய்ச்சல் நிலம் ஒதுக்குவதற்கும் ஆவன செய்ய வேண்டும். கால்நடை மருத்துவ மனைகள் போதுமானதாக இல்லை. 354 இடங்களில்தான் நம்முடைய மாநிலத்தில் நடைபெறுவதாகக் கூறப்பட்டிருக்கிறது. இன்னும் பல இடங்களில் ஏற்படுத்தித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கல்வித்துறையை எடுத்துக் கொண்டால் கீழ்நிலையில் உள்ள குடும்பங்கள், மத்தியதரக் குடும்பங்களைச் சேர்ந்த மாணவிகள் தங்கள் ஜீவனத்திற்கு ஒரு தொழிலைத் தேட வேண்டியே படிக்கிறார்கள். ஆகவே தொழில் துறைப் பயிற்சிப் பள்ளிகளை அமைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். சிறுபாசனத் திட்டங்கள் இப்போது குடிமராமத்தில் செய்யப்படுவதில்லை. கிராம மக்களின் உழைப்புச் சக்தித் திட்டம் 375 கிராமங்களில் இயங்கி வருவதாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. தற்போது மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் ஏற்படுத்தியுள்ள சீரணித் திட்டத்தை இதோடு

இணைத்து நிர்வாகத்தை ஒழுங்குபடுத்தினால் ஒவ்வொரு கிராமமும் நன்மை அடைவதற்கு பயன்படும் என்றுப் சொல்லிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

*திரு. பி. எஸ். தனுஷ்கோடி : தலைவர் அவர்களே, 1968–69-ஆம் ஆண்டுக்கான சமுதாய, ஊராட்சி, நகராட்சி மன்ற மானியக் கோரிக்கைகளின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். ஊராட்சி மன்றங்கள், நகராட்சி மன்றங்கள், பஞ்சாயத்து ஒன்றிப்புகள் இவைகளுக்கு அதிக அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டுமென்று நான் கருதுகிறேன். அடுத்தபடியாக ஊராட்சி மன்றங்களில் குளங்களுக்குக் காவல் போடுவதற்கு ஒரு அலுவலருக்கு 10 ரூபாய் கொடுக்க வேண்டுமென்றாலும் மாவட்ட ஆட்சியாளரிடம் இருந்து அதிகாரம் பெற்றே செய்ய வேண்டியிருக்கிறது. அவர்களுடைய அதிகாரம் வருவதற்கு பல நாட்களாகின்றன. அப்படிச் சம்பளம் கொடுக்கப்பட்டாலும் ஆட்சேபணைகள் வருகிறது. இதுபோன்ற சிறு காரியங்களையாவது அவர்கள் செய்துகொள்வதற்கு அதிகாரம் உடனடியாக வழங்கப்பட வேண்டும்.

அடுத்தபடியாக, இன்றையதினம் நாடு பூராவும் ஒரு பீதி இருக்கிறது. சமுதாய நல வளர்ச்சித் திட்ட வேலைகள் ரெவின்யூ இலாக்காவிடம் ஒப்படைக்க இருக்கிறது என்கிறார்கள். அப்படி இருந்தால் சமுதாய வளர்ச்சித் திட்டங்களினால் பயன் ஏற்படாது போய்விடும். எப்படிக் கால்நடை அபிவிருத்திக்கு தனி இலாக்கா செயல்படுகிறதோ, விவசாய அபிவிருத்திக்குத் தனி இலாக்கா செயல்படுகிறதோ அதுபோல சமுதாய நலத் திட்டத்திற்கும் தனி இலாக்கா தான் இருக்க வேண்டும். ஆகவே ரெவின்யூ இலாக்காவுடன் சேர்க்கின்ற யோசனை இருக்குமானால் அதைக் கைவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காங்கிரஸ் ஆட்சியில் பஞ்சாயத்துகளுக்கு அதிக வருமானம் வர வேண்டும் என்பதற்காகக் குளங்களை எல்லாம் பஞ்சாயத்துகளிடம் ஒப்படைத்தார்கள். ஆனால் ரெவின்யூ இலாக்காவினர்—அந்தக் குளங்களை பஞ்சாயத்துகள் ஏலத்திற்கு விடப் போகிறபோது—அது தனிப்பட்டவர்களுக்குச் சொந்தம் என்கிறார்கள். உதாரணமாகக் கூற வேண்டுமானால் பாங்கல் பஞ்சாயத்தினிடம் விதைவிடக்கூடிய குளம் ஒப்படைக்கப்பட்டது. அதை ஏலம் விட முடியாதபடி ரெவின்யூ அதிகாரிகள் தடுத்திருக்கிறார்கள். இப்படித் தனியார் அனுபவிக்கவிட்டால் வருமானம் எப்படிப் பெருகும் ? அதுபோலவே பஞ்சாயத்தினிடம் ஒப்படைக்கப்பட்ட புறம்போக்கு நிலத்தை தனியார் ஆக்கிரமித்திருக்கிறார்கள். அந்த ஆக்கிரமிப்பை அகற்ற வேண்டுமென்று ரெவின்யூ அதிகாரிகளிடத்தில் சொல்லியும் யாதொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதனால் விவசாயப் பெருங்குடி மக்கள் களம் இல்லாது ரோடில் போட்டுக் கொண்டு தானியங்களை அடிக்கிறார்கள். இதுபோன்று இல்லாமல் தனியார் ஆக்கிரமிப்பு எங்கிருந்தாலும் அவை உடனடியாக அகற்றப்பட நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, பஞ்சாயத்து யூனியன்களின் ரோடுகளை எடுத்துக் கொண்டால் செல்வாக்கும், வசதியும் உள்ளவர்கள் தங்களுடைய நன்மைக்காக பணம் கொடுக்க முன்வருகிறபோது—அந்த இடங்களில் ரோடுகள் போடப்படுகின்றன. உதாரணமாக கீவளூர் பஞ்சாயத்து யூனியன் வலிவலம் எஸ்டேட்டைச் சுற்றியுள்ள ரோடுகள் எல்லாம் போடப்பட்டு இருக்கின்றன. பக்கத்து கண்ணப்பூர், ஆந்தக்குடி போன்ற கிராமங்களில் சிறு நிலக்காரர்கள் தான் இருக்கிறார்கள். அங்கே ரோடுகள் போடப்படவில்லை. தங்களுடைய தானியங்களை களத்து மேட்டில் இருந்து கொண்டுவரக்கூட முடியாத நிலையில் கஷ்டப்படுகிறார்கள். பங்குத் தொகை கொடுக்க வேண்டுமென்று கேட்டால் அவர்களால் பங்குத் தொகை கொடுக்க முடியவில்லை. இப்படிப்பட்ட கிராமங்கள் இருக்கின்றன. இந்த ஏற்றத் தாழ்வை இன்றைய தினம் போக்க வேண்டுமானால் பின் தங்கிய ஏரியாக்க





ளுக்குப் பண உதவி செய்து மக்கள் குறைந்த அளவிலே பங்குத் தொகையைக் கொடுப்பதற்கான வழிவகைகள் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சமுதாய வளர்ச்சிக் திட்டத்தின் மூலம் பணம் வீணாகச் செலவாகிக் கொண்டிருக்கிறது. உதாரணமாக மாதர் இலாக்கா என்று ஒரு இலாக்கா இருக்கிறது. முன்னாளைய காங்கிரஸ்கட்சிக்காரர்கள் இந்த மாதர் இலாக்காவை எந்தக் காரணத்திற்காகக் கொண்டுவந்தார்களோ தெரியாது. அவர்கள் என்ன வேலை செய்கிறார்கள் என்று பார்த்தால் கிராமங்களில் உள்ள பெண்களைக் கூப்பிட்டு வைத்து தோசை சுட்டுக் காண்பிப்பது, பலகாரம் செய்து காண்பிப்பது இப்படித்தான் பல லட்சக் கணக்கான ரூபாய்களை வீணாக்கிக் கொண்டிருக்கிறார்கள். இதற்காக ஒரு இலாக்கா தேவையா ? கிராமப் பெண்களுக்கு சோறு பொங்கத் தெரியும், தோசை சுடத் தெரியும், பலகாரங்கள் செய்யத் தெரியும். ஆகவே அதற்கு ஒரு இலாக்கா தேவையில்லை. எனவே அதை எடுத்துவிட்டு அதற்கு செலவழிக்கக்கூடிய பணத்தை விவசாய உற்பத்திக்கும், மருத்துவ வசதிக்கும் பயன்படுத்திக் கொள்வதற்கு முன் வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அங்கே அந்த வேலையில் இருப்பவர்களுக்கு மாற்று வேலைகள் கொடுக்கவேண்டும் கிராம சேவகிகளுக்கு ஆசிரியர் பயிற்சி கொடுத்து அவர்களை ஆசிரியர்கள் வேலைக்கு அனுப்பக்கூடிய முறையில் மாற்று வேலைகள் கொடுக்க முடியும். அதற்கான முயற்சியை அரசாங்கம் மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சமூகக் கல்வி நிலையங்கள் இருக்கின்றன, அவற்றில் பல கிராமங்களிலே செயல்படவே இல்லை. அதற்காகச் செலவழிக்கக்கூடிய தொகையை வேறு மாற்று அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஒதுக்கலாம் என்று கூறிக்கொள்கிறேன். தையற் கலைக்காக ஆயிரக்கணக்கான, லட்சக் கணக்கான ரூபாய்கள் செலவழிக்கப்படுகின்றன. எந்தப் பஞ்சாயத்திலும் தையற் கலை நடக்கவில்லை. பல இடங்களில் மெஷின்கள் தூங்கிக் கொண்டிருக்கின்றன. ஆகவே அதற்காகச் செலவழிக்கின்ற ரூபாயை மாற்று அபிவிருத்தி வழிகளில் செலவழிக்க வேண்டும். இப்படிச் செலவழிக்கின்ற ரூபாயை கால்நடை வளர்ச்சி இருக்கிறது, அது நல்ல முறையிலே செயல்பட வேண்டுமானால் விரயமாகச் செலவழிக்கப்படுகின்ற பணத்தை இதற்குச் செலவழிக்கலாம். கிராமப் புறத்தில் இருக்கக்கூடிய விவசாயத்தில் ஈடுபட்டிருக்கின்ற மக்கள் வைத்திய வசதியில்லாமல், அதற்காக நகரப் பகுதிகளுக்கு வேலை காலத்தில்போக வேண்டியிருக்கிறது. ஆகவே, அப்படியில்லாமல் கிராமப் புறங்களிலே அவர்கள் மருத்துவ வசதியைப் பெறக்கூடிய முறையில் மருத்துவமனைகள், தாய்சேய் நல விடுதிகள் ஏற்படுத்த முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிப்பட்ட தொகைகளை முனிசிபாலிடிகளுக்கும் ஒதுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சாக்கடைகள் நாற்றம் எடுத்து அவை வியாதிகளை ஏற்படுத்தக்கூடிய நிலைமை இருப்பதால், முனிசிபாலிடிகள் அவற்றை நல்லமுறையில் வைத்திருப்பதற்கேற்ற முறையில் அந்தத் தொகையைப் பயன்படுத்தலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திருவாரூரில் ரயில்வே காலனி இருக்கிறது. அங்கே பள்ளிக்கூடம் இல்லை. அது அமைச்சர் அவர்களுக்கும் தெரியும். அந்தக் காலனியைச் சுற்றி ரயில்வே லைன்கள் ஓடிக் கொண்டிருக்கின்றன. குழந்தைகள் பள்ளிகளுக்கு போய்வருவதற்குக் கஷ்டமாக இருக்கிறது. அரசியல் காரணத்திற்காகவோ என்னவோ பள்ளிக்கூடம் ஏற்படுத்தப்படாமல் இருக்கிறது. திருவாரூர் முனிசிபாலிட்டிக்கு 7,300 ரூபாய் வருமானம் கிடைக்கிறது. ரயில்வேயிலிருந்து தண்ணீர், லைட் எல்லாம் கொடுக்கிறார்கள், பெருக்கக்கூடிய சிப்பந்திகள் ரயில்வேயிலிருந்து கொடுக்கிறார்கள். ரயில்வேயிலிருந்து முனிசிபாலிட்டியில் வருமானத்தை வாங்கிக் கொள்கிறார்கள், ஆனால் ஆரம்பப் பள்ளிக்கூடம் வைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. திருவாரூர் முனிசிபாலிட்டியைச் சேர்ந்த நகரசுத்தித் தொழிலாளர்கள் கோயில் மனைகளில் குடியிருக்கிறார்கள். பல வருஷங்களாகக் குடியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட

[திரு. பி. எஸ். தனுஷ்கோடி] [1968 மார்ச் 13

நகரச்சுத்தித் தொழிலாளர்களுக்கு முனிசிபாலிட்டியிலிருந்து லைட் வசதி கொடுக்கப்பட்டிருக்கிறது, ஆனால் நடைபாதை வசதி கிடையாது. அடங்கலில் இருக்கக்கூடிய பாதையை அடைத்துவிட்டார்கள். ரெவின்யூ இலாகா விடம் கேட்டால் மாவட்ட ஆட்சித் தலைவர் அதிகாரம் வழங்கவேண்டு மென்று சொல்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவரைக் கேட்டால் மாநில அரசாங்கத்திற்குக் கேட்டிருக்கிறோம் என்று சொல்கிறார்கள். இந்த மாதிரி அதிகாரங்களைக் கமிஷனருக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்தால்தான் சாதாரண மக்களைப் பாது காப்பதற்கும் அவர்களுக்கு வேண்டிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுப் பதற்கும் முடியும்.

பஞ்சாயத்திலிருந்து மர மகசூல் வருமானம் நெடுஞ்சாலை இலாகாவிற்கு வருகிறது. என்னுடைய பஞ்சாயத்திலேயிருந்து மர மகசூல் சம்பந்தப் பட்ட வரையில் 130 ரூபாய் கொடுக்கிறேன். 1,411 ரூபாய் வரையில் வருமானம் வந்திருக்கிறது. அந்த வருமானத்தைக் கொண்டுதான் பஞ்சாயத்தில் உள்ள அபிவிருத்தி வேலைகளைச் செய்ய முடியும். பொதுப் பணித் துறையிலிருந்தும் நெடுஞ்சாலை இலாகாவிலிருந்தும் பட்டுப் போன மரங்களையும், உலர்ந்து போன மரங்களையும் பஞ்சாயத்துகளிடம் ஒப்படைத் தால் உடனடியாக அவற்றை ஏலத்திற்கு விட்டு பஞ்சாயத்து வருமானத்தை எடுத்துக் கொண்டு பல அபிவிருத்தி வேலைகளைச் செய்ய முடியும், அப்படிக் கொடுக்க மறுக்கிறார்கள். ரெவின்யூ இலாகா சம்பந்தப் பட்ட மரங்கள் பூராவையும் பஞ்சாயத்துக்களுக்குக் கொடுத்தால் பஞ்சாயத்தின் வருமானம் பெருகுவதற்கு உதவியாக இருக்கும். ராதாநல்லூர் என்ற கிராமத்தில் ரெவின்யூ அதிகாரிகள் மரம் ஏலம் போட்டார்கள். அவர்கள் ஏலம் போடுவதாகச் சொல்லி பிறகு அதிகமாகப் போகும் என்று சொல்லி ஏலம் போட மறுத்துவிட்டார்கள். ஏலம் போடாவிட்டால் பணம் விரயமாகிறது, ஆகவே ஏலம் போடுங்கள் என்று நான் சொன்னேன். அதற்குப் பிறகு ஏலம் விடப்பட்டு 54 ரூபாய்க்குத் தான் போயிற்று. இப்படியெல்லாம் பொதுச் சொத்து விரயம் ஆக்கப்படாமல் ஏலம் விடுவதற்கு வழி செய்யவேண்டும். பஞ்சாயத்து ஒன்றியங்களில் வேலை செய்கிறவர்கள் 19 பேர்கள். கடைநிலை ஊழியர்கள், டைப்பிஸ்ட்டுகள், கேஷியர் இவர்களுக்கு எல்லாம் தினப்படி 1·25 லிருந்து 3·50 வரையிலே தான் பல வருஷகாலகாக இருக்கிறது. இதை உயர்த்திக் கொடுக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களையும் சர்க்கார் ஊழியர் களாக ஏற்றுக்கொள்ள வேண்டும். அவர்களுக்கு பென்ஷன் வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும். மாற்றுதல் செய்வதற்கு அதிகாரம் உண்டு என்று சர்க்கார் உத்திரவிட்டிருக்கிறது. ஊழியர்கள் மாற்றுதல் விரும்பிக் கேட்டால் பஞ்சாயத்து ஒன்றியங்கள் அனுமதித்தால்தான் மாற்ற முடியும் என்று இருக்கிறது. இல்லை யென்றால் மாற்ற முடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே ஊழியர்கள் விரும்பிக் கேட்டால் அவர்கள் மாற்றுதல் பெறுவதற்கு அதிகாரம் கொடுக்கக்கூடிய முறையை ஏற்படுத்த வேண்டும். நான் இந்தப் புதிய அரசை ஒன்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். ரெவின்யூ இலாகாவோடு வட்டார வளர்ச்சியை இணைக்காதீர்கள். வட்டார வளர்ச்சி நல்ல முறையில் செயல்பட வேண்டுமானால் ஒரு குறிப்பிட்ட பகுதியை அதிலிருந்து எடுத்துவிட வேண்டும். கால்நடை வளர்ச்சிக்கும் ரெவின்யூ இலாகாவிற்கும் தனித்தனி அதிகாரிகள் இருக்கிறார்களே அதைப்போல வட்டார வளர்ச்சிக்கும், ரெவின்யூ இலாகாவிற்கும் தனித்தனி அதிகாரிகள் இருப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு க. இராமமூர்த்தி :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த மானியத்தின்மீது என்னுடைய கட்சியின் சார்பாக கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணையை வலியுறுத்தி என்னுடைய சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். இன்றைய தினம்



1968 மார்ச் 13] [திரு. க. இராமமூர்த்தி]

இந்தப் பஞ்சாயத்து ஒன்றியங்கள், நகராட்சி மன்றங்கள் இவற்றைப் பொறுத்தவரையில் காந்தியத் திட்டத்தின் அடிப்படையில் மிக விரிவாக தெளிவாக நல்ல முறையிலே மக்கள் நேரடியாக ஆட்சிப் பொறுப்பினை ஏற்றுக்கொள்கின்ற முறையிலே, நாட்டு நடவடிக்கை களிலே தங்கள் தேவைகளை மக்கள் தாங்களாகவே பூர்த்திசெய்து கொள்ளுகின்ற அளவிலே தங்களுடைய கடமைகளைச் செய்கின்ற நிலையாக, ஒவ்வொருவரும் தங்களுடைய பங்கை உணர்கின்ற நிலையாக பஞ்சா யத்து ஒன்றியங்கள் தமிழகத்திலே செயல்பட்டு வருகின்றன இவற்றில் பல குறைகள் இருந்தாலும் நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையிலே, நாம் பெருமையோடு சொல்லிக்கொள்ளலாம் - மிக நல்ல முறையிலே, மேன்மையான முறையிலே சிறப்பான முறையிலே நடைபெற்று வருகிறது. மக்கள் அதில் ஊக்கமும் ஆக்கமும் காட்டி வருகிறார்கள் என்பதை அறிவோம்.

அதே நேரத்திலே, மற்றவர்களை விடச் சிறப்பாக இருக்கிறோம் என்றாலும், நம்மிடம் இருக்கும் குறைகளையும் திருத்திக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம். இந்தத் துறையை ஏற்றிருக்கிற அமைச்சர் அவர்கள், இந்தத் துறையிலே செய்ய வேண்டிய சீர் திருத்தங்கள் மாற்றங்கள் ஆகியவற்றைப் பொறுத்தவரை தைரியமாக முன் வந்து, எல்லா மாறுபட்ட கட்சியினரையும், அரசியல் மாறுபாடு கொண்ட வர்களையும் அழைத்து, எப்படித் திருத்தி யமைக்க வேண்டுமென் பதற்காக அவர்களுடைய கருத்துக்களையும் அறிந்து இதை மாற்றி யமைக்க வேண்டுமென்ற முறையில் இந்தக் காந்தியத் திட்டத்திலே தங்களுடைய நம்பிக்கையை, எண்ணத்தை உறுதியாக்கிக் கொண்டு செயலாற்றி வருவதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்தில் இந்தத் திட்டத்தில் அடிப்படையாகச் செய்ய வேண்டிய மாற்றங்களைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன்.

இன்றையதினம் நகராட்சிகளைப் பொறுத்தவரை அங்கு பணி புரிகின்ற ஊழியர்களுடைய நிலையை அவை முன் வைக்க விரும்புகிறேன். அவர்களைப் பொறுத்தவரை அரசாங்கத்திலே நேரடியாகப் பணி புரிகின்ற ஊழியர்களுக்கு இருக்கின்ற பாதுகாப்பு, அவர்களுக்குத் தரப்படுகின்ற சம்பள உயர்வு பல ஆண்டுக் காலம் பணி செய்து விட்டு நகராட்சிகளில் இருந்து ஓய்வு பெறும் நேரத்தில் ஓய்வூதியம் பெற முடியாத நிலை, அத்தனையும் இல்லாத நிலையிலே தான் அவர்கள் பணி புரிய வேண்டியிருக்கிறது. இந்த நிலை மாற்றியமைக்கப்பட வேண்டும். அவர்கள் நகராட்சியில் வேலை செய்தாலும் கூட, அவர்களும் அரசின் ஒரு அங்கமாக, அவயமாகப் பணியாற்றுகிறார்கள். அவர்களுடைய நல்வாழ்வில் இந்தத் தமிழகம் முழுமையும் அக்கறை கொண்டிருக்கிறது. இந்த அரசு அக்கறை கொண்டிருக்கிறது என்பதைக் காட்டும் வகையில் அரசு ஊழியர் களுக்குக் கொடுக்கும் ஊதிய விகிதங்களையும், மற்றச் சலுகைகளையும் அவர்களுக்கும் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த மானியத்தைப் பொறுத்தவரை கிராமப் புறங்களிலே இருக்கக்கூடிய பள்ளிக்கூடங்களைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. கிராமப் புறப் பள்ளிக்கூடக் கட்டடங்களுக்காக ஆறாயிரம் முதல் பன்னிரண்டாயிரம் ரூபாய் வரை எஸ்டிமேட் என்ற அளவிலே தொகை கொடுக்கப்படுகிறது. அன்று இருந்த சூழ்நிலையில் ஆறாயிரம் ரூபாய் போதும் என்றால் இன்று, ஆண்டுக்கு ஆண்டு அதே அளவு கட்டடத்தைக் கட்டும் செலவு அதிகமாகிக் கொண்டி ருக்கும் நிலையில் அந்தத் தொகையை உயர்த்திக் கொடுக்க வேண்டும். அவ்வாறு பள்ளிக் கட்டடங்களை அமைக்கும்போது நல்ல முறையில், விரிவான அளவில் அமைத்துக் கொடுத்தால் கிராம மக்கள் கல்வி பெறுவதற்கு வசதியாக இருக்கும்,

பஞ்சாயத்துப் பெருமன்றங்களைப் பொறுத்தவரை சீர்திருத்தி மாற்றியமைக்க வேண்டுமென்ற முறையிலே பெருமளவில் விவாதிக்கப் பட்ட முருகேச முதலியார் அவர்களுடைய அறிக்கையைப் பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது. பஞ்சாயத்து முறையிலே மாற்றங்கள் செய்யும்போது மிகக் கவனமாகச் செய்ய வேண்டும். அதிலே மாற்றங்கள் செய்யும்போது அந்தத் துறையிலே உள்ள ஊழியர்கள் வேலை இழக்கின்ற நிலைமை ஏற்படக் கூடாது என்பதுதான் எங்களுடைய பயம். இதைத் திரும்பத் திரும்ப வலியுறுத்திச் சொல்லிக் கொண்டு வருகிறோம். இதை வெறும் அட்மினிஸ்ட்ரேடிவ் பிராப்ளமாகக் (Administrative problem) கருதாமல் ஹியூமன் ப்ராப்ளமாக (Human problem) அணுக வேண்டுமென்பதோடு அவர்கள் வேலை இழக்க மாட்டார்கள் என்பதற்கு அமைச்சர் அவர்களிடமிருந்து உறுதியையும் இந்த நேரத்தில் எதிர்பார்க்கிறேன்.

கிராமப்புற வேலைகளைப் பொறுத்தவரை பெரிய சாலைகளோடு இணைக்கப்படுகின்ற கிராமப் பாதைகளைப் (லிங்க் ரோட்ஸ்) பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. அதற்காக ஒதுக்கப்பட்ட நிதியும் ஏனோ இந்த ஆண்டு குறைந்திருக்கிறது. நடைமுறைக்கு வருகின்ற நேரத்தில் அதை உயர்த்துவார்கள் என்று நினைக்கிறேன். இன்றைய தினம் கிராமங்களைப் பொறுத்தவரை லிங்க் ரோட்ஸ் ஹைரோடுகளை விட மிக அவசியமாக இருக்கிறது. இன்றைய தினம் நம்முடைய அரசும், மத்திய அரசும் விவசாயத்திற்கு அதிகமான முக்கியத்துவத்தைத் தருகிறது. அந்த நிலையில் கொள்முதல் செய்வது ஒரு எக்கர் வைத்திருக்கக்கூடிய விவசாயி வரை விஸ்தரிக்கப்பட்ட நிலையில், கரும்பு விளைச்சல் பெருகி வரும் நிலையில், மணிலா அதிகமாக விளைந்து வரும் நிலையில், கிராமப்புற சாலைகளைத் துரிதமாக, வேகமாகச் சீர்படுத்துவது அவசியமாகிறது. ஆகவே, இதற்கான நிதி ஒதுக்கீட்டை அதிகரித்து கிராமப்புற ரோடுகளைச் சீர்திருத்தி அமைப்பதில் கவனம் செலுத்த வேண்டும்.

என்னுடைய தொகுதியான திண்டிவனம் வட்டத்தில் பல ரோடுகள் ரெயில்வே செஸ் ரோடுகள் என்பதாகச் சொல்லி, அதற்கான பணம் ரெயில்வே செஸ் நிதியிலிருந்து வரும் என்று சொல்லி அந்த ரோடுகளைப் போடாமலே இருந்தார்கள். அந்த ரோடுகள் இன்றையதினம் ரெயில்வே செஸ்ஸில் இருக்கிறதா அல்லது பி. டபிள்யூ. டி. (ஆர். டி.) என்று வைத்திருக்கிறார்களே அதில் இருக்கிறதா என்று தெரியவில்லை. அந்த ரோடுகளில் ஏதோ நடந்து போகலாமே தவிர, இரட்டை மாட்டு வண்டி கூட போக முடியாத நிலையில் இருக்கின்றன. சிறு மழை பெய்தால் கூட உளை விழுந்து ஆட்களையே தூக்கி விட வேண்டிய நிலை ஏற்படுகிறது. அப்படிப்பட்ட நிலையில் நெடிமோழியனூர் என்ற கிராமம் இருக்கிறது. சென்னை—திருச்சி ரோடில் இணைக்கின்ற பாதையாக இருக்கும் இந்த ரோட்டைச் செப்பனிட வேண்டுமென்று பல முறை வலியுறுத்தியும்கூட இன்றளவும் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படவில்லை. அந்த ரோடு பஞ்சாயத்து யூனியன் பொறுப்பிலே இருக்கின்றதா என்பதைக் கூடப் புரிந்து கொள்ள முடியவில்லை.

இன்றைய தினம் பஞ்சாயத்துக்களிடம் புறம்போக்கு நிலங்கள் ஒப்படைக்கப்படுகின்றன. அவ்வாறு கொடுக்கப்படும் நிலங்களை அந்தப் பஞ்சாயத்தின் ஒப்புதலின்றி ஆக்கிரமிக்கும் நிலை இருக்கிறது. அதோடு இந்தப் புறம்போக்கு நிலங்களை பஞ்சாயத்துக்கள் ஏற்று நிர்வாகம் செய்ய முடியாத நிலையும் இருக்கிறது. அதற்காக சட்டம் இருந்தாலும், நல்ல முறையில் அதைச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





நகராட்சி மன்றங்களைப் பொறுத்தவரை இன்றையதினம் பெரிய அளவில் தலையீடுகள் இருந்து கொண்டிருக்கின்றன. இதனால் பல நகராட்சி மன்றங்களில் இருக்கும் கமிஷனர்கள் ஏனோதானோ என்று வேலை செய்யும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. உதாரணத்திற்கு அண்மையில் இருக்கக்கூடிய செங்கற்பட்டு நகராட்சி மன்றத்தைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். அங்கு ஒரு பஞ்சாயத்து ஆணையர் மாற்றப்பட்ட பிறகு ஒன்றிரண்டு மாதங்களுக்குள்ளாக புதிய பஞ்சாயத்து ஆணையரை, அவர் மூன்றாண்டு காலத்திற்கு அதிகமாகத் தண்ணீர் வரி செலுத்தாதவர்கள் மீது நடவடிக்கை எடுத்தார் என்பதற்காக விலக்கி விட வேண்டும் என்ற கோரிக்கையும், மாற்ற வேண்டுமென்ற கோரிக்கையும் வந்தது. இப்படிப்பட்ட சூழ்நிலை வளருமானால் பணி புரிகின்ற எந்த ஒரு ஆணையரும் தங்களுடைய குடும்பத்தோடு தமிழகம் பூராவும் ஓராண்டு காலத்திற்குள்ளாகச் சுற்றி வர வேண்டிய நிலை ஏற்பட்டு விடுமோ என்ற அச்சத்தில், பயத்தில் பணி புரிய வேண்டிய நிலை இருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலைகளுக்கு இடம் கொடுக்கக் கூடாது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

திண்டிவனத்தைப் பொருத்தவரை புயல் நிவாரண வேலைகளில் இந்தத் துறை பல்வேறு வகைகளில் பணியாற்றியதற்காக நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்தப் புயல் நிவாரண வேலைகளுக்காகத் தரப் பட்ட பணம் ஒழுங்கான முறையில் செலவழிக்கப்பட்டதா என்பதை அரசாங்கம் கண்காணிக்க வேண்டும்.

பிற்பகல் 1-00

நானும் அந்தப் பணத்தைச் செலவழிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறேன் என்றாலும் அப் பணத்தைச் செலவழிக்கும் நேரத்தில் எல்லாம் நான் அங்கு சென்று இருந்து கொண்டிருக்க முடியாது. ஆகவே அதில் அரசுக்கு ஒரு பொறுப்பு இருக்கிறது. என்ன காரியத்திற்காக அந்தப் பணத்தைக் கொடுக்கிறார்களோ அந்தக் காரியத்திற்காக அந்தப் பணம் செலவு செய்யப்பட வேண்டும். அப்படி செலவு செய்யப் படுகிறதா என்று பார்ப்பதில் அரசுக்கு பொறுப்பிருக்கிறது. புயலால பாதிக்கப்பட்ட பாதைகளுக்கு, அவைகளை ஒழுங்குபடுத்த வேண்டுமென்று மானியம் கொடுக்கும்போது அதை அதற்காகத்தான் பயன்படுத்தப்பட வேண்டுமே தவிர வேறு (நல்ல காரியமாக இருந்தாலும் கூட)—காரியங்களுக்கு அதை பயன்படுத்தக் கூடாது என்பதை அரசு உணர்த்த வேண்டும். அந்த அளவில் அங்கு வேலைகள் நடைபெறும் என்பதற்கு அரசு உறுதி தர வேண்டும்.

(மணியடிக்கப்பட்டது.)

**திரு எஸ். கே. வடிவேலு :** மாண்புமிகு சட்டமன்றத் துணைத்தலைவர் அவர்களே, இந்தச் சமுதாய நல வளர்ச்சித் திட்ட மானியக் கோரிக்கையின் மீது பேசுவதற்கு எனக்கு அனுமதி வழங்கியதற்காக முதலில் என் நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். நம் நாட்டில் இயங்கிக் கொண்டு வருகின்ற ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள், நகர மன்றங்கள் இவைகளுக்குப் பொது மக்கள் நேராகவே தேர்ந்தெடுத்து அனுப்பினால்தான் ஜனநாயக முறைப்படி நல்லதொரு ஆட்சி இயங்க முடியும். சென்ற அரசு வசதி உள்ளவர்கள் மட்டும்தான் தலைவர் பதவிக்கு வர வேண்டுமென்ற கருத்தை வைத்துக் கொண்டு ஊராட்சி மன்றங்களின் தலைவர்கள் ஊராட்சி ஒன்றியத்தின் தலைவரைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற நிலையை ஏற்படுத்தினார்கள். அதனால் பல கிராமங்களில் பல தொல்லைகள், பல குழப்பங்கள் ஏற்பட்டன. இப்போது ஊராட்சி ஒன்றியங்கள் ரெவின்யூ இலாகாவோடு இணைக்கப் பட்டுள்ளன. அந்தத் தொடர்பை நீக்கிவிட்டு ஊராட்சிமன்றங்களும், ஊராட்சி ஒன்றியங்களும் தனியாகச் செயல்பட்டால் நல்ல பல முன்னேற்றங்கள் ஏற்படும். ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள தொழிலாளர்களுக்கு அதிகச் சம்பளமும் ஊராட்சிமன்றங்களில் உள்ள தொழிலாளர்களுக்கு அதற்குப் பாதி

சம்பளமுமாகக் கொடுக்கப்படுகிறது. ஆகவே, ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படுகிற சம்பளம் ஊராட்சிமன்றங்களில் உள்ள தொழிலாளர்களுக்கும் கொடுக்க வேண்டும். ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி இல்லாததால் அவர்கள் திடீர் என்று ஓடி விடுகிறார்கள். ஆகவே அந்தத் தொழிலாளர்களுக்கு ஒரு பகுதியை மானியமாகக் கொடுத்து வீடுகள் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பல ஊராட்சி மன்றங்களில் அம் மன்றத் தலைவரின் வீட்டிலேயே ஊராட்சி மன்றம் நடக்கிறது. அப்படிப்பட்டதொரு நிலையில்லாமல் ஒரு பகுதி மானியமாக வழங்கி ஊராட்சிமன்றங்களுக்கு கட்டிடங்கள் கட்டித் தரும் நிலையை ஏற்படுத்த வேண்டும். தலைவரின் வீட்டிலேயே மன்றம் கூட்டப்படுவதால் போட்டி ஏற்படும்போது அங்கு பல மெம்பர்கள் போகாமல் அவர்கள் பதவி. காலம் முடிவடைகிறது. ஆகவே இந்த மன்றங்களுக்கு கட்டிட வசதி செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மதிய உணவு, மதிய உணவு வழங்கப்படுகிறது. அரசாங்கம் ஆறு காசும், ஊராட்சி மன்றங்கள் இரண்டு காசும் கொடுக்கிறார்கள். அது போதவில்லை. ஆகவே மதிய உணவுத் திட்டம் நல்ல முறையில் செயல்படவில்லை. ஊராட்சிமன்றங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள புறம்போக்கு நிலங்கள் அல்லது உச்சவரம்புத் திட்டத்தின் மூலம் கிடைக்கும் நிலங்களை ஊராட்சி மன்றங்களுக்குக் கொடுத்து இந்த மதிய உணவுத் திட்டத்தை நல்லமுறையில் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஊராட்சிமன்றங்களுக்கு ஒப்படைக்கப்பட்ட புறம்போக்கு நிலங்களில் ரோடு போட்டுக் கொண்டிருக்கும்போது திடீர் என்று ஒரு தடை உத்தரவைப் போட்டார்கள் முந்திய அரசினர். இப்போது மூன்று வருடங்கள் ஆகியும் கூட அந்த உத்தரவு நீக்கப்படாமல் ரோடு போட முடியாத நிலை இருக்கிறது. பஞ்சாயத்துக்களுக்கு அதிகாரம் இருந்தும் அவை செயல்பட முடியாமல் இருக்கின்றன. அந்தத் தடை உத்தரவை நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்ற அங்கத்தினர்கள் அவசர வேலைக்குச் செல்ல வேண்டுமென்று ஊராட்சி ஒன்றியத்தின் ஜீப்பைக் கேட்டால் ஆணையர் பெருந் தலைவரைக் கேட்க வேண்டுமென்று சொல்லி இல்லை என்று சொல்லிவிடுகிறார்கள். ஆகவே மக்களுக்காக சேவை செய்ய வேண்டுமென்று வந்திருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் ஒரு நாள் அல்லது இரண்டு நாட்கள் சுற்றுப் பயணம் செய்ய ஜீப்களைக் கொடுப்பதற்கு ஆணை இட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நகராட்சித் தேர்தலில் நேரிடையாக மக்கள் தேர்ந்தெடுக்கக் கூடிய முறையில் தேர்தல் இருக்க வேண்டும். எங்கள் ஊரில் நெசவுத் தொழிலாளர்களிடமிருந்து இரண்டு ரூபாய் வீதம் ரூ. 125 வரி வசூல் செய்திருக்கிறார்கள். அப்படி வரி விதிக்கிற அந்த அதிகாரத்தை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு வழங்கி வரி விதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அடுத்துப் பேசுகிற உறுப்பினர்கள் ஐந்து நிமிடங்களுக்கு மேல் பேச வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன், நேரம் கடந்துவிட்டதால்.

***Thiru K. S. KOTHANDARAMAIAH :** Deputy Speaker, Sir, since time given to me is very short, I am not able to give vent to my ideas and expressions. The main difficulty in making successful this scheme is the loggerheeds between the official Block Development. Officers and the Non-official Chairman of the Panchayat Unions. Generally, the Chairman will be a person with party feelings and affiliations. The B.D.O's who are officials are not able to adjust themselves to their conditions and this leads to so many difficulties which results in the failure of the scheme.



Coming to the condition of roads especially in our taluk, of Hosur ; throughout the taluk I find that the conditions of the roads are very bad whether they are panchayat roads or panchayat union roads. Whenever I go and ask the presidents of panchayats, they say that the money has been taken away by the Government for loans. I heard some cases where the officers who went to collect the loans simply asked the Panchayat Presidents to put their signatures in the cheques and took away the amounts. Such being the case, many of the panchayats have no money. Moreover, the panchayats are also not properly taking up the construction of roads or their repairs or their maintenance. At a conference held at Hosur a few months ago, the District Collector himself said that the village roads in the Hosur taluk were very bad and that some roads which were taken up 10 or 15 years ago were not being completed. Therefore, I request the Hon. Minister to pay special attention to this matter and entrust this work to Highways Department.

Next, coming to teachers affairs the Government appointed an Ad Hoc Committee to make transfers. A similar arrangements has not been made with regard to the appointment of teachers.

From the beginning of June to the end of the year appointments are made and this work of the schools are dislocated. So,I request the Government to appoint a Special Committee like the transfer Committee and the appointment of teachers may be entrusted to that committee.

The District Development Councils are only advisory councils now. Mere advice is of no use in setting right things. I request the Hon. Minister to give more powers to these councils and see that they function properly and usefully.

There are periodical meetings in every union. I do not think they are of much use. These periodical meetings may put an end to and Commissioners and other important persons may be asked to attend the District Development Council meetings where they can learn many things. By this arrangement we can save money.

Collection of panchayat taxes is entrusted to the Village Officers. The Panchayat Development Allowance given to them is not adequate and sometimes it does not reach them at all. I feel that it is better to take the opinion of the Village Officers and, if they agree, see that the allowance is sent to Karnams and Village Munsifs directly by money order.

Sometime back, our Chief Minister said that he would remove all duplication of work. The Extension Officer (Education) in the panchayat union is doing the same work as the Deputy Inspector of Schools. In many cases the Deputy Inspectors possess higher qualifications and are better fitted for the work. One kind of officers can inspect the schools and make recommendations and their need not be duplication of work.

In many cases the village level workers interfere with village politics; they do not confine themselves to the work entrusted to them. Therefore it is better that suitable advice is given to them or they may be removed so that there may not be any troubles in the villages on account of them.

The next thing that I want to say is that panchayat union councils are not properly functioning in many respects, especially in the area which I represent in this House. Further the amounts allotted to them are not adequate. Moreover the amounts are not properly spent. We attend the council meetings and things are not quite happy there. I request the Hon. Minister to pay attention to this.

Our Government was wise enough to appoint a gentleman to go into the panchayat union working and make a report. That gentleman, Mr. N. Murugesa Mudaliar, has submitted a report. I request the Government to appoint a committee consisting of Members of the Assembly and also others and see that the recommendations are implemented. With these words I resume my seat.

***திரு எம். ஆர். கண்ணன்** : மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவரவர்களே, சமுதாய வளர்ச்சி, ஊராட்சி வளர்ச்சி என்ற மானியத்தின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

பொதுவாக இந்த நகராட்சிகளின் அடிப்படை வேலையானது சுகாதாரத்தைப் பேணிக் காப்பதாகும். சுகாதார முறைகளுக்கு வேண்டிய நல்ல ரோடுகளை அமைப்பது, குடிதண்ணீர் வசதி செய்து தருவது, நல்ல விளக்குகளைப் போடுவது மற்றும் இவை போன்ற காரியங்களைச் செய்ய வேண்டிய பணிகள் நகராட்சிகளிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. அதற்காக நாம் எவ்வளவுதான் பணம் ஒதுக்கினாலும் அந்தப் பணம் நல்ல முறையிலே செலவு செய்யப்படுகிறதா என்பதைக் கண்காணிக்க வேண்டும். அரசு எவ்வளவுதான் நல்ல கொள்கைகளை வகுத்தாலும் அந்தக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கு அதிகாரிகள் மிகமிகச் சிறப்பாக இருக்க வேண்டுமென்று நான் இந்தமன்றத்தில் வற்புறுத்திச் சொல்லியிருக்கிறேன். சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரையில் பல இடங்களில் நிர்வாக அதிகாரிகள் நல்ல முறையில் கவனிப்பதே இல்லை. பல ரோடுகளில் ஆங்காங்கே சாக்கடை நீர்கள் பெருக்கெடுத்து ஓடிக் கொண்டிருக்கின்றன. நிறைய குப்பைகள் போக்குவரத்தைப் பாதிக்கக் கூடிய வகையில் இடைஞ்சல்களாக குவிந்து இருக்கின்றன. இவைகளைப் போக்குவதற்கு நகராட்சி மன்ற அதிகாரிகள் நல்ல முறையில் கவனித்தால் நகரம் நல்ல அபிவிருத்தி அடையும்.

அரசு சில கணக்குகளைக் கொடுத்து வருகிறது, சென்னை மாநகராட்சியும் கணக்கு கொடுத்து வருகிறது. சென்னையில் 20 இலட்சம் மக்கள் இருப்பதாகக் கருதுகிறார்கள். இது முற்றிலும் தவறு என்பது என்னுடைய கருத்து. மொத்தம் 12 தொகுதிகள் இருக்கின்றன. ஒவ்வொரு தொகுதியிலும் இலட்சம் ஓட்டர்கள் இருக்கிறார்கள். அதற்குமேலே ஒவ்வொரு ஓட்டருக்கும் அவரது வீட்டிலே நான்கு பேராவது இருக்கிறார்கள். எனவே சென்னை மாநகராட்சியில் குறைந்தது 40 லட்சத்திற்குக் குறைவாக மக்கள் இருக்க மாட்டார்கள் என்பது என்னுடைய கருத்து. இவர்கள் அனைவருக்கும் குடிதண்ணீர் வசதி செய்து தந்தாக வேண்டும். இது குறித்து ஏற்கனவே இருந்த அரசுக்கு பல்லாண்டு காலமாக நல்ல திட்டத்தை மாநகராட்சி மன்றம் தெரிவித்தாலும்கூட அதை நடைமுறைப்படுத்த விரும்பாத காரணத்தால் பல்லாண்டுகளாக அந்தத் திட்டம் தள்ளிப்போடப்பட்டு வந்தது. இப்பொழுது தமிழக ஆட்சியை திராவிட



முன்னேற்றக் கழகம் ஏற்றுக் கொண்ட பிறகு அந்தத் திட்டத்தை நடைமுறைப் படுத்த ஒப்புக் கொண்டு துவக்கியும் உள்ளது. இதை மிக்க விரைவில் முடித்து சென்னை வாழ் மக்களுக்குக் குடிதண்ணீர் வசதி ஏற்படுத்தத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

சென்னை மாநகராட்சியின் பல ரோடுகளிலே சர்க்கார் பஸ் போக்குவரத்து நடைபெறுகின்றது. முன்பு இந்த ரோடு போக்குவரத்திற்கு மாநகராட்சி மன்றம் அதிகமாகப் பணம் செலவழித்து வருகிறது. அதற்காக சர்க்கார் பணம் ஒதுக்கித்தர வேண்டுமென்று காங்கிரஸ் அன்பர்கள் நாட்டை ஆண்டு வந்த காலத்திலே மாநகராட்சி மன்றம் வேண்டுகோள் விடுத்தது. அந்த வேண்டுகோளை அன்றிருந்த ஆட்சி புறக்கணித்தது என்றாலும் இன்றுள்ள ஆட்சி அதையேற்று பஸ் போக்குவரத்துள்ள ரோடுகளை நல்ல முறையில் பாதுகாத்துப் பராமரிக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு அதற்கான பணத்தை மாநகராட்சிக்கு ஒதுக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, பள்ளிகளைப் பொறுத்த வரையில் சென்னை மாநகராட்சி மன்றத்தில் "பிரைமரி எஜுகேஷன்" 5-வது வரை மட்டும் ஒதுக்கினால் தான் அதை நல்லமுறையில் செயல்படுத்த முடியும். அதற்குமேல் ஹைஸ்கூல்களை, ஹையர் எலிமெண்டரி ஸ்கூல்களை ஒப்படைத்தால் சரியாக நிர்வகிக்க முடியாது. ஆகவே அத்தகைய பள்ளிகளை சர்க்காரே ஏற்று நடத்த வேண்டுமென்பதையும் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஒவ்வொரு தொகுதியிலும் ஏறக்குறைய 30, 40 குடிசைப் பகுதிகள் இருக்கின்றன. குடிசை நிலங்களில் தனியார் நிலம், சர்க்கார் நிலம், கார்ப்பொரேஷன் நிலம் என்று வெவ்வெறு இனங்களில் இருக்கின்றன. தனியார் நிலத்தைப் பொறுத்த வரையில் சட்டப் பிரச்சினை இருக்கிறது. சர்க்கார் நிலங்களாகவோ, கார்ப்பொரேஷன் நிலங்களாகவோ இருக்கக் கூடிய இடங்களை அங்குள்ள குடிசைவாழ் மக்களுக்கு நல்லமுறையில் ஒதுக்கித் தந்து பட்டா கொடுக்க வேண்டிய நிலையை ஏற்படுத்த வேண்டும். அதை அந்தந்த அதிகாரிகள் கவனிக்க வேண்டும். ஏறக்குறைய சென்னை மாநகராட்சியில் 10 சர்க்கிள்கள் இருக்கின்றன. ஒவ்வொரு சர்க்கிளுக்கும் ஒரு இன்ஜினியர் இருக்கிறார். அவர்கள் தகுந்த முறையில் நடவடிக்கை எடுத்து சீர்படுத்தச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

தமிழக முதலமைச்சரவர்கள் குடிசைகளுக்குப் பதில் நல்ல வீடுகளாகக் கட்டித் தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். குடிசைகள் அதிகமாக இருக்கக் கூடாது என்று நல்லெண்ணத்தில் சொல்லியிருப்பதை பாராட்டி வரவேற்கிறேன். எல்லாவற்றையும் ஒரேயடியாக நடைமுறைப்படுத்த வேண்டுமென்றால் கஷ்டமாகத்தான் இருக்கும். எனவே எந்தெந்த பகுதிகள் எப்பொழுது எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் திட்டவட்டமாக அறிவித்துவிட்டால், அந்தந்தப் பகுதி மக்கள் அந்தந்த எம்.எல்.ஏ.க்களுக்கு மனுப் போட்டு பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்று சொல்லும் பொழுது இந்த வருஷத்தில் தான் இது எடுத்துக் கொள்ளப்படும் என்று தெரிவிப்பதற்கு வசதியாக இருக்கும். குறிப்பாக நான் சார்ந்திருக்கும் தொகுதியான பேஸின் பிரிட்ஜில் குடிசைகள் அதிகமாக இருக்கின்றன. அவைகளுக்கெல்லாம் குடிதண்ணீர் வசதி கிடையாது. விளக்கு வசதி கிடையாது. போக்குவரத்துச் சாலைகள் கிடையாது. இவற்றை உடனடியாகக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். அங்கே பல நகர்கள் பல தலைவர்களின் பெயரிலே இருக்கின்றன. மீனும்பாள் நகர், நேரு நகர், இந்திரா நகர், அண்ணா நகர், நெடுஞ்செழியன் நகர், பர்மா நகர், சாஸ்திரி நகர், அசோக் நகர் போன்ற பல நகர்கள் இருக்கின்றன. ஒரு நகருக்குக்கூட லைட் வசதி கிடையாது, போக்குவரத்து வசதி கிடையாது. மலஜலம் கழிக்கக் கூட வசதி கிடையாது. அதிகாரிகளெல்லாம் இவற்றைக் கவனிக்காமல் அங்கு மக்களைக் குடியேறச் செய்துவிடுகிறார்கள். கேட்டால், எம்.எல்.ஏ. வருகிறார், எம்.சி. வருகிறார் என்று சலிப்போடு சொல்லிவிட்டு அதிகாரிகள் சட்டப்பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல் விட்டுவிடுகிறார்கள். ஏழைகளைப் பாதுகாப்பது, அவர்களுடைய தேவைகளைப் பூர்த்து செய்து

வைப்பது என்பது வேறு பிரச்சினை. ஆனால் ஏழைகள் கஷ்டப்படும் பொழுது சட்டப்படி என்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமோ அவைகளை எடுத்து அவர்களை வாழ்விக்க வேண்டுமேயொழிய இந்த மாதிரி நிலையை ஏற்படுத்தக் கூடாது என்று சொல்லிக் கொண்டு எனக்கு வாய்ப்பளித்ததமைக்காக நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

*** திரு கே.பி.எஸ். மணி :** மாண்புமிகு உதவி சபாநாயகர் அவர்களே, இந்தச் சமுதாய நலத் திட்டத்தின் கீழ் கொண்டு வந்திருக்கிற மானியங்களை யொட்டி என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இந்தத் திட்டத்திலே கொடுக்கப்பட்டிருக்கிற விஷயங்கள் அத்தனையும் உண்மையானவையும் இருக்கிற நிலைமைகளையும் கூறுகின்ற விஷயங்களாக இருப்பினும், குறிப்பாக மக்களுடைய அபிவிருத்திக்காக ஏதேதோ இதுவரை இருக்கிறதே அவைகளை அதிகப்படுத்துவதற்கும் துரிதப்படுத்துவதற்குமான நடவடிக்கைகளிலே நம்முடைய அரசு கவனம் செலுத்த வேண்டுமென்று தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, தஞ்சை ஜில்லாவை எடுத்துக் கொண்டால் அங்கு ரோடுகள் போடுவதற்காக வசூலிக்கப்படுகின்ற பணம் 40 நயாபைசா என்று இருக்கிறது. தஞ்சை ஜில்லாவிலே ஒரு முறை ரோடு போட்டபிறகு மறுபடியும் 2 அல்லது 3 தரம் அதன் மேலே கப்பி நிரப்பினால்தான் அது நல்ல ரோடாக முடியும். அது சகதி நிலமாக இருப்பதனால் ஒரே ஒரு முறை ரோடு போட்டால் அது அழுந்திப் போய்விடும். ஆகவே, அப்படிப்பட்ட தஞ்சை ஜில்லாவிற்கு தனியாக ஸ்பெஷலாக ஒரு அலவன்ஸ் கொடுத்து ரோடுகளைச் செப்பனிடுவதற்கு வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, குடிதண்ணீர் சம்பந்தமாக நமக்குக் கொடுத்திருக்கிற விகிதாசார முறைப்படி 5–ல் ஒன்று தான் கிராமப்புறத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் மக்களுடைய தொகையைப் பொறுத்துப் பார்த்தால் 5 மடங்கு மக்கள் கிராமப்புறத்திலேயும் ஒரு பங்கு மக்கள் நகர்ப்புறத்திலேயும் வாழ்கிறார்கள். ஆனால் மொத்த அளவைக் கணக்கிட்டுப் பார்த்தால், 25 சதவிகிதம் தண்ணீர் கிராம மக்களுக்காக ஒதுக்கப்படுகிறது. மற்ற 75 சதவிகிதமும் நகர்ப்புறமக்களுக்குக் குடி தண்ணீர் வசதி செய்து கொடுப்பதற்காக ஒதுக்கப்படுகிறது. ஆகவே, இந்த விதியை மாற்றி கிராமங்களுக்குக் குடி தண்ணீர் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அரசாங்க அதிகார நிர்வாகத்திற்கு உட்பட்டக் காரியங்களைப் பார்க்கும்போது பஞ்சாயத்து யூனியன்களே தீர்மானம் போட்டு டிராக்டர்கள் வாங்கிக் கொள்ளலாம் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. ஆனால் இப்பொழுது டி.ஆர்.டி. மூலமாகத்தான் வாங்க வேண்டும். அவருக்குத் தான் அதிகாரம் இருக்கிறது என்று ஆர்டர் போட்டிருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. இப்படி ஆர்டர் போட்டிருப்பது பஞ்சாயத்து யூனியன் தலைவர் மீது சந்தேகமோ, அல்லது அங்கே இருக்கிற யூனியனுடைய நிர்வாகத்தின் மேல் சந்தேகமோ என்ற நிலையைத் தான் உருவாக்குகிறது.

** ** ** **

**மாண்புமிகு திரு மா. முத்துசாமி :**

** ** **

இன்றைக்கு, டி.ஆர்.டி. மூலமாகக் கொடுப்பதற்குக் காரணம் விரைவாக வசதிகள் செய்து கொடுக்க முடியும் என்பதற்காகத் தான். இந்த ஏற்பாட்டினால் பல இடங்களிலே அது எந்த எந்தக் காலத்திற்குத் தேவை என்பதை அறிந்து விரைவாகக் கொடுப்பதற்கு வசதியாக இருக்கும் என்ற காரணத்தால்தான் அவ்வாறு கொடுக்கபபடுகிறது. ஊராட்சி ஒன்றியத்

** பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



தலைவர்கள் மேலோ, ஊராட்சி மன்றத் தலைவர்கள் மேலோ சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது என்ற காரணத்தினாலே அப்படிப்பட்ட உத்தரவு பிறப்பிக்கப்படவில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு கே.பி.எஸ். மணி :** மதிப்பிற்குரிய முருகேச முதலியார் அவர்களுடைய ரிபோர்டிலே அதைக் குறிப்பிட்டிருப்பதனால் அந்தக் கருத்தை நான் சொன்னேன். ** ** **

அடுத்து, அங்கு உத்தியோகம் செய்பவர்களுக்கு முறையான உத்தியோக உயர்வு பெற வாய்ப்பில்லை, வசதியில்லையென்று நான் முருகேச முதலியார் அவர்களுடைய ரிபோர்டின் மீது விவாதித்த நேரத்திலே குறிப்பிட்டிருக்கிறேன். அதோடு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 16 சதவீதம் கொடுக்க வேண்டுமென்று சொல்லி கடந்த பட்ஜெட்டிலே வலியுறுத்தினேன். அவர்களுக்கு உத்தியோக உயர்வு கொடுக்கப்படாததைப் பற்றி ஒரு பட்டியலையும் கொடுத்திருக்கிறேன். சீனியாரிட்டி லிஸ்ட் பிரகாரம் 23—12—1966-லே போடப்பட்ட அந்த பட்டியலினுடைய நிலை என்ன என்று இதுவரை தெரியவில்லை.

அடுத்து, கிராம மனித வேலைத் திட்டம்—மான் பவர், மான் பவரைக் கொண்டு வேலைகளைச் செய்வதற்காக மத்திய அரசாங்கம் நம்முடைய அரசின் மூலமாக மானியம் வழங்கிக் கொண்டிருக்கிறது. இதற்காக 10 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். ஆனால் அதே சமயத்தில், பாராளுமன்றத்திலே பேசிய நமது அங்கத்தினர்கள் அவ்வாறு ஒதுக்கப்படவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். இங்கே ஒதுக்கப்பட்டிருக்கிறது என தெரிய வருகிறது. அங்கே ஒதுக்கவில்லை என்று பேசி இருக்கிறார்கள். ஆகவே, இது உண்மையா இல்லையா என்பது தெரியாமல் சந்தேகமாக இருக்கிறது. அதைப் போக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அவனுடைய சக்திக்கு அப்பாற்பட்ட வேலையைச் செய்ய வேண்டுமென்று டிமாண்ட் கொடுக்கிறார்கள். சரியான முறையிலே வேலை செய்கிறவர்களுக்கு ஒரே அளவு விகிதாசாரப்படி உத்தியோகம் கொடுக்கிறார்கள். சிலரை மற்றவர்களைப் போலக் கட்டுப்படுத்தி வேலை வாங்க முடியாது. ஆகவே, சரியான முறையில் வேலை செய்பவர்களுக்கு உத்தியோக உயர்வு விரைவாக கொடுக்க முடியுமா என்பதை நாம் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்சாயத்து யூனியன் ஆஸ்பத்திரிகளுக்கு டாக்டர்களை நியமனம் செய்கின்றபொழுது டி.எம்.எஸ். ஒப்புதல் அளித்தால் அவர்கள் வேலையில் சேர்ந்து கொள்ளலாம் என்று சொன்ன பிறகு திரும்பவும் டி.ஆர்.டி.யிடம் அவர்கள் அனுமதி வாங்க வேண்டியிருக்கிறது. இதனால் கிட்டத்தட்ட ஒரு வருஷ காலத்திற்கு மேலாக அவர்கள் ஆஸ்பத்திரியில் சேர முடியாத நிலை இருக்கிறது. அதனால் பல ஆஸ்பத்திரிகளில் டாக்டர்களே இல்லாமல் நாங்கள் கஷ்டப்படுகிறோம் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

கிராண்ட் சேங்ஷன் பண்ணுகிறபொழுது இறுதியாக அவர்கள் பணம் கொடுக்கிறார்கள். கடந்த ஆண்டிலே அக்டோபர், நவம்பர் மாதங்களிலே ஒதுக்கீடு செய்த பணம் இன்னும் கிடைக்கவில்லை. வருஷக் கடைசியிலே பணம் ஒதுக்குவதால், 2, 3, மாதங்களில் நாங்கள் வேலைகளைச் செய்ய முடியாமல் தவிக்கிறோம். வேலை தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது என்று குறிப்புகளை அனுப்பினால் போதும் என்ற முறையில் ஒதுக்கிய பணத்தை நாங்கள் தொடர்ந்து செலவு செய்வதற்கு வழி ஏற்படுத்துகிற முறையில் அவர்கள் அனுமதி அளித்தால் மற்ற காரியங்களையும் விட்டு விடாமல் கவனிக்க வசிதியாக இருக்கு மென்று பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

* பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

பஞ்சாயத்து யூனியனுடைய நிர்வாகங்களையும் பஞ்சாயத்தினுடைய நிர்வாகங்களையும் கவனிப்பதற்கு ஒரு ஓவர்சீயரால் முடியாது. ஆகவே, பஞ்சாயத்தினுடைய நிர்வாகத்தைக் கவனிப்பதற்கென்று தனியாக ஒரு ஓவர்சீயரைப் போட வேண்டும். சர்க்கார் பணத்திலிருந்து அதைச் செய்ய வசதி இல்லையென்றால், பஞ்சாயத்தினுடைய நிதியிலிருந்து நாங்கள் அதற்குரிய தொகையைக் கொடுத்து விடுகிறோம் என்று சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்து, மொத்த பஞ்சாயத்து யூனியன்களில், அதாவது 375 பஞ்சாயத்து யூனியன்களில், நாங்கள் இரண்டு பேர் தான் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் தலைவர்களாக இருக்கிறோம். ஆகவே, வருங் காலத்தில் அதிகமான பஞ்சாயத்து யூனியன் தலைவர்களாக தாழ்த்தப் பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் வருவதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று இந்த அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

***திரு. கோ. பூவராகன் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இன்றைய தினம் சபைமுன் வைத்திருக்கிற மானியக் கோரிக்கையின் மீது எங்கள் கட்சியின் சார்பாக கொடுத்திருக்கிற வெட்டுப் பிரேரணையை யொட்டி ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இன்றையதினம் நம்முடைய பாரதத்திலேயே கிராமப்புறங்களில்தான் அதிகமான முன்னேற்றம் ஏற்படாத ஒரு நிலை இருக்கிறது. தமிழ் நாட்டைப் பொறுத்தவரையிலே அதிகமான கிராமங்களைக் கொண்டிருந்தும், அதிகமான கிராமப் பஞ்சாயத்துக்களை கொண்டிருந்தும் கூட இன்றையதினம் நிதி ஒதுக்கியிருக்கின்றதைப் பார்க்கின்றபோது, மிகக் குறைவான நிதியையே ஒதுக்கியிருக்கிறோம் என்றால் அது ஒன்றும் மிகையாகாது.

மேலும், இதிலே இரண்டுவிதமான விவரங்கள் கொடுக்கப்பட்டிருக் கின்றன. எங்களுக் கெல்லாம் வீட்டுக்கு அனுப்பிய அறிக்கையிலே கிராமப் புறங்களுக்கு மொத்த செலவில் 21 சதவிகிதம் ஒதுக்கி இருக்கிறோம் என்று கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அமைச்சருடைய உரையிலே மொத்த செலவிலே 24 சதவிகிதம் ஒதுக்கியிருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார் கள். நேற்றிலிருந்து இன்றைக்குள் 3 சதவிகிதம் எப்படிக் கூடிவிட்டது என்று தெரியவில்லை. கிராமப்புறங்களிலே, சொல்லுவார்கள். 10–ம் 10–ம் 110 ; அதிலே 10-ஐத் தள்ளிவிட்டு 100 கொடுங்கள் என்று நகர்ப்புறங்களிலே உள்ளவர்கள் சொல்லுவார்கள் என்று. அதைப் போல நேற்றையதினம் கொடுக்கப்பட்ட அறிக்கையிலே 21 சதவிகிதம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால் இன்றையதினம் அமைச்சர் தன்னுடைய உரையிலே 24 சதவிகிதம் என்று சொன்னார்கள். இது எப்படி வரும். இது எப்படி இருக்கிறது என்று பார்க்க வேண்டும். நான் சொன்ன கணக்கு மாதிரி. 10-க்கு 10–110, அதிலே 10-ஐ தள்ளி 100 என்று கிராமத்தில் உள்ளவர்கள் சொல்லுவதைப் போல் இந்த அறிக்கை இருக்கிறது என்று சொன்னால் பல புள்ளி விவரங்கள் உபயோகிக்கிற பொழுது இவர்கள் அவசரத்தில் எங்கே கவனிக்கப் போகிறார்கள் என்ற முறையிலே இவர்கள் பார்க்க முடியாது என்ற அளவிலே இதைக் கொடுத்திருப்பதாக நான் கருதுகிறேன்.

முதலிலே, இவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதிலிருந்து ஆண்டுக் காண்டு குறைவான நிதியை ஒதுக்கியிருக்கிறார்கள். 1966–67-லே கிராமப் புறங்களுக்கு ஒதுக்கப்பட்டு செலவழிக்கப்பட்ட தொகை 6 கோடியே 40 இலட்சம் ரூபாயாகும். ஆனால் 1967-68-லே ஒதுக்கிய பணம் 6 கோடியே 61 லட்சம். அதைக் கூட செலவு செய்யாமல், 6 கோடியே 8 இலட்சம் ரூபாய்தான் செலவழித்திருக்கிறார்கள். இந்த ஆண்டு ஒதுக்கியிருப்பதைப் பார்த்தால் அதற்கும் குறைவாக, கிட்டத்தட்ட ஒருகோடி ரூபாய் குறைவாக ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதைநாம் பார்க்கின்றோம்.





இவ்வளவு குறைவாக கிராம வளர்ச்சிக்காக இந்த மன்றத்தில் நாம் மான்யக் கோரிக்கை வைக்கிறோம் என்று சொன்னால், மனச்சாட்சியைத் தொட்டுப் பார்த்து அது சரிதானா என்று சொல்ல வேண்டும். கிராமப்புற மக்கள் தான் நம்முடைய ஐந்தாண்டு திட்டங்களுக்கும், குறிப்பாக நல்ல வளர்ச்சிக் காரியங்களுக்கும் கடன் எழுப்புகிற பொழுதெல்லாம் அதிகமாக பங்கு கொள்கிறார்கள். அந்தக் கணக்கைப் புரட்டிப் பார்த்தால், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் வசூல் செய்கிற நிலையை புரட்டிப் பார்த்தால் நன்றாக விளங்கும். குறைந்த பட்சமாக 4, 5 ஆண்டுகளாக இந்த நிலைமை இருந்து வருவதைப் பார்க்கிறோம். ரூ. 100 லிருந்து ரூ. 500 வரை முதலீடு செய்பவர்கள் கிராமப்புறத்தில் தான் அதிகமாக வாழ்கிறார்கள். கிராம மக்கள், நடுத்தர மக்கள் வாழ்கின்ற பகுதியிலுள்ளவர்கள் தான், அந்த வட்டாரத்து மக்கள் தான் அரசாங்கம் கடன் எழுப்பும்பொழுது வந்து கொடுக்கிறார்கள், அவர்களிடத்திலேதான் அந்தக் கடன் தொகை பெறப்படுகிறது. அவர்கள்தான் அரசாங்கத்திற்கு ஒத்தாசையாக இருக்கிறார்கள். அவர்கள் நல்வாழ்வு வாழ, அவர்களுக்குத் திருப்பி கைமாறு செய்கின்ற அளவுக்கு நாம் என்ன செய்கிறோம், அப்படிப்பட்ட நிலைமையிலே வேண்டிய நிதியை ஒதுக்கி அவர்களுடைய வளர்ச்சியில் பிற் பகல்
கவனம் செலுத்தியிருக்கிறோமா என்று பார்க்கவேண்டும். கிராமப் பஞ்சாயத் 1-30
துக்கள் பஞ்சாயத்து கூட்டு மன்றங்கள் இவைகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற பொறுப்பு கல்வி வளர்ச்சி, சாலை பராமரிப்பு, வேளாண்மை, குடிதண்ணீர், சுகாதாரம். இது போன்ற துறைகளில் இருக்கிறதுஆனால், ஆண்டு தோறும் கல்வி வளர்ந்து வரும்பொழுது, அவர்களுக்குக் கொடுக்கிற பணம், கல்வி வளர்ச்சிக்காக ஒதுக்கப்படுகிற பணம் ஏன் மிகக் குறைவாக இருக்க வேண்டும் ? கல்விக்காக சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு ரூ. 15 லட்சம் குறைவாகக் கொடுக்கிறார்கள். இது மிகவும் குறைவு. சாலை பராமரிப்புக்காக ரூ. 42 லட்சம் இந்த ஆண்டு குறைவாகக் கொடுக் கிறார்கள். அந்த இனத்திலும் குறைத்துத் தான் கொடுக்கப் படுகிறது. வேளாண்மை மிகவும் முக்கியம் என்று சொல்கிறோம். பஞ்சாயத்துக்கள் அதிலே அதிக கவனம் காட்ட வேண்டும் என்று சொல் கிறோம். ஆனால், அதற்காக ரூ. 5 லட்சம் இந்த ஆண்டு குறைவாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதிலும் குறைத்திருக்கிறார்கள். நாம் பெரிய கைத்தொழில்களில் கவனம் காட்டவில்லை என்றாலும், கிராமக் கைத் தொழில்களுக்காக, அங்கே இருக்கிற குடிசை கைத்தொழில்களுக்காகவா வது அக்கறை காட்டியிருக்கிறோமா என்றால் இல்லை மிகவும் குறைவாக ரூ. 14 லட்சம் இந்த ஆண்டு குறைத்திருக்கிறார்கள். அதிலும் அதிக அக்கறை காட்டவில்லை. அதே போன்றுதான் கிராமப் புறங்களில் குடிதண்ணீர்ப் பிரச்னை இருக்கிறது. நகர்ப்புறங்களில் எப்படி குடி தண்ணீர் பிரச்னை இருக்கிறதோ, அதே போல்த்தான் கிராமப்புறங்களிலும், குடிதண்ணீர் பிரச்னை இருக்கிறது. எந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையை எடுத் துக் கொண்டாலும், ஏதாவது ஒன்றிரண்டு நகராட்சி அதில் இடம் பெறுகிறது ஒன்றிரண்டு நகராட்சிகளுக்கு குடி தண்ணீர் வசதி செய்துகொடுக்கிறோம். ஆனால் கிராமப் புறங்கள் புறக்கணிக்கப்பட்ட நிலையில்தான் இருக்கின்றன. ஏற்கெனவே இது சம்பந்தமாக ஒரு சர்வே செய்யப்பட்டிருக்கிறது. நம் முடைய அரசாங்கம் தான் சர்வே செய்திருக்கிறது. நாங்கள் முன்னால் ஆட்சியில் இருந்த பொழுது எந்தெந்த கிராமங்களுக்குக் குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்க வேண்டும், குடி தண்ணீர் வசதி செய்வதற்குஎவ் வளவு கோடி பணம் தேவையென்றெல்லாம் சர்வே செய்யப்பட்டிருக்கிறது. அதற்காக ஒரு ஐந்தாண்டுத் திட்டம், பத்தாண்டுத் திட்டம் போட்டு ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள கிராமப்புறங்களுக்கு எந்த அளவுக்கு குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்க முடியும் என்று பார்த்து, அந்த அளவுக்கு செய்து கொடுக்க இந்த அரசு முன்வர வேண்டும். அந்த ஏற்பாட்டிற்கு மத்திய அரசும் உடன்பட்டிருக்கிறார்கள். அவர்கள் பங்கு கொடுப்பதற்கும் உடன்பாடு இருக்கிறது. "யுனிஸெபும்" கிராமப்புறங் களில் குடி தண்ணீர் வசதி செய்து கொடுப்பதற்கு உதவத் தயாராக இருக்கிறார்கள். அதற்காக......

**மாண்புமிகு திரு சி. என். அண்ணாதுரை :** எந்த ஆண்டில் இந்தத் திட்டம் ?

**திரு. கோ. பூவராகன் ;** எனக்கு நினைவு இருக்கிற வரையில் 1964–65, 1965–66 என்று நினைக்கிறேன். இந்த இரண்டு ஆண்டுகளில் நம்முடைய மாவட்டங்களிலுள்ள எல்லாக் கிராமங்களுக்கும் குடிதண்ணீர் வசதி செய்து தர வேண்டும் என்று கருதி, மாவட்ட வாரியாக என்னென்ன கிராமங்களுக்குக் குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்க வேண்டும், பஞ்சாயத்து கூட்டு மன்றங்கள்........

**மாண்புமிகு திரு சி. என். அண்ணாதுரை :** 1964–65-ல் அந்த ஏற்பாடு அறிக்கை வடிவில் வந்திருக்கிறது. முன்னால் இருந்த அரசு எந்த அளவுக்கு அது சம்பந்தமாகச் செயல்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**திரு கோ. பூவராகன் :** முன்னால் இருந்த அரசு இதுபற்றி முயற்சி எடுத்திருக்கிறது. பஞ்சாயத்து யூனியன் எந்த அளவுக்கு பங்கு கொள்கிறார்கள் பொது மக்கள் பங்கு எவ்வளவு என்று கேட்டு, பங்கு கொண்டிருக்கிற அளவுக்கு அனுமதி கொடுத்திருக்கிறார்கள். உலக பாங்கியிலிருந்து இதற்காக பணம் கொடுக்க வேண்டும் என்று கோரப்பட்டது. மத்திய அரசும் இதற்காகத் தனியாகபணம் ஒதுக்க வேண்டும் என்று முந்திய அரசு கேட்டிருந்தது. இப்பொழுதிருக்கும் அரசும் அதை மத்திய அரசிடம் வற்புறுத்தி வாங்குவதற்கு முடியும் என்று கருதுகிறேன். அதைச் செய்யலாம். "யுனிஸெஃப்" கூட இதற்கு ஒரு கோடி ரூபாய்க்கு மேல் தருவதாக இருந்தார்கள். பரீட்சார்த்தமாக மிகவும் பின்தங்கிய மாவட்டத்தில் கிராமப் புறங்களுக்கு குடிதண்ணீர் வசதியைப் பெருக்குவதற்குபொறுப்பை ஏற்றுக் கொள்ள அவர்களும் ஒரு திட்டத்தை வைத்திருந்தார்கள். தொடர்ந்து பரிசீலனை இருக்க வேண்டிய நிலை அவசியமில்லை. அந்தத் திட்டத்தின்படி வேலைகளைத் துவக்குவதற்கு உடனடியாக அதற்கான ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சர்வே செய்யப்பட வேண்டிய அவசியமில்லை. கடற்கரையோரப் பகுதி, உள்ளே இருக்கிற பகுதி, மிகப் பின்தங்கிய பகுதி போன்றவைகளுக்கு உடனடியாகக் குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்கவேண்டும். உதாரணமாக உடையார்பாளையம் தாலூகா, என்னுடைய மாவட்டத்தில் காடம்புலியூர் பகுதியில் ஊமங்கலம் பிர்கா போன்ற பகுதிகள், திருநெல்வேலி மாவட்டத்தில் கடலோரப் பகுதி, கோவையில் பல்லடம் போன்ற பல பகுதிகளுக்குக் குடிதண்ணீர் கஷ்டம் எங்கெங்கே இருக்கிறது என்று கண்டு, அந்தக் கஷ்டத்தைப் போக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அதற்கான திட்டத்தை முன்பே போட்டிருக்கிறார்கள். அதில் கவனம் காட்டி.......

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** முன்னாள் அமைச்சர் அவர்களுடைய ஊரிலே கிராமப் பகுதிகளில் குடிதண்ணீர் வசதி சரியான முறையில் இல்லாமல் நரம்புச் சிலந்தி வியாதி அதிகமாக இருப்பதாக கேள்விப்படுகிறோம். அது உண்மையா என்பதையும், அவர் அமைச்சராக இருந்த பொழுது அந்தக் குறையை நீக்குவதற்கு எடுத்துக்கொண்ட முயற்சிகளைப் பற்றியும் இந்த அவை தெரிந்துகொள்ள ரொம்ப விருப்பமாக இருக்கிறது.

**திரு. கோ. பூவராகன் :** அந்த முயற்சியில் தான் இந்த விவரங்களெல்லாம் எனக்கு தெரிந்தன. அந்த முயற்சியினால் தான் இந்த விவரங்களெல்லாம் அறிந்திருக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது. மத்திய அரசுக்கு என்னுடைய இலாகாவின் காரியமாகப் போயிருந்தபொழுது, அங்கு இதுபற்றி உள்ள நிலைமைகளை உணர்ந்து, இதற்கு என்ன பணம் ஒதுக்கியிருக்கிறார்கள், அந்தப் பணத்தை ஏன் நம் ராஜ்யத்தில் செலவு செய்யக்கூடாது என்பதையெல்லாம் அறிந்தேன். மத்திய அரசு ஒவ்வொரு ராஜ்யத்திற்கும் குடி தண்ணீர்ப் பிரச்னையைத் தீர்ப்பதற்காக எவ்வளவு கோடி ரூபாய் ஒதுக்கியது, எந்தெந்த ராஜ்யங்களில் கவனம் காட்டப்



படவில்லை என்றெல்லாம் பத்திரிகையில் செய்தி வந்தது. அந்த செய்திகளை வைத்துக் கொண்டு, மத்திய அரசுக்கு சென்ற பொழுது, அந்த இலாகாவிற்குச் சென்று இதற்காகத் தனி கவனம் செலுத்தி, மத்திய அரசு எந்த விதத்தில் உதவி செய்கிறது என்ற விவரங்களை யெல்லாம் அறிந்து வந்தேன். அதை வைத்துக் கொண்டு கிராமப் புறத்தின் குடி தண்ணீர் வசதி செய்வதற்கான முயற்சிகளை எடுத்துக் கொண்டு தான் இருந்தேன். ஆங்காங்கு அப்படிப்பட்ட திட்டங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது வந்திருக்கிற அரசு, என்ன காரணம் கொண்டோ தெரியவில்லை, என்னுடைய தொகுதியில் பல வேலைகளை நிறுத்தி விட்டிருக்கிறது. மின்சார வேலை அப்படி அப்படியே தடைப் பட்டிருக்கிறது. பாதை போடும் வேலை பாதியில் நிற்கிறது. குடிதண்ணீர் கொடுக்கும் வேலை, விவசாய வேலை பாதியிலே. கல்லூரியும் பாதியிலே நிறுத்தப்பட்டிருக்கிறது. இப்படி பல அபிவிருத்தி வேலைகள் பாதியிலே நிறுத்தப்பட்டிருக்கின்றன. விருத்தாசலத்தில் ஒரு பக்கம் குடிதண்ணீர் பிரச்னை........

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** நிதி நிலை சீர்பட்டவுடன் அந்த வேலைகளுக்கெல்லாம் நிதி தரப்பட்டு, அவர்களுடைய தொகுதியில் நிச்சயம் அந்த வேலைகள் செய்து கொடுக்கப்படும். அவர்கள் கூறியபடி வேலைகள் பாதியிலே தடைபடுவதற்குக் காரணம் நம்முடைய முன்னாள் அமைச்சர் அவர்கள் தொகுதியை விட்டு சென்னைக்கு வந்துவிட்டாரே, அது காரணமாக இருந்திருக்கலாம்.

**திரு கோ. பூவராகன் :** தொகுதியை விட்டு சென்னைக்கு வந்துவிட்டேன் என்று சொல்லுவது சரியில்லை. தொகுதிக்கு மாதத்திற்கு இரு முறை யாவது சென்று தொகுதியில் இருக்கிற மக்களை அடிக்கடி சந்திக்கிறேன். தொகுதி மக்களை அடிக்கடி சந்திக்கும் பழக்கம் எனக்குண்டு. இன்றைய தினமும் அந்தப் பழக்கத்தை விடாமல் வைத்துக் கொண்டிருக்கிறேன். தொகுதியைப் பற்றிய எல்லா விவரங்களும் அவ்வப்போது அறிந்து வருகிறேன். அறிந்திருக்கிறேன். நிதிநிலை சரியாக இல்லை என்றால் என்னுடைய தொகுதிக்கு மட்டும் நிதிநிலை சரியாக இல்லையா ? வேறு தொகுதிகளுக்கு அபிவிருத்தி வேலைகள் செய்து கொடுக்க நிதிநிலை சரியாக இருக்கும் பொழுது, இந்தப் பக்கத்திலும் அந்த நிதியைக் கொஞ்சம் திருப்ப வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நிச்சயமாகச் செய்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன். முதல் அமைச்சர் அவர்கள் இதிலே கவனம் செலுத்தி, பாரபட்சம் இல்லாமல் எல்லாத் தொகுதிகளிலும் அபிவிருத்தி வேலைகளைச் செய்து கொடுக்க கடமைப்பட்டிருக்கிறார்கள்; செய்ய வேண்டும்.

அதே சமயத்தில் இந்த அறிக்கையிலே பார்க்கிறபொழுது "பொது மானியம்" என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,74,98,000 என்று இருக்கிறது. அதற்குக் கீழே பார்த்தால் ரூ. 2,74,97,000 என்று இருக்கிறது. ஒரு ஆயிரம் கணக்கு எங்கே போய்விட்டது என்று தெரியவில்லை. இம்மாதிரி பல குறைபாடுகள் இருந்துக் கொண்டிருக்கின்றன. அங்கிருந்து எடுத்துப் போடுகிறபொழுது ஒரு தொகை இங்கிருந்து எடுத்துப் போடுகிறபொழுது ஒருகணக்கு என்று போட்டிருக்கிறார்கள், அது எப்படி வருகிறது என்று நாம் பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம். ஒட்டுமொத்தமாகப் பார்க்கிறபொழுது இன்றைய தினம் கிராமப்புறங்களில் நாம் அதிகமாக கவனம் காட்டவில்லை. இந்த அரசாங்கம் சென்ற ஆண்டு எடுத்த முயற்சி கூட இந்த ஆண்டு எடுக்கவில்லை. எந்த அளவுக்கு அதிக அக்கறை காட்டியிருக்கிறோம் என்பது இந்த அறிக்கையிலே காணப்படவில்லை. இந்தப் போக்கில் போய்க் கொண்டிருந்தால், கிராமப்புறத்து மக்களுக்கு இப்பொழுது விழிப்புணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது, நம்மைப் புறக்கணிக்கிற மனப்பான்மை வளர்ந்து வருகிறது என்று மக்கள் கருதுவார்களேயானால், நகரப்புறங்களிலிருக்கிற மக்களுக்குள்ள வசதிகள் கிராமப்புறங்களில் இருக்கிற மக்களுக்கு செய்து தரப்படவில்லை என்ற நிலைமை வருகிறது என்று சொன்னால், அது அவ்வளவு பொருத்தமாக இருக்காது.

நம்முடைய தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் கிராம மக்கள் எல்லாக் காரியங்களிலும் நமக்கு ஒத்தாசை கொடுத்துக்கொண்டு வருகிறார்கள் என்பதைப் பார்க்கிறோம். அவர்களிடம் அதிக அக்கறை காட்ட வேண்டும்.

உதாரணத்திற்கு ஒன்று சொல்கிறேன். சென்னை மாநகராட்சி மன்றத்திற்கு தனியாக ஒரு லோன் அலிஸ்டென்ஸ் நாம் கொடுக்கிறோம். அதற்காக ரூ. 47 லட்சம் அவர்களுக்குத் தனியாகக் கொடுக்கிறோம். அதே போன்று நகராட்சிகள் இருக்கின்றன. கிட்டத்தட்ட 88 நகராட்சிகள் இருக்கின்றன என்று நாம் அறிக்கையிலே பார்க்கிறோம். நகராட்சிகளுக்கு எவ்வளவு என்று சொன்னால், ரூபாய் 7½ லட்சம் தான் தரப்பட்டிருக்கிறது. இது எவ்வளவு பாரபட்சமாக இருக்கிறது என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். எந்த அளவுக்கு சென்னை மாநகராட்சிக்கு நாம் கொடுக்கிறோமோ அதே போன்று மற்ற நகராட்சிகளும் இருக்கின்றன. அவைகளுக்கும் பிரச்சனைகள் இருக்கின்றன. அந்த பிரச்சனைகளை உணர்ந்து அவர்களுக்கு அந்த உதவித் தொகையை கொடுக்க வேண்டும். ஒரு உறுப்பினர் சொன்னார், முன்னாலிருந்த அரசு சென்னை நகராட்சிக்குப் போதுமான ஒத்தாசை கொடுக்கவில்லை அவ்வப்போது என்னென்ன காரியங்கள் ஆற்றவேண்டுமோ அந்தக் காரியங்களுக்கு மானியம் கொடுக்கவில்லை என்று. மானியம் ஏராளமாகக் கொடுத்திருக்கிறோம். ஆடிட் ரிப்போர்டைப் பார்த்தால் கனம் உறுப்பினருக்கு நிலைமை விளங்கும். ஆடிட் ரிபோர்ட்டில் என்ன சொல்லப்படுகிறது என்றால் நாம் சென்னை மாநகராட்சிக்குக் கொடுத்த பணங்களில் 99 சதவிகிதம் அவர்கள் பயன்படுத்தவில்லை என்று தான் சொல்லப்படிருக்கிறது. பணம் கொடுக்கவில்லை என்று இல்லை. அப்படிக் கொடுக்கிற பணத்தை சரியாகப் பயன்படுத்தாத நிலை இருக்கும்போது 50 லட்சம் ரூபாயை தனிச் சலுகையாகக் கொடுக்கிறோம் என்றால், அப்படி வாங்கும் பணத்தை நல்ல முறையில் உபயோகப்படுத்த, அதிகாரிகளை ஊக்குவித்து, பயன்படுத்துகிறார்களா என்பதையும் நாம் பார்க்க வேண்டும்; அதையும் நாம் கவனத்தில் வைக்க வேண்டிய ஒன்றாகக் கருத வேண்டும். நகராட்சிகளுக்கும் என்னென்ன அளவில் உதவிகள் செய்ய வேண்டுமோ, அந்த வகையில் அந்த அளவில் கொடுக்க நிதிகளை ஒதுக்க வேண்டும்.

ஒவ்வொரு தலைப்பிலும், இந்த ஆண்டு மிகமிகக் குறைவாகத் தொகைகளை ஒதுக்கியிருக்கிறார்கள். கம்யூனிடி டெவலப்மெண்ட் ப்ளாக்குகளுக்கு கிட்டத்தட்ட பாதியாகக் குறைத்திருக்கிறார்கள். சென்ற ஆண்டு ஒதுக்கிய தொகைகளையே செலவு செய்யவில்லை பாதிக்குப்பாதிதான் இப்பொழுது ஒதுக்கியிருக்கிறார்கள். சென்ற ஆண்டு ரூபாய் 140 லட்சம் என்றால், இப்பொழுது இந்த ஆண்டு 74 லட்சம் தான் ஒதுக்கி இருக்கிறார்கள். கல்விப் பணிக்காகவும் அப்படித்தான் பாதியாகத்தான் செய்திருக்கிறார்கள். அப்பொழுது 30 லட்சம் ரூபாய் என்றால், இப்பொழுது கிட்டத்தட்ட 15 லட்சம் என்கிற அளவில் தான் இருக்கிறது. அப்படி ஒவ்வொரு தலைப்பிலும் அதிகமான அளவில் குறைத்திருப்பதற்குக் காரணம் என்ன என்பது தெரியவில்லை. அந்த இலாக்கா அமைச்சர், முதலமைச்சரிடத்தில் பேசி, அந்த இலாக்காவிற்குத் தனிச் சலுகை கேட்டு, அதிகமான பணம் ஒதுக்கவேண்டும் என்ற அளவில் கேட்டுப் பெற வேண்டும். இருக்கும் பிரச்சனைகளை எடுத்துச் சொல்லி, வளமுள்ள காரியங்களைச் செய்துச் முன்னால் இருந்த அந்த நல்ல பெயரை நிலை நாட்டக் கூடிய வகையில் பஞ்சாயத்து, பஞ்சாயத்துக் கூட்டு மன்றங்களுக்கும், நகர மன்றங்களுக்கும் நல்ல பணிகளைச்செய்ய வேண்டும் என்று சொல்கிறேன்.

இன்றைக்கு நாம் டவுன்ஷிப்புக்கள் அமைத்திருக்கிறோம். சில டவுன்ஷிப்புக்கள் கமிட்டி அளவில் தான் இருக்கின்றன. அவர்கள் என்னென்ன செய்திருக்கிறார்கள், என்னென்ன காரியங்கள் செய்கிறார்கள் என்பதைப்பற்றி ரிப்போர்ட்டாவது, மூன்று மாதத்திற்கு ஒரு முறையாவது, இலாக்காவிலிருப்பவர்களாவது வரவழைத்துப் பார்க்க வேண்டும். பல டவுன்ஷிப்பிலே கூடிப் பேசுகின்ற அளவிலே மட்டும் இருக்கிறது. வேறு வசூல் வளர்ச்சித் திட்டங்கள் என்னென்ன இருக்கின்றன என்று



பார்த்தால், பல இடங்களில் ஒன்றுமே செய்யாத நிலைமை இருக்கிறது. இன்னும் பல டவுன்ஷிப்புக்கள் பெயரளவிலே மட்டும் இருக்கின்றன என்பதையும் சொல்வேன். அதே போன்று, பஞ்சாயத்து, பஞ்சாயத்துக் கூட்டுமன்றங்கள், இவற்றைப் பொறுத்தவரையில் இந்த அரசு வந்தவுடனே பொறுப்பேற்றவுடனே, இவற்றையெல்லாம் மாற்றி அமைக்க வேண்டும் என்றும், அங்கே பல தவறுகள் இருக்கின்றன என்றெல்லாம் சொன்னார்கள். அதைத் தொடர்ந்து ஒரு குழு ஒன்றை அமைத்து, வெளி மாநிலங்களுக்குச் சென்று, ஒரு அறிக்கையும் சமர்ப்பித்திருக்கிறார்கள். அதை விவாதித்து பரிசீலனை செய்த பிறகு திருத்தி அமைக்கப் போவதாகச் சொல்லப்பட்டது. முதலமைச்சருக்கு நான் ஒன்று சொல்வேன். பல காரியங்களில், தமிழ்நாடு தான் மற்றவர்களுக்கு முன்னோடியாக இருக்கிறது. மற்ற இராச்சியங்கள் நம்மைப் பின் பற்ற வேண்டிய நிலையில் தான் இருக்கிறார்கள். பஞ்சாயத்துக்கள் பற்றிப் பரிசீலனை செய்ய மத்திய சர்க்காரால் அமைக்கப்பட்ட ஒரு குழு கூட திரு. சந்தானம் அவர்கள் தலைமையில் வந்த போது, அவர்கள் சொன்னார்கள், மற்ற இராச்சியங்களுக்கு போய் விட்டு வந்த பிறகு, நம் இராச்சியத்திலே நடக்கும் பஞ்சாயத்து முறையும் நிர்வாகமும்தான், மற்ற இராச்சியங்கள் வந்து படித்துப் போக வேண்டிய நிலையில் இருக்கிறதேயல்லாது, அவர்களிடம் நாம் படிக்க வேண்டியது அவ்வளவாக ஒன்றுமில்லை என்றார்கள். ஒரு உதாரணமும் சொன்னார்கள். பெயரைக் குறிப்பிடவில்லை. ஒரு இராச்சியத்தில் தரிசுப் புறம்போக்கு நிலங்களை பஞ்சாயத்து உறுப்பினர்கள் கூடி ஏலம் விட்டு, வருமானத்தைத் தேடி, பஞ்சாயத்து நிர்வாகம் செய்கிறார்கள் என்றார்கள். அப்படிப்பட்ட நிலை நம்மிடம் கிடையாது. நம் நிர்வாகம் உயர்ந்த அளவில் இருக்கிறது. ஆகவே மற்றவர்கள், நம் இராச்சியத்திற்கு வந்து பலதுறைகளிலும் இருக்கும் நிலைமைகளைப் பார்க்க வேண்டிய அளவில்தான் நாம் இருக்கிறோம். இருக்கலாம், ஒரு சில இடத்தில் சிற்சில புகார்கள் இருக்கலாம். என்னிடத்தில் கூட புகார்கள் வந்திருக்கிறது. ஒரு சில இடங்களில் ஏலம் விடும் போது, கொடுக்கின்ற ரசீதில் ஒரு தொகை போடுகிறார்கள், கையிலே வைத்துக்கொள்ளும் டூப்ளிக்கேட்டில் வேறொரு தொகை போடுகிறார்கள் என்று புகார்கள் இருக்கின்றன. அவை அவ்வப்போது மாவட்ட அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படலாம். அப்படி ஒரு சில இடங்களில் தவறுகள் இருக்கலாம். அப்படிப் புகார்கள் வரும்போது ஆட்சிப்பொறுப்பில் இருக்கும் அதிகாரிகள், ஆர்.டி.ஓ. க்களுக்குத் தெரிவித்து, நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதில் கவனம் செலுத்த வேண்டும். அமைச்சருக்கு வரும்போதும், இலாகா செயலாளருக்கு வரும்போதும் அவை பரிசீலனை செய்யப்பட வேண்டிய ஒன்று என்று கருதி செயல்பட வேண்டும். அது பொதுமக்கள் பணம். அதைத் தனிப்பட்டவர் கையாடல் செய்திருந்தால், அவரை உடனே நீக்கிவிட்டு, மேலும், எந்த அளவுக்குப் பரிசீலனை செய்ய வேண்டுமோ அந்த அளவுக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். மேற்கொண்டு அந்த ரிபோர்ட் பற்றி என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இன்னும் முடிவு எடுக்கவில்லை என்றாலும், அந்த ரிபோர்ட் ஒரு பீதியை ஏற்படுத்தி விட்டது. இலாக்காவிலே தொன்றுதொட்டு வேலை செய்து கொண்டிருந்தவர்களுக்கு, யார் யாருக்கு வேலை போகுமோ, என்ன ஆகுமோ என்ற பீதி பணியாளரிடையே ஏற்படுத்திவிட்டது. ஒவ்வொரு அமைச்சரும் இவர்களெல்லாம் இருக்கமாட்டார்கள், முக்கிய சேவக்குகள் இருக்கமாட்டார்கள், வேறு வேலைக்குப் போவார்கள் என்பன போன்று சொல்லி வந்தார்கள். விஸ்தரிப்பு அதிகாரிகளில் பஞ்சாயத்து விஸ்தரிப்பு அதிகாரிகள், தொழில்துறை விஸ்தரிப்பு அதிகாரிகள் இப்படிப்பட்டவர்கள் எந்த எந்த சமயத்திலே எந்தெந்த வேலைக்கு அனுப்புவது, வேலையே விட்டே நீக்கி விடுவதா என்கிற சூழ் நிலை இருக்கிறது என்று சொன்னார்கள். நல்லகாலமாக, எல்லாம் அப்படியே இருக்கிறது. ஆனாலும் அது பெரிய பீதியை உண்டாக்கி விட்டது. முருகேச முதலியார் ரிபோர்ட்டில் என்ன இருக்கிறதோ என்று ஆயாசப்படும் நிலையில் ஊழியர்கள் வைக்கப்பட்டிருக்கிறார்கள். அமைப்புக்களில் தவறு இருந்தாலும், எவ்வாறு அவற்றைத் திருத்தி அமைப்பது என்பது பற்றிச் சிந்திக்கலாம். ஆனால் அவர் எங்கேயோ

போய்ப் படித்தார்கள். ராஜஸ்தானில் போய்ப் படித்து வந்தார்கள் அங்கே என்ன நடக்கிறது, எப்படி நடக்கிறது என்று அங்கே போய்ப் படித்து வந்தார்கள். நம்மைவிடத் திறமையாக, ஆற்றலோடு செயலாற்றும் பெயர்பெற்ற இராச்சியங்களுக்குச் சென்று படித்துவிட்டு அறிக்கை சமர்ப்பித்து இருந்தால், பொருத்தமாக இருந்திருக்கும். ஆனால் ராஜஸ்தானுக்குப் போய்விட்டு அறிக்கை கொடுத்து இருக்கிறார்கள். அந்த அறிக்கையின்மீது எந்த முடிவும் இன்னமும் எடுக்கப்படவில்லை.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** நம்முடைய நண்பர் அவர்கள், ராஜஸ்தான் போனார். ராஜஸ்தான் போனார் என்று இரண்டு தடவைகள் சொன்னார்கள். அவர் பேச்சில் தவறு வரக்கூடாது என்று சொல்கிறேன். அவர் போனது மத்தியப பிரதேசத்திற்கு நம்முடைய மாநிலத்தில் நிலைமைகள், அவர்கள் சொன்னபடி, பல மாநிலங்களைவிட, பல மாநிலங்களும் நம்முடைய மாநிலத்தில் பாடம் படிக்க வேண்டிய அளவிற்கு நம் துறைகள் முன்னேற்றம் அடைந்திருக்கின்றன. அவர்கள் எதற்காக மத்தியப் பிரதேசத்திற்கு சென்றார்கள் என்றால், கம்யூனிடி டெவலப்மெண்ட், சமுதாய வளர்ச்சி அமைப்பில் மாறுதல்களைச் செய்திருந்தார்கள், அந்த மாறுதல்கள் எப்படி இருக்கின்றன என்று பார்க்க வேண்டும் என்று மத்தியப் பிரதேசத்திற்குச் சென்றார்கள். அந்த மாநிலம் நமக்கு வழிகாட்டியாக இருக்கும் என்று அல்ல. குழந்தைகள் இல்லாதவர்கள் ராமேஸ்வரம் போகிறார்கள் என்றால், ராமேஸ்வரத்துத் தண்ணீரைவிட எங்களூர் தண்ணீர் நன்றாக இருக்கிறது என்பதுபோல நம்முடைய நண்பர் குறிப்பிடுகிறார்கள். அவர்கள் அந்தத் துறையை எடுத்து விட்டார்கள் ; அது சரியாக இயங்குகிறதா என்று பார்க்கவே போனார்கள். அவர் தன் அறிக்கையிலேகூட, நம்முடைய அமைப்பு நல்ல முறையிலே இயங்கிக் கொண்டிருக்கிறது என்றுதான் பரிந்துரைகள் சொல்லியிருக்கிறார்கள்.

**திரு. கோ. பூவராகன் :** ராமேஸ்வரத்திற்குப் போவதை ஒப்பிட்டார்கள். அப்படி இடம் இல்லாமல், போகாத இடத்திற்குப் போனார்களே என்றுதான் குறிப்பிட்டேன். ராமேஸ்வரத்திற்குத் தொன்றுதொட்டுப் போகும் பாரம்பரியம் இருக்கிறது. நம்பிக்கையால் போகிறார்கள். நம்பிக்கையில்லாத இடத்திற்கு, மத்தியப் பிரதேசத்திற்கு நம்பிக்கையோடு போவானேன் நம் இராச்சியத்தில் நல்ல நிர்வாகம் இருக்கிறதே........

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** நண்பர் அவர்களுக்கு ராமேஸ்வரத்திற்குப் போகாமலேயே அதற்குரிய பலன் கிடைக்கவேண்டும் என்று வாழ்த்துகிறேன். (பலத்த சிரிப்பு)

**திரு. கோ. பூவராகன் :** பலன் இப்பவே போகாமலே கிடைத்திருக்கிறது. ராமேஸ்வரத்திற்கு அதற்காகமட்டும் போவதில்லை. தெய்வ வழிபாட்டிற்காகவும், தெய்வ பக்தியுள்ளவர்கள் தேவாலயங்கள் உள்ள பல இடங்களுக்கும் கூடப் போகிறார்கள். இந்த இலாகாவைச் சரிவர நடத்த வேண்டும் என்றால் அவர்கள் மத்தியப் பிரதேசத்திற்குப் போயிருக்க வேண்டியதில்லை. அப்படி போனவருடைய அறிக்கைமீது உடனடியாக விவாதம் வைத்து, பரிசீலனை செய்ய வேண்டுவனவற்றைப் பரிசீலனை செய்து எது எதற்குத் தீர்வு காணவேண்டுமோ, அவற்றிற்குக் காண வேண்டும் என்ற வகையில் ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

பஞ்சாயத்துகளுக்கு இப்பொழுது ஒதுக்கப்பட்டிருக்கும் வருவாய் வாய்ப்புகள் மூலம் ஒரு சில நல்ல காரியங்களைச் செய்ய முடியாமல், வருமானம் போதாமல் இருந்தால், பஞ்சாயத்துக் கூட்டு மன்றத்திலிருந்து ஏதாவது கடன் கொடுத்து உதவ முடியுமா என்று பார்க்கவேண்டும்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு பஞ்சாயத்துக் கூட்டு மன்றத்தைத் தேர்ந்தெடுத்து, அங்கே பால்வாடி வகுப்பை ஏற்பாடு செய்திருந்தார்கள். ஏதோ ஓர் இடத்தோடு நிற்கவேண்டும் என்று அந்த ஏற்பாடு செய்யப்படவில்லை. படிப்படியாக, எல்லா மாவட்டங்களிலும், எல்லாப் பஞ்சாயத்துக்



கூட்டு மன்றங்களுக்கும் விஸ்தரிப்பு செய்யவேண்டும் என்ற நோக்கத்தோடுதான் ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால், ஒவ்வொரு மாவட்டத்திலும் ஓரிடத்தோடு நின்றுவிடுகிறது. மற்ற இடங்களுக்கும் ஏற்பாடு செய்யப்பட வேண்டும். பால்வாடி வகுப்புகள் எல்லா இடங்களிலும் ஏற்பாடு செய்தால், அங்கே கிராமப் புறங்களில் இருக்கும் குழந்தைகள் நன்றாக வளர்க்கப்படுவார்கள். அவர்களுடைய எதிர்காலம் நல்ல முறையில் இருக்க வேண்டும் என்று நாம் எல்லாரும் அதற்காகப் பாடுபடுகிறோம். அப்படிப்பட்ட ஏழைக் குழந்தைகளினுடைய எதிர்காலத்தை நன்றாகக் கவனிக்க வேண்டும் என்று விரும்புகிறோம். பால்வாடி வகுப்புத் திறந்து, அந்தக் குழந்தைகள் அங்கே பராமரிக்கப்பட்டு வளர்க்கப்படுவார்களானால், மேலும் கல்வியறிவுபெற்று திடகாத்திரர்களாக இருந்து, நம்முடைய நாட்டுக்கு நல்ல செல்வங்களாக இருக்க வாய்ப்பு இருக்கும். ஆகவே, பால்வாடி வகுப்புகளை அதிகப்படியாகத் திறக்கவேண்டும்.

ஆசிரியர்களுக்கு டியனர்ஸ் அலவன்ஸ் குறைவாகக் கொடுத்திருக்கிறார்கள். புதிய ஆசிரியர்களை இந்த ஆண்டு நியமித்ததாக இதிலிருந்து தெரியவில்லை. எவ்வளவு தூரம் புதிய ஆசிரியர்கள் நியமித்திருக்கிறோம் என்று பார்க்கும்போது, எங்கு பார்த்தாலும், பத்து ஆசிரியர்கள், பதினைந்து ஆசிரியர்கள் நியமிக்கவேண்டும் என்று பஞ்சாயத்துக் கூட்டு மன்றங்கள் கேட்டுக்கொண்டிருந்தும், அதற்கு அனுமதி அளிக்கப்படவில்லை. ரேஷியோ பிரகாரம் ஆசிரியர்களை நியமிப்பதற்கு அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லுகிறார்கள். அவ்வாறு இருப்பது அவ்வளவு பொருத்தமாக இருக்க முடியாது. கிராமப் புறங்களில் இருக்கும் மாணவர்களைப் பொறுத்தவரையில், அதிகமானவர்களை வைத்து ஆசிரியர்கள் சொல்லிக் கொடுத்தால், நாம் நினைக்கும் அளவுக்குக் கல்வித் தரம் நல்ல முறையில் அமையாது. இந்த ஆண்டில் எந்த எந்தப் பஞ்சாயத்துக் கூட்டு மன்றங்கள், எந்த எந்தப் பள்ளிக்கு அதிக ஆசிரியர்களை நியமிக்கவேண்டும் என்று ரேஷியோ பிரகாரம் கேட்டுக் கொண்டிருக்கிறதோ, அதற்கு உடனடியாக ஒப்புதல் கொடுக்கவேண்டும் என்று அரசாங்கத்திலிருந்து கல்வி இலாக்காவிற்கு உத்தரவு பிறப்பித்து ஆவன செய்யவேண்டும்.

300 ஜனத்தொகை இருந்தால், அங்கே பள்ளிக்கூடம் திறக்கவேண்டும் என்று நாம் ஒரு புறம் சொல்லிக்கொண்டிருக்கிறோம். மறுபுறம், கல்வி அதிகாரிகள், ஒரு மைலுக்குள்ளாக இருக்கிற எந்த இடத்திலும் பள்ளிக்கூடம் திறக்கக்கூடாது என்று சொல்லுகிறார்கள். ஆனால், ஆரம்பப் பள்ளிகளைப் பொறுத்தவரையில், அதற்காவது ஒரு விதி விலக்கு கொடுக்கவேண்டும். 300 ஜனத்தொகை இருந்தால், அந்த ஊரில் 1 முதல் 3 வகுப்புகள்வரை படிக்கின்ற குழந்தைகளுக்கு ஓராசிரியர் பள்ளிக்கூடம் திறப்பதில் ஒன்றும் தகராறு செய்யாமல், திறக்க ஏற்பாடு செய்வதற்கு ஒரு உத்தரவை நாம் திருத்தியாவது பிறப்பிக்கவேண்டும்.

இன்றைய தினம் நம்முடைய பஞ்சாயத்துக் கூட்டு மன்றங்களிலும், பஞ்சாயத்து மன்றங்களிலும் இருக்கின்ற வேலைகள் அதிகமாகிக்கொண்டு இருப்பதைப் பார்க்கிறோம். வரி வசூல் செய்வது, கணக்கு எழுதுவது இப்படிப்பட்ட வேலைகளெல்லாம் அதிகரித்திருக்கின்றன. கணக்கைச் சரியாகப் பராமரிக்கும் வேலை இருக்கிறது. சில இடங்களில், அந்தந்த பஞ்சாயத்துத் தலைவர்களால் எழுதப்படுகிறதா, வசூலில் அந்த அந்தப் பஞ்சாயத்தில் இருக்கும் மணியம், கர்ணம் ஆகியவர்கள் கவனம் காட்டுகிறார்களா என்று பார்க்க வேண்டும். அவர்கள் சரியான முறையில் அமையவில்லையென்றால், க்ரூப் சிஸ்டம் அமைத்து, ஐந்தாறு கிராமங்களுக்கு ஒருவரை நியமித்து, அந்தப் பஞ்சாயத்துக்களின் கணக்குகளை எழுதுவது, வரி வசூல் காரியங்களை முறைப்படுத்துவது, மற்றும், பஞ்சாயத்து யூனியனோடு தொடர்புகொண்டு உதவியாக இருப்பது போன்ற காரியங்களில் ஈடுபடுத்தலாம். எஸ்.எஸ்.எல்.சி. படித்துவிட்டு வந்தவர்கள் ஏராளமான பேர்கள் கிராமப் புறங்களில் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை வாய்ப்புத் தேடிக் கொடுக்கும் அளவிலும் இது அமையும். ஐந்தாறு கிராமங்களை ஒரு வரையறைசெய்து க்ரூப் சிஸ்டமாக

[திரு. கோ. பூவராகன்] [1968 மார்ச் 13

அவர்களுக்கு வேலை வாய்ப்புத் தேடிக் கொடுக்கும் அளவில் ஏற்பாடு செய்தால் நல்ல முறையில் கணக்குகளை வைத்துக்கொண்டிருக்கவும், தவறுகள் ஏற்படாமல் ஒரு பொறுப்பாக இருந்து காரியங்களைச் செய்வதற்கும் சந்தர்ப்பத்தைத் தேடிக் கொடுத்தவர்களாக இருப்போம். அதைச் செய்யவேண்டும்.

சேலம் மாவட்டம் நம்முடைய அமைச்சருடைய மாவட்டம். அந்தச் சேலம் மாவட்டத்தில் குடி தண்ணீர் வசதியைப் பொறுத்தவரையில், சேலத்திலிருந்து ராசிபுரத்திற்குத் தண்ணீர் கொண்டுபோவதாக இருந்தார்கள். ஆனால், சேலத்துக்காரர்கள், எங்களுக்கே தண்ணீர் இல்லை. ராசிபுரத்திற்குக் கொடுப்பதா, வேண்டாமா, என்ற பிரச்சினையைக் கிளப்பி இருக்கிறார்கள். ஆனால் ராசிபுரத்துக்காரர்கள் தண்ணீர் வேண்டும் என்று கேட்டு, லட்சக்கணக்கான ரூபாய் பணம் கட்டி இருக்கிறார்கள். இருந்தாலும், ராசிபுரத்திற்கு இன்றையதினம் குடி தண்ணீர் வசதி செய்துகொடுக்க ஏற்பாடு செய்யப்படவில்லை. தென்னாற்காடு மாவட்டத்தில், திருக்கோயிலூர், கள்ளக்குறிச்சி போன்ற இடங்களுக்கும் இன்னும் பல நகர பேரூராட்சி மன்றங்களுக்கும் குடி தண்ணீர் தேவையிருக்கிறது என்பதையொட்டி சர்வே செய்து, பணம் கட்டி, அனுமதி கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறது. அந்த இடங்களுக்குக் குடி தண்ணீர் வசதி செய்துகொடுப்பதில் கவனம் செலுத்த வேண்டும். குறிப்பாக, திருக்கோயிலூர் குடி தண்ணீர்த் திட்டத்தை முக்கியமாக எடுத்துக்கொண்டு, அங்குள்ள குடி தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு வழிவகை காணவேண்டும்.

விருத்தாசலம் பஞ்சாயத்தில் ஒரு பஸ் நிலையம் கட்டுவதற்கு ஓராண்டு காலமாக அவர்கள் கடனுதவி கேட்டு அதுபற்றி நம்முடைய அரசாங்கத்திற்கு வந்திருந்தும், இன்னும் அனுமதி கொடுக்காமல் காலதாமதமாக இருப்பதற்குக் காரணம் என்ன என்று தெரியவில்லை. அதற்கும் உடனடியாக அனுமதிகொடுக்க ஆவன செய்ய வேண்டும்.

விருத்தாசலம் பஞ்சாயத்துக் கூட்டுமன்றம், கம்மாபுரம் பஞ்சாயத்துக் கூட்டு மன்றம், நெல்லூர் பஞ்சாயத்துக் கூட்டு மன்றம், ஆகியவற்றின் கீழ் உள்ள பல கிராமப்புறங்களுக்குக் குடி தண்ணீர் கொடுக்கவேண்டும் என்று ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ஆனால், அதற்கும் நம்முடைய அரசாங்கம் அனுமதி கொடுக்கவில்லை. பஞ்சாயத்துக் கூட்டு மன்றத்திலேயே பொது நிதி இருக்கிறது. அதிலிருந்து, தண்ணீர் வசதிக்கென்று தொகை செலவிட்டுக்கொள்ளலாம் என்பதற்கு அனுமதிகொடுக்க ஏற்பாடு செய்தாவது தண்ணீர் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

சில பஞ்சாயத்து யூனியன்களில் பவர் ட்ரில் வாங்கியிருக்கிறார்கள், வாங்கி ஆறேழு மாதங்கள் ஆகியும், அவை இயக்கப்படாமல் அப்படியே இருக்கின்றன. அவற்றை இயக்குவதற்கு ஆள் தேவையென்று விளம்பரம் செய்கிறார்கள். அதற்கு ஆள் கிடைக்கவில்லை என்று சொல்லுகிறார்கள். நம்முடைய மத்திய ஒர்க் ஷாப்பிலிருந்து சம்பந்தப்பட்ட இன்ஜினியர்கள் அல்லது அதிகாரிகளை அனுப்பி, அப்படிப்பட்ட இடங்களில் பணிபுரியும்படியாக நம்முடைய அரசாங்கத்திலிருந்து உத்தரவு பிறப்பித்து, அந்தக் காரியங்கள் நடைபெறச் செய்யவேண்டும்.

இவ்வாறு, இந்தப் பஞ்சாயத்துக்களுக்கும், பஞ்சாயத்து யூனியன்களுக்கும், நகராட்சி மன்றங்களுக்கும் ஒதுக்கியிருக்கும் பணம் மிக மிகக் குறைவாகவே இருக்கிறது. கிராமப்புறங்கள் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றன. கிராமப் புறங்களில் முக்கியமாகக் குடி தண்ணீர் வசதி கல்வி, வசதி, சாலை வசதி ஆகியவற்றில் அக்கறை காட்டப்படவில்லை. ஆகவே, கிராமப் புறங்களின் முன்னேற்றத்திற்குவேண்டிய காரியங்களுக்கு அதிகமாகப் பணம் ஒதுக்கி, அக்கறை காட்டவேண்டும் என்றுசொல்லி, வருங்காலத்திலாவது இந்தக் குற்றச்சாட்டுக்கு இடம் இல்லாமல், கிராமப் புறங்களுக்கு நல்ல முறையில் கவனம் காட்டுவார்கள் என்ற நம்பிக்கையோடு உரையை முடிக்கின்றேன்.



1968 மார்ச் 13]

***மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தில் பல்வேறு உறுப்பினர்கள் கலந்துகொண்டு நல்ல ஆக்க பூர்வமான யோசனைகளை எடுத்துச் சொன்னதற்காக நான் முதலிலே என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சி மன்றங்கள் ஆகியவை பேராட்சிக்கு எந்த அளவுக்கு உறுதுணையாக இருந்து, சமுதாயத்தினுடைய முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டு வருகின்றன என்பதனை நன்றாக உணர்ந்து, அந்த அமைப்புக்களுக்கு மேலும் நல்ல வலிவும் பொலிவும் ஏற்படுத்திக்கொடுத்து, நல்ல அதிகாரம் உள்ள அமைப்புக்களாக அவை இயங்கவேண்டும் என்பதையெல்லாம் தெளிவாக இங்கே பலர் எடுத்துரைத்தார்கள். இந்த ஊராட்சி ஒன்றியங்கள் செயல்படுகிற முறை நாளுக்குநாள் அதிகமாகிக்கொண்டு வருவதையும் அதிலே ஈடுபட்டு இருக்கக்கூடியவர்களும், மக்களாட்சி என்ற முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கக்கூடிய தலைவர்களும் நல்ல முறையில் செயலாற்றி வருவதையும் நாம் கண்கூடாகப் பார்த்துக்கொண்டிருக்கிறோம். புதிய அரசு பொறுப்பை ஏற்றுக்கொண்டு ஓராண்டுக் காலம் ஆகிறது என்றாலும், இந்த ஓராண்டுக்காலத்தில் ஏறத்தாழ தமிழகத்தினுடைய பல்வேறு பகுதிகளில் இருக்கக்கூடிய ஊராட்சி ஒன்றியங்களுக்குச் சென்று பார்வையிடவும், தலைவர்களையும், உறுப்பினர்களையும், அலுவலகங்களைச் சார்ந்தவர்களையும் காணவும் ஆன வாய்ப்பினைப் பெற்றவன் நான். அரசியலிலே ஒரு மாறுபட்ட நிலை ஏற்பட்டு, புதிய அரசு பொறுப்பை ஏற்றுக்கொண்டிருந்தாலும் பல்வேறு ஊராட்சி ஒன்றியங்களின் தலைமைப் பொறுப்பை ஏற்றிருப்பவர்களும் நகர மன்றங்களின் தலைமைப்பொறுப்பை ஏற்றிருப்பவர்களும், ஊராட்சி மன்றங்களின் தலைமைப் பொறுப்பை ஏற்றிருப்பவர்களும் வேறொரு கட்சியிலே நீண்ட காலமாக இருந்து வருபவர்கள் என்கிற நிலை இருந்தது. அப்படிப்பட்ட நிலை இருந்ததால், இந்த ஊராட்சி ஒன்றியங்கள் கலைக்கப்பட்டுவிடும் என்ற அச்சமும் எடுத்துக் கூறப்பட்டது. ஆனாலும், எந்த அமைப்பையும் கலைப்பது நம்முடைய நோக்கமல்ல என்ற கருத்தைத் தெளிவாக எடுத்துரைத்து, ஆங்காங்கே இருக்கக்கூடிய ஊராட்சி ஒன்றியத் தலைவர்களையெல்லாம் கண்டு பேசி, அவர்களும் மனம்விட்டுக் கருத்துக்களைத் தெரிவித்து, இப்பொழுது சிறப்பான முறையில் காரியங்கள் நடைபெற்று வருகின்றன. தமிழ் நாட்டில் எந்தப் பகுதியிலும் எந்த ஊராட்சி ஒன்றியத்தின் தலைவரோ அல்லது அதிலே பணியாற்றுகின்ற அலுவலர்களோ, பயத்தைத் தங்களுடைய உள்ளத்தில் தேக்கிக்கொண்டு, பீதி நிறைந்தவர்களாக வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள் என்பது, மனத்திலே பயத்தைத் தேக்கிக்கொண்டு இருப்பவர்களுடைய வாதமாக இருக்கலாமேதவிர, அவர்களுடைய உள்ளத்திலே அப்படிப்பட்ட நிலை இருப்பதாகத் தெரியவில்லை. எந்த அமைச்சரும் எங்கும் போய், இன்னின்னாரை வேலையைவிட்டு வெளியே பி. ப. 2-00 அனுப்பப் போகிறோம், இன்னின்னார் இந்த வேலையைப் பார்க்க வேண்டும் என்று சொல்லவில்லை. "மிரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்" என்ற பழமொழிக்கொப்ப, மிரட்சியை உள்ளத்திலே தேக்கி வைத்துக்கொண்டிருப்பவர்களுக்குத்தான் அம்மாதிரியான எண்ணம்தோன்றியிருக்க வேண்டும். இவ்வாறு வெறும் யூகத்தை மட்டும் அடிப்படையாக வைத்துப் பேசிக்கொண்டு வருவது பழுத்த அரசியல்வாதிகளுக்குத் தேவையில்லாத ஒன்று என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். "வேலையில் இருப்பவர்களை வெளியே அனுப்பாதீர்கள்" என்று நீங்கள் இங்கே பேசுவதும், அதற்கு, "நாங்கள் அப்படி யாரையும் வெளியே அனுப்ப மாட்டோம்" என்று வாக்குறுதி அளிக்க வேண்டும் என்று கேட்பதும் ஊராட்சி ஒன்றியங்களில் ஏதோ சில பேர்கள் தேவையற்றவர்களாக இருக்கிறார்கள், என்பதையே எடுத்து உணர்த்துகிறது. தேவையற்றவர்களாக இருப்பவர்களை ஏன் அங்கே நியமித்தார்கள் என்று கேட்கத் தோன்றுகிறது. பொதுமக்களுடைய வரிப்பணத்திலே வசதிகளும் வாய்ப்புக்களும் அவர்களுக்கு அளிக்கப்பட்டு வந்தன. அந்த நிலைமையிலே இருந்தவர்கள், இன்றைக்கு எங்கே தங்களை

வெளியே விரட்டிவிடுவார்களோ என்ற அச்சத்தினால், பயத்தினால் அப்படிச் சொல்கிறார்கள் என்று தோன்றுகிறது. அப்படி ஊழியர்களைப் பழி வாங்க வேண்டுமென்ற நோக்கம் இந்த அரசுக்கு இருந்திருக்குமானால், ஓராண்டுக் காலத்திற்கு முன்பே இவர்கள் எல்லாம் வீட்டுக்குத் திரும்பிப் போய் இருக்கக்கூடும். நாங்கள் ஆற அமர யோசித்து, மனிதாபிமான உணர்ச்சியுடன் அவர்களை வைத்துக்கொண்டிருக்கிறோம்.

பொது பட்ஜெட்மீது கனம் பூவராகன் அவர்கள் பேசும்போது, "லாட்டரிச் சீட்டுத் திட்டத்தில் கட்சிக்காரர்களையெல்லாம் ஏஜெண்டுகளாக நியமிக்கக்கூடாது" என்று தன்னுடைய கருத்தைத் தெரிவித்தார்கள். இப்படிக் கட்சிக்காரர்களை நியமித்தால், இத்திட்டம் அரசியல் நோக்கமாக மாறிவிடும் என்ற பரந்த உள்ளத்தின் காரணமாகச் சொல்லியிருந்தால் நான் உண்மையிலேயே பாராட்டியிருப்பேன். கட்சிக்காரர்களும் இந்த நாட்டுக் குடிமக்கள்தானே மேலும் ஏஜெண்டுகளாக நியமிக்கப்படுவதற்குச் சில விதிமுறைகள் இருக்கின்றன. அதில் அரசியல் கட்சிகள் புகுந்துவிட முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த அரசாங்கத்திலே அரசியல் கட்சிகள் நிர்வாகத்திலே தலையிட்டு வந்திருக்கின்றன. சில ஊராட்சி ஒன்றியங்களில் இரண்டு பேர்கள் "பொலிடிகல் சஃப்ரர்ஸ்" என்ற முறையில் கட்சிக்காரர்களை வேலையில் வைத்துக்கொண்டிருந்தார்கள். இது எந்த வகையில் நியாயமானது என்பதை அவர்கள் சற்று எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தி எதிர்ப்புப் போராட்டத்திலே, விலைவாசிப் போராட்டத்திலே ஈடுபட்ட ஆளும் கட்சிக்காரர்களில் யாருக்காவது எங்கேயாவது வேலை கொடுக்கப்பட்டதா ? எங்கேயாவது பியூன் வேலை கொடுத்திருந்தாலும்கூட, எவ்வளவு பேருக்கு வேலை கொடுத்தீர்கள் என்ற வினாவை நீங்கள் இங்கே எழுப்பியிருப்பீர்களே, உள்ளத்தில் எந்தவிதமான அச்சமும் இல்லாத நேரத்தில், அச்சத்திற்கும், ஆயாசத்திற்கும் இடம் இல்லையென்பதைத் தெரிவித்துவிட்ட பிறகும், சமுதாய வளர்ச்சிக்காக அனைத்துக் கட்சிகளாலும் உருவாக்கப்பட்ட ஒரு புதிய திட்டம் ஏற்பட இருப்பதாகக் கூறியபின்னரும், எந்தவிதமான வேலையும் ஊராட்சி ஒன்றியங்களில் நடைபெறவில்லையென்று சொல்வது பொருத்தமாக இருக்காது என்று சொல்லிக்கொள்கிறேன். ஒதுக்கப்பட்ட நிதிகள் எல்லா இடங்களிலும் சரிவர, ஒழுங்காகச் செலவிடப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நல்லூர் கம்மாட்சிபுரம் ஆகிய பஞ்சாயத்து யூனியன்களுக்கு 1967-ல் ஒதுக்கிய தொகையைக் காட்டிலும் 1968-ல் நிச்சயமாகக் குறைத்து ஒதுக்கியிருக்க மாட்டார்கள். அமைச்சராக இருந்தவர்களுக்கு இது நன்றாகத் தெரியும். வெறும் வார்த்தை அலங்காரத்திற்கு சொல்லலாம். எந்த வேலையைப் பாதியிலே நிறுத்தி வைத்திருக்கிறோம் ? குறிப்பிட்டுச் சொன்னால் பொருத்தமுடைய வாதமாக இருக்கும். வேண்டுமென்றே நிதி குறைத்துக் கொடுக்கப்பட்டிருக்கிறதென்று கூறுவது பொருத்தமுடைய வாதமாக இருக்க முடியாது.

ஒரு கோடி ரூபாயை இந்த மானியத்திலே குறைத்திருப்பதாகச் சுட்டிக் காட்டினார்கள். நான் ஆரம்பத்திலே இதைச் சொன்னபோது அவர் இந்த அவையில் இல்லை. நாம் புதிய கிணறுகளைத் தோண்டி நீர் வழங்குகின்ற திட்டத்திற்காக ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக இதுவரை கொடுக்கப்பட்டு வந்த கடன் தொகை இப்போது வங்கிகளின் மூலமாகக் கொடுக்கப்பட வேண்டுமென்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த வகையில் சுமார் 75 லட்சம் ரூபாயை தனியாகப் பிரித்துவிட்ட காரணத்தினால் முன்பைவிட குறைந்த தொகை ஒதுக்கப்பட்டிருப்பதுபோல் தோன்றலாம். இந்த சுமார் 75 லட்சம் ரூபாயை சேர்த்து கணக்கெடுத்துப் பார்த்தால் முன்புகொடுக்கப்பட்டு வந்த தொகை குறைக்கப்படவில்லையென்பது நன்கு புலனாகும்.

இன்னொன்று 52 கோடி ரூபாயை இந்த நிர்வாகத்திலே செலவிட இருக்கிறோம் என்று கணக்கிட்டு, மொத்தத்தில் இது 24 சதவீதம் என்று சொல்வது, பத்தும் பத்தும் நூற்றுப்பத்து என்று சொல்லும்



கணக்கைப்போல இருக்கிறது. "விரைவு வண்டி" என்பதை "விறகு வண்டி" என்று படித்தவர்கள்தானே இவர்கள், எழுத்துப்பிழை........

**திரு. கோ. பூவராகன் :** நீங்கள் கொடுத்த அறிக்கையின் கடைசிப் பக்கத்தைப் பார்த்தால், அதில் 21 சதவிகிதம் என்று குறிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அமைச்சர் அவர்கள் படித்த புத்தகத்தில் 3-ம் பக்கம், 2-ம் பாராவில் 24 சதவிகிதம் என்று இருக்கிறது.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** அதைத்தான் நானும் சுட்டிக் காட்டினேன். இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே வரவினம் 228 கோடி ரூபாய் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதில் கிட்டத்தட்ட 52 கோடியே 62 லட்சம் ரூபாய் இந்த நிர்வாகத்திற்காகச் செலவிடப்படுகிறது என்று கணக்கிட்டுப் பார்த்தால் 24 சதவிகிதமாக இருக்கிறது. ஓரிடத்தில் அச்சுப்பிழையின் காரணமாக 24 சதவிகிதம் என்பது 21 சதவிகிதம் என்று மாறுபட்டிருக்கிறது. படித்தவர்கள், விவரம் அறிந்தவர்கள் இதைக் கணக்கிட்டுப் பார்க்க வேண்டும்.

**திரு. கோ. பூவராகன் :** முன்பே அச்சுப்பிழை என்று சொல்லியிருக்கலாமே..................

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** முதலிலேயே அச்சுப்பிழை என்றுதான் சுட்டிக்காட்டினேன்.

அடுத்தபடியாக, நகராட்சிகள் தூசுபடியாத சாலைகளை அமைப்பதற்காக 7½ லட்சம் ரூபாய் கூடுதலாக நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த நாடு விடுதலை பெற்ற நாளிலிருந்து கடந்த இருபது ஆண்டுக் காலமாக நகராட்சிகளுக்கு ஒதுக்கப்படாத தொகையை இந்த ஆண்டு 7½ லட்சம் ரூபாயை ஒதுக்கியிருப்பதைக் கண்டு நல்ல உள்ளம் படைத்த அத்தனை பேரும் பாராட்டுவார்கள். கடந்த காலத்தில் தங்களால் இந்தத் தொகையை ஒதுக்க முடியவில்லையேயென்று சிலர் குறைப்பட்டுக் கொள்ளலாம். நான் இந்தத் தொகையை நமது முதலமைச்சர் அவர்களிடத்தில் வாதாடிப் பெற்றிருப்பதைக்கண்டு, இன்னும் அதிகமான தொகையை முயற்சி செய்து பெற வேண்டுமென்று பரந்த எண்ணமுடையவர்கள் பாராட்டியிருக்கிறார்கள். "இந்த 7½ லட்சம் ரூபாய் போதுமா என்று கேட்டு, இது மிகமிகக் குறைவு, இது மக்களை ஏமாற்றுகிற காரியமாகும்" என்றும் சுட்டிக்காட்டினார்கள். ஊராட்சி மன்றப் பாதைகளுக்குப் புதிதாக 7·5 லட்சம் ரூபாய் 'அட்ஹாக் கிராண்ட்' வழங்கப்பட்டிருக்கிறது.

இவ்வாண்டு நிதிநிலை அறிக்கையிலே 27 லட்சம் ரூபாய்க்கு மேற்பட்ட தொகையை ஆரம்பப்பள்ளிக் கட்டடங்களுக்காகவும், பள்ளிகளிலே பணிபுரியும் ஆசிரியர்களின் குடியிருப்பு வீடுகள் கட்டுவதற்காகவும், இந்தச் சர்க்கார் ஒதுக்கிக் கொடுத்திருக்கிறது. இதற்கான ஆக்கவேலைகள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன. ஒதுக்கப்பட்ட நிதிகள் உரிய காலத்தில் போய்ச் சேராததால், சிலவிடங்களில் வேலைகள் தடைப்பட்டன என்று சொன்னார்கள். சென்ற இடைக்காலத்தில் நிதிகளை ஒதுக்குவதிலே கொஞ்சம் காலதாமதம் ஏற்பட்டது. மேலும் மாநகராட்சிக்கு ஏராளமான பணத்தை ஒதுக்கியும், மாநகராட்சி பணத்தைச் செலவு செய்யாமல் திருப்பி அனுப்பிவிட்டதாகப் பலர் எடுத்துக் கூறினார்கள். மார்ச் மாதம் 1-ம் தேதி, 2-ம் தேதி, 15-ம் தேதி என்று நிதியை ஒதுக்கி, நிதியை அனுப்பி, மார்ச் 31-ம் தேதிக்குள் லட்சக்கணக்கான ரூபாய்களைச் செலவழிக்க வேண்டுமென்று சொல்லும்போது அவர்கள் பணத்தை அவ்வளவு குறுகிய காலத்திற்குள் செலவழிக்க முடியாமல் திருப்பியனுப்பிய நிலைமையைப் பார்த்திருக்கிறோம். இப்போது பணம் உரிய காலத்தில் கொடுத்து அது செலவழிக்கப்பட்டு வருகின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய திரு. முருகேச முதலியார் அவர்களுடைய அறிக்கையின்மீது
சில கருத்துக்களை உறுப்பினர்கள் தெரிவித்தார்கள். அவர்கள் ராஜஸ்
தானத்திற்கும் மற்ற இடங்களுக்கும் போய்தான் சமுதாய வளர்ச்சித்
திட்டத்தைப்பற்றித் தெரிந்துகொள்ள வேண்டுமா? அப்படி அவசியம்
இல்லையே, நம்முடைய பெருமை எவ்வளவு சிறந்தது என்று சிலர்
கூறினார்கள். நம்மைப்பற்றி மற்றவர்கள் பாராட்டும்போதுதான் நம்
முடைய பெருமை நன்றாக விளங்கும். நம்முடைய பெருமையை
நாமே சொல்லிக்கொள்வதைவிட பிறர் பாராட்டும்போதுதான் அதில்
பெருமை சிறந்து விளங்கும். நம்மை நாமே பாராட்டிக்கொண்டு,
மற்றவர்களைத் தாழ்வாக எண்ணிப் பேசுவது நல்ல அரசியல் மரபு
அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

" சில கற்றார் கண்ணும் உளவாம்
பல கற்றார்க்கு அச்சாணி அன்னதோர் சொல் " என்னும் மொழிப்படி

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலே தமிழகத்திற்குக் கிடைத்த கரு
வூலங்களின்படி தமிழர்கள் வேறு மாநிலங்களுக்குச் சென்று நல்லவை
களை நாம் ஏற்றுக்கொள்ள முடியும் என்ற பரந்த நோக்கத்தில் இருந்து
வந்தார்கள். அந்த முறையிலேதான் திரு. முருகேச முதலியார் அவர்
கள் ராஜஸ்தானத்திற்கு அனுப்பப்பட்டார்கள். அவர் அங்கிருந்த கருத்
துக்கள் அத்தனையையும் முழுமையாக ஏற்றுக்கொண்டு செயல்படவில்லை.
சில நாட்களுக்கு முன்னால் மேலவையில் நண்பர் திரு. ராஜாராம் நாயுடு
அவர்கள் பேசும்போது, " திரு. முருகேச முதலியாருடைய அறிக்கையில்
இரண்டொரு கருத்துக்கள் மிகச் சிறப்பாக இருக்கின்றன " என்று குறிப்
பிட்டார்கள். அந்த இரண்டொரு கருத்துக்களும் இந்த மாநிலத்திற்குக்
கிடைத்தால் நல்ல பலன் கிடைக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.
தவிர, எல்லாக் கட்சித் தலைவர்களையும் அழைத்து மூன்றுமுறை விவாதம்
நடத்தினோம். மைய அரசு மாநில அரசுகளின் முதலமைச்சர்களைக்
கூட்டி, சமுதாய மாநாடு ஒன்று கூட்டி, அதில் அகில இந்திய ஏற்புடைத்
திட்டம் ஒன்றை உருவாக்க வேண்டுமென்று கருதியிருக்கிறது. இந்தத்
திட்டம் விரைவில் உருவாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்
கிறேன். எதிர்பாராத வகையில் மைய அரசு அந்த
மகாநாட்டைத் தள்ளி வைத்தது. மீண்டும் அது
கூட்டப்படும் என்று எதிர்பார்க்கிறோம். மாநாடு கூடி, எல்லா மாநிலங்
களுக்கும் ஏற்ப ஒரு திட்டத்தை வகுத்தவுடன் அதை மேற்கொள்ள
வேண்டும் என்பதுதான் இந்த அரசாங்கத்தினுடைய திட்டமாகும்.
ஆகவே இதில் அவசரப் படுவதற்கோ, மற்றவர்கள் பயப்படுவதற்கோ
ஒன்றும் இல்லை என்பதை நான் அவருடைய கவனத்திற்குக் கொண்டு
வருகிறேன்.

அடுத்து பால்வாடிகளைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். கடந்த காலத்
தில் எத்தனை மாவட்டங்களில் பால்வாடிகள் ஏற்படுத்தப்பட்டன? குறிப்
பாக ஒன்றிரண்டு மாவட்டங்களில் அதுவும் செங்கல்பட்டில் தான் பால்
வாடிகளை அமைத்திருந்தார்களே தவிர, ஒரு பேஸ்டு ப்ரொக்கிராமாக,
திட்டமிட்ட முயற்சி எதையும் சென்ற அரசு அதை விஸ்தரிப்பதற்கு
எடுக்கவில்லை. அப்படி இருந்து என் அந்தத் திட்டத்தை நிறுத்தி
விட்டீர்கள் என்று கேட்டால் பொருத்தமானதாக இருக்கும். அத்தகைய
முயற்சி எதையும் சென்ற அரசு மேற்கொள்ளவில்லை. அதற்காக
திட்டம் எதுவும் போடவில்லை. இருந்தாலும்கூட பால்வாடிகளைத் தமிழகம்
பூராவும் விரிவாக்க அமெரிக்க கேர் நிர்வாகத்தின் துணையுடன் மேற்
கொள்ள முடியுமா என்பதை இந்த அரசாங்கம் தீவிரமாகப் பரிசீ
லித்துக் கொண்டிருக்கிறது என்பதைக் கவனப்படுத்துகிறேன்.

அடுத்து, ஆசிரியர்களை நியமிப்பதுபற்றியும், புதுப் பள்ளிகளைத்
துவக்குவது பற்றியும் கூடச் சொன்னார்கள். 300 பிள்ளைகளுக்குமேல்
போகிறபோது புதிய பள்ளியை ஏற்படுத்தலாம் என்றும், ஒரு பள்ளிக்கு



ஒரு மைலுக்குள் இன்னொரு பள்ளி அமைக்கத் தேவையில்லை என்பதும் சென்ற அரசே போட்டிருந்த உத்தரவுகள்தான். முன்பு இருந்த முறை பின்பற்றப்பட்டு வருகிறதே தவிர, அப்போதிருந்த விதிமுறைகள் எதுவும் இப்போது மாற்றப்படவில்லை. இந்த அரசு வந்த பிற்பாடு ஐந்தாயிரம் ஆசிரியர்களுக்குச் சம்பள உயர்வு கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்போது மூவாயிரம் ஆசிரியர்களுக்கு ஊதிய உயர்வு கொடுக்கப்பட்டிருக்கிறது. கல்வித்துறையில் இப்போது ஏற்பட்டுள்ள வளர்ச்சியையும் கவனத்தில் எடுத்துக்கொள்ளவேண்டும்.

இன்னொன்றும் சொன்னார்கள். நகரயியல் குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவை சரியாக இயங்கவில்லை, விவரங்கள் தேவை என்றார்கள். அவர்கள் அமைச்சர் பொறுப்பில் இருந்தவர்கள். நகரயியல் குழுக்கள் தங்கள் நிர்வாக அறிக்கைகளை அரசாங்கத்திற்கு அளிக்கிறார்கள். அரசாங்கம் அவற்றை நல்லமுறையில் பரிசீலனை செய்து குறைபாடுகள் இருந்தால் எடுத்துக்காட்டுகின்றன. அவை திருத்திக்கொள்ளப்படுகின்றன. இது வழக்கமாக நடந்து வருகிற நிகழ்ச்சி. அதுபோலத்தான் இப்போதும் நடக்கிறது. ஒரு கால் நெய்வேலி டவுன் ஷிப் கமிட்டியை மனதில் வைத்துக்கொண்டு அவர்கள் சொன்னார்களோ என்று நினைக்கிறேன். அது நம்முடைய பஞ்சாயத்து ஆக்டின்கீழ் அமைக்கப்பட்டதில்லை. அதையும்கூட கொண்டுவரவேண்டும் என்பதுபற்றிக் கடிதப் போக்குவரத்து நடந்துகொண்டிருக்கிறது. இன்றைய தினம் அதற்கும் நம்முடைய ஊராட்சித்துறை நிர்வாகத்திற்கும் சம்பநதம் இல்லை என்பதை அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மற்றபடி பல பிரச்சினைகளை எடுத்துச் சொன்னார்கள். தலைவர் தேர்தல் நேரிடையாக நடைபெறவேண்டும் என்று சொன்னார்கள். ஊராட்சி ஒன்றிப்புக்கான தேர்தல் 1970ம் ஆண்டில் நடைபெற இருக்கிறது. இன்னும் கால அவகாசம் இருப்பதனால் அதுபற்றி நல்லமுறையில் ஆராய்ந்து தேவையான முடிவுகளை எடுத்துக்கொள்ளலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றிப்புச் சாலைகளை எல்லாம் பெருவழித் துறையினரே மேற்கொள்ளவேண்டுமென்று சொன்னார்கள். அது படிப்படியாக அமல் படுத்தப்படவேண்டிய திட்டம். இந்த அரசு இந்த ஆண்டு 300 மைல் சாலையை எடுத்துக் கொள்வது என்று ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். காலப்போக்கில் இவை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொரு கருத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசம்பந்தன் அவர்கள் சொன்னார்கள். அவர்களுடைய ஊராட்சி ஒன்றியம் அளவில் பெரிதாக இருப்பதனால் அதை இரண்டாகப் பிரிக்கவேண்டுமென்று சொன்னார்கள். தமிழகத்தில் ஊராட்சி ஒன்றியம் 375 தான் இருக்க வேண்டும் என்பதாக எண்ணிக்கையை மைய அரசு நிர்ணயித்திருக்கிறார்கள். அதைக் கூட்டுவது என்பது இயலாத காரியம். இருப்பதைத்தான் குறைத்துக் கூட்டி மாற்றிக்கொள்ளலாம். மைய அரசு நிர்ணயித்துள்ள எண்ணிக்கையை அதிகப்படுத்துவதற்கு உரிமையில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன். அவற்றிற்கு நிதி வழங்குகின்ற முறையில் எ.பி.ஸி.டி. என்று நான்கு பிரிவுகளாகப் பிரித்து அந்த அந்த வட்டாரத்தின் பிற்பட்ட தன்மையை மனதில் கொண்டு இருக்கக்கூடிய பொருளாதார நிலைக்கேற்ப நிதி உதவி அளிக்கப்பட்டு வருகிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

கடன் வழங்குவதை ஊராட்சி மன்றங்களில் இருந்து எடுத்துவிட்டால் சங்கடம் ஏற்படும் என்று சொன்னார்கள். அந்தக் குறைபாடு ஏற்படாத வகையில் அவர்கள் செய்துவந்ததுபோல விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு, மிக விரைவாக விவசாயிகளுக்குக் கடன் வழங்கும் திட்டத்தை அரசு மேற்கொள்ளும் என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் ஹபிபுல்லா பேக் தெளிவாகச் சிலவற்றைக் குறிப்பிட்டுக் காட்டினார்கள். மாநகராட்சி மன்றத்தின் நிதி நிலைமைகளை எடுத்துச் சொன்னார்கள். மைய அரசினிடம் இருந்து அவர்களுக்குச் சேரவேண்டிய பணத்தைக்கூட வசூலித்துக்கொடுப்பதற்கு இந்த அரசு தீவிரமாக வலியுறுத்திக்கொண்டிருக்கிறது. அவர்கள் இன்னொரு முக்கியமான கருத்தை எடுத்துச்சொன்னார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் மாநகராட்சி மன்ற விவாதங்களில் கலந்துகொள்வதற்கும் அதுபோல மாநகராட்சியின் மேயர் சட்டசபைக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்கும் ஆவன செய்யவேண்டும் என்றார்கள். மாநகராட்சியின் தந்தை சட்டமன்றக் கூட்டத்தில் கலந்துகொள்ளவேண்டுமென்றால் அதற்கான சட்டத் திருத்தத்தை நாடாளுமன்றத்தில் செய்தாகவேண்டும். நமக்கு உரிமை கிடையாது. அதற்குக்கூடத் தேவையில்லை. மாநகராட்சி உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகிற ஒருவர் மேலவையில் அங்கம் வகிக்கிறார். இன்றையதினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையே அவர்கள்தான் தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கிறார்கள். அவர்களுடைய பிரதிநிதியாக அவரே இருக்கிறபோது மேலும் மாநகராட்சியின் தந்தை இடம்பெறவேண்டும் என்கிற அவசியம் இல்லை என்று நான் கருதுகிறேன்.

இன்னொன்று இந்த நேரத்தில் மாமன்றம் நடந்துகொண்டிருக்கிற காரணத்தினால் அதையும் பேரவையின் கவனத்திற்கு வைக்க விரும்புகிறேன். நம்முடைய நகராட்சி மன்றத்தேர்தல் பற்றிய விளக்கம். சென்னையில் உலகத் தமிழ் மாநாடு நடந்தது, கும்பகோணம் மாமாங்கம் வந்தது, இண்டர்நாஷனல் ஃபேர் நடந்தது. இவற்றை எல்லாம் ஒட்டித் தேர்தலைத் தள்ளி வைத்திருந்ததை நீங்கள் அறிவீர்கள். மேலும் சென்னை மாநகராட்சி வார்டுகளை 100-இல் இருந்து 120 ஆக ஆக்கியிருப்பது பற்றியும் பரிசீலிக்கவேண்டியிருந்தது. தென்காசி இடைத்தேர்தல் வருவதனால் ஒத்திவைக்கப்பட்டது. இறுதியாக அதுபற்றி முடிவை அறிவிக்க விரும்புகிறேன். சென்னை மாநகராட்சிக்கான தேர்தல் 1968 ஆகஸ்டு திங்கள் முதல் வாரத்தில் நடைபெறும். மற்ற நகராட்சிகளின் தேர்தல்கள் 3 பிரிவுகளாக 1968 செப்டம்பர் இறுதி வாரத்தில் இருந்து அக்டோபர் முதல் வாரத்திற்குள் நடைபெறும். என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து பாதாளச் சாக்கடைத் திட்டத்தைப் பற்றிப்பலரும் குறிப்பிட்டுச் சொன்னார்கள். நம்முடைய நிதி நிலைமை எந்த அளவுக்கு இருக்கிறது என்பதை நீங்கள் தெளிவாகத் தெரிந்துகொண்டிருக்கிறீர்கள். ஒருசில லட்சத்தில் நிறைவேற்றக்கூடிய திட்டம் அல்ல. பலகோடி ரூபாய்களைச் செலவழிக்கவேண்டும். மத்திய அரசின் உதவியையும் கூட எதிர்பார்க்கிறோம். தஞ்சை மாநகருக்கு அமைச்சர்கள் எல்லோரும் போய் இருந்தோம். அப்போது அவர்கள் ஒரு வரவேற்புப் பத்திரத்தை வாசித்தளித்தார்கள். அதில் சோழர் காலத்தில் துவங்கப்பட்டு நிறைவேறாமல் நின்றுபோய்விட்ட பாதாள சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்றித் தரும்படியாகக் கேட்டார்கள். நான் பதிலளிக்கையில் உங்களுடைய கோரிக்கை நியாயமானது, என்னிடம் சாவி தான் இருக்கிறது, பெட்டி முதலமைச்சரிடம் இருக்கிறது. அவரிடம் கேட்கிறேன். அவர் கொடுத்தால் நான் உங்களுக்கு வாங்கித் தருகிறேன் என்று சொன்னேன். எனக்கு பின்னால் பேசிய முதலமைச்சர் அவர்கள் காலதாமதமே தேவையில்லை பெட்டி இதோ இருக்கிறது. திறந்து பார் என்றார்கள். (சிரிப்பு) பெட்டி பெரிதாக இருக்கிறதே தவிர இன்றைக்கு உள்ளே ஒன்றும் இல்லை. சோழர் காலம் மிகவும் வளமான காலம், அவர்கள் காலத்திலேயே நின்றுபோன பாதாளச் சாக்கடைத் திட்டம், சோழர் காலத்தில் நிறைவேற்றப்படாது போனதையும் பொறுத்துக்கொண்டார்கள். சோழர் காலத்திற்கு பிறகு நாயக்க மன்னர்கள் 400 ஆண்டுக்காலம் இருந்தார்கள். அப்போதும் நிறைவேற்றப்படவில்லை. பொறுத்துக்கொண்டார்கள். நாயக்க மன்னர்கள் ஆட்சிக்காலத்திற்குப்பின்னால் இருநூறு ஆண்டுக்காலம் ஆங்கிலேயர்கள் இந்த நாட்டை ஆண்டிருக்கிறார்கள். அப்போதும் அந்தத் திட்டம் நிறைவேற்றப்படவில்லை, பொறுத்துக்கொண்டார்கள்,





ஆங்கிலேயர்களுக்குப் பின்னால், தஞ்சை நகராட்சித் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கின்றவர்களின் கட்சியைச் சேர்ந்தவர்கள் இருபது ஆண்டுக் காலம் ஆட்சியிலிருந்தார்கள். அவர்களுடைய காலத்திலும் அந்தத் திட்டம் நிறைவேற்றப்படவில்லை, பொறுத்துக்கொண்டார்கள். அதற்குப்பிறகு நாங்கள் மார்ச் மாதம் ஆறும் நாள் பதவியேற்று, ஏப்ரல் மாதம் இரண்டாம் நாள் அங்கே போனோம். இடையிலே இருக்கின்ற இருபத்தைந்து நாட்கள் இடைவெளிக்காலத்திலே சோழர்கள், காலத்திலிருந்து நிறைவேற்றப்படமுடியாததை உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்று சொன்ன கட்சியை அன்று பார்த்தோம். சோழர்களிடம் இல்லாத திறமை, நாயக்க மன்னர்களிடம் இல்லாத திறமை, ஆங்கிலேயர்களிடம் இல்லாத திறமை, இதற்கு முன்னால் ஆண்டவர்களிடம் இல்லாத திறமை, நமக்கு இருக்கிறது என்று நினைத்துக்கொண்டு மெத்த மகிழ்ச்சி கொண்டிருந்தாலும், நிதி நிலைமையைப் பொறுத்துப் படிப்படியாகத்தான் நிறைவேற்ற முடியுமென்று சொன்னோம். அதையே இம் மாமன்றத்திற்கும் சொல்ல விரும்புகிறேன்.

ஜீப் கார்பற்றிச் சொன்னார்கள். இது ஒரு பெரிய பிரச்சினைக்குரியதாக இருக்கிறது. சட்ட மனற உறுப்பினர்கள் தங்களுடைய தொகுதிகளுக்குப் போகின்றபொழுது ஆணையாளர்களையும் அழைத்துப்போகின்ற உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. அது மறுக்கப்பட்டிருக்குமானால் அதைப்பற்றி நடவடிக்கைகள் எடுக்க முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்படும். ஜீப் கார்கள் பல நல்ல காரியங்களுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன என்று சொல்கிறார்கள். ஜீப் கார்கள் நீண்ட நாட்கள் ஓடியதால் பழுதடைந்து இருப்பதாகச் சொன்னார்கள். அதுபற்றிக் கவனிக்க முயற்சியெடுத்துக் கொள்ளப்படும்.

நகராட்சி உயர்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரையில் 50 சதவீதம் அரசினருடைய மானியத்தைப் பெற்றுதான் நடத்திக்கொண்டு வருகிறார்கள். அவற்றையெல்லாம் அரசாங்கமே எடுத்துக் கொள்ளவேண்டுமென்பது கொள்கையளவிலே இருந்தாலும், நிதிநிலைகளைப் பார்க்கும்பொழுது உடனடியாக அவற்றை எடுத்துக்கொள்ள இயலாத நிலைமை இருக்கிறது. ஆகவே, அவற்றிற்கு கொடுக்கக்கூடிய நிதியுதவியைக் கொஞ்சம், அதிகமாகக் கொடுக்கமுடியுமா என்பது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. முடியுமானால் அவற்றிற்கு மேற்கொண்டு கொஞ்சம் நிதிகொடுக்க அரசு முயற்சிசெய்து வருகிறது.

பேசிய அங்கத்தினர்கள் பல நல்ல கருத்துக்களைச் சொன்னார்கள். நான் அவ்வளவுக்கும் பதில் சொல்லாததால் அவ்வளவு கருத்துக்களையும் கணக்கிலே எடுத்துக்கொள்ளவில்லை என்ற கருத்தல்ல. நீங்கள் சொல்லியிருக்கின்ற அத்தனை கருத்துக்களும் உன்னிப்பாகக் கவனிக்கப்பட்டு, ஏற்றுக்கொள்ளத்தக்கவையெல்லாம் ஏற்றுக்கொள்ளத்தக்க அளவுக்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படலாம் என்று சொல்லிக்கொண்டு, ஏற்கனவே ஒதுக்கப்பட்டிருக்கின்ற நிதி ஒதுக்கீடு மிக மிகக் குறைந்தது என்று நீங்களே சொல்லிவிட்டீர்கள். ஆகவே, மேலும் நிதியைக் குறைக்காது வெட்டுத் தீர்மானங்களைக் கொடுக்காமலே பெருந்தன்மையுடன் அவற்றைத் திரும்பப் பெற்றுக்கொண்டு இந்த மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தரவேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

DR. H. V. HANDE: Sir, I want a clarification from the Hon. Minister since I do not want the figures given by him both during the introductory speech and the reply to go on record. He has stated that as compared to the last year there has been a reduction of only Rs. 1 crore and that about Rs. 75 lakhs, that is three-fourth of the crore of rupees has been transferred under different heads. I have looked into the records and nowhere has such a thing been mentioned. It is only with regard to the grant-in-aid to

Panchayats, it has come down from Rs. 81·92 lakhs to about Rs. 31 lakhs, that is about half a crore of rupees. I want an explanation from the Hon. Minister regarding this aspect of the matter.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** ஊராட்சி ஒன்றியங்களிலே நீர் வழங்குகின்ற திட்டத்திற்கு ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து சில தொகைகளை ஒதுக்குகிறோம். வேளாண்மைத் துறையிலிருந்து சில தொகைகளை ஒதுக்குகிறோம். ஊராட்சி ஒன்றியங்களின் மூலம் ஒதுக்குவதற்குப் பதிலாக இப்பொழுது நில அடைமான வங்கிகள் சென்ட்ரல் பாங்க் மூலமாகக் கொடுப்பதால் இந்த ஆண்டு அந்தத் தொகை குறைந்திருக்கிறது என்ற கணக்குத்தான் காட்டப்பட்டிருக்கிறது.

**Dr. H. V. HANDE :** The grant-in-aid accounts for only half a crore of rupees. As regards Will Subsidy Scheme, from about Rs. 60 lakhs in 1967–68 it has come down to about Rs. 55 lakhs, a reduction of Rs. 5 lakhs in 1968 69. Sir, I want the whole matter to be investigated. My little knowledge of Mathematics does not allow me to go without seeking clarification in the matter.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** பரிசீலித்ததற்குப் பின்னர் அதுபற்றி விளக்கம் தரலாம்.

**திரு. நா. காசிராமன் :** லோக்கல் டெவலப்மெண்ட் ஒர்க்ஸ் . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அதே விளக்கம்தானா ?

**திரு. நா. காசிராமன் :** ஆம். லோக்கல் டெவலப்மெண்ட் ஒர்க்ஸ் என்ற தலைப்பின் கீழ் 1966–67 ஆம் ஆண்டிற்கு 71 லட்ச ரூபாய் என்று போடப்பட்டிருக்கிறது. 1967–68-ஆம் ஆண்டு 60 லட்சம் என்றும் 1967–68 ரிவைஸ்டு 60 லட்சம் என்றும் கொடுக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் 1968–69-லே 55 லட்சம் என்றுதான் போட்டிருக்கிறார்கள். அதே மாதிரி கிராண்ட்ஸ்-இன்-எய்ட் பொறுத்தவரையிலும் அப்படித்தான் இருக்கிறது. இதற்கு எந்த அக்கவுண்டுக்கு மாற்றப்பட்டிருக்கிறது என்பதற்கு மெமொரண்டம் கொடுக்கப்படவில்லை. இதைத் தெரிந்து கொள்ளவேண்டுமென்பதற்காகத்தான் நான் கேட்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** கனம் அமைச்சர் அவர்கள் சொன்னது ஒரு தலைப்பிலிருந்து இன்னொரு தலைப்பிற்கு மாற்றப்பட்டது பற்றி அல்ல. இந்த ஒதுக்கீட்டிலே இன்ஸ்டிடியூஷனல் ஃபினான்ஸ் என்று வருவதாலே குறைந்து காணப்படுகிறது என்ற கருத்திலேதான் சொல்லியிருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் பதிலளித்துவிட்ட பிறகு இரண்டு கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன். மதிப்பிற்குரிய நம்முடைய நண்பர் திரு கே. பி. எஸ். மணி அவர்கள் முருகேச முதலியார் தம்முடைய அறிக்கையில் பஞ்சாயத்து யூனியன் சேர்மன்களை * * என்று குறிப்பிட்டதாகச் சொன்னார்கள். நான் அந்த அறிக்கையை ஏற்கனவே படித்தது மட்டும் அல்லாமல் இப்பொழுதும் படித்தேன். எந்த இடத்திலேயும் அந்த வார்த்தை பஞ்சாயத்து யூனியன் சேர்மனைப் பற்றியோ வேறு எந்தத் தலைப்பிலுமோ வரவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு அதிகாரி வெளியிட்ட அறிக்கையில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவரை அச்சொல்லால் குறிப்பிட்டதாகச் சொல்லப்பட்டது அவைக் குறிப்பிலே இருக்குமானால் அது பொருத்தமற்றதாகாது என்பதற்காக நான் இதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

* * பேரவைத் துணைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டபடி, அந்தச் சொல் அவைக் குறிப்பிலே இருப்பது பொருத்தமற்றதாக இருக்கும் என்ற காரணத்தால் அந்தச் சொல்லைப் பேரவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடும்படி கட்டளையிடுகிறேன்.

**மாண்புமிகு திரு சி. என். அண்ணாதுரை :** இன்னும் ஒரே ஒரு கருத்து. நம்முடைய நண்பர்கள் எல்லாம் பேசியபொழுது ஒரு கருத்தைப் பொருத்தமாகச் சொல்லிக்கொண்டு வந்தார்கள். எந்தத் தலைப்பின்கீழே பேசுவதாக இருந்தாலும் இந்த அரசு நகரங்களைக் கவனிக்கின்ற அளவுக்குக் கிராமங்களைக் கவனிப்பதில்லை என்ற பல்லவிக்கு ஏற்றவாறு இன்றையதினம் கிராமங்களில் பாதை அமைக்க, குடிநீர் வழங்க பணம் ஒதுக்கப்படவில்லை என்று சொன்னார்கள். கிராமங்களுக்கு இப்பொழுது செலவழிப்பதைவிட இன்னும் அதிகமாகச் செலவழிக்கப்பட வேண்டும் என்பதை நான் முழுக்க முழுக்க வரவேற்கிறேன். அது எல்லா உறுப்பினர்களாலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. கிராம வளர்ச்சிதான் நாட்டின் வளர்ச்சி என்பது விவாதத்திற்குப் பிறகுதான் ஒப்புக்கொள்ளப்பட வேண்டிய நிலை இல்லை, விவாதிக்காமலேயே ஒப்புக்கொள்ளக்கூடிய நிலையில் தான் எல்லோரும் இருக்கிறார்கள். கிராமப் பாதைகள் சீரமைக்க ஒதுக்கப்படுகிற பணம் குடிநீருக்காக என்று ஒதுக்கப்படுகின்ற பணம் என்று பார்க்காமல் பொதுவாக நீர்ப்பாசனத்திற்காக என்று ஒதுக்கப்படுகின்ற பணம் அவ்வளவும் கிராமத்திற்குத்தான் என்பதை மறந்துவிடக்கூடாது. ஒவ்வொரு ஆண்டும் போடப்படுகின்ற முதலீடும் கிராமப்புற வளர்ச்சிக்குத்தானே தவிர சென்னையைப் போன்ற நகரங்களுக்காக அல்ல. சமுதாய நலத் திட்டங்கள் எல்லாம் கிராமப்புறத்தை மனதிலே வைத்துத்தான் செய்யப்படுகின்றனவே தவிர, சென்னை, செங்கல்பட்டு போன்ற நகரங்களை வைத்துச் செய்யப்படுவன அல்ல. கிராமப் புறங்களிலே பள்ளிக்கூடங்கள் கட்டுவதாய் இருந்தாலும், மருத்துவமனைகள் கட்டுவதாய் இருந்தாலும், மனமகிழ் மன்றங்கள் கட்டுவதாய் இருந்தாலும் மக்கள் கொடுக்கின்ற பணத்தின் அளவுக்குச் சர்க்கார் கொடுக்கின்ற பணமும் சேர்க்கப்பட்டு வருகின்றன. பஞ்சாயத்துக்கள் எந்த அளவுக்கு வரி வசூலிக்கின்றனவோ அந்த அளவுக்கு மேச்சிங் கிராண்ட் தரப்படுவது கிராமங்களுக்குத்தான். நம்முடைய நண்பர்கள் கிராமப் புறங்களுக்காகப் பரிந்து பேசினார்கள். அதை நான் வரவேற்கிறேன். அந்த அளவுக்கு அவர்கள் கிராமத்தோடு தொடர்பு கொண்டவர்களாக இருப்பார்களானால் நான் மெத்த மகிழ்ச்சியடைவேன். கிராமத்திற்கு எதுவும் செய்யவில்லை என்று சொல்லி, இந்த அரசு கிராமத்தையே புறக்கணித்துவிட்டது என்று சொல்லிக்கொண்டு வருவதன் மூலம் அவர்கள் போட்டு வருகின்ற அஸ்திவாரத்திற்கு இன்னும் இரண்டு கற்களை வைக்கிறார்கள். நான் சொல்லுவது, கட்டடம் கட்டுவதற்கு ரொம்ப நாளைக்கு முன்னாலேயே அஸ்திவாரம் போடுகிறீர்களே, சலித்துப் போய்விடுமே, அலுத்துப் போய்விடுமே, இதையெல்லாம் தேர்தலுக்கு ஒரு வருஷத்திற்கு முன்னாலே ஆரம்பித்து நடத்தினால் பிரசார முறையில் கூட பலன் கிடைத்திருக்கும். ரொம்ப முன்னாடியே ஆரம்பிக்கிறீர்கள். முதல் காட்சியிலேயே சீதையை அசோகவனத்தில் உட்கார வைப்பது போல் உங்கள் பிரசாரம் இருக்கிறது. அது உங்களுடைய இஷ்டம் ; நான் அதிலே குறுக்கிட விரும்பவில்லை. பி.ப. 2–30

கிராமப்புறங்களில் என்ன செய்யப்பட்டு வருகிறது என்பதைப் பார்க்கும்போது நீர்ப்பாசனத்திற்காகச் செலவழிக்கப்படுகிற செலவை கிராமக் கணக்கில்தான் எடுத்துக் கொள்ள வேண்டும். கிராமப் புறங்களில் விவசாயத்திற்காக மின்சாரத்தை வழங்குகிறோம். மின்சார உற்பத்திச் செலவு நிலத்திற்குப் போய்ச் சேருகிற

அளவுக்கு யூனிட்டுக்கு 16 பைசா ஆகிறது. விவசாயிகளிடம் வசூலிப்பது 9·2 பைசாதான். இதிலே யூனிட்டுக்கு 7 பைசா கிராமத்திற்காக நாம் காட்டுகின்ற சலுகை என்ற முறையிலேதான் எடுத்துக் கொள்ள வேண்டும். கிராமங்கள் இன்னும் சலுகை பெற வேண்டுமென்ற வாதத்தை நான் மறுக்க வில்லை. நிரம்பப் பெற வேண்டும். கிராமப் புறங்கள் புறக்கணிக்கப்படுகின்றன என்ற வாதம் ரொம்ப அவசரப்பட்ட வாதம், ஒரு வருஷத்தில் கிராமப்புறங்கள் அடியோடு புறக்கணிக்கப்பட்டு விட்டன என்று சொல்லுவது ரொம்ப அவசரமான வாதம். நீங்கள் ஒரு வருஷம் கூடக் காத்துக் கொண்டிருக்கவில்லை. முதல் பட்ஜட் சமர்ப்பிக்கிப்பட்ட நேரத்தில் " இது கிராமத்திற் கேற்ற பட்ஜட் அல்ல ; நகரத்திற்கான பட்ஜட் " என்று சொன்னீர் கள். இதை நீங்கள் பிரசாரத்திற்காக வைத்துக் கொண்டிருக்கி றீர்கள். கிராமத்திலே உள்ள மக்கள் இதையெல்லாம் நீங்கள் சொன்னால் நம்பி விடுவார்கள் என்று எண்ணிக் கொண்டிருக்கிறீர் கள். அதுதான் இல்லை.

புஞ்சை நிலங்களுக்கு வரி நீக்கப்பட்டிருக்கிறது. அதனால் கிராமப் புறங்களுக்குத்தான் பயனே தவிர, சென்னை நகரத்திற்கு எந்த விதப் பயனும் இல்லை. இரண்டு போகம் விளைவிக்கின்ற தஞ்சை மாவட்டத்திலுள்ள நிலங்களுக்கு " வாட்டர் ரேட் " தர வேண்டியதில்லை என்று சொல்லியிருக்கிறோம். அதுவும் கிராமத்திற்காகத்தான். கிராமங்களில் பாதை வசதிகள் சரியான முறையில் செய்யப்படவில்லை என்று சொல்லப்படுகிறது. நகரங் களிலே சில வசதிகளை ஏன் செய்கிறோம் என்பதைப் பார்க்க வேண்டும். மொத்தத்தில் நகராட்சி மன்றங்கள், பஞ்சாயத்து கள், கார்ப்பரேஷன் இவைகளுக்கெல்லாம் வரக்கூடிய வருவாயில் பெரும்பகுதி வருவாய் ஹவுஸ் டாக்ஸ் மூலந்தான் கிடைக்கிறது. மொத்தமாக வீட்டு வரி மூலம் கிடைக்கக்கூடிய வருமானம் ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 554·75 லட்சம். இதிலே, சென்னை கார்ப்ப ரேஷன் தவிர மற்ற நகராட்சிகளில் வசூலிக்கப்படுகிற தொகை ரூ. 455 லட்சம். கிராமங்களில் வசூலிக்கப்படுவது 99·75 லட்சம். வெண்ணெயின் அளவுதான் நெய் காய்ச்சப்படும் என்பதைப் போல் அவர்களிடமிருந்து கிடைக்கும் வருவாயின் அளவுக்குத்தான் காரியங்கள் நடக்கும். 455 லட்சம் ரூபாய் வீட்டு வரியாகக் கொடுக்கிறார்கள். அவர்களுக்கேற்ற சில வசதிகளைச் செய்கிறோம். இன்னொன்றையும் நண்பர்கள் மறந்துவிட்டுப் பேசுகிறார்கள் இன்றைய நகரங்கள் அவ்வளவும் கிராமப் புற மக்களால் நிரப்பப் பட்டு வருகின்றன. கிராமப் புறத்தில் இருப்பவர்களில் பெரும் பாலானவர்கள் நகரப் புறத்திற்கு வந்து அதனுடைய சகல வசதிகளையும் அனுபவிக்கிறார்கள். நான் முன்னாள் அமைச்சர் அவர்களை மனத்தில் வைத்துக் கொண்டு பேசவில்லை. அனுபவிக்க வேண்டிய வயது, அனுபவிக்கட்டும். வேண்டா மென்று சொல்லவில்லை. பொதுவாக, வேலை இழந்தவர்கள், வேலை இல்லாதவர்கள் அனைவரும் கிராமப் புறங்களில் இருந்து நகரப் புறத்திற்கு வந்திருக்கிறார்கள் என்பதால் நகரப் புறத்தில் செய்யப்படுகிற வசதிகள் எல்லாம் கிராமப் புற மக்களுக்கும் பயன்படுகின்றன. 99·75 லட்ச ரூபாய் வீட்டு வரியாக வசூலிக்கப் படுகிற கிராமப் புறங்களுக்கு அதே அளவுக்கு மார்சிங் கிராண்ட் என்று சர்க்கார் தருகிறது. அதாவது 99·75 லட்சம் ரூபாய் தருகிறது. நகரப் புறத்தில் வசூலிக்கப்படுகிற 455 லட்ச ரூபாய்க்காக எந்த முனிசிபாலிட்டிக்கும் மாச்சிங் கிராண்டு தருவதில்லை இதைச் சொல்லுகிறபோது கொஞ்சம் அச்சத்தோடு சொல்லுகிறேன். "ஓஹோ, பதிய தலைப்பு ஒன்று கிடைத்துவிட்டது " என்று நண்பர் கருத்திருமன் கருதுகிறார். " நகரத்தைப் பாழ்படுத்துவ தாக அவரே ஒப்புக் கொண்டார் " என்று பேசுவார்களோ என்ற அச்சத்தோடு சொல்லுகிறேன். அது தெரிந்திருந்தாலும்



அதைப்பற்றிச் சொல்வதற்கு காரணம், அவ்வாறு பிரச்சாரம் செய்தால் அதற்கும் தகுந்த பதில் இருக்கிறது என்ற காரணத்தால்தான். அதை முன்னாடியே சொல்ல வேண்டாமென்பதால் சொல்லவில்லை. கிராமப் புறங்கள் புறக்கணிக்கப்படுகின்றன என்ற குற்றச்சாட்டு தவறானது, ஆதாரத தின் மீது எழுந்தது அல்ல என்பதைச் சொல்லி, இன்னும் அதிக மான அளவுக்குக் கிராமப்புறங்களுக்கு நன்மைகள் செய்யப்படவேண்டுமென் பதை நான் முழுக்க முழுக்க ஆதரிக்கிறேன், அதற்கேற்றபடி எதிர்காலத் திலே நிலைமைகள் உருவாகும் என்ற நம்பிக்கையைத் தெரிவித்து, இதிலே எடுத்துச்சொல்லப்பட்ட இரண்டு குற்ற சாட்டுகளும் ஆதாரமற்றவை என்பதைத் தெரிவித்து முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** விவாதங்கள் இத்துடன் முடி வடைந்தன. இப்பொழுது வாக்கெடுப்பு.

மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. வை. சுவாமிநாதன், திரு. சோ. அழகர்சாமி, திரு. கொ. இர. ஞானசம்பந்தன் ஆகியோர் தங்களுடைய வெட்டுத் தீர்மானங்களை வற்புறுத்தாமையினால் அவ்வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்படுகின்றன.

மாண்புமிகு உறுப்பினர் திரு. கரு. சீமைச்சாமி அவர்கள் இருப்பிடத்தில் இல்லாமையினால் அவருடைய வெட்டுத் தீர்மானம் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டதாகக் கருதப்படுகிறது.

அடுத்து, அவை முன்னுள்ள கேள்வி—

" கோரிக்கை எண் 23—சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன என்ற தலைப்பின் கீழ் ரூ. 5,61,73,600-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. கே. சகாதேவக் கண்டர் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது.

திரு. என். வரதராஜன், திரு. கே. பி. எஸ். மணி தங்களுடைய வெட் டுத் தீர்மானங்களை வற்புறுத்தாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங் கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டன வாகக் கருதப்படுகின்றன.

அடுத்து, அவை முன்னுள்ள கேள்வி—

" கோரிக்கை எண் 29—பொதுப் பணிகள்—உதவி மானியங் கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,74,97,700-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப் பட்டது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இப்பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று நாளை காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை ஒற்றிவைக்கப்பட்டது.

4. பேரவையில் வைக்கப்பட்ட ஏடுகள்.

## A. Statutory Rules and Orders.

*Nil.*

## B. Reports, Notifications and Other Papers.

* 36. Speech by Hon. Thiru S. J. Sadiq Pasha, Minister for Public Health—Demand for Public Health Grants, 1968–69 (English).

* 37. Special Water-Supply and Drainage Schemes, 1968–69 (English).

† 38. Speech by Hon. Thiru S. J. Sadiq Pasha. Minister for Public Health — Demand for Public Health Grants, 1968–69 (Tamil).

† 39. Special Water-Supply and Drainage Scheme, 1968–69 (Tamil).

† 40. Speech of Hon. Thiru S. J. Sadiq Pasha, Minister for Public Health, while moving the Demand 38 — Capital Outlay on Public Health (English and Tamil).

† 41. Speech by Hon. Thiru S. J. Sadiq Pasha, Minister for Public Health — Demand for Medical Grants, 1968–69 (English and Tamil).

† 42. Note on Urban Water-Supply and Drainage Schemes (English).

‡ 43. Note on Urban Water-Supply and Drainage Schemes (Tamil).

* Despatched to Members on 9th March 1968.
† Despatched to Members on 11th March 1968.
‡ Circulated in the Chamber on 13th March 1968.



APPENDIX I.

[ *Vide* Answer to Starred Question No. 200 on page 461]

*Statement showing the procurement of paddy in Grade I temple in Thanjavur district.*

| Serial number, name of the institution, village, taluk and district. (1) | Quantity of lease paddy due as on 30th June 1965. (2) K. | M. | P. | Remarks if any. (3) |
|---|---|---|---|---|
| 1 Sri Kasi Mutt Religious Charities, Thiruppanandal, Kumbakonam taluk, Thanjavur district. | 7,871 | 8 | 3 | |
| 2 Sri Navaneetheswaraswamy Temple, Sikkil, Nagapattinam taluk, Thanjavur district. | 6,355 | 0 | 2 | |
| 3 Sri Bavaoushadeeswarar Temple, Thiruthuraipoondi town and taluk, Thanjavur district. | 2,372 | 9 | 0 | |
| 4 Sri Parimalarenganathaswamy Temple, Thiruindalur, Mayuram taluk. | 11,750 | 2 | 2 | |
| 5 Sri Pasupatheeswarar Temple, Pandanallur, Kumbakonam taluk. | 5,387 | 8 | 1½ | |
| 6 Sri Swaminathaswamy Temple, Swamimalai, Kumbakonam Taluk. | 2,202 | 5 | 0 | |
| 7 Sri Akshayalingaswamy Temple, Kivaloor, Nagapattinam taluk. | 61,248 | 2 | 1½ | Out of this a quantity of Ks. 43,755-4-½ is in dispute due to Rent Reduction Act of 1947 in O. A. No. 10/59 and S.T.A. No. 19/60. |
| 8 Sri Kayarohanaswamy and Neelayathakshiammen Temple, Nagapattinam town and taluk. | 9,106 | 4 | 0 | A sum of Rs. 7,546 deposited by the lessees for arrears was adjusted for 672 kalams, 7 marakkals 1 measure in fasli 1375. |
| 9 Sri Sarangapaniswamy Temple, Kumbakonam town and taluk. | 20,984 | 6 | 1 | |
| 10 Sri Mayuranathaswamy Temple, Mayuram town and taluk. | 13,924 | 0 | 1 | |
| 11 Sri Vedaranyeswarar Temple, Vedaranyam, Thiruthuripoondi taluk. | 35,221 | 3 | ½ | Out of the total arrears a quantity of Ks. 16,971-3-½ has become time-barred which needs to be written off and the arrears relate to faslis prior to 1360. Another quantity of Ks. 4,532-5-3 has been covered by suits and after deducting these items the net quantity due comes to Ks. 13,717-6-1 only. |

| Serial number, name of the Institution, village, taluk and district. (1) | Quantity of lease paddy due as on 30th June 1965. (2) K. | M. | P. | Remarks if any. (3) |
|---|---|---|---|---|
| 12 Sri Manthrapuriswarar Temple, Koviloor, Tiruthuraipoondi taluk. | 12,099 | 9 | ½ | In fasli 1374 remission was granted by the Rent Court for Rs. 2,065-4-3. |
| 13 Sri Swetharanyeswarar Temple, Thiruvengadu, Sirkali taluk. | 4,958 | 9 | 1 | A sum of Rs. 864-7-0 is only due as on 29th May 1967. |
| 14 Sri Srinivasaperumal Temple, Nachiarkoil, Kumbakonam taluk. | 2,976 | 1 | 2½ | |
| 15 Sri Thiagarajaswamy Temple, Thiruvoimur, Nagapattinam taluk. | 1,146 | 9 | 2 | |
| 16 Sri Santhanaramaswamy Temple, Needamangalam, Mannargudi taluk. | 2,888 | 8 | 2 | |
| 17 Sri Thiagarajaswamy Temple, Thiruvarur town and taluk. | 10,816 | 6 | 2 | |
| 18 Sri Rajan Kattalai attached to Sri Thiagarajaswamy Temple, Thiruvarur, Nagapattinam taluk. | 20,287 | 9 | 1 | |
| 19 Sri Thiagarajaswamy Temple, Thirukkuvalai, Nagapattinam taluk. | 13,298 | 0 | 3 | |
| 20 Sri Panchanatheeswarar Temple, Thiruvaiyaru, Thanjavur taluk. | 2,721 | 7 | 0 | |
| 21 Sri Arunajadeswarar Temple, Thiruppanandal, Kumbakonam taluk. | 1,994 | 5 | 0 | |
| 22 Sri Kambahareswarar Temple, Thirubuvanam, Kumbakonam taluk. | 11,521 | 4 | 1 | |
| 23 Sri Vaideeswarankoil, Velur Devasthanam, Sirkali taluk. | 25,908 | 5 | ¼ | |
| 24 Sri Sattanathaswamy Temple, Sirkali town and taluk, Thanjavur district. | 16,505 | 1 | 1¾ | |
| 25 Sri Adikumbeswarar Temple, Kumbakonam town and taluk, Thanjavur district. | 2,182 | 9 | 0 | |
| 26 Sri Amirthakadeswarar Temple, Thirukkadavur, Mayuram taluk. | 20,428 | 8 | 1 | |
| | | | | KG. GMS. |
| 27 Sri Dharmapuram Mutt, Dharmapuram, Mayuram taluk. | | | | 8,29,338 471 |
| | K. | M. | P. | |
| 28 Sri Sankarachariar Mutt, Kumbakonam town and taluk. | 3,945 | 2 | 3 | |



தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள முதல்நிலைக் கோயில்களில் கொள்முதல் செய்த நெல் அளவைக் காட்டும் விவர அறிக்கை.

| தொடர் எண்ணும் திருவளாகத்தின் பெயர், அமைந்துள்ள கிராமம், வட்டம், மாவட்டம். (1) | 1965 ஜூன் 30-ம் தேதியுள்ள நிலுவைப்படி பாக்கியாகவுள்ள குத்தகை நெல் அளவு. (2) கலம். | மரக்கால். | படி. | குறிப்புரை. (3) |
|---|---|---|---|---|
| 1 ஸ்ரீ காசிமடம் சமய அறநிலையம், திருப்பனந்தாள், கும்பகோணம் தாலூகா, தஞ்சாவூர் மாவட்டம். | 7,871 | 8 | 3 | .. |
| 2 ஸ்ரீ நவநீதீஸ்வர சுவாமி கோயில், சிக்கில், நாகப்பட்டினம் தாலூகா, தஞ்சாவூர் மாவட்டம். | 6,355 | 0 | 2 | .. |
| 3 ஸ்ரீ பௌசதீஸ்வரர் கோயில், திருத்துறைப்பூண்டி நகர் தாலூகா, தஞ்சாவூர் மாவட்டம். | 2,372 | 9 | [illegible] | |
| 4 ஸ்ரீ பரிமள ரெங்கநாத சுவாமி கோயில், திருந்தலூர், மாயூரம் தாலூகா. | 11,750 | 2 | 2 | |
| 5 ஸ்ரீ பசுபதீஸ்வரர் கோயில், பந்தநல்லூர், கும்பகோணம் தாலூகா. | 5,387 | 8 | 1½ | .. |
| 6 ஸ்ரீ சுவாமிநாதஸ்வாமி கோயில், சுவாமிமலை, கும்பகோணம் தாலூகா. | 2,202 | 5 | 0 | .. |
| 7 ஸ்ரீ அட்சய லிங்க சுவாமி கோயில், கீவளூர், நாகபட்டினம் தாலூகா. | 61,248 | 2 | 1½ | 1947-ம் ஆண்டு குத்தகைக் குறைப்புச் சட்டத்தின் காரணமாக இதில் 43,755 கலம் 4 மரக்கால் ½ படி அளவு தகராறில் உள்ளது. (அசல் மனு எண் 10/59 STA 19/60). |
| 8 ஸ்ரீ காய ரோகண சுவாமி நீலயதாட்சியம்மன் கோயில், நாகப்பட்டினம் நகர், தாலூகா. | 9,106 | 4 | 0 | பாகஙிக்காக குத்தகைக்காரர்கள் கொடுத்த ரூ. 7.546,1375-ம் பசலியில் 672 கலம், 7 மரக்கால், 1 படிக்காகச் சரிசெய்து கொள்ளப்பட்டது |

| தொடர் எண்ணும் நிறுவனத்தின் பெயர், அமைந்துள்ள கிராமம், வட்டம், மாவட்டம். (1) | 1965 ஜூன் 30-ம் தேதியுள்ள நிலவரப்படி பாக்கியாகவுள்ள குத்தகை நெல் அளவு. (2) | | | குறிப்புரை. (3) |
|---|---|---|---|---|
| | கலம். | மரக்கால். | படி. | |
| 9 ஸ்ரீ சாரங்கபாணி சுவாமி கோயில், கும்பகோணம் நகர், தாலூகா. | 20,984 | 6 | 1 | .. |
| 10 ஸ்ரீ மாயூரநாதசுவாமி கோயில், மாயூரம் நகர், தாலூகா. | 13,924 | 0 | 1 | .. |
| 11 ஸ்ரீ வேதாரண்ணீஸ்வரர் கோயில், வேதாரண்யம், திருத்துறைப் பூண்டி தாலூகா. | 35,221 | 3 | ½ | மொத்த முள்ள பாக்கியில் 16,971 கலம், 3 மரக்கால், ½ படி அளவுள்ள நெல் காலம் கடந்து விட்டமையால், அதை நீக்கிவிட வேண்டியதாயிற்று. இப் பாக்கித் தொகை1360-ம் பசலிக்கு முன்னதான பசலிகள் சம்பந்தப்பட்டது. மற்றும் 4,532 கலம், 5மரக்கால், 3 படி அளவுள்ள நெல் வழக்குத் தொடுத்துப் பெறப்பட்டது. இந்த இனங்களைக் கழித்த பின், சேரவேண்டியதான நிகர அளவு 13,717 கலம் 6 மரக்கால் 1 படியாகும். |
| 12 ஸ்ரீ மந்திரபுரீஸ்வரர் கோயில், கோவிலூர், திருத்துறைப் பூண்டி தாலூகா. | 12,099 | 9 | ½ | 1374 பசலியில் குத்தகை நீதிமன்றத்தால் 2,065 கலம், 4 மரக்கால், 3 படிக்கு தள்ளுபடி வழங்கப்பட்டது. |
| 13 ஸ்ரீ ஸ்வேதாரண்ணீஸ்வரர் கோயில், திருவெண்காடு, சீர்காழி தாலூகா. | 4,958 | 9 | 1 | 1967-ம் ஆண்டு மே மாதம் 29-ந் தேதி நிலவரப்படி 864 கலம் 7 மரக்கால் மட்டுமே பாக்கியாய் உள்ளது. |
| 14 ஸ்ரீ சீனிவாசப்பெருமாள் கோயில், நாச்சியார் கோயில், கும்பகோணம் தாலூகா. | 2,976 | 1 | 2½ | .. |
| 15 ஸ்ரீ தியாகராஜசுவாமி கோயில், திருவாய்மூர், நாகபட்டினம் தாலூகா. | 1,146 | 9 | 2 | .. |



| தொடர் எண்ணும் நிறுவனத்தின் பெயர், அமைந்துள்ள கிராமம், வட்டம், மாவட்டம். (1) | 1965 ஜூன் 30-ம் தேதியுள்ள நிலவரப்படி பாக்கியாகவுள்ள குத்தகை நெல் அளவு. (2) | | | குறிப்புரை. (3) |
|---|---|---|---|---|
| | கலம். | மரக்கால். | படி. | |
| 16 ஸ்ரீ சந்தான ராமசுவாமி கோயில், நீடாமங்கலம், மன்னார்குடி தாலூகா. | 2,888 | 8 | 2 | .. |
| 17 ஸ்ரீ தியாகராஜசுவாமி கோயில், திருவாரூர் நகர், தாலூகா. | 10,816 | 6 | 2 | .. |
| 18 ஸ்ரீ தியாகராஜசுவாமி கோயிலைச் சேர்ந்த ஸ்ரீ ராஜன் கட்டளை, திருவாரூர், நாகபட்டினம் தாலூகா. | 20,287 | 9 | 1 | .. |
| 19 ஸ்ரீ தியாகராஜசுவாமி கோயில், திருக்குவளை, நாகப்பட்டினம் தாலூகா. | 13,298 | 0 | 3 | .. |
| 20 ஸ்ரீ பஞ்சநாதீஸ்வரர் கோயில், திருவையாறு, தஞ்சாவூர் தாலூகா. | 2,721 | 7 | 0 | .. |
| 21 ஸ்ரீ அருணசலீஸ்வரர் கோயில், திருப்பணந்தாள், கும்பகோணம். | 1,994 | 5 | 0 | .. |
| 22 ஸ்ரீ கம்பகரீஸ்வரர் கோயில், திருபுவனம், கும்பகோணம் தாலூகா. | 11,521 | 4 | 1 | .. |
| 23 ஸ்ரீ வைதீஸ்வரன் கோயில், வேலூர் தேவஸ்தானம், சீர்காழி தாலூகா. | 25,908 | 5 | ¼ | .. |
| 24 ஸ்ரீ சத்தியநாதஸ்வாமி கோயில், சீர்காழி நகரம், தாலூகா, தஞ்சாவூர் மாவட்டம். | 16,505 | 1 | 1¾ | .. |
| 25 ஸ்ரீ ஆதிகும்பீஸ்வரர் கோயில், கும்பகோணம் நகரம், தாலூகா, தஞ்சாவூர் மாவட்டம். | 2,182 | 9 | 0 | .. |

| தொடர் எண்ணும் நிறுவனத்தின் பெயர், அமைந்துள்ள கிராமம், வட்டம், மாவட்டம். (1) | 1965 ஜூன் 30-ம் தேதியுள்ளபடி நிலவரம்படி பாக்கியாகவுள்ள குத்தகை நெல் அளவு. (2) | குறிப்புகள். (3) |
|---|---|---|
| | கலம். மரக்கால். படி. | |
| 26 ஸ்ரீ அமிர்தகதீஸ்வரர் கோயில், திருக்கடவூர், மாயூரம் தாலூகா. | 20,428 8 1 | .. |
| | கி. கிராம். | |
| 27 ஸ்ரீ தர்மபுரம் மடம், தர்மபுரம், மாயூரம் தாலூகா. | 8,29,338 471 | ... |
| | கலம். மரக்கால். படி. | |
| 28 ஸ்ரீ சங்கராச்சாரியார் மடம், கும்பகோணம் நகரம், தாலூகா. | 3,945 2 3 | .. |

## இணைப்பு II.

### குறிப்பு.

கோரிக்கை எண் 23

[481-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

### I. முன்னுரை.

1958-ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் நிறைவேற்றப் பட்டபின், சமுதாய நல வளர்ச்சிதுத் திட்டமும் ஊராட்சி வளர்ச்சித் திட்டமும் நிறைவேற்றப்படுவதில் இம்மாநிலத்தில் மாற்றம் ஏற்பட்டது. ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழிகாட்டியாக இருக்க, ஊராட்சி வளர்ச்சிக்கான திட்ட வாரியான முதல் வரவு-செலவுத் திட்டம் இம் மாநிலம் முழுமைக்கும் தயாரிக்கப்பட்டது. இது மூன்றும் திட்டம் முடிவுற்றதும் முடிவடைந்துவிட்டது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குத் தொடர்பாக, 1966–67 முதல் ஊராட்சி ஒன்றியங்களில் செயலில் இருப்பதற்கென ஊராட்சி வளர்ச்சித் திட்டவாரியான இரண்டாவது வரவு-செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும். நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் குறித்து இன்னும் முடிவு எடுக்கப் படாமையால் இதைச் செய்ய இயலவில்லை. ஊராட்சி ஒன்றியங்கள், 1966–67-ம் ஆண்டிலிருந்து தங்கள் செலவை முறைப்படுத்த வகை செய்ய வேண்டி மாநில வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள செலவுக்கேற்ப பல மானியங்களை முறைப்படுத்த தேவையான ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. 1968–69-க்கான விரிவான வழிகாட்டும் கட்டளைகள் வகுக்கப்பட்டு விரைவில் வெளியிடப்படும். பேரவையின் முன் வைக்கப்பட்டுள்ள கோரிக்கை ரூ. 561·74 லட்சத்திற்காகும். இத் தொகை ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக, வளர்ச்சித் திட்டங்களுக்காகச் செலவழிக்கப்பட்ட தொகையில் ஒரு பகுதியேயாகும். இக்குறிப்புடன் பேரவை முன் வைக்கப்பட்டுள்ள வரவு-செலவுத் திட்ட துணை நிதி அறிக்கையில் ஊராட்சி ஒன்றியங்களின் திட்டவாரியான வரவு-செலவுத் திட்டம் ஊராட்சி நிர்வாகம், கிராம வளர்ச்சி ஆகியவற்றின் பிற தொடர்பான செயல்கள் குறித்தும் அமைந்த ஒருங்கிணைந்த நிதி குறித்த புள்ளி விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இக்குறிப்பில் திட்டங்களின் அடக்கம் சுருக்கமாகக் குறிப்பிடப்படுவதுடன் 1967–68-ல் ஏற்பட்ட மேம்பாடுகளைச் சிறப்பாகக் குறிப்பிட்டு இதுவரை செய்யப்பட்ட பணிகள் குறித்தும் சொல்லப்பட்டுள்ளது.





### II. ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் நிர்வாகம் அமைப்பு.

தென் ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள " கல்ராயன் குன்றுகள் வட்டாரம் " ஒன்றைத் தவிர ஏனைய எல்லாக் கிராமப் பகுதிகள் முழுவதிலும் தமிழ்நாடு 1958-ம் ஆண்டு ஊராட்சிகள் சட்டம் (தமிழ் நாடு சட்டம் 35/1958) தற்போது செயல்பட்டு வருகிறது. இன்று, இம் மாநிலம் முழுவதிலும் (நகராட்சிகள், நகரியங்கள், பாளையங்கள் உள்ள பகுதி நீங்கலானது) பேரூராட்சிகள் உட்பட 12,864 ஊராட்சிகள் உள்ளன. இம் மாநிலத்தில் 374 ஊராட்சி ஒன்றியங்கள் செயல்படுகின்றன. 457 பேரூராட்சி மன்றங்களும் 14 நகரியங்களும் உள்ளன.

சேலம் மாவட்டத்திலுள்ள எருமைப்பட்டி ஊராட்சி ஒன்றியக் குழுவும் மதுரை மாவட்டத்திலுள்ள சேடப்பட்டி ஊராட்சி ஒன்றியக் குழுவும் இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள ராஜசிங்கமங்கலம் ஊராட்சி ஒன்றியக் குழுவும் சட்டப்படி அவற்றிற்கு ஒப்படைக்கப்பட்ட அலுவல்களைச் செய்யாமையின் 1966-ல் அரசாங்கத்தால் கலைக்கப்பட்டு, மீண்டும் அமைக்கப்பட்டுள்ளன.

### III. ஊராட்சி வளர்ச்சி நிர்வாகம்.

தமிழ்நாடு 1958-ம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட உள்ளாட்சிகள், செயல்பட்டு வந்த உள்ளாட்சிகளிலிருந்து குறிப்பிடத்தக்க வகையில் வேறுபட்டுள்ளன. இந்த உள்ளாட்சிகள், நகராட்சி அலுவல்களை நிறைவேற்றும் அதிகார அவைகளாக இருப்பதுடன் வட்டார அளவிலும் அதற்குக் கீழும் நிறைவேற்றக்கூடிய திட்டங்கள் சம்பந்தமாக ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றுவதில் மாநில அரசாங்கத்தின் செயல்களாகவும் செயல்படுகின்றன. மாநில அளவில் ஊராட்சி வளர்ச்சித் திட்டவாரியான வரவு-செலவுத் திட்டத்தை அரசாங்கம் வகுத்துள்ளது. இத்திட்டம், பல்வேறு, துறைகளின் நிதி ஒதுக்கங்களையும், ஊராட்சி ஒன்றியங்களால் திரட்டப்படக் கூடிய உள்ளூர் ஆதாரங்களையும் ஒன்று சேர்க்கும் தன்மையதாகும். இதுவரையில் பின்தங்கியுள்ள வட்டாரங்கள் விரைந்து முன்னேற்றமடையவும், வளர்ச்சியடைவதில் உள்ள வட்டார வேறுபாடுகளை முடிந்தவரையில் போக்கவும் அமைந்ததே அரசாங்கத்தின் ஊராட்சி வளர்ச்சித் திட்டவாரியான வரவு-செலவுத் திட்டமாகும் ; இதன் அடிப்படை குறிக்கோளும் அதுவேயாகும். ஊராட்சிகள் விதித்து வசூலிக்கும் வரிகள் உட்பட கிடைக்கக்கூடிய மொத்த ஆதாரங்களையொட்டி அவைகள் திட்டங்களைத் தயாரிப்பதற்கு ஏதுவாக இருக்கும் பொருட்டு, திட்டவாரியான வரவு-செலவுத் திட்டம் உள்ளது. " உற்பத்தி நிதி ", கல்வி நிதி "", " பொது நிதி ", " கிராம ஊராட்சி நிதிகள் " என்பன வற்றின்கீழ் வகைப்படுத்தப்பட்ட ஊராட்சி வளர்ச்சித் திட்டவாரியான வரவு-செலவுத் திட்டத்தின் நிதியமைப்பு, ஊராட்சிகள் கிடைக்கக் கூடிய நிதி ஆதாரங்களுக்கு ஏற்ப அவற்றின் அலுவல்களை நிறை வேற்றுவதற்கு ஏற்ற வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது. நிதிநிலை குறைவின் காரணமாகத் திட்டங்கள் நிறைவேற்றப்படுவதில் ஏற்படும் இடையீடு 1967–68-ல் தவிர்க்கப்பட இயலாது. இத் திட்டங்கள் பெரிதும் நிறைவேற்றப்படாது இடர்ப்படுவதைத் தவிர்க்க கவனம் செலுத்தப்பட்டுள்ளது. 1966–67-ல் இக் கோரிக்கை செலவு ரூ. 640·66 லட்சம் ஆகும். 1967–68-ம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீடு ரூ. 608·34 லட்சமாக வரையறுக்கப்பட்டுள்ளது. 1968–69-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு ரூ. 561·74 ஆகவும் வரையறுக்கப்பட்டுள்ளது. உள்ளூர் நிதி ஆதாரங்களைத் திரட்டுவதில் இத் திட்டத்திற்கான பங்கை ஆற்றுவதில் ஊராட்சி ஒன்றியங்கள் அவற்றின் பொறுப்புகளைச் சிறப்பாகவே செய்துள்ளன. ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளூர் செஸ் மேல் வரி விதிக்கத்தக்க அதிகாரம் கொண்டனவாகும். நிதி ஆதாரங்களின் தேவைக்கு ஏற்பவும் ஊராட்சி ஒன்றியங்களில் நிலவும் நிலவரி ஒப்படையைப் பொறுத்தும் நிலவரியின்

ஒவ்வொரு ரூபாயின் மீதும் 5 காசு முதல் 100 காசு வரையிலும் உள்ளூர் செஸ் மேல்வரி விதிக்கப்படலாம். இம் மாநிலம் முழுவதற்கும் இந்த ஆதாரத்தின் மூலம் 1967-68-ம் ஆண்டில் ரூ. 267·42 லட்சம் வருமானம் கிடைத்தது. ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளூர் செஸ் மேல்வரி விதிப்பதற்கு இணையாக அரசாங்கம் அவற்றிற்கு இணை மானியம் ஒன்றை அளிக்கின்றது. ஊராட்சி ஒன்றிப்புகளின் வருமான வகைப்பாட்டைப் பொறுத்து 75 சதவீதம் முதல் 150 சதவீதம் வரை இணை மானியம் வழங்கப்படுகிறது. உள்ளூர் செஸ் மேல்வரி இணை மானியம் 1961-62-ல் ரூ. 85·24 லட்சமாக, இருந்தது. 1968-69-ல் ரூ. 236·80 லட்சமாக அதிகரித்துள்ளது.

தமிழ்நாடு 1961-ஆம் ஆண்டு உள்ளாட்சி மன்றங்கள் நிதிச் சட்டத்தின் கீழ், கேளிக்கை வரி மீது மேல் வரி விதிக்கவும் காட்சி வரியின் மீது மேல் வரி விதிக்கவும் உள்ளாட்சி மன்றங்களுக்கு அதிகாரங்கள் அளிக்கப்பட்டன. அதாவது, கேளிக்கை வரியில் பேரளவு 100 சத வீதம் வரையிலும் திரைப்படக் காட்சிகளின் மேல் அதிக அளவு 300 சத வீதம் வரையிலும் உபரி வரி விதிக்க உள்ளாட்ச்சி மன்றங்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. 370 ஊராட்சி ஒன்றியங்கள் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி மேற்குறிப்பிட்ட வரியை விதித்துள்ளன. இந்த ஆதாரத்தின் மூலம் 1967-68-ல் ரூ. 63·31 லட்சம் வருமானம் கிடைத்தது. ஊராட்சி ஒன்றியங்கள் வரி விதித்து நிதி ஆதாரங்களைத் திரட்டப் பெருமளவிற்கு முயன்றன ; 1967-68-ல் ரூ. 3·47 கோடி திரட்டின.

மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் ஆலோசனை கூறத்தக்கவையாக மட்டுமே அமைந்துள்ளன ; ஊராட்சிகளுக்கும் ஊராட்சி ஒன்றியங்களுக்கும் மாற்றப்பட்ட அலுவல்களில் அம்மன்றங்கள் ஆலோசனை கூறுவதிற்கில்லை. வளர்ச்சித் திட்டங்களின் எல்லாப் பொது இயல்புகளிலும் அரசாங்கத்தின் அறிவுரையாளர்களாக அவை செயல்பட்டுள்ளன ; இயன்ற வரையில் அவை கூறியுள்ள ஆலோசனையை விருப்புடன் அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறது. வளர்ச்சி வட்டாரங்களுக்குக் கிடைக்கும் நிதி ஆதாரங்களை முடிவு செய்யும் அந்த வட்டாரங்களின் வருமான வகைப்பாடு, மாவட்ட வளர்ச்சி மன்றங்களின் ஆலோசனையுடன் நிறைவேற்றப்பட்டது ; சாலைகளின் வகைபாடு செய்யும் பணியும் மாவட்ட வளர்ச்சி மன்றங்களுக்கு ஒப்படைக்கப்பட்டபட்டது. தற்போது இம்மாநிலத்தில் 23 மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் செயல்பட்டு வருகின்றன.

நிர்வாகம்—பணிகள், உற்பத்தித் திட்டங்கள், நலப் பணிகள் திட்டம் குறித்து மூன்று ஆலோசனைக் குழுக்கள், மாநில அளவில் ஊராட்சி நிர்வாகப் பிரிவுகள் குறித்த துறையில் நடைபெறும் பணியை ஆராய்ந்து வந்துள்ளன. இந்த ஆலோசனைக் குழுக்களில் நடைபெறும் சொல்லாடல்களின் அடிப்படையில் இத் திட்டங்களை நிறைவேற்றுவதில் உள்ள பல நடைமுறைச் சிக்கல்கள் சரி செய்யப்பட்டுள்ளன.

மக்களுக்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்தவும் பல்வேறு வளர்ச்சி வேலைகளுக்கும் ஓராண்டிற்குத் தோராயமாக ரூ. 52·62 கோடிச் செலவினத்திற்கு சரியானபடி வரவு-செலவுத் திட்டம் வகுத்து 12,407-க்கு மேற்பட்ட கிராம ஊராட்சிகளாலும் 457 பேரூராட்சிகளாலும் 374 ஊராட்சி ஒன்றியங்களாலும் செலவிடப்பட்டு, கணக்கு வைக்கப்பட்டுள்ள நடைமுறை நிலவரத்தின் மூலமாக இத்திட்டத்தில் உள்ள நிதி நிர்வாகம் குறித்த முக்கிய பொறுப்பு எத்தகையதென்பதை அறியலாம். இந்த நிதி நிர்வாகத்திற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்களும் வருவாய்க் கோட்ட அதிகாரிகளும் பொறுப்பாளியாவர். மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஊராட்சி ஒன்றியங்களுக்கு சில மானியங்களை அனுமதிப்பதுடன் ஊராட்சிகளின் ஆய்வாளர்களாகவும் செயாலற்றுகின்றனர். கிராம வளர்ச்சி இயக்குநர் ஊராட்சி ஒன்றியங்களின் ஆய்வாளராகச் செயல்படுகின்றார். தமிழக ஊராட்சிகள் சட்டம், பல்வேறு ஊராட்சி ஒன்றியங்களுக்கும் நிதி ஆதாரங்கள் நியாயமான அளவுக்கு ஒதுக்கப்படுவதற்கு வகை செய்திருப்பினும் மிகக் குறைந்த நிலவரி காரணமாக சில ஒன்றியங்களில் நிதி ஆதாரங்கள் போதாமல் உள்ளன. சில ஊராட்சி ஒன்றியங்களில் உயர்ந்த அளவில் வரி விதிக்கப்பட்டபோதிலும் தொடக்கக் கல்வி குறித்தும் நிறைவேற்ற வேண்டிய ஏனைய கடமைகள் குறித்தும் அவற்றுக்குள்ள பொறுப்புகளை நிறைவேற்றப் போதுமான நிதி ஆதாரங்களை அவற்றால் திரட்ட இயலவில்லை. அவற்றின் பற்றுக்குறைகளைச் சரிக்கட்டுவதற்கென சிறப்பு மானியங்கள் வழங்குவதற்கான திட்டமொன்று உருவாக்கப்பட்டது ; நிறைவேற்ற வேண்டிய கடமைப் பொருப்பான அலுவல்களுக்கு சிறப்பு உதவி தேவைப்படுகின்ற ஊராட்சி ஒன்றியங்களுக்கு சிறப்பு மானியங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.



1960 ஆகஸ்டுத் திங்கள் முதல் கிராம அதிகாரிகள் ஊராட்சி வரிவசூல் வேலைகளுடன் தொடர்பு கொண்டுள்ளனர். அவர்கள் தங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பணியைச் செய்வதற்காக அவர்களுக்கு ஊராட்சி வளர்ச்சிப்படி வழங்கப்படுகிறது. ஊராட்சி வரி பாக்கிகள் விரைவில் வசூல் செய்யப்படுவதற்குக் கழிவுத் தொகை வழங்கும் திட்டம் ஓராண்டிற்குச் சோதனையாகச் செயல்படுத்தப்பட்டது. இவ்வகையில் கிராம அதிகாரிகளால் வரி பாக்கிகள் கூடுதலான அளவிற்கு வசூல் செய்யப்பட்டிருக்கக் காணப்படுவதால், இத் திட்டத்தை தொடர்ந்து செயல்படுத்துவதா அல்லது கிராம அதிகாரிகளுக்கு ஊக்கப் பணம் வழங்கலாமா என்பது குறித்து ஆராயப்பட்டு வருகிறது. கிராம அதிகாரிகள் வரி பாக்கிகளை வசூல் செய்வதில் அடைந்துள்ள முன்னேற்ற நிலை குறித்தும் ஆண்டு நிலவரிக் கணக்கு முடிப்பின்போது (ஜமாபந்தியின் போது) ஜமாபந்தி அதிகாரிகளால் ஆய்வு செய்யப்படுகிறது.

## IV. பணிகள் குறித்த வேலைத் திட்டங்கள்.

### (அ) கிராமப் பணிகள் வேலைத் திட்டம்.

ஊராட்சி ஒன்றியங்கள், அவற்றிடம் ஒப்படைக்கப்பட்ட கிராமப் பணிகள் திட்டத்தை ஆர்வத்துடன் தொடர்ந்து நிறைவேற்றி வருகின்றன. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கிராமப் பணிகளுக்காகக் கிடைத்த நிதி ஒதுக்கம் ஒருங்கு திரட்டப்பட்டு இப்பணித் திட்டம் முழுவதும் கிராம நீர் வழங்கல், இணைப்புச் சாலைகள், பள்ளிக் கட்டிடங்கள் என மூன்று விதத் திட்டங்களாக வகுக்கப் பட்டுள்ளன. தேசியத் திட்டத்தின் பலன்கள் இயன்ற மட்டும் எல்லா இடங்களுக்கும் பரவலாக கிடைக்க உறுதி செய்வதும் இயன்ற விரைவில் மக்களின் தலையாயத் தேவைகளை வழங்க ஏற்பாடு செய்வதும் இதன் நோக்கமாகும். இத் திட்டத்திற்கு 1966-67-ல் ரூ. 252 இலட்சம் செலவிடப்பட்டது. 1967-68 ஆண்டிற்கு ரூ. 273·32 இலட்சம் ஒதுக்கப்பட்டது. இக்காரியத்திற்காக 1968-69-ம் ஆண்டிற்கு ரூ. 182·22 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

1967 செப்டம்பர் திங்கள் 30-ம் நாள் வரை திரட்டப்பட்ட புள்ளி விவரங்கள் உள்ளத்திற்கு ஊக்கமளிப்பனவாக உள்ளன.

அப்புள்ளி விவரங்கள் வருமாறு :—

| | |
|---|---|
| மேல் நிலை நீர்த் தொட்டிகள் .. .. .. | 2,700 |
| குடிநீர்க் கிணறுகள் .. .. .. .. .... | 48,900 |
| சொந்தக் கட்டடங்களில் உள்ள பள்ளிகள் .. | 11,000 |
| இணைப்புச் சாலைகளின் எண்ணிக்கை .. .. | 2,000 |
| இவ்வாண்டில் அமைக்கப்பட்ட இணைப்புச சாலைகளின் நீளம். | 990 கல் தொலைவு. |
| இணைப்புச் சாலைகளின் மொத்த நீளம் .. .. | 16,700 கல் தொலைவு. |

அரிசனங்கள், மீனவர்கள், ஏனைய பின்னிலை வகுப்பினர் நலனுக்காக தனியாக மேற்கொள்ளப்பட்ட கிராமப் பணிகள் சம்பந்தமாக, பொது மக்களிடமிருந்து நன்கொடைகளை வசூலிக்கும் முறை நீங்கிவிடப்பட்டது. அரிசன நலத்துறையின் நிதிகளிலிருந்து குடி நீர் வழங்கல் வேலைகளுக்காக 15 சதவீதம் தொகையும் இணைப்புச் சாலைகளுக்காக 10 சத வீதத் தொகையும் வழங்கப்படுகிறது. அரிசனங்களுக்குப் பயனளிக்கிற பணிகளுக்காக மட்டும் கிராமப் பணிகள் மானியத்தில் 20 சதவீதத்தை ஒதுக்கும்படி ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

### (ஆ) சாலைகள் பராமரிப்பு.

ஊராட்சி ஒன்றியங்களின் அதிகார வரம்பிற்குள் உள்ளனவும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளாக வகைப்படுத்தப் பட்டுள்ளனவுமாகிய எல்லாச் சாலைகளையும் அமைக்கவும் செப்பனிட்டுப் பேணி வருவதற்கும் போதுமான நிதி ஒதுக்கம் செய்வது ஊராட்சிகளின் சட்டபூர்வமான பொறுப்புகளில் ஒன்றாகும். இதற்காக, தமிழக ஊராட்சிகள் சட்டத்தின் 131-வது பிரிவின் கீழ், ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்துக்கும் ஒருவருக்கு 40 காசு என்ற வீதத்தில் கணக்கிடப்பட்ட சாலைகள் மானியம் வழங்கப்படுகிறது. 1966–67-க்கும் 1967–68-க்கும் ரூ. 110 லட்சம் ஒதுக்கப்பட்டது. 1968–69-க்காகவும் அதே அளவில் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.

சாலைகளைப் பேணுவதற்காக, தமிழக ஊராட்சிகள் சட்டத்தின் கீழ் ஊராட்சிகள் அரசாங்கத்திடமிருந்து உதவி பெறத் தகுதியுடையன அல்ல. ஆனால், அரசாங்கத்திற்கு முறையீடுகள் செய்யப்பட்டதற்கிணங்க, பேரூராட்சி மன்றங்களில் புழுதியற்ற மேற்பரப்புடைய சாலைகளை அமைக்கப்படுவதற்காக செலவில் பாதியை மானியமாக வழங்கி பேரூராட்சிகளுக்கு உதவி புரியும் பொருட்டு வரவு -செலவுத் திட்டத்தில் ரூ. 5 இலட்சம் ஒக்கப்பட்டுள்ளது. 1967-ல் வீசிய புயலினாலும் ஏற்பட்ட வெள்ளத்தினாலும், சாலைகள் பெரிதும் சேதமடைந்த மாவட்டங்களில் ஊராட்சி ஒன்றியச் சாலைகளையும், ஊராட்சிகளின் சாலைகளையும் செப்பனிடுவதற்கு ஊராட்சி ஒன்றியங்களுக்கு அரசாங்கம் சிறப்பு மானியங்கள் அனுமதித்துள்ளது.

### (இ) சிறு பாசனம்.

இம் மாநிலத்தில் சுமார் 29,000 சிறு பாசன வாயில்கள் உள்ளன. அவற்றின் மூலம் 8·5 லட்சம் ஏக்கர் பாசன பெறுகிறது. அவற்றில் சுமார் 23,800 பாசன வாயில்கள் ஊராட்சி ஒன்றியங்கள் பேணி வருவதற்காக அவைகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. பாசன வாயில்களைப் பேணி வருவதற்கான வேலைத் திட்டம் ஒன்றைத் தயாரிக்கும்படி அவற்றிற்கு ஆலோசனை கூறப்பட்டது. அவ் வேலைத் திட்டத்தின்படி ஒவ்வொரு பாசன வாயிலிற்கும் ஐந்து ஆண்டுகளில் குறைந்தது ஒரு முறையாவது கவனம் செலுத்த வேண்டும். ஒவ்வோராண்டின்போதும் ஊராட்சி ஒன்றியங்களுக்குத் தேவையான தொகைக்கும் எல்லா ஊராட்சி ஒன்றியங்களுக்கும் சிறு பாசனம் குறித்து கிடைக்கும் மொத்த நிதி ஒதுக்கத்திற்கும் உள்ள விகிதாசாரப்படி ஒவ்வோராண்டும் ஒரு தொகை அவற்றிற்கு வழங்கப்படுகிறது. 1968–69 வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 52·83 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### (ஈ) கிராமக் கலை, கைப்பணிகள் திட்டம்.

ஊராட்சி ஒன்றியங்களில், கிராமத் தொழில் திட்டத்தை தயாரித்து செயல்படுத்தும், பொறுப்பு தற்போது மாநில கதர்–கிராம தொழில்கள் வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மாநில கதர்-கிராமத் தொழில்கள் வாரியம் ஊராட்சி ஒன்றியங்களுக்கு தேவையான தொழில் நுட்ப ஆலோசனை அளிக்கின்றது. ஏனென்றால்,



இந்த வேலைத் திட்டத்தை நிறைவேற்றும் பொறுப்பு ஊராட்சி ஒன்றியங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த வேலைத் திட்டத்தின் கீழச் செயல்பட்டுவரும் தொழில் பிரிவுகள் 1967–68 ஆண்டுக்கான உற்பத்தி, விற்பனைப் பொருள்கள் மதிப்பு ஆகியவற்றை காட்டும் அறிக்கை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. (இணைப்பு I).

தொழில்-வாணிகத் துறை இயக்குநர் அலுவலகமும், மாநிலக் கதர்-கிராமத் தொழில்கள் வாரியமும் கிராமப் பணிகள் திட்டத்தை நிறைவேற்றுவதில் இணைந்து செயல்படச் செய்யும்பொருட்டு, மாவட்டக் குழுக்களை அரசினர் அமைத்துள்ளனர். தொழில் பிரிவுகள் செயல்படுவதை ஆய்வு செய்து, அவை புதிய திட்டங்களை மேற்கொள்ளுவதற்கும் திறம்பட செயல்படுவதற்கும் வழிவகைகளை எடுத்துக் கூறுவது அக்குழுக்களின் வேலையாகும்.

## V. உற்பத்தித் திட்டங்கள் குறித்த முன்னேற்றம்.

### (அ) வேளாண்மையும் கால்நடை வளர்ப்பும்.

ஊராட்சிகளும், ஊராட்சி ஒன்றியங்களும், உணவு உற்பத்தியைப் பெருக்கும் பணிக்கு முதலிடம் அளிக்கவேண்டும் என்றும், இது அவற்றின் தலையாய பொறுப்பாகும் என்றும், தமிழ்நாடு 1958-ம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் முன்னுரையில் கூறப்பட்டுள்ளது. மூன்றாவது திட்டத்தில், வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, மீனளம் ஆகியவற்றின்கீழ் வேலைத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கென ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் அரசாங்கம் வேளாண்மை மானியமாக ரூ. 2 லட்சம் வழங்கியது. இந்த மாநிலத்தில் தயாரிக்கப்பட்டுள்ள ஒரே படித்தான திட்டத்தின் அடிப்படையில், ஊராட்சி ஒன்றியங்கள், இந்த மானியத்திற்கு இணையாக ரூ. 50,000 வழங்கி, திட்டங்களை நிறைவேற்றின. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்தின் குறிப்பிட்ட தேவைகளையும் வாய்ப்புகளையும் கருத்தில் கொண்டு, அதற்கான வேலைத் திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை கடந்த சில ஆண்டுகளின் அநுபவம் சுட்டிக் காட்டியது. இந்த நோக்கத்துடன் ஊராட்சி ஒன்றியங்கள் தங்கள் பகுதியிலுள்ள ஊராட்சிகளின் கருத்துக்களையும், தேவைகளையும் ஆராய்ந்து நான்காவது திட்டத்தின்போது நிறைவேற்றப்படுவதற்கான தனித்தனி திட்டங்களைத் தயாரிக்கும்படி கேட்டுக்கொள்ளப் பட்டன. ஊராட்சி ஒன்றியங்கள் தயாரிக்கும் திட்டங்கள், விரிவாக பரிசீலனைச் செய்யப்பட்டு நிறைவேற்றப்படுவதற்கான வேலைத் திட்டங்கள் வகுக்கப்பட்டன. வேளாண்மை, கால்நடை வளர்ப்பு மேம்பாட்டுக்கான திட்டங்கள் "இன்றியமையாதவை", "விருப்பத் திட்டங்கள்" என்று வகைப்படுத்தப்பட்டன. எல்லா வட்டாரங்களிலும் செயல்படுத்தக் கூடியவையும் உணவு உற்பத்தியைப் பெருக்க அவசியமானவை என்று கருதப்படக்கூடியவையுமானத் திட்டங்கள் இன்றியமையாத் திட்டங்களாகும். பரவலாகச் செயல்படுத்தப்படவேண்டிஇராத திட்டங்கள் விருப்பத் திட்டங்களாகும். ஒரு பகுதியின் தேவைகளையொட்டி ஊராட்சி ஒன்றியம் அத்திட்டங்களைத் தேர்ந்தெடுக்கலாம். ஒரு பகுதியின் குறிப்பிட்ட தேவைகளை நிறைவேற்ற தனி வேலைத் திட்டங்களை ஊராட்சி ஒன்றியங்கள் தயாரித்து செயல்பட "குறிப்பிட்ட பகுதிக்குரிய வேலைத் திட்டங்கள்" என்னும் தலைப்பின்கீழ் நிதி ஒதுக்கப்படுகிறது. இதன்படி ஊராட்சி ஒன்றியக்குழுக்கள் இயந்திரக் கலப்பைகள், விசைத் தெளிப்பான்கள் முதலியவற்றை வாங்கவும் அனுமதிக்கப்பட்டன. "இன்றியமையாத வேலைத் திட்டங்களையும்", "விருப்ப வேலைத் திட்டங்களையும்" செயல்படுத்துவதற்கென , ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திடமும் அரசாங்கம் 1966 ஏப்ரல் மாதம் முதல் ஐந்தாண்டுக் கால அளவில் ரூ. 2 லட்சம் ஒதுக்கியது. இந்த அரசாங்க மானியத்துக்கு இணையாக ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியமும் ரூ. 50,000 தொகை வழங்க

வேண்டும். ஊராட்சித் தோட்டங்கள் குறித்து அதிகச் செலவாகியது. கிடைத்த பலன்களோ மன நிறைவு அளிப்பனவாக இல்லை. எனவே, புதிய தோட்டங்கள் வளர்ப்பதற்கெனவோ அல்லது ஏற்கனவேயுள்ள தோட்டங்களை மேலும் விரிவுபடுத்தவோ மேற்கொண்டு எந்தச் செலவும் செய்யக்கூடாது என்று அரசாங்கம் கட்டளைகள் பிறப்பித்துள்ளது. எனினும், ஆதாயம் தரக்கூடிய தோட்டங்களுக்கு மிகக் குறைந்த அளவிற்குப் பேணுதல் செலவு வழங்கப்படும். தற்போதுள்ள ஊராட்சித் தோட்டங்களைப் பேணி வருவது குறித்து அரசாங்கம் திருத்த ஆணைகள் பிறப்பித்துள்ளது. புதிய தோட்டங்கள் ஏற்படுத்தும் வேலைக்கான தடை தொடர்ந்து இருந்து வருகிறது.

### (ஆ) மீனளம்.

வேளாண்மை மானியக் கோரிக்கையின்கீழ் மீனள வளர்ச்சிக்கான வட்டாரங்கள், அவற்றில் மீனள வளர்ச்சிக்கு உள்ள வாய்ப்புகளுக்கேற்ப, நான்கு பிரிவுகளுக்காகத் தொகுக்கப்பட்டுள்ளன. இவ் வேலைத் திட்டத்தின்கீழ் நிறைவேற்றப்படும் திட்ட வேலைகளாவன :—

(i) நைலான் மிதவைகள் முதலியவற்றை மீனவர்களுக்கு வழங்குதல் ;

(ii) மீன் விற்பனைச் சந்தையை மேம்படுத்தல் ;

(iii) மீன் வளர்ப்பு வேலைகளுக்காக ஏரிகளைப் புதுப்பித்தல் ;

(iv) மீன் வளர்ப்புப் பண்ணைகளை ஏற்படுத்துதல் ;

(v) மீன் வளர்ப்புப் பண்ணைகளைப் பாதுகாத்து வருவதும் செயல்படுத்துவதும் ;

(vi) மீன் குஞ்சுகளை வழங்குதல்.

மேலே முதல் இனத்தின்கீழ் குறிப்பிட்டுள்ள வேலைத் திட்டத்திற்காக அரசாங்கம் அடக்க விலையில் கால் பாகத்தை மானியமாக வழங்கும். எஞ்சிய செலவை மீனவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். மேலே இரண்டாவது இனத்தில் குறிப்பிட்டுள்ள வேலைத் திட்டத்திற்காக அரசாங்கம் அடக்க விலையில் பாதியை மானியமாக வழங்கும். எஞ்சிய செலவுத் தொகையை ஊராட்சிகள் ஏற்க வேண்டும். மேலே மூன்றாவது முதல் ஐந்தாவது வரையுள்ள இனங்களில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத் திட்டங்கள் குறித்து செலவில் மூன்றில் இரண்டு பங்கை அரசு மானியமாக வழங்கும் ; எஞ்சிய மூன்றில் ஒரு பங்கு செலவுத் தொகையை ஊராட்சிகள் ஏற்க வேண்டும். மீன் குஞ்சுகளை வழங்குவது குறித்து செலவில் பாதியை அரசு மானியமாக வழங்கும். எஞ்சிய செலவுத் தொகை நன்கொடை மூலம் சரிக்கட்டப்பட வேண்டும். எத் திட்டத்தையும் நிறைவேற்றுமுன் தனிப்பட்டவர்களிடமிருந்தும் உள்ளாட்சி மன்றங்களிடமிருந்தும் வரவேண்டிய தொகை முன்னதாகவே வசூலிக்கப்பட வேண்டும்.

## VI. சமூக நலத் திட்டங்கள்.

### (அ) தொடக்கக் கல்வி.

தொடக்கக் கல்வியைப் பரப்புவது ஊராட்சி ஒன்றியங்கள் மேற்கொண்டுள்ள பெரிய வளர்ச்சித் திட்டங்களில் ஒன்றாகும். தொடக்கக் கல்வியை ஊராட்சி ஒன்றியங்களிடம் ஒப்படைத்ததின் பலனாக பள்ளிகளில் சேரும் மாணவர்களின் எண்ணிக்கை கணிசமான அளவு அதிகரித்துள்ளது; புதிய பள்ளிகள் அதிகமான அளவில் தொடங்கப்பட்டுள்ளன; பள்ளிக் கட்டிடங்கள் புதிதாகக் கட்டப்பட்டுள்ளன. மேற்கொண்டும் பல ஆரம்பப் பள்ளிகள் உயர் தொடக்கப் பள்ளிகளாக மாற்றப்பட்டுள்ளன. தொடக்கக் கல்விக்கான



செலவில் ஒரு பகுதியை ஊராட்சி ஒன்றியங்கள் ஏற்கவேண்டுமென்று வரையறுத்ததின் மூலம் தொடக்க கல்வியைப் பரப்புவது ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பாகுமெனத் தமிழ் நாடு 1958-ம் ஆண்டு ஊராட்சிச் சட்டம் தெளிவாக்குகின்றது. தற்போது 23,000 தொடக்கப் பள்ளிகளும் 4,800 உயர் தொடக்கப் பள்ளிகளும் உள்ளன. இப் பள்ளிகளில் ஏறத்தாழ 37½ லட்சம் சிறுவர்கள் பயில்கின்றனர். இப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களின் எண்ணிக்கை 1,14,600 ஆகும். 11,000 பள்ளிகள் முறையான கட்டிடங்களில் செயல்படுகின்றன. எப்பள்ளிக்கும் கட்டிடம் இல்லாது இருக்கக் கூடாது என்பதே அரசாங்கத்தின் கொள்கையாகும். 1967–68 பள்ளிக் கட்டிடங்களுக்காக ரூபாய் 40·43 லட்சம் ஒதுக்கியுள்ளது. 1968–69-ம் ஆண்டிற்காக 28·50 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. 374 ஊராட்சி ஒன்றியங்களில் தொடக்கக் கல்வித் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக ரூபாய் 2,274 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் ரூபாய் 1,916 லட்சம் (84 சத வீதம்) சட்டப்படிக்கான மானியங்களாகவும் பிற மானியங்களாகவும் அரசாங்கத்தால் ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கப்படுகின்றது. எஞ்சிய ரூபாய் 358 லட்சம் (16 சத வீதம்) ஊராட்சி ஒன்றியங்களாலேயே திரட்டப்படுகிறது. ஊராட்சி ஒன்றியங்களால் உள்ளூர் மக்களிடமிருந்து திரட்டப்படும் தொகை ஆண்டுதோறும் அதிகரித்து வருகின்றது. விவரங்கள் வருமாறு :—

| | (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| 1965–66 .. .. .. .. .. .. | 303 |
| 1966–67 .. .. .. .. .. .. | 314 |
| 1967–68 .. .. .. .. .. .. | 347 |
| 1968–69 .. .. .. .. .. .. | 358 |

ஊராட்சி ஒன்றியக் குழுக்களைச் சேர்ந்த ஆசிரியர்களின் மாற்றத்தை ஒரு தனிக் குழு கவனித்து வருகின்றது. வருவாய்க் கோட்ட அதிகாரி இக் குழுவின் தலைவர் ஆவார். குழுவின் உறுப்பினர்கள் வருமாறு :—

1. ஊராட்சி ஒன்றியக் குழுவின் பெருந் தலைவர்.

2. வட்டார வளர்ச்சி அலுவலர்.

3. வட்டாரம் எந்த தொகுதியைச் சேர்ந்ததோ அந்தந்தத் தொகுதியைச் சேர்ந்த சட்ட மன்றப் பேரவை உறுப்பினர்/உறுப்பினர்கள்.

4. வட்டாரத்தின்மீது அதிகார வரம்புள்ள பள்ளித் துணை ஆய்வாளர்.

ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளுக்கான பாடப் புத்தகங்களைத் தேர்ந்தெடுத்து முடிவு செய்யும் பொறுப்பு இக் காரியத்திற்காக அமைக்கப்பட்டுள்ள குழு ஒன்றிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இக் குழுவின் தலைவர் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆவார். இக் குழுவின் உறுப்பினர்கள் விவரம் வருமாறு :—

1. மாவட்டக் கல்வி அதிகாரிகள்.

2. அரசாங்கத்தால் நியமனம் செய்யப்படும் இரண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்களின் தலைவர்கள்.

மாநில நிலையில் தொடக்கக் கல்வி குறித்து ஊராட்சி ஒன்றியங்கள் இணைந்து திறம்படச் செயல்படுவதை முறைப்படுத்தி மேற்பார்வை செய்வதற்காக, கிராம வளர்ச்சி இயக்குநர் அலுவலகத்தில்

கிராம வளர்ச்சித் துணை இயக்குநர் பதவி ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. கோட்ட ஆய்வாளர் பதவி வகிக்கும் கல்வித் துறை அதிகாரி ஒருவர் இப் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

கல்வித் தரத்தை மேம்படுத்தும் நோக்குடன் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளிலுள்ள 1,122 ஆரம்பப் பள்ளிகளுக்கும் 394 உயர் ஆரம்பப் பள்ளிகளுக்கும் கருவிகள் வாங்கி வழங்குவதற்காக ரூ. 7·30 லட்சம் செலவிட அரசாங்கம் 1967-68-ல் அனுமதி வழங்கியுள்ளது. ஆரம்பப் பள்ளி ஒவ்வொன்றுக்கும் ரூ. 300 என்ற அளவிலும் உயர் ஆரம்பப் பள்ளி ஒவ்வொன்றுக்கும் ரூபாய் 1,000 என்ற வகையிலும் இத் தொகை வழங்கப்படும்.

### நண்பகல் உணவு.

நண்பகல் உணவுத் திட்டம் திறம்படவும் வெற்றிகரமாகவும் செயல்படுவதில் ஊராட்சிகளும் ஊராட்சி ஒன்றியங்களும் மிகுந்த அக்கறை காட்டி வருகின்றன. இத் திட்டம் குழு ஒன்றினால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஊராட்சித் தலைவர் இக் குழுவின் தலைவராவார். அரிசன உறுப்பினர் ஒருவரும் ஊராட்சியின் மகளிர் உறுப்பினர் ஒருவரும் இக் குழுவின் உறுப்பினர்களாவார். அந்தந்தப் பள்ளியின் தலைமை ஆசிரியர் அலுவல் முறையில் நண்பகல் உணவுக் குழுவின் செயலாளர் ஆவார். இத் திட்டம் 1957–58-ம் ஆண்டில் தொடங்கப்பட்டதிலிருந்து இத் திட்டத்தின்கீழ் உணவு பெறும் மாணவர்களின் எண்ணிக்கை ஆண்டு தோறும் அதிகரித்துக்கொண்டே வருகிறது. தற்போது அரிசன நலப் பள்ளிகள், சென்னை மாநகராட்சிப் பள்ளிகள் உட்பட 30,000 பள்ளிகள் இத் திட்டத்தின்கீழ் வருகின்றன. இப் பள்ளிகளின் உணவு பெறும் மாணவர்களின் எண்ணிக்கை 18·27 லட்சமாகும். இவ் வேலைத் திட்டத்திற்காக உதவித் தொகை வழங்கியதன் மூலம் 1966–67-ல் அரசாங்கத்திற்கு ரூபாய் 175·53 லட்சம் செலவு ஏற்பட்டது. திருத்த மதிப்பீட்டில் ரூபாய் 188·90 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1968–69-ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் இவ் வேலைத் திட்டத்திற்காக ரூபாய் 191·60 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### (ஆ) சுகாதாரப் பணிகள்.

ஆரம்பச் சுகாதார நிலையங்கள்.—ஊராட்சி ஒன்றியம் ஒவ்வொன்றிலும் ஆரம்பச் சுகாதார நிலையம் ஒன்றினை ஏற்படுத்துவது அரசாங்கத்தின் கொள்கையாகும். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் தொடக்கத்தில் 120 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் செயல்பட்டுக் கொண்டிருந்தன. மூன்றாவது திட்டக் கால அளவில் மேற்கொண்டு 220 ஆரம்பச் சுகாதார நிலையங்களைத் துவக்க முதலில் திட்டமிடப்பட்டிருந்தது. பின்னர், தேசிய மலேரியா ஒழிப்புத் திட்டத்தில் பேணுதல் நிலையில் கன்னியாகுமரி, திருநெல்வேலி, இராமநாதபுரம், மதுரை, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களும் தென் ஆற்காடு, செங்கற்பட்டு மாவட்டத்தின் ஒரு சில பகுதிகளும் சேர்ந்ததால், இப் பகுதிகளில் 120 ஆரம்பச் சுகாதார நிலையங்களைத் திறக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இவற்றில் 1967–ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ம் நாள் வரையில் 86 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் தொடங்கப்பட்டன. நான்காவது திட்டக் கால அளவில் ஆண்டொன்றுக்கு 45 என்ற வீதத்தில் எஞ்சிய வட்டாரங்களிலும் ஆரம்பச் சுகாதார நிலையங்களைத் தொடங்கத் திட்டமிடப்பட்டது. அவ்வண்ணமே 1967–68-ம் ஆண்டில் 45 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் தொடங்கத் திட்டமிடப்பட்டது.

மேற்கொண்டும் சில வட்டாரங்கள் தேசிய மலேரியா ஒழிப்புத் திட்டத்தின் பேணுதல் நிலையின் இரண்டாவது கட்டத்தை அடைந்தபடியால் ஆரம்பச் சுகாதார நிலையங்களைத் தொடங்கும் திட்டம் தேசிய மலேரியா ஒழிப்புத் திட்டத்தின் பேணுதல் நிலையில் சேர்க்கப்பட்டுள்ள வட்டாரங்களில் முனைப்பாக நிறைவேற்றப்படுகிறது. தேசிய மலேரியா ஒழிப்புத் திட்டத்தின் இரண்டாவது நிலையில் சேர்க்கப்பட்டுள்ள 60 வட்டாரங்களில் 1967-ம்





ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ம் நாள் வரையில் 13 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் தொடங்கப்பட்டுள்ளன. இவ்வாறாக இது வரையில் மொத்தம் 257 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

**ஊராட்சி ஒன்றிய மருந்தகங்கள்.**—தமிழ்நாடு 1958-ம் ஆண்டு ஊராட்சிச் சட்டத்தின் 65-வது பிரிவின்கீழ் மருந்தகங்களை நிறுவுவதும் அவற்றைப் பேணி வருவதும் ஊராட்சி ஒன்றியக் குழுக்களின் பொறுப்பாகும். இச் செலவில் பாதிச் செலவு குறித்து ஊராட்சி ஒன்றியக் குழுக்களுக்கு அரசு உதவி மானியங்கள் வழங்குகின்றது. இந்த உதவி மானியம் ஆண்டொன்றுக்கு ரூபாய் 5,000 என்ற அதிக அளவு வரையறைக்குட்பட்டதாகும். ஊராட்சி ஒன்றியங்கள் முறையான மருந்தகத்திற்கு ரூபாய் 5,000 வரையிலும் கிராமத்திலுள்ள மருந்தகத்திற்கு ரூபாய் 2,500 வரையிலும் மருந்துகளுக்கான செலவை ஏற்றுக்கொள்ளுகின்றன. இந்த நடவடிக்கைகளினால் கிராமங்களில் மருந்தக வசதி கணிசமான அளவுக்கு அதிகரித்துள்ளது.

**மகப்பேறு குழந்தை நல நிலையங்கள்.**—இம் மாநிலத்தில் ஊராட்சி ஒன்றியங்கள் படிப்படியாக பேறுகால நிலையங்களைத் தொடங்குவது குறித்து அரசாங்கம் திட்டமொன்றை வகுத்துள்ளது. இத்திட்டத்தின்படி 1967–68-ம் ஆண்டு தொடங்கி 1970–71 வரையில் மொத்தம் ரூ. 5·10 லட்சம் செலவில் மேற்கொண்டும் 170 பேறுகால நிலையங்கள் தொடங்கப்படும். இத் திட்டத்தின்கீழ் 1967–68-ல் மேற்கொண்டு 8 நிலையங்கள் தொடங்கப்படும். இந் நிலையங்களுக்கான செலவில் மூன்றில் இரண்டு பங்கை அரசாங்கம் மானியமாக வழங்குகிறது. இந் நிலையங்கள் குறித்து இந்திய அரசிடமிருந்து முழு நிதி உதவி பெறுவது குறித்து இம்மாநில அரசாங்கம் ஆலோசனை செய்து வருகிறது.

**குடும்பக் கட்டுப்பாடு.**—ஊராட்சி ஒன்றியங்கள் அமைக்கப்பட்டதன் மேல் வட்டாரங்களில் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை செயல்படுத்துவதும் ஊராட்சிகளின், ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பாகுமென அரசாங்கம் ஆணை பிறப்பித்துள்ளது. குடும்பக் கட்டுப்பாடு குறித்து இந்திய அரசு புதிதாக வகுத்துள்ள திட்டத்தின்படி திருமணமான தம்பதிகள் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் பற்றி அறிந்துகொள்வதற்காக, மருத்துவ மனைகளுக்குச் செல்லாமல், அவர்கள் விரும்பினால், அவர்கள் வீடுகளிலேயே குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் குறித்த விவரங்கள் கிடைக்கச் செய்வதற்கு வகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் தேசிய மலேரியா ஒழிப்புத் திட்டம் பேணுதல் நிலையை அடைந்தவையும் ஆரம்பச் சுகாதார நிலையங்கள் செயல்பட்டுக்கொண்டிருப்பவையுமான 125 வட்டாரங்களில் செயல்படுத்தப்படுவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. காலப்போக்கில் இத் திட்டம் மற்ற வட்டாரங்களுக்கும் நீடிக்கப்படும். மறு பயிற்சி முகாம் நடத்துவது குறித்த திட்டத்தை ஒவ்வொரு வட்டாரத்திலும் நிறைவேற்ற ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. ஆட்சித் தலைவர்கள் தத்தம் மாவட்டங்களில் இத்தகைய முகாம்களை நடத்தி வருகின்றனர். அறுவைச் சிகிச்சை திட்டத்தின்கீழ் ஊராட்சிகள் ஒப்புதல் பெற்ற குடும்பக் கட்டுப்பாட்டு அறுவைச் சிகிச்சைகளுக்கு அனுப்பும் ஒவ்வொருவருக்காகவும் ஊராட்சிக்கு ரூபாய் 10 கொடுக்கப்படுகின்றது.

### (இ) சமூகக் கல்வி.

அரசாங்கம் முடிவு செய்துள்ள அடிப்படையில் ஊராட்சி ஒன்றியங்கள் தங்கள் வேலைத் திட்டங்களை வகுத்துள்ளன. சமூகக் கல்வி நிலையங்கள், இளைஞர் மன்றங்கள், உழவர் அரங்குகள், பொருட்காட்சி சாலைகள் முதலியவற்றை அமைக்கும் வேலை சமூகக் கல்வித் திட்டத்தின்கீழ் வரும் ஊராட்சி வானொலிப் பெட்டிகளை பேணும் நிறுவனம் வானொலிப் பெட்டிகளை செப்பனிடும் பணியையும், அவற்றைச் சீராக வைத்துவரும் பணியையும் ஆற்றி வருகின்றது. ஊராட்சிகளும், ஊராட்சி ஒன்றியங்களும், கிராமப் பகுதிகளில் வானொலிப் பெட்டிகளை பேணி வருகின்றன.

சமுதாயத்தினர் கேட்கும்படியாக வானொலிப் பெட்டி வசதிகளை விரிவுபடுத்தி இருப்பது பொது மக்களின் உணர்வினைத் தட்டி எழுப்புவதில் பெரும் பங்கு கொண்டுள்ளது.

ஊராட்சிகளில் நிறுவப்பட்டுள்ள வானொலிப் பெட்டிகள் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதற்கு முழு அளவில் பயன்படுத்தப்படுவதற்காக, கிராம மக்கள் தங்களுக்குப் பயனுள்ள வகையில் அனைத்திந்திய வானொலி நிலையம் ஒலி பரப்புகிற நிகழ்ச்சிகளைக் கேட்டுப் பயனடைய பல தொகுதிகளை உருவாக்குவதற்கு அரசாங்கம் ஊக்கமளித்துள்ளது. இந்த நோக்கத்துடன் இம் மாநிலத்திலேயே ஊராட்சிகள் பலவற்றில் கிராம வானொலி அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. கிராம மக்கள் தங்களுக்காக ஒலி பரப்பப்படும் நிகழ்ச்சிகளைக் கூர்ந்து கேட்டு, அதன் பின்னர் அந்நிகழ்ச்சிகள் குறித்து தங்களுக்குள் விவாதித்து, தங்களுக்கு ஏற்படும் ஐயங்களை குறித்து வினாக்களை அனைத்திந்திய—வானொலி நிலையத்திற்கு அனுப்புகின்றனர். இந்த வினாக்களுக்கு அடுத்து வரும் நாட்களில் விடையளிக்கப்படுகின்றன.

### (ஈ) மகளிச் சிறுவர் நலம்.

மாநிலச் சமூக நலப் பெருவாரியம், மகளிர் நலத்துறை ஆகியவற்றின் மாவட்ட, வட்டார நிலை அதிகாரிகள், பணியாளர்கள் ஆகியவர்களின் தொழில் நுட்ப ஆலோசனையுடனும் உதவியுடனும் ஊராட்சி ஒன்றியங்கள் மகளிர்-சிறுவர் நலத் திட்டத்தைத் தொடர்ந்து நிறைவேற்றி வருகின்றன. ஒவ்வொரு வட்டாரத்திலும் நிறைவேற்றுவதற்காக மாதிரி வேலைத் திட்டமொன்று வகுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வட்டாரத்திலும் பேரளவு 30 மகளிர் மன்றங்களை நிறுவுவதே இவ் வேலைத் திட்டத்தின் மூலக் கூறாகும். கிராம சேவகிகளுக்குச் செயல் முறையில் செய்து காட்டுவதற்கு வேண்டிய கருவிகளை வாங்குவதற்காக மாதிரி வேலைத் திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. ஐந்தாண்டுகள் வரையில் ஒருவருக்கு 33⅓ காசு என்ற விகிதப்படி கணக்கிட்டு மாநில அரசாங்கம் மானியம் வழங்கும். செய்த மொத்தச் செலவில் 50 சதவீதம் மகளிர் மன்றம் கொடுத்துவிடவேண்டும். வேலைத் திட்டம் நிறைவேறுவது வட்டாரத்திற்கு வட்டாரம் வேறுபடுமாதலால், உள்ளூர் தேவைகளைக் கருத்தில் கொண்டு, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியமும் தனக்கென குறைந்தளவு வேலைத் திட்டம் ஒன்றை வகுத்துக்கொள்ள அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இம்மாநிலத்தில் இது வரை 12,765 மகளிர் மன்றங்கள் நிறுவப்பட்டுள்ளன. மகளிர் மன்ற உறுப்பினர்களுக்குக் கைத்தொழில்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதற்காக பயிற்சி பெற்ற கைத்தொழில் ஆசிரியர்களும் நியமிக்கப்பட்டுள்ளன.

## VII. சிறப்புத் திட்டங்கள்

### (அ) கிராம உழைப்புச் சக்தித் திட்டம்.

கிராம உழைப்புச் சக்தித் திட்டம் சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் துணைத் திட்டமாக 1961–62 முதல் இம் மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கிராம பகுதியில் வேலை வாய்ப்பு இல்லாதவர்களுக்கும் வேளாண்மை இல்லாக்காலத்தில் போதிய அளவு வேலை இல்லாதவர்களுக்கும் வேலை வாய்ப்பு அளிப்பதற்காகவே இவ்வேலைத் திட்டம் திட்ட ஆணைக் குழுவின் ஆதரவுடன் நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தை இப்போது இந்திய அரசின் சமுதாய வளர்ச்சி அமைச்சகம் நிர்வகித்து வருகிறது. இப்பணிகளை நிறைவேற்றுவதால் சமுதாய சொத்துக்கள் உருவாகின்றன. இவ்வேலைத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகள் அதிக அளவில் தொழிலாளர்களைப் பயன்படுத்துவதாய் இருக்கவேண்டும்; அதிக தொழில் நுட்பத் திறமை தேவையாய் இருக்கக்கூடாது. தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படும் ஊதியம் இப்பணிகளுக்கு ஆகும் செலவில் பாதியாகவாவது இருக்கவேண்டும். இவ்வேலைத் திட்டத்திற்கு இந்திய அரசிடமிருந்து பாதி மானியம்-பாதி கடன் அடிப்படையில் நிதி உதவி இருக்



கும். இம் மாநிலத்திலுள்ள 375 வட்டாரங்களில் 72 வட்டாரங்களில் இவ்வேலைத் திட்டம் இப்போது செயல்பட்டு வருகிறது. (இணைப்பு II-ல் காண்க.)

இவ்வேலைகளை நிறைவேற்றும் பொறுப்பு ஊராட்சிகளிடம் (அல்லது தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இருக்குமிடங்களில் அச்சங்கங்களிடம்) ஒப்படைக்கப்படுகிறது. சிறிய பாசன வாயில்களுக்கு மேப்பாடு செய்தல், சிறு சாலை வேலைகள், ஊராட்சித் தோட்டங்களைப் பண்படுத்தல், விறகு மரக்காடுகள் வளர்த்தல், சிறுகரை கட்டுதல், தண்ணீரினால் சூழப்படும் கிராமங்களின் தரைமட்டத்தை உயர்த்துதல், சிறு வடிகால் முதலியவை இவ்வேலைத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகளாகும்.

நிதிப் பற்றுக்குறை காரணமாக, இப்பணிகளை மேற்கொள்வதில் இடர்ப்பாடு எதும் ஏற்படாமல் இருப்பதற்காக, ஒவ்வொரு வட்டாரத்திற்கும் ஒரு சமயத்தில் அதிக அளவாக ரூ. 50,000 முன்மானியம் வழங்கப்பட்டுள்ளது. அவற்றை ஊராட்சி ஒன்றியங்கள் ஒரு சமயத்தில் அதிக அளவாக ரூ. 500 வரையில் ஊராட்சிகளுக்கு முன்பணம் வழங்கலாம். இவ்வேலைத் திட்டத்தின்கீழ் செலவிடப்பட்ட தொகையை நிறைவு செய்ய வருவாய்க் கோட்ட அதிகாரிகளுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வட்டாரத்திற்கும் ரூ. 1,00,000-த்திற்கு மேல் செலவு செய்யக்கூடாது என்ற வரையறை விதிக்கப்பட்டுள்ளது. இப்பணிகளை நிறைவேற்றுவதற்காக ஊராட்சிகளிடமிருந்து பணிச் செலவில் 10 சதவீதம் வசூலிக்கப்படுகிறது.

இந்திய அரசு 1967–68-ம் ஆண்டிற்கு ரூ. 50·87 லட்சம் ஒதுக்கியுள்ளது. 1968–69-ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ. 51·00 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### (ஆ) சத்துணவுத் திட்டம்.

சத்துணவு உட்கொள்ள வேண்டியதன் அவசியத்தை மக்களுக்கு எடுத்துக்கூறி இவ்வகை உணவை அதிக அளவில் உற்பத்தி செய்வதற்குச் சமுதாயத்திற்கு உதவி செய்வதும், இவற்றைப் பெற முடியாதவர்களுக்கு அவற்றைக் கிடைக்கச் செய்வதும் சத்துணவுத் திட்டத்தின் நோக்கங்களாகும்.

ஆரணி, கிருஷ்ணகிரி, பவானிசாகர், தெ. கல்லுப்பட்டி, பட்டுக்கோட்டை, ஆடுதுறை, கோவில்பட்டி, வட்டாரங்களில் சத்துணவுத் திட்டம் செயல்படுவது 1968-ம் ஆண்டு மார்ச் திங்கள் 31-ம் நாளுடன் முடிவுக்கு வந்து விடும். அதன் பின் இத்திட்டத்தைத் தொடர்ந்து நடத்துவதற்காக ஊராட்சிகளிடம் ஒப்படைக்கப்படும். இத் தேதிக்குப் பின்னர் இவ்வட்டாரங்களுக்கு நிதி உதவி எதுவும் கொடுக்கப்படமாட்டாது.

செங்கல்பட்டு மாவட்டத்தின் பூவிருந்தவல்லி வட்டாரத்திலும், மதுரை மாவட்டத்தின் ஆத்தூர் வட்டாரத்திலும் இத் திட்டம் நாள் கடந்தே செயலுக்குக் கொண்டுவரப்பட்டதால், இத்திட்டத்தின் செயல் கால அளவை நீட்டிப்பதற்கு உலகச் சிறுவர் நிதி நிறுவனத்திடம் ஆவன செய்யுமாறு இந்திய அரசு வேண்டிக்கொள்ளப்பட்டுள்ளது. இந்திய அரசின் ஒப்புதல் அண்மையில் கிடைக்கப்பெற்றது.

இராமநாதபுரம் மாவட்டத்தின் சாத்தூர் வட்டாரத்திலும், கன்னியாகுமரி மாவட்டத்தின் அகஸ்தீஸ்வரம் வட்டாரத்திலும், கோயம்புத்தூர் மாவட்டத்தின் பெரியநாய்க்கன்பாளையம் வட்டாரத்திலும் இவ்வேலைத் திட்டம் தொடர்ந்து நடைபெறும். இவ் வேலைத் திட்டத்தைப் படிப்படியாக மற்ற வட்டாரங்களுக்கு நீட்டிப்பது ஆலோசனையில் இருந்து வருகிறது.

### (இ) தமிழ்நாட்டில் கிராமத் தொழில் திட்டம்.

கிராமத் தொழில் திட்டம் மத்திய அரசின் ஆதரவில் நடைபெறுவதாகும். இதற்கு இந்திய அரசின் முழு நிதி உதவி கிடைத்து வருகிறது. இம்மாநிலத்திலே ஸ்ரீபெரும்பூதூர், ஓமலூர், நாங்குனேரி ஆகிய இடங்களில் இத்திட்டம் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வருகிறது. கிராமப் பகுதிகளை மேம்பாடு அடையச் செய்வதில் பல இடர்ப்பாடுகள் இருந்தபோதிலும் இந்த வேலைத் திட்டம் அந்தந்தப் பகுதிகளில் வேலை வாய்ப்பு அளிப்பதன் மூலமாகவும், புதிய துறைகளில் பயிற்சி அளிப்பதற்கு வசதி அளிப்பதன் மூலமாகவும் அப்பகுதிகளின் மேம்பாட்டிற்கு உறுதுணையாக இருந்துள்ளது.

தற்போது, இந்த மூன்று திட்டங்களிலும், பல்வேறு தொழில்களில் பயிற்சி அளிப்பதற்காக 30 பயிற்சிப் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. பனை ஓலைப் பொருள்கள், கோரைப் பாய், சாக்குக் கட்டி, தோல் பொருள்கள், வெண்கலப் பொருள்கள், பிரம்புப் பொருள்கள், பாலிதின் பைகள், மரப் பொம்மைகள். மண் பொம்மைகள் முதலியவற்றைத் தயாரிப்பதிலும், தச்சுத் தொழில், கருமார் தொழில், பொறியியல், அச்சுத் தொழில், வானொலிப் பெட்டித் தொழில் முதலியவற்றில் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதுவரை 804 பேர் பயிற்சி முடித்துள்ளனர். மேலும், 406 பேர் பயிற்சி பெற்று வருகின்றனர். உள்ளூர் கைவினைஞர்கள் உற்பத்திகளை மேம்படுத்திக் கொள்வதற்கான பணி வசதிகளைச் செய்து கொடுப்பதற்காகவும், குடியானவர்கள் தங்களுடைய வேளாண்மைக் கருவிகளான மின்சார மோட்டார்கள், தெளிப்பான்கள், மருந்து தூவு கருவிகள் முதலியவற்றைச் செப்பனிடவும், சீராக்கவும் பணிவசதி செய்து கொடுக்கப்பதற்காகவும், இந்த மூன்று திட்டப் பகுதிகளிலும் 16 பொது நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டன. இந்த நிலையங்களைக் கிராமத்தினர் நல்ல வகையில் பயன்படுத்தி வருகின்றனர்.

பயிற்சிப் பள்ளிகள், பொதுவழிப் பணி நிலையங்கள் ஆகியவை ஒருபுறமிருக்க, இந்தத் திட்டப் பகுதிகளில் உற்பத்திப் பிரிவுகளும் நிறுவப்பட்டுள்ளன. பொதுப்பயன் பொறியியல் பட்டறைகள் மூன்று, கடித உறை தயாரிக்கும் பிரிவு ஒன்று, கண்கவர் வழவழப்பு ஒடு தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று, காலணி தயாரிக்கும் பிரிவு ஒன்று, தோல் பொருள் தயாரிக்கும் பிரிவு ஒன்று ஆகியவை இந்த திட்டப் பகுதிகளில் மூன்றிலும் ஏற்கெனவே செயல்பட்டு வருகின்றன. பொதுப்பயன் பொறியியல் பட்டறை மூன்று மட்டும் மொத்தம் ரூ. 2,78,000 மதிப்புள்ள சிறந்த வேளாண்மைக் கருவிகளையும், கோழிப் பண்ணைக்கு வேண்டிய கருவிகளையும், ஊராட்சிக்கு வேண்டிய தேவைகளையும் (துப்புரவு வண்டிகள் தண்ணீர் வண்டிகள் முதலானவை), மருத்துவ மனை தேவைப் பொருள்கள் (கட்டில்கள், படுக்கை, தலைமாட்டில், சிறு அலமாரிகள் முதலியவை), கட்டடத் தேவைப்பொருள்கள் முதலானவற்றை 1966–67-ல் உற்பத்தி செய்தன. 1967–68-ல் டிசம்பர் 1967 வரையில் ரூ. 3,45,000 மதிப்புள்ள இத்தகைய பொருள்களை உற்பத்தி செய்தன. இந்த உற்பத்திப பிரிவுகள் அனைத்துமாக இதுவரை 150 பேருக்கு வேலை வாய்ப்பு அளித்துள்ளன. இப் பிரிவுகளின் விற்பனை பெருகப் பெருக இந்த வேலை வாய்ப்பு வருங் காலத்தில் கண்டிபபாக பெருகும்.

பாய் நெய்வதற்கு வேண்டிய கோரைப்புல் விளைவித்தல், பட்டு வளர்ப்புக்கு வேண்டிய முசுக்கட்டை பயிரிடுதல், கோழிப்பண்ணை, வாத்துப் பண்ணை அமைத்தல் போன்ற வளர்ச்சி வேலைத் திட்டங்களையும் சிறு அளவில் இவை மேற்கொண்டுள்ளன.

1965–66-ம் ஆண்டில் 6,02,850 ரூபாயும், 1966–67-ம் ஆண்டில் 5,38,700 ரூபாயும் கடனுக வழங்கப்பட்டது. ஏராளமானவர் குடிசைத் தொழில்களையும் சிறு தொழில்களையும் தொடங்கியுள்ளனர். இதனால் பலருக்கு வேலை வாய்ப்பு கிடைத்துள்ளது. 1967–68-ம் ஆண்டில் தொழிலதிபர்களுக்குக் கடன் வழங்குவதற்காக 2,27,200 ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.



மத்திய அரசு இம்மாநில அரசாங்கத்திற்கு கீழ்க்கண்ட வகையில் நிதி ஒதுக்கியுள்ளது.

| ஆண்டு. | மானிய உதவி. | கடன் உதவி. |
|---|---|---|
| | (ரூபாய் | லட்சத்தில்.) |
| 1964–65 .. .. .. .. | 8·43 | 3·83 |
| 1965–66 .. .. .. .. | 13·00 | 10·00 |
| 1966–67 .. .. .. .. | 9·00 | 11·00 |
| 1967–68 .. .. .. .. | 7·80 | 11·70 |

### (ஈ) பாலர் பள்ளிகள் அல்லது குழந்தைகள் காப்பகங்கள்.

ஆரம்பக் கல்வி எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது ஆரம்பக் கல்விக்கு முற்பட்ட கல்வியும் என்பதை இம்மாநில அரசாங்கம் நன்கு உணர்ந்துள்ளது. எனவே, இம்மாநிலத்தின் 21 வட்டாரங்களிலே ஒவ்வொரு வட்டாரத்திலும்உள்ள ஒவ்வொருஊராட்சிக்கும் குழந்தைகள் காப்பகம் ஒன்று என்ற வீதத்தில்பாலர் பள்ளிகளை நிறுவுதற்கான முன்னோடி வேலைத் திட்டம் இம் மாநிலத்தில் 1962-ம் ஆண்டில் செயலுக்குக் கொண்டுவரப்பட்டது. இப்போது மொத்தம் 1,005 பாலர் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. ஆரோக்கிய பழக்க வழக்கங்களைக் கற்றுக்கொள்ளுதல், சாதாரணத் தோட்ட வேலைகள், எண்ணும் எழுத்தும் கற்றுக்கொள்ளுதல், நன்னடத்தை சமூக ஒழுங்குமுறை பற்றிய அடிப்படை விதிகளைக் கற்றுக்கொள்ளுதல் ஆகியவை இந்த நிலையங்களிலே பின்பற்றப்பட வேண்டிய இயல்பான வேலைத் திட்டங்களாகும். சில பள்ளிகளிலே நண்பகல் உணவும் வழங்கப்படுகின்றது. ஊராட்சி ஒன்றியங்களின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் இத் திட்டம் நடைபெற்று வருகிறது. மகளிர் நலத்துறை இயக்குநர் இதற்குப் பொதுவான மேல் பொறுப்பு வகிக்கிறார். தங்களுடைய பகுதிகளிலும் இத்தகைய பாலர் பள்ளிகளைத் துவக்க வேண்டுமென ஏனைய ஊராட்சி ஒன்றியங்களும் வேண்டுகோள் விடுத்துள்ளன. குழந்தைகள் காப்பகங்களை இன்னும் அதிக எண்ணிக்கையில் தொடங்குவது குறித்து நாளடைவில் ஆலோசிக்கப்படும்.

### (உ) குழந்தை நலன் ஒருங்கிணைப்புத் திட்டம்.

செங்கற்பட்டு மாவட்டத்தின் பூவிருந்தவல்லி வட்டாரத்திலே நிறைவேற்றுவதற்காக ஒருங்கிணைந்த குழந்தை நலன் செயல்முறை விளக்கத் திட்டமொன்றை மத்திய அரசு ஏற்படுத்தியுள்ளது. அரசாங்கம், சமூக நல தனித் தொண்டு நிறுவனங்கள், உள்ளூர் நிறுவனங்கள் ஆகியவை தாமே உவந்து நல்கும் ஒத்துழைப்புடனும் குழந்தை நலன் பணியில் மும்முரமாகவும் குறைந்த செலவில் நிறைந்த பயன் காண முடியும் என்பது இத்திட்டத்தின் கருத்தாகும். 50 குழந்தைகள் காப்பகங்களும், 20 சிசு நல நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. குழந்தைகள் காப்பகம் ஒவ்வொன்றும் பால சேவகி ஒருவராலும், ஆயா ஒருவராலும் நிர்வகிக்கப்படுகின்றது. குழந்தை வளர்ப்பில் இவர்கள் பயிற்சி பெற்றவர்களாவர். குழந்தைகள் காப்பகம் ஒன்றில் சராசரியில் 40 குழந்தைகள் இருக்கும். சிசு நல நிலையமொன்றில் சராசரி 10 குழந்தைகள் இருக்கும். நண்பகல் உணவு வழங்குவதும் பால் வழங்குவதும் இவ்வேலைத் திட்டத்தின் முக்கியமான பகுதியாகும். ஒரு குழந்தைக்கு நாளொன்றுக்கு 10 காசு வீதம் கொடுக்கப்படுகிறது. உள்ளூர் மக்கள் தலைக்கு இரண்டு காசு முதல் ஐந்து காசு வரை கொடுக்கின்றனர். மகளிர்

நலனுக்கும் பயன்படுகிற குடும்பம்-குழந்தை நலத் திட்டம் பூவிருந்தவல்லி வட்டாரத்தில் செயல்படுத்தலாமா என்பதை அரசாங்கம் ஆலோசித்து வருகிறது.

### (ஊ) பழங்குடி மக்கள் வளர்ச்சி வட்டாரங்கள்.

தமிழ்நாட்டிலே பழங்குடி மக்கள் வளர்ச்சி வட்டாரங்கள் இரண்டு இருக்கின்றன. சேலம் மாவட்டத்திலே ஏர்க்காட்டிலே ஒன்றும் கொல்லி மலையில் ஒன்றுமாக இரண்டு வட்டாரங்கள் இருக்கின்றன. இந்த வட்டாரங்கள் 1—4—1963 முதற் கொண்டு பழங்குடி மக்கள் (1-ம் நிலை) வளர்ச்சி வட்டாரங்கள் எனக் கருதப்பட்டன. இந்த வட்டாரங்கள் ஒவ்வொன்றும் திட்ட வாரியான பஞ்சாயத்து வளர்ச்சி விரிவு செலவுத் திட்டத்திலிருந்து இயல்பாகப் பெறுகின்ற நிதி வசதிக்குக் கூடுதலாக, ஐந்தாண்டுக் காலம் வரையில் இந்திய அரசின் சமூக நலத் துறையிலிருந்து ரூ. 10 லட்சம் மானியம் பெறும். ஏனைய வட்டாரங்கள் பெறுகின்ற நிதி உதவியைக் கருதிப் பார்க்கையில் இந்த இரண்டு வட்டாரங்களுக்கு ஒதுக்கப்பட்ட உதவித் தொகை அதிகமாக இருப்பதால் இந்த இரண்டு வட்டாரங்கட்கும் அடங்கல் பெருந் திட்டம் வகுக்கப்பட்டு அரசின் ஒப்புதலைப் பெற்றுள்ளது. பெருந் திட்டத்தில் ஏற்கப்பட்டுள்ள திட்டங்கள் பழங்குடி மக்களின் நலனுக்கு உரியவையாகும்.

பழங்குடி மக்கள் வளர்ச்சி வட்டாரங்களில் திட்டங்கள் நிறைவேற்றப் படுவதன் முன்னேற்றத்தை காலாண்டிற்கு ஒரு முறை சீர்தூக்கிப் பார்ப்பதற்கும், நிறைவேற்றப்படுவதற்காகப் புதிய திட்டங்களை எடுத்துக் கூறவும் மாநில நிலையில் பழங்குடி மக்கள் வளர்ச்சிக்கென ஒருங்கிணைப்புக் குழு ஒன்று அமைக்கப்பட்டது.

தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள கல்ராயன் குன்றுகள் வட்டாரத்தை பழங்குடி மக்கள் வளர்ச்சி வட்டாரமாகக் கருதலாமா என்பதை அரசு இன்னும் ஆலோசித்து வருகிறது.

## VIII. ஓராண்டுத் திட்டம்.

உள்ளாட்சி மன்றங்களின் நிதி ஆதாரங்களைப் பெருக்குவதற்காகவும் கிராமப் பகுதிகளிலே சமுதாயச் சொத்துக்களை உருவாக்குவதற்காகவும், பொது மக்களுக்குப் பயனளிக்கத்தக்க கீழ்க்கண்ட திட்டங்களை மேற்கொள்வதற்கும், பொது நிதிகளில் ஊராட்சி ஒன்றியங்களிடமுள்ள உபரி நிதியைப் பயன்படுத்தி ஓராண்டுக் காலத்திற்குள் அவற்றை நிறைவேற்றி முடிக்கவும், உள்ளாட்சி மன்றங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன:—

(1) விசை ஏற்றங்களுடன் சமுதாய பாசனக் கிணறுகள் கட்டுவதற்குக் கடன் கொடுத்தல்.

(2) யந்திரக் கலப்பைகள் வாங்குதல்.

(3) விசை ஏர்களையும், மருந்து தெளிக்கும் கருவிகளையும் குடியானவர்களுக்கு வாடகைக்கு விடுதல்.

(4) பள்ளிக்கூடங்களிலே காய்கறித் தோட்டம் அமைத்தல்.

(5) பேரூராட்சிகளில் சமுதாயப் பொதுக் கட்டடங்களைக் கட்டி திருமணம் நடத்துவதற்கும், கலை நிகழ்ச்சிகள் நடத்துவதற்கும் இவற்றை வாடகைக்கு விடுதல்.

ஊராட்சி ஒன்றியங்கள் தத்தம் பகுதிகளில் நிறைவேற்றுவதற்காகத் திட்டங்களை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளன. ஊராட்சி ஒன்றியங்கள் இவ்வேலைத் திட்டங்களை வெற்றிகாமாக நடத்துவதற்குரிய முழுப் பொறுப்பும் கிராம வளர்ச்சித் துறை இயக்குநரைச் சார்ந்ததாகும். மாவட்டங்களிலே இத்திட்டம் நிறைவேற்றப்படுவதன் முன்னேற்றத்தைக் கவனித்து வருவதற்காக, ஒரு சில மாவட்டங்கள் கிராம வளர்ச்சித் துறை துணை இயக்குநர் ஒவ்வொருவரிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இந்த வேலைத் திட்டத்தில் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியமும், ஊராட்சி மன்றமும் நிறைவேற்றவேண்டிய குறிக்கோள் அளவு வரையறுக்கப்பட்டுள்ளது. 1968 செப்டம்பருக்குள் இக்குறிக்கோள் அளவை எய்துவதற்கு மும்முரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.



## இணைப்பு III

### கோரிக்கை 29—பொதுப் பணிகள்—உதவி மானியங்கள்.

[....481-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

இப் பேரவைமுன் 1968–69-ம் ஆண்டிற்காக ரூ 2,74,97,700 அனுமதி வழங்குமாறு வேண்டுகோள் வைக்கப்பட்டுள்ளது. இது ஓர் அடங்கல் கோரிக்கையாகும். இதில், நகர நீர் வழங்கல்—கழிவுநீர் அகற்றும் திட்டங்களுக்கும், குடிசைப் பகுதிகளை அகற்றல், அவற்றின் மேம்பாடுகள் ஆகிய திட்டங்களுக்கும், கிராம நகரப் பகுதிகளில் வாழ்க்கை வசதிகளையும் நிலையையும் மேம்படுத்துதல், உள்ளாட்சி மன்றங்களின் சாலைகளைப் பேணுதல், மேம்படுத்துதல் ஆகியவற்றுக்கான திட்டங்களுக்கும் உதவி மானியங்கள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நகராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சிகள், சென்னை மாநகராட்சி வீட்டுவசதி வாரியம் ஆகியவற்றிற்கு உதவி மானியங்கள் வழங்குவதற்கான செலவு குறித்தும், இக் கோரிக்கையில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

### ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் சாலை வசதி.

திருநெல்வேலி மாவட்டத்தில், முன்னாள் மாவட்டக் கழகச் சாலைப் பணிகளுக்காக நிலங்களைக் கையகப்படுத்தும் செலவிற்கென 1965 ஜூலைத் திங்களில் ரூ 3,75,000 சிறப்பு மானியம் அனுமதிக்கப்பட்டது. நிலத்தைக் கையகப்படுத்துவதில் இன்னும் முடிவுபெறுமல் உள்ள பணிக்காக ரூ 1,09,000 நிதி ஒதுக்கம் கேட்கப்பட்டுள்ளது.

ஊராட்சி ஒன்றியங்கள் அமைக்கப்படுவதற்கு முன்பு, கிராமச் சாலைகள் மேம்பாட்டிற்கான செலவில் பாதியை மானியமாக வழங்குவது குறித்த அடிப்படையில் ஒவ்வோர் ஆண்டும் ஊராட்சிக்குத் தேவையான தொகைகள் ஒப்பளிக்கப்பட்டன. இந்த மானியங்கள் 1958-ம் ஆண்டு தமிழக ஊராட்சிகள் சட்டம் இயற்றப்பட்டதையொட்டி ஊராட்சிகளுக்கு சட்டப்படியான மானியங்களும், சட்டப்படிக்கல்லாத மானியங்களும் வழங்கப்படுவதன் காரணமாக 1961–62 முதல் நிறுத்தப்பட்டன. ஊராட்சி ஒன்றியச்சாலைகள் அல்லாத ஏனைய கிராமச் சாலைகள் ஊராட்சிகளினால் பேணப்பட்டு வருகின்றன. இதற்காக உள்ளாட்சி சாலைகள் மானியம் வழங்கப்படுவதில்லை. எனவே செலவில் பாதியை மானியமாக வழங்கும் திட்டத்தை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டுவந்தால் கிராமச் சாலைகளை நல்ல நிலையில் பேணி வருவதற்கு ஊராட்சிகளுக்கு ஆர்வமூட்டுவதாக இருக்கும் என்று கருதி மேற்படித் திட்டத்தை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டுவர அரசாங்கம் முடிவுசெய்துள்ளது. அதற்கேற்ப முதல் நடவடிக்கையாக, பேரூராட்சிகளில் உள்ள சாலைகளுக்கு தூசு படியாத மேற்பரப்பை அமைப்பதற்காக பேரூராட்சிகளுக்கு பாதிச் செலவு மானியம் வழங்குவதற்காக, 1968–69-ல் ரூ. 5 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஊராட்சி ஒன்றியச் சாலைகள் அனைத்தையும் பேணுகின்ற செலவைச் சரிக்கட்டுவதற்காக மக்கள் தொகையில் ஒருவருக்கு 40 காசு வீதம் உள்ளூர்ச்சாலை மானியம் எனப்படுகிற சட்டப்படியான மானியம் ஒன்று 1958–ம் ஆண்டு தமிழக ஊராட்சிகள் சட்டத்தின் 131-வது பிரிவின்கீழ் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்துக்கும் வழங்கப்படுகிறது. 1968–69-ம் ஆண்டிற்குரிய நிதி ஒதுக்கம் ரூ. 110 இலட்சம் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

செங்கற்பட்டு, தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு ஆகிய மாவட்டங்களில் புயலின் காரணமாகச் சேதமடைந்த ஊராட்சி ஒன்றியச் சாலைகளையும், ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் பொறுப்பிலுள்ள, (அ) ஒன்றியத்தின் அலுவலகங்கள்; பணியாளர் குடியிருப்பு இல்லங்கள், (ஆ) பள்ளிகள், மகப்பேறு நிலையங்கள் ஆகிய சில கட்டடங்களையும் சீரமைப்பதற்காக ஆகும் செலவு குறித்து 1966 டிசம்பர் திங்களில் அரசாங்கம் ரூ. 22·60 இலட்சம்

ரூபாய் சிறப்பு மானியம் வழங்கியது. இப் பணி நெடுஞ்சாலைப் கிராம பணித்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. 1966–67-ம் ஆண்டிற்கான செலவுகளையும், 1967–68-ம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டையும் கருத்திற்கொண்டு இதற்கென ஒப்பளித்த செலவுத் தொகையில் எஞ்சிய தொகையாகிய ரூ. 1·35 இலட்சம் மட்டும் 1968–69-ம் ஆண்டிற்கு வேண்டப்பட்டுள்ளது.

சமுதாய வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 1-வது, 2-வது நிலை வட்டாரங்களாகச் செயலாற்றி முடித்த ஊராட்சி ஒன்றியங்களுக்கு இணைப்புச் சாலைகளின் பொருட்டு வழங்கப்படுவதற்கு ரூ. 27 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நிதி ஒதுக்கம் "37. சமுதாய வளர்ச்சித் திட்டம்" என்னும் தலைப்பின் கீழ் 1-வது, 2-வது நிலை வட்டாரங்களுக்காக ஒதுக்கியுள்ள தொகைக்கு நிகரானதாகும்.

### நகராட்சிச் சாலைகளும், பாலங்களும்.

நகராட்சிகள் தங்களது மேற்பார்வையில் உள்ள சாலைகளை மேம்படுத்துவதற்காக அரசு மானியங்கள் வழங்கி வருகின்றது. மக்கள் நெரிசல் அதிகமாயுள்ள பகுதிகளில் பொதுமக்களின் உடல் நலத்தைக் கருதி நகராட்சி நகரங்களில் சாலைகளில் தூசு படியாமல் மேற்பரப்பை அமைப்பதற்கு ஒவ்வோர் ஆண்டும் நிதிகள் வழங்குவதென்பது அரசின் கொள்கையாகும். ஒவ்வொரு நகராட்சிக்கும் சாலைகளில் தூசு படியாத மேற்பரப்பினை அமைப்பதற்கான திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. ஓர் ஆண்டில் இத் திட்டத்திலிருந்து இரண்டு வேலைகளை நகராட்சி மன்றங்கள் மேற்கொள்ளலாம். நகராட்சிகளில் சாலைகள் மேற்பரப்பை தூசு படியாமல் அமைக்கும் வேலைக்கென அரசு அவ்வேலையின் செலவில் பாதியை மானியமாக வழங்குகின்றது. செலவின் மறு பாதியை சம்பந்தப்பட்ட நகராட்சிகள் தங்களுடைய நிதிகளிலிருந்து செய்யும்; அல்லது இதற்கென அரசினரிடமிருந்து கடன் பெற்று அச்செலவைச் சரிக்கட்டும். 1968–69-ல் சாலைகளின் மேற்பரப்பைத் தூசு படியாமல் அமைப்பதற்காக நகராட்சி மன்றங்களுக்கு மானியங்கள் வழங்குவதற்கென இந்தக் கோரிக்கையில் ரூ. 10 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. கோரிக்கை 47-ன்கீழ் சாலை வேலைகளுக்காகவும், பால வேலைகளுக்காகவும் நகராட்சிகளுக்குக் கடன்கள் வழங்குவதற்காக, 1967–68 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 13 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. சிறப்பான நேர்வுகளில், நகராட்சிப் பகுதிகளுக்குள் பாலங்கள் கட்ட நகராட்சி மன்றங்களுக்கு உதவி வழங்கப்படுகின்றது. இந்தக் கொள்கையையொட்டி, 1968–69-க்காக இக் கோரிக்கையில் ரூ. 1,80,000 ஒதுக்கப்பட்டுள்ளது. சாலைகள் பராமரிப்புக்காக கூனூர், உதகமண்டலம், கோடைக்கானல் ஆகிய நகராட்சிகளுக்கு நடைமுதல் மானியங்கள் வழங்குவதற்காக ரூ. 24,100 ஒதுக்கப்பட்டுள்ளது. பெருமழை, வெள்ளம் காரணமாகச் சேதமடைந்த சாலைகளைச் செப்பனிடுவதற்காக தேவையானபோது போதிய மானியங்கள் வழங்கப்படுகின்றன. நகராட்சி மன்றங்கள், நெடுங்காலமாக வேண்டி வந்ததற்கு இணங்க, நகராட்சிச் சாலைகளைப் பேணுவதற்கென ரூ. 7·5 இலட்சம் தனி மானியம் (ad Hoc grant) வழங்கவும் அரசாங்கம் முதன் முதலாக முடிவு செய்துள்ளது.

### சென்னை மாநகராட்சி.

சென்னை மாநகராட்சி தனது மேலாதிக்கத்தின்கீழ் உள்ள சாலைகளை மேனிலைப்படுத்தும் காரியத்துக்காக, ஒவ்வொர் ஆண்டும் சென்னை மாநகராட்சிக்கு அரசு கணிசமான அளவுக்கு நிதி வழங்கி வந்துள்ளது.

சென்னை நகரில் உள்ள எல்லாப் பெருஞ் சாலைகளையும் இப்போது நெடுஞ்சாலைகள் துறை பேணி வருகின்றது. பெருஞ்சாலைகள் நீங்கலாக நகரில் பேருந்துகள் ஓடும் சாலைகளை மேனிலைப்படுத்துவதற்காக அரசு உதவி வழங்கி வந்துள்ளது. 1968–69-ல், சென்னை மாநகராட்சி ஆணையர் (பெருஞ் சாலைகள் நீங்கலான ஏனைய) பேருந்துகள் ஓடும் சில முக்கிய சாலைகளை மேம்படுத்துவதற்கான செயற் குறிப்பை அனுப்பினர். போக்கு



வரத்து தங்கு தடையின்றிச் செல்வதற்கு வசதியாயிருக்க, வண்டி செல்லும் பாதையை அகலப்படுத்துதற்கான கருத்தையும் அவர் தெரிவித்தார். இதற்காக அடுத்துள்ள நிலங்களை கையகப்படுத்த வேண்டியுள்ளதென்று அறியப்பட்டுள்ளது. எனவே, இதற்கென சென்னை மாநகராட்சிக்கு மானியமும் கடனும் வழங்க நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

தியாகராயநகரில் துரைசாமி சாலையில் ஒன்றும் கண்ணம்மாப்பேட்டையில் மற்றொன்றுமாக இரண்டு சுரங்கப் பாதைகளை அமைப்பதற்காக நிதி உதவி வழங்குவது குறித்து 1968–69-ம் வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. மலைச் சாலைக்கு அண்மையில் கூவம் ஆற்றுக்குக் குறுக்கே ஹாரிஸ் பாலத்தை அகலப்படுத்துவதற்காக நிதி உதவியளிப்பது குறித்தும் குக்ஸ் சாலையிலுள்ள பாலத்தை அகலப்படுத்துவது குறித்தும் பெரம்பூர் நெடுஞ்சாலையில் இருப்புப் பாதைக்குக் குறுக்காகப் பொது மக்களுக்கான சரங்கப்பாதை ஒன்றை அமைப்பதற்கும் அடையாறுக்குக் குறுக்கே எல்பின்ஸ்டன் பாலத்தைப் புதுப்பிப்பதற்கும் கெங்குரெட்டி சாலையில் சாலை இருப்புப்பாதை கடவுக்குப் பதிலாக மேம்பாலம் ஒன்றை அமைப்பதற்கும் சைதாப்பேட்டை ஆலந்தூர் சாலையில் படுகைப் பாலத்தைப் மேம்பாடு செய்யவும், யானைகவுனி பாலத்தைப் புதுப்பிப்பதற்கும், கேசவப்பிள்ளை பூங்காவில் மொத்த வியாபாரச் சந்தையொன்றைக் கட்டுவதற்கும் மலைச் சாலையில் பல அடுக்குக்கொண்ட கட்டடம் ஒன்றைக் கட்டுவதற்கும் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

பூவிருந்தவல்லி நெடுஞ்சாலையிலும், மலைச் சாலையிலும் திருவொற்றியூர் நெடுஞ்சாலையிலும் உள்ள மின் விளக்குகள் மேலும் ஒளிமிகும் வண்ணம் மேம்படுத்தப்படும். இப்பணிக்காக மானியம் வழங்குவது குறித்து நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சிச் சாலைகளை நன்கு பேணி வருவதற்காகவும் புதிய திட்டங்களைத் திறம்பட நிறைவேற்றுவதற்காகவும் சாலை உருளைப் போன்ற சாலை அமைப்புக் கருவிகளை வாங்குவதற்காக அரசாங்கம் நிதி உதவி வழங்கி வந்துள்ளது. மேலும், பல்லாவரம் கற்சுரங்கங்களுக்காக அகழ் பொறி ஒன்றையும் மத்திய தார் உற்பத்தி நிலையத்திற்காக டீசல் சாலை உருளைகள், ஹைடிராலிக் லோடர் ஆகியவற்றையும் பல்லாவரம் கற்சுரங்கங்களுக்காக கல்பொடி செய்வதற்கான மின்சாரச் சாதனங்களை வாங்கவும் சென்னை மாகநராட்சிக்குக் கடன்களை வழங்க 47-வது கோரிக்கையின்கீழ் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. மேலும், "பி" "டி" பணி மனைகளில் லாரி நிலையங்களைக் கட்டுவதற்கும் மேம்பாடு செய்வதற்கும் சலவைத் தொழிலாளர்களுக்கான தொழிலிடங்களைக் கட்டுவதற்கும். மத்திய தார் உற்பத்தி நிலையத்திற்கு மேம்பாடு செய்வதற்கும் புதிய துணை நிலையங்களையும் ஏற்படுத்துவதற்கும், மண்டல அடிப்படையில் வீதி விளக்குகளை மாற்றியமைக்கவும் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

காவிரி நீரை சென்னை மாநகருக்குக் கொண்டு வருவதற்கான திட்டங்களை வகுத்ததே பதவியேற்றுக்கொண்ட பிறகு புதிய அமைச்சரவை மேற்கொண்ட மிக முக்கியமான நடவடிக்கையாகும். இதனால் இதுவரையில் தீர்வுகாணப்படாத சிக்கல் ஒன்றுக்கு தீர்வுகாண வகை செய்தாகி விட்டது. இம் மாநில அரசாங்கத்தைச் சேர்ந்த பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை வீராணம் ஏரியிலிருந்து காவிரி நீரை சென்னை மாநகருக்குக் கொண்டு வருவதற்கான சாத்தியக் கூறுகளை ஆய்ந்தது. இத்தகைய ஆய்வுக்கான செலவு குறித்து அரசாங்கம் மாநகராட்சிக்கு ரூ. 1 இலட்சம் கடன் வழங்கியது. காவிரி நீரை சென்னை மாநகராட்சிச் செலவில் ஜேடர்பாளையத்திலிருந்து சென்னை மாநகருக்குக் கொண்டு வருவது பற்றியும் பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை ஆராய்ந்தது. அரசாங்கம் இது குறித்து மாநகராட்சிக்கு ரூ. 4·08 இலட்சம் கடன் வழங்கியது. இக் கடன் தொகை இரு பகுதிகளாக (ரூ. 1·80 இலட்சம், 2·28 இலட்சம்) வழங்கப்படும். ரூ. 24·5 கோடி செலவில் வீராணம் ஏரியிலிருந்து சென்னை மாநகருக்கு நாள்தோறும் 400 இலட்சம் காலன் காவிரிநீரை இறைக்க வகை செய்வதற்கு அரசாங்கம் ஒப்பளிப்பு வழங்கியுள்ள இவ்வேலைப் பொதுச் சுகாதாரப் பொறியியல் துறையினால் மேற்கொள்ளப்

பட்டுள்ளது. பாராட்டத்தக்க இந்த நடவடிக்கையினால் சென்னை மாநகருக்கு என்றென்றும் குடிநீர் கிடைக்கும். இம். மாநகரில் பாலும் தேனும் ஆறுக்ப் பெருகி ஓடாவிடினும் வருங்காலத்தில் நல்ல நீர் ஏராளமான அளவில் கிடைக்கவும் நீர் பற்றாக்குறை பற்றியும் நீர் வழங்குவதில் கட்டுப்பாடு முறை பற்றியும் கோடை வரும் முன்னரேயே மக்களின் மனதிலே தலைவிரித்தாடும் அச்சத்திற்கு இடமிராத வகையிலும் இந் நடவடிக்கை பயன்தரும்.

சென்னை மாநகரை மேம்படுத்தி அழகுபடுத்தும் திட்டம் புதிய அமைச்சரவைப் பொறுப்பேற்ற பிறகு மேற்கொண்ட சீரியதொரு திட்டமாகும். ரூ. 1·18 கோடி செலவில் கூவம் ஆற்றிலும் பக்கிங்காம் கால்வாயிலும் கடல்நீரை அடித்து விடுவதனால் இந்த ஆற்றிலும் கால்வாயிலுமுள்ள நீரைத் தூய்மைப்படுத்த வகைசெய்யும் திட்டமொன்று மேற்கொள்ளப் பட்டுள்ளது. இவ் வேலை நடந்து வருகின்றது. இவ் வேலை முடிந்தபின் கூவம் ஆற்றிலும் பக்கிங்காம் கால்வாயிலும் கடல் நீர் தாராளமாக ஓடிக்கொண்டிருக்கும். இதனால் சென்னை மாநகரில் கொசுத் தொல்லை பெருமளவிற்கு ஒழியும். அதன் பின்னர் இந்த ஆற்றங்கரையின் நெடுகவும் கால்வாய் நெடுகவும் குறிப்பிட்ட இடங்களில் பூங்காக்களையும் உலாவு மேடைகளையும் அமைப்பதற்கான செயற் குறிப்புகள் உள்ளன. இந்த நடவடிக்கைகளினால் இந்நீர் நிலைகளும் சென்னைமாநகரமும் அழகுபடுத்தப் படும். கொசுத் தொல்லையினாலும் தேங்கியுள்ள நீரினாலும் இந்த இரு நீர்களின் இருமருங்கிலும் குவிந்துள்ள குப்பைக் குளங்களிலிருந்து எழும் முடை நாற்றத்தினாலும் பல்லாண்டுக் காலமாகத் தொல்லைப்பட்டுக்கொண்டிருந்த மக்களுக்கு, புதிய அமைச்சரவை பதவியேற்ற பின்னர் தொடங்கப் பட்டுள்ள இத் திட்டம் விடிவு காலம் ஏற்பட வகை செய்கின்றது.

**சென்டேஜ் கட்டணங்கள்.**

பொதுப்பணித் துறையினர் தொழிலாளர் காப்புறுதி பொறுப்புக் கழகம் (Employees State Insurance Corporation) கட்டடங்களைக் கட்டுவதற்கென அக் கழகம் சென்டேஜ் கட்டணங்கள் செலுத்தும் பொருட்டு உதவி மானியங்களுக்கென ரூ. 2,05,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

**நீர் வழங்கல், கழிவுநீர் அகற்றும் திட்டங்கள்.**

நீர் வழங்கல், கழிவுநீர் அகற்றும் திட்டங்களுக்காக மானியங்கள் வழங்குவதற்கு இக் கோரிக்கையில் வகை செய்யப்பட்டுள்ளது. மேற்படி திட்டங்கள் பொதுச் சுகாதாரப் பொறியியல் துறையாலும், நகராட்சிகளாலும் நிறைவேற்றப்படுகின்றன. நகர நீர் வழங்கல், கழிவுநீர் அகற்றும் திட்டங்களுக்காக மானியம் அளிக்கும் பொருட்டு 1968-69 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 11,95,100 ஒதுக்கியுள்ளது.

நகராட்சிகளுக்கும் ஊராட்சிகளுக்கும் அவற்றின் நீர் வழங்கு திட்டங்களை நிறைவேற்றுவதற்காக கடன்கள் வழங்கப்படுகின்றன. ஆனால், குறிப்பிட்ட சில நேர்வுகளில் நீர் வழங்கு திட்டங்களை நிறைவேற்றுவதற்கான செலவின் ஒரு பகுதி குறித்து ஊராட்சிகளுக்கு உதவி மானியங்களும் வழங்கப்படுகின்றன. அவர்கள் செயல்படுத்தும் நீர்வழங்கு திட்டங்கள் தன்னிறைவுள்ளதாக இருக்கவேண்டுமென வற்புறுத்தப்படுகிறது. இத் திட்டங்களிலிருந்து கிடைக்கும் வருவாய் கொண்டு இத் திட்டங்களைப் பேணி வருவதற்கான ஆண்டு செலவுகளும் இத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கான பெறப்பட்ட கடன்களுக்கான ஆண்டுத் தொகையும் சரிக்கட்டப்பட வேண்டும். மேலும், இத் திட்டங்களில் வருங்காலத்தில் செய்யப்படும் மேம்பாட்டுப் பணிகளுக்கான செலவும் இவ் வருவாயிலிருந்து சரிக்கட்டப்பட வேண்டும். அரசாங்கம் அவசியமாகக் கருதும் வீதங்களில் தண்ணீர் வரி, கழிவுநீர் அகற்று வரி, பிற வரிகள் ஆகியவற்றை அதிக அளவுக்கு வசூலிப்பதன் மூலம் நிதி திரட்டிய பின்னரும் திருப்பிச் செலுத்துவது குறித்து அவர்களுக்குள்ள சக்தியையொட்டி அதிக அளவுக்குக் கடன்கள்



வாங்கிய பின்னரும் மூலதனச் செலவில் அவர்களால் சரிக்கட்ட முடியாத பகுதி குறித்து நகராட்சிகளுக்கும், ஊராட்சிகளுக்கும் உதவி மானியங்கள் வழங்கப்படுகின்றன.

பத்தாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட 61 நகராட்சிகளிலும், 11 நகரியங்களிலும், 21 ஊராட்சிகளிலும் நீர் வழங்கு திட்டங்கள் செயலில் உள்ளன. 12 நகராட்சிகளுக்கும், 1 நகரியத்துக்கும், 7 ஊராட்சிகளுக்கும் புதிய நீர் வழங்குத் திட்டங்களும், 16 நகராட்சிகளுக்கு நீர் வழங்கு வசதி மேம்பாடுகளும் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. 10,000-க்கு மேற்பட்ட மக்கள் தொகையுள்ள 12 நகராட்சிகளிலும், 4 நகரியங்களிலும், 2 ஊராட்சிகளிலும் கழிவுநீர் அகற்றும் திட்டங்கள் (ஓரளவுக்கு கழிவு நீர் அகற்றும் திட்டங்கள் உட்பட) செயலில் உள்ளன. 4 நகராட்சிகளிலும், 2 ஊராட்சிகளிலும், கழிவுநீர் அகற்றும் திட்டங்கள் (ஓரளவுக்குக் கழிவுநீர் அகற்றும் திட்டங்கள் உட்பட) நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இரண்டு நகராட்சிகளில் கழிவுநீர் அகற்றும் திட்டங்களுக்கு மேம்பாட்டு வேலைகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

உள்ளாட்சி மன்றங்கள் நிறைவேற்றி வருகிற நீர் வழங்கு-கழிவுநீர் அகற்றும் திட்டங்களுக்கென அவற்றிற்குக் கடன் களையும், மானியங்களையும் வழங்க 1968-69 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் போதிய நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

**குடிசைப் பகுதி மேம்பாடு/அகற்றும் திட்டம்.**

குடிசைப் பகுதி மேம்பாடு/அகற்றும் திட்டம் மத்திய அரசு ஊக்கப் படுத்திப் பொறுப்பேற்கும் ஒரு திட்டமாகும். இது 1956-57-ல் சென்னை மாநகரில் தொடங்கப்பட்டு அப்பால் மூன்றாவது திட்டக் காலத்தில் வெளியூர்ப் பகுதிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. இந்த திட்டத்தின்கீழ் குடிசைப் பகுதிகள் மேம்படுத்தப்படுகின்றனவேயன்றி அகற்றப்படுவதில்லை. கன்னியப்பா நகரில் உள்ள குடிசைவாழ் பகுதியினர் மட்டுமே அங்கிருந்து அகற்றப் பட்டு, கோடம்பாக்கம் புதூர் (பாகம் 1) பகுதியில் குடியேற்றப்பட்டனர். ஏனெனில், அவர்கள் வாழ்ந்த அந் நிலப்பகுதி பாதுகாப்புத் துறைக்குத் தேவைப்பட்டது. இந்தக் குடிசைப் பகுதியையும், பல்வேறு வீட்டு வசதித் திட்டங்களையும், பிற திட்டங்களையும் செயல்படுத்தத் தொடங்கியதன் காரணமாக, பாதிக்கப்பட்ட நடைபாதை வாசிகளையும், ஏனைய குடிசை வாழ் மக்களையும் பிற இடங்களுக்கு அகற்றியது நீங்கலாக வேறு குடிசைப் பகுதி எதும் அகற்றப்படவில்லை.

இந்தத் திட்டத்தின்கீழ் வளர்ச்சிப் பணிகள் இரண்டு வகைகளில் நிறைவேற்றப்படுகின்றன. 800 சதுர அடி முதல் 1,000 சதுர அடி வரையில் உள்ள திறந்தவெளி மேம்பாடடைந்த மனைகளில் 300 சதுர அடி அடித்தளம் அமைக்கப்பட்டு அத்துடன் ரூ. 252 பெறுமான குடிசைகள் கட்டுவதற்கான பொருள்களும், சுய உதவி அடிப்படையில் குடிசை போடுவதற்காக ரூ. 32·50 ரொக்க மானியமும் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு மனையிலும் ஒரு குளியலறை நீரடிக் கழிப்பிடம் ஒன்றை வாரியம் அமைத்து, பேணி வருகிறது. மனையில் தெருவிளக்கு, சாலைகள், நீர் வழங்கு வசதி, கழிவுநீர் அகற்றும் வசதி, மரம் நடுதல் முதலிய எல்லா வசதிகளும் முறையாகச் செய்து கொடுக்கப்படுகின்றன. இடத்திற்கு ஏற்றபடி உறைவிடங்களையும் ஒரு மாடி அல்லது பல மாடி கட்டடங்களையும் கட்டுவதன் மூலம் மேம்பாடு செய்வது மற்றொரு முறையாகும். கட்டப்பட்ட ஒவ்வொரு உறைவிடத்திலும் 120 சதுர அடி பரப்பளவுக்குத் தாழ்வாரமும், 84 சதுர அடி கொண்ட சமையல் அறையும், 16 சதுர அடி கொண்ட ஒரு குளியல் அறையும் இருக்கும்.

இந்திய அரசால் முடிவு செய்யப்பட்ட உச்சவிலை 1967 ஏப்ரல் 1-ம் நாள் முதல் மாற்றியமைக்கப்பட்டது. மாற்றி அமைக்கப்பட்டபடி மனைக்கட்டு ஒன்றின் விலை ரூ. 1,850 ஆகும். இரண்டு அறைகள் கொண்ட சிறிய ஒற்றை மாடி குடியிருப்பாக இருந்தால் அதன் உச்ச விலை ரூ. 4,850 ஆகவும் இரண்டு அறைகள் கொண்ட சிறிய இரட்டை மாடிக் குடியிருப்

பாக இருந்தால்அதன் உச்ச விலை ரூ. 5,100 ஆகவும், இரண்டு அறைகள் கொண்ட சிறிய பலமாடிக் குடியிருப்பாக இருந்தால் அதன் உச்சவிலை ரூ. 6,850 ஆகவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. ரூ. 1,850, ரூ. 4,850, ரூ. 5,100 உச்ச விலைகள் கொண்ட திறந்த மேம்பாட்டு மனைகட்கும் குடியிருப்புகளுக்கும், மூன்று இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் தொகை உள்ள நகரங்களில் ரூ. 1,100-ம் ஒரு இலட்சம் முதல், மூன்று இலட்சம் வரை மக்கள் தொகையுள்ள நகரங்களில் ரூ. 450-ம் அனுமதிக்கப்படும். நிலம் வண்மையாயிராத பகுதிகளில் மேலும் ஆழமும் உறுதியுமான கடைகால் தேவைப்படுகிற கல் கட்டடத்தாலான வீடுகள் கட்டுவது குறித்து மொத்த உச்சச் செலவில் ஒவ்வொரு வீட்டிற்காகவும் ரூ. 550 கூடுதலாக அனுமதிக்கப்படும்.

அண்மையில் திருத்தியமைக்கப்பட்ட நிதி உதவியின்படி, இத் திட்டத்தின் செலவில் $37\frac{1}{2}$ சத வீதத்தை இந்திய அரசின் பணிகள்-வீட்டுவசதி-நகர்ப்புற வளர்ச்சி அமைச்சு உதவித் தொகையாக வழங்குகிறது. மற்றொரு $12\frac{1}{2}$ சத வீதத் தொகையை மாநில அரசாங்கம் வழங்குகிறது. எஞ்சியுள்ள 50 சத வீதத் தொகையை இந்திய அரசின் பணிகள்-வீட்டு வசதி-நகர்ப்புற வளர்ச்சி அமைச்சு கடனாக வழங்குகிறது. அக் கடன் தொகை முப்பது ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தத்தக்கதாகும். குப்பை கூட்டுவோர்கள், தோட்டிகள் குறித்த குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டங்களைப் பொறுத்த வரையில், சமூக நலன் (உள்துறை அமைச்சு) துறையின் நிதிகளிலிருந்து மேற்கொண்டும் $12\frac{1}{2}$ சத வீத மத்திய உதவித் தொகை கிடைக்கும். அத்தகைய நேர்வில், பணிகள்-வீட்டுவசதி-நகர்ப்புற வளர்ச்சி அமைச்சு வழங்குகிற கடனின் அளவு, அத் துறையிலிருந்து கிடைக்கிற உதவித் தொகையின் அளவிற்குக் குறைக்கப்படும். இத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கத்திலிருந்து 10 சத வீதம் கடைகள், பொதுக் கூடங்கள், பள்ளிகள் முதலியவற்றை ஏற்படுத்துவதற்கெனப் பயன்படுத்தப்படும். இந்தத் தொகை இந்திய அரசினரிடமிருந்து பெற்ற கடனாகக் கருதப்படும். உச்ச விலைக்கு மேற்பட்ட தொகை கூடுதல் உதவித் தொகையாக மாநில அரசாங்கத்தால் சரிக்கட்டப்படும்.

மேம்படுத்திய திறந்தவெளி வீட்டுமனை ஒவ்வொன்றுக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ. 11 வாடகை விதித்து வாங்க இந்திய அரசு அனுமதித்து இருந்தாலும், மாநில அரசாங்கம் முடிவுசெய்துள்ளபடி சென்னையில் மாதம் ஒன்றுக்கு 3 ரூபாய் மட்டுமே வாடகையாக வாங்கப்படுகிறது. குடியிருப்புக்களின் வகைகளுக்குத் தக்கவாறு குடியிருப்புகளுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 25 முதல் ரூ. 30 வரை வாடகை நிச்சயிக்கப்பட்டுள்ளது. குடிசை வாழ் பகுதியினர் இந்த வாடகைகளைக் கொடுக்க இயலாத நிலையில் இருப்பதை முன்னிட்டு, மாநில அரசாங்கம் மேல் உதவித் தொகையாகக் கொடுக்கக் கருதி, வாடகையை மாதம் ஒன்றுக்கு ரூ. 10 எனக் குறைக்க முன் வந்துள்ளது.

நான்காவது திட்டத்தில் இவ் வேலைத் திட்டத்திற்காக ரூ, 8,00 இலட்சம் ஒதுக்கியுள்ளது. 1966–67-ல் குடிசைவாழ் பகுதி மேம்பாட்டுத் திட்டங்களின் கீழ் பல்வேறு பணிகளை நிறைவேற்றுவதற்கு ரூ. 73·67 இலட்சம் செலவிடப்பட்டது. 1967–68-ம் ஆண்டில் ரூ. 120 இலட்சம் செலவிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இம் மாநிலத்தில் பல்வேறு குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக, 1961 ஏப்ரல் 1-ம் தேதி முதல் 1967 டிசம்பர் 30-ம் தேதி வரை ரூ. 4,35·80 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

### தமிழ்நாடு வீட்டு வசதிப் பிரிவு.

சென்னை மாநகரில் உள்ள 491 குடிசைப் பகுதிகளில் சுமார் 100 குடிசைப் பகுதிகளை மட்டுமே மேம்பாடு செய்வதற்காக/ அகற்றிவிடுவதற்காக தமிழ்நாடு வீட்டு வசதிப் பிரிவு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. எழுபத்தி மூன்று குடிசைப் பகுதிகளுக்கு அனுமதி வழங்கப்பட்ட சுமார் 57 திட்டங்கள் கைவசம் உள்ளன. அவற்றைத் தவிர நடைபாதை வாசிகளைக் குடியமர்த்துவதற்கான திட்டங்களும் உள்ளன, இத் திட்டங்களை



நிறைவேற்றுவதுடன், சுமார் 30 இனங்களைச் சேர்ந்த பகுதிகளுக்காக திட்டங்கள் வகுத்தல், நிலம் கையகப்படுத்தல், உரிமை மாற்றுதல், மற்றவர்களிடம் ஒப்படைத்தல் ஆகிய நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. 11,762 சீர்செய்த காலி மனைகள் வழங்குதல், 12,337 குடியிருப்புகள் அமைத்துக் கொடுத்தல் ஆகியவை ஒப்பளிப்பு வழங்கப்பட்டு கைவசமுள்ள 57 திட்டங்களின் நோக்கமாகும். இத் தேதி வரை, 6,430 சீர் செய்த காலி மனைகள் வழங்கப்பட்டுள்ளன. 4,011 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. 1,660 குடியிருப்புகள் கட்டப்படும் வேலை பல்வேறு நிலைகளில் நடந்து வருகிறது.

நிலம் கையகப்படுத்துவதற்கான நடவடிக்கை அநேகமாக எல்லாவற்றிலும் எடுக்கப்பட்டுள்ளது. சிலவற்றில் நிலத்தைக் கையகப்படுத்தும் நடவடிக்கைகள் மிக முன்னேறிய நிலையிலுள்ளன. தமிழ்நாடு, 1961-ம் ஆண்டு வீட்டு வசதி வாரியச் சட்டத்தின் 36-வது பிரிவின்கீழ் ஒரு கட்டளையுடன், நிலங்கள் வசப்படுத்தப்பட்டவுடன் திட்டங்கள் வகுக்கப்பட்டு, நிறைவேற்றத்துக்காக ஒப்பளிப்பு வழங்கப்படும்.

### மதுரை வீட்டு வசதிப் பிரிவு.

மதுரையில் மூன்று திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 96 சீர் செய்த காலி மனைகள் வழங்குவது, 132 குடியிருப்புகள் அமைத்துக்கொடுப்பது ஆகியவை மேற்படித் திட்டங்களின் நோக்கமாகும். இத் திட்டங்களுக்குச் சுமார் ரூ. 12 இலட்சம் செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

### கோயம்புத்தூர் வீட்டு வசதிப் பிரிவு (கோயம்புத்தூர்).

கோயம்புத்தூரில் 6 திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ரூ. 104·45 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில், 1,822 சீர் செய்த காலி மனைகள் வழங்குதலும், 1,066 குடியிருப்புகள் கட்டுதலும், மேற்படித் திட்டங்களின் நோக்கமாகும். இதுவரை 84 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 378 குடியிருப்புகளுக்குக் கட்டுமனை வேலை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### சேலம்.

சேலத்தில் 8 திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 620 சீர் செய்த காலி மனைகளை வழங்குவதும், 216 குடியிருப்புகளைக் கட்டிக் கொடுப்பதும் இத் திட்டங்களின் நோக்கமாகும். இத் திட்டங்களுக்கு ரூ. 39·74 இலட்சம் செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளன. இதுவரை, 528 காலி மனைகளைச் சீர்செய்யும் வேலை முடிவு பெற்றுள்ளது. 216 குடியிருப்புகளை கட்டும் வேலை மேற்கொள்ளப்பட்டுள்ளது. சேலத்தில் உள்ள வேலைகளை நிறைவேற்றும் பொறுப்பையும், கோயம்புத்தூர் வீட்டு வசதிப் பிரிவு மேற்கொண்டுள்ளது.

### திருச்சிராப்பள்ளி வீட்டு வசதிப் பிரிவு.

திருச்சிராப்பள்ளியில் 3 திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. 750 குடியிருப்புகளை ரூ. 44·12 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் கட்டிக் கொடுப்பதே இத் திட்டங்களின் நோக்கமாகும். இதுவரை 176 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 80 குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகின்றன.

### பொது.

இத் திட்டத்தை நிறைவேற்றும்போது சில இடர்பாடுகள் நேரிட்டன. உள்ளூர்த் தலைவர்கள், குடிசைவாழ் பகுதியினரை தங்கள் சொந்த நலனுக்காக, குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தை எதிர்க்குமாறு தூண்டிவிட்டனர்.

(ii) குடிசைவாழ் பகுதி மேம்பாட்டிற்காக, அப் பகுதியில் அதிகமாகக் குடியிருப்பவர்களை வேறிடத்திற்கு வெளியேற்றுவது அத் திட்டம் மேற்கொள்ளப்படுவதற்கு ஒரு நிபந்தனையாக இந்திய அரசு விதித்துள்ளது. இதற்கேற்ப, மிகுதியாக இருக்கும் குடும்பங்கள் வேறிடங்களுக்குச் செல்லத் தயங்குகின்றன.

**(iii) கட்டடப் பொருள்கள் முதலியவை கிடைக்காதிருத்தல்.**

சென்னை மாநகரில் குடிசைவாழ் பகுதி மேம்பாட்டு ஒழிப்புத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு முறைவைப்பினைக் காட்டுகிற அடங்கல் பட்டியல் ஒன்றுக்கு 1964 ஜூனில் அரசாங்கம் ஒப்புதலளித்தது. அரசாங்கம் ஒப்புதலளித்த 491 திட்டங்களிலே, 100 திட்டங்கள் இதுவரை நிறைவேற்றத்துக்கு மேற்கொள்ளப்பட்டுள்ளன.

குடிசைப் பகுதி மேம்பாட்டு ஒழிப்புத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக, மாநில வீட்டு வசதி வாரியம் இம் மாநிலத்தின் 1967-68 வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 100 இலட்சம் ஒதுக்கியுள்ளது. இதில் ரூ. 37·50 இலட்சம் கடன் பகுதியாகும்; ரூ. 62·50 இலட்சம் உதவித் தொகையாகும். இத் தொகையை நடப்பு ஆண்டிலேயே முழுவதும் பயன்படுத்துவதற்கு முழு முயற்சி எடுக்கப்பட்டுவருகிறது. குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக, மாநில வீட்டு வசதி வாரியத்திற்கு ரூ. 140 இலட்சம் நிதி உதவி அளிப்பதற்காக, இம் மாநில அரசாங்கத்தின் 1968-69 வரவு-செலவுத் திட்டத்தில் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் ரூ. 70 இலட்சம் கடனாகவும், ரூ. 70 இலட்சம் மானியமாகவும் வழங்கப்படும்.

# Index to Tamil Nadu Legislative Assembly Debates.

**THIRD SESSION OF THE FOURTH LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.**

**7th to 9th, 12th and 13th March 1968.**

**Volume X (Nos. 1 to 5.)**

**A**

PAGES

ABDUL GHAFFOOR SAHIB, THIRU M.—
- Navlakh fee-hold village (No. 20), conversion into ryotwari ... ... ... ... ... 479-480

AGRICULTURE—
- Kanyakumari district, failure of monsoon and remission of land revenue (C.A.) ... ... 118-119
- Tractors on loan to agriculturists, district-wise number ... ... ... ... ... 17-23

ALAGIRISAMY, THIRU S.—
- Budget, 1968-69, Voting—
  - Animal Husbandry ... ... ... ... 226,
  - Capital Outlay on Forests ... ... ... 240-241
  - Fisheries ... ... ... ... ... ...
  - Forest Department ... ... ... ...
  - Capital Outlay on Public Health, Medical, Public Health ... ... ... ...... ... 349, 350, 425, 427
  - Capital Outlay on Schemes of Government Trading ... ... ... ... ... 120
  - Community Development Projects, etc., Public Works—Grants-in-aid ... ... ... 511-513, 481
  - Education ... ... ... ... ... 56-58, 27, 94

A—*cont.*

PAGES.

ANNADURAI, THIRU C. N.—
Budget, 1968–69, Voting—
Capital Outlay on Public Health ... ... 436, 446
Medical ... ... ... ... ... ... ... 447–448
Public Health ... ... ... ... ... ... 449, 450
Community Development Projects, etc., Public Works Grants-in-aid ... ... ... ... 538, 539
552–555
542

ARUNA, THIRU ALADI—
Budget, 1968–69, Voting—
Education ... ... ... ... ... 32–36

B

BACKWARD CLASSES—
Scholarships, Backward class students, Madurai district ... ... ... ... ... ... 23–24

BALARAMAN, THIRU L.—
Budget, 1968–69, Voting—
Animal Husbandry ... ... ... ...
Capital Outlay on Forests ... ... ... 226,227
Fisheries ... ... ... ... ... ...
Forests ... ... ... ... ... ...
Community Development Projects, etc., Public Works Grants-in-aid ... ... ... ... 509–511

BALASUBRAMANIAN, THIRU A.—
Budget, 1968–69, Voting—
Education ... ... ... ... ... 93

BALASUBRAMANIAN, THIRU S.—
Budget, 1968–69, Voting—
Capital Outlay on Schemes of Government Trading ... ... ... ... ... ... 164–166
120,
Medical, Public Health, Capital Outlay on Public Health ... ... ... ... ... ... 436–438
349,



B—*cont.*

PAGES

BELLIE GOWDER, THIRU J.—
Budget, 1968–69, Voting—
Animal Husbandry ... ... ... ...
Fisheries ... ... ... ... ... ...
Forest Department ... ... ... ... 250–251
Capital Outlay on Forests ... ... ...
Capital Outlay on Schemes of Government Trading ... ... ... ... ... ... 174–175
Tourism promotion and development of Kotagiri as tourist centre ... ... ... ... ... 110–111

BHARATHIAR—
Bharathiar's house at Ettaiyapuram, purchase and preservation as natural monument ... ... 330–331

BHUVARAHAN, THIRU G.—
Budget, 1968–69, Voting—
Animal Husbandry ... ... ... ...
Capital Outlay on Forest ... ... ...
Fisheries ... ... ... ... ... ... 265–273,
Forests ... ... ... ... ... ... 278
Community Development Projects, etc., Public Works Grants-in-aid ... ... ... ... 536–544
547
Education ... ... ... ... ... ... 93

BILLS—
Inams (Supplementary) Amendment Bill, 1968—
Int. ... ... ... ... ... ... 225

BRIDGES AND CULVERTS—
Kusasthali river, bridge ... ... ... ... 210–211
Natham-Sendurai road, construction of bridges ... 334–335

C

CALLING ATTENTION—
Crop failure in Palladam and Avinasi taluks postponement of collection of loan ... ... ... 224–225
Famine conditions in Palayam Panchayat Union area, relief works ... ... ... ... ... 347
Kanyakumari district, failure of monsoon and remission of land revenue ... ... ... 118–119

PAGES

C—*cont.*

CEMENT—

Production and export ... ... ... ... 105-107

CHAIR—

Announcement(s)—

Calling attention notice by Thiru N. Soundara-pandiyan ... ... ... ... ... 480

House committee, election to ... ... ... 348

Rulings and Observations—

*Adjournment motions*—

Attack on Thiru K. Anbazhagan, M.P.—

Consent withheld on the ground that the matter came within the day-to-day administration of the Government ... 223

*Order of Precedence*—

The Speaker permitted a member who gave notice of an adjournment motion to explain how the matter involved more than the ordinary administration of the law. The member read the motion and explained the position. The Chair asked another member who had given notice of a similar motion to read it. That member before reading his motion raised a point of order and said that he gave notice of his motion earlier and so he should have been given precedence in reading and explaining the motion. The Speaker said that there was no such rule which laid down that a member who had given notice of a motion earlier should be given precedence. Under the rules, notice of motions should be given to the Secretary and not to the Speaker. In the instant case the notice given to the Secretary earlier was taken up first. The other notice which was given to the Speaker was received by him out of courtesy. On that account the member should not take it as given earlier ... ... ... 223

*Agenda*—

An item of business included in the Agenda could not be altered by the Chair but could be done only with the leave of the House on a motion moved by the Leader of the House ... ... 26



PAGES

C—*cont.*

CHAIR—*cont.*

*Rulings and Observations*—cont.

*Calling Attention Notice*—

Absentee members' notice—

Will be deemed withdrawn with the leave of the House if the member who has given notice is absent when the item is taken up ... ... 27, 225, 480

When a number of members have given calling attention notices of on similar matters it is not necessary that all of them should read the notices if there is no change in the wording of the notices. They may however read the notice if the wording is different from the one read by a member earlier ... ... ... ... ... 224

*Debate*—

Interruptions—

A member can interrupt another member and speak only if the member who holds the floor resumes his seat ... ... ... ... 187

*Decorum*—

Reference to persons not in the House—

A member can refer to persons who are not in the Assembly. There is no rule prohibiting such reference ... ... ... ... ... 188

*Demands for grants*—

Cut motions—

Need not be seconded ... ... ... ... 119

Shoud be given in writing in advance ... ... 351-352

Inclusion in official report of the policy notes, etc., circulated to members—

Policy notes or any other document relating to a Demand circulated to the members but not read in the House while the Minister moved that Demand, were ordered to be printed in the Official Report of the Proceedings even if they were not actually read in the House ... 120-227, 483

PAGES

C—*cont.*

CHAIR—*cont.*

*Rulings and Observations*—cont.

*Expressions used in the House*—

"இரட்டை நாக்கு" (Double tongued) in the sentence " It is usual for them to be ' double tongued '. A point of order raised by the Leader of the Opposition was held to be not a point of order as the expression had been used to indicate ' double-meaning ' ... ... ... 149

*Ministers' presence*—

A member pointed out that the Food Minister was not present when the Demand relating to Food was under discussion. Another Minister who was present said that the Food Minister had to go out for aunavoidable reasons, that he was noting down the points made out by the members and that he would pass on the note to the Minister for Food. The Chairman told the member that it would be enough if one Minister was present ... ... ... ... ... ... 176

*Ministers' statements*—

A Minister's statement should be taken as final ... 344

*Personal explanations*—

A point of personal explanation could be raised only at the end of a speech ... ... ... 165

Personal explanation should conform to rule 81 and should relate to the person explaining and there should not be a debate on it ... ... ... 196

*Point of clarification*—

Could be raised only if the member who held the floor resumed his seat ... ... ... ... 165

*Point of order*—

A point of order could be raised in the course of a member's speech but a point of personal explanation could be raised only at the end of a speech and a point of clarification could be raised only if the Member who held the floor resumed his seat ... ... ... ... ... 165



PAGES

C—*cont.*

CHAIR—*cont.*

*Rulings and observation*—cont.

***Procedure*—**

Questions and Answers—

After a starred question was answered a member requested that in view of the importance of the subject the question might be postponed to the next day. The Chair observed that once an item of business was included in the Agenda he had no power to alter it but, if desired by the Leader of the House and agreed to by the House, it could be done.

The Leader of the House requested that the question might be taken up the next day.

Another member, rising on a point of order, enquired whether it was in order to postpone a question to the next day after the Minister had replied to it. The Chair observed that the answer given that day could not be revised the next day and only supplementary questions could be asked ... ... ... ... 26

*Question hour*—

Clarifications—

Members cannot seek clarification during question hour ... ... ... ... ... 20

*Questions and Answers*—

Supplementary questions—

Accusations, etc.—

Should not contain accusations ... ... 17

Should not relate to personal grievances ... 17

*Admission of question*—

A member's question was answered. Immediately another member rose and said that in his opinion there was no basis for the question. The member who put the question sought a ruling whether it

PAGES

C—*cont.*

CHAIR—*cont.*

*Rulings and observation*—cont.

*Admission of question*—*cont.*

was right on the part of the member to question after the Speaker had allowed the question to be answered. The Speaker said that any member may write to him privately or discuss with him in his chamber questions dealing with matters falling within his jurisdiction such as admission of questions, admission of notices, consent to privilege matters and rejection of adjournment motions and they should not be raised on the floor of the House ... ... ... ... ... 115-116

*Challenges*—

There should be no challenge during question hour ... ... ... ... ... ... 18

*Members responsible for accuracy of statements*—

If a question contains a statement, the member asking it must make himself responsible for the accuracy of the statement ... ... ... 472

*Ministers' answers*—

A Minister has got the right of giving even a vague answer. Members cannot ask for the meaning of their answers ... ... ... 22

A Minister had the right not to give an answer to a question, to give an answer to a point different from the one raised in the question and to give an evasive reply ... ... ... ... ... 341

Even though a supplementary question did not relate to the main question, the Ministers if they desired, had always the right to furnish information about the matter raised on the main question or any other matter ... ... ... ... 478

*Opportunity for putting supplementary questions*—

Just at the end of the time allotted for question hour, when there were yet some questions to be answered, the Chair announced that preferance in the matter of putting supplementaries on the remaining questions would be given to members who had not put any supplementary questions till then that day ... ... ... 342



PAGES

C—*cont.*

CHAIR—*cont.*

*Rulings and observation*—cont.

*Postponement of a question for supplementaries*—

A question answered on a particular day was postponed for supplementaries to the next day, by leave of the House ... ... ... ... 26

*Putting*—

Members can put a supplementary questions only when called by the Chair to put it ... ... 20

*Reasons not necessary*—

A Member should simply put his supplementary question. He need not explain the reason for putting it as he has got the right to put a question without giving the reason ... ... 6

Should be in the form of question ... ... 209

Should relate to the main question ... ... ... 118-345

On a point of order raised by a Member with reference to a supplementary question put by another Member which did not relate to the main question, the Chair observed that though the rules laid down that the supplementary questions should relate to the main question, the Ministers, if they desired, had always the right to furnish information about the matter raised in the main question or any other matter ... ... ... 478

*Speeches*—

Warning lights for Regulation of time—

The installation of colour lighting equipment on the Speaker's Table to regulate the time of speeches and its working was explained by the Chair ... ... ... ... ... 201

*Speaker*—

It was not in order for Members to raise in the House matters falling within his jurisdiction such as admission of questions, admission of notices, consent to privilege matters, rejection of adjournment motions, etc. The information about these matters should be sought from the Speaker in his Chamber or through letters written to him ... ... ... ... ... ... ... 115-116

PAGES.

C—con.

CHAIR—*cont.*

*Rulings and observation*—cont.

*Warning lights*—

Regulation of time of speeches—

The purpose of colour lights newly installed on the Speaker's table to regulate the time of speeches was explained by the Chair ... 227–228, 396

CHEEMAICHAMI, THIRU K.—

Budget, 1968–69, Voting—

Capital Outlay on Public Health, Medical, Public Health ... ... ... ... ... ... 349, 350, 403–404

Community Development Projects, etc., Public Works—Grants-in-aid ... ... ... 481

Compulsory sterilisation, introduction ... ... 25–26, 99–104

Tractors on loan to agriculturists, district-wise number ... ... ... ... ... 17–23

CHIDAMBARANATHA NADAR, THIRU A.—

Colachel-Neerodi Coastal Road, Construction ... 110

Co-operative Motor Transport Societies, benefit to Scheduled Castes persons ... ... ... 217–218

' Malattar ' lands, Tirukoilur taluk, assigning or leasing ... ... ... ... ... ... 216

CHINNARAJEE, THIRU C. K.—

Budget, 1968–69, Voting—

Capital Outlay on Schemes of Government Trading ... ... ... ... ... ... 178–179

CHITHAN, THIRU N. S. V.—

Bharathiar's house at Ettaiyapuram, purchase and preservation as national monument ... ... 330–331

Compulsory sterilisation, introduction ... ... 25–26, 99–104

Radio Station at Madurai ... ... ... ... 471–473



PAGES.

C—*cont.*

CHITHAN, THIRU N. S. V.—*cont.*

Scholarships—Backward Class students, Madurai district ... ... ... ... ... ... 23–24

Water Supply, drinking water scheme, Thirumangalam ... ... ... ...... ... 1–2

COLLEGES—

Medical, number of candidates selected by Three-Man Committee ... ... ... ... ... 218–219

COMMITTEE—

House, election to (M) ... ... ... ... 348

CONFERENCE—

Labour Leaders Conference ... ... ... 112–114

CO-OPERATIVE SOCIETIES—

Gur-Sugar Workers Co-operative Society, Murugankudi, amount of loan and subsidy ... ... 346–347

Motor Transport, benefit to Scheduled Castes 217–218

D

DHANUSHKODI, THIRU P. S.—

Budget, 1968–69, Voting—

Community Development Projects, etc., Public Works—Grants-in-aid ... ... ... 524–526

DRAINAGE—

Kancheepuram town (underground system), loan application by Municipality and estimate ... 478–479

DURAIRAJ, THIRU P.—

Budget, 1968–69, Voting—

Education ... ... ... ... ... ... 40–42

DURAISAMY, THIRU S.—

Budget, 1968–69, Voting—

Capital outlay on Public Health, Medical, Public Health ... ... ... ... ... ... 408–412

PAGES.

D—*cont.*

DURAISAMY, THIRU S.—*cont.*

Budget, 1968–69, Voting—*cont.*

Crop failure in Palladam and Avinasi taluks, postponement of collection of loan (C.A.) ... 224

Housing facilities for Iduvoy villagers ... 344–345

Polytechnics, Automobile Engineering Course, revival ... ... ... ... ... ... 104

University, establishment at Coimbatore ... ... 205–206

E

EXPORT—

Monkeys and Frogs, income ... ... ... ... 463–466

EXPUNCTION—

Budget, 1968–69, Voting—

Community Development Projects, etc., Public Works—Grants-in-aid ... ... ... 534, 535, 552

Question hour ... ... ... ... ... ... 17

F

FAIR PRICE SHOPS—

Opening in Panchayats ... ... ... ... 338–341

FAMILY PLANNING—

Compulsory sterilisation, introduction ... ... 25–26, 99–104

FAMINE—

Famine conditions in Palayam Panchayat Union area, relief works (C.A.) ... ... ... ... 347

FINANCIAL BUSINESS—

Budget, 1968–69, Voting—

Animal Husbandry ... ... ... ... ... }
Capital Outlay on Forests ... ... ... }
Fisheries ... ... ... ... ... ... }
Forests ... ... ... ... ... ... } 225–287



PAGES.

F—*cont.*

FINANCIAL BUSINESS—*cont.*

Budget, 1968–69, Voting—*cont.*

Capital Outlay on Public Health ... ... ...
Public Health Medical ... ... ... ... 348–459

Capital Outlay on Schemes of Government Trading ... ... ... ... ... ... 119–198

Community Development Projects, etc. ... ...
Public Works—Grants-in-aid ... ... ... 481–555

Education ... ... ... ... ... ... 27–94

FISHERIES—

Fishing boats, details regarding donation by French Government and other countries ... ... ... 468–471

FROGS—

Export and income ... ... ... ... 463–466

G

GEORGE, THIRU V.—

Budget, 1968–69, Voting—

Animal Husbandry ... ... ... ... ... }
Capital Outlay on Forests ... ... ... }
Fisheries ... ... ... ... ... ... }
Forest Department ... ... ... ... ... } 251–254

GNANASAMBANDAM, THIRU K. R.—

Budget, 1968–69, Voting—

Animal Husbandry ... ... ... ... ... }
Capital Outlay on Forests ... ... ... }
Fisheries ... ... ... ... ... ... }
Forest Department ... ... ... ... ... } 226, 246–250

Community Development Projects, etc. ... ...
Public Works—Grants-in-aid ... ... ... 481, 501–503

Graduate trained teachers, pay difference ... ... 201–205

Masilnathaswamy temple, Tharangambadi, salt manufacture ... ... ... ... ... 4

Paddy, procurement from temples in Thanjavur district ... ... ... ... ... ... 461–463

G—*cont.*

GOMATHYSANKARA DIKSHIDAR, THIRU G.—

Andal (Sri) temple, Srivilliputhur, renovation ... 2–4

Budget, 1968–69, Voting—

Capital Outlay on Schemes of Government Trading ... ... ... ... ... ... ... 162–164

Compulsory sterilisation, introduction ... ... 25–26, 99–104

Conference of Labour Leaders ... ... ... ... 112–114

Fishing boats, details regarding donation by French Government and other countries ... ... ... 468–471

GOVERNMENT DEPARTMENT—

Mechanical Engineering Department, starting ... 4–5

GOVERNMENT PRESS—

Establishment of branch at Madurai ... ... 217

Retired Officers, extension of service ... ... 216–217

GOVINDARAJAN, THIRU C—

Attack on Thiru K. Anbazhagan, M. P. (A.M.) ... 220

Handloom Weaving Industry, allotments of power-looms ... ... ... ... ... ... 327–330

GOVINDASAMY, THIRU A.—

Budget, 1968–69, Voting—

Animal Husbandry ... ... ... ... ...
Capital Outlay on Forests ... ... ...
Fisheries ... ... ... ... ... ...
Forests ... ... ... ... ... ...
} 225, 226, 227, 273–286

H

HABIBULLAH BAIG, DR.—

Budget, 1968–69, Voting—

Community Development Projects, etc. ...
Public Works—Grants-in-Aid ... ... ... 506–509

HANDE, DR. H. V.—

Attack on Thiru K. Anbazhagan, M.P. (A.M.) ... 220–221



H—*cont.*

HANDE, DR. H. V.—*cont.*

Budget, 1968–69, Voting—

Animal Husbandry ... ... ... ... ...
Capital Outlay on Forests ... ... ... ...
Fisheries ... ... ... ... ... ...
} 225, 226, 258–261

Forest Department ... ... ... ... ...
Capital Outlay on Public Health ... ... ...
Medical, Public Health ... ... ...
} 350, 456–457, 433–436

Capital Outlay on Schemes of Government Trading ... ... ... ... ... ... 176–178

Community Development Projects, etc. ... ... 551–552

Public Works, Grants-in-Aid ... ... ... 47, 62–65

Education ... ... ... ... ... ... 91–94

HANDLOOMS—

Handloom weaving industry, allotment of power-looms ... ... ... ... ... ... ... 327–330

HORTICULTURE—

Fruit production, schemes to increase ... ... 342–344

HOSPITAL(S)—

Bhavani town, construction ... ... ... ... 477–478

HOUSING—

Housing facilities for Iduvoy villagers ... ... 344–345

I

IRRIGATION—

Dams (High check), places of construction ... ... 109–110

Drainage channels in Thanjavur district, removal of reeds ... ... ... ... ... ... 331–334

Reservoirs (minor), construction ... ... ... 107–109

Tanks (new), Salem district, correction to an answer to a Supplementary ... ... ... ... ... 118

Tanks, deepening ... ... ... ... ... 206–210

PAGES.

J

JAIL(S)—

Melur sub-jail, reconstruction and extension ... 473-477

JANAKI AMMAL, THIRUMATHI, K. P.—

Budget, 1968-69, Voting—

Capital Outlay on Public Health ... ... 351
Medical, Public Health ... ... ... ... 404-408
Capital Outlay on Schemes of Government Trading ... ... ... ... ... ... 120

K

KANNAN, THIRU M. R.—

Budget, 1968-69, Voting—

Community Development Projects, etc. ... ...
Public Works—Grant-in-Aid ... ... ... 532-534

KARIAMANICKAM AMBALAM, THIRU KR. RM.—

Budget, 1968-69, Voting—

Community Development Projects, etc. ... ...
Public Works—Grants-in-Aid ... ... ... 497-499

KARUNANITHI, THIRU M.—

Budget, 1968-69, Voting—

Education ... ... ... ... ... ... 74

Correction to an answer to a supplementary *re. new* tanks in Salem district ... ... ... ... 118

KARUPPIAH, THIRU A.—

Budget, 1968-69, Voting—

Community Development Projects, etc. ... ...
Public Works—Grants-in-Aid ... ... ... 513-516

KARUPPIAH, THIRU R. —

Education ... ... ... ... ... ... 45-47

KARUTHIRUMAN, THIRU P. G.—

Budget, 1968-69, Voting—

Capital Outlay on Public Health ... ... ...



PAGES.

K—*cont.*

KARUTHIRAMAN, THIRU P. G.—*cont.*

Budget, 1968-69, Voting—*cont.*

Medical, Public Health ... ... ... ... 443-450, 456

Capital Outlay on Schemes of Government Trading ... ... ... ... ... ... 182-183, 184-185, 186-190

Education ... ... ... ... ... 68-74, 78

KASIRAMAN, THIRU N.—

Budget, 1968-69, Voting—

Capital Outlay on Public Health ... ... ...
Medical, Public Health ... ... ... ... 349, 350, 390-396, 455

KITTAPPA, THIRU N.—

Compulsory sterilisation, introduction ... ... 25-26, 99-104

Entertainment tax, evasion ... ... ... ... 10-16

KOTHANDAM, THIRU KOLATHUR—

Budget, 1968-69, Voting—

Animal Husbandry ... ... ... ... ...
Capital Outlay on Forests ... ... ... ...
Fisheries ... ... ... ... ... ...
Forest Department ... ... ... ... ... 244-246
Capital Outlay on Public Health ... ...
Medical, Public Health ... ... ... ... 427-429

Bus routes (new) by State Transport Department and number touching Madurantakam ... ... 466-467

Fruit Production, Schemes to increase ... ... 342-344

KOTHANDARAMAN, THIRU V. K.—

Budget, 1968-69, Voting—

Capital Outlay on Public Health ... ... ...
Medical ... ... ... ... ... ...
Public Health ... ... ... ... ... 349

PAGES.

## K—*cont.*


KOTHANDARAMAN THIRU V. K.—*cont.*

Budget, 1968-69, Voting—*cont.*

Bus routes and revenue, increase ... ... ... 5–10
Cement, production and export ... ... ... 105–107
Compulsory sterilisation, introduction ... ... 25–26, 99–104
Dams (high check), places of construction ... ... 109–110
Export of monkeys and frogs, income ... ... 463–466
Press (Government), extension of service to officers (retired) ... ... ... ... ... ... 216–217
Municipal Council, Kumbakonam, advance to private parties ... ... ... ... ... 117–118
Petrol from Indian Oil Corporation, Utilisation for Government vehicles ... ... ... ... 467–468
Roller Flour Mills, establishment in North Arcot district ... ... ... ... ... ... 335–338

KOTHANDARAMIAH, THIRU K. S.—

Budget, 1968–69, Voting—

Animal Husbandry ... ... ... ... ...
Capital Outlay on Forests ... ... ... ...
Fisheries ... ... ... ... ... ...
Forest Department ... ... ... ... ... 239–240
Community Development Projects, etc. ... ...
Public Works—Grants-in-Aid ... ... ... 530–532
Education ... ... ... ... ... ... 36–38

KRISHNASAMY GOUNDER, THIRU R.—

Budget, 1968–69, Voting—

Capital Outlay on Schemes of Government Trading ... ... ... ... ... ... 119, 150–153

KUMARASWAMI, THIRU K. N.—

Budget, 1968–69, Voting—

Education ... ... ... ... ... ... 67–68




## L

PAGES.


LABOUR—

Conference of Leaders ... ... ... ... 112–114
"One Union for one Industry" Scheme, implementation ... ... ... ... ... ... 24–25

LANDS—

'Malattar' lands, Tirukoilur taluk, assigning or leasing ... ... ... ... ... ... 216
Poramboke, leasing ... ... ... ... ... 211–216
Postponment of collection due to crop failure in Avinasi and Palladam taluks (C.A.) ... ... 224–225

LOCAL BODIES—

Municipal Council, Kumbakonam, advance to private parties ... ... ... ... ... 117–118
Municipal Council, Tirunelveli (defunct), revival 114–116


## M


MALAICHAMY, THIRU P.—

Bridges in Natham–Sendurai road, construction ... 334–335
Fair Price shops, Opening in Panchayats ... 338–341
Irrigation, Construction of minor reservoirs ... 107–109
Irrigation tanks, deepening ... ... ... ... 206–210
Jail (Sub), Melur, reconstruction and extension ... 473–477
Press (Government), establishment of branch at Madurai ... ... ... ... ... ... 217
Radio Station at Madurai ... ... ... ... 471–473

MANI, THIRU K. B. S.—

Budget, 1968–69, Voting—

Animal Husbandry ... ... ... ... ...
Capital Outlay on Forests ... ... ... ...
Fisheries ... ... ... ... ... ... 226,
Forest Department ... ... ... ... ... 234–236
Capital Outlay on Public Health ... ...
Medical ... ... ... ... ... ... 348,
Public Health ... ... ... ... ... 441–443
Community Development Projects, etc. ... ... 482,
Public Works—Grants-in-Aid ... ... ... 534–536
Education ... ... ... ... ... ... 59–60, 90

PAGES.

MANI, THIRU M. S.—

Budget, 1968–69, Voting—

Capital Outlay on Public Health ... ... ...

Medical ... ... ... ... ... ...

Public Health ... ... ... ... ... 396–401

MANICKAVACHAGAM, THIRU R.—

Budget, 1968–69, Voting—

Animal Husbandry ... ... ... ... ...

Capital Outlay on Forests ... ... ... ...

Fisheries ... ... ... ... ... ...

Forests ... ... ... ... ... ... 263–264

MARIMUTHU, THIRU A. R.—

Budget, 1968–69, Voting—

Capital Outlay on Public Health ... ... ...

Medical ... ... ... ... ... ...

Public Health ... ... ... ... ...

421–425

Community Development Projects, etc. ... ...

Public Works—Grants-in-Aid ... ... ...

519–522

MARTIN, THIRU T.—

Prisoners, introduction of wage earning scheme ... 345

MATHIALAGAN, THIRU K. A.—

Bills—

Inams (Supplementary) Amendment Bill, 1968 ... 225

Budget, 1968–69, Voting—

Capital Outlay on Schemes of Government Trading ... ... ... ... ... ... 119, 120–145, 183, 184, 185, 186, 190–196, 197

Crop failure, Palladam and Avinasi taluks, postponement of collection of loan (C.A. St.) ... ... 224–225



PAGES.

MATHIALAGAN, THIRU K. A.—

Famine conditions in Palayam Panchayat Union area, relief works (C.A. St.) ... ... ... 347

Kanyakumari district, failure of monsoon and remission of land revenue (C.A. St.) ... ... 118–119

MILLS—

Roller Flour Mills, establishment in North Arcot district ... ... ... ... ... ... 335–338

MONKEYS—

Export and income ... ... ... ... ... 463–466

MOTION(S)—

Adjournment Motions—

Attack on Thiru K. Anbazhagan, M.P. ... ... 219–223

House Committee, Election to ... ... ... 348

MUNUSAMY, THIRU GINGEE V.—

Budget, 1968–69, Voting—

Capital Outlay on Public Health ... ... ...

Medical ... ... ... ... ... ...

Public Health ... ... ... ... ... 414–416

MURUGIAN, THIRU S.—

Budget, 1968–69, Voting—

Animal Husbandry ... ... ... ... ...

Capital Outlay on Forests ... ... ... ...

Fisheries ... ... ... ... ... ...

Forest Department ... ... ... ... ... 241–244

Capital Outlay on Schemes of Government Trading ... ... ... ... ... ... 160–162

MUTHUSAMY, THIRU M.—

Budget, 1968–69, Voting—

Community Development Projects, etc. ... ...

Public Works—Grants-in-Aid ... ... ... 481, 482, 483–489, 545–552

Education ... ... ... ... ... ... 69–70, 72, 74

PAGES.

MUTHUSELVAN, THIRU P. S.—

Budget, 1968–69, Voting—

Capital Outlay on Schemes of Government Trading ... ... ... ... ... ... 171–172

N

NARASIMHAN, THIRU A. C.—

Budget, 1968–69, Voting—

Capital Outlay on Schemes of Government Trading ... ... ... ... ... ... 153–154

Community Development Projects, etc. ... ...
Public Works—Grants-in-Aid ... ... ... 493–497

NATIONAL MONUMENT—

Bharatiar's house at Ettaiyapuram, purchase and preservation as National monument ... ... 330–331

NATARAJAN, THIRU E. M.—

Budget, 1968–69, Voting—

Capital Outlay on Schemes of Government Trading ... ... ... ... ... ... 156–157

NATARAJAN, THIRU G.—

Budget, 1968–69, Voting—

Animal Husbandry ... ... ... ... ...
Capital Outlay on Forests ... ... ... ...
Fisheries ... ... ... ... ... ...
Forest Department ... ... ... ... ... 257–258

NEDUNCHEZHIYAN, THIRU V. R.—

Attack on Thiru K. Anbazhagan, M.P. (A.M.) ... 221–223

Budget, 1968–69, Voting—

Capital Outlay on Public Health ... ... ...
Medical ... ... ... ... ... ...
Public Health ... ... ... ... ...
Education ... ... ... ... ... ... 432, 457, 27, 70, 74–94

House Committee, election (M) ... ... 348



P

PADDY—

Procurement from temples in Thanjavur district ... 461–463

PANCHAYATS—

Fair Price Shops, opening ... ... ... ... 338–341

PAPERS LAID ON THE TABLE—

Animal Husbandry Demand Policy note—Tamil ... 459
Capital Outlay on Government Trading Schemes—Demand, Policy note (English and Tamil) ... 287
Capital Outlay on Public Health Demand, Minister's Speech (English and Tamil) ... ... ... 556
District Municipalities Act, 1920, Notification ... 95
Education Demand Note (English and Tamil) ... 95
Fisheries, Policy Note (Tamil) ... ... ... 459
Forest Department, review of progress (Tamil) ... 459
General Sales Tax Act, 1959, Notifications ... 198
Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963, Notification ... ... 459
Medical Grants Demand, 1968–69 (English and Tamil) ... ... ... ... ... ... 556
Motor Vehicles Taxation Act, 1931, Notifications ... 95
Public Health Grants Demand, 1968–69, Ministers' speech (English and Tamil) ... ... ... 556
Water-supply and Drainage Schemes (Special) 1968–69 (English and Tamil) ... ... ... 556
Water-supply and Drainage Schemes (Urban) note (English and Tamil) ... ... ... 556

PARAMASIVA GOUNDER, THIRU P. N.—

Budget, 1968–69, Voting—

Community Development Projects, etc., Public Works Grants-in-aid ... ... ... 499–501

Crop failure in Palladam and Avinasi taluks postponement of collection of loan (C.A.) ... 224

PETROL—

Government vehicles, utilisation of petrol from Indian Oil Corporation ... ... ... 467–468

POINT OF INFORMATION—

Colour lighting device on Speaker's table for regulation of time of speeches, installation ... 201

PAGES

P—*cont*.

POLYTECHNICS—
Automobile Engineering course, revival ... ... 104
PONNAPPA NADAR, THIRU R.—
Budget, 1968-69, Voting—
Education ... ... ... ... ... 28-32
27, 94
Failure of monsoon and remission of land revenue (C.A.) ... ... ... ... ... ... 118
PRESS (GOVERNMENT)—
Branch at Madurai, establishment. ... ... 217
Officers (retired), extension of service ... ... 216-217
PRISONERS—
Wage earning scheme, introduction ... ... 345

Q

QUESTIONS AND ANSWERS—
Correction to an answer to a supplementary regarding new tanks in Salem district ... ... ... 118

R

RADIO STATION—
Madurai, setting up ... ... ... ... 471-473
RAJA, THIRU A. M.—
Gur-Sugar Workers Co-operative Society, Murugankudi, amount of loan and subsidy ... ... 346-347
Hospital (big) at Bhavani town, construction ... 477-478
RAJANGAM, THIRU M.—
Budget, 1968-69, Voting—
Animal Husbandry ... ... ... ...
Capital Outlay on Forests ... ... ...
Fisheries ... ... ... ... ...
Forest Department ... ... ... ... 231-234
RAMACHANDRAN, THIRU K. N.—
Budget, 1968-69, Voting—
Capital Outlay on Public Health, Medical, Public Health ... ... ... ... ... ... 418-421



PAGES

R—*cont*.

RAMACHANDRAN, THIRU S.—
Budget, 1968-69, Voting—
Animal Husbandry ... ... ... ...
Capital Outlay on Forests ... ... ...
Fisheries ... ... ... ... ...
Forest Department ... ... ... ... 261-263
Capital Outlay on Schemes of Government Trading ... ... ... ... ... ... 148-149
Entertainment tax, evasion ... ... ... 10-16
Gur-Sugar Workers' Co-operative Society, Murugankudi, amount of loan and subsidy ... ... 346-347
Mechanical Engineering Department, starting ... 4-5
"One union for one industry" scheme, implementation ... ... ... ... ... ... 24-25
Poramboke lands, leasing ... ... ... ... 211-216
RAMAMOORTHY, THIRU K.—
Budget, 1968-69, Voting—
Animal Husbandry ... ... ... ...
Capital Outlay on Forests ... ... ... 225-227
Fisheries ... ... ... ... ... ... 228-231
Forest Department ... ... ... ...
Capital Outlay in Schemes of Government Trading ... ... ... ... ... ... 175-176
Community Development Projects, etc., Public Works—Grants-in-aid ... ... ... ... 526-529
RAMAN, THIRU M.—
Budget, 1968-69, Voting—
Education ... ... ... ... ... 55-50
RAMASWAMI GOUNDER, THIRU K. M.—
Drinking water scheme, Lakkampatti panchayat ... 114
RAMASWAMY, THIRU S. J.—
Budget, 1968-69, Voting—
Capital Outlay on Schemes of Government Trading ... ... ... ... ... 181-182

PAGES

R—*cont.*

RAMASWAMY NAIDU, Thiru S.—
Budget, 1968–69, Voting—
Community Development Projects, etc., Public Works—Grants-in-aid ... ... ... 516–519
Education ... ... ... ... ... ... 52–55

ROAD(S)—
Colachel-Neerodi Coastal Road, construction .... 110

S

SADIQ PASHA, Thiru S. J.—
Budget, 1968–69, Voting—
Capital Outlay on Public Health ... ... 348, 350,
Medical ... ... ... ... ... ... 351, 352
Public Health ... ... ... ... ... 390, 450
456, 458

SAHADEVA KANDER, Thiru K.—
Budget, 1968–69, Voting—
Community Development Project, etc., Public Works—Grants-in-aid ... ... ... 482

SANKARIAH, Thiru N.—
Budget, 1968–69, Voting—
Capital Outlay on Schemes of Government Trading ... ... ... ... ... ... 154–156

SARATHY, Thiru M. P.—
Budget, 1968–69, Voting—
Education ... ... ... ... ... 65–67

SCHEDULED CASTES—
Co-operative Motor Transport Societies, benefit to 217–218

SCHOLARSHIPS—
Backward class students, Madurai district ... 23–24

SCHOOL—
Junior Technical Schools ... ... ... ... 105

SHANMUGAM, Thiru M.—
Budget, 1968–69, Voting—
Community Development Projects, etc., Public Works—Grants-in-aid ...... ... ... 522–524



PAGES

S—*cont.*

SHANMUGASUNDARAM, Thiru A. P.—
Budget, 1968–69, Voting—
Education ... ... ... ... ... 49–51

SIVAGNANAM, Thiru M. P.—
Budget, 1968–69, Voting—
Education ... ... ... ... ... ... 38–40

SIVASAMI, Thiru M. S.—
Budget, 1968–69, Voting—
Animal Husbandry ... ... ... ...
Capital Outlay on Forests ... ... ...
Fisheries ... ... ... ... ... ...
Forests ... ... ... ... ... ... 264
Education ... ... ... ... ... ... 47–49

SUARES, Thirumathi A.—
Budget, 1968–69, Voting—
Capital Outlay on Public Health, Medical, Public Health ... ... ... ... ... ... 401–402

SUBBARAJA, Thiru A. A.—
Budget, 1968–69, Voting—
Animal Husbandry ... ... ... ...
Capital Outlay on Forests ... ... ... 236–237
Fisheries ... ... ... ... ... ...
Forest Department ... ... ... ...
Capital Outlay on Public Health, Medical, Public Health ... ... ... ... ... ... 349, 350
440–441
Capital Outlay on Schemes of Government Trading ... ... ... ... ... ... 120,
179–181

SUBBIAH, Thiru A. K.—
Budget, 1968–69, Voting—
Capital Outlay on Schemes of Government Trading ... ... ... ... ... 168–170
Drainage channels in Thanjavur district, removal of reeds ... ... ... ... ... ... 331–334

S—*cont.*

SUBBIAH MUDALIAR, THIRU A. R.—
Budget, 1968–69, Voting—
Capital Outlay on Public Health, Medical, Public Health ... ... ... ... ... 416–418, 457
Capital Outlay on Schemes of Government Trading ... ... ... ... ... ... 173–174, 196

SUBRAMANIAM, THIRU A. L.—
Budget, 1968–69, Voting—
Capital Outlay on Public Health, Medical, Public Health ... ... ... ... ... ... 438–440
Capital Outlay on Schemes of Government Trading ... ... ... ... ... ... 166–168

SUNDARA BHARATHI, THIRU SOWDI S.—
Budget, 1968–69, Voting—
Capital Outlay on Public Health ... ...
Medical ... ... ... ... ... ... 351
Public Health ... ... ... ... ...

SURENDRAN, THIRU M.—
Budget, 1968–69, Voting—
Animal Husbandry ... ... ... ...
Capital Outlay on Forests ... ... ... 227,
Fisheries ... ... ... ... ... ... 254–257
Forest Department ... ... ... ...
Capital Outlay on Public Health ... ... ...
Medical ... ... ... ... ... ... 349
Public Health ... ... ... ... ...
Capital Outlay on Schemes of Government Trading ... ... ... ... ... ... 158–160
Education ... ... ... ... ... ... 51–52

SWAMINATHAN, THIRU V.—
Budget, 1968–69, Voting—
Capital Outlay on Public Health, Medical, Public Health ... ... ... ... ... ... 351, 412–414



S—*cont.*

SWAMINATHAN, THIRU V.—
Budget, 1968–69, Voting,—*cont.*
Community Development Projects, etc., Public Works—Grants-in-aid ... ... ... ... 481, 489–493
Education ... ... ... ... ... ... 60–62
Junior Technical School(s) ... ... ... 105

T

TANKS—
See Irrigation.

TAXES—
Entertainment-evasion ... ... ... ... 10–16

TEACHERS—
Graduate trained, pay difference ... ... ... 201–205

TEMPLE(S)—
Andal (Sri) Temple, Srivilliputhur, renovation ... 2–4
Masilnathaswamy temple, Tharangambadi, salt manufacture ... ... ... ... ... 4
Paddy, procurement from temples in Thanjavur district ... ... ... ... ... ... 461–463

THIPPIA, THIRU T. T. S.—
Budget, 1968–69, Voting—
Capital Outlay on Schemes of Government Trading ... ... ... ... ... 172–173

TOURISM—
Kotagiri, promotion and development as tourist centre ... ... ... ... ... ... 110–111

TRANSPORT AND COMMUNICATIONS—
Bus routes and revenue increase ... ... ... 5–10
Bus routes (new) by State Transport Department and number touching Madurantakam ... ... 466–467
Government vehicles, utilisation of petrol from Indian Oil Corporation ... ... ... ... 467–468

PAGES.

**U**

UNIVERSITY—
Coimbatore, establishment ... ... ... ... 205–206

**V**

VADIVEL, THIRU S. K.—
Budget, 1968–69, Voting—
Community Development Projects, etc., Public Works—Grants-in-aid ... ... ... 529–530

VARADARAJAN, THIRU N.—
Budget, 1968–69, Voting—
Community Development Projects, etc., Public Works—Grants-in-aid ... ... ... 482
Education ... ... ... ... ... ... 42–45, 27, 94
Famine conditions in Palayam Panchayat Union area, relief works (C.A.) ... ... ... 347

VEDACHALAM, THIRU M.—
Budget, 1968–69, Voting—
Animal Husbandry ... ... ... ...
Capital Outlay on Forests ... ... ... 238–239
Fisheries ... ... ... ... ... ...
Forest Department ... ... ... ...

VEZHAVENDAN, THIRU K.—
Budget, 1968–69, Voting—
Community Development Projects, etc., Public Works—Grants-in-aid ... ... ... ... 503–505

VILLAGE(S)—
Navlakh free-hold village (No. 20), conversion into ryotwari ... ... ... ... ... 479–480

VINAYAKAM, THIRU K.—
Attack on Thiru K. Anbazhagan, M.P. (A.M.) ... 220
Budget, 1968–69, Voting—
Capital Outlay on Public Health, Medical, Public Health ... ... ... ... ... ... 429–433, 349, 457, 458



PAGES

**V**—*cnot.*

VINAYAKAM, THIRU K.—*cont.*
Budget, 1968–69, Voting—*cont.*
Capital Outlay on Schemes of Government Trading ... ... ... ... ... 119, 145–148, 197
Education ... ... ... ... ... ... 91–92
Compulsory sterilisation, introduction ... ... 25–26, 99–104
Drainage system (underground) for Kancheepuram town, loan application by Municipality and estimate ... ... ... ... ... ... 478–479
Kusasthali river, bridge ... ... ... ... 210–211
Medical colleges, number of candidates selected by three-man committee ... ... ... ... 218–219
Municipal Council, Tirunelveli (defunct), revival ... 114–116
Tourism, promotion and development of Kotagiri as tourist centre ... ... ... ... ... 110–111

**W**

WATER-SUPPLY—
Drinking water scheme, Lakkampatti panchayat ... 114
Drinking water scheme, Thirumangalam implementation ... ... ... ... 1–2

V2N, 31'N68
31N57-10
61433

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

Messrs. Account Test Institute, Egmore, Madras.
The City Book Co., Mylapore, Madras-4.
Messrs. Higginbothams (Private) Limited, Madrrs-2.
Messrs. New Century Book House Madras-2.
Messrs. P. Varadachari & Co., Madras-1.
Messrs. C. Subbiah Chetty & Sons, Madras-5.
Sri S. S. Srinivasaraghavan, Royapettah, Madras-14.
Messrs. The Educational Agencies, Book-sellers, Madras-15.
The Universal Book House, Moore Market, Madras-3.
Messrs. C. Sitaraman & Co., Madras-14.
Messrs. Mohan Pathipagam and Book Depot, Triplicane, Madras-5.

### IN MOFUSSIL OF MADRAS STATE.

Sri E. M. Gopalakrishna Kone, Madurai. Madurai district.
Sri A. Venkatasubban, Vellore, North Arcot district.
Messrs. Bharatha Matha Book Depot, Thanjavur, Thanjavur district.
Messrs P. V. Nathan & Co., Kumbakonam, Thanjavur district.
Messrs. Appar Book Stall, Thanjavur.
Massrs. P. N. Swaminathasivam & Co., Pudukkottai, Tiruchirappalli district.
Messrs. S. Krishnaswami & Co., Tiruchirappalli district.
Messrs. Palaniappa Brothers, Tiruchirappalli district.
Sri S. R. Subramania Pillai, Tirunelveli, Tirunelveli district.
Messrs. Nellai Puthaga Nilayam, Book-sellers, 10, Thana Muna Buildings Tiruuelveli Junction.
Sri B. Aruldoss, Villupuram Town, South Arcot district.
Sri V. B. Ganesan, Villupuram, South Arcot district.
Messrs. Vasantham Stores, Book-sellers, Cross Cut Road, Coimhatore.
Messrs. Mercury Book Company, 223, Raja Street, Coimbatore.
Sri S. M. Jagannathan, Book-seller and Publisher, Nagercoil, Kanyakumari district
Messrs. A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
Messrs. Meenakshi Pathipagam. Pudukkottai.
Messrs. K. V. Narayana Iyer, & Sons, Dindigul, Madurai district.
Messrs. Balaji Book House, Vellore, North Arcot district.
Messrs. Jayakumari Stores, Nagercoil, Kanyakumari district
Messrs. Baby Stores, Book-sellers, Villupuram, South Arcot district.
Messrs. Dinamani Stores, Coimbatore-18.
Messrs. Bharathi Puthaga Nilayam, Publishers and Book-sellers, 1st Town Hall Road, Madurai-1
Messrs. Kumaran Book Depot Book-sellers, Erode-1.
Messrs. Ajantha Book Centre, Salem.
Messrs. Murugan Book Land Limited, Madurai.

### IN OTHER STATES.

Messrs. Jain Book Agency, New Delhi-1.
Messrs. International Book House, Trivandrum.
Messrs. Firma K. L. Mukhopadhyay, Calcutta-12.
Messrs. Book Link Corporation, Narayanaguda, Hyderabad-29.
Messrs. The Book Syndicate, Hyderabad-1.
Messrr. Labour Law Publication, Hyderabad.

PUBLISHED UNDER RULES 234 AND 267 OF THE TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY RULES AND PRINTED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS.

13/7/76

CM